

பாரத ரத்னா புரட்சித் தலைவர்

டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்

சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

1977 - 1987

‘பாரத ரத்னா’, புரட்சித் தலைவர்,

டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள்

சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்

மாண்புமிகு புரட்சித்தலைவி

அம்மா அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்

சிறப்பு வெளியீடு எண் : 14

ஜனவரி 2018

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
அரசு மைய அச்சகம்
சென்னை – 600 079.

எடப்பாடி K. பழனிசாமி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

அணிந்துரை

“மூன்று எழுத்தில் என் மூச்சிருக்கும்
அது முடிந்த பின்னாலும் பேச்சிருக்கும்
உள்ளம் என்றொரு ஊர் இருக்கும்
அந்த ஊருக்குள் எனக்கொரு பேர் இருக்கும்
கடமை அது கடமை”

என்று பாடினார் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அவர் பாடிய பாடலைப் போன்று தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் மூச்சில் இருக்கும் மூன்று எழுத்து எம்.ஜி.ஆர். என்ற தாரக மந்திரமே ஆகும்.

கலை உலகில் தடம் பதித்து முடிசூடா மன்னனாக வலம் வந்து, பின்னர் மக்களின் ஏகோபித்த ஆதரவின் மூலம் தமிழ்நாட்டின் முதலமைச்சராக 1977ஆம் ஆண்டு பொறுப்பு ஏற்று, 1987ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டின் ஈடு இணையற்ற முதலமைச்சராக பணியாற்றினார்.

“காலத்தை வென்றவன் நீ
காவியமானவன் நீ
வேதனை தீர்த்தவன்
விழிகளில் நிறைந்தவன்
வெற்றித் திருமகன் நீ”

என்ற பாடல் வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். தனது அரசியல் ஆசான், வழிகாட்டி, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டினை ஆண்டு முழுவதும் கொண்டாடப்படும் என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசு, மாண்புமிகு புரட்சித்தலைவரின் நூற்றாண்டு விழாவினை அனைத்து மாவட்டங்களில் சிறப்பாக கொண்டாடி, அவரது புகழ் என்ற மணிமகுடத்தில் மேலும் ஒரு அணிகலன் சேர்த்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக்கள் மூலம் இதுவரை நடைபெற்ற 30 மாவட்டங்களில் மாண்புமிகு அம்மாவின் அரசினால் 5,127 கோடியே 11 லட்சம் ரூபாய் செலவில் 2,329 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், 5,172 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில் 3,200 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டுள்ளது. இதுவன்றி 5,397 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 லட்சத்து 11 ஆயிரத்து 481 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், சட்டமன்றத்தில் வரலாற்று புகழ்மிக்க திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். மேலும் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு மிகவும் தெளிவாகவும் விளக்கமாகவும் பதிலுரைகள் அளித்துள்ளார்கள். அவரது சட்டமன்ற உரைகளை எல்லாம் ஒருங்கிணைத்து **“பாரத ரத்னா, புரட்சித்தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகள்”** என்ற பெயரில் ஒரு பெட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த பெட்டகம் இப்பொழுது உங்கள் அனைவரின் கைகளிலும் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

மக்கள் அனைவரும் இந்த பெட்டகத்தை படித்து பயன் பெற வேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

சிந்தனை வேள்வியில் சிந்திய மலர்கள்

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு நீண்ட நெடிய வரலாறுண்டு அங்கே வரலாற்றுச் சிறப்புமிகு அறிவிப்புகள் அரங்கேறியதும் உண்டு. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற ஜனநாயகத்தின் இரண்டு விழிகளும் ஒரே நேர் கோட்டில் பார்வையைப் பதித்தால்தான் ஜனநாயகக் கோட்பாடுகள் தழைத்தோங்கும்.

இந்தப் பின்புலத்தோடு தொகுத்தளிக்கப்படிருப்பதுதான் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் சட்டமன்ற உரைகளின் தொகுப்பான இந்த நூலாகும்.

எதிர்க்கட்சிகள் எழுப்பிய வினாக்களுக்கு உரிய நேரத்தில் சரியான பதில்களைச் சொன்னதுடன், புதிய மக்கள் நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தியும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக சட்டப்பேரவையில் பேசியிருப்பதற்கு இந்த நூல் மிகச் சிறந்த சான்றாகும்.

நிகழ்கால மக்களின் நலன்களை நெஞ்சில் தாங்கியும், எதிர்கால மக்களின் வளர்ச்சியை நிகழ்காலத்திலேயே திட்டமிட்டும் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதல்வராகச் செயல்பட்டிருக்கிறார் என்பதை இந்த நூலை ஆழ்ந்து படிப்பவர் அறிவர்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில் இந்த நூல் தயாரிக்கப்பட்டிருந்தாலும், வரப்போகும் நூற்றாண்டைத் தாண்டியும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் நினைக்கப்படுவார் என்பதை இந்த நூல் மெய்ப்பிக்கும்.

ஆம்! பிறந்தோம்; வளர்ந்தோம்; வாழ்ந்தோம்; இறந்தோம் என்ற மனித குல வரலாற்றில் பிறந்தேன்; வளர்ந்தேன்; மக்களுக்காக வாழ்ந்தேன்—அதனால் சிறந்தேன் என்பதைச் செய்தியாகச் சொல்லுவதுதான், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கையும் செயல்பாடுகளும் ஆகும் என்பதை, இந்த நூல் நெடுகிலும் காணலாம்.

‘என் இரத்தத்தின் இரத்தமான அன்பு உடன்பிறப்புகளே’ என்று தொடங்கி, ‘அண்ணா நாமம் வாழ்க!’ என்று இறுதியாக முடிப்பது, பொது மேடைகளில் பேசுகின்ற போது புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாடிக்கையாகும். அந்த வாடிக்கையான சொற்களிலிருந்து விடுபட்டு, சட்டமன்ற மரபுகளுக்கு மேன்மை சேர்க்கும் வகையில், ஒவ்வொரு உரையையும் செழுமைப்படுத்தி இருக்கிறார் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.!

இந்த நூலைப் படிப்பதும், படித்ததை நெஞ்சில் பதிப்பதும், பதிந்தவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பதும், பயன்தரும் என்ற நோக்கோடு இந்த நூலை வெளியிடுகிறோம்.

—மலர்க் குழுவினர்

பொருளடக்கம்

வ. எண்	பொருள்	பக்கம்

1. அனைத்து மக்களின் பிரதிநிதிகளாய்ப் பணியாற்ற வேண்டும்! 1

2. காவிரி நீர் பேச்சுவார்த்தைகளில் வெற்றி! 5

3. ஒரு மாநில அரசு செய்ய வேண்டியதை, எங்கள் அரசு செய்யும்!. 6

4. தேசிய உடைமைத் தத்துவமே எங்களது கொள்கை!. 29

5. தரணி போற்றும் தமிழ்நாடு காவல்துறை! 42

6. எங்கள் உள்ளம் ஏற்கும் ஆளுநர் உரை! 59

7. எங்களது ஏற்றமிகு தொழிற் கொள்கை! 84

8. சட்டத்தின் ஆட்சியே! எங்கள் மனச்சாட்சி!. 91

9. ஏழை, எளியோர்க்கும் ஏற்றமிகு கல்வி!. 175

10. அமைச்சர்களின் ஆலோசனைகளோடு ஆக்கப் பணிகள்! 185

11. மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரின் பணி சிறக்கத் துணை நிற்போம்! 199

12. விழிப்போடுள்ள மக்களுக்குத் துடிப்போடு செயலாற்றும் அரசு! 203

வ. எண்	பொருள்	பக்கம்

13. பொதுத்தன்மையோடு எல்லாவற்றையும் நோக்க வேண்டும்!. 217

14. கொள்கை வென்றது! மீண்டும் எங்களைத் தேடி ஆட்சி வந்தது! 244

15. காவல்துறையில் குதிரைப்படை விரிவாக்கம்!. 297

16. இலங்கைத் தமிழர் நலங்காக்க ஒன்றுகூடி முடிவெடுப்போம்! 325

17. ஒன்றுபடுவோம், நாட்டுக்கு நலம் புரிவோம்! 329

18. அச்சமின்றி வாழ்வோம், அமைதியுடன் வாழ்வோம்! 373

19. எங்களைப் பொறுத்தவரை, புகழைப் பற்றிய கவலையில்லை! 445

20. கிருஷ்ணா குடிநீர்த் திட்டம்! 448

21. இராமச்சந்திரன் சொன்னது உண்மைதான்! 454

22. சமதர்ம சமுதாயமே எங்கள் இலட்சியம்! 481

23. நாடும் மொழியும் காத்த தியாகச் செம்மல்களின் பெயர்களில் மாவட்டங்கள்! 552

24. காவலர்களின் பாதுகாப்பு சமூகத்தின் பாதுகாப்பு!. 571

அனைத்து மக்களின் பிரதிநிதிகளாய்ப் பணியாற்ற வேண்டும்!

வணக்கத்திற்குரிய, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை, எதிர்க்கட்சியாக இங்கே அமர்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களும், இந்திய தேசியக் காங்கிரஸைச் சேர்ந்தவர்களும், ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தேசிய ஃபார்வார்ட் பிளாக்கைச் சேர்ந்தவர்களும், ஃபார்வார்ட் பிளாக்கைச் சேர்ந்தவர்களும் ஒரு மனதாக விட்டுக் கொடுத்துத் தேர்ந்தெடுத்திருக்கின்ற இந்த நல்ல நேரத்தில், நான் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும், உங்களுக்கும் துணைத்தலைவராகப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு திரு. திருநாவுக்கரசு அவர்களுக்கும் கூறிக் கொள்கிறேன். இதனை என்னுடைய எண்ணம் என்று மட்டும் எடுத்துக் கொள்ளாமல், இந்தச் சட்டப்பேரவையில் தங்களுக்கு வாழ்த்துக்களைக் கூறிய நண்பர்களுடைய எண்ணங்களோடு, எங்கள் கட்சியின் பிரதிநிதிகளாக வந்திருக்கிற உறுப்பினர்களின் எண்ணங்களையும் இணைத்துத் தெரிவித்துக்கொள்வதில், நான் உண்மையிலே மகிழ்ச்சி அடைகிறேன்!

சட்டப்பேரவைத் தலைவராகப் பொறுப்பு ஏற்பது என்பது எளிதான காரியம் அன்று என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். பாரபட்சமின்றி, விருப்புவெறுப்பின்றி, சாதிபேதம் பாராமல், மதத்திற்குள் நுழைந்து

“எங்களைப் பொறுத்தவரையில், அவைத் தலைவர் அவர்களுக்கு, எந்தக் காரணத்தைக்கொண்டும் சஞ்சலமோ, சங்கடமோ, குழப்பமோ ஏற்படாத வகையில் ஒத்துழைப்பைத் தருவோம்” என்று உங்கள் மூலமாக அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன் !

விடாமல், நீங்கள் தாமரை இலைத் தண்ணீர் போல இருந்து, உங்களுடைய கடமையை ஆற்றி, நேர்மைக்கு வழிகோலுவதற்கு நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள் என்பதை நான் கூறிக்கொள்ளத் தேவையில்லை; இருந்தாலும்கூட, அதை வற்புறுத்த வேண்டிய அவசியத்திலே நான் இருக்கிறேன் என்று கருதுகிறேன்.

ஒரு மாநிலத்தில் நீதிமன்றங்களிலே, நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும்போது, சட்டங்களை அடிப்படையாக வைத்து அவர்கள் தீர்ப்புக் கூற வேண்டியிருக்கிறது. அந்தச் சட்டங்களையே உருவாக்கித் தருகின்ற இந்த சட்டமன்றப் பேரவை, எவ்வளவு மகத்தான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறதென்பதனையும், அதற்குத் தலைமை தாங்குகின்ற உங்களுடைய முடிவு தமிழகத்து மக்களுக்கு எப்படிப்பட்ட உத்தரவாதத்தினைத் தரக்கூடிய பொறுப்புமிக்க முடிவாக இருக்க வேண்டியுள்ளது என்பதனையும் நீங்கள் எண்ணிப்பார்க்கத் தவறமாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன்.

அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதைப் போல, ஒரு கட்சியின் சார்பாக நின்று போட்டியிலே வெற்றி பெற்றாலும், ஒருசில பதவிகளை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள், கட்சிக்கு அப்பாற்பட்ட நடுநிலைமையோடு, இந்த மாநிலத்து அனைத்து மக்களுடைய பிரதிநிதிகளாகப் பணியாற்ற வேண்டும்; அதுதான் குறிப்பிடத்தக்க அறிவுரையாகவும் செயலாகவும், இருக்க வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் உங்களைப் பாராட்டும்போது, ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். இங்கே போராட்டம் ஏற்படும். தயவுசெய்து, நீங்கள் நடுநிலைமை வகித்துக் காப்பாற்ற வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நான், பணிவோடு தங்கள் மூலம் சொல்லிக் கொள்கிறேன். இது போராடும் அவை அல்ல; இது விவாத அமைப்பு உள்ள அவை! நாம் போராடுவதற்கு எவ்வளவோ இடங்கள், எத்தனையோ காரணங்கள் அவைக்கு வெளியே இருக்கலாம். அந்த வார்த்தையை அவர்கள் ஏன் குறிப்பிட்டார்கள் என்று நான் எண்ணும்போது, போராட வேண்டிய நிலையிலே, இங்கே நிகழ்ச்சிகள் ஏற்பட்டு விடுமோ என்று அவர்கள் ஐயப்படுகிறார்களோ என்று நான் கருதுகிறேன். எங்களைப் பொறுத்தவரையில், ஆளும் கட்சியாக இருக்கின்ற நாங்கள், நிச்சயமாக அப்படிப்பட்டதொரு நிலைமையைத் தலைவர் அவர்களுக்கு உருவாக்க மாட்டோம் என்பதை உறுதியோடு கூறிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாற்காலி, லார்டு வெல்லிங்டன் பிரபுவால் கொடுக்கப்பட்டது என்றும், அதுதானா இது என்று தனக்குத் தெரியவில்லை, ஞாபகம் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவர் கொடுத்த அதே நாற்காலிதான் இது என்று நான் கேள்விப்பட்டதை, இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவருக்கே உரித்தான பாணியிலே, ஒரு உதாரணத்தை இங்கே சொன்னார்கள். வயலின் வாசிக்கின்றவர்கள் வில்லைப் பயன்படுத்தும்போது, முன்னாலேயும், பின்னாலேயும் இழுக்கும்போது நாதம் கிளம்புவதுபோல உங்களுடைய தீர்ப்பு இருக்க வேண்டுமென்கிற நிலையில் அவர்கள் சொன்னார்கள். நான் அதோடு, இன்னும் ஒன்றைச் சேர்த்துச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் வில்லை இழுப்பதற்கு முன்னால், தந்திக் கம்பிகளை ஒழுங்காகச் சுருதி சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமன்று, நீங்கள் வில்லை இழுக்கும்போது, எந்த இராகத்தை நீங்கள் வாசிக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதில் இருந்து சுரம் குறையாமல், வழி தவறிப் போகாமல், எடுத்த இராகத்துக்கொப்ப, இராகத்தைத் தவறவிடாமல் வாசிப்பது போல, நீங்கள் உங்களுடைய கருத்தை வெளியிட வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். இங்கே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள், 'ஸ்பீக்கர்' என்பது பேசாமல் இருப்பவருக்குப் பெயராகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே பெரும்பான்மையான தீர்ப்புகள், வாக்குகள் மூலம் எடுக்கப்பட்டாலும்கூட, அதை முடிவாக, நீங்கள் சொன்னால்தான், அது முடிவாகிறதே தவிர, நாங்கள் பெரும்பான்மையானவர்கள், முடிவு எடுத்தாலும்கூட அது நிச்சயிக்கப்படுவதில்லை. ஆகவே, இதை முடிவாகச் சொல்வது நீங்கள் என்பதால்தான் அந்த 'ஸ்பீக்கர்' என்ற பெயர் உங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று நான் கருதுவது சரியென்றே கொள்கிறேன்.

அப்படிப்பட்ட முடிவைச் செய்கின்ற நீங்கள், திரு. லத்தீப் அவர்கள் தராசு சின்னத்திலே நின்று வெற்றி பெற்றதைப்போல, நீங்களும் தராசு நிலையிலே இருந்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்று தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவையில் வருகின்ற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு.லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சில கருத்துகள் மாறுபட்டு இங்கே சொல்லப்பட வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படலாம். "முஸ்லீம் சமுதாயத்தின் சார்பாக நான் ஒருவன்தான் வந்திருக்கிறேன்" என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அவையிலே இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த அமைச்சரே இருக்கிறார்; இன்னும், மூன்று இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இங்கே உறுப்பினர்களாக எங்கள் பக்கத்தில் வந்திருக்கிறார்கள் என்பதை நான் வற்புறுத்திக் கூறும்போது, ஒரு மதத்திற்கு மட்டும், ஒரு சாதிக்கு மட்டும்,

ஒரு வர்க்கத்துக்காக மட்டும், நாங்கள் பிரதிநிதிகளாக வரவில்லை என்பதையும் எல்லோருக்கும் பிரதிநிதிகளாக, மக்கள் அனைவருடைய எண்ணங்களையும் பிரதிபலிக்கின்ற வகையில், நாங்கள் இங்கே வந்திருக்கிறோம் என்று கூறிக்கொள்ளும் இந்நேரத்தில், எங்களுடைய கடமையைச் செய்ய நீங்களனைவரும் உங்களது மேலான ஒத்துழைப்பைத் தரவேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவை அனைத்தையும் துணைத்தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டு இருப்பார்கள் என்று நம்பும்போது, நிச்சயமாக அவற்றைக் கடைப்பிடிக்கக்கூடிய வகையிலே அவர்கள் செயல்படுவார்கள் என்பதிலேயும் எனக்கு மெத்த நம்பிக்கை உண்டு. நீங்கள் அவர்களுக்கு உங்களுடைய பதவியின் தரத்தையும், திறமையையும், நடுநிலைமையையும், வரம்பு மீறாத கொள்கையையும், உங்கள் செயல் மூலம் காட்டி அவர்களை உங்களுடைய இடத்திற்குக் கொண்டு வரக்கூடிய நிலையில் நீங்கள் அவர்களுக்கு வாய்ப்புத் தருவீர்கள், அவர்களுக்கு நல்ல சிறப்பான அறிவுரைகளைக் கூறுகின்ற வகையில் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களுக்குப் பாராட்டுக் கூறி, எதிர்வரிசையில் இருக்கிற அனைவருக்கும் இந்த நேரத்தில், ஆளும் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில், அளிக்க வேண்டிய நம்பிக்கையைச் சொல்லிக்கொண்டு ஒன்றைக் கூறவேண்டியவனாக இருக்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில், அவைத் தலைவர் அவர்களுக்கு எந்தக் காரணத்தைக்கொண்டும், சஞ்சலமோ, சங்கடமோ, குழப்பமோ ஏற்படாத வகையில், ஒத்துழைப்பைத் தருவோம் என்று உங்கள் மூலமாக அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவை, இதற்குமுன் கூட்டப்பட்டிருந்த போதிருந்த சூழ்நிலையில், ஏதாவது தவறான பாதையில் செல்லக்கூடிய சுற்றச்சார்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும்கூட, அவற்றை நினைவில் கொள்ளாமல், கெட்டதை மறந்து, நல்லதை மட்டும் நினைவில் வைத்து நாம் செயல்படுவதற்கு முன் நிற்கும்போது, திரு.புலுசு சாம்பமூர்த்தி, டாக்டர் யு.கிருஷ்ணராவ் போன்றவர்களை நினைவில் கொண்டு, அவர்களைப் போல் நாம் செயல்படுவோம் என்ற உறுதியினை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்! அப்படிச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடு உங்களையும், உங்களுக்குத் துணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற திரு.திருநாவுக்கரசு அவர்களையும் வாழ்த்திப் பாராட்டி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

06.07.1977 அன்று, புதிய சட்டமன்றத் தலைவர் திரு. க. ராசாராம் மற்றும் துணைத்தலைவர் திரு. சு. திருநாவுக்கரசு அவர்களைப் பாராட்டி ஆற்றிய உரை.

காவிரி நீர் பேச்சுவார்த்தைகளில் வெற்றி!

நானும், பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ச.இராமச்சந்திரனும் நேற்று பெங்களூர் சென்று, கருநாடக முதலமைச்சருடன் காவிரி நீர் வழங்குவது பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தினோம். இப்பேச்சுவார்த்தைகள் சுமூகமாகவும், வெற்றிகரமாகவும் நடந்துள்ளன என்பதை பேரவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறுவைப்பயிர் சாகுபடிக்காக, கூடுமானவரை எவ்வளவுக்கு சாத்தியமோ, அவ்வளவுக்கு தண்ணீர் கொடுத்துதவுவதாகக் கருநாடக முதலமைச்சர் கூறியுள்ளார். இதனையொட்டி, ஜூலை மாதம் 15ஆம் தேதி முதல், மேட்டூர் அணையிலிருந்து சம்பந்தப்பட்ட எல்லா நஞ்சை நிலங்களுக்கும் தண்ணீர் திறந்து விடப்படும். நெருக்கடியான இந்நேரத்தில், கருநாடக அரசினர் தாராள மனப்பான்மையுடன் முன்வந்து ஒத்துழைப்பு நல்கியதற்குத் தமிழக அரசின் சார்பிலும், உங்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

பருவ நிலையை அனுசரித்து, மேலும் தண்ணீர் திறந்து விடுவது சம்பந்தமாக, கருநாடக முதலமைச்சரை இம்மாத இறுதியில் மீண்டும் சந்தித்துப் பேச இருக்கின்றேன்.

கைமாறாக, தமிழக அரசு, கருநாடக அரசின் வேண்டுகோளை ஏற்று, அம்மாநிலத்திற்கு மின்சார உதவியளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. இது சம்பந்தமாக விரைவில் கருநாடக மின்துறை அமைச்சர், சென்னை வந்து, பொதுப்பணித்துறை அமைச்சருடன் பேச்சு வார்த்தைகள் நடத்த இருக்கிறார் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

11.07.1977 அன்று, காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து
கருநாடக முதலமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தைப் பற்றி ஆற்றிய உரை.

ஒரு மாநில அரசு செய்ய வேண்டியதை எங்கள் அரசு செய்யும்!

சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே! இந்த மாமன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏறத்தாழ 95 பேர்கள் இந்த விவாதத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை முதலிலே நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய கடமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

எனக்கு ஓர் அச்சம் இருந்தது. நாங்கள் பதவியேற்ற பிறகு ஆளுநர் உரையை, இங்கே உறுப்பினர்கள் முன்னால் ஆளுநரைக் கொண்டு, ஓர் உரையை படிக்கச் செய்து, அதைப்பற்றிய கருத்துக்களை வெளியிட வேண்டிய வாய்ப்பு கிடைத்தபொழுது, அதை மறுத்து, அதைப்பற்றி நாம் எதற்காகத் திறனாய்வு செய்ய வேண்டும் அல்லது யோசனைகள் சொல்ல வேண்டுமென்று கருதி, அலட்சியப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சம் இருந்தது. அப்படியில்லாமல், அவரவர்கள் என்னென்ன கருதினார்களோ, எதையெதைச் சொல்ல வேண்டுமென்று விரும்பினார்களோ, எந்த நோக்கத்தில் எதைக் கண்காணிக்க வேண்டும், கவனிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார்களோ, அந்தந்த வகைகளிலே மாண்புமிகு உறுப்பினர்கள், வெவ்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய கருத்துக்களை இங்கே யாருக்கும் விட்டுக் கொடுக்காமல், தயவு தாட்சண்யம் பாராமல் வெளியிட்டிருப்பதற்காக, நான் உண்மையிலேயே, இந்த அமைச்சரவையின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆட்சிக்குப் புதிதாக வந்திருக்கின்ற நாங்கள், மக்களுக்கு என்ன சொல்லிக் கொண்டிருந்தோமோ, என்னென்ன செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டோமோ, அவற்றையெல்லாம் நிறைவேற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்று, புதிதாக அமைச்சர்களாக ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருக்கிறோம். இங்கே, மாமன்றத்திலே இருக்கின்ற பல உறுப்பினர்களுக்கு சட்டமன்ற நிகழ்ச்சி எப்படி இருக்க வேண்டும், எப்படித் தங்கள் கருத்தினை எந்த வகையிலே வெளிப்படுத்த வேண்டுமென்று கூடத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பலர் என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒரு சிலராவது புதிதாக வந்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறேன்.

இதுவரையில் நடந்த விவாதத்தில், எந்த நோக்கத்திலே, எந்த எண்ணத்திலே, எந்தக் கருத்திலே வெளியிடக்கூடிய வாய்ப்பினைப் பெற்றவர்கள் சொல்லியிருந்தாலும், "வார்த்தைக்கு வார்த்தை சிங்காரம்" என்பதைப்போல, ஒருவருக்கொருவர் இங்கே மறுப்பு கூறி, ஏதோ போராட்டம் நடப்பது போன்ற நிலைமைகளையெல்லாம் உருவாக்கி, இந்த மாமன்றம் தொடர்ந்து ஒழுங்காக நடக்காதோ என்று ஐயப்படுகின்ற

அளவிற்குக்கூட விவாதங்கள் கொஞ்சம் காரசாரமாக இருந்தாலும், இன்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பேச்சுக்குப் பிறகு உண்மையிலேயே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற நாம் அனைவரும், மக்களுடைய வாழ்வைப் பற்றியும், அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் தரக்கூடிய சூழ்நிலைகள் அமைக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியும் ஆர்வத்தைக் கொண்டவர்களாக இருக்கிறோம் என்பதற்கான, எதிர்க்கட்சித் தலைவரவர்களுடைய பேச்சு, நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறது என்று நான் கருதுகின்றேன்.

இங்கே பல்வேறு கட்சியினர், பல்வேறு கொள்கைகளிலே நம்பிக்கை வைத்திருப்பவர்கள், மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். ஒரு தரப்பாருக்கு இந்த நாட்டில், பொதுவுடைமைத் தத்துவம் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற விருப்பம் இருக்கலாம். இன்னும் வேறு ஒரு கட்சியைச் சேர்ந்த தலைவருக்கு, பிரதிநிதிகளுக்கு, இந்த நாட்டில் மதச் சார்பில் நம்பிக்கையுள்ள சமுதாயம் இருந்தாக வேண்டுமென்ற நம்பிக்கையிலே, அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு இருக்கலாம். நான் ஒரு கூட்டத்திலே பேசும்பொழுது வற்புறுத்தியது போல, எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் நேர்ந்தது போல, ஆஸ்திகத்தை மதம் என்று சொல்லும்போது, நாஸ்திகத்தையும் மதம் என்று சொல்வது ஒரு காலத்தில் பழக்கத்தில் இருந்தது என்று நான் குறிப்பிட்டதை நினைவில் வைத்துக்கொண்டு, அப்படிப்பட்ட வெவ்வேறு நம்பிக்கை உடையவர்கள் இந்த மன்றத்தில் இருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே, இந்தி மொழியிலே நாட்டம் உடையவர்கள் அல்லது இந்தி ஆட்சி மொழியாக வந்தால், தமிழுக்கு எந்த ஆபத்தும் வந்து விடாது என்று கருதுகின்றவர்கள் கூட, ஒருவேளை இருக்கலாமோ என்று நான் ஐயப்பட காரணம் உண்டு என்று கருதுகிறேன். அதைப்போல் வேறு எந்த மொழியும் ஆட்சி மொழியாக, இந்திய துணைக் கண்டத்தின் ஆட்சிமொழியாக, அமல்படுத்தப்படுகிற நிலைமை ஏற்படுமானால், தமிழகத்திற்குச் சொந்தமான தமிழ் அழிக்கப்படும், பண்பாடு குலைந்து விடும், கலாச்சாரம் நசிந்து விடும் என்கிற நம்பிக்கையுள்ளவர்கள் இங்கே இருப்பார்கள் என்பதிலே யாருக்கும் ஐயம் இருக்க முடியாது.

அப்படிப்பட்ட பல்வேறு நம்பிக்கையுடையவர்களாகிய நாம், இங்கே ஒருமித்த எண்ணத்தோடு, ஒருமனதாக அனைத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை வராமல் போய்விட்டாலும், ஒரு சிலவற்றிலோ, பலவற்றிலோ நாம், நம்முடைய கருத்துக்களிலே இணைந்து, இந்த நாட்டிற்கு நமது தொண்டினைச் செய்வதற்கு ஏற்றவாறு சூழ்நிலை அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணி நான் மகிழ்கின்றேன்.

நான் ஒரு கணக்கு போட ஆசைப்பட்டேன். இங்கே எத்தனையோ மைலுக்கு அப்பாலிருந்தும், சென்னை நகர்ப்புறத்திலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினர்களாக வந்திருக்கிற நாம், ஒவ்வொரு விநாடியையும் செலவழிக்கும்போது யாருக்காக அதைப் பயன்படுத்த விழைகின்றோம் என்பதை எண்ணிப் பார்ப்பதற்காக

ஒரு கணக்கை நான் கேட்டேன். எனக்குக் கிடைத்த பதில், சபை நடக்கும்போது, ஒரு மணி நேரத்திற்கு ரூ.3,500/– மக்களின் பணம் இங்கே செலவழிக்கப்படுகிறது, என்று எனக்குக் குறிப்புத் தந்தார்கள். இலட்சக்கணக்கில் ஆண்டிற்கு என்று கணக்கு வந்தாலும், ஒரு மணி நேரத்திற்கு ரூ.3,500/– இங்கே செலவழிக்கப்படுகிறது. நாம் பேசுகிற பேச்சுக்களின் விலை இதுவா என்று கேட்க முடியாது. நாம் சொல்லுகின்ற கருத்துகளுக்கு ரூ.3,500/– விலையா என்று யாரும் மதிப்பிட்டு விட முடியாது.

ஆனால், மக்களின் வரிப்பணம் நம்மை நம்பி, நாம் செலவழிக்க அந்த அளவிற்கு அவர்கள் அனுமதித்திருக்கின்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது இங்கே எதிர்கட்சித் தலைவர், மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களைப் போன்றவர்களும் மற்றைய, ஏனைய அரசியல் கட்சித் தலைவர்களும், இங்கே பேசும்பொழுது கருத்துக்களை வெளியிடுகின்றார்களே, அந்தக் கருத்துக்கள் எப்படிப்பட்டனவாக அமைய வேண்டுமென்பதற்காக, நான் இதை இங்கே பேசுபவர்களுக்கும், மற்றவர்களுக்கும் நினைவுபடுத்துவதற்காக இந்தக் கணக்கினை சொல்ல ஆசைப்பட்டேன்.

வீண் விவாதங்கள் நடத்தும்போது, இங்கே நேரம் போகிறதே என்று கவலைப்பட்டேன் என்பதையும் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் என்னைத் தவறாகக் கருதிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இந்த ரூ.3,500/– ஒரு மணி நேரத்திற்குச் செலவழிக்கப்படுகிறதென்றால், மக்களுடைய வரிப்பணம் செலவழிக்கப்படுகிறதென்றால், மக்களுக்காக நடைபெறுகிற இந்தச் சட்டப் பேரவையில், அந்த ஒரு மணி நேரத்தைப் பயன்படுத்திக் கொள்கிறவர்கள் எத்தகைய கருத்தினை, நாட்டு மக்களுக்குப் பயன்தரக்கூடிய கருத்தினை, கொள்கை விளக்கத்தை, திட்டங்களை நிறைவேற்றக்கூடிய வாய்ப்பினை உருவாக்கித் தர அமைத்துக் கொள்ள வேண்டுமென்பதை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக, என்னையும் சேர்த்து அதை மனதிலே பதிய வைத்துக்கொள்வதற்காகத்தான் இந்தக் கணக்கை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டிலே பல பிரச்சினைகள் அங்கங்கே இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவசரகால சட்டத்தைப் பற்றியும் அந்த அவசர காலச் சட்டம் அமலில் இருந்தபோது, என்னென்ன கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பதை எல்லாம் வரிசையாகப் படித்துக் காண்பித்தார்கள். நான் அதிகமாகப் பேசி, விவாதத்திலே மீண்டும் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்றாலும், ஒன்றை இந்த மன்றத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த அவசர கால சட்டத்தினால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல, திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் தான் சங்கடத்திற்கு உட்பட்டது என்று யாரும் கருதிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோளாகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட,

“தாழ்த்தப்பட்டோர்களைப் பற்றி, பிற்படுத்தப்பட்டோர்களைப் பற்றி, மலைவாழ் மக்களைப் பற்றி, தொழிலாளர்களைப் பற்றி, வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருப்பவர்களைப் பற்றி, கல்வியைப் பற்றி, இவை அனைத்தையும், நாங்கள் சொல்ல மறந்து விட்ட மற்றவற்றையும், நாங்கள் நிச்சயமாகச் செயல்படுத்த ஆசைப்படுகிறோம்.”

எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள் என்பதை நான் தெளிவுபடுத்த வேண்டியவனாக உள்ளேன்.

எதிர்கட்சித் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் யார், யார் பாதிக்கப்பட்டார்கள் என்பதற்கு, அவர்களுடைய பெயர்களைப் படித்துக் காட்டினார்கள். அத்தகைய நீண்ட பட்டியலை நான் சொல்ல விரும்பாவிட்டாலும், இரண்டொரு பெயர்களை நான் சொல்லியாக வேண்டும். தமிழகத்திலே இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்தபோது ‘மிசா’ பயன்படுத்தப்பட்ட விதம் எப்படி இருந்தது, யார் யார் எல்லாம், எப்படியெல்லாம் பழி வாங்கப்பட்டார்கள், குறிப்பாக, எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் எவ்வளவு தொல்லைக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெளிவுபடுத்த வேண்டியவனாக இருக்கிறேன்.

அந்த ‘மிசா சட்டம்’, கல்யாணம் செய்து கொண்ட ஒரு ஆணும், பெண்ணும் அவர்கள் தனித்திருக்கக் கூடிய இடத்தில் கூட, போலீசார் இருப்பார்கள் என்று சொல்லக் கூடிய சூழ்நிலையை உருவாக்கிற்று என்று அவர்கள் சொன்னதுபோல, அனைத்திந்திய அண்ணா தி.மு.கவிலிருந்து நீ வெளியே விலகி வந்தால், அந்தக் கட்சியிலே இருந்து விலகினால், ‘மிசா’ச் சட்டத்தின்கீழ் கைதாகாமல் விடுதலை கிடைக்கும் என்று சொன்ன அதிகாரிகள் இன்னமும் இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் பெயர்ப் பட்டியலை, அவர்கள் யார் யார் என்பதையெல்லாம் நாங்கள் இன்னமும் கையிலே வைத்துக்கொண்டுதான் இருக்கிறோம் என்பதையும் சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைப்போல எத்தனையோ அட்டூழியங்கள், அக்கிரமங்கள், கொடுமைகள் இந்த நாட்டிலே ‘மிசா’ச் சட்டம், அவசர காலச் சட்டம் இல்லாத நேரத்திலும் நடந்திருக்கின்றன. இந்த வேதனைகள் ஒன்றிரண்டை நான், இங்கே குறிப்பிடக் கூடிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகத் தோன்றிய பிறகு, எங்களை ஆதரித்ததற்காக மாணவர்களை காவல் நிலையத்தில் எப்படித் தாக்கினார்கள், எப்படி அடித்தார்கள். அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் என்னை மன்னிக்க வேண்டும்,

போலீஸ் துறை காவல்காரர்கள் பூட்ஸ் காலாலே மலத்தை மிதித்து அதை மாணவர்கள் முகத்திலே வைத்துத் தேய்த்து அதை நக்க வேண்டுமென்று சொல்லி, அவர்களை அடித்து வதைத்திருக்கிறார்கள். இந்தக் கொடுமைகள் நடைபெற்றிருப்பதை எல்லாம் நாங்கள் மறந்துவிடவில்லை. அதைப் பற்றிய விவரங்களை நான் இங்கே சொல்லும்போது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக் கொள்வேன்.

மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு.சரண்சிங் அவர்கள் 'மிசா'ச் சட்டத்தின்கீழ், தமிழகத்திலே யார் யார் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு விசாரணைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது; அந்த விசாரணைக் குழுவுக்கு இந்த அரசு உதவ வேண்டும் என்று சொன்னார்கள். அதை நிச்சயமாக நாங்கள் செய்வோம். அதுமட்டுமன்று; அதற்கு முன்னாலே 3½ ஆண்டுக் காலம் தமிழகத்திலே நடந்த கொடுமைகள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, மற்றவர்கள் துன்பப்படுத்தப்பட்டது, கொடுமைப்படுத்தப்பட்டது, இளைஞர்கள் கொலை செய்யப்பட்டது, ஆகிய விஷயங்களை எல்லாம் நிச்சயமாக, விசாரணைக் குழு வைத்து, விசாரணை செய்வோம் என்பதனை, எனது மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்கு உறுதியாகச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

நான் இவற்றை வெளியிட்டதற்கு, என் மேல் வழக்கு போடப்பட்டது எனக்கு நினைவுக்கு வருகிறது. மாணவர்கள் நேரடியாக வந்து பத்திரிகை நிருபர்களுக்கு முன்னால் சொன்னதையும், நான் சொன்னதையும் சேர்த்து "நீங்கள் இல்லாததைச் சொன்னீர்கள்!" என்று என் மீது வழக்கு போடப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வர வேண்டிய நிலையில், ஆட்சி மாற்றப்பட்டதன் விளைவாக, சில மாதங்கள் கழித்துப் பரிசீலித்து, அதை பின்வாங்கிக் கொண்டார்கள்; வாபஸ் பெற்றுக்கொண்டார்கள்!

ஆனால், என்னைப் பொறுத்தவரையில், எங்களைப் பொறுத்தவரையில், மாணவர்களை, தொண்டர்களை, பெண்களை, எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களை மட்டுமல்ல, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை எல்லாம் கொடுமைப்படுத்தியதை ஆதாரத்தோடு எங்களுக்குக் கிடைக்கின்ற அந்த உண்மைகளையும் வைத்து நிச்சயமாக விசாரணைக்கு அதை ஆட்படுத்துவோம் என்பதை நான் மீண்டும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் அவசர காலச் சட்டத்தை ஆதரித்தோம் என்று எங்கள் மீது குறை கூறப்பட்டது. இங்கேயும் குறை கூறப்பட்டது. முன்பும் குறை கூறி வந்தார்கள். ஆனால் எங்கள் அமைச்சரவையில் இருக்கிற சட்டத்துறை அமைச்சர் அவர்கள், அது தவறு என்று எழுதியதை, எதிர்க் கட்சித் தலைவர் படித்துக் காண்பித்து மிக நல்ல விளக்கத்தைத் தந்தார்கள். நாங்கள் மாறிவிட்டோம்; மாற்றிக் கொண்டு விட்டோம் என்பதனை எண்ணி அவர்கள் மகிழ்ந்தார்கள் என்பதை நான் உணர்ந்தேன்!

யாருக்கும் காயப்படும்போது வேதனை பிறக்கத்தான் செய்யும். அந்தக் காயத்திற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும் என்று நான் இந்த மன்றத்திலுள்ள மாண்புமிகு உறுப்பினர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்வேன்.

3½ ஆண்டுகள் நடந்த கொடுமைகள் எங்களுக்கும் எங்கள் கட்சிக்கும், மக்களுக்கும் இழைத்த கொடுமைகள், தொல்லைகள் இவைகளின் வாயிலாக, இந்த அதிகாரிகள், அரசு இத்தகைய கொடுமைகளைச் செய்கிறார்களோ, ஒரு அரசியல் கட்சியை நியாய உணர்வோடு, வன்முறை இன்றி நடத்தக்கூட அனுமதிக்க முடியாத சூழ்நிலை இல்லாது இருக்கிறதே என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், கொலை செய்தவர்கள் கும்மாளம் அடித்துக்கொண்டு, பெண்களை கற்பழித்தவர்கள் வீதியில் அதிகாரிகளின், பெரிய பெரிய பதவியில் இருந்தவர்கள் துணையோடு திரிந்து கொண்டிருந்த நேரத்தில், இப்படியெல்லாம் இருக்கிறதே இதற்கு ஒரு விடிவுகாலம் ஏற்படாதா என்று எண்ணிக்கொண்டு இருந்த நேரத்தில், இந்த அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்டது என்ற நிலைமை ஏற்பட்ட உடனே, ஒரு விடுதலை பெற்ற உணர்ச்சியில் தான் அதை மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

அவசர கால நிலையை ஆதரித்தோமென்றால், பீகாரில் நடந்த வன்முறைகள் எங்களுக்கு ஒத்துப்போகக் கூடிய கருத்தாக இல்லாததால்தான் நாங்கள் ஆதரித்தோம்.

இந்த நேரத்தில், நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது கூட, தமிழகத்திலே முயற்சிக்கிறார்கள். எந்தத் தரப்பிலே இருப்பவர்களானாலும், இந்த அமைச்சரவையை யார் பொறுப்பு ஏற்று நடத்துகிறவர்களாக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மக்களிடம் ஓர் ஒழுங்கு இருக்க வேண்டும்; அவர்கள் எண்ணுவதைச் சொல்ல உரிமை இருக்க வேண்டும்! அதிலே நாங்கள் குறுக்கிடவில்லை.

அதே நேரத்தில் வரியைக் குறைக்க வேண்டும் என்று யாராவது கேட்க விரும்பினால், அவர்களுக்கு அந்த உரிமை இருந்தாக வேண்டும். அதிலேயும் நாங்கள் குறுக்கிடவில்லை.

அதேபோல, தொழிற்சங்கப் போராட்டங்களில் வன்முறையற்ற போராட்டங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று யாராவது கேட்பார்களானால், அது அவர்களுடைய உரிமை. நாங்கள் அதிலேயும் குறுக்கிடத் தயாராக இல்லை!

ஆனால், சில இடங்களில் 'போராட்டங்கள்' என்று சொல்லிக்கொண்டு, 'உரிமைப் பிரச்சினை' என்று சொல்லிக்கொண்டு, வரி கொடுக்காதீர்கள் என்று சொல்லுகின்ற ஒரு சிலர், ஒரு கட்சியினர் இங்கே பணியாற்றுகிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப் பற்றி என்ன முடிவு சொல்வீர்கள் என்பதை, உங்கள் உள்ளத்தில் பதிலாகப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

"வரி கொடுக்காதீர்கள்!" என்று யாராவது சொல்வார்களேயானால், அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவருக்கு, முன்னாள் அனுபவம் இருக்கிறது என்ற காரணத்தால், முதலமைச்சராக ஏழாண்டுக்

காலம் தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்தக் காரணத்தால், அவருக்கு, இது எப்படி அனுமதிக்கப்படக் கூடாது என்பதற்கு, இது மட்டுமல்ல; இன்னும் அதிகக் காரணங்கள் அவருக்குத் தெரிந்திருக்கக் கூடும் என்ற வகையில் சொல்கிறேன். அந்த வகையில், பீகாரில் நடந்த சில காரியங்கள் எங்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய எண்ணங்களுக்கு, எங்களுடைய நம்பிக்கைகளுக்கு, நாங்கள் நம்புகின்ற அண்ணாவின் வழிமுறைகளுக்கு ஒத்ததாக அவை இருக்கவில்லை.

மாணவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடிய சூழ்நிலையை உருவாக்கக்கூடாது, போராட்டங்களில் ஈடுபடுத்தக் கூடாது, அவர்கள் வன்முறையைத் தூண்டும்படியான சூழ்நிலைக்கு ஆளாக்கக்கூடாது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்வோம் என்பதில் ஐயமில்லை.

படிக்க வேண்டிய மாணவர்கள் போராட்டங்களில் இறங்குவதை யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அதே நேரத்தில், மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டிய கடமை, அவர்களுக்கு பின்பக்கமாக இருக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஆனால், மாணவர்களைத் தூண்டிவிட்டு, மாணவர்களை வன்முறையில் ஈடுபடக்கூடிய சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டு, ஒரு தலைவர் அதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்த, நாடு முழுவதிலும், குறிப்பாக, அந்த மாநிலத்தில், என்ன நடந்தது என்பதனை ஏடுகளில் படிக்கும்போது, அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

மாணவர்களைப் பார்த்து, "பள்ளிக்குப் போக வேண்டாம்; இரண்டாண்டுகள் பள்ளிக்குப் போவதை நிறுத்தி விடுங்கள்!" என்று கூறுவது அண்ணா வழிக்கு உகந்ததுதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், ஒரு மாணவன், அவன் பெயர் புருஷோத்தமன் என்று கருதுகிறேன், பெயர் சரியாக நினைவில்லை, அந்த மாணவன் அண்ணாவிடம் வந்து, நான் 'செகரடேரியெட்'டுக்கு முன்னால் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன். போராடப் போகிறேன் என்று சொன்னபோது, அண்ணா அவர்கள் சொன்ன வார்த்தைகள் எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. நான் அந்த நேரத்தில் அங்கே இருந்தேன். அண்ணா அவர்கள் சொன்னார்கள். "நான் திராவிட நாடு வேண்டுமென்று கேட்கிறேன். திராவிடநாடு வேண்டுமென்று கேட்கின்ற நாம் எத்தனை ஆண்டுகள் உயிரோடு இருப்போம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எங்களுக்குப் பின்னால், நாங்கள் திராவிட நாட்டைப் பெற்று விட்டால், யாரிடம் அதனை ஒப்படைத்துச் செல்வோம் என்பதனை நீங்கள் நினைத்துப் பாருங்கள். எங்களுக்கு பின்னால் வருகின்ற நீங்கள், திறமை படைத்தவர்களாக, படித்தவர்களாக, விவரம் தெரிந்தவர்களாக, பல நுணுக்கங்கள் தெரிந்தவர்களாக, பொறியியல் துறையில் திறமையுள்ளவர்களாக, வழக்கறிஞர்களாக– இப்படி எல்லா வகைகளிலும் சிறப்பான இடத்தைப் பெற்று, அறிவுள்ளவர்களாக, ஆற்றலுள்ளவர்களாக இருக்க வேண்டும்! ஆகவே, இந்த வாழ்க்கையைப் பாழ்படுத்திக்கொண்டு இந்தப் போராட்டத்தில்

இறங்குவீர்களானால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். எங்களிடம் விட்டுவிடுங்கள்; நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்; நாங்கள் இல்லை என்று ஆகிவிட்டால் இது தான் கடைசியான போராட்டம் என்ற கட்டத்திற்கு வருமானால், நீங்கள் முயற்சி செய்ய முன் வாருங்கள்! அதுவரையில், படிப்பைக் கவனியுங்கள்; படிப்பில் கவனம் செலுத்துங்கள்!'' என்று அண்ணா அவர்கள் சொன்னதை நினைவில் வைத்திருக்கிறேன்.

ஆனால் பீகாரில், இரண்டாண்டுகள் நீங்கள் கல்லூரிக்கோ, பள்ளிக்கோ போக வேண்டாம் என்று யாராவது சொல்கிறார்கள் என்று கேள்விப்பட்டால், அதை எப்படி ஆதரிக்க முடியும்? படிப்பு எவ்வளவு முக்கியமானது என்பதை, இங்கே கல்வியைப் பற்றிப் பேசும்போது பெரியவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் 12 வருடம், 13 வருடம், 10 வருடம் படிப்பு என்று சொல்லும்போதெல்லாம், மாணவர்களுக்கு எதை எல்லாம் சொல்ல வேண்டும் என்பதை எல்லாம் விளக்கமாகச் சொன்னார்கள்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே படித்துக் கூட காண்பித்தார்கள். ''தந்தை பெரியார் அவர்களைப் பற்றி, பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கட்டுரையை நீக்கியது சரியா? அந்த உணர்வுகளை, உணர்ச்சிகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டாமா, வரலாறுகளைப் புரிந்து கொள்ள வேண்டாமா, அது மக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டாமா?'' என்றெல்லாம் கேட்டார்கள். அப்படி, அவர்கள் படிக்கின்ற ஒவ்வொரு வினாடியும், ஒவ்வொரு மணி நேரமும், புதிய, புதிய எண்ணங்களை, கடந்தகால வரலாறுகளைத் தெரிந்து கொண்டு இந்த நாட்டை, நமக்குப் பின்னால் ஆளத் தகுதி படைத்தவர்களாக ஆக வேண்டாமா? அத்தகைய இளைஞர்களை, பள்ளிக்குப் போகாதீர்கள் என்று தடுப்பார்களேயானால், அதை எங்களால் ஒப்புக் கொள்ள முடியவில்லை!

நான் கொஞ்ச நேரத்திற்கு முன்பு சொன்னேன். 'வரி கொடுக்காதீர்கள்' என்ற வாதத்தைக் குறிப்பிடும்போது, அந்த வாதத்தை, அமைச்சரவையிலே இருக்கின்ற, பொறுப்பிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்களால், அனுமதிக்க முடியுமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கும்போது, நீங்களும் மாறுபட்ட கருத்தைக் கொள்ள மாட்டீர்கள் என்று நிச்சயம் நம்புகிறேன்.

அதே நிலையில், பீகாரிலே, ''வரி கொடுக்காதீர்கள்!'' என்று சொன்னதை, ஏடுகளிலே படித்தேன். ''வரி கொடுக்காதீர்கள்'' என்று மக்களை, ஒரு முறை பழக்கப்படுத்திவிட்டால், அந்த மாநிலம், அந்த நாடு நிச்சயமாகக் கட்டுப்பாட்டை இழந்து, ஒரு 'புரட்சிக் கனலை' உள்ளத்தில் எப்போதும் வைத்துக்கொண்டிருக்கக் கூடிய அளவுக்குத் தூண்டிவிடப்பட்ட நிலைமையில், எப்போதும் அமைதி காண முடியாது. ஆட்சியை ஒழுங்காக, சீராக நடத்த முடியாத நிலை, நாட்டில் தோன்றிவிடும் என்பதை நான் இங்கே, கொஞ்சம் வேக உணர்வோடு வெளியிட விரும்புகின்றேன்!

ஒரு நாட்டில், ஒரு பகுதி மக்களை, அது எந்தப் பகுதி மக்களானாலும் சரி அவர்களை, ''வரி கொடுக்காதீர்கள்!'' என்று சொல்லி, அந்தப் பகுதி மக்கள் அதை ஏற்றுக்கொண்டு செயல்பட ஆரம்பித்து, அந்த நிலை இன்னொரு பகுதிக்கும்,

பிரிவுக்கும் பரவுமேயானால், நாட்டிலே ஒழுங்கின்மை, சட்டத்தைக் கெடுக்கின்ற நிலைமை, உருவாகி, தங்களுடைய கடமையை நிறைவேற்றுகின்ற உணர்வு அற்றுப்போகும் என்பதில் எங்களுக்கு அச்சம் இருக்கிறது. ஆகவே தான், 'வரி கொடா இயக்கம்' என்று சொல்லப்படுவதை நாங்கள் எதிர்த்தோம்.

அது மட்டுமன்று; அந்தப் பெரியவர் மேலும் என்ன சொன்னார்? 'வரியைக் கொடுக்காதீர்கள்!' என்று மட்டும் சொல்லவில்லை. "வரியை என்னிடம் கொடுங்கள்!" என்று கேட்டார்கள் என்றால், அதை எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்? நடைபெற்றுக் கொண்டிருந்தது, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சி. இங்கே குறிப்பிட்டுக் காட்டினார்கள். ஒரு சட்டமன்றத்திற்கு, பெரும்பான்மையான ஆதரவு இருக்கும்போது, எப்படி அதை 'டிஸ்மிஸ்' செய்வது நியாயம் என்று கேட்டார்கள். நான் வேறு வகையில் கேட்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, பதவியில் இருக்கும்போது, யாரோ ஒரு பெரியவர், எவ்வளவு பெரியவரானாலும், எவ்வளவு நேர்மையானவரானாலும், மக்களைப் பார்த்து, "வரி கொடுக்காதீர்கள் இந்த அரசுக்கு! என்னிடம் கொடுங்கள்!" என்று சொன்னால், அது எப்படி நியாய உணர்வாகும்? எங்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியுமா? நிச்சயம் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏடுகளில் வந்த செய்தியைக் கண்ட பிறகு, நான் பல கூட்டங்களில் பேசியிருக்கிறேன். அந்தப் பெரியவர் இங்கே, தமிழகத்திற்கு வந்தபோது, இவற்றையெல்லாம் உள்ளடக்கிய கேள்வியை அவருக்கு கொடுத்து அனுப்பினேன் என்பதனையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மறைமுகமாக நான் சொன்ன சொல் அல்ல.

இப்படிப்பட்ட நிலைமைகள், இந்தியத் துணைக்கண்டத்தில் தோன்றும் நிலைமை ஏற்படுமானால், இந்திய நாட்டின் வளர்ச்சியைப் பற்றி அக்கறை கொள்கின்ற நாம், இந்திய நாட்டிற்கு, குறிப்பாகத் தமிழகத்திற்கு இருக்கின்ற பண்பாட்டைப் பாராட்டுகின்ற நாம், அப்படிப்பட்ட பண்பாட்டைப் பாழாக்காமல் காப்பாற்ற வேண்டுமென்று விரும்புகின்ற நேரத்தில், கெட்டவையில் எது குறைந்த அளவிற்கு கெடுதலைத் தருகின்றது, எது அதிகமான கெடுதலைத் தருகின்றது என்று இரண்டையும்தான் பார்க்க வேண்டும்; வேறு வழியில்லை என்ற நிலையில், குறைந்த அளவுக்கு கெடுதலைத் தருகின்ற ஒன்றை ஏற்றுக் கொள்வதன் மூலம், பெரிய கெடுதலைத் தடுத்து நிறுத்திவிட முடியாதா என்று பார்ப்பது போல, வேறு வழியின்றி, இப்படி நாட்டிற்குக் கேடு விளைவிக்கும் நிலையை நாட்டில் பரவ விடக்கூடாது என்ற உணர்வோடு, அண்ணா அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்ற உணர்வை, நம்பிக்கையைக் கொண்டு, நான் அதைச் சொன்னேன்!

அதே நேரத்தில், நாட்டில், பத்திரிகையில் எதையெதைப் பற்றியெல்லாம் எடுத்துச்சொல்லி இருக்கிறோமோ, அவற்றை எல்லாம் எங்கள் பிரதிநிதியாக, இப்போது நிதி அமைச்சராக இருக்கின்ற, மாண்புமிகு மனோகரன் அவர்கள், நாடாளுமன்றத்தில், அவசரகாலச் சட்டம், பத்திரிகைகளை எப்படி முடக்குகிறது என்பதையும், பத்திரிகைகள்

எப்படியெல்லாம் தடைப்படுத்தப்படுகின்றன என்பதையும், பத்திரிகைச் சுதந்திரத்தில் எப்படியெல்லாம் தலையீடு இருக்கிறது என்பதையும் சொல்லியிருக்கிறார்.

இன்னும் சொல்லப் போனால், நான், ஒரு நடிகன் என்ற முறையில், நடிப்பைத் தொழிலாகக் கொண்டவன் என்ற முறையில், தணிக்கை என்ற பேரால் அதிகக் கெடுதலான விளைவுகளுக்கு ஆளாகியிருக்கிறேன்; ஆளாக வேண்டியிருந்தது என்பதை சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். நான் இருந்த தொழிலுக்கு, அதிகமான கேடுகள், குழப்பங்கள், ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு அது காரணமாக இருந்தது. நான் அதைப்பற்றிக் கவலைப்படாமல், என்னுடைய தொழில் பாதிக்கப்படுகிறதே என்பதைக்கூடக் கருதாமல், ஒட்டுமொத்தமாக நாட்டிலுள்ள அத்தனை மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய வகையில், நல்ல உணர்வுகளை, கடமை உணர்வுகளை, கண்ணியமாக வாழக் கூடிய உணர்வுகளைக் காப்பாற்றுவதற்காக, இதைச் செய்தால் பரவாயில்லை என்றால், இந்தச் சிறிய தீங்கைத் தாங்கிக்கொள்வோம்! இதனால், நாட்டிற்கு ஏற்பட இருக்கிற பெரிய தீமைகள், கெடுதல்கள் ஏற்படாமல் போனால் நல்லது என்றுதான் எண்ணினேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

இன்னொன்றையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். அவசரகாலச் சட்டம் இருந்தபோது நடைபெற்ற அனைத்தையும் நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்று சொல்வது சரியல்ல. யார், யார் தவறு செய்கிறார்களோ அவர்கள் மீது மட்டுமே வழக்கு போடப்பட வேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறேன். இந்தத் தேர்தலின்போதும், நான் பகிரங்கமாக மக்கள் மத்தியில் பேசினேன்! குற்றம் செய்திருந்தால் திரு. சஞ்சய்காந்தி அவர்கள்மீது, வழக்கு போடப்பட்டு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். குற்றம் செய்திருப்பதை நிரூபிப்பதற்கு ஆதாரம் இருந்தால், அவர்கள்மீது, வழக்குப் போடுவதில், எங்களுக்கு எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன். அப்படி குறிப்பிட்டதற்குக் காரணம், ஒரு கட்சியை ஆதரித்தால்தான் எங்களுக்கு இலாபம் கிடைக்கும் என்பதற்காக, நிச்சயமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் யாரையும் ஆதரிக்கவில்லை என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான்!

நியாய உணர்வோடு பார்த்தால் தெரியும். மிகவும் கஷ்டப்பட்டு இந்த நாட்டிலுள்ள நாம், சுதந்திரம் பெற்றிருக்கிறோம்! ஜனநாயக அடிப்படையில், உலகமெங்கும் இல்லாத அளவுக்கு, அதிகமான வாக்காளர்களைக் கொண்டது நமது இந்தியத் துணைக்கண்டம்! இங்கே, ஜனநாயகம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்பதற்காக, நாங்கள் அன்றைக்கு அதனை ஆதரித்தோமே தவிர, ஆதரிப்பதைத் தவிர வேறு வழியில்லாத நிலைமையில், அதனை ஆதரித்தோமே தவிர, எல்லோரையும் அடக்கி அடிமைப்படுத்தக்கூடிய சட்டம் வேண்டும்! அது இந்த நாட்டைக் குட்டிச்சுவர் ஆக்க வேண்டும், பாழ்படுத்த வேண்டும் என்பதற்காக செய்யவில்லை என்கிற இந்த அளவு விளக்கம் அதற்கு போதுமானது என்று கருதி, நான் நிறுத்திக்கொள்கிறேன்!

இன்னொன்றும் சொல்வேன், அவசர காலச் சட்டம் நாட்டில் இருந்தபோது தமிழகத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்துவதற்கு எல்லாக் கட்சிகளும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. நான் மறுக்கவில்லை. ஆனால், அதற்கு முன்னால் புள்ளி விவரத்தோடு, வாய்ப்பு ஏற்படுகிறபோது, நான் எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறேன்! எத்தனை முறை எங்கள் கட்சிக் கூட்டங்களை நடத்த முடியாதபடி, கத்திக்குத்து நடைபெற்று, சோடா புட்டிகள் வீசப்பட்டு, கற்கள் வீசப்பட்டு கூட்டங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன. கூட்டங்கள் நடத்த முடியாதபடி, போலீஸ் பாதுகாப்பு இல்லாமல், நாங்கள் அவதிப்பட்டிருக்கிறோம் என்பதை எங்களால் எடுத்துக்காட்ட முடியும்! அவை எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருக்கின்ற நேரத்தில், எந்த அளவுக்கு எங்கள் கட்சித் தொண்டர்கள், தோழர்கள் மாற்றுக் கட்சிகாரர்களால் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை எல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, சிறிது கெடுதல் இருந்தாலும் நல்லவற்றுக்காக அவற்றைப் பொறுத்துப்போக வேண்டுமென்று எதிராக எந்தக் காரியத்திலும் இறங்கவில்லை என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன்.

நான் உதாரணத்திற்காக உங்களிடம் ஒன்றை வைக்கிறேன். அவசர காலச் சட்டம் வந்தவுடன் ஏடுகளில் படித்தோம் ஆங்காங்கு தொழிற்சாலைகள் ஒழுங்காக வேலை செய்கின்றன. தொழிலாளர்கள் ஒழுங்காக வேலை செய்கிறார்கள். அலுவலகத்தில் இருக்கின்றவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வேலைக்கு வருகிறார்கள். கோப்புகள் ஒழுங்காக ஒரு இலாகாவில் இருந்து இன்னொரு இலாக்காவிற்கு விரைவாகச் செல்கின்றன. அதுமட்டுமல்ல, போக்குவரத்துக்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இப்படியெல்லாம் சொல்லப்பட்டதை, நானும் பார்த்துக் சொல்கிறேன், சொல்லப்பட வேண்டிய கருத்தைச் சொல்வது தவறு என்று யாரும் கருதிவிட முடியாது. அப்படி நடந்ததற்காக, இனியும் அவசர காலச் சட்டம் வேண்டுமென்று யாரும் விரும்பமாட்டார்கள் என்று சொல்கிறேன். எனினும், நாம் இன்னமும் நம் கடமையச் செய்யக்கூடிய அளவுக்கு பக்குவப்படவில்லையோ என்று ஐயப்படுகிறேன்!

விஷயம் தெரிந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் இங்கே இருக்கிறார்கள். இந்த முறைதான், மக்கள் சுயேச்சை யாரையும் தேர்ந்தெடுத்து அனுப்பவில்லை. இது மிகப்பெரிய நல்ல முன்னேற்றம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொருவரும், ஒரு கட்சிக் கொள்கைக்கு சொந்தக்காரர்களாக இங்கு வந்திருக்கிறார்கள். மக்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எல்லாம் நிச்சயமாகத் தெரியும். நம் கொள்கைகளுக்கு, நம் எண்ணங்களுக்கு அவசர காலச் சட்டம் துணையாக இருக்காது, தடையாக இருக்கும் என்று கருதினால் அதில் குறுக்கிட நான் தயாராயில்லை, அதையும் வரவேற்பேன்.

நான் ஒன்றைப் பணிவன்புடன் சொல்லிக்கொள்வேன். எவ்வளவு மாணவர் போராட்டங்கள் ? இந்த நாலைந்து நாட்களில் எங்கெங்கு மறியல்கள் ? ஆனால், மிகப் பெரிய தொல்லைகளை விளைவித்து அமைதியைக் கெடுக்கிற சூழ்நிலை உருவாகவில்லை என்றாலும், ஆங்காங்கு மாணவர்கள் பள்ளிக்கூடங்களுக்கு வந்தவுடன் என்ன என்ன என்று கேட்கவேண்டிய நிலையில் கோரிக்கைகள் விடுக்கிறார்கள்.

நான் பணிவன்போடு சொல்வேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மற்ற கட்சித் தலைவர்களுக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் சொல்வேன். நான் சில மாணவர்களைச் சந்தித்தேன். அவர்கள் வந்தார்கள், முன்பு பாதி அளவு கட்டணம்தான் இருந்தது. முழுக்கட்டணம் அவசர காலச் சட்டம் இருந்தபோது, அப்போதிருந்த ஆட்சிக்காலத்தில் முழுக்கட்டணமாக ஏற்றிவிட்டார்கள். அதை மாற்றித் தரவேண்டும் என்று கேட்டார்கள். நான் உறுதி சொன்னேன். அது மாற்றியமைக்கப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு விட்டது. உங்களுக்கு பாதிக் கட்டணம்தான் என்று சொல்லி அனுப்பிவிட்டேன், அவர்களும் மகிழ்ச்சியோடு சென்றார்கள்.

இதை எல்லாம் நான் சொல்லக் காரணம், எந்த அளவிற்கு மாணவர்களுடைய குறைகளைப் பற்றி கவனிக்கிறோம் என்பதையும், மக்களுக்கு தொல்லைகள் வரக்கூடாது என்பதையும், நிதிநிலை அறிக்கையில் சொல்லக் கூடாதவற்றை வெளியிடக் கூடாதவற்றைச் சொல்லமுடியாமல் இருப்பதைச் சொல்லாமல், எதைச் சொல்லலாமோ அதை மட்டும் சொல்கிற அளவிற்கு, இப்போது இடைக்காலத்தில் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிற நிலைமையில், நாங்கள் அவற்றை செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் சொல்வதற்காகத்தான் இதை வெளியிடுகிறேன்.

அப்படி சரி என்று போன மாணவர்கள் பேசாமல் இருக்கிறார்களா ? மாணவர்கள் கோரிக்கைகளை யாரிடம் வைக்கிறார்கள் ? நிருவாகத்தினரிடம், நிருவாகத்தில் யார் இருக்கிறார்களோ அவர்களிடத்தில் ஒப்படைக்கப்படுவதை அவர்கள் கவனிக்கவில்லை என்றால் அல்லது கேட்கவில்லை என்றால் அடுத்த நடவடிக்கை என்ன ? அரசினரை சந்தித்துக் கேட்கலாம். ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்களை சந்தித்துக் கேட்கலாம். இல்லை, அரசியல் கட்சித் தொடர்புள்ளவர்களாக இருந்தால் அவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சியைக் கொண்டு கேட்கச் செய்யலாம். ஆனால் நடைபெறுவது என்ன ? ஆங்காங்கு கண்ணாடிகள் உடைக்கப்படுகின்றன. ஆங்காங்கு தொல்லைகள், வன்முறைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. விடியற்காலை ஐந்து மணியானாலும், நள்ளிரவு பன்னிரெண்டு அல்லது ஒரு மணியானாலும் எனக்குத் தொலைபேசியில் செய்திகள் வருகின்றன. ஆங்காங்கு சிறு சிறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. பின்னால் இருந்து யாரோ தூண்டி விடுகிறார்கள் என்ற தகவல்கள் எனக்குத் தரப்படுகின்றன. நான் அதற்குரிய யோசனையை ஆளுநர் அவர்களிடமும், சொல்லியிருக்கிறேன், அதிகாரிகளிடமும் சொல்லியிருக்கிறேன், அலுவலர்களிடமும் சொல்லியிருக்கிறேன்.

இதை இங்கு வெளியிடக் காரணம், எப்படி மாணவர்களை எந்த நேரத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று காத்திருந்து சிலர் அதைச் செயல்படுத்த முனைகிறார்கள் என்றால், ஆட்சியில் இருப்பவர்கள், ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள், அதுபற்றிச் சரியான முடிவு எடுக்க வேண்டியவர்கள் எந்தக் கோணத்திலிருந்து அதைப் பார்க்க வேண்டும் என்பதில் யாரும் மாறுபட்ட கருத்தைச் சொல்ல மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தொழிலாளர்கள் பற்றிப் பேசுகிறார்கள். தொழிலில் முடக்கம் ஏற்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றை எப்போது திறக்கப் போகிறீர்கள், நீங்கள் தேர்தல் நேரத்தில் சொல்லவில்லையா, அந்தச் சட்டத்தை எப்போது போடப்போகிறீர்கள் என்று கேட்கிறார்கள். எப்படி சட்டம் போடுவது என்பது தெரியாமல் அவர்கள் கேட்கவில்லை. எந்த நேரத்தில் சட்டம் போட வேண்டும் என்று தெரிந்துதான், என்ன சொல்கிறார்கள் பார்ப்போம், இவர்களை மாற்றுவிக்க முடியுமா என்ற நிலையில் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒன்று மட்டும் சொல்வேன். எங்களால், மாநில அரசால் செய்யக்கூடியது அனைத்தையும் நாங்கள் செய்வோம். மத்திய அரசால் செய்யக்கூடியவைகளைச் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்வோம். வேறு வழி இல்லை என்றால், இங்கே எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், சில கொள்கைகளுக்கு நாங்கள் உங்களுக்குத் துணையாக இருப்போம்; உங்களுடன் ஒன்றுபட்டிருப்போம் என்று! சொன்னதுபோல், அவர்களது கொள்கைகளை அவர்கள் நம்புவது உண்மையானால், அந்தக் கொள்கைகளை, நாம் நிறைவேற்றுவதற்காக ஒரு போராட்டத்தில் ஈடுபட வேண்டிய அவசியத்தில், அந்தச் சூழ்நிலை உருவாக்கப்படுமானால், இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எங்கள் பக்கத்தில் இருப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன் என்பதனைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்!

மொழிப் பிரச்சினையானாலும் சரி, பொருளாதாரப் பிரச்சினையானாலும் சரி, 16,000 நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும் என்றால் எவ்வளவு செலவாகும் என்பதை நிதி அமைச்சராக இருந்த அனுபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு சில கருத்துகளைச் சொன்னார்கள்.

ஒன்றை நான் சொல்லிக் கொள்ள முடியும். சில எண்ணங்களை வெளியிடும்போது, அதில் பணியாற்றுகின்ற செயலர்களையும், அலுவலர்களையும் கலந்து விவரங்களைப் பரிமாறிக்கொண்டு, அதிலிருந்து எடுக்கப்பட்ட விவரங்களை வைத்துக்கொண்டு, அதன் பிறகு எங்கள் எண்ணங்களையும், அதில் சேர்த்துப் பரிசீலித்த பிறகுதான் இப்படிப்பட்ட எண்ணங்களை இந்த ஆளுநர் உரையில் வைத்திருக்கின்றோம் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நம்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நியாய விலைக் கடைகளை, இந்த நாட்டில் அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், இன்னும் ஆயிரத்து சொச்சம் கிராமங்களை சேர்த்துக்கொள்ளக் கூடாதா

என்று கேட்டார்கள். அதுபற்றி நிச்சயமாக இந்த அரசு சிந்திக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும், சூசகமாகச் சொன்னார்கள். 15ஆம் தேதி நான் சொல்லுவதாகச் சொன்னேன். அதை நான் சொல்லிவிட்டேன். ஆனால் எனக்கு முன்னால் இருக்கின்ற இராமச்சந்திரன், 15ஆம் தேதி சொல்லுவதாகச் சொன்னதை சொல்லுவதற்கு, அவர்கள் தயாராய் விட்டார் என்று நான் கருதுகிறேன் என்று அவர்கள் சொல்லாமல் சொன்னதை நான் புரிந்து கொள்ளாமல் இல்லை.

அவர்களே சொன்னார்கள், "என்னைப்பற்றி முதலமைச்சருக்கும் தெரியும்; அவரைப்பற்றி, எனக்கும் தெரியும்!" என்று. அவர் சொன்னதைத்தான் நானும் சொல்ல வேண்டியிருக்கிறது. என்னைப்பற்றி அவர் புரிந்துகொண்டிருக்கிறார்; அவரைப்பற்றியும் நான் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறேன்! ஒருவருக்கொருவர் இடையில் கொஞ்ச காலம் பிரிந்திருந்தோம் என்றாலும், ஒருவரை மற்றொருவர் புரிந்துகொள்ளாமல் இல்லை! இங்கு மதிப்பிற்குரிய உமாநாத் அவர்கள் கூட சொன்னார்கள், "ஏன் ஒருவருக்கொருவர் பெயரைக் கூடச் சொல்லுவதில்லை" என்று கேட்டார். பெயர் சொல்லுவது மட்டுமன்று; ஒருவருக்கொருவர், 'ஆண்டவனே' என்று கூப்பிட்டுக் கொள்வதும் உண்டு. பெயரைச் சொல்வது முக்கியமல்ல, பொதுத் தன்மையில், பொதுப்பிரச்சினையில், மொழிப் பிரச்சினை போன்ற பிரச்சினைகளில், நாங்கள் நிச்சயமாக அண்ணா அவர்களின் இரட்டைக்குழல் துப்பாக்கியாகச் செயல்படுவோம் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு இதன்மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நிலைமையில், 'படியரிசித் திட்டத்தை'ப்பற்றிக் கூறுவதற்கு நான் மறந்துவிடவில்லை; வெட்கப்படவும் இல்லை; விட்டுவிடவும் இல்லை! எங்கள் தேர்தல் அறிக்கையைக் கொண்டு வந்திருக்கிறேன். அதில் எங்குமே 'படியரிசித் திட்டத்தை'க் கொண்டுவருவோம் என்று நாங்கள் சொல்லியது கிடையாது! வானொலியிலும் சரி, டி.வியிலும் சரி, என்ன சொல்லப்பட்டது என்பதைப் பார்க்க வேண்டும். படியரிசித் திட்டத்தைப்பற்றி, அண்ணா அவர்கள் நாட்டு மக்களுக்குச் சொன்னார்கள். கொண்டு வருவேன் என்று சொன்னதை அண்ணா அவர்கள் நிறைவேற்றும் வரையிலும், தாமும், தமது நண்பர்களும், சம்பளம் வாங்கிக் கொள்ளாமல் காத்திருந்து, ஒன்றிரண்டு மாவட்டங்களில் அமல் நடத்திய பின்பே, சம்பளத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதை, நான் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசியிருக்கிறேன்!

'படியரிசித் திட்டத்தை' எப்படிக் கொண்டு வருவது? அரசின் கையில் முழு கொள்முதலும் இருந்தாக வேண்டும்; எல்லா விநியோகமும் அரசின் கையில் இருந்தாக வேண்டும்; இந்த நிலைமை ஏற்பட்ட பிறகே, இதைப்பற்றி யோசிக்க முடியும்! கொள்முதல் செய்கின்ற நிலைமை, ஆட்சியாளர் கையில் இருக்க வேண்டும்! இதற்கான திட்டங்களை நாம் யோசனை செய்யலாம். இரண்டு மாவட்டங்களில் தொடர்ந்து நடத்துவதாக இருந்தாலும், 15 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் என்று

தெரிவித்துள்ளார்கள். மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்கள், "இதில் எத்தனை செலவானாலும் பரவாயில்லை; படியரிசித் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும்!" என்று சொன்னார்கள். இதற்காகக் கணக்கிட்டுப் பார்த்தோம். கணக்கிட்டுப் பார்ப்பதில், எந்தத் தவறும் இல்லை. இதிலுள்ள விவரங்களைத் தெரிந்து கொள்வதிலும், எந்தவித தவறும் இல்லை. அந்த வகையில் பார்த்தபோது, மூன்று, நான்கு மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) மட்டும் 'படியரிசித் திட்டத்தை'க் கொண்டு வருவதாக இருந்தால், சற்றேறக்குறைய, ஆண்டுக்கு, 72 கோடி ரூபாய் நஷ்டமாகும்! இந்த நிலைமையை நாங்கள் உணர்ந்திருப்பதின் விளைவாக, நாங்கள் சொல்லாத ஒன்றைச் சொல்லியதாகக் குற்றம் சுமத்துவதற்காகச் சொல்லுகின்றார்கள்! இதில் நான் தெளிவாகச் சொல்ல விரும்புவது, இடைத்தரகர்கள் இடையில் இல்லாமல் இருந்தால், அரசே கொள்முதல் செய்வதாக இருந்தால், அரசே விநியோகம் செய்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், அந்த அளவுக்குத் தேவையான உபரி ஏற்பட்டு, அப்படிப்பட்ட நிலையில், தேவைப்படுகின்ற பொருட்கள் உற்பத்தியானால் நாங்களும், நீங்களும் சேர்ந்தே இதை அமலாக்க முடியும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்வேன்.

ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்வேன், நமக்கென்று சில கடமைகள் உண்டு மக்கள் அந்தந்தக் கடமைகளை நம் மீது சுமத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டு, அந்த உணர்வோடு நாம் அனைவரும் செயல்படுவதில், எனக்கு மெத்த மகிழ்ச்சி உண்டு. அதோடு இங்கே ஊழல், ஊழல் என்று பேசுகிறார்கள். லஞ்சம் லஞ்சம் என்று பேசுகிறார்கள். குற்றச்சாட்டை எடுத்துக் கூறினார்கள். என்னவென்று கேட்காமலேயே கூட, வெளியிட்டு விட்டார்களே என்று சொன்னார்கள்! கவர்னர் கே.கே.ஷா அவர்கள், எதிர்க்கட்சித் தலைவருக்கு மிக மிக நெருங்கிய நண்பராக இருந்தார் என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

அரசியல் இப்படியும் போகும், அப்படியும் போகும் என்று நான் இதுவரையில் நினைத்ததில்லை. நிலைமைகளுக்கான போராட்டங்கள், கொள்கைகளுக்கான போராட்டங்கள் ஆகியவைகளில் நம்பிக்கை வைத்துக்கொண்டு, போராடுகின்றவர்கள் நாட்டிலே இருக்கலாம். அவர்கள் நண்பர்களாக இருக்க முடியாவிட்டாலும், விரோதிகளாக இருக்கமாட்டார்கள். அப்படி கொள்கைப் போராட்டங்களை நடத்தி, அப்போராட்டங்களை மக்களிடையே வைத்து, மக்களுடைய அன்பைப் பெறுவதுதான் நாகரிகமான அரசியல் என்பதைத்தான் நான் இதுவரைக் கேள்விப்பட்டிருந்தேன்.

ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன பிறகு, எது நடக்கும் எது நடக்காது என்று சொல்ல முடியாத அளவிற்கு இருக்கிறது. தமிழக முன்னாள் ஆளுநர் மேதகு கே.கே.ஷா அவர்கள், எதையும் சொல்லாமல் வைத்துவிட்டு, மறுநாள் குற்றம் சுமத்தினார்கள் என்பதைக் கேட்கும்போது, உண்மையிலேயே வேதனையாகத்தான் இருக்கிறது.

ஆனால், அதோடுமட்டும்விட்டுவிடாமல், நான் ஒன்றைச்சொல்லவிரும்புகின்றேன். உண்மையான நண்பர்களாக இருப்பவர்கள் நண்பர்கள் செய்யும் தவறை இடித்துக் கூறுபவர்களாக இருப்பார்கள். போலி நண்பர்கள் இப்படி இடித்துக் கூறமாட்டார்கள்.

புகழ்ந்து கொண்டே அடியில் குழிதோண்டுபவர்களாக இருப்பார்கள்! 'செய்கின்ற தவறை இடித்துக் கேட்கின்றவர்கள் தான் நல்லவர்கள்' என்பதை என் தாய் எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். "போலி நண்பர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசி நம்மைப் புகழ்ந்து கொண்டிருப்பார்கள்! உண்மையான நண்பர்கள்தாம் நாம் செய்கின்ற தவறுகளைத் துணிவுடன் எடுத்துரைப்பார்கள். அப்போது, இப்படி நம் நண்பர் கூறுகின்றாரே என்று ஆத்திரப்படாமல், கோபப்படாமல், அவற்றை எடுத்துக் கொள்ள வேண்டும். உனக்கு அந்தக் கருத்து பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், நீயாகவாவது அதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்!" என்றெல்லாம் என் தாய் எனக்கு அடிக்கடி சொல்லித் தந்திருக்கிறார்கள். அந்த வகையிலே எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் என்கிற காரணத்தினாலோ, எதிர் வரிசையிலே இருக்கின்றவர்கள் என்ற காரணத்தினாலோ நீங்கள் சொல்லும் திட்டங்களை, இலட்சியங்களை, கருத்துகளை கொள்கைகளைப் பற்றி நீங்கள் இடித்துக் கூடியிருந்தாலும், அவைகளை நான் நிச்சயமாக, சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வேன். நான் கொஞ்சம் கூடக் கோபப்படமாட்டேன், வருத்தப்பட மாட்டேன் என்பதை மட்டும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகின்றேன்!

இதை, நான் முதலிலேயே இந்த மாமன்றத்திலே சொன்னேன். நீங்கள் என்ன சொன்னாலும், எனக்குக் கோபம் வராது, ஏன்? நீங்கள் சொல்லக்கூடிய நூற்றில் ஒன்று நன்மை பயக்கக்கூடியதாக இருக்கலாம். அதை ஏற்றுக்கொள்வதற்கு நான் கடமைப்பட்டவன் ஆவேன். அதேபோல, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தனக்குள்ள அனுபவத்தின் காரணமாக, இந்த அவையிலே சில கருத்துகளையும், புள்ளி விவரக் கணக்குகளையும் எடுத்துச் சொன்னார்கள். இப்படித்தான் இருக்க வேண்டும்! அவைகளையெல்லாம் நான் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

இந்த நாட்டிலே பற்றாக்குறை எங்கே இருந்தது; எந்த வழியில் இது உருவாக்கப்பட்டது, என்பதை முயன்றால் நாம் கண்டுபிடித்து விடமுடியும், கண்டுபிடிக்க முடியாத காரியமல்ல. யார் இந்தக் குற்றத்தைச் செய்கிறார்கள்? அவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுப்பது என்பதுதான் பிரச்சினை. நாம் வெவ்வேறு கட்சிகளாகப் பிரிந்திருக்கின்ற காரணத்தினாலே, பல்வேறு கொள்கைகளைக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலே, சிலர் அங்கே இல்லை என்றால் இங்கேயும், இங்கே இல்லை என்றால் அங்கேயும் யாரைக் கை வைத்தால் யாருக்கு வருத்தம் வரும் என்பது போன்ற நிலைமைகளில் அவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள்.

ஒன்றை மட்டும், நான் அமைச்சரவையின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆங்காங்கே, மக்கள் குழுவை நாங்கள் அமைத்து, நிச்சயமாக மக்களுடைய கண்காணிப்பை ஆங்காங்கே ஏற்படுத்தி, இப்படிப்பட்ட குற்றங்கள், தவறுகள் செய்பவர்கள் மீது, உரிய நடவடிக்கை மேற்கொண்டு, தண்டனை கொடுக்கக்கூடிய வகையில், செயல்பட வேண்டுமென்கின்ற ஆசை எனக்கு உண்டு.

நான் இந்த நாட்டு மக்களைச் சந்திக்கும் போதெல்லாம், அவர்கள் என்னிடம் கொடுக்கக்கூடிய ஆதாரங்கள், புள்ளி விவரங்கள், "இதோ பாருங்கள், மாளிகை! இதோ

பாருங்கள், கூட கோபுரங்கள்! அவைகள் எல்லாம் எவ்வாறு சரிந்து கிடக்கின்றன! இதோ பாருங்கள், இந்தத் தொழிற்சாலையை! இது எவ்வளவு மோசமாக ஆக்கப்பட்டு விட்டது! இந்தத் தொழிற்சாலைக்கு வாங்கிய பணத்தை, வேறு தொழிற்சாலைக்குப் பயன்படுத்தியதால், இந்தத் தொழிற்சாலையை மூடுகின்ற அளவுக்கு நிலைமை உள்ளது!'' என்றெல்லாம் எடுத்துச் சொல்வார்கள்.

அதே எண்ணத்தோடு அலுவலகத்திலே உட்கார்ந்து செயலாளரைக் கூப்பிட்டு விசாரிக்கும்போது 100க்கு 99 உண்மையாகிவிடுகிறது என்பதை நான் இந்தச் சில நாட்களிலேயே கண்டிருக்கிறேன்.

இதையெல்லாம் சொல்லக் காரணம், திரு.உமாநாத் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள், மூடப்பட்ட ஆலைகள் எப்போது திறக்கப்படும் என்று கேட்கிறார்கள். ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அமைச்சரவையைப் பொறுத்த வரை, எந்தெந்த வகையில் அவற்றைச் செய்வதற்கு எங்களால் நடவடிக்கை எடுக்க முடியுமோ அதிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல. இன்னொன்றையும் சொல்வேன்! ''நிருவாகத்திலே தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள், அதை நிறைவேற்ற வேண்டும்'' என்றார்கள். தொழிலாளர்களே, தொழிற்சாலையை நடத்த வேண்டுமென்ற ஆசை எனக்குண்டு. அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள, தொழிற்சங்க அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் துணிவு கொள்ள வேண்டும்.

தொழிலாளர்கள் ஒரு ஆலையை நிருவகிப்பது மட்டுமல்ல, அதற்கு உரிமையாளராகக்கூடிய சூழ்நிலை வரவேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை. அரசு, ஆலையை எடுத்துக் கொள்ளட்டும்! அரசே நடத்தட்டும்!'' என்று சொல்லுவதைவிட ''நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம். நாங்கள் நடத்துகிறோம்'' என்று அந்தந்த ஆலைத் தொழிலாளர்களே முன்வருவார்களானால், அதை நாங்கள் மகிழ்ச்சியோடு வரவேற்று, எந்தெந்த வகையில் உதவி புரிய முடியுமோ, அந்தந்த வகையில் எல்லாம் நிச்சயமாக இந்த அரசு தொழிலாளர் வர்க்கத்திற்கு ஆக்கம் தரும் என்பதை உத்தரவாதமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

அதுபோலவே ஊழலைப் பற்றி பேசினால் சிலருக்குக் கோபம்வர நியாயம் உண்டு. தவறு செய்யாதவர்கள் மீது பழி சுமத்துகிறார்கள் என்று சொல்லலாம். அதிகமாக நான் சொல்லக்கூடாது. இத்தனை கோப்புகளையும் நான் இங்கே கொண்டு வந்திருப்பது, இதுபோன்ற குற்றச்சாட்டுகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்ற நிலையில்தான். ஆனால், நேரம் இல்லாத காரணத்தால் அறநிலையத் துறையைப் பற்றி, அந்த இலாகாவைப் பற்றி மட்டும், ஒன்றிரண்டாவது சொல்லலாம் என்றால், சொல்ல மனம் வரவில்லை; சொல்லாமலும் இருக்க முடியவில்லை. எத்தனை நண்பர்களுடைய பெயர்கள், என்னால் மதிக்கப்படக்கூடியவர்கள் பெயர்கள் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன என்பதை எண்ணும்போது, விசாரணைக்குப் பிறகு சொல்லுவது நியாயமாக இருக்குமோ என்று கூட இன்னமும் நான் கருதுகிறேன். நான்

அறிந்துள்ள எத்தனையோ நல்ல நண்பர்கள் பெயர்கள் இருக்கின்றன. நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது எனக்கு நெருங்கிய அண்ணன் தம்பிகளைப் போல் இருந்தவர்கள், தொண்டர்கள், தியாகம் செய்தவர்கள், நண்பர்கள், பொதுவாகப் பெரிய மனிதர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் பெயர்கள் எல்லாம் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

இவற்றை நான் சொல்லக்காரணம், அறநிலையத்துறையில், ஆங்காங்கு என்னென்ன நடந்திருக்கிறது. சாலைகள் எப்படி எப்படி காணாமல் போயிருக்கின்றன என்பதைப் பற்றி இங்கே, இப்பொழுதே எடுத்துப் பேசவேண்டுமென்றால் நேரம் காணாமல் போகும் என்பதோடு, அதைப்பற்றி வழக்குகள் இருப்பதால் சொல்ல விரும்பவில்லை. இவைகளை எல்லாம் கண்காணிக்கக் கூடிய மிகப் பெரிய பொறுப்பை மக்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'எங்களுக்கு' என்று சொல்லாமல், 'நமக்கு' என்று சொன்னதற்குக் காரணம், ஆட்சியிலே இருப்பவர்கள் மட்டுந்தான் இதற்குப் பொறுப்பானவர்கள் என்று யாரும் கருதிவிட வேண்டாம், உங்களுக்கும் அதிலே பங்குண்டு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஏதோ மெஜாரிடியைப் பற்றி, பெரும்பான்மையைப் பற்றி, மதிப்பிற்குரிய, நான் அண்ணனாக மதிக்கின்ற புலவர் மாண்புமிகு கோவிந்தன் அவர்கள் நவக்கிரகம் என்று சொல்லி, ஒரு கிரகம் இன்னொரு கிரகத்திற்கு மாறினால், என்னாகும் என்று கேட்டார்கள். ஐந்து கிரகங்கள் ஒன்றாகச் சேரும் போதே தமிழ்நாடு, தமிழ்நாடாகத் தான் இருந்தது, ஆட்சியைப் பற்றி, ஆட்சியிலிருந்தவர்கள் பற்றி, வெளியே இருந்த ஜோதிடர்கள் நாலைந்து கிரகங்கள் சேருவதால் என்ன ஆபத்து வருமோ, இந்த நாட்டின் ஆட்சி என்ன ஆகுமோ என்றெல்லாம் சொன்னார்கள். அப்போதே பெரிய மாற்றம் ஒன்றும் காணவில்லை. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அதற்குப் பிறகும் பல ஆண்டு காலம் முதலமைச்சராக ஆண்டு கொண்டிருந்தார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நவக்கிரகம் என்றால் ஒன்பது கிரகங்கள், அது அதற்குள்ளேயேதான் சுற்றுமே தவிர, வெளியே போய்ச் சுற்றாது. ஆகவே, எனது மதிப்பிற்குரிய அண்ணனுக்கு, மாண்புமிகு புலவர் கோவிந்தன் அவர்களுக்கு, சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். "இது அங்கே போய்விட்டால் என்ன ஆகும்?" என்ற அச்சம் உங்களுக்கு வேண்டாம். அந்த அச்சத்தை ஏற்படுத்தித் தர மாட்டோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே சொன்னார் என்றாலும், வார்த்தையிலே, "மாறிவிட்டால் என்ன ஆகும்" என்று சொன்னார்கள். நீங்கள் எல்லாம் தெரிவித்ததைப்போல் அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டுவர வழியிருந்தால் ,அதற்குத் தயாராக இருந்தால் நிச்சயமாக கொண்டு வரலாம்.

'இருந்தால்' என்றுதான் சொன்னேன், தேர்தல் வருவதற்கு முன்பெல்லாம் சொன்னார்கள், இப்படியெல்லாம் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று. இப்போது

அங்கெல்லாம், கட்சி மாறுவதைத் தடுப்பதற்குப் பதிலாக மனமாற்றம் ஏற்பட்டுவிடாமல் தடை செய்யக்கூடிய நாட்களாக இருக்கின்றன.

மதுவிலக்கைப்பற்றி நான் இங்கே சொல்லியாக வேண்டும், காவல்துறையினர் இதிலே எந்த அளவிற்குப் பங்குகொண்டிருக்கிறார்கள் என்று இந்த மாமன்றத்திலே பலர் மிகத் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதை நான் அலட்சியத்தோடு கவனிக்காமல் இருந்துவிட்டேன் என்று யாரும் நினைக்க வேண்டாம். நீங்கள் சொன்ன வார்த்தைகளை எழுத்துக்கு எழுத்து என்னுடைய மனதில் பதியவைத்துக் கொண்டிருக்கிறேன் கருத்துகளையும் வைத்துக் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கடந்தகால அனுபவத்தில், சிலர் சில பழக்கங்களுக்கு அடிமைப்பட்டுவிட்டதன் காரணமாக கையூட்டுப் பெறுவதிலோ, தவறு செய்தவர்களைத் தண்டிப்பதிலோ, அதிகாரி என்று சொல்லிக் கொள்வதிலோ, பழக்கம் ஏற்படுவது பழக்கதோஷத்தில் இருந்து இருக்கலாம், அது மாறுவது கொஞ்சம் கஷ்டமாக இருக்கலாம். கைவிலங்கு பூட்டி அழைத்துச் சென்றார்கள் என்று சொன்னார்கள். இது மகிழ்ச்சி தரக்கூடியது அன்று! ஆனால், மதுவிலக்கைப் பொறுத்தவரையில்; என்னைப் பொறுத்தவரையில்; எங்கள் அமைச்சரவையைப் பொறுத்தவரையில்; எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில். இதிலே கண்டிப்பான நிலைமையை மேற்கொள்வதாக இருக்கிறோம்! சாராயம் காய்ச்சுபவர்களுக்கு மிகப் பெரிய தண்டனை அளிக்கக்கூடியச் சட்டம் இருந்தாக வேண்டும்! அதைப் போலவே, சாராயம் விற்பவர்களையும் கடுமையாகத் தண்டிக்கக் கூடியச் சட்டம் இருந்தாக வேண்டும்! தவறு செய்யாதவர்கள், தவறு செய்கிறார்கள்; நல்லவர்கள் கூட, சில சமயங்களிலே தவறு செய்யக்கூடிய நிலைமை ஏற்படுகிறது!

குடிப்பழக்கத்தைப் பிரச்சாரத்தின் மூலமாகக் கொஞ்சம் கொஞ்சமாகத் திருந்திவிடலாம். அதே நேரத்திலே, மதுவிலக்கு இந்த நாட்டிலே சரியாகச் செயல்படவேண்டுமென்றால், முதலில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்படக்கூடிய முறையிலே ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இப்போதுள்ள நிலைமையில் நீதிபதிகள் சரியான தண்டனை கொடுப்பதில்லை என்று என்னிடத்திலே சொல்லப்பட்டது. இரண்டாயிரம் ரூபாய் அபராதம் போடலாம் என்றால் 200 ரூபாய், 300 ரூபாய்தான் அபராதம் விதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்தச் சட்டத்தை மாற்றித்தான் இதற்கு வழி காணவேண்டுமென்று சொன்னால், நிச்சயாக அதை அரசு செய்யும்.

எதிர்க்கட்சித் தலைவர், இன்றைய தினம் அதைப்பற்றிப் பேசாவிட்டாலும் இரண்டு நாட்களுக்கு முன்பு குறிப்பிட்டார்கள், மதுவிலக்கை ஒத்திவைப்பதை நான் ஆதரித்தேன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழுவிலே அதை நான் ஆதரித்தேன் என்று சொன்னார்கள். அவருக்கு ஒன்று சொல்வேன். இந்த மன்றத்திலே நாம் இருவரும் பேசமுடியாத பல அரசியல் பிரச்சினைகளைப் பேசி முடித்தவற்றை எல்லாம் இங்கே சொல்ல முடியாவிட்டாலும், மதுவிலக்கு ஒத்திவைப்பைக் கொண்டு

வராவிட்டால், அண்ணாவால் அமைக்கப்பட்ட அரசைக் காப்பாற்ற முடியாத நிலைமை இருக்குமானால், இடைக்காலத்தில், ஆட்சியிலே இருக்கின்ற முதலமைச்சர் விரும்பினால், வேறு வழியில்லை என்று கருதுவார்களானால் அவர் விருப்பத்திற்குக் கொண்டுவரட்டும் என்று சொன்னபோது, மதுவிலக்குப் பிரச்சாரத்தை உடனடியாகத் தொடங்கியாக வேண்டும். தொடங்கப்பட வேண்டும் என்று சொல்லி, என்னை அந்தக் குழுவிற்குத் தலைவராக, இதோ என் முன்னால் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே நியமித்தார்கள் என்பதையும், அது அமலுக்கு வரும் நேரத்தில், அண்ணாசாலையிலிருந்து, நான் புறப்பட்டு சில நண்பர்களோடு அண்ணா சமாதி அருகே சென்று அந்தச் சதுக்கத்திலே, நாங்கள் உறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டோம் என்பதையும் இங்கே சொல்ல விரும்புகிறேன்!

அப்படிச் சொல்கின்ற நேரத்தில், மதுவிலக்கை ரத்து செய்வதை நான் முழுக்க முழுக்க எதிர்ப்பவன் என்றாலும், அண்ணாவால் ஒப்படைக்கப்பட்ட ஒரு கட்சி இருக்கும்பொழுது, அந்தக் கட்சி இந்த ஒரு காரணத்திற்காக அழிக்கப்பட்டு விடக்கூடாது. மற்றைய நல்ல தன்மைகள், சமதர்ம எண்ணங்கள், சமூக சீர்திருத்தங்கள், விவசாயிகளுக்குப் பாதுகாப்பு, மின்சார உற்பத்தி, அதற்காக என்ன செய்ய வேண்டுமென்பதறிந்து பாடுபடுவது, மொழிப் பிரச்சினை – இவையனைத்தையும் உள்ளிட்ட சமுதாயச் சீர்திருத்தத்தில் அக்கறை கொண்டு, சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் நீக்கப்பட வேண்டுமென்று கருதுகிற கட்சி அழிந்து விடக்கூடாது என்பதற்காகப் பலகாலம் என்றில்லாமல், இந்த அளவில், சில நாட்களுக்கு, சில மாதங்களுக்கு, ஓரளவிற்கு மாற்றி வைக்கலாம் என்ற நிலைமையில்தான் அதை ஒப்புக்கொண்டேன் என்பதை இந்த அடிப்படையில்தான் ஒப்புக்கொண்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மக்கள் மத்தியில் குடிப்பழக்கம் கூடாது என்பதைப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்பதற்காக குழு அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டது என்பதையும் கூறிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆனால், என்னைப் பொறுத்தவரையில், மது அருந்துகின்ற பழக்கத்தை அறவே ஒழித்தால்தான் இந்த நாட்டில் நல்ல காரியங்கள் செயல்பட முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். எத்தனையோ தொழிலாளர்கள், ஊக்கத்தோடு உழைக்கின்ற தொழிலாளர்கள், அதுபோல விஞ்ஞான அறிவு படைத்த மேதைகள், அதுபோல பட்டம் பெற்றவர்கள், அதுபோல பதவியிலே உள்ளவர்கள், இவர்களையெல்லாம் இந்த மது எப்படித் தாக்கியிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். சிலர் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். ‘பர்மிட்’ கொடுக்க மாட்டோம், திரும்பப் பெற்றுக்கொள்வோம், ரத்து செய்வோம் என்று சொன்னால், அதற்காக வழக்காடுவோம் என்று சொல்லுகின்ற அளவிற்கு நாகரிகம் அந்தப் பக்கத்தில் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்! தமிழ்ப் பண்பு, தமிழ்க் கலாச்சாரம், தமிழர்களுக்கு என்று இருக்கின்ற பாரம்பரியம், இவை யாவும் இன்னும் நம்மோடு இருக்கின்றன என்று பெருமை கொண்டிருக்கிறோம்! நாம் இந்த மதுவை

எதிர்த்துப் போராடி, நிச்சயமாக அந்த மதுவை ஒழித்துவிட முடியும்! அதை ஒழிக்க வேண்டுமென்பதற்காக, இந்த மாமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும், தலைவர்களும் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டிக்கொள்கிறேன். அத்தகைய வாய்ப்பு, இன்றைய தினம் எனக்குக் கிடைத்திருக்கிறது என்று கருதுகிறேன்!

நீங்கள் வேண்டுமானால் பாருங்கள், 15ஆம் தேதியன்று எதிர்க்கட்சித் தலைவரும் நானும் பேசப்போகிறோம் என்ற வகையில், நாளைய தினம் எத்தனை பத்திரிகைகளில் எந்தெந்த விதத்தில் தலைப்பிட்டு எவ்வளவு அதிகமாக விற்பனையாகப் போகின்றன என்பதை நீங்கள் பார்க்கப் போகிறீர்கள்! ஆனால், அவர்கள் ஏமாற்றம் அடையப் போகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்வேன். ஏதோ பெரிய தகராறுகள் வரும், போராட்டங்கள் கிளம்பும், ஒருவருக்கொருவர் கிண்டல் செய்வார்கள். ஒருவர் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் போகப்போகிறது. ஆகவே, குடுமியைப் பிடித்துக்கொண்டிருப்பார்கள் என்று சொல்லும் அளவிற்கு பூசல்களை மற்றவர்கள் பரப்பி வைத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள வேண்டிய கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆகவே, அவர்கள் நாளையதினம் எப்படிப்பட்ட ஏமாற்றத்தை அடையப்போகிறார்கள்! இந்த அரசு, தன்னுடைய செய்கை மூலம் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து, இங்கேயிருக்கின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமன்று. இங்கே வர முடியாமல் வெளியே இருக்கின்ற ஒரு சிலர், இதிலே நம்பிக்கை கொண்ட யாராக இருந்தாலும், அவர்களுக்குப் பொதுவாக, நேர்மையான வழியில் செயல்படும் என்பதையும் நான் சொல்லி, உங்களுடைய ஆதரவு கிடைக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதை இங்கே உறுதிப்படுத்திக்கொள்கிறேன்!

அமரர் அண்ணா அவர்கள் சொல்லிய, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் படித்துக் காட்டிய அந்தக் குறிப்புக்கு, கொஞ்சம் முன்னால் பேசியதை இங்கே நான் வைக்க விரும்புகிறேன், ''ஒரு சில உறுப்பினர்கள் ஆளுநர் உரையில், இன்னின்ன இல்லை என்று குறிப்பிட்டு, இதில் தொழிலாளர்களைப் பற்றி இல்லை; இதில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி இல்லை, பிற்படுத்தப்பட்ட மக்களைப் பற்றி இல்லை; கைத்தறி நெசவாளர்களைப் பற்றி இல்லை; இப்படி ஒரு உரையைத் தயாரிப்பதா, ஆளுநர் அவர்கள் இவற்றையெல்லாம் மறந்து விட்டாரா என்றெல்லாம் சொன்னார்கள்.

''ஆளுநர் உரையில் விடுபட்டுப்போன விஷயங்களெல்லாம், இந்த அரசினுடைய நினைவிலிருந்து விடுபட்டுப் போனவை என்று பொருள் அல்ல! அவையாவும் சர்க்காருடைய நினைவில் இருந்தாலும், இரண்டொரு விஷங்களைக் கோடிட்டுக் காட்டுவதன் மூலம் மற்ற விஷயங்களைப் பற்றி எண்ணிப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற கருத்தில் தயாரிக்கப்பட்டதே தவிர, அதில் சில விஷயங்கள் எடுத்துச் சொல்லப்படாததால், அவற்றின்மீது அரசுக்கு நாட்டம் இல்லையென்று யாரும் அவசரப்பட்டு முடிவுக்கு வரமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்'' என்று

பேரறிஞர் அண்ணா அவர்கள் அவர்களுடைய உரையிலே, ஆளுநர் உரைக்குப் பதில் சொல்லும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை அப்படியே உங்கள் முன் வைக்கவிரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் சிலவற்றைப் பற்றி நாங்கள் சொல்லாமல் போய்விட்டோமானால், அவற்றையெல்லாம் நாங்கள் மறந்துவிட்டோம் என்று யாரும் தயவுசெய்து கருதிட வேண்டாம். தாழ்த்தப்பட்டோர்களைப்பற்றி, பிற்படுத்தப்பட்டோர்களைப்பற்றி, மலைவாழ் மக்களைப் பற்றி, தொழிலாளர்களைப் பற்றி, வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருப்பவர்களைப் பற்றி, கல்வியைப் பற்றி, இவை அனைத்தையும், ஏன், நாங்கள் சொல்ல மறந்து விட்ட மற்றவற்றையும், நாங்கள் நிச்சயமாகச் செயல்படுத்த ஆசைப்படுகிறோம். அவைகளைப் பற்றி, நிதிநிலை அறிக்கையில் தெளிவாகக் கூறப்படும் என்று கூறி, இந்த அளவிற்கு அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லி, புதிதாக வந்த அமைச்சரவைக்கு உதவி செய்கின்ற வகையில், நாங்கள் தவறான பாதையில் போய்விடாமல், எங்களை நேர்வழியிலே அழைத்துச் செல்ல விரும்புகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல், நல்லவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு, சில இளைஞர்கள் ஏதாவது பேசி இருப்பார்களானால், அவைக் குறிப்பிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும், என் மனதிலே இடம் பெறாது என்று சொல்லி, இங்கே திருத்தங்கள் கொண்டு வந்திருப்பவர்கள் தயவுசெய்து திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று உங்களைப் பணிவன்போடு விரும்பி வேண்டி கேட்டுக் கொண்டு, நான் அமர்கிறேன்.

வணக்கம்.

15.07.1977 அன்று நடைபெற்ற சட்டமன்ற விவாதத்திற்கு, பதிலளித்து ஆற்றிய உரை.

தேசிய உடைமைத் தத்துவமே எங்களது கொள்கை!

சட்டமன்றப் பேரவை துணைத் தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது இந்த மன்றத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்துக் கூறி இருக்கிறார்கள். தொழில் துறையைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள கருத்துகள், பொதுமக்களின் மேல் அவர்கள் கொண்டிருக்கின்ற அக்கறையின் அடையாளமாகும் என்று நான் அதை எடுத்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே கூறப்பட்ட கருத்துகள் அனைத்திற்கும் தனித்தனியே பதில் சொல்ல குறிப்புகளை வைத்து இருந்தாலும், சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்போது, அவற்றையெல்லாம் சொல்கிறேன் என்ற நிலையில், முதலில், ஓரிரு கருத்துக்களை மட்டும் இந்த அரசின் தொழில் துறையினது கருத்துகளை முதலில் சொல்வது என்னுடைய கடமையாகும் என்று நான் கருதுகின்றேன்.

நாடு முன்னேறுகின்ற சூழ்நிலையில், ஒரு நாட்டு மக்கள் நாகரிகம் முதிர்ச்சி அடைந்து, நாட்டின் பொருளாதாரம், சமூக அமைப்பு இவைகள் சோசலிச வரம்புக்குள் இருக்கவேண்டும் என்கிற நோக்கத்தை எதிர்நோக்கி, நம்பி, அந்த இலட்சியத்திற்காக உழைக்கின்ற நேரத்தில், அவர்கள் பொறுப்பு மிக்க காரியத்தை ஆற்றவேண்டிய நபர்களாக மாறுகிறார்கள் என்பதையும், சமுதாய மாற்றத்தையும் அவர்கள் செய்ய வேண்டும் என்பதையும், நாம் ஒத்துக்கொள்ளத் தயங்கமாட்டோம் என்றே கருதுகிறேன்.

குறிப்பாக, தொழில் துறையில், தொழிற்சாலைகளை தேசியமயமாக்குவது அல்லது தனியார் துறைக்கு வாய்ப்பு அளிப்பது என்கிற இரண்டு பிரச்சினைகளையும் முதலாவதாக எடுத்துக்கொண்டு, அதைப்பற்றி என் கருத்துக்களை வெளியிடுவது சரியாக இருக்கும். அதற்குப் பிறகு நாங்கள், என்னென்ன வகையில் காரியங்களை நிறைவேற்ற விரும்புகிறோம் என்று சொல்வதை, மாண்புமிகு உறுப்பினர்கள் சரியாக கவனிப்பதற்கு உதவும் என்று நான் நம்புகிறேன்!

தனியார்த் துறை தேவையா, இல்லையா என்பதில், ஒரு வகையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியம் என்ன என்று சொல்லப்போனால், பெரிய பெரிய கனரகத் தொழிற்சாலை போன்றவை தேசிய உடைமையாக்கப்பட வேண்டும் என்பதிலும் குறிப்பாக நாட்டு மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைத்து, நாட்டு மக்களிலே எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இல்லை என்ற புள்ளிவிவரத்தைச் சொல்கிற அளவிற்கு மேம்பாடு அடைந்து, தேவைக்கேற்ற ஊதியம், திறமைக்கேற்ற உழைப்பு என்ற தத்துவத்தின் அடிப்படையில், நம்முடைய இலட்சியம் எப்படி இருக்க வேண்டுமென்று நாம் கற்பனை செய்து கொள்வோமானால், எண்ணிப் பார்ப்போமானால், அல்லது நம்பிக்கை கொண்டு இருக்கிறோம் என்று

சொல்லப்போனால், தேசிய உடைமை என்கிற தத்துவத்தின் அடிப்படையில் எல்லாம் அமைய வேண்டும் என்ற நிலைதான் எங்களுடைய கொள்கையாகவும், பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையாகவும் நிற்கும் என்பதை நான் இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அரசியல் கட்சியானாலும் அவர்கள் தங்கள் பணியை நிறைவேற்றுவதற்கு, கடமையைச் செய்வதற்கு, அவர்களுக்கு இருக்கின்ற வாய்ப்பையும் வசதியையும் பயன்படுத்திக்கொண்டு செயல்பட முற்படும்போது, அவர்களுக்கு சில கேள்விக்குறிகள், சோதனைகள், இடையூறுகள் ஏற்படுவது தவிர்க்க இயலாதவை ஆகும் என்பதை, மன்றத்தில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதில் எனக்கு ஐயம் இல்லை!

காரணம், இன்றைக்குத்தான் முதன் முதலாக, தமிழகத்தின் ஒரு புதிய அரசியலமைப்பு தோன்றியது என்றோ, அந்த அரசியலமைப்பு தோன்றி, முதன்முதலாக, இந்தக் கட்சிதான் ஆட்சிக்கு வந்திருக்கிறது என்றோ சொல்லக்கூடிய நிலைமை இருந்தால், அது வேறான சூழ்நிலையாக இருக்கும். பல்வேறு அமைச்சரவைகள், பல்வேறு மூதறிஞர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் இவர்கள் எல்லாம் நடத்தி, போராடி, தங்கள் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கு எந்தெந்த வகையில், முடியுமோ, அவற்றையெல்லாம், கிடைத்த வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தி அவைகளைச் செய்வதற்கு முயன்றதின் தொடர்ச்சியாகத்தான் நாங்கள் இப்போது இந்த அமைச்சரவையை அமைத்துப் பணியாற்றுகிறோம் என்பதை எண்ணிப் பார்க்கும்போதுதான், எங்களுடைய நோக்கங்கள் உண்மையிலே வேகமானதாகவோ, தீவிரமானதாகவோ, ஏழை மக்கள், உழைக்கும் வர்க்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவோ இருந்தால்கூட, அவற்றை நிறைவேற்றுகின்ற நிலையில், எத்தனை இடையூறுகள் ஏற்படும் என்பதை இங்கே பல உறுப்பினர்கள் பேசியதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது என்று நான் நம்புகின்றேன்.

எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டும், எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டும், இங்கே சொன்னார்களே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், போன்ற அமைப்புகள், இன்னும் பல கார்ப்பரேஷன்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டும்கூட, அவைகளிலும் குறைகள்—நிர்வாகத்தை நடத்துபவர்கள் திறமைசாலிகள்—ஆனால் பலன்களை கணக்கெடுத்துப் பார்த்தால், ஏமாற்றம் என்று இருக்குமானால் உண்மையிலேயே நாம் நன்றாக சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பது மட்டும் அல்லாமல் எல்லோரும் ஒன்றுபட்டு அந்த அடிப்படையில் இருக்கிற குறைபாடுகளை நீக்குவதற்காக, மிகப் பெரிய ஒரு போராட்டத்தை, நம் அரசியலமைப்பிலே அல்ல, இந்த மன்றத்தின் வெளியே அல்ல, இவைகளை எல்லாம் நிறைவேற்றுகிற அமைப்புகளுடன் போராடிப் வெற்றிபெற வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை நான் இங்கே முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் அரசைப் பொறுத்தவரையில், நான் ஒன்றை இங்கே திட்டவட்டமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். தேசியவுடைமை ஆக்குவதில் எவை எவை பயன் உள்ளதாக இருக்குமோ, அப்படி தேசியவுடைமையாக்குவது நாம் யாருக்காக, எந்த மக்களுக்காக சேவை செய்வதற்கு இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ, அவர்களுக்கு அது பயன்படுமா, பயன்தராதா என்று முதலில் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்; எந்தவொரு அரசும் இலட்சியத்தைக் கொள்ளாத அரசு என்றோ அல்லது இலட்சியத்தை மக்களுக்குச் சொல்லாத ஒரு கட்சி என்றோ யாருமே சொல்லத் துணியமாட்டார்கள்! நாம் இலட்சியத்தைச் சொல்கிறோம். இலட்சியத்தைப்பற்றி, சில விதிமுறைகள் கூட வைத்துக்கொண்டு, அவைகளுக்கு விளக்கம் தருகிறோம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், நான் சொல்கிறேன், இந்த அரசு, எந்தச் சூழ்நிலையிலும், எந்த திட்டத்தைப் பற்றி யோசித்தாலும், எந்த இலட்சியத்தைப் பற்றி சிந்தித்து செயல்படுத்த முன்வந்தாலும், அதனுடைய முடிவு, விளைவு, எந்த மக்கள் வாழவேண்டும் என்று விரும்புகிறோமோ அந்த மக்களுக்குப் பயன்படுமா என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான், இவைகளை எல்லாம் எப்படிச் செயலாற்றுவது என்ற முறையில் பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர, இலட்சியத்தைச் சொல்லியதற்காக மட்டும், யாரை வாழ வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ, அவர்களுக்குப் பயன்படாமல் போனால் பரவாயில்லை, நாங்கள் இப்படிச் சொல்லிவிட்டோம் என்ற மனதிருப்தியோடு, எங்களது கடமை முடிந்து விட்டது என்று கருத நிச்சயமாக தயாராயில்லை!

அதோடு இன்னொன்றையும் சொல்வேன். தனியார் துறை தேவையா இல்லையா என்று கேட்டால், இங்கு மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள், மேற்கு வங்காள முதலமைச்சர் அவர்கள் சொல்லியது பத்திரிகையில் வெளிவந்ததை எடுத்துக் கூறினார்கள். அதற்கு மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொன்னவற்றில் இரண்டொன்றை ஏற்றுக்கொண்டு, மற்றவை பத்திரிக்கைகளில் வெளிவந்திருக்கலாம் என்பதையும் சொல்வதற்கு முன்வந்தார்கள். இந்த நேரத்தில் மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு அவர்களை, இந்த அரசின் சார்பிலும், எனது சார்பிலும், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் வாழ வேண்டும் என்பது ஒரு இலட்சியம், அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு, அவர்களுக்குத் தேவையானவை பூர்த்தியாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உடையா, உணவா, அல்லது உறைவிடமா இவையெல்லாம் பார்த்து, அவர்களுக்கு வேலை வேண்டும் என்று சொன்னால், அதையும் கொடுப்பதற்கு, அவர்களுக்கு எது எது சிறந்த வழியாகத் தோன்றுகிறதோ, அவற்றை, அப்போது இருக்கின்ற சூழ்நிலையில், எந்தெந்த மாநிலத்தில், எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டுமோ அவைகளைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த மக்களை வாழ வைக்க, அவர்களுக்குச் சொந்தமான உறைவிடம் கிடைப்பதற்கும், உணவு கிடைப்பதற்கும், உடுக்க உடை

கிடைப்பதற்கும், அவர்கள் மனநிறைவோடு வாழ்வதற்குத் தேவையானவைகளைச் செய்ய, அவர்களுக்கு வேண்டிய வருமானத்தைக் கொடுக்க வழிவகை செய்வதற்குத் துணிகின்ற முறையில் முன்வருகின்ற அரசாக, அமைச்சரவையைக் கொண்டதாக, மக்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும் என்று சொல்லும்போது, அந்த வகையில் பாராட்டுகிறேன் என்பதோடு, இங்கு மாண்புமிகு சாதிக்பாட்சா அவர்கள் சொன்ன சில கருத்துகளை எண்ணி நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன்.

எங்கள் தேர்தல் அறிக்கையிலே ஒன்றை குறிப்பிட்டு இருக்கிறோம். தனியார்களிடம் இருக்கும் நிதி தமிழக மக்களுக்குப் பயன்படும் வகையில் இருக்க வேண்டும்; அந்த நிதியைப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்; அதற்கு ஓரளவு இலாபத்தை எதிர்பார்க்கலாம்; அந்த உரிமை அவர்களுக்கு உண்டு. அந்த வகையில் தொழிலை நடத்துவதற்கு, அவர்களுக்குப் பாதுகாப்பு தருவது, இந்த அரசின் கடமை என்று தேர்தல் அறிக்கையில் சூசுகமாக குறிப்பிட்டிருக்கிறோம் என்பதை குறிப்பிட்டுச் சொன்னார்கள். எங்களுடைய லட்சியம் அது!

தனிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், எந்தெந்த சூழ்நிலையில், எப்படிப்பட்ட குறிக்கோள்களை வைத்துக் கொண்டிருந்தாலும், எங்கள் இலட்சியத்தை முழுமையாக நிறைவேற்றி எல்லா மக்களும் வாழ்வதற்கு உரிய அளவுக்கு நிதியைச் செலவிட்டு, அல்லது ஆங்காங்கு நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கோ, பள்ளிக்கூடங்களை கட்டிக் கொடுப்பதற்கோ, குடி தண்ணீர் வசதியை முழுமையாக ஏற்படுத்தித் தருவதற்கோ, உதவினால் வரவேற்கலாம்! அல்லது 10 ஆயிரம் நியாயவிலைக் கடைகளை நிறுவ வேண்டும் என்று சொன்னாலும் சரி, அல்லது 15 ஆயிரம் சிறு தொழில்களை ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று சொன்னாலும் சரி, இதை எல்லாம் ஒரு தனி அரசு செய்ய முடியாது என்பதை யாரும் முழுமையாக ஏற்றுக்கொள்வார்கள் என்பதில், எனக்கு சந்தேகம் இல்லை! அந்த வகையில், தொடக்கத்தில் மக்களை வாழவைக்க வேண்டும் என்பதற்காக, சில வழிமுறைகளைத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தோம். அதற்கு ஆதரவாக, எதிர்கட்சியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் எங்களுக்கு சொன்ன கருத்துகள், நாங்கள் எடுத்திருக்கின்ற முடிவுகளுக்கு மிகவும் சாதகமாக அமைந்திருக்கிற காரணத்தால் நான் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களை என்றால், அவரது கட்சியைப் பாராட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வால் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த அரசு, ஒரு கொள்கையை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது. தனியார் துறையை, உண்மையில் நல்லமுறையில் ஊக்கப்படுத்துவது என்று நாங்கள் முடிவு எடுத்திருக்கிறோம் என்பதை தெள்ளத்தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்! எந்தெந்த வகையில் எந்தெந்த தொழில்களைத் தேசிய உடைமையாக்குவது என்பதைப் பார்த்து, எது மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதை எண்ணிப்பார்த்து, அதற்குத் தகுந்தவாறு

தேசிய உடமையாக்குகின்ற முயற்சிகளைச் செய்து கொண்டிருப்போம் என்பதையும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இது, எப்படி, ஒருபக்கம் தனியார் துறையை ஊக்குவிப்பது, மறுபக்கம் தேசிய உடமையாக்குவது, ஐந்து ஆண்டுகள் தனியார் துறையை ஊக்குவித்து வசதி வாய்ப்பு எல்லாம் பெருகிவிட்ட பின்னர் 6ஆம் ஆண்டில் தேசிய உடமையாக்கிவிடுவதா என்றால், அப்படி அன்று! அந்த எண்ணத்தில் இது கூறப்படவும் இல்லை! இலட்சியங்கள், திட்டங்கள் என்று சொல்லப்படும் போது எங்கள் இலட்சியங்களுக்கு ஏற்ப, திட்டங்கள் வகுக்கப்படும். இதில், இரண்டுவகையான பொறுப்புகள் உள்ளன. எங்கள் கொள்கை, அது ஒரு இலட்சியம், அதைத் தொடர்ந்து வருவது;மக்களை வாழ வைப்பது; 10 ஆண்டுகள் ஆனாலும், 20 ஆண்டுகள் ஆனாலும், 50 ஆண்டுகள் ஆனாலும் தனியார் துறையின் மூலம் அதிக நன்மைகளை ஏற்படுத்த முடியும் என்கிற நிலைமை இருக்குமானால், அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுத்து மக்களுக்கு வேண்டிய வசதிகளை ஏற்பாடு செய்து தர வேண்டியதில் மட்டுமே நாங்கள் முனைப்பாக இருந்து வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

அப்படியானால், தொழிலாளர்கள் அடிமைகளாக இருக்கக்கூடிய பழைய நிலை மீண்டும் வரவேண்டுமா? அது அவர்களுடைய விதியா? என்று கேட்டால், அதற்கும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். "மூடப்பட்ட மில்களைத் திறந்து விடுங்கள்; மில்களைத் திறந்து விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யுங்கள்!" என்று சொன்னால், நாங்கள் இந்தியப் பேரரசோடு கலந்துபேசியபோது, அவர்கள் கூறிய யோசனைக்கும், நாங்கள் ஏற்கெனவேயே வெளிப்படையாகத் தேர்தல் காலத்திலே வெளியிட்ட சிறந்த யோசனைகளுக்கும், எந்தவிதமான வேறுபாடும் இல்லை என்ற அடிப்படையில், அப்படித் திறக்கின்ற மில்களுக்கு யார் பொறுப்பேற்றுக்கொள்வது என்றால், அங்கே வேலை செய்கின்ற அந்தத் தொழிலாளர்கள், முழுமையான அந்தத் தொழிற்சாலையை தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்வதுபோல் அவர்களே நடத்தலாம். அதற்கு மத்திய அரசானாலும் சரி, தமிழக அரசானாலும் சரி, எந்தெந்த வகையில், சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படாமல், சட்டத்திற்கு உட்பட்டு, வேண்டியவற்றைச் செய்துதர இயலுமோ, அவைகளையெல்லாம் செய்து தருவதில், இந்த அரசு ஒருபோதும் பின்வாங்காது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொருவருக்கும் பிரச்சினை இருக்கிறது. அண்மையில் நெல்லிக்குப்பத்தில் என்று நினைக்கிறேன். ஒரு பிரச்சினை வந்தது. தொழிலாளர்கள் இயந்திரக் கருவிகளை அந்தத் தொழிற்சாலைக்குள் கொண்டு போகக்கூடாது என்று மறியல் செய்தார்கள். ஆனால், அதன் பாதிப்பு என்னவென்றால், அங்கே தொழில் செய்யப் போகின்ற தொழிலாளர்கள் ஏறக்குறைய ஆயிரம் பேர்கள் இருக்கலாம்; 2,000 பேர்கள் இருக்கலாம்; அல்லது 500 பேர்கள்தாம் இருக்கலாம் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அதேசமயம் தொழிற்சாலைக்குக் கொடுக்கப்பட்டுவரும் கரும்பை உற்பத்தி செய்கிற விவசாயிகள் எண்ணிக்கை எவ்வளவு என்றால் 25,000 பேர்கள்.

25,000 விவசாயிகளின் வாழ்க்கையானது, ஆலைத் தொழிலாளர்கள், வழியிலே உட்கார்ந்து உள்ளே இயந்திரம் போகாமல் தடுத்த காரணத்தினால், பாழ்பட்டுப் போகும் ஆபத்து அங்கே உருவாயிற்று! விவசாயிகள் எங்களைச் சந்தித்தார்கள். மனுக் கொடுத்தார்கள். அந்த மனுவிலே வேண்டிக் கொண்டார்கள். "நாங்கள் 25,000 குடும்பங்கள் இருக்கிறோம்! கரும்பு உற்பத்தி செய்யும் பணியைச் செய்கிறோம்; ஆலைத் தொழிலாளர்கள் மறியலைக் கைவிட்டு, ஆலை இயங்குவதற்கான நிலையை மீண்டும் ஏற்படுத்தி, எங்கள் வாழ்க்கை பாதிக்கப்படாமலிருக்க, எங்களுக்கு ஆதரவு தாருங்கள்!" என்று கேட்கிறார்கள்.

ஒரு அரசைப் பொறுத்தவரையில், மில்லானாலும் சரி, அதைப் போன்று எந்தத் தொழிற்சாலையானாலும் சரி, தொழிற்சாலையிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களானாலும் சரி எங்களால் ஆலைகளும், ஆலைத் தொழிலாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. அதேபோல், இந்த விவசாயிகளானாலும் அவர்களும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள், ஆனால், எண்ணிக்கையையும் எண்ணிப் பார்க்கவேண்டும். 1,000 பேர்களுக்காக, 25,000 குடும்பங்கள் பாழ் ஆவதா ? இந்த 25,000 குடும்பங்களும் உற்பத்தி செய்கின்ற பொருள் வீணாவதா ? இது நாட்டிற்கு மிகத் தேவையான சர்க்கரையாக இருந்தாலும், வேறு பொருளாக இருந்தாலும், அது உற்பத்தி செய்யப்பட வேண்டாமா ? மூலப்பொருட்களை கச்சாப் பொருட்களாக உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களை/கருவிகளை ஆலைக்குள் எடுத்துச் செல்லவிடாமல் தடுப்பது என்பது மிகப்பெரிய பிரச்சனையாக, சோதனையாக மாறுகிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில் நாங்கள் சொன்னோம்; தொழிலாளர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த, ஏற்பாடுகள் செய்து, அவர்களோடு பேசினோம். அதன்மீது, அந்த இயந்திரங்கள் உள்ளேபோக அனுமதிப்பது என்றும், 'லாக்–அவுட்'டை நீக்குவது என்றும், வேலை கொடுப்பது என்றும், விவசாயிகளின் வாழ்க்கை வசதிக்கான இயல்பான சூழ்நிலையை, மீண்டும் அங்கே தோற்றுவிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், ஒன்றைச் சொல்கிறேன். ஒருவேளை, அந்தத் தொழிற்சாலையிலே உள்ள தொழிலாளர்கள் பிடிவாதமாக, "நாங்கள் ஒப்புக்கொள்ள மாட்டோம்!" என்று சொல்லியிருந்தால், இந்த அரசு என்ன செய்திருக்கும் ? நியாயமான ஒரு அரசு என்ன செய்திருக்க வேண்டும் ? 25,000 குடும்பங்கள் காப்பாற்றப்பட வேண்டுமென்ற எண்ணத்தை முதன்மையாகக் கொள்கின்ற ஒரு அரசு அந்த ஆயிரம் பேர்களையும் கைது செய்ய வேண்டியிருந்திருக்கும். அவர்கள் மீது வழக்குப்போட வேண்டியிருந்திருக்கும். அவர்களையெல்லாம் ஒட்டுமொத்தமாக அப்புறப்படுத்த வேண்டியிருந்திருக்கும். அதனைச் செய்வதைத் தவிர, இந்த அரசுக்கு வேறு வழியே இல்லை என்பதனை இங்குள்ள அனைவருமே ஏற்றுக் கொள்வார்கள்; நாடும் அதை ஒப்புக் கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நம்புகிறேன்!

பெருமளவிலான மக்களின் நலனுக்கு ஊறுவிளைவிக்கும், இப்படிப்பட்ட சூழ்நிலையை, இந்த அரசுக்கு எந்த அரசியல் கட்சியும் ஏற்படுத்திவிடக் கூடாது என்று இங்கே மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எத்துணையோ பிரச்சனைகள் இருக்கின்றன. பணம் கொடுப்பது, அதைத் திரும்பப் பெற விரும்புவது என்பதெல்லாம் தனியார் துறையில் மட்டுந்தான்—அப்படித் திரும்பப் பெறுகிற முறை இருக்கிறது, இருக்க வேண்டுமென்று எண்ணுகிற மனப்பாங்கு மக்களிடத்திலே ஏற்படும்படிச் செய்வது, நல்ல மக்கள் சமுதாயம் ஏற்படுவதற்கு உதவி செய்வதாக ஆகாது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகமாகப் பேசவேண்டுமென்று நான் விரும்பவில்லை, சொல்லவேண்டிய பதில்களைச் சொல்லியாக வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய சாதிக் பாட்சா அவர்களுக்கு "அலை ஓசை" பற்றி மட்டும், ஒரு குறிப்பைச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன் என்பதை வேறு வழியின்றித் தெரிவிக்கிறேன்.

'அலை ஓசை'க்குக் கொடுத்த கடன் ரூ.7.9 இலட்சம். வட்டி எல்லாம் சேர்த்து ஏறத்தாழ ரூ.9 இலட்சத்திற்கு மேல் ஆகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி கொடுத்திருந்தால், மாதம் ரூ.3,000/— வீதம் திருப்பிக் கட்டி விடுவார்கள் என்று இங்கே எடுத்துக் காட்டினார்கள். அதைச் சொல்லும்போது நியாயமாகக் கூட அது தோன்றும். இத்தனை இலட்சம் ரூபாயை மாதம் 3,000/— ரூபாய் வீதம் கட்ட முன்வந்தால், அது எப்போது முடியும், என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்! அதைவிட, ஒரு முக்கியமான பிரச்சனை அதிலே இருக்கிறது. ஒப்பந்தம் செய்யும்போது பாடப்புத்தகங்களை மட்டுமே வெளியிடும் என்ற உத்தரவாதத்தோடு கடன் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பத்திரிகை நடத்தியது என்ன என்பதை தயவுசெய்து மாமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த ஒப்பந்தத்திற்கு மாறாக, இதுவரை அவர்களை அனுமதித்திருக்கிறார்கள். நான் வந்ததும், இந்தப் பதவி ஏற்றுக் கொண்டதும் இரண்டு மாதங்களாக நானும் அதை எப்படிச் சரி செய்வது, எப்படி அவர்களுக்குத் துன்பம் நேராமல் தடுப்பது என்று முயற்சித்துப் பார்த்தேன். வேறு வழியின்றி, இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது! இவைகளை எல்லாம் நான் சொல்லாமல் இருப்பதற்குக் காரணம், உடனுக்குடன் பத்திரிக்கை நண்பர்களை அழைத்து, பத்திரிக்கையில் வேறு செய்தி வெளியிடும்போது நான் மறுப்புக் கொடுக்காமல் இருப்பதற்குக் காரணம், எடுத்ததற்கெல்லாம் எதையும் ஒரு பிரச்சினையாக்கி, அதனை மக்கள் மத்தியில் விவாதப் பொருளாக ஆக்க வேண்டாம் என்று கருதுவது என்பதனை, என்னுடைய பலவீனம் என்று பலர் எண்ணிக்கொள்வதைப் பார்க்கும்போது, எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது! "அந்தப் பத்திரிகையை எம்.ஜி.ஆர். மூடிவிட்டார்!" —என்றால் எம்.ஜி.ஆரா மூடிவிட்டார்? முதலமைச்சரா மூடினார்? இன்னும் சொல்லப் போனால் யார் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, கடன் கொடுத்துள்ள அமைப்பாக எது உள்ளதோ, அந்த அமைப்பு அதை ஏற்றுச் செயல்படுத்தியது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அவர்கள் வியப்படைகிறார்கள்!

அந்த அளவுக்கு, விவாதங்களை நான் நீட்டிக் கொண்டுபோக விரும்பவில்லை! அதற்கென்று இயக்குநர்கள் இருக்கிறார்கள் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்றை நான் சொல்வேன். என்னென்ன தவறுகள் நடக்கின்றன என்பதை இங்கே மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள்– திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சாவை அமைச்சர் என்று சொல்லுவதில், நான் பெருமைப்படுகிறேன். மாண்புமிகு முன்னாள் அமைச்சர்சாதிக் பாட்சா அவர்கள் கூறினார்கள்.

இவர்கள் இப்படிச் சொல்கிறார்கள், ஆனால் என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளி விவரம் இது. புள்ளிவிவரத்தைப் படித்தால் நேரமாகும். ஆகவே, அதை இங்கு படிக்கப் போவதில்லை! எப்போதுவேண்டுமானாலும், அந்தக் கோப்புகளை நேராக வந்து பார்க்கலாம். இதைநான் ஏன் எடுத்துச் சொல்கிறேன் என்றால், வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவது என்பது தனிப்பட்டவர்கள் கொடுத்தால்தான் திருப்பிக் கொடுக்க வேண்டும்; அரசு கொடுத்தால், திருப்பிக்கொடுக்காமல் இருக்கலாம் என்ற எண்ணம் தமிழகத்திலே வளர்ந்து வருகிறது என்பதைப் போன்ற ஒரு அச்சம் நான் பதவியேற்றுக் கோப்புகளைப் பார்க்கிற நேரத்திலே எனக்கு ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப்பற்றி இங்தே பேசுகிறோம். ‘மின்சார போர்டு’ இருக்கிறது. அது எப்படியெல்லாம் இயங்கியிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். இங்கே அதை குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், பணம் கொடுக்கல்–வாங்கல் இருக்கிறதே அதிலே வேடிக்கை என்னவென்றால், ஒரு அலுமினியத் தொழிற்சாலை, வாரியத்திற்கு செலுத்த வேண்டிய பாக்கி, ஏறத்தாழ ரூபாய் 9 கோடியே 3 இலட்சத்து 24 ஆயிரம். விவசாயிகள் ரூபாய் 5 ஆயிரம், 3 ஆயிரம் கட்டவில்லையென்றால், நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று சொல்கின்ற அதிகாரிகள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் நாம் இங்கே இருக்கிறோம், அரசுக்குப் பணம் தேவையென்று. ஆனால், இந்த ஒரு தொழிற்சாலை பணம் கொடுக்காமல் இருப்பது மட்டுமல்ல; அவர்கள் வெளியிடுகின்ற, ‘பேலன்ஸ் ஷீட்’ என்று சொல்வார்களே, அதிலே ஏறத்தாழ, ஒரு கோடி ரூபாய் இலாபம் வந்துள்ளதாக காட்டப்பட்டு இருக்கிறது. இருப்பு, ஆறு கோடி ரூபாய் என்ற கணக்கு அதிலே சொல்லப்பட்டுள்ளது. ஆனால், கடன் பாக்கித்தொகையானது செலுத்தப்படவில்லை; வசூலிக்கப்படவில்லை என்பன போன்ற குறைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன! இதில் மட்டும் இல்லை; நான். நேற்றைக்கு மேலவையிலே தெரிவித்ததைப்போல, பல்வேறு வகைகளிலே இப்படிப்பட்ட குறைகளாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் செலுத்தப்படாமல், ஆங்காங்கே நிலுவைகளாக தேங்கியிருக்கின்றது என்பது மட்டுமல்லாமல், அவற்றை வசூலிப்பதற்கான எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் விட்டு வைக்கப்பட்டு இருக்கிறது என்ற அந்த வியப்புக்குரிய செயலை, எண்ணுகிறபோது, நான் வேதனைப்படுகிறேன்! நீங்கள் இங்கே பேசிய அத்தனை

கருத்துகளையும் வைத்துக்கொண்டு, உங்கள் ஆதரவில், நீங்கள் தருகிற துணிவில், இப்படிப்பட்டவர்கள் மீது கண்டிப்பாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இது ஒன்றினை மட்டும் குறிப்பிட்டு விட்டுவிடுகிறேன் என்று நீங்கள் கருத வேண்டாம். தூத்துக்குடியிலே, இது ஒரு முக்கிய பிரச்சினை, நண்பர், திரு. மார்க்கபந்து அவர்கள் இந்த எண்ணத்தை வெளியிட்டார்கள், அந்த ஊரிலே இருக்கிறவர்களுக்கு வேலை கொடுக்காமல், வெளியிலே இருந்து அழைத்துவரப்பட்டவர்களுக்கு, வேறு மாநிலங்களில் இருந்து வருகின்றவர்களுக்கு, வேலை கொடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். நான் சொல்லிக் கொள்வேன், இந்த அரசைப் பொறுத்தவரையில், தமிழகத்திலே உள்ள மக்களுக்கு முன்னுரிமை கொடுத்துவிட்டு, அதற்குப் பிறகு, மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படும் இந்த அரசு என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். அந்த நிலையில்தான், இந்த அரசு எல்லாக் கோணங்களிலிருந்தும், நடவடிக்கை எடுக்கும். அப்படிப்பட்ட தவறுகள் நடந்திருக்குமானால், நடந்திருக்காவிட்டால் இந்த மாமன்றத்திலே சொல்லி இருக்கமாட்டார்கள், சட்டம் எந்த அளவிற்கு அவர்களுக்கு சாதகமாக அமைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, வேறு சட்டங்களை எப்படி உருவாக்கினால், சாதகமான சூழ்நிலையை தமிழக மக்களுக்கு ஏற்படுத்தித்தர முடியும், என்று சிந்தித்து, இந்த அரசு அதை நிச்சயமாக மேற்கொள்ளும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெளிவுபடச் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போல் நம்முடைய உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சில கருத்துகளை இங்கே சொல்லியிருக்கிறார்கள். தொழிற்சாலைகளிலிருந்து வருகிற துர்நாற்றம், கழிவுத் தண்ணீர் போன்றவைகளால் மக்களுக்கு ஏற்படுகிற தொல்லைகளிலிருந்து விடுதலை அளிக்க வேண்டுமானால், உடனேஅதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்த நிமிஷத்திலேயே, இந்த வினாடியிலேயே, அதைச் செய்யவேண்டும் என்று வற்புறுத்தினால் என்ன ஆவது என்று கேட்டார்கள்.

இதற்குமுன் பேசியவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் பலர், வேறு தலைப்புகளில் பேசும் பொழுதெல்லாம் இதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனையோ முறை நோட்டீஸ் அனுப்பப்பட்டது. சீக்கிரம் என்றார்கள், இதோ அடுத்த முறை என்றார்கள், செய்துவிட்டோம் என்றார்கள். முன்பிருந்த அரசையும் ஏமாற்றியிருக்கிறார்கள்; இடைக்காலத்திலேயும் ஏமாற்றியிருக்கிறார்கள்; தொடர்ந்து ஏமாற்ற முயற்சிக்கிறார்கள், என்றால் அதை இந்த அரசு அனுமதிக்க வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்! வேறு வழியில்லாமல் போகும்பொழுது, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது தவிர, வேண்டுமென்றே எடுத்த எடுப்பிலேயே இப்படிப்பட்ட நிலைமைகளை யாரும் உருவாக்க மாட்டார்கள். ஒரு அரசு அதில் ஈடுபடாது என்பதை இங்கே சொல்வது எனது கடமை என்று கருதுகிறேன். வேண்டுமானால், அதிலும் மாண்புமிகு

உறுப்பினர்கள் சொன்ன காரணத்தால், அப்படி, அரசுக்குச் செலுத்த வேண்டிய கட்டண பாக்கியைச் செலுத்த வலியுறுத்தி, அவர்களிடம் நிலைமையைப் புரிய வைத்து, அரசினர் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள்; விளைவுகள் மிகவும் மோசமாகிவிடும் என்று சொல்லி, அவர்களைத் திருத்த முடியுமானால், ஒரு மாதம் தவணை கொடுப்பதற்கும் நாங்கள் முன் வருகிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சனைகளில் எல்லோருக்கும் சில கஷ்டங்கள் ஏற்படுவது இயற்கை. அது தவிர்க்க முடியாததுதான். ஆனால் கஷ்டங்கள் இருக்கின்றன என்பதற்காக, நான் முன்னே சொன்னதைப்போல, புள்ளி விவரங்களை மனத்தில் வைத்து, எத்தனை நிலங்கள் பாழாகின்றன, எத்தனை குடும்பங்களுக்கு நோய் உண்டாகிறது, எத்தனை பேர்களுக்குத் தொல்லைகள் வருகின்றன என்பதையெல்லாம் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று, நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொரு விஷயம், தமிழகத்தில் மிகப்பெரிய அளவில் தொழில் தொடங்குவதற்கான, பணம் வெளிநாட்டிலேயிருந்து கிடைப்பதற்கு நிறைய வாய்ப்பு இருக்கின்றது. ஒரு தொழில் இங்கே இருக்கிறது; அது கறுப்புக்கல் தொழிலாகும்! அந்தக் கற்களை வெட்டியெடுத்து, வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக எவ்வளவோ நண்பர்கள் தயாராக இருக்கிறார்கள். அண்மையிலே ஒருவர் என்னிடம் வந்தார். ஒரு நாளைக்குக் குறைந்தது 2,000 பேர்களுக்கு வேலை தருகிறோம். 20 வருடங்களுக்கு நாங்கள் தொடர்ந்து தருகிறோம், ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். இத்தனை இலட்சம் ரூபாய்கள் நாங்கள் அரசுக்குத் தருகிறோம் என்று சொன்னார்கள். உடனே எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. இருபது வருடங்களுக்கு, இரண்டாயிரம் பேர்களுக்கு ஒரு நாளைக்கு வேலை கொடுக்கக்கூடிய அப்படிப்பட்ட தொழில் என்னவாக இருக்கும் என்று நினைத்து, கோப்புகளை வரவழைத்து பரிசீலித்துப் பார்த்தேன். அந்தக் கோப்புகளைப் பார்த்தால், தென்னார்க்காடு மாவட்டத்தில், அதைப்போல தருமபுரி மாவட்டத்தில், கோடி கோடியாகப் பணம் சம்பாதிக்க வாய்ப்பும், வசதியும் இருக்கின்ற ஒரு தொழிலாக அது இருக்கிறது என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்வதிலே மனநிறைவு அடைகிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். அதை ஏலத்தில் விட்டு எடுக்கவேண்டுமென்பது, ஒரு சட்டம்— விதிமுறை.

ஆனால், ஏதோ தவறு நடந்திருக்கிறது. ஏலத்தில் விடாமல் சிலர் எடுத்திருக்கிறார்கள். ஒரு சிலருக்கு ஏலத்தில் விடப்பட்டிருந்தும், இங்கேகூட ஒருவர் சட்டமன்ற உறுப்பினராக அவையிலே இருக்கிறார். அவர் பணம் கட்டியிருக்கிறார். ஆனால், அவருக்குக் கிடைக்கவில்லை; அவரை விடக் குறைந்த அளவிலே ஏலத்திலே எடுத்தவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தவறுகள் நடந்திருக்கின்றன.

ஆகவே, இந்த அரசு அதை தேசிய உடமையாக்க வேண்டும் என்றும், அதை அரசே எடுத்து நடத்துவது என்றும், அது வேறு யாருக்கும் விடப்படாதென்றும்,

ஏலத்திற்கு விடுவதில்லையென்றும், ஏற்கெனவே கொடுத்தவர்களிடமிருந்து திரும்பப் பெற ஏற்பாடு செய்ய, இந்த அரசு முடிவெடுத்திருக்கிறதென்றும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தக் கற்களை 'பாலிஷ்' செய்யாமல் ஜப்பானுக்கு அனுப்ப வேண்டுமாம். 'பாலிஷ்' செய்து ஜப்பானுக்கு அனுப்பினால், அங்கே இருக்கிற தொழிற்சாலைகளுக்கு வேலையில்லாமல் போய் விடுகிறதாம்! உதாரணத்திற்காக, ஒன்றைச் சொல்கிறேன். அவர்கள் இங்கே, ரூ.200/–க்கு வாங்கினால், அவர்களுக்கு அங்கே ரூ.5,000/– வரையில் கூடக் கிடைக்கும் என்று சொல்கிறார்கள், இன்னும் எவ்வளவு ரூபாய், எப்படியெல்லாம் பெறுகிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. தெரிந்தால், அதையும் இந்த மன்றத்திலே சொல்ல நான் தயங்கமாட்டேன்.

அது மட்டுமல்ல, அந்தக் கற்களை எத்தனை இடத்தில் வெட்டி எடுப்பது என்று உரிமம் எடுத்துக் கொண்டிருக்கிறார்களோ, அதையும் மீறி திருட்டுத்தனமாக அந்தக் கற்களை வெவ்வேறு மாவட்டத்திற்குக் கொண்டு செல்கிறார்கள் என்பதையும் அங்கிருந்து அனுப்பப்படுகிறது என்பதையும் நான் கேள்விப்பட்டேன். ஆகவே, அப்படிப்பட்டவர்கள்மீது மிகக் கடுமையான நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டுமென்பதை நீங்கள் முழு மனதோடு ஆதரிப்பீர்கள் என்பதிலே எனக்குச் சிறிதும் ஐயமில்லை. இப்படிப்பட்ட குறைகள் நிறைய இருக்கின்றன!

குடி தண்ணீர் வசதிகளைப் பற்றி இங்கே பேசுகிறார்கள். ஒவ்வொரு தொழிற்சாலையும் ஆரம்பிக்கும்போது சில இடங்களிலே தண்ணீர் நிறைய வேண்டுமென்கிறார்கள், மின்சாரம் வேண்டுமென்கிறார்கள். மின்சாரம் நமக்குப் போதவில்லை என்பதைப்பற்றி, நான் சொல்லித்தான் இங்கே இருக்கிற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதில்லை. மின்சாரத்தை எப்படி அதிகப்படுத்தி, அதை நமக்குத் தேவையான அளவு பெறுவதற்கு வசதி செய்து கொள்வது என்பதை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அவசர உணர்வோடு, போர்க்காலம் என்று சொல்வார்களே, யுத்த காலம்– அதுபோன்ற நேரத்தில் எப்படி காரியங்களைச் செயல்படுத்த வேண்டுமோ, அதுபோன்ற பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள், மக்கள், தமிழகத்திலே உள்ள அனைத்து அரசியல் கட்சியினரும் சேர்ந்து ஒத்துழைத்து நாம் நம்முடைய மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு, இந்தியப் பேரரசிடம், நான் நம்முடைய எண்ணத்தைச் சொல்லி, விவாதித்துப், போராடி, அதற்கு வேண்டிய வசதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்கு சாதகமாகப் பேசியதற்காக நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், அவர்கள் மட்டும் அச்சடித்து தவறு செய்யவில்லை, வெளியாருடையதையும் அச்சடித்து, வியாபாரம் செய்து பணம் சம்பாதிக்கிறார்கள் என்பதை அவர்கள் எடுத்துச் சொன்னதற்காக உண்மையிலேயே நான் மகிழ்ச்சியுறுகிறேன். நான் இந்தப் பதவிக்கு வந்து, இந்த கோப்புகளைப் பார்க்கிற

வரையில், நடவடிக்கை எடுக்கிற நிலைமையில், அப்படிப்பட்ட ஒப்பந்தம் ஏற்பட்டதே எனக்குத் தெரியாது. ஆகவே, ஒன்றை நான் தெளிவாகச் சொல்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, நான் மத்திய அமைச்சர் மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்களோடு பேசினேன். அவர் உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் இதற்கு ஒத்துழைப்பதாக உறுதி அளித்திருக்கிறார்கள்; அதையும் விரைவிலே நிறைவேற்றுவதற்கு ஆவலாக இருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் இந்த மாமன்றத்திலே மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத்தைப் பொறுத்தவரையில், நாம் திட்டம் தீட்டுவதற்கு முன்பு எந்தத் திட்டம் தீட்டினாலும், அதற்கு என்னென்ன வசதிகள் நம்மிடம் இருக்கின்றன என்பதை எண்ணிப்பார்த்து திட்டங்களைத் தீட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு, அதைப்போன்ற தொழில்கள் இங்கே தோற்றுவிப்பதற்கு, எந்தெந்த வகையில் நம்முறைய வசதிகள் வாய்ப்பாக அமையுமோ, அந்த அளவிற்கேற்ப, நாம் திட்டமிடுகிறோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆயிரம் ரூபாய் தான் ஒதுக்கியிருக்கிறார்கள், இவ்வளவுதானா என்றெல்லாம். இந்த உடற்பயிற்சிகளைப் பற்றி, போட்டிகளைப் பற்றி, கருத்து வெளியிடும் போது சிலர் சொன்னார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்வேன். குறிப்பிலே இருக்கிற, ஏறத்தாழ 21 இலட்சம் ரூபாய் வரையில், தேவைப்பட்டால், அதற்கு மேலும் செலவு செய்வதற்கு இந்த அரசு துணிந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும்! இந்த மானியக் கோரிக்கையில், நாங்கள் வெளியிட்டிருப்பதில் முழுமையாக தேவையானவைகள் அத்தனையும் நாங்கள் வெளியிட்டிருக்கிறோம் என்பதை நீங்கள் நம்பமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும், போகப்போக, நிலைமைக்கேற்ப, அவ்வப்பொழுது, புதுப்புது செய்திகள், திட்டங்கள் வெளிவரும் என்பதையும், இது நாட்டிலே நடக்கின்ற எந்த அமைச்சரவை ஆட்சியிலே இருந்தாலும் நடைபெறுகின்ற ஒரு முறைதான், நியதிதான் என்பதையும் தெரிவித்து, நேரம் அதிகமாக ஆகிவிட்ட நிலையில் இந்த விவரத்தை இப்போது நிறுத்திக்கொண்டு, மறுபடியும் வேறு மானியங்களைப் பற்றி பேசும்போது, இதிலே எதையெல்லாம் விட்டு வைத்திருக்கிறேனோ, அதை அதிலே பேச முயல்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம், நடவடிக்கைகளைப் பற்றி போலீஸ் மானியத்திலே பேசும்போது, மேலும் புள்ளி விவரங்களை நான் கொடுக்கலாம். ஆகவே, அப்படி எல்லாம் பேச நிறைய வாய்ப்பு இருக்கிற காரணத்தால், நீங்கள் உங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்ப பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

23.08.1977 அன்று தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.

தரணி போற்றும் தமிழ்நாடு காவல்துறை!

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல்துறை, தீயணைப்புத் துறை போன்ற மானியங்களின் மீது, இங்கே அனுபவம்மிக்க உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவை அனைத்தையும் நான் மிகவும் கவனத்தோடும், அக்கறையோடும், உள்ளத்தில் பதிய வைத்துக்கொள்ள, என்னால் இயன்ற வரை முயன்று, பதிய வைத்திருக்கிறேன் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறையைப் பொறுத்தமட்டில், இங்கே பல நண்பர்கள் சொன்னது போல குறிப்பாக, மாண்புமிகு சுப்பு அவர்கள் குறிப்பிட்டார்கள். காவல்துறையை யார் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, பொறுப்பு ஏற்றிருக்கிறார்களோ அவர்கள் எந்தக் காலத்திலும் நல்ல பெயர் வாங்க முடியாது என்று அவர்கள் சொன்னதை, நான் உண்மையிலேயே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கின்ற நிலையில் இருந்தாலும், என் உள்ளம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது என்பதை நான் சொல்லித் தீரவேண்டியிருக்கிறது.

எந்தத்துறையானாலும், அதனைத் தனக்குப் பணியாற்ற, மக்களுக்குப் பயன்படுத்த, தன்னிடம் வைத்துக்கொண்டாலும் நல்ல பெயர், கெட்ட பெயர் என்பது ஆட்சியில் இருக்கின்றவர்களைப் பொறுத்த வரையில், இயல்பானதொன்றே! அனேகமாக, வெவ்வேறு விதமான கருத்துகள் பலரிடமிருந்து கேட்டுக்கொள்ளவேண்டும், அல்லது கேட்க வேண்டிவரும் என்பதில் எனக்குச் சந்தேகம் கிடையாது.

தமிழகக் காவல்துறையைப் பொறுத்தமட்டில், இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் உள்ள மாநிலங்கள், இன்னும் சொல்லப்போனால், வெளிநாடுகளில் கூட ஒரு தனி மரியாதையும், மதிப்பும் வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். இன்னமும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பதில், யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால், இங்கே நடைபெற்ற விவாதத்தில், ஒருசில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களைத் தவிர, பெரும்பாலான உறுப்பினர்கள் ஒரு கட்சியைப் பற்றி இன்னொரு கட்சியும், இன்னொரு கட்சியைப் பற்றி மற்றக் கட்சிகளும், இங்கே விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள் என்பதை நான் நன்கு கவனித்தேன்!

சாதாரணமாக, புத்தகங்கள் எழுதப்படுவதைத் திறனாய்வு செய்வதுண்டு, ஆனால், இந்தக் காவல்துறையைப் பற்றி இன்றைய தினம் பேசியவர்கள், அவர்கள் உள்ளத்தில், எப்படியெல்லாம் வேதனை இருந்திருக்குமோ, அவர்களுடைய குடும்பங்கள், நண்பர்கள், தோழர்கள் சோதனைக்கு ஆளாக்கப்பட்டு இருப்பார்களோ, அதையெல்லாம் நினைவிலே வைத்துக் கொண்டு, இங்கே அந்தக் கருத்துக்களை வெளியிட்டார்கள் என்பதை நான் நன்கு கவனித்தேன். இஃது ஓரளவிற்கு அரசியல்

உலகத்தில், அதிலும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்கும்போது பயன்படுத்துவது வாடிக்கையான நிகழ்ச்சியாக இருந்துவிடலாம் என்று கூடக் கருதி, நான் அதை ஏற்றுக்கொண்டு, ஓரளவிற்கு உண்மையான செய்திகளுக்கு மதிப்பும், மற்றவற்றிற்கு அலட்சியமும் காண்பிக்க நாங்கள் தயங்கமாட்டோம்.

ஆனால், ஒன்றை நான் திடமாகச் சொல்ல விரும்புகிறேன். காவல்துறையைப் பற்றி நமது உண்மையான கருத்து, சில நேரங்களில் அந்தப் பொறுப்பிலே இருக்கின்றவர்கள், தாமும் மக்களோடு இணைந்தவர்கள்தாம் என்பதையும், தமக்கும் குடும்பம், குழந்தைகள் உண்டு என்பதைப் பற்றியே சிந்திக்க மறந்து விடுகிறார்கள் என்பதை நாட்டிலே உள்ள, குறிப்பாக, தமிழகத்திலே, சில பல ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டிருந்த துன்பங்களைத் தாங்கிக் கொண்டிருந்தவர்கள் குறை கூறுகிறார்கள் என்பதை நாம் மறுக்காமல் இருக்கத்தான் வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற பெயரே, நல்ல பெயர் ஆகும்! காவலர்கள் என்று அவர்களுக்கு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. எதற்கு எல்லாம் காவல் என்று கேட்டால், நீதியைக் காப்பாற்றுவதற்கு, அவர்கள் காவலராக இருக்கவேண்டும்.

உண்மையைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் காவலர்களாக இருக்க வேண்டும்! சட்டத்தை நேர்மையான முறையில் காப்பதற்கு அவர்கள் காவலர்களாக இருக்கவேண்டும்! நாட்டிலே, தீமைகள் நடக்காமல் பாதுகாப்பதற்கு அவர்கள் காவலர்களாக இருக்க வேண்டும்! தீமைக்குப் பலியாக்கப்பட்டவர்களுடைய துன்பங்களைப் போக்குவதற்கும் அவர்கள் காவலர்களாக இருந்தாக வேண்டும்.

இப்படிப்பட்ட நிலையில், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இருந்தாக வேண்டுமென்று மிகப் பெரிய பொறுப்பில் இருக்கிறவர்கள், சாதாரண போலீஸ்காரர்களில் இருந்து, ஐ.ஜி வரை எடுத்துக்கொண்டால், அனைவரும் ஒரே சம அளவில், ஒரே தகுதியில், ஒரே தரத்தில் இந்த உட்பொருளை உண்மையான பொருளைப் புரிந்து கொண்டிருப்பார்களா என்பதில் நாட்டு மக்களுக்கு எப்படியோ சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது! அந்த சந்தேகத்தைப் போக்க வேண்டியதும், அந்த சந்தேகம் இனிமேல் ஏற்படாமல் தவிர்க்க வேண்டியதும் மிக, மிக அவசிய, அவசரக் கடமையாகும் என்பதை இந்த அரசு நன்கு புரிந்திருக்கிறது என்பதை தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

தொழிலாளர்கள் பிரச்சினையானாலும், சாதிச் சண்டைப் பிரச்சினையானாலும், ஊர் விவகாரமானாலும், திருட்டு விவகாரமானாலும், கொலை போன்ற விபரீதச் செயல்கள் நடந்தாலும், தமிழகத்திலே இருக்கின்ற பொறுப்பு வாய்ந்த காவல்துறையைச் சேர்ந்தவர்கள், குறைந்த சம்பளம் வாங்கினாலும், நிறைந்த சம்பளம் வாங்கினாலும் அவர்கள் அனைவரும் மிகப்பெரிய பொறுப்பினை உணர்ந்து செயல்பட வேண்டியவர்கள் என்பதை உணர்த்த வேண்டிய அவசியத்திற்கு, சில இடங்களில்

காவல்துறையைச் சேர்ந்தவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எத்தனையோ நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள்; மறுக்கவில்லை!

அண்ணனாக இருந்தாலும், தம்பியாக இருந்தாலும், பெற்ற தந்தையாகவே இருந்தாலும், நீதிக்குப்புறம்பாக நடந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்காமல் முன்வருகின்ற, செயல்படுகின்ற, காவல்துறையினர் இருக்கிறார்கள். அதைப்போலவே, தவறு செய்கிறவர்களுக்கு உடந்தையாகவும், களவு செய்கிறவர்களுக்கு துணை போகவும், அப்படிப்பட்ட தவறு செய்கிற ஒரு சிலரும் இந்தக் காவல்துறையிலே இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்க முடியாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதே மாமன்றத்திலே பல, நன்கு விவரம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு லத்தீப் போன்றவர்கள் எல்லாம் குறிப்பிட்ட ஊரைச் சொல்லி, அந்த இடத்தில் இருக்கிற போலீஸ் அதிகாரிகள், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு உடந்தையாக இருக்கிறார்கள் என்று சொல்லக் கூடிய அளவில், காவல்துறையில் ஒரு சிலர் இருக்கிறார்கள் என்றால், உண்மையிலேயே நாம் எப்படி மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதை என்னால் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமைகள், அப்படிப்பட்ட தேவைகள், அப்படிப்பட்ட உணர்வுகள், அவர்கள் உள்ளத்தினாலும் சரி, சூழ்நிலையினாலும் சரி, எப்படித் தோற்றுவிக்கப்பட்டது என்பதை நாம் கண்டறிந்து, அதற்கு ஒரு வழிவகை காண வேண்டுமென்பதும், அதற்கு ஒரு முடிவு கண்டுபிடித்தாக வேண்டுமென்பதும், நம் எல்லோருடைய கருத்தாகவும் இருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

சில இடங்களில் கையூட்டுப் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. சில நேரங்களில் செய்திகள் வெளியிடப்படும் – அது உண்மையா? பொய்யா? பத்திரிகைகளுடைய தவறுகளாக இருந்தாலும் சரி, சில சமயங்களில் கொலை நடந்துவிட்டது என்று அதிகாரி சொன்னார் என்றே செய்தி வருகிறது. இரண்டு நாட்கள் கழித்து, “அது ஒரு தற்கொலை!” என்று செய்தி வருகிறது. இப்படியெல்லாம், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பத்திரிகைச் செய்திகளை எடுத்துக்காட்டி, மக்கள் மத்தியில் பேசும்போது உண்மையாக இந்த நாட்டுக்கு நன்மை செய்கின்ற உணர்வோடும், தியாக நம்பிக்கையோடும் செயல்படுகின்ற நல்ல காவலர்களுக்குக் கூட, அதிகாரிகளுக்குக் கூட, பெரிய தலைகுனிவும், மானக்கேடும் ஏற்பட்டு விடுகிறது என்பதும், அதன் விளைவாக, அந்த இலாக்காவை ஏற்றுக் கொண்டிருப்பவர்களுக்குச் சோதனையும், வேதனையும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியவையாகும்.

காவலர்களைப் பொறுத்தவரையில், நான் ஒன்றை எப்போதுமே சொல்வதுண்டு. ஒரு பொருளைப் பறிகொடுத்தவர்கள், காவலர்களைப் பார்த்துச் சொல்லுவார்கள், “ஒரு திருடனைக் கண்டுபிடிக்கக் கூட இந்த ஆளால் முடியவில்லை!” என்று கூறுவர்.

ஆனால், திருடனைக் கண்டுபிடித்து விட்டால், ‘‘வயிற்றுக்கு இல்லாததால்தானே திருடினேன், இதைப் போய்க் கண்டுபிடித்து தண்டனை கொடுக்கிறார்கள், ஆனால் இலட்சக்கணக்கான, ஏன் கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளை அடிக்கிறார்கள், அவர்களைக் கண்டுபிடிக்க வகையில்லை, வக்கில்லை!’’ என்று அங்கே தாக்குவார்கள். இப்படி நல்லதைச் செய்தாலும். கெட்ட பெயர்; கடமையைச் செய்ய மறந்தாலும் கெட்ட பெயர் உண்டு.

காவல்துறையைப் பொறுத்தவரையில், அவர்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டியவர்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம், இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு புள்ளி விவரங்களைச் சொல்லி காவல்துறைக்காக எந்த அளவிற்கு சம்பளங்களை உயர்த்தியிருக்கிறோம்; உதவி செய்துகொண்டு வந்தோம், அவர்களுடைய வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்று நாங்கள் விரும்பினோம் என்று அவர்கள் சொல்லும்போது, நான் ஒன்றை எண்ணி, மகிழ்ச்சி அடைந்தேன்! என் காலஞ்சென்ற மனைவியினுடைய தமையனார், ஒரு காவல்துறையைச் சேர்ந்த போலீஸ்காரர், அவர் 7, 8 குழந்தைகளுக்குத் தந்தை, அவர் வாங்கிய சம்பளம் போதாமல் எவ்வளவு சிரமப்பட்டார் என்பதை, நேரிலே கண்டறிந்தவன் நான்! ஆகவே, அப்படிப்பட்ட ஊதியம் உயர்த்தித் தந்த நல்ல காரியத்தை. எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற கலைஞர் அவர்கள் செய்துள்ளார், என்பதில் நான் சுயநலத்தில், தனித்து அதை வரவேற்கிறேன். அந்த நல்ல காரியத்தைச் செய்த, அவர்கள் வாழட்டும் என்று சொல்வேன்!

இங்கே சில நண்பர்கள் கூறுவது போல அண்மையிலே 10, 15 நாட்களுக்கு முன்பு என்று கருதுகிறேன், ஆங்காங்கே காவல்துறைத் தலைமை அதிகாரிகளை வரவழைத்துப் பேசியபோது, குறிப்பிட்டுச் சொன்னேன், இதற்கு முன்பு எப்படி இருந்தது என்பதற்கு ஆராய்ச்சி செய்வதற்குத் தேவையிருந்தால், அவசியமிருந்தால், அந்த வழக்குகளையெல்லாம் திரும்ப அந்தக் கோப்புகளை எடுத்து விசாரணைக்கு ஏற்பாடு செய்வோம் என்று திருப்தி படுத்திக்கொள்ள முடியாது. அதையும் செய்ய வேண்டும்; அதே நேரத்திலே, இனிமேல், எந்தக் காவல் நிலையத்திலும், யாருக்காவது ஆபத்து ஏற்படுமானால், அதற்குத் தலைமை அதிகாரி பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்; முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்! அதற்கு எந்தச் சட்டப் பிரச்சனை வந்தாலும், அவற்றிற்கு அவர்கள் உட்பட வேண்டுமென்று, அவர்களுக்கு நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்!

இதைச் சொல்வதற்குக் காரணம் இந்தத் தமிழக அரசால், குறிப்பாக, எங்கள் கட்சி தோற்றுவிக்கப்பட்டப் பிறகு நாங்கள் எவ்வளவு துன்பங்களுக்கும் தொல்லைகளுக்கும் ஆளானோம் என்ற அனுபவந்தான் அப்படி அவசர அவசரமாக இங்கே சட்டமன்றக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே, காவல்துறையினரை வரவழைத்து என்னுடைய கருத்தைச் சொல்லி எச்சரிக்கை செய்யவேண்டி வந்தது!

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன், நான் பதவி ஏற்றவுடனே, பொதுக் கூட்டத்திலே பேசியபோது சொன்னேன். தொழிலாளர்கள் பிரச்சனைப்பற்றி சொல்லும் போது, வன்முறையிலே யாராவது ஈடுபடுகிறார்கள் என்ற நிலைமை ஏற்பட்டால் ஒழிய, அந்த ஆலையிலே, மற்ற தொழிற்சாலைகளிலே இருக்கின்ற பொருட்களுக்கு சேதம் வந்து விடும் என்ற நிலைமை தோன்றுமானால் ஒழிய, போலீஸார் நடவடிக்கை தீவிரமாக இருந்திடக்கூடாது, தேவையின்றித் தலையிடக் கூடாது, என்று அங்கே சொல்லிய கருத்தைத் திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டு வந்தேன், அதை நடைமுறையிலே நடத்திக் கொண்டு வந்திருக்கிறேன் என்பதை தெள்ளத்தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்!

இங்கே மாணவர்கள் எப்படி எல்லாம் செயல்படுகிறார்கள், மாணவர்கள் எப்படி அடக்கப்பட்டார்கள் என்பதைப்பற்றி எல்லாம் கருத்துக்களை நண்பர்கள் சொன்னார்கள். அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மிகவும் நன்றி கூறக்கடமைப்பட்டிருக்கின்றேன். எங்கள் கட்சி தோன்றிய பிறகு, இதே பச்சையப்பன் கல்லூரியில் லாரியிலே கற்களை ஏற்றிக் கொண்டு வந்து பொதுமக்கள் என்ற பெயரில், கல்லூரிக்குள்ளே கற்களை வீசி, உள்ளே புகுந்து மாணவர்களைத் தாக்கிய செய்தி ஏடுகளிலே வெளிவந்து, மேடைகளிலே பேசப்பட்டு கோப்புக்களிலே இருக்கின்றன.

இவைகளை நான் சொல்வதற்குக் காரணம், இங்கே மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரவர்கள் சொல்லும் பொழுது கூறினார்கள். ‘ரௌடிகள்’ போன்றவர்கள், மக்கள் என்ற போர்வையில் தாக்கியிருக்கலாம்; உள்ளே நுழைந்திருக்கலாம், என்று சொன்னார்கள்! ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன், மாணவர்கள் ஒரு இடத்தில் வெளியே வந்து, போக்குவரத்தைத் தடை செய்து, கற்களை வீசியதன் விளைவாக பஸ்களிலேசென்றவர்களில்சிலருக்குக்காயம்,போலீஸ்அதிகாரிகளுக்குக் காயம், காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்குக் காயம், பொதுமக்களுக்குக் காயம் என்கின்ற நிலைமைகள் ஏற்பட்டு, பொதுமக்கள் ஆத்திரப்பட்டு தாக்க முற்பட்டதன் விளைவாக, மாணவர்களை வேண்டிக்கொள்கின்ற நிலையில் குறுக்கே நின்று தடுத்து, மக்களின் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள, மாணவர்கள் உள்ளே சென்றார்கள். ஆனால், பொதுமக்கள் என்ன செய்தார்கள் என்றால், அவர்களுக்கு இருந்த ஆத்திரத்தில் இன்னொரு பக்கம் சுவரேறிக் குதித்து, உள்ளே சென்று ஆத்திரத்தில் மாணவர்களைத் தாக்கும் செயலில் இறங்கினார்கள். அப்பொழுது, வேறு வழியில்லாமல், அவர்களைத் தடுப்பதற்காக அதிகாரிகள், காவல்துறையைச் சார்ந்தவர்கள் உள்ளே நுழைந்து கண்ணீர்ப் புகை வீசியிருக்கிறார்கள், தடியடி அல்ல; கண்ணீர்புகை வீசித்தான் அதைக் கலைத்திருக்கிறார்கள் என்பதை உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்!

சில இடங்களில் தடியடி நடந்திருக்கலாம், அப்படிப்பட்ட நேரங்களில் என்னென்ன காரணங்கள் என்பதையெல்லாம் அவ்வப்போது இங்கே வெளியிட்டிருக்கிறோம் என்ற காரணத்தால், நீட்டிக்கொண்டு போகாமல், ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அண்ணா அவர்களுடைய பிறந்த நாளில், பதக்கங்கள் கொடுப்பதும், பாராட்டுகள் சொல்வதும், பணம் கொடுப்பதும் வழக்கமாக வைத்துக்கொண்டிருந்தோம். இடையிலே வந்து ஆட்சிப் பொறுப்பேற்றவர்கள், அதை நிறுத்தி விட்டார்கள்; அது அறுந்து போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். உண்மையிலேயே சொல்லுகிறேன், அதற்காக நாங்கள் முன்னதாகவே ஏற்பாடு செய்து அதிகாரிகளிடம் சொல்லி வைத்திருக்கிறோம் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒவ்வொன்றிலும், எங்களுக்குக் கிடைத்த நேரத்தை, நாங்கள் எப்படிப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ, நல்ல காரியங்களுக்காக எதிர்க் கட்சியிலே இருந்தால், எங்களால் குறை கூறப்பட்டாலும், நாங்கள் அடைந்த துன்பத்திற்கு நீங்கள் தான் காரணம் என்று, எங்கள் வீட்டிலே இருப்பவர்கள், எங்கள் தோழர்கள், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கருதியிருந்தாலும், நீங்கள் செய்திருக்கின்ற நன்மைகள் இருக்குமானால், அதை நாங்கள் நிச்சயம் போற்றுவோம், பாராட்டுவோம்! அதைத் தொடர்ந்து செய்ய நாங்கள் முற்படுவோம்! மேலும் அதிகப்படுத்த விரும்புவோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்!

நான் ஒரு கூட்டத்திலே பேசும் பொழுது, தமிழை வழக்கு மன்றத்திலே வாபஸ்பெற்று விட வேண்டுமென்ற கருத்தில், சில முடிவுகள் எடுப்பதாக நான் அறிந்தபொழுது, நான் என்ன பேசினேன் என்பதை, இங்கேயிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். இதே அவையில் சொன்னேன், முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் என்ன குற்றம் செய்திருக்கிறார்கள்; எங்களுக்குள் என்ன கருத்து வேறுபாடு இருக்கிறது; நாங்கள் என்ன குற்றம் சாட்டுகிறோம் என்றெல்லாம் இருந்தாலும், தமிழுக்காக அவர் செய்திருக்கின்ற நல்ல காரியத்தை 'வாபஸ்' வாங்குவது என்பது மிகத் தவறான காரியம்! அதைத் தமிழ்நாடு தாங்கிக்கொள்ளாது என்ற வார்த்தைகளை நான் பயன்படுத்தினேன் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்! ஆகவே, நல்லவைகளை போற்றுவதும், அல்லவைகளை நாங்கள் எதிர்த்து நிற்பதும் எங்களுடைய கடமை என்று கருதியிருக்கின்ற காரணத்தால், காவல்துறையைப் பற்றி பேசுகின்ற இந்த நேரத்தில், அந்த உள்ளத்தில், அந்த எண்ணத்தில், அந்த நம்பிக்கையில், அந்த உணர்வில் நாங்கள் செயல்படுகிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் அந்த உதாரணத்தை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன்.

தொழிலாளிகள் பிரச்சினையிலும், முதலாளிகள் பிரச்சினையிலும் நாங்கள் தலையிட்டு சமரசத்தை ஏற்படுத்தி வருகின்ற நேரத்தில், என்னென்ன பிரச்சினைகள் தோற்றுவிக்கப்பட்டன என்பதை இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்து இருக்கமாட்டீர்கள். ஒரு தொழிற்சாலை மூடப்பட வேண்டிய அவசியம் ஏற்படுத்தப்பட்டது. அந்தத் தொழிற்சாலைக்கு அனுதாபம் காட்டுகிற வகையில்,

இன்னொரு தொழிற்சாலையிலே இருக்கிற நண்பர்கள் வேலை செய்ய மறுத்தார்கள். வெளியே வரவும் மறுத்தார்கள். இப்படியெல்லாம் நடந்த பொழுதும்கூட, அங்கே காயங்கள் ஏற்பட்டன. எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் வெட்டுப்பட்டார். அதேபோன்று, ஐ.என்.டி.யூ.சி.யைச் சேர்ந்தவர்கள் வெட்டுப்பட்டார்கள், அதுபோன்ற சித்துவைச் (C.I.T.U.) சேர்ந்தவர்கள் வெட்டுப்பட்டார்கள் என்று இருந்தாலும் கூட, வழக்குகளைப் பதிவு செய்தோமே தவிர, தீவிர நடவடிக்கையிலே நாங்கள் இறங்காமல், சுமூகமான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, அவைகள் ஒழுங்காக நடைபெறவேண்டுமென்பதற்காக, வேண்டுகோள் விட்டு, கருத்துக்களைச் சொல்லி, விரும்பத்தகாதவை நடக்கக்கூடாது என்பதற்காக, 144 தடையுத்தரவு போட்டு, அப்பொழுது கூட அதற்குக் கொஞ்சம் விதிவிலக்கு அளித்து நண்பர்களே, தோழர்களை உள்ளே சென்று வேலை செய்யச் சொல்லுங்கள் என்று கூட்டம் நடத்த அனுமதி அளித்தோம்.

இங்கே நான் சொல்ல விரும்புவது யார், யார், என்ன, என்ன குற்றம் செய்தார்கள், கிளைவ் ஆஸ்டலில் நடந்தது என்ன ? என்பதைப்பற்றியெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் தெளிவாகச் சொன்னார்கள். அதிலே, யார், யார், எந்த, எந்த யூனியனைச் சேர்ந்தவர்கள் அங்கே பங்கு பெற்றிருந்தார்கள் என்ற புள்ளி விவரத்தையும், அவர்கள் சொன்னார்கள் நான் மகிழ்ச்சியுறுகிறேன். நான் என்ன சொல்ல விரும்புகிறேனென்றால், இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதையும், தாக்கப்பட்டவர்கள் எந்த வயதிற்குட்பட்ட மாணவர்கள் என்பதையும், எப்படிக் கொடுமையாகத் தாக்கப்பட்டார்கள் என்பதையும், திருச்சிக்கு நான் நேரிலே சென்றபொழுது, படித்துக் கொண்டிருந்த மாணவனுடைய மண்டையிலே அடிக்கப்பட்டு, அந்த இரத்தம் அப்படியே மேஜையிலே உறைந்திருந்ததைப் பார்த்த பொழுது, வேதனைப்படாமல் இருக்க முடியாது. சங்கடப்படாமல் இருக்க முடியாது.

பஸ்களைக் கொண்டு போய் குறுக்கே நிறுத்தி, மக்கள் உதவி செய்ய முடியாத வகையில், காரியங்களை ஆரம்பத்திலேயே திட்டமிட்டு அங்கே அப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் நடந்திருக்கின்றன என்பதை நாடு கண்டபொழுது, கோபித்துக்கொள்ள மனம் விரும்பினாலும், பயனற்ற கோபமாக இருந்த காரணத்தால்; ஏதும் செய்ய முடியாத காரணத்தால், வேதனையை வார்த்தைகளின் மூலமாக வெளியே சொல்லப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் கேள்விப்பட்ட வகையில், மாடியில் இருந்து பையன்களைத் தூக்கி வெளியே வீசி எறிந்திருக்கிறார்கள். இந்தக் கொடுமைகள் எல்லாம் அங்கே நடத்தப்பட்டன. அங்கே பாதிரியார் ஒருவர் அறைக்குள் இருந்திருக்கிறார். அவர் கை ‘வாட்ச்’சை அபகரித்திருக்கிறார்கள். அவரை அடித்ததில், கை முட்டிக்குப் பக்கத்திலே இருந்த எலும்பு முறிந்ததை அவர் நேரிலே சொல்லி, அதற்குக் கட்டு போடப்பட்டிருந்ததைப் பார்க்கும் பொழுது, எந்த மனிதனும் வேதனைப்படாமல், ஆத்திரப்படாமல், இருக்க மாட்டான் என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அதேபோலவே, மாணவன் பாலச்சந்திரன், எங்கள் கட்சியிலே உறுப்பினராக இருந்தார் என்ற ஒரே காரணத்திற்காக, அவர் மாணவர்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுகிறார் என்ற காரணத்திற்காக, மாணவர்கள் ‘ஆஸ்டலில்’ இருக்கும் போது, விடுதிக்குள் இருந்த பொழுது, துரத்தித் துரத்தி, வெட்டிக் கொன்றிருக்கிறார்கள் என்றால், அதைப்பற்றி மக்கள் அதிர்ச்சிப்படமாட்டார்கள் என்று நாம் எதிப்பார்க்க முடியாது.

இங்கே ஒரு பெண் கற்பழிக்கப்பட்டாள் என்று வேதனைப்படுகிறார்களே அவர்கள் நம் கையில் கிடைத்தால், என்ன கதி ஆவார்களோ என்ற அளவுக்கு ஏற்படும் ஆத்திரம் அதே அளவில் தான், அந்தச் செய்திகளை அப்பொழுது கேட்டபொழுது ஆத்திரம் வந்தது என்பதையும், அது விசாரிக்கப்பட வேண்டும் என்று மக்கள் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதையும் இங்கே தெரிவிப்பது எனது கடமையாக இருக்கிறது.

இன்னொன்றைச் சொல்வேன், இங்கே மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள், பூலாவாரி சுகுமாரன் சகோதரிகளைக் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள் என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது மட்டுமல்ல அந்தப் பெண்களுக்கு தங்கையாக இருக்கிற ஒரு பெண் பள்ளிக்கூடத்திற்குச் செல்கிற பொழுது, கூடவே ரௌடிகள் அவளைப் பின்தொடர்ந்து, “மரியாதையாக ஊரைவிட்டுப் போகாவிட்டால், உன்னையும் வெட்டிவிடுவோம், கண்களைப் பறித்துவிடுவோம்!” என்றெல்லாம் தினம் தினம் பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள் என்பதை எல்லாம் கேள்விப்படும் போது, வேதனைப் படாமல் இருக்க முடியாது. நிச்சயமாக, அந்த சமாதியைப் பார்க்கும்போது அவரைக் கொலை செய்தவர்கள்கூட, கொஞ்சமேனும் மனிதாபிமான உள்ளம் இருக்குமானால், கண்ணீர் விடாமல் இருக்க முடியாது!

இவைகளை எல்லாம் நாம் சொல்லும்போது, ஒருவரைக் குற்றம் சாட்டிச் சொல்லும்போது, இந்தக் காவல்துறைக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமைக்கு நான் ஆளாக்கப்பட்டிக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு என்னைக் குறை கூறினால் நிச்சயமாக நான் கோபித்துக்கொள்ள மாட்டேன். பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு, யார் தவறு செய்தாலும், அந்தப் பொறுப்புக்கு நான்தான், கடமைக்கு நான்தான்; செயலுக்கு நான்தான்; அந்த விளைவுகளுக்கெல்லாம் நான்தான் என்று ஏற்றுக் கொள்ளும்படியாக என் உள்ளத்தை சமாதானப்படுத்தி, நான் ஏற்றுக்கொள்வேன் என்பதைச் சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்ளவில்லை. என்னுடைய கடமை உணர்வினாலே சொல்லிக் கொள்கிறேன். யாராக இருந்தாலும், குற்றம் யார் செய்திருந்தாலும், அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில், யாருக்கும் மாற்று கருத்து இருக்க முடியாது.

அண்மையில் ஒரு சாராய வழக்கு. அண்ணா நகரிலே இருக்கிற ஒரு அதிகாரியிடம், இந்த இடத்திலே சாராயம் காய்ச்சுகிறார்கள், இன்னார் காய்ச்சுகிறார்கள் என்று சொன்னபோது அவர் என்ன சொல்லியிருக்கிறார்? “இராமாவரத்திற்குப் போய்

இராமச்சந்திரனிடம் சொல்லு!'' என்று, அந்த அதிகாரி சொல்லி இருக்கிறார்! அவரைப் பற்றி என்ன நினைப்பது? அவர் வேண்டுமென்றே இந்த ஆட்சியின் மீது வெறுப்பு கொண்டுள்ள ஒரு அதிகாரி என்று கருதுவோமா அல்லது உண்மையிலேயே அவருக்குள்ள அதிகாரம் அப்படிப்பட்டது, ஆகவே சொன்னார் என்று கருதுவோமா, அதைப்பற்றி எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த வகையில் அதிகாரிகள் மூலமாக விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதையும், ஒரளவுக்கு சீக்கிரம் அந்த விசாரணை முடிந்துவிடும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போது நான் அவசரப்படவில்லை; ஆத்திரப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்! இதுபோன்று ஒன்றல்ல, இரண்டல்ல.

நாங்கள் பல இடங்களுக்குப் பொதுக் கூட்டங்களுக்குப் பேசச் சொல்லும்போது, அங்கே இருக்கிற அதிகாரிகள், அந்த 4, 5 ஆண்டுகளில் எங்களுக்குக் கொடுத்த தொல்லைகள், எங்களை மாற்றாந்தாய் பிள்ளையாகப் பார்த்து, நாங்கள் அழிந்து விடுவதிலே அக்கறை கொண்டவர்கள், எங்கெங்கே இருந்தார்கள், யார், யார் இருந்தார்கள் என்பது எங்கள் அனுபவத்தில், நாங்கள் தெரிந்துகொண்ட ஒன்றாகும்.

ஆகவேதான், இப்போது சந்தேகம் வந்திருக்கிறது, சிலர் எங்களுடைய ஆட்சிக்குக் களங்கம் விளைவிக்க வேண்டுமென்றே தவறு செய்கிறார்களோ என்று! எங்களுக்கு கேள்வியோ, சந்தேகமோ ஏன் வருகிறது? "இராமாவரத்திற்குப்போய் இராமச்சந்திரனிடம் கேள்!'' என்று சொல்லுகின்ற அதிகாரிகள் காவல்துறையிலே இருப்பார்களானால், அவர்களுடைய அனுதாபம், அக்கறை எங்கே இருக்கிறது என்பதை இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் புரிந்துகொள்ள முடியும். ஒருவேளை உங்கள் மீது இல்லாமல் இருக்கலாம்; இன்னொரு கட்சியின் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம்; அல்லது மத நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம் அல்லது. "இவன் அண்ணா வழியில் வந்தவன்தானே, இவனை ஒழித்து விடுவோம்!'' என்று இருக்கலாம். ஆனால், எப்படி இருந்தாலும், ஒரு ஆட்சியிலே இருக்கிற பொறுப்பு வாய்ந்த கடமை உணர்வோடு செயல்பட வேண்டுமென்ற அமைச்சர்களுடைய பெயரை, முதலமைச்சர் பெயரைக் குறிப்பிட்டு, ஒரு சாதாரண அதிகாரி சொல்லத் துணிவு கொள்கிறார் என்றால், அதற்கு என்ன காரணம் இருந்திருக்கும்?

இதோடு மட்டுமல்ல, நெல்லையிலே இருக்கிற ஒரு அதிகாரி, "நான் 3 இலட்சம் ரூபாய் சம்பாதித்து விட்டேன்! இனிமேல் வேலையை விட்டுப் போனால் என்ன?'' என்று சொல்லி இருக்கிறார். இதுவும் நடந்திருக்கிறது, இதுவும் விசாரணையில் இருக்கிறது.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பணம் சம்பாதித்தவர்கள், கள்ளச் சாராயத்திலே பங்கு கொண்டவர்கள், உண்மையிலேயே பங்கு கொண்டவர்கள், இலஞ்சம் வாங்கியதிலே பங்கு கொண்டவர்கள், இப்படிப்பட்ட ஒரு சிலர் ஆங்காங்கே இருக்கிறார்கள், அவர்கள் ஒட்டுமொத்தமாக, காவல்துறை முழுவதையுமே களங்கப்படுத்தி வருகின்றனர்.

அதன் விளைவாக, எங்கள் அமைச்சரவைக்குத் தன்மானக்குறைவோ, தலைக்குனிவோ ஏற்பட வேண்டுமென்று கூட விரும்புகிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது என்ற நிலையில்தான், நம்முடைய உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

அதை இன்னும் பல உதாரணங்களோடு சொல்ல முடியும். இப்படிச் சொல்லிக் கொண்டே போனால், அது கொஞ்சம் விரசமாகப் போய்விடும் என்பதால் நான் சொல்லவில்லை. ஒன்றை மட்டும் சொல்கிறேன். 7 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசுக்கு அல்லது இப்படிப்பட்ட நன்மைகளைச் செய்த நண்பர்களில் சிலருக்காவது, அவர்கள் மீது அனுதாபம், நல்லெண்ணம் இருக்கும் என்பதில் சந்தேகம் உண்டானால், அதில் நியாயம் இருக்கிறது. அது சிலருக்கு அவர்களுடைய மனசாட்சிப்படி கடினமாக இருக்கும்.

ஆனால் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், ஆட்சிக்கு வருகிறவர்கள் யாராக இருந்தாலும், தங்களுடைய கடமையைச் செய்கிறார்களா, முன்னே இருந்தவர்களை விட, அவர்கள் செய்ததைவிட இவர்கள் ஏதேனும் அதிகமாகச் செய்கிறார்களா, அல்லது மெத்தனமாக இருக்கிறார்களா, அல்லது பழிவாங்குகிறார்களா என்பதைப் பற்றித்தான் அவர்கள் சிந்திக்க வேண்டுமே தவிர, பழிவாங்கும் குணமில்லாமல், பழிவாங்கும் நோக்கமில்லாமல், எல்லோரும் வாழட்டும் என்கிற பெருந்தன்மையோடு, எங்கேயாவது சிறு தவறு நடந்து விட்டால் அதைக் கூட மறந்து, மன்னித்து, திருந்துவதற்கு வாய்ப்புத் தந்து, அவர்களைத் திருந்தச் செய்து அதன் விளைவாக, நாட்டில் நல்வாழ்வு மலரட்டும் என்றெல்லாம் விரும்புகிற ஒரு அமைச்சரவையில், இருக்கிறவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டியது காவல்துறையைச் சேர்ந்தவர்களது கடமை. இப்படிப்பட்ட காவல்துறையில் இருக்கிறவர்கள், யாராவது தங்கள் கடமையை மறந்து செயல்படுவார்களானால், நிச்சயமாக அவர்களை இந்த மாமன்றமும், மனித சமுதாயமும், ஜனநாயக உணர்வுகளை ஏற்றுக்கொண்டிருக்கிற மக்களும், அனுமதிக்கமாட்டார்கள்; மன்னிக்க மாட்டார்கள் என்பதை நான் இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விழைகின்றேன்!

நான் ஒன்றைச் சொல்வேன். சம்பளத்தை எப்படி உயர்த்தி இருக்கிறேம்! மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு எப்படி உதவினோம்! மோட்டார் சைக்கிள் வாங்குவதற்கு எவ்வளவு செய்தோம் என்பதை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆட்சி அதைப் போன்ற பல திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது. அது மட்டுமின்றி, ஏறத்தாழ பதினாராயிரம் புதிய போலீஸ்காரர்களாக இளைஞர்களைத் திரட்ட நாங்கள் திட்டமிட்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன்.

அதுபோன்று, படிப்பிற்கு ஏற்றவாறு இன்னும் சிலரைச் சேர்த்து, மிகப்பெரிய பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று, நாங்கள் விரும்புகிறோம்.

மூன்றாவது சம்பளக் கமிஷனில் அவர்களையும் சேர்த்து, அதிலே அவர்களுக்கு என்ன நியாயம் கிடைக்க வேண்டும் என்று அந்த நீதிபதியாக இருப்பவர் முடிவு செய்கிறாரோ அது, அதிலே, அவர்களுக்குரிய பங்கு கிடைக்கும் என்பதையும் இங்கே நான் சொல்லிக்கொள்ள விழைகிறேன். அந்த நிலைமையிலே, நாங்கள் காவல்துறைக்கோ, மற்றவர்களுக்கோ வெவ்வேறு விதமாக கணக்குப் பார்க்கவில்லை.

காவல்துறையிலே இருக்கிறவர்கள், அந்தப் பொறுப்பிலே இருப்பவர்கள், அந்தச் சுற்றுக்குள் இருக்கின்ற பணியாளர்கள், அரசிலே சிறப்பான பதவியிலே இல்லை; அப்படி வராவிட்டாலும், ஒன்றைச் சொல்வேன்! நாங்கள் எந்தெந்த வகையில், யார் யாருக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்று, அவரவர்களுக்கு எண்ணத்திலே நம்பிக்கை கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு அதைக் கூடிய மட்டில் நம்மாலே அது எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்குச் செய்ய கடமைப்பட்டு இருக்கிறோம் நாங்கள் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதிகாரிகளை அழைத்துப் பேசும்போது. ஒரு செய்தியைச் சொன்னேன். எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் பிரமுகர்கள் என்ற பெயரிலே இருந்தாலும், வசதி படைத்தவர்களாக இருந்தாலும், அவர்கள் எப்பேர்பட்டவர்களாக இருந்தாலும், உங்களுடைய பணிகளில் தலையிடுவதற்கு நீங்கள் அனுமதிக்கத் தேவையில்லை என்பதை நான் எடுத்துச் சொன்னேன்.

சில மாண்புமிகு உறுப்பினர்கள்— எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், என்னிடம் குறைப்பட்டார்கள். நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டீர்கள்! நாங்கள் அவசியமான காரியத்திற்காகச் சொன்னால் கூட, அங்கே இருக்கும் அதிகாரிகள் கேட்கமாட்டேன் என்று சொல்கிறார்கள், எனக்குத்தெரியும் என்று சொல்லி விடுகிறார்கள் என்று சொன்னார்கள். இதில் இருந்து எனக்கு ஒரு படிப்பினை கிடைத்து இருக்கிறது என்று நினைக்கிறேன். உண்மையைச் சொல்லும்போது கூட, அதற்குரிய எல்லைக்கோடு வைத்துக்கொண்டுதான் சொல்லவேண்டுமென்று தெரிகிறது! மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களானாலும் சரி, சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, மேலவை உறுப்பினர்களானாலும் சரி, அவர்கள் நாட்டு மக்களின் கஷ்டங்களைப் பற்றி, தொல்லைகளைப் பற்றி, எந்த இடத்தில் என்ன அநியாயம் நடந்து இருக்கிறது என்று சொல்லி, அவர்கள் கவனிக்காமல் அலட்சியப்படுத்துவார்களானால், நிச்சயமாக இந்த அமைச்சரவை, இந்த அரசு அதைக் கண்டு வீணாக வேடிக்கைப் பார்க்காது என்பதை இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உத்தரவாதமாக அளிக்க முன்வருகிறேன். இப்படி கைதட்டுவதில் இருந்தே எவ்வளவு வேதனைப்பட்டு இருக்கிறார்கள் என்பது தெரிகிறது! ஏனெனில், எனக்கு இப்படிப்பட்டவற்றை எதிர்க்கட்சியில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள் தாம் சொன்னார்கள்; இப்போதுதான், எனது கட்சியைச் சார்ந்தவர்களே எவ்வளவு ஏமாந்து இருக்கிறார்கள், வருத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை என்னால் உணர முடிகிறது!

ஆனால் ஒன்றை நான் சொல்லவேண்டும், ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும், ஜாதியை, மதத்தை, மனதில் கொள்ளமல், கட்சி வேறுபாடு கொள்ளாமல், நேரடியாக மக்களுக்குப் பொதுவாக நன்மை விளைவிக்கும் காரியங்களில் செயல்பட, நாம் எல்லோரும் தயாராக இருக்கவேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் உங்கள் அனைவருக்கும் என்னுடைய பணிவான காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

யார் யாரை அடித்தார்கள்? எங்கே சில கொலைகள் நடந்தன என்பதை இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆத்திரம் வரும்போது, தலைவர் அவர்கள் சொன்னால் கூட, கேட்காமல் சிலர் இருக்கிறார்கள், சிலரைப் பற்றிக் கேள்விப்படுகிறோம்; கடவுளைக் காப்பாற்றுவதில்கூட, கடவுளை விட, அங்கே இருக்கும் புரோகிதர்கள், அங்கே இருக்கும் அர்ச்சகர்கள் ஆர்வமுடன் இருக்கிறார்கள் என்று வேடிக்கையாகச் சொல்வது உண்டு. அதைப் போன்று, கட்சியைக் காப்பாற்றும் தலைவரைவிட, அவர்கள்தாம், அதிக அக்கறையாக, சில காரியங்களில் கட்சியில் இருப்பவர்கள் செய்து விடுவது உண்டு. ஆனால், அது எங்கே போய் விடிகிறது என்பதையும், எங்கே போய் முடிகிறது என்பதையும் நாம் எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே பேசிய ஒவ்வொருவரும், அநேகமாக, புதிதாக எங்கள் கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பல பேர் உடம்பில் சைக்கிள் செயினின் அடையாளங்கள் இருக்கின்றன. அவற்றை நான் சொல்லித்தான் வேண்டும்! அப்படிப்பட்டவர்கள் இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து இருக்கிறார்கள், மேடையிலேயே அவர்களுடைய சட்டையைக் கழற்றிக் காண்பித்து இருக்கிறேன். அப்படிப்பட்டவர்கள் இங்கே இருப்பதால் தான், உணர்ச்சி வயப்பட்டு பேசுகிறார்கள்!

இதை எதிர்க்கட்சித் தலைவருக்கு சொல்கிறேன், அவர் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும். அவர்கள் சொன்னார்கள்; அவர்களுடைய, இயற்கையான இலக்கிய நடையில் சொன்னார்கள். இங்கே காவல்துறையில் எவ்வளவு வேகமாக இருக்கிறோமோ, தீவிரமாக இருக்கிறோமோ அதை அணைப்பதற்கு தீ அணைப்புப்படை மானியத்தையும் சேர்த்து வைத்து இருக்கிறோம்! இது தொடர்ந்து வருகிறது என்று அழகாகச் சொன்னார்கள்! தீயை அணைப்பதிலும், உடனடியாக தீ அணைந்து விடுவது இல்லை! நிலைமை சீர்திருந்தி விடுவது இல்லை! அந்தத் தீ பற்ற வைக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி நாம் அனைவரும் சிந்தித்தாக வேண்டும். அந்த தீயை அணைப்புப் பணியை ஒரு கடமையாக ஏற்றுக்கொண்டு இருந்தாலும், நம்மைப் போன்றவர்கள் சில வேளைகளில் மனம் விட்டுப் பேசுவதன் மூலம், உள்ள நிலைமைகளைத் தெளிவாக்கிச் சொல்வதன் மூலம், ஒரு வேளை மனதை அமைதிப்படுத்திக்கொள்ளலாம்!

ஆனால், தண்டனையை அனுபவிப்பவன், அன்றாடம் வேதனைப் படுபவன், கண் எதிரில் தமையனை, தாயை, தங்கையை, தாரத்தை இழந்தவர்கள் அவர்கள் விரைவில் எல்லாவற்றையும் மறந்து விடமுடியாது. இந்தத் தரப்பில் இருப்பவர்களைப் பற்றிச் சொல்வேன். அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. அவர்கள் மனம் திறந்து பேசுகிறார்கள்! அமைதி வேண்டும் என்பதற்காக, அவர்கள் பேசக்கூடாது என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அந்த மனம் உடனே சமாதானம் அடைந்து விடாது. அந்த வகையில், இங்கே பேசிய உறுப்பினர்கள் கொஞ்சம் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தி இருந்தால், அவை முதுகிலே இருக்கும் அடையாளச் சின்னங்கள்;அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்டு இருக்கும் வேதனைகள், சாவுகள் இவைகளின் விளைவாகத்தான், அந்தப் பேச்சுக்கள் அப்படி காரமாக வந்து இருக்கின்றனவே தவிர, வேண்டுமென்றே அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் இருக்க முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

இங்கே காவல்துறையைச் சேர்ந்த நிலைமைகள் பற்றி, ஒன்றை உங்களுக்குச் சொல்ல வேண்டியதை மிகப்பெரிய கடமையாகக் கருதுகிறேன். காவல்துறையில் இப்படிப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அவர்களைக் களை எடுக்க வேண்டிய வேலை எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். எந்த அமைச்சரவையாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், பாரபட்சமற்ற நிலைமையில், நேர்மையோடு, நாணயத்தோடு, இங்கே கடமை பற்றி, நாணயம் பற்றி சொன்னார்களே, அதே போல் ஒரு அரசியல் கட்சி ஆட்சி நடத்தும்போது, வேண்டுமென்றே கட்சி உணர்வுகளை மனத்திலே கொண்டு பொதுவாக நியாயமாக, நீதியாக நடக்கவேண்டிய, காவல்துறையைச் சேர்ந்தவர்கள், ஒரு கட்சியினுடைய பிரதிநிதியாக அவர்களை மாற்றிக்கொண்டு செயல்படுவார்களேயானால், அது மிகப் பெரிய தீமையை எதிர்காலத்தில் விளைவித்துவிடும் என்பதை இங்கே தெளிவாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர்கள் மீது விசாரணை வைத்து, அவர்களைக் களையெடுப்பதும், அவர்களுக்கு உண்மையிலேயே எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன என்றெல்லாம் கணக்கெடுத்து, மற்றவர்களைப் பற்றியெல்லாம் சொல்கிறோமே, அதைபோல், அவர்கள் சொத்துக்கள் என்னென்ன; அவர்கள் பதவிக்கு வரும்போது எப்படி இருந்தார்கள்; பதவிக்கு வந்து, ஐந்தாண்டுகள், பத்தாண்டுகளுக்குப் பிறகு எப்படி இருக்கிறார்கள் என்பதையெல்லாம் கவனித்து, அதுவும், அதேபோன்று அவர்கள் செய்த கொடுமைகள், தீமைகள் ஏதாவது இருந்திருந்தால், உண்மையாகவே கொலை நடந்து, அதை மறைத்திருந்தால், திருட்டு வழக்குகளைக் கண்டுபிடிக்க முடிந்தும் அவர்களைக் காப்பாற்றியிருந்தால், அப்படிப்பட்டவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்போது, இந்த அவை, எங்களுக்கு நிச்சயமாக ஆதரவு தரும் என்ற நம்பிக்கையானது உங்கள் பேச்சிலிருந்து வெளிப்படுவதை நான் உணர்கிறேன்.

அதே நேரத்தில் தீ அணைக்கும் படையின் வாழ்க்கைநிலை எப்படி இருக்கிறது என்பதையும், அவர்கள் வாழ்க்கை மிக உயர்ந்ததாக, ஆடம்பர வாழ்க்கை என்று சொல்வார்களே, அதுபோல் இல்லாவிட்டாலும், ஓரளவுக்கு, அவர்கள் நிம்மதியாக வாழக்கூடிய வகையில், தேவையான வசதிகளை அவர்களுக்குச் செய்துதர வேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறை காண்பித்துக் கொண்டிருக்கிறேன் என்பதனை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்!

இந்தக் காவல்துறையை விரிவுபடுத்துவதில், என் உள்ளத்தில் பல ஆசைகளும், நம்பிக்கைகளும் உண்டு! நம்முடைய எல்லையைப் பாதுகாத்தாக வேண்டும்; மதில்கள் போட்டு அடைத்து விட்டீர்கள் என்று கேட்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால், எல்லைக்கோட்டைக் குறுக்கக்கூடிய அளவில், எந்தச் சூழ்நிலையையும் நாம் அனுமதிக்க முடியாது. ஆகவே, தமிழ் நாட்டினுடைய எல்லைக்கோடும், பண்பாடும், கலாச்சாரமும் கண்டிப்பாகக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதில், எனக்கு மிகுந்த அக்கறை உண்டு. நம் தமிழ்நாட்டுப் பொருள்கள், நம் அனுமதியின்றி கடத்தப்பட்டால், இந்த அவையின் உத்தரவைப் பெற்று அதைச் செயலாக்கும் நேரத்தில், எங்களது திட்டங்களுக்கு எதிராக, நம் எண்ணங்களுக்கு மாறாக, எங்கிருந்தாவது கடத்தல்காரர்கள் அவர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தாலும், எவ்வளவு சலுகைகள் மத்திய அரசிடமிருந்து பெறமுடியும் என்ற நம்பிக்கை இருந்தாலும், அந்த வகையில், மிகப் பெரிய போராட்டமாகவே அதை இந்த அமைச்சரவை எடுத்துக்கொள்ளும் என்பதையும், அதைத் தடை செய்ய எல்லா முயற்சிகளையும் பின்பற்றும், வழிமுறைகளை ஏற்படுத்தும் என்பவற்றையும் நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அத்துடன், காவல்துறையினர், ஆங்காங்கு மாற்றப்பட்டு வருகிறார்கள் என்ற புகார்கள் நிறைய இருக்கின்றன. மத்திய அரசிடமிருந்து சில கேள்விகள் வந்திருந்தன. “யார் யாரோ பழிவாங்கப்பட்டார்களாமே! அவர்கள் யார் யார்? அப்படிப்பட்டவர்கள் ஏன் பழிவாங்கப்பட்டார்கள்? குறைகள் இருக்கின்றனவாமே பலயிடங்களில், அவை எல்லாம் எதனால், எப்படி, ஏற்பட்டன?” என்றெல்லாம் கேள்விகள் வந்தன. அவற்றிற்குப் பதில் சொல்லியிருக்கிறோம்.

ஒன்று நான் சொல்வேன். இடைக்காலத்தில், அண்ணாவினுடைய கொள்கைகள் எங்கெங்கு இருந்தனவோ, அவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மறைக்கப்பட்ட சூழ்நிலையில், காவல்துறையையும் வைத்துக்கொண்டு செயல்பட முனைந்தார்கள் என்ற குற்றச்சாட்டை மற்றவர்கள் சொல்லும்போது, நான் கேட்டுக்கொண்டிருந்தேன் என்ற வகையில், அதைத் தெரிந்து கொண்டேன் என்ற வகையில், இங்கு என்னுடைய பொறுப்பில் இந்த அளவோடுதான் நான் பேசுவது நியாயம் என்ற முறையில் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

எங்கு பார்த்தாலும் அமரர் அண்ணாவின் படத்தை எடுத்துவிடுங்கள், பெரியார் படத்தை எடுத்துவிடுங்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டன என்றும் ஆங்காங்கு,

அவை, நீக்கப்பட்டும் விட்டன என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால், ஒன்று நான் சொல்லுகின்றேன். அவைகள் எல்லாம் மீண்டும் எங்கு எங்கு வைக்கப்படவேண்டுமோ, அங்கு அங்கு வைப்பதற்கு இந்த அரசு நிச்சயமாகச் செயல்படும்! அது எந்த அலுவலகமாக இருந்தாலும் சரி என்று சொல்லும்போது,சில காவல்துறையினர் இருக்கின்ற இடங்களில், இப்படி எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்பட்டேன். அவர்களுக்கு இந்த அவையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் எல்லாம் என்னுடைய இந்தப் பேச்சை பத்திரிக்கை மூலம் படித்தாலும் சரி, கேள்விப்பட்டாலும் சரி, அதற்குப்பிறகு சரியாக நடந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அண்ணா அவர்கள், “தேசிய சொத்து” என்று போற்றப்படத்தக்கவர் என்பதனை அவர்கள் உணர்ந்துகொள்ள அல்லது புரிந்துகொள்ள நாள் அதிமாகாது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது! நம்முடைய கடமை என்ற அளவில், காவல்துறையில் பணியாற்றி வரும் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவிக்கின்ற அல்லது பாராட்டுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன்.

இனி, காவல்துறையிலிருந்து வருகின்ற கடிதங்கள், கடிதப் போக்குவரத்து எல்லாம் தமிழில் இருக்கவேண்டும் என்றும், அதுவும், நாளை முதற்கொண்டு இது கையாளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். சில நேரங்களில் குறிப்புகள் ஆங்கிலத்தில் வருகின்றன. இங்கே ஆங்கிலத்தில் எழுதி வைக்கிறார்கள். ஆகவேதாம், இப்படிப்பட்ட விஷயத்தில் தமிழில் அத்தனையும் இருக்கவேண்டும் என்றும், அதை நிறைவேற்றுவதற்கு இந்த அமைச்சரவை நிச்சயமாக ஒத்துழைக்கும், அதற்கான வழிகளில் செயல்படும் என்பதைக் கூற விழைகின்றேன்.

காவல்துறையினருக்கு எவ்வளவோ வசதிகள் தேவைப்படுகின்றன. நான் ஜப்பானுக்குச் சென்றிருந்த போது, அங்கு சாதாரண போலீஸ்காரர்கள் கையில் ‘வாக்கி–டாக்கி’ கருவிகளை வைத்துக்கொண்டிருந்ததை நான் பார்த்தேன். பக்கத்திலுள்ள போலீசாரோடு பேசுவதற்கு இதன் மூலம் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது!

நான் ஒரு விஷயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். அதில் தவறு ஒன்றும் இராது என்றும் நம்புகிறேன். ஏழு, எட்டு ஆண்டுகளுக்கு முன்பு என்று நினைக்கிறேன். என்னுடைய நண்பர் ஒருவர், எனக்கு வெளிநாட்டிலிருந்து ஒரு வாக்கி–டாக்கி பரிசாகக் கொடுத்தார். அதை வைத்துக்கொள்ள அனுமதி வாங்க வேண்டும் என்பதற்காக நம்முடைய காவல்துறையிடம் ‘லைசன்ஸ்’ வேண்டுமென்று கேட்டேன். அதற்கு “இப்படிப்பட்ட கருவியே இங்கு கிடையாது; இதற்கான வழி முறைகள் இங்கு ஒன்றும் தெரியவில்லை; ஆகவே, இதை வைத்துக்கொள்ளாதீர்கள்!” என்று செய்தி வந்தது. இதனை எதற்கும் பயன்படுத்தவில்லை. படப்பிடிப்புக்குப் பயன்படுத்தலாம், ஒரு மைல் தூரத்திற்குள் செய்தியை கொடுக்கலாம். நாம் போய்க்கொண்டிருக்கும்போது,

முன்னால் வண்டி போகிறது என்றால், அந்த வண்டி செல்லும் பாதையினூடே, எதிரிகள் ஏதாவது கற்களை எடுத்து வைத்து அபாயத்தைத் தோற்றுவிக்கப் போகிறார்கள் என்று தெரிந்தால், பின்னால் வருகின்ற வண்டிகளுக்கு, “அபாயம், வராதே!” என்று எச்சரிக்கை செய்வதற்கு, இது பயன்பட்டிருக்கும்! அந்த அளவுக்கு நம்மால் செய்து கொடுக்க முடியாது என்றாலும் நவீன கருவிகள் மூலம் வசதிகளைச் செய்து கொடுக்க, காவல்துறையினரிடம் இப்படிப்பட்ட நவீன கருவிகளை ஒப்படைக்க முயற்சி செய்வேன், அதற்கான வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க முற்படுவேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எந்தவிதமான குறைகள் இருந்தாலும், அவற்றை நீங்கள் நேரடியாக என்னிடம் சொல்லலாம், தெரிவிக்கலாம், எடுத்துச் சொல்லலாம்! காவல்துறை அதிகாரிகளை நாட்டுமக்களுக்காகப் பயன்படுத்தி, நல்லமுறையில் நீதியைக் காப்பாற்ற பயன்படுத்த நீங்கள் அனைவரும் என்னைச் சந்தித்து, நேரிலோ அல்லது வேறு எந்த முறையிலோ தெரிவிப்பதற்கும், என்னை சந்திக்கும்போதெல்லாம் சொல்வதற்கும் உங்களுக்கு உரிமை உண்டு என்பதை சொல்லி, நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால், இன்னும் என் பேச்சை நீட்டிக்கொண்டு போகாமல், மற்றவர்களுக்கெல்லாம் பதில் சொல்லவில்லையே என்ற வருத்தம் இருக்கக்கூடாது, என்று கேட்டுக்கோண்டு, என்னுடைய மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே, இதன் மீது வெட்டுப்பிரேரணைகளை தந்திருக்கின்றவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டுமென்றால் பதில் சொல்லலாம், அவ்வளவு விவரங்கள் இங்கே இருக்கின்றன; அவற்றையெல்லாம் சொல்லவில்லை என்றால் நேரம் இல்லை என்று எடுத்துக்கொண்டு, அவற்றிலுள்ள கருத்துகளை எல்லாம் ஏற்றுக்கொள்கிறேன் என்பதோடு, தற்போது நான் சொல்லியவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் வேண்டுகிறேன்! பிறவற்றுக்குரியனவற்றை, வாய்ப்பு வருகின்ற நேரங்களில் சொல்லுகிறேன் என்றறிவித்து, வெட்டுப்பிரேரணைகளையெல்லாம் திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

23.08.1977 அன்று, காவல்துறை மீதான மானியக்கோரிக்கை விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.

எங்கள் உள்ளம் ஏற்கும் ஆளுநர் உரை!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநருடைய உரையின் மீது இந்த மாமன்றத்தில் மக்களுடைய பிரதிநிதிகளாகப் பொறுப்பேற்று, மக்கள் நல்வாழ்விலே அக்கறை காட்டுகின்ற மாபெரும் உறுப்பினர்களும், அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தங்கள் கருத்துக்களை எந்த அளவுக்கு எங்களுக்குப் புரிய வைக்க முடியுமோ, அந்த அளவுக்கு அவர்கள் தங்கள் ஆற்றலின் விளைவாகப் பணியாற்றியிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையைப் பற்றி நான் முதலிலேயே ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாங்கள் பதவியேற்ற உடனேயே வெளியிட்ட ஆளுநர் உரை, ஒட்டுமொத்தமான ஒரு கொள்கையின் பிரதிபலிப்பாக அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு நாங்கள் எதை எதைச் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டோமோ அதைப் பற்றிப் புள்ளி விவரங்கள் அல்லாத, நிதிநிலை அறிக்கையில் சொல்வதை விட்டுவிட்டு மேல் எழுந்தவாரியாகச் சிலவற்றை நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். இப்போது, இங்கே வெளியிடப்பட்டிருக்கின்ற, இங்கே படிக்கப்பட்ட அறிக்கை இந்த ஆண்டில் என்ன என்ன நாங்கள் செய்வோம் என்ற விருப்பத்தை, எங்களுடைய ஆசையை, எங்களுக்கு உதவுகின்றவர்களுடைய ஆற்றலையும், அறிவையும் பயன்படுத்தி, நாங்கள் தெரிந்து கொண்டுள்ள கொள்கையை எப்படிச் செயல்படுத்த முடியுமோ, எப்படி நாங்கள் செயல்படுத்த வேண்டுமென்று ஆசைப்படுகிறோமோ, அந்த வகையில், அதை நிறைவேற்றுவதற்கு, அவர்களுடைய திறமையையெல்லாம் துணையாகக் கொண்டு திட்டங்களைத் தீட்டுகின்ற பொறுப்பை ஒப்படைப்பதன் மூலம், அதை நாங்கள் எங்கள் உள்ளத்திற்கு ஏற்ப, ஏற்றுக் கொள்கின்ற வகையிலே, ஒரு முடிவு எடுத்து, அதை ஒரு கோடிட்டுக் காண்பிக்கின்ற முறையிலேதான், ஆளுநர் உரை அமைக்கப்பட்டு, இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களுடைய பிரதிநிதிகள், ஆட்சியிலே இருப்பவர்களுக்கு எடுத்துக் காட்டவும், சுட்டிக் காட்டவும், சில சமயங்களில் இடித்துக் கூறவும், அவர்களுக்கு உரிமையிருக்கிறது என்பது மட்டுமல்ல; கடமையும் இருக்கிறது, என்பதை மனமார நான் ஒப்புக்கொள்கிறேன்! எடுத்துச் சொல்லவும் ஆசைப்படுகிறேன்!

அந்த வகையிலே, அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தலைவர்களும், தங்களுடைய எண்ணங்களையும் எடுத்துக் கூறி, குறைகளை சுட்டிக் காண்பித்து, ஒரு சிலவற்றைத் தங்களுக்கு மனதுக்கு சரியென்று ஒப்புதல் அளிக்கலாம் என்ற விதத்தில், அவர்களது மனம் எப்படி அனுமதிக்கிறதோ, அதற்கேற்ப, ஆதரித்தும் கண்டித்தும், சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கு, இங்கே கேள்விகளை

எழுப்பியிருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் நான் உண்மையிலேயே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிரச்சினைகளை ஒட்டுமொத்தமாக இங்கே எடுத்துக்கொண்டு பேச வேண்டுமென்று கருதுகிறேனே தவிர, இதற்கு முன்பு நான் பதில் சொல்வதற்கு எடுத்துக் கொண்ட நேரத்தைப்போல, எனது அன்பு மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் கவலைபட்டது போல நீண்ட நேரம் நான் பேச மாட்டேன் என்பதையும், வெகு விரைவிலே முடித்துக் கொள்வேன் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இங்கே, பலர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளும்போது, கருத்துக்களை வெளியிட, ஒதுக்கி வைத்திருக்கின்ற அவர்களுடைய எண்ணத்தைப் போலவே, அதற்குப் பதில் சொல்லும்பொழுது, என்னுடைய நேரத்திலே கொஞ்சம் அதிகமாகக் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் என்பதால், இப்போது நான் அதிகமாக நீட்டி விரிவுபடுத்திப் பேசவில்லை என்பதையும் அந்த வகையில், உங்களுக்கு எவ்வளவு நேரம் ஆகுமோ என்ற கவலை வேண்டாம் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது ? இது எதற்காக என்று கேட்பது போன்ற கேள்விகளையும், இதற்கு முன்னால் சொல்லப்பட்டவைகள் என்னவாயிற்று ? இதில் சொல்லப்பட்டவைகளை எந்த வகையில் நிறைவேற்றிவிடப் போகிறீர்கள் ? என்ற ஐயத்தையும் கிளப்பினார்கள். அதே நேரத்தில், என்னென்ன செய்ய வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா போன்றவர்கள் எடுத்துக்காட்டுகின்ற வகையிலேயும், நண்பர் மாண்புமிகு உறுப்பினர் மாரிமுத்து போன்றவர்களும் ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொன்னதையும் மற்றும் பல நண்பர்கள் அப்படிச் சொன்னதையும் நான் உளமார வரவேற்கிறேன் !

குறை கூறியவர்களையும், குறை கூறியதோடு ஆக்கப்பூர்வமான யோசனைகளைச் சொன்னவர்களையும், நான் உண்மையிலேயே மரியாதையுடனும், அவைகளையெல்லாம் உன்னிப்பாகக் கவனிக்கின்ற பொறுப்புணர்ச்சியுடனும், இந்தப் பேச்சை நான் தொடர்ந்து கொண்டிருக்கிறேன் என்பதை முதலில் உங்களுடைய உள்ளத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

பிரச்சினைகள் நம்மைச் சுற்றி எழுகின்ற நேரத்தில், அவரவர்களுடைய இடத்திற்கேற்ப, அந்தப் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியவர்களாக நாம் ஆகிவிடுகிறோம் என்பதை, என்னை விட அனுபவம் பெற்ற பல முதியவர்கள், இங்கே இருக்கின்றார்கள். அனுபவம் பெற்ற பெரியவர்கள், இங்கே இருக்கிறார்கள் என்பதை எண்ணும்பொழுது, அவர்களுடைய கருத்துக்களை நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது !

ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இந்த அரசுக்குப் பிடிவாதக் குணம் இருக்கிறது, நான் சொன்னதுதான் சரி, நாங்கள் செய்ததுதான் சரி என்ற எண்ணம் நிச்சயமாக இல்லை என்பதை அத்தனை மாமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் நம்ப வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். நாங்கள் "எல்லாம் தெரிந்தவர்கள்" என்ற நிலையில், எங்கள் கடமையைச் செய்து கொண்டிருக்கவில்லை என்பதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இங்கே பேராசிரியர் சொல்லும்பொழுது, "தவறு இருந்தால் நான் திருத்திக் கொள்கிறேன், மன்னிப்பும் கேட்டுக்கொள்கிறேன்" என்று அவரே சொல்லும்பொழுது, என்னைப் போன்றவர்கள் தவறு செய்துவிட்டால், நான் செய்தது தவறு என்று சொன்னாலும், திருத்திக் கொள்கிறேன் என்று சொன்னாலும், மன்னிக்கப்பட வேண்டியவனாக நான் இருந்தேனேயானால், என்னை மன்னியுங்கள் என்று கேட்பதும், அவரைவிட எனக்கு மோசமான காரியம் என்று தோன்றவில்லை, அவரே செய்வார் என்று சொல்லும்பொழுது நான் அதைச் செய்யக்கூடிய அளவில் தான் இருக்கிறேன் என்பதை, இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே பேசியவர்கள் பலருக்குச் சில நேரங்களில் கோபம் வர வேண்டிய நிலையில் நிகழ்ச்சிகள் இடைக்காலத்தில் நடந்திருக்கலாம். ஆனால், அந்த நிகழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதையும், அந்த நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாமல் நடந்துவிட்டதற்கு, எந்தச் சூழ்நிலை உதவிற்று என்பதையும், அவர்கள் கொஞ்சம் பொறுமையோடு சிந்தித்துப் பார்ப்பார்களேயானால், எங்கள் மீது அவர்கள் அனுதாபம் கொள்வார்களே தவிர, எங்கள் மீது ஆத்திரப்படுவதற்குக் காரணம் இருக்காது என்பதை நான் நிச்சயமாக நம்புகிறேன்.

தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி ஆளுநர் உரையில் இல்லையே என்பதிலே எல்லோருக்கும், குறிப்பாக, சி.பி.எம்., சி.பி.ஐ. மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் அத்தனை பேருக்கும் அதிலே குறையிருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. முதலிலேயே சொன்னேன். இந்த ஆளுநர் உரை இந்த இடைக்காலத்தில் எப்படி தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், இனி என்ன செய்யப்போகிறது என்பதைப் பற்றியும் சிந்திக்கும்பொழுது, நிதிநிலை அறிக்கையிலே சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு இங்கே நிறைவேற்றப்பட வேண்டுமென்று, நாங்கள் விரும்பும் வரவு–செலவுத் திட்டம் வெளிப்படுத்தப்படும்பொழுது, இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற சந்தேகங்கள் குறையும் அல்லது எங்களுக்குச் சந்தேகங்களை உண்டு பண்ணி, எங்களைத் திருத்த முடியுமென்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

நாங்கள் கொண்டுவர இருக்கின்ற சட்டங்களை நிறைவேறுவதற்கு முன்னால், எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அல்லது எங்கள் கட்சியில் இருப்பவர்கள் என்று கூட நான் சொல்வேன், அவர்களுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டிருக்கிறது, அவர்கள் ஏதாவது திருத்தங்களைச் சொன்னால்கூட, அவைகள் உண்மையிலேயே நடைமுறைக்கு ஒத்து வரக்கூடியது

என்று இருக்குமேயானால், கண்டிப்பாக நாங்கள் அதை ஏற்போம் என்பதையும் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

தொழிலாளர்களைப் பற்றி, ஒரு கொள்கையை மட்டும் நான் இங்கே தெளிவுபடச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில், இரண்டு பிரச்சினைகளை முன்வைத்து, தொழிலாளர்களையும், தொழில் தகராறுகளையும் நான் கவனிக்க, சந்திக்க விரும்புகிறேன். ஒன்று, உற்பத்தி பெருக்கு அதிகமாக வேண்டுமே தவிர, உற்பத்தி குறையக் கூடாது என்பதிலே, எனக்கு அதிக அக்கறை உண்டு என்பதும், இதைச் சொல்வதால் மற்றவர்களுக்கு அந்த அக்கறை இல்லையென்ற அர்த்தம் ஆகாது என்பதும் என்னுடைய எண்ணம் என்ன என்பதை நான் வெளியிடுகிறேன் என்பதையும், அதற்குப் பொருளாகக் கொள்ள வேண்டுமென்பதையும், நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதே நேரத்தில், தொழிலாளர்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது என்ற நிலைமை ஏற்படுகிறபொழுது இந்த அரசைப் பொறுத்தவரையில், தனித்தன்மை வாய்ந்த முறையில், தனிப்பட்ட முறையில், கையெழுத்து வாங்கி ஒவ்வொரு தொழிலாளியாக, தொழில் அதிபர்கள் வேலை வாங்குவது போல அல்லது ஏழ்மையைப் பயன்படுத்தி, அவர்களை அடிமையாக்குவது போல், வேலைக்கு வைத்துக்கொள்கிற முறையை இந்த அரசு உண்மையிலேயே வெறுக்கிறது என்பதையும், அதை ஆதரிக்க நாங்கள் நிச்சயமாக எங்கள் உள்ளத்தோடு மனத் திருப்தியோடு, தயாராக இல்லை என்பதையும், எங்கள் கொள்கையாக நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், சில இடங்களில் நடைபெறுகின்றனவே என்று கேட்டால் சில தீர்ப்புகள் அவர்களுக்குச் சாதகமாக இருக்கின்ற நிலைமைகளையும் வெவ்வேறு மாநிலங்கள், வெவ்வேறு வகையிலே பலரைப் பயன்படுத்திக்கொள்ள தயாராக இருக்கிற நிலையிலும், நாங்கள் அதை விட்டுக்கொடுக்கவும் முடியவில்லை. அதே சமயத்தில், எங்கள் கொள்கைக்கு நேர்மாறாக நடக்கும்போது அதைப் பொறுத்துக்கொண்டும் இருக்க முடியவில்லையென்ற சங்கடத்தில் இருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் நம்ப வேண்டுமென்பது, எனது பணிவான வேண்டுகோளாகும்.

ஆனால், இந்த அரசைப் பொறுத்த வரையில் எப்படியாவது, அதற்கு மாற்றம் கண்டு சங்கத்தின் மூலமாகத்தான் அதாவது, தொழிற்சங்கத்தின் மூலமாகத்தான் தொடர்பு கொண்டு, தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறை வலுப்பட வேண்டுமென்றும், அதுதான் இந்த நாட்டில் தொழிற்கொள்கையாக இருக்க வேண்டுமென்ற வகையில், தமிழக அரசு இதற்கு என்னென்ன வழிமுறைகளைக் காண முடியுமோ அதைச் செய்வதற்கு நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம் என்பதையும், நான் இங்கே உத்தரவாதமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இதிலிருந்து தொழிலாளர்கள் பிரச்சினையில் நாங்கள் தொழிலாளர்களுடைய வாழ்வுக்கோ, அவர்களுடைய உரிமைக்கோ குறுக்கே நிற்க விரும்பவில்லை

என்பதையும், சூழ்நிலையின் விளைவு சில வழக்கு மன்றங்களின் தீர்ப்பு பாதகமாக இருக்கிறது என்பதையும், நான் இங்கே சொல்வதையும், விவரம் தெரிந்த தலைவர்கள் புரிந்து கொள்வார்கள், உறுப்பினர்கள் புரிந்து கொள்வார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

அதைப்போல, விவசாயிகளைப் பொறுத்தவரையில், ஒரு கொள்கையை நான் இங்கே வெளியிட்டுத் தீர வேண்டும். விவசாயிகளுக்காக அதிகமாக மேடையிலே பேசியவன் நான் என்பதையும், இங்கே சொல்லியாக வேண்டும். விவசாயிகளுக்கு என்னென்ன நன்மைகள் தேவை என்பதைப் பற்றி, பல ஆண்டுகளாக நான் பேசிய பேச்சுக்கள் ஏடுகளிலே இருப்பவற்றை மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துப்பார்க்க வாய்ப்பிருந்து படித்தால், நான் என்னென்ன சொல்லியிருக்கிறேன் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள முடியும் என்பதற்காக மட்டுமல்ல, நிறைவுபடுத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும்.

அதை இந்தத் தமிழக அரசு செய்யக் கூடாதா என்றால், செய்வதற்காக எந்தெந்த வகையில் நாங்கள் முயல வேண்டுமோ, அந்த வகையில் தொடர்ந்து செய்து வருகிறோம். வருகின்ற 24, 25ஆம் தேதிகளில் நடைபெறுகிற என்.டி.சி. மீட்டிங்கில் நான் கலந்துகொள்ள இருக்கிற நேரத்தில், இவைகளைப் பற்றி, விவசாயிகள் பிரச்சினைகளைப்பற்றி, தமிழகத்தினுடைய கருத்து அங்கே எடுத்து வைக்கப்படும் என்பது மட்டுமல்ல, இதுபோன்ற விவசாயப் பிரச்சினைகள், விவசாயத் தொழிலாளர்கள் பிரச்சினைகள் இவைகளைப் பற்றியெல்லாம் ஒருசில மாநிலங்கள், அந்த மாநிலங்களின் முதலமைச்சர்கள் என்ற வகையில், நாங்கள் கலந்து உரையாடி, அதன்பிறகு 24, 25ஆம் தேதிகளில் எங்கள் கருத்தை ஒட்டுமொத்தமாகச் சொல்ல இருக்கிறோம் என்ற நிலையிலேயே நாங்கள் இருக்கிறோம் என்பதை இங்கே இது தமிழக அரசின் கொள்கை என்பதோடு மட்டுமல்ல, இந்த முயற்சியை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகள் மீது போடப்பட்டு இருக்கும் வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லையே, சில தொழிலாளர்களின் மீது போடப்பட்டு இருக்கும் வழக்குகள் பின்வாங்கப்படவில்லையே என்பதெல்லாம், தொழிலாளர்கள் பிரச்சினையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மன வருத்தத்தைத் தரும் என்பதை நான் உணராமல் இல்லை. வன்முறையில் ஈடுபட்டவர்களை விடுதலை செய்வது எப்படி என்று, நான் பிரச்சினையை எடுத்து வைத்து, அதைப் பற்றி நான் பலமுறை பேசி இருப்பதை மாமன்றம் மறந்து இருக்காது என்பதையும் என்னுடைய முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரில் நான் சொன்ன கருத்துக்களை மீண்டும் நினைவுபடுத்திக் கொண்டால் நான் என்ன கருத்தோடு இருக்கிறேன் என்பதை இங்கே உள்ளவர்கள் நன்கு தெரிந்து கொள்ள முடியும் என்பதையும், நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு விவசாயிகள் என்கிற பிரச்சினை வருகிறபோது எல்லாம், இங்கே மாமன்ற உறுப்பினர்கள் பலர் அரசுக்கு எச்சரிக்கை விடுவது போல நல்லக் கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். ஒரு அரசியல் கொள்கை ஏதுமின்றி, வேறு எந்தக் கொள்கையும் இன்றி, விவசாயிகளின் பிரச்சினையை வைத்துக்கொண்டு, விவசாயிகளை என்னவோ எடுத்துச் சொல்கிற நிலைமையை உடனே தடுத்து நிறுத்தாவிட்டால், அதனுடைய விளைவுகள் எப்படி இருக்கும் என்று எடுத்துக் காட்டியிருப்பதை நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும் என்று கூறி, அதற்காக இந்த அரசின் சார்பில் அவர்களுக்கு நன்றிகூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், நாங்களும் தீவிரமாக இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டும் இருக்கிறோம் என்றாலும், நான் முதன்முதலில் முதலமைச்சராக பதவி ஏற்ற உடனே இங்கே நான் குறிப்பிட்டதையும் மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன். வரி கொடுக்காதே என்ற பிரச்சாரம், வரி வாங்கும் அதிகாரிகளை தாக்கி, அடித்து துரத்தி, கட்டிப் போடுவது போன்ற நிலைமைகள் நாட்டிலே இருக்குமானால், அது ஒரு வேளை ஏழை எளிய விவசாயிகளுடைய மனதிலே ஏற்பட்டு இருக்கிற ஆத்திரத்தின் விளைவாக இருக்கக் கூடும் என்றாலும் கூட, சட்டம் ஒழுங்கினை மக்கள் மத்தியில் செயல்படுத்த முடியாத நிலையை உருவாக்குகிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்களை அரசு மன்னித்து விட்டுவிடவேண்டும் என்பதை இங்கே இருக்கும் மாமன்ற உறுப்பினர்கள் யாரும் நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமைகளை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு ஒரு அரசு இருக்கும் என்றால், அந்த அரசு உண்மையிலேயே சட்டத்தைக் காப்பாற்ற விரும்பவில்லை என்பது மட்டுமல்லாமல் சட்டத்தின் மதிப்பை பின்னாலே வருகிற எந்த அரசும், அது 25 ஆண்டு காலத்திற்குப் பின் வந்தாலும் சரி, இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலே வந்தாலும் சரி, இதே நிலைமை ஏற்படுவதற்கு வெவ்வேறு காரணங்கள் ஏற்படும் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். விவசாயப் பிரச்சினை என்ற பெயரில் நியாயம் இருந்தாலும் கூட, இந்த வன்முறை நிலைமைகளை, அராஜகத்தை, தவறான காரியங்களை செய்ய மக்களைத் தூண்டி விடுவதற்கு அவர்களுக்கு துணிச்சல் உண்டாக்கும் என்பதும் அதனால் இந்த நாட்டின் ஜனநாயக வளர்ச்சி வேகம் குறைந்துவிடும் என்பதும் கொஞ்சம் வேதனையோடும், வேறு வழியின்றியும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அந்த வகையில், தமிழக அரசு அப்படிப்பட்ட கொள்கைப் பிரச்சாரங்களை அனுமதிக்காது என்பதையும், இந்த மாமன்றம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளும் என்றும், நான் நம்புகிறேன். ஆனாலும், ஏழை எளிய விவசாயிகள் எத்தனை நாளைக்கு அவர்கள் பட்டினி கிடக்க முடியும், அவர்கள் வாழ்க்கைக்கு என்னவெல்லாம் உத்தரவாதம் என்கிற கேள்விக்கு இந்த அரசு பதில் சொல்லியாக வேண்டும்.

ஏழைகளுக்காக ஒரு அரசு தேவை என்று சொல்லி, ஏழைகளுடைய, பெரும்பான்மை மக்களுடைய, வறுமைக்கோட்டிற்கும் கீழே உள்ளவர்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு, அவர்களைப் பற்றிச் சிந்திக்காமல்,

திட்டமிடாமல் இருப்பது நிச்சயமாக, தமிழக அரசுக்கு மட்டுமல்ல; எந்த அரசுக்கும் உகந்ததாக இருக்க முடியாது; ஒரு தவறான கொள்கைக்குச் சொந்தக்காரர்களாகி விடுவோம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன்.

அந்த வகையில், ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் இதுவரையில் எவ்வளவு கஷ்டங்கள் பட்டிருக்கிறார்கள் என்பதையும், கடன்காரர்களாகி இருக்கிறார்கள் என்பதையும் தமிழக அரசு உணர்ந்திருக்கிறது. சென்ற முறை நான் டில்லிக்குச் சென்றபோது கூட இதைப்பற்றி பேசியிருக்கிறேன் என்பதையும், மீண்டும் இதைப்பற்றி பேச இருக்கிறோம் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு குறித்த விலைக்கே, ஏன் அரசே எடுத்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டால், 50 இலட்சம் டன் அரிசிக்கு எத்தனை கோடி ரூபாய் என்று கணக்கிட்டுப் பார்த்தால் தான், அதை எந்த நிர்வாகத்தின் பெயரால் எப்படி வாங்க முடியும், எப்படித் திருப்பிக் கொடுக்க முடியும் ? அதை எப்படி காப்பது ? என்பதையும் எண்ணிப் பார்த்தால், அது ஒரு சாதாரண விஷயமல்ல என்பதை இங்கே இருக்கிற மாமன்றத்து உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்துகொள்வார்கள்.

அதோடு எங்கே வேண்டுமென்றாலும் அரிசியை எடுத்துக்கொண்டு போகலாம் என்ற நிலையை ஏற்படுத்திவிட்டு, தற்காப்புக்காக 20 சதவீதத்தை அரசுக்கு தர வேண்டுமென்ற ரீதியில் இருக்கிறதே தவிர, அது கூட ஓரளவுக்குப் பிறகு நிறுத்தப்பட இருக்கிறது என்பதை அரசின் சார்பிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே குறிப்பிட்டவர்களிலே வேடிக்கையாக பேசியவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இல்லாவிட்டாலும், அப்படிப்பட்ட கருத்துக்கள் எடுத்து வைப்பதிலே ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய விருப்பம் நல்ல நோக்கத்தோடு இருந்தாலும், அது பிறர் மனதைப் புண்படுத்தும் வார்த்தையாக இருக்கலாம். ஆனால், நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. இருந்தபோதிலும், இந்த மாமன்றத்திலே பேசுகின்றவர்கள் வேண்டுமென்றே சில பிரச்சினைகளை உருவாக்கி, இங்கே பேசுவது என்பது ஒரு மரபாக ஆக வேண்டுமானால் அது நிச்சயமாக இந்த மாமன்றத்தின் மரியாதையைக் கெடுத்துவிடும்; இதுவரை இருந்த தகுதிக்கு உகந்ததாக இருக்க முடியாது. அதை நினைத்துப் பார்க்ககூட முடியவில்லை; ஒப்புக்கொள்ள முடியவில்லை. இருந்தாலும், அப்படிப்பட்டவர்களுக்கு தமிழக அரசின் சார்பாக ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். கொள்கையை, கொள்கை விளக்கங்களை நாம் இங்கே பேசுவோம். அதை மனதிலே பதியக்கூடிய வகையில் பேசுவோம். கடுமையான வார்த்தையைப் பயன்படுத்த வேண்டியிருந்தாலும், அப்படி பேச வேண்டுமென்ற எண்ணம் யாருக்காவது இருந்தால், அப்படித்தான் பேச வேண்டுமென்று நான் முடிவு செய்திருக்கிறேன் என்று சிலர் நினைத்திருந்தால், அவர்களுக்கு நான் பணிவோடு



சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்; மற்றவர்களும் அப்படிப்பட்ட பேச்சைப் பேச வேண்டிய நிலை ஏற்படுமானால் அது எங்கே கொண்டுபோய் விடும் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினாலும், கண்ணியக் குறைவு ஏற்படாமல், பிறர் மனது புண்படாமல் பேசுவதாக இருந்தால், அது வரவேற்கக் கூடியதாக இருக்கும். குறை சொல்வதிலே கூட கண்ணியத்தோடு சொல்ல முடியும்; நல்ல சொற்களிலே சொல்ல முடியும்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இங்கே எவ்வளவு வேகமாக வார்த்தைகளைப் பயன்படுத்தினார்கள். எவ்வளவு ஆவேசமாகப் பேசினார்கள் என்பதை நீங்கள் எல்லாம் பார்த்தீர்கள். அதே நேரத்தில், அவருடைய பேச்சிலே எங்கும் கண்ணியக் குறைவான வார்த்தைகள் இல்லை. கோபமாக சொன்னாலும் சிரித்துக்கொண்டே சொல்லி, அவருடைய கருத்தை மற்றவர்கள் மனதிலே பதியக் கூடிய அளவுக்கு, பொறுமை இழக்காமல் பேசினார்கள். குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போதும் வார்த்தை தவறவில்லை.

இங்கே இராஜாஜி அவர்கள் இருந்தபோது எப்படியெல்லாம் குண்டு வெடித்தார் என்பதையும், வழக்குகள் போடப்பட்டன என்பதையும் எடுத்துச் சொல்லி இருந்தபோதிலும், அவர்கள் தன்னை விடுதலை செய்தார்கள் என்று கூறினார்கள். நான் உண்மையிலேயே சொல்கிறேன். அப்போது அவர்களுக்கு என்ன வயது இருக்கும் என்று தெரியாது. ஒருவேளை இராஜாஜி நினைத்திருப்பார். இந்த குழந்தை செய்திருக்க மாட்டான், அல்லது யாரோ செய்து விட்டு பழியை இவன் மேல் போட்டிருக்கலாம் என்று நினைத்து விடுதலை செய்திருப்பார். இப்போது கூட, அவர் தான், தான் செய்தேன் என்று சொன்ன பிறகு கூட, அவர் செய்திருப்பாரா என்று என்னால் நம்ப முடியவில்லை. அந்த அளவுக்கு அவர் பழகுகின்ற முறை, மாமன்றத்திலே நடந்து கொள்கின்ற விதம் அமைந்திருக்கிறது. அதே நேரத்தில், தன்னுடைய உரிமையையும் விட்டுக் கொடுக்காமல், தன்னுடைய கொள்கையையும் விட்டுக்கொடுக்காமல், பிறர் மனதிலே கருத்துக்களை பதிய வைக்கின்ற முறையை எண்ணிப்பார்க்கும் போது அதைப் போல அனைவரும் மரபை காத்து, நல்ல பெயரை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் உமாநாத் அவர்கள் கருத்தை இங்கே குறிப்பிட்ட பிறகு ஒன்றை நான் இங்கே சொல்லியாக வேண்டும். வன்முறையிலே ஈடுபடுபவர்களை நிச்சயமாக வழக்கிலே இருந்து விடுவிக்க முடியாது என்றாலும், அவர்கள் மீது இருக்கின்ற வழக்குகளை வாபஸ் வாங்க முடியாது என்றாலும், அப்படிப்பட்ட கொள்கையினை மாற்றிக்கொள்வது இயலாது என்றாலும், அவர் சொன்ன பிறகு ஒரு சில பிரச்சினைகளைப் பற்றி நான் மீண்டும் பரிசீலனை செய்வேன் என்பதையும் அதைப் பற்றி இந்த அரசு விரைவிலே நல்ல முடிவை சொல்வதற்கு முயற்சிக்கும் என்பதையும்,

இந்த அவையிலே நான் குறிப்பிட விரும்புகிறேன். யார் மீதும் தனிப்பட்ட வரையில் விருப்பு வெறுப்பு காட்ட வேண்டும் என்கின்ற வகையிலோ அல்லது ஏதாவது ஒரு பழி சுமத்த வேண்டும் என்கின்ற வகையிலோ நடவடிக்கைகள் எடுக்கின்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை மட்டும், தயவு செய்து நண்பர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் நம்புவார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஆளுநர் அவர்களது உரையில், இதுவரையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பது பற்றிச் சொல்லப்படவில்லை என்று மிகத் தெளிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும், மனதைப் புண்படுத்தாத வகையிலும் பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதை இங்கே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன், “இந்த ஆட்சியிலே ஒரு இலட்சம் பேர்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்றீர்களே, இப்போது 11 ஆயிரம் பேருக்குதான் கொடுக்கப்படும் என்று சொல்கிறீர்களே, ஏன் இந்த வேறுபாடு, முன் கூட்டியே திட்டம் போட்டுவிட்டு இதைச் சொல்லியிருக்கக்கூடாதா” என்று அவர்கள் கேட்டார்கள். இது நியாயமான ஒரு கேள்விதான், இதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இவைகளை எல்லாம் ஆளுநர் உரையிலேயே சொல்லவேண்டும் என்றால், ஒரு நீண்ட பிரசங்கம் போல் ஆகிவிடும் என்பதால், சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இருப்பினும் நான் அவைகளில் ஒருசிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே, அந்தத் திட்டத்தின் மூலம் ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உண்டாக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தது. என்னிடம் இருக்கின்ற புள்ளிவிவரங்களின்படி, முதல் 9 மாதத்திலே, அதாவது 31.12.1978 வரை இந்தத் திட்டத்தின் மூலம் 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பட்டு வளர்ப்புத் திட்டத்தின் மூலம் 29 ஆயிரம் பேர்களுக்கும், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 9 ஆயிரம் பேர்களுக்கும், சிறுதொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் 58 ஆயிரம் பேர்களுக்கும் ஆக 1 இலட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இலட்சம் பேர்களுக்கு என்று சொன்னோம். ஆனால், இலட்சத்து 30 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லும் போது, நமது பேராசிரியர் அவர்கள் உண்மையிலேயே மகிழ்ச்சி கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். நான் இன்னொன்றையும் சொல்லவேண்டி இருக்கிறது. சில நேரங்களில், சில கேள்விகள் எழும்பும்போதுதான் உண்மைகள் வெளிவருகின்றன. ஆகவே, இப்படி அனுபவம் மிக்கவர்கள் இப்படிப்பட்ட கருத்துக்களை இங்கே எடுத்து வைப்பது, இந்த அரசுக்கும்; இந்த அவைக்கும்; நல்லது என்பதை நான் மன நிறைவோடு சொல்லி அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஏழை விவசாயிகளுக்கு பயன்தரும் முயற்சியாக, குத்தகையை 40 சதவிகிதத்திலேயிருந்து 25 சதவீதமாகக் குறைக்க இவ்வரசு முடிவு

எடுத்துள்ளது என்றும், இந்தச் சட்டசபையில் அதற்கான திட்டம் கொண்டுவரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இது மாண்புமிகு உறுப்பினர் திரு.சங்கரய்யா அவர்களுக்கு நான் சொல்லுகின்ற ஒரு பதிலாகும். "இதுமட்டும்தானா, கோயில் நிலங்களைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?" என்ற கேள்வி அவருடைய மனதிலே எழுவது எனக்குப் புரிகிறது. இப்போது ஏற்றுக்கொண்டிருக்கின்ற கடமைகளை நிறைவேற்றுவதோடு, நாம் மக்களுக்கு என்ன சொல்லி இருக்கிறோமோ அதையும் நிறைவேற்றுவதற்கும், இந்த தமிழகத்திலே உள்ள மக்களுக்கு வீடு இல்லை என்கிற நிலைமை இல்லாத அளவுக்கு, நாம் அனைவரும் சேர்ந்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிப்போம் என்றும் அப்போது இதை நிறைவேற்றுவது சுலபம் என்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நண்பர் மாண்புமிகு துரைமுருகன் ஒரு சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள், அதாவது 'ஓவர்சீஸ் எம்ப்ளாய்மென்ட் கார்ப்பரேஷன்' என்ற அமைப்பு பற்றி அவர்கள் கேட்டார்கள். 'ஓவர்சீஸ் மேன்பவர் கார்ப்பரேஷன்' என்ற அந்த அமைப்பு வெளிநாடுகளிலே இருக்கின்ற கம்பெனிகளோடு தொடர்பு கொண்டு, அங்கிருக்கக்கூடிய வேலைவாய்ப்பினை அறிந்து, இங்குள்ளவர்களை தக்க முறையில் அனுப்புவதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்பதற்காக ஒட்டுமொத்தமாகப் பதில் சொல்லிக்கொண்டு போகிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்போது எல்லாவற்றையும் பற்றிப் பேசுங்கள், எவ்வளவு மணி நேரம் வேண்டுமானாலும் பதில் சொல்கிறேன் என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்தம் 5ஆவது விதிப்படி, உபரி நிலங்களை யார் யாருக்குக் கொடுக்கலாம் என்றால் கீழ்க்கண்டவாறு கொடுக்கலாம். உபரி நிலங்களை குத்தகைக்கு உழுபவர்கள், நிலச்சீர்திருத்தச் சட்டத்தினால் இப்போது முற்றிலும் இழந்தவர்கள், மூன்று ஸ்டான்டர்ட் ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள், நிலம் இல்லாத தாழ்த்தப்பட்ட அல்லது பின்தங்கிய விவசாயத் தொழிலாளர்கள், இராணுவத்தினர், நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள், மூன்று ஸ்டாண்டர்டு ஏக்கருக்குக் குறைவாக குத்தகை நிலம் உள்ளவர்கள், பர்மா, சிலோனிலிருந்து வந்த அகதிகள், நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்களைக் கொண்ட கூட்டுறவு ஸ்தாபனங்கள். மேலே, குறிப்பிட்ட விதிப்படி நிலம் இல்லாத விவசாயத் தொழிலாளர்கள் ஆக, உபரி நிலங்கள் இந்த வரிசைக் கிரமப்படி கிடைக்கும். இன்னும் சில திட்டங்களாக, விவசாயிகளுக்கு மொத்த விளைச்சலில் 75 சதவிகித விவசாய வாரம் என்று பிடித்துக் கொள்ளவும், 25 சதவிகித நிலச் சொந்தக்காரருக்கு குத்தகைத் தொகையாக நிர்ணயிக்கவும் அரசு முடிவு எடுத்திருக்கிறது என்று குறிப்பிட்டேன். ஆளுநர் அவர்களது உரையில் பலவற்றைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதுபற்றி பலருக்குக் குறையிருந்தாலும், சில

நண்பர்களுக்குள்ள சந்தேகத்தைத் தீர்க்கவேண்டிய கடமை என்ற வகையில், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாட்டுடமையாக்கும் கொள்கையை நாங்கள் கைவிட்டுவிடவில்லை. சிறிய மாவட்டம், நீலகிரி மாவட்டத்திலிருந்து ஆரம்பித்து மாவட்டம் மாவட்டமாக, பேருந்துகளை நாட்டுடைமையாக்கும் சட்டத்தை 1973இல் கொண்டுவந்து, நீதிமன்றத்தின் தடை உத்தரவு இருப்பதால் நிறுத்தப்பட்டு 1976ஆம் ஆண்டு வரை வழக்கை விரைவில் முடிக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை (பேருந்துகள்). தற்போது இந்த அரசு எடுத்த முயற்சி காரணமாக, அந்த வழக்கு உச்சநீதிமன்றத்திற்கு வந்துள்ளது. எல்லா மாவட்டங்களிலும் கொண்டுவர வேண்டும் என்று, ஒரே நேரத்தில் கொண்டுவர வாய்ப்பு இருந்தும், ஆனால் நீலகிரியில் மட்டும் கொண்டுவரப்பட்டு மற்ற மாவட்டங்களில் கொண்டு வர முடியாமல் போனதற்குச் சட்டம் தடுத்தது என்று சொன்னாலும், எப்படியோ எண்ணம் நல்ல எண்ணம்தான், அதுவும் இந்த அரசின் கொள்கைதான் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, அதைப் பற்றி இங்கே கூடுதலாக சொல்லாமல், மினி பஸ்கள் விடுவது என்னவாயிற்று என்ற கேள்வியை எழுப்பினார்கள்.

தமிழ்நாட்டில் இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கனம் காங்கிரஸ் கட்சித் தலைவர் மாரிமுத்து அவர்கள் கேட்கிறார்கள். அதற்கும் பதில் சொல்லுகிறேன். தமிழ்நாட்டில் முதன்முறையாக, எத்தனை கிராமங்களுக்குப் பஸ் வசதியில்லை என்பதையும், எத்தனை கிராமங்களுக்குச் சாலை வசதியில்லை என்பதையும் கணக்கிடப்படவேண்டும் என்று கருதி, விரிவான சர்வே நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில், வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், தருமபுரி, தஞ்சை போன்ற இடங்களில் 44 மினி பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. மேலும், 700 மினி பஸ்கள் தொடர்ந்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற புள்ளி விவரங்களை எல்லாம் இப்போது சொல்லிக்கொண்டு நேரத்தை வீணாக்க நான் விரும்பவில்லை. இந்த அரசு வழக்குமன்றத்தில் இருக்கின்ற வழக்குகளிலோ அல்லது அதிகாரிகளைத் தடுப்பதன் மூலமாகவோ நிருவாகத்தில் நீதியில் குறுக்கிடுகிறார்கள் என்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு, நான் ஒன்றைப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நடக்காது, எப்படிப்பட்ட நிலையிலும் இதில் ஈடுபடத் தயாராக இல்லை என்பதையும், எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் தான் முதலில், மதுவிலக்குச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்கள் என்பதையும் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைக் குறிப்பிடும்போது, நண்பர் சிந்தன் அவர்கள் தாக்கப்பட்டது பற்றி எடுத்துக் கூறியிருந்தாலும், அவர் எப்படி தாக்கப்பட்டார், எப்படி வழக்குமன்றத்திற்குச் சென்றது, தீர்ப்பு எப்படி வழங்கப்பட்டது என்பதும், அப்படித் தீர்ப்பு வழங்கப்பட்டதற்கு என்னென்ன காரணங்களால் தீர்ப்பு அவ்வாறு அளிக்கப்பட்டது என்பதையும் நாம் அறிவோம். முதலில் தாக்கியவர்களில் யார் என்பதை அடையாளம் காட்டிய

அதிகாரிகள், மேல்கோர்ட்டுக்குப் போனவுடன் அவர்களே அடையாளத்தைக் காட்ட முடியவில்லை என்று சொன்ன காரணத்தால், அந்த வழக்கு தோல்வி அடைந்தது என்பதையும் இங்கு குறிப்பிடுகின்ற நேரத்தில், இதை அதிகாரிகளாக செய்தார்களா, அல்லது வேறு யாராவது வெளியில் உள்ளவர்கள் அப்படி சொல்லச் செய்தவர்கள் யார் என்பதை தெரிந்த வரையில் சொல்ல முடியாது என்றாலும், இப்படி மாறுபட்ட அளவுக்கு இந்த அரசு எங்களுக்குத் தெரிந்த அளவில் அனுமதிக்க மாட்டோம், அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட மாட்டோம் என்பதை நான் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன். இதை நீங்கள் நம்ப வேண்டும் என்பது எனது வேண்டுகோளாகும்.

வழக்குகள் என்பதும், அதிகாரிகள் என்பதும், நான் முன்பே குறிப்பிட்டிருப்பது போல இன்று தொடங்கியது அல்ல. நீண்ட காலமாக இருக்கின்ற அதிகாரிகள் காங்கிரஸ் காலத்திலிருந்து பணியாற்றுகிறார்கள். அவர்கள் காலத்திலிருந்து பணியாற்றுகின்றவர்களும் இருக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்தில் பணியாற்றுகின்றவர்களும் இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு சேர்க்கப்பட்டவர்களும் இருக்கலாம். இப்படி சேர்க்கப்பட்டவர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் இப்போது தேர்ந்தெடுக்கப்படவில்லை. இந்த நிலைமையில் அதிகாரிகள் தவறு செய்தார்கள் என்றிருந்தால், அந்த அதிகாரிகளைக் கண்டிப்பதற்குரிய நியாயமான சட்டம், அல்லது அதிகாரம் இருந்தாக வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொய் வழக்கு போடுதல் என்கின்ற முறை, கட்டாயமாக மாற்றியாக வேண்டும், நிறுத்தியாக வேண்டும் என்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. மாற்றுக் கருத்தும் இல்லை.

அதைப் போலவே, மதுவிலக்கைப்பற்றிச் சொல்லும்போது, பணத்தைக் கொடுக்கின்றார்கள். அது யார் என்று தெரியவில்லை என்பதையும், அப்படிப்பட்டவர்கள்; நல்ல பணவசதியுள்ளவர்கள், தப்பித்துக்கொள்கிறார்கள். ஏழைகள் தான் சிக்கிக் கொள்கிறார்கள் என்பதை, மாமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லும்போது, ஒன்றை மனதில் புரிந்துகொள்ள வேண்டும், பதிய வைத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்களையும் தண்டனைக்கு உள்ளாக்கும் வகையில், ஏதாவது சட்டத்தைக் கொண்டு வந்தால், அதற்கு எப்படிப்பட்ட, சட்டத்தைக் கொண்டுவந்தால் அல்லது எப்படிப்பட்ட, எவ்வித முறைகள் இருந்தால், இதைத் தடுக்க பயன்படும் என்பதைப் பற்றியும், நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் உண்மையிலேயே, இதைப்பற்றித் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கிறேன் என்பதையும் இங்கு வெளியிட விரும்புகிறேன்.

சில மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன். ஒரு கோடி பேர்கள் குடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். மன்னிக்க வேண்டும், பேராசிரியர்

அவர்கள் சொன்னார்கள். இதிலே 50 இலட்சம் பேர்கள் பழக்கப்பட்டவர்கள் என்றெல்லாம் கூறினார்கள். நான் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், அவர்கள் எப்படி நம்பி சொல்லுகின்றார்களோ, அவர்களை நான் நம்புகிறேன். அவர்கள் இந்த குறைகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்பதிலே எனக்கு நிச்சயமாக நம்பிக்கை உண்டு, நான் அவர்களுக்குச் சொல்வது, ஒரு கோடி பேர்களோ அல்லது எத்தனை கோடி பேர்களோ என்று கணக்கிடுவதற்கு முன், இதை நாம் கண்டுகொண்டால், நல்லதென்று நம்பினேன். அந்த வகையில், அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதிலே ஒருங்கிணைந்து, இதை செயல்படுத்துவதற்கு வெற்றிகரமாக உதவினால், நாம் சட்டத்தை அதற்கேற்ப அமைத்து, அனைத்துக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து உழைத்தால், நிச்சயமாக அண்ணாவின் கொள்கை, நமது அரசின் கொள்கை, முன்பிருந்த அரசின் கொள்கை வெற்றிபெறும் என்பதிலே சிறிதும் சந்தேகமில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குத் தான் உங்கள் யோசனையை, அனுபவத்தை ஏற்றுக்கொள்ளும் வகையில், இதுபற்றி திருத்தங்கள் வரும்போது, அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள இருக்கிறோம். இதற்கு முன்பு இருந்த சட்டத்தில் ஒரு விதி இருந்தும், பழக்கத்தின் காரணமாக, அனுமதிக்கப்பட்டதன் காரணமாக, இப்படி விட்டுவிடுகிறார்கள். ஆகவே, இந்த நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அதை மாற்றி அமைக்க வேண்டும். உங்கள் எண்ணத்தை சரிவரப் பயன்படுத்தி, உங்கள் யோசனைகளையும் கொடுத்து, சரியாக இந்தச் சட்டத்தை உருவாக்கினால், நமது அனைவருடைய நல்ல நோக்கம் நிறைவேறும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

மறைந்த இராஜாஜி அவர்கள் இருந்த காலத்தில் இருந்து, இதுவரை எப்படியெல்லாம் இது நடைபெற்று வந்தது, அது மீறப்பட்டு, எப்படியெல்லாம் இது அதிகமாகி இருக்கின்றது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை நான் கவனித்தபோது, எனக்குத் தெரிந்ததெல்லாம் குடிப்பவர்கள் அதிகமாகி விட்டார்கள் என்பதைவிட, குடிப்பவர்களுடைய எண்ணிக்கை வெளியிலே தெரிய ஆரம்பித்து விட்டது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அப்படியே அதிகமாகியிருந்தாலும், சட்டம் வந்தபிறகு, தெருவிலே சண்டை சச்சரவுகள், குழப்பங்கள் குறைந்திருக்கிறது என்ற நம்பிக்கை மக்கள் மத்தியிலே வந்திருக்க முடியாது. அந்த எண்ணம் மக்களுக்கு வந்திருக்கிறது என்பதை, கிராமப்புறங்களிலே உள்ள மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். சில இடங்களில் பண வசதி உள்ளவர்கள், மிகுந்த பண வசதி உள்ளவர்கள், ஒரு கிராமத்திலே தங்களுடைய சொந்த ஓர், அரசு போல் நினைக்கிறவர்கள், இந்தத் தேதியில், இந்தக் கிழமையில் வந்த சாராயத்தை காய்ச்சிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகின்ற அளவுக்குக்கூட, அப்படிச் செயல்படுகின்றார்கள் என்ற செய்தி வரும்போது, சட்டம் அவர்களைத் தொட முடியாது என்ற ஒரு காரணமே தவிர, அவர்கள் சட்டத்திலே இருந்து, தண்டனையிலே இருந்து தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்ற ஒரு நிலைமையை உருவாக்க முடியாது என்பதை, நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் கேள்வி நியாயமானது. அந்தப் பட்டியலை நான் கொடுக்காமல் இல்லை, ஒரு சிலரிடம் கொடுத்தேன். அந்தப் பட்டியலை நான் கொடுத்த பிறகு, அந்த அதிகாரிகள் அங்கு செல்வதற்கு முன்பாகவே அவர்களுக்குச் செய்தி தெரிந்துவிட்டது. ஆகவேதான், அதை மேலும் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆகவே, அவர்களைக் கண்காணிக்கக் கூடியவர்களையும் உள்ளடக்கிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும். அது வந்தால், இந்த நிலைமைகள் மாற்றப்படும். முன்னாலே சொல்வார்களே 'மாமூல்' என்று அப்படிப்பட்ட ஒரு சிலரும் இன்னமும் இருக்கிறார்கள். பதவியிலும் இருக்கிறார்கள், பக்கபலமாகவும் இருக்கிறார்கள். இவர்களை எல்லாம் நீக்குவதற்கு உரிய வகையில், சட்டம் உருவாக்கப்பட வேண்டும். இந்தக் கொள்கை மக்களுக்குத் தேவை என்று நம்புகிற நாம், ஏழைகளுக்கு தேவையென்று நம்புகிற நாம், உடலைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணுகிற நாம், இவற்றையெல்லாம் உளமார ஏற்றுக்கொள்கிற நாம், ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும். இப்படிப்பட்டவர்கள் அதிலே குற்றம் புரிய தைரியம் இன்றி ஒதுக்குவதற்கு நிச்சயமாக சட்டம் வந்தால், அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்பதைவிட அவர்கள் ஒதுங்கிவிடுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். இன்று அத்தகைய சட்டம் இல்லை என்பதால் அவர்கள் துணிந்திருக்கிறார்கள். சட்டம் அவர்களையும் குற்றவாளியாக்கும் என்று இருந்தால் நிச்சயமாகத் துணிந்து இப்படிப்பட்ட காரியத்தில் இறங்க மாட்டார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவந்து உங்களுடைய திருத்தங்கள், யோசனைகள் ஆகியவற்றையெல்லாம் சேர்த்து நல்ல முறையில் செயல்படுத்தக்கூடிய வகையில், அனைத்துக் கட்சித் தலைவர்களோடும் தொடர்பு கொண்டு செயல்படுத்தக் கூடிய நிலைமையை உருவாக்குவோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

முன்பு சொல்லப்பட்ட நிலைமைப்போல் எதிர்காலத்திலே உச்சமட்டக் கமிட்டி அமைப்பதைக்கூட இந்த அரசு நிச்சயமாக விரும்புகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். சட்டத்தைப் பயன்படுத்தும்போது, அது உண்மையான நோக்கத்தோடு பயன்படுத்தப்பட வேண்டும். வேறு எந்தக் காரணத்திற்காகவும் விருப்பு வெறுப்புக்கேற்ற வகையில், பயன்படுத்தக்கூடிய சூழ்நிலை வராமல், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கொண்ட குழு, அவைகளைக் கவனிக்கக்கூடிய வகையில், அப்படி தவறு செய்தால், எடுத்துக்காட்டக்கூடிய; யோசனை சொல்லக்கூடிய குழுவாகக் கூட அமைப்பதில், இந்த அரசுக்கு ஆட்சேபணை இல்லையென்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசி கொடுப்பதில் ஊழல் என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. நான் ஒன்றைப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். எங்களால் முடிந்த அளவுக்கு அதிகாரிகளைக் கொண்டு, ஆங்காங்கே இருக்கிறவர்கள், பிரமுகர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் அல்லது பொதுவான சங்கங்களைச் சேர்ந்தவர்கள், மற்றைய ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இவர்கள் எல்லாம் இருந்து, எந்த

அளவுக்கு ஒத்துழைத்தார்களோ, அந்த அளவுக்கு அதிகாரிகள் அந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். கூடுமான வரையில் தவறுகள் நடந்துவிடக் கூடாது என்று அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டு, அமைச்சர்கள் முன்னிலையில் கொடுக்க வேண்டுமென்று கூறியதால் அந்த நிலைமை ஏற்படுத்தப்பட்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சில தவறுகள் நடந்திருக்கலாம், நடந்திருக்காது என்று நான் சொல்லவில்லை. ஆனால், வேண்டுமென்றே, யாருக்கோ கொடுக்கக்கூடாது, யாருக்கோ கொடுத்தாக வேண்டும் என்ற நோக்கத்தோடு அதிகாரிகள் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய அனுமதிக்கப்படவில்லை. அப்படிச் செய்வதற்குக் காரணமாக எங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் இருந்தாலும், நான் ஏற்கவில்லை. மீண்டும் மீண்டும் பட்டியல் புதுப்பிக்கப்பட்டு வந்து கொண்டே இருந்தது. எங்களால் ஆன அளவுக்குக் கொடுத்துக்கொண்டே வந்தோம்.

வெள்ளத்தின்போது, இடம் இன்றி மக்கள் தவித்த காலத்தில், கார்ப்பரேஷன் அதிகாரிகளுடைய பாதுகாப்பில் எங்கெங்கு தங்கியிருந்தார்களோ அவர்களுக்கெல்லாம் தேவையான அளவுக்கு வசதியான நிலைமைகளை உருவாக்கித் தந்தோம். அவர்களுக்காக அரிசி மூட்டைகளைக் கொடுக்கும்போது, அந்தந்தப் பட்டியலை வைத்துக்கொண்டு, தாய்மார்களானாலும்; ஆண்களானாலும்; அந்தந்த அரிசி மூட்டையின்மேல் அவர்களை உட்கார வைத்து, அதற்குப் பிறகு அவர்களுக்கு எடுத்துக் கொடுக்கப்பட்டது என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தவறு நேர்ந்திருந்தால்; அதனை எடுத்துக் காட்டினால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும். ஆனால், வெள்ளம் வந்தபோது குடிசைகளில் தங்க இடம் இன்றி கார்ப்பரேஷன் அதிகாரிகளுடைய பாதுகாப்பில், அவர்கள் கொடுத்த இடங்களில் தங்கியிருக்கிறவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கியபோது எடுத்த பட்டியல் அல்லாமல், புதியதாக எடுத்த பட்டியல்களையும் சேர்ந்து அவர்களுக்கும் அரிசி வழங்கப்பட்டிருக்கிறது!

அது நியாயமாக இல்லாமல், பின்னால் ஒரு தவறான காரியத்தைச் செய்ய எல்லோரையும் தூண்டிவிடும் என்பதை மனத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

தலைவர் அவர்களே,நான் அதையெல்லாம் பேசவேண்டாம் என்றுதான் கருதினேன், ஆனால்,அதையெல்லாம் பேசும்படியான நிலைமையை உருவாக்கிவிட்டதற்காக, நான் வேதனைப்படுகிறேன்! நான், அது சம்பந்தப்பட்ட இந்தப் பட்டியல்களையெல்லாம் அவர்களுடைய கட்சித் தலைவரிடத்திலே கொடுத்து விடுகிறேன்.

அவைகளைப் பரிசீலித்து, அவைகள் எப்படி நடந்திருக்கின்றன என்பதை அவர்களே முடிவு எடுத்துச் சொல்லட்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

யாரையும் வரக்கூடாது என்று நாங்கள் சொன்னதாக நிரூபித்தால், அது எந்தக் குற்றமாக இருந்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். யாரும்

கலந்து கொள்ளக் கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தால், அதைப்பற்றிச் சொன்னால், அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். எங்கெங்கோ யார் யார் அரிசி வழங்குகிறார்கள். எங்கெங்கோ யார் துணிகளை வழங்கப் போகிறார்கள் என்பதையெல்லாம் விளம்பரப்படுத்தித்தான் அந்த அமைச்சர்கள் அங்கங்கே சென்று வழங்கியிருக்கிறார்கள். அதுவும் மாலையிலே சென்று வழங்கியிருக்கிறார்கள். இது அவர்களுக்குத் தெரியாதது அல்ல, வேண்டுமென்றே அலட்சியப்படுத்துவோம் என்று நீங்கள் கருதியிருந்தால், இதுபோன்ற பொது நிகழ்ச்சிகளை வெளியிடும்போது தயவு செய்து சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், பங்குகொள்ள வரவேண்டுமென்றும் ஏதாவது மனக் கஷ்டம் ஏற்பட்டால், அதற்கு இந்த அரசு பரிகாரம் தேடத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காண்பிக்கக் கூடாது என்பதல்ல. எந்த, எந்தக் கட்சியினர் வாங்கியிருக்கிறார்கள். நேரத்தை வீணாக்க வேண்டாமென்று நான் ஏற்கெனவே சொல்லி இருக்கிறேன். யார், யார் வாங்கியிருக்கிறார்கள் என்ற பட்டியல் தரப்பட்டிருக்கிறது. அதைத்தான் சொன்னேன். இதையெல்லாம், உங்களுக்கு எல்லாம் தெரியாத ஒன்றை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞரிடம் காட்டவேண்டுமென்ற எண்ணமே எங்களுக்குக் கிடையாது என்பதையும், நீங்களும் எங்களுக்குத் துணை நிற்கக்கூடியவர்கள். தவறு இருந்தால் கண்டிக்க வேண்டியவர்கள் என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோல, ஒவ்வொன்றிலும் நாங்கள் எங்கள் கடமையைச் செய்ய, எங்களால் முடிந்த அளவுக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதையெதை எங்களால் செய்ய முடியவில்லையோ, அவைகளை எங்களால் செய்ய முடியவில்லை என்பதை நிச்சயமாக வெளியிலே சொல்லுவோம், அதிலே வெட்கப்பட எதுவுமே இல்லை.

சில நேரங்களில் ‘ரெட் டேப்பிசம்’ என்று சொல்லுகிறார்களே, அந்த ‘சிகப்பு நாடா’ முறையில், அதனால் ஏற்படும் காலதாமதம் என்ன என்பதை, எனக்கு முன்னால் இருந்தவர்கள் நன்றாக அனுபவித்திருப்பார்கள். எனவே, நான் அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். அவைகளை மாற்றி; ஒழுங்குபடுத்தி, விரைவாகக் காரியங்களை ஆற்றக்கூடிய வகையில், அமைப்புகளை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. வெகுவிரையில், அந்த மாற்றத்தை, அவர்கள் செய்து தருவார்கள்! அதை எந்த அளவிற்குப் பயன்படுத்திக் கொண்டு, காரியங்களை விரைவாக நடத்தி நாங்கள் எங்கள் பணிகளை ஒழுங்காகச் செய்ய பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்த வகையில் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் சேலத்தில் பேசிய ஒரு கருத்தைப் பற்றி இங்கே குறிப்பிடும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அன்பழகனார் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லும்பொழுது, உளியால் அவர் காரில் தாக்கப்பட்டு, அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய செய்தி வருகிறபொழுது, ஏன் அறிக்கை விடவில்லை என்ற குறையை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சேலத்தில் நான் அதைப்பற்றி மட்டும் குறிப்பிட்டிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை, பத்திரிகை ஏடுகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற நண்பர்கள் ஒரு சிலவற்றை அதில் மறைத்து விட்டார்கள். அது எனக்குச் செய்யும் நன்மை என்று கருதுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இதைப் போன்றவைகளை ஏன் குறிப்பிடுவதில்லை என்று எனக்குத் தெரியவில்லை!

தலைவரவர்களே, நான் எந்தெந்த வகைகளிலே தாக்கப்பட்டவன், எந்த அளவிற்கு அந்த வேதனையைத் தெரிந்தவன் என்ற அந்த உரிமையோடு, என்னால் பேச முடியும். யாருக்கு என்ன ஆபத்து வந்தாலும் அதைப்பற்றி நான் என்ன நினைப்பேன் என்பது ஒவ்வொருவருக்கும் தெரியும்.

நான் அமெரிக்காவில் இருக்கும்பொழுதுகூட, என் நண்பர் ஒருவரிடத்தில் சொல்லி, அவருடைய நண்பரிடம் இதைச் சொல்லுங்கள் என்று நான் சொல்லியதை அந்த நண்பர் நிச்சயமாகப் புரிந்து கொண்டிருப்பார் என்று நான் சொல்லும்பொழுது, இவைகளையெல்லாம் எடுத்து வைக்கும் நேரத்தில், கொள்கை வேறுபாடு இல்லை என்ற நிலைமையிருந்தாலும், தொண்டர்களிடையே கட்சி வேறுபாடு என்ற நிலைமைகள் ஏற்பட்டு விட்டன என்பதையும், சிலநேரங்களில் கருத்துகளிலேகூட நடைமுறையிலும் நாம் வேறுபட்டிருக்கிறோம் என்ற நிலைமைகள் சிலருக்கு ஏற்பட்டு இருந்தாலும்கூட, ஒரு உயிரை அழிப்பதன் மூலம் ஒரு கொள்கையை அழித்துவிட முடியுமா என்றால், நிச்சயமாக முடியாது என்பதை நான் சேலத்தில் குறிப்பிட்டு அண்ணா சொல்லியிருப்பதையும் நான் சொல்லியிருக்கிறேன் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். “ஒரு கத்தியை வைத்துக்கொண்டு ஆயிரம் ஆட்களைக் கொன்றுவிட முடியும்! ஆனால், ஆயிரம் கத்திகளை வைத்துக்கொண்டு ஒரு மனிதனுடைய உள்ளத்திலே இருக்கும் கொள்கையை மாற்றிவிட முடியாது!” என்று அமரர் அண்ணா சொல்லியிருக்கிறார்கள் என்பதையும், அதே சேலம் கூட்டத்தில் பேசியிருக்கிறேன். இதுவும் வெளிவரவில்லை. இதைப்பற்றியும், பேராசிரியரின் நண்பர் அவரிடம் என்ன சொல்லியிருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை! இதைக்கூட மாற்றிச் சொல்லியிருக்கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியவில்லை!

ஒன்றை நான் சொல்கிறேன், அன்பு உணர்ச்சி எல்லோர்க்கும் இருக்க வேண்டுமென்பதில் நான் பின் தங்கியவன் அல்லன் என்பதையும், இன்னொருவரை அழித்துவிட்டால்தான் நாம் வாழ முடியும் என்ற கொள்கைக்கு நான் சொந்தக்காரன்

அல்லன்; என்னுடைய கட்சியும், அந்தக் கொள்கைக்குச் சொந்தம் அல்ல, என்ற உத்தரவாதத்தை மட்டும் நான் துணிவோடு சொல்ல விரும்புகிறேன்.

ஆனால், ஆங்காங்கே சில பிரச்சினைகள் எழும்பொழுது கருத்துக்களைச் சொல்ல வேண்டிய கட்டத்திற்கு ஒவ்வொருவரும் ஆளாகிவிடுகிறார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சி என்று சொன்னாலும், அரசியல் சூழ்நிலைக்கு நண்பர்கள் பொறுப்பாக இருந்தாலும் நாமும் அந்த உணர்ச்சிவசப்பட்ட நிலைமைக்கு ஆளாகிவிடுகிறோம். அந்த வகையில் சில பிரச்சினைகளை நாம் சந்திக்கும்பொழுது வார்த்தைகள் வரலாம், ஆனால் கொலை முயற்சி என்பதை நாம் எப்பொழுதும் விரும்புகிறவர்கள் அல்ல, அதிலும் நான் அதை அனுபவித்தவன், பிறருக்கு அந்தத் துன்பம் வரக்கூடாது என்பதிலே அக்கறை உள்ளவனாக இருப்பேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடுஇன்னொன்றையும்நான்குறிப்பிடவேண்டும்.இன்றையதினம்காலையில் கூட, மாண்புமிகு உறுப்பினர், யார் என்று நான் குறிப்பிட வேண்டாம், அவருக்கே தெரியும், கோபாலபுரத்திற்குப் போவோம் என்று சொன்னார்கள். பேசிய பேச்சு நாடாவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது, தேவையென்றால் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நான் பேசிய பேச்சு இதுதான். நான் பேசிய பொதுக் கூட்டங்களில் அங்கங்கே அமளி ஏற்படுத்தப்பட்டது. நான் பொதுமக்களுக்கும் கட்சித் தோழர்களுக்கும் சொன்னேன். தயவுசெய்து நீங்கள் அமைதியாக இருங்கள், யார் அந்தக் குழப்பத்தை எழுப்புகிறார்கள் என்று மக்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில், நீங்கள் அமைதியாக இருங்கள், கல்லையோ, மண்ணையோ எறிபவர்கள் யார் என்பதை மக்களுக்குத் தெரியப்படுத்த, நீங்கள் அமைதியாக இருங்கள். லியாகத் அலிகானை சுட்டுக் கொலை செய்தவனைப் பொதுமக்கள், சுட்டுக் கொலை செய்தவன் யார் என்று அடையாளம் தெரியாத அளவுக்கு அடித்துவிட்டார்கள். நீங்கள் அதைச் செய்துவிடுவீர்களென்றால், சாட்சிக்கு ஆள் இருக்காது. இதைச் செய்வதிலே நமக்கு இலாபம் இராது, அப்படி நடப்பது நம்முடைய கொள்கையும் அல்ல; என்று சொன்னேன். இந்தப் பேச்சுக்கும் அரை மணி நேரத்திற்குப் பிறகு, எங்கு போனாலும் மக்களே தூண்டினார்கள் என்றால், இப்படியே நீங்கள் அனைவரும் அவரைச் சந்திக்க வேண்டுமென்று போவீர்களென்றால், எத்தனை போலீசார் போவார்கள், எத்தனை போலீசார் வந்து எத்தனைப் பேரைச் சுட்டுக் கொல்ல வேண்டியிருக்கும் என்று சொன்னேன். அங்கொன்றும் இங்கொன்றும் இரண்டு வார்த்தைகளை எடுத்துக் கொண்டு, எதற்காகப் பேசினேன் என்பதைப் பற்றி, என்னை நன்றாகத் தெரிந்திருந்தும், கொஞ்சங்கூட சிந்திக்காமல், இரண்டு வார்த்தைகளை மட்டும் சேர்க்கும்போது 'லார்ட் அமெரி' மகாத்மா காந்தியைப் பற்றி தெரிவித்த கருத்துக்களைப் போல, இது தவறான கருத்துக்களெல்லாம் உருவாவதற்கு காரணமாகி விடுகிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். சந்தேகம் இருந்தால் பேசித் தீர்த்துக் கொள்வோம்! நான்

“நமக்குள்ளே இருக்கும் காழ்ப்புணர்ச்சி அல்லது கட்சி வேறுபாடு இவைகளை மறந்து, மாணவர்களின் நலன் கருதி, நாம் எல்லோரும் உட்கார்ந்து பேசி, இதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடித்து எல்லோருக்கும் பொதுவாக மாணவர்கள் கல்வி கற்பிக்க வேண்டிய நேரத்தில், அவர்கள் நன்றாகப் படித்துத் தேறவேண்டிய நேரத்தில், படித்துத் தேற வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்கிற ஒரு நல்ல நிலைமையை நான் உருவாக்கித் தருவதற்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உட்கார்ந்து பேசுவோம், முடிவு எடுப்போம், அதை எல்லோரும் பின்பற்றுவோம், அதற்கு உங்களுடைய, எல்லோருடைய ஒத்துழைப்பையும் நான் வரவேற்கிறேன்.”

தவறு செய்திருந்தால், பேராசிரியர் சொன்னதைப் போல் திருந்தத் தயார். மன்னிப்பு கேட்டுக்கொள்ளவும் தயார். ஆனால், சொல்லாத ஒன்றை, பேசத் தெரிந்தவர்கள், நாலும் படித்தவர்கள், விவரம் தெரிந்தவர்கள், மற்றவர்கள் சொன்னதை வைத்து ஒன்றுபடுத்துவது சரியாக இருக்காது!

இந்த அளவில் ஆளுநர் உரையில் பேச வாய்ப்பினை தந்த நேரத்தில் ஒட்டுமொத்தமாக, இன்னொரு கொள்கையை நான் சொல்லியாக வேண்டும்! மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள், மாணவர்களைக் கல்லூரிக்குள் புகுந்து மக்கள் தாக்கினார்கள் என்கிற பெயரில், ஆளுங்கட்சியின் தூண்டுதல் அல்லது ஆளுங்கட்சியினர் சிலர் ரவுடிகளைக் கையிலே வைத்துக்கொண்டு அங்கே போய் நடத்துகிற தாக்குதல் என்றெல்லாம் சொல்கிறார்கள், நான் இங்கே பணிவோடு ஒரு நிலைமையை நினைவுபடுத்த விரும்புகிறேன். இதைச் சொல்வதால் முன்பு நடந்தது, இப்பொழுதும் நடப்பது நியாயம்தான் என்கிற அளவில், அந்தக் கருத்தைச் சொல்கிறேன் என்று நினைத்து விடக்கூடாது. மக்கள் பேருந்தில் பயணம் செய்கிறார்கள். அவர்களுக்கும், மாணவர்கள் பிரச்சினைக்கும், காவல்துறைக்கும் சம்பந்தம் கிடையாது. தொழிலாளர் பிரச்சினைக்கும் மாணவர்கள் பிரச்சினைக்கும் இடையில் என்று சொன்னால், இருவருக்குமிடையே ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அது பொதுப் பிரச்சினையாக மாறி குழப்பம் ஆகி விட்டது. அது வேறு விஷயம். ஆனால், ஒன்றும் அறியாத பொதுமக்களை, பேருந்திலே செல்லும்போது கல் எறிவது, தாக்குவது என்று வந்துவிட்டால், அது முறையாகிவிடுமானால், அதற்கு மாணவர்கள் ஆட்படுவதாக இருந்தால்கூட, பெற்றோர்கள், உடன்பிறப்புகள், அண்ணன்மார்கள் இந்த நிலைமைகளையெல்லாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டாமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

இதற்காக, முன்னொருமுறை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இல்லாத நேரத்தில், நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்த நேரத்தில், சென்னையில் நடந்ததை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். சென்னையில் ஒரு கல்லூரியில் மாணவர்கள் வெளியே பஸ்களையெல்லாம் தாக்கி குழப்பங்கள் ஏற்பட்டு, பிரச்சினை விபரீதம் அடைந்தபொழுது, பக்கத்திலே குடிசையிலே, மற்ற இடங்களிலே இருந்த பொதுமக்கள் வந்து தாக்கினார்கள். போலீசார் குறுக்கிட வேண்டி வந்தது என்பதையும் இது ஆளுங்கட்சியாக இருக்கும்போது கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக செய்யப்படுவது என்பதையும், அது ஒரு நியாயமான, பொதுவான மரபாகி விடுமோ என்றும் ஐயப்படுகிறேன். அந்தச் சந்தேகத்தை நாம் மாற்றியாக வேண்டும்.

அந்த நிலைமைக்கு, அன்று நான் எப்படி தி.மு. கழகத்தில் இருந்தபோது பொறுப்பு இல்லையோ, அதே போல் இன்றும் சொல்கிறேன், அந்த நிலைமைக்கு நான் பொறுப்பு இல்லை. ஆனால் மாணவர்களுக்கு இடையே சச்சரவுகளை உருவாக்குவதற்கும், ஒரு கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், இன்னொரு கல்லூரிக்குள் சென்று அவர்களை அடிப்பதும், அவர்களைப் பழி வாங்குவதும், அதிலே சிலரைப் பிடித்து வைக்கும் நிலைமை உருவாவதும், 100க்கும் மேற்பட்டவர்களை, காவல்துறையினர் குறுக்கிட்டுத் தடுக்கும்போது, விபரீதங்கள் நடைபெறுவது இவைகள் எல்லாம், அதற்கு மேல் நான் சொல்லவிரும்பவில்லை, நாட்டுக்கு நல்லதல்ல என்பதை, உங்களைப் போலவே நானும் நினைக்கிறேன், என்பதை உங்கள் மனதில் பதிய வைக்க விரும்புகிறேன்.

இதற்கு ஒரே ஒரு வழி இருக்கிறது. முன்பொரு முறை, மாணவர்கள், பெற்றோர்கள், பிரமுகர்கள், கல்லூரி ஆசிரியர்கள் ஆகியோரை வைத்துப் பேசி, ஒரு அமைப்பை உருவாக்கி, அதன் மூலம் அவர்களுக்கு வேண்டியவற்றை, நிறைவேற்றுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தந்தேன். கொஞ்ச நாளைக்கு அந்த அமைப்பு இருந்தது. மீண்டும் குழப்பம் கிளம்பியிருக்கிறது. நான் அண்மையில் சொன்னது போல், இதற்கு முன்னால், நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராக இருந்தபோது என்ன சொன்னேனோ, அதையே இப்போதும் சொல்கிறேன், மாணவர்கள் அரசியல் கட்சிகளின் பிடிப்பில் இருந்து விடுபட வேண்டும்! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், அந்த கட்சியின் பொறுப்பில் இருக்கிற தமிழக அரசின் சார்பில், நான் சொல்லிக்கொள்கிறேன். அந்தக் கட்சி அந்தப் பணியை செய்யக்கூடாது என்று தடுக்க, அந்தப் பணியில் இருந்து விடுபட தயாராக இருக்கிறது. அனைத்துக் கட்சி நண்பர்களும் பெரியவர்களும் அப்படி ஒப்புக்கொள்ள முன்வந்தார்கள் என்றால், அரசியல் கட்சி அங்கே நுழையாமல், அவர்கள் தங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு, படித்துக்கொண்டு, அவர்களுக்கு பிரச்சினை ஏதேனும் வருகிறபோது, அதற்கு அரசியல் தலைவர்களின் துணையைக் கொண்டு, அந்த நிலைமைகளை எப்படி சமாளிக்கலாம் என்கிற வகையில், அவர்கள் முன் வந்தால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருமா என்பதில் எனக்கு ஐயம் உண்டு, இதற்கு என்னைப் போன்றவர்கள், அரசியல்

தலைவர்கள் ஏதாவது காரணமாக, தடையாக இருக்கிறார்களோ என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, நான் கேட்டுக் கொள்கிறேன், நமக்குள்ளே இருக்கும் காழ்ப்புணர்ச்சி அல்லது கட்சி வேறுபாடு இவைகளை மறந்து, மாணவர்களின் நலன் கருதி, நாம் எல்லோரும் உட்கார்ந்து பேசி, இதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடித்து எல்லோருக்கும் பொதுவாக மாணவர்கள் கல்வி கற்பிக்க வேண்டிய நேரத்தில்; அவர்கள் நன்றாகப் படித்து தேறவேண்டிய நேரத்தில்; படித்துத் தேற வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்கிற ஒரு நல்ல நிலைமையை நான் உருவாக்கித் தருவதற்கு, நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உட்கார்ந்து பேசுவோம், முடிவு எடுப்போம், அதை எல்லோரும் பின்பற்றுவோம், அதற்கு உங்களுடைய, எல்லோருடைய ஒத்துழைப்பையும் நான் வரவேற்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முருகையன் அவர்களுடைய கொலையைப் பற்றி, இங்கே ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அவரைக் கொலை செய்தது ஒருவரா, பலரா என்பதைச் சொல்ல வேண்டும், அதை முதலில் நான் தெரிவித்தாக வேண்டும் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் என்ற பொறுப்பில், நான் இங்கே உட்கார்ந்து கொண்டு ஒருவர் தான் அல்லது பலர் தான் என்பது எப்படி விசாரணைக்கு முன், சாட்சிகள் கொடுப்பதற்கு முன், ஆதாரங்கள், அடையாளங்கள் வருவதற்கு முன், எப்படிச் சொல்ல முடியும் ? என்பதை அவர்கள் தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். நான் எப்படிச் சொல்ல முடியும் ? உண்மையிலேயே, யாராவது ஒருவர் அல்லாமல் பல பேர் செய்து இருந்து, அதை மாற்ற முயற்சித்து, அந்த உண்மை வழக்குமன்றத்தில் நிரூபிக்கப்படும்.

இருந்தாலும் சிலர், நான் வருத்தம் தெரிவிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அலட்சியமாக இருக்கிறேன் என்று சொல்கிறார்கள். அதிகாரிகள் தவறு செய்திருந்தால், நிச்சயமாக அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். பத்திரிகைகளில் இப்படி செய்திகள் வரும்போது, ஒவ்வொருவருக்கும் சில சங்கடங்கள் வரும். அதையெல்லாம் உணர்ந்துள்ள அரசு தகுந்த முறையில் விசாரணை செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும். இப்படிப்பட்ட நேரத்தில் என்ன நடக்கிறது என்று பார்த்து அவசரப்படாமல், உண்மையிலேயே ஒருவர் தவறு செய்திருக்கிறார் என்று தெரிந்தால், மேற்கொண்டு அரசையோ அல்லது அதிகாரிகளையோ கலந்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசுக்கு யோசனை சொல்லி, நடவடிக்கை எடுக்க உறுப்பினர்கள் உதவியாக இருந்தால், எந்தச் சந்தேகமும் வராமல் பார்த்துக் கொள்ள முடியும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளை உருவாக்கிக்கொள்வது, இந்த முறையை ஏற்படுத்திக்கொள்வது, அப்படித் தொடர்பு வைத்துக்கொள்வது நல்லது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களது வீட்டிலே

சோடா பாட்டில் எறிந்தது பற்றிக் குறிப்பிட்டார்கள். இந்தச் சமயத்திலே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் உசிலம்பட்டியிலே பேசிக்கொண்டிருந்தபோது, என்மீது கற்கள் வீசி எறியப்பட்டது. அப்போது என்னைக் காப்பாற்ற வந்த நண்பர்கள் அந்த அடியினை வாங்கியதை நான் நினைத்துப் பார்க்கும்போது, இந்த நிலைமையை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறது. அப்படிப்பட்ட வன்முறையிலே இறங்குபவர்கள் இந்த சமுதாயத்தினுடைய பெயரைக் கெடுப்பவர்கள். அவர்கள் அமைதியைக் கெடுக்கின்ற கொடுமைக்காரர்கள் என்கின்ற வகையில், அவர்கள் மீது நாம் நடவடிக்கை எடுப்பது நமது கடமை என்பதையும், அந்த நடவடிக்கை கட்டாயமாக எடுக்கப்படும் என்பதையும், மீண்டும் இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்!

தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பி.ஏ.பி.எல். படித்தவராக இருக்கலாம். ஆனால், நான் அவரை விட வயது அதிகமானவன். இங்கே நான் சொல்லாததை சொன்னதாகச் சொல்லி, அதனை எப்படியாவது குறிப்பேட்டிலே ஏற்றிவிட வேண்டும் என்று முயல்வது, நிச்சயமாக நடைபெறாது என்றும், அவர்கள் அப்படிப் பேச வேண்டாம் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் இன்னொன்றை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்களுடைய இதயம் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள். அதை எப்படியாவது எடுத்து பாதுகாக்க வேண்டும் என்ற உண்மையை வெளியிட்டேன். அதற்குப் பிறகு என்ன நேர்ந்தது என்பது தெரியும். ஆனால் இப்போது அந்த இதயம் இருக்கிறது என்பதும், அதுவும் இந்த 'செக்கரட்டேரியட்டி'லேயே இருக்கிறது என்பதையும், நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அது விரைவிலே ஈரோட்டிலே இருக்கின்ற அவருடைய நினைவாலயத்திலே வைக்கப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிலை உருவாவதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கும், இதை முயற்சி செய்து கொண்டுவருவதற்கு உதவி செய்த நண்பர்களுக்கும், நான் இந்த நேரத்திலே எனது பாராட்டைத்தெரிவித்துக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன். 'அய்யா' அவர்களுடைய இதயம் மட்டுமல்ல, எந்தெந்த உறுப்புகள் கிடைக்குமோ அத்தனையும் கொண்டு வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவரவர்களே, உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் நல்ல யோசனை சொன்னதற்காக, அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை விசாரிப்பதற்கு நான் அதிகாரிகளை ஏற்பாடு செய்திருக்கிறேன். அந்த அதிகாரிகள் விசாரிப்பார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன். அதற்கான 'ஃபோட்டோ ஸ்டெட்' காப்பிகள் எல்லாம் கூட இருக்கின்றன.

ஆகவே, அதை நான் இங்கே சொல்லும்போது நாம் எல்லோரும் நினைத்து, நினைத்து, வணங்கி பாராட்டக்கூடிய ஐயா அவர்களின் இதயம் அவர்கள் இறந்து விட்டாலும், இந்தத் தமிழகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக இருக்கவேண்டும்

என்பதற்காக, அதை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்பதற்காக, மருத்துவர்களின் யோசனைகளைக் கேட்டு, அதை எப்படியாவது காத்து வைக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை. எதிர்கட்சியில் இருந்தாலும் அல்லது வேறு எங்கிருந்தாலும், நிபுணர்கள் யோசனைகள் சொன்னால், அது மிகவும் உதவியாக இருக்கும் என்று சொல்லி– நிச்சயமாக இரண்டு டாக்டர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். ஒருவர் அல்ல, 'தினத்தந்தி'யில் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தக் குறிப்புகளை வைத்துக் கொண்டு செய்யலாம். ஆகவே, இதைப் பாதுகாத்துத் தந்தவர்களுக்கு நன்றி கூறுவது மட்டுமல்லாமல், தவறான செய்தி வெளியிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, அவர்கள் எப்படி தவறு செய்தார்கள், எதனால் செய்தார்கள், யார் தவறான செய்தியைக் கொடுத்தார்கள் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள நிச்சயமாக அதிகாரிகளைக் கொண்டு ஒரு விசாரணை வைக்கப்படும்.

சி.எம்.சி. ஆஸ்பத்திரியில் யார் அந்த நேரத்தில் அறுவை செய்யும் பொறுப்பில் இருந்தார்களோ, அந்தப் புத்தகத்தில் இருக்கிற குறிப்புகள் எல்லாம் அப்படியே இருந்திருக்கிறது. அந்தப் புத்தகமும் கிடைத்திருக்கிறது. அந்தப் புத்தகத்தில் குறிப்புகள் இருக்கின்றன. எடுத்து வைத்திருக்கிறார்கள். நவம்பரில் விபரம் கிடைத்திருக்கிறது. அதைக் கொண்டு வந்த சேர்த்து எங்கே வைப்பது என்று முடிவு செய்வதுவரை பொறுத்திருந்தேன். பல உறுப்பினர்கள் பல பிரச்சினைகளை எழுப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்னும் ஏதாவது சந்தேகங்கள் இருக்குமானால், அவற்றிற்கெல்லாம் உள்ளபடியாக விரிவாக பதில் சொல்லவில்லையென்றால், நான் வேண்டுமென்றே அவைகளை அலட்சியப்படுத்தி விட்டதாக எண்ணாமல் மணி இப்போது 6.20 ஆகிறது, முன்பே ஐந்து மணி என்று சொல்லும்போது, பலருக்கு வேலைகள், பொறுப்புகள் இருப்பதால், முன்னாலேயே நடத்த வேண்டும் என்று சொல்லும் நிலை ஏற்பட்டது. அந்த நிலையிருந்தும், அவர்கள் ஒத்துழைத்ததற்காக, எதிர்க்கட்சித்தலைவர் அவர்களுக்கும், மற்ற கட்சித் தலைவர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி, பாராட்டி, வாழ்த்த விரும்புகிறேன். எனது விளக்கத்தை முழு விளக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது, எந்தெந்த புள்ளி விவரங்களை நான் தர வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களோ, அந்தப் புள்ளி விவரங்களை என்னிடம் இருக்கிற அளவில், நான் கூற முன்வருவேன் என்று கூறி யாராவது லஞ்சம் பெற்றவர்கள் என் கட்சியில் இருப்பார்கள் என்றால், நான் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறேன். தயவுசெய்து, இங்கே என்னிடம் நீங்கள் சொல்ல வேண்டாம்! அப்படி இங்கே சொன்னாலும் எனக்குக் கவலையில்லை! இங்கே சொல்லுங்கள், அல்லது தனியாகச் சொல்லுங்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று கூறி, ஆளுநர் அவர்களது உரையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

16.02.1979 அன்று மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை.



எங்களது ஏற்றமிகு தொழிற் கொள்கை !

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, தொழில், தொழில் வளர்ச்சிப் பற்றிய மானியங்களின் மீது, மாமன்ற உறுப்பினர்கள் அவரவர்களுக்குத் தேவையான, அவசியமான ஒரு தனி இலாபத்தைப் பெறுவதற்காக என்று இல்லாமல், ஒட்டு மொத்தமாக தமிழகம் முழுவதற்கும், என்ன என்ன நன்மைகள் வேண்டுமென்கிற நோக்கத்தோடு, இங்கே பல நல்ல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

தமிழக அரசு தொழிலை எப்படி அமைப்பது, வளர்ப்பது, காப்பது என்கிற நிலையில், இன்னொரு நோக்கம் எந்த வகையிலே அமைகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது முதற்கடமை என்று நான் கருதுகிறேன். தொழிலைப் பொறுத்த வகையில், வெவ்வேறு விதமான தொழிலாக நாம் அதை பிரித்துப் பார்க்க வேண்டும். கனரகத் தொழில்கள் என்கிற வகையில் ஒன்று பிரிக்கப்பட்டு, பிற்பட்ட கிராமப்புற தொழில் என்ற அளவிலே, ஒரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, இந்த இரண்டு பிரிவுகள் இப்பொழுது வேலை செய்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மத்தியிலே, தேர்தலிலே வாக்குறுதி கொடுத்தபோது, நாங்கள் சொன்ன கருத்துக்களிலே முக்கியமானவை, பெரிய தொழில்கள் வேண்டும், காப்பாற்றப்பட வேண்டும்; ஆனால், அதே நேரத்தில் கிராமப்புறத்திலே இருக்கிற ரூ.2/–, ரூ.3/– கூட சம்பாதிக்க முடியாத நிலைமையில் இருக்கிற ஏழை, உழைக்கும் வர்க்கத்திற்கு, முதலில் வாய்ப்பு கொடுத்தாக வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க வேண்டுமென்கிற கருத்தை நாங்கள் வலியுறுத்திச் சொல்லி, மக்கள் நம்பிக்கை ஓட்டை பெற்று, இன்றைய தினம் ஆட்சியிலே இருக்கின்றோம். ஒரு அரசினுடைய கொள்கை, இன்னொரு அரசு வகுத்து விட்டுப்போன கொள்கைக்கு மாறாக இருந்து தீர வேண்டுமென்கிற கட்டாயமும் இல்லை; அதைப் போலவே, அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டுமென்ற கட்டாயமும், யாராலும் உருவாக்க முடியாது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். ஆனால், முன்னாலே இருந்தவர்கள் தொடங்கி வைத்தவைகளை முடித்தாக வேண்டும். அதைப் போல, புதிதாக, யார், யாருக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமோ, அதைச் செய்வதற்குத் திட்டமிட்டு நிறைவேற்றியாக வேண்டும். இந்த மாமன்றத்தில், பல்வேறு நிலைமைகளில் வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம், அதனை நாங்கள் சுட்டிக்காட்ட மறந்ததில்லை! ஆனால், அனுபவம் பெற்றவர்கள், தொழிலைப் பற்றித் தெரிந்தவர்கள், தொழிலாளர்களைப் பற்றி தெரிந்தவர்கள், முழுமையான அடிப்படை காரணங்களை அவர்கள் சரிவரத்

தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை இழந்துவிட்ட நிலையில்தான், அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள் என்று கூட நான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த நாட்டில், வசதி படைத்தவர்கள் கோடிக்கணக்காக முதலீடு செய்து, ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைக் கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை நான் முதலில் மகிழ்ச்சியோடு குறிப்பிடுகின்றேன். நாங்கள் பதவியேற்ற முதல் ஆண்டில், எந்தத் தொழிலையும் தொடங்குவதற்கு எந்த வசதி படைத்தவர்களும் தயாராக இருக்கவில்லை என்பதையும், நான் சுட்டிக்காட்டியாக வேண்டும். அதற்குப் பிறகு, அண்மைக் காலத்தில், அவர்களுக்கு ஏதோ ஒரு நம்பிக்கை, ஒரு உறுதி ஏற்பட்ட பிறகு, என்னைச் சந்திக்கின்ற வாய்ப்பு அவர்களுக்கும் கிடைத்தது, எனக்கும் கிடைத்தது. அதை நாங்கள் சரிவரப் பயன்படுத்திக்கொண்டோம் என்பதையும், இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். அப்பொழுது, அவர்கள் குறிப்பிட்டவைகள் எல்லாம், எங்களுடைய மூலதனத்திற்குப் பாதுகாப்பு வேண்டுமென்பது முதல் கோரிக்கையாகவும், நாங்கள் எந்தெந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ, அவைகளுக்கு அனுமதி கிடைக்க பல மாதங்கள் ஆகின்ற நிலைமை இருக்கக்கூடாது என்பதும், அவர்களுடைய முக்கியமான இரு கோரிக்கைகளாக, எண்ணங்களாக இருந்தன. முதல் ஆண்டு முடிந்து, இரண்டு ஆண்டு ஆன பிறகு, அல்லது, 5, 6, 7 மாதங்கள் கழிந்த பிறகு, இன்றையதினம் அந்த நம்பிக்கையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்றார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை, இப்பொழுது நான் சொல்ல முடியாவிட்டாலும், அல்லது சொல்ல விரும்பாவிட்டாலும் ஏதோ, தமிழகத்தில் நாம் முதலீடு செய்து தொழிலைத் துவங்கினோமானால், நிச்சயமாக அது ஒழுங்காக, சரியாக நடைபெறும் என்ற நம்பிக்கை அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டும் நிச்சயமான உண்மை என்பதை மட்டும், நான் அழுத்தமாகச் சொல்கின்றேன்.

அதை அவர்கள் சொல்லியபோது எனக்கு நினைவுபடுத்துகிற வகையில் சில காரியங்களை எடுத்துக்காட்டிய போதும், நான் அவர்களுக்குச் சொன்னது ஒன்றுதான், நீங்கள், முதலில் இங்கே நல்ல தொழிற்சாலையைத் தொடங்க ஆதார கட்டமாக அமைத்து, அதை நன்கு செயல்படும் விதத்தில் உழைத்த பிறகு, அந்த தொழிற்சாலை மூடப்பட்டு, உங்கள் மூலதனம் உங்களுக்கு திரும்ப வராமல் போகின்ற நிலைமை ஏற்படாது என்பதை நான் அவர்களுக்கு எடுத்துக்காட்டி, உறுதியும் கொடுத்தேன். அந்த அடிப்படையில், அந்த நம்பிக்கையில், அண்மைக் காலங்களில் பல்வேறு பிரச்சினை தொழிலாளர்கள் சார்பிலும், ஆலை முதலாளிகள், அதிபர்கள் இடையே பிரச்சினைகள் அதிகமாக, மிக அதிகமாக, நாம் அஞ்சும்படியாக மூண்டிருந்தாலும் கூட, இறுதியில் சுமூகமாக ஒரு நல்ல முறையில் செயல்படுகின்ற நோக்கம் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கும், அதிபர்களுக்கும் இருந்ததின் விளைவாக, எதிர்பார்த்ததை விட அதிகமான நன்மைகளையெல்லாம் தமிழக அரசும், தமிழக மக்களும் பெற்றார்கள்

என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத் தான் அவர்கள் பேச்சு எனக்கு எடுத்துக்காட்டியது.

இந்த அரசு, எப்படிப்பட்ட கொள்கையைப் பின்பற்றும் என்று, அவர்களுக்குப் புரியாமல் இருந்த காலம் அது! ஒன்று, எல்லாப் பெரும் தொழில்களும், கனரகத் தொழில்கள் அனைத்தும், வேறுபட்ட பல தொழில்களிலும் முதலீடு செய்யப்பட்ட பிறகு, வளர்ந்து வருகிற நிருவாகத்தில், அதை அப்படியே தேசிய உடைமையாக ஆக்கிக்கொள்வார்களோ என்கிற அச்சம், அவர்களுக்கு முதலில் இருந்தது என்பதை நான் புரிந்துகொண்டேன்! நான் ஒரு முறை இந்த மாமன்றத்திலே பேசும்போது வேறு பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், தொழிலாளர்களுக்கு போனஸ் போன்றவைகளை கொடுக்கின்றபோது, தனியார் துறையில் கொடுக்கின்ற 8.3 சதவீதம் போனஸை அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஆனால், அரசு நடத்துகிற நிறுவனங்களில் ஒப்புக்கொள்வதில்லை. தொழிலாளர்கள் அதை ஏற்றுக்கொள்வதில்லை. அது நஷ்டத்தில் இருந்தாலும் கூட, அவர்கள் அதிகமாக கேட்கிறார்கள் என்ற நிலைமை இருந்தது. அதை நான் சுட்டிக்காட்டி, அந்த விஷயத்தில் தேசிய உடைமையாக்குவது தேவைதானா என்று சொன்னதை, அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் பிரச்சினை என்று வரும்போது, அவர்களுடைய மொத்தத் தீர்மானத்தையும், அதை ஒழுங்காகச் செய்து, அவர்களையெல்லாம் வழி நடத்திச் செல்ல சில நல்ல சங்கங்கள் இருந்தேயாக வேண்டும் என்ற கொள்கை இருக்கிறது. தொழில் அதிபர்களும், முதலாளிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும் என்னைச் சந்தித்துப் பேசுகிறபோது, "அவசரப்பட்டு எந்தவிதமான முடிவையும் எடுக்க வேண்டாம்; முடிவுகளை எடுப்பதற்கு முன், எங்களையெல்லாம் கொஞ்சம் கலந்து கொள்ளுங்கள்; பிரச்சினைகளை சுமூகமாகவே தீர்த்துக்கொண்டு விடுகிறோம்!" என்று சொல்லியிருக்கிறார்கள்.

தொழிற்சங்கங்களிலும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று விடுகின்றன. தொழிலாளர்கள் போராடுகிறார்கள் என்றால், அவர்களுடைய தேவையின் விளைவே அவர்களை போராடச் செய்கிறது என்பது ஒன்று, இன்னொன்று, தம் சங்கங்களை யூனியன்கள் என்று சொல்லப்படுகிற தொழிலாளர்கள் அமைப்புகளைப் புதிதாக துவங்குவதற்கும், அப்படித் துவங்கியவர்கள் பழைய சங்கங்களில் இருக்கின்ற வேலைகளைச் செய்கிறவர்கள், எந்த அளவிற்கு அதிபர்களிடம் இருந்து அதிகமாகப் பணம் வாங்கிக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களோ, அதைவிட அதிகமாக நாங்கள் வாங்கிக் கொடுக்கிறோம் என்கிற நிலைமையில், தொழிலாளர்களுக்கு அறிவினை ஊட்டி, அதன் விளைவாக, பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. நல்ல தொழிற்சங்கங்கள் இல்லை என்றால், புதிய தொழிற்சங்கங்கள் தேவை என்பதையும், நல்ல தொழிற்சங்கம் இருந்து புதிய தொழிற்சங்கம் வந்தால், அது அந்த நல்ல தொழிற்சங்கத்திற்கு பாதகம் விளைவிக்கிறது என்கிற பிரச்சினைகள் மக்கள்

“வேலையில்லா திண்டாட்டத்தை நீக்க வேண்டுமென்கிற கருத்தை நாங்கள் வலியுறுத்திச் சொல்லி, மக்கள் நம்பிக்கை ஓட்டை பெற்று, இன்றைய தினம் ஆட்சியிலே இருக்கின்றோம். ஒரு அரசினுடைய கொள்கை, இன்னொரு அரசு வகுத்து விட்டுப்போன கொள்கைக்கு மாறாக இருந்து தீர வேண்டுமென்கிற கட்டாயமும் இல்லை; அதைப் போலவே, அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டுமென்ற கட்டாயமும் யாராலும் உருவாக்க முடியாது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.”

மத்தியிலே, குறிப்பாக, தொழில் அதிபர்கள், முதலாளிகள் மத்தியில் பெரும் அச்சத்தையும், அதிருப்தியையும் விளைவித்திருக்கிறது. தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்திற்காக நாம் பணத்தை முதலீட்டுக் கொள்கையில் செலவழித்துவிட்டு, அந்தக் கொள்கையைக் காப்பாற்றுவதற்காக, நாம் அந்தப் பணத்தைச் செலவிட வேண்டி வருமோ, உழைக்க வேண்டுமோ என்ற சந்தேகத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதையும், நான் இங்கே சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஆனால், அண்மையில் நடந்து இருக்கின்ற சில போராட்டங்கள், பிரச்சினைகள் அவைகள் எல்லாம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை, அவர்களுடைய எண்ணத்திற்கும் கொள்கைக்கும் கூட, மாறாக இருக்கிறது என்றாலும், உழைக்கும் வர்க்கம் பட்டினி கிடந்து தவிக்கக்கூடாது என்ற நோக்கத்துடன், தொழிலாளர்கள் நசிந்து விட்டால், அதற்குப் பிறகு, எந்தத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, வேலை செய்யச் சொல்வது என்ற பிரச்சினையை உணர்ந்த பெரியவர்கள், தொழிலாளர்கள், தலைவர்கள் விட்டுக்கொடுத்து, ஒரு நல்ல ஒப்பந்தத்திற்கு மற்றவர்களையும் வரச்செய்து, தாங்கள் ஒப்புக்கொண்டதின் விளைவாக, அமைதியான சூழ்நிலையை முழு அளவில் என்று சொல்லி, என்னையே நான் ஏமாற்றிக்கொள்ளவும் விரும்பவில்லை, உங்களையும் ஏமாற்றத் தயாராக இல்லை, மிகப் பெருத்த அளவிற்குத் தொழில்துறையில் அமைதி இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதற்கெல்லாம் பிறகு தான், என்னைச் சந்தித்த தொழில் அதிபர்கள், நாங்கள் எங்களால் முடிந்த அளவிற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் மூலதனம் செய்திடத் தயாராக இருக்கிறோம். அரசு தரவேண்டும் என்று இல்லை அல்லது அரசு பங்குதாரர்களாக ஆகி, கூட்டுத் தொழிலாக அமையும் என்றால் கூட, எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நாங்கள் முதலீடு செய்யத் தயாராக இருக்கிறோம், எந்தெந்தத் தொழில்கள் தொடங்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அல்லது நீங்கள்

எதிர்பார்க்கின்ற தொழில்கள் எந்தெந்த இடத்தில் தொடங்கினால் மூலப்பொருள்கள் கிடைக்கும், தொழில்களும் நல்ல முறையில் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்ற வகையில், அவர்கள் மீண்டும் அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்து அந்த உத்தரவாதத்தைத் தந்தார்கள்.

அதன் பலன்—நான் முடிவான சில எண்ணங்களுக்கு ஆட்பட்டு, அதைத் திட்டமாக உருவாக்கி, அந்த அதிபர்களின் பணத்தை மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவிடக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தவும், அதே நேரத்தில், அவர்களுடைய மூலதனத்திற்குப் பாதுகாப்புத் தருவதற்கும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவும், அதைப் பயன்படுத்திக்கொள்கிற அந்த நிலையில், நான் சில யோசனைகளை அவர்களுக்குக் கூறினேன். அதிலே குறிப்பிடத்தக்க என்னுடைய யோசனைகள், பல்வேறு வகைகளில் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஒன்று, புதிதாக விஞ்ஞான ரீதியில் அறிவியல் துறைகள் உருவாக்கப்பட வேண்டிய மிகப் பெரிய தொழிற்சாலைகள். அந்தத் தொழிற்சாலைகளிலே உருவாக்கப்படுகின்ற உற்பத்திப் பொருள், நமது நாட்டு மக்களுக்குத் தேவையான பொருளாக இருக்கவேண்டும். அந்தப் பொருள் ஒவ்வொரு நாளும் மக்களுக்குப் பயன்பட்டு, அது செலவாக்கப்படுகின்ற அல்லது உணவுப் பொருள் போல் ஜீரணிக்கப்படுகின்ற பொருள்களாக, அது உற்பத்தியாக வேண்டும் என்ற நிலைமையை நான் எடுத்து வைத்தேன். அந்த வகையிலே, பல நிறுவனங்கள் பற்றிப் பேசுகிறபோது, சில குறிப்பிட்ட கருத்துக்களை சொன்னவர்கள், ஏழை விவசாயிகளுக்குத் தேவையான உரம் இன்னும் மலிவாகக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தை இங்கே எடுத்து வைத்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்னும் என்னவெல்லாமோ சொல்ல வேண்டும் என்று விரும்பி, புள்ளி விவரங்களையெல்லாம் கொண்டு வந்து இருக்கிறேன். அதை மேலவையில், முழுமையாக நேரத்தை எடுத்துக்கொண்டு, நிறைய விவரங்களை, நான் தருகிறேன் என்று சொல்லி, உங்களைச் சேர்ந்தவர்கள் அங்கேயும் இருக்கிறார்கள்; அவர்களிடம் நீங்கள் என்னென்ன கேள்விகள் கேட்க விரும்புகிறீர்களோ, அதை எழுதிக் கொடுத்து, தயவு செய்து முடிந்தால், இங்குள்ள ஒரு சிலராவது அங்கே வந்து, அவ்வப்போது அவர்களுக்கு எழுதிக் கொடுத்து, கேட்கச் சொல்லவேண்டும் என்கிற வேண்டுகோளையும் நான் வைக்க விரும்புகிறேன்.

ஏனென்றால், ஒவ்வொரு நிறுவனத்தைப் பற்றியும், பல புள்ளி விவரங்களை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. பல்வேறு தொழில் துறைகளைப் பற்றியும், எத்தனை தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன; எத்தனை பேர் கஷ்டப்படுகிறார்கள், எத்தனை தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் சொல்லியாக வேண்டும். இல்லையென்றால், இது மாமன்றத்திற்கு மட்டும் ஏமாற்றமாக இருக்காது; தமிழ்நாடு முழுவதற்கும் ஏமாற்றமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

ஆகவே, வேறு வழியில்லாத நிலையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு உதவுகின்ற வகையில் நாளைய தினம் மேலவைக்கு வந்து, குறிப்பிட்ட ஒவ்வொரு கட்சித் தலைவராவது வந்து, அவர்களுடைய கட்சி நண்பர்களுக்கு, மேலவையில் இருக்கிற எம்.எல்.சி–களுக்குச் சொல்லி, நான் பேசும்போது கேள்வி கேட்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டாண்டுக் காலத்தில் ஏற்படாத இந்த சோதனை, இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கிறது. ஐந்தரை மணி நேரம் பேச வாய்ப்பளித்த மன்றம் இப்போது, ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளச் சொல்லும் கட்டாயத்திற்கு நான் ஆளாக்கப்பட்டிருக்கிறேன் என்பதால், இத்துடன் என்னுடைய உரையை நிறுத்திக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே இருப்பவர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

23.04.1979 அன்று, தொழில்துறை மானியக்கோரிக்கை விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.



சட்டத்தின் ஆட்சியே! எங்கள் மனச்சாட்சி!

மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் இந்த அமைச்சரவை மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்து, முதல் முதலில் உரையாற்றிய பேராசிரியர், அந்தக் கட்சியின் துணைத் தலைவர் அன்பழகனார் அவர்களுக்கு நான் முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அவர்கள் தொடக்கத்தில் பேசத் தொடங்கியபோதே, ஏன் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருக்கக்கூடாது என்று கேட்டார்களானால், 'இந்த அமைச்சரவை நாங்கள் கூறுகிற கருத்துக்களைக் கவனித்து, அதைப் பரிசீலித்து திருந்தவும், திருத்திக் கொள்ளவும் நல்லதொரு வாய்ப்பைத் தரவேண்டுமென்ற நிலையில் இந்தப் பணியினை நான் தொடருகிறேன்' என்று சொல்வதுபோல் அந்தக் கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். முதலிலே அவர்களுக்கு, அந்த நம்பிக்கையை வைத்திருப்பதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்!

மேலும், அவர்கள் ஒட்டுமொத்தமாக இங்கே பேசியவைகளைப் பற்றியெல்லாம் கவனிக்கிற நேரத்தில், மற்றவர்கள் தனித் தனியாகப் பல கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும், அவர்கள் பொதுப்படையாகப் பல பிரச்சினைகளை முன்வைத்து இங்கே தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்துள்ளார்கள். அதிலே நான் மிக மிக உன்னிப்பாகக் கவனித்த பிரச்சினைகள் மிகப் பல உண்டு. கவனித்து என்று சொல்லும்போது, மாமன்றத்திற்கு வராமல், உடல் நலம் இல்லாமல் இருந்த நீ, எப்படி கவனித்திருக்க முடியும் என்ற கேள்வி தொக்கி நிற்கிறது. பேராசிரியர் சிரிக்கிறார். நான் நோய்வாய்ப்பட்டிருந்தபோதும், தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு இங்கு பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் கேட்டுக்கொண்டுதான் படுக்கையில் இருந்தபடி கவனித்தேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

உடல் நலம் இல்லை என்கின்ற காரணத்தைப் பற்றியும், அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொன்ன அந்தக் கருத்துகள், நன்றாக உடல்நலம் இருக்க வேண்டுமென்ற ஆசை அவர்களுக்கு உண்டு என்பதையும் வெளிக்காட்டி, அதே நேரத்திலே ஒன்றைத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள்.

இந்த ஆட்சியிலே இருக்கின்ற நாங்கள் சோர்வுற்று இருக்கிறோம், வேகமாக இல்லை, ஆத்திரப்படுகிறோம், மக்களைச் சந்திக்க அஞ்சுகிறோம் என்று வரிசையாக அடுக்கிக்கொண்டே, அவர்கள் தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஒன்று நான் சொல்வது மிக அவசியம் என்று கருதுகிறேன். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரையில், மக்களைச் சந்திக்கப் பயப்படுகிற அமைச்சரவை என்று உண்மையிலேயே பேராசிரியர் அவர்கள் உளமாரச் சொல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வந்தவர்களோடு சரியாகப் பேசுவதில்லை என்ற குறையையும் இங்கே சொன்னார்கள், தவறுகள் சொல்ல வருகிறவர்கள், குறைகளை எடுத்துக்காட்ட வருகிறவர்களை சந்திக்க மறுக்கிறார்கள் என்றுகூட இங்கே சொன்னார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலே, இயங்குகின்ற ஆற்றலை இழந்திருக்கிறது என்ற கருத்தையும் இங்கே சொன்னார்கள், அந்தக் கருத்துப்பட, குறிப்பாக, நிதியமைச்சர் அவர்கள் இயங்க முடியாமல் இருக்கிறார்கள், அவர்கள் இயங்கவில்லை என்பதையும், இங்கே குறிப்பிட்டார்கள். இயக்கம் என்றாலே, இயங்காமல் இருக்க முடியாது. இந்த அளவுக்கு இங்கே குற்றங்களை எடுத்துச் சொல்லப்படுகிறபோது, அத்தகைய குற்றங்களைச் செய்வதற்காவது நாங்கள் இயங்கியிருக்க வேண்டும் என்பதையாவது, பேராசிரியர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

ஆகவே, இயங்குவதில் ஏதாவது குறை இருக்கிறது என்று சொல்லலாமே தவிர இயங்குகின்றத் தன்மையை இழந்துவிட்டதாகச் சொல்வது நியாயமில்லை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். இயக்கம்; இயங்குகின்ற தன்மை; இவைகளை நாங்கள் இழந்து விட்டோம் என்றால், இன்றைய தினம், இந்தப் பகுதியிலே, நாங்கள் இருக்க முடியாது, இந்த ஆட்சியிலே நாங்கள் இருந்திருக்க முடியாது என்பதை யாரும் மறக்க மாட்டார்கள், மறுக்கவும் மாட்டார்கள்.

அதிலே நான் குறிப்பிட விரும்புவது, இந்தக் கண்டனத் தீர்மானத்தின் வாயிலாகச் சொன்னவர்கள் என்னென்ன குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள் என்று ஒரு வகையிலே, ஒரு பட்டியலை நான் படித்தால், பொருத்தமாக அமையும் என்று நான் கருதுகிறேன். வேலை நிறுத்தத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள், அரசின் தொழில் கொள்கையைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். வேலைநிறுத்தத் தடை அவசரச் சட்டத்தைப்பற்றிப் பேசியிருக்கின்றார்கள், பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்துப் பேசியிருக்கின்றார்கள், அரசின் அண்மை உத்தரவுகளைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள், காவல்துறையின் புதிய மாற்றங்களைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். காவல்துறையின் போராட்டம், அதை அணுகிய முறையைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள், குற்றங்கள் அதிகரிப்பும், சட்டம் அமைதிச் சீர்குலையும் என்பது பற்றிப் பேசியிருக்கிறார்கள், ரத்து செய்யப்பட்ட பேருந்துகளைப் பற்றியெல்லாம் இங்கே குறை கூறியிருக்கிறார்கள், தனி நபருக்கு மூன்றாக இருந்த பேருந்துகளை, ஐந்தாக உயர்த்தியது சம்பந்தமான குற்றச்சாட்டு சாட்டப்பட்டிருக்கிறது, விவசாயிகள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசியிருக்கின்றார்கள். ஊராட்சிமன்றங்களைக் கலைத்ததைப் பற்றியும் இங்கே சொல்லியிருக்கிறார்கள், ஒதுக்கிடப்பட்ட செலவினங்கள் நிதி ஆண்டுக்குள் செலவழிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் சொல்லி இருக்கிறார்கள். இப்படி ஒட்டுமொத்தமாகப் பல பிரச்சினைகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள்.

அரசாங்க எந்திரம் சாமானியமானது அல்ல, என்பதை பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த எந்திரம் ஒவ்வொரு நாளும்; ஒழுங்காக இயங்கினால் தவிர, பொதுமக்களுடைய நலனைப் பாதிக்கிற வகையில்,

மக்களின் குறைகள் கவனிக்கப்படாமல், முற்றுப்பெறாத நிலையில் அமைந்து விடும் என்பது, ஆட்சியிலே உள்ளவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும் என்பதைப் பேராசிரியர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதை நான் முழு மனதோடு ஏற்றுக்கொள்கிறேன்.

ஒரு ஆட்சியிலே இருக்கின்ற அமைச்சர்களானாலும் சரி, அதிகாரிகளானாலும் சரி, வேறு பணிகளிலே உள்ள அலுவலக அலுவலிலே ஈடுபட்டவர்களானாலும் சரி, தங்கள் பணியைச் சீராக, செம்மையாக, ஒழுங்காகச் செய்ய முடியாமற்போய் விட்டால், அது எத்தகைய விபரீதத்திற்குள்ளான நாடாக; நாட்டை ஆக்கிவிடும் என்பதை, இங்கே எடுத்துக்காட்டியதற்காக மட்டுமல்லாமல், இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் நன்கு புரிந்திருப்பதற்காகவும், அதை நன்றாகத் தெளிவாக விளக்கிச் சொல்லும் ஆற்றலோடு இருப்பதற்காகவும், என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் நன்மை தீமைகள் ஆட்சியைப் பொறுத்து இருக்கின்றன என்பதை நாங்கள் உளமார, மனமார ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், ஆட்சியிலே இருக்கின்றவர்கள் கட்டளைகள் இடும்பொழுது, ஆணைகள் பிறப்பிக்கும்பொழுது, உத்தரவுகள் இடும்பொழுதெல்லாம் அவைகள் அப்படியே செயல்படக்கூடிய நிலையில், ஒரு ஆட்சியிலே இருக்கின்ற பல்வேறு அங்கங்கள் ஒத்துழைத்தால்தான் அவைகள் வெற்றிபெற முடியும். சரியாகச் செயல்பட முடியும் என்பதில் இங்குள்ள யாருக்குமே மாற்றுக் கருத்து இருக்க முடியாது என்பதை, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படியாயின், இங்கே நான் மிகமிகத் தெளிவாகச் சொல்ல வேண்டிய ஒரு முக்கியமான கருத்து, ஆட்சிக்கு, ஆட்சியிலே இருப்பவர்களுடைய கருத்துக்குப் பாதகம் ஏற்படாத வகையில், அவர்கள் தீட்டுகின்ற திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில், அனைத்து அலுவலரும் ஒத்துழைப்பு தந்தாக வேண்டுமென்பது மிகப் பெரிய முக்கியமான கடமை என்பதை இங்கே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இதை நான் முதலாவதாக எடுத்துச் சொன்னதற்குக் காரணம், இதைச் சொல்லிவிட்டு, மற்றப் பிரச்சினைகளுக்குப் பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று தான் கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மிகத் தெளிவாக, பல்வேறு புள்ளி விவரங்களைச் சொல்லி, நீதிமன்றத்தின் முன் வழக்குரைஞர் ஆதாரங்களை எடுத்துரைப்பதுபோல ஒன்று, இரண்டு என்று சொல்லி, 10, 15 என்று எண்ணி பிறகு கடைசியாக, மொத்தமாக, இந்தா எடுத்துக் கொள் என்று நான்கைந்து கடிதங்களைச் சேர்த்துப்போட்டுப் பேசி முடித்திருக்கின்ற நிலையில், நிச்சயமாக இவ்வளவு அக்கறை எடுத்து, புள்ளிவிவரங்களைச் சேர்த்து, இந்த நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டுமென்ற அக்கறையோடு அவர்கள் முயன்று கொண்டிருக்கின்ற இந்தப் பணிக்கு நான் நிச்சயமாக ஒத்துழைப்பு தந்தாக வேண்டும்.

அது என்னுடைய மாபெரும் கடமை என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன் என்று சொல்வதற்குக் காரணம் நான், மற்ற பிரச்சினைகளைத் தொடங்கும்போது

முக்கியமான பொறுப்பிலே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவருடைய பிரச்சினைபற்றி எடுத்துக்கொள்ளவே இல்லையே என்று யாரும் கருதி விடக்கூடாது என்று நான் பின்னால் வருகிறேன் என்று சொல்லி, மற்ற பிரச்சினைகளுக்குப் பதில் சொல்லிவிட்டு டாக்டர் கலைஞர் அவர்கள் கடைசியிலே பேசியிருக்கிறார்கள். அதற்கு இறுதியாகப் பதில் பேசலாம் என்று நான் கருதுகிறேன்.

இந்த ஆட்சி தனது கடமையைச் செய்வதற்கு ஆட்சியிலே இருக்கிற செயலாளர்களானாலும் சரி, அல்லது இயக்குநர்களானாலும் சரி, வேறு பல அதிகாரிகளானாலும் சரி, அனைவரும் முழு ஒத்துழைப்பும் தருகின்றார்களா என்பதைப் பற்றி நான் பதில் சொல்வதற்கு முன்பாகவே, முழு ஒத்துழைப்பு இந்த அரசுக்குக் கிடைக்கவில்லை, ஒரு சிலரிடமிருந்துதான் கிடைக்கிறது என்பதற்கு ஆதாரங்களை, இங்கே எடுத்து வைத்தவர்களின் மூலமாகவே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு ஆட்சியினுடைய அமைப்பில், ஒரு இலாக்காவில் நடைபெறுகின்ற கடிதப் போக்குவரத்துகள் தவறா, இல்லையா என்பது வேறு விஷயம். அதில் உண்மை இருக்கிறதா, இல்லையா என்பது வேறு விஷயம். அதற்கு எதிர்த்தரப்பிலே இருக்கிற ஆதாரங்களை எடுத்து வைக்கும்போது, தீர்மானிக்கப்பட வேண்டியது மக்களுக்கு உள்ள பொறுப்பு. ஆனாலும், எவ்வளவு பலவீனமான ஒரு இயந்திரத்தை வைத்துக்கொண்டு, நாங்கள் இந்த ஆட்சியை நடத்துகின்றோம் என்பதை முதலில் நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எந்த அதிகாரியும் இப்படி, எல்லோரையும் நான் குறிப்பிடவில்லை, குறிப்பிடத்தக்க வகையில், ஒருசில அதிகாரிகள் என்கிற வகையில், எப்படி எங்களுக்கு எதிராகப் பணியாற்றுகின்றார்கள் என்பதை தமிழகம் முழுவதும் உள்ள மக்கள் புரிந்துகொள்வதற்கு, டாக்டர் கலைஞர் அவர்கள் கூட ஒத்துழைப்புத் தந்து, எனக்கு நன்மை செய்திருக்கிறார்கள், வாய்ப்பு தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, நான் அவருக்கு மிகப்பெரிய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்! நாங்கள் தவறு செய்திருந்து, குற்றங்கள் புரிந்து, அதற்காக மறைத்து வைக்கப்பட வேண்டிய தஸ்தாவேஜுகள் என்கிற வகையிலே அந்தக் குறிப்புகள் எல்லாம் இருந்திருக்குமானால், அதை வெளிக்கொணர வேண்டியது எதிர்க்கட்சித் தலைவருடைய, எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்களுடைய மிகப் பெரிய கடமை என்பதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், இவ்வளவு தெளிவாகக் கடிதப் போக்குவரத்துகள் அவ்வளவும் ‘டெலக்ஸ்’ போன்றவைகள் எல்லாம் அழகாக, செம்மையாக, எப்படி நிரபராதியையும் குற்றவாளி என்று நிரூபிக்க முடியுமோ, ஒரு தரப்பிலேயிருந்து பதில் கிடைப்பதற்கு முன்னால், நம்புவார்களோ அந்த வகையிலே எடுத்துக்காட்டுகின்ற அளவுக்கு, இங்கே ஆதாரங்கள் தரப்பட்டிருக்கின்றன என்பதை நாங்கள் எண்ணிப்பார்க்கும் போது, இப்படிப்பட்ட ஆட்சியில் நாங்கள் ஆட்சியிலேயிருந்தாலும் கூட, ஆட்சியை நடத்துகின்றவர்களுக்கு இடையில் மிகப் பெரிய பொறுப்பை ஏற்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்த நிலையில், என்னுடைய கருத்தை நான் வெளியிட விரும்புகிறேன்.

என்ன இருந்தாலும் ஒரு ஆட்சியை நடத்துகின்றவர்களுக்கு, தங்களுக்குக் கீழே பணியாற்றுகின்றவர்கள் நேர்மை உள்ளவர்களாகவும், நாணயம் உள்ளவர்களாகவும், நீதியை எடுத்துச் சொல்லி பாராட்டுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள் என்ற உத்தரவாதம் இருந்தால்தான், அந்த ஆட்சி தன்னுடைய எண்ணங்களை சரிவர செயல்படுத்த முடியும்.

இங்கே குறை கூறியவர்கள் ஒரு பிரச்சினையை மட்டும் சொல்லி இருந்தார்கள் என்றால் அதற்கு நேரடியாக பதில் சொல்லிவிட முடியும்.

நிருவாக இயந்திரத்தைப் பொறுத்தவரையில், நான் மேலே குறிப்பிட்டுள்ளபடி, எவ்வளவோ பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் வேலை நிறுத்தத்தைப் பற்றி பல குற்றச்சாட்டுகளை இங்கே சொல்லி இருக்கிறார்கள்.

நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள், காவேரி தொழிற்சாலை பற்றி பேசினார்கள், குரோம்பேட்டை தொழிற்சாலை பற்றியும் பேசினார்கள். எனக்கு தெரிந்த ஒருசில உண்மைகளை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

அதற்குள்ள சொத்துக்கள் மதிப்பு ஏறக்குறைய ஒன்றரை, ஒன்றே முக்கால் கோடிக்கு மேலே இல்லை. அதற்குள்ள கடன் ரூ.5 கோடி, இதை ஒரு அரசு எடுத்து நடத்தமுடியுமா என்பதைப் பற்றி தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதோடு, இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒரு பெரிய சிக்கல், அவர்கள் இன்னமும் அந்த தொழிற்சாலையை மூடிவிட்டதாக அறிவிக்கவில்லை. அதை அவர்களே குறிப்பிட்டார்கள். ஆனால், தொழிலாளர்களுக்கு சம்பளம் இல்லை. கேட்டால், பணம் இல்லை, அரசு கொடுத்தால் நடத்துகிறோம், அதே சமயத்தில் வங்கிகளைக் கொண்டு கடன் கொடுத்தால், நடத்துகிறோம் என்றார்கள். நாங்கள் சொல்லிப் பார்த்தோம், வங்கிகள் கடன் கொடுத்து அவர்கள் அதிகாரிகளை வைத்து நடத்தச் சொல்லலாம் என்றால், அவர்கள் அதற்குத் தயாராக இல்லை.

மைய அரசிடம் சொல்லி, அதை நடத்துவதற்கு ஏதாவது வழியுண்டா என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்தோம், முயற்சிகள் செய்தோம்! அவர்கள் இப்படிப்பட்ட சூழ்நிலையில், அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை என்பதை நாங்கள் உணர்ந்தோம். இந்த சூழ்நிலையில் தான், நாங்கள் எங்களுடைய கடமையை ஆற்றவேண்டுமென்ற அந்த வகையிலே, சூழலிலே, நாங்கள் சிக்கிக் கொண்டிருக்கிறோம். நல்ல எண்ணம் எங்களுக்கு இருந்தாலும், ஏறத்தாழ ரூ.5 கோடி கடன் இருக்கிறது என்கிற நிலையில், ஏறக்குறைய ரூபாய் ஒன்றே முக்கால் கோடிக்கு மேல் சொத்து மதிப்பில்லாத ஒரு தொழிற்சாலையை அரசு எப்படி எடுத்து நடத்துவது என்பது ஒரு மிகப்பெரிய பிரச்சினை.

அந்தத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்க வேண்டுமா என்பதைப் பற்றி நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு ஏதாவது இடைக்கால நிவாரணமாவது அளித்து, அவர்களுக்கு ஒரு சிறு நிம்மதியாவது ஏற்படுத்த மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப் பற்றி, எப்படி அதை நடத்துவது, அல்லது

அதை விட்டுவிட்டு வேறு ஒரு தொழிற்சாலை திறக்கலாமா அல்லது வேறு வேலைகள் அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கலாமா என்பதைப் பற்றி இந்த அரசு மிகுந்த அக்கறையோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை, இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே, குறிப்பாக அவசரகாலச் சட்டம் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆளுநர் சட்டத்தைத்தான் சொல்கிறேன். அது அப்படித்தான், பேசும்போது கருத்து வேகமாக வருகிறது. ஏதோ தடைச் சட்டம், தடைச் சட்டம் என்று சொல்கிறார்கள். இதுவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், எந்தத் தொழில் தகராறுகளில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்று தடையை, நாங்கள் பயன்படுத்தி இருக்கிறோம் என்று, இந்த மன்றத்தைக் கேட்க விரும்புகிறேன். எந்த ஒரு தொழிற்சாலையிலும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதைத் தடைச் செய்து சட்டம் நாங்கள் வெளியிட்டது இல்லை. சட்டம் இருக்கிறது, நாங்கள் கொண்டு வந்தோம். அதைப் பயன்படுத்தவில்லை என்பதை தயவு செய்து, இந்த மன்றத்திலே இருக்கிற அத்தனை பேரும் கொஞ்சம் கவனத்தோடு அதை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அப்படியானால், எங்கள் எண்ணம் என்ன ? எதற்காக இந்த தடைச் சட்டம் கொண்டு வந்தோம் ? எதற்குக் கொண்டு வந்தோம் என்றால், நான் முதலில் சொன்னேனே, ஒரு ஆட்சி நடக்கவேண்டுமென்றால் அதன் கீழே உள்ள பணியாளர்கள், பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, சிறிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ‘சின்சியாரிட்டி’, உண்மை, அது இருந்தாக வேண்டும்.

அதே சமயத்தில் நேர்மை இருந்தாக வேண்டும்! நாணயம் இருந்தாக வேண்டும்! இவர்கள் நம்பிக்கையோடு அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும்! இவர்கள் வேலை செய்ய மறுத்தார்கள் என்றால், நாங்கள் மக்களிடம், மக்கள் நன்மைக்காக இந்தக் காரியங்கள் செய்கிறோம் என்று உறுதி கொடுத்து இருக்கிறோமோ, அதை நிறைவேற்றுவதற்கு அந்த அதிகாரிகளைப் பயன்படுத்த முடியுமா என்பதையும் இந்த மன்றத்தில் உள்ளவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதைப் போலத்தான் தொழிலாளர்கள் பார்க்க வேண்டும். தொழிலாளர்கள் பார்க்கவில்லை. புதிய தொழிற்சாலைகள் தோற்றுவிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. இருக்கின்ற தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன, வேலை நிறுத்தம் செய்கிறார்கள், அவைகளில் வேலை நடத்த முடியவில்லை என்று அச்சுறுத்தல்போல சூழ்நிலை இருக்குமானால், எப்படி புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு உள்ளவர்கள் முன்வருவார்கள் என்பதைப் பற்றி நாம் கொஞ்சம் சிந்தித்தாக வேண்டும்.

நான் ஏதோ தொழிலதிபர்கள் மத்தியில் பேசியதாகவும், அந்தப் பேச்சின் விளைவாக, இந்தச் சட்டம் கொண்டு வந்தோம் என்று ஒரு தொடர்பை ஏற்படுத்தி இங்கே சில நண்பர்கள் குறிப்பிட்டதாக, நான் குறிப்பில் பார்த்தேன். நான் பெயரைக் குறிப்பிடாததால் அவரை மதிக்கவில்லை என்று கருதக் கூடாது. எந்தக் கருத்துக்கு யார்

யார் சொந்தக்காரர்களாக இருக்கிறார்களோ, அவர்களை முன்னிலைப்படுத்தித்தான் நான் பதில் சொல்கிறேன் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

ஒரு தொழிற்சாலைத் தொடங்கவேண்டுமானால், வருகின்ற தொழில் அதிபர்களுக்கு மின்சாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை; மூலப் பொருள்கள் தட்டுத் தடங்கல் இன்றி கிடைக்கும் என்ற உத்தரவாதம்; இதற்கெல்லாம் மேலாக, வேலை நிறுத்தம் போன்ற தொல்லைகளால் ஆரம்பிக்கப்படுகின்ற தொழிற்சாலைகள் முடங்கிவிடும் என்ற அச்சச் சூழ்நிலை இல்லாமை; இவைகளை இந்த அரசு கொடுத்தாக வேண்டியிருக்கிறது, நான் சொன்ன சொற்கள் சில சமயங்களில் பத்திரிகைகளில் செய்திகளாக வருகின்றபோது, வேண்டுமென்றே அவர்கள் திருத்திப்போடுகிறார்களா அல்லது உண்மையை மறைக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாவிட்டாலும், செய்தியாளர்கள் கொண்டுபோய்க் கொடுக்கின்ற அந்தத் தகவலை வைத்துக்கொண்டு வெளியிடுகிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை என்றாலும், நான் என்ன பேசினேன் என்பதை இங்கே சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தொழிற்சாலையில் பணியாற்றுகின்றவர்கள், தொழிற்சாலையை அழிப்பதற்கு முன்வந்தால், பிறகு அவர்கள் எங்கே போய் பணி செய்வார்கள் என்ற கேள்வியை, இதே மன்றத்தில் நான் முன்பே கேட்டு இருக்கிறேன். ஆகவே தான், போராட்டம் என்பது இருக்கலாம். வேலை நிறுத்தம் இருக்கலாம். ஆனால், அவர்கள் மீண்டும் எங்கே போய் வேலை செய்ய வேண்டுமோ, வேலையைத் தேடிக்கொள்ள வேண்டுமோ, அங்கேயுள்ள அந்த இயந்திரங்கள் பழுதாகி விட்டால், அந்தத் தொழிற்சாலை மீண்டும் இயங்காமல் போய்விடும். அதனால் பல சூழ்நிலைகள், பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன்.

அதை நான் அங்கே சொல்கிறபோது தான், கூடுமான வரையில், வேலை நிறுத்தங்கள் ஏற்படாமல் தடை செய்வதற்கும், அந்தத் தடை எந்தச் சட்டத்தாலும் அல்லாமல், இயற்கையாகவே தொழில் அதிபர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சுமூகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமாக, அதை உருவாக்கச் செய்து, அதன் விளைவாக, தொழிலாளர்களுக்குத் தேவையானவைகளை கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்குவதும், அதே நேரத்தில், தொழில் அதிபர்கள் போடுகிற மூலதனத்திற்கு பாதுகாப்பு இருக்கிறது என்ற நிலைமையும், தொழிலதிபர்களால், மற்றவர்களால் உருவாக்கப்பட்டு இருக்கிற இயந்திரங்கள் பழுது அடையாது பாதுகாக்கப்படும் என்ற ஒரு உறுதியான எண்ணத்தை, நம்பிக்கையை அவர்களுக்குக் கொண்டுவருகிற வகையில், நாம் நடத்திக் காட்டவேண்டிய நிலையில் இருக்கிறோம். இதைத்தான் நான் அங்கே சொல்லச் சொன்னேன். இப்போது தொழிலாளர்கள் மாற்றம் ஆகியிருக்கிறார்கள், மாற்றம் ஆகிக்கொண்டு இருக்கிறார்கள். தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் எப்படி நடந்துகொள்ள

வேண்டுமோ அப்படி நடந்து கொள்கிற முறையினை பின்பற்றக் கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருகிறது. இந்த இரண்டாண்டுக் காலமாக நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக, மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். நாங்கள் எப்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதும் தெரியும். ஆகவே, தைரியமாக இங்கே நீங்கள் மூலதனம் போட்டு, புதிய தொழில்களைத் தொடங்கலாம் என்று நான் அன்று பேசினேன். ஆனால், இங்கே நண்பர்கள் பேசும்போது, நான் முதலாளிகளுக்கு சாதகமாகப் பேசியதாகவும், அதன் விளைவாக, முதலாளிகள் எங்களுக்கு ஏதோ நன்மை செய்ய முன்வந்து விட்டது போலவும், அந்தக் கருத்தைச் சொல்லா விட்டாலும், மற்றவர்கள் அப்படி சொல்லத்தக்க வகையிலே சுட்டிக்காட்டாமல், ஆனால் சுட்டிக்காட்டுவதைப் போல சிலேடையாக கூறியதாக நான் குறிப்பிலே இருந்து பார்த்தேன்.

அவர்களுக்கு பணிவன்போடு சொல்கிறேன். தொழிலதிபர்களை நாங்கள் இன்றையதினம் எதிரிகளாகக் கொண்டிருக்கிறோமே தவிர, நண்பர்களாக ஆக்கிக் கொள்ளவில்லை என்று இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்வது என்னுடைய மாபெரும் கடமை என்று கருதுகிறேன்.

இப்போது தொழிலதிபர்கள் எங்களுடன் சுமூகமாக இருக்கிறார்கள்; தொழிலாளர்களுக்கு விரோதமாக நாங்கள் மிகப் பெரிய சூழ்நிலையை ஏற்படுத்தி விடுகிறோம் என்று, தயவு செய்து யாரும் நம்ப வேண்டாம். யாராவது எங்களை பயன்படுத்த வேண்டுமென்று எண்ணினால் கூட, அவர்கள் ஏமாந்து போவார்களே தவிர, நாங்கள் ஏமாந்து போக மாட்டோம் என்பதை இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

உடனே கேள்வி வரும். ஒரு தொழிற்சங்கத்துடன் ஒப்பந்தம் நடக்கிறது. அது மைனாரிட்டி தொழிலாளர்கள் இருக்கிற சங்கம். அந்தச் சங்கத்திலே ஒப்பந்தம் செய்துவிட்டு, மற்ற பெரும்பான்மைத் தொழிலாளர்கள் அங்கத்தினராக இருக்கின்ற சங்கத்தைக் கேட்காமல் நாங்கள் 12 (3) செட்டில்மெண்ட் போட்டுவிட்டோம்; ஆகவே, நீங்கள் மற்றவர்களைக் கேட்க முடியாது; நீங்களும் வேலைக்கு வாருங்கள்; நாங்கள் கதவடைப்பு செய்யவில்லை; கதவு திறக்கப்படும் என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்; மற்றவர்களை அச்சுறுத்தி, தனித்தனியாகக் கையெழுத்து வாங்கி, அங்கே அந்தப் பணியினை செய்தவற்கு, அவர்களை ஏவலாள் போல பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்வார்கள். நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள், இப்போது நடக்கிறதே ! இன்னும் சில இடங்களில் நடைபெற இருக்கிறது என்று சுட்டிக்காட்டலாம்.

ஆனால், சட்டத்தை நாங்கள் மதிக்க வேண்டும்; மனசாட்சியை நாங்கள் முன்னே வைத்து, எண்ணத்தை வெளியிட வேண்டியிருக்கிறது. அந்த எண்ணத்தைச் செயலாக்க முயற்சிக்க வேண்டியிருக்கிறது. சட்டத்தால் எங்கள் கைகளை, எதையும் செய்ய முடியாது என்ற நிலையிலே கட்டிப்போட்டுவிட்ட சூழ்நிலை உருவாக்கப்பட்டு, அதன் பிறகு, நாங்கள் அந்தத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவில்லை, அவர்கள்

வேலைக்குப் போக முடியாமல், நாங்கள் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, வேறு சிலரை அங்கே உள்ளே அனுப்பி, கூலிகளை, கண்காணிகளை என்று சொல்வார்களே, அப்படிப்பட்டவர்களை வைத்து, வேலை நடத்த தொழிலதிபர்களுக்கு உடந்தையாக இருக்கிறோமே என்று குற்றஞ்சாட்டப்படலாம். ஆனால், அவர்களுக்கேத் தெரியும்; சட்டம் எங்களுக்குச் சாதகமாக இல்லை என்பது.

அதற்காகத்தான், முன்னாலே ஒரு யோசனைச் சொன்னேன். அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு இப்போதும் சொல்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துக்கொண்டீர்களானால், எந்த நேரத்திலே எவ்வளவு விரைவாகக் கொண்டுவர முடியுமோ, அவ்வளவு விரைவில் கொண்டுவர முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துக் கட்சித் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றுபட்டு, பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் வேண்டாம் என்றால்; வேண்டாம், வேலை நிறுத்தம் வேண்டும்! என்றால், வேண்டும், என்பதைப்போல ஒரு முடிவு எடுப்பதற்கு ஒத்துக்கொண்டு, அதைப்போலவே சம்பள உயர்வும் தொழிலாளர்களுக்கு வேண்டுமென்று கேட்கும்போது அதற்குரிய நிலையை உருவாக்குவதற்கும், அந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது என்று ஆக்குவதற்கு ஒத்துக்கொண்டால், வெகுவிரைவில், அடுத்த தொடர் கூட்டத்திலே, அந்த சட்டத்தைக் கொண்டுவருவதற்காக இந்த அமைச்சரவை தயாராக இருக்கிறது என்பதை இங்கே இருக்கிற அத்தனை பேர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னைச் சிக்க வைத்து விட்டதாக மட்டும் தயவுசெய்து கருதிவிட வேண்டாம்! நான், முன்பு சொன்னதையேதான் இப்போதும் சொல்கிறேன். தனியாகப் பேசும்போது என்ன சொன்னேனோ அதையே மனம் திறந்து சொல்கிறேன், வேலை நிறுத்தத்தைச் செய்வதற்கும் அனைத்து சங்கங்களுடைய ஒட்டு மொத்தமான தொழிலாளர்கள் ஒன்றுகூடி, 60, 70 சதவீதம் வாக்குகள், அங்கே எதற்கு அளிக்கிறார்களோ அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதேப்போல, எந்தப் பிரச்சினையானாலும் சரி, சம்பள உயர்விற்காகவோ, போனஸ் பிரச்சினையானாலோ, எதுவாயினும் சரி, அவைகளைப் பற்றியும் முடிவு எடுப்பதற்கு இதே முறையைக் கையாள வேண்டும் என்று ஏற்பட்டால், அதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்றால், அதை நாங்கள் சட்டமாகக் கொண்டு வருவதற்குத் தயாராக இருக்கிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் வெவ்வேறு பிரச்சினைகள் பற்றி கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். என்னுடைய விளக்கம், என்னுடைய தெளிவான முடிவு என்னவென்றால், ஒரு போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம். நீண்ட காலமாக கோரிக்கைகள்

வைத்து, வைத்து, கவனிக்காமல் அலட்சியம் செய்து ஒரு தொழில் அதிபரை எதிர்த்து, ஒரு தொழில் அமைப்பில் இருக்கிறவர்கள் அந்த முடிவுக்கு வந்தே தீரவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை எழுமாயின், அப்படி ஒரு சங்கம் பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய எண்ணத்தை ஏற்று வேலை செய்யலாம் என்று முடிவு செய்கிறது, அல்லது வேலை நிறுத்தம் செய்யலாம் என்று முடிவு செய்கிறது. ஒரு சில சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்யலாம் என்று சொல்லலாம், ஒரு சில சங்கங்கள் வேலை நிறுத்தம் வேண்டாம் என்று சொல்லலாம். மற்றச் சங்கங்கள், வேலைநிறுத்தம் வேண்டாம் என்கிறது, அல்லது வேண்டும் என்கிறது. ஆகவே, இரண்டு சங்கங்களுக்கிடையே அல்லது ஒன்றிரண்டு மூன்று பிரிவு, ஒரு பக்கம் மூன்று சங்கங்கள், இந்தப் பக்கம் நான்கு சங்கங்கள், எப்படியும் வைத்துக் கொள்ளலாம், ஒன்றையொன்று எடுத்துக் கொண்டால், அங்கே பிரச்சினைகள் மோதும்போது, போராட்டம் எந்தக் கொள்கைக்காக, எந்த இலட்சியத்திற்காக நடைபெறுகிறதோ அது போய் தொழிலாளர்களிடையே போராட்டம் ஏற்படுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னுடைய ஆசை அந்த நிலைமை வரக்கூடாது. தொழிலாளர்கள் ஒரு முடிவு எடுத்தால், அந்தத் தொழிலில், அந்த நிருவாகத்தில், பணியாற்றுகிற அத்தனை பேர்களும் பெரும்பான்மையாக எடுக்கிற ஒரு முடிவு, அந்தத் தொழிலாளர்கள் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் ஒருமித்தக் கருத்தோடு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை எப்படி ஒன்றுபடுத்தி நடத்துவது என்பதில், ஆணையரை வைத்துக்கொண்டாலும் சரி அல்லது அதற்கு ஒரு குழு அமைக்க வேண்டும் என்று நீங்கள் யோசனைச் சொன்னாலும் சரி, நான் முதலில் சொன்ன யோசனையை ஏற்றுக்கொண்டீர்கள் என்றால், அனைத்துக் கட்சித் தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்து, அவர்களிடமே அந்த யோசனையைச் சொல்லி, அவர்களுடைய யோசனைகளையும் கேட்டு, சட்டபூர்வமாக எப்படி அதை நடைமுறைப்படுத்த முடியுமோ அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராயிருக்கிறது என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான் இன்னும்கூட ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தொழில் அதிபர்கள் எவ்வளவுதான் நல்லவர்கள் என்று நாம் எண்ணினாலும் கூட, தொழிற்சங்கங்களை பிரித்து வைப்பதிலே அவர்கள் மிகச் சாமார்த்தியசாலிகளாக இருக்கிறார்கள், ஒரு சிலராவது என்பதை நாம் ஒத்துக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் பலிகடாக்கள் ஆகிறோம் என்பதையும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதிலிருந்து விடுபட்டாக வேண்டும். அதற்குரிய வழிமுறைகளைக் கண்டுபிடித்தால்தான், தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற தொல்லைகளிலிருந்து அவர்களை விடுவிக்க முடியும். எந்தத் தொழிற்சங்கம் அதிகமாக இலாபத்தைப் பெற்றுத்தரும் என்ற எண்ணத்தை உருவாக்கி, வளர்க்கும் எண்ணத்திற்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்காமல், எல்லோரும் சேர்ந்து ஒரு நல்ல காரியத்திற்காக இந்த பணியைச் செய்கிறோம் என்ற எண்ணத்தோடு, அந்தத் தொண்டு மனப்பான்மையோடு செய்ய முடியும் என்றால், அதைவிட நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியது வேறு ஒன்றுமில்லை! தொழிலாளர் போராட்டம், தொழிலாளர் தடைச்

சட்டம், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற அந்த நிலைகள் எல்லாம் எங்கிருந்து எழுகிறது? காவல்துறையால் மட்டும் ஏற்படுத்தப்படுவதில்லை. ஒரு தொழிற்சாலை நடப்பதற்கு பாதுகாப்புக் கொடுத்தால், அந்தத் தொழிலாளர்களின் உரிமையைப் பறிக்கிறது என்ற குற்றச்சாட்டு. தொழிலாளர்களுக்கிடையே பிளவுகள் ஏற்பட்டு, ஒருவரையொருவர் தாக்கிக்கொள்கிறார்கள், கொலைகள் நடக்கின்றன, வன்முறையில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று, அங்கே காவல்துறை உதவி செய்தால், வீட்டுக்குள்ளே நுழைந்து தாக்குகிறார்கள், ஒரு கட்சிக்காகப் பணியாற்றுகிறார்கள், இந்தத் தொழில் அதிபர் அவர்களை விலைக்கு வாங்கிவிட்டார்கள் அல்லது இந்த அரசு, தொழிலாளர்களுக்கு விரோதமான அரசாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகளுக்கு பல பேர்கள் ஆளாகிறார்கள். இதில் ஒரு நல்ல நிலைமை ஏற்பட வேண்டும் என்ற எண்ணத்தில்தான். இந்த அவசரச் சட்டத்தை, இந்தத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, இதுவரை அந்தத் தடைச் சட்டத்தை பயன்படுத்தியது கிடையாது. அந்தச் சட்டத்தை எதற்காகக் கொண்டு வந்தோம்? ஒரு பக்கம் தொழிலாளர்கள் போராட்டம், இன்னொரு பக்கம் காவல்துறையினர் போராட்டம் வருமோ, வராதோ என்ற நிலை! அதேபோல், என்.ஜி.ஓ.க்கள் போராட்டம், அதே சமயத்தில் இங்கே தலைமைச் செயலகத்தில் இருக்கிறவர்கள் போராட்டம், இப்படி இத்தனை பேர்களுடைய போராட்டம் ஏற்படுமானால், இந்தச் சட்டமன்றமே நடந்திருக்க முடியாது. இப்போது அவர்கள் ஒத்துழைப்புத் தருகிறார்கள். இங்கே குறிப்புகள் வருகின்றன, நடைபெறுகின்றன. இப்போது இந்த அசெம்பளி நடந்து கொண்டிருக்கிறது. இதை நாம் காப்பாற்ற வேண்டாமா? இங்கே டாக்டர் கலைஞர் அவர்கள் பேசும்போது, ஒன்றைக் குறிப்பிட்டார்கள், தமிழகத்தில் இருக்கிற ஒரேயொரு ஜனநாயக அமைப்பு இப்போது சட்டமன்றம் ஒன்றுதான் என்று. அதையாவது நாம் காப்பாற்ற வேண்டாமா? அதற்காவது பாதுகாப்பு வேண்டாமா? அதையாவது ஒழுங்காக நடத்தும்படி செய்வதற்கு ஆள் வேண்டாமா? இப்படிப்பட்ட நிலைமையை எண்ணிப் பார்த்தால், இதைப்போன்ற காரியங்களுக்காக யாரும் தங்களுடைய தொல்லைகள் குறைகள் இவைகள் இருந்தால் கூட, இந்த அவசிய காரியங்கள் நடைபெறாமல் இருக்க, அதைத் தடுக்கக் கூடிய சூழ்நிலைக்கு ஆளாக்க யாராவது தூண்டிவிட்டாலும் சரி, அவர்கள் அந்த உணர்வுக்கு சொந்தக்காரர்களாக ஆகிவிட்டாலும் சரி, சூழ்நிலையால் அப்படிப்பட்டவர்கள் செயல் முறையால், இந்த அமைப்பைக் கூட தடுத்துவிடக் கூடாது. ஒழுங்குமுறையாக நடப்பதற்கு அனுமதிக்க வேண்டும் என்கிற காரணத்திற்காகச் தான் இந்த தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டதே தவிர, தொழிலாளர்களுடைய போராட்டங்களை தடுக்க வேண்டும், தொழிலாளர்கள் போராட்டங்கள் நடத்தவே கூடாது, தொழிலாளர்கள் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்லக்கூடாது என்கிற நோக்கத்தால் அல்ல.

'ஆர்டினன்ஸ்' கொண்டு வந்தால், அது எத்தனை மாதம் இருக்கும் என்பது என்னைவிட அனைவருக்கும் தெரியும். புதிய திருத்தச் சட்டத்தை கொண்டுவராவிட்டால்,

அந்தச் சட்டம் தானாக ரத்தாகிவிடும். அது ஓரளவுக்கு எல்லோருக்கும் தெரியும். அதைவிட நாங்களே அந்தச் சட்டத்தை திரும்ப வாபஸ் வாங்கிக்கொள்வது என்பதும், ஒரு பெரிய காரியமல்ல. உங்களை எல்லாம் கேட்டுக்கொள்வது வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டாலன்றி; அதிலும் இந்த நேரத்தில், இப்படிப்பட்ட போராட்டத்தை துவங்கி மறியல், வேலை நிறுத்தம் என்கிற காரியங்களில் ஈடுபடுவோம் என்றால், அரசவை நடக்காது. திட்டங்கள் நடைபெறாது. இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ அது செய்ய முடியாமல் போய்விடும். ஆகவே, ஓரளவுக்கு நேரம் காலம் அனுசரித்து இப்படிப்பட்ட போராட்டத்தை தொடங்குவது, அல்லது போராட்டத்தை நடத்துவோம் என்று சொல்வது என்ற எண்ணத்திற்கு அவர்கள் சொந்தக்காரர்களானால், இந்தச் சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியமே இல்லை. இதை இங்கேயிருக்கின்ற அத்தனை பேர்களும் ஒத்துக்கொள்வீர்கள் என்றால், இப்போதே நான் சொல்லத் தயார், இந்தச் சட்டத்தை நான் 'வாபஸ்' வாங்கிக்கொள்கிறேன் என்று, நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். அந்த உத்திரவாதம் எனக்கு வேண்டும்.

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேராசிரியர் அவர்களும், மாண்புமிகு சங்கரைய்யா அவர்களும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் தூண்டிவிட்டால், அவர்களைப் போய்க் கேட்பதுதான் நியாயம். அந்தச் சூழ்நிலை உருவாக்காமல் அமைச்சர்கள் இருப்பார்களா என்ற உத்திரவாதத்தை, அவர்கள் விளக்கமாகக் கேட்டார்கள். நான் சொல்ல விரும்புவதெல்லாம், அண்மையில் என்னென்ன நடந்து கொண்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

காவல்துறையினர் போராட்டத்தை துவங்கினார்கள். போராட்டத்தை துவக்கிய உடனேயே, இந்தப் போராட்டம் சரியா, இல்லையா என்பதைப் பற்றி அதிகாரிகள் பலரை வைத்து, அதைப்பற்றி நடவடிக்கை எடுப்பதற்காக முனைந்து, நாட்டு மக்களுக்கு எப்படிப் பாதுகாப்பு கொடுப்பது, இதை எப்படி சமாளிப்பது என்கின்ற நிலையிலே இருக்கின்ற நேரத்தில், உண்ணாவிரதம் இருந்த காவல்துறையினருக்கு மாலை அணிவித்து, உங்களுக்கு நாங்கள் பாதுகாப்புத் தருகிறோம், தொடர்ந்து வேலை நிறுத்தத்தை நடத்துங்கள் என்று சொல்கின்றவர்கள் இந்த நாட்டிலே இருப்பார்களானால், அவர்களிடம் நாங்கள் போய் கேட்காமல் உதவி செய்யாதீர்கள், ஒத்துழையுங்கள் என்று கேட்காமல், வேறு யாரை நாங்கள் போய் கேட்பது? அப்பேர்ப்பட்டவர்கள் இந்த நாட்டிலே இருக்கிறார்கள், தமிழகத்திலே இருக்கிறார்கள். ஆகவேதான், பிரச்சினைகள் வரும்போது, நாங்கள் இதைப்போன்ற வேண்டுகோளை விடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே நண்பர் சங்கரைய்யா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம் தேவைதானா என்பதை உள்ளிறுத்தி, வேறுபல கருத்துகளைச் சொல்வதுபோல சொல்லி, 'வாபஸ்' ஆகாவிட்டாலும் சரி, 'வாபஸ்' வாங்கினாலும் சரி, அதைச் செய்யுங்கள் என்று சொல்வதுபோலச் சொன்னார்கள். இதிலே எங்களுக்கு பிடிவாதம்

இல்லை; கவுரவப் பிரச்சினை கிடையாது. எங்களுக்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை; எல்லா அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவை. வேறு எந்த மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும், பொதுப் பிரச்சினையில், எங்களுடன் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைக்கத்தான் வேண்டும் என்பது எங்கள் ஆசை.

பல்லவன் டிரான்ஸ்போர்ட் போராட்டத்தின்போது, நாங்கள் சட்டத்தைக் கொண்டுவந்தோமே தவிர, மக்கள் மத்தியில் அறிவித்தோமே தவிர, அன்றைய தினமே, அவர்களை அழைத்துப் பேசி, முடிவெடுத்து, காரியங்களை முடித்துக் கொண்டோமே தவிர, அவர்களுக்கு எவ்வளவு அரசால் கொடுக்க முடியுமோ அதைக் கொடுத்தோமே தவிர, நாங்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை; இறுதிவரை பயன்படுத்தவில்லை. ஏதோ இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தங்களை எல்லாம் தடை செய்து கொண்டிருக்கின்றது என்கிற எண்ணத்தை நீங்கள் எப்படி கொண்டிருக்கிறீர்கள்? இந்த எண்ணத்தை மக்கள் மத்தியிலே பலர் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். உண்மையைத் தெரிந்து சொல்லுகிறார்களா, அல்லது தெரியாமல் சொல்லுகிறார்களா என்பது, எனக்குத் தெரியவில்லை. ஒரு புள்ளிவிவரத்தைப் படித்தால், முன்னாலே இருந்த அரசும், இப்போது இருக்கின்ற அரசும், இந்தத் தொழிலாளர்கள் பிரச்சினையிலே எப்படி செயல்பட்டன என்பதை, இந்த நாடும், நீங்களும் தெரிந்துகொள்ளும் வகையில், ஒருசில புள்ளிவிவரங்களை படித்தாக வேண்டும். அதற்கு முன்பு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த காவல்துறையின் போராட்டம், இந்த அளவிற்கு இதைத் தொடங்கினார்கள். யார் யார் பெயரைப் பயன்படுத்தினார்கள். அவரே, “இந்தப் போராட்டத்தை நான் விரும்பவில்லை! இந்த வன்முறைகளை விரும்பவில்லை! இதை நான் ஏற்றுக்கொள்ளவும் இல்லை! ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், எல்லோரும் வேலைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்!” என்று சொல்லியும், சில விஷமிகள் அவரது பெயரை இழுத்து, அந்தக் கருத்துக்குள்ளே புகுந்து விட்டார்கள். ஆகவே, இதற்கு நான் பொறுப்பல்ல என்று சொல்லி, வேலை நிறுத்தத்திலிருந்து பின்வாங்க வேண்டும், வாபஸ் வாங்க வேண்டும் என்று சொன்ன பிறகு, இவ்வளவு நம்பிக்கை இந்த அரசின்மீது வைத்திருக்கின்ற ஒருவருக்கு, அச்சத்தை ஊட்டும் எண்ணம் நிச்சயமாக எங்களுக்கு இல்லை. இந்த அளவிலே, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுகிறோம். இந்தச் சட்டத்தை, இந்த அவையிலே கொண்டு வருவதாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருத்தச் சட்டத்தையும் கொண்டு வருவதாக இல்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், எப்படி சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிற திறமைசாலி என்பதற்கு இதையும் ஒரு உதாரணமாக எடுத்துக்கொள்கிறேன். அவருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இரு கையும் சேர்ந்து கை தட்டினால்தான் ஒலி எழும்பும், அப்படிப்பட்ட நிலைமையை

உருவாக்காமல் இருந்தால், அப்படிப்பட்ட சட்டத்தைக் கொண்டுவரவேண்டிய நிலைமை இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் கொண்டு வந்தும், நாங்கள் அதைப் பயன்படுத்தவில்லை. பழிவாங்கும் நோக்கமோ, ஒரு கட்சியை அழித்துவிட வேண்டுமென்ற நோக்கமோ, ஒரு தொழிற்சங்கத்தை முடமாக்கவேண்டுமென்ற நோக்கமோ எங்களுக்கு இல்லை என்பதற்கு, வேறு ஆதாரம் தேவையில்லை. ஒன்றை நான் சொல்வேன், நான் உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிற அதே நேரத்தில், தயவு செய்து நீங்கள் தொழிற்சங்கத் தலைவர்கள் கோரிக்கை வெளியிட்ட உடனே “எங்கள் கட்சி இதை ஆதரிக்கும், இதற்கு பின்பலமாக இருக்கும் என்று சொல்லாமல், அவ்வாறு அவர்கள் செய்யமாட்டார்கள்” என்ற உத்தரவாதமும் அதிலே தொக்கி நிற்கிறது என்பதை ஒத்துக்கொண்டு, அந்த வகையில், அந்தச் சட்டத்தைத் திரும்பக் காரணம் இன்றிக் கொண்டுவர முயற்சிக்க மாட்டேன் என்று இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்கள் தடை செய்த சங்கங்கள் எத்தனை, எங்கள் ஆட்சியில்? எங்கள் ஆட்சிக்கு முன்னால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியில், தடைசெய்யப்பட்ட சங்கங்கள் எத்தனைத் என்பதுபற்றி ஒருசில புள்ளி விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்!

தடைச் சட்டம் கொண்டு வராமலேயே, 1972ஆம் ஆண்டில் மொத்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை 356; தடை செய்யப்பட்ட வேலை நிறுத்தங்கள் எண்ணிக்கை 7. சிம்கோ மீட்டார்ஸ், திருச்சி; இந்தியா மீட்டார்ஸ், சென்னை; சவுத் இந்தியா விஸ்கோஸ், சிறுமுகை; சிகார் பாக்டரிஸ் தம்மாப்பட்டி; மெட்ராஸ் வனஸ்பதி பிரைவேட் லிமிடெட் நெல்லிக்குப்பம், மாடர்ன் பேக்கரிஸ், சென்னை; மைகோ பார்ம்ஸ் அண்டு கெமிகல்ஸ் லிமிடெட், மேட்டூர்.

1973ஆம் ஆண்டில், 314 வேலை நிறுத்தங்கள். தடைசெய்யப்பட்ட வேலை நிறுத்தங்கள் எண்ணிக்கை 4. மேலும், விவரங்களை இந்த மாதிரி படித்தால், நேரம் ஆகும் என்பதால் படிக்கவில்லை!

இந்தியப் பாதுகாப்பு விதியின்கீழ் தடைசெய்யப்பட்டது 4. சவுத் மெட்ராஸ் எலக்ட்ரிக் கார்ப்பரேஷன், திருச்சி–மத்திய பாதுகாப்பு விதி 1 (18)இன் கீழ் தடைசெய்யப்பட்டது. மேட்டூர் கெமிகல்ஸ், மேட்டூர். 1974ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள் 316. தடை செய்யப்பட்டது 1. 1975இல் வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் 244; தடை செய்யப்பட்டது 1; 1976ஆம் ஆண்டில் வேலை நிறுத்தங்கள் 207, தடை செய்யப்பட்டது 1.

அத்தியாவசியப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டம், தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்கும், நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கும் விடப்பட்ட பின், நீதிமன்றத்தின் அல்லது நடுவர் மன்றத்தின் தீர்ப்பு கிடைக்கவும், தொழில் அமைதியை நிலை நாட்டுவதற்கும் மக்களுக்கு வேண்டிய இன்றியமையாத பணிகள் நடைபெறுவதற்கும், தொழில் அதிபர்கள் தொழிலாளர்கள் அல்லது இரு சாராருக்கும் இடையே உள்ள நிலை, தொழிலாளர்களுக்குப் பணம் கொடுப்பது உட்பட சில நிபந்தனைகளைக்

கடைப்பிடிக்க, ஆணை பிறப்பிக்கப்படுகிறது. அது சம்பந்தமான புள்ளி விவரங்கள் கீழே தரப்படுகின்றன. 1978–1979ஆம் ஆண்டு செப்டம்பர் வரை, நடைபெற்ற மொத்த வேலை நிறுத்தங்கள், மற்ற கதவடைப்புகள் 328, தடை கிடையாது. தொழிலாளர் நடத்திய வேலை நிறுத்தங்கள் 225, தடை கிடையாது, எதுவாக இருந்தாலும் அரசுக்கு அதிலே பங்குண்டு.

தடைச் சட்டம் இருந்தது. இப்போது முடிந்து விட்டது. சொல்லிவிட்டேன். ஆனால், இன்னொன்றைக் கூற விரும்புகிறேன். தவறான வழிமுறையைப் பின்பற்றி, வேலை நிறுத்தம் செய்தது தவறு என்று சொல்கிற தடை, அது கூட எங்கள் ஆட்சியில் இல்லை!

பேராசிரியர் அவர்கள் சொல்லலாம். ஆனால், நான் புள்ளிவிவரம் தரத் தயாராக இருக்கிறேன். காரணம், பல இடங்களில் முன் அறிவிப்பு இன்றி, அண்மையில் கூட என்.ஜி.ஓ.க்கள் நாங்கள் வேலை நிறுத்தம் செய்யப்போகிறோம் என்று நோட்டீஸ் கொடுக்காமல் வேலை நிறுத்தம் செய்தார்கள். அவர்களைத் தடுத்துக் கைதுசெய்து பிறகு, அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்று, அவர்களை அனுமதித்து இருக்கிறோம். இதிலிருந்து உண்மையை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள் என்று கருதுகிறேன்.

ஜனவரி 1979ஆம் ஆண்டு 28, தொழிலாளர்கள் துறை அதிகாரிகள் தலையிட்டு தீர்த்துவைத்தவை 21; தானாகவே வேலை துவங்கியது 1; பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட்டவை 5; மூடப்பட்டது 1. சிக்மில்ஸ் என்ற அளவிலே.

ஒட்டுமொத்தமாகச் சொல்லும்பொழுது, கருத்துக்களை பிரித்துப் பேசுவது பழக்கம் இல்லை என்பது நம்முடைய நண்பருக்குத் தெரியும். பொதுவாகச் சொல்கிற கருத்துக்களை, ஆள் ஒன்று என்று பிரித்துப் பார்க்கக் கூடாது. பொதுக்கருத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் நான், தொழில்துறை பிரச்சினைகளைப் பற்றி இன்னும் பல சொல்லவேண்டி இருப்பினும், ஒன்றை இங்கே பதிலாகத் தரவேண்டியவனாக இருக்கிறேன். பல்வேறு பிரச்சினைகளை, குற்றச்சாட்டுகளை, கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலே, கப்பல் ஊழல் 4 கோடி ரூபாய் என்று, எல்லாப் புள்ளி விவரங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முதலிலே இதே மன்றத்தில் நாங்கள் கப்பல் வாங்குவதற்காக அதிகமான லஞ்சம் வாங்கினோம் என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது. நான் அப்போதே எடுத்துச் சொன்னேன்.

முதலில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட அந்தக் கப்பல் வாங்குவதற்கு இடையில், அவர்கள் சொன்னபடி தருவதற்கு இயலாது என்கிற நிலைமையும், அதிலே பல பிரச்சினைகளும் ஏற்பட்டதன் விளைவாக, குறிப்பாக, வாங்குபவர்கள்தான் கமிஷன் கொடுப்பது வழக்கமே தவிர, விற்பவர்கள் கொடுப்பது இல்லை என்கிற முறை நாட்டிலே இருந்தாலும், விற்கின்ற, சாரி, வாங்குகிறவர்கள் கொடுக்க வேண்டுமென்றும், விற்பவர்கள் இல்லை என்றாலும், நாங்கள் கொடுக்க

வேண்டுமென்று இருப்பதுபோக, அவர்கள் கொடுக்க வேண்டுமென்று பேச்சிலே வெளிப்படுகிறது என்று எண்ணி, அது நிறுத்தப்பட்டு விட்டது என்பதை, இந்த மன்றத்திலே நான் முன்பு சொல்லியிருக்கிறேன், அந்தப் பிரச்சினையைக் கலைஞர் அவர்கள் பேசியிருக்கிறார்கள்; முடிந்து போன ஒரு பிரச்சினை. போன அசெம்பிளி கூட்டத்தொடரில் நான் சொல்லி அது முடிக்கப்பட்ட பிரச்சினை.

தலைவர் அவர்களே, அது என்ன தொடர்பு ஏன் தொடர்பு, என்பதைப் பற்றி நாங்கள் விசாரிக்க வேண்டுமே தவிர, அதிலே அரசுக்கு என்ன சம்பந்தம் என்பது, எனக்குத் தெரியவில்லை, என்னுடைய பிரச்சினையெல்லாம் இந்தத் தமிழக அரசு யாரையாவது அப்படி ஒருவரை நியமித்து, நீங்கள் இதற்காகப் பேசுங்கள் என்று சொல்லுங்கள் என்று ஏற்பாடு செய்திருக்கிறதா ? அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றனவா ?

பேரவைத் தலைவரவர்களே, என் பக்கம் கருத்துக்களைச் சொன்னதற்காக எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகள் அரசுக்குச் சொந்தமான பிரச்சினைகள் அல்ல என்று மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். அது தனி நிறுவனம். அது தவறு செய்தால், ஆட்களை மாற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறதே தவிர, அவர்கள் செய்வதில் தலையிடுகின்ற அதிகாரம் இல்லை என்பது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களுக்குத் தெரியும். அப்படியிருந்த காரணத்தால்தான், அதில் தவறுகள் ஏற்படுகின்றன என்று தெரியும்பொழுது, ஆட்களை மாற்ற வேண்டியதாக இருக்கிறது. பின்னால் சொன்னார்கள். புள்ளி விவரங்களைச் சொன்னார்கள். ஒரு கோடி கை மாறியது என்ற முறையிலே குறிப்பிட்டார்கள். அங்கே எழுதி வைத்திருப்பார்கள். பிறகு சொன்னார்கள். 4 கோடி ரூபாய்க்கு ஏற்பாடு செய்யப்பட்டது என்று சொன்னார்கள். இப்பொழுது 4 கோடி ரூபாய் கொடுக்கப்பட இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமைகளையெல்லாம் நான் இங்கே குறிப்பிடும்பொழுது விரிவாகச் சொல்லி நேரத்தை எடுத்துக்கொள்ளாவிட்டாலும், ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்லியாக வேண்டும். பல்கேரியா அந்தக் கம்பெனியிடம், அதாவது, அரசுக்குச் சொந்தமான கம்பெனி அது, அந்தக் கம்பெனியிலிருந்து இந்தத் தமிழக அரசு எந்த வகையிலேயாவது; அங்கேயிருந்து சல்லிக்காசாவது வாங்குவதற்கு முயற்சியெடுத்து, வாங்கியிருக்கிறது என்பதைச் சட்டபூர்வமாக நிரூபித்துக் காண்பித்தால், நாங்கள் அத்தனை பேரும் இராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறோம்!

பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் மிக ஆழமாக கவனம் செலுத்தித்தான், இதில் நாங்கள் ஈடுபட்டோம் என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அவ்வப்போது விலையை உயர்த்த வேண்டுமென்கிற நிலைமை ஏற்பட்டபோதெல்லாம், அதிகாரிகளை அனுப்பிப் பேச வைத்து, எப்படியும் கப்பல் வேண்டுமென்கிற நிலைமை ஏற்பட்ட பொழுது, அமைச்சரவை கூடி வேண்டுமென்றால் அதிகப்படுத்தலாம் என்கிற அனுமதியை அவர்களுக்குக் கொடுத்தாலும், சென்ற

அதிகாரி அதற்குக் குறைவாகவே அங்கே விலை பேசிவிட்டு வந்தார் என்பதையும் இங்கே நான் சொல்லியாக வேண்டும்.

அதோடு இங்கே வந்த பிறகு, திரு.பாங்கோ மறைந்த பிறகு சில பிரச்சினைகள் என் காதுகளுக்கு வந்தன. இப்பொழுது படித்துக் காட்டினார்களே, அதிலே சில கடிதங்கள், அங்கே போர்ட் மீட்டிங்கிலே கொடுக்கப்பட்டது என்பதும், எனக்குத் தெரிந்து, அந்தக் கடிதங்கள் போதிய அவகாசம் இல்லாத வகையில், எந்த நேரத்தில் அவை வந்தனவோ உடனடியாக அரசுக்குத் தகவல் தெரிவிக்கப்படவில்லையென்கிற காரணத்தினால்தான், அந்த நிறுவனத்தில் மானேஜிங் டைரக்டராக இருந்த இராமகிருஷ்ணன் அவர்களை மாற்றினோமே தவிர, எங்களுக்குச் சாதகமாக அவர் செய்யவில்லை என்பதற்காக அல்ல, என்பதை இந்த அவையிலே சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும். அந்தக் கோப்பிலே, கோப்பை பற்றி மற்றவர்கள் கேலியாகப் பேசலாம். ஆனால், கோப்புகள்தான் நமக்கு மிச்சமாக நிற்கின்றன. அந்தக் கோப்புகளில் நான் எழுதியிருப்பது, இனிமேல் எந்தக் காரணத்தை முன்னிட்டும் ப்ரோக்கரை வைத்து, எந்தப் பணியிலும், எந்தத் தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது என்று எழுதிக்கொடுத்து, அதிகாரிகளை வைத்து, இப்பொழுது அரசுக்கு அரசு என்ற வகையிலே, பேச்சுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதே தவிர, அதுவும் நேற்றைய இரவு 2 மணிக்கு 72 இலட்சம் ரூபாய் அதிகமாகத் தரவேண்டுமென்று அங்கேயிருந்து கேட்டு, நாங்கள் முடியாது என்று சொல்லி, சம்பந்தப்பட்ட போக்குவரத்துத்துறை அமைச்சருக்குச் சொல்லி, அதை ‘கான்சல்’ செய்தாலும் செய்யலாம். ஆனால், மேற்கொண்டு 72 இலட்சம் கொடுக்க முடியாது; காரணம் என்னவென்றால், விலைவாசி உயர்வுக்கு இடையிலேயே கிரேன்கள் வேண்டுமென்று நாம் கேட்டிருக்கின்றோம். இரண்டு விதமான கிரேன்கள் இருக்கின்றன. ஒன்று, மிக திடமான, உறுதியான கிரேன்கள். இதைத் தருவதாக ஒப்பந்தத்திலே எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், இதை மாற்றி ஜெர்மன் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் தர மறுக்கின்றார்கள். ஆகவே, நாங்கள் அதை மாற்றிச் செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்லும்போது 72 இலட்சம் ரூபாய் அதனால், அந்தக் கம்பெனி, லாபம் பெறுகிறது. அது குறைக்கப்பட வேண்டும், அது அரசுக்கு தரப்பட வேண்டுமென்பது எங்களது கோரிக்கை. கொஞ்சம் சாதாரணமான நல்ல கிரேனைப் போட முடியவில்லை. இதைத் தான் தரமுடியுமென்றால், அந்தப் பணத்தை அரசாங்கத்திற்கு தர வேண்டும். அதைக் கணக்கிலே வரவு வைத்துக்கொள்ள நீங்கள் இணங்க வேண்டுமென்று சொல்லி, நேற்றைக்குத்தான் அங்கேயிருக்கிற அதிகாரிக்கு டெலக்ஸ் மூலமாக தகவல் தரப்பட்டிருக்கிறது. இரவு இரண்டரை மணிக்கு மேல் என்று கருதுகிறேன். ஆகவேதான், இந்த விஷயத்தில் நாங்கள் மீண்டும் சொல்ல விரும்புவது, கப்பல் வாங்குகிறோமா, இல்லையா? இல்லை, நிறுத்திவிடுகிறீர்களா என்றெல்லாம் சொல்கிறார்கள், குற்றம்சாட்டி விட்டார்கள் என்பதற்காக, ஒரு நல்ல காரியத்தைச்

செய்யாமல் விட்டுவிடுவது என்பது, இந்த அரசினுடைய நோக்கம் அல்ல. அல்லது, குற்றம் சாட்டவில்லை, எப்படியாவது இது நடந்து போக வேண்டுமென்பதற்காக, தீமையாக இருந்தாலும் அதை நடத்துவது என்பதும், இந்த அரசினுடைய கொள்கை அல்ல. ஆகவே, நாங்கள் குறிப்பிடுவது பல்கேரிய கப்பல் வாங்கப் பெற்றாலும் அது அந்த அரசினுடைய தொடர்போடு, தெரிந்துதான் நடந்திருக்கிறது, 'அம்பாசிடர்' முதற்கொண்டு தெரியும். 'அம்பாசிடர்' வந்து சந்தித்துப் பேசுகிற அளவிற்கு நாம் வைத்திருக்கிறோமே தவிர, யாரும் ப்ரோக்கர்கள் வைத்து நடைபெறுவதில்லை. அப்படி நடந்தால் அதை ஏற்றுக்கொள்ளப் போவதும் இல்லை.

என்னுடைய கோப்பில், நான் இறுதியாக உத்தவு போட்டிருக்கிறேன். நேரடியாக இதுபோன்ற வெளிநாட்டு தொடர்புள்ள எந்தக் காரியம் நடைபெறுவதாக இருந்தாலும் அரசுடனேயோ அல்லது அந்தக் கம்பெனியுடன் இந்த அரசிலே இருக்கிற அதிகாரிகள் தொடர்பு வைத்துக்கொள்ளலாமே தவிர, இடையிலே எந்த கம்பெனிகளும் புரோக்கர்கள் என்று வந்தால், அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டிருப்பதை, நான் படித்துக்காட்டத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இந்தச் செய்திகள் முழுவதும் படித்துக் காண்பிக்கும்போது, தொடர்பாகத் தெரியும், ஏதோ ஒன்றுக்கொன்று இணை இருப்பதைப் போல் சொல்ல முடியும். அதுவும் கலைஞர் அவர்களுக்கு இருக்கிற திறமையில், இடையிலே; இடைச்செருகல்போல அங்கங்கே பேசும்பொழுது; 'இது எதற்காகத் தெரிகிறதா, இந்த லஞ்சத்திற்காக; இதைப் பேசுவது எதற்காக, அங்கே பணம் பெறுவதற்காக; இந்தப் புள்ளி விவரம் எதற்காக வருகிறது தெரியுமா, அந்தக் கடிதம் ஏன் போகிறது தெரியுமா, இதை இப்படிச் சுற்றி வளைத்து இப்படிக் கொண்டு வா பணத்தை என்று சொல்வதற்காக' என்று அவர் சொல்கிறார். ஒருவேளை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் திறமை இருக்கலாம். ஆனால், எங்களுக்கு அந்தத் திறமையில்லை என்பதை நான் தயவு செய்து சொல்கின்றேன்.

தலைவரவர்களே, இந்த உணர்ச்சி வளர்க்கப்படுகின்ற சூழ்நிலையை நான் உருவாக்க விரும்பவில்லை. ஆனால் ஒன்றை நான் சொல்லியாக வேண்டும். இந்தப் பிரச்சினைகள், அவர் கொடுத்த டெலக்ஸ் என்று சொல்வது எல்லாம் நேரடியாக எந்த அமைச்சருக்கோ அல்லது எனக்கோ அவர் தெரிவிக்கவில்லை. கூறவுமில்லை. போர்டு மீட்டிங்கில்தான் வைத்து இருக்கிறார்கள். அது முறைகேடு, எனக்குத் தகவல் கொடுத்திருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், அவர்களை அழைத்து விசாரித்தேன். இங்கே 'போகஸ்', 'போகஸ்' என்று சொல்லுகிற போலந்துக் கப்பலைப் பற்றி, குறைபாடுகளைப் பற்றி சொல்லும்போது, அவர் என்னிடம் சொன்னார். அவர் சொன்னது; ஏதோ கையெழுத்து சரியாக இல்லை; கம்பெனியினுடைய பெயர், முத்திரைக் கூட இல்லை. இதை எப்படி நம்புவது, கேட்டுவிட்டு, இன்னொரு புத்தகத்தை அப்பொழுதுதான் புரட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது, அதிலே வந்த கவரிங் லெட்டர் போல, கவரிங் புக்லெட் வந்து இருந்தது. அச்சடிக்கப்பட்ட புத்தகமும், கடிதமும் இருந்தது. அதிலே எழுதப்பட்டு இருந்தது. நாங்கள் முன்னால்

எழுதிய கடிதத்தில், எழுதி இருக்கிற எண்ணில் தவறு இருக்கிறது. திருத்தச் சொல்லி இருக்கிறோம். இந்தந்தக் கப்பலுக்கு தேவையான இந்த உறுப்புகள் இவைகள் எல்லாம் அதிலே இருக்கிறது என்று, அந்த பிரின்ட் செய்த புத்தகத்தையும் கடிதத்தையும் காட்டினார். நான் கேட்டேன் நீங்கள் இந்த ஒரு கடிதத்தை மட்டும் படித்துவிட்டு, இதை 'போகஸ்' என்று எப்படி சொல்ல முடியும்? இதையும் விவரமாகப் படித்திருக்க வேண்டும் அல்லவா? அங்கே இருக்கிற அதிகாரிகள் இன்னொரு புத்தகத்தை அனுப்பி, படங்களை அனுப்பி, அதிலே இன்னின்ன கருவிகள் என்பதைப் பற்றியெல்லாம் விவரம் தந்திருக்கிற முன்னால், நாங்கள் எழுதியிருந்த கடிதத்திலே, இருக்கிற எண்ணிலே மாற்றம் இருக்கிறது, தவறு ஏதாவது உள்ளதா என்றெல்லாம் எழுதியிருக்கிறார்களே இதைப்பற்றியெல்லாம் ஏன் சொல்லவில்லை? என்று கேட்டபோது பதிலே வரவில்லை. அவருடைய பேச்சை எல்லாம் இங்கே நாடாவில், யாரோ ஒரு பாபா பதிவு செய்திருப்பதாக சொன்னார்களே, அதைப்போல நானும் பதிவு செய்து வைத்திருக்கிறேன். அவரது பேச்சை மட்டுமல்ல; அதேபோல இன்னொருவர், மேல் அதிகாரி அவரையும் வைத்து விசாரணை வைத்த பிறகுதான், இந்தக் கோப்பிலே, இந்தக் கருத்தை எழுதினேன். அப்போதுதான் அவரிடம் சொன்னேன். உங்களுக்குத் தெரிந்தவைகளை, நீங்கள் உங்களுடைய இலாகா அமைச்சருக்கு தெரிவித்திருக்க வேண்டும். அந்தக் கடிதத்தை எங்கோ கொண்டுபோய் வைத்துக்கொண்டு, அதை வெளிக்காட்டாமல் இப்படி செய்திருக்கிறீர்கள். நீங்கள் நடந்து கொண்ட முறை தவறு. ஒரு அதிகாரி அப்படி இருக்கக் கூடாது, என்று சொன்னாலும், அவர் மிகத் திறமையோடு செயல்படுகிறவர் என்கிற காரணத்தால், இவரைப் பதவியிலிருந்து இறக்க வேண்டுமென்றல்ல, வேறு வழியிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தால் வைத்துக் கொண்டேமே தவிர, இவ்வளவு பெரிய பொறுப்பை தந்தது, ஒரு நாட்டுக்கு தீமை ஏற்படக் கூடிய ஒரு காரியத்தைச் செய்யக்கூடாது என்பதுதான் என் நோக்கம் என்பதை சொல்லி, என்ன எழுதியிருக்கிறது என்பதைப் படித்துக்காட்டுகிறேன்.

எவ்வளவு அவசரமாக கரி கொண்டு வரவேண்டும் என்று மின்சார வாரியமும், தொழில் அதிபர்களும் வற்புறுத்துகின்றார்களோ அதற்கு நேர்மாறாக தாமதமாகிக் கொண்டே போகிறது. நான் அமெரிக்காவிற்கு போகும் முன், அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டும் இன்னமும் குழப்பம் என்ற நிலைமை இருக்குமானால், இதன் அடிப்படைக் காரணம் கண்டுபிடித்து நீக்கப்பட்டாக வேண்டும்.

புரோக்கர் இன்றி, பல்கேரிய அரசுடன் நேர்முகப் பேச்சு நடப்பதாகக் கூறியிருந்தும், இப்போது குழப்பம் என்று தகவல் வருவது குறிப்பிற்குரியதாக உள்ளது. திரு. எச்.எம்.மோகிந்தர் சிங் முதலில் வெளிநாடு சென்று ரஷ்யா கப்பல் வாங்க ஒப்பந்தம் செய்து வந்தார். உதிரி உறுப்புகள், எவ்வளவு தருவார்கள், பழுதானால் ஆட்கள் தருவார்களா என்று அவர்களிடம் உறுதி பெறாமல் வந்து விட்டார் என்று கூறப்பட்டது. இது போன்று, இன்னும் சில காரணங்கள் கூறி, அதை வேண்டாம் என்று கூறியதன் பேரிலும், திரு. மோகிந்தர் சிங் பேசினால், காலதாமதம் ஏற்படும்

என்பதாலும், திரு. பாங்கோ அவர்கள், மறைந்து விட்டார் அவரிடம் ஏற்பாடு செய்யச் சொல்லி, அமைச்சரவை 11.2 என்ற வகையில், பல்கேரிய கப்பலை அவர் 15 கேட்டதால் வாங்க அனுமதித்தது. அவர் 13க்கே நேரில் பேசி முடித்து வந்தார். அதன் பிறகு, அதைவிட குறைந்த விலையில் அதிக வசதியுடன் ரூபாய் முறையில் பெற்றுக்கொண்டு, பல்கேரிய கப்பலின் விலையை விடக் குறைவாகத் தருவார்கள் என்ற காரணத்தால், அதை வாங்கலாம் என்று அமைச்சரவை முடிவு எடுத்தது. ஆனால் இப்போது மீண்டும், குழப்பம் என்றும், அப்படி கப்பல் கொடுக்க ஒரு கம்பெனி தயாராக உள்ளதா, இல்லையா என்றும் செய்தி குறிப்பிடுவது ஏன், என்று புரிந்துகொள்ள இயலவில்லை. எனவே, தலைமைச் செயலாளரைக் கலந்து அவர் கருத்தை அறியலாம்.

திரு. இராமகிருஷ்ணன், திரு. எச்.எம்.சிங், அவர்கள் இருவரும், இந்தக் கப்பலைப் பற்றிய தொடர்புகளின் விவரங்களை இனி போக்குவரத்துத்துறை அமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டும். யாராவது ஆட்சியில் சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொள்வார்கள் என்றால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

‘பூம்புகார் கப்பல்’ போக்குவரத்துக் கழகம் ஒரு வாரியமாக இருப்பினும், அது எப்படி செயல்படுகிறது என்பதையும், இது போன்றவைகளில், உடனுக்குடன் உண்மைச் செய்திகளையும் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். இப்போது பல்கேரியா கப்பல், போலந்து கப்பல் இவற்றின் நிலைமை என்ன? இவைகளைப் பற்றிய கடிதப் போக்குவரத்துகள் யாவை என்பதை என்னிடத்தில் நேரில் காண்பித்து, திரு. எச்.எம்.சிங், திரு. இராமகிருஷ்ணன் எனக்கு விளக்க வேண்டும். நாளைய தினம் பிற்பகல் 2 மணி முதல் 3 மணி வரையில் தியாகராய நகரில் உள்ள என்னுடைய அலுவலகத்தில் சந்திக்க வேண்டும். இது தான் நான் எழுதியது.

அதற்குப் பிறகு, திரு. எச்.எம்.சிங், திரு. சீனிவாசன், திரு. கே.எஸ். இராமகிருஷ்ணன் ஆகிய மூவரும், அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் முன்பாக விளக்கங்களையும், ஆதாரங்களையும் தனித்தனியாக, அந்த பல்கேரிய கப்பல் வியாபாரத்தில் சில தவறுகள் நடக்க இருந்தன என்று, கண்டறிந்து கொண்டேன். எனவே, அது பற்றி சம்பந்தப்பட்டவர்களை விசாரிக்க வேண்டும். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதற்கு சில நாட்கள் தேவைப்படுகின்றன. எனவே, அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் கோரிக்கைபடி, ஒரு மாத தவணை கேட்டு எழுதுவது மிகவும் தேவையாகிறது. எனவே, இது சம்பந்தமாக அந்தக் கப்பல் கம்பெனிக்கு இன்றே டெலக்ஸ் மூலமாக தெரிவிக்கவும். விரைவில் அமைச்சரவைக் கூட்டி, இது சம்பந்தமாக ஆதாரங்களையும், கருத்துக்களையும் கூறி, அமைச்சரவை விரைவில் முடிவு எடுக்க ஆவன செய்யவேண்டும். இது அவசரமும், மிகவும் முக்கியத்துவமும் உள்ள விஷயமாகும். நம்முடைய கொள்கைக்கு நேர்மாறான கருத்துக்கள் இருப்பதாக நான் உணர்வதால், விரைவில் சரியான முடிவு எடுத்து சம்பந்தப்படுபவர்களை நீக்கியாக வேண்டும். நடுவில் புரோக்கர்கள் என்பதே அடியோடு நீக்கப்பட வேண்டும். இது என்னுடைய உத்தரவு.

இதற்கு மேல் ஒரு முதலமைச்சர் என்ன செய்ய முடியும்? என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி நாங்கள் நடவடிக்கை எடுத்து, தவறுகள் நேருகின்றன என்று பார்க்கிறபோது, நான் டெல்லிக்குப் போனபோது, ‘அம்பாசிடர்’ அவர்களை வரவழைத்து, அவர்களிடத்தில் நேரில் பேசினேன். இதில் வேறு யாரும் குறுக்கிடக் கூடாது. இதிலே நேரடியாக அதிகாரிகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இதற்கிடையில் எனக்கு ஒரு பிரச்சினை வந்தது.

அவர்களால் இன்னின்ன ‘ஸ்பேர் பார்ட்ஸ்’ கொடுப்பதாக எழுதி இருந்ததில், திடீரென்று சில குறைவுகள், அதிலே சில ‘அட்ஜெஸ்ட்மெண்ட்’ செய்து கொள்ளலாம் என்பதுபோல ஒரு கடிதம் வந்ததாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் சந்தேகப்பட்டேன். இவ்வளவு ‘அட்ஜெஸ்ட்’ செய்யலாம் என்றால், புரோக்கர்களுக்கோ, முன்னால் பேசப்பட்டவர்களுக்கோ ஏதோ இதிலிருந்து போகிறது என்று பொருள். ஒரு 20 அல்லது 30 இலட்சம், 50 இலட்சம் ‘ஸ்பேர் பார்ட்ஸ் தருகிறேன்’ என்று சொல்கிறபோது, அதாவது ஒன்றரை கோடி ரூபாய் அளவிற்கு ‘ஸ்பேர் பார்ட்ஸ்’ தருகிறேன் என்று சொல்கிறபோது, அதிலே கொஞ்சம் கொடுக்கிறோம், இதைக் கொஞ்சம் மாற்றி முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னதால், எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. உடனடியாக, அந்தக் கடிதத்தை மத்திய அரசுக்கு அனுப்பினேன். மத்திய அரசுக்கு அனுப்பி, எனக்கு இப்படி சந்தேகம் இருக்கிறது. ஆகவே, உங்கள் அதிகாரிகளை வைத்து, இதை விசாரித்து இதை ஏற்றுக்கொள்வதா, கூடாதா, இதிலே உண்மையான தவறு என்ன? என்று கண்டுபிடித்துத் தரவேண்டும். அதற்கு நான் கடிதம் எழுதினேன். அதற்குப் பிறகு அவர்கள் விசாரித்தார்கள். விசாரித்த பிறகு அவர்களே நேரடியாகப் பேசினார்கள். பல்கேரியா கப்பல்காரர்கள் தமிழகத்தில் இருந்து அல்ல, இந்தியாவிலிருந்து ஒரு ஆண்டுக்குள், இத்தனை கோடி ரூபாய்க்கு ஏதாவது அதற்கு பதிலாக, அவர்கள் சாமான்கள் வாங்கவேண்டும் என்று அவர்கள் கட்டளை போட்டார்கள்.

அதை உடனே அவர்கள் மறுத்தார்கள். எங்களால் முடியாது. எங்களுக்குத் தேவையான பொருட்களை ஒப்பந்தம் செய்து, முன்னாலே வாங்கியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி இருந்தால்தான், இதை நாங்கள் கவனிக்க முடியும் என்று மைய அரசு சொன்னது. உடனே அவர்கள் சொன்னார்கள், நாங்கள் வேண்டுமென்றால், இத்தனை கோடி ரூபாய்க்கு சாமான்கள் வாங்கிக் கொள்கிறோம் என்று சொன்னார்கள். இந்திய அரசு உடனே ‘இத்தனை கோடி ரூபாய்க்கு, இன்னின்ன சாமான்களை, இந்த ஆண்டுக்குள் வாங்குகிறோம் என்று எழுதித் தாருங்கள்!’ என்று கேட்டது. “அது எங்களால் முடியாது! வேண்டுமென்றால், இந்த ஆண்டுக்குள் என்று சொல்கிறோம்; அப்படி எழுதித் தருகிறோம்!” என்று சொன்னார்கள். அப்படி சொன்ன பிறகு ஒப்பந்தம் செய்து, அதன் பிறகுதான் அனுமதி எங்களுக்கு வந்தது. இதுதான் உண்மை.

அவர்கள் சுட்டிக்காட்டவும் இல்லை; அவர்கள் கடமையை சரிவரச் செய்யவும் இல்லை. அதுபற்றி எனக்குத் தகவல் கொடுக்கப்படாதது மாபெரும் குற்றம். அந்த

இலாகா அமைச்சருக்கு தகவல் சொல்லியிருக்க வேண்டும். இந்தக் கடிதங்கள் இப்போது வந்து பேசுகின்றனவே, அதுபோல, முன்பே பேசியிருந்தால், அந்த 'போர்டு மீட்டிங்கிற்'குப் போவதற்கு முன்பே பேசியிருந்தால், நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம் நான் தொடங்கிய என்னுடைய பதிலின் தொடர்ச்சியாக, இன்றைய தினம் தொடர்ந்து என்னுடைய கருத்துகளை நான், இங்கு வெளியிட வாய்ப்பு தந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டினுடைய பொதுநிலையைப்பற்றி எண்ணி, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நல்ல நோக்கத்தோடு எடுத்துக்காட்டுகின்ற குற்றங்குறைகளை கவனித்து, குறைகள் இருந்தால், திருத்திக்கொள்ள வாய்ப்புத் தருகின்ற வகையில், இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பெற்றிருக்கிறது என்று நான் நேற்று முன்தினம் குறிப்பிட்டிருந்தாலும் கூட, இன்றைய தினம், சில புள்ளி விவரங்களை; நான் நேற்று முன்தினம் சொல்ல வேண்டியதை; இன்று தொடர்ந்து சொல்ல வேண்டும் என்று கருதுகிறேன். தொழில்துறை, தொழிலாளர்கள் பிரச்சினை இவைகளைப்பற்றி நான் கொஞ்சம் நேற்று முன்தினமே சொல்லியிருக்கிறேன். அந்த வகையில், இந்த அரசின் தொழில் கொள்கையைப்பற்றி, இங்கே நான் பலமுறை எடுத்துப் பேசியிருக்கிறேன். கிராமப்புறத்திலிருக்கின்ற வேலையில்லாத ஏழைத் தொழிலாளர் மக்களுக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற வகையில், சிறுதொழில்கள் எங்கெங்கே ஆயிரக்கணக்கில் தொடங்க வேண்டும் என்பது, இந்த அரசின் நோக்கம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் கனரகத் தொழிற்சாலைகளையும், அது போன்ற வேறு பெரிய தொழிற்சாலைகளையும் நிறுவக் கூடாது; உருவாக்கக் கூடாது, என்பது எங்கள் கொள்கை அல்ல, என்பதை நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கிறோம்.

“அந்த வகையில் இந்த ஆட்சி என்ன செய்து விட்டது ? என்ன செய்திருக்கிறது ?” என்று கேட்கிறவர்களுக்கு நான், சில புள்ளிவிவரங்களை எடுத்துக்காட்டுவது கடமையாக இருக்கிறது. இங்கு இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அவரவர்களுடைய தொகுதியில், என்னென்ன நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன, எவை எவை நடைபெறவில்லை என்பதை மிகத் தெளிவாக, இதில் வாய்ப்புப் பெற்றவர்கள் அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலுடையவர்கள் என்றாலும், அப்படிப்பட்டவர்களுக்கு நினைவுபடுத்தக்கூடிய வகையில் சொல்ல வேண்டியிருக்கிறது. என்றாலும் என்னவோ எதுவும் நடைபெறவில்லை, எதற்கும் முக்கியத்துவம் கொடுத்து, அதற்காக, தங்களுடைய கடமையை ஆற்ற முன்வரவில்லை என்ற கருத்தைச் சொல்லும்போது, இவைகள் அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும்கூட இந்த அமைச்சரவை என்ன செய்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குச் சொல்வதின் மூலம், நாட்டு மக்களுக்கு விவரங்களைத் தெரிவிப்பதற்கு, இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

புதிய தொழில்கள் என்ற நிலையில், நாங்கள் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம். அறிவியல் துறையின் மூலம், புதிய புதிய யுக்திகளைக் கண்டுபிடித்து, அதன் விளைவாக, நாட்டில் வெளிநாடுகளுக்கு அனுப்பக் கூடிய வகையில்; நல்ல கருவிகளை உருவாக்குவது என்பது ஒன்று. தொழிற்சாலைகளை உருவாக்குவதின் மூலம், தொழிலாளர்களுடைய உழைக்கும் நேரத்தைக் குறைத்து, தேவையான வருமானமும், வேலையும் கிடைக்கச் செய்வது மற்றொன்று. அதே நேரத்தில், கிராமப்புறத்தில் இருக்கின்ற மக்கள், விஞ்ஞான ரீதியாக தொழில் செய்யத் தெரியாத மக்கள், உடலுழைப்பின் மூலமாக, கடினமாக உழைக்கத் தகுதியுடையவர்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்ற வகையில், எங்கள் கொள்கையை நாங்கள் அமைத்துக்கொண்டிருக்கிறோம்.

அந்த நிலையில் புதிய ஆலைகள் என்ற குறிப்பில், 1978–1979ஆம் ஆண்டு தருமபுரி மற்றும் இராமநாதபுரம், கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில், புதிய ஆலைகள் நிறுவப்பட்டு, செயல்பட்டு வரும் கதிர் திறன்களை விரிவாக்கவும் அரசு பரிந்துரை செய்ததன் பேரில், பஞ்சாலை ஆணையாளர் உரிமம் வழங்கி இருக்கிறார்கள் என்பதைச் சொல்லி; இந்தப் புள்ளி விவரங்களை நான் இங்கே கொடுக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

கோயம்புத்தூரில் 1978–1979ஆம் ஆண்டில் 5; இதுவரையில் 1979–1980ஆம் ஆண்டில், 1. சேலத்திலே, சிறு தொழில்களுக்கான முயற்சிகள் எடுக்க வேண்டுமென்ற வகையிலே, அதிக நண்பர்கள் குறிப்பிட்டு பல முக்கிய தொழிற்சாலைகளை அங்கே உருவாக்குவதற்கு முன்வராத காரணத்தினால், இரண்டாண்டுகளிலும் புதியதாக எதையும் செய்ய முடியவில்லை. தருமபுரியில், 1978–1979ஆம் ஆண்டில் 2; 1979–1980ஆம் ஆண்டில் 6 என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இராமநாதபுரத்தில் 1978–1979ஆம் ஆண்டில் 4 ஆலைகள்; 1979–1980ஆம் ஆண்டில் 4 ஆலைகள்; கோயம்புத்தூரில் 1978–1979இல் 12 ஆலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன; 1979–1980இல் 11 ஆலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. 1978–1979இல் சேலத்தில் 3, தருமபுரியில் இல்லை, இராமநாதபுரத்தில் 3. மேற்சொன்ன 4 மாவட்டங்களிலும் 22 புதிய ஆலைகளும், 29 ஆலைகள் விரிவாக்கம் செய்யவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன. புதிய ஆலைகளில் 5,37,700 கதிர்களும், விரிவாக்கத்தின் மூலம் 6,28,468 கதிர்களும் நிறுவப்படும். இதனால் 22,600 பேர்களுக்கு புதிய வேலைவாய்ப்பு கிடைக்க வழி செய்யப்பட்டு இருக்கின்றன. இதை நான் குறிப்பிடும்போது, இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும்.

சில மாவட்டங்களில், சில தொழில்கள் அதிகமாக நிறுவப்பட்டு இருக்கின்றன. அங்கே முன்னதாகவே அப்பேர்ப்பட்ட தொழிற்சாலைகள் உருவாகியதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கின்றது. ஆனால், குறிப்பிட்ட ஒரே மாவட்டத்தில் அல்லது ஒன்றிரண்டு மாவட்டங்களில் அத்தகைய தொழிற்சாலைகள் நிறுவப்படும் என்கிற நிலையை மாற்றி, பிற்பட்ட

பகுதிகளுக்கு, முன்னேறாத பகுதிகளுக்கு உதவ வேண்டுமென்கிற வகையில், அத்தகைய பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, ஆங்காங்கே புதியத் தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு இந்த அரசு முனைந்து, அதனைச் செயலாக்கம் கொண்டு வரும் திட்டத்தை உருவாக்கி, செயல்பட முனைந்திருக்கிறது. அந்த வகையில்தான் உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும், விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும், அதற்கான புள்ளிவிவரங்களையும் நான் சொல்ல விரும்புகின்றேன்.

கோயம்புத்தூரில் புதிய ஆலைகள் 5; விரிவாக்கம் செய்யப்பட்டது 12; ஆக மொத்தம் 17. சேலத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டது 3; புதிய ஆலைகள் இல்லை; ஆக மொத்தம் 3. தருமபுரியில் விரிவாக்கம் இல்லை; புதிய ஆலைகள் 2; ஆக மொத்தம் 2. இராமநாதபுரத்தில் விரிவாக்கம் 3; புதிய ஆலைகள் 4; ஆக மொத்தம் 7. அங்கே விரிவாக்கம் இப்போது போதுமான அளவிற்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. 1979–1980ஆம் ஆண்டுகளில், கோயம்புத்தூரில் விரிவாக்கம் 11; புதிதாக 1; மொத்தம் 12. சேலத்தில் இல்லை. தருமபுரியில் விரிவாக்கம் இல்லை; ஆனால் புதியதாக ஆலைகள் 6; மொத்தம் 6. இராமநாதபுரத்தில் விரிவாக்கம் இல்லை; புதிய ஆலைகள் 4; மொத்தம் 4. இதே போல கதிர்களின் எண்ணிக்கையை விரிவாக்கியதன் மூலம், 2,80,000 கதிர்கள் கோயம்புத்தூரில், புதிய ஆலைகளின் மூலம் 1,25,200 கதிர்கள். சேலத்தில் விரிவாக்கியதன் மூலம் 61,652 கதிர்கள்; புதிய ஆலைகள் இல்லை.

அதுபோல் தருமபுரியில் விரிவாக்கம் இல்லை. ஆனால் புதிய ஆலைகளின் மூலம் 50,000 கதிர்கள் இயங்குகின்றன. இராமநாதபுரத்தில் விரிவாக்கம் 81,260; புதிய ஆலைகள் இலட்சம் கதிர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மொத்தம் கதிர்கள் 4,05,280. சேலத்தில் 61,652; தருமபுரியில் 50,000; இராமநாதபுரத்தில் 1,81,260 கதிர்கள்.

வேலைவாய்ப்பு – விரிவாக்கத்தின் காரணமாக கோவையில் 3,804 பேர்களுக்கும் புதிய ஆலைகளின் மூலமாக 2,767 பேர்களுக்கும் வேலை. ஆக மொத்தம் 6,571 பேர்களுக்கு புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

சேலத்தில் புதிய ஆலைகளில் விரிவாக்கத்தின் மூலம், வேலைவாய்ப்பு 1,134 பேர்களுக்கு, தருமபுரியில் புதிய ஆலைகளின் மூலம், 925 பேர்களுக்கு வேலை. இராமநாதபுரத்தில் 1,334 பேர்களுக்கு விரிவாக்கத்தின் மூலம் வேலை; புதிய ஆலைகள் மூலம் 1,852 பேர்களுக்கு வேலை. ஆக மொத்தம் 3,186 பேர்களுக்கு வேலை. ஆக ஒட்டுமொத்தமாக, 11,816 பேர்களுக்கு வேலை கிடைக்கிறது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் 1979–1980ஆம் ஆண்டில் விரிவாக்கத்தின் மூலம், கோவை மாவட்டத்தில் 2,35,476 கதிர்கள். புதிய ஆலைகள் 25,000.

முன்னே சொன்னது கதிர்கள் – இப்போதுச் சொல்வது வேலைவாய்ப்பு. விரிவாக்கத்தின் மூலம், 4,246 பேர்களுக்கு வேலைவாய்ப்பு. புதிய ஆலைகள் மூலம், 603 பேர்களுக்கு வேலை. மொத்தம் 5,849 பேர்களுக்கு வேலை.

சேலம் இல்லை. தருமபுரி மாவட்டத்தில் 1,37,000 கதிர்கள் புதிய ஆலைகள் மூலமாக.

அதனால், 2,981 பேர்களுக்கு புதிய ஆலைகள் மூலமாக வேலைவாய்ப்பு. இராமநாதபுரத்தில் புதிய ஆலைகளின் மூலம், 2,523 பேர்களுக்கு வேலைவாய்ப்பு.

ஆக, 1979–1980ஆம் ஆண்டில், விரிவாக்கத்தின் மூலம் 4,649 பேர்களுக்கு வேலை; புதிய ஆலைகளின் மூலம் 6,104 பேர்களுக்கு வேலை; ஆக மொத்தம் 10,753 பேர்களுக்கு வேலை. இரண்டையும் கூட்டினால், இந்த ஆண்டு 22,569 பேர்களுக்கு புதிதாகத் தொழிற்சாலைகள் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்க, நாங்கள் எங்கள் கடமையைச் செய்திருக்கிறோம்.

புதிய தொழில்கள் ஆரம்பிக்கவில்லை. நீங்கள் எதுவும் செய்யவில்லை என்று சொல்வதனால்தான் இந்தக் குறிப்புகளைப் படிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

எத்தனை பேர்களுக்கு கோவை, சேலம், தருமபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், புதிய கதிர்கள் விரிவாக்கம் மூலம் புதிய ஆலைகள் மூலம், வேலைவாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். புதிய உரிமங்கள் வழங்கியதன் விவரங்கள், புதிய ஆலைகளின் விரிவாக்கம் பற்றியும் சொல்ல விரும்புகிறேன்.

ஆஷார் டெக்ஸ்டைல்ஸ், கோவை; வசந்தா மில்ஸ்; ராணி மில்ஸ்; எஸ்.ஆர்.வி. மில்ஸ்; ராஜேஷ் மில்ஸ்; ஜி.டி.கே. இண்டஸ்ட்ரிஸ்; லட்சுமி ஸ்பின்னிங் மில்ஸ்; கார்த்திகேயா ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ்; சிவசுப்பிரமணியன் டெக்ஸ்டைல்ஸ், கோவை. கிருஷ்ணா மில்ஸ், பொள்ளாச்சி; ஹம்ஸவேணி ஸ்பின்னர்ஸ், கோயம்புத்தூர்; ராமகிருஷ்ணா ஸ்பின்னர்ஸ் அன்ட் வீவிங் மில்ஸ்; குப்புசாமி சாரிடி டிரஸ்ட்; பழனி ஆண்டவர் ஸ்பின்னர்ஸ்; திருப்பூர் டெக்ஸ்டைல்ஸ் இப்படி நாங்கள் கதிர்கள் கொடுத்தது பற்றி வரிசைக் கிரமமாக சொல்கிறேன். 23,932; 24,180; 63,000; 25,000; 25,000; 24,232; 25,680; 15,120; 23,272; 24,264; 23,400; 25,000; 25,000; 25,000; 25,200: ஆக வேலைவாய்ப்பு என்ற விகிதத்தில் தொடக்கத்திலிருந்து 292, 297, 632, 300, 300, 297, 119, 221, 632, 315, 89, 310, 467, 600, 600.

இன்னும், ஸ்ரீ வீ. சௌந்திரராஜன் ராமலட்சுமி ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸ், அது கோவை. அதில் புதிய ஆலை. பல்லடம் கோயம்புத்தூர் இடங்களில் 25,000, 25,000 கதிர்கள். வேலைவாய்ப்பு, 600, 500.

சேலம் மாவட்டம் கந்தசாமி வீவிங் பாக்டரி, மல்லூர் சித்தேச்வரா ஸ்பின்னிங் அன்ட் வீவிங் மில்ஸ், சேலம் டெக்ஸ்டைல்ஸ் இந்த மூன்று அமைப்புகளுக்கும் நாங்கள் உரிமம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ததன் விளைவாக, குமாரபாளையம், ராசிபுரம், ஆத்தூர் ஆகிய மூன்று இடங்களிலும் 22,582; 22,800; 16,200: அதில் வேலைவாய்ப்பு பெறுகிறவர்கள் 347; 538; 249.

அதுபோக, தருமபுரி மாவட்டத்தில் பாலாஜி ஸ்பின்னர்ஸ்; கோயம்புத்தூர், ஒ.எம். எஸ்.பி.எல்.எம். மெய்யப்பன், பொள்ளாச்சி, புதிய ஆலைகள். தருமபுரியிலே அந்த இரண்டு இடங்களில் 25,000, 25,000 தறிகள் கொண்ட ஆலைகள், அதில் 610, 315 பேர்களுக்கு வேலை.

ஸ்ரீ சண்முகா மில்ஸ், ஜானகிராம் ஸ்பின்னர்ஸ் லிமிட்டெட், பாரதி காட்டன் மில்ஸ், அருப்புக்கோட்டை, ஸ்ரீஜெய விலாஸ், எம். மெய்யப்பன், பொள்ளாச்சி வீரராகவா டெக்ஸ்டைல்ஸ், வள்ளி காட்டன் டிரேடர்ஸ், இது அத்தனையும் இராமநாதபுரம் மாவட்டம். அதில் 25,000; 37,620; 18,640; 25,000; 25,000; 25,000 ஆக 6,98,192 கதிர்கள். வேலைவாய்ப்பு 636; 326; 322; 236; 215; 315; 486 ஆக 11,816 பேர்கள் புதிய வேலைவாய்ப்புகளைப் பெற்றார்கள்.

அதுபோக, மேலும் எங்களுடைய திட்டங்களின் விளைவாக, இன்னும் பல பேர்களுக்கு, பின்தங்கிய மாவட்டங்களுக்கு வந்து, அங்கே ஆலைகள் நிறுவ வருகிறவர்களுக்கு, நாங்கள் உரிமம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழில் துறையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள், என்ன செய்தீர்கள் என்று கேட்கிறவர்களுக்கு ஓரளவிற்கு இந்தப் புள்ளிவிவரங்கள், நாங்கள், எங்களால் முடிந்த கடமைகளைச் செய்திருக்கிறோம் என்பதை, எடுத்துக் காட்டுவதற்காக இங்கே அளிக்கப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு, எத்தனை வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதற்கும், இந்தப் புள்ளிவிவரங்கள் ஆதரவாக இருக்கும் என்பதைச் சொல்வதில், நான் மிகமகிழ்ச்சி அடைகிறேன்.

இன்னொன்று; தீப்பெட்டித் தொழிற்சாலை. இங்கே சில நண்பர்கள் கேட்டார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலையை இராமநாதபுரம் மாவட்டத்தைத் தவிர, வேறு மாவட்டங்களுக்குக் கொடுக்கப் போவதில்லை என்று முதலமைச்சர் பேசியதாக பத்திரிகையிலே செய்தி வந்தது, அது உண்மைதானா? அப்படியானால் இப்போது கொடுக்கப்பட்டு இருப்பது என்ன ஆகும் என்றெல்லாம் கேட்டார்கள். ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். எந்த எந்த மாவட்டங்களிலே, என்ன என்ன தொழில்களை நடத்துவதற்கு மூலப் பொருட்களும் வாய்ப்பும் இருக்கின்றதோ, அதற்கேற்ப, அந்தந்த மாவட்டங்களிலே; அந்தப் பணிகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்பது இந்த அரசினுடைய நோக்கம் ஆகும்.

ஏதோ பெரிய தொழிற்சாலைகளைக் கொண்டு வர வேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடு, எப்பொழுது வருவார்கள் என்று காத்திருந்து, எங்கள் பணிகளைச் செய்யாமல், முடங்காமல், நாங்கள் யார் யாருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்று கருதுகிறோமோ, நம்புகிறோமோ யார் ஒழுங்காக, அந்தப் பணிகளை செய்ய முன் வருகிறார்களோ அவர்களை, பின்தங்கிய மாவட்டம் என்று சொல்லப்படுவதற்கு உதாரணமாக இருக்கின்ற இராமநாதபுரம் மாவட்டம் போன்ற மாவட்டங்களில்,

முன்னுரிமை கொடுத்து, அங்கே அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்கலாம். அங்கே நீங்கள் அந்தத் தொழிற்சாலையை அண்மையில் தொடங்குவது என்றால், வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று சொல்ல முன்வந்தது எங்களுடைய எண்ணம் இந்த நாட்டில், நான் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல, எந்தெந்த மாவட்டங்களில் இந்தத் தொழிலைச் செய்ய உடனடியாக வாய்ப்பு இருக்கிறதோ, அதை அங்கே நிறைய ஏற்பாடு செய்வதற்கு வாய்ப்புத் தந்து, அங்கேயுள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டுமென்பதாகும். அந்த வகையில், இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

தருமபுரியில் ஒன்று, பொம்மிடியில் ஒன்று, மதுரை மாவட்டத்தில் பெரியகுளத்தில் ஒன்று. இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடி, விருதுநகர், அருப்புக்கோட்டை, சிவகாசி, தஞ்சை மாவட்டம் மாயவரம், திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டான், முசிறி, ஆண்டிமடம், தென்னார்க்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி, இராமநாதபுரம் மாவட்டம் சின்னக்காமன்பட்டி, இராமலிங்கபுரம், நெல்லை மாவட்டம் எட்டயபுரம், கோவில்பட்டி, ஆகிய இடங்களில் ஆறு சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதை நாங்கள் தடை செய்யப்போவது இல்லை. இதை அனுமதிக்காமல் ஒதுக்கித் தள்ளப் போவது இல்லை.

ஆனால், அதே நேரத்திலே, இதைத் தவிர, கதர் கமிஷன் 01.04.1979ஆம் ஆண்டு முதல் 30.09.1979ஆம் ஆண்டு வரை உள்ள காலத்தில், 758 அலகுகள், குடிசைத் தொழிலாக நிறுவ அனுமதி வழங்கி உள்ளது, அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

இராமநாதபுரம், அலகுகளின் எண்ணிக்கை 392, நெல்லை 257, மதுரை 30, தருமபுரி 5, வடார்க்காடு 59, கோயம்புத்தூர் 11, சென்னை 4. அலகு ஒன்றுக்கு 20 பேர் என்ற அடிப்படையில், இந்த 758 அலகுகளில் 15,160 பேர் வேலை பெறுவார்கள்.

திரு. சுப்பு அவர்கள், கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பெரியார் மாவட்டத்தில் ரூ.11 இலட்சம் செலவில், தீப்பெட்டித் தொழிற்சாலை தொடங்கப்படும் என்று கூறியதாகவும், இது முதலமைச்சரின் அறிவிப்புக்கு எதிராக இருக்கிறது என்றும் கூறியுள்ளார்கள். பெரியார் மாவட்டத்தில், தீப்பெட்டித் தொழிற்சாலை நிறுவும் அலகுகள் இந்தத் துறையின் குறிப்புகளில் எதுவும் கிடையாது என்று, அந்த நண்பர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இராமநாதபுரம் மாவட்டத்தில், அண்மையில் சுற்றுப்பயணம் சென்றபோது, அங்கேயிருக்கின்ற மக்கள் என்னிடம் கோரிக்கை விடுத்ததன் விளைவாகவும், மற்ற மாவட்டங்களில் வேறு தொழில்கள் செய்வதற்கான வாய்ப்புகளை, நாங்கள் பெரிய தொழிற்சாலைகளை உருவாக்கிக்கொண்டு இருப்பதன் விளைவாகவும், உடனடியாக இராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில் உள்ளவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டுமென்ற நிலையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் இனிமேல் கொடுக்கப்படும் என்ற கருத்தோடும், அந்த எண்ணத்தை

வெளியிட்டேன் என்பதை, இந்த மாமன்றத்தில் சொல்கிறேன். அதைச் செய்து அதனால் அங்கே, இலட்சக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்றால், வேறு வசதியில்லாத, வாய்ப்பில்லாத நிலையில் இருக்கின்ற அந்த மக்களுக்கு, இது மாபெரும் உதவியாக இருக்கும் என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

01.07.1977ஆம் ஆண்டு முதல் இவ்வரசு மைய அரசுக்கு பெரும் தொழில் நிறுவிட பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை: சென்னை 21, செங்கல்பட்டு 25, வட ஆற்காடு 15, தென்னார்க்காடு 3, தருமபுரி 17, சேலம் 2, கோயம்புத்தூர் 6, நீலகிரி 2, தஞ்சாவூர் 1, திருச்சிராப்பள்ளி 4, மதுரை 1, இராமநாதபுரம் 4, புதுக்கோட்டை 1, திருநெல்வேலி இல்லை, கன்னியாகுமரி இல்லை, பெரியார் மாவட்டம் 1, ஆக 106 தொழில் நிலையங்களைத் தொடங்கிட மத்திய அரசுக்கு நாங்கள் சிபாரிசு செய்திருக்கிறோம். அந்த சிபாரிசு செய்யப்பட்டவைகளின், அந்த கம்பெனிகளின் பெயர்களை நான் குறிப்பிட்டு, நேரத்தை வீணாக்குவது என்று மற்றவர்கள் கருதினால், அதை நான் நிறுத்திக்கொண்டு செலவு எவ்வளவு என்பதை இங்கே குறிப்பிட்டு, வேலைவாய்ப்பு எவ்வளவு என்பதை இங்கே நான் குறிப்பிட வேண்டியது என்னுடைய கடமையாகும். 40 இலட்சம், 16 இலட்சம், 92.42 இலட்சம், 55 இலட்சம், 21 இலட்சம், 11 இலட்சம், 29 இலட்சம், 50 இலட்சம், 10 இலட்சம் : ஆக அது போலவே 69 பேர்களுக்கு, 24 பேர்களுக்கு, 150 நபர்களுக்கு, 500 நபர்களுக்கு, 54 நபர்களுக்கு, 7 நபர்களுக்கு, 15 நபர்களுக்கு, 57 நபர்களுக்கு, 71 நபர்களுக்கு என்று வேலைவாய்ப்பும், அதோடு தொடர்ந்து மற்றும் நாங்கள் சிபாரிசு செய்ததன் விளைவாக, 300 பேர்களுக்கு ஒரு இடத்தில், இன்னொரு இடத்தில் 105 தொடர்ந்து 67, 59, 178, 695, 10, 32, 106, 33, 35, 76, 90, 240, 118, 936, 500, 50, 98, 30, 155, 250, 1355, 30, 185; அது போலத் தொடர்ந்து 52, 174, 935, 339, 90, 68, 72, 48, 76, 58, 97, 250, 112, 110, 500, 112, 99, 50, 144, 195, 3,500, 178, 660, 43, 77, 400, 72, 150, 50, 250, 611, 160, 155 இவை 2,350, 434, 300– இத்தனை பேர்களுக்கு இந்த சிபாரிசுகளின் மூலம், அந்தத் தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசிலிருந்து உரிமம் வழங்கப்பட்டவுடன், தொழில் தொடங்கும்போது இந்த வேலைகள் கிடைக்கும் என்பதை, இங்கே நான் சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில்கள் தொடங்கப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். எத்தனையோ பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்பதை முன்னாலே நான் படித்துக் காண்பித்தேன். அண்மையிலே கூட, தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு நான் சென்றபொழுது, எத்தனையோ தாய்மார்கள் அங்கே தீப்பெட்டித் தொழிற்சாலையிலே பணியாற்றுவதற்கு கற்றுக்கொண்டு, பணியாற்றியதை நான் பார்த்து, அங்கே தொடங்கி வைத்துவிட்டு, அதற்கு வேண்டிய வாய்ப்புகளை ஏற்படுத்தி விட்டு வந்திருக்கிறேன் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். பத்திரிகைகளிலே வார்த்தைகள் தவறாகப் போடப்பட்டுவிட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள முடியாது

என்பதை இங்கே திரும்பவும் சொல்ல விரும்புகிறேன். தொழிற்சாலைகளுக்கு எந்தெந்த வகையிலே வாய்ப்புக்கள் தர வேண்டுமென்று விரும்புகிறோமோ அதற்கு நானே கையெத்திட்டுவிட்டு, நானே கொடுக்கப் போவதில்லையென்று எப்படி சொல்ல முடியும் ? என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் அதைச் சொன்னதற்குக் காரணம் என்ன என்பதை, இங்கே விளக்க வேண்டும். அங்கே உள்ள மக்கள், தாய்மார்கள் எங்களுக்கு இதைத் தவிர, வேறு வழியில்லை; வேறு தொழில் இல்லை; வானம் பார்த்தப் பூமியாக இது இருக்கிறது! இவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, தீப்பெட்டித் தொழிற்சாலையை இந்த மாவட்டத்தில் தொடங்குவதற்கு, மேலும் நீங்கள் வாய்ப்பைத் தந்து, மற்றவர்களுக்கு வேறு வாய்ப்புத் தருகின்ற காரணத்தால், எங்களுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்று சொன்னதன் விளைவாக, இனிமேல் கொடுக்கப்படுகிற அனுமதி, முதல் சலுகையாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் என்று வைத்துக்கொள்ளலாமா என்று நாங்கள் யோசிக்கின்றோம் என்ற வார்த்தையை, நான் பயன்படுத்தியிருக்கிறேன். அதை சுப்பு அவர்கள், மாண்புமிகு நண்பர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள், நம்புவார்கள் என்று நான் கருதுகின்றேன்.

மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் தொழில்துறை பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அன்றே குறிப்பிட்டேன், மேலெழுந்தவாரியாக, அதை கொஞ்சம் தெளிவுபடுத்தலாம், தெளிவாகச் சொல்வது நல்லது என்று நான் கருதுகிறேன். தோல் பதனிடவும், தோலை உற்பத்தி செய்யவும் துவக்கப்பட்ட திருவாளர்கள் குரோம்லெதர் கம்பெனி என்னும் நிறுவனம், தற்போது நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. தொழிற்சாலை மூடப்படவோ, கதவடைப்பு செய்யப்படவோ இல்லை. தொழிலாளர்கள் வழக்கம்போல வேலைக்குச் செல்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஒரு வேலையும் தரப்படவில்லை. மேலும், ஊதியம் சுமார் 11 மாதங்களாக வழங்கப்படவில்லை என்றும், சுமார் 1,000 பேர் வேலை செய்து வந்தனர் என்றும் குறிப்பிட்டு, தன்னுடைய வேதனையைச் சொன்னார்கள். அதற்கு நான் நேற்றைய முன்தினமே பதில் சொல்லி இருக்கிறேன் என்றாலும், இன்னும் கொஞ்சம் தெளிவாக, நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியாவிற்கு இந்த நிறுவனம் ரூ.1 கோடியே 40 இலட்சம் பாக்கி தரவேண்டிய நிலையில், அவ்வங்கி இந்நிறுவனம் கோரிய ரூ.60 இலட்சம் கடனை பொறுப்புறுதி இன்றி, அளிக்கத் தயங்குகிறது. எனவே, நிறுவனத்தின் தலைவர் நாகப்பச் செட்டியார் கடனுக்கு பொறுப்புறுதி வேண்டி, அரசை அணுகினார். தமிழ்நாடு தொழில்துறை மேற்படி கோரிக்கையுடன் மத்திய தோல் ஆராய்ச்சிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள, நிருவாகச் சீரமைப்பு மற்றும் நிருவாகத்தில் பங்கேற்றல், கடனோ அல்லது உத்தரவாதமோ அளிப்பதற்கான வாக்குறுதி குறித்து ஆராய்ந்தது.

மையத் தோல் ஆராய்ச்சி நிறுவனம் இந்த ஆலை மறுபடியும் இலாபகரமாக இயங்க முடியும் என்று கூறியிருந்தாலும், அதற்கு விதித்துள்ள நிபந்தனைகள் மிகக் கடுமையானவை.

தற்போதுள்ள தொழில் முனைவரை நீக்கி, ஆலையின் உயர் பதவிகளில் தொழில் வல்லுநர்களை நியமித்து, தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்து; ஆலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி; இழந்துவிட்ட ஏற்றுமதி செய்யும் வாய்ப்பினை திரும்பப் பெறும் வகையில்; விற்பனைத் தொகையை விரிவு செய்வது மூலம், சுமார் ரூ.1 கோடி வரையிலும் நடைமுறை மூலதனங்களுக்கு கொடுத்தால்தான், இந்த நிறுவனம் இலாபகரமாக நடைபெறும் என்று தெரிவித்துள்ளது. இந்த நிபந்தனைகளில் எவையேனும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்றால், ஆலை நட்டத்தில்தான் இயங்கும்; எனவே நிருவாகத்தில் அரசு பொறுப்பேற்பதோ, அதை விடுவிப்பு நிறுவனம் என்று அறிவிக்கவோ முடியாது என்று தெரிவித்து விட்டு, இந்த நிறுவனத்திற்கு அதிக அளவில் கடன் கொடுத்திருந்த வங்கியே, இந்த நிறுவனத்தை ஏற்று நடத்தலாம் என்று சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசு அறிவித்தது.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வங்கியின் நிறுவனம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழிற்சாலை அதிபர்கள் இவர்களுடன் 30.04.1979 அன்று இந்த நிறுவனத்தைத் திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி பேச்சு நடத்தினார், அரசுச் செயலாளர், நிதித்துறை, தொழிலாளர் நலத்துறை, தொழில்துறை ஆகியோருடன் 03.09.1979 அன்று பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இத்தொழிற்சாலையை மீண்டும் இயங்கச் செய்ய, நிறுவனத்தின் நிருவாகமோ, வங்கியோ, எந்த வகையிலும் தியாகம் செய்ய முன்வரவில்லை. அரசே இதை ஏற்று நடத்தலாம், நாட்டுடமை ஆக்கலாம். ஆனால், சொத்துக்களின் மதிப்பு 196 இலட்சம், கடன்களை விட (ரூ.5 கோடி) மிகவும் குறைவாக இருப்பதால், கடன்கள் கொடுத்துள்ள வங்கிகளுக்கு, இதனால் பெரும் இழப்பு ஏற்படும்! எனவே வங்கி மைய நிதியமைச்சகத்தின் மூலம் நிச்சயமாக எதிர்ப்பு கிளம்பும்!

முன்பு ‘சக்தி பைப்ஸ்’ போன்ற நிறுவனங்களை நாட்டுடமையாக்க, தமிழக அரசு மைய அரசுக்கு திட்டங்கள் அனுப்பியபோது, அதற்கு மைய அர ஒப்புதல் கொடுக்காததற்கு வங்கிகளின் எதிர்ப்பும் ஒரு காரணம் என்பது, இங்கே குறிப்பிடத்தக்கது.

அடுத்து ஆலையை மீண்டும் இயங்கச் செய்ய, தொழில் அபிவிருத்தி மற்றும் கட்டுப்பாடு சட்டம் 1951இன் கீழ் நடவடிக்கை எடுக்கலாம். இந்த ஆலை முறையாக மூடப்படவில்லை என்றாலும், கடந்த சுமார் 1 வருட காலமாக இயங்காமல் இருப்பதால், மேற்கண்ட சட்டத்தில் 18 பிரிவின் கீழ், இந்த ஆலையை, 90 நாட்களுக்கு மேல் இயங்காமல் இருக்கிறதென்று சுட்டிக்காட்டி, இந்த ஆலையின் நிருவாகப் பொறுப்பை மைய அரசே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று செயற்குறிப்புக்கு நான் ஆணையிட்டு, மைய அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது.

இந் நிறுவனத்திலிருக்கிற தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது நிவாரணம் கொடுக்க முடியுமா என்று சொன்னதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை சொல்லிக் கொள்ள விழைகின்றேன்.

அந்தத் தொழிலாளர்கள் பிரச்சினையில் சட்டத்திற்கு இணங்க, எந்த அளவிற்கு எங்களால் காரியங்கள் ஆற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அவை அத்தனையும் நாங்கள் பின்பற்றுகிறோம் என்று சொல்கிற நேரத்தில், இந்த விஷயத்தில் 'காவிரி ஸ்ட்ரக்சுரல்ஸ்' சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் உள்ளடக்கி, இந்த அரசு தன்னாலான பணியைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சம்பந்தப்பட்டவர்களை அழைத்து, இதற்காக தொழிலாளர் நலத்துறை அமைச்சரையும் மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சங்கத் தலைவர்களையும் அதிபர்களையும் அழைத்து, இதைப்பற்றிப் பேசி முடிவு எடுப்பதற்கான முயற்சியில் நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான மாரிமுத்து அவர்கள், நூல் விலை ஏறிவிட்டது என்பதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அதற்கு ஒரு சில விளக்கங்களை நான் சொல்ல வேண்டியது என் கடமையாக இருப்பதால் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, இந்த ஆண்டு மே மாதத்திற்குப் பின் கைத்தறி நெசவாளர்கள் உபயோகிக்கும் சிட்ட நூல் விலை 12 சதவீதம் முதல் 27 சதவீதம் வரை உயர்ந்தது. உதாரணமாக, 20ஆம் நெம்பர் நூல் விலை மே மாதம் ரூ.70, ரூ.76 என்று இருந்தது. ஆகஸ்டில் ரூ.79, ரூ.86 என்று உயர்ந்தது. 100ஆம் நெம்பர் நூல் விலை ரூ.247இல் இருந்து 333–345 என்று உயர்ந்தது. அதோடு, மே, ஜூன் மாதங்களில் தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகளில் 55 நாட்கள் வேலைநிறுத்தம் இருந்ததால், நூல் உற்பத்தி பாதிக்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் வழங்க, மாநில அரசு தென்னிந்திய பஞ்சாலைக் கழகத்துடன் கலந்து பேசி, ஆகஸ்ட் 1979 மார்க்கெட் விலையில் 5 சதவீதம் குறைவாக 3,674 பேல் நூலைப் பெற்று, கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு செப்டம்பர் மாதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்பின், மாநில அரசின் வேண்டுகோளின்படி, மத்திய அரசு தலையீட்டில், 60ஆம் நெம்பர் கீழுள்ள நூல்களை செப்டம்பர் முதல் வார விலையில், 10 சதவீதம் குறைவாகவும், நூற்பாலைகளிலிருந்து ஒதுக்கீடு செய்து விநியோகம் செய்யும் திட்டம் 01.10.1979 முதல் அமலில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ், தென்னிந்திய நூற்பாலைக் கழகம் மற்றும் தேசீய பஞ்சாலைக் கழகம் ஆகியவற்றிலிருந்து 5,241 பேல் நூல்களைப் பெற்று, தனியார்த்துறை நெசவாளர் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நூல் ஒதுக்கீடு டிசம்பர் மாதம் வரையில் செய்யப்படும். தமிழ்நாட்டில் இயங்கும் 12 கூட்டுறவு நூற்பாலைகளில், உற்பத்தி செய்யப்படும் 7,000 பேல் நூல்கள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாய விலையில் வழங்கப்படுகின்றன. எனவே, கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல், நியாய விலையில் விநியோகிக்கத்தக்க ஏற்பாடுகள் நடைமுறையில் உள்ளன.

கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை பாதுகாப்பு, கூலி போன்றவற்றில் சட்டப் பாதுகாப்பு அளிப்பதற்கு என்று ஒரு சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு, அது சட்டமன்றத்தின் கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இக்குழு கைத்தறி

தொழில் சம்பந்தப்பட்ட பல ஸ்தாபனங்கள், நபர்கள் அவர்களுடைய கருத்துக்களைப் பெற்று வருகிறது. எனவே, நெசவாளர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்கும் வகையில் இந்த மசோதா சட்டமாக்கப்படவுள்ளது.

தொழில் துறையில் 14 கோடி ரூபாய் பஞ்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது; பஞ்சு வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. விரைவிலே அதை விசாரித்து, எந்தக் காரணத்தினால் அப்படி மாற்றப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, காரணமின்றி வேறு தனிப்பட்ட சூழ்நிலைகளால் அல்லது அரசியல் நோக்கத்தால் அந்த நிகழ்ச்சி நடந்து இருக்குமானால், இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை, நான் திரு. சுப்பு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் செயல்படும் பஞ்சாலைகளுக்கு, பஞ்சு வாங்குவதற்காக தமிழ்நாடு அரசு தொகை ஒதுக்கீடு எதுவும் செய்யவில்லை; அதுபற்றிய செயற்குறிப்பும் இல்லை. ஆனால், 12 கூட்டுறவு நூற்பாலைகளுக்கும், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் நடத்தும் இரண்டு தனியார் நூற்பாலைகளுக்கும் போதுமான பஞ்சுகளை நியாயவிலையில் வாங்க, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின்கீழ், ஒரு குழு 01.08.1977 முதல் செயல்பட்டு வருகிறது. இந்தக் குழுவில், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகச் செயல் இயக்குநர், கோயம்புத்தூரில் உள்ள மூன்று கூட்டுறவு நூற்பாலை நிருவாக இயக்குநர்கள், ஃபாக்டரி மானேஜர் ஒருவர் இருக்கிறார்கள். இந்தக் குழு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் மற்றும் மகாராஷ்டிரம், குஜராத் கூட்டுறவு விற்பனை ஸ்தாபனங்களுக்கும் முதலிடம் கொடுத்து பஞ்சு வாங்குகிறது. இந்தக் குழு ஆரம்பித்தது முதல், 31.08.1979 வரை வாங்கிய பஞ்சு விவரம் வருமாறு:– பஞ்சு பேல்களில்.

1977ஆம் ஆண்டு 28,436. 1978ஆம் ஆண்டு 89,266. 1979ஆம் ஆண்டு, 31.08.1979 வரையில் 48,238. ஆக, 1977ஆம் ஆண்டு 660.46 இலட்சமும், அடுத்து 1,963 இலட்சமும், அடுத்து 1,007 இலட்சமும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள் ''கூட்டுறவுத் துறை நிருவாகம் என்பது பெரிய மோசடி. இதில் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் நிருவாக இயக்குநராக பணிபுரிய அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. 'சேஷசாயி பேப்பர் நிறுவனம்' அதுமாதிரி ஒன்று. அரசு இயக்குநர் இதில் இருக்கிறார். இந்த நிறுவனம் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய நலன்களுக்கு குந்தகம் விளைவித்து வருகிறது. தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு வேறு சுமூகமான முடிவு காண வேண்டும்'' என்று கூறியிருக்கிறார். அதோடு ''ஸ்பிக் நிறுவனம் 60 கோடி முதலீட்டில் ஏற்படுத்தப்பட்ட நிறுவனம். இதில் பெரும் பங்கு மாநில அரசைச் சேர்ந்தது. ஸ்பிக் நிருவாக இயக்குநர் தனியார்

துறையைச் சேர்ந்தவர். அதோடு அல்லாமல், அவர் பதவிக் காலம் 10 ஆண்டுகள் என்று நிருணயிக்கப்பட்டிருக்கிறது'' என்று கூறியிருக்கிறார்.

இது கூட்டுறவுத் துறை நிறுவனம் அல்ல. இது ஒரு தனியார் நிறுவனம். இதில் 'டி.ஐ.ஐ.சி.' ஆரம்பத்தில் 1 கோடி ரூபாய் பங்கு மூலதனமாகப் போட்டுள்ளது. அந்த நிறுவனத்திற்குப் போனஸ் பங்குத் தொகையாக ரூ. 50 இலட்சம் என்று கணக்கில் வந்தது. ஆக டி.ஐ.ஐ.சி.யின் மொத்த முதலீடு 1.50 கோடி ஆகும். இதில் இயக்குநர்களாக, டி.ஐ.ஐ.சி.யின் சார்பில், திரு. பிரபாகர் அவர்கள் இருக்கிறார்கள். அரசின் சார்பில், தொழில்துறை செயலர் திரு. கீதா கிருஷ்ணன் அவர்களும், வனம் மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர் திரு. திருமால் அவர்களும், இயக்குநர்களாக இருக்கிறார்கள். தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்குத் தொழிலாளர்கள் நல சட்டப்படி உயர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இன்னொன்று, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், 'டிட்கோ'வின் உதவியுடன் இரசாயன உரங்கள் உற்பத்திக்காக தொழில் முனைவர் திரு. எம்.ஏ. சிதம்பரம் அவர்களின் ஒத்துழைப்பில் ஸ்பிக் நிறுவனம் நிறுவப்பட்டது. இதன் மொத்த முதலீடு 150 கோடி ரூபாய் ஆகும். இதில் 'டிட்கோ' 440 இலட்சம் பங்கு மூலதனமாகவும், தொழில் முனைவர் திரு எம்.ஏ. சிதம்பரம் அவர்களின் பங்கு மூலதனம் 309 இலட்சம் ரூபாய். மீதம் உள்ளவை ஏனைய நிதி நிறுவனங்கள், வங்கிகள், பொதுமக்களிடம் இருந்தும் வசூல் செய்யப்பட்டவை. 'ஸ்பிக்' நிறுவனத்தின் தலைவர் திரு.எம்.ஏ. சிதம்பரம் அவர்கள், அரசின் பங்கு மூலதனம் அதிகமாக இருப்பதினால் அரசின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான திரு. வெங்கிடரமணன், ஐ.ஏ.எஸ். அவர்களைத் தலைமை நிருவாகியாக நியமித்து 1977ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளாக அரசின் சார்பில், அவர் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் 'ஸ்பிக்' இயக்குநர் தனியார் துறையைச் சேர்ந்தவர் இல்லை! மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள், ''கூட்டுறவுத் துறையே பெரிய மோசடி!'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசுத் தரப்பில், டிட்கோ, 26 சதவீதம் பங்கு மூலதனம் இருந்தால், தொழில் முனைவரின் தரப்பிலும் 25 சதவீதம் பங்கு மூலதனம் போடுகிறார்கள். அவர்களுக்குச் சம அளவில் இயக்குநர்களும் இருக்கிறார்கள். நிருவாக இயக்குநர் தனியார் தரப்பிலும் நியமிக்கப்படலாம். நிருவாகக் கண்காணிப்புத் தலைவர் 'டிட்கோ'விலிருந்து, அரசின் தரப்பிலிருந்து நியமிக்கப்படுகிறார். கூட்டுறவுத்துறை நிறுவனங்களின் நிருவாகத்தில் 'டிட்கோ' இப்படி படிப்படியாக ஈடுபட்டு, தற்போது 'ஃபிராபிட்' வழங்குவதில், நிருவாகத்தில் பதவிகளை ஏற்படுத்துவதில், நியமனங்கள் செய்வதில், இயக்குநர்களை நியமிப்பதில், 'டிட்கோ'வின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஈடுபட்டு, இக்கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் நடக்க உதவி செய்கிறார்கள். மேலும், 'டிட்கோ'வின் தலைவரும், நிர்வாக இயக்குநரும் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களும் அடிக்கடிக் கூடி நிருவாக சம்பந்தமாகப் பேசி முடிவு எடுக்கிறார்கள். அடிக்கடி இந்நிறுவனங்களுக்குச் சென்று

பார்வையிடுகிறார்கள். இந்நிறுவனங்கள் செயல்படுவது பற்றி அரசுக்கு மூன்று மாதத்திற்குள் அறிக்கை அனுப்புகிறார்கள். இவ்வாறு இந்நிறுவனங்கள் குறைபாடுகள் இல்லாமல், அப்படி ஏதாவது தடை இருந்தால், அவைகளை கவனமாகத் தடுக்கவும், தவறுகள் இல்லாமல் நடத்தவும் டிட்கோ ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போதுதான் புள்ளி விவரங்களையெல்லாம் குறிப்பிட்டேன். மீண்டும் அந்தப் புள்ளிவிவரங்களை திரும்பச் சொல்ல வேண்டும் என்று விரும்பமாட்டார்கள் என்று கருதுகிறேன். என்ன இருந்தாலும், இந்த அரசு மக்கள் வரிப் பணத்தைப் பொறுத்து, தனியார்களிடம் அதை ஒப்படைத்து, மக்களுடைய நன்மைகளைப் புறக்கணிக்கும் என்ற சந்தேகத்திற்கு நீங்கள் ஆளாக வேண்டாம் என்பதை மட்டும், இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். தவறுகள் அப்படி நடக்குமானால், அதற்கு மாற்று கண்டுபிடிக்க இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது.

திரு. எம்.ஏ. சிதம்பரம் அவர்கள், அந்த நிறுவனத்தின் தலைவராக இருக்கிறாரே தவிர, அவர் எவ்வளவு பணம் போட்டிருக்கிறார் என்ற குறிப்பு இப்போது என்னிடம் இல்லை, என்றாலும், ‘டிட்கோ’ போன்ற நிறுவனங்களில், பொதுமக்களுடைய பணம் நிறைய இருக்கிறது என்பதை மட்டும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல முடியும். நண்பர் திரு. சுப்பு அவர்கள், ஒரு பிரச்சினையை இங்கே கிளப்பியிருக்கிறார்கள். விசுவநாதன் அவர்கள், ‘சேஷசாயி பேப்பர்’ நிறுவனத்துடன் சம்பந்தப்பட்டவர். அங்கே அவர் தொழிலாளர்களுக்கு எதிர்ப்பாளர் என்று நிரூபித்துள்ளார்கள், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலைத் தலைவராக அவரை நியமித்தது தவறு என்றெல்லாம் கூறியிருக்கிறார்கள். இதிலே நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். அதை விளக்கமாகச் சொல்வதை விட, குறிப்பு இருக்கிறது, அதை விரைவாகச் சொல்லி முடிப்பது நல்லது என்று கருதி இதைப் படிக்கிறேன். கரும்புச் சக்கையிலிருந்து செய்தித்தாள் காகிதம் தயாரிப்பதற்கான திட்டம் பற்றிய அறிக்கையை ‘சேஷசாயி’ நிறுவனத்தார்தான் முதலில் தயாரித்து, அரசுக்கு அளித்தனர். இந்த நிறுவனத்திற்கு காகித உற்பத்தியில் நல்ல அனுபவம் உள்ளதோடு, கரும்புச் சக்கையிலிருந்து, எழுதும் தாள் உற்பத்தி செய்வதற்கான தொழில் முறையும் நன்கு தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். விசுவநாதன் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை நிறுவனத்தின் தலைவராகவும், தொழிலாளர்கள் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலாளர் திரு. சி. இராமச்சந்திரன் அவர்கள் பகுதி நேரச் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அரசாங்கத்தினுடைய கண்காணிப்பு இருக்கிறது அதில், இப்போது அந்தச் செயலாளர் அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் போய் அங்கு பார்த்து எந்தெந்த கம்பெனிகள் சரியான இயந்திரங்களைத் தர முடியும் என்பதை சீர்தூக்கிப் பார்த்து, அந்தக் கம்பெனிகள் நல்ல முறையில், தங்களுடைய கடமைகளைச் செய்வார்களா அது பயன் உள்ளதா என்பதைத் தெரிந்துகொண்டு வந்து, இங்கு அமைச்சர்களுக்கும், அமைச்சர் அவைக்கும்

தெரிவித்து, அதை அதிகாரிகளுக்கும் தெரிவித்து அதை யோசித்து பரிசீலித்து, அதற்குப் பிறகுதான் இந்த அரசு ஒரு முடிவிற்கு வருமே தவிர, விசுவநாதன் அவர்கள் அங்கிருந்து இதைத்தான் செய்ய வேண்டும். இந்தக் கம்பெனிக்குக் கொடுக்கலாம் என்று சொன்னால், அதை அப்படியே ஏற்றுக்கொள்ள இந்த அரசுத் தயாராயில்லை என்பதை நான், இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில் மாண்புமிகு சுப்பு அவர்களுடைய கருத்துக்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். அவருக்கே உரித்தான பாணியில், எப்போதும் பேசுகின்ற வழியில், இப்போதும் பேசினார்கள். ‘இதயக்கனி’ என்றார், என்னுடனேயே இருக்கின்றவர் என்றார், நெருங்கிய நண்பர் என்றார், இதையெல்லாம் சொல்லிவிட்டுத்தான் இவைகளை சொல்ல வேண்டும் என்று விரும்பினால், எனக்கு ஆட்சேபணையில்லை. இன்னும் அதிகமாக சொல்லட்டும். அதற்காக நான் வருத்தப்படப் போவதில்லை. ஆனால், அமெரிக்காவில் என் கூடவே இருந்தார் என்பது தவறு. மெக்சிகோவுக்கு என்னை அழைத்துச் செல்வதற்காக அங்கே வந்தார். மெக்சிகோவில் தயாரிக்கப்பட இருக்கின்ற அந்த இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்ற விதம், காகித ஆலை சரிவர இயங்குகிறதா என்பதை நானே நேரில் பார்த்துவிட்டுத்தான், அப்புறம் சொல்ல முடியும் என்கின்ற நிலைமை, அதற்காக நான் அழைக்கப்பட்டேன், அவர் ஏற்கனவே தெரிந்திருக்கின்ற காரணத்தால், அவர்கள் சார்பாக அழைக்கப்பட்டேன்; சென்றேன்; பார்த்தேன்! பார்த்த பிறகு, சொன்னேன், காகிதத்தை உற்பத்தி செய்து நமக்குத் தந்து அது பயன்படும் என்று தெரிந்துகொண்ட பிறகே ஒப்பந்தம் செய்ய முடியுமே தவிர, அதற்கு முன்னால் ஒப்பந்தம் செய்ய முடியாது என்று சொல்லி வந்து விட்டேன், என்பதை இங்கே குறிப்பிடுவதிலிருந்து நட்பு வேறு, அரசினுடைய பொறுப்பு வேறு, என்பதை மாண்புமிகு சுப்பு அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

நட்பாக இருக்கின்றவர்கள், நண்பர்களாக இருப்பதில் தவறு இல்லை. ஆனால், தவறு செய்கின்றவர்களுக்கு உடந்தையாக இருக்கும்போதுதான், குற்றச்சாட்டுகள் வரும்! அதில் அப்படிப்பட்ட தவறான காரியங்களுக்கு உடந்தையாக இருக்கவில்லை; இருக்கப்போவதும் இல்லை, என்பதை நண்பர் சுப்பு அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்!

700க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்பற்றி நான் 12(3) செட்டில்மென்ட் என்ற ஒரு வரி எவ்வளவோ தொல்லைகளை உருவாக்குகிறது என்பதை, நேற்றைய முன்தினம், நான் குறிப்பிட்டு காட்டினேன். அப்படி ஒரு சங்கம் ஒப்பந்தம் செய்து, பட்டியலில் காண்பித்து இருப்பதாக, மெஜாரிட்டி சங்கங்கள், பெரும்பான்மையான சங்கங்கள் கையெழுத்திட்டிருப்பதாக அங்கே அடையாளம் இருந்து, ஆதாரம் இருந்து, அதைப்பற்றி எதுவும் செய்ய முடியாது என்று விவரம் தெரிந்த தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டு விட்டு பிறகு, அந்த ஒப்பந்தம் சரியான சூழ்நிலையில் கையெழுத்து இடப்பட்டதா என்கின்ற கேள்விக்கு கடைசியில் வந்து நின்று, அதைப்பற்றி நான் அன்றைக்கே

அட்வகேட் ஜெனரலுக்கு எழுதிக் கேட்கிறேன் என்று சொல்லி, அவருக்கு எழுதி, இந்த செக்ஷன்களின் கீழ், கையெழுத்து இட்ட பிறகு, நடவடிக்கை எடுக்க வேறு வழியில்லை என்று, எனக்கு அறிக்கை தந்திருக்கிறார்கள் என்பதை நண்பர்களுக்குத் தனியாக சந்திக்கும்போது சொல்லியிருக்கிறேன். இந்த நிலையில், இந்த அரசு இப்போது எதுவும் செய்வதற்கு வழியில்லை. இந்த ஒப்பந்தத்தை எப்படி மாற்றுவது? இந்த ஒப்பந்தம் நடைபெறாமல் செய்வதற்கு என்ன பாதுகாப்பைத் தேடுவது? என்பதைப் பற்றி, நேற்று முன்தினம் கருத்தை வெளியிட்டேன். அது வழக்குமன்றத்திற்கு வழக்கு போயிருக்கிறது. வழக்குமன்றத்தில் இருக்கும்போது, நான் யாரைக் கூப்பிட்டு எப்படிப் பேச முடியும் என்பதை சட்டம் தெரிந்த சுப்பு அவர்கள் நிச்சயமாக, அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆகவே, சட்டத்திற்கு புறம்பாக நடக்காத முறையில், இன்றைய சூழ்நிலையில், நண்பர்கள் மாண்புமிகு சங்கரய்யா அவர்கள், உமாநாத் அவர்கள், கூத்தகுடி சண்முகம் அவர்கள் போன்றவர்கள் எல்லாம், அவர்களுடைய தலைவர்களாக இருக்கின்ற ராமமூர்த்தி, பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் எல்லாம் என்னைச் சந்தித்துப் பேசிய பிறகு, இதற்காக, அந்த அதிபரை அழைத்து இதைப் பற்றி பேசுவதற்கு சட்டபூர்வமாக இடமில்லாவிட்டாலும், மனிதாபிமானத்தோடு ஏதாவது செய்தாக வேண்டும், நியாயப்படி நடந்து கொள்ள வேண்டும், என்று சொல்லுகிற அளவுக்கு, நான் முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பது தெரியும். அதையே நான் சொல்லிக்கொள்கிறேன். நான் அந்த முயற்சியை விட்டுவிடவில்லை என்பதையும் இங்கே சொல்லி, அதற்காக முயற்சிக்கின்றேன் என்பதையும் கூறி, ஆனால், சட்டத்தை மீண்டும் நீங்கள் இதில் ஒரு மாற்றுவழி கண்டுபிடித்தாலொழிய, இந்தச் சிக்கல்களை யாரும் பயன்படுத்திக் கொள்ள முடிகிறது என்பதை கவனத்தில் வைத்து, ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற தலைப்பில் இங்குப் பல பேர் பேசியிருக்கிறார்கள். சட்டத்தை மதிக்காதவர்கள், ஒழுங்குக்குக் கட்டுப்படாதவர்கள், சட்டத்தை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்ப்பவர்கள், இந்த நாட்டினுடைய ஜனநாயக முறைப்படி, வாழ்வதற்கு ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு மதிப்புத் தராமல், அதை அலட்சியப்படுத்துவதன் மூலம், நாட்டிலே ஒரு அராஜக உணர்ச்சியை ஏற்படுத்தி விடுவதற்குக்கூட, காரணமாக அமைந்து விடுகிறார்கள் என்பதைக் குறிப்பிடும்போது, யாரும் தவறாகக் கருதமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

ஒப்பந்தம் என்று வரும்போது ஏதாவது ஒரு ஷரத்தை, விதியைக் குறிப்பிட்டு எழுதிய பிறகு, அந்த விதியைக் குறிப்பிட்டு எழுதியது தவறாக இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று சொன்னால், பிறகு அந்த விதி வேண்டாம், இருக்க வேண்டாமென்பதற்கு முதலில் நடவடிக்கையில் ஈடுபட்டு, அதை ஒழித்துவிட்டு பிறகு, அதற்குக் கீழ்ப்படிய மாட்டோம், தேவையில்லை என்று சொன்னால் நியாயமாக இருக்கும்.

ஆனால், வெவ்வேறு பிரச்சினைகளில், 12 (3) என்ற விதிக்கு முக்கியத்துவம் கொடுத்து இதுவரை பிரச்சினைகளை சந்தித்துத் தொழிலாளர்கள் போராடினாலும், அதற்கு மதிப்பு கொடுக்க வேண்டிய முறைகளை வழக்கத்தில் வைத்துக்கொண்டு, அதுவும் வழக்கு மன்றத்திற்கு போன பிரச்சினையைப் பற்றி, எடுத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தும் கூட, வழக்குமன்ற தீர்ப்பு வரும் வரையில் சட்டம் என்று பார்க்காமல், இதற்கு ஏதாவது வழி காணவேண்டும், அழைத்துப் பேசி முடிவு காணவேண்டும், அச்சுறுத்தியாவது நிறைவேற்ற வேண்டுமென்று, பல ஆண்டுகள் முதலமைச்சராக இருந்த எனது நண்பர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வது எனக்குத் திகைப்பையே உண்டாக்குகிறது!

அத்துடன் இன்னொன்றும் சொன்னார்– பணிவோடு அல்ல; அன்போடு அல்ல; எச்சரிக்கை செய்கிறேன் என்றார்! எச்சரிப்பது நல்லது; தேவைதான்; எச்சரிப்பதற்கு நண்பர்கள் தேவை; தவறான வகையில், அதுவும் ஆட்சியில் இருப்பவர்கள் செயல்படும்போது, இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிப்பவர்களை நண்பர்களாகத்தான் கொள்வேனே தவிர, எதிரிகளாகப் பார்ப்பதில்லை! நான். ஆனாலும், எந்த நேரத்திலும், எந்தச் சூழ்நிலையிலும், எச்சரிப்பது என்பது, அதற்குரிய முக்கியத்துவத்தையே அடியோடு இழக்க வேண்டி வந்துவிடுகிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இதிலே எச்சரிக்கையே தேவையில்லை! உணராதவர்களுக்கு, நல்ல காரியங்கள் செய்கிற எண்ணமே இல்லாதவர்களுக்குச் சொல்ல வேண்டிய வார்த்தைதான், ‘எச்சரிக்கையே’ தவிர – நாங்கள் அதற்காக முயற்சிக்கிறோம்; அந்த அதிபரை அழைத்துப் பேசுகிறோம், என்று சொன்ன பிறகும், ‘‘அப்படிச் செய்யாவிட்டால், எச்சரிக்கிறேன், பின்விளைவுகள் ஏற்படும்‘‘ என்று சொல்வது, உண்மையில் எங்கள் நல்லெண்ணத்திற்கு உதவி செய்வதாக இல்லையென்று, பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனாலும், இன்னமும் சொல்லுகிறேன், இந்தப் பிரச்சினையில், மாண்புமிகு சுப்பு அவர்கள், ஒரு மாபெரும் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக இத்தனை சங்கங்களில், பெரும்பான்மையான சங்கங்கள் கையெழுத்திட்டிருக்கின்றன என்பதைப் பார்ப்பதைவிட, அந்தச் சங்கங்களில், எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து மதித்தாக வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படித்தான் இருக்க வேண்டும். எல்லாச் சங்கங்களும் சேர்ந்து நேற்று முன்தினம் சொன்னதுபோல ஒன்றுபட்ட ஒரு முடிவை எடுக்கும்போது, அந்த முடிவு பெரும்பான்மையால் எடுக்கப்பட்ட முடிவு. அதை ஏற்றுக்கொள்ளாத சிறுபான்மையை வைத்து, மீண்டும் அந்த ஒப்பந்தத்தை அல்லது அவர்கள் கருத்தை மதிக்காமல் இருக்கிறார்கள் என்றால் நிலைமை வேறு.

இப்போது 12(3) ‘செட்டில்மென்டி’ல் யாராவது கையெழுத்து போட்டுவிட்டால், உடனடியாக ஏற்றுத் தீரவேண்டிய கட்டாயம் இருப்பது போன்று, நிர்ப்பந்தம் இருப்பது போன்ற நிலைமை இருக்கிறது. 12(3) விதியை மாற்றினாலன்றி, அரசுக்கும் சரி, வேறு

யாருக்கும் சரி, சட்டத்தை மீறவேண்டிய நிலைமைதான் வருமேத் தவிர, நியாயப்படி அதைப்பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைப்பதில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். இதற்கு என்ன வழி என்று முன்தினம் சொல்லியிருக்கிறார்கள். விரைவில், ஒரு முடிவு ஏற்படுத்த ஒத்துழைத்து, ஒரு வழி கண்டு பிடிப்போம். அதற்கிடையில், நேற்று முன்தினம் சொன்னது போல், 11 மாதங்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் சரி, 7 மாதங்களாகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் சரி, 55 நாட்களாக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாலும் சரி, அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்பதை இந்த அரசு கவனிக்க வேண்டுமென்று சொன்னால், அது மனிதாபிமானப் பிரச்சினை. அதை, இந்த அரசு கவனிக்க வேண்டுமென்பதிலே, நான் மனிதாபிமானத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றால், அதற்குக் காரணம் உண்டு.

நீங்கள் இந்தச் சட்டத்தைத் தூக்கியெறிந்துவிட்டு, அந்த விதியைப் பற்றிக் கவலைப்படாமல், ஒப்பந்தங்கள் செய்ததைப் பற்றிக் கவலைப்படாமல், "நீங்கள் இதிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதிலும் அரசு ஒரு தொழில் அதிபரை அழைத்து அச்சுறுத்த வேண்டும்" என்று சொல்வது, அது நியாயமாக எனக்குத் தெரியவில்லை.

அறிவுரை கூறவேண்டும் என்று சொல்லியிருந்தால், அதுப் பொருத்தமாக இருந்திருக்கும். அச்சுறுத்துவது என்பது இரண்டு வகையில் இருக்கும். சட்டத்திற்கு முரணாக நடக்கிற யாராவது தொழிலதிபர்கள் இருந்தால், நீங்கள் இதை மீறி நடப்பீர்களாயின், உங்கள் தொழிற்சாலையை நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டி வரும் என்று சொல்வது அச்சுறுத்தலாக இருக்கலாம். இன்னொரு அச்சுறுத்தல் "நாங்கள் எதையும் சொல்வோம். நீங்கள் கேட்டாக வேண்டும்! இல்லாவிட்டால், இப்படி உங்களைப் பழிவாங்குவோம்; இப்படிச் செய்வோம்!" என்ற வகையான அச்சுறுத்தல் ஆகும். இந்த அரசு இப்படிச் செய்யும் என்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

1974ஆம் ஆண்டில் நடைபெற்ற அதே சேஷசாயிப் பிரச்சினை பற்றி மாண்புமிகு முதல்வர் எழுதியுள்ள ஒன்று, குறிப்பு இருக்கிறது. அதைப் படித்துக் காண்பிக்க விரும்புகிறேன்.

'All the above demands are covered by these settlement & under Section 12(3) of the Industrial Disputes Act, 1947. Order dated 01.09.1974.

Clause 14 of the settlement sufficiently provides that the Union will not raise any demand which will involve financial commitments or of a general nature and refrain from making such demands during the currency of the settlement. There is, therefore, no case for adjudication on this issue' என்று இதிலே எழுதியிருக்கிறார்கள். இதே சேஷசாயிப் பிரச்சினை சம்பந்தமாக வழங்கிய அவர்களுடையத் தீர்ப்பாகும் உங்களுடைய கருத்து.

கடைசியாக எழுதப்பட்டிருக்கிறது. 'The Government do not consider it necessary to refer any of the above demands for adjudication for the reasons

stated therein' என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, முன்னால் சொன்னதை ஏற்றுக் கொள்ளாதீர்கள். நாங்கள் சொல்வது அப்படித்தான் இருக்கும். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்றால்....

வேறு ஏதோ ஒரு நிறுவனத்தைப் பற்றிப் பேசி, அதில் 12 (3) செட்டில்மென்டை மாற்றி அமைத்துக் கொண்டோம் என்று இங்கே சொல்கிறார்கள். 12(3) செட்டில்மென்டைப் போட்டவர்கள் முன்வந்து, இதை நாங்கள் மாற்றிக்கொள்கிறோம் என்று சொன்னால், எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்பதுதான் பிரச்சினை. அவர்கள் ஒத்துக்கொண்டால், எங்களுக்கு என்ன அதிலே வேதனை. முன்பு நடந்ததும் அப்படித்தான். இதை நாம் புரிந்து கொண்டோம் என்றால், இதில் யாரும், யாருக்காகவும், வேண்டுமென்றோ; வேண்டாம் என்ற கருத்தோடோ, பேசவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை நாம் எல்லோரும் புரிந்துகொள்ள முடியும்!

இப்பொழுதும் கூட, நான் பணிவோடு சொல்லிகொள்வது இதை அரசியல் ஆக்காமல், தொழிலாளர் பிரச்சினை என்கிற நிலைமையோடு அதை வைத்துக் கொண்டு, தொழிலாளர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற ஒரே நோக்கத்தோடு, நாம் அனைவரும் உட்கார்ந்து அதிபரையும் அழைத்துப் பேசி, ஏதாவது ஒரு முடிவுக்கு வர முடியுமானால், அதைவிட நமக்கு மகிழ்ச்சி தரக்கூடியது வேறு எதுவும் இருக்க முடியாது.

நான் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நண்பர் நல்லசிவம் அவர்களும், ரமணி அவர்களும் என்னை வந்து சந்தித்தார்கள் என்றால், எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் பேசி இருக்கிறார்கள். இதைப்பற்றி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதெல்லாம், குழுவினது கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது மட்டும் அல்லாமல், குழுவினரையும் அழைத்துப் பேசி ஆகவேண்டும். அதிபரையும் உடன் அழைத்துப் பேசியாக வேண்டும் என்றுதான் அவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்களே தவிர, குழுவிற்கு அப்புறம் தன்னந்தனியாக; தன்னைத் தனிமைப்படுத்தி வைத்துக்கொண்டு, அவர்கள் தங்களுக்கு ஏதோ இலாபம் என்கிற வகையிலோ, தாங்கள் என்னிடம் பேசி ஒரு நன்மையை மற்றவர்களுக்கு செய்து கொடுக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்று விட்டார்கள் என்கிற புகழைப் பெறவோ அவர்கள் முயலவில்லை என்பதை, இங்கே; இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, நண்பர் சுப்பு அப்படிக் கருத வேண்டிய அவசியமும் இல்லை. அப்படிப்பட்ட நிலைமை நடைபெறவும் இல்லை. அவர்களுக்கு நான் அப்படிப்பட்ட வாக்குறுதி தரவும் இல்லை. முயற்சிக்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன்.

12(3) செட்டில்மென்ட் போட்டார்கள். போட்டவர்கள் அதை விலக்கிக் கொள்ளக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது என்னுடைய நிலைமை. அதை அவர்கள் ஏற்றுக்கொண்டால், பிரச்சினை சுலபமாகி விடும். அதற்கு நாம் அனைவரும் சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்து, கைது செய்து, விட்டு விடுவது, கைது செய்து விட்டுவிடுவது என்று இருக்கிறது. ஒரு 20, 30 நாட்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், பிறகு மீண்டும் போராட்டம் நடத்துவது கைது செய்வது, விட்டு விடுவது இப்படியே நடந்து கொண்டிருந்த பிறகு, மீண்டும் சில, நான் இங்கே வேண்டுமென்று தான் மறைக்கிறேன், சொல்லாமல் இருக்கிறேன், அசம்பாவிதம் என்ற பெயரிலே வைத்துக்கொண்டாலும் சரி, ஏதாவது விபரீதங்கள் ஆபத்துக்கள் என்றாலும் சரி, அவைகள் எல்லாம் நடக்கின்ற ஒரு நிலைமை உருவாகி, அதற்குப் பிறகும் வன்முறையிலே ஈடுபட்டு விடுவார்கள் என்கின்ற சூழ்நிலையும் உருவாகி, சில சேதங்கள் உருவாகும் என்றால், அவர்களை கைது செய்வதைத் தவிர, ஒரு அரசுக்கு வேறு வழி இருக்காது.

எடுத்த உடனே கைது செய்து இந்த அரசு சிறைச்சாலையில் வைத்து விடாது, என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். கைது செய்து விட்டுவிடப்பட்டவர்கள் பலர். எத்தனை முறை கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், வேறு வழி இன்றி, இறுதியிலேதான் கைது செய்யக்கூடிய நிலைமை உருவாகி இருக்கிறது. ஆகவே, தொடக்க காலத்திலிருந்து கைது செய்து, சிறையிலே வைத்திருக்கிறார்கள் என்று எண்ணத் தோன்றுகிற அளவுக்கு ஒரு கருத்தை வெளிப்படுத்தாமல், ஒரு வார காலமாக அல்லது 5, 6 நாட்களாக இந்த நிலைமைக்கு வரவேண்டிய அவசியம் வந்திருக்கிறது என்பதை நீங்கள் மனதில் கொண்டு, அந்த நிலைமையை மாற்றுவதற்கு நாம் உழைக்க வேண்டுமென்று அனைவரையும் நான் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித்துறையைப் பற்றி பேசியிருக்கிறார்கள். எத்தனை ஆண்டுகள் தேர்தல் நடைபெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி, இருந்தவர்களையும் பதவியில் இருந்து நீக்கி, வீட்டிற்கு அனுப்பி விட்டீர்கள் என்பதையும் சொல்லி, மக்களுக்கும், அரசுக்கும் இடையிலே; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பு இருந்ததை, இல்லாததாக்கி, அதன் விளைவாக தொடர்புகளே இல்லாது செய்து, ஜனநாயகம் இல்லாமல் செய்து விட்டார்கள் என்ற குறைபாடுகளை, பல்வேறு கோணத்தில் இருந்து; பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்! அந்தக் குறைபாடுகள் பல்வேறு வகைகளில் சொல்லப்பட்டிருக்கின்றன.

இதிலே ஒரு குற்றச்சாட்டிலே சொன்னது, “12,300 ஊராட்சி மன்றங்கள் இருக்கிறபோது, ஏதோ ஒன்றிரண்டு ஊராட்சிமன்றங்களில் உள்ளவர்கள் தவறுதலாக நடந்து விட்டார்கள் என்பதற்காக, அத்தனையையும் கலைப்பது எப்படி நியாயம்?” என்று மாண்புமிகு சுப்பு அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டார்கள். மற்ற நண்பர்களும், இங்கே அதைப் பற்றிப் பேசி இருக்கிறார்கள். ஒரு விளக்கத்தைத் தரவேண்டியது பொறுப்பு என்று நான் எண்ணுகிறேன். நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்!

ஊராட்சி மன்றத் தேர்தல்கள் கடைசியாக 1970ஆம் ஆண்டில் தான் நடைபெற்றது. இப்போது 1979ஆம் ஆண்டு நடக்கிறது. அதற்கு முன் 1965ஆம் ஆண்டில், ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்றது. 1975இல் நடைபெறவேண்டிய ஊராட்சி மன்றத் தேர்தல்கள் வறட்சிப் பற்றாக்குறை, இயற்கையின் சீற்றம் மற்றும் இதர நிர்வாக காரணங்களுக்காக நடத்த முடியாமல், தள்ளி வைக்கப்பட்டு வந்தது. ஊராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆண்டுக்கு ஆண்டு நீட்டிக்கப்பட்டு வந்தது.

ஊராட்சி ஒன்றியங்கள் குடியரசுத் தலைவர் ஆட்சிகாலத்தில் கலைக்கப்பட்டன. 1976 முதல் 1979ஆம் ஆண்டு வரையில், ஊராட்சிகளின் சீர்கேடான நிருவாகத்தைப் பற்றி பல நூற்றுக்கணக்கான முறையீடுகள் பொது மக்களிடமிருந்து வந்துள்ளன. 1979 ஜுலை வரையில் 42 ஊராட்சிகள் கலைக்கப்பட்டன. 1977க்கு முன், 35 கலைக்கப்பட்டன. 1977 முதல் 1979 வரையில், 7 கலைக்கப்பட்டன. எனினும், பெரும்பான்மையான ஊராட்சிகளில் ஜாதி வேற்றுமைகள் காரணமாக, மனக் கசப்பும், நிருவாகச் சீர்குலைவும் மலிந்துவிட்டதாக, பொதுமக்கள் குறை கூறி வந்தனர். நாடாளுமன்றத் தேர்தல் இடையே குறுக்கிட்டதன் காரணமாக, ஊராட்சித் தேர்தல்கள் நடத்துவது ஒத்திவைக்க வேண்டியதாயிற்று. ஊராட்சித் தேர்தல் நடைபெறும் வரையில் ஊராட்சிகளின் நிருவாகத்தை மேற்கொண்டு நடத்திட தனி அலுவலர்கள் நியமிப்பது என்று கருதி, அரசு முடிவு எடுத்தது. ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காலத்தை முடித்துவிட அரசு முடிவு செய்து, அரசு அவசர சட்டம் பிறப்பித்தது. இன்னும் பல காரணங்கள் உண்டு. அவற்றை பின்னால் நான் சொல்கிறேன்.

1962ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சென்னை மாநகராட்சி உறுப்பினர்கள் தேர்தல் கடைசியாக நடைபெற்றது. அவர்களின் பதவிக்காலம் 30.11.1973 அன்று முடிவு அடைந்தது. சென்னையை 150 இடங்களாக பிரிக்கும் பணியை முடித்து, சென்னை மாநகராட்சித் தேர்தல் நடத்த 01.12.1973 முதல் ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். அவரதுப் பதவிக்காலம் அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, தற்போது 31.05.1980 வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த நீட்டிக்கப்படத் தொடங்கிய நாள் 01.12.1973ஆம் நாள் என்பதை மாமன்ற உறுப்பினர்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

சென்னைக்கு அருகிலுள்ள 12 ஊராட்சிகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து, அதை 150 வட்டங்களாகப் பிரித்து, 21.05.1979 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டது. 01.01.1979 அன்று 21 வயது அடைந்தவர்களுடைய பெயர்களைக் கொண்டு, புதிய வாக்காளர்ப் பட்டியல் வடசென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலுக்காக தயாரிக்கப்பட்டது. இதையே வடசென்னை நாடாளுமன்ற தொகுதி அடங்கிய புதிய மாநகராட்சி மன்ற இடங்களின் அடிப்படை வாக்காளர்ப் பட்டியலாகவும், மற்ற 108 வட்டங்களுக்கு நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலுக்காகத் தயாரிக்கப்பட்டுவரும் வாக்காளர்ப் பட்டியலை, அடிப்படை வாக்காளர்ப் பட்டியலாகவும் ஏற்றுக்கொண்டு, நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன்,

சென்னை மாநகராட்சி மன்ற வாக்காளர்ப் பட்டியல் தனியாகத் தயாரிக்கப்பட்டு, புதியப் பட்டியல் தயாரிக்கப்பட்டவுடன், சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் தேதி முடிவு செய்யப்படும்.

இதோடு முடிந்துவிடவில்லை; இன்னும் இருக்கிறது: பின்னால் சொல்கிறேன் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், உடன் பிறப்பு, என்று பேசக் கூடாது. இங்கே உறுப்பினர் அவர்கள் வெகு வேகமாக நல்ல அழகாக, குற்றம் சுமத்துகிற வகையில், வார்த்தைகளைச் சொன்னார்கள். தயவு செய்யுமா? நியாயமா? என்று கேட்கும் வார்த்தையில் கனிவு இருந்தது. “ஆனால், பிட்டுக்கு மண் சுமந்த கதை போல ஒரு அடி கொடுத்து, எல்லோருக்கும் அடி கொடுத்து விட்டீர்களே நியாயம்தானா?” என்று கேட்கும்போது, அநியாயம் செய்வது நியாயமா? என்ற கேள்வி தொக்கி நிற்கும் வகையிலே அவர்கள் சொன்னார்கள் என்பதைப் புரிந்துக்கொண்டேன்.

ஆனால், ஒன்றை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். எடுத்ததற்கெல்லாம் உதாரணமா என்கிறீர்களா? அதுவும் தேவைதான். மதுரை நகராட்சியாக இருந்தபோது கடைசியாக 26.04.1969இல் தேர்தல் நடைபெற்றது. 30.05.1969–ல் நகராட்சித் தேர்தல் நடைபெற்றது. 01.05.1971இல் மதுரை மாநகராட்சியாக மாற்றப்பட்டது. மாநகராட்சித் தலைவர் மேயராகி, அவருடைய பதவி காலம் 13.05.1974 வரை இருந்தது. பின் 01.11.1974 வரை அது நீட்டிக்கப்பட்டது. அதற்குப் பின் அது நீட்டிக்கப்படவில்லை. மாநகராட்சித் தனி அதிகாரி அன்று முதல் நியமிக்கப்பட்டு, மாநகராட்சி அருகில் உள்ள 13 ஊராட்சிகளையும் இணைத்து வார்டுகளை அமைத்த பிறகு, தேர்தல் நடத்தும் வரை அவர் பதவிக்காலம் ஒவ்வொரு ஆண்டும் நீட்டிக்கப்பட்டு, ஜூலை 1978இல் மாநகராட்சித் தேர்தல் நடத்தப்பட்டது. புதிய மேயர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதிலே யாருக்காவது அடி விழுந்து அதனால், எல்லோருக்கும் அடி விழவில்லை. நாங்கள் இந்த 13 பக்கத்தில் இருக்கின்ற ஒன்றியங்களையோ அல்லது ஊராட்சிகளையோ சேர்த்து அதை நீட்டித்தோமானால், பிட்டுக்கு மண் சுமந்த கதை நினைவிற்கு வருகிறது.

இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். இங்கே நிருவாக சீர்கேட்டிற்காக 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்பிரிவு 154இன்கீழ், 45 ஊராட்சிகள் கலைக்கப்பட்டன. இதற்கு முன் 1976 ஜனவரித் திங்களிலிருந்து 1976 ஜூன் முடிய 761 புகார்கள் வந்திருக்கின்றன. இந்த அரசுப் பதவிக்கு வந்ததிலிருந்து இதுவரை, ஆயிரத்திற்கு மேல் இந்த அரசுக்குப் புகார்கள் வந்திருக்கின்றன. இப்படிப்பட்டப் புகார்களின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போகின்றன. தவிர, சுற்றுப்பயணத்தில் சென்ற இடங்களில் எல்லாம், மக்கள் ஊராட்சித் தலைவர்களைப் பற்றி குறை கூறுகிறார்கள். சில ஊராட்சிகளின் தலைவர்கள் விதிமுறைகளைக் கூட எதையும் அனுசரிக்காமல், ஊராட்சியின் நிதியை விரயம் செய்தார்கள். சம்பந்தப்பட்ட கோட்ட வளர்ச்சி அலுவலர்கள், அவர்களுக்கு தண்டச் சான்றிதழ்கள் பிறப்பித்து, ஊராட்சிகளுக்குச் சேர வேண்டிய பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள்.

இந்த தண்டச் சான்றிதழ்கள் மீது அரசுக்கு வந்துள்ள மேல் முறையீடுகளின் எண்ணிக்கை 64 ஆகும். தவிர, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதற்காகவும் மற்ற குற்றச்சாட்டுகளுக்காவும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பல ஊராட்சித் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுத்துப் பதவி நீக்கம் செய்துள்ளார்கள். இது மட்டும் அல்ல; இது சம்பந்தமாக அரசுக்கு 51 மேல் முறையீடுகளும் வந்துள்ளன!

எனவே, மக்களிடம் இருந்து நேரில் கேட்டறிந்த பிறகும், புகார்களை விசாரித்த பிறகும், ஊராட்சிகளின் நிருவாகத்தில் சீர்கேடுகள் மலிந்துள்ளன என்பது தெளிவாயிற்று. இந்த நிலைமையை நீட்டித்து அனுமதிக்க, எந்த ஒரு மக்களாட்சியும் விரும்பாது. எனவே, இந்த நிலைமைகளுக்கு பரிகாரம் காண வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான், அவைகள் கலைக்கப்பட்டன. அது மட்டும் அல்ல; நான் முன்பே குறிப்பிட்டவாறு, பேச வேண்டியவை இன்னும் சில குறிப்புகள் இருக்கின்றன. ஊராட்சிகளின் தெரு விளக்குகள் எரிவதற்காக வேண்டிய மின்சாதனங்கள் வாங்குவது குறித்து, அரசு ஆணை எண்.68. நாள் 20.01.1975இல் மாநில அளவில் ஒரு கணிப்பும் செய்து, அதன் பிரகாரம், ஊரக வளர்ச்சி இயக்குநர், ஊராட்சிகளுக்கு தேவையான பல்புகள் மற்றும் மின்சாதனங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகளைப் பெற்று, பின் விலையை நிர்ணயம் செய்தபின், நிர்ணயப் பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிப்பார் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அந்த நிர்ணயப் பட்டியலை மாவட்ட ஆட்சியாளர்களுக்குத் தெரிவிப்பார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த முறைக்கு அரசாணை எண்.434 ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை 22.03.1978 ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கிடையில் அவசரக் காலத்தில் தேவைப்படும் மிக அத்தியாவசியமான மின்சாதனங்களுக்கு அவற்றை சூப்பர் மார்கெட்டிலிருந்து வாங்க, அரசாணை எண்.632 ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை 30.06.1978இல் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. மேற்கண்ட அரசாங்க ஆணைகளோடு, ஊராட்சி ஒன்றியங்கள் மின்சாதனங்கள் கிடைக்காத சில சமயங்களில், தேவையான சாதனங்களை உடனடியாக கூட்டுறவு அங்காடிகளிலிருந்தும், குடிமைப்பொருள் விநியோகக் கழகக் கடைகளில் இருந்தும் வாங்கிக் கொள்வதற்கு வகை செய்ய, அரசாணை எண்.604 ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை 14.06.1979 வெளியிடப்பட்டுள்ளது. இதுதவிர, மின் விளக்குகளை செவ்வனே பராமரிக்க ஊக்குவிக்கும் வகையில், சட்டமன்ற மின்சக்தி ஆலோசனைக் குழு பரிந்துரைத்தபடி, பழுதுபட்ட மின் விளக்குகளை சரி செய்யும் மின்வாரிய ஊழியர்களுக்கு, குமிழ் விளக்காக இருந்தால், 50 பைசாவும், குழல் விளக்காக இருந்தால், ஒரு ரூபாயும் அளிக்க வகை செய்யும் பொருட்டு, அரசாணை பொதுப்பணித்துறை அரசாணை எண்.505, 21.03.1979 ஆணையிடப்பட்டிருக்கிறது. 1979ஆம் ஆண்டு டெண்டர்கள் மூலம், ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் மூலம் மின்சார சாதனங்கள் வாங்கப்படுகின்றன. இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நேற்று முன் தினம் பேசிய நண்பர்கள் சிலர் பேச்சோடு பேச்சாகப் பேசுவது போல "எங்கேநீங்கள் ஆர்டர் கொடுக்கிறீர்கள் ? யாருக்கு கொடுக்கவேண்டுமென்கிறீர்கள் ? எங்கு வாங்க வேண்டுமென்கிறீர்களோ, அங்கு வாங்கிக்கொள்ளுங்கள், செய்து கொள்ளுங்கள் !" என்று, ஒட்டுமொத்தமாக, குற்றச்சாட்டுகளைக் கலந்து பேசிய நண்பர்களுக்கு, நான் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். டெண்டர்கள் மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள் மூலம், மின் சாதனங்கள் வாங்கப்படுகின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த குன்றத்தூர் ஒன்றியத்திலுள்ள ஆதனூர் ஹரிஜனக் காலனியில், மாடபாக்கம் ரெட்டிச் சாலை அமைப்பதற்காக ரூ.15,000 மதிப்பீட்டில் வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ், ஒரு சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, 80 மூட்டை அரிசி இந்த வேலைக்காக விநியோகம் செய்யப்பட்டது. சாலை ஆய்வாளரும் ஊர் நல ஊழியரும் அந்த வேலையாட்களுக்கு ஊதியம் தரும் பணிக்கு பொறுப்பாக்கப்பட்டார்கள். ஆதனூர் ஊராட்சித் தலைவர் அந்த 80 மூட்டையில், 60 மூட்டைகள் தான் வேலையாட்களுக்கு விநியோகம் செய்தார்கள். 22.08.1979ஆம் நாள் இரவு 10 மணிக்கு ஏழு மூட்டை அரிசியை, தன் ஆட்கள் மூலம் தாம்பரத்திற்கு அனுப்பிவிட்டார்கள். கிராம மக்கள் புகார் செய்ததன்பேரில், தாம்பரம் போலீசார் அந்த ஏழு மூட்டை அரிசியையும் 23.08.1979இல் கைப்பற்றி, ஆதனூர் ஊராட்சித் தலைவரை அன்றே கைது செய்துள்ளார்கள். அவர் பிறகு, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். மீதமுள்ள 13 மூட்டை அரிசியை பஞ்சாயத்து தலைவரிடமிருந்து ஒன்றிய ஆணையர் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர் சம்பந்தப்பட்ட கோட்ட வளர்ச்சி அலுவலரையும், உதவிக் கோட்ட பொறியாளரையும் நடைபெறும் வேலையைப் பார்வையிட்டு, தனக்கு ஒரு விரிவான அறிக்கையை அனுப்புமாறு கேட்டுள்ளார்கள். சம்பந்தப்பட்டச் சாலை ஆய்வாளர் மீதும், ஊர் நல அலுவலர் மீதும் மேற்காணப்பட்ட குறைபாடுகளுக்கு தகுந்த ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், குன்றத்தூர் ஒன்றிய ஆணையருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். இதுபோன்ற முறைகேடுகளும் உள்ளன.

நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். உணவுக்கு வேலை என்ற திட்டத்தில் நாங்கள் அதிகக் கவனம் செலுத்த விரும்பி, அதிலே அக்கறை காட்டுகிறோம். அதற்காக நாங்கள் மைய அரசிடம் போராடி, கோதுமைதான் தருவோம் என்று இருந்ததை ஏற்றுக்கொள்ள மறுத்து, அரிசிதான் தரவேண்டும் என்று நம்முடைய தேவையை எடுத்துச் சொல்லி, அவர்கள் அதற்கு ஒப்புக்கொண்டு அரிசி தரத் தொடங்குவதற்கு உரிய நேரத்தில், அவர்கள் தரத் தொடங்கியவுடனே அந்த வேலைகளை தொடங்கினோம். அந்த வேலைகள் தூர் எடுப்பது, சாலைகள் அமைப்பது, குளங்கள் வெட்டுவது, கால்வாய்களைச் சுத்தப்படுத்துவது, சீராக்குவது இவைபோன்ற அந்தந்தக் கிராமங்களுக்குத் தேவையான வேலைகளைச் செய்வதற்கு அவர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். நாங்கள் எவ்வளவு பேர்களுக்கு இந்த, 'உழைப்பிற்கு உணவு திட்டத்தின்கீழ்' வேலைவாய்ப்பு தந்திருக்கிறோம் என்று சொல்ல வேண்டியது எனது நீங்காத கடமை என்று கருதுகிறேன்.

தலைவர் அவர்களே, இதுவரையில் இப்படிப்பட்ட செய்தி வரவில்லை. இப்போது செய்தி வந்திருக்கிறது. எந்த ஊரில், இந்தவிதமாக நடைபெற்று வருகிறது என்பதை குறிப்பிட்டு தெரிவித்தால், இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களுடைய பட்டியலைப் படிக்கிறேன்.

மாவட்டங்கள்—

செங்கல்பட்டு – பயன்பெற்றவர்கள் – 88,096 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 2,088
முடிக்கப்பட்ட வேலைகள் – 1,243
முடிக்கப்பட்டுள்ள வேலையின் மதிப்பு – 28.35 இலட்சம் ரூபாய்.
வழங்கப்பட்ட அரிசி, மெட்ரிக் டன்னில் – 1,719
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.27.51 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 4.17 இலட்சம்

வட ஆற்காடு –

பயன்பெற்றவர்கள் – 30,005 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 1,498
முடிக்கப்பட்ட வேலைகள் – 238
முடிக்கப்பட்டுள்ள வேலையின் மதிப்பு – ரூ.33 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 1,825
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.29.20 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 2.14 இலட்சம்

தென் ஆற்காடு –

பயன்பெற்றவர்கள் – 61,198 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 1,700
முடிக்கப்பட்ட வேலைகள் – 913
முடிந்துள்ள வேலைகளின் மதிப்பு – ரூ.23.90 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 1,269
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.19.3 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 3.68 இலட்சம்

சேலம் மாவட்டம் –

பயன்பெற்றவர்கள் – 39,309 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 2,558
முடிக்கப்பட்ட வேலைகள் – 502
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.24.16 இலட்சம்.

வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 1,321
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.19.81 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 3.71 இலட்சம்

தருமபுரி –

பயன்பெற்றவர்கள் – 2,11,455 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 2,688
முடிக்கப்பட்ட வேலைகள் – 1,903
முடித்துள்ள வேலையின் மதிப்பு – ரூ.21.57 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 1,136
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.29.52 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 3.82 இலட்சம்

கோயம்புத்தூர் –

பயன்பெற்றவர்கள் – 10,564 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 1,345
முடிக்கப்பட்ட வேலைகள் – 105
முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு – ரூ.9.52 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 299
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.4.49 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 1.50 இலட்சம்

நீலகிரி –

பயன்பெற்றவர்கள் – 1,791 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 674
முடிக்கப்பட்ட வேலைகள் – 116
முடிக்கப்பட்டுள்ள வேலைகளின் மதிப்பு – ரூ.1.35 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 143
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.2.27 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 0.13 இலட்சம்

திருச்சிராப்பள்ளி –

பயன்பெற்றவர்கள் – 3,01,675 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 5,711
முடிக்கப்பட்ட வேலைகள் – 4,112
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.69.74 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 4,318
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.69.8 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 12.36 இலட்சம்

மதுரை –

பயன்பெற்றவர்கள் – 71,416 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 4,272
முடிக்கப்பட்ட வேலைகள் – 1,721
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.70 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 3,900
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.59.50 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 8.73 இலட்சம்

புதுக்கோட்டை –

பயன்பெற்றவர்கள் – 65,713 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 989
முடிக்கப்பட்ட வேலைகள் – 384
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.12.68 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 800
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 2.14 இலட்சம்

இராமநாதபுரம் –

பயன்பெற்றவர்கள் – 1,44,748 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 3,587
முடிக்கப்பட்ட வேலைகள் – 1,043
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.48.15 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 3,210
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.48.15 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 8.45 இலட்சம்

பெரியார் மாவட்டம் –

பயன்பெற்றவர்கள் – 7,349 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 625
முடிக்கப்பட்ட வேலைகள் – 307
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.6.44 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 160
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.2.40 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 38,000

தஞ்சாவூர் –

பயன்பெற்றவர்கள் – 2,88,000 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 5,343

முடிக்கப்பட்ட வேலைகள் – 4,210
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.88.28 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 5,346
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.80.19 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 14.39 இலட்சம்

திருநெல்வேலி –

பயன்பெற்றவர்கள் – 15,500 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 3,585
முடிக்கப்பட்ட வேலைகள் – 553
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.47.98 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 2,615
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.39.22 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 7.28 இலட்சம்

கன்னியாகுமரி –

பயன்பெற்றவர்கள் – 7,718 பேர்கள்
எடுத்துக் கொள்ளப்பட்ட வேலைகள் – 870
முடிக்கப்பட்ட வேலைகள் – 462
முடிக்கப்பட்ட வேலைகளின் மதிப்பு – ரூ.9.78 இலட்சம்.
வழங்கப்பட்ட அரிசியின் அளவு, மெட்ரிக் டன்னில் – 269
வழங்கப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ.3.86 இலட்சம்
உருவாக்கப்பட்ட மனித உழைப்பின் நாட்கள் – 99,000

இதை நான் சொல்லும்போது மொத்தம் 13,49,532 பேர்களுக்கு வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுபோக, எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள் 37,973; முடிந்திருக்கும் வேலைகள் 17,242; முடித்துவிடும் வேலைகளின் மொத்த மதிப்பு 492.90 இலட்சம் ரூபாய்; மெட்ரிக் டன் 283.30; இலட்சத்தில் 433.93; ஆட்களின் உழைப்பு 73.88 நாட்கள்.

இதை நான் இங்கே சொல்வதற்கு முக்கிய காரணம் இந்த அரசு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு என்ன செய்து கொண்டிருக்கிறது; எதுவுமே செய்யவில்லை, முதலில் இலட்சம் பேர்களுக்கு என்றார்கள்.

சுப்பு அவர்கள் பேசுவதில் மரியாதை உண்டு; ஆனால் இப்படி அவமானகரமாகப் பேசுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. வேறு யாராவது படிப்பது என்றால் முதலமைச்சர் பதில் சொல்வதற்கு இங்கு இருக்கவேண்டிய தேவையில்லை.

இவர்கள் தான் பேரவைக்கு வெளியே சென்று, இவர்கள் எந்தப் பணியைச் செய்தார்கள். எந்தக் காரியத்தைச் செய்தார்கள். புள்ளி விவரங்கள் தர முடிந்ததா,

கேட்டால் எதுவும் சொல்லாமலே என்று பேசுவதில், மாண்புமிகு சுப்பு அவர்கள் முக்கியமானவர் என்பதை நான் நன்கு அறிவேன். ஆகவே, அவர்கள்தான் முழுமையாகக் கேட்க வேண்டும்.

கஷ்டப்படுவது என்பதை ஏற்றுக்கொண்டுதான், இந்தப் பணிக்கு வந்திருக்கிறோம். இங்கே வரவில்லையே என்று கவலைப்படுபவர்களும், பதில் சொல்வதைக் கேட்பவர்களும் கொஞ்சம் பொறுமையாக இருக்கவேண்டும்.

மீண்டும் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். பட்டியலை குறிப்பாக பாடம் செய்து ஒப்பிக்க முடியாது. பார்த்துத்தான் சொல்ல முடியும்.

மத்திய அரசு, மாநில அரசு என்பதல்ல. இந்த மாநில அரசு செய்துள்ள வேலைகள் இவை. இந்த வேலைகளை நிறைவேற்றுவது எங்களுடைய கடமை. அதை ஒழுங்காக, செம்மையாகச் செய்து வருகிறோம். ஒதுக்கப்பட்ட பணத்தை செலவழிக்காமல், பணத்தைத் திருப்பியனுப்புகிறார்கள் என்று கேட்கிற உரிமை, உங்களுக்கு இருக்கும்போது, கொடுக்கிற பணத்தையும், நெல்லையும், அரிசியையும் பயன்படுத்திக் கொள்கிறோம் என்று சொல்லும்போது, அது எங்கள் வேலை இல்லை என்று நான் கருதக்கூடாது.

எடுத்துக் கொண்ட திட்டங்கள் எவ்வளவு என்பதைச் சொல்லி இருக்கிறேன். வேலை செய்த மனித உழைப்பினுடைய நாட்கள் எவ்வளவு என்பதை, இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். கொடுக்கப்பட்ட அரிசியினுடைய அளவு எவ்வளவு என்பதைச் சொல்லியிருக்கிறேன். அதற்குரிய விலை, மதிப்பு, எத்தனை இலட்சம் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறேன். அதிலே இருக்கின்ற உண்மை, வேலை தொடர்கிறது. நாங்கள் எடுத்துக்கொண்ட வேலைகள் தொடர்கிற வரையில் அந்த வேலை நடந்துகொண்டே இருக்கும். அவர்களுக்கு வேலை இருந்துகொண்டே இருக்கும். அந்த வேலைகள் முடிந்த பிறகு, இன்னொரு வேலைக்கு அனுப்பப்படும் பொழுது, அவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, அந்த வேலைக்குரிய அதே மாதிரியான நிலைமையை அந்தநேரத்திலே அங்கே ஏற்படுத்துவோம். ஆக, வேலை நடந்து கொடுக்காமல் இல்லை! வேலை நடந்திருக்கிறது. திட்டம் போட்ட அளவுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தத் திட்டத்தினுடைய இறுதி கட்டத்திற்கு இன்னும் வரவில்லை. மீதி இருக்கிறது என்று பொருள்.

இதற்காக மணவாளன் தலைமையில் குழு இருக்கிறது. அதற்கு உடன் வேலை செய்ய வேண்டிய பொறுப்பை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரிடம் ஒப்படைத்திருக்கிறோம். அது உள்ளாட்சித் துறைச் செயலாளர் மூலமாகச் செயல்பட நாங்கள் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

நான் என்ன சொல்ல விரும்பினேனோ, அதைத்தான் நண்பர் ஆறுமுகம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சாதாரணமாக, எப்படி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்

கூறுகின்ற வரையில், நான் எவ்வளவு அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தேனோ, அதுபோல் நான் பேசிமுடிக்கின்ற வரையில், குறுக்கிடாமல் இருந்து, அதற்குப் பிறகு பேராசிரியர் அவர்கள் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். இவ்வளவு நாள் நீட்டிக்கொண்டு போயிருக்காது. நாளைய தினம் அந்த மாதிரி இல்லாமலிருந்தால், நிச்சயமாக முடிந்துவிடும். இல்லையென்றால், ஒரு மணி நேரம் நீட்டியாவது நாளைக்கு முடித்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.

எங்கள் கட்சிக்காரர்கள், மாற்றுக் கட்சிக்காரர்கள் என்று நாங்கள் பார்த்து, யாரையும் நியமிப்பதில்லை. யார், யார் அங்கே தயாராக தகுதி உடையவர்களாக, மற்றவர்களால் சொல்லப்படுகிறார்களோ, அவர்களை நியமித்திருக்கிறோம். இன்னொன்றையும் நான் குறிப்பிட, நினைவுபடுத்தியதற்கு, நண்பர் அவர்களுக்கு, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தலில் ஒருசில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று நான் கருதுகிறேன். 1. தாழ்த்தப்பட்டவர்கள் தலைவர்களாக வருவதற்கு உரிமையாக, அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று, இத்தனை தொகுதிகள் என்று ஒதுக்கி வைக்க வேண்டுமென்பது என்னுடைய எண்ணமாகும். அது மட்டுமல்லாமல், தாய்க்குலத்திற்கு என்றும், இத்தனை சதவீத இடங்கள் என்று ஒதுக்கி வைக்கவேண்டுமென்பது என்னுடைய விருப்பமாகும்! 100க்கு 18 என்ற என்றளவில் நாம் கைக்கொள்கிற காரணத்தால், அந்த 18 என்ற விகிதத்தை, எந்த அளவிற்கு இந்த 12,300 தொகுதிகளிலும் வருகிறதோ, அதிலும், நகரசபைகளிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும் எல்லாம், தாழ்த்தப்பட்டவர்களுக்கென்று தலைமை பதவி ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க, நான் சட்டமும் கொண்டுவரத் தயாராக இருக்கிறேன். அதுபோலவே, 20 சதவீதத்தினை தாய்மார்களுக்கு ஒதுக்கி வைக்கவேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தை இங்கே சொல்லி, அதையும் நிறைவேற்றி, விரைவிலே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், இவைகளுக்கெல்லாம் தேர்தல் நடத்த வேண்டுமென்றும் எனது எண்ணத்தையும் நானிங்கு தெரிவிக்கிறேன்.

இதுபோன்ற பல காரணங்கள் உள்ளன என்பது மட்டுமல்லாமல், முன்பு இதே மன்றத்திலே பேசியதைப் போல, வாக்காளர்களுடைய படங்களைக் கொடுத்து, அந்தப் படங்களையும் வைத்து, வாக்குகள் அளிக்கக்கூடிய நிலைமைகளை உருவாக்குவதற்கும், நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

நாடாளுமன்றத் தேர்தல் போன்றவைகளிலே, அதைக் கொண்டு வந்தோம் என்றால், மைய அரசு குறிப்பிடத்தக்க அளவுக்கு, குறிப்பிட்ட சதவீதம் பணம் தருவதற்குத், தயாராக இருக்கிறார்கள்; ஆனால், ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்களுக்கு எல்லாம் அவர்கள் தருவதாக இல்லை! ஆகவே, அப்படித் தராமல் இருந்தாலும் கூட, ஓர் நல்ல காரியத்தை நடத்துவதற்கு, கள்ள ஓட்டுப்

போடுகின்றவர்கள், மறைந்தவர்கள் பெயரைப் பயன்படுத்தி ஓட்டுப் போடுகின்றவர்கள், இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடைபெறாமல் இருக்கக்கூடிய அளவிற்கு புகைப்படங்களைக் கொடுத்து, அந்தப் புகைப்படங்களை அடையாளமாகக் காட்டி, அவர்கள் வாக்களிக்க வேண்டுமென்கிற அளவிற்கு அதைப் பயன்படுத்தலாம் என்று நினைக்கிறோம். வேறு சில மாநிலங்களில் அது வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறதென்ற தகவல் வந்திருக்கிறது. ஆகவே, அதைச் செய்வதன் மூலம் நல்ல பலன் தரும் என்று நான் நினைக்கிறேன்.

அதையும் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்த அளவுக்கு விவரம் தெரிந்தவர்கள் வாக்களிக்க முடியுமோ, அத்தனை மக்களுக்கும் வாக்குரிமை அளிப்பதற்கு நாம் சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும்.

நிச்சயமாக அது திருத்தப்படும். அதோடு ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், இந்த 18 வயது என்பது மிக நல்ல யோசனை என்பதை நான் இங்கே மீண்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். காரணம் 18 வயது இளைஞர்கள் மிக மிக அக்கறையாக இப்பொழுது அரசியலை கவனிக்கிறார்கள். ஒவ்வொரு தலைவரையும் கவனிக்கிறார்கள்.

மாண்புமிகு நண்பர் சுப்பு அவர்கள், தன்னுடைய வரலாற்றை எடுத்துக்காட்டியதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சி. ஆனால், 18 வயது என்பது மிக மிகத் தேவை என்பதை எல்லோரும் மகிழ்ச்சியோடு ஆமோதிக்கும் நிலையிலே, இதைப் பற்றி விரைவாக பரிசீலித்து, ஒரு முடிவு வரும் என்பதும், நாடாளுமன்ற தேர்தல் முடிந்த உடனேயே விரைவில் என்பதற்கு எத்தனை மாதம், எத்தனை ஆண்டுகள், என்று ஒரு கணக்கு இல்லாமல் இருக்கிறது ஒரு எல்லை கிடையாது, என்ற வகையில் பேசினார்கள். நான் மனமுவந்து, மன நிம்மதியோடு சொல்கிறேன். ஏப்ரல் மாதத்திற்குள் என்று நீங்கள் வைத்துக் கொள்ளலாம். நமது பட்ஜெட் செஷன் முடிந்த உடனே ஒரு இரண்டு மாத காலத்திற்குள் இந்தத் தேர்தல் நடைபெறும் அளவிற்கு நாங்கள் முயற்சிப்போம் என்பதை நாங்கள் இங்கே சொல்லிக் கொள்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் இருவர் சொன்னதையும் நாங்கள் மனதில் வைத்துக்கொள்கிறோம். ஆனால், உத்தரவாதம் தர முடியாது. ஆனால், அலட்சியப்படுத்த மாட்டோம் என்பதை மாத்திரம் சொல்லிக் கொள்கிறேன்.

இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தைப் பற்றி, சிலர் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 1961ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கிழக்குப் பகுதியின் வட்டங்களான, நாகப்பட்டினம், நன்னிலம், திருவாரூர், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, மாயவரம், சீர்காழி ஆகியவற்றில் அமலில் உள்ளது. அந்தச் சட்டத்தின்படி, அங்கேயுள்ள வேளாண்மைத்

தொழிலாளர்களுக்கு நியாய ஊதியம் தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த நியாய ஊதியம் பணமாகவோ, தானியமாகவோ கொடுக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நியாய ஊதியம் முழுவதும் பணமாகக் கொடுக்கப்படும்போது, அக்டோபர் முதல் நாள் முதல், மே மாதம் 31ஆம் நாள் வரையில், ஒரு விகிதமாகவும், ஜூன் மாதம் முதல் நாள் முதல், செப்டம்பர் மாதம் 30ஆம் நாள் வரையில் கூடுதல் விகிதமாகவும், குறிப்பிட்ட பணிகளுக்கு ஏற்ப நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஜூன் முதல் செப்டம்பர் வரையில் பணமாகக் கொடுக்கப்படும் ஊதியம் அதிகப்படுத்தப்படுவதன் காரணம், அறுவடை முடிந்த கடைகளில் உணவு தானியங்கள் விலை சற்றுக் கூடுதலாக இருக்கும் என்பது தான்.

இந்தப் பாகுபாடு இல்லாமல், ஆண்டு முழுவதும் ஒரு பணிக்கு ஒரே விகிதத்தில் நியாய ஊதியம் நிர்ணயிக்க வேண்டும் என கோரிக்கைகள் அரசுக்கு வந்து உள்ளன. இவற்றையெல்லாம் பரிசீலித்து அரசு, அந்தக் கோரிக்கைகளை ஏற்க முடிவு செய்துள்ளது.

அதன்படி, அக்டோபர் முதல் நாள் முதல், மே மாதம் 31ஆம் தேதி முடிய உள்ள காலத்திற்கும், மீதம் உள்ள காலத்தில் வழங்கப்படும் கூடுதல் ஊதியத்தையே நிர்ணயிப்பது என, அரசு முடிவு எடுத்துள்ளது. ஆகவே, அக்டோபர் முதல் நாள் முதல் மே மாதம் 31ஆம் தேதி வரையில், நியாய ஊதியம் சிலப் பணிகளுக்கு, ஒரு தினத்திற்கு ரூ.6.60 என்று இருப்பதை, ரூ. 7.20 என்றும், வேறு சில பணிகளுக்கு, இப்போது ஒரு தினத்திற்கு ரூ.5 என்று இருப்பதை, ரூ.5.60 என்றும், சிறுவர்களுக்கு இப்போது ஒரு தினத்திற்கு ரூ.3.60 என்று இருப்பதை, ரூ.4 என்றும் உயர்த்தப்படும். இவ்வாறு உயர்த்தப்பட்ட ஊதிய விகிதங்கள் இன்று முதல் அமலுக்கு வரும்.

தொடர்ந்து நடைபெறுகின்ற கண்டனத் தீர்மானத்திலே பதில் கூறுகின்ற நிகழ்ச்சியின் தொடர்பாக, இன்று சில கருத்துக்களை எடுத்துக்கூற நான் விரும்புகிறேன்.

முறைப்படி என்னுடைய பேச்சு முடிந்த பிறகு பேராசிரியர் அவர்கள், தாம் சொல்ல விரும்பும் கருத்தை எடுத்துக் கூறவும், அதற்கு நான் பதில் கூற வேண்டிய அவசியம் இருந்தால், நான் எடுத்துக் கூறவும் என்கிற நிலையில், இன்றைய தினம் விவாதம் தொடரும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில், முதலில் விலைவாசியைப் பற்றி ஒன்றிரண்டு குறிப்புகளை இங்கே தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்கள் பேசியபோது விலையைக் கட்டுப்படுத்த நியாயவிலைக் கடைகளைத் திறந்திருக்கிறார்கள் என்றாலும், புகார்கள் வருகின்றன என்பதையும் கூறி, தேவையான பொருட்கள் அங்கே இல்லை என்று புகார்கள் எடை சரியாக இல்லை என்று சொல்கிறார்கள், என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு ஒட்டுமொத்தமாக, ஒரு சிறிய பதிலாக நான் தெரிவிக்க விரும்புவது, மாநிலம்

முழுவதும் வருவாய் கிராமம் ஒவ்வொன்றிலும் நியாயவிலைக் கடைகள் அமைப்பது என்றும், இந்தக் கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களோடு, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், புளி, மிளகாய் போன்ற இன்றியமையாத பொருட்களையும் மக்கள் வாங்க வேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாகும். இத்திட்டம் பின் வருமாறு செயல்படுத்தப்படுகிறது.

ஏற்கெனவே இயங்கிவரும் நியாயவிலைக் கடைகளை மற்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கும் நியாயவிலைக் கடைகளாக மாற்றி அமைத்தல்; அந்தந்தக் கிராமங்களிலே நியாயவிலைக் கடைகள் இல்லாத கிராமங்களில், புதிய கடைகளைப் படிப்படியாகத் திறந்து வைத்தல்; முதற்கட்டமாக, ஏற்கெனவே இயங்கி வந்து கொண்டிருக்கும் சுமார் 5,200 கடைகள் பல்பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றப்பட்டுள்ளன.

இரண்டாவது கட்டமாக, மாநிலம் முழுவதும் புதிய கடைகள் திறக்கும் பணியும் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கூட்டுறவுத்துறை பணி நிலையங்களை, நெல்லை, தஞ்சாவூர், தருமபுரி, தென்னார்க்காடு போன்ற மாவட்டங்களில், 3,899 கடைகளையும், மற்ற மாவட்டங்களில் என்று குறிப்பிடும்போது, 6,819 கடைகளையும், ஆக மொத்தம் 10,718 கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

நியாயவிலைக் கடைகளில் எல்லாப் பொருட்களும் எடைப்படிதான் விநியோகிக்கப்படுகின்றன. எடைக் கற்கள், எடை அளவைத்துறை அலுவலர்களால் அவ்வப்போது பரிசீலனை செய்யப்பட்டு கால முறைப்படி முத்திரையிடப்படுகின்றன. பொது விநியோக முறையில், பொருட்களின் எடை துல்லியமாக இருக்கவும், எடையின் அளவைத் துறையின் விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்கவும், அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. மக்களுக்கு குன்றாது சப்ளை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் கடைகளை இடத்திற்கேற்ப, வேலை நேரங்களை மாற்றியமைத்துள்ளது. தற்போது ஸ்டாண்டர்டு துணியை மட்டும் தான் கூட்டுறவு அமைப்புகள் விநியோகித்து வருகின்றன. அவைகள் இந்திய அரசாங்கத்திலிருந்து மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு தனியாக ஒதுக்கீடு செய்ய மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்திய அரசின் பதிலை எதிர்நோக்கியிருக்கிறோம்.

அடுத்து உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகிறது. பருப்பு வகைகளின் விலைகள் கிலோ 6 ரூபாய், 7 ரூபாய் என்று விலை ஏறிக்கொண்டே போகிறது என்றும் சொல்லியிருக்கிறார். ‘அது பற்றி நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டே வருகிறேன். விளைகின்ற போது வாங்கி வைத்துக் கொண்டு, விலை ஏற்றத்தின் போது விநியோகிக்கலாம் என்றும் சொல்லியிருக்கிறேன்.

அதைப்பற்றி கவனிக்கவே இல்லை' என்ற குற்றச்சாட்டை சுமத்துகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

பருப்புகளைப் பொறுத்தவரையில், கடலைப் பருப்பு, துவரம் பருப்பு போன்றவைகள் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 3 முதல் 5.40 ரூபாய் வரையிலான விலைக்குள் கட்டுக்கடங்கியிருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், எப்பொழுதுமே பருப்பு வகைகள் உற்பத்தியாவது, தமிழகத்தின் தேவைக்கு மிகவும் குறைவான அளவேயாகும். தன்னுடைய தேவைக்குத் தமிழகம் வட மாநிலங்களை நம்பியே உள்ளது. உற்பத்தியாகும் மாநிலங்களிலேயே, தற்போது பருப்பின் விலை அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால், தமிழகத்திலும் அவற்றின் விலைகள் முந்தைய ஆண்டை விட உயர்ந்து காணப்படுகின்றன. தமிழகத்தின் தேவைக்கு, விநியோகம் செய்யும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மொத்தமாக முழுவதையுமே வாங்கி விநியோகிப்பது என்பது இயலாது. அப்படி மொத்தமாக எல்லா வியாபாரிகளின் வர்த்தகத்தையும் எடுத்து நடத்துவது என்றால், கோடிக் கணக்கில் மூலதனம் தேவை. அவர்களுக்கும் வேலை போகும். நியாயமாக வியாபாரம் நடத்துபவர்களுக்கு நஷ்டம் ஏற்படுத்தவோ, அவர்களுக்கு அந்த வேலையை இல்லாமல் செய்யவோ விரும்பவில்லை. அது சாத்தியமும் இல்லை. இருப்பினும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சுமார் 2,000 டன் பருப்புகளை வடமாநிலங்களிலிருந்து வாங்கி, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விநியோகம் செய்து வருகிறது.

தேசிய நுகர்வோர் கூட்டுறவு நிறுவனமும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் வட மாநிலங்களிலிருந்து பருப்பை வாங்கி கூட்டுறவு அங்காடிகள் மூலமாக விற்பனை செய்கின்றன. இந்த ஏற்பாட்டினால் விரையில் விலைகள் சீராக இருக்கும் என்பது மட்டுமல்லாமல், இன்னமும் குறைப்பதற்கான முயற்சியை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதோடு, இப்படிப்பட்ட பருப்பு வகைகளை எந்த அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமோ அந்த வகைகளில், நாங்கள் கவனத்தைச் செலுத்தி, முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மருத்துவக் கல்லூரி பற்றி இங்கே பேசப்பட்டது. வழக்குமன்றத்தில் இருக்கிற ஒரு பிரச்சினையைப் பற்றி சட்டமன்றத்தில் பேசக் கூடாது என்று இருந்தும், நாம் அந்த மரபைக் கடைபிடிப்பது முறை என்று தெரிந்திருந்தாலும், அதைப் பற்றி பிரச்சினை இங்கே எழுந்தது. இருந்தாலும் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அந்த முடிவு தெரிகிற வரையில், அதைப் பற்றி இப்போது கருத்துக் கூறுவது முறையல்ல என்பதால், அந்த விளக்கங்களைச் சொல்ல முடிந்தாலும், அதை நான் இங்கே சொல்ல முடியாமல் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அமெரிக்கா சென்றபோது, என்னிடம் அங்கு வாழ்ந்து வருகிற தமிழக மக்கள், எங்களுடைய பிள்ளைகள், தமிழகத்தில் வந்து படிப்பதற்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டபோது, அந்த நிலைமையை நீங்கள் விரும்புவீர்கள் என்றால்

தமிழக அரசு நிச்சயமாக ஒத்துழைக்கும் என்று நான் பகிரங்கமாக சொல்லிவிட்டு இங்கே வந்திருக்கிறேன். அந்த வகையில் இங்கே, எனக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது என்ற முறையில் அல்ல, மனுக்கள் அனுப்பியபோது, அவற்றைப் பரிசீலித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியலைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பதிவு எண்.154 – லிடியா ராஜேந்திரன், பெல்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

பதிவு எண். 367 – செல்வி உமா ஐயாத்துறை, 26, 5–வது மெயின்ரோடு, ஆர்.ஏ. புரம், சென்னை.

பத்மினி ராஜேந்திரன், 10, தெற்கு மாதா சர்ச் ரோடு, இராயபுரம்.

செல்வி சுப்புலட்சுமி பிள்ளை

கல்யாணி நாகராஜன்

இவர்கள்தான் அவர்கள் என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அவரவர்கள் கருத்து அவரவர்களுக்குச் சொந்தமானது; என்றாலும் உண்மையை விளக்க வேண்டும் என்ற வகையில் இங்கே கேட்டார்கள். கேட்டால் தருகிறேன் என்று சொன்னேன். அவர்கள் கேட்டார்கள். தேர்ந்தெடுக்கப்படுவதல்ல. அமைச்சர்களுக்கு குறிப்பாக, முதலமைச்சர் அவர்களுக்கு அதிக இடம் ஒதுக்கலாம் என்ற உரிமை இருக்கிறது. அந்த வகையில் அது முறையானதுதான். அடுத்தபடியாக இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்.

எந்தெந்த வகையில்; நேரத்தில், அவர்கள் வந்து நம்மை அணுகுகிறார்களோ, அந்தந்த வகையில்; நேரத்தில், நாம் செய்ய வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். அந்த விண்ணப்பங்களில் நேரம், காலம் குறிப்பிட்டு, அவற்றையும் தேர்தல் குழுவிற்கு அனுப்புவது வழக்கமில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்வேன். மிசோரம் 'சீப் மினிஸ்டர்' ஒரு வாரத்திற்கு முன்பு என்னைச் சந்தித்தார்கள். என்னோடு விருந்துண்ண வந்திருந்தபோது, அவர்கள் என்னிடம் கேட்டார்கள். அங்கு மருத்துவ நிபுணர்கள் இல்லை. நாங்கள் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். இரண்டு மருத்துவர்களுக்கு அனுமதி தேவை, அனுமதி வழங்கவேண்டும் என்றார்கள். நான் உடனே அதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். உடனே அவர்கள், வடநாட்டு பகுதிகளில் இருக்கின்ற மிசோரம் பகுதியிலுள்ள மக்களுக்கு மட்டும் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். அதேபோல், மொரீஷியஸ் தீவிலிருந்து வந்து கேட்கின்றார்கள். அதேபோல, காஷ்மீரத்திலிருந்து ஒன்று என்று இருந்தால், அதை 2, 3 என்று ஆக்க வேண்டும் என்று கேட்கின்றார்கள். கல்வி கற்றுத் தெரிந்து செல்ல வேண்டும். அங்குத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு உதவி செய்கின்ற முகத்தான், இப்படிப்பட்டவர்களுக்கு உதவி செய்கின்ற நேரத்தில், விரும்புகின்ற

இப்படிப்பட்ட நல்ல காரியத்திற்கு உதவி செய்கின்றோமேத் தவிர, இதில் இலாப நஷ்டத்தைக் கணக்குப் பார்த்து, அதில் எப்படி வேண்டியவர்கள்; வேண்டாதவர்கள் என்று பார்த்து, இந்த அரசு செய்வதில்லை என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன். குறுக்கீடுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை, நான் பதிலளிக்கும் நேரம் அதிகமானால், என்னைக் குறை கூறவேண்டாம்.

விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. வந்த விண்ணப்பங்களை வைத்துத்தான் இடம் ஒதுக்கப்பட்டது.

எனக்குத் தெரிந்த அளவில்; குறிப்பு இருக்கின்ற அளவில், அது அவ்வளவு தான் என்றுக் கருதுகிறேன்.

மேலும், இம்மாநிலத்தில் மொத்தம் எட்டு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. முதன்முதலாக, அந்த கல்லூரிகள் 1,125 மாணவர்களைச் சேர்ப்பதற்கு சித்தமாக இருந்தது. அதற்கு இந்திய மருத்துவக் கழகமும், சென்னை மற்றும் மதுரை பல்கலைக்கழகமும் இசைவு அளித்துள்ளது. ஆயினும், மருத்துவர்களிடையே நிலவும் வேலைவாய்ப்பின்மையையும், ஒவ்வொரு மருத்துவக் கல்லூரியிலும் பயிற்சி அளிப்பதற்கான வசதிகளையும் கருத்திற்கொண்டு, கல்லூரியில் சேர்க்கும் இடத்தை அறிவார்ந்த முறையில், கொணரும் பொருட்டு, சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,125லிருந்து 1,015 ஆக, மாநில அரசு 1971ஆம் ஆண்டு குறைத்தது. அந்த மரபுப்படி, 1979ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 1,015 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டார்கள். பல்வேறு தரப்பிலிருந்து வந்த மனுக்களின் அடிப்படையிலும், சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய கடமையையும் கருத்திற்கொண்டு, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு ஐந்து இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான உத்தரவு 13.09.1979ஆம் நாள் செய்தித்தாளில் வெளியிடுவதற்கு முன்பாகவே பிறப்பிக்கப்பட்டது.

சமுதாயச் சீர்திருத்தத்தின் ஒரு பகுதியாக, 1978ஆம் ஆண்டு விதவைகளுக்கு என்று ஆறு இடங்களும், ஊனமுற்றவர்களுக்கு 3 இடங்களும் ஒதுக்கப்பட்டன. இராணுவத்திடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் வந்த எண்ணற்ற மனுக்களைக் கருத்திற்கொண்டு, மீண்டும் முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகளுக்கும், இறந்துவிட்ட இராணுவத்தினரின் குழந்தைகளுக்கும், தற்பொழுதுப் பணிபுரியும் இராணுவத்தினரின் குழந்தைகளுக்கும் முறையே, இரண்டு வீதம் மொத்தம் ஆறு இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பொதுமரபான கோட்டாவின் கீழ், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பணிபுரியும் தமிழ் இனத்தவர்களுக்கு 6 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதைப்போலவே, விளையாட்டு வீரர்களுக்கு பொதுமரபு 'கோட்டா'வின்கீழ் 3 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், அமெரிக்க ஐக்கிய நாட்டில் பணிபுரியும் தமிழர்களின் குழந்தைகளுக்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள் ஏற்கெனவேயுள்ள, இந்த 1,015 இடங்களுக்கு அப்பாற்பட்டவை. இந்த ஒதுக்கீட்டினால் தமிழ்நாட்டு மாணவர்கள்

போட்டியிடக்கூடிய 985 இடங்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது. கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கும், அமெரிக்க ஐக்கிய நாட்டு தமிழக வம்சா வழியினருக்கும், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கும், ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு இந்திய மருத்துவ கழகத்தின் ஒப்புதலையே பெறவில்லை என்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து சரியானது அல்ல, என்பதை நான் சொல்லிச் சொல்லவில்லை என்றால் எனக்கு மகிழ்ச்சி.

நான் அமெரிக்காவில் பேசிய கருத்துக்கள் அப்போதே விளம்பரப்படுத்தப்பட்டு இருக்கின்றன. பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது. இது புதியச் செய்தி அல்ல என்பதும், பலரும் அதனை அறிந்திருக்கிறார்கள் என்பதும், நாமறிந்த உண்மை. மேலே சொல்லியுள்ள 1,015 இடங்கள் எல்லையைத் தாண்டியவர்களுக்கு இடங்கள் அளிப்பதற்கு, எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான அதிகாரம் மாநில அரசுக்கு உண்டு. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள தமிழ் இன வம்சாவழியினருக்கு 6 இடங்கள் ஒதுக்கப்பட்டன மற்றும் இடங்கள் ஒதுக்கப்பட்டன அதை நான் சொன்னேன். அதைப்போலவே, மொரீஷியாவிலுள்ள தமிழ் வம்சாவழியின் மாணவர்களுக்கு எட்டு, ஸ்ரீலங்கா, தென் ஆப்பிரிக்கா மற்றும் பீஜி போன்ற வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ் வம்சா வழியினருக்காக 4. இந்த அடிப்படையில், அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள தமிழ் வம்சா வழியினருக்குச் செய்யப்பட்ட இட ஒதுக்கீட்டில் எந்தவிதத் தவறும் இல்லை. தமிழ் மக்கள் பெருவாரியாக வாழும் நாடுகளிலுள்ள தமிழ் இன மாணவர்களுக்கும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வந்தால், அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட இடங்கள் 1015. மத்திய அரசு நியமனங்கள் 9. ஜம்மு அண்டு காஷ்மீர் மாணவர்கள் 2, நேபாளம் 2. தமிழ் நாட்டைச் சேர்ந்த மலேஷிய மாணவர்கள் 8. ஸ்ரீலங்கா, பர்மா 5. வெளிநாடுகளில் இருக்கும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், ஸ்ரீலங்கா, தென் ஆப்பிரிக்கா, பிஜி 4. 985 இடங்கள் இதிலே விஞ்ஞான பட்டதாரிகளுக்கு 10 விழுக்காடு. மீதி 886 இடங்கள் புதுமுக வகுப்பு மாணவர்களுக்கு கொடுக்கப்படுகின்றது. விதவைகள் 10.

சட்டம் இதிலே மீறப்படவில்லை. எப்படி இந்தப் பணியைச் செய்ய வேண்டும் என்று கருதுகிறார்களோ அந்த வகையில், சட்டத்திற்கு உட்பட்டுத்தான் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை மீண்டும் நான் வலியுறுத்தி கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பணியை செய்கின்ற அதிகாரிகள், அந்தந்த நிலைமைகளை எடுத்துக் கூறி, இவைகளுக்கெல்லாம் இடம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லும்போது, அதற்காக இடம் ஒதுக்கி இருக்கிறோம். இதை சொல்லும்போது, எத்தனை இடங்கள் அதற்காக ஒதுக்கப்படுகின்றதோ, அதற்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்துதான் கொடுக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே எத்தகைய சட்டமும் மீறப்படவில்லை.

விதவைகள் 10; உடல் ஊனமுற்றவர்களுக்கு 3; இராணுவத்திலே பணிபுரிந்து இறந்தவர்களுடைய குழந்தைகளுக்கு 6; கலப்புத் திருமண தம்பதிகளின் குழந்தைகளுக்கு 6; சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு 3; தமிழ்நாட்டைச் சேர்ந்த அமெரிக்காவில் இருப்பவர்களுக்கு 6; இதுதான் நிலை.

என்னுடைய கருத்தை நான் முதலிலேயே தெரிவித்து விட்டேன். மேலும், குற்றச்சாட்டுகள் பற்றி சில விவரங்கள் கேட்க விரும்பினால், பேராசிரியர் மூலமாக கேட்க வாய்ப்புண்டு. நான் பேசி முடித்த பிறகு, அதைக் கேட்கட்டும். இப்படி நீட்டித்துக்கொண்டே; பேசிக்கொண்டே, போகின்ற நிலையை உருவாக்க வேண்டாம். என்னுடையப் பதிலைக் கேட்டுக் கொண்டு, அதிலே எவைகளைப் பற்றியெல்லாம் திரும்பக் கேட்கலாம் என்று விரும்புகிறார்களோ, அவைகளைக் குறித்து வைத்துக்கொண்டு, பேராசிரியர் மூலமாகக் கேட்கலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இதிலே பேசுகின்றவர்கள், படித்துப் பட்டம் பெற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள், தமிழ்நாட்டிலே வேலை செய்வதில்லை என்பதை குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். அது குற்றச்சாட்டல்ல. எந்தக் காரணத்தைச் சொல்வதானாலும், நான் அதிலிருந்து விலகவில்லை.

இன்னமும்கூட ஒன்று சொல்வேன். அங்கே இருக்கிற நண்பர்கள் இங்கே படிக்கிறவர்கள் விரும்பினால், அதற்காக ஒரு அமைப்பை ஏற்படுத்தி தொடர்பு கொள்வதன் மூலம், அமெரிக்காவில் இருந்து படிப்பதற்குக்கூட, ஒத்தாசை செய்ய அங்கிருக்கும் தமிழ் மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கூட நான் இங்கே கூற விரும்புகிறேன். அப்படியே தான் அவர்களும் விரும்புகிறார்கள். அவர்களுடைய குழந்தைகள் எல்லாம் கூடுமானவரை இங்கே படிக்க வேண்டுமென்ற ஆர்வத்தோடு இருக்கிறார்கள் என்று, பல முறை சொல்லியிருக்கிறேன். அதிலே ஒன்றுதான் இந்த நிகழ்ச்சி என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தகுதியுடையவர்கள் ஆறு பேர் வரக்கூடாது என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது என்று எனக்குத் தெரியாது. இப்போது தான் அதைப் புரிந்துகொள்கிறேன். தகுதியுள்ளவர்கள் வருகிறார்கள். கேட்டால் இடம் இல்லையென்று சொல்வதற்கில்லை என்ற நிலைமையில், வாய்ப்புத் தரும்போது எப்படித் தவறு என்பதை, என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

குற்றச்சாட்டுச் சொல்லலாம். அதை நிரூபிக்க வேண்டியதும் அவர்களுடைய பொறுப்பு என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்; வாயால் சொல்வது அல்ல. எந்த வகையில், எந்த இலாபத்தைக் கருதி, யாருடைய துணையோடு, யாருடைய உதவியோடு, யாருடைய ஒத்தாசையோடு, யாருடைய சிபாரிசோடு செய்தேன் என்பதற்கான ஆதாரத்தைக் காண்பித்தால், நிச்சயமாக அதற்குரிய பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ளத் தயார்.

நான் சொல்வதை இன்னமும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். தரப்பட்டன என்றால்; வரப்பெற்றன என்றுதான் பொருள், என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். எப்படி வந்தது என்றால், மனு வந்து சேர்ந்தது என்றுதான் பொருள். அதை நான் நேராகப் பெற்றேன் என்று பொருள்அல்ல; அதில் பொறுப்பு என்பது, நான் தவறு செய்திருந்தால் பொறுப்பு என்பதற்காகத்தான் பேசுகிறேன்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைகளில் பேராசிரியர் அவர்கள் மிக மிகத் தீவிரமாக தன்னுடைய எண்ணங்களை வெளியே சொல்லியிருக்கிறார்கள். நான் பழைய விவரங்களை எல்லாம் கிளற வேண்டாம் என்று தான் என்னுடைய வேலையை முடித்துக்கொண்டு, என்னுடைய பதிலை முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

பேராசிரியர் அவர்களுடைய அந்த நல்லெண்ணத்திற்கு நன்றி கூறி அதைப் பற்றி விளக்கம் கூறுகிற நேரத்தில் கூறுவேன் என்றுச் சொல்லி, அந்தக் கோப்புக்காகக் காத்திருக்கிறேன். அதற்கிடையில், மற்றக் காரியங்களைச் சொல்ல முற்படுகிறேன்.

நான் முதலிலேயே குறிப்பிட்டேன். ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களுக்கு இதனால் எந்தவிதமான பாதகமும் இல்லை என்ற புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கேட்கிறார்கள். சொன்ன பதிலுக்கு மீண்டும் மீண்டும் கேள்வி கேட்டால் என்ன சொல்வது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரும்பத் திரும்ப ஒரே கேள்வி, வேறு வேறு வார்த்தைகளில் வருகின்றது, சொன்ன பதிலை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று நான் கருதவில்லை. மீண்டும் சொல்கிறேன், அந்த விண்ணப்பங்கள் நான் நேரிலே சென்றபோது இப்படி எங்களுக்குத் தேவைப்படும் நிலைமை இருக்கிறது, வருவோம் என்று கூறியிருக்கிறார்கள், அவர்கள் எத்தனை பேர்கள் வருவார்கள் என்று நமக்குத் தெரியாது. மற்றவர்களுக்கு என்று ஒதுக்காமல், அவர்களுக்கு அமெரிக்காவுக்காக மட்டும் உரிய இடங்கள் இத்தனை என்று ஒதுக்கிவைத்தால், வேறு பிரச்சினைகள் உருவாகும் என்ற காரணத்தால், அதை நாங்கள் வெளியிட விரும்பவில்லை.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மொரீஷியஸ் தீவிலிருந்து கேட்கிற எண்ணிக்கை அதிகம், அது அத்தனையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதைப்போன்றே இந்தோனேஷியாவிலிருந்தும் கேட்கிறார்கள், அது அவ்வளவையும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, இப்படி நீண்டுகொண்டே போகக்கூடாது. நீண்டப் பட்டியலை வைத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது என்ற காரணத்திற்காகத்தான், அவர்கள் உண்மையிலேயே இங்கே வந்து படிக்க விரும்புகிறார்கள், இங்கே வந்து இருக்க விரும்புகிறார்கள் என்ற சூழ்நிலையில், அவர்கள் வேண்டுகோளாக வைக்கும்பொழுது, அவர்களுக்கு வாய்ப்புத் தருகிறோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஒரு புள்ளிவிவரத்தை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசிய பொழுது, குடிநீர்ப் பிரச்சினைப் பற்றி, சாலைகள் பற்றி, போக்குவரத்து பற்றியெல்லாம் குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்கள். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராமக் குடிநீர் திட்டம் என்ன என்ன நிறைவேற்றி இருக்கிறார்கள். நிறைவேற்றப்படவில்லை, எதையும் செய்யவில்லை என்பது போன்ற குற்றச்சாட்டுகளைக் கூட, இங்கே குறிப்பிடுகிற அளவுக்குப் பேசினார்கள், இந்த வகையில் நான் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1971–1972ஆம் ஆண்டு எதுவும் இல்லை; அதற்குப் பிறகு அரசு ஆணையிட்ட தொகை ரூ.2.74 இலட்சம் ஆழ்துளைக் கிணறுகள் 2, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2, பயன் அடைந்த மக்கள் தொகை, இலட்சத்தில் 0.005, செலவழித்தத் தொகை ரூ. 2.15 இலட்சம்.

1972–1973– ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு இல்லை. ஆனாலும் அரசு ஆணையிட்டத் தொகை ரூ.120.20 இலட்சம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 220, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 220, பயன் அடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 0.829, செலவழித்தத் தொகை ரூ.150.72 இலட்சம்.

1973–1974 ஒதுக்கீடு ரூபாய் 250 இலட்சம், ஆணையிட்டத் தொகை ரூபாய் 95 இலட்சம், ஆழ்துளை கிணறுகளின் எண்ணிக்கை 237, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 237, பயன் அடைந்த மக்கள் தொகை, இலட்சத்தில் 4,100, செலவழித்தத் தொகை ரூபாய் இலட்சத்தில் 165.52.

1974–1975 – நிதி ஒதுக்கீடு ரூ. 250 இலட்சம், அரசு ஆணையிட்ட தொகை ரூ.450 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 2,500, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2,244, பயன் அடைந்த மக்கள் தொகை, இலட்சத்தில் 13.230, செலவழித்தத் தொகை ரூ.505.62 இலட்சம்.

1975–1976 – நிதி ஒதுக்கீடு ரூ. 325 இலட்சம், அரசு ஆணையிட்ட தொகை ரூ.350 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 4,007, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 4,037, பயன் அடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 31.690, செலவழித்தத் தொகை ரூ.503.75 இலட்சம்.

1976–1977 – நிதி ஒதுக்கீடு ரூ.300 இலட்சம், அரசு ஆணையிட்டத் தொகை ரூ.1,205.93 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 8,466, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 9,470, பயன் அடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 32.270, செலவழித்தத் தொகை ரூ.388 இலட்சம்.

1977–1978 – நிதி ஒதுக்கீடு ரூ. 400 இலட்சம், அரசு ஆணையிட்டத் தொகை ரூ.717.30 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 3,712, பயன் அடைந்த

சிற்றூர்களின் எண்ணிக்கை 2,888, பயன் அடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 14.590, செலவழித்தத் தொகை ரூ.675.69 இலட்சம்.

1978–1979 – நிதி ஒதுக்கீடு ரூ. 600 இலட்சம், அரசு ஆணையிட்டத் தொகை, ரூ.1,316.87 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 1,921, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 1,404, பயன் அடைந்த மக்கள் தொகை, இலட்சத்தில் 7.440, செலவழித்த தொகை, ரூ.860.30 இலட்சம்.

1979–1980 – நிதி ஒதுக்கீடு ரூ. 1,200 இலட்சம், அரசு ஆணையிட்ட தொகை ரூ.600 இலட்சம், ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 900, பயன் அடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 282, பயன் அடைந்த மக்கள் தொகை, இலட்சத்தில் 850, செலவழித்தத் தொகை ரூ.317.61 இலட்சம்.

நான் தொடர்ந்து பேசவேண்டும் தயவு செய்து குறுக்கிட வேண்டாம்.

மதுராந்தகம் எம்.எல்.ஏ. அவர்கள், போக்குவரத்துத் துறையில் இந்த அரசின் கொள்கை என்ன, என்று கேட்டு, அவர்கள் முன்பே பேசியதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

“தேசிய மயம் ஒன்றா, இரண்டா அல்லது மூன்றா என்று நீங்கள் சொல்வீர்களானால், என்னைப் போன்றவர்கள் அல்லது ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்திருப்பவர்கள் கால்நடை அமைச்சரிடம் போய் 2 எருமை மாடாவது வாங்கிக்கொண்டு, பஸ்ஸை விட்டு விடுவான். ஒன்று, இத்தனை பஸ்களுக்கு மேல் தேசிய மயம் என்று தெரிவியுங்கள், அல்லது ‘கம்பிளீட்’ தேசியமயம் என்று தெரிவியுங்கள். ஆக, இரண்டுங்கெட்டான் நிலையில் ஆளைச் சாகடிக்காதீர்கள்” என்று தெரிவித்திருக்கின்ற கருத்தை, இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இது 1978யிலே பேசியது.

திரு. புஷ்பராஜ் அவர்கள் பேசும்பொழுது, சிறந்த நிர்வாகத்துடன் மக்களுக்கு பேருந்து உரிமையாளர்கள் சேவை செய்ய வேண்டுமானால், குறைந்தது ஐந்து பஸ்களையாவது வைத்து நடத்தினால்தான் கட்டுப்படியாகும் என்பது என் அபிப்பிராயம் என்றும், தேசியமயத் திட்டத்திற்குள் சிறிய பஸ் உரிமையாளர்களுக்கு வாழ்வு அளிக்க எண்ணும்போது, அந்த சிறிய பஸ் உரிமையாளர்கள் பொதுமக்களுக்குச் சேவை செய்யவும், தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்படவும், சிறந்த முறையில் ஒரு நல்ல சர்வீசை நடத்த வேண்டுமானால், குறைந்தபட்சம் ஐந்து பேருந்துகளாவது நடத்தும் அளவிற்கு அவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டும் என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. பொ. விஜயராகவன் அவர்கள் 20.03.1978இல் பேசி இருக்கிறார்கள். “கடந்த ஆளுநர் ஆட்சிக்கு முந்தைய அரசு பத்துப் பேருந்துகளை உரிமையாளர்கள் வைத்துக் கொள்ளலாம் என்று கூறினார்கள். அப்படிக் கூறுகின்ற நேரத்தில் பினாமிகள் பலர் அந்த மாதிரி பேருந்துகளை வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற குறை சுட்டிக்காட்டப்பட்டது. அந்தப் பினாமிகள் அப்படி வைத்துக்கொள்வார்களேயானால்,

அவைகளை இந்த அரசே நடத்துவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், சிறுப் பேருந்து உரிமையாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் எத்தனை பேருந்துகளை வைத்துக்கொள்ளலாம் என்பதைத் திட்டவட்டமாக, இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று சொன்னார்கள்.

நண்பர் திரு. அம்பிகாபதி அவர்கள், 20.03.1978இல் பேசியிருக்கிறார்கள், ''குறிப்பாக, அரசாங்கம், தனியார் எவ்வளவு பஸ்கள் வைத்துக் கொள்ளலாம் என்று அறிவிக்காததன் விளைவாக, மூன்று பஸ்கள், இரண்டு பஸ்கள், நான்கு பஸ்கள் வைத்திருப்பவர்கள் கடன்பெற முடிவதில்லை. அப்படிக் கடன் கிடைக்காததால், அதைச் சீர்படுத்த முடியவில்லை. அப்படிச் சீர்படுத்த முடியாததால் தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு'' என்றும், ''தேசியமயமாக்குகிறோம் என்ற பெயரில் நான்கு ஓட்டை பஸ்கள், இரண்டு டப்பா பஸ்கள் இவற்றை தேசியமயமாக்க, அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்துகிற நிலையைப் பற்றி, அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என்று குறிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

20.03.1978 அன்று, திரு. டி.பி.எம். பெரியசாமி இதே மன்றத்தில் பேசியதாவது: ''தேசியமயமாக்கப்பட்ட கொள்கைகளில் 1971ஆம் ஆண்டில், 10 பஸ்களுக்குமேல் வைத்திருக்கின்றவர்களுக்கு மேலும் உரிமம் வழங்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அப்படி 10 பேருந்துகள் வைத்திருப்பவர்கள், எவ்வளவு பேர்களிடம், தனியார்களிடமும் வங்கிகளிலும் கடன் பெற்றிருப்பார்கள் என்பதைப் பார்த்து, அவர்கள் வறுமையை அகற்றுகின்ற வகையில், அவர்கள் மேலும் உரிமம் கேட்டால் புதிய உரிமங்கள் கொடுப்பது எந்தவிதமான சிக்கலையும் உண்டாக்காது. அதே நேரத்தில், படித்த இளைஞர்களுக்கு, பொறியியல் படித்த இளைஞர்கள் உரிமம் கேட்டால் அவர்களுக்கு முதல் சலுகை கொடுத்து, அதை அரசின் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்''என்று பேசியிருக்கிறார்கள்.

20.03.1978 அன்று திரு. மார்க்கபந்து அவர்கள் பேசுகின்ற பொழுது, ''தனியார்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பஸ்களின் எண்ணிக்கை மூன்று பஸ்கள் என்று இப்போது நிர்ணயித்திருக்கிறார்கள். 'அது அன்–எக்னாமிக்கல்' என்று சொல்ல விரும்புகிறேன். காரணம், ஒரு பஸ் நின்றுவிடுகிறபோது அதற்கு மாற்றாக இயக்குகின்ற விதத்தில், குறைந்தபட்சம் ஒரு ஐந்து பஸ்களாவது, ஒரு தனிப்பட்ட 'ஆப்பரேட்டரிடம்' கொடுக்கப்படுமானால்தான், They can run on economical basis என்ற முறையிலும், தனிப்பட்டவர்கள் நஷ்டமடையாத வகையிலும் அந்த எண்ணிக்கையை ஐந்து பஸ்கள் என்று நிர்ணயம் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்'' என்று பேசியிருக்கிறார்.

அதே நாளில், திரு. எம்.ஏ. லத்தீப் அவர்கள் ''ஒட்டு மொத்தமாக தேசியமயமாக்குவதும்கூட, இந்த அரசுக்கு ஆபத்தைத்தான் விளைவிக்கும்! இதையும், அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்! எல்லாவற்றையும் ஒரே நிருவாகத்தின் கீழ்

வைத்துக்கொள்ளும்போது, ஏதாவது ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு, ஒரு வேலை நிறுத்தம் என்று தொழிலாளர்கள் சொல்கிறபோது, இந்த நாடே ஸ்தம்பித்து விடக்கூடும். எனவே, சில இடங்களைத் தனியார்கள் இடத்திலே கொடுங்கள். அது நாட்டுக்கு நல்லதும்கூட என்பதை நான் இந்த நேரத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன்'' என்று கொள்கையைப் பற்றி அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். அவர் மேலும் சொல்கிறார், ''தனியார் துறையிலே அதிகப்படியாக எத்துணையளவு உரிமங்கள், பர்மிட் வைத்துக்கொள்ளலாம் என்பதற்கு, அரசு ஒரு உத்தரவுப் போட்டு, அதை உடனடியாக அமுல்படுத்துவது நல்லது என்பதை நான் இந்த நேரத்திலே வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே மாதிரி, அப்படி நிர்ணயம் செய்கிறபோது அதிகப்பட்சமானப் பேருந்துகள் வைத்திருக்கும் உரிமையாளர்கள், அவைகளைத் தங்களுடைய பங்குதாரர்களுக்கோ அல்லது குடும்பத்திலே உள்ளவர்களுக்கோ பிரித்துக்கொள்ளவும் அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்'' என்று நண்பர் லத்தீப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

1977இல் திரு. சுப்பு அவர்கள் ''தேசியமயமாக்கப்படுவதை நான் எதிர்க்கவில்லை. போக்குவரத்துக் கழகங்களில் நிறைய பஸ்களும், தனியார் இடத்திலே சில பஸ்களும் இருக்கின்றன. தனியார்கள் என்று சொல்லப்படுகின்ற போது, சிறிய அளவில் 3, 4, 5 பஸ்கள் வைத்திருப்பவர்களும் இருக்கிறார்கள். அன்றைய தினம் ஆளும் கட்சியிடம் கம்யூனிஸ்டு கட்சியினர் பல்வேறு மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிச் சிறு பஸ் முதலாளிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் தொழில் நசிந்து போக வேண்டுமென்றும் நான் சொல்லவில்லை. கேரளாவிலே நேஷனலைஸ் செய்து, பின்னர் டீ–நேஷனலைஸ் செய்திருக்கிறார்கள் செக்கோஸ்லேவியாவிலும் அதேமாதிரி செய்திருக்கிறார்கள். குஜராத், மகாராஷ்டிராவிலே பஸ்களின் எண்ணிக்கையைக் குறைத்து, பஸ்களின் டாப்களின் மேலே எல்லாம் கூட ஆட்களை ஏற்றிச் செல்கிறார்கள். ஆகவே, சிறிய அளவிலே பஸ்கள், என்ற அளவிலே 2,3 பஸ்கள் வைத்துக் கொண்டு அந்தத் தொழிலிலே அவர்கள் குடும்பத்திலே, ஒருவர் டிரைவர், மற்றொருவர் கண்டக்டர், இன்னொருவர் மானேஜர், என்ற முறையிலே, ஒரு குடும்பமே அதை நடத்திக்கொண்டு வருகிறது. அப்படிப்பட்டதை எடுத்துக்கொண்டால், அந்தக் குடும்பமே, தெருவிலே போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும்! என்று கூறியிருக்கிறார்கள்.

1977இல் திரு. லத்தீப் அவர்கள் ''சர்க்கார் துறைக்கு கொடுக்கப்படுகின்ற அத்தனை சலுகைகளும், தனியார்த் துறைக்குக் கொடுத்தால்தான் ஒரு துறை நன்கு செயல்பட முடியும்! இல்லாவிட்டால், இன்றைக்குச் சாதாரணமாக ஒரு பஸ் அல்லது 2,3,5 பஸ்கள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்று சொன்னால், அவர்களுக்குப் போடப்படுகின்ற வரிகளின் காரணமாகவும், கொடுக்கப்படுகின்ற நெருக்கடிகளின் காரணமாகவும் தொல்லைகளின் காரணமாகவும், அவர்கள் எல்லோரும் 'மார்வாடி'க் கடைகளிலேதான் இருக்கிறார்கள்! மார்வாடிகளிடம் கடன் வாங்காத ஒரு பஸ் அல்லது 2,3 பஸ் அதிபர்கள் யார் என்று

சொன்னால் அவர்களைத் தேடித்தான் பார்க்க வேண்டும். மார்வாடிகளிடம் அவர்கள் இன்றைக்கு அடகு வைக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தான் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு எந்த வகையிலேச் சலுகைகள் கொடுக்க வேண்டும்மென்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்" என்று பேசியிருக்கிறார். அதைப்போல், கூத்தக்குடி சண்முகம் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட அதே போன்ற கருத்தை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

அதே சமயம் நாங்கள் இந்த பஸ் போக்குவரத்து சம்பந்தமாக இதுவரையில் எந்தெந்தக் காரியத்தைச் செய்திருக்கின்றோம் என்பதைக் குறிப்பிட வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகின்றேன்!

அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களைப்பற்றி இந்த ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னும் பின்னும்

பேருந்துகளின் எண்ணிக்கை

1974–1975–ஆம் ஆண்டில் 4,252, 1975–1976–ஆம் ஆண்டில் 4,400, 1976–1977–ஆம் ஆண்டில் 4,936, 1977–1978–ஆம் ஆண்டில் 5,118, 1978–1979–ஆம் ஆண்டில் 5,372,1979–1980–ஆம் ஆண்டில் 6 மாதங்களில் 6,040, இலாப நஷ்டங்கள் 1974–1975 ஆம் ஆண்டில் 170.76 இலட்சம் நஷ்டம், 1975–1976 ஆம் ஆண்டில் 845.24 76 இலட்சம் நஷ்டம், 1976–1977 ஆம் ஆண்டில் 46.53 76 இலட்சம் இலாபம், 1977–1978 ஆம் ஆண்டில் 419.24 76 இலட்சம் இலாபம்,1978–1979 ஆம் ஆண்டில் 808.94 76 இலட்சம் இலாபம், 1979–1980இல் 6 மாதங்களில் 586.53 இலட்சம் இலாபம்,

போனஸ் 1974–1975–ஆம் ஆண்டில் 89.97 இலட்சம், 1975–1976–ஆம் ஆண்டில் 17.52 இலட்சம், 1974–1975 – ஆம் ஆண்டில் 89.97 இலட்சம், 1976–1977–ஆம் ஆண்டில் 128.92 இலட்சம்,1977–1978–ஆம் ஆண்டில் 177.72 இலட்சம், 1978–1979–ஆம் ஆண்டில் 224.69 இலட்சம், இந்த ஆண்டு இன்னும் கொடுக்கப்படவில்லை.

வழித்தடங்கள் 1974–1975–ஆம் ஆண்டில் 1,441, 1975–1976–ஆம் ஆண்டில் 1,930, 1976–1977 –ஆம் ஆண்டில் 1,746, 1977–1978 –ஆம் ஆண்டில் 2,204, 1978–1979–ஆம் ஆண்டில் 2,550, 1979–1980 ஆம் ஆண்டில் 6 மாதங்கள் வரையிலும், 2,871.

பயன் அடைந்த கிராம மக்களின் தொகை 1974–1975–ஆம் ஆண்டில் 0.82 இலட்சம், 1975–1976 –ஆம் ஆண்டில் 1.76 இலட்சம், 1976–1977 –ஆம் ஆண்டில் 1.85 இலட்சம், 1977–1978 –ஆம் ஆண்டில் 6.43 இலட்சம், 1978–1979 –ஆம் ஆண்டில் 16.71 இலட்சம், 1979–1980 ஆம் ஆண்டில் 6 மாதங்கள் வரையில், 11.32 இலட்சம்.

பயன் அடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 1974–1975–ஆம் ஆண்டில் 64, 1975–1976–ஆம் ஆண்டில் 125, 1976–1977–ஆம் ஆண்டில் 145, 1977–1978–ஆம் ஆண்டில் 386, 1978–1979 –ஆம் ஆண்டில் 1,071, 1979–1980 ஆம் ஆண்டில் 6 மாதங்கள் வரையிலும், 682.

வேலைவாய்ப்பு பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை 1974–1975 –ஆம் ஆண்டில் 25,408, 1975–1976 –ஆம் ஆண்டில் 13,553, 1976–1977 –ஆம் ஆண்டில் 35,822, 1977–1978 –ஆம் ஆண்டில் 38,415, 1978–1979 –ஆம் ஆண்டில் 42,170, 1979–1980 ஆம் ஆண்டில் 6 மாதங்கள் வரையிலும், 45,418.

ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்தின் சார்பாகவும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் பேருந்துகளின் எண்ணிக்கை 1974–1975 –ஆம் ஆண்டில் 529, 1975–1976 –ஆம் ஆண்டில் 606, 1976–1977 –ஆம் ஆண்டில் 649, 1977–1978 –ஆம் ஆண்டில் 712, 1978–1979 –ஆம் ஆண்டில் 811, 1979–1980 ஆம் ஆண்டில் 6 மாதங்கள் வரையிலும், 875

இலாப–நஷ்டம் (ரூபாய் இலட்சத்தில்) 1974–1975 ஆம் ஆண்டில் 8.78; 1975–1976 ஆம் ஆண்டில் 61.54; இது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் கணக்கு; 1976–1977 ஆம் ஆண்டில் 85.40; 1977–1978 ஆம் ஆண்டில் 160.26; 1978–1979 ஆம் ஆண்டில் 217.22; இந்த 6 மாதங்களில், இலாபம் 194.24.

போனஸ் சதவிகிதம் 1974–1975 ஆம் ஆண்டில் 18%; 1975–1976 ஆம் ஆண்டில் இல்லை 1976–1977 ஆம் ஆண்டில் 13.30%;

1977–1978 ஆம் ஆண்டில் 20%; 1978–1979 ஆம் ஆண்டில் 20% இன்னும் கொடுக்கப்படவில்லை.

வழித்தடங்கள் மொத்தம் 1974–1975 ஆம் ஆண்டில் 319; 1975–1976 ஆம் ஆண்டில் 351; 1976–1977 ஆம் ஆண்டில் 360; 1977–1978 ஆம் ஆண்டில் 388; 1978–1979 ஆம் ஆண்டில் 451, இதுவரையில் 1979–1980 ஆம் ஆண்டில் 498.

பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 1974–75 ஆம் ஆண்டில் 18, 1975–76 ஆம் ஆண்டில் 46; 1976–1977 ஆம் ஆண்டில் 49; 1977–1978 ஆம் ஆண்டில் 170; 1978–1979 ஆம் ஆண்டில் 411; 1979–1980 ஆம் ஆண்டில் இதுவரையில் 170.

பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 1975–1976 ஆம் ஆண்டில் 0.36; 1976–1977 ஆம் ஆண்டில் 0.81; 1977–1978 ஆம் ஆண்டில் 170; 1978–1979 ஆம் ஆண்டில் 417; 1979–1980 ஆம் ஆண்டில் 7.73; 1979–1980 ஆம் ஆண்டில் 3.51.

வேலை வாய்ப்புகள் பெற்றத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1974–1975 ஆம் ஆண்டில் 4,309; 1975–1976 ஆம் ஆண்டில் 4,493; 1976–1977 ஆம் ஆண்டில் 5,015; 1977–1978 ஆம் ஆண்டில் 5,536; 1978–1979 ஆம் ஆண்டில் 5,969; இதுவரையில், 1979–1980 ஆம் ஆண்டில் 6,296.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் முன்னேற்றம்:– பேருந்துகளின் எண்ணிக்கை

1974–1975 ஆம் ஆண்டில் 486; 1975–1976 ஆம் ஆண்டில் 524;1976–1977 ஆம் ஆண்டில் 521; 1977–1978 ஆம் ஆண்டில் 528; 1978–1979 ஆம் ஆண்டில் 558; 1979–1980 ஆம் ஆண்டில் 593.

இதை நான் இவ்வளவு விளக்கமாகக் கொடுப்பதற்குக் காரணம். திரு. கூத்தகுடி சண்முகம் போன்றவர்கள் எல்லாம் இந்த அரசு பேருந்துகள் விடவில்லை, இதைப்பற்றி பொறுப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்று, அந்த அளவில் கருத்தைச் சொல்லாவிட்டாலும், பல பேர் அப்படி எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள் என்ற காரணத்தால், இவைகளை இங்கே நான் படித்துச்சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேன்.

இலாப–நஷ்டம் (ரூபாய் இலட்சத்தில்) 1974–1975 ஆம் ஆண்டில் 65; 1975–1976 ஆம் ஆண்டில் 82.57; 1976–1977 ஆம் ஆண்டில் 17.61; 1977–1978 ஆம் ஆண்டில் 74.79; 1978–1979 ஆம் ஆண்டில் 148.86; 1979–1980 ஆம் ஆண்டில் 134.46 இந்த 6 மாதத்திற்கு இடையில்.

போனஸ் சதவிகிதம் 1974–1975 ஆம் ஆண்டில் 4%: 1975–1976 ஆம் ஆண்டில் இல்லை, 1976–1977 ஆம் ஆண்டில் 8.33%; 1977–1978 ஆம் ஆண்டில் 15%; 1978–1979 ஆம் ஆண்டில் 20%; இந்த ஆண்டு இன்னும் கொடுக்கப்படவில்லை.

வழித்தடங்கள் 1974–1975 ஆம் ஆண்டில் 306: 1975–1976 ஆம் ஆண்டில் 318: 1976–1977 ஆம் ஆண்டில் 327: 1977–1978 ஆம் ஆண்டில் 344, 1978–1979 ஆம் ஆண்டில் 371: இந்த 6 மாத காலத்திற்குள் 390.

பயன் அடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 1974–1975 ஆம் ஆண்டில் 18: 1975–1976 ஆம் ஆண்டில் 29: 1976–1977 ஆம் ஆண்டில் 6: 1977–1978 ஆம் ஆண்டில் 15: 1978–1979 ஆம் ஆண்டில் 15: 1978–1979 ஆம் ஆண்டில் 20: 1979–1980 ஆம் ஆண்டில் இந்த 6 மாதங்களில் 28.

பயனடைந்த மக்கள் தொகை, 10,000; 23,000; 20,000; 29,000; 3,10,000, இந்த ஆண்டு இதுவரையில் 39,000.

வேலைவாய்ப்புப் பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை: 3,753; 3,714; 4,024; 1977–1978இல் 4,043; 1978–1979இல் 4,277; இந்த ஆண்டு இதுவரையில் 4,418.

இப்படி ஒவ்வொரு பேருந்துகளிலும் வெவ்வேறு வகையில் அபிவிருத்தி என்ற நிலையில், காரியங்கள் உருவாக்கப்பட்டு, நடைபெற்று வந்திருக்கிறதேத் தவிர, முன்னால் இருந்ததைவிட குறைவாகவோ, அதைவிட நஷ்டங்கள் ஏற்படுகின்ற வகையிலோ, போனஸ் கொடுப்பதில் குறைந்த நிலையிலோ, இந்த ஆட்சி எந்தத் தவறையும் செய்யவில்லை என்பதையும், அக்கறைக் காட்டாமல் இல்லை என்பதையும், சோர்ந்து போனதன் காரணமாக இயங்காமல் இருக்கிறோம்; அதிகாரிகள் இயங்காமல் இருக்கிறார்கள் என்பதற்கு, எந்த ஆதாரமும் இல்லை என்பதையும் இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்!

இங்கே பேசும்போது, பணம் கைமாறியது என்றெல்லாம் சொன்னார்கள். சென்ற கூட்டத்தொடரில் என்று நினைக்கிறேன். ரூபாய் 25 இலட்சம், 26 இலட்சம் பின்னர் 21 இலட்சத்தைக் கொடுத்தார்கள் என்றும், ரூ.45 இலட்சம் கை மாறியது என்றும் சொன்னார்கள். இப்போது, 75 இலட்சத்திற்கு போய், அது ஒரு கோடியாக மாறி, அதற்குப் பிறகு ஒரு கோடிக்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற முறையிலே

குற்றஞ்சாட்டி கூறப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டி, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகளின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மைய அரசுக்கு அனுப்பிய விண்ணப்பத்தைக் குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 24.04.1977 அன்று தனியார் துறையில் சிறு பஸ் உரிமையாளர்களுக்குப் பாதுகாப்பும் சலுகையும் அளிக்க வேண்டுமென்று தி.மு.க. உள்ளிட்ட பல கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, மைய அரசுக்கு மனுக்கள் கொடுத்துள்ளார்கள், இந்த மனு கொடுத்த பின்னால், 03.11.1977 ஆம் தேதி ஜி.ஓ. 634 ஆணைப்படி. ஆளுநர் ஆட்சியின்போது, 3 பஸ்கள் வரை வைத்திருக்கும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால், தி.மு.க. ஆட்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜி.ஓ. 634 மூலம் பாதுகாப்பும் சலுகையும் பெறாத 3 பஸ்களுக்கு மேல் வைத்துள்ள தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு,ஏற்கெனவேஇருந்தபாதுகாப்பும்சலுகையும்தரவேண்டுமென்று மனு தந்திருக்கிறார்கள். அப்படித் தனியார் பஸ் உரிமையாளர்களுக்காக சலுகை கேட்டு, மைய அரசுக்கு தி.மு.க. ஆட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களும். மாநிலங்கள் அவை தி.மு.க. உறுப்பினர்கள் கமலநாதன், காதர்ஷா ஆகியோர்களும் கையெழுத்திட்டுள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு.கல்யாணசுந்தரனார், இந்திரா காங்கிரஸ் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆர்.வி. சுவாமிநாதன், ஜனதா கட்சியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.தண்டாயுதபாணி ஆகியோரும் அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டு, கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அவர்களுடைய அந்தக் கோரிக்கை எத்தனை நாட்களுக்கு கவனிக்கப்பெறாமல் காத்துக்கிடந்தது என்பதையும், இதற்காக அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறார்கள் என்பதையும் உணர வேண்டும். இந்த அரசு வந்தப் பிறகுதான், இதனை ஆராய்ந்து பார்த்துச் சிந்தித்து, மன்ற உறுப்பினர்களின், மற்றவர்களின் கருத்திற்கிணங்க, இந்த முடிவை எடுத்ததே தவிர, ஏதோ பணம் வாங்கிக்கொண்டு செய்வது என்றால், நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே செய்திருக்கலாம்; அல்லது ஒன்றரை ஆண்டுக்கு முன்னாலேயே செய்திருக்கலாம். இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டபோதே என்னுடைய நண்பர்கள் சொன்னார்கள்; செய்திருக்கலாம்.

ஆகவே, இப்படிப்பட்ட சேற்றை வாரி பூசுகின்ற வீசுகின்ற வேளையில், மற்றவர்கள் எங்களைப்பற்றிச் சொல்வதற்கு முன்னால். இப்படிப்பட்ட குற்றங்களைச் சொல்லக் கூடாது என்பதைக் கவனத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எப்பொழுதுமே, எந்தக் குற்றத்தைச் சொல்வதற்கு; எதை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதிலே மிகத் திறமைசாலி என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனாலும், அதற்கு முன்னால், இந்த அவையிலே என்ன பதில் சொன்னேன் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதைப்பற்றி இந்த அரசு சிந்திக்கும், நிச்சயமாக முடிவு எடுக்கும் என்று சொல்கிற நேரத்திலேதான், வழக்கு மன்றத்திற்கும் அவர் போயிருந்தார் என்பதை மறந்து விடக்கூடாது. இந்தச் சூழ்நிலையில், கேட்டுவிட்டுப் பிறகு வேறு வழியின்றி செய்தாக வேண்டுமே என்ற நோக்கத்தில் ஆற அமரச் செய்தால், அங்கே தாமதத்திற்கு காரணம் ஏதோ நடந்திருக்கிறது என்று சொல்வது, உடனே செய்தால், ஏதோ கேட்காமல் செய்து விட்டார்கள், ஏதோ காரணம் இருக்கிறது, ஏதோ நடந்திருக்கிறது என்றெல்லாம் கற்பனை செய்து கொண்டிருந்தால், அது பொருத்தமாக இருக்காது; அப்படிச் சொல்வதற்கு, ஏதாவது ஆதாரம், கடிதமோ, வேறு ஏதாவதோ இருந்தால் கொண்டு வந்து கொடுங்கள்; தாராளமாக வழக்குமன்றத்திற்குப் போகலாம்! அதை நிச்சயமாகச் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துக் கேரளத்தில் நாட்டுடமையாக்கப்பட்ட தடங்கள் 32.9 சதவீதம், மேற்கு வங்காளத்தில் 15.87 சதவீதம், தமிழ்நாட்டில் 1976இல் 47 சதவீதம், ஆனால் இன்றைய நிலைமை 57 சதவீதம் என்பதை நான் சொல்லிக்கொள்வதினால், நாட்டுடமை ஆக்குகிற திட்டங்களில் எங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பது மட்டுமல்ல, மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொன்னது போல, தனியார் துறையில் நியாயமாகப் பணியாற்றுகிற தனியார்களுக்கு வாய்ப்புக் கொடுத்தும், அதேநேரத்தில் தொழில்கள் எல்லாவற்றையும் அவர்களே எடுத்துக் கொண்டு பணம் சேர்த்துக் கொள்கிற முதலாளிகளாக ஆகிவிடுகிற நிலைமையை; மாற்றுகிற கொள்கையை நாங்கள் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதையும், இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டும் அல்ல. மற்றவர்களுக்கு நாங்கள் ஏதோ சாதகம் காட்டியிருப்பது போலவும் வரக்கூடாது. ஏதாவது இருந்தால், திரு.லத்தீப் அவர்கள் பேராசிரியர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்து விடட்டும், அவர் கேட்டுக்கொள்வார்.

இங்கே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே எங்களுடைய கொள்கையைச் சொல்லியாக வேண்டும். தனியார் துறைகளிடம் இருக்கிற புதிய புதிய வழித்தடங்களை எடுத்து தேசிய உடமையாக்கி, நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்றால் கொடுத்து, அதை எப்படிக் கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி முடிவு எடுத்து, இங்கே இன்னொன்றை நான் சொல்லியாக வேண்டும். அரசினுடைய நிதிநிலைமைக்கு ஏற்ப, கொள்கையை நாங்கள் நிறைவேற்றியாக வேண்டும். இங்கே படித்துக் காண்பிக்கப்பட்ட குறிப்பில் 57 சதவீதம் நாம் தேசிய உடமையாக, வழித்தடங்களை ஆக்கியிருக்கிறோம் என்பதையும், நாங்கள் அதற்குப் பின் வாங்கவில்லை, கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து கொண்டுதான் இருக்கிறோம். நிறைவேற்றிக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதையும் குறிப்பிடும்போது, இன்னொன்றையும் தனியாகச் சொல்ல விரும்புகிறேன். புதிய தடங்களை, புதிய பேருந்துகளைத் தனியாரிடமிருந்து எடுத்துக் கொள்ளும்போது, நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உடனடியாக புதுத் தடங்களை, இல்லாத இடங்களுக்கு முதலில் பேருந்துகளை விட வேண்டியதன் அவசியத்தையும், அவசரத்தையும் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும்.

கிராமப்புறத்தில் இருக்கிற மக்களுக்கு நாம் எந்த வகையில், எவ்வளவு விரைவில், இந்த பஸ் போக்குவரத்தை, பேருந்துகளை விட நம்மால் முடியுமோ, அதைச் செய்து தீர வேண்டும் என்பதில் உங்களிலே யாருக்கும் கருத்து மாறுபாடு இருக்காது. ஆகவே, நாம் பணத்தைச் செலவழிக்கும்போது ஓடிக்கொண்டிருக்கிற தடங்களிலே, அந்தப் பேருந்துகளை எடுத்துக்கொள்வதை விட, முதலில் தனியார் துறையினர் முன்வந்து, எந்தெந்தக் கிராமப்பகுதிகளில் பேருந்துகள் விட முடியாது என்ற நிலைமையில் இருக்கிறார்களோ அந்த இடங்களுக்கு அரசாங்கப் பணத்தை செலவழித்து புதுப் பேருந்துகளைவிட்டு, அந்தச் சாலைகளை மேம்படுத்திச் சீர்படுத்த வழிவகைகளைக் கண்டு, அதை நிறைவேற்றிக் கொண்ட பின், மறுபடியும் தேசிய உடமையாக்குவதை நாம் தொடர்வோம். தொடரவேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும். ஆனால், அதற்காகத் தற்காலிகமாக தேசியமயமாக்குகிற கொள்கையை நாங்கள் விட்டுவிட்டோம்; நிறுத்தி வைக்கிறோம் என்றல்ல! சிறுசிறு அளவில் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், அதிக அளவில் கிராமப்புறங்களோடு தொடர்புகொள்ள; புதியப் பேருந்துகளை விட; தனியார் துறை தயாராக இல்லை என்ற காரணத்தால், அரசாங்கம் அதைச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில், அந்தப் பணியை நாங்கள் மேற்கொள்கிறோம். தவறுகள் நேரிடுவது இயற்கை; அதைப்பற்றிக் குறை கூறுவது என்றே வைத்துக்கொண்டால், எவ்வளவோ குறிப்புக்களை எடுத்துக்காட்ட முடியும்.

ஆனால், ஒன்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். குற்றச்சாட்டு கூறுகிறேன் என்று யாரும் கருதக்கூடாது. நிலைமைகளை சில சமயங்கள் நெருக்கடியாக வரும்போது, சில கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொறுப்பேற்கிறவர்கள், சில முறைகளைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்படலாம். அந்த வகையில், ஒரு நிகழ்ச்சி 1975ஆம் ஆண்டு நடந்தது என்பதை இந்தக் குறிப்புகள் மூலம் நான் எடுத்துச் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். 04.10.1975 அன்றும், 16.12.1975 அன்றும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனு செய்தனர். இது கோப்பின் பக்கம் 55–66 கொடி Aல் உள்ளது. இந்தக் கோரிக்கைமீது ஆலோசனை கேட்கப்பட்டு, முன்னாள் போக்குவரத்து ஆணையர் 1974ஆம் அண்டு மே மாதம் கட்டண உயர்வு ஏற்படுத்தியதால், தற்போது கட்டண உயர்வு தேவை இல்லை என்று அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறினார்கள். இது கோப்பின் பக்கம் 79–80 கொடி பி–யில் உள்ளது. தனியார்த்துறை பஸ் முதலாளிகளுக்கு 11 1/4 கோடி கூடுதல் வருமானம் தரக்கூடிய அளவிற்கு பஸ் கட்டணத்தை உயர்த்தினால், மோட்டார் வாகன காலாண்டு வரியை, கணிசமாக ரூ.150இல் இருந்து 225 வரை உயர்த்தி அரசாங்கம் வருவாயைப் பெருக்க வேண்டும் என, அப்போதிருந்த போக்குவரத்துச் செயலாளரும் நிதித்துறை செயலாளரும் குறிப்பிட்டுள்ளார். இது கோப்பின் பக்கம் 15–16 கொடி சி–ல் உள்ளது. ஆனால், தனியார் பஸ் முதலாளிகளுக்கு ரூ.11 1/4 கோடி அதிக வருமானம் வரும் பஸ் கட்டண உயர்வு செய்யப்பட்டபோது, அரசாங்கத்திற்கு

அதிக வருமானம் தரும் வரி உயர்வு அப்போது செய்யப்படவில்லை. போக்குவரத்து ஆணையரின் ஆலோசனையை மீறி, தனியாருக்கு ரூ.11 1/4 கோடி ரூபாய் இலாபம் கிட்டும் வகையில் கட்டண உயர்விற்கான செயற்குறிப்பு ஆணை சுற்றோட்டத்திற்கு விடப்பட்டது. பஸ் கட்டணம் 4 பைசாவிலிருந்து 5 பைசாவாக உயர்த்துவது பற்றி அமைச்சரவை முடிவு செய்யலாம் என்று, முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ராஜாராம் அவர்கள் கூறியுள்ளார்கள். அதை முன்னாள் முதல்வர் ஏற்கும் வகையில், 13.12.1975 அன்று ஒப்பமிட்டுள்ளார்கள். கோப்பின் பக்கம் 31 கொடி 'இ' இந்த மிக முக்கியமான பஸ் கட்டணக் கொள்கையை, அமைச்சரவையில் முடிவு செய்யாமல் சுற்றோட்டத்தில் முடிவு செய்யலாம் என்று அமைச்சரவை முடிவெடுத்தார்கள். ஆனால், இந்த முக்கியமான கோப்பு, 22.01.1976 அன்று, இணைச் செயலரால் சுற்றோட்டத்திற்கு அனுப்பப்பட்டது. இணைச் செயலர் 22.01.1976 அன்று கையெழுத்திட்டிருக்கிறார்கள். அடுத்த கட்டமாக, அந்தக் கோப்பு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த திரு. ராஜாராமுக்குச் செல்ல வேண்டும். ஆனால், அவர்களிடம் செல்லவில்லை! மாறாக. முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு அந்தக் கோப்புச் செல்கிறது.

சுற்றோட்டத்தில் செல்லுகின்ற அந்தக் கோப்பு. இணைச் செயலாளரால் கையெழுத்திடப்பெற்று 22.01.1976 அன்று முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு அனுப்பப்பட்டுக் கையெழுத்திடுகிறார். அவர் கையெழுத்திடும்போது, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடன் பேசப்பட்டது, அவரும் அதை ஒத்துக்கொண்டார் என்று குறிப்பிட்டு, 22.01.1976 அன்று கையெழுத்துக்கு மேலே எழுதப்பட்டு, அத்துடன் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜாராம் டூரில் இருக்கிறார் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. எல்லாம் ஒரே நாளில் 22.01.1976 அன்று போக்குவரத்துத்துறை அமைச்சரின் கையெழுத்தைப் பெறாமலேயே கூட, முன்னாள் முதல்வர் கையெழுத்திட்டு, அடுத்த நாளே 23.01.1976 அன்று சிறப்பு அரசிதழில் 'எக்ஸ்ட்ராடினறி கெஸட்டில்' வெளியிடப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தனியார் பஸ் முதலாளிகள் 11 1/4 கோடி ரூபாய் அதிக வருமானம் ஈட்டுகின்ற பஸ் கட்டண உயர்வுக்கும், போக்குவரத்துத்துறை ஆணையாளரின் ஆலோசனைக்கு மாறாக ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது! கோப்பின் பக்கம் 34, கொடி 'இ'.

இதைக் குறிப்பிடும்போது, ஏன் இவ்வாறு செய்தார்கள். இது தவறு தான், இதில் இலஞ்சம் வாங்கிகொண்டுதான் செய்தார்கள் என்று சொன்னாலும், அதைப் பற்றி விசாரணை செய்கின்ற நேரத்தில்தான் இதிலுள்ள உண்மையை தெரிந்துகொள்ள முடியுமே தவிர, பேசும்போது எதையும் சொல்லிவிடலாம்; ஆனால், நடந்தது சந்தேகத்திற்குரியது என்று சொல்லலாம் அல்லது சந்தேகத்திற்குரியதல்ல என்றும், அவசரமாக காரியத்தைச் செய்வதற்காக செய்யப்பட்டது என்றும் கூறலாம்! ஆனால், அது அதை ஏற்றுக்கொள்பவர்களின் மனப்பக்குவத்தையும், மற்றவர்களின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையையும் பொறுத்திருக்கிறதே தவிர, இதை வைத்து மாத்திரம் ஒரு முடிவுக்கு வரமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஆனாலும்,

இப்படியும் நடக்கிறது, இப்படி நடக்கக்கூடிய சில காரியங்களையும் சரிதான் என்று ஒத்துக்கொள்ளலாம் என்றால்..

நான் முதலிலேயே குறிப்பிட்டேன்! சந்தேகப்பட்டால், சந்தேகப்படுகிறேன் என்று சொல்வது, மற்றவர்களின் எண்ணத்தைப் பொறுத்தது! இல்லை என்றால், இதில் குற்றம் இல்லை என்று சொல்பவர்களுடைய நம்பிக்கையை பொறுத்தது. ஆனால், குற்றம் சுமத்துவது, குற்றம் சொல்வது என்று சொன்னால், இன்று முழுவதும் பேசிக்கொண்டிருக்க முடியும். ஏனென்றால், அமைச்சரவையில் வைத்து முடிவு செய்ய வேண்டியதை சுற்றோட்டத்தில் விடுவது, சுற்றோட்டத்தில் வரும்போது சம்பந்தப்பட்டத் துறை அமைச்சர் பார்த்து கையெழுத்துப் போடுவதற்கு முன்பாக, முதலமைச்சர் கையெழுத்து போடுவது; கையெழுத்து போட்டுவிட்டு அவர்களிடம் கலந்துவிட்டேன் என்று சொல்வது, அவர்கள் ஊரில் இல்லை என்பது; சரியாகத் தோன்றவில்லை என்கின்ற நிலைமையில், என்ன இருந்தாலும், நான்கு பைசாவிலிருந்து ஐந்து பைசாவாக அதிகமாக்க வேண்டும் என்று அதிகாரிகள் சொல்லியிருந்தால், அந்த நிலைமையை ஏற்றுக்கொண்டு, அந்தக் கட்டண உயர்வுக்கு உத்தரவிட்டு அதை அனுமதித்து இருந்தால், பிரச்சினை இருந்திருக்காது. குறை இருக்காது! 11 1/4 கோடி அளவுக்கு கட்டணத்தை உயர்த்துவதற்கு அந்த சிபாரிசை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கும்போது, இதில் ஆயிரம் கோடியா 500 கோடியா, ஒரு ரூபாயா என்று பார்க்காமல் சிபாரிசு செய்யாமல் இருக்கும்போது அனுமதிக்கலாமா? இது மாபெரும் குற்றம் என்றுச் சொல்லி, இதை வைத்துப்பழிச் சொல்லவேண்டும் என்ற ஆசையோடு இதைச் சொல்லுகிறேன் என்று யாரும் கருதவேண்டாம். இப்படி சிலநேரங்களில் அவரவர்களுக்கு ஏற்படுகின்ற சூழ்நிலையில், அவசரமாகக் காரியங்களை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணும்போது, சில முடிவுகளுக்கு வருவது தவிர்க்க முடியாததாக இருக்கலாம். இது போன்றவைகளை வைத்துக்கொண்டு, இதை பெரிய குற்றச்சாட்டாகக் கொண்டு வருவது பயனுள்ளதா, உண்மையில் அது தேவைதானா? அவசியமிருந்தால், அதைப் பயன்படுத்திய பிறகு, தேவைப்பட்டால் சிலவற்றைக் கிளறிப்பார்ப்பது உண்மையிலேயே தேவைதானா? என்பதற்காக இதைச் சுட்டிக்காட்டினேன்.

அதுபோல, பூம்புகாரைப் பற்றிச் சில விளக்கங்களை நான் தந்தாக வேண்டும். இதிலே குற்றச்சாட்டுக்கள் அடுக்கு அடுக்காகச் சொன்னபோது, அதற்கான கோப்பையே படித்துக்காண்பித்தேன். ஆனால் இங்கே டி.வி.யைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

நான் உரிமைப் பிரச்சினை பற்றிப் பேசவில்லை. என்நிலை என்ன என்பதைச் சொல்கிறேன். நான் சொல்வது, எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் கூறியபோது, கோப்புகளைப் படித்துக் காண்பித்தேன். என்னென்ன நடவடிக்கைகளை முதலமைச்சர் எடுக்க முடியுமோ அவைகளையெல்லாம் எடுத்திருக்கிறேன்.

ஆதாரங்களைப் படித்துக் காண்பித்தேன். ஆனால், வானொலியில் சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றி விமர்சனம் வெளியிடுகின்ற முறையில் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்கள். அதிலே, எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சொன்னதைப் பற்றி மட்டும் விளக்கமாகச் சொல்லிவிட்டு, அதற்குப் பதில் நாளை மறுநாள் முதலமைச்சர் சொல்வதாக இருக்கிறார். எல்லோரும் என்ன சொல்லப் போகிறார் என்று பரபரப்புடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர்பார்க்கின்றார்கள் என்று வானொலியிலே வெளியிட்டார்கள். என்ன காரணத்தினால், நான் சொன்னதை வெளியிடவில்லை என்பது தெரியவில்லை!

இந்த வார்த்தைகள் வேண்டுமென்றால், வேறாக இருக்கலாம். ஆனால் இந்தக் கருத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டது. என்பதைக் கண்டிப்பாகச் சொல்கிறேன். எல்லோரும் முதலமைச்சர் என்ன பதில் சொல்லப்போகிறார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற கருத்தின் அடிப்படையில் வெளியிட்டிருக்கிறார்கள். யாராவது வேண்டுமென்றால், பதிவு செய்யப்பட்டச் செய்தியைக் கேட்டுக் கொள்ளலாம்.

வானொலிக்காக எத்தனை பேர் இங்கே பரிந்து பேசுகிறார்கள் என்பதும், எந்த அளவுக்கு உத்தரவாதம் தருகிறார்கள் என்பதையும் எண்ணிப் பார்க்கும்போது, உண்மையில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நானும் அன்றுதான் கேட்டேன். அதைத் திரும்பவும் சொல்லுகிறேன். ராஜினாமாச் செய்யத் தயார் என்பதைச் சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு நான் படித்த கோப்புகள் பற்றிய விவரத்தை அவர்கள் வெளியிடவில்லை என்பதை, இங்கே நான் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். இதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்ளத் தயார்!

இதிலே யாருக்கு வெற்றி என்பதல்ல, இதனால் பெருமை சேராது என்பதை மட்டும் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன்.

'பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்' தூத்துக்குடி அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி கொண்டு வரக் கப்பல்கள் வாங்க உலக நாடுகளில் உள்ள பல்வேறு கப்பல் கட்டும் தளங்களுடன் தொடர்புகொண்டது. நிலக்கரி போக்குவரத்தில் தூத்துக்குடி கல்கத்தா, ஹால்டியா இந்த மூன்று துறைமுகங்களும் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்தத் துறைமுகங்களின் அமைப்புகளுக்கேற்று கப்பல்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. 31.03.1979ஆம் தேதியன்று, 'பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்', கப்பல் கட்டும் நுணுக்கக் குறிப்புகளை அரசு போக்குவரத்துக் கழகம், கப்பல் கட்டும் தளங்கள் தந்துள்ள விலைப் பட்டியல் மற்றும் தொழில் நுணுக்கக் குறிப்புகளை அரசுப் போக்குவரத்துத் துறை செயலாளருக்கு அனுப்பியது. இதன்படி 38,400 டி. டபிள்யுடி திறன் கொண்ட பல்கேரியக் கப்பல்களுக்கு, இரண்டு நிறுவனங்கள் முறையே, 11 மில்லியன் யு.எஸ். டாலருக்கும் 11.75 மில்லியன் யு.எஸ். டாலருக்கும் விற்க முன் வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விலையில், 'கிரேன்ஸ்' மற்றும் 'கிராப்ஸ்' முதலிய ஐட்டங்கள் அடங்கவில்லை. இதன்படி, முதல் தரகர் கொடுத்த விலையில், கிரேன்ஸ் மற்றும் கிராஃப்ஸ் பொருத்தும் பொருட்டு அதிகச் செலவு, உத்தேசமாக 4

மில்லியன் யு.எஸ். டாலர் என்று, இரண்டாவது தரகர் கொடுத்த விலையில் ஏற்படும் அதிகச் செலவு 3.50 மில்லியன் யு.எஸ். டாலர் என்றும், நாவிகேஷன் செலவு, 0.25 மில்லியன் யு.எஸ். டாலர் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விவரங்களின்படி பல்கேரியன் கப்பல் வாங்க ஆகும் செலவு, 15 மில்லியன் யு.எஸ். டாலரிருந்து 15.50 மில்லியன் யு.எஸ். டாலராக இருக்கும் என்று இருந்தது.

06.02.1979 அன்று போக்குவரத்துத் துறைச் செயலாளர் மத்திய அரசின் அனுமதிக்குட்பட்டு, பல்கேரியக் கப்பலை 10.75 மில்லியன் யு.எஸ். டாலர் வரை வாங்குவதற்கு உறுதியாக முன்வருவதற்கு அனுமதி தெரிவித்துக் கடிதம் எழுதினார்கள். இந்த 10.75 மில்லியன் யு.எஸ் டாலர் என்ற ஆஃபர் தற்போதைக்கு, ஒரு கப்பலுக்கு, 15 மில்லியன் யு.எஸ் டாலர், 15.50 மில்லியன் யு.எஸ். டாலர் வரை கேட்டிருந்த தொகைக்கு எதிர்த்தொகையாது கவுண்டர் ஆஃபர். ‘மேக்களாள் அன்ட் மெக்கன்ஸி’ என்ற நிறுவனம் முதலிலே ஆபர் ‘கிரேன்ஸ் அன்ட் கிராப்ஸ்’ தவிர்த்து கப்பலுக்கு 11.75 மில்லியன் யு.எஸ். டாலர் என்று குறிப்பிட்டிருந்தாலும், இந்த விலையில் 11 மில்லியன் யு.எஸ். டாலராக இருக்க ஒப்புக்கொண்டார்கள். இந்த விலை மேலே சொன்னதுபோல் ‘கிரேன்ஸ் அன்ட் கிராப்நேவிகேஷன்’ செலவுகள் அடங்காதது. இந்த இதரச் செலவுகளின் உத்தேசத் தொகை 3.75 மில்லியன் யு.எஸ். டாலர்கள் ஆகும். இந்த அளவுக்கு 15லிருந்து 15.50 மில்லியன் யு.எஸ். டாலர் வரை சொல்லப்பட்ட விலையையும், மற்ற கப்பல் தளங்களின் கப்பல்களின் விலைகளையும் கணக்கில் கொண்டு, பல்கேரிய கப்பல்களை சராசரி விலையாக, இறுதியாக 13 மில்லியன் யு.எஸ். டாலருக்கு வாங்க இந்த அரசின் அமைச்சரவை ஒப்புதலளித்தது.

இந்த விலை ‘கிரேன்ஸ்’ போன்ற உறுப்புகளின் மதிப்பையும் சேர்த்த மொத்த விலையாகும். எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோல இரண்டு மில்லியன் யு.எஸ். டாலருக்கு விலை உயர்த்தப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், முதன்முதலில் ‘கிரேன்ஸ் அன்ட் கிராப்ஸ்’ இவைகளைச் சேர்த்துக் கொடுக்கப்பட்ட 15.5 மில்லியன் யு.எஸ். டாலர் என்னும் நிலையைவிட, இப்போது வாங்க இருக்கும் விலை சுமார் 25 மில்லியன் யு.எஸ். டாலர் குறைவு என்பதை, எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

15.02.1979 அன்று பல்கேரிய கப்பலின் விலை ஸ்பேர் புரபல்லர், டெயில்எண்டாப் என்னும் உறுப்புகளைத் தவிர்த்து, 13.5 மில்லியன் யு.எஸ். டாலருக்கு, ‘மேக்கனான் அன்ட் மெக்கன்ஸி’ என்ற தரகர் நிறுவனத்தைச் சார்ந்த சுப்பிரமணியம் என்பவர் டெலக்ஸ் மூலம் தெரிவித்திருக்கிறார்கள். இந்த விலையில், ‘கிரேன்ஸ் அன்ட் கிராப்’ உறுப்புகளின் விலையும் அடங்கியது ஆகும். மற்றும் ‘சாம்சன்’ என்ற கப்பல்கட்டும் தளம் தங்களுடைய விலையை 16.22 மில்லியன் யு.எஸ். டாலருக்கு உயர்த்திவிட்டது என்றும், ‘ஸஸேபோ’ என்ற கப்பல் கட்டும் தளம், அதனுடைய விலையை 16.5 மில்லியன் யு.எஸ். டாலர் பரிசீலனைக்குரியது என்றும் ‘ஒசாகா’ என்ற கப்பல் கட்டும் தளம், அதனுடைய விலையை குறைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள்.

05.03.1979 அன்று தமிழக அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்து அதிகாரிகள் குழு 11.9 மில்லியன் யு.எஸ். டாலர் வரை கப்பலை வாங்க அனுமதியளித்து உள்ளது. இதற்கு மேலே விலை சொன்னால், அரசின் முன் அனுமதி பெறவேண்டுமென்று கூறியிருந்தது. 12.03.1979 அன்று அதிகாரிகள் குழு 'varna' சென்று வந்த பிறகு அந்த அறிக்கையைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையில், Koraboimpex என்ற நிறுவனம் அந்தக் கப்பல்களை டெலிவரி எடுக்கும் நாளிலிருந்து, இருபது ஆண்டுகளுக்கு உதிரி பாகங்கள் கிடைப்பதற்கான உறுதியை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுத் தருவதாகச் சொன்னார்கள். அந்த நிறுவனம் தனது அலுவலகம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்தி, இக்கப்பல்களில் பயன்படுத்தப்படும் உதிரி பாகங்களைத் தருவிப்பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் முன்வந்துள்ளது. பல்கேரிய கப்பலுக்குப் பாதகமாக இருந்துவந்த இக்குறைகளை நீக்கிவிடலாம் என்று குழு சிபாரிசு செய்தது. இந்த அறிவிப்புகள் ஒப்பந்தத்திலே இடம் பெற்றுள்ளன.

மேலும், தமிழ்நாடு மின்வாரியத்தின் பணிக்கென மூன்றாவது கப்பல் 1980ஆம் ஆண்டின் இறுதியில் தேவைப்படும். எனவே, ஒரே மாதிரியான கப்பலை, ஒரே மாதிரியான பணிகளுக்கு என வாங்குவது என்பது, ஒரே மாதிரியன ஸ்பேர் பார்ட்ஸ்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு உதவும் என்பதைக்கருதி, ஒரே சமயத்தில் பேச்சுவார்த்தை நடத்துவது பலவிதங்களில் பலன் தரத்தக்கதாக அமையும். ஆக தற்போது இரண்டு கப்பல்களுக்கு மட்டும் பேச்சுவார்த்தை நடத்தாமல், நமக்குத், தேவையான தேதியிலே கப்பல்கள் கிடைப்பதற்கு 3 கப்பல்களுக்குச் சேர்த்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும், அப்படிப் பேச்சுவார்த்தை நடத்துவது கழகத்திற்கு இலாபகரமாக அமையும் என்றும் குறிப்பிட்டார்கள். இரண்டு கப்பல்களுக்கு மட்டும் என்று ஒப்பந்தம் செய்தால், மூன்றாவது கப்பலுக்கு பின்னர் பேச்சுவார்த்தை வைத்துக்கொண்டால் வேறுவிதமான கப்பல் வாங்கமாட்டோம் என்ற எண்ணத்தில், மூன்றாவது கப்பலும் அவர்களிடமிருந்து வாங்குவோம் என்று அவர்கள் கருதுவார்கள் ? எனவே, இப்போதே மூன்று கப்பல்களுக்கும் சேர்த்து ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் என்று உறுதியாக குழு பரிந்துரைத்துள்ளது.

கப்பல் சொந்தக்காரர் 13 மில்லியன் யு.எஸ். டாலரும், இரண்டாவது கப்பலுக்கு 13.25 மில்லியன் யு.எஸ். டாலரும், மூன்றாவது கப்பலுக்கு 13.80 மில்லியன் யு.எஸ். டாலரும் விலையாகக் கேட்பதாகவும் முதல் கப்பல் 12.50 யு.எஸ் டாலரும் இரண்டாவது கப்பலுக்கு 13.00 மில்லியன் யு.எஸ். டாலரும் தற்போது முடிவு செய்ய இருக்கும் நிலையில் மூன்றாவது கப்பலுக்கு 13.50 மில்லியன் யு.எஸ். டாலரும் கொடுப்பது நியாயமாக இருக்கும் என்று கருதுவதாகவும் குழு தெரிவித்துள்ளது.

இதைக் கணக்கில் கொண்டால், முதல் இரண்டு கப்பல்களில் சராசரி விலை, அதாவது கப்பல் ஒன்றுக்கு 6 – "கிரேன்களையும்" 5– "கிராப்ட்ஸ்களையும்" சேர்த்து சராசரி விலை 12.75 மில்லியன் டாலராக ஆகிறது. ஆகவே, தரகர்களிடமிருந்து பல்கேரியா கப்பல்களுக்கு கிடைத்த 'ஒரிஜினல் ஆபர்' 15.00 மில்லியன் டாலர் 15.50 மில்லியன் டாலர் மதிப்பாகும்.

“பதில் சொல்கிறபோதே பத்திரிகைகள் வெளியிடுவதில்லை. உண்மையை பத்திரிகைகள் வெளியிட வேண்டும். என்றாலும் அங்குள்ளவர்கள் பேச்சை பற்றி மாத்திரம் வெளியிட்டு விட்டு, எதிர்க்கட்சியில் இருப்பதாக, எங்களையோ அல்லது மற்றவர்களையோ கருதிக்கொண்டு நாங்கள் சொல்வதை வெளியிடாத நிலைமையில் நாகரிகம் வளர்ந்து இருக்கிறது. எனவே மக்களுக்கு உண்மைகளைத் தெரிவிக்க இந்த சட்டமன்றத்தை நான் பயன்படுத்தியதாக வேண்டும். ”

இவை அனைத்தும் 24.03.1979 அன்று தமிழக அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டது. இறுதி விலைப்பட்டியலின்படி “சம்சாங்”, “ஹையூண்டி”, “ஒசாக்கா” கப்பல்கள் 16.00 மிலியன் யு.எஸ்.டாலராகவும், “சேஸ்போ” கப்பல்கள் 16.2 மிலியன் யு.எஸ்.டாலராகவும் “பால்டிகா” கப்பல்கள் “கியர்” இல்லாமல் 8.5 மிலியன் யு.எஸ்.டாலராகவும் இதில் கியர் அமைப்பதற்கு ஆகும் முதல் “பால்டிகா” கப்பலுக்கு 13.65 மிலியன் டாலராகவும் கணக்குக் கொடுக்கப்பட்டது.

இந்த நிலையில், அமைச்சரவை பல்கேரியக் கப்பலை சராசரி 13.00 மில்லியன் டாலருக்கு வாங்க அனுமதி கொடுத்தது. “கோரா இம்பெக்ஸ்” நிறுவனம் குறைந்தபட்சமாக, சராசரி கப்பல் ஒன்றுக்கு 13.20 மிலியன் டாலர் வேண்டுமென்று கொடுத்திருந்த “டெலக்ஸ்” அமைச்சரவைக்கு தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் பேச்சு வார்த்தையின்போது முடியாதபட்சத்தில், 13.20 மிலியன் டாலர் வரை நிர்ணயிக்க அரசுப் போக்குவரத்துத்துறைச் செயலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. அத்துடன் போக்குவரத்துத்துறைச் செயலர், விலையை 13.00 மிலியன் டாலர் அளவில் முடிக்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பூம்புகார் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் அமைச்சரவை குறிப்பிட்டிருந்ததைப் போலவே, 13.00 மில்லியன் டாலருக்கு ஒப்பந்தம் செய்துள்ளார்கள். இந்நிலையில் சுப்ரமணியம் என்பவர் அரசுக்கோ, பூம்புகார் போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கோ, தெரியாமல், சில தகவல்களை இடைத்தரகர் என்ற முறையில் “கோராபோ இம்பெக்ஸ்” கப்பல் நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். இது குறித்து “3 டெலக்ஸ்” நகல்கள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு அவர்கள் “வர்ணா” சென்றிருந்தபோது கிடைத்திருக்கின்றன. சுப்ரமணியம் லண்டனில் உள்ள அவர்களுடைய முக்கிய தரகர்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்கள், இரண்டு தரகர்களுக்கு இடையே உள்ள தொடர்புகள்,இதில் அரசுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. இந்த டெலக்ஸ் காப்பிகளை 12.05.1979 வரை அரசுக்குத் தெரியப்படுத்தவில்லை. இந்த டெலக்ஸ் காப்பிகள் அப்போதைய பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக நிருவாக இயக்குநர் திரு.இராமகிருஷ்ணன் அவர்களின் பாதுகாப்பிலேயே இருந்தது. முதன்முறையாக

அரசுக்குத் தகவல், சுமார் ஒன்றரை மாத காலத்திற்கும் பின்தான் கிடைத்தது. 11.05.1979 அன்று சுப்ரமணியம் அவர்கள் கொடுத்திருந்த டெலக்ஸ் காப்பிகள் இயக்குநர் குழுவின் கூட்டத்தில் வைக்கப்பட்டது. இந்த நகல்கள் 14.05.1979 அன்று அரசுக்கு அனுப்பப்பட்டது. இதற்கு இடையில், 12.05.1979 அன்று நான், அவரை அழைத்து பல கேள்விகளைக் கேட்டு நேரில் விவரம் தெரிந்த பிறகுதான், இராமகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., இந்த மூன்று டெலக்ஸ் காப்பிகளையும் முதன்முறையாக, என்னிடம் நேரில் காண்பித்தார்கள் என்பதை, இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

அரசின் கவனத்திற்கு சுப்ரமணியம் இடைத்தரகர் கையாண்ட தவறுகள் தெரிந்தவுடன், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பல்கேரியா கப்பல் சம்பந்தமாக திரு.சுப்ரமணியத்துடன் கொண்டு வியாபாரத் தொடர்பை முழுவதும் உடனே நிறுத்திவிட வேண்டும். இனி எந்தக் காரணத்தைக் கொண்டும் அவருடன் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது என்றும் இந்த பல்கேரியா கப்பல் வாங்குவது பற்றிய மேற்கொண்ட தொடர்புகளை இனி அரசோடு நேரடித் தொடர்பாகத்தான் வைத்துக்கொள்ள வேண்டுமேயொழிய, வேறு எந்தத் தனி நபர் புரோக்கர்கள் மூலமும் கூடாது என்றும் அரசு ஆணை பிறப்பித்தது. இந்தத் தவறுகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது என்பதை, நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது குறித்து அமைச்சரவையும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்து இருக்கின்றது.

இந்தத் தவறுகள் வெளிப்படுவதற்கு முன்பு, டெல்லியில் உள்ள கப்பல் வளர்ச்சி நிறுவனத்திற்கு மூன்று பல்கேரியக் கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு.எஸ்.டாலர் விலையில் வாங்க அனுமதி கோரப்பட்டது. 09.05.1979 அன்று "பௌலாத்லைன்ஸ்" நிறுவனம் அனுப்பிய தகவலின்படி, ஒரு டன் நிலக்கரியை ஹால்டியாவிலிருந்து தூத்துக்குடிக்கு கொண்டு வர செலவு ரூ.62.15 ஆகும் என்று கணக்கிடப்பட்டது. இதையே பல்கேரிய கப்பலின் மூலம் கொண்டு வர செலவு ரூ.55.43 ஆகிறது. போலந்து கப்பல்களைப் பயன்படுத்தினால், மின் வாரியம் தொடர்ந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.50 கோடி கூடுதலாகச் செலவிட நேரும். மேலும், போலந்து கப்பல்களின் ஒப்படைக்காலம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்றதல்ல. இந்தக் காரணங்களால், போலந்து கப்பல் வாங்குவது பற்றிய குறிப்பு நிராகரிக்கப்பட்டது. எனவே, முன்பு எடுத்த முடிவின்படி, மூன்று பல்கேரிய கப்பல்களை 13.00 மில்லியன் யு.எஸ்.டாலர் விலைக்கு நேரடியாக வாங்க உறுதிபடுத்தப்பட்டு, 'ஷிப்பிங் டெவலப்மெண்ட்' கமிட்டியின் அனுமதி கோரப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கப்பலின் விலை 10.75லிருந்து 13.00 மில்லியன் யு.எஸ்.டாலர் வரை இடையில் ஏறிவிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். பல்கேரியா கப்பல்கள் பற்றி முதலில் கொடுக்கப்பட்ட ஆபர்கள் 11.00 மில்லியன் யு.எஸ்.டாலர் மற்றும் 11.75 மில்லியன் யு.எஸ். டாலர்களாகவும் இந்தத் தொகையுடன் கிரேன்ஸ் மற்றும் கிராப்ட்ஸ்க்கு ஆகும் தொகையைச் சேர்த்தால் முதல் தரகரின் படி, கப்பலுக்கு 15.00 மில்லியன் யு.எஸ். டாலரும் இரண்டாவது தரகரின்படி, கப்பலுக்கு 15.50 மில்லியன் யு.எஸ். டாலரும்

ஆகிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகம் இந்த பல்கேரியா கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு.எஸ்.டாலருக்கு விலைக்கு மட்டுமே வாங்க ஒப்பந்தம் செய்து, கொண்டதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. வாங்கவிருக்கும் விலை, முதலில் கொடுக்கப்பட்ட விலையை விட, 2.00 மில்லியன் யு.எஸ்.டாலர் கூடுதலாக அல்ல, 2.5 மில்லியன் யு.எஸ்.டாலர் குறைவாகும். இந்தக் கப்பல்களின் விலையைக் குறித்த மதிப்பீட்டு விவரங்களையும், இந்த அவையின் முன் வைக்க நான் விரும்புகிறேன்.

இலண்டனில் உள்ள தரமுள்ள மூன்று மதிப்பீட்டாளர்கள் ஒவ்வொரு கப்பலின் விலையையும், 15.00 மில்லியன் யு.எஸ்.டாலர் என்றோ, அதற்கு மேலோ மதிப்பிட்டிருக்கிறார்கள். இலண்டனில் உள்ள திரு.சி.எச்.ரக் அன்ட் கோ நிறுவனத்தினர் 02.04.1979 அன்று மூன்று கப்பல்களும் முறையே, 15.2, 15.4, 15.7 மில்லியன் யு.எஸ். டாலர்கள் பெறத்தக்கவை என்று மதிப்பிட்டுள்ளார்கள். பின்னர் கப்பல் வளர்ச்சி பொது இயக்குநர் மேலும் இரண்டு மதிப்பீட்டாளர்களின் கருத்தை வேண்டினார்.

அதன் பிறகு லண்டனில் உள்ள “டேவிஸ் புரூஸ் அன்ட் கம்பெனி” நிறுவனத்தினர் 15.4, 15.5, 15.75 மில்லியன் யு.எஸ். டாலர்கள் என்றும் திருவாளர்கள் “டேம்ப்ளின் அன்ட் கோ” நிறுவனத்தினர் 15, 15, 15 மில்லியன் யு.எஸ்.டாலர் என்றும் கப்பல்களின் விலையை மதிப்பிட்டிருக்கின்றனர். மேலே குறிப்பிட்டுள்ள அயல்நாட்டு மதிப்பீட்டாளர்களின் மதிப்பீடுகளால், வாங்கப்போகும் கப்பல்களின் விலை நியாயமானது என்று உறுதிப்படுகிறது. தற்போதைய ஒப்பந்தத்தின்படி கப்பலின் விலை 13 மில்லியன் டாலர் என்றால், வெறும் கப்பல் மட்டும் அல்ல; அதில் கிரேன்ஸ் கிராப்ட்ஸ் விலையும் சேருகிறது. கிரேன்ஸ், கிராப்ட்ஸ் விலை 2.5 மில்லியன் டாலர்; அதைத் கழித்தால் கப்பலின் விலை 10.5 மில்லியன் டாலர்தான்; தரகர்களே கப்பலுக்கு மட்டும் ‘யார்ட்’ சார்பிலே சொன்ன விலை 11.75 மில்லியன் டாலர்; ஆனால், இறுதியில் கப்பலுக்கு ஒத்துக்கொள்ளப்பட்ட விலை 10.5 மில்லியன் டாலரே தவிர 13 மில்லியன் டாலர் அல்ல.

அவர் குறிப்பிட்ட 3 கம்பெனிகளிடமிருந்து வந்த தகவல்கள், அதில் குறிப்பாக, போலந்து நாட்டிலேயிருந்து வந்த அந்த ஆர்டரைப் பற்றி; ஆஃபரைப் பற்றி; நான் கவனிப்பதற்குக் காரணம், ருப்பீ அளவிலே அதை வாங்கிக் கொள்ள முடியும் என்று அவர்கள் சொன்னார்கள். டாலர் மூலமாக வாங்குவது என்கிற பிரச்சினைகள் வேறு என்பது அவருக்குத் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். ரூபாய் கணக்கிலேயே வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லும்பொழுது, அரசுக்குப் பிரச்சினைகள் குறைகின்றன. இந்தியப் பேரரசு, அதிலே அக்கறை காட்டும். ஆகவே, அதை விட விலை குறைவாகக் கிடைக்குமானால், வசதி இருக்குமானால், வாங்கலாம் என்று கருதினோம். அதற்காகத்தான் இந்தத் தகராறுகள் அதிகமாக 13.2,13,13.5 என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இந்த ஆஃபர் வந்தபொழுது அதை வேண்டாம் என்றும் சொல்லாமல், இது உண்மையா, இது கிடைக்குமா, அதைவிட மலிவாக இதை வாங்க முடியுமா என்கின்ற எண்ணத்தில், அந்தப் பணியை நாங்கள் எடுத்துக்கொண்டோம்.

அந்த வகையில் நாம் ஒரு மாதம் தாமதியுங்கள் என்று மைய அரசுக்கு எழுதினோம். ஆனால் நடந்தது அது அல்ல. அவர்கள் கொடுக்கலாம் என்று சொன்ன கப்பலே நாம் எதிர்பார்த்தது போல வராது என்பதற்கு இங்கே நான் புள்ளிவிவரத்தைப் படித்தேன். அது நஷ்டத்தை உண்டாக்குவதாக அமைந்தது. ஆகவேதான் போலந்து கப்பலை நாம் வாங்க முடியாது என்று மறுப்பதற்குக் காரணமாக அமைந்தது என்பதை, இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும்.

கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஆகும் செலவு பல்கேரியா கப்பலைவிட போலந்து கப்பலுக்கு அதிகம் ஆகிறது என்பதுதான் காரணம். ஹால்டியாவின் 3 துறைமுகங்களுடன் இந்தத் துறைமுகத்தை அமைப்பதற்கான ஏற்பாட்டுடன் கப்பலை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

ஏறக்குறைய, ஒரு முறை வந்து சேருவதற்கு, மைல் கணக்கிலே கணக்குப் பார்த்தால் ரூ.2.3 அதிகமாக போலந்துக் கப்பலுக்கு செலவு ஆகிறது என்று தெரிந்து கொண்ட பின், 'கிரேன்' கட்டித்தருகிறேன் என்று சொன்னவர்கள் 6 'கிரேன்' கட்டித்தர முடியாது. 4 தான் முடியும், ஒன்று வேண்டுமெனால் ஏற்பாடு செய்து கொள்ள முயற்சிக்கிறோம் என்று சொல்லிய காரணத்தால்...

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மறந்து இருக்கிறார்கள். போலந்து 'ஆஃபர்' போகஸ் என்று அவர் சொன்னார். அவர்கள் அனுப்பிய கடிதத்திலே கையொப்பம் இல்லை. முத்திரை இல்லை. அது உண்மையான கடிதம்தான் அல்லது அப்படி ஒரு கம்பெனி இருக்கிறதா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. ஏனென்றால், கையெழுத்திடப்படவில்லை, முத்திரையில்லை என்றார்கள். ஆனால், இதே கம்பெனி யார் வேறு ஒரு கடிதமும், போட்டோக்கள் அடங்கிய ஒரு புத்தகமும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள், "அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிற விலை எண்ணில் குறைபாடு இருக்கிறது; இதுதான் உண்மையான விலை!" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்! அதைப் பார்க்காமலே, முதலமைச்சரிடத்திலே வந்த கடிதத்தை, வேறு எந்தக் காரணமோ எனக்குத் தெரியாது. 'போகஸ்' என்று சொல்லியிருக்கிறார் என்றுதான் நான் குறிப்பிட்டேன். அதைப் படித்துப் பார்த்துக் கொள்ளலாம்!

மீண்டும் இதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் ஆழமாக நாம் செல்ல வேண்டும். ஒரு அதிகாரி, ஒரு போலந்துக் கப்பல் கம்பெனி என்ற பெயரிலே வந்திருக்கிற ஒரு கடிதத்தில் முத்திரை இல்லை. ஆகவே, அது 'போகஸ்' என்று சொன்னால், மற்றக் கடிதங்களையும் மற்ற 'புக்லெட்'களையும் ஏன் அவர் பார்க்கவில்லை? அதையும் பார்த்துவிட்டு, "அதிலே இருக்கிற முத்திரையையும் பார்த்துவிட்டு, நான் பார்த்தேன்; ஆனால், எனக்குச் சந்தேகமாக இருக்கிறது!" என்று சொல்லியிருந்தால் சரி. ஆனால் அவற்றை அவர் பார்க்கவேயில்லை!

எங்களுக்குச் சொல்லப்பட்டதெல்லாம்; "'ருப்பி வேல்யூ'விலே கொடுக்கலாம், ரூபாய் வாங்கிக்கொண்டு கொடுக்கிறோம்; இந்திய கரென்ஸியிலேயே

கொடுங்கள்!" என்று சொன்னார்கள். அது ஒரு வசதியான வாய்ப்பு என்பதை, யாரும் மறுக்கமாட்டார்கள். அதேபோல, விலை குறைவாகவும் கிடைக்கும் என்றால், ஏன் வாங்கக்கூடாது? என்றுதான் யாரும் நினைப்பார்கள். தவறு என்று சொல்ல முடியாது; தவறு என்று யாரும் சொல்லமாட்டார்கள்! ஆனால், நம்பிக்கை இல்லாத சூழ்நிலையில், ஒரு மாதம் தள்ளிவையுங்கள் என்று சொன்னோமே தவிர இந்தக் கப்பலை வாங்க மாட்டோம், அந்தக் கப்பலை வாங்க வேண்டுமென்று யாரும் முயற்சி செய்யவில்லை. வந்த செய்திகளை வைத்து, தருகின்ற தகவல்களை அமைச்சரவையில் வைத்து ஒரு முடிவெடுக்கிறோம். முடிவெடுக்கிற நிலையில், விசாரித்தப் பிறகு அது சரியில்லை என்று தெரிந்தப்பிறகு, நாங்கள் மீண்டும் அரசுக்கு, மைய அரசுக்கு எழுதி அதை வாங்கலாம். ஆனால், அதிலே ஏதாவது தவறு இருக்கிறதா என்று நீங்கள் கண்டுபிடித்துச் சொல்லுங்கள் என்று நாங்கள் சொல்லி இருக்கிறோம்.

இவ்வளவும் சொன்னப்பிறகு சொல்கிறேன். இங்கே பேசுவது அனைத்தும், நடைபெறாத ஒரு ஒப்பந்தத்தைப் பற்றி, இன்னும் கப்பல் வாங்கிவிட்டோமா என்றால், அது குறித்து, இன்றைக்குக் கூடத் தகவல் வந்ததாகத் தெரியவில்லை. இனிமேல்தான் கேட்க வேண்டும். கையெழுத்துப் போட்டார்களா என்று எனக்குத் தெரியாது. அதிகாரிகள் அங்கே சென்று இருக்கிறார்கள். என்ன முடிவு எடுத்து இருக்கிறார்கள் என்று எனக்கு, இது வரையில் தகவல் இல்லை! இந்த நிமிடம் வரையில், தகவல் இல்லை! ஆகவே, அப்படி நடக்காத ஒன்றைப் பற்றி, ஒப்பந்தம் ஆகாத ஒன்றைப் பற்றி, அப்படிப்பட்ட நிலைமையில், இதிலே நாங்கள் ஏதோ பணத்தை வாங்கிக்கொண்டோம், 1 கோடி ரூபாய் வாங்கிக் கொண்டோம், 4 கோடி ரூபாய் கொடுக்க இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வதை, நாம் எப்படி ஏற்றுக்கொள்வது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உண்மை நிலையை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஒப்பந்தத்தை கையெழுத்துப் போட்டுவிட்டு வந்தார்கள். அந்த ஒப்பந்தத்தில் இருக்கிறப் பிரச்சினைகள் நீடித்துக் கொண்டே இருந்தன. நிறைவேறவில்லை. அதில் நாங்கள் கேட்பதை அவர்கள் செய்ய மாட்டேன் என்று சொல்கிற நிலைமை, செய்து கொடுக்க முடியாது என்று சொல்கிற நிலைமை, அப்படியானால் வேண்டாம் என்று சொல்வது என்று, இப்படி இருந்தால், முடிவு எங்கே வருகிறது? கப்பல் நாங்கள் வாங்கிக்கொள்கிறோம் என்று ஒப்புக்கொண்டு, இங்கே இருந்து பணம் வங்கியில் கட்டி அனுப்பினால், அப்போது தான் அது உறுதி செய்யப்படுகிறது. இங்கே வங்கியில் பணம் கட்டிய பிறகுதான் அதை ஏற்றுக்கொள்வார்கள். அதுவரையில், உத்தரவாதம் இல்லை. நாம் கேட்டபோது, அவர்கள் சொல்கிற பணம் கட்டியாக வேண்டும். பணம் அந்தத் தேதியில் கட்டவில்லையென்றால், ஒப்பந்தம் காலாவதியாகிவிடும்.

அந்த நிலைமையில், புதிய ஒப்பந்தம் செய்வது போல, தாமதமாகிப் போய்விட்ட அந்த ஒப்பந்தத்தின்மீது மீண்டும் பேசவேண்டிய நிலைமைக்கு அவர்கள் இழுத்துக்கொண்டே இருந்தார்கள். ஏனென்றால் சொன்ன டயத்திற்கு இந்தத் தகராறு காரணமாக வாங்க முடியவில்லை. பிரச்சினை அதிகமாகிறது. ஆகவே, எச்சரிக்கை

காரணமாகத் தாமதமாகியதே ஒழிய, லாபத்தை எண்ணி அல்ல. அந்த லாபத்தை எண்ணி இருந்தால், நாங்கள் ரஷ்யா – கம்யூனிஸ்ட் நாட்டு கப்பலைத் தேடிப் போய் இருக்க வேண்டாம். வேறு வழியில் செய்து இருக்கமுடியும். கோப்புகள் கொண்டு வந்து தான், பதில் சொல்ல முடியும், இப்போது கோப்பு இல்லை. கோப்பு வந்தவுடனே சொல்கிறேன்.

அதை அன்றே கேட்டு இருந்தால், அப்போதே கையில் கொடுத்து இருப்பேன். முன்பு 29 வயதா, 31 வயதா என்ற தகராறு ஏற்பட்டபோது, உடனே கோப்பினை உங்கள் கையில் கொடுத்ததைப்போல், கொடுத்து இருப்பேன். அப்போது கேட்காமல் இருந்துவிட்டு, இப்போது மரபு என்று சொன்னால், எனக்கு அது தெரியாது. அப்படி 'பைல்' வேண்டுமானால், எப்போது வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள். எனக்கு ஆட்சேபனை இல்லை. 'பைல்' வேண்டும் என்று, அன்று நீங்கள் யாரும் கேட்கவில்லை. இனிமேல் முன்கூட்டியே கேட்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

இங்கே சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் நிறைய இருக்கின்றன. இப்பொழுது இரண்டு, மூன்று குற்றச்சாட்டுகளுக்குத் தான் பதில் சொல்லியிருக்கிறேன். இன்னும் போலீஸ் – காவல்துறையைப் பற்றி எல்லாம் பேசவே இல்லை. அவை பற்றி நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. ஆகவே, நான் ஏற்கெனவே, நேற்றே சொன்னேன். குறுக்கே யாரும் பேசாமல் இருந்தால், இன்று இன்னும் ½ மணி அல்லது 1 மணி நேரம் கூடுதலாக எடுத்துக்கொண்டு பேசி முடித்துவிடலாம் என்றேன்.

பதில் சொல்கிறபோதே பத்திரிக்கைகள் வெளியிடுவதில்லை. உண்மையை பத்திரிக்கைள் வெளியிட வேண்டும். என்றாலும், அங்குள்ளவர்கள் பேச்சை பற்றி மாத்திரம் வெளியிட்டு விட்டு, எதிர்க்கட்சியில் இருப்பதாக, எங்களையோ அல்லது மற்றவர்களையோ கருதிக்கொண்டு, நாங்கள் சொல்வதை வெளியிடாத நிலைமையில், நாகரிகம் வளர்ந்து இருக்கிறது. எனவே, மக்களுக்கு உண்மைகளைத் தெரிவிக்க இந்த சட்டமன்றத்தை நான் பயன்படுத்தியதாக வேண்டும். ஆக இங்கே சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு என்னிடம் உள்ள எதிர் ஆதாரங்களை வெளியிட்டாக வேண்டும். ஆகவே, பேரவைத்தலைவர் அவர்களே, எனக்கு அதற்கான வாய்ப்பைத் தந்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

03.11.1979 அன்று எதிர்க்கட்சி கொண்டுவந்த அமைச்சரவை மீதான கண்டனத் தீர்மானத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.

ஏழை, எளியோர்க்கும் ஏற்றமிகு கல்வி!

பிற்பட்ட சமுதாயத்தை பற்றி ஒரு பிரச்சினை இங்கே வைத்திருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைப் பற்றி என்னுடைய குறிப்புகளை நான் இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். பிற்பட்ட சமுதாயம், முற்பட்ட சமுதாயம் என்பதில், எந்தவித கருத்து வேறுபாடும், யாருக்கும் இல்லையென்றாலும், ஒன்றை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே பிற்பட்ட சமுதாயத்திற்கு இருக்கின்ற உரிமைகளை, நாங்கள் பறிக்கவில்லை என்பது தான். அதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்வது எனது நீங்காத கடமை என்று, நான் கருதுகிறேன்.

புள்ளி விவரங்களைக் கணக்கிட்டுப் பார்த்தோமானால், பிற்பட்ட வகுப்பினர்கள் என்று தமிழகத்திலே ஒட்டுமொத்தமாகப் பிரித்துப் பார்த்தால், 54 சதவிகிதம் வருகிறார்கள். ஏறத்தாழ, பாதிக்கு மேல் 7,500 ரூபாய்க்கு கீழே வருகிறார்கள். மீதி ரூ. 9,000/–க்கு கீழே வருகிறார்கள். அப்படி நாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது, ஒட்டுமொத்தமாக பாதி என்று சொன்னேனே, இதில் 2.5 சதவிகிதம் தான் அதிகமான வருமானம் வரக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மிகப் பெரும்பான்மையான அளவிற்கு, இப்படி ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள் என்பதை, இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமையில், நான் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துக்காட்டி, எடுத்துச்சொல்லி பிற்பட்ட சமூகத்தின் மீது ஏதோ இந்த அரசுக்கு ஒரு கோபம் இருப்பது போலவும், சுயநலத்திற்காக செய்வது போலவும், தவறான ஒரு கருத்து யாருக்காவது இருக்குமானால், அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும். நேரமில்லாததால், இது குறித்து முழுவதையும் படிக்க நான் விரும்பவில்லை.

தந்தை பெரியார் அவர்கள், “பொன் மொழிகள்” என்ற புத்தகத்தில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். “மக்கள் வரிப்பணத்திலிருந்து, அந்த நிலைமையில், 10½ கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் சிலப் பணக்கார பிள்ளைகள் படித்து ஆக்கம் பெறும் வகையில், கல்வி முறையில் கல்லூரிகள் இருக்கின்றனவே தவிர, கிராமங்களிலுள்ள வரி கொடுப்போரின் பிள்ளைகள், பாட்டாளி மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் தன்மையில் இருக்கின்றதா ?” என்ற கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள்.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள் “பலமும் பணமும் உள்ளவர்களுக்கு அரசாங்க உதவி தேவையில்லை. ஏழைகளுக்கும் பலமற்றவர்களுக்குந்தான் அரசாங்க பாதுகாப்பு தேவைப்படுகிறது. நிலையற்ற, அதைப்போல சஞ்சலப்படும் படித்தவர்களையும், நடுத்தர பணக்காரர்களையும் வீணாகக் குழப்புகிறார்கள், அவர்களைக் குழப்பிவிட்டால் போதும். படிக்காத பாமர

மக்களையும் தொடர்ந்து ஜால வித்தை செய்து, ஏமாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது மாதிரிதான் இருக்கிறது. இதில் பாமரமக்கள் ஏமாந்து விடமாட்டார்கள். ஆளும் கட்சியை எப்படியாவது பதவியிலிருந்து விரட்டி விட வேண்டும் என்று வெறும் கூச்சல் போடுகிறவர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வார்த்தை ஜாலத்தை முதலாக வைத்து அரசியல் நடத்துகிறவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதிலே, அவர்கள் குறிப்பிட்டிருப்பது பலமும் பணமும் உள்ளவர்களுக்கு அரசாங்க உதவி தேவையில்லை. ஏழைகளுக்கும், பலமற்றவர்களுக்குந்தான் அரசாங்க பாதுகாப்பு தேவைப்படுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அமரர் அண்ணா அவர்கள், ''சர்க்கார் மூலமாகக் கிடைக்கிறச் சலுகைகள் ஏற்கெனவே சமுதாயத்தில் வசதியோடு உள்ளவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அதுதான் சமத்துவம் என்று யாராவது சொல்வார்களேயானால், அந்த சமத்துவத்தைப் பற்றி, அதனுடைய இலக்கணத்தைப் பற்றி; மறுபடியும் படிக்கவேண்டுமென்று நான், பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்'' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேலும், ''கல்வியை இலவசமாகச் செய்து விடலாம் என்று சொன்னார்கள். பாகுபாடே பார்க்காமல் இருப்பது நல்லதுதான். சில விஷயங்களில் பாகு படுத்தத்தான் வேண்டியிருக்கிறது. அங்கே சொல்லியிருக்கிறார்கள், நெல்லும் பதரும் ஒன்றாகத்தான் இருக்கும். நெல்லைப் பாகுபடுத்திப் பார்க்கவேண்டும். கல்லும் அரிசியும் ஒன்றாகத்தான் இருக்கும். கல்லை அரிசியிலிருந்து நீக்கத்தான் வேண்டும். ஒரு திட்டத்தை மேற்கொள்ளும்போது நல்லதும் கெட்டதும் கலந்துதான் வரும்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

''ஏழை மக்கள் 'ஸ்காலர்ஷிப்' இல்லாமல் படிக்க முடியாது என்பதை உணருகிறேன். அதே நேரத்தில், தகுதியைப் பற்றியும் நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் சொல்லிக்கொள்கிறேன்,'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

''இலவசக் கல்வி என்று தத்துவ ரீதியாகச் சொல்லும் போது, பணம் இல்லை என்பதற்காக ஒரு மாணவன் மேலே படிக்கின்ற வாய்ப்பை இழந்துவிடக் கூடாது இலவசமாக கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக, சர்க்கார் மூலமாகக் கிடைக்கிறச் சலுகைகள் ஏற்கெனவே, சமுதாயத்தில் வசதியோடு உள்ளவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும். அது தான் சமத்துவம் என்று யாராவது சொல்வார்களானால் அந்தச் சமத்துவத்தைப் பற்றி, அதனுடைய இலக்கணத்தைப் பற்றி, மறுபடியும் படிக்க வேண்டுமென்று, நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்'' இப்படி அமரர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரை, சமுதாயத்தில் பிற்பட்டவர்கள் என்று இருக்கிறவர்களிலே ஏழைகள், பணக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம்

‘உணவுக்கு வேலைத் திட்டம்’ என்றால், அது அவர்தானே சொன்னார் என்று சொல்வதையோ, அல்லது எல்லோருக்கும் வேலை வாய்ப்பு உறுதி என்ற திட்டத்தை நாங்கள் கொண்டு வருகிறோம் என்றால், அதை ஏட்டளவில் என்று சொல்வதையோ, தயவு செய்து கொஞ்சம் குறைத்துக்கொண்டு, நாங்கள் குழுக்களை அமைக்க இருக்கின்றோமே, அதிலே, இங்கேயிருக்கிற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பங்கு கொண்டு, இந்த அரசின் சார்பாக, நீங்களும் பங்கு கொண்டு, அந்தப் பணியைச் செய்தீர்களென்றால், நாம் எல்லோரும் எண்ணுகின்ற, நாம் எல்லோரும் மதிக்கின்ற, அமரர் அண்ணாவினுடைய கொள்கை என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது என்றால், அதைச் செய்வதிலே எல்லோருக்கும் பங்கு இருந்தால், அதிலே நஷ்டம் இல்லை; எல்லோருக்கும் பெருமை வரட்டும், எல்லோரும் பங்கு கொள்ளுங்கள் என்பதுதான் என்னுடைய கோரிக்கை!

ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே, வசதியுள்ளவர்கள் படிப்பதற்கு எல்லாச் சலுகைகளையும் நாம் அளிக்க வேண்டும் ஒட்டுமொத்தமாக என்பதை, இந்த அரசு ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைச் சொல்லி யார் வசதி இல்லாமல் இருக்கிறார்களோ, யாருக்கு உண்மையிலேயே வசதி கொடுக்கப்பட வேண்டுமோ, இதுவரை யார் யாருக்குக் கிடைக்காமல் இருந்ததோ, அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதற்காக, அந்தப் பணியை நாம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில், இந்த அரசு அந்தக் கடமையைச் செய்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பல நண்பர்கள் ஒன்பதாயிரம் ரூபாய் என்பதை, பன்னிரண்டாயிரம் ரூபாயாக உயர்த்தினால் நல்லது; தொழிலாளர்களுக்கு இப்போது சம்பளம் மாதத்தில் ஆயிரம் ரூபாய் கூடக் கிடைக்கிறது. ஆகவே, அதைச் செய்யவேண்டுமென்று இங்கே கூறியிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் என்னைச் சந்தித்து, தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்பது நிச்சயமாக இங்கே புள்ளி விவரங்களோடு கிடைக்குமென்று கருதுகிறேன். அப்படி இருந்தால், நிச்சயமாக இந்த அரசு சிந்திக்கும், ஆவன செய்யும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்கிறேன். எப்படியாவது உழைக்கும் வர்க்கத்தில் இருப்பவர்கள், ஏழ்மையில் இருப்பவர்கள், வாய்ப்பு வசதியற்று இருப்பவர்கள், அவர்களுக்குக் கல்விவசதி கிடைத்தாக வேண்டுமென்பது எங்களுடைய நோக்கமாகும். இங்கே

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். அரிசன மக்கள் ‘ஸ்காலர்ஷிப்’ பெறும்போது இந்த எண்ணிக்கையை வைத்திருக்கிறார்கள் 2,500 ரூபாய்க்கு கீழே வருமானம் உள்ளவர்களுக்கு ‘ஸ்காலர்ஷிப்’ என்கிறார்கள் இதைப்பற்றி, இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கருதுகிறேன். ரூபாய் ஒன்பதாயிரம் என்று ஒருசிலவற்றில் கணக்கு வைத்திருக்கிறார்கள் இவைகளை நாம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்!

தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியில் தேறவேண்டும். வசதியில்லாதவர்கள் இடம் பெற வெண்டுமென்ற எண்ணத்தோடு, அங்கே இந்த விதிவிலக்குகளை வைத்திருக்கிறார்கள். இதை நான் நினைவு படுத்துவதன் மூலம் ரூ.2,500 என்பதை ரூ.5 ஆயிரம் ஆக்கி, அதை 9 ஆயிரம் என்று வைத்துக்கொள்ளலாமா என்றுகூடக் கருதுகிறேன். அதைப்பற்றி நாங்கள் பரிசீலித்து, அப்படித்தேவையென்ற நிலைமை இருக்குமானால், அப்படிப்பட்டவர்களுக்கும் அதை மாற்றலாமா என்றுகூட யோசிக்கிறேன்.

இந்த நிலையில், இங்கே கேலியாகவும் பேசும்பொழுது ஏதோ நாங்கள் செய்வது எல்லாம் தேர்தலை எதிர்பார்த்து என்ற கணக்கிலேயும் சில கருத்துக்களை இங்கே சொன்னார்கள். அதிலே நாங்கள் வேட்டி, சேலை கொடுப்பதை, இது ஒரு தேர்தல் ‘ஸ்டன்ட்’ என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நல்ல தம்பி என்ற படத்திற்கு நீங்கள் தானே உரையாடல் எழுதியது? அண்ணாவா? அமரர் அண்ணா உரையாடல் எழுதியிருக்கிறார்கள். அதை கலைஞர் அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். ஏனென்றால், நான் சொல்லும் பொழுது சிலர் ஒப்புக்கொண்டால் தான் சரி என்றாகிறது. இல்லையென்றால், சரியில்லை என்று ஆகிவிடுகிறது அதை எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டால், எனக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது. ஏன் என்றால், மற்றவர்கள் எழுந்து ‘பாயின்ட் ஆப் ஆர்டர்’ உரிமைப் பிரச்சினை என்றெல்லாம் கொண்டுவர மாட்டார்கள், ஆகவே, விரிவாகச் சொல்லாமல் சுருக்கமாக முடித்துக் கொள்ளலாம் என்பதுதான்.

அதிலே ஒரு காட்சி வருகிறது கலைவாணர் அவர்கள் இரட்டை வேடம் போடுகின்றார்கள். அவர் ஒரு ஏழை, ஆனால் அவரைப் போலவே, அந்த ஜமீனிலே ஒருவர் இருக்கிறார் என்றும், அவரை எதிர்பார்க்கின்றவர்கள், அவரைப் பார்த்தவுடன் அவர்தான் ஜமீன்தாரின் வாரிசு என்று எண்ணி, அங்கே ஏதோ அவருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதைப் போலவும் ஒரு காட்சி வருகிறது. முழுமையாக, அப்படியே நான் வார்த்தைக்கு வார்த்தை சொல்லவில்லை; தெரியாது; நான் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது என்னும் கருத்தைச் சொல்கிறேன்.

ஆகவே, ஒரு காட்சியில் ஜமீன்தாராக மற்றவர்களால் கருதப்பட்ட ஏழை கலைவாணர், எப்படி ஜமீன் இருக்கிறது, பெரிய பெரிய மாளிகைகள் எல்லாம் இருக்கின்ற அதே நேரத்திலே, அந்த ஏழைகள் மற்றவர்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க கிராமத்திற்குள்ளே போகிறார். அவர் போகிறபொழுது ஒரு குடிசையிலே போய் அவர் உட்கார்ந்த உடனே, ‘ஜமீன் வீட்டிலிருந்து வந்திருக்கிறார்’ என்று மரியாதையுடன்

வயது முதிர்ந்த மூதாட்டி வந்து, "என்ன வேண்டும்?" என்று கேட்கிறார். "என்ன இருக்கிறது?" என்று கேட்டு, "ஒரு குவளை மோர் கொடுங்கள்", என்று சொல்கிறார். மோர் கொடுப்பதற்காக உள்ளே போகிறார். அப்போது "இந்த வீட்டிலே வேறு யாரும் இல்லையா? தள்ளாத வயதிலே நீங்கள் தான் வேலை செய்யவேண்டுமா?" என்று கேட்கிறார்கள். "இருக்கிறார்கள், என் பேத்தி இருக்கிறாள்; மற்றவர்கள் எல்லாம் வேலைக்குப் போயிருக்கிறார்கள்" என்று சொல்கிறார். "ஏன், அதைக் கொண்டுவந்து கொடுக்கச் சொல்லலாமே, நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? என்று சொல்கிறார்கள். "சரி!" என்று எழுந்து உள்ளே போய் விடுகிறார். அந்த பேத்தி கொண்டுவந்து கொடுக்கிறது. அது கொண்டுவந்து கொடுத்தவுடன், அவர் கேட்கிறார். "ஏன் பாட்டியை உள்ளே உட்கார வைத்து விட்டாய்? பாட்டியையும் கூப்பிடு!" என்று கேட்கிறார்.

அப்போது அந்தக் குழந்தை அழுகிறது. "ஏன்?" என்று கேட்டுகிறபொழுது, "நான் வெளியே வரும்பொழுது, நான் கட்டிக்கொள்வதற்கு உள்ள கிழியாத சேலை ஒரு சேலைதான் எங்கள் வீட்டில் இருக்கிறது, நான் வெளியே போக வேண்டுமென்றால், அதைக் கட்டிக்கொண்டு தான் போகவேண்டும், என் பாட்டி வெளியே போக வேண்டுமென்றால் நான் உள்ளே போய் கிழிந்த சேலையை அல்லது பாவாடையைக் கட்டிக்கொள்வேன். அவர்கள் அந்தச் சேலையைக் கட்டிக்கொண்டு வெளியே போவார்கள்!" என்பதைப்போல ஒரு காட்சியை அமைத்து, அடுத்தபடியாக, ஜமீன் மாளிகைக்கு வந்தவுடன் அதிலே நடித்த கதாநாயகி பாத்திரத்தைத் தாங்கியவர் ஒரு அலமாரி முழுவதும் ஜரிகை சேலைகளாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது, புதிது புதிதாக, வெளியே போகவேண்டும் என்பதற்காக, நிகழ்ச்சிக்குப் போகவேண்டுமென்பதற்காக எதை 'செலக்ட்' செய்வது என்று தேடித் தேடி எடுத்துப்போட்டு, கடைசியிலே எதுவும் பிடிக்காமல், கடையிலே போய் ஒன்று புதிதாக வாங்கிக்கொண்டு வா என்கிறார்கள். அதைப்பார்த்து ஆத்திரம் வருகிறது. மாற்றுச் சேலை கட்டிக்கொள்வதற்கு, அங்கே வசதியில்லை ஏழை மக்களுக்கு. ஆனால், இருப்பது போதாது என்று புதிதாக வேண்டுமென்றாயே என்பதைப்போல் செய்து, அதையெல்லாம் எடுத்துக்கொடுப்பதைப்போல் ஒரு காட்சி. அந்தக் காட்சி என் உள்ளத்தில் பதிந்து இருந்தது, நீண்ட நாட்களாக! இன்று தேர்தலுக்காக அல்ல; அது முன்பே நான் சொன்னது!

இருபது ரூபாயாக பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நிர்ணயித்த உதவித் தொகையை 25 ரூபாயாக ஆக்கியது அந்த 5 ரூபாய் கொடுப்பதால், வாக்குகள் கிடைக்கும் என்பதற்காக அல்ல. அதுவும் கொஞ்சம் ஓரளவுக்காவது உதவிசெய்யும் என்ற நிலைமை உருவானால் நல்லது என்கிறது நோக்கம்தான். அந்தக் காட்சி மனதிலே பதிந்திருந்த நிலையில், 20 ரூபாய் ஊதியம் வாங்குகின்ற வயது முதிர்ந்தவர்கள், உதவி பெறுகிறவர்கள் முழுமையாக பணம் போட்டு எத்தனை சேலை, எத்தனை வேட்டிகள், ஓராண்டிற்கு வாங்க முடியும்? ஆகவே, இரண்டு வேட்டிகள், இரண்டு சேலைகள் அப்படிப்பட்டவர்களுக்கு, வேறு யாருக்கும் அல்ல, கொடுக்கிற முறையில், முதியோர்கள் உதவித்தொகையாகப் பெறுகிறார்கள்.

இந்த உத்தரவை நாங்கள் போடும்பொழுது, நாடாளுமன்றத் தேர்தலைப் பற்றிப் பிரச்சினை இல்லை. அப்பொழுது அதை மனதில் கொள்ள வேண்டும், எல்லோரும் அதை நினைவிலே வைத்துக் கொண்டால், அப்படி எதுவுமே இல்லை என்பதை புரிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்க, அதை நான் செய்ய வேண்டுமென்று சொன்னேனே தவிர, இது தேர்தல் 'ஸ்டண்ட்' என்று தயவு செய்து வீணாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டாம்!

நல்லதைச் செய்கின்றோம். அதை வாங்குகின்ற தாய்மார்கள் நடுங்குகின்ற கரங்களால், வயது முதிர்ச்சியால் வாங்குகின்றார்கள். கண் தெரியாத பெரியவர்கள், ஊனமுற்றவர்கள் – இவர்கள் வாங்குகின்றபொழுது, அவர்கள் கண்ணீர் விடுகின்ற நிலைமை அவர்கள் பரிதாபத்திற்குரிய நிலையிலே கையை நீட்டிப் பெறுகின்ற அந்தக் காட்சிகளை நாம் காணும் பொழுது, எவ்வளவு கல் நெஞ்சக்காரர்களாக இருந்தாலும், கண்ணீர்விடாமல் இருக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

ஒருவேளை இந்தத் தமிழகம் எனக்கு இத்தகைய வாய்ப்பைத் தராமல் இருந்திருந்தால். என் தாய் இன்று உயிரோடு இருந்தால், அந்த நிலைமையில்தான் இருந்திருப்பார்கள் என்று மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சினிமாத் துறையிலே எனக்கு வாய்ப்பு கிடைத்தது; புகழ் கிடைத்தது; மக்கள் ஆதரித்தார்கள்! வருமானம் கிடைத்து, ஏதோ வாழ முடிந்தது! அப்படியில்லாமல் நான், மூன்று வயது, மூன்றரை வயதில், தமிழகத்தில் இருக்கும்பொழுது எந்த நிலையில் இருந்தேனோ, அதேபோல் நிலையில்தான் என் குடும்பம், என் அண்ணன் என் தாயார் இருக்க வேண்டியிருந்திருக்கும் என்றால், இன்று நான் செய்ததை வேறு யாராவது செய்து, என் தாய் அதை வாங்கவேண்டிய வாய்ப்பைப் பெற்று இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இது விளம்பரத்திற்காகவோ, தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவோ அல்ல என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

அத்துடன், 'நாடோடி மன்னன்' படத்தில் நான் ஏதோ சொன்னேன், சினிமாவிலே சொன்னதைச் செய்கிறேன் என்று சொல்லி, அதைப் பேசினார், தனக்கே உரித்தான பாணியில் விரைவாகப் பேசுவதோடு, இடைச் செருகலைக் கொஞ்சம் வேகமாக உள்ளே தள்ளி, அதையும் சேர்த்து வைத்து வெளியிடுகின்ற சாமர்த்தியம் உள்ள நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் மறந்து விடக்கூடாது. திராவிட முன்னேற்ற கழகத்தில் அவர்கள் இதையும் பேசினார்கள். எங்கோ சொன்னேனாம், சினிமாவிலே சொன்னேன், அதைச் செய்கிறேன், அப்படி என்று.

ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்று தான் நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். ஏழு, எட்டு, பத்து ஆண்டுகளுக்கு முன்னால், நான் எங்கு இருந்தேன் என்பதைத் திரு. சுப்பு அவர்கள் மறந்துவிடக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தில்

இருந்தேன். அங்கு அண்ணாவின் கொள்கைகளை நான் ஏற்றுக் கொண்டு அண்ணாவின் தம்பியாக இருந்தேன் என்பதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள்; மறந்துவிடக் கூடாது.

நாடோடி மன்னன் படம் எடுத்தது 1958ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி வெளியிட்டேன். அந்தப் படத்தை வெளியிட்டபொழுது, அந்தப் படம் வெளிவருமா என்று சந்தேகப்பட்டவர்கள் உண்டு. காரணம், அரசியல் கொள்கைகளை அதிலே நான், அதிகமாகச் சேர்த்திருக்கிறேன் என்ற காரணத்திற்காக, நேரடியாக திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை என்று சொல்லவில்லையே தவிர, அந்தக் கொள்கைகளை எந்த அளவிற்குச் சொல்ல முடியுமோ அந்த அளவிற்குச் சொல்லியிருக்கிறேன்.

குடிசைகள் கூடாது; வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும், என்ற கொள்கையை, நான் அதிலே சொல்லியிருக்கிறேன்; படிக்கின்ற மாணவர்கள், படிக்கின்ற பொழுது, அதற்குரிய பொறுப்பை, அரசு ஏற்றுக் கொள்ள வெண்டும் என்பதை, நான் வெளியிட்டிருக்கிறேன்! படித்து முடிந்த பிறகு, அவர்களுக்கு வேலை கிடைக்க வழி செய்யும் பொறுப்பை, அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையென்றால், அவர்கள் பட்டினி கிடக்காமல் இருக்கின்ற நிலைமைக்கு அந்தப் பொறுப்பை, அரசு ஏற்க வேண்டுமென்கிற வகையிலேதான், நான் அந்தப் படத்தில், பல கொள்கைகளைச் சொல்லியிருக்கிறேன்!

'எஸ். ஐ. ஏ. ஏ., கிரவுண்டில்' நூறாவது நாள் விழா கொண்டாடப்பட்ட பொழுது, அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அந்தப் படத்தை பார்த்துவிட்டுப் பிறகு பேசும்பொழுது சொன்னார்கள். "இந்தப் படத்தை எடுக்கும்பொழுது என்னென்ன சொல்லப் போகிறோம், என்னென்ன எழுதப்போகிறாம் என்று என்னிடம் இராமச்சந்திரன் கலந்துகொள்ளவில்லை; ஆனால் படத்தைப் பார்த்த பிறகு நான் மகிழ்ச்சி கொண்டேன்!" இன்றைக்குச் சொல்கிறேன், அவர் சொன்ன குறிப்பைச் சொல்கிறேன். யாராவது வேண்டுமென்று கேட்டால், நாடாவில் பதிவுச் செய்யப்பட்டிருக்கிறது அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறேன்; இந்தக் கொள்கை முழுவதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை! இதை வெளியே சொல்லியிருக்கின்றார் என்பதைச் சொல்கின்றேன்!" அத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் இருந்த அந்த மேடையில் அமரர் அண்ணா அவர்கள், இவ்வாறு பேசினார்கள்!

நான் அங்கே இருந்தபொழுதும், இவற்றை வெளியே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இங்கே நான் இருந்தாலும், அந்த அண்ணாவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்! என் உணர்வில், நான் கொண்ட நம்பிக்கையில், அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் இதை நான் சொல்கிறேன். சாதாரண மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பொழுது, சினிமாவிலே நடித்த பொழுது சொன்ன பேச்சுக்கள், கருத்துக்கள், காட்சிகள், அவைகளை நான் வேண்டுமென்றே புகுத்தியது, என்னை வளர்த்துக் கொள்வதற்காக அல்ல; என் கொள்கையையும் சொல்லியிருக்கிறேன்.

இதே கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒரு இடத்திலே பேசும் பொழுது, எனக்கு நினைவு இருக்கிறது, எந்த நடிகனும் இப்படி ஒரு கையெழுத்தை ஒப்பந்தம் செய்து வாங்கிக் கொண்டதில்லை, நண்பர் எம்.ஜி.ஆர்., அப்பொழுது எனக்குப் 'புரட்சி நடிகர்' என்று பட்டம் சூட்டியிருந்தார், அதை சொல்லக்கூடியவர் 'புரட்சி நடிகர்' எம்.ஜி.ஆர். அவர்கள் ஒருவர்தான் செய்தார்கள். இந்த 'புரட்சி' என்று சொல்லி, இரண்டாவது பார்ட்டியாக என் கருத்துக்கு மாறுபடாமல் கதை, வசனம், பாடல்கள் அமைத்து, காட்சிகள் அமைத்து, படம் எடுத்து வெளியிடுவதாக முதல் பார்ட்டி ஒத்துக்கொள்கிறது என்று எழுதினால்தான் நான் கையெழுத்திட்டு, அந்தப் படத்திலே நடிப்பது வழக்கம் எனக் கொண்டிருந்தேன் என்பதை அவர்கள் அறிவார்கள், பேசியிருக்கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், ஒவ்வொரு கொள்கையை நான் சொல்ல வேண்டுமென்று விரும்பி, சொல்லிக் கொண்டு வந்தேன். அது அந்தப் படத்தில் மட்டுமல்ல, பல படங்களிலே, பல்வேறு காட்சிகளிலே, பல வகைகளில் சொல்லியிருக்கிறேன்.

நாடோடி மன்னனைப் பொறுத்த மட்டில், முழுப்பொறுப்பும் என்னைச் சார்ந்தது, அந்தக் கம்பெனியிலே நான் பங்குதாரராக இருந்தவன், இயக்கியவன் நான், இரட்டை வேடங்களில் நடித்தவன் நான். ஆகவே, அன்று சொன்னதை, இங்கே நிறைவேற்ற வேண்டுமென்கிற நிலைமையிலே, நான் செய்ய விரும்புகிறேன் என்றால், அது குறைக் கூறத்தக்க ஒன்றா? அல்லது, அங்கே சொன்னாயே, இப்பொழுது ஏன் செய்யவில்லையென்று கேட்கின்ற நிலைமையிலே நான் இருந்தால், குறைகூறத்தக்க ஒன்றா என்பதை, மாமன்ற உறுப்பினர்கள்தான் முடிவெடுத்துக்கொள்ள வேண்டும். அன்று சொன்னேன் முதல் காட்சியிலேயே, இப்பொழுது மேடையிலே கூடப் பேசிவிட்டு வந்தேன், போர்டிலே எழுதி எடுத்துக்கொண்டு, என் தலைமையிலே கூட்டம் வரும். அதிலே வேலை கொடு என்று போட்டிருக்கும். பலகையைத் திருப்பினால் சோறு போடு என்று போட்டிருக்கும். வேலை கொடு அல்லது சோறுபோடு என்பது அர்த்தம்? அந்த வகையிலே, அங்கே உரையாடல் கூட இருக்கின்றது. இதை நான் சொல்வதற்குக் காரணம், ஒரு அரசுக்கு இந்த நாட்டு மக்கள் பொறுத்த வரையில், முழுப் பொறுப்பு இருக்கிறது. தாய், தந்தையர், பெற்றோர் இருக்கலாம், ஆனால், வளர்ந்து காப்பாற்றப்பட வேண்டிய நிலையிலே, அவர்களுக்கு வாய்ப்பு தரவேண்டியது ஒரு அரசினுடைய கடமை, அதை முழுமையாகச் செய்யக்கூடிய சக்தி, இந்த அரசிற்கு இருக்கிறதா, நிதி இருக்கிறதா என்றால், அது வேறு பிரச்சினை. ஆனால் இருக்கிற அளவிற்கு, நாங்கள் செய்ய முற்படுகிறோம்.

'உணவுக்கு வேலைத் திட்டம்' என்றால், அது அவர்தானே சொன்னார் என்று சொல்வதையோ, அல்லது எல்லோருக்கும் வேலை வாய்ப்பு உறுதி என்ற திட்டத்தை நாங்கள் கொண்டு வருகிறோம் என்றால், அதை ஏட்டளவில் என்று சொல்வதையோ, தயவு செய்து கொஞ்சம் குறைத்துக்கொண்டு, நாங்கள் குழுக்களை அமைக்க இருக்கின்றோமே, அதிலே, இங்கேயிருக்கிற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பங்கு கொண்டு, இந்த அரசின் சார்பாக, நீங்களும் பங்கு கொண்டு,

அந்தப் பணியைச் செய்தீர்களென்றால், நாம் எல்லோரும் எண்ணுகின்ற, நாம் எல்லோரும் மதிக்கின்ற, அமரர் அண்ணாவினுடைய கொள்கை என்று வைத்துக் கொள்ளுங்கள்; அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது என்றால், அதைச் செய்வதிலே எல்லோரும் பங்கு இருந்தால், அதிலே நஷ்டம் இல்லை, எல்லோருக்கும் பெருமை வரட்டும், எல்லோரும் பங்கு கொள்ளுங்கள் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஆகவே, சினிமாவிலே சொன்னேன்; அதை விளம்பரப்படுத்துகிறேன்; அதைச் சொன்னேன்; இதைச் செய்கிறேன்! என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்றால் அர்த்தம் இல்லையோ ?.......

மாண்புமிகு சுப்பு அவர்கள் எனக்குப் பதில் சொல்வதாக இருந்தால், இன்னொருவரை சாட்சிக்கு அழைக்கிறார். அதுதான் கஷ்டமாக இருக்கிறது. நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன், 'நான் என்ன தவறு செய்தேன் ?' என்று சொல்வதை விட்டுவிட்டு, தவறில்லையென்றால், நன்றி. ஆகவே, அந்தக் கடமையைச் செய்ய முயலுகிறேன்; ஒத்தாசை தாருங்கள்; ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்! இன்னும் நிறைய மற்றதைப்பற்றி, சொல்லவேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். சொல்லி நேரத்தை வீணாக்காமல், ஒருவேளை, நான் சொல்ல வேண்டிய அவசியத்தைப் பேராசிரியர் அவர்கள் ஏற்படுத்துவார்களானால், நான் மற்றவற்றிற்கும் பதில் சொல்கிறேன் என்று சொல்லி, இந்தக், கண்டனத் தீர்மானத்தைப் பின் வாங்கிக் கொண்டு, விரைவிலே இந்த மன்றத்தின் வேலையை முடித்துத் தரவேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

08.11.1979 அன்று பிற்படுத்தப்பட்டோர் நலன் பற்றி ஆற்றிய உரை.



அமைச்சர்களின் ஆலோசனைகளோடு ஆக்கப் பணிகள்!

பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய அறிக்கையின் மீது நன்றி கூறுகின்ற தீர்மானத்தை அடிப்படையாக வைத்து, இங்கே இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளுடைய பிரதிநிதிகள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் கவனிக்க வேண்டியதும், அவர்கள் சொல்கின்ற குறைபாடுகளைத் திருத்த வேண்டிய நிலைமையிலே, இருக்கின்ற குற்றம் சாட்டப்படுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்ற நிலைமைகள் இவைகளை எல்லாம் கவனித்து, உண்மையிலே அவைகள் இருக்குமானால், அதைச் செய்து தீரவேண்டிய பொறுப்பிலே இருக்கின்றவர்கள்தான், இங்கே ஆளுகின்ற பதவியிலே இருக்கின்றோம் என்பதை, நாங்கள் மகிழ்ச்சியோடு தெரிவிக்கின்றோம்.

இந்த ஆளுநர் அறிக்கையின்மீது, முதலில், தங்களுடைய கட்சிகளின் சார்பாகக் கலந்து கொள்ளவில்லை; தங்களுடைய கண்டனத்தை வெளியிட விரும்பி வெளிநடப்புச் செய்து, தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்; தங்களுடைய உள்ளம் திறந்து, அவர்களுக்குக் கிடைத்த ஆதாரங்களை எல்லாம் எடுத்துக்காட்டி, எதையெல்லாம் வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதையெல்லாம் எடுத்துச் சொல்லி, விவாதத்திலே கலந்து கொண்டதற்காக, அமைச்சரவையின் சார்பாக, நான் நன்றி கூறிக்கொள்ளுகின்றேன்.

குற்றச்சாட்டுகள் குறை கூறுவது என்கின்ற வகையில், பல்வேறு பிரதிநிதிகள் இங்கே தொழிலாளர் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை இதைப் போன்று பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி, எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். ஒட்டுமொத்தமாக, அவைகளுக்கெல்லாம் தனித்தனியாகப் பதில் சொல்லி, நேரத்தை நீட்டிக் கொண்டு செல்ல விரும்பாமல், எதை, எதை நாங்கள் செய்தோம் என்பதைப்பற்றி கோடிட்டுக் காண்பித்திருக்கின்றோம், ஆளுநர் உரையில் என்பதையும் சொல்லி, எதை, எதைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோமோ, அவைகளை அவ்வப்போது வெளியிடுகின்றோம் என்பதையும் இங்கே வெளியிட்டிருக்கின்றோம் என்பதையும், நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குற்றச்சாட்டுகளை வெளியிடும்பொழுது, ஆத்திரம் மேலிட்டு சொல்லுகின்ற ஒரு சந்தர்ப்பம் ஏற்படலாம். அறிவாற்றலோடு புள்ளி விவரங்களோடு, ஆராய்ச்சிப் பக்குவத்தோடு வெளியிடுகின்ற திறமையும் இருக்கலாம். தாங்கள் சொல்கின்ற குற்றச்சாட்டுகளுக்கு ஏற்ப, தங்களிடம் இருக்கின்ற ஆதாரங்களை எடுத்து வைத்து, இந்த சூழ்நிலைகளில் இவைகளெல்லாம் நடத்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லும்போது அதற்கேற்ப, அவர்களுடைய திறமை வெளிப்படுகிறது என்றாலும் விவாதத்திலே திறமைக் காட்டுவதால் மட்டும் உண்மை அப்படியே வெளி வந்து

விடுகிறது என்று நம்ப வேண்டிய, அதை எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலை, சில சமயம் நமக்கு ஒத்துழைக்கக் கூடியதாக அமைவதில்லை என்பதை, இங்கே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்ய வேண்டுமென்பதை, எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். என்ன என்ன செய்திருக்கிறோம், என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கின்றார்கள். நாங்கள் செய்த நன்மைகளைப் பற்றிப் பேசியவர்களுக்கு, தாங்கள் நன்றி கூறுவதும், என்னென்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டார்களோ, அவர்களுக்கு நாங்கள் அதிலே அக்கறை காட்டுவோம் என்ற உத்தரவாதத்தைத் தருவது, எங்களுடைய கடமை என்பதை உணர்ந்து, இந்தக் கருத்தை வெளியிடுகின்றேன்.

கோரிக்கைள் வைப்பது, கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கின்ற நிலைமையில், ஏன் தாமதம் ஆகிறது? என்ற கேள்வியை எழுப்பி, பதில் பெற முயற்சிப்பதெல்லாம் மிக மிகத் தேவையான ஒன்று என்பதை, நான் மறுக்கத் தயாராக இல்லை! பல இலாக்காக்களை என் கையிலே வைத்துக் கொண்டு, அந்த இலாக்காக்களைப் பற்றிய பதில் பெற வேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு பதில் கிடைக்க முடியாமல், நான் வராமல் இருக்கிறேன் என்ற குற்றச்சாட்டை எப்பொழுதும் போல இன்றைய தினம், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை, ஏனென்றால் அந்தப் பிரச்சினைகள் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான், பேரவைச் செயலர் என்ற ஒருவரை இங்கே பதவி ஏற்கச் செய்து, நான் வராத நேரத்தில், அந்தப் பதிலை இங்கே தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய நிலைமைகள் இருந்தும், பயன்படவில்லை என்று கருதுவாரானால், அது போதாது என்று கருதுவாரானால் எதிர்காலத்தில் எந்த முறையைக் கடைபிடித்தால் திருப்தி ஏற்படுமோ, அதைக் கடைபிடிக்க இந்த அரசும் நானும் தயாராக இருக்கிறோம் என்பதை, இங்கே சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

பிரச்சினைகள் உருவாவதும், அதற்குப் பரிகாரம் தேட முயற்சிப்பதும், தனி மனிதனுக்கே உள்ள நிலைமை என்று ஆகும்போது, ஒரு அரசுக்கு அது ஏற்படாது என்று சொல்வதற்கில்லை என்பதை அனுபவப்பட்டவர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். சில திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று விரும்பி, அதைக் கொள்கையாகவும் ஏற்று, அதிலும் தன்னுடைய உயிர்க் கொள்கையாக ஏற்றுக் கொள்ளுகின்றவர்கள், அதை நிறைவேற்றவேண்டும்; நிறைவேற்றக் கூடிய தகுதியில் உட்கார வைக்கப்பட்டு, அந்த வாய்ப்பும் தரப்பட்டு, அந்த உணர்விலே நிறைவேற்ற வேண்டும்; ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையில், எப்படியாவது நிறைவேற்ற முன்னுக்கு வரும்போது, சிலர் கருத்து வேறுபாடுகள் கொண்டு தங்களுடைய எண்ணங்களை; தங்களுடைய கருத்துக்களை;

வெளியிடுவதும், வேண்டுமென்கிற கடமை உணர்வில் பற்று வைத்திருக்கின்ற அந்தப் பிடிப்பில், நாங்கள் முயற்சிக்கும்போது, அது சோதனையாக மாறி, எதிர்பார்த்ததற்கு மாறாக விளைவுகள் விபரீதமாகும்போது, அதைப் பற்றிச் சிந்தித்து, மாற்று நிலைமைகளை உருவாக்குவதற்கு முன்வருவது, ஜனநாயகத்தில் மிக மிகத் தேவையான ஒன்று என்பதை, எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள் என்பதில் எனக்கு ஐயம் இல்லை!

ஒரு தனி மனிதனாக நான் ஆட்சிக்கு வந்து, ஒரு கட்சியின் சார்பில், முதலமைச்சராக ஆகி இருந்தாலும் கூட, ஒரு கட்சி என்ற ரீதியிலே, ஆட்சிக்கு வந்தபிறகு, தனி மனிதர் ஆட்சி என்று இல்லாமல், எங்கள் கொள்கையை என் மூலமாக, அமைச்சரவை அல்லது எங்கள் கட்சி அதை நான் ஏற்றுக் கொண்டிருக்கிற இலட்சியம் அவைகள் எனக்குக் கட்டளையிட்டால், அல்லது ஒத்துழைத்தால், நான் அதை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பும்போது, தீவிரமாக முற்படுவது தவறு என்று கருதுவது அவரவர்களுடைய கருத்துக்கேற்ப, மாறுபட்ட நிலைமையில், எண்ணங்கள்; விளக்கங்கள் வெளிப்படுத்தப்படும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில், நான் இன்னமும் எவ்வளவு தீவிரமாக இருக்கிறேன் என்பதைப் பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்காது என்பதிலே எனக்கு ஐயம் இல்லை. நான் மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்துவிட்டேன் என்று யாரும் எண்ணவில்லை என்பதை நான் புரிந்து கொள்ளும்போது உண்மையிலேயே நான் மன ஆறுதல் அடைகின்றேன்.

இங்கே பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்பொழுது எச்சரித்ததை நான் மறக்கவில்லை. எச்சரிக்கப்பட்டேன் விபரீதம் விளையும் என்றார்கள். சட்டம் விபரீதத்தின் உச்ச கட்ட நிலைக்கு நிரபராதிகளைக் கூட இழுத்துச் சென்று விடும் என்ற கருத்துக்களையும், இங்கே எடுத்து வைத்தார்கள். ஆனால், எப்படியாவது அந்த மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாக நிறைவேற்றி, மக்களுக்கு நன்மை விளைவதற்கு என்ன என்ன செய்ய வேண்டுமென்று, என்னுடைய ஆசையின் விளைவாக, எங்கள் அமைச்சரவையின் ஒப்புதலோடு; எங்கள் கட்சியின் அனுமதியோடு; நாங்கள் நடவடிக்கை எடுக்க முற்பட்டபொழுது, அந்தச் சட்டம் வருவதற்கு ஒரு சில மாதங்கள் அல்ல, ஒன்றிரண்டு ஆண்டுகள் என்று கூடச் சொல்லலாம். அந்தக் காலகட்டத்தில் நான் பலமுறை மேடையிலே பேசும்பொழுது, சட்டம் கொண்டு வரப்படும்; கடுமையாக இருக்கும்! ஆகையால், ஒவ்வொருவரும் இந்தப் பழக்கத்திலிருந்து விடுவித்துக்கொள்வது மிக மிகத் தேவை! என்று நான் சொல்லி இருந்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்!

அந்த வகையில், நான் எடுத்துச் சொல்லிய பிறகு அது எந்தக் கட்சியைச் சேர்ந்தவரானாலும், அவர், அந்தத் தவறுகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்ற வகையில், அந்தச் சட்டத்தினால் வருகின்ற தண்டனைகளை; தொல்லைகளை

“நாங்கள் குற்றவாளி என்றால், தண்டனை ஏற்பதற்கு நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். முதலில் நான் பொது மேடையிலே எப்படிப் பேசியிருக்கிறேனோ, அதே கருத்தைத்தான் இன்னமும் சொல்லுகின்றேன்! நான் சொல்வதற்கு இங்கே வேறு ஏதோ உள்கருத்து இருப்பதாகக் கருதவேண்டாம்; என்னைப் பற்றி நான் சொல்கிறேன். உண்மையிலேயே, ஒரு கோடி ரூபாயிலே ஒரு பைசாவாவது நான் வாங்கியதாக அங்கே நிரூபிக்கப்படுமேயானால், தமிழகத்திலே என்னை யாருமே அனுமதிக்க வேண்டாம்; நானும் உயிரோடு இருக்க மாட்டேன்! என்பதை இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.”

அனுபவித்தாக வேண்டுமென்பதை நான் பலமுறை சொல்லியதற்குப் பிறகு அது அமுலாக்கப்படுவதற்கு இங்கே வழிவகை காணப்பட்டது. ஆனால், உண்மையிலேயே நான் அதை அமுலுக்குக் கொண்டு வந்த பிறகு, மக்களிடையே இருந்த எண்ணம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்ததோ, இந்தச் சட்டம் வந்துதான் தீர வேண்டும் அமுலாக்கப்பட வேண்டுமென்று எந்தத் தாய்மார்கள் வாழ்த்தினார்களோ, பாராட்டினார்களோ, அந்தத் தாய்மார்கள் கண்ணீர் விடக்கூடிய அளவில், விபரீதமாக நிலைமைகள் உருவாக்கப்பட்டதை எண்ணி கலங்கிய பிறகு வேதனைப்பட்ட பிறகு; அந்தத் துன்பங்களைத் தவிர்ப்பதற்கு, அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற வகையில் தான், சில திருத்தங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கின்றோமே தவிர, அடிப்படையாக மதுவிலக்கு என்கிற கொள்கையை விட்டு விடுவது என்பதோ, அதை ரத்து செய்வது என்பதோ, இந்த அரசின் கொள்கை அல்ல என்பதை, நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ரூ. 25 கொடுத்தால், யார் வேண்டுமென்றாலும் குடிப்பதற்கு, ‘பர்மிட்’ வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னால், குடிப்பதற்காக அல்ல என்பதை நான் தெளிவாகச் சொல்லி இருக்கின்றேன், பாதுகாப்புக்காக வைத்துக் கொள்ள வேண்டுமென்று! இதே அவையில் சொல்லப்பட்டது வீட்டிற்குள்ளே எல்லாம் படுத்திருப்பவர்களை வெளியே கூப்பிட்டு கைது செய்கின்றார்கள், படுத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வீட்டிலே நிம்மதியாகத் தூங்குகின்றவர்களுக்கு, அமைதி இருக்க வழியில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை, இன்றைய தினம் இந்தச் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். உண்மையிலேயே, கண்ணியமாக வாழ்கின்றவர்கள் கூட, நிம்மதியாக வாழ முடியவில்லை என்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு விட்டது என்பதை உணரும்போது, நான் சட்டம் கொண்டு வந்து விட்டேன்; அந்தக் கொள்கை எனக்குப் பிடித்திருக்கிறது! ஆகவே, யாரை எந்தத் துன்பத்திற்கு ஆளாக்கினாலும்

கவலையில்லை, அதைச் செய்தே தீர வேண்டுமென்கிற நிலைமையில், அந்த யதேச்சதிகார உணர்வில், நான் அப்படியே செயல்படுவதற்கு, நான் எடுத்துக் கொண்டிருக்கிற கொள்கையின் வழிமுறை எனக்கு உதவவில்லை என்பதும், அந்த உணர்வில் நான் சொன்னதெல்லாம் சரி, செய்ததெல்லாம் சரிதான் என்கிற நிலையிலே அதை நடத்துவிக்க, நான் முற்படவில்லை என்பதையும் எடுத்துக் காட்டுகின்ற வகையில் தான் இந்த திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன, சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை, இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் சில நாட்களுக்கு முன்பு பேசியபோது கூட, ஒரு இடத்தில் குறிப்பிட்டேன்; 25 ரூபாய் கொடுத்து 'பர்மிட்' வாங்கிக் கொள்ளுங்கள் என்பது, நீங்கள் குடியுங்கள் என்பதற்காக அல்ல, குடிக்காதவர்கள், குற்றம் செய்யாதவர்கள், எப்போது நம்மீது வீண்பழி சுமத்தப்படுமோ என்ற அச்சத்தில் இருந்து விடுதலை பெறுவதற்குப் பாதுகாப்புக்காகத் தரப்படுகிறது என்று சொன்னேன்! இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிடுவது....

ஒரு கத்தி வாங்கி வைத்துக் கொள்ளுங்கள், பாதுகாப்புக்கு என்றால், கொலை செய்வதற்கு வைத்துக் கொள்ளுங்கள் என்றா பொருள்படும்? அப்படி எடுத்துக் கொள்ளக் கூடாது! தம்மைப் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு கத்தி வேண்டுமென்று சொல்கிறார் என்றால், அதைச் கொல்வதற்காக என்று எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்! பணக்காரர்கள், வசதி மிக்கவர்கள், 'பெர்மிட்' வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால், வசதியற்ற ஏழைகள் 'பர்மிட்' இல்லை என்ற காரணத்தால், குடிக்காமல் இருந்தால் கூட, பழி சுமத்தப்படுகிறார்கள்; ஏதோ, தவறி குடித்துவிட்டாலும் தண்டனை கிடைக்கிறது என்பதால், இந்தத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

அத்துடன் இன்னொன்றையும் நான் சொல்லியாக வேண்டும். மேலவையில் நான் உறுப்பினராக இருந்த நேரத்தில், முதியவர் முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலனார் அவர்கள், இந்த அவையிலே முதலமைச்சராக இருந்தபோது தி.மு. கழக பிரதிநிதியாக நான் அங்கே உட்கார்ந்திருந்த நேரத்தில், ஒரு கருத்தை வெளியிட்டார்கள். சொன்னார்கள்! குடிக்காவிட்டால் அந்த மனிதன் செத்து விடுவான்! ஆகவேதான் மருந்துவர்கள் அறிவுரைப்படிக் குடித்து, அந்த உயிரைக்காப்பதற்காக, அந்த அனுமதி தரப்படுகிறது என்று சொன்னார்கள். அப்போது என்னுடைய உள்ளத்தில் இருந்த வேகத்தில் மட்டுமல்ல, உண்மையாக நான் இப்போது நம்பிக் கொண்டிருக்கின்றேனே இது போன்ற உணர்வில், நான் சொன்னபோது, ஒரு சிலர் அப்படி செத்துப் போகிறார்கள் என்றால், அதனால் இந்த நாட்டுக்கு என்ன நஷ்டம்; பரவாயில்லை; போகட்டும் அதற்காக பெர்மிட் கொடுக்க வேண்டியதில்லை! என்று சொன்னேன்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் நான் குறிப்பிட்டேன். பணக்காரர்களுக்குப் பாதுகாப்பு; ஏழைகளுக்குப் பாதுகாப்பு இல்லை! இது எப்படி அனுமதிக்கப்பட முடியும்? என்று நான் கேட்டிருக்கிறேன்; அது குறிப்பேட்டில் இருக்கிறது! அந்தக்

கொள்கையிலிருந்து நான் மாறிவிட்டதாக யாரும் நினைக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையில், நான் தெளிவுறச் சொல்கிறேன். எல்லோரும் ஒத்துழைத்திருந்தால், எல்லோரும் நிச்சயமாக இந்தத் தவறுகள் மக்களிடமிருந்து நீக்கப்பட்ட வேண்டுமென்று அவர்களுக்கு இது தேவையில்லை என்று நாம் ஒன்றுபட்டு செயல் பட்டிருந்தால் இந்த அளவுக்குத் திருத்தம் கொண்டு வந்திருக்க வேண்டிய அவசியம், இந்த அரசுக்கு இல்லை என்று கொஞ்சம் வருத்தத்தோடும், வேதனையோடும் சொல்ல விரும்புகிறேன்.

எங்கே பார்த்தாலும், பத்திரிகைகளிலே தயவு செய்து ஒவ்வொருவரும் மனதிலே பதிய வைத்துக் கொள்ளுங்கள் இந்த ஒரு வாரம் அல்லது 10 நாட்களை எடுத்துக் கொள்ளுங்கள். இன்றைக்கு சாராயம் காய்ச்சுபவர்களே தமிழ்நாட்டில் இப்போது இல்லையா ? சாராயம் விற்பனை செய்யப்படவில்லையா ? கள்ளச் சாராய நடமாட்டம் இல்லையா எந்தப் பத்திரிக்கையிலாவது இதுபற்றி அதிகமாக செய்திகள் வந்துக் கொண்டிருக்கிறதா ? ஏன் வரவில்லை ? இந்த ஒரு திருத்தம் வருகிறது என்று சொன்னதற்குப் பிறகு, எங்களை குற்றவாளிகள் ஆக்கவோ, கையாலாகாதவர்கள் என்று சொல்லவோ, ஆட்சியில் அதிகாரத்தை வைத்துக் கொண்டு நடைமுறைப்படுத்தவில்லை; செயல்படுத்த விரும்பவில்லை; என்று சொல்லவோ பத்திரிக்கைகளில் திரும்பத் திரும்ப எழுதப்பட்டது. எப்போது பார்த்தாலும், இங்கே சாராயம் காய்ச்சினார்கள், இங்கே கண்டுபிடிக்கப்பட்டது, இங்கே கைது செய்யப்பட்டார்கள். இப்படி எங்கெங்கே பார்த்தாலும் விளம்பரம் செய்யப்பட்டதால், இது நடைமுறைப் படுத்த முடியாத ஒன்று, நடைமுறையில் இந்த அரசால் செயல்படுத்த முடியாத ஒன்று என்று திரும்பத் திரும்ப பத்திரிக்கைகளில் வெளியிட்டார்கள். இந்த 10, 15 நாட்களாக, தயவு செய்து, ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்! பத்திரிக்கைகளில், எங்காவது காய்ச்சப்பட்டது என்று அல்லது கொண்டு போனார்கள் என்று அல்லது பிடிபட்டார்கள் என்று யாரையாவது கொண்டுபோய் சிறையில், அடைத்தார்கள் என்று பத்திரிக்கையில் வரவில்லை என்றாலும், நடைபெறாமல் இல்லை!

சாராயம் காய்ச்சுவதைப் பிடிக்கிறார்கள் இப்போது. அதிக அளவில் வருமானம் தரக்கூடிய சரக்குகளை எல்லாம் கைப்பற்றுகிறார்கள். 30, 40 பேர்கள் என்று சாராயம் காய்ச்சுபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். ஆகவே, இதெல்லாம் நடைபெறாமல் இல்லை. ஆனாலும் இதற்கெல்லாம் விளம்பரம் தரப்படுவதில்லை. அது பற்றி எழுதுவதும் இல்லை. அக்கறை காட்டுவதில்லை, இதிலிருந்து தமிழக அரசைப் பொறுத்த வரையில், நான் வேதனையோடு சொல்லிக் கொள்வேன். சிலவற்றை மறைத்து, உண்மையை மறைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை, மக்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும், ஊட்டக்கூடிய செய்திகளை வெளியிடுவது நாட்டுக்கு நல்லது! தவறுகளை பற்றி அதிகமாக விளக்கம் சொன்னால், “இப்படியும் செய்யலாம்!” என்று மற்றவர்கள் தெரிந்துகொள்ள கூடிய அளவுக்கு வந்துவிடும். ஆகவே அந்தச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து போடக் கூடாது. பெரிய தலைப்புகளில் குறிப்பிட்டு வெளியிட்டால், அதைப்பற்றி தெரியாதவர்கள் கூட, இப்படியும் நாம்

செய்து பழகிக்கொள்ள முடியும். சம்பாதித்துக்கொள்ள முடியும் என்ற அளவுக்கு அந்த ஆசைகளை அவை உருவாக்கிவிடும். நான் இதை வேதனையோடு சொல்கிறேன். சட்டசபையிலே பேசும்போதெல்லாம் பேசி இருக்கிறீர்கள். சாராயம் தண்ணீராகத் தெருவிலே ஓடுகிறது. என்ன செய்யப் போகிறீர்கள், உங்கள் சட்டத்தால் என்றுதான் கேட்கப்பட்டதே தவிர, இதைச் செய்யலாம், இப்படிச் செய்யலாம் நாம், எல்லோரும் சேர்ந்து இதற்கு ஒரு முடிவு கட்டலாம். இந்தப் பாதையைப் பின்பற்றலாம் உங்களுக்குத் தெரியவில்லை நாங்கள் சொல்கிறோம், ஆகவே இதைக் கடைப்பிடியுங்கள் என்று சொல்லவில்லை, ஆனால் என்ன சொன்னார்கள் ? சட்டம் கொண்டு வர வேண்டாம்; தீவிரமான அந்தத் திருத்தங்கள் வேண்டாம் என்று இதைத்தான் வற்புறுத்தினார்களே தவிர, வேறு வகையில் இப்படி இருப்பதைத் தடுப்பது எப்படி ? என்பது பற்றிய வழிமுறை சொல்லப்பட்டனவா என்றால், நிச்சயமாக இல்லை! அது நாட்டினுடைய நல்ல கொள்கைக்கு, நல்ல கொள்கையினை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புத் தருவதாக இல்லை என்பது மட்டுமல்ல; இருப்பதைப் பெரிதுபடுத்துவதற்குப் பயன்பட்டதே தவிர, அதை மற்றவர்கள் தெரிந்து கொண்டு, தெரியாதவர்கள் செய்து கொள்வதற்கு உபயோகப்பட்டதே தவிர, வேறு இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்!

இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதாவது நாங்கள் முன்னால் ஒரு அறிக்கையைச் சொல்வதும், குறிப்பாக, நான் அவ்வப்போது மாற்றிக் கொண்டு சொல்வதும், என்னுடைய வழக்கமாக இருக்கிறது என்பதை இங்கே, எதிர்க்கட்சித் தலைவர்கள் தெளிவுபட, பல ஆதாரங்களோடு எடுத்துக் சொன்னார்கள். அதிலே, முக்கியமாக நான் நடிப்பதைப்பற்றி, எங்கெங்கு என்னென்ன பேசினேன் என்பதைப் பற்றி எடுத்துச் சொல்லி, நான்கைந்து நாட்களுக்குள் எவ்வளவு மாற்றத்தோடு சொன்னேன் என்பதை எல்லாம் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் நடிப்பதற்கான அந்தப் படத்தின் தொடக்க விழா நடந்தது, அதில் நான் கலந்து கொண்டேன் என்பது சட்டமன்றத்திலே பேசப்பட்ட உண்மையாகும்! அது ஓராண்டு, ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னால்! அந்தத் தொடக்க விழாவோடு, அது நிறுத்தி வைக்கப்பட்டு, அதிலே எந்தவிதமான தொடர்பும் இல்லாமல், அந்தப் படப்பிடிப்பு தொடங்கப்படாமல் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டது. பாட்டுப்பதிவோடு! என்பதை இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைவரும் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தப்படத்தில், நான் நடித்து முடிக்காததால், ஒருவேளை என்மேல் உள்ள அக்கறையோ அல்லது என்னை வைத்துப்படம் எடுப்பவர்கள் மீது உள்ள அக்கறையோ அதாவது அவர்கள் பணம் பாழாகிவிடுகிறதே என்ற அளவில், இப்படி எல்லாம் பணத்தைப் பாழாக்கிவிட்டு இங்கே முதலமைச்சராக உட்கார்ந்து, அந்தப் படத் தயாரிப்பாளர் பணத்தை எல்லாம் செலவழித்து சும்மா இருக்கின்றாரே, இதற்கு ஒரு நீதி கிடையாதா என்ற அளவிலோ அல்லது பட வினியோகஸ்தர்கள் பணம் கொடுத்திருக்கிறார்களே அவர்கள் ஏன் சும்மா பேசாமல் இருக்கிறார்கள் என்று வெளியே கேள்வி கேட்க,

எழுத, பல நண்பர்கள் அக்கறை காட்டுகின்ற நிலைமையில், அவர்களுக்கெல்லாம் பதில் சொல்ல வேண்டியது அவசியம் என்ற நிலைமை உருவாகும்போது, அதிலே அந்தத் தொழிலிலே இருப்பவர்களே இப்படிக்கேள்வி கேட்கிற நேரத்தில், நான் நடித்து பாதியிலே நின்று இருக்கின்ற படத்தை, தீபாவளி அன்று வெளியிட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையோடு, என்னுடைய கருத்தை நான் அப்போது வெளியிட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்! ஆனால், பத்திரிகையில் எப்படி வந்து விட்டது என்பதை இங்கே நான் சொல்லியாக வேண்டும். 'டேப் ரிக்கார்டரிலே' பதிவு செய்திருந்தால் தயவு செய்து நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். படம் எடுக்கப் போகிறேன் என்று நான் சொன்னதற்கும், தீபாவளிக்கு வெளியிடப்படுவது என்பதற்கும் சம்பந்தமே இல்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதுவும், நான் கட்டுப்பாடோடு சொல்லி இருக்கிறேன். சட்டம் அனுமதித்தால் செய்வேன்; அனுமதிக்காவிட்டால் நான் வெளியே சென்று அந்தப்பணியை முடிப்பேன்; திரும்பி வருவேன்; வாய்ப்பிருந்தால், அல்லது வேண்டுமென்றால், என்று நான், வெளியிட்டிருக்கிறேன்!

இதற்கு ஒருவனுக்கு உரிமை இல்லை என்று சொன்னால், அது வேடிக்கை தான் என்றாலும், மறுநாள் மாற்றி சொல்கிறேன் என்று சொல்லும் போதுதான், அதற்குப் பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மறுநாள், அமைச்சர் வீரப்பன் அவர்களால் வெளியிடப்பட்ட கருத்துக்குக் காரணம், அப்படிப்பட்ட ஒரு குழப்பத்தை என்மீது அதிக அன்பு வைத்திருக்கிற எதிர்க் கட்சிக்காரர்கள், அல்லது பத்திரிகை நண்பர்கள் வெகுவாக முக்கியத்துவம் கொடுத்து அதை வெளியிடுவதற்கு, அவர் பொறுப்பேற்றுக் கொண்ட போது, எந்தெந்த நோக்கத்தோடு அதைச் சொன்னோம் என்பதை வெளியிடுவதற்காக அவர் மறுப்புக் கொடுத்தார்; விளக்கம் கொடுத்தார்! அந்த விளக்கத்தை வைத்துக் கொண்டு, அந்த கொள்கையிலிருந்து மாறுபட்டதாகவோ, நான் பணி செய்யப் போகிறேன் என்று சொன்னதாலோ, ஏதோ சொல்லிவிட்டு மாற்றிக் கொண்டு இருக்கிறேன் என்றோ, யாரும் தவறாகக் கருதிவிட வேண்டாம் என்பதை நான் இங்கே வெளியிடுகிறேன். யாருடைய மனதையும் நான் புண்படுத்தவோ அல்லது சவாலாக வைத்துக் கொண்டு பேசவில்லை என்பதை யாவரும் ஏற்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, அண்ணா அவர்களின் நினைவு நாளில் நான் சொன்னதற்கு ஒரு முக்கிய காரணம், சிலர் எழுதினார்கள், சிலர் பேசினார்கள், ஒரு முதலமைச்சர் நான் பதவியை விட்டு சினிமாவிற்குப் போகிறேன் என்று சொல்கிறார், மக்கள் கொடுத்த பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டுப் போகிறார். நிறைவேற்றுகிறோம் என்று சொன்னவைகளை நிறைவேற்றாமல் ஒதுங்கிப் போகிறார் என்ற குற்றச்சாட்டுகள் வெளியிடப்பட்ட பிறகு, நான் என்னுடைய எண்ணத்தை தீவிரப்படுத்திக் கொள்ளாமல், மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு, அந்த எண்ணத்தை அங்கே வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனெனில் மற்றவர்கள் அதைச்சொல்லாமல் இருந்திருந்தால் போய் நடிப்பதாக இருந்தால் நடித்து விட்டுப் போகட்டுமே அல்லது

அமைச்சர் பதவியை விட்டு போனால் போகட்டுமே, என்று பேசாமல் இருந்திருந்தால், நான் அடுத்தபடி அதை மறுத்து சொல்ல வேண்டிய கட்டாயம் இருக்காது. எண்ணத்தை விளக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டிருக்காது அதைப்போலத் தான் ஒவ்வொன்றிலும், என்னைப் பொறுத்தவரையில், முன்னுக்கு பின் முரணாகப் பேசி; எந்த லாபத்தையும் நான் அடைய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்பதை, எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஒரு தொழிலில் ஈடுபட்டு, அதுவும் அந்தத் தொழிலில் நம்பிக்கை உற்ற ஒருவருக்கு நான் வாக்குக்கொடுத்து, பாதி படத்தில் நிறுத்தி பல இலட்சக்கணக்கானரூபாய்களைச் செலவழிக்கிறவர்கள் நஷ்டம் அடையக் கூடாது என்பதற்காக, இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகும் அது தாமதித்து விட்டதே என்கிற நிலையில், அதை முடித்துக் கொடுப்பதற்கு சட்டம் அனுமதித்தால் செய்யலாம் என்று வெளியிட்டதற்கு ஒரு பக்கம், இவர் சினிமாவிலே நடிக்கப் போகிறார், சட்டப்படிக் கூடாது என்று ஒரு கட்சி சொல்கிறது, அந்தப்படம் வெளிவந்தால், இவர் நடித்தால் மறியல் செயவோம், தர்ணா செய்வோம் என்கிறார்கள். இன்னோரு பக்கம் சொல்கிறார்கள், ''இலட்சக்கணக்கான ரூபாய் நாசமாகிவிட்டதே, அதற்கு ஏன் இவர் இப்படிச் செய்கிறார், நடவடிக்கை எடுக்கக் கூடாதா?'' என்று அந்தப் பக்கம் கேள்வி. இன்னொரு புறத்திலே பொறுப்பை தட்டிக் கழித்து விட்டு ஓடுகிறார். பொறுப்பை ஏற்றுக் கொண்டு அதை செயலாற்றாமல் போகிறார் என்று குற்றச்சாட்டு. இவைகளையெல்லாம் மற்றவர்கள் உருவாக்கும் போதுதான், நான் என்ன நினைக்கிறேனோ, அதுதான் சரி என்று பிடிவாதம் இல்லாமல், நாட்டுக்கு ஏற்ப, உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்கிற வகையில், என்னுடைய கருத்து தவறாக இருந்தாலும், சரியாக இருந்தாலும், அதை மாற்றிக் கொண்டு, நான் என்னுடைய உயிர்மூச்சாக கொண்டுள்ள சில கருத்துக்களையும், எண்ணங்களையும், கொள்கைகளையும் கொஞ்சம் தள்ளி வைத்து, தமிழகத்திற்கு என்னுடைய கடைமையை முழு அமைச்சரவையின் மொத்த அனுமதி பெற்றுத்தான் செய்கிறேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பட்ஜெட் செஷன் கூட இருக்கிறது, அவை நீடித்தால் என்று சொன்னார்கள், அது நியாயமான வாதம். நீடித்தால் என்று அவர் சொல்லும்போது, நீடிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்பதிலே எனக்கு நம்பிக்கை பிறக்கிறது. ஆனால், அவர் நீடிக்கக்கூடாது என்று விரும்பினால், அதையும் எனக்குப் புரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்திருக்கிறது என்கிற வகையில், நான் சொல்ல விரும்புகிறேன், நானும் சொல்கிறேன் அவை நீடித்தால், அந்த பட்ஜெட் செஷன் வரும்போது என்ன சொல்ல இருக்கிறது என்று கேட்டதற்கு, நான் சொல்வேன், மறியல் நடக்கிறது, போராட்டம் நடக்கிறது, போராட்டம் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். இப்படி ஒவ்வொரு தரப்பினரும், ஒவ்வொரு பிரிவினரும் சொல்லும்போது எந்தெந்த நேரத்தில் தான் அதைச் சொல்லவேண்டுமோ அதைச்சொல்வது கடமை என்ற வகையில், தான் அதை சொல்கிறேனே தவிர, அவசர அவசரமாக சொல்லிவிட்டுப்போவது என்றால், இன்னமும் பலவற்றைச் சொல்லி விட்டு நான் பேசாமல் போய்விடலாம்.

நாங்களே கூட சொல்லலாம். இப்பொழுது சொன்னது போல, நான் முன்பு சொன்னது போல, ஏன் ராஜினாமா செய்யக்கூடாது என்று சொன்னது போல, நாங்களே போய் ராஜினாமா செய்துவிட்டு, சட்டசபையைக் கலைத்து விடுகிறோம் என்று சொல்லி விட்டு, அதற்கு முன்பாக, நடத்த முடிகிறதோ இல்லையோ, என்னென்ன சொல்ல வேண்டுமோ அவைகளையெல்லாம் சொல்லிவிட்டு, இவைகளையெல்லாம் நாங்கள் செய்திருப்போம், எங்களை அங்கே உட்கார விடவில்லை. ஆகவே, நாங்கள் வெளி வந்திருக்கிறோம், வாக்குத் தாருங்கள் என்று நாங்கள் கேட்க முடியும். அந்த வகையில், நாங்கள் காரியத்தை ஆற்றுவோம் என்று சொல்ல முடியும். ஆனால், அப்படி செய்ய நாங்கள் விரும்பவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே தொழிலாளர்கள் சம்பந்தமாக பேசியவர்களுக்கெல்லாம் நான் ஒரு கருத்தை வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு நிச்சயமாக தொழிலாளர்களுக்காக சில சட்டங்களை உருவாக்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பு தரவும் தீர்மானித்திருக்கிறது என்பதையும், அதற்காக அனைத்து கட்சித் தலைவர்களையும், இங்கே சட்டமன்றத்தில் உள்ளவர்களையும் வெளியே இருக்கிறவர்களையும் அழைத்து, அவர்களோடு பேசி, பட்ஜெட் செஷனிலேயே அந்த சட்டத்தைக் கொண்டு வர இருக்கிறோம் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதே போல் படித்துப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வேலைவாய்ப்பு அலுவலகங்களில் வேலைக்காக பதிவு செய்துள்ள பட்டதாரிகள் 1979 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை 94,498 பேர்கள் இருக்கிறார்கள், இவர்களுக்கு இந்த தமிழக அரசு ரூ.50 வீதம் மாத உதவித் தொகை கொடுக்கும் என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எவ்வளவு கோடி ரூபாய் என்று தயவுசெய்து கணக்கு பார்க்காதீர்கள். ஆனால், எவ்வளவு கோடியாக இருந்தாலும், இதைச் செய்வதற்கு இந்த அரசு முன் இருந்தாலும் இதைச் செய்வதற்கு இந்த அரசு முன் வருகிறது என்பதை நான் இங்கே குறிப்பிடுவதன் மூலம், எங்களால் என்னென்ன செய்ய முடியுமோ, இந்த அரசால் என்னென்ன செய்யமுடியுமோ, அதைச் செய்யுங்கள் என்று சொன்னார்கள், அதை நாங்கள் செய்வதற்குத் துணிந்து முன்வருகிறோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் எவ்வளவு திறமைசாலி என்பது எங்களுக்குத் தெரியும். ஏனென்றால், அவர் ஒன்று சொல்லி அதற்கு முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் விடமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும். அதில் இன்னொரு கேள்வியைத் தொக்கி நிற்க வைத்து அதற்குப் பதில் எப்போது வரும் என்று கேட்பதில், மிக சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய திறமை அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். இந்த வேலைக்கு உணவுக்கு திட்டம் என்பதும், வேலை வாய்ப்பு உறுதி திட்டம் என்பதும், உடல் உழைப்பால் உழைத்து வாழ்கிற கிராமப்புற மக்களுக்கு தனியாக திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதில் தவறுகள் இருப்பதால், அந்த

அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டிருக்கிறோம். ஆகவே பட்டப்படிப்பு என்று சொல்லும்போது அதில் பதிவு செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு என்ற வகையில் இந்தக் கருத்தை வெளியிட்டேன். அதற்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவாகும் என்று எண்ணிப்பார்த்து, அதை எப்படிச் சரிசெய்வது என்பதையும் நினைத்து சீர்தூக்கிப் பார்த்துத்தான் சொல்லியிருக்கிறேன். இந்த அரசுக்கு வருமானம் கிடைக்கும் என்ற நிலை உருவாகுமேயானால், ஏதாவது ஒரு வகையில், புது வரி போட்டாலும் பரவாயில்லை, யாருக்காவது; அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் ஒத்துக்கொண்டு ஒத்துழைத்தால்; யோசனையும் சொன்னால்; அப்படிப்பட்ட நிலை வருமானால்; அதையும் கொஞ்சம் விரிவாக்குவதில் எங்களுக்கு ஒன்றும் கஷ்டமில்லை.

விரிவாக சட்டம் வெளியிடும்போது விளக்கம் கிடைக்கும். இதேபோல் பல்வேறு வகைகளில் இன்று நாங்கள் சொல்கிறோம் என்றால், சொல்லச் செய்கிறீர்கள், சொல்கிறோம். வெளியே இருந்து சொல்ல வைக்கிறார்கள், நாங்கள் சொல்ல முற்படுகிறோம். அதையும் முழுமையாகச் செய்ய முடியாவிட்டாலும், ஓரளவிற்காவது நாங்கள் செய்ய முற்படுகிறோம் என்றால், நீங்கள் திருப்தியடைவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். சில குற்றச்சாட்டுகள் வீட்டுவசதி வாரியத்தைப் பற்றி எதிர்கட்சித் தலைவர், கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உடனடியாக அதுபற்றிக் கவனிக்கப்படும் என்பதும், யாராக இருந்தாலும் இந்த முடிவு ஏன் இடப்பட்டது, எப்படி இடப்பட்டது யார் பொறுப்பு, என்பதைப் பற்றி, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று இங்கே சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

அதேபோல் தஞ்சைப் பகுதியிலே நடக்கின்ற நிலையைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குறிப்பை எழுதி, உடனடியாகத் தொலைபேசியிலே பதில் தரவேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறேன். அதிகாரிகள் முயற்சித்துக் கொண்டிருப்பார்கள்; நடவடிக்கைகள் கண்டிப்பாக எடுக்கப்படும்; நம்புங்கள். அதேபோல், ‘பல குறைகளை எடுத்துக் காட்டும்போது, உதவி செய்கின்ற நிலையில், நீங்கள் எங்களோடு ஒத்துழைக்கும்போது, நாங்கள் உங்களை மதிக்கிறோம் என்பது மட்டுமல்ல, நன்றி காட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலும் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அதிகாரிகள் தவறு செய்தால், அதற்கு நாங்கள் பொறுப்பேற்க வேண்டியது எங்கள் கடமை. அதைப் போல், அதை நிவர்த்தித்துத் தருவதும்; தீர்த்து வைப்பதும். எங்கள் பொறுப்பாகும் என்பதை நாங்கள் நிச்சயமாக மறந்துவிடவில்லை!

அதேபோல், இங்கு நீலகண்டன் அவர்களைப் பற்றிச் சொன்னார்கள். என்னைவிட இங்கே உட்கார்ந்திருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இந்த அரசினுடைய ஸ்டூடியோவைப் பற்றி மிக நன்கு தெரியும் என்பதை அவர்கள் ஒத்துக் கொள்வர்கள், நான் அதைச் சொல்லிக் கொள்வதிலே தவறில்லை. காரணம், அதிக ஆண்டுகள் அவர் முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு

அதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு அதிகம் இருந்திருக்கிறது, சிவதாணுப் பிள்ளை என்பவர் ஓய்வு பெறும் போது, பெற்றுவந்த சம்பளம் ரூ.1,710, அகவிலைப்படி போன்றவைகள் ரூ.420 ஆகமொத்தம் ரூ.2,130. நீலகண்டன் பெறுவது ரூ.2,000. அலுவலக வேலைக்கு கார், தொலைபேசி போன்றவை முன்னாள் முதல்வருக்கும் இருந்தது. நியமன வேலைசெய்யும் விதிகளின் படியும், சட்டப்படியும் பார்த்து இதைச் செய்திருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும்! ஏன், பதவியை அப்படியே வைத்துவிட்டுச் சென்றீர்கள் என்றால், நாங்கள் சில திருத்தங்களை, இன்னும் கொஞ்சம் சீராக, அனுபவப்பட்டவர்களைக் கொண்டு, செயல்படுத்த வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அந்தவகையில், கலைஞர் அவர்களுக்கு நேரமிருந்தால், ஒருமுறை அந்த ஸ்டுடியோவிற்குச் சென்று, முன்னால் எப்படி இருந்தது, இப்போது எப்படி நடைபெறுகிறது என்பதை, அவர்கள், அரை மணி நேரம் சுற்றிப் பார்த்து கவனித்தால் நன்கு தெரியும். நீலகண்டன் அவர்கள் எந்த அளவுக்கு அங்கு ஒழுங்குமுறையை முறைப்படுத்தி இருக்கிறார்கள்; சிறப்பாக செயல்பட நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள், என்பதையெல்லாம் சரிவர அவரால் புரிந்துகொள்ள முடியும் என்பதை நான் அவர்களுக்கு வேண்டுகோளாக விடுக்கிறேன். அதற்குப் பிறகும் வந்து, அவர் இது சரியில்லை என்று சொல்வார்களானால், அதைப் பற்றி பரிசீலிக்கவும் இந்த அரசு தயங்காது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீலகண்டன் அவர்கள் திரைப்பட பிரிவு ‘பிலிம்ஸ் டிவிஷன்’ வேலையும் பார்க்கிறார்கள். அந்தப் பணியும் சேர்த்து அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால்தான் அதற்கு ‘பிரிசிடெண்ட்’ என்று மாற்றப்பட்டது. இதை நான் சொல்வதில் உண்மை இருக்கும் என்று, அனுபவப்பட்ட எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் உணரமுடியும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

‘கப்பல் பேர ஊழல்’ வழக்கு சம்பந்தமாகக் கூறினார்கள். சரண் சிங் அமைச்சரவையில், எங்கள் நண்பர்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அங்கேயிருந்து திரும்பி வரச்சொல்லி, பதவிகளை ராஜினாமா செய்துவிட்ட பிறகு, இங்கிருந்து கடிதம் எழுதப்பட்டது. அதற்குப் பிறகு, பிரதம அமைச்சர் என்ற ரீதியிலே, அவர் அங்கிருந்து முடியாது என்று உச்ச நீதிமன்ற பிரதம நீதிபதி சொல்லிவிட்டார் என்று எழுதிய பிறகு, என்னால் எதையும் செய்ய முடியாது என்கிற நிலையை, நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றும் இருக்கிறது. இங்கே சொன்னதற்கு நான் அந்தக் கடமையை ஏற்றுக்கொண்டு செய்தேன். பதில் வந்ததைப் பத்திரிக்கைகளிலே படித்திருப்பீர்கள். ஆனால், அதே நேரத்தில் வெளியிலே எங்களைப் பற்றி, இந்த விவகாரத்தைப் பற்றிப் பேசியதற்காக நான் வழக்கு தொடுத்திருக்கிறேன், அரசின் சார்பாக என்பதையும் இங்கே நான் குறிப்பிடும்போது, அதிலேயே உண்மை வெளிவந்து விடும்; நாங்கள் வாங்கினோமா, இல்லையா என்பதெல்லாம், அதிலே அவர்கள் நிரூபித்துவிட முடியும்; ஆதாரங்களையெல்லாம் அங்கே சொல்லிவிட்டால், அவை வெளிப்பட்டுவிடும்,

நாங்கள் குற்றவாளி என்றால், தண்டனை ஏற்பதற்கு நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். முதலில் நான் பொது மேடையிலே எப்படிப் பேசியிருக்கிறேனோ, அதே கருத்தைத்தான் இன்னமும் சொல்லுகின்றேன். நான் சொல்வதற்கு இங்கே வேறு ஏதோ உள்கருத்து இருப்பதாகக் கருதவேண்டாம். என்னைப் பற்றி நான் சொல்கிறேன். உண்மையிலேயே ஒரு கோடி ரூபாயிலே, ஒரு பைசாவாவது நான் வாங்கியதாக அங்கே நிரூபிக்கப்படுமேயானால், தமிழகத்திலே என்னை யாருமே அனுமதிக்க வேண்டாம்; நானும் உயிரோடு இருக்க மாட்டேன்! என்பதை, இங்கே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். தயவுசெய்து தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பத்திரிக்கை நண்பர்கள் என்று பத்திரிக்கைகளிலே வெளியிட வேண்டாம் என்று நீங்கள் சொல்வீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அந்த வழக்கில் உண்மை வெளிவரும்போது நிச்சயமாக, என் மீது வழக்குப்போடலாம். அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டால், இன்னொருவர் சொல்லாமலே நானே ராஜினாமா செய்து; நானே வெளியே வந்து; நான் குற்றமற்றவன் என்பதை, நிரூபிக்க முயலுவேன்! இல்லாவிட்டால், நான் முன்பு சொன்னதுதான் நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்க் கட்சித்தலைவர் சில படங்களைத் தந்திருக்கிறார்கள். கண்டிப்பாக அந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை, எடுக்கப்படும் என்று தெரிவிப்பதோடு, எம்.எல்.ஏ. வாக இருந்தாலும் அவர் மீதும் நடவக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். கவர்னர் உரையின் விவாதத்தில் கலந்து கொண்டவர்கள் அவ்வளவு பேருக்கும் பதில், சொல்ல முடியவில்லை; நேரம் இல்லை என்பது மட்டுமல்ல; உடல் நலம் இல்லையென்பதும் காரணம் என்பதை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ‘பட்ஜெட் செஷனில்’ நிறையப் பேச வாய்ப்பிருக்கிறது. இன்னும் என்னென்ன செய்ய வெண்டுமென்று கருதுகிறீர்களோ அவற்றைச் சொன்னால், நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை இந்த அரசு ஆராயும் என்று சொல்லி, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

13.02.1980 அன்று மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரின் பணி சிறக்கத் துணை நிற்போம்!

வணக்கத்திற்குரிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எந்தக் கட்சியின் சார்பாக இதுவரை பணியாற்றி இருந்தாலும், அதைப்பற்றி யாரும் சிந்திக்காத வகையிலும், அதைப்பற்றி எந்தக் கருத்துப்பாகுபாடு இல்லாமலும், ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது உங்களுடைய பெருமைக்கும் நல்லெண்ணத்திற்கும் ஒரு சான்றாகும் என்பதை வெளியிட்ட அனைத்துக் கட்சி தலைவர்களது கருத்தோடு, என்னுடைய கருத்தையும் நான் இணைத்துக் கொள்கிறேன்.

எப்போதும் சிறுபான்மையினர், நலிந்தவர்கள், இப்படிப்பட்டவர்களுக்கு விசேஷச் சலுகை காண்பிப்பது என்பது, சமுதாயத்திலே நாம் ஏற்றுக்கொண்டுள்ள மாபெரும் பொறுப்பாகும். அதுபோல இங்கேகூட, அப்படிப்பட்ட பணியைச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், உங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். துணைத் தலைவராக பாண்டியன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதும், அத்தகைய அவசியமான சூழ்நிலை இருக்கிறது என்பதையும் நாங்கள் உணர்கிறோம்.

இங்கே பேசிய மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் ‘சவலைக் குழந்தை’ என்று சொன்னார்கள். நான் திரும்பத் திரும்பப் பார்த்தேன். ஒருவர்கூட சவலைக் குழந்தையாகத் தெரியவில்லை. திடகாத்திரமும், அறிவுத் திறனும், ஆற்றலும் பெற்றவர்களாக பலரும் இங்கே இருக்கிறார்கள் என்பதைக் காணும்போது, நான் ஒரு வேண்டுகோளை இந்த அவையிலே வைக்கலாம் என்ற எண்ணத்தோடு ஒரு கருத்தை வெளியிட விரும்புகிறேன்.

பெரும்பான்மையினர், சிறுபான்மையினரை அடக்கி ஆள்கிறார்கள் என்று சொல்வது அல்லது வாய்ப்பைப் பெற்று விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை யாராவது சாதாரணமாக இயற்கையாகச் சொல்வதுதான். ஆனால் இந்தச் சட்டமன்றத்திலே முதலமைச்சராக இருக்கிற நான், ஆளும் கட்சியிலே ஒரு பொறுப்பை; மிகப்பெரிய பொறுப்பு என்ற அளவிலே சொல்லலாம்; அந்தப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற நான் கேட்டுக் கொள்வது, தயவுசெய்து பெரும்பான்மையினராக இருக்கின்றவர்களுடைய உரிமையை நீங்கள் காத்துக் தரவேண்டும் என்பதுதான்!

ஏனென்றால் சலுகை, சிறுபான்மை ஆயிற்றே என்ற அனுதாபத்தின் காரணமாக, சிறுபான்மைக்கு அதிகச் சலுகை கொடுத்து பெரும்பான்மை என்ற ஒரே காரணத்திற்காக, அவர்களுடைய எண்ணத்தை வெளியிடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் செய்யமாட்டீர்கள் என்று நம்புகிறேன். சிறுபான்மையினருக்கு எந்த அளவுக்கு நீங்கள் வாய்ப்புக் கொடுக்கிறீர்களோ அதே அளவு நிச்சயமாக, பெரும்பான்மையினருக்கும் கொடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

“புகழ் உங்களுக்கு சொந்தமாக இருக்கட்டும், நீதி உங்களுக்கு சொந்தமாக இருக்கட்டும், பண்பு உங்களுக்கு சொந்தமாக இருக்கட்டும், எல்லோருடைய அன்பையும் பெறுவது உங்கள் தகுதியாக இருக்கட்டும் என்று வாழ்த்தி உங்களுடைய புகழ் பெருகும்போது இந்த சட்டமன்றத்தில் இருக்கிற எங்களுடைய தகுதி உயர்வடைகிறது.”

உங்களைப் பொறுத்தவரை நான் ஒன்றை மன நிறைவோடு சொல்ல விரும்புகிறேன். எந்த ஒரு தனி மனிதரும், எந்தக் கட்சியினரும் உங்களிடம் எத்தகைய மிகப் பெரிய கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும், அந்தக் கருத்து மாறுபாட்டிலேதான் விரிசல் அல்லது இடைவெளி இருக்குமே தவிர, உள்ளத்திலே இல்லாத வகையில், நீங்கள் ஒவ்வொருவரிடமும் பழகியிருக்கிறீர்கள் அதிலே வெற்றி பெற்றிருக்கிறீர்கள்.

ஆகவே, உங்களுடைய தலைமையில் இந்தப் பேரவை அறிவாற்றல் மிக்க கருத்துக்களை வெளியிடுவதிலும், நாட்டு மக்களுக்குப் பயன்தரத்தக்க வகையிலும், ஆளும் கட்சியினருக்கு உதவி செய்கிற வகையிலும், எதிரிலே இருக்கிறவர்களுக்கு உதவி செய்கின்ற வகையிலும் செயல்படும் என்று நம்புகிறேன். நான் எதிர்க்கட்சி என்று கூட சொல்லவில்லை அவர்கள் உங்களுடன் ஒத்துழைப்பார்கள் என்றும், அதேபோல ஆளும் கட்சியைச் சார்ந்த நாங்கள் உங்களுக்கு ஒரு சுமையாக இருக்கமாட்டோம் என்பது மட்டுமல்லாமல், உங்களுடைய பணியைச் செவ்வனே செய்வதற்கு உறுதுணையாக இருப்போம் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நாட்டிலே அமைதி ஏற்படுத்த வேண்டும், நல்லவை நடக்க வேண்டுமென்பதற்காக இங்கே கொஞ்சம் சூடான விவாதம் அல்லது அமைதியின்மை ஏற்படலாம். ஆனால், அதை நீங்கள் உங்களுடைய தனித் திறமையினால், மிகச் சாதாரணமான ஒரு செயலாக; நிகழ்ச்சியாக; மாற்றி, நாட்டு மக்களிடையிலே அமைதியும், நல்ல சூழ்நிலையும் உருவாவதற்கு ஏற்ப, செயல்படுவீர்கள். இந்த மன்றத்திற்கு இருக்கும் மாபெரும் பெயரையும், புகழையும் நிலைநிறுத்துவீர்கள் என்பதிலே சிறிதும் சந்தேகம் இல்லை.

பேச வேண்டியவர்கள், கருத்துக்களைச் சொல்ல வேண்டியவர்கள் அவரவர்கள் எண்ணிய கருத்துகளைச் சொல்வதற்கு, உங்கள் தலைமையில், நிச்சயமாக வாய்ப்புக் கிடைக்கும் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை. அந்தக் கருத்துக்களைச் சொல்ல வைக்கின்ற முறையில், தாங்கள் சாதுரியமாகவும், சாமார்த்தியமாகவும் செயல்பட உங்களுக்கே இயல்பாக இருக்கிற சிரித்துக் கொண்டே பழகுகின்ற அந்தப் பண்பும், யாரும் வருத்தப்படக் கூடிய அளவுக்குச் சொற்களை வெளியிடாத உங்களுடைய பண்பும், இந்த அவைக்கு இதுவரையில் இல்லாத அளவுக்கு நல்ல பெயரை, மற்றவர்கள் போற்றி பாராட்ட வேண்டிய அளவிற்கு பெருமையை, அது

போலவே வேறு பல மாநிலங்களிலுள்ள சட்டமன்றங்கள் இந்தச் சட்டமன்றத்தை ஒரு முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு, நீங்கள் பெருமையைச் சேர்த்துத் தருவீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த நம்பிக்கையை ஆளும் கட்சியின் சார்பாகவும், முதலமைச்சர் என்ற முறையிலே பொறுப்புணர்வோடும் உங்களுக்கும், மாண்புமிகு துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பி. எச். பாண்டியன் அவர்களுக்கும் தெரிவித்து மனமார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

துணைத் தலைவர் திரு. பாண்டியன் அவர்கள் மிகத் திறமையாளர் என்பதும், வழக்கு மன்றத்தில் எப்படி அவர் வழக்கை நடத்துவார் என்பதும், எப்படி எதிரிலே இருக்கிற வழக்கறிஞரையே கூட தனது நண்பராக ஏற்று, தன்னுடைய வழக்குக்கு அவரைப் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு சாதுரியமும் திறமையும் உள்ளவர் என்பதும் எனக்கு நன்கு தெரியும். அப்படிப்பட்ட திறமை வாய்ந்த ஒருவர் இங்கே துணைத் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, எல்லோரையும் அரவணைத்துச்செல்வதற்கு வேறுபட்ட கருத்தில் இருந்தாலும், உள்ளத்தில் வேறுபாடு ஏற்படாதவாறு உறுதியாகச் செயல்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி, உங்கள் இருவரையும் பாராட்டக் கிடைத்த வாய்ப்பை மிகப் பெரிய வாய்ப்பாகக் கருதுகிறேன். புகழ் உங்களுக்கு சொந்தமாக இருக்கட்டும், நீதி உங்களுக்குச் சொந்தமாக இருக்கட்டும், பண்பு உங்களுக்கு சொந்தமாக இருக்கட்டும், எல்லோருடைய அன்பையும் பெறுவது உங்கள் தகுதியாக இருக்கட்டும் என்று வாழ்த்தி, உங்களுடைய புகழ் பெருகும்போது இந்த சட்டமன்றத்தில் இருக்கிற எங்களுடைய தகுதி உயர்வடைகிறது என்பதையும் சொல்லி, மனதார, உளமார, உங்களை வாழ்த்தி அமர்கிறேன்.

21.06.1980 அன்று, புதிய சட்டமன்ற தலைவர் மற்றும்
துணைத்தலைவர் திரு. பாண்டியன் அவர்களை பாராட்டி ஆற்றிய உரை.

விழிப்போடுள்ள மக்களுக்குத் துடிப்போடு செயலாற்றும் அரசு!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி கூறும் வகையில் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது விவாதத்திலே கலந்து கொண்டு, தங்கள் கட்சியினுடைய கொள்கையை, கருத்தின் மூலமாக எடுத்துச் சொன்னவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆளுநர் உரை எதை அடிப்படையாகக் கொண்டு, இந்த அவையிலே கருத்தை வெளியிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ, அதில் என்னென்ன விடப்பட்டிருக்கிறது என்பதை எல்லாம், எதை எதை எல்லாம் மாமன்ற உறுப்பினர்கள், எதிர்பார்த்தார்களோ அது இல்லை என்பதை எல்லாம் மிகத் தெளிவாகச் சொல்லிய மாமன்றத்தில் நண்பர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நான் உண்மையிலேயே நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு கட்சித் தேர்தலுக்கு நிற்கும்போது, தங்களுடைய கொள்கையை தேர்தல் அறிக்கை என்ற பெயரிலே வெளியிடுவதும், ஆட்சிக்கு வந்தால் என்னென்ன நன்மைகளை, தங்களைத் தேர்ந்தெடுத்து, நாட்டு மக்களுக்குச் செய்வோம் என்று வெளியிடுவதும், இயற்கையாக அரசியலிலே, கடமையாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஒரு முறையாகும். அதிலே, ஆட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களானாலும், ஆட்சிக்கு வரமுடியாமல் அந்த வாய்ப்பை இழந்தவர்களானாலும், யாராக இருந்தாலும், அந்தக் கொள்கையை அவரவர்களுடைய இருப்பிடத்திலே இருந்து, அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்கள் என்பதை நாம் எல்லோரும் கருத்து வேறுபாடு இன்றி ஒப்புக்கொள்வோம் என்று நம்புகிறேன்.

இங்கே விவாதத்தில் கருத்தை வைத்தவர்கள்கூட, எனக்கு மகிழ்ச்சி தரும் வகையில், உண்மையிலேயே நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் பேசி இருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

இத்தகைய திட்டங்களை எல்லாம் நீங்கள் நிறைவேற்ற முயல்வீர்களானால், நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று, ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், மன்ற உறுப்பினர்களும் திரும்பத் திரும்ப கூறி இருப்பது, எங்களுக்கு மன நிறைவையும், மகிழ்ச்சியையும் தராது இருக்காது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு உணர்வீர்கள்.

இதுவரையில் பேசிய, இந்த மாமன்றத்தில் சொன்ன கருத்துக்கள், உரைகள் ஆகியவற்றிற்கு மாறாக, இப்போது நடைபெறுகின்ற இந்தக் கூட்டத் தொடரில், இந்த

ஆளுநர் உரையின் மீது விவாதத்தில் கலந்து கொண்டவர்கள், இந்த உறுதியை அளித்து இருப்பதற்காக, நான் உண்மையிலேயே ஆளும் கட்சியின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்வதுடன், நம்பிக்கையோடு உங்கள் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறேன்.

இதிலே, முதலிலே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி, இதையெல்லாம் நீங்கள் செய்வீர்கள், செய்ய வேண்டும், விட்டுவிடக்கூடாது, எம்.ஜி.ஆர். ஆகிய நான், சொன்ன சொல்லைத் தவறமாட்டேன், ஆகவே, நிறைவேற்றக்கூடியவன் என்றெல்லாம், எவ்வளவு புகழ முடியுமோ, அவ்வளவு புகழ்ந்து, தன்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்து, மிக மிக நல்ல முறையில் எனக்கு ஆதரவாகவும், என்னைப் பெருமைப்படுத்தியும், அதே நேரத்தில், சந்தேகம் ஏதோ அவர்கள் உள்ளத்தில் இருப்பதுபோல, கண்டிப்பாகச் செய்யுங்கள், நிச்சயமாகச் செய்யுங்கள் என்று சொன்னார்கள். மற்ற நண்பர்களும் இப்படி திரும்பத் திரும்பச் சொல்லும்போது, எனக்கே கூட சந்தேகம் வந்தது.

முதலில் இவ்வளவு நம்பிக்கையாகச் சொல்லி, என் மீது நம்பிக்கை வைத்து இருப்பதாகச் சொன்னவர்கள், கண்டிப்பாக நிறைவேற்றுங்கள், நிறைவேற்றாமல் விட்டு விடாதீர்கள் என்றும் சொல்லி, எப்படி உங்களால் செய்ய முடியும்? என்ற கேள்வியையும் கேட்டு, அதற்குப் பிறகு கண்டிப்பாகச் செய்யுங்கள் என்று சொன்னால், அதிலே ஏதோ ஒரு உள்ளக்கிடக்கை இருக்கிறது, உள்ளத்திலே ஏதோ எண்ணம் இருக்கிறது என்கிற சந்தேகம் எழுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அப்படிச் சொல்லவில்லையென்றால், சொன்னார்கள் இந்த மன்றத்தில். இவ்வளவு நம்பிக்கை வைத்து செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு, "இதை எப்படி உங்களால் செய்ய முடியும், ஆனாலும், நீங்கள் செய்வீர்கள், கண்டிப்பாகச் செய்யுங்கள் என்று சொன்னால், ஏதோ செய்ய முடியாத ஒன்றைச் சொல்லி, நீங்கள் வாக்குகளைப் பெற்றுவிட்டீர்கள், ஆகவே, இங்கே செய்து காண்பியுங்கள் பார்ப்போம்; நாங்கள் எதிராக இல்லை; ஒத்துழைக்கிறோம்!" என்று, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கருத்துக்களை வெளியிட்டு இருக்கிறார்கள்.

உதாரணமாக, இப்போது பேராசிரியர் பேசுகிறபோது, இவ்வளவு வாக்குறுதிகளைத் தந்து இருக்கிறீர்கள், உங்களுக்கு வாக்களிக்காமல் வேறு யாருக்கு வாக்களிப்பார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரின் அனுமதியோடு வெளியிடப்பட்டு இருக்கிற தேர்தல் அறிக்கையில் கூட, இதைப்போன்ற வாக்குறுதிகள் இருக்கின்றன. நாங்கள் சொன்னதைவிட அதிகமாகவே இருந்தன! அதையும் நான் சொல்லிக்காட்ட விரும்புகிறேன். ''விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அடமானம் வைத்துள்ள நகைகளை, அரசே, விற்று விடாமல் பாதுகாத்து, அவற்றை மீட்டுத்தர வழிவகை காணப்படும்''. என்று ஒரு வாக்குறுதி இருந்தது. இதை நாங்கள் சொல்லவில்லை. தாய்மார்களுக்கு மிகப் பிடித்தமான இப்படிப்பட்ட வாக்குறுதிகளையெல்லாம்

சொன்ன பிறகும் கூட, ஏதோ அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்து ஆட்சியில் அமர்த்தி இருக்கிறார்கள் என்றால், இந்த அறிக்கையில் சொல்லப்பட்ட விவரங்கள் மட்டும் அதற்குக் காரணம் அல்ல என்பதையும், அதற்கு அப்பாலும் சில காரணங்கள் இருந்து இருக்கின்றன என்பதையும் நாம் கொஞ்சம் சிந்திக்க வேண்டும் என்பதை, நான் இந்த மாமன்றத்தில் வைக்கிற வேண்டுகோள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

வாக்குறுதிகள் தரப்படுவது என்பதும், வாக்குறுதிகளில் யார் யார் என்னென்ன வாக்குறுதிகள் தருகிறார்கள் என்பதும், எந்தெந்த வாக்குறுதிகள் எந்தெந்த தரப்பினருக்குச் சாதகமாக, உடனடியாக அவர்களை ஈர்க்கும் அளவிற்கு இருக்கும் என்பதை எண்ணிப்பார்த்து, அவரவர்களது திறமையையும், அனுபவத்தையும் வைத்து, அவரவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்ற வகையில், புள்ளி விவரங்களைக் கணக்கிட்டு, இது தான் நிறைவேற்ற முடியும் என்று சொல்லும் திறன் பெற்றவர்கள் தங்களுடைய ஆற்றலின் காரணமாக, வாக்குறுதிகளைத் தந்து இருக்கலாம்! எங்களைப் பொறுத்த வரையில், கடந்த இரண்டரை ஆண்டுக்கால ஆட்சி அனுபவத்தை வைத்து எங்கள் கருத்துக்களை, வாக்குறுதிகளை நாங்கள் சொல்லியிருக்கிறோம். எப்படி இருந்தாலும், இரண்டு தேர்தல் அறிக்கைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, ஒன்று நிச்சயமாகத் தெரிகிறது, யார் யார் எதை எதையெல்லாம் சொல்ல வேண்டும் என்று விரும்பினார்களோ, அவற்றையெல்லாம் கஞ்சத்தனம் இல்லாமல், ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல், ஏதாவது சொல்லி வாக்குகளை வாங்கிவிடுவோம், ஆட்சிக்குப் போனால் பார்த்துக்கொள்வோம் என்று இல்லாமல், அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் தங்கள் கருத்துக்களை, மக்கள் முன் வைத்து, அந்த நம்பிக்கையின் பேரில், தேர்தல் அறிக்கையைச் சொல்லி வாக்குகளைப் பெற்று வந்து இருக்கிறோம் என்று சொல்வதிலே, யாருக்கும் சந்தேகம் இருக்காது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே சொன்னார்கள் 50 ரூபாயைப்பற்றி. பேராசிரியர் அவர்கள் பேசும்போது 50 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும்; படித்துப் பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள்; இன்னும் பலர் 3 இலட்சம் பேர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவர்கள், மற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள், இப்படியெல்லாம் கணக்குப்போட்டுப் பார்த்தால் எவ்வளவு வரும்? அவர்களுக்கு எல்லாம் கொடுக்க முடியுமா? என்று கேட்டார்கள். ஆனால் கொடுத்தால் நல்லதுதான், வரவேற்கிறோம் என்று சொன்னார்கள்.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 100 ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் 50 ரூபாய் கொடுக்க முடியாமல் கஷ்டத்தில் இருக்கும்போது, 100 ரூபாய் கொடுக்க முடியும் என்று நம்பிக்கையோடு

கணக்கிட்டு சொன்னவர்கள், நாங்கள் 50 ரூபாய் கொடுப்பதற்கான ஆலோசனையைத் தக்க சந்தர்ப்பத்தில், அறிவுரையாகச் சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. அந்த ஒத்துழைப்பு உங்களிடமிருந்து கிடைக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

இங்கே பல்வேறு குறைகள் சொல்லப்பட்டாலும், எப்படிச் சொன்னாலும், இன்றைய தினம் நான் நீண்ட பேச்சு பேசுவதாக இல்லை. யாரும் அதற்காக கவலைப்பட தேவையில்லை; அச்சப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் இந்த கோப்புகளைப் பார்த்தால் இங்கே கொஞ்சம்தான் வந்திருக்கிறது.

நான் அந்த அளவுக்குப் பேசவேண்டிய தேவை இல்லாமலேயே மாமன்ற உறுப்பினர்கள் சில குறைகளைச் சொல்லிவிட்டு, ''அரிசி எப்படி இருந்தது'' இங்கிருந்து மற்ற மாநிலங்களுக்கு போய்விட்ட தொழில்களைப் பற்றி, ஏன் போயிற்று என்பதைப் பற்றியெல்லாம் உறுப்பினர்கள் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். ஏதோ நாங்கள் வேண்டுமென்றே குற்றம் செய்தது போலவும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

முதலில் ஏதோ புழுக்கள் நிறைந்த அரிசி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்காட்டிய நண்பர்களுக்கு, எனக்கு கிடைத்திருக்கிற புள்ளி விவரங்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தில் 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1,457.554 மெட்ரிக் டன் அரிசியும்; 1980 பிப்ரவரி மாதம் 1,538.558 மெட்ரிக் டன் அரிசியும்; 1980 மார்ச் மாதம் 1,736.159 மெட்ரிக் டன் அரிசியும்; 1980 ஏப்ரல் மாதம் 490.239 மெட்ரிக் டன் அரிசியும்; 1980 மே மாதம் 100.725 மெட்ரிக் டன் அரிசியும் ஊதியமாக வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே 8 மாதத்திற்கு முன்பு வேலை செய்தவர்களுக்கு அரிசி கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எப்படி பொருந்தும் ? இப்படிக் கொடுக்கப்பட்டதாக எனக்கு புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. இவ்வளவு டன் அரிசி இந்த ஆண்டு ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கொடுக்கப்பட்டிருக்கும்போது 8 மாதத்திற்கு முன்னால் வேலை செய்தவர்களுக்கு அரிசி கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எப்படிச் சொல்லப்பட்டது என்று புரியவில்லை. ஆகவே, தயவு செய்து, யார் யாருக்கு எங்கே கிடைக்கவில்லை என்று ஆதாரப்பூர்வமாகத் தெரிவித்தால், இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல திரு. ரகுமான்கான் அவர்கள் இராஜஸ்தானுக்கும் மகாராஷ்டிர மாநிலத்திற்கும் 'அசோக் லே லாண்ட்' நிறுவனம் மோட்டார் வண்டிகள் தயாரிக்கும் தொழிற்பிரிவுகளை நிறுவத் தீர்மானித்திருக்கிறது என்பதை வைத்து நாங்கள் . . . .

புதிய தொழில் பிரிவுகளுக்கு 13 ஆண்டுகள் செலுத்திய விற்பனை வரிக்கு சமமான தொகையை வட்டியில்லாக் கடனாகவும் மற்றும் 12 ஆண்டுகளுக்கு பொருட்களை வாங்கும்போது செலுத்திய வரியின் சமமான கடனாகவும்

நிறுவனம் பெற்றுக்கொள்ளும். இந்தக் கடன்கள் முறையே, 13 ஆண்டுகளிலும், 12 ஆண்டுகளிலும் திருப்பி செலுத்தப்பட வேண்டும். அதுமட்டுமல்லாமல் குறைக்கப்பட்ட வட்டி வீதத்தில், மஹாராஷ்டிர மாநிலம் ரூபாய் 10 கோடி கடனுதவியும், இராஜஸ்தான் மாநிலம் ரூ.10 கோடி கடனுதவியும் அளிப்பதாக ஒத்துக் கொண்டுள்ளன. அவர்களுடைய மாநிலங்களிலே தொழிற் சாலையை நிறுவுவதற்கு இந்த மிகப்பெரிய சலுகைகளை மஹாராஷ்டிர மாநிலமும், இராஜஸ்தான் மாநிலமும் அளித்துள்ளதாகத் தெரிகிறது. புதிய தொழில் பிரிவுகளுக்குள்ள வட்டியில்லா விற்பனைவரி கடன் உச்சவரம்புத் தொகை ரூபாய் 48 இலட்சத்தையும், இன்னும் பல செலவுகளையும் சேர்த்தால் பல கோடி ரூபாய்க்கு மேல் வரும். அவர்கள் சலுகைகளை 10 மடங்கு உயர்த்தினார்கள். அதாவது 48 இலட்சத்திலிருந்து 4.8 கோடி என்று அதிக அளவில் மஹாராஷ்டிர மாநிலத்திலிருந்தும், இராஜஸ்தான் மாநிலத்திலிருந்தும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற காரணத்தால், நிறுவனம் பல பிரிவுகளை வேறு மாநிலங்களில் தொடங்க திட்டமிட்டது என, நிறுவனம் மாநில அரசுக்குத் தெரிவித்து இருக்கின்றது.

மேற்கூறிய நிலையில், ‘அசோக் லே லாண்ட் எக்ஸ்டென்ஷன்’ திட்டத்தை வற்புறுத்துவதில் பயன் இல்லை என்று அரசு முடிவு செய்தது. இப்படிப்பட்ட சலுகைகள் வேண்டுமென்று அவர்கள் கேட்கும்போது, ஒவ்வொரு மாநிலத்துக்கும் எந்த எந்த அளவுக்கு வசதிகளை அனுமதிக்க முடியுமோ, செய்து கொடுக்க முடியுமோ அதைத்தான் செய்ய முடியுமே தவிர, அதற்கு மேலும் செலவு செய்து, அதனால் குறைந்த அளவு மக்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்கிற நிலையினை எண்ணிப் பார்த்தால், நஷ்டம் என்கிற வகையிலே பார்த்தால், அவ்வாறு கோடிக்கணக்கான ரூபாய் என்று வந்தால், நமது அடிப்படையான கொள்கையிலே உள்ள திட்டத்தின் வழி முறைகளே தகர்க்கப்பட்டு விடும் என்ற அச்சம் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. நம்முடைய நினைப்பு என்னவென்றால் எவ்வளவு அதிகமான நபர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும், கிடைத்தாக வேண்டும் என்பது தான். ஓரளவிற்கு அதற்கு தேவையான மூலதனத்தை இட்டு செலவு செய்து, அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு உரிய வழியிலே நாம் காரியத்தைச் செய்தாக வேண்டும். இந்த நிலையில் தான், நாம் கொள்கையை வைத்திருக்கிறோமே தவிர, வேறு வகையில் இல்லை என்பதை இங்கே சொல்லும் போது, எதையுமே நாங்கள் செய்யவில்லை என்று யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது என்பதற்காக ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

தென் மண்டலத்திற்கான அகல இருப்புப் பாதை பழுது பார்க்கும் பட்டறையை, நமது மாநிலத்தில் அமைக்கும்படி மத்திய அரசைத் தொடந்து கேட்டுக் கொள்ளப்பட்டது. அது பற்றி பல மாதங்களாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். மறுபடியும் மறுபடியும் வற்புறுத்தப்பட்டது. தென் பிராந்தியத் துணைத் தலைமை இயந்திரப்

பொறியாளர் கீழ்க்காணும் 3 இடங்கள் நில அளவைக் குழுவினரால், இப்பட்டறையை அமைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக 1978ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தெரிவித்தார். அதிலே ஒன்று நெய்க்காரப்பட்டிக்கு அருகிலே உள்ள இடம், சேலம் மாவட்டம். அடுத்தது பீளமேடுக்கும் கோயம்புத்தூர் வடக்குக்கும் இடையே உள்ள இடம். அடுத்தது சிங்கா நல்லூருக்கும் பீள மேட்டுக்கும் இடையே உள்ள இடம், கோயம்புத்தூர் மாவட்டம். போக்குவரத்துத் துறை பொதுப்பணித்துறை, நிதித் துறை செயலாளர்கள், நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தலைமைப் பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் அடங்கிய ஒரு உயர் மட்ட கூட்டத்தில் இந்த விஷயம் குறித்து 1979ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 4 ஆம் நாள் அன்று கலந்து பேசப்பட்டு, இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, மேற்சொன்ன இடங்களின் மதிப்பீடு தென் பிராந்திய இரயில்வே பொதுமேலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், மாநில மின்சார வாரியம் மேற்கண்ட இடங்களில் தேவையான மின்சாரத்தை முழுமையாக வழங்கும் என்றும், மின் கட்டணம் பதிவு செய்த தொழிற்சாலைகளிடமிருந்து வசூலிக்கப்படுவது போல, மின்சப்ளை விதியின் கீழ் வசூலிக்கப்படும் என்றும் தென்பிராந்திய பொது மேலாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. மேலும், இவ்விடங்களுக்குத் தேவையான அளவு தண்ணீரை, ஆயிரம் கலன்களுக்கு ஒரு ரூபாய் வீதத்தில், கிடைக்க வழி செய்யப்படும் என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உறுதியளித்தது. மின் கட்டண வீதங்கள் மற்றும் தண்ணீர் விநியோகத்திற்கான செலவுத் தொகை ஆகியவற்றை இத் திட்டத்தின் முதல் 10 வருடங்களுக்கு மாறாமல் இருக்கின்ற வகையில், மாநில அரசு பார்த்துக் கொள்ளும் என்றும் கூறப்பட்டது.

மேலே குறிப்பிட்டவையாவும் உறுப்பினர், செயலர், மாநில திட்டக் குழுவிற்கு எடுத்து வைக்கப்பட்டது. 1979ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் நாளிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தித் தாளில் இரயில் பழுதுபார்க்கும் பட்டறை அமைப்பதற்கு திருப்பதியை தேர்ந்து எடுத்திருப்பதாக பிரசுரமாகி உள்ளது. மேலும், அதை 1979ஆம் ஆண்டு மே மாதம் 10 நாள் வியாழன் அன்று பாராளுமன்றத்தில் மத்தியில் இருந்த மாநில அமைச்சர் திரு. ஷிவ் நாராயண் அறிவித்தார். மேலும், இவ்வாறு அமைக்கப்படவிருக்கும் பட்டறையை 1979–1980ஆம் ஆண்டிலே தொடங்கி, அதற்கு மத்திய மற்றும் அதன் தென் பிராந்திய இரயில்வேக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் என்று சொல்லப்பட்டது.

வினா ஒன்றுக்கு அமைச்சர் பதில் அளிக்கையில், இப்பட்டறையைத் திருப்பதி–பெங்களூருக்கு அருகேயுள்ள ஏலகங்கா, சேலத்திற்கு அருகாமையில் உள்ள நெய்காரப்பட்டி, கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள சிங்கா நல்லூர், மற்றும் பாலக்காட்டிற்கு அருகே உள்ள கஞ்சிக்கோடு ஆகிய பல்வேறு இடங்களில் அமைப்பதற்கு நிபுணர் ஆய்வுக் குழு கருத்தில் கொண்டது என்று அறிவித்தார்கள். அறிக்கையினை மத்திய இரயில்வே அமைச்சகத்தின் இயக்குநர்கள் குழு

ஆராய்ந்து தொழில் நுட்ப பொருளாதார கணிப்பின் அடிப்படையில், திருப்பதியைத் தேர்ந்தெடுத்தது என்று தெரிவித்தார். நிபுணர்கள் தெரிவித்த இந்த மூன்று இடங்களில் ஏதாவது ஒன்றினில் இந்த பழுது பார்க்கும் பட்டறையை அமைக்க வேண்டும் என்று முன்னாள் பாரதப் பிரதமர் மற்றும் முன்னாள் ரெயில்வே அமைச்சர் ஆகியோருக்கு தமிழக முதல்வர் என்ற முறையிலே நேர்முகக் கடிதம் எழுதினேன். முன்னாள் போக்குவரத்து துறை அமைச்சர் மூலமாக மத்திய முன்னாள் இரயில்வே அமைச்சருக்கு நேர்முக கடிதம் எழுதப்பட்டது. இது குறித்து மத்திய அரசு அதிகாரிகளிடமும், அமைச்சரவையிடமும் கலந்து பேசி, மேற்படி இரயில்வே ஊர்தி பழுது பார்க்கும் பட்டறையை உத்தேசித்துள்ள மூன்று இடங்களில் ஏதாவது ஒன்றில், நிறுவ வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி கேட்குமாறு அப்பொழுது டெல்லியில் இருந்த முன்னாள் தமிழகப் பிரதிநிதி கேட்டுக் கொள்ளப்பட்டார். இதற்கு பதில் அளிக்கையில் முன்னாள் இரயில்வே அமைச்சர் 1979ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் நாள் அன்று தொழில் நுட்ப பொருளாதாரக் கணிப்பின் அடிப்படையில், மேற்படி இரயில்வே ஊர்தி பழுது பார்க்கும் பட்டறையை ஆந்திர பிரதேசத்திலுள்ள திருப்பதியில் அமைப்பதாக ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு விட்டதாக தெரிவித்தார். நாங்கள் தொடர்ந்து மீண்டும் எழுதிக் கொண்டே இருந்தோம். இதை நான் குறிப்பிடுவதற்கு காரணம், நாங்கள் முயற்சியே செய்யவில்லை என்று சொல்ல முடியாது. முயற்சி செய்யாமல் இல்லை.

இது போல் இந்த அரசு எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக, ரூ.358 கோடி முதலீட்டில், நெய்வேலியில் இரண்டாவது சுரங்க வேலை தொடங்கவும் அதன் அடிப்படையில், மேலும் ஒரு அனல் மின் நிலையத்தை நிறுவவும் அனுமதி பெறப்பட்டது என்பதை இம்மாமன்றத்திற்கு சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

சேலத்தில் ரூ.560 கோடி செலவில், ஒருங்கிணைந்த ‘எஃகு ஆலை’ நிறுவுவதற்கென்று, முன்பு பாரதப் பிரதமர் அடிக்கல் நாட்டியுள்ளார். ரூ.12.7 கோடி செலவில், ஒரு குளிர் உருளை தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், சேலத்தில் உள்ள ஒருங்கிணைந்த ‘எஃகு ஆலை’ மற்றும் பிற தொழிற்சாலை வேலைகளை உடனடியாகச் செயல்படுத்த, மைய அரசிடம் மீண்டும் வலியுறுத்தி வருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் நாள் வரை. பெரும் தொழில்களுக்கு முன் உரிமம் மற்றும் தொடர்ந்து வாணிபம் செய்யும் உரிமை வழங்க, 171 விண்ணப்பங்களை மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறது. அவற்றுள் 65 விண்ணப்பங்களுக்கு தொழில் முன் உரிமை மற்றும் தொடர்ந்து வாணிபம் செய்யும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. 11 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன. மத்திய அரசால் முடக்கப்பட்ட மற்றும் விண்ணப்பதாரரால், திரும்பப் பெறப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை

“நீங்களும் மக்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். உங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது, இந்த ஆட்சி ஒரு கட்சியின் ஆட்சி அல்ல. இந்த மாமன்றத்தின் ஆட்சி, உங்களுக்கும் பங்கு இருக்கிறது. நாங்கள் தவறு செய்தால் கண்டித்து சுட்டிக்காட்டுங்கள். தவறு ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற அச்சம் எங்களுக்கும் இருக்கிறது. அந்த எண்ணத்தில்தான் நாங்கள் இருக்கிறோம்; அவ்வப்போது உங்கள் அனுபவத்தை நீங்கள் எங்களுக்கு உதவி செய்கிற வகையில் எடுத்துச் சொல்லுங்கள்! மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்லுங்கள்!”

15 ஆகும். 80 விண்ணப்பங்கள் மீது இன்னும் மத்திய அரசின் முடிவு தெரியவில்லை. இப்படி பல்வேறு புள்ளி விவரங்களின் இருந்தாலும் நாங்கள் எதுவுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை, ஏதோ பத்திரிக்கையில் வருகிற செய்திகளை மட்டும் வைத்துக்கொண்டு . . .

இலாப நஷ்டக் கணக்கு பார்ப்பது என்றால், அந்தந்த மாநிலத்தின் பொருளாதார நிதி வசதியைப் பொறுத்தது என்பதை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். எங்களுக்கு நிதித்துறை மற்ற துறைகளைச் சார்ந்தவர்கள் எப்படி பயன்படும் என்று சொல்கிறார்களோ அதற்கேற்ப, புள்ளிவிவரங்களை எந்தளவிற்கு நாம் தெரிந்து கொள்கிறோமோ, அந்தளவிற்குத்தான் முடிவு எடுக்கிறோம் என்பதைத் தயவு செய்து உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படிப் பார்த்தால், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மத்தியில் இருக்கிறார்களே திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் சொல்கிற அத்தனையும் எந்தக் கட்சியுமே ஏற்றுக்கொள்வதில்லை. அப்படிப் போனால் தங்கத்திற்கு மானியம் கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், தலைவர் முதற்கொண்டு கொடுக்க முடியும் என்று கருதுகிறார்கள். ஆகவே, கருத்து மாறுபாடு வருகிறது, இது போன்று கருத்து மாறுபாடு வருவதால் எது சரி, எது நியாயம் என்பது அவரவர்கள் மனசாட்சி, அனுபவம், திறமை இவற்றைப் பொறுத்ததே தவிர, சூழ்நிலைக்கு ஏற்ப அமைகிறதே தவிர, அவர்கள் சொன்னார்கள் ஆகவே சரி என்று ஏற்றுக்கொள்ளவோ அல்லது அவர்கள் சொல்லவில்லை ஆகவே, அது சரியில்லை, நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை என்பதை உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். நான் இங்கே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னதை, அவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்று சொன்னீர்களே, அவையெல்லாம் ஆளுநர் அவர்கள் உரையில் வெளிப்படவில்லையே? என்று கேட்டார்கள். நான் ஒன்றை அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆளுநர்

அவர்கள் உரையில், ஒன்பதாவது பக்கத்தில், 'என் அரசின் கொள்கைகள் ஒரு சிலவற்றை மட்டுமே நான் கோடிட்டுக் காட்டியுள்ளேன்' என்று கூறியுள்ளார். இதை மாண்புமிகு உறுப்பினர்கள் கவனித்திருப்பார்கள் என்றாலும், தங்கள் எண்ணத்தைச் சொல்ல வேண்டும், தங்கள் கருத்தை வெளியிட்டு, இந்த நாட்டுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். அந்த வகையில், விழிப்போடு உள்ள மக்களுக்கு, துடிப்போடு செயலாற்றும் அரசும், மன்ற உறுப்பினர்களும், வறியாருடைய துயர் துடைக்கவும், எளியோர் வாழ்வை உயர்த்தவும், பாடுபடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. இந்த மன்றம் தனக்கே உரித்தான சிறந்த மரபுகளை நல்ல மரபுகள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளது எங்களைப் பொறுத்த வரையில், அரசாங்கக் கொள்கை பற்றிச் சொல்கிறபோது, சிலவற்றை மட்டும் கோடிட்டு காட்டியுள்ளேன். ஆளுநர் அவர்கள் உரையில், நாங்கள் தேர்தல் அறிக்கையில் என்னென்ன சொன்னோமோ அவை அத்தனையையும் இங்கே இதில் எழுதி, பட்ஜெட்டில் சொல்ல வெண்டியதையெல்லாம் சொல்லவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆகவேதான் சொல்லவில்லையே தவிர, பட்ஜெட்டை நாங்கள் வெளியிடும் போது, எதை எதை விட்டிருக்கிறோம், எதை எதை செய்யாமல் நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம் என்பதையெல்லாம் சுட்டிக்காட்டினால், அதை நாங்கள் பயன்படுத்திக்கொள்வோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைபட்டிருக்கிறேன். இங்கே பேசுகிறபோது பல பிரச்சினைகள் இங்கே வருகின்றன. ஏதோ இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள, எங்கள் அரசு வந்த பிறகுதான் யாரோ பாட, நான் வாய் அசைப்பது போல், எங்கள் கருத்துக்களை வாய் அசைப்பது போல், ஆளுநர் அவர்கள் தன் உரையில் தன் வாயால் ஒலிசெய்து வைத்திருக்கிறார்கள் என்று ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். இதற்கு முன்னாலும் அவர்கள் சட்டமன்றத்தில் இருந்திருக்கிறார்கள். முன்னாலே சட்டமன்றம் எப்படி என்பதும் தெரியும். ஆளுநர் கருத்து வெளியிடுகிறார்கள் என்றால், அரசாங்கத்தின் கருத்தைதான் அவர்கள் வெளியிடுகிறார்கள் என்பது நாடு அறிந்த உண்மை. அது ஒரு மரபு என்ற வகையில் நடை பெறுகிறதே தவிர, வேறு ஒன்றும் அல்ல! என்பதை நாடு அறியும். ஒரு ஆட்சியின் தலைவர் என்ற முறையில், அவர்கள் அதை வெளியிடுகிறார்கள். அதை இப்படிச் சுட்டிக்காட்டுவதன் மூலம், ஏதோ எங்கேயோ சென்று யாரையாவது துன்பப்படுத்திவிட முடியும் என்று ஒரு கற்பனை செய்துகொள்வது, நேரத்தை வீணாக்குவதாக இருக்குமே தவிர, அது பயன்படாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரும்பத் திரும்ப ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்வது என்பது எளிதான காரியந்தான். என் முன்னால் இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், கலைஞர் கருணாநிதி அவர்கள் எழுதிய பாடலை "எங்கள் தங்கம்" படத்தில் நான் சொல்லியிருக்கிறேன். பாகவதராக நடித்து கதாகலாட்சேபம் செய்திருக்கிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. இரகுமான்கான் அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவைத்தம்பி அவர்கள் சொன்னதைப்போல

எங்களுடைய கொள்கைகளை எங்களுக்குத் தெரிந்தவகையில் நாங்கள் வெளிப்படுத்துகிறோம். இந்த நேரத்தில் நான் மாண்புமிகு துணைத் தலைவர் பேராசிரியர் அவர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் அண்ணாவின் கொள்கைகளை விட்டு நழுவிவிடுவோம் என்று தயவுசெய்து சந்தேகப்பட வேண்டாம். எதற்காகவோ; எப்படியோ; தமிழை விட்டுக்கொடுத்து விடுவோம் என்றோ, அல்லது தமிழக மக்களுக்குப் பாதகம் விளைவிக்கக்கூடிய காரியத்திற்கு நாங்கள் ஒத்துழைப்பு தருவோம் என்றோ, தயவுசெய்து சந்தேகப்படவேண்டாம் என்பதை உறுதியாக சொல்லி, வேண்டுகோளாக உள்ளத்தில் பதியவைக்க விரும்புகிறேன்.

'பிராமணியம்' கூடாது என்பதுதான் அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கையாகும். இதை இந்த மாமன்றத்தில் சொல்லும்போது, தாழ்த்தப்பட்ட மக்களிலேகூட இந்த பிராமணியம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே உயர்வு, தாழ்வு இருக்கிறது. இடுகாட்டிற்கு எடுத்துப் போகும் போது, சிலர் அவர்கள் வசிக்கும் பாதையிலே கொண்டு போகக் கூடாது என்ற சச்சரவு நடைபெறுகிறது. காவலர்கள் குறுக்கிடவேண்டிய நிலை நாட்டிலே இருக்கும்போது, அதனை மாற்றியமைக்க ஒன்றுபட்டு உழைக்க நீண்ட நாட்கள் ஆகலாம் என்ற எண்ணத்தை வெளியிட விரும்புகிறேன். இந்த நிலை எங்குமே இருக்கிறது. சில கட்சிகளிலே இந்த பிராமணியம் இருக்கிறது. இன்னார் தான் தலைவராக வரவேண்டும், இன்னார்தான் ஆட்சியில் இருக்க வேண்டும் என்றெல்லாம்கூட நம்பிக்கை வருகிறது. இதைப் பற்றிச் சொல்லப்போனால், ஜாதிப் பிரச்சினை வளரும் இப்படி வராமல் தடுப்பதற்கு, நாம் ஒன்றுபட்டு உழைப்போம் என்ற நம்பிக்கையை நான் எதிர்பார்க்கிறேன். என் முன்னால் இருக்கின்ற உங்கள் அனைவரிடமிருந்தும் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் பல பிரச்சினைகளை எடுத்து வைத்தார்கள். யாருக்கோ பதில் சொன்ன சூழ்நிலையில், எங்கள் அரசுக்கு நினைவுபடுத்துவது போலவும் எச்சரிக்கை செய்வது போலவும் ஒரு கருத்தைச் சொன்னார்கள் நீங்கள் ஆட்சியில் இருக்கும்போது, தொழில் அதிபர்களுக்கு ஆதரவாக இல்லாமல் இருந்தீர்கள். நீங்கள் பதவியில் இருந்து இறக்கப்பட்டபோது, மக்கள் ஆதரவு கொடுத்தார்கள். நாங்கள் எங்கள் கடமையைச் செய்துவிட்டோம் என்று எங்களுக்கு பதில் சொல்வதுபோல் மற்றவர்களுக்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். எனக்குப் புரிகிறது.

இந்த ஏகபோக முதலாளித்துவம் என்பது ஏதோ தொழிற்சாலைகளில் மட்டுமல்ல, இப்போது சினிமாத் துறையிலும் புகுந்திருக்கிறது. சேலத்திலே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். கேள்விப்பட்டேன். பட விநியோகஸ்தர்கள் ஒன்றுகூடி, புதிய படங்களை ஒரு ஆண்டிற்கு வாங்குவது இல்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

இப்போது நான் சினிமாவில் சம்பந்தப்படாமல் இருப்பதால், நான் சொல்வதில் சுயநலமில்லை என்று எல்லோரும் அறிவார்கள். புதிய படங்களில் புதிய நடிகர், நடிகைகள் வருகிறார்கள், புதிய தொழில் அதிபர்கள் வந்திருக்கிறார்கள். நிறைய பேர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. அந்தப் படங்களை ஒரு ஆண்டிற்கு வாங்க மாட்டோம் என்று சேலம் ஜில்லாவிலே, அந்த மாவட்டத்தில் சொல்லப்படுகிறது. அப்படி ஏதாவது வெளிவருகின்ற படங்களை அங்கே இருக்கின்ற கொட்டகைக்காரர்கள் நேராக வாங்கி விநியோகம் செய்தால், அப்படங்களை மக்களுக்கு காண்பித்தால், இந்த விநியோகஸ்தர்களிடம் இருக்கின்ற படங்களை அந்த கொட்டகைதாரர்களுக்கு கொடுப்பதில்லை என்று விநியோகஸ்தர்கள் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இதுவும் ஒரு வகையில், ஏகபோக முதலாளித்துவம்தான். தங்களிடம் இருக்கும் படங்களைக் கொடுக்கமாட்டோம் என்று சொன்னால், வசூல் வரக்கூடிய கொஞ்சம் விளம்பரமான படங்கள் தங்களுடைய கையிலே இருக்கலாம். அதை வைத்துக்கொண்டு கொட்டகைக்காரர்களைப் பயமுறுத்துவதும், அங்கே நீங்கள் படங்களை நேரடியாக எடுத்தால், எங்கள் படங்களை நாங்கள் தரமாட்டோம் என்று ஒரு அமைப்பு வைத்து, எச்சரிப்பது இந்த நாட்டிலே அந்தத் தொழில் வளர்ச்சியைத் தடுக்க முனைகிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இதுபோல பிரச்சினை எங்கும் இருக்கிறது, ஆனால், இந்த நேரத்தில் இந்த விநியோகஸ்தர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழக அரசு இதைப்போன்ற பல்வேறு பிரச்சினைகளில் எப்படி தலையிட்டு, அதை சமப்படுத்தி, நியாயத்தின் பக்கம் இருக்க முனைகிறதோ, அதுபோல் இந்தக் கொட்டகைதாரர்களுக்கும் (பாதுகாப்பு) கொடுக்கும் அல்லது அந்தக் கொட்டகைகளை எப்படி பயன்படுத்திக்கொள்ள முடியுமோ, அப்படிப் பயன்படுத்திக் கொண்டு, அவர்கள் கையிலே இருக்கின்ற படங்களை அந்த மாவட்டத்தில் ஓட்ட முடியாத நிலையைத் தமிழக அரசால் செய்யமுடியும் என்பதை அவர்கள் தயவுசெய்து தெரிந்துகொள்ள வேண்டும்.

ஏகபோக முதலாளித்துவம் எந்த வகையிலும் வளருவதற்கு தமிழக அரசு உதவாது என்பதை, இந்தச்செய்தியைச் சொல்லுகின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களுக்கும், மற்ற நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

எப்படி வெற்றி பெற்றீர்கள் ? எத்தனை வாக்குகளைப் புதியதாக சேர்த்தீர்கள் ? என்பதையெல்லாம் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. வெளியிலேயும் சொல்லுகிறார்கள். இந்த வாக்காளர்களைச் சேர்த்தது நாங்கள் பதவியில் இருந்து இறக்கப்பட்ட பிறகு அதை தயவு செய்து ஒவ்வொருவர் மனதிலேயும் வைத்துக் கொள்ளுங்கள். இதை நாங்கள் சொல்லி கேட்கின்ற அதிகாரிகள் அல்ல. அவர்களே தன்னிச்சையாக ஏற்றுக்கொண்டு, சேர்த்த வாக்காளர்கள் அவர்கள் இல்லையென்று சொன்னால், அதுவும் இல்லாமல் போயிருக்க முடியும். ஆகவே, நாங்கள் அதிகாரத்தில்

இல்லாதபோது சேர்க்கப்பட்ட வாக்காளர்கள், நாங்கள் சேர்த்துவிட்டோம் என்று குற்றம் சாட்டினார்கள். அதிகாரிகளைக் குற்றம் சொல்ல வேண்டும். எங்களை அல்ல; அப்படிப்பட்ட அதிகாரிகள் யார் என்று நிரூபித்தால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். ஆனால், நான் இங்கே கணக்குப் போட்டுப் பார்த்து, வெற்றி, தோல்வி எது, யாருக்கு வெற்றி, யாருக்குத் தோல்வி என்று கணக்கிடத் தயாராக இல்லை.

பேராசிரியர் சொன்னதுபோல நான் அன்று சொன்னதுதான் இன்றும், எப்பொழுதும் வெற்றி ஒருவர் பங்கு அல்ல. அதுவும் அவரவர் சொந்த பலத்தின் நின்று போட்டியிடுகின்ற ஒரு போட்டி அல்ல. இது மற்றவர்கள் தீர்மானிக்க வேண்டியது, மக்கள் ஏற்றுக்கொண்டால், ஆட்சியில் இருப்போம். மக்கள் ஏற்றுக் கொள்ளாவிட்டால், வெளியே இருப்போம், அல்லது எதிரிலே இருப்போம். ஆகவே, தீர்ப்பளிக்க வேண்டியவர்கள் நாமல்ல. தோல்வி வெற்றி எல்லாம் மக்களுடைய முடிவு, அது நம்முடைய முடிவுக்குச் சொந்தமானது அல்ல.

ஒன்றுமட்டும் எனக்கு ஒரு நிம்மதியைத் தருகிறது. சில மாதங்களுக்கு முன்னால் நாங்கள் ஆட்சியில் இருக்கும் போது இன்னும் எத்தனை நாள் இந்த ஆட்சி இங்கு இருக்கும் ? என்றெல்லாம் கேட்டவர்கள் இருக்கிறார்கள். இங்கு இல்லாதவர்கள் வரமுடியாதவர்கள் வெளியில் என்னென்ன பேசினார்கள் ? என்னென்ன பத்திரிகையில் எழுதினார்கள் ? என்பதும் எங்களுக்குத் தெரியும். அந்த வேதனையோடுதான் ஆட்சியில் இருந்தோம் இதற்கு என்ன வழி, எப்படி மக்கள் மாமன்றத்தில் சென்று அவர்கள் கருத்தறிவது என்பது பற்றியெல்லாம் சிந்தித்துக் கொண்டுதான் இருந்தோம். எப்படியோ திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நல்ல ஒரு வாய்ப்பைத் தந்தார்கள். யார் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள மிக நல்ல வாய்ப்பைத் தந்தார்கள். அதுபோல மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவும், எதை எதைச் செய்ய விரும்புகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புத் தந்தார்கள். அந்த வகையில் நான் நன்றி சொல்வேன். சட்டத்திற்குப் புறம்பாக அந்தக் காரியத்தைச் செய்தார்கள் என்ற நிலைமை இருந்தாலும், இந்த வாய்ப்பை ஏற்படுத்தியதற்கு யார் பொறுப்பாயிருந்தாலும், அவர்களுக்கெல்லாம் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு வகையில் ஒரு பிரச்சினை தீர்ந்திருக்கிறது. ஒரு நண்பர் சட்டமன்றத்தில் இல்லாததால், பெயரைச் சொல்ல விரும்பவில்லை. தமிழனுக்கு ஓட்டுப்போடுங்கள் என்று பேசிய பேச்சு இங்கே இருக்கிறது. என்னைத் தமிழனாக தமிழக மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். என்பதை எண்ணும் போது, உண்மையில் மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல இன்னொன்றையும் சொல்வேன், வாக்குகளைப் பெற்றதில் 80 இலட்சமாக இருந்தது இன்று 60 இலட்சம் அல்லது 50 இலட்சம் தான் கிடைத்தது

என்பதாலோ, குறைந்த வாக்குகள் மட்டுமே அதிகமாகப் பெற்று ஜெயித்தார்கள் என்பதாலோ, உங்களை நாங்கள் மிகச் சாதாரணமாக எண்ணத் தயாராக இல்லை. உங்களை நாங்கள் மதிக்கிறோம். எவ்வளவு வாக்குகள் பெற்று இங்கே வெற்றி பெற்று வந்திருந்தாலும், அவர்கள் அத்தனை பேரையும் மதிக்கிறோம். அவர்கள் கருத்துக்களை மதிக்கத்தயாராக இருக்கிறோம். நீங்களும் மக்கள் வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். உங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது, இந்த ஆட்சி ஒரு கட்சியின் ஆட்சி அல்ல. இந்த மாமன்றத்தின் ஆட்சி, உங்களுக்கும் பங்கு இருக்கிறது. நாங்கள் தவறு செய்தால், கண்டித்து சுட்டிக்காட்டுங்கள். தவறு ஏற்பட்டுவிடக் கூடாதே என்ற அச்சம் எங்களுக்கும் இருக்கிறது. அந்த எண்ணத்தில் தான் நாங்கள் இருக்கிறோம். அவ்வப்போது உங்கள் அனுபவத்தை நீங்கள் எங்களுக்கு உதவி செய்கிற வகையில் எடுத்துச் சொல்லுங்கள். மக்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்லுங்கள். இதனை நான் மாமன்றத்தில் ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

தேர்தலுக்குப் பிறகு இன்று நடக்கிற அராஜகத்தை நிறுத்தியாக வேண்டும். எந்தக் கட்சி அதிலே ஈடுபட்டிருப்பினும் சரி, எந்தக் கட்சியினரின் தொடர்பு இருந்தாலும் சரி, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, மற்ற கட்சியினரைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அனைவரும் ஒன்று கூடி பேசியாவது இதற்கு ஒரு முடிவு கட்டியாகவேண்டும். சாகிறவர்கள் நாமல்ல, நம்மை நம்பி கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் சாகடிக்கப்படுகிறார்கள். துன்பத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். அதை நாம் நிறுத்தியாக வேண்டும். ஆகவே, நான் வேண்டி விரும்பி அழைக்கும் போது, உங்கள் நேரத்தையும் தெரிந்து அழைக்கிறேன். கட்சி சார்பற்ற நிலையில் எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து பேசி எந்த வகையில் இதைச் சரிப்படுத்துவது என்பதை எண்ணிப் பார்த்து, ஒரு முடிவுக்கு வந்து இந்தக் கொலைகள், துன்பங்கள், தீ வைப்புக்கள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்த நாம் அனைவரும் சேர்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டும். ஆளுநர் உரையில் நாங்கள் எதை எதை விட்டிருக்கிறோமோ அவற்றை எல்லாம் இன்னும் நாலைந்து நாட்களுக்குள் நீங்கள் நிதிநிலை அறிக்கையில் காண இருக்கிறீர்கள். அதைப்பார்த்து உங்கள் எண்ணத்தைச் சொல்ல இருக்கிறீர்கள். ஆகவே, அதுவரையில், பொறுத்துக் கொள்ளுங்கள் என்று கூறி, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

28.06.1980 அன்று மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை.

ௐ

பொதுத்தன்மையோடு
எல்லாவற்றையும் நோக்க வேண்டும்!

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது இது வரையில் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு நான் முதலில் நன்றி கூறிக் கொள்கிறேன். குறிப்பாக, எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் வெறும் எதிர்க் கட்சியாக தங்களை ஆக்கிக் கொள்ளாமல், நாட்டின் நலனை முன்னிட்டு, நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு, அதிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியில் இருக்கிற இந்த அரசாங்கம் எந்த அவப்பெயருக்கும் ஆளாகிவிடக் கூடாது என்ற அக்கறையோடு, நல்ல எண்ணத்தோடு, தங்களுடைய கருத்துக்களுக்கு ஏற்ப என்றில்லாவிட்டாலும், நியாயம் என்று அவர்கள் காதுக்கு ஆதாரங்களோடு வந்த செய்திகளுக்கு முதல் இடம் கொடுத்து வெளியிட்டதற்காக நான் உண்மையிலேயே நன்றி கூறிக் கொள்கிறேன்.

ஒரு ஆட்சி சரிவர நடைபெற வேண்டுமென்றால், எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் இங்கே மன்றத்தில் எடுத்து வைத்ததைப் போல, தங்களுக்குத் தெரிந்த உண்மைகளை எல்லாம் நாகரிகமாகவும், கண்ணியமாகவும், தமிழ் பண்போடும் வெளியிடுகிற முறையில் வெளியிட்டு, ஒத்துழைப்பு தருகிறபோதுதான், நல்லாட்சி மலரும் என்பதையும், நல்லாட்சி நடைபெறும் என்பதையும் நன்கு உணர்ந்திருக்கிறேன்.

இங்கே பல குறைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நிறைகளைச் சொல்கிறவர்களுக்கு நான் நன்றி கூறுவதை விட, குறைகளைச் சொல்லியவர்களுக்கு நன்றி கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். காரணம், நேரடியாகச் சில இடங்களுக்கு போய் உண்மை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடியாத அளவிற்குப் பொறுப்பில் இருக்கிறவர்கள் இருக்கும்போது—இந்த மன்றத்தில் மக்களின் சார்பாக, உறுப்பினர்கள் தங்களுக்கு தெரிந்த உண்மைகளை எடுத்து வைக்கும் போது தான், எந்தெந்த வகையில் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு வழி முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கும், வெறும் கையெழுத்து இட்டு உத்தரவு போட்டுவிட்டால் மட்டும் போதாது, அதை நடைமுறைப்படுத்துபவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதையும், அத்தகைய தகுதி பெற்றவர்கள் எங்கெங்கே இருக்கிறார்கள், எங்கெங்கே இல்லை, அதிலும், தவறான செய்கைகளின் சொந்தக்காரர்கள் எவ்வளவுபேர் இருக்கிறார்கள் என்பதையெல்லாம், எடுத்துச் சொல்வதற்குள்ள வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். எடுத்துக் கூறுவது எங்களுக்கும் இந்த நாட்டுக்கும் நன்மை பயக்கக் கூடியது என்பதில், நான் மன நிறைவு கொள்கிறேன்.

அந்த வகையில், இந்த மானியக் கோரிக்கைகள் மீது குறை சொன்னவர்கள் எனக்கு இந்த ஆட்சியை நடத்துவதற்கு மிகவும் உதவி செய்திருக்கிறார்கள் என்பதை

நான் நன்றி உணர்ச்சியோடு கூறி, அவர்களுக்கு என்னிடமுள்ள தகவல்களுக்கு ஏற்ற முறையில் பதில் கூறுவது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

முதலாவதாக, காவல்துறை சம்பந்தமாக நிறையப் பேசியிருப்பதால், ஒவ்வொருவரும் பல்வேறு விவரங்களை இங்கே எடுத்துச் சொல்லியிருப்பதால், அதை முதலில் எடுத்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். காவல்துறையைப் பொறுத்த வரையில், காவல்துறையில் பணியாற்றுகிறவர்கள் எப்போதுமே நல்ல பெயர் எடுக்க முடியாது என்பதை, நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், கொஞ்சம் தீவிரமாக, ஆர்வத்தோடு செயல்படுகிற போது, சிறு தவறு நேர்ந்தாலும், அதன் காரணமாக, அவர்கள் குற்றவாளிகள் என்று சொல்லப்படுவதற்குக் காரணமாகி விடுகின்றார்கள். அதேபோல, ஏதாவது சோர்வு காரணமாக கடமையைச் செய்யக் கூடிய அந்தச் சுறுசுறுப்பு இல்லை அல்லது வேறு நிலை ஏற்பட்டுவிட்டாலும் அவர்கள் கடமையைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டு விடுகிறது. இதே நிலையிலே தான் இங்கு தமிழக காவல்துறையைப் பற்றியும் பேசப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டாலும், அவ்வளவுப் பொய் என்று நான் சொல்லிவிட முடியாது. உண்மைக்கு மாறானது என்று சொல்லிவிடமுடியாது. சில நேரங்களில், சில காரியங்கள் மிகைப்படுத்தப்படுகின்றது என்பதை, நான் குறிப்பிட்டாக வேண்டியவனாக இருக்கிறேன்.

அனைத்துலகக் காவல்துறையைச் சேர்ந்த அனைவரும் தங்களுடைய கடமைகளை அப்படியே ஒழுங்காகச் செய்கிறார்கள் என்று நான் உறுதி கூறத் தயாராக இல்லை. அதே போல, காவல்துறையைச் சார்ந்த அத்தனை பேரும் தவறு செய்வதற்கு, தங்களை ஆளாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இதைத் தான் அவர்கள் குறிப்பிட்டதற்கு விளக்கமாக, பதிலாக நான் தர வேண்டி இருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, அவர்கள் கூறியதிலே, இன்றைய தினம் பேசிய எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியது போல, மானியக் கோரிக்கையிலே கொடுக்கப்படுகின்ற விளக்கங்களைப் பற்றி எடுத்துக் கூறி, இரண்டு வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிட்டிருக்கிறீர்களே என்றார்கள். ஆனால், நடந்தது வேறு. ஆனால், எப்படி உண்மைக்கு மாறாக, இந்த மானியக் கோரிக்கையிலே இரண்டாம் தேதி பற்றிய செய்தியை முதலமைச்சர் அவர்கள் அனுமதியுடன் வெளியிட்டார்கள் என்று மாண்புமிகு உமாநாத் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். டி.ஐ.ஜி. அறிக்கைக்கு மாறாக இப்படி ஒரு அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது அது மானியக் கோரிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கெல்லாம் பணிவோடு சொல்லிக் கொள்வது ஒன்று தான். இந்த மானியக் கோரிக்கையைத் தயாரிப்பதில்

அவர்களுக்கு என்னென்ன குறிப்புகள் இருக்கின்றனவோ, அவைகளை நீங்கள் அப்படியே வெளியிடுங்கள், அதை மாற்றி வெளியிட வேண்டியத் தேவையில்லை என்று நான் முதலிலேயே அவர்களுக்குச் சொன்னேன். காரணம், இரண்டாம் தேதி என்னுடைய அனுபவம் தனிப்பட்ட முறையிலே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசியல் கட்சியைச் சார்ந்தது வேறு விதமாக இருந்தாலும், ஆட்சியிலே நாங்கள் வந்த பிறகு, இருக்கின்ற குறிப்புகள் என்ன இருக்கின்றதோ அதை வைத்துத் தான் பேச வேண்டுமே தவிர, உண்மைக்கு மாறாக எழுதக் கூடாது என்ற நோக்கத்தோடு அவர்களை அப்படியே எழுதச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கை இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த விஷயத்தில் நான் என்னுடைய அனுபவத்தைச் சொல்ல வேண்டுமென்றால், இரண்டாம் தேதி நடந்தது மிகக் கொடூரமானது தான். நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் இவர்கள் எல்லாம் அன்றைய தினம் தாக்கப்பட்டார்கள்: அடிக்கப்பட்டார்கள் என்பதையும், மண்டை பிளக்கப்பட்டது உண்மை என்பதையும், நான் இங்கே அனுபவம் மூலமாக அறிந்ததை; நேரிடையாகக் கண்டதை; அந்த நபர்களை மருத்துவமனையிலும், வேறு இடங்களிலேயும் சந்தித்ததை வைத்துக் கொண்டு நான் சொல்ல முடியும். ஆனால், முதலமைச்சர் என்ற பொறுப்பிலே பேசும் போது, இங்கே காவல்துறை அதிகாரிகள் என்ன குறிப்புகளை வைத்திருக்கிறார்களோ அவைகளை வெளியிடவேண்டியது என் நீங்காத கடமையாகும். அதற்காகத் தான் நியாயத்தின்பால் வழக்குகள் வாபஸ் வாங்கியும், அதே நேரத்தில், உண்மை என்ன என்பதை வெளியிடுவதற்கு வாய்ப்பைத் தருவதாக, இந்த மானியக் கோரிக்கையிலே வெளியிடுவதற்கு நான் வாய்ப்பு தந்தேன்.

இன்னொன்றும், சொல்லப்போனால், மதுரையிலே நடந்த நிகழ்ச்சி பற்றி இங்கே சொல்லப்பட்டிருக்கின்ற அறிக்கையில் இருப்பதை நான் ஏற்றுக் கொள்ள முடியாத அளவுக்கு, நேர் மாறாக நடந்தது என்பதை நான் சொல்லி, அதிகாரிகள் எந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்களோ அதையும் இங்கே வெளியிடுவது கடமை. என்ற வகையிலே சொல்லி, இதை உங்களுடைய மன சாட்சிக்கும், நியாய உணர்வுக்கும் நான் உணவாகவே தர விரும்புகிறேன் என்று சொல்ல விரும்புகிறேன்.

காலையில் எத்தனை மணிக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஊர்வலம் புறப்பட வேண்டுமென்று அங்கே அனுமதிகேட்டு நடத்த இருந்தார்களோ அது தாமதமாகத் துவங்கியது என்பதும், பிற்பகல் என்று குறிப்பிட்டு, ஒரு மணிக்கே கூடி கூட்டம் அதிகமாகிவிட்ட காரணத்தால், அவர்கள் புறப்பட்டதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் புறப்பட்டதும், அங்கே பொறுப்பிலே இருந்தவர்கள் இந்த இரண்டு ஊர்வலங்களும் சந்திக்க முடியாத வகையில், அவர்கள் ஏற்பாடு செய்யத் தவறிய இவை இரண்டும் சந்திக்கக்கூடிய நிலைமையை அவர்கள் அனுமதித்ததன் விளைவு தான், இவ்வளவு பெரிய,

எல்லோருக்கும் மனவேதனை தரக்கூடிய நிகழ்வாக மாறிவிட்டது என்பதையும், இங்கே நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

அந்த வகையில் ராஜசேகரன் டி.ஐ.ஜி. அவர்கள் ஏனோ அப்படிப்பட்ட ஒரு அறிக்கையை அந்த நேரத்தில் வெளியிட்டார். அதைப்பற்றி அப்போதே எங்கள் கருத்தை வெளியிட முடியாத வகையில், நாங்கள் ஆட்சியில் இருந்தோம். இருந்தாலும் எங்கள் கட்சிக்காரர்கள் உண்மையை வெளியிட்டிருக்கிறார்கள். அது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது என்ற நிலையில், நான் அதிகமாக அந்தப் பிரச்சினைக்குள்ளே சொல்லாமல், நான் அதற்கு மேல் இப்போது சொல்ல முடியாதவனாக இருக்கிறேன்.

ஆனால், தேவையற்ற நிலையில், அங்கே சுடப்பட்டது என்பது மட்டும் உண்மை என்ற நிலைமையை, அனைத்து அரசியல் கட்சியினர்களும் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிடுவதில் தவறு இல்லையென்று கருதுகிறேன். யார் சுட்டார்கள், யாரிடமிருந்து துப்பாக்கி வாங்கி, எந்த அதிகாரி சுட்டார், ஏன் சுட்டார், அந்தச் சூடு நடைபெறாமல், அந்தத் துப்பாக்கிச் சூடு இல்லாமல், இருவர் சாகாமல் பலபேருக்குத் தொல்லை ஏற்படாமல், அந்த ஊர்வலங்களை ஒழுங்காக நடைபெறச் செய்ய முடிந்திருக்க முடியாதா, செய்து முடித்திருக்க முடியாதா என்பதையெல்லாம் இப்போது நான் தெளிவாக, விளக்கமாக சொல்ல விரும்பவில்லை என்றாலும், இப்படிப்பட்ட சந்தேகங்கள், தெளிவுகள் எல்லாம் நமக்கு உண்மையை உணர்த்தக் கூடிய வகையில், விரைவிலே கிடைக்கும் என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அப்போது இதே மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உண்மை அறிந்து, தங்கள் தீர்ப்பை வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கும். அப்போது நாடும் உண்மையை உணரும். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், நான் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை மாநகராட்சியில் நடந்ததைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். யாராக இருந்தாலும் சரி, இந்த அமைச்சரவையின் சார்பாகச் சொல்லிக்கொள்கிறேன்; அப்படிப்பட்ட தவறு நடந்திருக்குமானால், நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். அதிலே எனக்கு தாட்சண்யம் இல்லை என்பதை நான் சொல்லுவதை விட, எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள், அவராகவே சொல்லியிருக்கிறார்கள். இந்த செய்தி இப்போது தான் எனக்குத் தெரிந்திருக்கிறது. இதைப் பற்றி நான் நிச்சயமாக விசாரித்து, நடவடிக்கையை நியாயமான வகையில், எல்லோரும் ஏற்றுக் கொள்ளுகின்ற, வகையில் எடுத்துக் கொள்வேன் என்பதை மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்.

அதோடு, சென்னையிலே முன்பு திராவிட முன்னேற்றக் கழகம், மாநகராட்சியைக் கைப்பற்றுவதற்கு முன்பு, அண்ணாமலை மன்றத்திற்கு என்ன வரி என்பதையும், அதே சமயத்தில் ‘வால்டாக்ஸ் தியேட்டருக்கு’ என்ன வரி போட்டிருந்தார்கள் என்பதையும், மேடையில் பேசியவன் நான் ஒருவன் என்பதையும், அதைப் பற்றிக் கூறி, அரசு அவர்கள்

மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, மாற்றியமைக்க ஏற்பாடு செய்யப்பட்டதையும் நான் கூறிக் கொள்கிறேன்.

இதைப்போன்ற நடவடிக்கைகளிலே ஈடுபட்டவர்கள், சுயலாபத்திற்காக ஆனாலும் சரி, நோட்டை அடுக்கி, என்றெல்லாம் இங்கே சொன்னார்களே, அதைப்போன்று இருந்தாலும் சரி, எத்தகைய நிலைமைகளிலே அவைகள் நடத்தப் பட்டிருந்தாலும் சரி, அவற்றைப் பற்றி நிச்சயமாக, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும் என்றும், நான் செய்வேன் என்றும் சொன்னால், எல்லோரும் நம்புவீர்கள் என்பதிலே எனக்குச் சந்தேகம் இல்லை.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். 6 மாத காலமாக மதுரையிலே நடைபெறுகிறது பயிற்சிப்பள்ளி என்றார்கள். இப்போது என் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக நான் நன்றி செலுத்துவதோடு, அதற்கு யார் பொறுப்பானவர்களோ அவர்களைச் சட்டப்படி, எந்த எந்த வகையில் நடவடிக்கை எடுத்து, என்னுடைய கடமையைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வேன் என்று கூறுகிற போது, நான் ஒரு கருத்தை வேதனையோடு வெளியிட்டாக வேண்டும். இரண்டு, மூன்று மாதங்களுக்கு மேல் நாங்கள் ஆட்சியிலே இல்லை, இடையிலே இருந்த அதிகார வர்க்கம், அல்லது ஆட்சி செய்தவர்கள் ஏன் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டார்கள் என்பதைப் பற்றியும், சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்பதற்கும், எனக்கு வாய்ப்புக் கொடுத்தற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 3 மாதங்களிலே ஆளுநர் ஆட்சி நடைபெற்றிருக்கிறது. இந்த 3 மாதங்களில் ஏன் இதைக் கவனிக்கவில்லை, அந்த மூன்று மாதங்களிலே ஆட்சியிலே இருந்த அதிகாரிகள் ஏன் இதை கவனிக்காமல் விட்டு வைத்தார்கள் என்ற காரணத்தைத் தெரிந்து கொண்டு, அதைப் பற்றியும் நடவடிக்கை எடுப்பதற்கு நான் தயங்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக விரோதிகள் யார் என்று கேட்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஊர்வலம் என்று நடைபெறும் போது பலதரப்பட்டவர்கள் அந்த ஊர்வலத்திலே கலந்து கொள்வதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். முன்பெல்லாம் அய்யா பெரியார் அவர்கள் பொதுக்கூட்டம் கடற்கரையிலே பேசுவார்கள். பேசி முடிந்த பிறகு, ஒரு ஹோட்டல் தாக்கப்படும். மேலேயிருந்து, காய்ச்சிய எண்ணெயை அங்கே இருப்பவர்கள் வெளியே ஊற்றுவார்கள், கீழே இருந்து கற்கள், சோடா புட்டிகள் மேலே பறக்கும்! இந்தக் கொடுமையை யார் செய்கிறார்கள் என்பதல்ல; இது எங்கே போயிற்று என்றால், அய்யா பேசினார்கள்; இங்கே கலவரம் நடந்தது! என்று பேசியவர்கள் உண்டு நாட்டிலே. அதைப் போல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, யாரைப் பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமோ குறிப்பாக எந்த நபரை பழி தீர்த்துக் கொள்ள வேண்டுமோ, அதைச் செய்வதற்குச் சிலர் நாட்டிலே இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட வேண்டியிருக்கிறது. நாங்கள் குறிப்பிடுவது அப்படிப்பட்ட சமூக விரோதிகளைத்தான்! அது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகமாக இருந்தாலும் சரி, தி.மு.க. வாக இருந்தாலும் சரி, காங்கிரஸாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் (ஐ) ஆக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சியாக இருந்தாலும் சரி அல்லது ஏதோ மதச் சார்புள்ள அமைப்புகள் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் சரி, எங்கே இருந்தாலும், கொள்கைக்கு அப்பால் தங்கள் ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்ளக் கூடாது என்ற மனப் பக்குவத்தைப் பெறாதவர்கள் சிலர், அப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிற போது, அவர்கள் சமூக விரோதிகளாகிறார்கள்! நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இன்னும் சொல்லப்போனால், வேலூர் நாராயணன் அவர்கள் தலைமையிலே நடந்த ஒரு ஊர்வலத்தில், என்ன என்ன கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பது வரலாற்றிலே இருக்கிறது. வேலூர் நாராயணன் இதற்கு எந்த விதத்திலும் பொறுப்பல்ல; அவர் அப்படிப்பட்டவர் அல்ல; அப்படிப் பேசக் கூட அவர் யோசிப்பார், என்பதை, நான் குறிப்பிட்டாக வேண்டும்! வேலூர் நாராயணன் அதற்குப் பொறுப்பு என்று சொல்ல முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். சிலர் இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே, அது போன்ற நிலைகளிலே சமூக விரோதிகள் யார் என்பதை, நம்மைப் போன்ற அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஒரு முடிவு எடுத்து, நமக்குள் சில ஒருமை உணர்வுகளுக்கு இடம் தந்து, அதைப் பயன்படுத்திக் கொண்டு ஊர்வலம், நிகழ்ச்சிகள், போராட்டங்கள் நடத்துவது என்று முடிவெடுப்போமானால், சமூக விரோதிகள் இடையிலே நுழைவதை நம்மால் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான எண்ணிகையில் மக்கள் ஊர்வலத்திலே கலந்துகொள்கின்ற பொழுது, அந்த மக்களுக்கிடையிலே ஒரு சில நூறு பேராக இருக்கின்ற காவல்துறையைச் சார்ந்தவர்கள், அவர்களையெல்லாம் கண்டுபிடித்து விட முடியும், கண்டுபிடித்து பிரித்து ஒதுக்கி விட முடியும் என்று எதிர்பார்க்க இயலாது!

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், வெறும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்த பொழுது, ஒரு ஒட்டுமொத்தமான வேலை நிறுத்தம், தமிழகத்திலே நடைபெற வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டோம்! அந்த அறிக்கையிலே நான் ஒன்றைச் சேர்த்தேன். நமது கொள்கைக்கு விரோதமாகக் குழப்பத்தை விளைவிக்க விரும்புபவர்கள் நம்முடைய கூட்டத்திலே, ஊர்வலத்திலே கலந்து கொள்ளலாம்; அப்படி யாராவது இருந்தால் உடனே அவர்களைப் பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்று அறிக்கையிலே நான் வெளியிட்டிருந்தேன்.

ஆனால் 2ஆம் தேதி நாங்கள் அப்படி எதிர்ப்பார்க்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமைக்கு மற்றவர்கள் தயாராக இருப்பார்கள், சமூக விரோதிகள் இருப்பார்கள் என்று எதிர்ப்பார்க்காததன் விளைவு அங்கே விபரீதத்தை உண்டாக்கி, சமூக விரோதிகளுக்கு ஒரு வாய்ப்பைத் தந்து விட்டது.

இங்கே அதைப் பற்றி பேசும்பொழுது குறிப்பிட்டார்கள். காவல் நிலையத்தைத் தாக்குவது. உள்ளே புக முயற்சிப்பது, துப்பாக்கிகளைப் பறிப்பது, இவைகளையெல்லாம் செய்ய முயற்சித்து, அதன் காரணமாக, ஆகாயத்திலே சுட்டார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

நான் முதலமைச்சராக இருந்தாலும் கூட, நடந்த உண்மைகளைச் சொல்லியாக வேண்டும். கண் தெரியாத—பார்வையிழந்த ஒருவரை, ஒரு குற்றவாளியாக்கி அவர் காவல் நிலையத்திற்குள்ளே புகுந்து, இந்தப் பெரிய குற்றத்தைச் செய்ய முயற்சித்தார் என்று அவரைக் கொண்டு வந்து மாஜிஸ்ட்ரேட் முன் நிறுத்தினார்கள். அதற்குப் பிறகு, அந்த நீதிபதி கண்டித்த பிறகு அந்த வழக்கிலிருந்து அவரை விடுவித்தார்கள்.

இதை நான் இங்கே குறிப்பிடும்பொழுது, என் மேலேயே நான் கல்லை எறிந்து கொள்கிறேன் என்று சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். இருந்தாலும் உண்மைகளைச் சொல்ல வேண்டும். இந்தத் தவறுகள் நடைபெறுகின்றன. சில சமயங்களில் காவல்துறையைச் சார்ந்தவர்கள் தாங்கள் செய்துவிட்ட தவறுகள் ஏதேனும் இருந்தால், அவைகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்காக, சில புனைந்துரைகளைச் சொல்வது, நம் முன்னாலேயே எதிர்த்துப் பேசியிருக்கிற அந்த செய்திகள்தாம். எதிர்க் கட்சியினராக இருக்கின்ற பொழுது சொன்னவைகளை, இன்று நான் என் வாய் மூலமாக, உங்கள் சார்பாகச் சொல்வதாகத்தான் இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால், நான் இதை இங்கே சொல்லும்பொழுது, காவல்துறையினர் அத்தனை பேரும் நான் முன்பு சொன்னதைப் போல தவறான காரியங்களைச் செய்வதற்காகவே இருக்கின்றார்கள் என்று எடுத்துக் கொண்டால், தமிழகத்தில் இந்த அமைதிகூட இருந்திருக்க முடியுமா, இருக்க முடியுமா, என்பதனை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்புகளைச் சொன்னார்கள்; காவல்துறையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்; பத்தாயிரம் பேர்களைச் சேர்க்கப்போகிறோம் என்று சொன்னோம், எங்கே போயிற்று, காணோம்; சில நூற்றுக் கணக்கானவர்கள் தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் குறை கூறினார்கள். அந்தக் குறையை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதை விரைவிலே நிறைவு செய்வேன் என்பதைப் பணிவோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், சில சட்டப் பிரச்சினைகள் வரும்பொழுது, நம்முடைய நல்லுணர்வுகள் வேகமாகச் செயலாக்கப்பட முடியாமல் தடைப்படுத்தப்படுகின்றன என்பதை, இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். இப்பொழுது காவலர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால், மேற்கு வங்காளத்திலே எத்தனை ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான என்று சொல்ல வேண்டும். நான் கேள்விப்பட்டபொழுது இரண்டு இலட்சத்திற்கும் மேல், அங்கே காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்—நம்மிடத்தில் 47,000 அல்லது 48,000 பேர்கள் தான் இருக்கிறார்கள்.

அங்கே நடந்திருக்கின்ற, அது போல பீகாரிலே, மத்தியப் பிரதேசத்திலே, மற்ற இடங்களிலே நடைபெற்றிருக்கின்ற குற்றங்களையும், நடந்தவை உண்மையான குற்றங்கள் தானா என்பதை, இப்பொழுது நாம் சொல்ல முடியாது என்றாலும், பத்திரிக்கையில் வந்த செய்திகள், கேள்விப்பட்டவைகள் அங்கிருந்து தகவல்கள் என்று வைத்துக் கொண்டால், நிச்சயமாக, எவ்வளவோ குறைந்த அளவில்தான், தமிழகத்தில் குற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இதைச் சொல்வதால், குறைந்த அளவுக்குக் குற்றம் நடந்தால் அது பரவாயில்லை என்று நான் சொல்வதாக, யாரும் நினைத்துக்கொள்ள மாட்டீர்கள். எந்த அளவிற்குக் குற்றங்களைக் குறைக்க வேண்டுமோ, அதற்கு நாம் முயற்சிக்கிறோம். அந்தப் பொறுப்பு காவல்துறையினருக்கு மட்டும் தான் உள்ளது என்று, இங்கேயிருக்கின்ற நம்மில் யாரும் அந்த எண்ணத்திற்கு அடிமையாகிவிடமாட்டோம். ஒவ்வொரு தனி மனிதனும் இந்த முயற்சிக்கு ஒத்துழைத்தால்தான் நாட்டிலே குற்றங்கள், கலவரங்கள், குழப்பங்கள் குறைய முடியுமே தவிர, எங்கு குழப்பங்கள் வரும், எங்கே கலவரம் வரும், அதைப் பெரிய போராட்டமாக, போர்க்களமாக ஆக்கிவிடலாம் என்று விரும்புகின்றவர்கள் நம்மிடையே இல்லை – வெளியிலே இருந்தார்களானால், அப்படிப்பட்டவர்கள் இருக்கின்ற வரையில், நிச்சயமாக, நம்முடைய முயற்சி அவ்வளவு பெரியதாக வெற்றி பெற முடியாது.

அந்த வகையில், நான் ஒன்றை இங்கே என் கருத்து என்று அல்ல; அரசினுடைய கருத்தாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்! இந்த அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவு தீவிரமாக நடவடிக்கைகள் எடுத்து, எப்படி இவைகளைக் குறைக்க வேண்டுமோ, அப்படிக் குறைக்க வேண்டுமென்பது எங்களுடைய விருப்பம் என்பதை, நான் கொஞ்சம் ஆழமாக; அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள் நம்பியாக வேண்டும். அதற்குச் சில உதாரணங்களை நான் சொல்ல முடியும். சில பத்திரிக்கைகளில் சில செய்திகள் மிகைப்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கே படித்துக் காட்ட முடியாத செய்திகளை எல்லாம் நான் ஆதாரபூர்வமாக வைத்திருக்கிறேன்.

ஆனால் மன்றத்திலே இருப்பவர்களுக்கு உண்மை தெரிந்தாக வேண்டும் என்பதற்காகத் தான் அதைத் தெரிவித்தேன். இந்த வேதனையை எப்படி உங்களுக்குச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. பத்திரிக்கைகள் ஏதேதோ எழுதுகின்றன. மிகவும் பெரிதுபடுத்தி சமுதாயத்தின் முழு நிலையும் அப்படி ஆகிவிட்டது போல, எழுதப்படுவதற்கு வேதனைப்படுகிறேன். அதற்காகத்தான் உண்மை நிலையை எடுத்து உங்களுக்குத் தெரிவித்தேன். எனினும், இதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது தான் நமது பொறுப்பு என்று நான் சொன்னேன். இதுபோன்ற செய்தி பத்திரிக்கைகளில் மிகைப்படுத்தப்பட்டு வெளிவருகிறபோது, அவற்றைத் தடுக்க முடியாதவாறு காவல்துறை இருப்பதுபோல செய்தி வெளிப்படுத்தப்படும்போது தான் மற்றவர்களுக்கும் சில வேளை தவறான துணிச்சலை ஏற்படுத்துகிறது; நாமும் இப்படிச்

செய்தால் என்ன, என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறது; இந்த நிலையை நான் வேதனையோடு எண்ணிப் பார்க்கிறேன். சொல்லலாம்; பத்திரிகைகளில் இப்படிப்பட்ட செய்தி வரும்போது தான், பலருக்கு அதைப் பார்த்து இவ்வளவு கொடுமையா என சிலருடைய மனம் இரங்கலாம்; திருந்தலாம் என்று. ஆனால், இந்த செய்திகளைப் பலர் பார்க்கிறபோது நல்ல உணர்வு பெறுவதைவிட, தவறான வழியிலே இழுத்துச் சென்றுவிடக் கூடிய சூழ்நிலைதான் மிகுதியாக ஏற்படுகிறது. இளைஞர்கள் திருந்துவதைவிட மாறாக, செய்தித்தாள்கள் மிகைப்படுத்தி 'பருவப்பெண்', 'இத்தனை வயது' இப்படியெல்லாம் இருந்தார்கள் என்றெல்லாம் சொல்வது, அவர்களைத் தவறான பாதைக்குத்தான் கொண்டு செல்லும்.

இந்த நிலையை உணர்ந்து, பத்திரிக்கையிலே செய்தி வெளியிடுகின்றவர்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக, அதைப் பற்றி மக்கள் மனதிலே அருவெறுப்பு ஏற்படுகின்ற வகையில் மற்றவர்கள் மனதிலே பீதி ஏற்படாத வகையில், அதே நேரத்தில் மற்றவர்கள் எந்த நேரத்திலும் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்கின்றவர்களை எதிர்த்துத் தடுக்கக்கூடிய அளவுக்கு, அவர்களுக்கு துணிச்சலையும்; நல்லெண்ணத்தையும்; உண்டாக்குகின்ற அளவுக்கு வெளியிடவேண்டும் என்ற அளவுக்கு இங்கே இருக்கிற அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வேண்டிக் கொள்கிறேன்.

அதை நான் இங்கே இவ்வளவு அழுத்தமாகச் சொல்லுவதற்குக் காரணம், நாங்கள் இந்த இரண்டு மாத ஆட்சி நடத்துகின்ற இந்த இடைக்காலத்தில், எத்தனை குற்றங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் படித்துக் காட்டினார்கள். நான் இங்கே படித்துக் காட்டபோவது போட்டிக்காக அல்ல. நிலைமை எப்படி இருந்தது எப்படி இருக்கிறது என்பதை நாட்டு மக்களுக்கும், நமக்கும் தெரியவேண்டும் என்பதற்காக சொல்கிறேன் மற்றவர்கள் அதை கவனிக்காமல் விட்டுவிடுவார்கள் அல்லது அதைப்பற்றி மிகைப்படுத்திப் பேசுவது இல்லை அல்லது கவனிக்க மாட்டார்கள். "வேண்டாத மனைவி கைபட்டால் குற்றம், கால்பட்டால் குற்றம்!" என்ற அளவுக்கு சிலவற்றை மிகைப்படுத்தி செய்தி தருவதால், நல்ல எண்ணம் படைத்தவர்களுக்கும் ஆத்திரம் வருகிறது. அதன் விளைவாகத்தான், அதைப்பற்றிப் பேசுகிறார்கள்.

அடுத்து ஒட்டுமொத்தமாக பல பிரச்சினைகளைப் பற்றி பேசியவர்கள் ஆங்காங்கே நடைப்பெற்ற குற்றங்களைப் பற்றியும், காவல்துறையினர் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பற்றியும் சொன்னார்கள். ஒரு சில தினங்களுக்கு முன்பு, காமராஜ் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள், ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டு, பெண்கள் வெளியே வருவதற்கே அச்சமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். அதை ஒட்டித்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் இங்கே பேசியிருப்பார்கள் என்ற அந்த வகையிலேதான் சொன்னேன். அதை நான் இங்கே குறிப்பிட்டு சொல்லும்போது சட்டமன்றத்திலே

உள்ள நாமே இப்படிபட்டவைகளை எல்லாம் வேடிக்கைக்காகச் சொன்னாலும் கூட, பத்திரிக்கைகளிலே அதே மாதிரி வேடிக்கைக்காக என்று வந்தால், அதனால் ஒன்றும் விபரீதம் இருக்காது, சட்டமன்ற உறுப்பினர்களே அச்சப்படுகிறார்கள் என்ற தலைப்பிலே வருமேயானால், அது நாட்டுக்கு நல்லதல்ல. ஆகவேதான் நாம் நமது உள்ளக்கிடக்கையை வெளியிடும்போது, உண்மையிலே என்ன நினைக்கிறோமோ அதைச் சொல்லியாக வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து, என்னுடைய கருத்தை வெளியிட விரும்புகிறேன். தொழிலாளர்கள் பிரச்சினையில் இந்த அரசு காவல்துறையை எப்படி பயன்படுத்தும் என்ற கேள்வியை நண்பர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு நான் அரசின் சார்பாக கூறிக்கொள்ள விழைவது, இந்த அரசு தொழில் துறையைப் பாதுகாத்துத் தீரவேண்டிய அரசாகும். அதே நேரத்தில், இந்த அரசு அமைதியையும் காத்தாக வேண்டும். தொழிலாளர்களுடைய நலனையும் பாதுகாத்தாக வேண்டும். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், தொழில் முடக்கம், வேலை நிறுத்தம் என்கிற நிலைமையை அனுமதிக்க முடியாது என்ற வகையிலும், அதே நேரத்தில், தொழிலாளர்களுடைய உரிமைகள் பறிக்கப்படாமல் காப்பாற்றப்படுவதற்கு போலீஸ் பயன்படுத்தப்பெறும் என்ற வகையிலும், இந்த அரசினுடைய கொள்கையை நான் தெரிவிக்கக் கடமைபட்டிருக்கிறேன்.

சிலர் சொல்லலாம், இந்தப் பக்கம் பாதுகாப்புத் தருவதாகச் சொல்கிறார்கள், அந்தப் பக்கமும் பாதுகாப்புத் தருவதாக சொல்கிறார்கள் என்று தொழில்துறையைக் காப்பாற்ற வேண்டும் என்ற நிலைமையில், என்னைப் பொறுத்தவரையில், வேலை நிறுத்தம் என்பது இறுதியாக, தவிர்க்கமுடியாத நிலைமையில் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரு ஆயுதம் ஆகும் என்பேன். அந்த வகையில், இந்த அரசை எப்படி பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ, அப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம். தொழில் அதிபர்களிடம் உரிமைகளை எப்படிப்பெற வேண்டுமோ அப்படிப் பெறுவதற்கு பேச்சு வார்த்தைகள் மூலம் அல்லது சட்ட நுணுக்கங்களைப் பற்றி பேச்சு நடத்தி, எப்படி எப்படியெல்லாம் செய்யவேண்டுமோ அப்படியெல்லாம் செய்து, நமக்கு சாதகமாக ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, யாரோ சிலர் போராட்டத்தைத் தூண்டி விட்டு, ஒரு தொழிற்சங்கத்தில் 50 பேர்கள் 100 பேர்கள் இருந்தாலும் கூட, சங்கம் என்று வைத்துவிட்டார்களே, அவர்களை எப்படிக் கைவிடுவது என்று பெரிய சங்கங்கள் எல்லாம் ஆதரவு கொடுக்கிற ஒரு நிலைமை எல்லாம் இருப்பது, நாட்டுக்கு நல்லது அல்ல என்பது என் முடிவு.

ஆகவே, எப்படிப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும், தொழிலாளர்கள் குறைந்தது 60 சதவீதம் பேர்கள் ஒன்று சேர்ந்து சங்கங்கள் வேறுபாடின்றி, அவர்களை ஒன்று பட்டு, ஒரு முடிவுக்கு, அது 12(3) செட்டில்மெண்ட் என்று சொல்கிறார்களே அந்தவகையிலானாலும் அல்லது எவ்வளவு ஊதியம் எவ்வளவு, போனஸ் அல்லது எவ்வளவு அதிகப்படிக் கொடுப்பது என்பதையெல்லாம், எப்படி எப்படி வகுத்துக்

கொள்ள வேண்டுமோ அப்படி எல்லாம் அதை முடிவு எடுக்கும்போது 100க்கு 60 பேர்கள் உள்ள, அனைத்துச் சங்கங்களையும் சேர்ந்த தொழிலாளர்கள் வாக்களித்து அதை ஏற்றுக் கொள்வார்களேயானால், அது உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும். அது வேலைநிறுத்தம் ஆனாலும் சரி, ஒப்பந்தம் ஆனாலும் சரி அப்படித்தான் முடிவு எடுக்க வேண்டும் என்பதை, என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன். பலமுறை சொல்லியும் வந்திருக்கிறேன்.

அந்த வகையில், காவல்துறையைப் பொறுத்தவரையில், சொல்லப்போனால் தொழிற்சாலைகளை சிலர் அழிப்பதை அனுமதிக்க வேண்டும் என்று நிச்சயமாக இந்த மன்றத்தில் உள்ள யாரும் சொல்லமாட்டார்கள். அந்தச் சொத்துக்களைக் காப்பாற்றுவதற்கு அரசு காவல்துறையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று யாரும் சொல்லமாட்டார்கள். இந்த மன்றத்தில் உள்ள ஒவ்வொருவரும் அதை ஒப்புக் கொள்வார்கள். அதை இந்த அரசு செய்துதான் ஆக வேண்டும்.

ஆனால், அதே நேரத்தில் தொழிலாளர்களுடைய உரிமை பாதிக்கப்படாமல் அவர்களை விலைக்கு வாங்க முயற்சிக்கிறவகையில், துணிச்சலைத் தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதற்கான நிலைமையையும், இந்த அரசு உருவாக்கித் தராது என்பதையும், நான் தெள்ளத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன்.

அப்படி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பட்டினி கிடந்து அவதியுறும் நிலைமையில், வேறுவழியின்றி, தனித்தனியாக கையெழுத்து போட்டுவிட்டு தொழிலுக்கு செல்லலாம் என்கிற நிலைமையை உருவாக்குவதற்கும், இந்த அரசு நிச்சயமாக ஆதரவு தராது. அதைப்போலவே வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கும், இந்த அரசு நிச்சயமாக ஒத்துழைப்புத் தராது என்பதையும், இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இதைப்பற்றி நான் முன்பே சொல்லியிருக்கிறேன். அதாவது அனைத்துச் சங்கங்களிலே இருக்கிற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாக்களிக்க வேண்டும் என்று நான் சொன்ன யோசனையை, இங்கே இருக்கிற பொது உடைமை கட்சித் தோழர்களின் தலைவர்கள் விவாதிக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, வங்காளத்திலிருந்து வந்திருந்த வங்காள முதலமைச்சர் அவர்களிடம் இதைப்பற்றி நான் சொன்ன போது, இது நல்ல முறைதான், இதை முயற்சிப்பது நல்லதுதான், என்று சொன்னார்கள் என்று சொன்னது, என்னுடைய எண்ணத்திற்குப் பாதுகாப்பு மகிமையை ஏற்படுத்துகிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

அதே நேரத்தில், அரசாங்கம் தலையிட்டு யார் யார் இரகசியமாக வாக்களிக்கவேண்டுமோ வாக்களியுங்கள் என்று அந்தப் பொறுப்பை ஏற்பது எதிர்காலத்தில், ஏதாவது ஒரு சங்கம் அல்லது ஒரு கட்சிக்கு நாம் ஆதரவு தருவதுபோல ஒரு எண்ணத்தை உருவாக்கவோ அல்லது அப்படிப்பட்ட சிக்கலை உருவாக்கவோ காரணமாகிவிடும் என்பதால், அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்காமல், சங்கத்

தலைவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுதான் எங்கள் எண்ணம். என்றாலும், இதுபற்றி சட்டம் வர இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைப்பற்றி அனைத்து கட்சித் தலைவர்களுடன் பேசித்தான் முடிவு எடுக்கவேண்டும் என்று சொன்னாலும் கூட, அதையும் இந்த அரசு செய்யத் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விழைகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் எந்தக் கட்சியாக இருந்தாலும், அந்தக் கட்சிக்கு பாதுகாப்பும் அந்தக் கட்சி வளர வேண்டும் என்று விரும்புவதும் ஒரு அரசாங்கத்தினுடைய, அண்ணாவின் கொள்கைகளைப் பின்பற்றி வாழவேண்டும் செயல்பட வேண்டும் என்று விரும்புகிற ஒரு கட்சியின் தலையாய கடமையாகும். ஆனால், பிரிந்து வருவது, சேருவது, விலகுவது என்பதெல்லாம் தனிப்பட்டவர்களுடைய கருத்துக்களே தவிர, அதற்காக யாராவது வற்புறுத்துகிறார்கள் அல்லது வேலை செய்கிறார்கள் என்று எண்ணினால், அதைப்பற்றி விவாதிக்கவும் நான் நிச்சயமாகத் தயங்க மாட்டேன்.

நான் இதைச் சொல்லும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்ன எண்ணிக்கொண்டிருப்பார்கள் என்று எனக்குத் தெரியும். அவருக்காகவே சொல்கிறேன். அதைப்பற்றி நான், அவர்களோடு பேசத் தயாராயிருக்கிறேன். இந்த 3 ஆம் தேதி ஏதோ கூட்டம் நடைபெறப்போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் முதல் அமைச்சர் என்ற முறையில் நான் சொல்கிறேன். 3 ஆம் தேதி அந்த மாநாடு இல்லை. அதற்கு நான் இன்னும் ஒப்புதல் தரவில்லை. ஒருவர் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் இன்னொரு கட்சிக்குப் போய் சேர்ந்திருக்கிறார் என்றால், அது அவரது சொந்தப் பொறுப்பாகும். ஏன் விலகினார் என்பது அவருடைய தனிப்பட்ட பிரச்சினை. ஆனால், ஒரு கட்சியில் சேருகிறார் என்றால், அந்தக் கட்சியின் கொள்கைகளை ஏற்று சேருகிறார் என்பது அது வேறு. ஆனால், நாங்கள் அதற்காக இந்த ஆட்சியில் இருக்கிற சட்டப்பூர்வமான வலுவான அல்லது வாய்ப்பை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளமாட்டோம் என்ற உறுதியை, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்கு முதல் அமைச்சர் என்ற முறையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது அவர்கள் கட்சிக்குள் உள்ள பிரச்சினை. அதுபற்றி முதல் அமைச்சர் எதுவும் சொல்ல முடியாது. தனிப்பட்ட முறையில் எம்.ஜி.ஆர் . என்ற முறையில் வெளியே வந்து கேட்டால் பதில் சொல்லலாம்.

நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. துரைராமசாமி அவர்கள் ஒருக் கட்சியிலிருந்து விலகினார் அல்லது விலக்கப்பட்டார். அது அவருடைய பிரச்சினை. அவர் பதில் சொல்ல வேண்டும். அவர் இப்போது மன்றத்தில் இல்லை, இருந்தால் சொல்லியிருப்பார். அவர், அவர்களுடைய நண்பர்களைக் கூட்டி ஒரு மாநாடு நடத்தி, அதற்கு அகில இந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத் தலைவர் அல்லது தொண்டன் அல்லது பிரதிநிதி யாரோ ஒருவர் கலந்து கொள்ளவேண்டும். அங்கே அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அதற்கும் முதல் அமைச்சருக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. ஆனால், எம்.ஜி.ஆர். என்ற முறையில், நான் முதல் அமைச்சராக இருக்கிற நிலையில், நான் மனம் விட்டு சொல்லவேண்டும் என்றால், அதை எவ்வளவு தூரம் தடைப்படுத்த முடியுமோ, எவ்வளவு தூரம் தள்ளிப்போட்டு மக்கள் சிந்திக்க வாய்ப்பு கொடுக்க முடியுமோ, அந்தப் பணியை நான் செய்துகொண்டிருக்கிறேன் என்பதை மட்டும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரிக்கைகளில் செய்திகள் எப்படி வெளியிடப்படுகின்றன என்பதற்கு உதாரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

கோபி தாலுகா, சித்தாம்பாளையம் கிராமத்தில் சுமார் 13 வருடங்களுக்கு முன்னர் வீரப்பன்பாளையத்திலிருந்து குடி பெயர்ந்து வந்த பச்சைக் கவுண்டர் அங்கே 6 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி விவசாயம் செய்து வந்தார். அதாவது 5 நபர்களை வீட்டிற்குள் பூட்டி தீவைத்துக் கொளுத்தினார்கள் என்றார்களே அதைப்பற்றிய விளக்கம், அந்த நிலத்திற்கு அடுத்து அமைந்துள்ள நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகிய சென்னிமலைக் கவுண்டர் மற்றும் சென்னியப்ப கவுண்டர் ஆகியோருக்கும், பச்சை கவுண்டருக்கும் இடையே வாய்க்கால் காரணமாகத் தகராறு இருந்து வந்தது. இது தொடர்பாக போடப்பட்டிருந்த வழக்கில், பச்சைக் கவுண்டருக்குச் சாதகமாக கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வழக்கின் முதல் குற்றவாளியாகிய சுப்பிரமணியன் சென்னிமலைக் கவுண்டர் மற்றும் சென்னியப்ப கவுண்டர் மகன்களுக்கும், தனது இரு மகள்களையும் மணம் முடித்துக் கொடுத்துள்ளார். எனவே, கிராமப் பஞ்சாயத்து வழக்குகளில், இவர் சம்பந்திகளுக்கு ஆதரவாகவே நடந்துகொண்டு வந்திருக்கிறார். பச்சைக் கவுண்டர் குடும்பத்தில் உண்டான பகைமை தீரவில்லை. மேலும் 11 வருடங்களுக்கு முன்பு, முதல் குற்றவாளியாகிய சுப்பிரமணியத்தின் மகன் அருணாசலத்திற்கும் பச்சை கவுண்டர் மகள் கருப்பாயிக்கும் சுப்பிரமணியன் விருப்பத்திற்கு மாறாக, பச்சைக் கவுண்டரால் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது பின்னர் இந்தத் திருமணம் முறிவுற்றது. இதன் காரணமாக, இரு குடும்பங்களுக்கும் இடையே பகைமை இருந்து வந்தது.

இரண்டாவது குற்றவாளியாகிய ராஜனுக்கு முதல் குற்றவாளியாகிய சுப்பிரமணியன் மாமனார் ஆவார். சம்பவம் நடப்பதற்கு 3 நாட்களுக்கு முன்னதாகத் தீ விபத்தில் இறந்து போன முத்துச்சாமியினுடைய கோழி ஒன்று ராஜன் மாட்டுத் தொழுவத்தில் மேய்ந்தபோது, அதை ராஜன் குடும்பத்தினர் பிடித்து வைத்துக்கொண்டனர். அதனை, சம்பவத் தினமான 02.07.1980 அன்று காலை முத்துச்சாமியின் மனைவியும் அவரது தாயும் சென்று, அந்தக் கோழியைத் திருப்பிதரவேண்டும் என்று கேட்டபோது. ராஜன் மறுத்ததினால் தகராறு ஏற்பட்டது.

இதன் பிறகு ராஜன் தன்னுடைய மாமனாராகிய சுப்பிரமணியத்திடம் புகார் செய்திருக்கிறார். சுப்பிரமணியன் ராஜன் இருவரும் மூன்றாவது எதிரியாகிய பழனிச்சாமியை பச்சைக் கவுண்டர் மகன் முத்துச்சாமியின் நடத்தைகளைக் கவனித்து வரும்படியும், எல்லொரும் ஒன்றாக இருக்கையில், ஒரே முயற்சியில் அனைவரையும் தீர்த்து விடலாம் என்று கூறியுள்ளார். அதன்படியே ராஜன் 02.07.1980 அன்று இரவு 9.30 மணியளவில் சுப்பிரமணியத்தின் வீட்டிற்குச் சென்று மூவரும் ஒன்றுசேர்ந்து முத்துசாமி கவுண்டரின் வீட்டிற்கு தீ வைத்துக் கொளுத்துவது என்று முடிவு செய்தனர். அதன்படி முத்துச்சாமியின் வீட்டை நெருங்கியவுடன், அவரது வீட்டை பூட்டிவிட்டனர். அதன்பிறகு கூரை மீது மண்ணெண்ணையை ஊற்றி, வீட்டிற்கு தீ வைத்தார்கள். இதனால் வீட்டிற்குள் உறங்கிக்கொண்டிருந்த ஐவரும் தீயினால் மூழ்கடிக்கப்பட்டு கருகி இறந்து விட்டனர். இதில் பச்சைக் கவுண்டர் என்பவர் வயது 85 வீட்டின் முன்புறத்தில் படுத்திருந்தவர் ஏதும் செய்ய இயலாத நிலையில், தன்னைக் காப்பாற்றிக் கொண்டார். சற்றுத் தொலைவில் இருந்தவர்கள் தீ அணைப்பு முயற்சியில் ஈடுபட்டும் பயனில்லை. இந்த வழக்கு சம்பந்தமாகத் தொடர்புடைய சுப்பிரமணியம் 11.07.1980 அன்று உஞ்சலூர் கிராம முன்சீப்பிடம் சரணாகி, ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேலும், ராஜன், பழனிச்சாமி ஆகிய இருவரும் ஈரோடு புகைவண்டி நிலையத்தில் 12.07.1980 அன்று கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் மூவரும் தற்போது காவல்துறையின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இக்குற்றத்தில் பயன்படுத்தப்பட்ட தடயங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டுள்ளன. வழக்கு விசாரணையில் உள்ளது. அவைகளைப்பற்றி இங்கே கூறக்கூடாது என்பதால்தான் மேலெழுந்தவாரியாக இதைக் குறிப்பிட்டேன்.

இதை நான் இங்கே சொன்னதற்குக் காரணம், ஏதாவது ஒரு தீ வைப்பு அல்லது கொலை என்றவுடனேயே அதற்கு ஜாதி முலாம் பூசப்படுவது அல்லது மதச் சார்புடையது என்றுசொல்லி, அதனால் வேறுபட்ட நிலையைச் சொல்வது, அதைப்பற்றி கற்பனை செய்வது இயற்கையாக, வழக்கமாக ஆகிவிட்ட ஒரு நிலைமையில், இன்றையதினம் நாட்டிலே இருக்கின்ற பத்திரிக்கைகள் செய்திகள் வெளியிடுவது என்கிற ஒரு நிலைமை உருவாகி விட்டதோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது. எதற்கெடுத்தாலும், எங்காவது ஒரு குடிசைக்குள் ஒரு தாழ்த்தப்பட்டவன் இருந்தால், அவனை ஜாதி இந்துக்கள் கொடுமைச் செய்தார்கள் என்று சொல்வது. அதைப்போல, ஏதாவது ஒரு முஸ்லிம் நடந்து கொண்டு போயிருந்தால் போதும், அவர்மீது கடுமையான குற்றத்தைச் சாட்டுவது என்றெல்லாம் கற்பனையாகச் சொல்லப்படுகிறது.

இங்கே முஸ்லிம் லீக் உறுப்பினர் அவர்கள் பாலக்கோட்டைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் தெளிவாகச் சொல்லவேண்டும் என்று அவர்கள் விரும்ப மாட்டார்கள், காரணம் வழக்கு இருக்கிறது என்பது அவர்களுக்கும் தெரியும். ஒருசிறு கடையில் ஒரு பொருள் வாங்கச் சென்றவனுக்கும், விற்பனை செய்யக்கூடியவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு, மிகப்பெரிய போராட்டமாக மாறிவிட்டது என்பதை மட்டும், இங்கே எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

இதிலிருந்து உண்மை ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும், ஏதாவது இளைஞர்களுடையே ஏற்படுகிற தகராறுகளைப் பெரியவர்கள் சமாதானப்படுத்தி தீர்த்து வைக்க வேண்டுமே தவிர, அதற்காக வரிந்து கட்டிக்கொண்டு ஒரு சாதியை எதிராக்கிக்கொண்டு அல்லது ஒரு மத சார்புடையவர்களை எதிராக்கிக்கொண்டு வன்முறை நிகழ்ச்சிகளை உருவாக்க அங்கிருப்பவர்கள் முன்வந்தால், பெரியவர்கள் அதைத் தடுத்து நிறுத்திட வேண்டுமென்று நல்லுணர்வோடு செயல்பட நாம் அனைவரும் ஒன்றுபட்டு ஆவன செய்தாக வேண்டும்.

இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறும் போது இதைப் பற்றிக் கூறி இவைகளையெல்லாம் கூறுவது கண்டிக்க வேண்டுமென்பதற்காக அல்ல, எல்லோரும் கூடி இந்த நாட்டுக்கு நல்ல நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான் என்று கூறினார்கள். அவர்களுக்கு நன்றி கூறி, இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு சொல்லுகிறேன். பலமுறை வேண்டுகோள் விடுத்தது போல நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இதைப்பற்றி ஒரு முடிவு எடுத்தாக வேண்டும். குழுக்களை அமைத்து, அதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணினார்களானால், அவர்கள் கருத்துக்களைச் சொல்லலாம், இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்யும். நாட்டில் குழப்பம் இருந்தால் நன்மைகள் எதுவும் செய்ய முடியாது என்பதை அறிந்திருக்கிற நாம், நன்மைகள் செய்தே தீரவேண்டுமென்று விரும்புகிற நண்பர்கள் கூடியிருக்கும் இந்த மன்றம், அதை ஒழுங்குபடுத்த விரும்புகிறது என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே, அந்த வகையில் ஒன்றுபட்டு முயற்சித்து, சாதிச் சண்டைகள் மதவேறுபாட்டுச் சண்டைகள் இப்படிப்பட்டவைகள் இல்லாமல் செய்ய, நாம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு முனவரவேண்டும்.

இங்கே இதைக் குறிப்பிடும்போது, எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது அறிக்கை மூலமாக டாக்டர் ஹண்டே அவர்களைப் பதவியிலிருந்து நீக்காவிட்டால், நாங்கள் போராடுவோம் என்று சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளை உயிர்மூச்சாகக் கொண்ட ஒரு அமைப்பின் சார்பாக, அந்த அறிக்கை வந்திருக்கிறது. இதையும், இந்த மன்றத்தின் முன் நான் வைக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதற்காக அதை ஏற்றுக்கொண்டு, அதை அப்படியே செய்யவேண்டுமென்ற முறையில், நான் வேண்டுகோள் விட்டதற்கும், இதற்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெரிந்தாக வேண்டும். நான் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்ட நினைவுகள் ஏதோ ஒரு காலத்தில் இருந்த நிலை மறைந்து, எல்லோரும் தங்களை மாற்றிக்கொள்ளக்கூடிய நிலைமை நாட்டிலே தோன்றிய பிறகு இப்படிப்பட்ட நிலைமைகள் தேவைதானா, இது வளர்க்கப்பட வேண்டியதுதானா என்பதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அறிக்கையின் நகல் இருக்கிறது. இப்போது கிடைத்தவுடன் தருகிறேன். இல்லையெனில் நிச்சயமாக, நாளைய தினம் இந்த அவையில் வைக்கப்படும், அது

கு. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டம் என்று இருப்பதாக நினைவு.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி, ஆனால் அதிலே என்ன எழுதியிருக்கிறது என்பதை நான் சொல்லிவிடுகிறேன், சென்னை மாவட்ட திராவிடர் கழகம், தந்தை பெரியாருக்கு இணை யாரும் இல்லை, அவர் கற்பித்த கொள்கைக்கு இணை ஏதும் இல்லை. தலைவர் டி.எம். சண்முகம், எக்ஸ். எம்.சி., செயலாளர். காஞ்சி மணி, பா. ஜானகிராமன், 89 நாச்சிமுத்து நாயக்கன் தெரு. சென்னை–8. பா.ஜானகிராமன், உயர்திரு. காவல்துறை ஆணையர் அவர்கள், எழும்பூர், சென்னை–8. அய்யா, தமிழக அமைச்சரவையில் பார்ப்பனரை அமைச்சராக நியமித்ததை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், பார்ப்பன அமைச்சர் திரு. ஹண்டே அவர்களை விலக்கிக் கொள்ளவேண்டும் என்று திராவிட கழகச் செயற்குழு 29.06.1980 அன்று தீர்மானித்தது, இதுவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால் எங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கும் முறையில், செயற்குழு தீர்மானப்படி, ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி கழகத் தோழர்கள் கழகத் தலைவர் கு. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் ஊர்வலமாக, சென்னை அண்ணாசாலை, சிம்சன் எதிரில் இருக்கும் தந்தை பெரியார் உருவச் சிலைக்கு எதிரிலிருந்து காலை 9 மணிக்குத் தொடங்கி, வாலாஜா ரோடு வழியாகச் சென்று சட்டமன்றத்தின் முன் போராட்டம் நடத்த இருக்கிறோம். ஆகவே தாங்கள், மேற்கூறிய ஊர்வலத்திற்கு அனுமதி தரும்படி கேட்டுக்கொள்கிறோம். திராவிடக் கழகம் என்று அதில் போடப்பட்டிருக்கிறது. நீங்கள் சொன்ன விளக்கத்தையும் பத்திரிகைகள் தெளிவாக வெளியிடவேண்டும்.

அவர்கள் அறிவிக்கவில்லை என்பதை நான் மறுக்கவில்லை, ஆனால் அந்த விளக்கம் பத்திரிகைகளிலேத் தெளிவாக வெளிவந்தால், நாட்டுக்கு நன்மை பயக்கும் என்று கருதுகிறேன். யார் எப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்பது நாட்டுக்குத் தெரிந்தால், நாட்டுமக்கள் அவர்களைப்பற்றி புரிந்துகொள்வதற்கும், நாம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் போது நாட்டு மக்கள் தீர்ப்பு அளித்து அவர்கள் ஆதரவைத் தருவதற்கும் உதவும் என்பதற்காக, நான் இதை இங்கே தெளிவுபடுத்துகிறேன். நண்பர் வீரமணி அவர்களுடைய அறிக்கையிலே ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்கள். ஒரு முதலமைச்சர் அமைச்சர்களை நியமித்துக் கொள்வது அவருடைய உரிமை, அதிலே யாரும் தலையிட முடியாது, அதைப்பற்றி நாங்கள் பேசவில்லை என்றுகூட, அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போதுதான் அது எனக்கு நினைவுக்கு வந்தது. திராவிடர் கழகம் இல்லை என்று சொல்லும்பொழுது, திராவிடர் கழகம் என்று சொல்லி, பெரியார் அவர்களுடைய கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொன்னால், சமுதாய சீர்திருத்தக் கொள்கை என்று நம்மைப் போன்றவர்கள் எடுத்துக்கொள்ள முடியும் என்ற நிலையிலேதான், அதைக் குறிப்பிட்டேனே தவிர, மற்றவர்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டு அவர்களுக்கு

அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் குறிப்பிடவில்லை என்பதைச் சொல்லி அப்படிப்பட்டவர்கள் என்று சொல்லும் பொழுது, அதை நாட்டு மக்களுக்குப் புரியக்கூடிய வகையிலே, யார் யார் எப்படிப்பட்டவர்கள் என்பதை விளக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைக் கூறும்பொழுது, அதேபோன்று பல்வேறு பிரச்சினைகளிலே ஆங்காங்கே, இது மாமன்றம், ஆனால் கிராமங்களிலே தொல்லைகளை உருவாக்கி வருகிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

நான் வேதனையோடு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாட்டிலே இருக்கிற ஜாதிப் போராட்டங்கள் என்று சொன்னால், பல புள்ளிவிவரங்களை நாம் எடுத்துப்பார்த்தால், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் நாயுடுமார்களுக்கும் போராட்டம், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் போராட்டம், தாழ்த்தப்பட்டவர்களுக்கும், தேவர் வகுப்பை சார்ந்தவர்களுக்கும் போராட்டம், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மற்ற உயர்ந்த ஜாதி என்று சொல்லிக் கொள்கிறவர்களுக்கும் போராட்டம், இப்படி சொல்லி கடைசியிலே அவர்களுக்குள்ளேயும் போராட்டம் என்று வந்து, அதனுடைய விளைவுகள், அவர்களுக்கு ஆதரவா இவர்களுக்கு ஆதரவா என்ற நிலைமையிலே, மற்றவர்களுக்கிடையே தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்களுக்கிடையே ஜாதிப் போராட்டம் வந்துவிடுகிறது என்பதை, நான் இங்கே குறிப்பிட வேண்டி இருக்கிறது. இவைகளை நாம் ஒவ்வொருவரும், ஒரு பொறுப்பை நிறைவேற்றுவதற்கு துணிந்து துணிச்சல் இருந்தால்கூட ஒத்துழைத்து அதை வெற்றிகரமாகச் செய்வதற்கு விட்டுகொடுத்து செய்வோமானல், நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும் என்பதை நான் எதிர்பார்க்கிறேன். இங்கே விவசாயிகளைப் பற்றிப் பேசும்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் அமைதியாக இருக்கிறது என்று சொல்லி, அதைக் கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக, அதைக் கவனித்து மற்றவர்கள் யாரும் உள்ளே புகுந்து அந்த அமைதியை கெடுக்காமல் பார்த்துக் கொள்ள நாங்கள் எச்சரிக்கையோடு செயல் புரிவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லும்பொழுது ஒரு எச்சரிக்கை விடுத்தார்கள். கருநாடகத்திலே நடைபெறுவதைப்போல இங்கும் நடைபெறலாம் அந்த இடத்திற்கு அதற்கு வழி கொடுக்காதீர்கள் என்று எச்சரிக்கைக் விடுத்தார்கள்! அதைப்போலப் பேசுவதே நல்லது அல்ல! கருநாடகத்தில் நடப்பதைப் போல இங்கு நடப்பது என்றால், அப்படிப்பட்டவைகள் எல்லாம் நடந்த பிறகுதான் இந்த வாக்குறுதிகளைத் தந்தோம். வாக்குறுதிகள் தந்து விட்டுத்தான் எங்களால் முடிந்ததைச் செய்து நேற்றையதினம் அங்கே திட்டக் குழுவிடம் சென்று, அவர்களிடம் பேசி, அதைப்பற்றி மேலும் பல வகைகளில், என்னென்ன செய்ய வேண்டுமோ அதைத் தொடர்வதற்கு பேச்சைத் தொடர்ந்து நடத்துவது என்ற வகையிலே நாங்கள் வந்திருக்கின்றோம். ஆகவே, எங்களால் ஆனமுயற்சிகளை நாங்கள்

“இங்கே இருக்கின்ற நமக்கு நாட்டிலே இருக்கின்ற சாதாரண மக்களுடைய எண்ணம் தெரியும். யாருக்காவது அடிபட்டு தனக்கும் அடிபட்டால், முதலில் “என்னைக் கவனி” என்று சொல்வது மனித இயற்கை. அதுபோல், தங்களுடைய வீடுகளில் தீப்பிடித்திருப்பதை முதலில் அணையுங்கள் என்று சொல்வது கூட இயற்கையாகத்தான் இருக்கும்!”

பல வகைகளிலேயும் செய்து கொடுத்திருக்கிறோம். நாங்கள் என்ன வாக்குறுதி கொடுத்தோமோ அதை இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றிவிட வேண்டுமென்பதிலே, நாங்கள் மிகுந்த அக்கறையோடு இருக்கிறோம்.

ஆனால், இந்த மாமன்றத்திற்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், வசதி படைத்தவர்கள் எங்கெங்கே தங்களுக்கு, தங்களுடைய சொத்துக்களுக்கு, தாங்கள் சேர்த்து வைத்திருகின்ற அளவுகடந்த பொருள்களுக்கெல்லாம் ஆபத்து விளையலாம் என்று கருதுகிறார்களோ, அப்பொழுது உடனே அவர்களெல்லாம் ஒன்றுகூடி, சில தீர்மானங்களைப் போடுகிறார்கள். பிறகு, அதற்காக பழம் பெருந்தலைவர்களுடைய அறிக்கைகளையெல்லாம் வாங்கி வெளியிடுகின்றார்கள். அதற்குப் பிறகு ஒன்றுமறியாதவர்களைப் போராட்டத்தில் ஈடுபடுத்தி, எப்பொழுதும்போல் வசதிமிக்கவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்! தொல்லைகள் அவர்களை நெருங்குவது இல்லை துன்பங்கள் அவர்களைத் தாக்குவதும் இல்லை!

ஆனால், இதற்கெல்லாம் ஆளாகின்றவர்கள் அப்பாவி சாதாரண மக்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். போராட்டம், போராட்டம் என்பதெல்லாம் தேவைக்காகப் போராட்டம், தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளப் போராட்டம்; உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போராட்டம் என்றால், அது போராட்டம் என்று அர்த்தம். அதுவல்லாமல், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எதிலாவது ஈடுபடுவார்களேயானால், அதற்கு என்னைப்பொறுத்தவரையில் கலவரம் என்றுதான் பெயர் கொடுக்க விரும்புவேன். அந்தக் கலவரத்தை நிச்சயமாக நாட்டு மக்களிடையே பரப்புவதற்கு யார் விரும்பினாலும், எவ்வளவு வசதி படைத்தவர்களாக இருந்தாலும், அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது இந்த மாமன்றத்தின் மாபெரும் கடமை என்பதனை, நான் பணிவன்போடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அது ஆட்சியிலே இருக்கின்ற எங்களைப் பொறுத்தது மட்டுமல்ல; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் அனைவருடைய கடமை என்பதனையும், பொறுப்பு என்பதனையும், நான் இங்கே சொல்லிக்கொள்ள விழைகின்றேன்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இதற்காக நமது கடமைகளைச் செய்து, அவர்களுக்கு உண்மைகளைத் தெரிவித்து, அந்த ஒன்றுமறியாதவர்கள் தொல்லைகளுக்கு ஆளாகக்கூடிய சூழ்நிலைகளை நாம் தவிர்த்தாக வேண்டும்.

இங்கே ஒரு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. பினாமி நிலங்களை எடுத்து விநியோகிப்பது என்பது. உடனே பார்த்தால், குழு போடுகிறார்கள், யார் யார் அதிலே சேர்ந்திருக்கிறார்கள் என்று வரிசையாகப் பார்த்தால், அவ்வளவு பேரும் மிகப்பெரிய வசதி உள்ளவர்கள்; பல சொத்துகளுக்குச் சொந்தக்காரர்கள் என்பதும், அப்படிப்பட்டவர்களையெல்லாம் சேர்ந்து தீர்மானம் போடுகிறார்கள் என்றால், நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதுவரையில் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது இவர்கள் ஏதாவது சொன்னார்களா? எத்தனையோ சட்டங்களைக் கொண்டு வந்தார்கள் பெரியவர்கள், முன்னாலே இருந்தவர்கள். அவர்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள், நடைமுறைக்கு வர முடியாது என்ற நிலையிலே இருந்தபொழுது, பேசாமல் இருந்தார்கள். இது நிச்சயமாக அவர்களைப் பாதிக்கும், அவர்களுடைய பினாமிச் சொத்துக்கள் போய்விடும்; அது சாதாரண ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கப்பட்டு விடும் என்பது தெரிந்தவுடன், அவர்கள் ஒன்று கூடுகின்றார்கள். யாரைப் பயன்படுத்துக்கின்றார்கள்? நம்மையே பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களானாலும் சரி, மதச் சார்புடையவர்களானாலும் சரி, அல்லது சமுதாயத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்களாக இருந்தாலும் சரி இவர்களையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, நம் கை விரலை எடுத்து நம் கண்ணையே குத்துகின்ற நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை, இந்த மாமன்றம் எச்சரிக்கையோடு கண்காணிக்க வேண்டுமென்பதை மட்டும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நான் நாயுடு அவர்களையும் நேரிலே சந்தித்துப் பலமுறை பேசியிருக்கிறேன். அதைப் பற்றியெல்லாம் பேசிய பிறகு கொலை முயற்சியில் நேரடியாக ஈடுபட்டவர்கள் என்று சாட்சியத்தோடு இருக்கின்றவர்கள் மீது மட்டும்தான், அந்த வழக்குகள் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவே தவிர, மற்றவர்கள் மீதுள்ள வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதையே நாயுடு அவர்களிடமும் நான் சொல்லியுள்ளேன். அவர்களும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பிரச்சினையைக் கிளப்புவதற்கு அதிலே ஒன்றும் இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்ட நிருவாகத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசினுடைய கருத்தை நான் சொல்லியாக வேண்டும். இதுவரையில், மாவட்ட நிருவாகத்தில் யூனியன் பிரதேசம் என்று தனியாகவும், அதுபோல தாலுகா என்று தனியாகவும் இருக்கிற நிலைமை இடையே உருவாக்கப்பட்டது என்பதை இங்கே நான் கோடிட்டுக் காண்பித்து, அதிக விளக்கம் தெரிவிக்க வேண்டியதில்லை, எல்லோருக்கும் தெரியும். மீண்டும் அந்தத் தாலுகாக்களை அதிகப்படுத்தி, எத்தனை யூனியன்கள் இருக்கின்றனவோ அத்தனைத் தாலுக்காக்களாக ஆக்கி, அந்தப் பொறுப்பை ஒப்படைத்து, இரண்டையும் சமநிலைக்குக் கொண்டு வந்து செயல்படுத்தலாமா என்கிற ஒரு யோசனை

இருக்கிறது. அதைப் பற்றிய முடிவு எடுக்கும்போது, இங்கேயிருக்கிற அனைத்துக் கட்சிகளுடைய பிரதிநிதிகள் அனைவரையும் அழைத்துப் பேசி, அரசு முடிவெடுக்கும் என்பதையும், அழைத்துப் பேசி, அரசு முடிவெடுக்கும் என்பதையும் இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைச் செய்வதால், நிருவாகத்திலே நல்ல முறையிலே, விரைவாக காரியங்கள் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற ஒரு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. ஏனெனில், தாமதம், தாமதம் என்கிற பிரச்சினை எங்கு பார்த்தாலும் இருக்கிறது. உத்தரவிடுகிறோம், நடைபெறவில்லை, உத்தரவிடுகின்றோம் அது சரியாகச் செயல்படவில்லை, உத்தரவிடுகிறோம் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை. இப்படி இருக்கிற நிலைமையை மாற்றி ஒழுங்குபடுத்தலாமா, அதை எப்படி மாற்றுவது என்பதைப் பற்றி நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். அது ஒரு நிலைக்கு வந்தவுடனே நிச்சயமாக நான் குறிப்பிட்டபடி, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற தலைவர்களை அழைத்துப் பேசி, அரசு ஒரு முடிவெடுக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, நிருவாகத்திலே பல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்பதும், அந்த நிருவாகத்திலே மாற்றம் செய்யப்படும்பொழுது, பல பேருக்குப் பதவிகள் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதும் எங்களுடைய நோக்கமாகும்.

அதோடு, கணக்குப்பிள்ளை என்று இருக்கிற பதவிகளை நீக்கிவிட்டு, படித்த இளைஞர்களை அந்தப் பதவிக்கு நியமித்து, முழு நேர அரசு ஊழியர்களாக அவர்களை ஆக்கி, அவர்களிடம் அந்த பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. அதற்கேற்றவாறு, உங்களுடைய அனுமதியைப் பெற, விரைவிலே நடைமுறைப்படுத்த முயற்சிப்போம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னபடி, இந்த அரசுக்கு அந்த எண்ணம் உண்டு என்பதையும், அதற்காக ஒரு சில தலைவர்களிடம் நான் பேசுவதற்கு நேரம் குறிப்பிட விரும்பியபொழுது, அவர்களுக்கு சில வேலைகள் இருந்த காரணத்தால்தான் தேதி தள்ளிவைக்கப் பெறுகின்ற நிலைமை இருக்கிறது என்பதையும், தெரிவித்துக் கொள்கிறேன். விரைவிலே அந்த முயற்சி கை கூடும்போது, அனைத்து விவசாயச் சங்கங்களைச் சேர்ந்தவர்களையும் அழைத்து, அதைப் பற்றி விவாதித்து, தொடர்ந்து விவாதிக்க கூடிய அளவிலே இருக்கிற குழுவே தொடர்வதா, அல்லது புதிதாக நியமிப்பதா என்பதையும் தீர்மானம் செய்து, முடிவு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, அரசு அதிகாரிகளுக்கும், அரசைச் சேர்ந்த நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள அதிகாரிகளுக்கும் தொழில் நுட்பப் பயிற்சி நிர்வாகவியல் பொதுப் பயிற்சி அளிக்கவும். Madras Institute of Management என்ற பெயரில், சென்னையில் நிருவாகப் பயிற்சி இயல் நிறுவனம் ஒன்று அரசால்,

அண்மையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அரசின் கொள்கை வரம்புக்கேற்ப, சுய அதிகாரங்களுடன் இயங்கும் சங்கமாக இந்த நிறுவனத்தைப் பதிவு செய்ய இந்த அரசு உத்தேசித்துள்ளது. இப்பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான ஒரு கட்டடம் சென்னையில் இருக்க வேண்டும் என்பதற்காக, ஒரு கட்டடம் ஒதுக்குவற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிருவாக கலைப் பயிற்சிக் கழகத்திற்கு முழு நேர இயக்குநர் ஒருவரை நியமிக்கும் உத்தேசமும் இந்த அரசுக்கு உண்டு. இந்த ஆண்டு முதல், இந்த நிறுவனம் பணிகளைத் தீவிரமாக நடத்தினாலும் அனைத்திந்திய அடிப்படையில், நிருவாக கலை வட்டாரங்களில் முதன்மை இடம் பெறவும், அனைத்து நிலையங்களையும் ஒன்றாக இயக்குவதற்கும் அரசு எல்லாவிதமான உதவியையும் செய்ய முன்வரும். தமிழக அரசின் முதல்வராக குறுகிய காலமே பணியாற்றியபோதும், நிருவாக வரலாற்றில் இணையற்ற புகழையும், தமக்கென பெயரையும் நிறுத்தி நம் அனைவரையும் கௌரவித்துள்ள மறைந்த நம் அண்ணா அவர்களின் பெயரை, இந்த நிருவாகப் பயிற்சி நிலையத்திற்கு சூட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்பயிற்சி நிலையம் ஆங்கிலத்தில் “Anna Intitute of Management என்று அழைக்கப்படும். இதிலே மற்றொரு சிறப்பு என்னவென்றால் இந்த முழுப் பெயரை வழக்கமாக கூறுவது போல் சுருக்கினால் A.I.M என்று வரும். A.I.M என்று ஆங்கிலத்திலேயும் சொல்லுக்கு, தமிழில் ‘குறிக்கோள்’ என்று பொருள்படும். நம் லட்சியப் பாதையில், நம்முடைய குறிக்கோளை நாள்தோறும் நினைவுபடுத்தி நமக்குத் தெம்பூட்டும் வண்ணம் இந்தப் பெயர் இருக்கிறது. ஆங்கிலத்தில் Anna Institute of Management “அண்ணா நிருவாக இயல் நிலையம்” என்றும் அழைக்கப்படும் என்று கருதுகிறேன்.

அடுத்து, இங்கே காவல்துறை சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது காவல்துறையினருக்கு நாங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டை, குறிப்பிட்டுச் சொன்னார்கள். அந்த வாக்குறுதியை நாங்கள் மறக்கவில்லை என்பதையும், அதைச் சட்ட அமைப்புக்குட்பட்டு நிறைவேற்றுவதற்கு நாங்கள் எங்களுடைய கருத்தை வெளியிட்டு, மத்திய அரசுக்கு எழுதி இருக்கிறோம். அது வந்த உடனே அரசு அமைத்துக் கொடுக்கும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து காவல்துறைக்கு என, தமிழ்நாட்டிலே 873 காவல் நிலையங்கள் உள்ளன. அவைகளில் பீட் காவல்காரர்களுக்கு ‘வாக்கி டாக்கி’ என்னும் கருவி வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நிலையத்திற்கும் 2 கருவிகள் வீதம் மொத்தம் 1,746 செட்டுகள் வாங்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு ‘வாக்கி டாக்கி’ ஏறத்தாழ ரூ. 2,000 ஆகிறது. இதன் மூலம் 70 இலட்சம் ரூபாய் அரசுக்கு செலவாகும்.

காவலர்களுக்கு குறைந்த விலையில் அரிசி, பருப்பு, எண்ணெய், சர்க்கரை முதலிய உணவுப் பொருள்களைப் பங்கீட்டுக் கடைகள் மூலம், விநியோகிக்கும் திட்டத்தை அரசு பரிசீலித்தது. மேற்கு வங்கத்தில் அரசிதழ் பதிவு இல்லாத ஒவ்வொரு காவலருக்கும்

அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த 3 பேருக்கு குறைந்த விலையில் பொருள்கள் வழங்கும் திட்டத்தை அந்த அரசு செயல்படுத்தி வருகிறது. ஒரு வாரத்திற்கு ஒரு நபருக்கு அரிசி ஒரு கிலோ விலை 50 பைசா, சர்க்கரை 300 கிராம் 70 பைசா, பருப்பு 750 கிராம் விலை 60 பைசா, சமையல் எண்ணெய் 250 கிராம் ரூ. 2 என்ற அளவில் வழங்கப்பட்டு வருகிறது. மேற்கு வங்கத்தில் 1975–1976இல் இதற்கான செலவு ரூ.9.2 கோடி, 1976–1977இல் ரூ.6.47 கோடி, 1977–1978இல் ரூ.6.32 கோடி என்ற அளவிற்கு இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டுள்ளது. எனவே, அங்கேயுள்ள படைகளின் எண்ணிக்கையை விட நமது படைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இந்தத் திட்டத்திற்காகும் செலவு குறைவாக இருக்கும் என்ற கருத்தை மனதில் கொண்டு இந்தத் திட்டம் தமிழகத்தில் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் பணியாற்றும் காவலர்கள் இரவு நேரங்களின் வெளியே ரோந்து போகும் போது பாதுகாப்பிற்காக அவர்களுக்குக் கைத்துப்பாக்கிகள் வைத்து இருப்பது தேவை என்று கருதுகிறது. தற்போது மேல் அதிகாரிகளுக்கு மட்டும் இந்தக் கைத்துப்பாக்கி வழங்கப்படுகிறது. இனி இரவு நேரங்களில் முறைக்காவல் பணிக்காகப் போகும் காவலர்களுக்கு பாதுகாப்பிற்காக ஒரு காவல் நிலையத்திற்கு 5 கைத்துப்பாக்கிகள் வீதம் தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 873 காவல் நிலையங்களுக்கும் கைத்துப்பாக்கி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 55 காவல் நிலையங்கள் சென்னை நகரத்தில் உள்ளன. இதற்காக ஆகும் செலவு ரூ.23,73,250 என்று மதிப்பிடப்பட்டு இருக்கிறது.

குற்றப்புலனாய்வுத்துறை மாவட்ட தனிப்பிரிவு, இரயில்வே ஆகிய பிரிவுகளில் பணியாற்றும் காவலர்களுக்கு மாதம் ரூ.1.87 வீதம் இதுவரை வழங்கப்பட்டு வந்த துணிச் செலவுப்படி இனி மாதம் ரூ. 10 வீதம் உயர்த்தி வழங்கப்படும்.

ரூ.100 இலட்சம் செலவில் ஒரு நுண்அலை முறை அமைப்பு அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் மாவட்டக் காவல் தலைமையகங்கள், மாநிலக் காவல் தலைமையகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியும், இவ்வசதிகளைக் குற்றப் புலனாய்வுத் துறை பெருமளவில் பயன்படுத்திக் கொள்கிறது என்றாலும் மாவட்டக் குற்றப் புலனாய்வுத் தலைமையகங்களை மாநிலக் குற்றப் புலனாய்வுத் தலைமையகத்துடன் இணைக்கும் வகையில் தனியான தகவல் தொடர்பு முறை ரூ. 1,51,000 செலவில் அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இந்த வசதி நுண்அலைத் தகவல் தொடர்புடன் இணைக்கப்படும். மேலும் யு.எச்.எப் வசதியும் குற்றப்புலனாய்வுத் துறைக்குச் செய்து தரப்படும்.

மொத்தமுள்ள 873 காவல் நிலையங்களில் 640 காவல் நிலையங்கள் அந்தந்த மாவட்டங்களிலுள்ள காவல் தலைமையகத்துடன் வி.எச்.எப். முறையில் இணைக்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 233 காவல் நிலையங்களுக்கும் சுமார் ரூ.35 இலட்சம் செலவில் இவ்வாண்டிலேயே வி.எச்.எப். வசதி செய்யப்பட்டு மாநிலக் காவல் தலைமையத்துடன் இணைக்கப்படும்.

சென்ற ஆண்டு காவல்துறை மானியத்தின்போது அறிவிக்கப்பட்டவை நிறைவேற்றப்படவில்லை என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதற்கு நான் அதிகமாக விளக்கம் சொல்ல விரும்பவில்லை என்றாலும், நாங்கள் இட்ட உத்தரவுகள் எப்படி செயல் படுத்தப்பட்டன என்பதை நாடு அறியும். எப்படி ஒரு சிலர் ஒத்துழைக்க மறுத்தார்கள் என்பதையும் நாடும் அறியும், மன்றமும் அறியும். அந்த நிலைமையில், சில தவறுகள் ஆங்காங்கு ஏற்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப்பட முடியாமல் அல்லது நிறைவேற்றப்படாமல் தள்ளி வைக்கப்பட்டு இருந்தது. நான் இதைச் சொல்லிக்கொள்வதிலே வெட்கப்படவில்லை. ஆனால், இந்த முறை நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, அந்த நிலை மாறி; ஒழுங்காக; சரியாக; உத்தரவுகள் அமலாக்கப்படுகின்றன என்பதை, இந்த மாமன்றத்தில் நான் சொல்லிக் கொள்வது என் கடமை என்ற கருதுகிறேன். அந்த வகையில், தமிழகத்தில் சுமார் 373 காவல் நிலையங்களும் 185 புறக்காவல் நிலையங்களும் உள்ளன.

பெண் குற்றவாளிகளை விசாரணை செய்வதற்காக, பெண் காவலர்கள் அதிக அளவில் நியமிக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு ஏற்கெனவே 1978–1979இல் எடுத்த முடிவின்படி, கூடுதலாக இந்த ஆண்டு கீழ்க்கண்டவாறு பெண்காவலர்கள் நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. பெண் சப்–இன்ஸ்பெக்டர்கள் 60, பெண் தலைமைக் காவலர்கள் 60, காவலர்கள் 600. இதற்காகும் கூடுதல் தொடர் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ.50.04 இலட்சமாகும். தொடராச் செலவு ரூ. 1.08 இலட்சமாகும். இந்த நிதி ஆண்டில், இதற்காக ரூ.25.12 இலட்சம் ஒதுக்கி இருக்கிறோம்.

தற்போது காவலர் முதல் ஆய்வாளர் வரையில் உள்ள அனைவருக்கும், மாதம் ஒன்றுக்கு, இடையூறுப் படியாக ரூ. 20 வழங்கப்படுகிறது. இந்த முறையைப் பின்பற்றி, அந்தக் காவல்துறையில் உள்ள துணைக் கண்காணிப்பாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.30 மாதம் ஒன்றுக்கு அளிப்பது என்றும், காவல்துறை கண்காணிப்பாளருக்கு ரூ.50 வீதம் மாதம் ஒன்றுக்கு, இந்த 'ரிஸ்க் அலவன்ஸ்' இடையூறுப்படி அளிப்பது என்றும், அரசு முடிவு செய்துள்ளது.

இதன்மூலம், மாநிலம் முழுவதும் 263 காவல்துறை துணை கண்காணிப்பாளர்களும், 77 காவல்துறை கண்காணிப்பாளர்களும் பயன் அடைவார்கள். இதற்கு ஒவ்வொரு ஆண்டும் தொடர் செலவு ரூ.1,40,800. நாளுக்கு நாள் சாலை விபத்துக்களால் ஏற்படும் உயிர் இழப்பு அதிகமாக இருக்கிறது. இதற்கு முதல் காரணம் அதிவேகமாக வாகனங்கள் போவதாகும். இதைத் தடுக்க, பஸ், லாரிகளில் வேகத் தடுப்புகள் உடனடியாகப் பொருத்த வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இதை கண்காணிக்கவும், சென்னையிலும் மற்றுமுள்ள பெரும் நகரங்களிலும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும்; கண்காணிக்கவும், அதை சரியானபடி செயல்படுத்தவும், பொறியியல் வல்லுநர்களைக் கொண்ட ஒரு 'ட்ராபிக் செல்' காவல்துறையில் அமைக்கப்பட்டு, போக்குவரத்துப் பிரிவு விரிவாக்கப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது மதுவிலக்கைத் தீவீரமாகச் செயல்படுத்த தனியாக ஒரு பிரிவு இயங்கி வருகிறது. மேலும் காவல்நிலையங்களில் உள்ள காவலர்களும் மதுவிலக்கைச் செயல்படுத்தும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். மதுவிலக்கை மேலும், தீவீரமாகச் செயல்படுத்த, காவல் நிலையங்களில் உள்ள காவலர்களும், குற்றங்களைத் தடுப்பதிலும், கண்டுபிடிப்பதிலும், சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதிலும் ஈடுபடுத்தப்பட்டு, மது விலக்கைக் காவல்துறை சீரமைக்க காவலர்கள் எண்ணிக்கையைக் கூடுதலாக்கி, ஒவ்வொரு காவல்துறை மாவட்டத்திலும் கீழ்க்கண்ட காவல்துறை பணியாளர்கள் அடங்கிய ஒரு தனிப்பிரிவு 'செப்பரேட் செல்' வீதம் 20 காவல்துறை மாவட்டங்களிலும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. துணைக் கண்காணிப்பாளர்–1 ஆய்வாளர்கள்–2, துணை ஆய்வாளர்கள்–4 காவலர்கள் (ஆயுதங்கள்) 40, வாகனங்கள் 41, இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.60 இலட்சம் தொடர் செலவும், ரூ.30 இலட்சம் தொடராச் செலவும் ஆகும். இந்த நிதி ஆண்டில், ரூ.30 இலட்சம் தொடர்செலவும், ரூ.30 இலட்சம் தொடராச் செலவும் ஆகும்.

காவல்துறையினர் சொந்த வீடு கட்டிக்கொள்ள அரசு அளிக்கும் கடன் வசதி முழுப் பிரச்சினையையும் தீர்க்கக்கூடியதாக இல்லை. ஓய்வுபெற்ற காவல்துறையினருக்கும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு பரிசீலித்தது. பெருமளவில் இப்பிரச்சினைத் தீர்வு காணவும், காவலர்களின் வீட்டு வசதியைக் கணிசமாக பூர்த்தி செய்யவும் 'காவலர் வீட்டு வசதி கழகம்' ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது சென்னை நகரில் 85 மோட்டார் சைக்கிள் காவல்துறை துணை ஆய்வாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ரோந்துப் பணிகளை மேலும், விரிவுபடுத்தும் வகையில், காவலர்களின் உபயோகத்திற்கு சென்னை நகரிலுள்ள 51 காவல் நிலையங்களுக்கும், 51 மோட்டார் சைக்கிள் வழங்கிட அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு 5,61,000 ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காவல்துறை வாகனங்கள் பழையனவாகவும் பழுதடைந்தும் இருப்பதால் அவைகளுக்குப் பதிலாக, கீழ்க்கண்ட புதிய வாகனங்களை இந்த நிதியாண்டில் வாங்க அரசு முடிவு செய்துள்ளது. கார் ரூ.1,08,000, ரூ.52,50,000 ஜீப்புகள் (ஸ்டேஷன் வாகனங்கள் உட்பட) 14, லாரிகள், பஸ்கள், மற்ற வாகனங்கள் 50 ரூ.85 00,000, பிக்கப் வண்டிகள் 35 ரூ.8,40,000, மோட்டர் சைக்கிள் 80 ரூ. 9,60,000 ஆக சுமார் 1,56,58,000 ரூபாய் செலவில் 181 புதிய வண்டிகள் வாங்கப்படும்.

சென்னை உட்பட ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும், வீடு கொடுக்கப்படாத ஒவ்வொரு காவல்துறை அதிகாரிகளுக்கும், சார்பு நிலை பணியாளருக்கும் வீட்டுவாடகைப் படி தவிர, மாதம் ஒன்றுக்கு ரூ.50 அதிகமாக வழங்கப்படும். மாவட்டத் தலை நகரம் அல்லாத இடங்களில் பணியாற்றும் வீடு கொடுக்கப்படாத ஒவ்வொரு காவல்துறை அதிகாரிக்கும் சார்புநிலை பணியாளர்களுக்கும், வீட்டு வாடகைப்படி தவிர, மாதம் ஒன்றுக்கு ரூ.30 அதிகமாக வழங்கவும், அரசு முடிவு செய்துள்ளது. அதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும், அதற்கு ஆண்டு ஒன்றுக்கு

சுமார் 1,50,00,000 செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிதி ஆண்டில் ரூ.30 இலட்சம் தொடர் செலவும், ரூ.30 இலட்சம் தொடராச் செலவும் ஆகும்.

இதோடு, இன்னொன்றையும் நான் இங்கே சொல்லியாக வேண்டும். போக்குவரத்துத்துறை அமைச்சர் அந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார் என்றாலும், ஒன்றை நான் அழுத்தமாக, மீண்டும் நினைவுபடுத்தும் வகையிலே எடுத்துக்கொண்டாலும் சரி, சொல்லியாக வேண்டும். காவல்துறையினருக்குப் பொறுப்புடைய சில நிலைமைகளில், சில காரியங்களைத் தடுத்து நிறுத்தவும், தீமை பயக்கின்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்களைத் தடுத்து நிறுத்தவும், அவர்களைக் கைது செய்து கொண்டு போவதற்கும், எங்கெங்கே எந்த நிகழ்ச்சி நடக்கிறது என்பதை, உடனுக்குடன் தலைமைக் காவல் நிலையத்திற்குத் தெரிவிப்பதற்கும், வசதியுள்ள தொடர்புடைய கருவிகள் 'வாக்கிடாக்கி'யினை ஒவ்வொரு பேருந்திலும் பொருத்துவதற்கு நாங்கள் திட்டங்களை உருவாக்கி, பிறகு நண்பர் இராதாகிருஷ்ணன் ஐ.ஜி அவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று திரும்பி வந்தவுடன், அவருடைய அனுபவத்தைப் பயன்படுத்திக்கொண்டு, அதை அமலாக்க வேண்டுமென்று இந்த அரசு விரும்புகிறது.

எங்கே பஸ் நின்றுவிட்டாலும் அல்லது தாக்கப்பட்டாலும் அல்லது வேறு விபத்துக்கள் ஏற்பட்டாலும், உடனடியாக குறிப்பிட்ட இடத்திற்கு தகவல் அனுப்புகின்ற வாய்ப்பை ஏற்படுத்துவற்கு அது உதவும் என்ற வகையிலேயும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறோம். இதை வெளிநாடுகளில் மிகச் சாதாரணமாக டாக்ஸியில் முதற்கொண்டு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது மிகவும் பலன் உள்ளதாக இருக்கின்றது. பயணம் செய்கின்றவர்களும் பயப்பட வேண்டியதில்லை. அல்லது ஓட்டுநரோ, நடத்துநரோ அச்சப்பட வேண்டியதில்லை. ஏதாவது எங்கேயாவது திட்டம் போட்டு தாக்குவதாக இருந்தால் கூட, உடனடியாக 10 நிமிடங்களில் காவல்துறை அந்த இடத்திற்குப் போய் சேரும் அளவுக்கு தகவல் கிடைக்கும்படி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. ஆகவே, அதையும் இந்த அரசு ஆலோசனையில் வைத்திருக்கிறது என்பதை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகறேன்.

அடுத்து தீயணைப்பு பற்றிச் சொன்னார்கள். அதுபற்றிய எண்ணிக்கைளை எல்லாம் நாங்கள் எடுத்து வைத்தோம். ஆனால், அது நிறைவேற்றப்படவில்லை என்பது மட்டுமல்லாமல், விரும்பியபடி அவர்களுக்கு வாகனங்கள் கிடைக்கவில்லை என்பதையும் இயந்திரங்கள் கிடைக்கவில்லை என்பதையும், அதே நேரத்தில் கட்டடங்கள் கிடைக்கவில்லை என்பதையும் சொன்ன காரணத்தால், நாங்கள் எப்படியும் அவைகளை நிறைவேற்றியே தீருவது என்ற வகையில், உத்தரவிட்டு மார்ச் 31 ஆம் தேதிக்குள், முன்பு நாம் என்னென்ன திட்டங்களைத் தீட்டி இருந்தோமோ அதையும் மேற்கொண்டு குறைந்தபட்ச அளவுக்காவது செய்ய வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறோம்.

அடுத்து ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லி இருக்கிறார்கள். ஒரு இடத்தில் தீயணைக்கப் போகும்போது தண்ணீர் கொண்டு போகவில்லை என்றும், அதற்குக் காரணம் தண்ணீர் கொண்டு போகவேண்டிய இயந்திர வசதி இல்லை என்றும் சொன்னார்கள். இதிலே நடந்ததை நான் சொல்லியாக வேண்டும். தீயணைப்பவர்கள் தண்ணீர் நிரப்பிக்கொண்டு போய், ஒரு இடத்திலே தீயை அணைக்கவேண்டும் என்று முயற்சித்தபோது, இன்னொரு பக்கத்திலே இருந்தவர்கள் வந்து, தங்களுடைய வீடுகளிலே ஏற்பட்ட தீயை அணைக்க வேண்டும் என்று மல்லாட, அந்தத் தகராறு காரணமாக, தண்ணீர் எதற்கும் பயன்படாமல் வீணாகிவிட்டதன் விளைவாக தண்ணீர் இல்லாமல் போய்விட்டது! அதற்குப்பிறகு, தண்ணீர் எடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது, சர்ச்சை ஏற்பட்டு, அடிதடி மூண்டு, அங்கே வழக்குப்போட வேண்டிய அளவுக்குச் கூட, நிலைமை ஏற்பட்டது. அதனால் காயம்பட்ட அதிகாரிகள் மருத்துவமனைக்குச் சென்று வெளிநோயாளிகளாகத் தங்களைப் பதிவு செய்து அதே நேரத்தில் அந்த நோயாளித் தன்மையையும் ஆதாரத்தோடு நிருபித்து இருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். இது உண்மையா? பொய்யா? என்று எண்ணுகின்றபோது, கட்டுக்கதையாக யாரோ சொல்லி இருக்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். இங்கே இருக்கின்ற, நமக்கு நாட்டிலே இருக்கின்ற சாதாரண மக்களுடைய எண்ணம் தெரியும். யாருக்காவது அடிபட்டு, தனக்கும் அடிபட்டால், “முதலில், என்னைக் கவனி!” என்று சொல்வது மனித இயற்கை. அதுபோல தங்களுடைய வீடுகளில் தீப்பிடித்திருப்பதை, முதலில் அணையுங்கள் என்று சொல்வது கூட இயற்கையாகத்தான் இருக்கும். அதுமட்டுமல்ல, போகின்ற அதிகாரிகள் ஒரு குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களாக, இருந்து, அது முன்பே தெரிந்திருந்து எந்த இடத்திற்கு தீயை அணைக்க வந்திருக்கிறார்களோ, அந்த இடத்திலே இருக்கின்ற சில வீடுகளில் உள்ளவர்கள் அவர்களுடைய ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்களேயானால், உடனே அவர்கள் அவர்களுடைய ஜாதிக்காரருக்குப்போய் உதவி செய்தார் என்ற ஆத்திரத்திலே கூட, அந்த எண்ணம் தோன்றுவதற்கு இடம் உண்டு என்பதை, குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, பொதுத் தன்மையோடு எல்லாவற்றையும் நோக்குகின்ற எண்ணம் இங்கே வளருவதற்கு நாம் அனைவரும் ஒன்று பட்டு பணியாற்றவேண்டும்.

இந்த மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொண்டு வந்திருக்கிற நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்கள் என்ன எதிர்பார்த்தார்களோ, அதில் ஓரளவிற்கு என்னுடைய பதில் அவர்களுக்கு விளக்கமாகக் கிடைத்திருக்கும் என்று நான் கருதிகிறேன். எனவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

29.07.1980 அன்று காவல்துறை மீதான
மானியக்கோரிக்கை விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.



கொள்கை வென்றது!
மீண்டும் எங்களைத் தேடி ஆட்சி வந்தது!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்த, மாமன்றத்திலே இருக்கிற பல்வேறு கட்சிகளினுடைய தலைவர்களும், பிரதிநிதிகளும் தங்களுடைய மனதிலே தோன்றிய கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாக வெளியிட முனைந்து, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் குறைவாக இருந்தாலும், அதை எப்படியாவது சரி செய்து, அவர்கள் கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்ற நிலையில், தமிழக அரசின் சார்பாகவும், ஆளுநர் சார்பாகவும், நான், நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பேரவையிலே, ஆளுநர் உரையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் நான் முதலமைச்சர் என்ற பொறுப்பில் கலந்து கொண்டு மூன்று, நான்கு முறை பேசும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். இப்போதும் அந்த வாய்ப்பினைப் பெற்று, கருத்துக்களை வெளியிட நான் உங்களால் அனுமதிக்கப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் என்னென்ன இல்லை என்பதைப் பற்றி இங்கே கருத்துக்களை வெளியிட்டவர்கள், அதிலே சொல்லியிருப்பதைப் பற்றி எந்த அளவிற்குத் திறனாய்வு செய்து விளக்கங்கள் கூற முனைந்தார்கள் என்பதையும் கவனித்ததில், நான் மகிழ்ச்சி அடைகிறேன். இல்லை என்று சொன்னவர்கள், எந்தெந்த வகையில், கருத்துக்களை வெளியிட்டார்கள் என்பதைப் பற்றி, நான் என்ன எண்ணுகிறேன் என்று கருத்து வெளியிடுவது என்னுடைய மாபெரும் கடமையாகும்.

இந்த மாநிலத்திலே உள்ள மக்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மக்கள், நடுத்தர மக்கள், ஓரளவு வசதியோடு வாழ்கிற மக்கள், மிக வசதியோடு வாழ்கிற பணக்காரர்கள், முதலாளிகள், ஏகபோக முதலாளிகள் ஆகியோரைப் பற்றி ஒட்டுமொத்தமாக கருத்துகள் சொல்லப்பட்டன. 10–15 ஆண்டுகளுக்கு முன்னதாக ஒருவர் என்னென்ன சொல்லியிருந்தாரோ அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்பு என்னென்ன சொல்லப்பட்டு இருந்தனவோ, சொல்லப்பட்டு வந்தனவோ, அவைகளையே மேலும் தொடர்ந்து பேசுகின்ற வகையில், கருத்துகள் இருந்தன என்பதையும், நான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

எப்படிப்பட்ட வசதிகள் மக்களுக்கு இல்லை என்று எடுத்துரைத்தவர்கள் தங்களுடைய அல்லது தான் பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கிற தொகுதியின் மக்களின் கருத்தையும், அதோடு தமிழகத்தின் ஒட்டுமொத்தமான நலனைப் பற்றியும், அது மட்டுமல்லாமல், தங்களுடைய கட்சியின் கொள்கைக்கு ஏற்ப, என்னென்ன செய்து இருக்கிறார்கள், இல்லை என்பதைப் பற்றியும் கொஞ்சம் விளக்கமாகவே கூட, சிலர் பேசி இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அப்படி ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு கட்சிக்கும் அவர்களுக்கென்றே இருக்கும் கொள்கைகள், அதோடு இந்த மாமன்றத்திற்கு வருவதற்கு முன், எந்த மக்களால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்த மக்களுக்காகத் தங்கள் கட்சியின் சார்பாக, தங்களுடைய தனித்தன்மையோடும் கூடிய நிலைமையில், என்னென்ன உறுதிமொழிகள் தந்திருக்கின்றோமோ அவைகளை எப்படி நிறைவேற்றி இருக்கிறது அல்லது நிறைவேற்றப்படாமல் விடப்பட்டு இருக்கிறது. எப்படி நிறைவேற்றப்பட வேண்டும், என்கின்ற எண்ணத்தை உள்ளடக்கி இங்கே கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள்.

ஆனால், ஆளுநர் உரையின் மீது சொல்லப்பட்ட கருத்துக்கள் முதலாவதாக விவசாயிகளைப் பற்றியும், இப்போது பேசினார்களே, இறுதியில் எரிசாராயத்தைப் பற்றியும், அதைப்போலவே, ஆசிரியர்கள் பற்றியும், மாணவர்களைப் பற்றியும், கிராம அதிகாரிகளைப் பற்றியும், கல்வி நிலையங்களைப் பற்றியும் தொழிலாளர்களைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியும், அதே நேரத்தில், நான் எப்படி எல்லாம்; என் கொள்கைகளை மாற்றிக் கொண்டு வருகிறேன் என்பதைப் பற்றியும், திரு. உமாநாத் போன்றவர்கள் மிகக் காரமாகவும், வேகமாகவும் வழக்கம்போல சிரித்துக்கொண்டே பேசி, நம்மையும் சிரிக்க வைத்துப் பேசினார்கள் என்பதை எல்லாம் நான், என் உள்ளத்தில் பதிய வைத்துக் கொண்டு இருக்கிறேன்.

ஒரு கட்சி தன்னைப் பொறுத்தவரையில், ஒரு கொள்கையை உருவாக்கிக் கொள்கிறது அல்லது ஒரு கொள்கைக்கு தன்னைச் சொந்தமாக்கிக் கொள்கிறது. அந்த வகையில், தன்னுடைய கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், எந்த நோக்கங்களோடு மக்களிடையே சென்று, அவைகளையெல்லாம் சொல்லி, நீங்கள் ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்டு, அவர்கள் ஆதரவோடு இங்கே வருகிறோம். அந்த வகையில், நாங்கள் கொள்கையைச் சொல்லி, மக்கள் அதை நம்பி, மீண்டும் இந்த ஆட்சியில் நாங்கள் உட்கார அனுமதிக்கப்பட்டு இருக்கிறோம். அந்த வகையில், எங்களுடைய எண்ணத்தை இப்போது செயலாற்ற முயன்று கொண்டு இருக்கிறோம்.

உலகத் தமிழ் மாநாடு பற்றி இங்கேயுள்ள பல தலைவர்களும், உறுப்பினர்களும் பாராட்டவும் செய்தார்கள், சிலர் குறைகளையும் சொன்னார்கள். தனி மனிதன் முழுமையாக; குறை அற்றவனாக; இந்த உலகத்திலே யாருமே இல்லை என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறைவு உடையவர்கள்தான் மனிதர்களாக இருக்கிறோம். அது மட்டுமல்ல, நிறை தன்மை அதிகமாக இருந்தால், அதைச் செய்தோம் என்றால், இங்கே மாமன்றம் என்ற ஒன்று வேண்டுமா என்ற கேள்வியே எழுந்துவிடும். ஆக, தனி மனிதன் தவறு செய்யக்கூடும். நாங்கள் தவறு செய்வோம். தவறு செய்ய வாய்ப்பு இருக்கிறது. அதைத் தட்டிக் கேட்கக் கூடியவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் எதிர்க்கட்சிகளை மக்கள் தெரிந்து இங்கே அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

உலகத் தமிழ் மாநாட்டைப் பொறுத்தவரையில், எந்த அளவுக்குப் பெருமையாக இந்தத் தமிழ் நாட்டிற்கு அமைந்தது என்று, நான் சொல்ல விரும்பவில்லை. என்றாலும் சிறுமை ஏற்படவில்லை என்று கொஞ்சம் துணிச்சலோடு சொல்வேன். யாரும் தலைக் குனிய வேண்டிய அளவுக்கு, தமிழ்மக்கள் வெட்கப்பட வேண்டிய அளவுக்கு எந்தக் காரியமும் அந்த உலகத் தமிழ் மாநாட்டிலே நடைபெறவில்லை; நிகழவில்லை என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, அதோடு பலர் பாராட்டுகிறார்கள். இங்கே கலந்துகொண்டு பாராட்டியவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்ற பிறகு, ஏதோ அறிக்கைகள் வெளியிடுகிறார்கள். யாரையும் நாங்கள் கவனிக்கவில்லை; வசதி செய்து கொடுக்கவில்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் நேரிலே பார்க்கும்போது இப்படி ஒரு மாநாட்டை நாங்கள் பார்த்ததே இல்லை; இப்படிப்பட்ட ஒரு மக்கள் வெள்ளத்தை நாங்கள் கண்டதே இல்லை என்று சொல்கிறார்கள். எந்தவிதமான குற்றமும் அங்கே நடைபெறாமல், யாருக்கும் தொல்லை ஏற்படாமல், பெண்கள், தாய்மார்கள், வயது முதிர்ந்தவர்கள், இளம்பெண்கள், புதிதாகத் திருமணம் ஆனவர்கள், திருமணம் ஆகாதவர்கள் அத்தனை பேர்களும் அங்கே போலீஸ் எவ்வளவு குறைந்த அளவில் இருந்தாலும், எந்தத் தீமைக்கும் ஆளாகாமல், எந்தக் குற்றமும் எந்தத் தாக்குதலும் நிகழாமல், எந்தக் குற்றத்திற்கும் ஆளாகாமல், அவர்கள் மானத்தோடு அந்த விழாவிலே கலந்துகொண்டு எந்தக் குற்றச்சாட்டுக்கும் இடமில்லாமல், அவர்கள் எல்லாம் தங்கள் ஊருக்கு, இருப்பிடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான், இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இத்தகைய நிலையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றிருக்க, சரியான முறையில் செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டி, இங்கே எதிர்க்கட்சித்தலைவர் சொன்னார். பலர் இன்னும் சிறப்பாகச் செய்வதற்குரிய நிலைமைகளைச் செய்திருக்க முடியாதா என்ற அளவுக்குக் கருத்துக்களை வெளியிட்டார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவேளை எதிர்க்கட்சித் தலைவரவர்களைப் போன்ற அனுபவமிக்கவர்கள் எங்களோடு இருந்து ஒத்துழைத்து, உதவி செய்திருந்தால், இந்தக் குறைகள் எல்லாம்கூட, வராமல் இருந்திருக்குமோ என்று நினைக்கிறேன். தட்டிக் கேட்பதற்கு ஆள் இல்லை என்றல்ல. வந்தார்கள்; கலந்து கொண்டார்கள். எந்த அளவுக்கு நாங்கள் அதை நிறைவேற்ற முடியுமோ, அந்த அளவுக்கு அதை நிறைவேற்ற முனைந்தோம். எங்கள் நோக்கத்தில் களங்கம் இல்லை என்பதை, ஒவ்வொருவரும் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

முழு உருவில் சிலை வைக்கவில்லை; பாதிதான் வைத்திருக்கிறார்கள். ஏதோ பெயர் பலகையில் மாற்றிப் எழுதிவிட்டார்கள் என்றெல்லாம் கூறினார்கள். அவ்வளவு பெரிய நிகழ்ச்சியில் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிதான் அதற்கு ஆதாரமாகக் கிடைத்திருக்கிறது என்று எண்ணும்போது, உண்மையிலேயே நான்

பெருமைப்படுகிறேன். எத்தனையோ தவறு நேர்ந்திருக்கலாம். ஆனால், வீரமாமுனிவர் என்னும் அந்தப் பெயரைக் கூடச் சரியாக எழுதி வைக்கவில்லை என்றும் சொன்னார்கள். வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க நாங்கள் தயங்கவில்லை. கவனக்குறைவுதான் காரணம். அந்தக் கவனக் குறைவு எங்கே ஏற்பட்டிருந்தாலும் அது பாராட்டக்கூடியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், அதிகாரிகள் அங்கே தங்களுடைய பணிகளைச் செய்த போது, எவ்வளவு அக்கறையோடு, எவ்வளவு பொறுப்பு உணர்வோடு, யாருடைய மனத்திலும் எந்தவிதமான குறையும் ஏற்படாமல், அதை நிறைவேற்ற தங்களுடைய சொந்த வீட்டிலே நடக்கின்ற தங்கள் பெண்குழந்தைக்கு காலாகாலமாகக் காத்திருந்து, திருமணம் செய்ய முடியாமல் இருந்த நேரத்தில், நல்ல கணவன் வந்து சேருகிறான் என்ற மகிழ்ச்சியில், எப்படியோ இரவு பகலாகப் பாடுபட்டு, அந்தத் திருமணத்தை மிகப் பெருமையாக, மதிப்போடு நடத்த வேண்டுமென்று ஒரு தந்தை விரும்புவது போல அந்த அலுவலர்கள், சாதாரணப் பணியாளர்கள், கடைநிலை ஊழியர்கள் என்று சொல்லக்கூடிய அளவிலுள்ள ஊழியர்கள் அத்தனை பேர்களும் ஒன்று சேர்ந்து எவ்வளவு செம்மையாக, அந்தப் பணியைச் செய்தார்கள் என்பதை, நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்களுக்கெல்லாம் இந்த நேரத்தில் இந்த மாமன்றத்தின் சார்பாகவும், அரசின் சார்பாகவும், நன்றி கூறுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். காவல்துறையைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 8 ஆயிரம் பேர்கள்கூட அங்கே இல்லை. அங்கே வந்தவர்களுக்குத்தான் இது தெரியும். 20 இலட்சம் பேர்களுக்கு மேல் கூடி இருக்கக்கூடிய அந்த இடத்தில், நமக்கிருக்கின்ற காவல்துறையினரை வைத்துக் கொண்டு அப்படிப்பட்ட ஒரு மாநாட்டை நடத்த முடியுமா? என்ற கேள்வி எழுந்தால் வன்முறையில் நம்பிக்கை வைத்து, இந்த நாட்டையே ஒரு சீரான பாதையிலிருந்து மாற்றி வேறு பாதைக்கு இழுத்துச் செல்லக்கூடியவர்கள் ஆங்காங்கே இருந்தாலும்கூட எந்தவிதமான தவறுகளும் நேராத வண்ணம், காவல்துறையினரும் சொந்த உணர்வோடும், பாசத்தோடும் நடந்து அதேபோல், கட்டுப்பாட்டோடும், அக்கறையோடும், மிகவும் எச்சரிக்கையுடனும் செயல் பட்டார்கள் என்பதை இங்கே நான் சொல்லிக் கொண்டு, அவர்களுக்கும் இந்த மாமன்றத்தின் சார்பாக, நம்முடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று சாரணர் இயக்கம் போன்ற பல்வேறு இயக்கங்களைச் சேர்ந்த இளைஞர்களும், பள்ளி, கல்லூரி போன்றவற்றில் படிக்கின்ற மாணவர்களும் அங்கே வலிய வந்து, இந்த மாநாட்டுக்கு நாங்கள் உழைக்க வேண்டும், வேடிக்கை பார்ப்பதற்காக வரவில்லை, இதிலே கட்டுப்பாட்டைக் காக்கவேண்டும், இது எங்களுடைய கடமை என்ற வகையில், அவர்கள் எல்லாம் சேர்ந்து ஜாதி மத பேதங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, எந்தக் கட்சி என்ற உணர்வுகளை எல்லாம் கூடத்

தூக்கி எறிந்து விட்டு, ஒரே மனத்தினராக தமிழக மக்களுக்காக அங்கேப் பணியாற்றி இந்த 5ஆவது உலகத் தமிழ் மாநாட்டை எல்லோரும் பாராட்டுகின்ற அளவுக்கு உதவி செய்தார்கள் என்பதை எண்ணும் போது, அப்படிப்பட்ட அனைவருக்கும், மின்துறையைச் சார்ந்தவர்களுக்கும், மாநகராட்சியைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் அத்தனை பேருக்கும், இந்த மாமன்றத்தின் சார்பாக, நம் அனைவருடைய நன்றியினையும் பாராட்டுரையையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உலகத் தமிழ் மாநாட்டில் அதிகாரிகளினுடைய பரிந்துரையின் பேரில், நாங்கள் விரும்பியதைச் சொல்லி, இப்படி இப்படி இருக்க வேண்டும் என்பதையெல்லாம் அதை நிறைவேற்றுவதற்காகச் செலவழித்த பணத்தைப் பற்றி வெளியே எழுதுகின்ற போது பணம் விரயமாக்கப்பட்டது என்றும், சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்றும் எழுதி அதற்கும் ஒரு ஊழல் பட்டத்தை அடைமொழியாகச் சேர்ந்துச் சொல்லி இருக்கிறார்கள். இங்கே சொல்லப்படுவது ஒரு பங்கு என்றால், வெளியே இலட்சம் பங்கு பேசுகிறார்கள், எழுதுகிறார்கள் என்பதை நான் இந்த அவையின் கவனத்திற்கு கொண்டுவரும்போது ஒரு சில குறிப்புகளை அதாவது, என்னென்ன நடந்தது, சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அங்கே செலவழித்த பணம் எவ்வளவு என்பதை இறுதியில் சொல்கிறேன். என்னென்ன, எதற்காகச் செலவழித்தோம் என்பதை மட்டும் சொல்லி, என்னுடைய பணியைத் தொடங்குகிறேன்.

சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு 240 இலட்சம் ரூபாய். கட்டணக் கழிப்பிடங்கள் மற்றும் சாதாரணக் கழிப்பிடங்கள் கட்டுவதற்கு 94 இலட்சம் ரூபாய், தெரு விளக்குகள் அமைத்தலுக்கு 35 இலட்சத்து 25 ஆயிரம், மாநகராட்சியின் சுற்றுலா மாளிகைக் கட்டிடத்தில் கூடுதல் அறைகள் கட்டுவதற்கு 10.70 இலட்சம் ரூபாய், மரம் நடும் திட்டத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாய், வண்டியூர் கண்மாயை ஆழப்படுத்தும் திட்டத்திற்கு 10 இலட்சம் ரூபாய், தமுக்கம் திடலைச் சீர்படுத்தி நுழைவாயில் அமைத்தலுக்கு 3.40 இலட்சம் ரூபாய், நகர எல்லையில், நுழைவாயில் அமைத்தலுக்கு 3.80 இலட்சம் ரூபாய், குடிசைவாழ் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 3.17 இலட்சம் ரூபாய், குடிநீர்த் திட்டத்திற்கு 53.65 இலட்சம் ரூபாய் இவையெல்லாம் மதுரையிலே நிரந்தரமாக வாழ்ந்து கொண்டு இருக்கின்ற மக்களுக்காகவும், அங்கே வருகின்ற மக்களுக்காவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற நிரந்தரமான திட்டங்கள்.

இதோடு சுற்றுலா மாளிகையில் கூடுதல் அறைகள் கட்டுவதற்காக 1.50 இலட்சம் ரூபாய், குடிசை மாற்று வாரியத் திட்டத்திற்கு அதாவது அவர்கள் மூலமாகச் செய்யப்பட்டதற்கு 105.13 இலட்ச ரூபாய், மாரியம்மன் தெப்பகுளம் சீரமைப்பு திட்டத்திற்கு 6.31 இலட்சம் ரூபாய், தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தில் கூடுதல் தங்கும் விடுதி கட்டுவதற்கு 40 இலட்சம் ரூபாய், திருமலை நாயக்கர் மஹாலில் ஒலி, ஒளிக்காட்சி அமைப்பதற்காக 30.77 இலட்சம் ரூபாய், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திற்கு நிரந்தரமாகப் பயன்படுகின்ற வகையில் பேராசிரியர் விருந்தினர் மாளிகை கட்டுவதற்கு ரூ.9 இலட்சம், விருந்தினர் விடுதிக்குத் தேவையான கட்டில் மெத்தை நாற்காலி ஆகியவை வாங்குவதற்காக ரூ.6 இலட்சம் பல்கலைக்கழகத்திலுள்ள

சாலைகளுக்குத் தார் தளமிடுதலுக்கு ரூ.1.25 இலட்சம், ஆழ்குழாய்களுக்கு செலவழிக்கப்பட்டது. 80 ஆயிரம் ரூபாய் நிரந்தரப் பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 9,66,50,000 (ஒன்பது கோடியே அறுபத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரம்) என்பதை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்ற ஆராய்ச்சிக் கருத்தரங்கத்திற்காக, ரூ.25.50 இலட்சம், பொதுக் கருத்தரங்குகளுக்காக ரூ.10 இலட்சம், ஊர்வலத்திற்காக, ரூ.12.60 இலட்சம் கண்காட்சிக்காக, ரூ.46 இலட்சம் கலை நிகழ்ச்சிக்காக, ரூ.4.30 இலட்சம், பண்பாடு சுற்றுலா ரூ.6 இலட்சம். மலர் வெளியிடுவதற்காக, ரூ.6.50 இலட்சம், தபால் தந்தி செலவினங்களுக்காக, ரூ.10 இலட்சம், விளம்பரங்களுக்காக ரூ.2.50 இலட்சம், திரைப்படம் எடுத்ததில், ரூ.3 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. திரைப்படத்திற்காக ரூ.15 இலட்சம் செலவழித்து விட்டோம், ரூ.25 இலட்சம் செலவழித்து விட்டோம் என்றெல்லாம் குற்றம் சாட்டுகிறார்கள். எனக்கு வந்திருக்கிற குறிப்பின்படி, இதற்காக ரூ.3 இலட்சம் தான் செலவழிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சாலைகள் அமைத்தல் செலவுகளுக்காக, 4 இலட்சம் ரூபாய், நகரப் பொது சுகாதாரத்திற்காக ‘இது நிரந்தரப்பணி’ இதற்காக 24 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய், ஆக நிரந்தரப்பணிகளுக்காக, மதுரை மாநகராட்சி மூலமாகவும், பல்கலைக்கழகத்தின் மூலமாகவும், மொத்தம் 9,66,50,000 ரூபாய், மாநாட்டில் பல்வேறு நிகழ்ச்சிக்காக 1,58,19,000 ஆக மொத்தம் 11,24,69,000 ரூபாய், மாநாட்டுப் பணிகளுக்காகச் செலவழிக்கப்பட்டு, கணக்குகள் முடிக்கப்பட்டு தகுந்த தணிக்கைக்கும் உள்ளாக்கப்படும். அதை நான் இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், அதற்கு முக்கியக் காரணம் ஊழல் நடந்திருக்கும் என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டுக் கொண்டேயிருக்கிறது, அதுதான் காரணம். அதைத் தணிக்கை செய்த பிறகு மன்றத்தில் வைக்கப்பட்ட பின், ஊழல் இருக்கிறது என்று சொல்லப்படுமானால் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சொன்னால்; இந்த அரசு நிச்சயமாக அதை ஏற்கும் என்பதையும், இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மடியில் கனம் இருந்தால்தான், வழியில் பயம் என்று பழமையான பழமொழி ஒன்று சொல்வார்கள். எங்கள் மடியில் கனம் இல்லை. சிலர் பெட்டியில் வைத்திருக்கலாம், எங்கு வேண்டுமானாலும் வைத்திருக்கலாம். ஆனால், எங்கள் மடி சிறியது. கொடுக்கப்படுகிற சம்பளத்தை வாங்கி அதில் வைத்துக் கொண்டிருக்கிறோம், எங்கள் பணியினையும் முடிந்த அளவு செய்கிறோம்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல அப்படிப்பட்டவர்களை வேண்டுமானால் எல்லோரும் சேர்ந்து கண்டு பிடித்து, எங்கே வைத்திருக்கிறார்கள் என்று கேட்டு அதையும் நமக்கு, அரசுக்கு சொந்தமாக்கி கொண்டால், நிச்சயமாக இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் ஆங்காங்கே செய்ய வேண்டும் என்று கேட்கிற பணிகளைச் செய்து முடிக்கப் பயன் உள்ளதாக இருக்கும். ஆனால், எங்களைப்

பொறுத்தவரையில், நாங்கள் உண்மையைச் சொல்கிறோம். அப்படி இல்லை என்றால் எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்ற வகையில் அச்சமே இல்லாமல் எங்களால் இருக்க முடியாது. எனவே, எங்களுக்கு அச்சமே இல்லை. அடுத்து விவசாயிகளைப் பற்றி நான் ஒன்று கூற விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு விவரங்களைப் பற்றி தனிப்பட்ட முறையில், இந்த மன்றத்தில் இருக்கிற ஒவ்வொருவரும் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அத்துணை பேருக்கும் நான் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற முறை இதேபோன்ற பிரச்சினை வந்தபோது, முக்கால் மணி நேரம் பேசி முடித்து வைத்துச் சென்றேன். அது போன்று இப்போழுது அல்ல. நேரம் நிறையத் தேவைப்படுகிறது.

ஆகவே, இவைகளையெல்லாம் நான் நிச்சயமாக இந்த முறை வெளியிட வேண்டும். எரிசாராயம் பற்றியும் என்னைப் பற்றியும் நேரடியாக, எதிர்க்கட்சித் தலைவர் அந்தக் குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கியிருக்கிறார்கள். ஆகவே, யார் என்ன செய்தார்கள், முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன செய்தது ? நாங்கள் என்ன செய்தோம் ? என்ன உத்திரவிட்டோம் ? எதனால் அதிகாரிகள், பணி மாற்றப்பட்டது, எந்தெந்த வகையில் முன்னால் இருந்தவர்கள் எதை எதைச் செய்தார்கள், எப்படிச் செய்து மக்களுக்கு நன்மை செய்தார்கள் ? நாங்கள் எப்படிச் செய்கிறோம் ? என்பதையெல்லாம் புள்ளிவிவரங்களோடு நான் சொல்ல வேண்டும். அந்த கோப்புக்களை நான் படித்துக் காண்பிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்.

நேற்றையதினம், நான் பேசுவதற்கு நேரம் இல்லையென்ற வகையிலே இன்னும் தொடர்ந்து பேசுவதற்கு அனுமதி தந்ததற்கு நன்றி கூறுகிறேன். விவசாயிகளுடைய பிரச்சினை பற்றியும், விவசாயச் சங்கத் தலைவர்கள் எந்த அளவில் இந்தப் பிரச்சினையை எடுத்துச் செயல் படுகிறார்கள் என்பதைப் பற்றியும், அவர்களுடைய போராட்டங்களின் விளைவாக, தமிழகத்திலே என்ன நிலைமை உருவாயிற்று என்பதையும் இங்கே பல்வேறு மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அந்த வகையில் நான் ஒரு விளக்கத்தைத் தரக் கடமைப்பட்டவன்; இந்தப் பிரச்சினை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் உருவாகியிருந்தாலும், குறிப்பிடத்தக்க வகையில் இந்தப் பிரச்சினை எப்பொழுது தொடங்கிற்று, அதுவும், வேகமாக எந்த அடிப்படையில் என்பதை, இங்கே நான் குறிப்பிட வேண்டும். பின்னாலே நான் சொல்ல இருக்கிற விளக்கத்திற்கு அது உதவிகரமாக அமையும் என்பதை எண்ணி நான் அவைகளைச் சொல்லக் கடமை பட்டிருக்கிறேன்.

உழவர்களுக்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 8.25 காசு வீதத்தில் முன்பு கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. இது ஓராண்டில் ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு பயன் திறனுக்கும், ஆண்டுக் குறைந்த கட்டணத் தொகையாக 17.50 காசு செலுத்த வெண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டது. இந்தக் கட்டண விகிதம் 23.12.1969ஆம் நாளில், பொதுப் பணித் துறையில் வெளியான

2304ஆம் எண் உள்ள அரசு ஆணையில், பிறப்பித்த உத்தரவுகளின்படி, யூனிட் ஒன்றுக்கு 10 காசுகளாகத் திருத்தி அமைக்கப்பட்டது.

திருத்தப்பட்டக் கட்டண விகிதம் 01.01.1970ஆம் நாளில் இருந்து அமலுக்கு வந்தது. யூனிட்டு ஒன்றுக்கு 1.75 காசு கட்டண உயர்வும், 20 சதவிகித வரிவிதிப்பும் செய்யப்பட்டிருப்பதை கோயம்புத்தூர் மாவட்ட விவசாயச் சங்கம் எதிர்த்தது. இது தொடர்பாக அரசுக்கு முறையீடு வந்ததன் பேரில், அரசு பொதுப் பணித் துறையில் 07.05.1970ஆம் நாளிட்ட 845 ஆம் எண்ணுள்ள அரசாணையில், கீழ்க்காணும் கட்டண விகிதங்களை அறிவித்தது. 75 அடியும் அதற்கு மேற்படும் ஆழமுடைய கிணறுகளிலிருந்து. நீர் விசை ஏற்றம் செய்வதற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு யூனிட்டு ஒன்றுக்கு 9 காசு, ஏனையவற்றிற்கு யூனிட் ஒன்றுக்கு 10 காசு என்று உயர்த்தப்பட்டது. இப்படி உயர்த்தப்பட்டதன் விளைவாக, ஆங்காங்கே பிரச்சினைகள் வெவ்வேறு வகையில் உருவாயின என்பதைச் சொல்லி, உழவர்களிடம் இருந்து மேலும் முறையீடு வந்ததன் பேரில், முன்னாள் முதல் அமைச்சர் இன்னாள் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் 21.05.1970ஆம் நாளில் கோயம்புத்தூர் மாவட்ட விவசாயச் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதுபற்றி ‘இந்து’ நாளிதழில் வெளியாகிய செய்திகளும் இங்கே இணைக்கப்பட்டிருக்கிறது என்றாலும் அதை நான் இங்கே குறிப்பிடவில்லை.

அதனையடுத்து பொதுப்பணித் துறையில் 02.07.1970 நாள் 1318 எண் உள்ள அரசாணையில், குறிப்பிட்ட உத்தரவின் மூலம் மின் இணைப்பு வழங்கியுள்ள கிணறுகளின் ஆழத்தைக் கருதிப்பாராமல், எல்லா கிணறுகளுக்கும் யூனிட்டு ஒன்றுக்கு 9 காசு என கட்டண விகிதம் வரையறுக்கப்பட்டது. 01.01.1972ஆம் நாள் முதல் விவசாயக் காரியங்களுக்கான மின் கட்டணம் மேலும் உயர்த்தப்பட்டது. அதாவது யூனிட் ஒன்றுக்கு 9 காசும், மின் பயன் வரி 1.8 காசு ஆக, 10.8 காசு விதிக்கப் பட்டது. அதாவது யூனிட்டு ஒன்றுக்கு விதிக்கப்படும் கட்டணம் 10.8 காசிலிருந்து 12 காசு ஆக உயர்த்தப்பட்ட உடன், செலுத்தப்பட வேண்டிய ஆண்டு குறைந்த கட்டண தொகையும், 17.50 லிருந்து 20 ஆக உயர்த்தப்பட்டது.

இது தொடர்பாக விவசாயிகள் பரவலாகப் போராட்டம் நடத்தினார்கள். குறிப்பாக, கோயம்புத்தூர் மாவட்டத்தில் போராட்டம் பெருமளவில் நடைபெற்றது. அங்கே மாட்டு வண்டிகளை வைத்து முற்றுகை போராட்டம் நடத்தினார்கள். அதன் பின்னர் 01.08.1972 நாளிட்ட 1556 எண்ணுள்ள அரசாணையில் பிறபிக்கப்பட்ட உத்தரவின்படி, மின் கட்டணம் திருத்தி அமைக்கப்பட்டு அது 01.01.1972 நாள் முதல் செயலக்குக் கொண்டு வரப்பட்டது. அதன்படி திருத்தப்பட்ட கட்டண விகிதம் மாதம் ஒன்றுக்கு, முதல் 100 யூனிட்டுகளுக்கு, யூனிட்டு ஒன்றுக்கு 15 காசு எனவும், 100 க்கு மேற்பட்ட எல்லா அளவுக்கும், யூனிட்டு ஒன்றுக்கு 11 காசு எனவும், கட்டணம் விதிக்கப்பட்டது. 1974 அக்டோபர் முதல், இந்த கட்டண விகிதம் மேலும் திருத்தி அமைக்கப்பட்டு பயன்கொள்ளும் அளவு ஆகும் யூனிட் ஒன்றுக்கு 12 காசு என்று விதிக்கப்பட்டது.

1975ஆம் ஆண்டு செப்டம்பரில் இருந்து இந்த கட்டண விகிதம் மேலும் திருத்தி பயன்கொள்ளும் எல்லா அளவுக்கும் யூனிட் ஒன்றுக்கு 16 காசு என்று விதிக்கப்பட்டது. ஆனால் ஆண்டு ஒன்றுக்கு செலுத்தும் குறைந்த அளவு கட்டண விகிதம் மாற்றப்படாமல் ரூ. 20 என்றே, அதே விகிதத்தில் இருந்தது.

இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக அதிகப்படுத்தப்பட வேண்டிய நிலையில், அதிகப் படுத்திய பிறகு, அவர்களுடைய தேவைக்கேற்ப, இந்தக் கட்டண விகிதம் இல்லை என்கிற வகையில் போராட்டம் தொடங்கியதும், அதன் விளைவாக, என்னென்ன நிலைமைகள் உருவாயிற்று, நாட்டு மக்களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்பட்டன என்பதை, இங்கே நான் குறிப்பிட வேண்டிய நிலையில் இருக்கிறேன். அதிலே ஒன்று, இன்றைய தினம் யார் யார் இந்த விவசாயப் போராட்டங்களுக்கு ஆதரவு கொடுக்கவில்லையோ, அவர்கள் எல்லாம் அன்றைக்கு ஆதரவு கொடுத்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

அந்த நிலையில், மின் கட்டணத்தைப் பற்றி மாறுதல் இல்லை என்பதை இங்கே எடுத்த கூறியதற்குப் பிறகு, போராட்டங்கள் உச்ச கட்டத்தை அடைந்தது என்பதையும், மன்றாடியார் தலைமையிலே அச்சங்கத்தின் பிரதிநிதிகளுடன் மூன்றாவதாக எதிர் சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றபோது கூட, முதலமைச்சராக இருந்த டாக்டர் கருணாநிதி தன்னுடைய உறுதியான நிலையை விளக்கினார். விவாதத்தின்போது, அமைச்சர்கள் திருவாளர்கள் மாதவன், சாதிக்பாட்சா ஒ.பி. இராமன் போன்ற அமைச்சர்களும் அங்கே இருந்தனர்.

செய்தியாளர்களிடையே பேசுகையில், டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மின் கட்டணத்தில் மாறுதல் செய்ய அரசுக்கு இயலாது என்று, சங்கப் பிரதிநிகளிடம் தெரிவித்து விட்டதாகக் கூறியிருக்கிறார்கள். தேவைப்பட்டால், மின் கட்டணம் செலுத்தாமல் பாக்கி வைத்து இருப்பவர்கள் 1 மாதத்திற்குள்ளாக, யூனிட் ஒன்றுக்கு 9 காசு வீதத்தில் அதைச் செலுத்தி விடலாம். இதற்கிடையில், அந்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அதிகாரிகளிடத்தில் மனு செய்து கொண்டால், அந்த மாவட்டத்தில் எந்தெந்தக் கிணறுகளில் 75 அடி ஆழத்திற்கு மேற்பட்டு விசையேற்றம் செய்யப்படுகிறது என்பதைக் குறித்த கணக்கை, அதிகாரிகள் எடுப்பார்கள் என்றும் கூறினார்கள்.

சங்கத்தின் கோரிக்கைகளை அரசு ஒட்டு மொத்தமாகத் தள்ளிவிடவில்லை என்று அந்தப் பிரதிநிதிகளிடம் கூறியதாகவும் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும், மின்சார வாரியத்திற்கு என்று பெரும் செலவு ஏற்பட்டு இருப்பதாலும், அதிலும் குறிப்பாக, சுமார் 4 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியப் பட்டியலில் தொகை கூடுதலாக உயர்ந்து விட்டப் பின்னர் அரசு விவசாயச் சங்கக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு நெருக்கடியான நிலையில் உள்ளது என்றும், அவர்கள் தெளிவாக்கியுள்ளார்கள்.

மேலும், தற்போது விதிக்கப்பட்டுள்ள மின் கட்டணம் இன்னும் ஒரு ஆண்டுக்கு செயலில் இருக்கும் என்றும், அதற்குப் பிறகு சங்கத்தின் கோரிக்கைளை அரசு பரிசீலிக்கும் என்றும், அன்று இந்த முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி அவர்கள் அதை வெளியிட்டார்கள்.

இதை நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம், இப்போதுள்ள பிரச்சினை இன்று நேற்று தொடங்கியது அல்ல. பல ஆண்டுக் காலமாக இந்தப் பிரச்சினைகள் கொஞ்சம் கொஞ்சமாக விரிவு அடைந்து கோயம்புத்தூர் மாவட்ட விவசாயச் சங்க போராட்டம் என்பதுபோய், தமிழ்நாடு விவசாயச் சங்க போராட்டம் என்கிற வகையில், ஒட்டு மொத்தமாக விரிவடைந்து பெருகியிருக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அந்தப் போராட்டத்தில் யார் யார் பங்கு கொண்டு இருந்தார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட வேண்டியது என்னுடைய பொறுப்பு. ஏனெனில் இன்றைய தினம் அவர்களிலே பல பேர் அதிலே இல்லை. குறிப்பாக, எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இருந்தார்கள் என்று குறிப்பிடுவது கூட, மிகவும் அவசியம் என்றுதான் கருதுகிறேன். மாநில விவசாயப் போராட்டக் குழு அதற்குப் பெயர் அப்படி வைத்து இருந்தார்கள்.

மறைந்த யார் யார் இருந்தார்கள் என்பதை நான் இப்போது வெளியிட விரும்பவில்லை. ஆனால், இப்போது இருப்பவர்கள் என்கிற வகையில், நான் குறிப்பிடக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. பி. கக்கன் – 'ஸ்தாபனக் காங்கிரஸ்' திரு. எம். கல்யாணசுந்தரம், எம்,பி., இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, திரு. தீர்த்தகிரி கவுண்டர் – தேசியக் காங்கிரஸ், திரு. எச்.வி. ஹண்டே, 'சுதந்திரா' திரு. சின்னசாமி கவுண்டர் – தமிழ்நாடு மாநில விவசாயிகள் சங்கம், திரு. கே.ஆர். நல்லசிவம் – 'சோசலிஸ்ட்' திரு. வேலுசாமி, கோவை விவசாயிகள் சங்கம், திரு. பொன்னுலிங்கம்–கோவை விவசாயிகள் சங்கம், திரு. ஆதிமூலம், செயலாளர், தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், திரு. கே.என். குமாரசுவாமி, எம்.எல்.சி எச். எம். எஸ், திரு.பி.எஸ்.சுப்பையா, ஐ.என்.டி.யு.சி., திரு. பி.கே. ராமசாமி ஏ.ஐ.டி.யு.சி, திரு. பி. என் சின்னதுரை, அகில இந்திய பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம், திரு. கே. பி. கருப்புசாமி, இந்திய தொழிற்சங்கம்.

நான் மறைந்தவர்களைப்பற்றி வெளியிட விரும்பவில்லை. ஏனென்றால் மறைந்த போனவர்களைப் பற்றி நாம் இங்கே விமர்சனம் செய்வது சரியல்ல! அவர்கள் பதில் சொல்ல முடியாது; அதனால், நான் அதைச் சொல்ல விரும்பவில்லை! பிறகு 12 கோரிக்கைகளை அவர்கள் வைத்து இருந்தார்கள். இப்போது 9 கோரிக்கைகளோடு நின்று இருக்கிறது. அதற்குப் பிறகு, அந்தக் கோரிக்கை முழுவதையும் ஏற்றுக் கொள்ளப்பட்டனவா என்பதைப் பற்றி, இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். கோரிக்கைகள், மின் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும்; மின் இணைப்புத்

துண்டிப்பதைக் கைவிட வேண்டும்; வறண்ட கிணறுகளுக்கு 'மினிமம் சார்ஜ்' போட்டு இருப்பதை நீக்கிட வேண்டும்! அரசாங்கக் கடன், கூட்டுறவுக் கடன், நிலவள வங்கிக்கடன் உள்பட சகல கடன் பாக்கிகளையும் 'வஜா' செய்ய வேண்டும், மோட்டார் பம்ப்பு செட்டுகள், கால்நடைகள், விவசாய சொத்துக்களை ஜப்தி செய்வது உடனடியாக நிறுத்த வேண்டும்.

விவசாயப் பண்டங்களுக்கு நம் பிரதிநிதிகளும், சர்க்கார் பிரதிநிதிகளும் சேர்ந்து விலை நிர்ணயம் செய்து, அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று, விற்பனை செய்ய வேண்டும். பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமானவரியைக் கைவிட வேண்டும். புதிதாகப் போடப்பட்ட நிலவரி 'செஸ்வரி', கைவிடப்பட வேண்டும்; விவசாய பம்ப்பு செட்டுகளுக்கு இரசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்ய வேண்டும். வாகனக் கட்டுப் பாட்டை நீக்கி, தண்டத்தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும். பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடியாக நீர்ப்பாசனத்திற்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும்; அதுவரை அந்தப் பகுதிகளை, வறட்சிப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்த வேண்டும்! விவசாயக் கால்நடைகள், பயிர்களுக்கு பாதுகாப்பு அதாவது இன்ஷூரன்ஸ் செய்யப்பட வேண்டும்!

இனாம் ஒழிப்புச் சட்டத்தின் கீழ், தகுந்த திருத்தங்கள் செய்து, 'இனாம்' நிலங்களை உழுது கொண்டிருக்கும் விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும்; சென்ற தேர்தல் காலத்தில், விவசாயிகள் பேரில் போடப்பட்டுள்ள சகல பொய் வழக்குகளையும் 'வாபஸ்' பெற வேண்டும்; விவசாய வேலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கும், மரணம் அடைந்தவர்கள் குடும்பங்களுக்கும், சர்க்கார் நிவாரணம் அளிக்க வேண்டும்; விவசாயத் தொழிலாளர்களுக்கும், கிராமபுற ஏழை மக்களுக்கும் அரசு செலவிலேயே குடியிருப்பு நிலங்கள், மனைகள் வாங்கி வீடு கட்டிக்கொடுக்க வேண்டும்; மாநிலம் பூராவும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயச் சட்டம் வேண்டும்; வன தரிசு, புறம்போக்கு நிலங்களை அந்தந்தப் பகுதியிலுள்ள நிலங்களை அந்தந்தப் பகுதியிலுள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்க வேண்டும்!

இந்தக் கோரிக்கைகளை, அவர்கள் முன் வைத்திருந்தார்கள்! இவைகளைப் பெற அவர்களால் முடிந்ததா என்றால், இயலவில்லை. காரணம், எந்த ஒரு அரசும் இத்தனை பிரச்சினைகளையும் உள்ளடக்கிய கோரிக்கைகளைக் குறைந்த காலத்தில், இவ்வளவு செலவுக்கு, நிதிநிலையிலே, வருமானத்திலே ஏற்பாடு செய்திருந்தாலும் கூட இவைகளைச் செய்து கொடுக்க முடியாத நிலையில் நிறைவேற்றப்படவில்லை; நிறைவேற்றப்பட முடியாமல் இருந்தது என்பதைத் தவிர வேறல்ல! இன்றும், அந்தப் பிரச்சினைகள் தொடர்ந்து இருக்கின்றன என்பதை, இந்த மன்றத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏதோ எங்கள் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, புதிதாக நாங்கள் போட்ட வரி அல்லது நாங்கள் விட்டுக் கொடுக்காத நிலைமை, வசதி செய்து கொடுக்க முடியாத

காரணத்தால், அல்லது செய்யப்படாத காரணத்தால், தொல்லைபடுகிறார்கள் என்று யாரும் குறை கூற முடியாத அளவுக்கு, எத்தனையோ ஆண்டுகளாகத் தொடர்ந்து பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. விருப்பத்தைத் தெரிவித்தது மட்டுமல்ல; கோரிக்கை என்று சொல்லி, இன்றைய தினம் உரிமைப் போராட்டம் என்ற வகையில் நடந்து கொண்டிருக்கிறது என்பதை, உங்கள் உள்ளத்தில் பதிய வைப்பதற்குக் காரணம், இந்த அரசு என்னென்ன செய்தது ? என்பதை பற்றி நான் சொன்னாலும், விடுபட்டவைகள் சில இருந்தாலும், அதை இங்கே சொல்ல வாய்ப்பு இருக்கிறது. இதை எல்லாம் நாங்கள் எப்படி சந்தித்தோம் ? ஒன்பது அம்சத் திட்டம் என்று சொல்கிறார்களே, அதை எப்படி எல்லாம் நிறைவேற்ற நாங்கள் முன்வந்தோம் என்பதை, இந்த மாமன்றத்திலே இருப்பவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் கூட, நினைவுபடுத்துவதன் மூலம், இந்த பிரச்சினைப்பற்றி நாங்கள் எங்களுடைய நிலைமைகளை விளக்கும்போது எங்களுக்கு சாதகமான உணர்வு உங்களிடம் உருவாகும் என்று நம்புகிறேன்.

இது பற்றி முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு அறிவிப்பு செய்தார்கள். 1972ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 19ஆம் நாளன்று, மாலை, செய்தியாளர்களைச் சந்தித்த டாக்டர் கலைஞர் அவர்கள் மின் கட்டண சலுகைப் பற்றி, கீழ்க்கண்டவாறு அறிவித்தார்கள். “சென்ற ஏப்ரல் மாத கடைசி வாரத்தில் கோவை மாவட்டத்தில், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களையும், விவசாயப் பெருமக்களையும் நான் சந்தித்தபோது பரிசீலிப்பதாக உறுதியளித்தவாறும், சென்ற வாரம் நான் குறிப்பிட்ட அறிக்கையில் கூறியபடியும் ‘ஸ்லாப் ஸிஸ்டம்’ அடிப்படையில், மின் கட்டணச் சலுகை வசதிகளையும், விவசாய வருமான வரிக் கணக்கு வைக்கும் சிக்கலை தவிர்க்கும்படி கீழ்க்கண்ட முடிவுகளை அறிவிக்கிறேன். 5 எச்.பி. (குதிரைவேகம்) பம்பு செட்டுகளைப் பயன்படுத்துகின்ற சிறு விவசாயிகளுக்கு மாதம் 200 யூனிட்டுக்கு 12 காசும் , 200 யூனிட்டுக்கு மேல் பழைய கட்டணமான 10.8 காசும்” என்று அறிவித்தார்கள்.

இரண்டாவதாக, 5 எச்.பி.க்கு மேல் உள்ள இயந்திரங்களுக்கு மின்சாரம் உபயோகிக்கின்ற விவசாயிகளுக்கு மாதம் செலவாகின்ற மின்சாரத்தில், முதல் 400 யூனிட்டுகளுக்கு 12 காசும் 400 யூனிட்டுகளுக்கு மேல் உள்ள யூனிட்டுகளுக்கு பழைய கட்டணமாகிய 10.8 காசும் வசூலிக்கப்படும். இந்தக் கட்டணம் ஜுன் மாதம் இறுதியிலிருந்து அமலுக்கு வரும். விவசாய வருமான வரியில் இப்போது 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் வரையில் ‘காம்பவுண்டிங்’ முறையில், வரிக்கட்டலாம் என்று இருப்பதை, இனிமேல், ஏக்கரா வரம்பு எதுவுமின்றி, ‘காம்பவுண்டிங்’ செய்து கொள்ளச் சலுகை அளிக்கப்படும். நான் முன்பே கூறியிருப்பது போல, மசோதா, சட்டசபையிலே வரும்! இந்த ஏற்பாட்டின் மூலம், கட்டாயமாகக் கணக்குக் காட்ட வேண்டும் என்பது இல்லை; கணக்கு வைத்து காட்ட வேண்டும் என்று விரும்புகிறவர்கள், கணக்கு காட்டலாம்! ஆகவே, இந்த முடிவின் மூலம் காட்ட வேண்டும் என்ற சிக்கல் நீக்கப்பட்டுள்ளது!

இந்தச் சலுகை கோவை மாவட்டத்திற்கு மட்டுமா? அல்லது, எல்லா மாவட்டங்களுக்குமா? எல்லா மாவட்டங்களுக்கும் என்றால், தமிழ்நாடு முழுவதுக்குமா? இதன் மூலம் ஏற்படுகின்ற நஷ்டம் எவ்வளவு? 12 காசாக இருக்குபோதே மின்சார வாரியத்துக்கு ஏறத்தாழ 14 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகின்றது இந்தச் சலுகையால் மேலும் நஷ்டம் ஏற்படும். கடன் சுமை நிவாரணம் வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதே?

எங்கெங்கு வறட்சி பிரதேசம் உள்ளதோ அங்கெல்லாம் ஏற்கெனவே கடன்களுக்கான தவணை அளிப்பு, ‘வஜா’ செய்வது போன்ற காரியங்களில், அரசு அனுதாபத்தோடு அக்கறை காட்டி வருகின்றது என்று பதில் கூறி இருக்கிறார்கள். இப்படி பத்திரிக்கைகளுக்கு ஏதாவது ஒன்றை நாங்கள் சொன்னால் “விவசாயிகள் மேல் எங்களுக்கு அக்கறை இல்லையென்று சொல்லிவிடுகிறாகள் அல்லது அலட்சியம் காட்டுகிறோம் என்று சொல்லிவிடுகிறார்கள்” என்று பதில் கூறப்பட்டிருக்கின்றது. சிலர் கேட்கலாம் “நாங்கள் இருக்கும் போதுதான் தவறு செய்தோம் நீங்களும் அதேத் தவறைச் செய்ய வேண்டுமா? ‘அந்தத் தவறையே நீங்கள் செய்வதற்காகவா நாங்கள் உங்களுக்கு வாக்களித்தோம்’ என்று மக்கள் கேட்க மாட்டார்களா” என்று கூடக் கேட்கலாம்! நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், இதைக் கொள்கைப் பிரச்சினை போல நாங்கள் சந்திக்க வேண்டி இருக்கின்றது!

இது அன்றாடப் பிரச்சினை மட்டுமல்ல, அவ்வப்போது ஏற்படுகின்ற நிலைமைக்கேற்ப, அதாவது மழையின்மை, வறட்சி போன்றவைகளுக்காக செய்ய வேண்டி இருக்கின்றது. இப்போது என்ன செய்யப் போகின்றீர்கள்? என்று கேட்டால் இன்றைய நிலைமைக்கு நாங்கள் இதைச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முன்பு என்ன செய்தார்களோ, அதே அளவுக்குத்தான் கிணறு வெட்டுவோம். முன்பு என்ன செய்தார்களோ, அதே அளவுக்குத்தான் நாங்கள் செய்கிறோம். அந்த வகையில் தான் நாங்கள் பதில் சொல்வோம் என்று சொன்னால் அது நிச்சயமாக கேள்விக்குரிய பதிலாகத்தான் இருக்கும்! ஆகவே, அதைப்போன்ற நிலைமைகளில் அன்று 500 என்றால் இன்று ஆயிரம் கிணறுகள் தேவைப்படுகின்றது என்றால் அதை நாங்கள் செய்ய வேண்டும். அதிலே மாற்றம் தேவைதான்!

ஆனால், கடனை ரத்து செய்ய முடியுமா? ரத்து செய்யவேண்டுமா, வேண்டாமா என்ற கேள்விக்கு என்ன பதில்? என்பதைத்தான் நான் இங்கே படித்தேன். ஆனால் எங்களைப் பார்த்து ‘நீங்கள் தேர்தலிலே வாக்குறுதி கொடுக்கவில்லையா?’ என்று கேட்கிறார்கள். நேற்றைய தினம் கூட, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் “5 ஆண்டுகளில் கடனைத் தீர்ப்பேன் என்று சொன்னீர்களே. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையே” என்று சொன்னார்கள் கடன் இரத்து என்பதை 42 கோடி என்று அறிவித்துவிட்டு அது இன்றைய தினம் ரூபாய் 73 கோடி அளவிற்கு வந்து நிற்கின்றது என்பதை, நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களுக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டு கணக்குப் போட்டு இத்தனை கோடி

ரூபாயை இந்த அரசு நிவாரணமாகக் கொடுக்கும் என்று நாங்கள் பதவி ஏற்றவுடன் ஜூன் மாதத்திலே நாங்கள் சொன்னோம். 6 மாதம் கழிந்த பிறகும் சொன்னோம். மத்திய அரசினுடைய பட்ஜெட்டை அங்கே கொண்டு வந்ததற்குப் பிறகு மீதியுள்ள 6 மாதம் காலங்களில் சொல்லும் போதும் சொன்னோம். ஆனால், அதை நாங்கள் நிறைவேற்றிய போது ரூபாய் 73 கோடிக்கு அது வந்து நிற்கின்றது என்பதை, இங்கே நான் சொல்வதில் வெட்கப்படவில்லை, மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். நாம் இங்கே புள்ளி விவரம் போட்டுப் பார்த்தால்; அதாவது, ஆண்டுக்கு 50 கோடி என்று குறைத்தால் கூட அவ்வாறு குறைப்பதற்கு மத்திய அரசு ஒத்துக் கொண்டு குறைத்தால் கூட அல்லது எந்தப் பிரச்சினை வந்தாலும், நாங்கள் எங்கள் கையிலே இருந்து கொடுக்கிறோம் என்ற அளவிலே நாங்கள் துணிந்து செய்தாலும் கூட, இன்றைக்கு இருக்கின்றக் கடனை ஏறத்தாழ 240 கோடி ரூபாயையும் நிவாரணமாக அளிப்பதற்கு, வழி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வயது அளவிலே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள், என்னை விடச் சிறியவராக இருந்தாலும், என்னை விட அதிகம் படித்தவர் பி.ஏ.பி.எல்., படித்தவர் எனக்கு அந்த வாய்ப்பு இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் 10 ஆம் வகுப்பு படித்திருக்கிறார். அவரும் என்னைவிட அதிகம் படித்தவர்.

“5 ஆண்டுகளில் கடன் தீர்க்கப்பட வேண்டும் என்று சொன்னார்களே, ஏன் நிறைவேற்றவில்லை ?” என்று கேட்கிறார்கள். இந்த 6 மாதங்களை, 5 ஆண்டுக் காலம் என்று ஏன் கணக்கிடுகிறார்கள் ? என்று எனக்குத் தெரியவில்லை. முதல் வருட ஆரம்பத்தில் 6 மாதங்கள்தான் சென்றிருக்கின்றன. இந்த 6 மாதத்தில் 73 கோடி ரூபாயை நாங்கள் பொறுப்பேற்றிருக்கிறோம். ஆட்சியிலே இருந்தபோது, மக்கள் தந்த வரிப்பணத்தை ஏற்று, இந்தக் கடன்களைத் தீர்ப்பதற்கு, நாங்கள் வழி வகை செய்திருக்கிறோம். ஆனால், அன்று இந்த அரசைக் கேலி செய்தார்கள். நான் கூட அன்று சொன்னேன், நாங்கள் எங்கே போய்விட்டோம் ? நீங்கள் எங்களைக் கேள்வி கேட்க மாட்டீர்களா ? என்று கூடச் சொன்னேன். அந்த அளவுக்கு ஒரு ஆண்டுக்கூட அல்ல, 6 மாதங்களில், 73 கோடி ரூபாயை நாங்கள் எங்களுடைய பொறுப்பில் ஏற்று, இந்தக் கடனை ரத்து செய்திருக்கிற நேரத்தில் “நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள் ?” என்று சொன்னால், கேட்டால், எப்படிச் சரியாகும் ?

என்னுடைய நிலைமைகளை விவரிக்க எனக்கு வாய்ப்பு வேண்டும். சந்தேகம் இருந்தால், கடைசியில் கேளுங்கள்; விடையளிக்கிறேன். ஐந்தாண்டுக் காலத்தில் மைய அரசு உதவினாலும், உதவாவிட்டாலும், தமிழக அரசினுடைய நிதியிலிருந்து சிறு விவசாயிகளுடைய கடனைத் தீர்ப்போம் என்று, பேரறிஞர் அண்ணாவின் பிறந்தாள் அன்று, அண்ணா சாலையில் உள்ள, பேரறிஞர் அண்ணா சிலைக்கு முன்பு சொன்னதை, நேற்றைய தினம் கூட, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே நினைவுபடுத்தினார்கள். அதற்கெல்லாம் நன்றி கூற வேண்டியதுதான்; ஏனென்றால், நாங்கள் எதையும் மறந்துவிடக் கூடாது சொன்ன வார்த்தைகளை நிறைவேற்றியாக வேண்டும்.

ஆனால், ஏதோ நடந்து முடிந்த கதை. நடந்து முடிந்து விட்டது அதை ஏன் கிளப்ப வேண்டும் என்று சொன்னால், அது நியாயம் அல்ல. நாம் வந்த வழியைத் திரும்பிப் பார்க்க வேண்டும். எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம். எந்த இடத்தில் இருக்கிறோம். ஒழுங்கான பாதையில்தான் வந்தோமா? பாதை தவறிவிட்டோமா என்று திரும்பி பார்க்க வேண்டும். முன்னால் சென்றவர்களின் பாதையினைப் பின்பற்றியதில் ஏதாவது தவறு செய்து விட்டோமா? அல்லது அதிலிருந்து அதிக நன்மைகளைச் செய்திருக்கிறோமா என்று சிந்தித்தால்தான் யாரும் வளர முடியும், முன்னேற முடியும், மற்றவர்களையும் முன்னேற்ற முடியும்.

இங்கே நேற்றைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களைப் பேசும்போது மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களைப் பற்றி எவ்வளவோ எடுத்துச் சொன்னார்கள். என்னென்ன துன்பங்களை அவர்கள் அடைந்தார்கள், என்றெல்லாம் சொன்னார்கள். நானும் கூடச் சொல்வேன். எனக்கும் நினைவு இருக்கிறது. அதே அழகர்சாமி அவர்களை கையில் விலங்கு போட்டு முன்பு நடந்த விவசாயப் போராட்டத்தில் இழுத்துச் சென்றிருக்கிறார்கள். நண்பர் அழகர்சாமி அவர்கள் கூட, மூன்று நாட்கள் உண்ணா நோன்பு இருந்தார்கள். அவர்களுக்குக் கூட அது நினைவு இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதுவும் அந்தக் காலத்தில் நடந்தது. ஆனால், நாங்கள் அதையெல்லாம் செய்யவில்லை. ஆனால், அப்பொழுது இருந்த நிலைமை எப்படி இருந்தது என்பதை என்னால் சொல்ல முடியாது. இப்போதிருக்கும் நிலையை என்னால் சொல்ல முடியும்.

இதுபோல பல்வேறு விஷயங்களைப் பிரச்சினைகளாக எடுத்துச் சொல்ல முடியும். அடுத்து, 1972ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 19ஆம் நாளன்று தமிழ்நாடு விவசாயிகளின் போராட்ட இயக்கம் நடைபெற்றன. அப்போது, அன்று இரவே சமரச பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன. முடிவில், மின் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும். மின் இணைப்புத் துண்டிப்பை ரத்து செய்ய வேண்டும். அதாவது கைவிட வேண்டும். வறண்ட கிணறுகளுக்கு 'மின்சார சார்ஜ் சர் சார்ஜ்' போட்டிருப்பதை நீக்கவேண்டும். இப்படிப் பல கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. 100 யூனிட்டுகள் வரையில், 1 யூனிட்டுக்கு 12 பைசா என்றும், 100 யூனிட்டுகள் மேல் வந்தால் 1 யூனிட்டுக்கு 13 பைசா என்றும் மின் கட்டணம் அப்போது நிர்ணயம் செய்யப்பட்டது. இதை விவசாயிகள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று நாம் எல்லாவற்றிற்கும் 12 பைசா என்று சொன்னால் கோபம் வருகிறது. அன்றைய தினம் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக கோரிக்கை எண் 2 அரசாங்கக் கடன்கள், கூட்டுறவு நிறுவனங்கள் நிலுவை, நிலவள வங்கிக் கடன்கள் உட்பட சகல கடன் பாக்கிகளையும், வஜா செய்ய வேண்டும். மோட்டார் பம்ப் செட்டுகள், கால்நடைகள், விவசாய சொத்துக்களை ஜப்தி செய்வதை உடனடியாக நிறுத்த வேண்டும். மாநிலத்தில் எந்தெந்தப் பகுதிகளில் வறட்சி நிலை இருக்கிறதோ, அங்கெல்லாம் கடன் வசூலிப்பதில் பிறப்பித்துள்ள கடுமையான நடவடிக்கைகள் எடுக்கக் கூடாது என்று

ஏற்கெனவே அரசாங்கம் ஆணையிட்டிருக்கிறது. அது தொடர்ந்து அமல் நடத்தப்படும். மேலும், வறட்சி பகுதிகளை கணக்கு எடுப்பதற்கு 'ரெவன்யூ போர்ட் மெம்பர்' மாவட்ட வாரியாக ஆராய்ந்து அந்த அடிப்படையில், விளைச்சல் இல்லாத பகுதிகளில் கடன் பாக்கிகளை தவணைகளில் வசூலிப்பதைப் போன்ற சலுகைகள் அளிக்கப்படும். இதற்கிடையில், ஏற்கெனவே பிறப்பித்துள்ள அரசாங்க ஆணைப்படி, அதிகாரிகள் ஜப்தி போன்ற கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள். கிணறு வெட்டுவதற்கு வாங்கிய கடன்கள் பலன் அளிக்காத கிணறுகளைப் பரிசீலித்து கடன் நிவாரணம் அளிப்பது பற்றி ரிசர்வ் வங்கியிடம் எடுத்துக் கூறி, ஆவன செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கூட்டுறவு ஸ்தாபனங்களில் பினாமி கடன்கள் மூலமும் வேறு வகையிலும் தவறு செய்தவர்கள் மீதும் இப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள், மேலும் தீவிரமாக்கப்படும்.

இங்கே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதை நாம் எந்தளவிற்கு மாற்றியமைத்திருக்கிறோம் என்பதையும், கிணறுகள் பயன்படாது போய்விட்டால் அந்தக் கடன்களை வசூலிக்கக் கூடாது என்பதையும், அதுபோன்ற நிலையில் கூட்டுறவு ஸ்தாபனங்கள், பினாமியாக கடன்கள் மூலமும் வேறு வகையிலும், தவறு செய்தவர்கள் மீதும் இப்போது எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் பிரச்சினையை நாங்கள் நிறுத்தி, அந்தப் பிரச்சினைகள் ஏற்படாத வகையில், நாங்கள் அதைக் கொண்டுபோய் புகுத்தாமல் இருக்கிறோம் என்பதை நான் இங்கே சொல்ல விழைகிறேன். இதில் கண்டிப்பாக இருந்ததை இப்போது போராடுகிற சங்கத்தலைவர்கள் எல்லாம் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அதை ஒத்துக் கொள்வதில்லை. இதை நான் இங்கே குறிப்பிடவேண்டிய நிலையில் இருக்கிறேன். இதையெல்லாம் மக்களுக்கும், இங்கே இருக்கிறவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். இது அவர்களுக்கு நினைவிருக்க நியாயம் இல்லை. இவ்வளவு ஆண்டுகள் என்பதை வைத்து அவர்கள் ஏதோ பரிந்துரை பேசுவதுபோல், குற்றஞ்சாட்டுகிறேன் என்று தவறாக, அந்த நிலை என் உள்ளத்தில் இருக்கிறது என்று கருதக் கூடாது. உண்மையைச் சொல்லக் காரணம், ஒரு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கையெழுத்து போட்டிருக்கிற கோப்புகளில், நான் என்ன எழுதியிருக்கிறேன் என்று கூப்பிட்டு, அந்தக் கோப்புகளைப் பார்க்க வேண்டி இருக்கிறது. மறந்து விடுகிறேன். அதுபோல மறந்திருக்கலாம். ஆனால், இந்தப் பிரச்சினை எப்படி இருந்திருக்கிறது, எதற்கெல்லாம் ஒத்துக் கொண்டிருந்தார்கள் என்பதையும், எப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும், நான் நினைவில் வைத்துக்கொண்டால் தான், இந்தப் பிரச்சினை இப்போது எந்த அளவிற்குச் செல்கிறது, ஏன் இந்தப் பிரச்சினை இப்போது எந்த அளவிற்குச் செல்கிறது என்பதை நாம் அனைவரும் உணரமுடியும் என்று கருதுகிறேன்.

அந்த வகையில், நான் இன்னொன்றையும் கூறுவேன் விவசாயப் பண்டங்களுக்கு அவர்கள் பிரதிநிதிகளும், சர்க்கார் பிரதிநிதிகளும் சேர்ந்து விலை நிர்ணயம் செய்து அரசாங்கமே கொள்முதல் பொறுப்பை ஏற்று, விற்பனை செய்ய வேண்டும். முடிவு விவசாயப் பண்டங்களுக்கு அரசாங்கம் கொள்முதல் பொறுப்பை ஏற்பதற்கு ‘ஸ்டேட் ட்ரேடிங்க் கார்ப்பரேஷன்’ நிறுவுவது என்பதைக் கொள்கையளவில், அரசாங்கம் ஏற்று பரிசீலிக்கும். இன்று நிலைமை என்ன? ஏறக்குறைய நாங்கள் விநியோகிக்கிறோம். அன்று பரிசீலிக்கப்படும் என்று அதற்கு ஒத்துக் கொண்டார்கள். வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஒத்துழைப்பு இல்லை. இதை தயவு செய்து மாமன்ற உறுப்பினர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். விவசாய விளை பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்வதற்காக, விவசாயப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கமிட்டி ஒன்றை அமைப்பது பற்றி பரிசீலிப்பதோடு, தேங்கியுள்ள பருத்தி முதலியவற்றை கொள்முதல் செய்வது பற்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஏன் அங்கே மத்திய அரசுக்கு போகிறீர்கள்? ஏன் போக வேண்டியிருந்தது? நம் நிலைமை அப்படித்தான். இதை நாம் குறிப்பிடுவதற்கு காரணம், வேண்டிய நிலையில்தான் நிதி நிலைமை இருக்கிறது. அதற்குரிய நமது தகுதியும் இருக்கிறது என்று சட்டம் செய்து விட்டார்கள். அதுதான் இருக்கிற நிலைமை. அவைகளிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லை. நமக்கு அந்த உரிமையும் தரப்படவில்லை. அந்த நிதியையும் நாம் சேர்த்துக் கொள்வதற்குரிய பல்வேறு வகைகளில், அந்தத் தகுதியை நமக்கு தந்து விடவில்லை அந்த அதிகாரம் தரவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது நாங்கள் சொன்னால் மத்திய அரசோடு கலந்து செய்கிறோம் என்று சொன்னால், மத்திய அரசிடம் சொல்லுகிறோம் என்றால் ஏன் அங்கே போகிறீர்கள்? நீங்கள் மக்களுக்குச் சொல்லவில்லையா என்று கேட்கிறார்கள். கடன்களைத் தீர்க்க வேண்டியதுதான்; ஏழை சிறு விவசாயிகள் கடன்களைக் கொடுக்கக் கூடிய நிலைமையில், நிலைமை இல்லை. முன்பு 1970–1972–1974 ஆண்டுகளில், வறட்சி நிலவிய ஆண்டுகளில், அந்த நிலை இருந்தது. அதற்குப் பிறகு, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தக் கடன் வட்டியோடு பல்கிப் பெருகியிருக்கும் போது, இந்த நேரத்தில் நாங்கள், எங்களால் முடிந்ததை மக்களின் வரிப்பணத்தில் இருந்து கொடுக்கிறோம் என்று சொன்னால், அதற்கு மத்திய அரசு அனுமதி வேண்டும். ரிசர்வ் வங்கியின் சம்மதம் வேண்டும் என்பதை நாங்கள் சொன்னால், மக்களை ஏமாற்றி விட்டோம் என்ற அளவில், எங்கள் மீது பழிசுமத்தி மக்கள் முன் குற்றவாளியாக காண்பிக்க வேண்டுமென்பதற்காக, வெளியே சிலர் உட்கார்ந்து கொண்டு நடவடிக்கை எடுப்போம் என்று சொல்வதும், அதற்கு இதைப்போல விவரங்கள் அறிந்தவர்கள் ஆதரவு கொடுப்போம் என்பதும், அல்லது ஆதரவு கொடுக்கிறார்கள் என்று மற்றவர்கள் நினைக்கக்கூடிய சூழ்நிலை உருவானால், அது இந்த நாட்டுக்கு நல்லதல்ல.

யார் இங்கே இருந்தாலும் இந்த நிலைமைதான். ஆனாலும் 73 கோடி ரூபாயை ஆறு மாதங்களில் கொடுத்து விட்டு பெரிய திட்டங்களைச் செய்ய இன்னும் பணத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம் என்ற நிலைமையில், எங்கள் நல்லெண்ணத்தைப் பற்றிக் கொஞ்சமாவது நினைத்துப் பார்க்கக் கூடாதா ? ஐந்து ஆண்டுகளில் 240 கோடி கடனைத் தீர்ப்போம் என்று சொன்னதாகச் சொன்னார்கள் ஆறு மாதங்களில் 73 கோடி ரூபாய் கடனைத் தீர்க்க, மத்திய அரசைக் கூடக் கேட்காமல் நாங்கள் கொடுக்கவில்லையா ? அதே போன்று கொள்முதல் செய்வதைத் துணிந்து செய்கிறோம் இப்போதும் செய்கிறோம் என்று சொல்லுகிறோம். முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் செய்தார்கள், மறுக்கவில்லை, ஆனால், இந்த ஒப்பந்தம் வரும்போது என்ன வகைகளில் போடப்பட்டிருக்கின்றன ? இதற்கெல்லாம் அந்தச் சங்கங்கள் ஒத்துக் கொண்டனவா ? இல்லையா ? இப்போது மட்டும் வேண்டுமென்றே இதைத் திரித்துக் கூறி எங்கள் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தி நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று சொல்லுவது எப்படி நியாயமாக இருக்க முடியும் ? ஆகவேதான் நியாயம் கேட்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, “பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமான வரியைக் கைவிட வேண்டும், புதிதாகப் போடப்பட்டுள்ள நிலவரி செஸ் வரிகளைக் கைவிட வேண்டும். விவசாய பம்ப்பு செட்டுகளுக்கும் இராசாயன உரத்திற்கும் போடப்பட்டுள்ள வரியை ரத்து செய்ய வேண்டும்”.

“பயிர் அடிப்படையில் போடப்பட்டுள்ள விவசாய வருமானவரியில் கணக்கு வைப்பது கட்டாயம் இல்லையென்றும், ஏக்கர் வரையறை இல்லாமல்; கம்பவுண்டிங் முறையில் வரி கொடுக்கலாம் என்றும், முன்பு அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளை ஒட்டி மேலும் சிறிய விவசாயிகளுக்கு வருமான வரியில் சலுகை அளிப்பது பற்றி, அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும். அந்தச் சலுகை காரணமாக, 7 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வருமான வரி இல்லையென்பதை, 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்குவது பற்றியும் ஸ்டாண்டர்டு ஏக்கர் கணக்குகளில் மாற்றம் செய்வதாகவும் இருக்கிறோம்”.

“பாசனத்திற்கு பாக்கி தண்டத் தீர்வை போடுவதைக் கைவிட வேண்டும். இதற்கான தாற்காலிக தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி இந்தப் பகுதிகளில் விவசாயிகள் மாநாட்டைக் கூட்டி பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்”.

அதுமட்டுமல்ல, பாசனமற்ற பகுதிகளுக்கு உடனடியாக நீர்ப்பாசன உத்தரவாதம் செய்யப்பட வேண்டும். “அதுவரை அந்தப் பகுதிகளை வறட்சிப் பகுதிகளாகப் பிரகடனப்படுத்துவதோடு, இதுபற்றி மத்திய திட்டக் குழுவுடனும் கேரள அரசோடும் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும்”.

இதை அன்று ஒத்துக் கொண்டார்கள். இன்றைய தினம் இதைச் செய்ய எவ்வளவு கோடி ஒதுக்குகிறோம் ? கிணறுகள் தோண்டவும், குழாய்க் கிணறுகள் வைக்கவும் நாங்கள் பணம் ஒதுக்குகிறோம் என்று சொன்னால் கூட, போராட்டம் நீடிக்கிறது.

போராட்டம் வலுப்பட வேண்டிய காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால், அன்று மத்திய அரசோடு பேசி, கேரள அரசோடு கலந்து பேசி, ஆவன செய்யப்படும் என்று சொன்னால் அதை ஒத்துக் கொண்டு சம்மதித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக்காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாங்கள் ஆட்சி செய்கிறோம் என்ற ஒரே ஒரு காரணத்தைத் தவிர, வேறு அல்ல. அந்த முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர் கூறி அப்போது ஒத்துக் கொண்ட அதே நண்பர்கள், அதே தலைவர்கள் இன்று இதை எதிர்க்கிறார்கள் என்றால், எந்த அர்த்தத்தில், எந்தப் பொருளில், எதனால் என்பதை இந்த நாடும், இந்த மன்றமும் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் எதிர்ப்பார்க்கிறேன்.

விவசாயிகளுக்கு கால்நடை பயிர்பாதுகாப்பு செய்யப்பட வேண்டும். மாநில அரசுக்கு இந்தக் கொள்கை உடன்பாடுடையது. மத்திய அரசிடம் இந்தக் கொள்கை வலியுறுத்தப்படும் நாங்கள் பல இடங்களிலே பயிர் பாதுகாப்புக் கழகம் அமைத்திருக்கிறோம் என்பதைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மத்திய அரசினுடைய அமைச்சர் 2, 3 நாட்களுக்கு முன்பு இங்கே வந்தபோது, நாங்கள் இதை செய்திருக்கிறோம். நீங்கள் இதைச் செய்ய வேண்டும் என்று சொன்ன போது அவர்கள் சொன்னார்கள். அகில இந்திய ரீதியில் எங்களால் செய்ய முடியாது. நீங்கள் மாநிலத்தில் செய்ய முடிந்தால் செய்யுங்கள், மகிழ்ச்சி என்றார்கள். முன்னாலே அமைச்சரவையிலே என்ன சொல்ல முடிந்தது. ஒத்துக் கொள்கிறார்கள். நாமும் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம் ஆனால் வசதியில்லை. அதை ஒத்துக் கொள்கிறோம். அந்த வசதி இல்லை என்பது அப்போது இருந்தால், இன்றைய தினம் ஆயிரக்கணக்கிலே, கோடிக் கணக்கிலே வரிவிதிக்கப்பட்டு நிதிநிலை உயர்ந்திருக்கிறது என்றாலும் கூட, செலவு எப்படி உயர்ந்திருக்கிறது, சம்பளம் எப்படி உயர்ந்திருக்கிறது, எப்படி சம்பளம் கேட்டுக்கொண்டிருக்கிறார் என்பதையெல்லாம் கணக்கைப் போட்டுப் பார்த்தால், இந்த அளவில் இப்போது செய்வது நெருக்கடியை ஏற்றுக் கொள்கிற வகையில், நாங்கள் செய்கிறோம் என்பதை இந்த மாமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நன்கு சிந்தித்து உணர வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள் ஆகும். 'ரிசர்வ்' வங்கியிலே சொல்கிறார்கள் பிளாக் லிஸ்டிலே தமிழகத்தை வைக்க வேண்டியிருக்கிறது , நாம் எழுத வேண்டும் என்று சொல்லிறார்கள். அவசரப்படாதீர்கள் என்று சொல்கிறோம். என்ன காரணம் ? இந்தக் கடன்களைத் திரும்பக் கொடுக்காவிட்டால், அவர்களுக்குப் பணம் போய்ச் சேராததை நாம் கொடுத்தாலும் கூட, நிதிநிலைமை பற்றாக்குறையாக வந்துவிடும் அல்லது திட்டங்களை நிறைவேற்றமுடியாத அல்லது வசூலிப்பதற்குத் திறமை இல்லை, வசூலித்து நன்மை செய்வதற்கு அவர்கள் வசதி ஏற்படுத்தாத காரணத்தினாலே அவர்களுக்கு கொடுக்க வேண்டிய கடன்களை நாம் கொடுப்பதற்கு மேலும் கொடுத்து விவசாயத் தொழிலை விருத்திசெய்வதற்கு கடன் கொடுக்க முடியாது என்ற நிலை உருவாக்கி, அப்படிப்பட்ட நிலைமை உருவாகும் என்றால் இந்த தமிழக அரசு இந்த நாட்டை சரியாக ஆளத்தெரியாத அரசு, நிதிநிலையை ஒழுங்காக

வைத்துக் கொள்ள முடியாத அரசு. ஆகவே, 'பிளாக் லிஸ்டிலே' நாங்கள் சேர்க்கிறோம் என்றால் இந்த பதவியே பிறகு கிடைக்காது. இதைச் தயவு செய்து நீங்கள் இந்த மாமன்றத்திலே இருக்கின்றவர்கள் உணர்ந்து இருக்கமாட்டீர்கள் என்று சொல்ல மாட்டேன் நினைத்துப் பார்க்க வேண்டும், நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இங்கே இருக்கிறோம் யார் இந்த ஆட்சியிலே இருந்தாலும் இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால் இந்த அரசு அல்லது வேறு எந்த அரசும் மீண்டும் பதவியை நிலைநிறுத்தி மக்களுக்குச் செய்யவேண்டிய தொண்டை செய்யமுடியுமா என்பதைச் சிந்தித்து பார்க்க வேண்டும். கடனை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். கூடாது என்பது கொள்கை இல்லையே, எங்கள் கொள்கையை அது தான்! கொடுக்க முடியாத எழைகளிடம் வற்புறுத்தி, சிறைச்சாலையில் அடைப்பதால் இலாபம் இல்லை; தேவை இல்லை. நிச்சயமாக, நாங்கள் அதை விரும்பவும் இல்லை. ஆனால் பிளாக் லிஸ்டிலே சேர்ப்போம் என்று சொன்னால், நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது. இந்த மக்களுக்கு நாம் என்ன சொல்லியிருக்கிறோமோ, அதையும் நிறைவேற்ற வேண்டும். அதற்கு ஏற்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். வருமானத்தைப் பல வழிகளிலே பெருக்கிக் கொண்ட பிறகு, அந்தக் கடன்களைத் தீர்ப்பதற்கு உரிய வழிமுறைகளை ஏற்படுத்தி, எந்த அளவுக்குத் தீர்க்கமுடியுமோ அதை நாங்கள் செய்தாக வேண்டும். அந்த வகையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு தரிசு, புறம்போக்கு நிலங்களை அந்தந்தப் பகுதிகளிலே உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும் காட்டு இலாக்காவிலே, இப்போது காடுகள் இல்லாத நிலங்கள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இந்த ஆண்டு 50 ஆயிரம் ஏக்கர் பகிர்ந்து அளிக்கத் திட்டம் உள்ளது. புறம்போக்கு நிலங்களும், இலட்சக்கணக்கானவர்களுக்கு, தொடர்ந்து பகிர்ந்து அளிக்கப்படுகிறது. விவசாயத்திலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு இப்போது இதுபோன்ற நிலங்கள் வழங்கப்படவேண்டும்மென்பது அரசின் கொள்கை. இது தீவிரமாக அமல்படுத்தப்படும். இதனுடைய நிலைமை என்ன வன இலாக்காவிலே உள்ள நிலங்களை எடுத்து அங்கே இருக்கின்ற விவசாயிகளுக்குக் கொடுப்பது என்றால், மைய அரசு சொல்கிறது, வனத் துறையிலே இருக்கின்ற மரங்களை வெட்டக் கூடாது, மழை குறைகிறது; மழை வளம் இல்லாததால் நாட்டிலே சுபீட்சம் இல்லை; ஆகவே, அதைச் செய்யக்கூடாது! அங்கிருந்து யோசனையாக "நீங்கள் இத்தனை மரங்களைப் புதிதாக வளர்க்க வேண்டும். இத்தனை மரங்களை நட்டாக வேண்டும்!" என்று சொல்கிறார்கள். நல்ல யோசனை. ஆனால், நாம் அதையும் மீறி செய்கிறோம். சில இடங்களிலே கொடுக்கிறோம்.அதிலும் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு கொடுக்க நாங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இருந்தாலும், பிரச்சினைகள் வருகின்றன. இந்தப் பிரச்சினைகளையெல்லாம் சமாளித்து, எதிர்த்து, அதைத் தாங்கிக் கொண்டுதான் நாங்கள் இந்தப் பணியைச் செய்கிறோம் என்பதை, இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவேதான், அமைதியும் சுமுகமான சூழ்நிலையும் ஏற்படுவதற்கு ஏற்றவகையில், எந்த மட்டத்திலும் அளவிலும் நீதி விசாரணை தேவையில்லை என்பதும், இதன் தொடர்பாக வழக்குகள் அனைத்தையும் கைவிட வேண்டும் என்பதும், இரு தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எதற்கெடுத்தாலும் இப்பொழுது நீதி விசாரணை கேட்கிறார்கள். நாங்கள் மறுக்கவில்லை நீதி விசாரணை வேண்டும். சில இடங்களில் பயந்து, வழக்கு மன்றத்திலே சாட்சி சொல்ல முடியாமல் இருக்கின்றவர்கள் உண்மை தெரிந்தவர்கள், தைரியமாகச் சொல்லி தன் மீது வழக்குகள் வராது என்ற நிலைமையில், அவர்கள் சாட்சி சொல்ல வருவதற்கு வாய்ப்புக் கொடுத்தாக வேண்டும். குற்றம் செய்திருப்பவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும், அவர்களுக்கு வேண்டப்பட்டவர்கள், அதேபோன்று அதே அதிகாரிகள் போகக்கூடாது என்று சொல்வது நியாயமான வாதங்கள், சில நேரங்களில், ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும் அதை இந்த அரசு மறுத்தது இல்லை ;அதை ஏற்றுக்கொள்ளத் தயங்கியதும் இல்லை; ஆனால், என்னுடைய வேதனையும் நான் சொல்லியாக வேண்டும்.

சில சமயங்களில், வெளியிலே பேசுகிறார்கள், சி.பி.ஐ விசாரணை வேண்டும் என்று, இங்கேயும் சொல்கிறார்கள் கேரள அரசு தனியாக விசாரணை நடத்துவதோ தமிழக அரசு தனியாக விசாரணை நடத்துவதோ கூடாது. இரண்டுக்கும் பொதுவாக சி.பி.ஐ. வேண்டும் இப்படிச் சொல்கிறார்கள். சி.பி.ஐ. நிலைமை என்ன ? இதுதான் இப்பொழுதுள்ள கேள்வி.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் திரு. இராமமூர்த்தி அவர்கள், இங்கே முன்னால் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் பேரிலும், மற்றும் சிலர் பேரிலும் நாங்கள் புகார் கொடுத்தோம். அதைக் கொண்டு போய்க் கொடுத்து விட்டோம் என்று தெரிந்து திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், இது வழக்கு மாமன்றத்திற்கு வராது, வழக்காடாது என்று நான் ஒன்றும் பேசவில்லை, ஏன் குறுக்கே பேசவேண்டுமென்று இருந்தேன் பிறகு சொன்னார்கள், இதற்கு முடிவே இருக்காது. இத்தனை ஆண்டுகள் ஆகும் என்றும் தெரியாது, இதைப்பற்றி ஒரு முடிவும் வரப்போவதும் இல்லை; கடைசியிலே வழக்கு கை விடப்பட்டாலும் விடப்படும் என்று சொன்னார்கள். நான் சொன்னேன், அப்படி இருக்காது, ‘சர்க்காரியா போன்றவர்களின் விசாரணை நடக்கிறது என்ன உண்மை வருகிறதோ அது வெளிவரும் என்று சொன்னேன். ஆனால் இதுவரையில் எனக்குள்ள மனக் கஷ்டத்தைச் சொல்கிறேன்.

இன்றையதினம், நான் சாட்சி சொல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு ஆட்சி இருக்கிறது மத்தியிலேயும், இங்கேயும் நான் வேண்டப்பட்டவனாக இருந்தால், அந்த ஆட்சிக்குச் சார்பாக, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக நான் சாட்சி சொல்லிவிட்டேன் என்கின்ற நிலைமையில் பழி சுமத்தப்படுவேன். அது உண்மை என்று எப்போழுது சொல்கிறார்கள் என்றால், ஆட்சி மாறியவுடனே நானே, எந்தக் கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தேனோ எந்த நீதிபதியின் முன்

சொன்னேனோ, அதையே மாற்றி, என்னை அடித்தார்கள், குத்தினார்கள் என்னைத் துன்பப்படுத்தினார்கள். ஆகவே, நான் எழுதிக்கொடுத்தேன் அது தவறு என்று சொல்வது, இன்னும் ஒரு ஆட்சி மாறிவிட்டால், மறுபடியும் நான் எதை எழுதினேனோ அதையும் அவர்கள் என்னை அடித்தார்கள், துன்பப்படுத்தினார்கள், ஆகவே நாங்கள் விட்டுவிட்டோம். இப்படிச் சொல்கிறோம். இதுதான் உண்மை என்று சொல்வது.

இப்படிச் சாட்சியங்கள் சொல்ல வைத்துக் கொண்டே இருந்தால், நீதிவிசாரணை எப்படி நிலைத்து நிற்கும் ? நீதி விசாரணைக்கு எந்த சுப்ரீம் கோர்ட் நீதிபதி வந்தாலும் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நான் மனம் விட்டுச் சொல்கிறேன். தயார், ஆனால் கொடுக்கப்படுகின்ற சாட்சியங்கள் முதலில் சொன்னது, கடைசிவரையில் உறுதியாக இருக்கும் என்ற உத்தரவாதம் இருக்கிறதா ?

ஒரு வேளை நானே இருக்கிறேன், இந்த ஆட்சிப் பொறுப்பிலேயிருந்து இறக்கப்படுகின்றேன். குற்றவாளியாக நிறுத்தப்படுகின்றேன். என்கூட இருப்பவர்கள் எனக்கு எதிராகச் சாட்சி சொல்லி, கையெழுத்து போட்டுவிட்டு, என்னுடைய நிலைமை மோசமாக இருக்கிறது, ஆபத்தாக இருக்கிறது; அவருக்கு, வந்தால் வரட்டும் எனக்கென்ன என்று நண்பர்கள் தீர்மானித்து, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள என்று ஏற்றுக்கொண்டாலும்கூட, அந்த சாட்சியங்கள் இறுதிவரையில் உறுதியாக இருப்பதற்கு நம்மிடலே என்ன அதிகாரம் இருக்கிறது ? இந்த நாட்டில் என்ன உத்தரவாதம் இருக்கிறது ? அது இல்லை, அப்படி உண்மைக்கு மாறாகச் சாட்சி சொல்லி பின்னர் மாற்றுவார்களேயானால், அவர்களுக்கு முதலிலே தண்டனை கிடைக்கக் கூடிய சட்டம் இந்த நாட்டிலே வந்தாக வேண்டும். அந்த உத்தரவாதம் இருந்தால், நீதிவிசாரணை வருவதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. பதவியில் இருந்தாலும் சரி, இல்லா விட்டாலும் சரி நெருக்கடி வரும்பொழுது ஒரு சாட்சி நெருக்கடி தீர்ந்து அவர்கள் தப்பித்துக் கொள்வார்கள் என்றால், அதையே மாற்றிச் சொல்வது என்றால் அப்படிப்பட்ட நண்பர்களையோ, அப்படிப்பட்ட உறவினர்களையோ, அப்படிப்பட்ட கட்சித் தோழர்களையோ; அப்படிப்பட்ட பணக்காரர்களையோ; வியாபாரிகளையோ, இந்த நாடு கொண்டிருக்கிறது. எந்த ஆட்சி வந்தாலும் அவர்கள் இஷ்டப்படி மாற்றிக் கொண்டு போவார்கள் என்றால் அதற்கு ஒரு முடிவு வேண்டாமா ? ஆகவே தான் என்னைப் பொறுத்தவரையில் இங்கே நீதி விசாரணை வேண்டுமென்றால், நாங்கள் நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம்; ஆனால், சாட்சிகள் முதலில் என்ன சொல்கிறார்களோ அதையே, அவர்கள் மாற்ற முடியாமல் இருக்கின்ற நிலைமை வேண்டும்; மாற்றிச் சொன்னார்கள் என்றால், அதற்குரிய நியாயத்தை அவர்கள் சொல்வது மட்டுமல்ல, அப்படிச் சொன்னவர்கள் மீது, ஒரு பெரிய வழக்கை, இரண்டு மூன்று ஆண்டுகள் நடத்தியாவது, அதற்குப்பிறகு நிருபித்து தீர்ப்பு அளிப்பது. அதற்குப் பிறகு இவர்கள் போய் இல்லை என்பது அல்லது இருக்கிறது என்று இப்படியே போனால், நிலைமை என்ன ?

இதற்கு ஒரு முடிவு வந்தாக வேண்டும். அந்த முடிவை மத்திய அரசுக் சட்டமாகக் கொண்டு வருமானால், மாற்றிச் சொன்னால் தண்டனை உண்டு மாற்றிச் சொல்லும் போது அதை நிருபிக்காவிட்டால் கடுமையான தண்டனை உண்டு என்று நிலைமை உருவாக்கப்படுமானால் நீதி விசாரணைக்கு நிச்சயமாக ஒரு உத்தரவாதம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் எனக்கு, நீதி விசாரணையைச் சந்திப்பதைப் பற்றிக் கவலையில்லை என்றாலும் என்ன உத்தரவாதம் என்பதிலே தான் சந்தேகம் இருக்கிறது என்று சொல்லி இப்படிப்பட்ட நிலைமையிலே நீதி விசாரணை எதற்கெடுத்தாலும் கேட்பார்கள் என்றால் என்ன சொல்வது ?

நேற்றையதினம் திருவேங்கடம் என்ற பகுதியில் என்ன நடந்தது ? என்று நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், அங்கே தடுப்புச் சுவர் போட்டதாகச் சொன்னார்கள். அங்கிருந்த காவல்துறையைச் சேந்தவர்களே போட்டார்கள் விவசாயிகளை அடித்தார்கள்; நொறுக்கினார்கள்; சுடப்பட்டவர்கள் செத்துவிடவில்லையே என்று சந்தேகப்பட்டு மிதித்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள் நான் அவர் உண்மைக்குப் புறம்பாகப் பேசியதாகச் சொல்லத் தயாராக இல்லை. அவருக்குக் கிடைத்த செய்தியை நம்பிச் சொன்னார்கள் ஆனால், நடந்த இடமே திருவேங்கடம் அல்ல, துரிஞ்சாபுரம் நிகழ்ச்சியைப் பற்றியதுதான் இது போன்ற செய்திகள் தவறாக வந்து விடுகின்றன. நாம் நம்புகின்றோம். எப்படியாவது நன்மைகள் நடக்க வேண்டுமென்பதற்காக அக்கறை காட்டுகின்ற நேரத்தில், நம்மைச் சுற்றியிருப்பவர்கள் சரியான தகவலைக் கொடுப்பதில்லை.

வேறோரிடத்திலிருந்து தகவல் வந்திருக்கிறது என்று இப்பொழுது சொன்னார்கள். எனக்குத் தந்தியிலே தகவல் வந்திருக்கிறது. அது உத்தரவாதம் அல்ல என்பதால், நான் படிக்கவில்லை. கேரள அரசிடமிருந்து பதில் வந்திருக்கிறது. அப்படி யாரும் கேட்கவில்லை, கேட்டதாக இல்லையென்று அவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள் தந்தி உத்தரவாதமா, அது உண்மையானதா என்ற கேள்வி பிறக்கும் என்பதால், நான் அதைப் படிக்கவில்லை. ஆனால், உண்மை நிலை அது. கடிதம் வரட்டும் காண்பிப்போம் என்று நான் காத்திருக்கிறேன், இதைச் சொல்வதற்குக் காரணம் நம்மிடம் கொடுக்கின்ற ஏதோ, யாருக்கோ திருப்தி என்பதற்காக, யார் மீதோ இருக்கிற ஆத்திரத்திற்காக ஏதோ தகவலைச் சொல்லி, அதைச் சொல்லட்டும்; அதனால் விளம்பரம் பெறட்டும் ! விளம்பரம் சொல்கின்றவர்களுக்கு அல்ல, படித்தவருக்கு. இது ஒரு ஏதோ சொல்வார்களே, 'மேனியா' என்று சொன்னால், அது ஆங்கில வார்த்தை தமிழில் உண்மையாகச் சொல்லப் போனால், அப்படி ஒரு ஆசை. அது தேவையில்லாத ஒரு ஆசை. தன்னோடு உடன் பிறந்தவன் என்பது போல வளர்ந்து விட்ட நிலைமை. அவர்களால் சும்மா இருக்க முடியாது. அவர்களாகச் சண்டை போட்டுக் கொள்கிறார்கள். அவர்கள்தாமே இதற்குப் பதில் சொல்லப் போகிறார்கள் நமக்கென்ன, எழுதிக் கொடுப்போம், படித்து விடுகிறார்கள். என்றுதான் கொடுக்கிறார்கள். இந்த நிலையில், நான் சொல்வது இதுதான். அப்படிப்பட்டவர்களை நம்பி நாம் சொல்லும்போது, அவர்கள்

நம்மை வைத்து விளையாடுகிறார்கள் நான் விசாரித்துப் பார்த்து பெற்ற தகவல்களை இங்கே வைத்திருக்கிறேன். படிப்பதற்கு நிறைய நேரம் ஆகுமே என்ற நிலையில், நான் அவைகளைச் சுருக்கிச் சொல்லுகிறேன்.

அதிலே சொல்லியிருப்பது இதுதான். அங்கே இருக்கின்றவர்களில் இராணுவத்திலிருந்து திரும்பி வந்திருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அகழி வெட்டியிருக்கின்றார்கள்; தடுப்பு வைத்திருக்கின்றார்கள்; பக்கத்திலே இருந்த வீடுகளுக்கு மேல் பாறாங்கற்களைச் கொண்டு போய் வைத்திருக்கின்றார்கள். இப்படியெல்லாம் தயார் செய்து வைத்துவிட்டு, தாக்கி இருக்கின்றார்கள் கடமையைச் செய்யப் போனவர்கள் என்ன செய்ய முடியும்? நாம் சொல்லவில்லையா மக்களைக் காப்பாற்ற முடியாத காவல்துறை எதற்காக இருக்க வேண்டும்? என்று கேட்கவில்லையா? அதே போல் மக்களைத் துன்பப்படுத்துகிற காவல் எதற்காக? என்று நாம் கேட்கிறோம் இரண்டையும் சிந்தித்துப் பார்க்கும்போது.

அதற்கு உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுகிறது. அதற்குரிய கட்டளைகளை இந்த அரசு இட்டிருக்கிறது. எப்படி நடவடிக்கையை தெளிவாகத் தெரிந்துக் கொள்ள வேண்டுமோ, அதைத் தெரிந்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், விழுப்புரத்திலே ஒரு பிரச்சினை முன்பு நடந்தது. அதைக் கவனிப்பதற்காக, தெரிந்துக் கொள்வதற்காக நான் சென்றேன். நான் சென்ற போது எனக்குச் சொல்லப்பட்ட பிரச்சினைகள் வேறு. அதே நேரத்தில், இன்னொரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் சென்றபோது, அவர்களிடத்தில் சொல்லப்பட்ட நிலைமை வேறு. இந்த இரண்டையும் நாம் நினைவிலே வைத்துக் கொண்டால், அந்தந்த இடத்திலே இருக்கின்ற கட்சிக்காரர்கள் எப்படிப்பட்ட செய்திகளைச் சொல்வதற்கு தயார் படுத்தி வைக்கிற நிலைமை நடந்திருக்கிறது என்பதை, நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்காக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொன்னதை நான் அலட்சியப்படுத்துகிறேன் என்று பொருளல்ல. எப்படி நிலைமைகள் உருவாகின்றன என்பதை நாம் மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். அதிலே இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். அந்த சங்கத்தின் தலைவர் இன்று மாத்திரம் அல்ல, முன்பும் சரி, அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் அல்லது முதலமைச்சர் அவரை அழைத்துப் பேசும்போது, நேரடியாக ஒன்றைப் பேசுகிறார். வெளியே சென்ற பிறகு, நேர் மாறாக அறிக்கை வெளியிடுகிறார். அதைப் பற்றி நான் வெளியிட்டபோது, என் மீது ஆத்திரப்பட்டவர்களும் உண்டு. சங்கத்தலைவர் என்ற முறையில் நாராயணசாமி நாயுடு அவர்களும், மற்றவர்களும் இங்கே வந்து என்னிடமும் அதிகாரிகளிடமும் பேசினார்கள். 12 பைசாவாக மின்சாரக் கட்டணம் குறைக்கிறோம் என்று சொல்லுகிறபோது, அவர் சொன்னார். “என் கையிலே மாலை இல்லையே?” என்றார். எங்கு வேண்டுமானாலும் அரிசியைக் கொண்டு போகலாம் தமிழ்நாட்டுக்குள் அந்தத் தடையை நீக்குகிறோம் என்று சொன்னபோது, நான் உங்களை தூக்கி ஆட வேண்டும்,

ஓட வேண்டும் என்றும் சொன்னார்கள். வெளியே போய் என்ன சொன்னார்கள்? அவர்கள் சொன்னதைச் செய்வதில்லை. இப்படிப்பட்ட கொடுமையைச் செய்து விட்டார்கள். எனவே, 10 பைசாவாக ஆக்க வேண்டும் சிறு விவசாயிகள் பெரிய விவசாயிகள் என்று கூடாது என்று பேசினார்கள். நாங்கள் சொன்னால் தவறு, எங்களை விட அனுபவம் படைத்தவர்கள் என்ன எழுதி இருக்கிறார்கள்? நிலைமை அன்றும் சொல்லியிருக்கிறார்கள் இன்று சொல்லுகின்றேன். உள்ள நிலைமை இதுதான். அந்த அளவில் இங்கே நான் ஒன்றை படித்துக் காட்டக் கடமைப்படிருக்கிறேன்.

போராட்டத் தலைவர் நாராயணசாமி நாயுடு அறிக்கை இப்போது இல்லை, 1972 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 8ஆம் நாளன்று "கோவை மத்திய சிறைச்சாலையில் என்னைச் சந்தித்த கோவை உதவிக் கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியாளரும், காவல்துறை உதவி தலைவரும், மாவட்ட கண்காணிப்பாளரும் என்னுடன் பேச்சு வார்த்தை நடத்த அழைப்பதாகவும், முதலமைச்சரும், சட்ட அமைச்சரும் போராட்டத்தைக் கை விடுமாறு கேட்டுக்கொண்டு இருக்கிறாகள் என்று தெரிவித்தார்". 1972 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 8ஆம் நாள், மாலையே புறப்பட்டுச் சென்று, 1972 ஜுன் திங்கள் 9ஆம் நாளன்று சென்னையில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும், சென்னைக்கு வாகன வசதி செய்து தரப்படும் என்று கூட தெரிவித்தார். இந்த அடிப்படையின் பேரில்தான், வாக்குறுதிக்குப் பின் 'ரிமாண்டில்' இருப்பவர்கள். விடுதலை செய்யப்பட்டார்கள் இப்போது உண்மைக்கு மாறாக சொல்வது வியப்பும், வேதனைக்கும் உரிய விஷயம்தான். இது சர்வாதிகாரப் போக்கு மனப்பான்மை.

இப்போதைய மாதிரிப் போராட்டம், முதல்வரை விருப்பத்தைப் பொறுத்து அல்ல, 'ரிமான்டு' முடிந்து, உதவிக் கண்காணிப்பாளர் வந்து அழைத்து, சென்னைக்கு அரசாங்கச் செலவில் அனுப்புவது உண்டா? எங்கள் சங்கத்தின் கட்டடத்திற்கு வருவது உண்டா? அரங்க செலவில், சென்னைக்குக் கொண்டு வருவது உண்டா? ஆகவே, இதை எல்லாம் திசை திருப்புவதற்கான வழி. நிலைமையைச் சமாளிப்பதற்கு முதலமைச்சர் செய்த சூழ்ச்சி, போராட்டம் பன்மடங்கு விருவிருப்புடன் நடக்கும். பேச்சு வார்த்தை நடத்த வரவில்லை. பல கட்சித் தலைவர்களைச் சந்தித்து முடிவெடுக்கத்தான் வந்தோம். நாங்கள் சௌகரியத்தை எதிர்பார்த்து சிறை செல்லவில்லை.

"இன்றைக்கும் அப்படித்தான் சொல்கிறார். அன்று என்ன சொன்னாரோ அதுதான் இன்றைக்கும் சொல்கிறார்கள். அவர் வந்து பார்க்க முடியாது என்று சொன்னபோது, நான் சொன்னேன், நானே வந்து பார்க்கிறேன் என்று. அப்போதும் நான் பார்க்கமாட்டேன் என்றார். இங்கே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அழகாகச் சொன்னார். மெக்காவுக்குப் போகிறோம். ஜெருசலத்திற்குப் போகிறோம் அதைப் போலத்தான், நாராயணசாமி நாயுடு அவர்களையும் பார்க்க ஓடினார் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் என்று அவர் சொன்னார். "மகாத்மா காந்தி அவர்களே ஜின்னா அவர்களைப் பார்த்து பிரிவினை கேட்கச் சென்றார்கள் என்கிற போது, ஒரு

சாதாரண எம். ஜி. இராமச்சந்திரன் போய் ஒரு சங்கத் தலைவரைப் பார்க்கக் கூடாதா? இதிலே என்ன தவறு? பார்த்தது உண்மைதான்; பேசியது உண்மைதான். ஆனால், நேற்றைய தினம் கலைஞர் அவர்கள், எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும்போது, சொன்னார்கள் நாராயணசாமி நாயுடு அவர்களும், நானும் சந்தித்துப் பேசியபோது பக்கத்தில் இருந்தது போல் சொன்னார்கள். இதையெல்லாம் உத்தரவாதம் கொடுத்து விட்டு வந்தார்கள் என்று யார் சொன்னது? இப்படிச் சொல்வதை நம்புகிறார்கள். நான் பேசியது என்ன என்பது எனக்கும், அவருக்கும்தான் தெரியும். நேரடியாகப் பேச்சுவார்த்தை என்றால், 4 பேர் உட்கார்ந்துகொண்டு, என்னோடு பேசினால் நான் என்ன சொன்னேன், என்பது எல்லாம் வெளியே வரும். அதற்கு வாய்ப்பே கிடையாது. இதைஇதைச் சொன்னார்கள் கடைசியாக, இறுதியாக வந்து பார்த்தார் என்று சொன்னார்கள் நாராயணசாமி நாயுடு அவர்கள் சொல்வதை வைத்துக் கொண்டுதான் அந்த முடிவுக்கு வந்தேன். அந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். அவரும், அழைத்தால் வருவார் என்று எண்ணி, நானும் அழைத்தேன். என்னிடத்தில் சொன்னவர்கள் பொய் சொன்னதாக நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அவர்களையெல்லாம் நாராயணசாமி நாயுடு அவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று அவர்களே வருத்தப்பட்டார்கள். அதிலே, சிலர் தலைவர்கள் இங்கே இருக்கிறோர்கள் அவர்களை நம்பி அழைத்தேன் வந்தார்கள். அவர்கள் சொன்னது ஒன்று பிளஸ் ஒன்று அதை ஒப்புக்கொண்டேன். ஒரு முதலமைச்சர் என்ற நிலையில், நான் எதையும் சுமத்தவில்லை சிலவற்றை, இங்கே மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள், எதிர்க்கட்சி தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, இவர் சொன்னதை அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நான் அவர்கள் சொன்னதை ஒப்புக்கொண்டு இருக்கிறேன் இருப்பினும், நான்தான் இன்றைய தினம் எதிரி என்கிறார்கள். எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நான் புதிது, பதவிக்கு.

ரகசியம் பேசுகிறபோது இன்னொருவரை வைத்துக் கொண்டு பேசுவது இல்லை. எதிர்க்கட்சித் தலைவர் தனியாகப் பேசும்போது என்னை அழைத்துக் கொண்டா போனார்கள்? அவர் தனியாகத்தான் சென்று பேசினார். ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவர்களும் தனியாகப்போய் பார்க்கிறபோது, அவர்களுக்கு வேண்டியவர்களைத்தான் அழைத்துக்கொண்டு போவார்கள். நம்பிக்கை வைத்து இருப்பவர்களைத்தான் அழைத்துக்கொண்டு போவார்கள். இந்த விஷயத்தில் அவர் என்னை நம்ப முடியாது, நான் அவர்களை நம்ப முடியாது. ஆக, இதிலே பிரச்சினை இல்லை. ஆனால், அவர்கள் மத்திய அரசு ஒப்புக் கொண்டாலும், ஒப்புக் கொள்ளாவிட்டாலும், அதிலே ஒரு மாற்றம் உதவி செய்தாலும், செய்யாவிட்டாலும், நிதி தந்தாலும், தராவிட்டாலும் ஒத்துழைப்பது என்பது வேறு. நிதி ஆதாரத்திற்கு உதவி செய்வது என்பது வேறு நாங்கள் செய்கிறோம் என்பதை, நீங்கள் செய்யுங்கள் தடை செய்யவில்லை, உங்களுக்கு உரிய அந்தத் தகுதியை நாங்கள் குறைக்கமாட்டோம் பிளாக் லிஸ்ட்டில் சேர்ப்பதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம், நீங்கள் உதவி

செய்யுங்கள் என்று சொன்னால் அது உதவி. அதைத்தான் சொன்னேன். நிதி உதவியும் உண்டு. மற்றதும் உண்டு; இரண்டும் இல்லை. இரண்டும் இல்லாத நிலையில் சொல்கிறேன். எத்தனையோ முறை பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். அது எனக்கு தெரியும், அவர்களுக்கும் தெரியும். அத்தனை கடிதங்கள் எழுதியிருக்கிறேன். நேரடியாகவும் பேசியிருக்கிறேன். நிதி அமைச்சரிடமும் பேசியிருக்கிறேன். ஆனால், அகில இந்தியப் பிரச்சினை என்று அவர்கள் எடுத்துக்கொள்கிறபோது, சில சூழ்நிலைகளில் பகிரங்கமாகவோ, அல்லது வேறு வகையிலோ எங்களுக்கு ஆதரவாக அவர்கள் சொல்ல முடியவில்லை. எனக்குப் புரிகிறது.

ஆனால், ஒன்றை அவர்கள் சொல்கிறார்கள். பிரதம அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். வன்முறைப் போராட்டம் கூடாது. எதற்கு எடுத்தாலும், போராட்டங்கள் நடத்தக் கூடாது. பேசித் தீர்க்கப்பட வேண்டும். விவாதிக்கப்பட வேண்டும். நாட்டில் பொருள்களின் உற்பத்தி அதிகமாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அதுசரியாக இருக்கும் என்று, அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். நான் சொன்னால், அது வேறுவகை. பிரதம அமைச்சர் சொன்னால், அதைக்கூட ஒப்புக்கொள்ளக்கூடாதா? ஆனால் இல்லை. இந்த நிலையில், இங்கே ஒரு படத்தை நான் இங்கே காண்பிக்க விரும்புகிறேன். தடை எங்கே போட்டு இருக்கிறார்கள் என்பதையும், எப்படி விலக்கப்பட்டு இருக்கிறது என்பதையும், பார்க்க வேண்டும். (ஒரு போட்டோ காண்பித்தார்).

அதுபற்றிய பிரச்சினையை நான் முற்றிலும் சொல்லிவிட்டேன். என்ன செய்ய போகிறோம் என்று. ஆகவே, மீண்டும் அந்த பதில் தேவையில்லை என்றாலும், இராணுவத்திலே பணியாற்றித் திரும்பியவர்கள் எப்படியெல்லாம் நடத்த கற்றுக்கொண்டு இருப்பார்கள் என்பதற்கு உதாரணம், கேரள மாநிலத்தில் முன்பு இங்கே இராஜாஜி அவர்களின் ஆட்சி இந்த காலத்தில், ஒரு தனித் திட்டில் இரண்டு மூன்று நாட்கள் பெரிய போராட்டமே நடந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இராணுவ யுத்தம்போல் அங்கு நடந்தது என்பதை எல்லாம், வரலாற்றைத் தெரிந்தவர்கள் நன்கு நினைவில் வைத்துக் கொண்டு இருப்பார்கள். அப்படிப்பட்ட அனுபவம் உள்ளவர்கள் அங்கே இருந்தார்கள் என்பதால்தான், இப்படிச் செய்ய முடிந்தது என்பதையும் சாதாரண விவசாயிகளுக்கு இதெல்லாம், இந்த முறைகள் எல்லாம் தெரியாது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். இங்கே அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் விவசாய சம்பந்தமாக, விவசாயப் பிரச்சினை சம்பந்தமாக பேச வேண்டுமென்று சொன்னபோது நான் உடனே ஒத்துக்கொண்டு அவர்கள் சொன்னதை ஏற்றுக் கொண்டேன். ஆனால் முன்னாள் முதலமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால் 1972ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் தேதி அன்று கோவையில் நிருபர்கள் முதலமைச்சரை சந்தித்து மீண்டும் விவசாயச் சங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்திவீர்களா என்று கேட்டதற்கு மாண்புமிகு கருணாநிதி

அவர்கள் நான் அவர்களை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைக்க மாட்டேன்; அவர்களாக வந்தால் ஆட்சேபனை இல்லை; பேச்சுவார்த்தையின் போது ஒன்றை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், வெளியிலே போன பிறகு வேறு விதமாக அறிக்கை வெளியிடுகிறார்கள். இதைத்தான் நானும் சொன்னேன், நேரிலே வந்து பேசும்போது ஒன்றை சொல்கிறார்கள். சம்மதத்திற்கு வருகிறார்கள். ஆனால், வெளியிலேயே போனப் பிறகு வேறுவிதமாக அறிக்கை வெளியிடுகிறார்கள் இது இன்று மட்டும் வந்த வழக்கம் அல்ல, இது, தொன்று தொட்டு வந்த வழக்கம் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். இந்த அறிக்கையே அதற்கு உத்தரவாதம் ஆகும் என்பதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போல, இன்னொரு கருத்தையும் இங்கே எதிர்க்கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சொல்லியிருக்கிறார்கள். “செயற்குழு கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.கழகத் தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் தி.மு.க அரசுக்கு எதிராக இம் மாநிலத்தில் பிற்போக்கு சக்திகளுக்கு காங்கிரஸ் வலது கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவு அளிப்பது குறித்து, நிர்வாக உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தார்கள் என்றும், இக்கட்சிகள் தங்களை சமதர்மவாதிகள், சோசலிஸ்ட் என்று கூறிக் கொண்டு போராடினால், எப்படிப்பட்ட நிர்வாகமும் அரசாங்கமும் சரிவர இயங்க முடியாது என்று கூறி இருக்கிறார். நாங்கள் சொன்னதை நாங்கள் செய்தாக வேண்டும், அதை நாங்கள் மறுக்கவும் இல்லை, மாற்றவும் இல்லை முயற்சிப்போம். அதற்காக என்ன வந்தாலும் அதை நிறைவேற்றுவதற்கு நாங்கள் பாடுபடுவோம். ஆனால், எந்த அரசும் இயங்க முடியாது என்று எங்களை விட அனுபவப்பட்ட ஒருவர் முதலமைச்சராக இருக்கும் போது கூறியிருக்கிறார். ஆகவே, இந்த நேரத்தில் அவர் என்ன சொல்லியிருக்க வேண்டும். “நீங்கள் தவறாகச் சொல்லிவிட்டீர்கள், ஏதோ தேர்தலிலே வெற்றி பெறுவதற்காகச் சொல்லிவிட்டீர்கள் அல்லது நீங்கள் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தில் சொன்னீர்கள், அதிலே 73 கோடி ரூபாய் என்ற அளவுக்கு இப்போது நிறைவேற்றி வீட்டீர்கள், வேண்டாம் மைய அரசை எதிர்த்து நாம் கேட்போம். உர விலைகளை எல்லாம் இறக்கச் சொல்வோம் ஒன்றுபட்டு கேட்போம், அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்காக 97,000 கோடி ரூபாய் வரையில் போகின்ற அதில் 240 கோடி ரூபாயைத் தமிழகத்திற்கு ஒதுக்கும்படி கேட்போம். அனைத்து கட்சியும் ஒன்று சேர்ந்து கேட்போம்’’ என்று சொல்லியிருந்தால், உண்மையிலேயே அவர்களுடைய நல்ல எண்ணத்தின் மீது நான் சந்தேகப்பட மாட்டேன். இப்போது சந்தேகப்படுகிறேன் என்று பொருள் அல்ல, நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்ற முறையிலே கேட்கிறார்களே தவிர, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லவில்லை தூண்டுகிறார். சுடர் விளக்காயினும், தூண்டுதல் வேண்டுமல்லவா ? ஆகவே அப்படிச் செய்கிறார்கள் என்று எடுத்துக் கொண்டாலும் கூட, எங்கள் கடமையை நாங்கள் நிறைவேற்றும்போது இந்தியப் பேரரசு இதை ஒரு காரணமாக எடுத்துக்கொள்ள அனுமதிக்க மாட்டோம் என்பதையும், அப்படி அவர்கள்

செய்யக் கூடாது என்ற கருத்தையும் சொன்னார்களேயானால் உண்மையிலேயே நாங்கள் விவசாயிகளுக்கென்று செய்யக்கூடிய காரியத்தைச் செய்வதற்கு உதவி செய்யும் வகையில் இருக்கும் என்பதை, நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட வேண்டியது என்னுடைய மாபெரும் கடமையாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் ஏதோ எல்லோரையும் கைது செய்துவிட்டோம், தண்டித்துவிட்டோம் என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், நான் இங்கே ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சிலர் மீது அதாவது கொலைக் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற வகையில் சிலர் மீது வழக்கு மன்றத்திலே தீர்ப்பளிக்கப்பட்டிருக்கலாம். அதிலேயும் பலபேர் விடுவிக்கப்படிருக்கிறார்கள் என்பதும் கூட நாடறிந்த உண்மை. ஆனால், அன்றைய தினம் யார் யாருக்கு என்னென்ன தண்டனை என்பதைப் பொறுத்தவரையில், ஒன்றிரண்டு மட்டும் படித்தால் போதும் என்று கருதுகிறேன். நிலச்சுவாந்தார்கள் நடத்தும் விவசாயப் போராட்டத்தை ஆதரிக்கிறார்கள் என்றும், அந்தக் கட்சிகள் ஏனைய மாநிலங்களில், குறிப்பாக, காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களிலுள்ள மின் கட்டண வீதங்களை கருதிப் பார்க்காமல் இது தொடர்பாக நிலச்சுவாந்தார்கள் உடன் சேர்ந்துக் கொண்டு உள்ளார்கள் என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் அவர்ககளுடைய கொள்கைக்கு முரணாக நடந்துக் கொள்கிறார்கள் என்று செயற்குழு உறுப்பினர்கள் கருதினார்கள் என்று கூறினார். இதை நாங்களும்தான் சொல்லுகிறோம்.

பணக்கார விவசாயிகள் 'ஏகபோக முதலாளிகள்' படித்து சம்பாதித்து வாழ்க்கையிலே வசதி பெற்றிருக்கிறவர்கள் ஏழை விவசாயிகளைத் தூண்டி விடுகிறார்கள். போராட்டங்களுக்கு அங்கே அவர்களை அனுப்பிவிட்டு பலி கொடுத்துவிட்டு, இங்கே அவர்கள் வசதியாக வாழ்கிறார்கள் என்று சொன்னால், எங்கள் மீது ஆத்திரம் வருகிறது. இதையே சட்டமன்றத்தில் சொன்னேன்; என்னை கோபித்துக் கொண்டார்கள். இந்த ஒரு ஆதாரம் போதும் என்று கருதுகிறேன். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதும், அப்படித்தான் செய்தார்கள்; தூண்டி விட்டார்கள், நிலச்சுவாந்தார்கள் போராட்டம் நடத்தினார்கள். இன்றும் அவர்கள் தான் போராட்டம் நடத்துகிறார்கள். ஆகவே, அவர்களுடைய நிலைமை வேறு; சாதாரண விவசாயிகள், ஏழை விவசாயிகள், உழைக்கும் விவசாயிகள் நிலைமை வேறு; அவர்களை ஆட்டிப் படைக்கின்ற பணக்கார விவசாயிகள் நிலைமை வேறு; இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்றால், நடவடிக்கையை நாம் கட்டாயம் சரியான முறையிலே எடுத்தாக வேண்டும். இதைச் சொல்லும்போது, இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

1972ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள் அன்று முன்னாள் முதலமைச்சரவர்கள் தெரிவித்ததை இங்கே நான் படிக்கிறேன். "ஏனைய கோரிக்கைகள் தொடர்பான விவசாயிகள் போராட்டம் மத்திய அரசுக்கு எதிராக ஒன்றேயாகும்" இதை இன்னொரு முறை நான் படிக்கிறேன் "ஏனைய கோரிக்கைகள்

தொடர்பான விவசாயிகள் போராட்டம் மத்திய அரசுக்கு எதிரானதேயாகும் அவை மாநில அரசுக்கு எதிரானது அல்ல. விவசாயிகள் நடத்தும் போராட்டம் எனது கட்சியின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சக்திகள் இம்மாதிரி சட்டம் ஒழுங்கைச் சீர்குலைய வைக்கும் முயற்சியாகும் என்பதை, மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்'' என்று திரு. கருணாநிதி அவர்கள் அறிக்கை கொடுத்தார்கள். விவசாயிகள் வைத்த 12 அம்ச கோரிக்கைகள் குறித்து திரு. கருணாநிதி அவர்கள் குறிப்பிடுகையில், ''கூட்டுறவு சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றியும், கைது செய்துவிட்டோம் என்று சொல்கிறார்கள்''. பாதுகாப்புச் சட்டத்தின் படி, நாராயணசாமி நாயுடு அவர்களைக் கைது செய்து விட்டார்கள். இந்திரா காந்தி அம்மையார் வந்து இங்கே பேசியதற்கு பிறகு விட்டு விட்டார்கள் என்று, மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்டார்கள். நான் ஒன்றை இந்த மாமன்றத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நாராயணசாமி நாயுடு அவர்களை மட்டும் அல்ல, சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு அரசியல்வாதிகளின் நிலைமை வேறு. அவர்கள் அத்தகைய நிலைமைக்கு வர மாட்டார்கள் என்பதை வைத்துக் கொண்டு நான் சொல்கிறேன் சமுதாயத்திலே இருக்கின்ற மக்களிடையே ஜாதி உணர்வைத் தூண்டுகின்ற நிலைமையை உண்டாக்கிவிட்டு, அவர்களை மதத்தின் மூலமாகக் போராட வைத்து, பாலைக் கொட்டுவது போன்ற வேறு பிரச்சினைகளைத் தூண்டிவிட்டு இவ்வாறு செய்வது இப்போது மட்டுமல்ல. ''பாலைக் கொட்டியிருக்கிறார்கள்; கட்டை வண்டியை நிறுத்திவைத்து மக்கள் போக முடியாமல் போக்குவரத்தைத் தடுத்திருக்கிறார்கள்; இதற்கெல்லாம், நாங்கள் நடவடிக்கை எடுப்போம்'' என்று இதற்கு முன்பும் கூட சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் நான் ஒன்றை சொல்லிகொள்ள விரும்புகிறேன் சமூக விரோதிகள் மீது பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்த நிச்சயமாக, இந்தத் தமிழக அரசு தயங்காது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொன்னதற்காகவோ அல்லது இந்திரா காந்தி அம்மையார் சொன்னார்களே அவர்களை வெளியே விட்டுவிடுவோம் என்பதற்காகவோ, நாங்கள் விட்டுவிடவில்லை. எங்களிடம் வந்த விவசாயச் சங்கத் தலைவர்கள் சொன்னார்கள். அவர்களை வெளியே விட்டு விடுங்கள். சந்தித்துப் பேசட்டும் என்று கேட்டார்கள். அப்படிக் கேட்டுக் கொண்டதற்குப் பிறகுதான் நாங்கள், அவர்களை வெளியே விட்டோம் அதுதான் உண்மை. தயவுசெய்து உறுப்பினர்கள் இதை தெரிந்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் உமாநாத் அவர்கள் எங்களையெல்லாம் மிக நன்றாக புரிந்தவர்கள், இன்னும் புரிந்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறேன். எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்கிற நேரத்தில் உண்மையைத்தான் சொல்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், கைது செய்து வைக்க வேண்டிய அவசியம், ஜாமினிலே அவர்கள் வெளியே வரக்கூடாது என்பதற்காகத்தானே தவிர, வேறொன்றும் இல்லை.

வெளியே வந்து மீண்டும் இப்படிப்பட்ட வன்முறை கிளர்ச்சிகளை வளர்க்கக் கூடாது என்பதற்காகத்தானே தவிர, வேறு ஒன்றுமில்லை.

இந்த நிலை எங்களுக்கு மட்டுமல்ல. மத்திய அமைச்சரவையிலே இருப்பவர்களுக்கும் கூட இந்த யோசனை இருக்கிறது. ஏன் என்.ஜி.ஓ.களை ஆந்திராவில் அப்படி கைது செய்ய வில்லையா? நாங்கள் இங்கே அப்படிச் செய்யவில்லையே. இந்த அரசை ஒழிக்க வேண்டும் என்று சொல்கிற என்.ஜி.ஓ. சங்கத் தலைவரை இன்றைய தினம் மாநாட்டுக்குத் தலைமை தாங்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் குறுக்கே போகவில்லையே. மக்கள் நம்பினால்தானே அவர்களுக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில், நாங்கள் நிச்சயமாக இருக்கிறோம். அவர்கள் திருந்துவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். நிருவாகத்திலே கோளாறு, நிருவாகத்திலே ஒத்துழையாமை இந்த அரசை ஒழிக்க வேண்டும் என்கிற எண்ணத்தையும் அடிப்படையாகக் வைத்துக் கொண்டு, நாங்கள் இந்த அரசின் பணியாளர்கள் அலுவலர்கள் என்று சொல்வது எப்படி நியாயம்? என்பதை, எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இதை அந்த அரசு ஏற்றுக் கொள்ளாது ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால், நாங்கள் ஒத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே நான் ஆதாரங்களோடு பேசியிருக்கிறேன். ஆனால், இன்னும் அவர்கள் மீது எதிராக அப்படியெல்லாம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்படி நிலைமை எல்லாம் இருந்தும்கூட, இந்தச் சட்டம் இங்கே இருந்தது. இப்பொழுது கூட, ஒரு தடுப்புச் சட்டம் வந்தது. நாங்களே கொண்டு வந்திருக்கிறோம். தொழிலாளர்கள் மற்றவர்களுக்கெல்லாம் என்று கருதுகிறேன். ஆனால், சட்டம் கொண்டு வந்திருக்கிறோமே தவிர, அத்தகைய தடுப்புச் சட்டங்கள் இங்கே பயன்படுத்தப்படுகிறதா? தூங்குகிறது. பயன்பட வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. அந்த நிலைமை ஏற்படக்கூடது என்பது தான் என்னுடைய ஆசையும் கூட.

அதை நான் இங்கே சொல்லும்போது இந்த விவசாயிகளுடைய பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அவர்கள் சில சமயம் சொல்லியிருகிறார்கள். நாங்கள் மகாத்மா காந்தியின், அந்த அறவழியிலே போராட்டம் நடத்துகிறோம் என்று சொல்கிறார்கள். முன்பெல்லாம், நான் யாரையும் இழிவு படுத்திப் பேசுவதாக நினைக்க வேண்டாம் கம்யூனிஸ்ட் தொண்டர்கள் அல்லது அதுபோன்று இருப்பவர்கள் எல்லாம் சுதந்திரக் கால போராட்டம் நடக்கும்போது, பிரச்சினைகள் வரும்போது அவர்கள் ‘அண்டர் கிரவுண்ட்’ என்று சொல்லப்படுகிற தலைமறைவாகியிருப்பார்கள். அதைச் சொல்லிவிட்டே செய்வார்கள். அவர்கள் அப்படித்தான் செய்தார்கள் என்பதும் தெரியும். நாங்கள் நினைத்தால், எங்களை யாரும் கண்டு பிடிக்க முடியாது என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் கூட இங்கே கூட சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் அகிம்சை வழியிலே, அற வழியிலே, மகாத்மா காந்தி வழியிலே போராட்டம் நடத்துகிறதாக சொல்கிற நாராயணசாமி நாயுடு சங்கத்தினைச் சேர்ந்தவர்கள் என்ன செய்தார்கள்? பாலைக் கொட்டினார்கள், போக்குவரத்தைத் தடை செய்தார்கள்.

பஸ்ஸை கொளுத்தினார்கள், அது மாகாத்மா காந்தியின் கொள்கை இல்லையே. அவர் இந்த கொள்கையை சொல்லவே இல்லையே. எங்கே போராடுகிறோம், யார் யார் போராடுகிறோம், எத்தனை மணிக்குப் போராட்டம் நடத்தப் போகிறோம், எங்கே அந்தப் போராட்டத்தைத் தொடங்கப் போகிறோம் என்பதையெல்லாம் அதிகாரிகளுக்கு தெரிவித்துவிட்டு, அதற்குப் பிறகு தான் அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். இங்கே நிலைமை அப்படி இல்லையே. 50 பேர்கள் செத்தால்தான் நல்லது. அதற்குப் பிறகு தான் நமக்கு வெற்றி என்கிற கொள்கையில் அல்லவா அவர்கள் இருக்கிறார்கள். இது இந்த விவசாயச் சங்கத்தின் கொள்கை என்பது பற்றி, ஒரு உதாரணத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே அவர்கள் விவசாயிகளாக இருந்தால், ஏழை விவசாயிகளுடைய துன்பத்தை தெரிந்துகொண்டிருப்பவர்களானால், தங்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை என்றாலும் கூட, மின்சாரம் பெற்றிருப்பவர்களின் வீட்டிலே போய் அங்கு இருக்கக் கூடிய மின்சார இணைப்பை துண்டிப்பார்களா? டிரான்ஸ்பார்மரை அழிப்பார்களா? மறுபடியும் அதை உருவாக்க வேண்டாமா? பணம் கட்டி விட்டார்களே என்ற ஆத்திரத்தில், தாங்கள் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்பதற்காக, அந்த வீடுகளில் இருக்கிற மின்சாரத்தை, அதன் தொடர்பைத் துண்டிப்பது, இது போன்ற துன்பங்களை ஏற்படுத்துவது போன்ற செயல்களை செய்பவர்கள் மகாத்மா காந்தியின் அறவழியிலே போராட்டத்தை நடத்துபவர்களா என்று கேட்கிறேன்?

இன்னொன்றும் கேட்கிறேன். போராட்டத்திற்கு, அதன் குழுவிற்குத் தலைமை வகிப்பவர்களைத் தேடினோம், காணோம். அந்தக் குழுவின் தலைவர் என்கிற முறையில் சிவசாமி அவர்களை காவல்துறையினர் தேடினார்கள் அவரை காணோம். இங்கே கூட பேசியிருக்கிறார்கள். மக்களுக்குத் தெரியும்.

போராட்டம் நடத்தச் சொல்லிவிட்டு அவர்கள் எல்லாம் நாம் விரும்பத்தகாத அளவிற்குக் கொடுமையான காரியங்களில் இறங்கி, மக்களுக்குத் துன்பம் ஏற்படுத்தி விட்டு, தூண்டிவிட்டு இவர்கள் வசதியாப் போய் எங்கேயாவது நம்முடைய தமிழக அரசு செல்லமுடியாத இடங்களில் போய் பதுங்கிக் கொள்கிறார்கள் என்றால், அதற்கு பக்கத்திலுள்ள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது ஒத்துழைக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? இது நியாயம் அல்ல. இது அகிம்சாப் போராட்டம் அல்ல. அப்படிப்பட்டவர்கள் இன்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். முன்பு சொன்னார்கள், அழைத்தால் வருவேன் என்று. எந்த நண்பர்களை அனுப்பி வைத்துப் பேசச் சொன்னார்களோ அதே நண்பர்கள் மீண்டும் சொல்கிறார்கள். நாங்கள் அழைத்தால் வரமாட்டேன் என்கிறார்கள் என்று, சட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறார்கள், அதை நீக்க வேண்டும், இப்போது அவை எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டால் சந்திப்பேன் என்று சொல்கிறார்கள். நான் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசு எந்தளவிற்கு விட்டுக் கொடுக்க வேண்டுமோ அவ்வளவு பொறுப்புகளையும் சுமந்துக் கொண்டு சூழ்நிலை கேள்விக்குறியை ஏற்படுத்துகிற அளவிற்கு நாங்கள் பணிகளைச்

செய்கிறோம். அந்த அளவிற்கு தந்து விட்டோம். இதையும் மீறி விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக என்று சொல்லி ஏதாவது போராட்டத்தைத் தொடங்குவதன் மூலம் தமிழக மக்களுக்கு சமூக துரோகம் செய்கிற அளவிற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுப்பார்களேயானால், இந்த அரசு சும்மாயிராது என்பதைக் கண்டிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏழை விவசாயிகளுக்கு, இந்த அரசு பாதுகாப்பு தரும். ஏழை விவசாயிகளுடைய கடன்களை நிச்சயமாக தீர்ப்பதற்கு எந்த வழியையும் ஏற்றுக் கொள்ள, இந்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, நாராயணசாமி உட்பட அநேகமாக கோவை மாவட்டத்தில் விவசாயச் சங்கம் அமைத்து அனைத்து முக்கிய தலைவர்களும், இரவு திடீரென்று முன் எச்சரிக்கையோடு அவர்கள் தங்கியிருந்த ஓட்டல்களில், சங்க அலுவலகத்திலும் வந்து கைது செய்யப்பட்டார்கள். இதைச் செய்வது, திடீரென்று இரவில் போய் கைது செய்யப்பட்டது நியாயம். ஏன்னென்றால் அவர்கள் நிச்சயமாக வன்முறையைத் தூண்டுபவர்கள். எனக்கு நன்கு தெரியும். நான் இந்த ஆண்டு அங்கே இருந்திருந்தால், அப்படித்தான் செய்திருப்பேன். இதே போல் செய்ய வேண்டுமென்று அவர்கள் நினைத்திருந்தால், நான் ஒத்துழைப்பு தந்திருப்பேன். அதை நான் பேசியிருப்பேன். மாநாட்டில் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறோம். அந்தக் கருத்தில் நான் பின்வாங்கவில்லை. மக்களை துன்புறுத்தி, மக்களுக்கு வேண்டிய தேவைகளை அவர்கள் பெறவிடாமல் தடுப்பது என்பது, அது சமூக விரோதச் செயல். அதை ஒத்துக்கொள்ள முடியாது. எவ்வளவோ கட்சிகள் போராடுகின்றன. போராட்டம் நடத்துவதாக எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொல்கிறார். பாலைக்கொட்டுவேன் என்று அவர்கள் சொல்லவில்லை. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் தான் இப்படிப்பட்ட வன்முறைகளை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். தீர்மானம் போடுகிறார்கள். ஆனால், அவர்கள் மட்டும் அதைப்பற்றி, அப்படி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அப்படிச் செய்வோம் என்று சொன்னால், நிச்சயமாக இந்த அரசு விட்டுக்கொடுக்காது என்றும், ஏழை விவசாயிகள், சாதாரணமாக சமூகத்தில் இருக்கக்கூடிய மற்ற மக்கள், அலுவலகங்களில் இருக்கிறவர்கள் அவர்கள் வாய்ப்பு வசதிகளைக் குறைப்பதற்கு இல்லாமல் செய்வதற்கு, அப்படிப்பட்டவர்கள் முயன்றால், உங்கள் ஒத்துழைப்போடு நான் கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

19.05.1972 மற்றும் 20.05.1972 நாளன்றும் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி திருப்பூர் வட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்னால் மறியல் செய்திருக்கும் முத்துசாமி மற்றும் 163 விவசாயிகளுக்கு தலா மூன்று மாத கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. இதுபோன்று பல இருக்கின்றன. இவைகளை எல்லாம் நான் சொல்லியாக வேண்டும். மே 19ஆம் நாள் அன்று, 12 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்னால், மறியல் செய்த மாவட்ட விவசாயச் சங்கத்தைச் சார்ந்தவர்கள், திரு.மன்றாடியார் உட்பட

28 பேர்களுக்கு தலா மூன்று மாத கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது, சட்டவிரோதமாக கூடிய குற்றத்திற்காக. இதுபோன்று நிறைய குறிப்புகள் இருக்கின்றன.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னதற்காக 10.06.1972 அன்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். கோயம்புத்தூர் விவசாயிகள் போராட்டம் மூன்று மாதங்கள் நீடித்த பிறகு கைவிடப்படுவதற்கு தான் புதிய உறுதிமொழி எதுவும் கொடுக்கவில்லை என்று அவர் தெரிவித்தார். முதலமைச்சர் சங்கப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு பேச்சு வார்த்தைகளுக்கு ஒப்புக்கொண்டால், போராட்டம் கைவிடப்படும் என்று கூறப்படுவதை செய்தியாளரிடம் அறிவித்தார். இது எல்லாம் நாராயணசாமி நாயுடு சொல்கிறார், இதையெல்லாம் ஒப்புக்கொண்டால், அதாவது வெளியே வந்தோம் என்று. உண்மை என்னவென்றால், விவசாயிகள் தான் போராட்டத்தை நிறுத்திவிட்டு முதலமைச்சரைச் சந்தித்து அவர்கள் கோரிக்கை குறித்து விவாதம் நடத்த விரும்பினார்கள் என்று கூறினார். ''கடந்த ஏப்ரல் மாதம் கோயம்புத்தூர் மாவட்ட விவசாயிகள், பிரதிநிதிகளும் அதாவது சட்டமன்ற உறுப்பினர்களும் தம்மைச் சந்தித்த போது, மின் கட்டணத்தில் சில சலுகைகள் அளிப்பது பற்றி கவனிப்பதாகக் கூறியதாகவும், மின்சக்தி கொண்டு இயங்கும் சில தொழில்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் அடிப்படையில், மின் கட்டண சலுகை வழங்குவதாகக் கூறியிருந்தார்கள். இத்தகைய வருமான வரிக் கணக்குகளிலும் சில இடர்பாடுகளை நீக்குவதாகக் கூறுகிறார்கள். விவசாயப் போராட்டத்தில் ஈடுபட்டு பெருமளவில் விவசாயிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து காமராஜர் அவர்களுக்குப் பதிலளிக்கையில் ''மற்றவர்களுக்குப் போதனை செய்ய முயலுகிறார்கள் தங்களுடைய கடந்த கால நடவடிக்கையை நினைத்துப் பார்க்க வேண்டும்'' என்று கூறினார். இதை நான் இங்கே சொல்லுவதற்குக் காரணம், எந்த ஆட்சியில் இருப்பவர்களும் உண்மை மற்றவர்களுக்குத் தெரியாத நேரத்தில் இந்தப் பதிலைச் சொல்லாமல் இருக்கமாட்டார்கள் என்ற வகையில்தான், இந்தக் கருத்தை நான் ஏற்றுச் சொல்லுகிறேன். அதைப்போல் இன்றைய தினம் நாங்கள் ஆட்சியில் இருக்கிறபோது எங்களுக்கு வருகின்ற தகவல்கள், போடுகின்ற திட்டங்கள், அவர் யார், யாரைச் சந்தித்து யோசனை கேட்கிறார்கள், எப்படிப்பட்ட யோசனைகள் அவருக்குத் தரப்படுகின்றன என்பதை எல்லாம் அறியும்போது, நாங்கள் வேதனைப்படாமல் இருக்க முடியாது, நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது.

அது போலவே, கிராம அதிகாரிகள் பிரச்சினையில் நான் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு ஓரிரு வார்த்தைகள் சொல்லியாக வேண்டும். வாய்ப்புக் கிடைக்கும்போது விரிவாகச் சொல்லுகிறேன் என்றாலும் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறது என்று நான் நம்புகிறேன்.

கிராம அதிகாரிகளை நாங்கள் திடீரென்று போய் எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு வந்துவிட்டோம் என்பது போன்ற ஒரு குற்றச்சாட்டு, அதைப் பற்றிக் குறிப்பிட்டு வந்திருக்கிறார்கள். நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன், மூன்று, நான்கு

நாட்கள், ஏழு, எட்டு நாட்கள் தொடர்ந்து சென்று அந்தப்பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள், அதிகாரிகள். இப்போது அந்தப் பொறுப்பை ஏற்றுச் செயல்படுகிறவர்களுக்கு அதிகமாக 100 ரூபாய் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, அவர்கள் இல்லாததால் வேலைகள் ஸ்தம்பித்துப் போய்விட்டன என்பது பொருத்தமல்ல; உண்மைக்கு மாறானவை என்பதையும், இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் அண்மையில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பகுதிக்குச் சென்றபோது, அங்கே பெண்கள் எல்லாம் கற்பழிக்கப்பட்டார்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் துன்புறுத்தப்பட்டார்கள் என்ற செய்திகள் வந்தன. நிலைமையைக் கவனிக்கச் சென்ற போது, அங்கே சொன்னவைகளை நான் சொல்லியாக வேண்டும். ஏதோ வெளியில் இருப்பவர்கள் ஜாதிப் பிரச்சினையைத் தூண்டிவிட்டு, முக்குலத்தோருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையில் போராட்டம் ஏற்படும் வகையில் கருத்துக்களைப் பேசினார்கள். அதையும் நான் சொல்லிவிட்டு வந்தேன். அந்தப் பெண்கள் திருமணமாகாதவர்கள், ஆனவர்கள் எல்லாம், உறவினர்கள் எல்லாம் சொன்னது முக்குலத்தோர் அனைவரும் தவறு செய்தார்கள் என்று, அவர்கள் சொல்லவில்லை. மீண்டும் சட்டமன்றத்தில் அங்கத்தினர்கள் முன் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அப்படிப்பட்ட படுபாதகமான செயல்களைச் செய்தார்கள் என்று சொன்னார்கள். முக்குலத்தோரில் பெரும் பகுதியினர் தங்களுக்குப் பாதுகாப்புத் தருகிறார்கள், அதே போன்று, நாடார் வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள், அவர்களும், ஏனைய மற்றவர்களும் பாதுகாப்பைத் தருகிறார்கள். ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர், கிராம அதிகாரி பொறுப்பில் இருப்பவர், இந்தக் கொடுமையான காரியத்தைச் செய்தார் என்று சொன்னார்கள். இந்த ஒருவரை வைத்து, 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எல்லோரையும் ஒன்றாக நான் கணக்குப் போட்டுவிட்டேன் என்று சொல்லக்கூடாது. சொல்லத் தயாராக இல்லை. நான் ஒன்றைச் சொல்வேன். கிராம அதிகாரிகளாக இருந்தவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு ஆசையுடையவர்களாக இருந்திருக்கலாம், சிலர் நல்லவர்களாக இருந்திருக்கலாம். ஆனால், அதே நேரத்திலே அந்தப் பதவிகள் தேவையற்றவை என்ற அளவுக்கு, மக்கள் மத்தியிலே, கிராமப்புறங்களிலே ஒரு பெரிய சுமையாகவும், ஒரு கொடுமைக்கார ஆட்சியில் ஒப்படைக்கப்பட்டால் எப்படியிருக்குமோ அப்படி மக்கள் அதிலே அகப்பட்டு சிக்கி, நலிந்து போய்க் கொண்டிருந்தார்கள் என்பதையும், இங்கே இருக்கின்றவர்கள் பெரும்பாலோர் அல்ல, எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அவர்களுக்குத் தெரியாதது அல்ல, 1973ஆம் ஆண்டு கூட, அப்படி ஒரு யோசனை வந்தது. நிறுத்திவிட்டாலும்கூட வந்ததற்குக் காரணமே இப்படிப்பட்ட செய்திகள் வேறு காரணங்கள் இல்லாமல் இருக்க முடியாது. அதை நிறைவேற்றினார்களா இல்லையா என்பது வேறு. ஏன் நிறைவேற்றவில்லை ? என்பதைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்றால், “கர்நாடகத்திலே அப்படியில்லையா ? ஆந்திரத்திலே அப்படியில்லையா ? என்று கேட்கிறார்கள். அங்கே பகுதி நேர ஊழியர்களாக

இருந்தாலும் கூட, அங்கே இருந்த நிலைமைகளே வேறு, அவர்களை வேலையைவிட்டு அகற்றும்பொழுது, அவர்களுக்கு மானியமாகக் கொடுத்திருந்த நிலங்களை அரசு எடுத்துக்கொண்டது என்பதை, இங்கே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நட்டஈடு கொடுத்தார்கள். இதற்காக நட்டஈடு கொடுப்பதிலே எதிராக இருக்கிறோம் என்று யாரும் கருத வேண்டிய தேவையில்லை.

விசாரணை முடியவில்லை, விசாரணை முடிந்தவுடன் அதற்குப் பிறகு தீர்ப்பு என்ன என்பதைச் சொல்ல வேண்டும். அதோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நான் முன்பே சொன்னேன். எதிர்கட்சித் துணை தலைவர் பேராசிரியர் அவர்களிடம் சொன்னேன். அந்தந்த கட்சிக்காரர்கள் போகிறபோது அதற்கு ஏற்ப, சாட்சி சொல்கிறார்கள். அதுதான் நிலைமை ஆகவே, அதை நம்பி சொல்லியிருக்கலாம். ஆனால், என்ன நிலைமை என்பதை வைத்துக்கொண்டு, இன்னார் பேசினார்களா இன்னார் சொன்னார்களா என்பதை மட்டும் வைத்துக்கொண்டு பரிசீலிப்பதைவிட என்ன நடந்தது என்பதை விசாரணையின் மூலமாகத் தெரிந்து கொண்டு, அதற்குப் பிறகு நடவடிக்கை எடுப்போம், அதற்குப்பிறகு அவசியமானால், மத்திய அரசுக்கோ தலைவர்களுக்கோ சொல்வோம் என்ற நிலைமையை நாம் பின்பற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லும்போது ஒன்றைச் சொன்னார்கள். அவர்களுக்கு வேலைக்கு உத்திரவாதம் தரமுடியுமா? என்று கேட்டார்கள். தகுதியுள்ளவர்கள், சர்வீஸ் கமிஷன், தேர்வாணைக் குழுவின் மூலமாக அவர்கள் முயலலாம். இன்னாருக்கு வேலை கொடுப்பது என்ற நிச்சயத்தோடு முடிவு எடுத்துக்கொண்டு அந்தப்பணியை மேற்கொள்ளவில்லை. அது மட்டுமல்ல, இப்பொழுது இருக்கிற நிலைமைகள் படி, விகிதாச்சாரப்படி 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரதிநிதிகளுக்கு அங்கே இடம் கிடைக்கும். அதேபோல பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்குக் கிடைக்கும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோன்ற வாய்ப்பு கிடைக்கும்போது ஓரளவுக்கு சமுதாயத்திலே பின்னுக்குக் தள்ளப்பட்டவர்கள் கைகட்டி வாழவேண்டிய நிலையில் உள்ளவர்கள், மேல்நிலைக்கு வந்து சமுதாயத்திலே ஒரு பகுதிக்குச் சொந்தக்காரர்களாகி, அந்தக் கிராமத்தை நடத்துகிற அளவுக்கு, அவர்கள் வாய்ப்பைப் பெறுவார்களேயானால், கொஞ்சம் கொஞ்சமாக, இங்கே பெரியார் அவர்களுடைய படத்தைக் காண்பித்து மாண்புமிகு உறுப்பினர் திரு.உமாநாத் அவர்கள் சொன்னதைப்போல், அப்படிப்பட்ட எண்ணம் நம் உள்ளத்திலே மட்டுமல்லாமல், செயலிலே வரும் என்பதற்கு வழி கோலும் என்று சொல்லி, அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.சுந்தரராஜ் அவர்களுக்கு ஒன்றை நான் கூற விரும்புகிறேன். வந்தவர்கள் என்னைக் கண்டு பேசினார்கள்; மாண்புமிகு நிதியமைச்சர், மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆகியவர்களும் இருந்தார்கள்;

தலைமைச் செயலாளரும் இருந்தார். அவர்களிடம் சொல்லி தலைமைச் செயலாளரைச் சந்தியுங்கள், பேசுங்கள், விரைவிலே முடித்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். வந்தவர்கள், அதிலே வந்த இளைஞர்கள் சொன்னார்கள், ஒரு நியாயமான பிரச்சினையை எங்கள் முன்னால் எழுப்பினார்கள். அதாவது பத்தாண்டுகளுக்கு முன்னால் ஒரு இளைஞர் அந்தப் பதவிக்கு வந்திருக்கலாம்; அப்பொழுது அவருக்கு 24 வயது, 25 வயது ஆகியிருக்கலாம்; இப்பொழுது அவருக்கு 32 வயது, 34 வயது ஆகியிருக்கும். ஆனால், இப்பொழுது 30 வயதுக்குள்ளவர்களுக்கு வாய்ப்பு என்று சொன்னால் இப்படிப்பட்ட இளைஞர்களுக்கு பத்தாண்டுகள் அனுபவப்பட்டவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது, அதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். அதற்கு நான் பதில் சொல்லும்பொழுது சொன்னேன். இந்தப் பிரச்சினை புதிய பிரச்சினையாக இருக்கிறது, அதைப்பற்றி அரசு கவனிக்கும் நீங்கள் விவாதியுங்கள், அதற்குப் பிறகு தேர்வாணைக் குழுவிற்கு புதிய யோசனைகள், உத்திரவுகள் அல்லது வேண்டுகோள் அனுப்ப வேண்டுமென்றால், விதிமுறைகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்றால், எந்த அடிப்படையிலே செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு நிச்சயமாக நாங்கள் விருப்பம் காண்பிப்போம்; அதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை; எப்படியாவது அனுபவப்பட்டவர்கள், இளைஞர்கள், தகுதியுள்ளவர்களுக்கு நியாயமாகப் பணியை ஏற்றுக்கொண்டு செயல்படக்கூடிய திறமை உள்ளவர்களுக்கு, அது கிடைக்க வேண்டுமென்பதிலே நாங்கள் மாறுபாடாகக் கருதவில்லை என்பதை எடுத்துச் சொல்லியிருந்தேன். ஆனால், எல்லோரையும் கூப்பிட்டுப் பேச வேண்டுமென்று சொன்னபொழுது, உடனே சொன்னார்கள் உண்ணாவிரதம் இருப்பவர்களுக்கும், எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றார்கள். அதிலும் இரண்டு கட்சி, இந்த வேதனையை எங்கே சொல்ல முடியும்? கூப்பிட்டு அவர்களையும் அழைத்துப் பேசலாம், ஒன்றாகச் சேர்ந்து பேசலாம் என்றால், நாங்கள் அவர்களோடு வர மாட்டோம், தனியாக வருவோம் என்று சொன்னார்கள். அப்படியிருந்தும் பேசச் சொன்னோம். அதிலேயும் இதே கதைதான், வெளியே போய்ச் சொன்னார்கள், அத்தனை பேர்களையும் வேலைக்கு எடுத்துக்கொண்டாலொழிய நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று. வெளியே என்ன நடந்ததோ தெரியாது. அதைச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, இதற்கு யார் இடையே இருந்து நல்ல நோக்கத்தோடு அதற்கு உழைத்தார்களோ அவர்களுடைய எண்ணமும் வெற்றியடையவில்லை; நாங்களும் இன்னும் வெற்றி அடையவில்லை. எங்களுடைய வெற்றியெல்லாம் பிரச்சினை இல்லாமலிருந்தால்தான் வெற்றியே தவிர, பிரச்சினையிலே ஏதோ புதிதாகத் தீர்வு கண்டு, ஒரு சிலருக்குத் திருப்தி இல்லையென்றாலும், பலருக்குத் திருப்தியாகிவிட்டது என்றாலும், அதை வெற்றியாக நான் கருதமாட்டேன். ஆனால், ஒட்டுமொத்தமாக, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்கள், சட்டத்திற்கு உட்பட்டு, அரசினுடைய நிரந்தர ஊழியர்களாக ஆக்கப்படவேண்டிய நிலைக்குள்ள தகுதியைப் பெற வேண்டுமென்பது தான், முழு நேர வேலை ஊழியர்களாக இருக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய ஆசை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதனால் தவறுகள் கிராமங்களிலே இருக்குமானால், அவைகளைச் சீர்செய்வதற்கும், யாருக்காவது தவறுகள் இழைக்கப்பட்டு அந்த நிலங்கள் மற்றவைகளெல்லாம் யாருக்கோ சொந்தமாக ஆக்கப்பட்டிருந்தால், மீண்டும் அந்த உழைக்கும் வர்க்கத்திற்குத் திரும்பக் கொடுக்கப்பட வேண்டும் என்பதும், பினாமி நிலங்களை வைத்துக்கொண்டு இந்த அதிகாரிகளைப் பயன்படுத்துகிறவர்களிடமிருந்து விடுவித்து, மக்களுக்குச் சேர வேண்டிய அந்த நிலங்களை எடுப்பதற்கு, புதிதாக வருகின்ற இளைஞர்கள், படித்தவர்கள், துணை நிற்க வேண்டுமென்பதை வைத்து, இந்த முடிவை நாங்கள் மேற்கொண்டு செயல்படுகிறோம். அதில் எல்லோரும் ஒத்துழைக்க முன்வந்தால், சுமுகமாவும் சீராகவும் ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கான நஷ்டயீட்டைக் கொடுத்து, அவர்களையும் திருப்தியடையச் செய்ய வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம் என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே அவசரச் சட்டங்கள் எல்லாம் தமிழில் வெளியிடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள், கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். பொதுவாக, இம்மாநில அரசு தனது அலுவலகத்தில் நடைபெறும், எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்ற கொள்கையைக் கொண்டுள்ளது. பல்வேறு நேரங்களில் நான் உத்தரவு போடும்போதெல்லாம் தமிழில்தான் எழுதப்பட வேண்டும். தேவையிருந்தால், தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்துக் கொள்ள வேண்டுமென்ற நிலை உருவாக வேண்டுமென்று சொல்லி, அதற்காக தட்டச்சுப்பொறி வாங்க வேண்டுமென்றெல்லாம் உத்தரவிட்டு, அங்கே அதிகமாக வாங்கச் செய்திருக்கிறேன் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருப்பினும், அதற்குரிய எல்லா சாதனங்கள், வசதிகள், இன்னும் முழுமையான அளவு இல்லாததால், தலைமைச்செயலகத்தின் எல்லா துறைகளிலும் பொதுவாக, இன்னும் முழு அளவில் தமிழினைப் பயன்படுத்த இயலவில்லை. இதனால், தலைமைச் செயலகத்தில் எல்லா துறைகளிலிருந்து அரசிதழ் வெளியிடுவதற்காக சென்னை மத்திய அச்சகத்திற்கு அனுப்பப்பெறும் அரசாணைகளும், மற்ற அறிக்கைகளும் தமிழிலேயும், மற்றவைகள் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகின்றன. விரைவில், இவைகள் முழுமையும் தமிழில் வெளியிடப்படும்போது, அரசிதழ்களும் முழுமையாக, தமிழிலேயே வெளியிடப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஹெலிகாப்டரைப் பற்றி ஒரு பிரச்சினை வந்தது. குறிப்பாக, கோவை மாவட்டம் போன்ற இடங்களில் நீலகிரி பகுதியில், நிலச்சரிவு போன்றவைகள் ஏற்படும்போது, போவதற்கு வழியில்லையென்றும், அதிகாரிகள் போவதற்கோ அல்லது அவசரமாக மக்கள் போவதற்கோ, வழியில்லையென்ற வகையில், அப்பொழுது பயணத் தொடர்புக்கு இதைப் பயன்படுத்த வேண்டுமென்ற யோசனை இருக்கிறது. இதைப்பற்றி இந்தியப் பேரரசோடு தொடர்பு கொண்டிருக்கிறோம். விரைவில், அதைப்பற்றி மைய அரசிடம் பேசி, அனுமதி பெற முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

பினாமி ஒழிப்புச் சட்டத்தைப் பற்றி இங்கே நல்ல கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள். ஏன் தாமதம் என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள், நில உச்சவரம்பு கட்டுதல், இரண்டாவது திருத்தச் சட்ட முன் வடிவு, 1980 ஆம் ஆண்டில் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, 1980 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாளில் மத்திய அரசுக்கு, குடியரசுத் தலைவரின் இசைவு பெற அனுப்பப்பட்டது. இந்தச் சட்ட முன்வடிவிற்கு விரைவில் குடியரசுத் தலைவரின் இசைவு பெற கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 11ஆம் நாளில், டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு சிறப்புப் பிரதிநிதிக்கு இந்த சட்ட முன் வடிவின் நகலை மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை அனுப்பி, மத்திய அரசை அணுகி, குடியரசுத் தலைவரின் இசைவைத் துரிதப்படுத்தக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. 1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30ஆம் நாளில் அதே மாதத்தில், டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு சிறப்பு ஆணையருக்குக் குடியரசுத் தலைவரின் இசைவினை விரைவில் பெற நடவடிக்கை எடுக்கும்படி தந்தி மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

1980ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23ஆம் நாளில் இந்தப் பணிக்காக, ஒரு தனி நபரைப் போட்டு, கவனித்துக் கொள்ளும்படி ஏற்பாடு செய்துள்ளதாக டெல்லியில் இருக்கும் சிறப்பு ஆணையர் பதில் அளித்தார்.

1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6ஆம் நாளில் சட்டத்துறை மைய அரசை தந்தி மூலம் நினைவுபடுத்தியது.

1980ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாளில், இந்தச் சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவரின் இசைவினை விரைவில் பெற, மேல் நடிவடிக்கை எடுக்கும்படி டெல்லியில் இருக்கும் சிறப்பு ஆணையரை சட்டத்துறை கேட்டிருக்கின்றது. 25.10.1980, 15.12.1980, 08.01.1981, 24.01.1981 ஆகிய தேதிகளில், சட்டத்துறை மத்திய அரசுக்கு, தந்தி மூலம் நினைவுபடுத்தி உள்ளது.

இந்த நிலையில், அவர்களுடைய பதில் வரவில்லையென்றாலும், நியாயமான தேவையான இந்தச் சட்டத்தை அவர்கள் விரைவிலே நிறைவேற்ற அனுமதி தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். இந்த மாமன்றமும் அப்படித்தான் எதிர்பார்க்கிறது என்பதிலே எனக்கு ஐயமில்லை.

இங்கே திரைப்படத்தைப் பற்றிப் பேசினார்கள். 4 காட்சிகள் தேவையா? 4 காட்சிகள் எதற்காக? அதை 3 காட்சிகளாக்கக் கூடாதா? சாதாரண ஏழைகள் எல்லாம் கெட்டுப்போகின்றார்கள், மாணவர்கள் படிப்பெல்லாம் கெட்டுப்போகின்றது என்று சொன்னார்கள். 4 காட்சிகள் என்ற வகையிலே, அந்த ஒரு காட்சி நடைபெறுவதற்கு நாங்கள் அனுமதித்திருப்பதற்கு வரி கிடைத்தது என்ற ஒரு நிலைமையிலே தவிர, வேறொன்றும் அல்ல. ஆனால், அதே நேரத்தில், அண்ணனோ, தம்பியோ, கணவனோ, தந்தையோ, ஏதாவது அலுவலகத்தில் பணியாற்றப்

போகும்போது, வீட்டில் உள்ளவர்கள், சிறு குழந்தைகள் அல்லது தாய்மார்கள் ஒரு வேலையும் இல்லாமல் இருக்கும்போது, அவர்களுக்குப் பொழுது போவதற்கு அதுபயன் அளிக்கிறது என்கிற செய்தியும் எனக்கு வந்திருக்கிறது என்பதைச் சொல்லும்போது, உண்மையிலேயே மாணவர்கள் ஏதாவது கெட்டுப் போகிறார்கள் என்றிருக்குமானால், இந்த அரசு அதைப்பற்றி திரும்பப் பரிசீலனை செய்வதிலே தயங்காது, என்பதை நான் இங்கே உறுதியாகக் கூறிக்கொள்ளுகின்றேன்!

அதே சமயத்தில், திரைப்படத் துறையினுடைய சில பிரிவுகள் என்கிற வகையில் சில உரிமைகளை, அதிகாரத்தை, மைய அரசு எடுத்துக் கொள்கிறது என்கிற நிலைமை கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதும், அதைப்பற்றி இந்த அரசு, அது சரியில்லை என்பதையும் வற்புறுத்தி இருக்கிறோம். அதேநேரத்தில், இந்தத் தணிக்கைக் குழுவிற்கு இந்தத் திரைப்படத் துறையில் இருந்து ஒருவரைத் தலைவராக பம்பாயிலே இருந்து நியமித்திருப்பதற்காக நான் அந்த அரசுக்கு நன்றியைச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதிகாரிகளை உட்கார வைத்து அந்தப் பணியை செய்ய விடாமல், இந்தத் துறையில் இருந்து அனுப்பப்பட்ட ஒருவரை, இவர் எந்த மொழியை பேசுபவராக இருந்தாலும்? அங்கேதான் அந்தத் தலைமை தணிக்கையகம் இருக்கிற காரணத்தால், இப்போது அவரைப் போட்டு இருந்தாலும் கூட, எதிர் காலத்திலே, தமிழகத்திற்கு அந்த பிரதிநிதித்துவம் வரும் என்கிற நிலையில், அதைச் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். இது போன்ற பல பிரச்சினைகள் இருப்பினும் இன்னும் வாய்ப்பு இருக்கிறது, அப்போது அதைப் பற்றிய பேசலாம் என்று கருதுகிறேன்.

இங்கே எரிசாராயத்தைப் பற்றி விளக்கமாகப் பேசப்பட்டது. அதிலே எனக்குத் தெரிந்த சில வரைமுறைகளை எல்லாம் முதலிலே சொல்லிவிட்டு, பிறகு அதைப் பற்றிய பேசலாம் என்று நான் கருதுகிறேன். வெளி மாநிலங்களுக்கு சாராயம் அனுப்பப்படும்போது சாராயம் கொண்டு செல்லும் வண்டிகளுடன் ‘எஸ்கார்ட்’ அலுவலர்களை அனுப்பும் முறை பற்றி மதுவிலக்குச் சட்டத்தின் கீழ், ஏற்றுக் கொண்ட விதிமுறைகள் எதுவும் இல்லை, 1975ஆம் ஆண்டு வரை, அம்மாதிரி ‘எஸ்கார்ட்டு’ அனுப்பும் முறை நடைமுறையிலே இல்லை. 1975ஆம் ஆண்டு பிற்பகுதியிலே, கோவா மாநிலத்திற்கு அனுப்பப்பட்ட சாராய வண்டிகளுடன், இளநிலை உதவியாளர் தரத்தில் உள்ள ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரும், போலீஸ்காரர் ஒருவரையும் அனுப்பி வைக்க முன்னாள் வருவாய் வாரியம் ஏற்பாடு செய்தது. எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்படும் சாராய வண்டிகளுடன், ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரையும், ஒரு போலீஸ்காரரையும் அனுப்பும் முறை 1976ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல், வருவாய் வாரியத்தால் பின்பற்றப்பட்டது, பின்னர் 1979 ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 8 ஆம் நாளில், வருவாய்த் துறை ஆணையாளருடன் சாராய தொழிற்சாலைகளின் உரிமையாளர்களுடன் நடைபெற்றக் கூட்டத்தில், சாராயம் ஏற்றிக் செல்லும் வண்டிகளுடன் அனுப்புவதற்கு வருவாய்த்துறை அலுவலர் ஒருவரும், போலீசார் ஒருவரும் ஒரே நேரத்தில் கிடைப்பது மிகவும் கடினமாக உள்ளது என்று கருத்து

தெரிவிக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டு, வருவாய்த்துறை ஆணையாளர் அவர்கள் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அனுப்பும் முறையை நிறுத்திவிட்டு, போலீசார் மட்டும் அனுப்பினால் போதும் என்று 1979ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆணையிட்டார். அன்று முதல் தனியாகவோ, அல்லது தொகுதியாகவோ செல்லும் எரி சாராய வண்டிகளுடன், ஆயுதம் தாங்கிய போலீஸ்காரர் ஒருவர் மட்டும் செல்லும் முறை வழக்கத்தில் உள்ளது.

'பிளை லீப்' என்பது, மாநிலங்களுக்குள் சாராயம் உபயோகிப்பதற்கான உரிமத்திலும், வெளி மாநிலங்களுக்கு சாராயம் எடுத்துச் செல்வதற்குமான அனுமதிச் சீட்டில் ஒரு பகுதியாகும். இதிலே, கொடுக்கப்பட்ட சாராயத்தின் அளவையும், 'டிரான்ஸ்போர்ட் பர்மிட்' எண், அனுமதி கொடுக்கப்பட்ட நாள் போன்றவை பதிவு செய்யப்பட்டு, சாராயம் கொடுக்கப்படும் வடிசாலையின் பொறுப்பாளர் கையெழுத்து இடப்படுகிறது. ஒரு உரிமத்தில் அல்லது ஏற்றுமதி அனுமதிச் சீட்டில் ஒரு 'பிளை லீப்தான்' உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல், கேரளாவிற்கு சாராயம் எடுத்துச் செல்ல அனுமதியோ, 'பிளை லீபோ' வழங்கும் அதிகாரம், சைதாப்பேட்டை ஆர்.டி.ஓ. அவர்களுக்கோ, யாதொரு ஆர்.டி.ஓ.வுக்கோ கிடையாது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மருந்துகள் தயாரிப்பதற்கும், சிறு தொழிலுக்கும் சாராயம் வேண்டுமென்று வருகின்ற விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, உண்மையான தேவைக்கு ஏற்ப அனுமதி அளிக்கப்படுகிறது. கருநாடக மாநிலத்தில் உள்ள 'கோடே வடிசாலைக்கு' கொடுக்கப்பட்டது பற்றியும், கோயம்புத்தூர் 'அல்கஹாலிக்ஸ் அண்ட் கெமிகல்ஸிலிருந்து' 60,000 லிட்டர், 'அரவிந்த் டிஸ்டில்லரி'ஸிலிருந்து 48,000 லிட்டர் ஆக இலட்சத்து எட்டாயிரம் பெற்று இருக்கிறது என்றும், நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1971ஆம் ஆண்டு தி.மு.கழக அரசு மது விலக்கை தமிழகத்தில் ரத்து செய்து, 1974ஆம் ஆண்டு மீண்டும் கொண்டு வந்தபோது, தமிழகத்தில் சர்க்கரை கழிவுப்பால் மற்றும் எரிசாராயம் உபரியாக உற்பத்தியாகி இருந்தது. எனவே, பற்றாக்குறை மாநிலங்களான கோவா, கேரளா, கருநாடகா மாநிலங்களுக்கு மைய அரசின் கொள்கைக்கு ஏற்ப, தமிழ்நாட்டில் உள்ள உபரி எரிசாராயம் அனுப்பப்பட்டு வந்தது. இம்முறை 1974ஆம் ஆண்டிலிருந்து நடைபெறுகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என் மீதே குற்றம் சாட்டுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு சரியாக பதில் சொல்லவேண்டியது என்னுடைய மாபெரும் கடமை. என்னவோ நாங்கள் இங்கே வந்த பிறகுதான், எரி சாராயம் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுவது போன்ற ஒரு குற்றச்சாட்டு இங்கே சொல்லப்பட்டது.

இந்த தமிழகத்தைப் பொறுத்தமட்டில், அந்தந்த மாநில அரசு, ஆயத் தீர்வை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், இவர்கள் அனுமதி பெற்று கொண்டு வரப்பட்ட

கடிதங்கள் அடிப்படையில்தான், இங்கே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது இல்லை, என்று நிரூபித்தால், நான் எதற்கும் தயார். இந்தப் பிரச்சினைப் பற்றி கேரளத்திலும், தமிழ்நாட்டிலும் நடைபெறுகின்ற இந்த விசாரணை முடிந்த பிறகு, உண்மை தெரிய வரும். நீண்ட நாள் ஆகாது. நாம் எல்லாம் இங்கேதான் இருக்கப் போகிறோம். அந்த முடிவு தெரிந்த பிறகு எது உண்மை, எது உண்மையல்ல என்பதை இந்த நாடு அறிய இருக்கிறது.

நேற்றைய தினம், எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசும் போது, நான் ஒரு இடத்திலே பேசுகின்ற நேரத்தில் 10, 15 இலட்சம் வெளியே கொண்டு போகிறார்கள் என்று சொல்வது சரியல்ல, என்று சொன்னேன் என்றார்கள், எனக்குத் தெரிந்திருந்தால், நான் நடவடிக்கை எடுத்திருப்பேன். இங்கே சொல்வதெல்லாம் மற்றவர்களை எச்சரிப்பதும், அச்சுறுத்துவதும் என்பதை நண்பர்கள், இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்துகொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன். எதற்காக சொல்கிறோம்? சட்டத்தை மீறினால் இப்படிப்பட்ட தண்டனை உங்களுக்குக் கிடைக்கும் என்று சொல்வதால் சட்டத்தை மீறக்கூடாது என்பதும், உங்களைக் கவனிக்கிறோம் என்பதுதான், அதற்குப் பொருளே தவிர, வேறல்ல.

ஆட்சியிலே இருக்கும்போது எப்படியெல்லாம் நடந்தது என்பதை நான் ஆதாரப்பூர்வமாகச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து, நேரம் இல்லாத காரணத்தால், ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி மற்றவற்றைப் பிறகு வாய்ப்புக் கிடைக்கும்போது படிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1974ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ஆம் நாள் அன்று 'அரவிண்ட் டிஷ்டில்லரிஸ்' கோவாவுக்கு 80 ஆயிரம் லிட்டர் எரிசாராயத்தை திரு. மனுபாய் சங்கிலி என்பவர் பெயருக்கு அனுப்ப அனுமதி கேட்டு, கடிதம் எழுதுகின்றனர். இதிலே மனுபாய் சங்கிலி என்பவர் வேறு சில நிறுவனங்களுக்கு கமிஷன் ஏஜென்டாக இருந்து விண்ணப்பிக்கிறார். இவரது மனு பரிசீலனையில் இருக்கும் போது, சி.பி.ஐ. இலாக்காவிடமிருந்து ஒரு கடிதம் வருகின்றது அரசுக்கு, அதில், மனுபாய் சங்கிலி என்பவர் கறுப்புப் பணக்காரர் என்றும், இந்த எரிசாராயத்தை எப்படியும் அவர் பயன்படுத்துவது இல்லை என்றும், கமிஷன் வாங்கிக் கொண்டு வேறு சிலருக்கு விற்று அதிக இலாபம் சம்பாதிக்கிறார் என்றும் புகார்கள் அடங்கிய மனுவை சி.பி.ஐ. தக்க விசாரணைக்கு அனுப்புகிறது. வருவாய் வாரியத்திற்கு 1975ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாளில் ரகசிய விசாரணையின் மூலம் உத்தரவிடப்படுகின்றது. ஆனால் இதன் மீது முடிவு தெரியும் முன்னாலேயே 1975ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் நாளில் இதே மனுபாய் சங்கிலிக்கு 80 ஆயிரம் லிட்டருக்கு அனுமதி தரப்படுகிறது. பின்னர் 1975ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதியில் காவல்துறையினர் அறிக்கைப்படி, இந்த மனுபாய் சங்கிலி ஒரு கமிஷன் விற்பனையாளர் என்றும், கோவைக்கு அனுப்பப்பட்ட எரிசாராயம் கோவைக்கு போய்ச் சேரவில்லை. அது சென்னையிலேயே விற்கப்பட்டு விட்டது என்றும், தெரிவிக்கப்படுகின்றது.

மனுபாய் சங்கிலி நேரில் காவல்துறை அதிகாரிகளிடம் சொன்ன விவரங்கள் முறைகேடுகளை உறுதிப்படுத்தும் வண்ணம் அமைந்துள்ளது. எரிசாராயம் கோவைக்கு வரவில்லை என்றும், தமிழ்நாட்டுக்காரர் மூலம் அது சென்னையிலேயே விற்கப்பட்டு இருப்பதாகவும், அது கோவை சேர்ந்ததாக 'போலி சர்டிபிகேட்டுகள்' தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டதாகவும், விசாரணையில் நிரூபனம் ஆகிறது. எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சொன்னது போல இந்தத் தவறை, அவர் முதலமைச்சராக இருந்தபோது அவர்தான் செய்தார் என்று நான் சொல்ல மாட்டேன். ஆனால், புகார் கடிதம் யார் மீது வந்ததோ அவருக்கே எரிசாராயம் அனுப்பப்பட்டதே அது ஊழல் இல்லையா ? என்று நான் கேட்க விரும்பகிறேன். ஆகவே, தவறுகள் நடப்பதை, இந்த அரசு கண்காணித்துத் தடுத்து கட்டுப்படுத்தி நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னமும் சொல்லப்போனால் 10 இலட்சத்திற்கு அனுமதித்த இடத்தில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் கூட அவர்கள் எடுத்துப்போக முடியாமல் அதோடு நாங்கள் தடை வித்திருக்கிறோம். சந்தேகம், அதில் இப்படிப்பட்டப் பிரச்சினைகள் எல்லாம் வந்தவுடனே அவர்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று நாங்கள் நிறுத்தி விட்டிருக்கிறோம். அதில் விரைவிலே உண்மை என்ன என்று தெரிய வரும். எவ்வளவு, எங்கே போயிற்று ? எந்த இடத்திலிருந்து போயிற்று ? எங்கே இருந்து கொண்டு போகப்பட்டது ? யார் கணக்கில் இல்லாமல் கொண்டு போனர் ? யாருடைய உதவியினாலே சென்றது ? என்பதையெல்லாம் சில வாரங்களிலே நாம் தெரிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறேன். அப்போது யார் இதற்குக் காரணம் ? எப்படிப்பட்டவர் தொடர்பு கொண்டிருக்கின்றனர் ? யாரோடு தொடர்பு கொண்டிருக்கின்றனர் ? என்ற உண்மைகள் எல்லாம் வெளிவரும். அதுவரையில் நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஏனென்றால், தமிழகத்தில் மட்டும் விசாரணை நடப்பது அல்ல. இன்னொரு மாநிலத்திலும் விசாரணை நடக்கிறது. அங்குள்ள அதிகாரிகள் இங்கே வந்து விசாரணை செய்கிறார்கள். நம்முடைய அதிகாரிகள் அங்கே சென்று விசாரணை செய்கிறார்கள் அவர்களுடைய உதவியுடன். ஆகவே, இந்த நிலையில், இதுபற்றி நாம் முடிவைச் சொல்ல இங்கே ஒரு பிரச்சினையைக் கிளப்புவதற்கு முன், உண்மையிலே என்ன நடந்தது என்று அனைவரும் தெரிந்து கொள்வதற்கு, நம் எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்த நாட்டு மக்களுக்கு உண்மை தெரிந்தாக வேண்டும். அந்த உண்மை தெரிவதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை செய்துதர வேண்டியிருக்கிறது. அதற்காகத் தான் நாங்கள் அடிஷனல் ஐ.ஜி. லெவலில் ஒருவரை இங்கிருந்து அனுப்ப இருக்கிறோம். அவர்களும் செல்ல இருக்கிறார்கள்.

அதேபோல, அங்கிருந்தும் அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பணியைச் செய்து கண்டுபிடித்த பிறகு, என்ன நடவடிக்கை என்பதை இந்த நாட்டுக்குச் சொல்வோம். அரசும் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்கு சொல்லப் போனால், தனலட்சுமி என்ற

இதுபோன்ற வழக்கிலே சம்பந்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டு ஜாமீனிலே வந்திருக்கின்றார்கள். எப்படிப்பட்ட கொடுமை நடந்திருக்கின்றது என்பதை நான் இங்கே குறிப்பிட்ட விரும்புகிறேன். ஆனால், அதே நேரத்திலே முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்தில் எப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே நடந்துகொண்டிருந்தது என்பதை நான் குறிப்பிட வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றேன். அதை நான் படித்துச் சொல்ல வேண்டிய அவசியத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றேன். என் மீது பழி சுமத்தி, என்னை இதிலே நேரடியாக ஈடுபடுத்தி இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவரவர்கள்.

சமீபத்தில் 'தனலட்சுமி கெமிக்கல்ஸ்' என்ற நிறுவனத்தில் எரிசாராய விற்பனையில் தவறு நடந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, வழக்கு நடைபெறுகின்றது. அதேபோல, 'ஓரியன்ட் கெமிக்கல்ஸ்' நிறுவனத்தில் முறைகேடுகள் நடந்தது பற்றிய விசாரணை நடந்து, வழக்கும் நடைபெறுகின்றது. 1975ஆம் ஆண்டில் நடந்த முறைகேடுகளுக்காக 'அரவின்ட் டிஷீட்டில்லரிஸ்' நிறுவனத்தின் உரிமம் 1980ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் நாள் வரையில் புதுப்பிக்கப்படாமல் நிறுத்தி வைத்து இந்த அரசு, ஆட்சியில் இருந்தபோது 1980ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வருவாய் வாரியத்தின் மூலம் உத்தரவு இட்டிருக்கின்றது. ஆனால் ஏப்ரலில் இந்த உரிமத்தை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்று வருவாய் வாரியத்தால் உத்தரவிடப்பட்டது.

நாங்கள் போடவில்லை அந்த உத்தரவை. அதே போல, பெங்களூரைச் சேர்ந்த ஏகாம்பரம், திருநெல்வேலி கணபதியாப்பிள்ளை, சென்னை ரங்கநாதன் செட்டி, மற்றும் சித்தூரைச் சேர்ந்த சக்திசங்கரி ஆகிய நால்வரும் ஆந்திர மாநிலம், கடப்பா மாவட்டம் ராயலச்சீமாவில் 'உமா இண்டஸ்டிரீஸ்' என்ற பெயரில் ஒரு போலி இறக்குமதி 'பெர்மிட்டைத்' தயாரித்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு, வருவாய் வாரியம் 10,000 லிட்டர் எரிசாராயம், ஈரோடு காமதேனு நிறுவனத்திலிருந்து வழங்க அனுமதித்தார்கள். இது நடந்தது 30.09.1975இல் ஆனால் 'உமா இண்டஸ்டிரீஸ்' என்ற பெயரில், எந்த ஒரு நிறுவனமும் கடப்பா மாவட்டத்தில் ராயலச்சீமாவில் இல்லை. இப்படியாக போலியான ஒரு நிறுவனத்தின் பெயரில், போலி பெர்மிட்டுகள் தயாரிக்கப்பட்டு, 10,000 லிட்டர் எரிசாராயம் கடத்தப்பட்டது. மாண்புமிகு எதிர் கட்சித் தலைவராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது நடந்ததுதான் என்பதை, இந்த ஆதாரத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு, தமிழகத்தில் இருக்கும் அத்தனை எரிசாராய தொழிற்சாலைகளும் அந்தக் காலத்தில் தான் உருவாயின. 01.09.1975இல் விண்ணப்பிக்கப்பட்டது. 01.10.1975இல் அனுமதி பெற்று இவைகளெல்லாம் அந்த காலத்தில் தான் உருவாக்கப்பட்டன. அப்பொழுது எல்லாம் எரிசாராயம் சம்பந்தப்பட்டது என்றாலே கோப்புகள் துரிதமாக ஆணை பிறப்பிக்கப்பட்டன. இவைகளையெல்லாம் சொல்வதால், இந்த அரசின் நடவடிக்கைகளில் ஏற்பட்டதாக சொல்லப்படும்

தவறுகள், முந்தைய அரசின் தவறுகளைப் போலத்தான் இருக்கிறது என்றும், அதை மூடி மறைப்பதற்காகத்தான் நாங்கள் இதை உதாரணம் காட்டுவதாகவும் யாரும் எண்ணிவிட வேண்டியது இல்லை.

சந்தேகங்கள் ஏற்பட்டு விட்டதால், இந்த அரசு என்ன உத்தரவு இட்டது என்பதை இங்கே தான் படித்துக் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 23.11.1980 அன்று அனுமதிச் சீட்டு வழங்க வேண்டுமென்று கேட்கப்பட்டபோது, அந்தக் குறிப்பிட்ட தேதிக்குள் அவர்கள் அனுப்பாவிட்டால், அதை ரத்து செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது என்ற காரணத்தால், கால தாமதம் ஆகியதை அனுமதிக்க வேண்டும் என்று கேட்கப்பட்ட போது, கீழ்க்கண்ட இந்தக் குறிப்பை நான் எழுதினேன்.

விரைவில் தமிழக அரசின் கருத்து அறிவிக்கப்படும். அது வரை புதிய முறை ஏதும் பின்பற்றக் கூடாது என்று அந்தக் கோப்பில் எழுதியிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, 'கேரளா டிஸ்ட்டிலரீஸ் அலைட் ப்ராடக்ட்ஸ்' இம்மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்ய அனுமதி கொடுத்தது பற்றி, இங்கே தேவையில்லாமல் வைத்து வீணாவதை விட, வரி கிடைக்கும் வகையில் பயன்படுத்துவது, அனுமதிப்பது நல்லது. எனவே, இதை அனுமதிப்பதோடு தவறுகள் நேரிடாதவாறு கண்காணிக்க, எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். அனுமதி பெற்று தவறான வகையில் அனுமதித்தற்கு மேல் வெளியில் செல்லாமல், நடவடிக்கையில் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் உத்தரவு போட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, 24.11.1980 அன்று தமிழக மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு, அதாவது வெளியே இருந்து வரும் ஹோட்டல்களில் தங்கபவர்களுக்கு 'பெர்மிட்' கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, தமிழ் மாநிலதைச் சேர்ந்தவர்களுக்கு இதற்கு அனுமதி வழங்க இயலாது. இதனால், பல தவறுகள் நடைபெறும். வெளி நாட்டவர்களுக்கு, வெளி மாநிலங்களில் இருந்து வருகிறவர்களுக்கு, குறைந்தது மூன்று மணி நேரமாவது தங்குபவர்களுக்கு மட்டும் அனுமதிக்கலாம். தமிழ்நாட்டில் முகவரி இல்லாது அனுமதிச் சீட்டு வைத்துள்ள, வெளி மாநில அனுமதி பெற்றுள்ளவர்களுக்கு மட்டும், வெளி நாட்டவர்களுக்கும் அனுமதிக்கலாம் என்று நான் உத்தரவிட்டேன்.

அடுத்தபடியாக, திருவாளர்கள் 'மாக்டவல் அண்ட் கோ', ஆந்திர பிரதேசம் கோவாவில் உள்ள ஆலைகளுக்கு சாராயம் கொண்டு செல்ல அனுமதி அளித்தது. மது வர்த்தக ஆயத்தீர்வை சட்டத்தின் கீழ், சாராயம், சாராவி, இதர மாநிலங்களுக்கு அனுப்புவது பற்றி அனுமதிக்கப்பட்டிருப்பின் காரணமின்றி நிறுத்த இயலாது. இனி புதிதாக கொடுப்பதாயின், அமைச்சரவை விவாதித்து, பிறகு முடிவு எடுக்கலாம், மைய அரசின் பரிந்துரை இருப்பின், கோவாவுக்கு கொடுக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தேன். அதற்குப் பிறகு 15.01.1981 அன்று ஒட்டு மொத்தமாக உடனடியாகக் கொடுக்கத் தேவை இல்லை. இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை, கொஞ்சம் கொஞ்சமாக தேவைக்கேற்ப கொடுக்கலாம். தமிழக அரசின் விசேஷ அதிகாரி ஒருவர் இந்தத்

தொழிற்சாலையிலிருந்து உற்பத்தியாகி வெளியே போகிற மருந்துகளை, கையிருப்பு சாராவியின் அளவை கண்காணித்து, அனுமதி கொடுக்க வேண்டும்.

அரசுக்கு, அறிக்கையை அவ்வப்போது மேலே குறிப்பிட்டுள்ளவாறு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை அளிக்க வேண்டும். வேறு ஒரு அரசாங்க அதிகாரி எதிர்பாராத விதத்தில் பரிசோதனைகள் நடத்த வேண்டும். யார் தவறு செய்தாலும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். முதலில் தொழிற்சாலை துவங்க பத்தாயிரத்திற்குள் கொஞ்சம் தேவைக்கேற்ப, கொடுத்துவிட்டு வேலை நடைபெறச் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கேரள அரசு இப்போது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிந்தவுடன் நான் கோப்பிலே உத்தரவிட்டேன். கேரள அரசு எடுத்த நடவடிக்கைகளில் கள்ளத்தனமாக கடத்தப்பட்டது என்று வெளியாகி உள்ளது. நான் பகிரங்கமாக எச்சரித்தும் தமிழ்நாட்டில் நடவடிக்கைகள் வெற்றி பெற இயலவில்லை என்பது வேதனைக்குரியது. எனவே, இது போல் அதிகப்படுத்துவதோ அல்லது கொடுத்ததில் மீதம் கொடுக்க வேண்டியது போன்றவைகளை அனுமதிப்பதற்கு முன் கொடுக்கப்பட வேண்டுமென்றால், நன்கு தக்கவர்களால் ஆராய்ந்து, அந்தந்த மாநில அரசுகளில் அனுமதி பெற்றிருந்தாலும், அவர்கள் எங்கே பெறப் போகிறார்கள் என்பதையும், அந்தக் கம்பெனி அதிகாரிகள் எச்சரிக்கப்படுவதோடு, தவறு நேரிடாத வண்ணம் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்தபின், அனுமதி வழங்க வேண்டும். அதோடு, இப்போது எந்த புதிய அனுமதியும் அளிக்க வேண்டாம். மதுவிலக்கு பற்றி அமைச்சரவை கூடி முடிவு எடுத்த பிறகு யோசிக்கலாம் என்றும் எழுதியிருக்கிறேன்.

சாமர்த்தியமாக ஒன்றை ஒன்று தொடர்ந்து இழுத்து எதற்கும் எதற்குமோ தொடர்பு இருப்பது போல் கேட்கிறார்கள். சிவகாசிப் பகுதியில் இப்படிப்பட்ட சில காலண்டர்கள் போன்றவைகளையெல்லாம் வெளியிடுவதற்கு அவர்களுக்கு தேவை என்று கேட்டு அனுமதி கொடுக்க வந்த போது தேவைக்கு அதிகமாகப் கேட்கப்பட்டது. என்று அதிகாரிகள் சொன்னதின் பேரில், அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது. எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், அதை நான் புரிந்து கொண்டிருக்கிறேன் என்பதை பகிங்கரமாக இங்கே வெளியிட்டேன். அதற்குப் பிறகு, அவர்கள் போதிய ஆதாரங்கள் காட்டி, அதிகாரிகளை திருப்திப் படுத்திய பிறகு, தொழில் நசித்துப் போய்விடும் அவர்கள் அங்கு தொழில் செய்ய முடியாமல் போய்விடும் என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு அதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. அப்படி கொடுக்கப்பட்டிருந்தும் கூட இது போன்றவை ஒரே பெயர், ஒரே முகவரியில் வெவ்வேறு இடங்களில் இருப்பது போன்ற புள்ளி விவரங்களைப் பார்த்தபின், அவைகளை நிறுத்தி வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்ப்புக் கிடைத்தால் அந்தக் கோப்பையும் வரவழைக்க, நான் தயாராக இருக்கிறேன். அந்த வியாபாரிகள் சங்கத்தில் நான் பேசியபோது, தொழில் அதிபர்கள் சங்கத்தில் பேசிய நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்பினேன். பல பேர்

சொன்னார்கள். நீங்கள் கொடுப்பதற்கு மேல் வெளியே கொண்டு செல்லுகிறார்கள். இது வழக்கமாக நடந்து கொண்டிருக்கிறது. அந்தந்த வியாபாரம் செய்கிறவர்கள் இதற்குத் தேவையான வகையில் என்னென்ன வேண்டுமோ அதையெல்லாம் செய்து கொண்டு, வசதியாக இருக்கிறார்கள். கோடிக்கணக்காகச் சம்பாதிக்கிறார்கள் என்று சொன்ன போது, அந்தத் தொழில் அதிபர்கள் யார் யார் இருப்பார்கள் என்று தெரியாத காரணத்தால், அவர்கள் எச்சரிக்கையோடு, அச்சுறுத்தலுக்குப் பயந்து இனிமேல் செய்ய வேண்டாம் என்று நிறுத்த வேண்டுமென்பதற்காக எச்சரிக்கை செய்தேன். அதைத்தான் இங்கு வெளியிட்டேன்.

ஆனால், டில்லியிலிருந்து திரும்பத் திரும்பக் கடிதம் வந்தது. அந்தத் துறையைக் கையில் வைத்துக் கொண்டிருந்த பட்டீல் அவர்கள் எழுதினார்கள். அதற்குப் பிறகு சாத்தே என்று கருதுகிறேன் அவர்களும் எழுதினார்கள். இப்படி திரும்பத் திரும்ப எழுதியது மட்டுமல்லாமல் கேரளத்திலும், ஆந்திரத்திலும், கர்நாடகத்திலும் இருந்து அதிகாரப் பூர்வமான அனுமதிக் கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்து, தாங்கள் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்றும், இல்லாவிட்டால் அங்கே தொழில் நசித்துவிடும் அளவுக்கு பிரச்சினை எழுந்த பிறகு, கொடுக்க அனுமதித்தோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், ஏதோ வியாபாரத்திற்குக் கொடுக்கவில்லை, குடிப்பதற்காகக் கொடுத்தேன் என்றெல்லாம் நேற்றைய தினம் பேசினார்கள். அதற்கு மறுப்புச் சொல்ல குறிப்புகள் இருக்கின்றன என்றாலும், உண்மையில் நேரம் இல்லை. புதிதாக அல்ல, இன்னும் எனக்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்போது அதையும் சொல்ல என்னால் முடியும். வியாபாரிகள் வியாபாரம் செய்வது என்பது வேறு, குறிப்பாக, மருந்துகளுக்குப் பயன்படுத்துவது என்பது வேறு. இப்படி தடைப்படுத்தியதில் ‘சாரிடோன்’ போன்ற மாத்திரையைத் தயாரித்து வந்தவர்கள், இது கிடைக்காமல் நிறுத்த வேண்டி வந்து விட்டது என்பதைக் கூட, என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு, நான் அனுமதி கொடுக்க உத்தரவிட்டேன். இப்படி எல்லாம் செய்த பிறகு, இன்றும் நாங்கள் எந்த நிலையில் இருக்கிறோம் என்றால், யார் யார் இதிலே ஈடுபட்டிருந்தார்கள் என்பதை, ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை, நாங்கள் இந்த நேரத்தில் எனக்குக் கிடைத்த தகவல்களை வெளியே சொல்ல முடியாத நிலைமையில், இன்னும் இரண்டொரு வாரங்கள் அல்லது நான்கைந்து வாரங்களில், அப்படிப்பட்ட பெயர்கள் வெளியேவரும் போது, யார் யார் எங்கெங்கே தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதெல்லாம் வெளிவரும் என்று நம்புகிறேன். அந்த விசாரணை முடிந்து உண்மை தெரியும் வரையில், நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற நிலை இருக்கிறது என்பது மட்டுமல்லாமல், ஏதோ தனலட்சுமிக்கு நாங்கள்தான் கொடுத்து விட்டோம் என்கிறார்கள். அதனுடைய அதிபர் தி.மு.கழகத்தைச் சேர்ந்தவர் என்று சொன்னார்கள். எனக்கு தெரியாது. அப்படித்தான் கேள்விப்பட்டேன். ஏதோ தி.மு.கழக பொதுக் குழுவில் இருப்பவர்கள் என்றெல்லாம் சொன்னார்கள்; தவறாக இருக்கலாம்.

நான் அதற்காகத்தான் சொல்லுகிறேன். இது உண்மையா, இல்லையா என்பதை விசாரணைக்குப் பிறகு தான் சொல்ல முடியும்.

நேற்றைய தினம், இப்படிப்பட்ட செய்தியை படித்தபோது, அது சரியல்ல என்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்கள். எப்படி மொழி பெயர்க்க வேண்டுமோ அப்படிச் சொல்லி செய்திருக்கிறார்கள். அது பற்றி இதே பேரவையில் மீண்டும் நானே அறிக்கை வைக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மீண்டும் சொல்லுகிறேன். இது பத்திரிக்கைச் செய்தி. கொலை செய்ததாக எவ்வளவோ வருகிறது. ஏதோ பெண்களைத் தூக்கி, கடத்திப் போய்விட்டார்கள் என்று வருகிறது. பிறகு பெண் நானேதான் போனேன் என்று சொல்லி வருகிறார்கள். ஆண்கள் கடத்திச் சென்று விட்டால் கூட திரும்ப வருகிறார்கள். பத்திரிகை செய்தியை வைத்துக் கொண்டு பேசுவது முறையல்ல என்பதை நேற்று சொல்லிய பிறகும், அதுவும் கேரளாவிலே நடந்திருக்கிற நிலைமையை அல்லது அங்கே இருக்கிறவருடைய ஒரு அதிகாரியினுடைய தம்பி, உறவினர் என்றால், அதைப்பற்றி விசாரணை செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்பு தந்த பிறகு பேப்பரைக் கொடுத்தால் போதும், செய்தி வர வேண்டாம், தயவு செய்து பத்திரிகை செய்தியை வெளியிட வேண்டாம், வேறு ஏதாவது ஆதாரங்கள் இருந்தால் படியுங்கள்.

பத்திரிகையிலே சொல்லப்படுகிறது, கேட்கப்படுகிறது எண்ணுகிறோம், நம்புகிறோம், அது எல்லாம் நியாயமல்ல; அப்படிச் சொல்வது சரியல்ல; சொல்லப்படுவது எல்லாம் நமக்கு எதற்காக, இருக்கலாம்; அது அங்கே சர்க்காரியாவாலே விசாரிக்கப்பட்டது. சிலர் இல்லை என்று சொன்னார்கள், சிலர் உண்மை என்று சொன்னார்கள். ஆகவே நான் சொல்வது இதுதான். சொல்லப்படுவது எல்லாம் வேண்டாம். அவர் சொல்லி இருக்கிறார், எனக்கு தெரியும் என்று சொல்லியிருக்கிறார் இல்லையா...

நிச்சயமாக நாங்கள் விசாரிப்போம். ஆனால், வந்திருக்கிற அந்தச் செய்தி நான் சொன்னேனே அது போன்று ஆகிவிடக் கூடாது. அப்படி ஒருவர் இருந்தாரா என்று பின்னால் கேள்வி வந்து விட்டால், என்ன செய்வது ? எதையும் நான் சொல்ல முடியவில்லை. இந்த நேரத்திலே, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் போன்றவர்கள் இளம்துடிப்பில் சில ஆதாரங்களைத் தருகிறேன் என்று பேசி விடுகிறார்கள்.

எனக்கு ஆதாரம் தெரியும் என்றால், தனக்குத் தெரியும் என்று அவர் சவால் விட வேண்டிய அவசியமே இல்லை. என்னிடம் ஒப்படைத்து விட்டிருக்கலாம். எனக்குத் தெரியாது என்ற வகையிலே தான் அப்போது சொன்னார்கள். இன்னமும் அது, அவையிலே வைக்கப்படவில்லை என்று கருதுகிறேன். பரவாயில்லை. இனிமேலாவது நம்மைப் போன்றவர்கள் எல்லாம், பொதுவாக சொல்கிறேன். ஏதாவது சொன்னோம் என்றால், ஆதாரமும் இருக்க வேண்டும். எனக்குக் கூட மொழிபெயர்த்து கொடுத்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு மட்டும்

தனி உரிமை அளித்து இருக்கிறீர்களா என்பது தெரியவில்லை. மறுபடியும் இப்படிப் பேசினால் அது மரியாதையும் அல்ல, நாகரீகமும் அல்ல, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி நீண்ட நாளாக சட்டசபையில் அனுபவப்பட்டவர். அவர் இப்படி நடந்து கொள்வது சரியல்ல என்பதை நான் பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்பால் பேசுவது, ஏதோ சில உரிமைகளால் சில வார்த்தைகளைப் பரிமாறிக் கொள்வது என்பது இருந்தாலும் கூட, அதற்கு ஒரு எல்லை வேண்டும். ஒரு கட்டுப்பாடு வேண்டும். வழக்குகள் சிலவற்றை நான் இன்னும் படிக்கவில்லை. 50 இலட்சம் லிட்டர் ஆந்திராவுக்கு கொடுப்பதற்காக அனுமதி வாங்கப்பட்டது. அந்த 50 இலட்சம் லிட்டர் ஆந்திராவுக்குப் போய்ச் சேருவதற்கு, மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்தது. 63 இலட்சம் அப்புறம். 13 இலட்சம் லிட்டர் புதிதாக இப்போது இல்லை. பழைய காலம், ஸ்ரீலங்காவுக்கு வேண்டுமென்று கோரப்பட்டது. அவர்கள் கருநாடகத்திற்கு அனுப்பி கருநாடகத்திலிருந்து அதை அனுப்பி விடலாம் என்ற நிலை. கருநாடகத்திலிருந்து அதை அனுப்பி விடலாம் என்ற நிலைமைக்கு வந்து, அதற்கு ஏறத்தாழ 20 இலட்சம் லிட்டருக்கு மேலே கொடுப்பது பற்றி முடிவு எடுத்தார்கள். ஆனால், கருநாடகத்திலே இருந்தவர்கள் அதை வாங்கும் போது, நாங்கள் ஸ்ரீலங்காவுக்கு அனுப்ப முடியாது என்று சொல்லிவிட்டால், ஆந்திராவுக்கு கொடுத்து 50 இலட்சத்துக்கு மேல் 13 இலட்சம் அதிகமாகக் கொடுத்து ஸ்ரீலங்காவுக்கு அனுப்பலாம் என்று ஏற்பாடு செய்தார்கள்.

ஆனால், ஸ்ரீலங்காவுக்குப் போனதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒவ்வொன்றையும் சொல்லிக்கொண்டே போகலாம்; பல விஷயங்கள் இருக்கின்றன. இப்படித் தனிப்பட்டவர்களுக்கு நாங்கள் கொடுத்துவிட்டோம் என்று சொல்கின்றவர்களுக்கெல்லாம், அது ஒரு கம்பெனி, அதற்கு முன்னே கொடுத்திருக்கிறார்கள். போர்டிலே வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அதில் அமைச்சர் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அந்தக் கோப்புகளை நான் இன்னும் படிக்கவில்லை; விரைவிலே அந்த வாய்ப்பு கிடைக்கும், இரண்டு மூன்று நாட்களுக்குள்ளே படிக்கலாம் என்று வைத்திருக்கிறேன். அதைப் படித்தால் கோப்புகளில் என்னென்ன எழுதப்பட்டிருக்கிறது: யார் எழுத வேண்டியது, யார் எழுதாமல் இருந்தார்கள், எங்கே போய் கோப்பு திரும்பி வந்து, மறுபடியும் அதிகாரிகளை அதை அனுப்புவதற்குச் சொல்லி, பிறகு கையெழுத்திட்டார்கள் என்பதையெல்லாம் நான் கோப்புகளை வைத்துக் காண்பிக்கத் தயாராக இருக்கிறேன். இங்கே இன்னும் பல விஷயங்களைச் சொல்ல வேண்டியிருப்பதால், பேச்சை நான் சுருக்கிக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சில பிரச்சினைகளையெல்லாம் இங்கே கிளப்பியிருந்தார்கள். அதிலே ஒரு பிரச்சினைக்கு நான் பதில் சொல்லிவிட்டேன். நாராயணசாமி நாயுடுவைக் கைது செய்தது, பிறகு விட்டு விட்டது என்பதைப் பற்றி. அதைப் போல இன்னும் சிலவற்றை அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இங்கே, சட்டசபையிலும், மேலவையிலும் இருக்கின்ற ஊழியர்களுக்கு ஏன் பணம் அதிகமாகப் கொடுக்கப்படவில்லை, உத்தரவிட்டும் என்று சொன்னார்கள். கொடுக்கப்பட உத்தரவு இடப்பட்டு விட்டது. 5 ரூபாய், 4 ரூபாய் என்று தினசரிப் படிப்

பணம் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, தாமதத்திற்கு என்ன காரணம் என்பதை விசாரித்து, அதற்கு நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் நான் சொல்லி, உத்தரவு ஏழெட்டு மாதங்கள், பத்து மாதங்களுக்கு முன்பாகவே போடப்பட்டதாக எனக்கு நினைவு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, இந்திரா காங்கிரசோடு தொடர்பு வைத்துக் கொண்டால், நாங்கள் ஒதுங்கி விடுவோம் என்றார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஒரு அரசியல் கட்சியோடு தொடர்பு வைத்தால், இன்னொரு அரசியல் கட்சி விலகுவதா ? அது அரசியல் கட்சியினுடைய தலைமை அல்லது அரசியல் கட்சியினிடம் இருக்கிற கொள்கைத் தவறு. அந்தக் கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று சொல்லி விலகுவதா ? இது எனக்குப் புரியவில்லை.

நல்ல கொள்கைகளை, யார் சொன்னாலும் ஏற்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமை என்று நான் கருதுகிறேன் இதை சட்டப் பேரவைத் தலைவரவர்களின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, நாங்கள் 1977ஆம் ஆண்டில், தோழமைக் கட்சியாக இருந்தோம் தேர்தலில், அதற்குப் பிறகு தோழமைக் கட்சியாக இருந்தது தஞ்சாவூரில் இடைத் தேர்தலில் நடக்கின்ற வரையில், அதற்குப் பிறகு தேர்தலில் எங்களுக்குக் கூட்டு இல்லை. மாநில அவை உறுப்பினர் மாண்புமிகு திரு. கல்யாணசுந்தரனார் அவர்கள் ஒரு இடத்தில் குறிப்பிட்டார்கள். இந்தத் தேர்தல் முடிந்து ஒரு சில மாதங்களுக்குப் பிறகு தேர்தல் கூட்டு முடிந்துவிட்டது. இனிமேல் எங்கள் கொள்கையைப் பற்றித் தான் பேசுவோம் என்று அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றும் கோபித்துக் கொள்ளவில்லை. அது அவர்களுடைய உரிமை, உங்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது: எங்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது. நாங்கள் எழுந்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் இந்தக் கட்சியோடு தொடர்பு கொண்டால் அல்லது அவர்களோடு இணைந்து போராட்டத்திற்கு இணங்கினால் நாங்கள் நிச்சயமாக எதிர்ப்பாக இருப்போம் என்று சொன்னால் அது நியாயமா ? எந்தப் போராட்டத்திலே, எந்தக் கொள்கையிலே நாங்கள் இணைகிறோம். எதை ஆதரிக்கிறோம் என்பதைத்தான் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று, நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக நீங்கள் வேறு வகையிலே தீர்மானம் செய்வது உங்கள் உரிமை, அதை நான் தடுக்க முடியாது. ஆனால் ஒன்றை மட்டும் நான் கண்டிப்பாகச் சொல்வேன். இங்கே நேற்றைய தினம் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இந்திப் பிரச்சினைப் பற்றி பேசினார்கள்.

இங்கே மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களும் அதைச் சொன்னார்கள். இந்திப் பிரச்சினையில் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சொல்லியதை நான் நம்ப மாட்டேன் என்று எப்போது கூறினேன். எந்தக் காலகட்டத்தில் கூறினேன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தேர்தல் நடந்து கொண்டிருந்த நேரம், அதுமட்டுமல்ல. உண்மையிலே, நான் மனத்திலே வேகமும், ஆத்திரமும் கூட என்று சொல்கிற அளவிற்கு எனக்கு ஏற்பட்டு, நான் பேசிய கருத்து. விசாரணை வேண்டுமென்றால்

நாங்கள் நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால், சாட்சிகள் முதலில் என்ன சொல்கிறார்களோ, அதையே, அவர்கள் மாற்ற முடியாமல் இருக்கின்ற நிலைமை வேண்டும். மாற்றிச் சொன்னார்கள் என்றால், அதற்குரிய நியாயத்தை அவர்கள் சொல்வது மட்டுமல்ல; அப்படிச் சொன்னவர்கள் மீது, ஒரு பெரிய வழக்கை இரண்டு மூன்று ஆண்டுகள் நடத்தியாவது, அதற்குப்பிறகு நிரூபித்து தீர்ப்பு அளிப்பது. அதற்குப் பிறகு இவர்கள் போய் இல்லை என்பது அல்லது இருக்கிறது என்று இப்படியே போனால் நிலைமை என்ன ?

மாநிலக் கட்சிகள் இந்த நாட்டிற்குத் தேவையா ? என்ற கேள்வி வந்த பொழுது நான் எதிர்த்து அதிகமாகப் பேசி, இதை நான் நம்ப முடியவில்லையென்றேன். ஒரு மாநிலக் கட்சியின் ஆதரவும் இருந்து, ஒரு காலத்திலே மத்திய அரசைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையிலே இருந்த அந்த நிலைமை நாட்டிலே நன்மை பயக்கின்ற ஒரு செயலையும் உருவாக்கியது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. அப்படிப்பட்ட மாநிலக் கட்சிக் கூடாது என்று சொன்னதாகப் பத்திரிகையிலே படித்த பிறகுதான், தேர்தல் நேரத்திலே அவ்வளவு வேகமாக நான் பேசினேன். ஆனால், இன்றைய தினம் அதே மாநிலக் கட்சியோடு தொடர்பு கொண்டிருக்கிறது.

நான் வேண்டுமானால் அவருக்கு எப்பொழுது வேண்டுமானாலும், வெட்டி வைத்திருக்கும் அந்தப் பகுதியை நான் காண்பிக்கத் தயாராக இருக்கின்றேன்.

எந்த வகையில் நான் பேசினேன் என்பதைத் தெளிவு படுத்துவதற்காகத்தான் இந்த ஆதாரத்தை எடுத்துக் கொண்டேனே தவிர, அவர் பேசியது உண்மை என்பதற்காக நான் அதை இங்கே பயன்படுத்திக் கொள்ளவில்லை. அந்த நேரத்தில், அதைப் படித்த பொழுது, எனக்கு ஏற்பட்ட மன நிலைமையை நான் சொல்கின்றேன். ஆகவே, அவர் சொல்வதை நான் நம்ப முடியாது என்று இன்னும் வேறு பல காரணங்களை வைத்துக் கொண்டு சொன்னேன். ஆனால், மார்க்சிஸ்ட் கட்சி, மொத்தமாக, கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் ஒரு காலத்திலே இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொன்னதாக எனக்கு நினைவு.

அவர் வாயால் அதை, இங்கே சொல்ல வைத்த நிலைமையை உருவாக்கிக் கொண்டேன். அதை ஏன் சொல்கிறேன் என்றால்,

அதை நினைவு என்ற அளவிலே வைத்துக் கொண்டு சொன்னதற்காக நன்றி என்றாலும், நான் குறிப்பிடுவது, இதற்காக, திராவிட முன்னேற்றக் கழகம் அமரர் அண்ணாவின் தலைமையிலே போராடிய பொழுது, அப்பொழுது இந்த நிலை இல்லை. அப்பொழுதிருந்த நிலைமை வேறு. 14 மொழிகளும் தேசிய மொழிகளாக, இந்த நாட்டின் ஆட்சி மொழிகளாக ஆக வேண்டுமென்று சொன்ன பொழுது, எதிர்த்த கருத்துக்கள் இருந்தன. இருக்கக் கூடாது என்பதல்ல. அண்ணா அவர்கள் திராவிட நாடு வேண்டுமென்று கேட்டு பிறகு மாற்றிக் கொள்ளவில்லையா ? அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை அந்த நேரத்திற்கு எது சரி என்றுபடுகிறதோ, இந்த நாட்டிற்கு எது நன்மை என்று கருதுகிறோமா, அதைச் சொல்கிறோம். அதைப் பின்பற்றுகிறோம். அதை நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம். ஆகவே, அந்த வகையில், கருத்து வேறுபாடுகள் இருந்தாலுங்கூட, அதை மாற்றி, ஒற்றுமைப்பட்ட

நிலைமையில், ஒரு எண்ணத்தை வெளியிடுவதற்கு உரிமை உண்டு என்பதாலே தான் நான் வாதிக்கின்றேன். அந்த உரிமை உங்களுக்கும் இருக்கிறது. எங்களுக்கும் இருக்கிறது. ஒருவரைப் பாராட்டும்போது, வார்த்தை அளவிலே நாங்கள் சொல்வதை வைத்துக் கொண்டு, கேலியாகப் பேசுவதால் மட்டும் ஒரு பிரச்சினை உண்மைக்குப் புறம்பானது என்று ஆகிவிடாது.

நண்பர் உமாநாத் அவர்கள், இந்த மீனாட்சியைப் பற்றிச் சொன்னார்கள். நான் போய் பங்கு கொண்ட இடம் மீனாட்சிக் கல்லூரி. மதுரை மீனாட்சி என்று பாராட்டி, அந்த மதுரை மீனாட்சியின் ஆட்சியிலே, மதுரை இருக்கிறது என்று எல்லோரும் பேசுகின்ற வகையில், அந்த மீனாட்சி என்பது கண் அழகைக் காட்டும். அந்தப் பொருள் உங்களுக்குத் தெரியும் என்ற கருதுகின்றேன். அதே போல் மீனாட்சிக் கல்லூரி என்று சொல்லும் போது, அந்தப் பரம்பரைக்கே உரித்தாகி இருக்கிற, அந்தக் கண்ணைப் பற்றி, நான் அங்கே புகழ்ந்து பேசினேன். மீனாட்சி, இந்திய மீனாட்சி என்று சொன்னேன். கல்லூரி மீனாட்சியிலே, இந்திய மீனாட்சியினுடைய படத்தைத் திறந்து வைக்கிறேன், அதே மீனாட்சி, மதுரையிலே இருக்கிற அந்த மீனாட்சி கோயிலுக்கு, அவர் போவதாக இருந்தார். அங்கே வரப் போகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். கொள்கைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குப் புரியவில்லை. ஆனால், ஜனாதிபதி ஆட்சி வேண்டுமென்று சொன்னதை ஏதோ, சர்வாதிகாரத்தை நான் ஆதரிக்கிறேன் என்று சொன்னார்கள்.

நான் அங்கே சொன்னதை அப்படியே சொல்லுகின்றேன்.அவர் நான் சொன்னதை முழுவதும் படிக்க வாய்ப்பு கிடைக்கவில்லை என்று நான் கருதுகிறேன்.

ஜனாதிபதி ஆட்சி என்பது, நிக்சன் தவறு செய்துவிட்டார் என்று சொன்னபோது, விசாரித்து அவரை வெளியேற்ற முடிந்தது ஒரு நீதிமன்றத்தாலே! அதுபோன்று, ஜனநாயக வழியில் இருக்கின்ற ஒரு ஜனாதிபதி ஆட்சி வேண்டுமென்று சொன்னேன். அதே நேரத்தில், மத்திய அமைச்சரை வைத்துக் கொண்டு சொன்னேன். மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று. அதே நேரத்தில், அதே கூட்டத்தில் இன்னொன்றையும் சொன்னேன். திரும்ப அழைக்கின்ற உரிமை மக்களுக்கு வேண்டும் என்று சொன்னேன். திரும்ப அழைக்கின்ற உரிமையை வரவேற்கிறேன் என்று கேரள முதலமைச்சர் அவர்கள் 2,3 நாட்களுக்குப் பிறகு, அதைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நினைவுபடுத்துகின்றேன். ஆகவே, நாங்கள் ஜனநாயக கொள்கையை விட்டுவிடவில்லை. சர்வாதிகாரத்தை நாங்கள் எப்போதும் ஆதரிக்கவில்லை, என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். இனிமேல் உமாநாத் அவர்களுக்கு, எங்களைப் பற்றிச் சந்தேகம் வராது என்று கருதி, இன்னும் பல பேர்களுக்கு நான் பதில் சொல்ல வேண்டும் என்றாலும், அதைப் பின்னால் வைத்துக் கொள்ளலாம் என்று கூறி, என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

04.02.1981 அன்று மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை.

காவல்துறையில் குதிரைப்படைப் விரிவாக்கம்!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

காவல் துறை மானியத்தின் சார்பாக இங்கே கருத்துரை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுப்போடும் கண்ணியத்தோடும், எந்த எந்த வார்த்தைகளை எவ்வளவு கடுமையாக விமர்சிக்க வேண்டியிருந்தாலும்கூட நாகரிகத்தின் அடிப்படையில் அந்த வார்த்தைகளை உருவாக்கிப் பேசுவது எப்படி என்பதை மற்றவர்களும் புரிந்து கொள்ளுகின்ற வகையில் இந்த மாமன்றத்தில் கருத்துக்களைத் தெரிவித்திருப்பதை காதாரக் கேட்டும், படித்தும் நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன். அதற்காக இந்த அரசின் சார்பாக மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையைப் பொறுத்த மட்டில் மிகப்பெரிய பிரச்சினையை உள்ளிட்ட ஒரு மாபெரும் இயக்கத்தினுடைய மறுபதிப்பை, உணர்வை வைத்து நாம் விமரிசிக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் காவலர்களைப் பற்றி, காவல் துறையைப் பற்றி எந்த அளவுக்கு நாம் உரிமையோடு குற்றச்சாட்டுகளைக் கூறி நாம் நமது கடமையை நிறைவேற்ற முன்வருகிறோமோ அதைப்போல அவர்களை அவர்களுடைய சிறந்த சேவைக்கு பாராட்ட வேண்டுமென்ற வகையிலும் இந்த மாமன்றத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டி வந்ததை எண்ணி நான் மிக மிக மகிழ்ச்சியடைகிறேன்.

வெறும் குற்றச்சாட்டுகளை மட்டுமே சொல்வது என்பதும் அல்லது குற்றச்சாட்டுக்கள் உண்மையாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட அவைகளை உருவாக்கிக்கொண்டு அதுபற்றி பேசுவது என்பது கூட சிலருக்கு கைவந்த கலையாக இருந்தாலும்கூட, இந்த அவையில் இரண்டொரு நாள் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தில் கூடுமானவரையில் உண்மையை இந்த அவைக்கு சொல்ல வேண்டுமென்ற ஆர்வத்தில் சொல்வதும், அது உண்மையல்ல என்று தெரிந்தபோது அதை அப்படியே ஏற்றுக்கொள்கின்ற பண்பையும் நாம் இங்கே கண்டோம். இந்த மரபு வளரவேண்டும், தொடர வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்; விரும்புகிறோம். அதற்கு ஒத்துழைக்க நாங்கள் மிக மிக கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த மாமன்றத்தில் இதைப்போன்ற பிரச்சினையில் கருத்து வேறுபாடுகள், கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டாலும்கூட யாராவது ஒருவர் அதற்காக தன்னுடைய மாற்றுக் கருத்தைச் சொல்லி, எதிர்ப்புணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக வெறியேறுகிறேன் என்று சொல்லுகிறபோது அதை மதிக்கின்றவர்களாகத்தான் அதை எதிர்க்கின்ற கருத்துக்குச் சொந்தக்காரர்கள் இருக்க வேண்டுமே தவிர, இந்த மாமன்றத்திலிருந்து வெளியேறுகிறவரை அவமதிக்கின்றவகையில் பேசுவது என்பதை யாரும் ஏற்றுக்கொள்ளக் கூடாது

என்பதையும் அப்படி யாராவது எங்கள் தரப்பிலே செய்திருந்தால்கூட இந்த அரசு, இந்த அரசை நடத்துகின்ற நாங்கள், எங்களை அனுப்பியிருக்கின்ற எங்களுடைய கட்சி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை, நான் இங்கே சொல்வதற்குக் காரணம் எவ்வளவு செம்மையாகவும் ஒரு வினாடி கூட வீணாக்காமலும் இந்த நாட்டின் நன்மைக்காகப் பேசப்படுகின்ற கருத்துக்களாக இந்த மாமன்றத்திலே ஏற்படவேண்டுமோ அப்படி பணியாற்றி நீதிமன்றங்களுக்குக் கூட இப்படித்தான் நியதி என்று நியதிகளையும், வரம்புகளையும் கட்டி சட்டங்களை உருவாக்குகின்ற இந்த மன்றம் நீதியின் தலைமையிடம் என்று சொல்லிக்கொள்கின்ற அந்த அளவுக்கு இருக்கின்ற உரிமையைப் பெற்றிருக்கின்ற இந்த மாமன்றம் கண்ணியக்குறைவாகவும், கேவலமாகவும் கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற அந்த இடத்திற்குப் போகுமானால் தன் தகுதியை அது இழந்துவிடும் என்ற அச்சத்தைப் பொறுத்தவரையிலே நாங்கள் யாருக்கும் பின்னாலே போய்விடவில்லை, என்பதோடு மட்டுமல்ல, மற்றவர்களுடைய தரத்திற்கேற்ப நாங்களும் ஒத்துப்போகத் தயாராக இருக்கிறோம், அதைக் காப்பாற்ற முனைவோம் என்பதை மீண்டும் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து இந்த மானியக் கோரிக்கையிலே பல்வேறு பிரச்சினைகளை எடுத்து வைத்திருக்கிறீர்கள். ஒவ்வொரு மாமன்ற உறுப்பினரும் ஒட்டுமொத்தமாக தமிழகத்தின் நன்மை தீமைகளை வைத்து கருத்துக்களை வெளியிட்டுள்ளீர்கள். அதேபோன்று, தங்களுடைய தொகுதியில் என்ன நடக்கின்றது என்பதைப் பற்றியும் வெளியிட்டுள்ளீர்கள். இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் மிகச்சீராகவும், செம்மையாகவும் தங்களுடைய திறமைகளை வெளிக்காட்டும் வகையிலே கருத்துக்களைச் சொல்வதற்கு இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். மத்திய அரசிலிருந்து, மாநில அரசிலிருந்து, வகுப்பு வாதங்களிலிருந்து, வேலை நிறுத்தத்திலிருந்து, ஜாதிக் கலவரத்திலிருந்து இப்படி பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் உள்ளடக்கி அதற்கு இந்த காவல்துறைக்குத் தரவேண்டிய மானியத்தைப் பற்றிய விவாதத்தைப் பயன்படுத்திக்கொண்டு கருத்துக்களை வெளியிட்டுள்ளீர்கள். ஆகவே இவ்வளவு திறமை உடையவர்கள் இருக்கின்ற இந்த மாமன்றம் எப்படித் தவறான பாதையில் செல்ல முடியும் என்பதை என்னால் சிந்தித்துக்கூடப் பார்க்க முடியவில்லை. ஆகவே, இங்கே இரண்டு நாட்களாக நடந்த இந்த விவாதம் தமிழகத்திற்கு இந்த மாமன்றம் எப்படி பொறுப்போடு நடக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டுகின்ற வகையிலே மிகத் தெளிவாக அதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலே அமைந்திருக்கின்றது என்பதை எண்ணிப் பெருமைப்படுகிறேன். உங்களுடைய அந்த பெருமையில் நான் பங்கு கொள்ள ஆசைப்படுகிறேன். என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து காவலர்களைப் பற்றி ஒன்றை நாம் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களை சில சமயம் நாம் பாராட்டுகின்றோம், சில

சமயம் கண்டிக்கின்றோம், ஒரு தாயைப் போல, சில சமயம் கண்டிக்கிறோம், ஒரு தாயைபோல சில சமயம் அரவணைக்கிறோம். சில சமயம் எதிர்த்து இது சரியல்ல என்ற அறிவுரை சொல்கிறோம் ஒரு ஆசானைப் போல, தந்தையைப் போல. ஆனால் சிலர் தவறாகக் கற்பனை செய்துகொண்டு அந்தக் காவல்துறை என்பதே மிகவும் மோசமானத் துறை என்றும் அதிலே இருப்பவர்களுக்கு நாகரிகம், கண்ணியம், பண்பாடு என்பது எதுவுமே தெரியாது என்று கருதுகின்ற வகையிலே சில செய்திகளை மட்டும் சொல்வது என்பது அதாவது குற்றச்சாட்டுகளை மட்டும் சொல்வது என்பது அல்லது இவைகளை மட்டுமே வெளியிடுவது என்று சிலர் கடைப்பிடிக்கின்ற முறையின் காரணமாகத்தான் மக்கள் மத்தியிலே காவல்துறை என்று சொன்னவுடனே ஐயோ என்று சொல்கின்ற நிலைமைகள் கூட உருவாகிறது என்பதை நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். மற்றத் துறைகளின் அலுவலர்களை எடுத்துக்கொண்டால் அதிகாரிகளை எடுத்துக்கொண்டால், எந்தெந்த வேலைகளிலே அவர்கள் பங்குகொண்டிருக்கிறார்களோ அந்தந்த வகையிலே தங்கள் கடமைகளைச் செய்து புகழ் பெறுவதற்கு நிறைய, வாய்ப்புக்கள் இருக்கின்றன. பாராட்டுகளைப் பெறுவதற்கும் நிறைய வாய்ப்புக்களும், வசதிகளும் இருக்கின்றன. அவர்களைப் பொறுத்தவரையில் வேண்டும் என்றால் சில நேரங்களில் அவர்கள் தங்களது கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை அல்லது இங்கிருந்து மக்களின் பிரச்சினைகளைச் சொல்வதற்காகச் செல்வபர்களை மதிப்பதில்லை என்று இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள்தான் இருக்கும். அல்லது தாமதம் ஆகிறது என்ற குற்றச்சாட்டுக்கள் இருக்கும். ஆனால் காவல் துறையைச் சேர்ந்த எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும், சாதாரணக் காவலர்களாக இருந்தாலும் அவர்கள் அத்தனைபேரும் யாரோ ஒருவரிடமிருந்து ஒரு பாராட்டைப் பெறுவது என்பதே மிகவும் அரிதானது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் யாருக்காவது சம்பளம் போதவில்லை, உயர் பதவிகள் கிடைக்கவில்லை என்ற அந்தப் பிரச்சினைகளோடு அவர்களுடைய கோரிக்கைகளும், விண்ணப்பங்களும், போராட்டங்களும் நின்று விடும். ஆதரித்து சொல்கிறவர்கள் அவர்களுக்கு நிறைய பேர்கள் இருப்பார்கள். எதிர்ப்பவர்கள் கூட, அரசியல் கணக்கு பார்க்கிறவர்கள்கூட, அவர்கள் போராட்டங்களின் கோரிக்கைகளை யோசித்து அது முடியுமோ, கொடுக்கக் கூடுமா, அது அவசியம் தானா என்று கேள்விகள் எழுப்பி பார்ப்பார்களே தவிர. இவர்கள் நேரம் பார்க்காமல் பிரச்சினைகளை கொண்டு வருகிறார்களே என்று வேண்டுமானால் ஏதாவது குற்றம் சொல்லலாமே தவிர, மற்றபடி எல்லோருமே அவர்களுக்குப் பாதுகாப்பாகத்தான் இருப்பார்கள். யாரிடமும் அதிகமாக எதிர்ப்பை சேகரித்துக் கொள்ளவேண்டிய அவசியம், உருவாக்கிகொள்ள வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு இல்லை. ஆனால் காவல் துறையின் எதிர்ப்பை பொறுத்த மட்டில் அப்படியில்லை.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னிடமிருக்கும் பட்டியலைப் படித்தால் அவர்களுடைய பணி எவ்வளவு சிக்கலானது என்பது மட்டும் அல்ல; எவ்வளவு

சிறப்பானது என்பது மட்டும் அல்ல; எவ்வளவு தொல்லையானது என்பதோடு, அதே சமயத்தில் எவ்ளவு தொந்திரவானது என்பதும்கூட நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியனவாக இருக்கிறேன். அவர்களுக்கு இருக்கிற கடமைச் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து; குற்றங்களைத் தடுத்து, குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதோடு மட்டுமல்லாமல், போராட்டங்கள் வரும்போது அவர்கள் முன் வந்து நின்று, இந்தப் போராட்டங்கள் சரியாக அமைதியாக நடக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஒரு வேளை சட்டத்திற்கு முரணாக, இருந்தால், அவர்களுக்கு இட்டிருக்கிற ஆணைப்படி செயல்பட்டு அவர்களுடைய பணிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். நான் தமிழகத்தில் நடக்கிற சில விஷயங்களை இங்கே குறிப்பட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன், முழுவதையும் குறிப்பிட நேரம் இல்லை என்றாலும் சிலவற்றையாவது நான் குறிப்பிடவேண்டும்.

எந்த எந்தத் தரப்பை அவர்கள் எதிரியாக்கிக் கொள்கிறார்கள், அவர்கள் தங்கள் கடமையைச் செய்வதன் மூலம் என்பதை நாம் முதலிலே நினைவுபடுத்திக் கொள்வோமேயானால், அந்தக் காவலர்களுக்காக பரிந்து பேச வேண்டியவர்கள் நாம் மட்டும் அல்ல; இந்த மாநிலம் முழுவதும் உள்ளவர்கள் நாம் மட்டும் அல்ல, எங்கெங்கே மக்கள் இருகிறார்களோ, அங்கே உள்ள அத்தனை பேர்களும் அவர்களுக்கு அனுதாபத்தைக் காட்ட வேண்டியவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை நாம் உணருவதற்கு இது உதவும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் போராட்டம் என்பதை எடுத்துக் கொள்வோம். அதிலே, எத்தனை வகை ? போக்குவரத்துத் தொழிலாளர்கள் போராட்டம்; டாக்சி பணியாளர்கள் போராட்டம், சைக்கிள் ரிக்ஷா போராட்டம், ஆட்டோக்கள் போராட்டம், கை வண்டிக்காரர்கள் போராட்டம், மூட்டை சுமப்பவர்கள் போராட்டம், அரசு ஊர்தி ஒட்டுபவர்கள் போராட்டம், விவசாயத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கேட்டு ஒரு தரப்பினர் போராட்டம், அதிலே பெரிய விவசாயிகள் கூலி உயர்வு கூடாது என்று போராட்டம், ஆலைத் தொழிலாளர்கள் போராட்டம், பஞ்சாலைகளிலே போராட்டம், நூற்பு ஆலைகளிலே போராட்டம், சர்க்கரை ஆலைகளிலே போராட்டம், சைக்கிள் தொழிற்சாலையிலே போராட்டம், மோட்டார் சைக்கிள் தொழிற்சாலையிலே போராட்டம், கார் தொழிற்சாலையிலே போராட்டம்; லாரி தொழிற்சாலைகளிலே போராட்டம்; இது போன்ற இன்னும் பல.

இது போக நெசவுத் தொழிலாளர்கள், மின் தொழிலாளர்கள் போராட்டம்; ஊதிய உயர்வு கோரி ஆசிரியர்கள் போராட்டம், மருத்துவர்கள் போராட்டம், மருத்துவமனைகளில் உள்ள தொழிலாளர்கள் போராட்டம், அங்கே இருக்கின்ற நர்சுகள் போன்ற இன்னொரு பகுதி பிரிவினர்கள் இருந்தால் அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.

துப்புரவுத் தொழிலாளர்கள் போராட்டம், கட்டிடத் தொழிலாளர்கள் போராட்டம், அணைக்கட்டு தொழிலாளர்கள் போராட்டம், சிறைச்சாலைத் தொழிலாளர்கள்

போராட்டம், மின் உற்பத்திக்காக அமைப்புகள் உருவாக்கும் பகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் போராட்டம்; அது மாண்புமிகு உறுப்பினர் நண்பர் ரமணி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு இதழ்ப் பதிவு பெறாத ஊழியர்கள் போராட்டம். இது போக அரசியல் கட்சிகள்.

அதைக் கடைசியில் சொல்கிறேன். அரசியல் கட்சிகள் எத்தனை என்று என்னால் இப்போது எண்ணிக்கை சொல்ல முடியாது. இது போக மதசார்பற்ற, மதசார்புற்ற கட்சிகள். அதற்குப் பிறகு ஜாதிகளைக் காப்பாற்றும் கட்சிகள். ஜாதிகள் வேண்டாம் என்று சொல்கிற கட்சிகள், விவசாயிகள், மாணவர்கள், அவர்களில் நிருவாகத்தை எதிர்த்து, ஆதரித்து போராட்டங்கள் அவர்களுக்குள்ளேயே அதாவது மாணவர்களுக்குள்ளேயே போராட்டம், கிராம அதிகாரிகள் போராட்டம்.

கிராம அதிகாரிகள் வேண்டாம் என்று சொல்வதற்கு ஒரு போராட்டம், கிராம அதிகாரிகள் பழைய நிலையில் இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு போராட்டம், ஜாதி ஒழிப்புப் போராட்டம், பெயர் மாற்றப் போராட்டம், பெயர் மாற்றப் போராட்டம் என்றால் பெயர் அழிக்கும் போராட்டம், பெயர் எழுதும் போராட்டம், ஜாதி பெயர் இருக்கக் கூடாது என்பதற்காக ஒரு போராட்டம், இப்போது அண்ணாப் பிள்ளை தெருவில் ஏன் பிள்ளையை அழிக்கிறீர்கள், அது அண்ணா என்று இருந்து விடாதா என்று அதே எண்ணத்தில் உள்ளவர்கள் போராட்டம், கள்ளக்கடத்தல், கலப்படம், இவைகளுக்காக அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், பொது நலம் விரும்புகிறவர்கள் போராட்டம், நுகர் பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் போராட்டம், மதுவிலக்குப் போராட்டம், மதுக்கடைகள் மறியல் போராட்டம், விலைக் குறைப்புப் போராட்டம், விலை உயர்வுப் போராட்டம், மீனவர்கள் போராட்டம், மீனவர்களுக்குள் போராட்டம், நடைபாதை வியாபாரிகள் போராட்டம், அவர்கள் இடம் வேண்டுமென்று கேட்கக் கூடாது, அவர்களுக்குக் கொடுக்க கூடாது என்று இன்னொருத் தரப்பு வியாபாரிகள் போராட்டம், தண்ணீர் கேட்டுப் பானை உடைப்புப் போராட்டம், தன் பகுதியிலிருந்து தண்ணீர் எடுக்காதே என்று போராட்டம்.

இதுபோக திருட்டுக்கள். சைக்கிள் திருட்டு, கார்த் திருட்டு, வழிப்பறி திருட்டு, வீடு புகுந்து திருட்டு, இது போக குழந்தைகள் திருட்டு, இளைஞர் திருட்டு, முதியோர்கள் திருட்டு, காணாமல் போனால் திருடப்பட்டுவிட்டார், கண்டு பிடிக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். மணப்பெண் திருட்டு, மணமகன் திருட்டு, மணமகள் இரண்டு பேரும் திருட்டு.

ஜாதி பெயரால் கொலை, சொத்துப் பெயரால் கொலை. அரசியல் வேறுபாடு என்ற பெயரில் கொலை, கடைசியில் நக்ஸலைட் என்ற பெயரில் கொலை, இவ்வளவையும் கண்டு பிடித்து இவைகளைத் தடுத்து பணியாற்ற வேண்டியவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள், எங்கேயாவது எந்த சமுதாயத்தின் பிரதிநிதிகளாவது இதில்லாமல் இருக்க முடியுமா ? எந்தப் பிரிவிலாவது ஒரு சில மக்கள் காவல் துறை எடுக்கிற நடவடிக்கையால் பாதிக்கப்படக் கூடியவர்கள் இருப்பார்கள் திருடி கொடுத்தவனும்

சரி, திருடியவனும் சரி, காவல் துறைக்கு எதிரிகளாவர். இந்த நிலையில் நாம் காவல் துறைக்கு நிதி ஒதுக்கீடு கேட்கும் போது, உங்கள் கருத்துக்களையெல்லாம் எடுத்துச் சொல்கிறீர்கள் என்பதில் நான் மகிழ்ச்சி கொள்ளும்போது ஒன்றை மனம்விட்டு சொல்ல விரும்புகிறேன். இதையெல்லாம் நாங்கள் மனதில் வைத்து பேசினீர்கள் என்பதை நான் உலகுக்குச் சொல்வதற்காக இந்தப் பட்டியலை நான் இங்கே படித்தேன். இன்னும் பட்டியல் பெருகும். இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இதை நான் இங்கே சொல்வதற்கு காரணம் இப்படிப்பட்டவர்கள், இவ்வளவு பெரிய பிரச்சினைகளை அவர்கள் உள்ளடக்கிக் கொண்டிருக்கும்போது அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற பயன் என்ன எதிர் காலத்தில் ஓய்வெடுக்கும் போது அவர்களுக்குடக் கிடைக்க இருக்கிற பயன் என்ன என்றால் ஒரு பயனும் இல்லை. கெட்ட பெயரைத் தவிர. லஞ்சம், ஊழல் இதுதான் அவர்களுக்குத் தரப்படுகிற பட்டம். தவறுகள் சிலயிடங்களில் இருக்கும். நான் இல்லை என்று சொல்லவில்லை. இங்கே கூடச் சொன்னார்கள், கையூட்டு பெறுகிறார்கள் என்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள், காரணம் அவரவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய வசதி ரூ.10 உயர்த்தியிருந்தால் செய்திருக்க மாட்டார்கள். அது போன்ற வசதிகள் எல்லாம் செய்யவேண்டும் அது இல்லாததால் அவர்கள் தவறு செய்யவேண்டி உள்ளது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கேட்கிறேன் ரூ.10, ரூ.20 மட்டும் முக்கியமானதல்ல. இந்த கையூட்டு என்றால் எங்கிருந்து எதுவரைப் போகிறது என்பதை நாம் கொஞ்சம் கவனித்தால்தான் தெரியும். ‘அங்கேங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்’ என்று அழகாகப் பேசுவார்கள். எங்கெங்கோ இருப்பது அங்கே எதிரொலிக்கிறது என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சிலர் அந்த நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். யாருக்குமே கெட்டப் பெயர் வாங்க வேண்டும், கடமையிலிருந்து வழுவ வேண்டும் என்ற அந்த எண்ணமே இருக்காது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

சந்தர்ப்பம், சூழ்நிலை, தேவை, நெருக்கடி இவைதான் ஒரு மனிதனைத் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லுகிறதே தவிர, பிறக்கும் போதே யாரும் கெட்டவனாகப் பிறப்பதில்லை. சாகும் போதும் யாரும் கெட்டவனாக சாவதில்லை. ஆனால், சிலர் இருக்கிறார்கள். என் மகள் செத்தாலும், என் மருமகள் தாலி அறுத்தாலும் பரவாயில்லை என்றிருக்கிறார்கள். இப்படி ஒரு இலட்சத்தில் ஒருவர், ஒரு கோடியில் ஒருவர் இருப்பார்கள், அவர்களை மக்கள் நன்கு புரிந்து கொள்வார்கள். ஆனால், இந்த நிலையில் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு காவல் துறையைப் பொறுத்த மட்டில், அவர்கள் மீது அனுதாபம் கொண்டிருக்கிறது என்று சொல்லும் போது, மற்றவர்கள் மீது அனுதாபம் இல்லை என்று சொல்ல முடியாது. அனுதாபம் என்று சொன்னால், ஒரு தாய்க்கு ஒரு ஊனமுள்ள குழந்தை, கை, கால் விளங்கவில்லை, இன்னொரு குழந்தை அறிவு மழுங்கி, மூளை வளர்ச்சியில்லை, இன்னொரு குழந்தை கண் பார்வை இல்லை, கை, கால் விளங்காது. அதிலே அந்தத் தாய், யாருக்கு முதலில் உணவு கொடுப்பாள் என்றால், பார்வை தெரியாத, கை, கால் விளங்காத அந்தத்

குழந்தைக்கு முதலிலே கொடுத்துவிட்டு, கண் பார்வை தெரியாத அந்த குழந்தைக்கு முதலிலே கொடுத்துவிட்டு பிறகு அதே சமயத்தில் அறிவு மழுங்கிய இன்னொரு குழந்தைக்கு கொடுக்க விரும்புவாள் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள். அந்த வகையில் இந்த அரசு தன் கடமையைச் செய்ய முனைகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சங்கங்களுக்கு உரிமை கொடுக்காதீர்கள் என்றெல்லாம் இங்கே பேசப்பட்டது, நடைமுறையில் உண்டா என்கிறார்கள், அந்தத் தவறுகளைச் செய்தவர்கள் மீது அரசு முன்னதாகவே கவனிக்கச் சொல்லி, அதிகாரிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு அரசு விதித்துக் கொடுத்திருக்கிற அந்த விதிமுறைகள்படி அவர்கள் தங்களுடைய சங்கத்தை அமைத்துக்கொள்ள இந்த அரசு துணை நிற்கும் என்பதையும், அதற்கு ஆவன செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், சில இடங்களில் சில அதிகாரிகள் வேண்டாத காரியத்தைச் செய்கிறார்கள், பிடிவாதமான காரியத்தைச் செய்கிறார்கள் என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் எஸ்.பி. கணேசன் என்பவர் மீது அப்படிச் சொன்னார். ஆனால், இதே கணேசன் தான் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நிலம் கொடுக்கக் கூடாது என்ற போராட்டத்தின்போது, வேறு சிலர் கண்டித்த போது, அவர்களுக்கு எதிராக உரிமையைப் பெற, தாழ்த்தப்பட்வர்களுக்கு துணை நின்று போராடி, தன் கடமையைச் செய்தார் என்ற பாராட்டைப் பெற்றார்.

மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் இவ்வளவு நல்ல சாட்சியாகச் சொல்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அரசு உத்தரவின் பேரில் தான், அந்த எஸ்.பி. கணேசன் அவர்கள் தன் கடமையைச் செய்தார்களே தவிர, விவசாயிகள் மீது கைவைக்க கூடாது என்ற இந்த அரசினுடைய கருத்துக்களை பிரதிபலித்தார்களே தவிர நாங்கள் உத்தரவிட்ட பிறகு, அதை நிறைவேற்றாமல் திரும்பவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நாங்கள் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும், கைது செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டோம். அதற்குப் பிறகு விவசாயிகளாக இருந்தாலும் அல்லது யாராக இருந்தாலும், அவர் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தார்கள் அப்படி, இந்த அரசினுடைய உத்தரவிற்குக் கீழ்படிந்து, தன் கடமையைச் செய்கின்ற ஒருவர் ஒருவேளை பாராட்டப்படுகின்றார், இன்னொரு வேளை குற்றஞ் சுமத்த வேண்டிய சூழ்நிலை உருவாகிறது.

அதற்கு முழுக் காரணம் அரசுதான், மேல் அதிகாரிகள்தானேத் தவிர அந்த குறிப்பிட்ட அதிகாரி அல்ல என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விழைகிறேன். அப்படி தவறு வேண்டுமென்றே, நடந்திருந்தால் டி.ஐ.ஜி. பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும், அல்லது ஐ.ஜி. பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும், அல்லது டி.ஜி.பி. பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் அல்லது நான் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். எனவே, எந்தத்

தரப்பிலிருந்தும் பின் வாங்க அல்லது ஓடிபோக நாங்கள் தயாராக இல்லை விசாரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் அதை. அவரைப் பொறுத்தவரை நிச்சயமாக கடமையை ஆற்றிக்கொண்டிருக்கிறார் என்ற செய்தி எனக்கு வந்திருக்கிறது என்பதை மட்டும் சொல்லி, அதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் பொய் என்று சொல்லத் தயாராக இல்லை, அந்த வார்த்தை சட்டமன்றக் குறிப்பிலே இருக்கக்கூடாது, உண்மைக்கு புறம்பானது என்று சொல்ல வேண்டும் என்ற வகையிலும் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு காரணம் அது பொய்அல்ல. அதை நம்புகிற அளவுக்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால், விசாரித்த பிறகுதான் அது பற்றி ஒரு முடிவை சொல்ல முடியும் என்பதை நான் குறிப்பிட்டு சொல்ல விருப்புகிறேன். இதைப்போல பல பிரச்சினைகள் வருகின்றன. இங்கே மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள் தங்களுக்கு கிடைத்த செய்தி கடிதத்தின் மூலமாகவோ, அல்லது வேறு வகையிலோ எடுத்துச் சொல்கிற பொழுதுதான் படித்து காண்பிக்கிறார்கள். எனக்கு அப்போதுதான் தகவல் கிடைக்கிறது. விசாரித்து பதில் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. விசாரித்துச் சொல்வதற்கான வாய்ப்பு கிடைக்குமானால் அவ்வப்போது சொல்ல முடியும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுந்தர்ராஜ் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், எனக்குத் தெரிந்தது, உடனே பதில் சொல்ல முடிந்தது.

ஏதோ ஒரு ஊரிலிருந்து இப்படித்தான் நடந்தது, தற்கொலை செய்து கொண்டார், அல்லது கொலை செய்யப்பட்டார், தீ வைத்தார்கள் என்றெல்லாம் சொல்லும்போது கிராமங்களிலே ஆனாலும் சரி, ஏதோ ஒரு சிற்றூரில் ஆனாலும் சரி, நகரத்திலேயானாலும் சரி, அத்தனை செய்திகளும் ஒரு முதலமைச்சருக்கு முழுமையாக வந்து சேர்ந்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. போலீஸ் முன்பே விசாரித்து இருந்தால் முழுமையான தகவல்களைப் பெற்று நாம் இங்கே சொல்லியிருக்க முடியும்.

நான் அதற்கு ஒரு உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே பல பிரச்சினைகளைப் பற்றிப் பேசும்பொழுது, அந்த ஞானசவுந்தரி கொலை வழக்கைப் பற்றி, அதாவது மரணத்தைப் பற்றி, கொலை வழக்கு என்றும், தற்கொலை என்றும் இப்படி பல்வேறு காரணங்கள் சொல்லி இங்கே பேசப்பட்டிருக்கிறது, அதைப்பற்றி முழு விவரத்தையும் நான் சொல்லக் கூடாது, அது விசாரணையில் இருக்கிற காரணத்தால், இருந்தாலும் கடிதங்கள், கையெழுத்துக்களைப் பார்த்தால் எவ்வளவோ உண்மைகள் இன்னும் வெளி வரவில்லை என்பதை நான் சொல்லியாக வேண்டும். அதை இங்கே கொண்டு வந்திருந்தால்கூட அதை நான் வெளியிடப் போவதில்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன். அதைத் தலைவருக்கு வேண்டுமானால் அனுப்பி வைக்கிறேன். மாமன்றத்து உறுப்பினர்கள் பார்க்க வேண்டுமென்றால் அதைப் பார்க்கட்டும். ஆனால் உண்மை நிலைமையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். செய்திகள் இப்போது எதற்கெடுத்தாலும் வெவ்வேறு விதமாக வருகின்றன. நான் அதே மாமன்றத்தில் முன்பு வேண்டுகோள் விடுத்தேன். பத்திரிக்கையிலே செய்தி, இங்கே

சொல்கின்றவர்கள் எதைச் சொன்னாலும், அதை வெளியிடும்போது எச்சரிக்கையாக வெளியிடுங்கள் என்று நான் வேண்டி கேட்டுக்கொண்டேன். அதற்கு என்ன பலன்? இன்றைக்குக், காலையில் பத்திரிக்கையில் பார்த்தால் மீண்டும் இராமநாதபுரத்தில் கலவரம், இந்தத் தலைப்பு தேவை தானா? இந்த நாட்டிலே அமைதி ஏற்படுத்துகிற வழியா? பத்திரிக்கைகளுக்கு சுதந்திரம் இருக்கிறது, அவர்கள் எதை எப்படி எழுத வேண்டுமென்று கருதுகிறார்களோ அதை வெளியிடுவதற்கு உரிமை இருக்கிறது, யாரும் மறுக்க முடியாது. சமுதாயத்தின் ஒரு பிரச்சினை உருவாக்குவதற்குரிய ஒரு செயல் நடந்தாலும், நடக்கா விட்டாலும் அதை வெளியிடும்போது, இராமநாதபுரத்தில் கலவரம் என்றால் வேறு, மீண்டும் கலவரம் என்றால் வேறு, உடனே என்ன தோன்றும்? முன்னாலே தாக்கியவர்கள் தாக்கினார்களா? அல்லது தாக்கப்பட்டவர்கள் தாக்கினார்களா? எவ்வளவு கற்பனைகளுக்கு இடம் தரப்படுகிறது. இவைகள் எல்லாம் அந்த பத்திரிக்கைகள் எவ்வளவு பொறுப்போடு வார்த்தைகளை எண்ணி வெளியிட வேண்டுமோ அந்த வகையில் அந்தப் பணியை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்போது, நாங்களும் அதேபோல் சில செய்திகளை அளவோடு வெளியே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கலவரம் என்பது வேறு, சண்டை என்பது வேறு, இவை இரண்டையும் புரிந்து கொள்ள வேண்டும். சண்டை என்பது அவ்வப்போது ஏற்படுகிற உணர்ச்சி, காழ்ப்புணர்ச்சி இவைகள், கலவரம் என்பது திட்டமிட்டு நடத்தப்படுகிற ஒரு பெரிய போராட்டம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அந்தக் கலவரம் என்பதே உள்ளத்தில் ஏற்படுகிற கலக்கத்தின் விளைவு என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். ஆகவேதான், அதற்குக் கலவரம் என்று பெயர் வருகிறது. கலவரம் அடையாதே என்றால் குழப்பம் அடையாதே என்று பொருள் ஆகலாம், கலங்காதே என்ற பொருள் ஆகலாம், உண்மையை நீ சந்தேகப்படாதே என்று பொருள் ஆகலாம். ஆகவே, அந்த வகையிலே கலவரம் ஏற்படுகிறது என்றால் ஒரு தரப்பார் இன்னொரு தரப்பார் மீது திட்டம் போட்டு அங்கே அந்த சூழ்நிலையை உருவாக்குகிறார்கள் என்று பொருள். நான் இங்கே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நண்பர், நான் பெயர் சொல்ல வேண்டாம் என்று கருதுகிறேன். எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து அது பத்திரிக்கையில் வராமல் இருப்பது நல்லது. நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நான் பேசும்பொழுதுகூட அப்படிப்பட்ட வார்த்தைகள் வருமானால் அதுகூடக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் என்பதை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஜாதி என்று நம்பத் தகுந்த அளவில் தங்களை அமைத்துக் கொண்டிருக்கிறவர்கள் அந்த வகையில் செயல்படுகிறவர்கள் வாழ்க்கை நடத்திச் செல்கிறவர்கள். இன்னொரு நம்பிக்கைக்குரியவர்களால் தாக்கப்பட்டார்கள் என்று வந்தால் அந்த தாழ்த்தப்பட்டவர்கள் நான் முன்னே சொல்லியிருப்பதைப்போல் ஒரு இடத்தில் பெரும்பான்மையாக இருக்கலாம். அங்கே அவர்கள் தாக்க முடிந்திருக்கலாம்,

இன்னொரு இடத்தில் அவர்கள் சிறுபான்மையாக இருக்கலாம், அங்கே சிறுபான்மை நிலையில் இருக்கிறவர்களை, பெரும்பான்மையானவர்கள் தாக்க ஆரம்பித்தால் தமிழ்நாடு மட்டுமல்ல, உலகம் முழுவதுமே ஒரு நிம்மதி இருக்க முடியாது. அந்த வகையில் இதை நான் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். எதைப்பற்றிப் பேசினாலும் நாம் ஜாதிப் பெயரை சொல்லாமல் தாழ்த்தப்பட்டவர்கள் என்று இருந்தாலும் சரி, உயர்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும் சரி எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களுடைய பெயரைச் சொல்லாமல் விவாதங்களை நடத்தினால்கூட நல்லதாக இருக்குமோ என்று கருதுகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஒரு குறிப்பிட்ட பிரிவை ஆதிதிராவிட பிரிவிலிருந்து முதலமைச்சர் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். என்மீது அவ்வளவு நம்பிக்கை அவர்கள் வைத்திருப்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். நன்றி கூறுகிறேன். என்றாலும் இந்த அமைச்சரவை பிரிக்கப்பட்டு தனித்தனியாக இயங்குகிற ஒரு அமைச்சரவை அல்ல. எந்த அமைச்சரும் தன்னுடைய இலாகாவிலே காரியத்தினைச் செய்கிறபோது தவறு செய்தாலும், நல்லது செய்தாலும் எங்கள் அத்தனை பேருக்கும் அதிலே பங்கு உண்டு என்பதை நான் எடுத்து வைக்கிற போது விவரம் தெரிந்த அவர்கள் உண்மையிலே அந்தப் பிரிவிலே இருக்கிற ஒரு பகுதி என் கையில் வந்தாலும் மட்டும் சிறப்பாக இருக்கும், அவரிடமிருந்தால் இருக்காது என்று எண்ணுவது எங்கள் எல்லோரையும் சந்தேகிக்கக்கூடாது, நாங்கள் ஒட்டு மொத்தமாகச் சேர்ந்து அந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்களுடைய நல்ல எண்ணத்தை நான் மதிக்கிறேன். அதிலே குறைகூறவில்லை. ஆனால், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சில தவறுகள் அமைச்சருடைய கவனக்குறைவால் ஏற்படுகிறது என்று தயவு செய்து யாரும் நம்பிடக்கூடாது. அதிகாரிகளில் தவறு செய்கிறவர்கள் இருப்பார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். மத்திய அரசிடமிருந்து ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது நாடாளுமன்றத்தில், நூற்றுக்கும் மேலான பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் இல்லாமல் அங்கே நடைபெறுகின்றன என்று, இங்கிருந்து அனுப்பப்பட்ட ஒரு அறிக்கையை வைத்து, அவர்கள் சொன்னார்கள். எப்பொழுது அனுப்பப்பட வேண்டியது, எப்பொழுது அனுப்பப்பட்டிருக்கிறது என்பதுதான் முக்கியம். சில ஆண்டுகளுக்கு முன்னால் அனுப்பப்படவேண்டிய அந்தக் குறிப்பை அண்மையிலே அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். பிறகு விசாரித்து, பதில் கிடைத்த பிறகு, அனுப்பிய அதிகாரியின்மீது நடவடிக்கையெடுப்பதற்கு சட்டப்படி வழிவகுத்திருக்கிறது, இதைச் செய்து கொண்டிருக்கிறோம்.

இதுபோன்ற தவறுகள் நடக்கலாம், உத்தரவிடப்பட்டிருக்கலாம், பணமும் ஒதுக்கப்பட்டிருக்கலாம், செயல்களிலே அது வெளிப்படையாகத் தெரிவதற்குரிய நிலைமையை உருவாக்காமல் இருந்திருக்கலாம். ஆகவே, அந்த வகையில் நீங்கள் சொல்வதை நாங்கள் எந்த அளவிற்கு மரியாதையோடும், மதிப்போடும்



ஏற்றுக்கொள்கிறோமோ அதைப்போல எங்கள் அனைவரையும் ஒருமித்த கண்ணோடு பார்க்க வேண்டுமென்று மீண்டும் வற்புறுத்திக் கூறுகின்றேன்.

எந்த அமைச்சராக இருந்தாலும் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வார்கள்; செய்து தீர வேண்டும்; இல்லாவிட்டால் நாங்கள் ஒட்டுமொத்தமாகப் பொறுப்பேற்று வேறுவகையில் அந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதை இங்கே நான் கூறிக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்தமட்டில், ஒரு எண்ணம் உண்டு, எப்பொழுதுமே உண்டு, பல ஆண்டுகளாக உண்டு, இன்றல்ல எனக்கு 20 வயது, 25 வயது இருக்கும்பொழுது என்று வைத்துக் கொள்ளுங்கள், அந்தக் காலத்திலேயிருந்தே உருவான ஒரு எண்ணம் என்னுடைய உள்ளத்திலே வளர்ந்து இருக்கிறது. அதைச் சொல்வது பலருக்கும் பிடிக்காது என்றாலும்கூட நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றோர்களே அவர்களிடம்தான் தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினையை ஒப்படைப்பது என்பதோ, தாழ்த்தப்பட்டவர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் அவர்கள் மட்டும்தான் அந்த இனம் என்று சொல்லப்படுகின்றவர்களுக்காகப் பேச வேண்டும், அதுதான் நியாயம் என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளவில்லை, என்னடைய மனசாட்சி ஒத்துக்கொள்வதில்லை. வேறு வகுப்பினர் யார் துன்பப்படுகிறார்களோ அந்த வகுப்பினருக்காகப் பேசவேண்டும், அந்த நியதி உருவாக்கப்படவேண்டும்; தாழ்த்தப்பட்ட மக்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் பெரும்பான்மையாக இருப்பார்களேயானால் அங்கே வேறு வகுப்பைச் சேர்ந்தவர்கள் நின்று வெற்றி பெற்று வரவேண்டும். அதைப்போல வேறு வகுப்பைச் சேர்ந்த பெரும்பான்மையானவர்கள் இருக்கின்ற இடத்திலே சிறுபான்மை என்று அழைக்கப்படுகின்ற தாழ்த்தப்பட்டவர்கள், என்று நாம் விரும்பாத ஒன்றைச் சொல்கிறோமே அந்தப் பெயருக்கு உடையவர்கள் அங்கே தேர்தலிலே நின்று வெற்றிபெற வேண்டும்.

இதை நான் வெளியே சொல்லாமலேயே மதுரை மாநராட்சித் தேர்தலில் அதை நான் சோதனையாக நிறைவேற்ற முயன்றேன். அந்தப் பகுதிலேயே பெரும்பான்னையாக இருந்த மக்களுக்கு எதிராக மிகச் சிறுபான்மையான ஒரு தாழ்த்தப்பட்ட பிரதிநிதியை அங்கே நிறுத்தினோம். இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர், மிக்க செல்வாக்கு உள்ளவர், மாவட்டம், மாநிலம் என்ற அளவிற்குப் புகழ் படைத்தவர், பெயர் உள்ளவர், விளம்பரத்தைப் பெற்றவர், அவர் எதிர்த்து நின்றார். அவர் தோற்றார். தாழ்த்தப்பட்ட எங்களுடைய வேட்பாளர் வெற்றி பெற்றார். இதற்கு என்ன பொருள் ? மக்கள் சரியாகத்தான் இருக்கின்றார்கள், நாம்தான் பிரிக்கின்றோம்.

என்னுடைய உள்ளக்கருத்தைச் சொல்கிறேன், மக்களை அந்த நிலைமைக்கு நாம் கொண்டு போயாக வேண்டும், நாம் அந்த நிலைமைக்கு வந்தாக வேண்டும். அந்தச் சமுதாயம்தான் சமத்துவம் உள்ள சமுதாயமாக, ஒருமித்த கருத்துடைய

சமதர்மத்தை ஏற்றுக்கொண்ட சமுதாயமாக இருக்க முடியுமே தவிர, பாதுகாப்பிலே வந்து, பாதுகாப்போடு வெற்றி பெற்று, பாதுகாப்போடு இடம்பெற வேண்டும் என்று சொன்னால் அது நிச்சயமாக நல்லெண்ணத்தைக் காட்டாது, திறமையைக் காட்டாது, ஒற்றுமையைக் காட்டாது, ஒத்துழைப்புத் தருகின்ற மனப்பான்மையும் காட்டாது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கோள்கிறேன்.

அந்த வகையில் நாம் பணியாற்ற, நாம் ஒருமித்த கடமைகளைச் செய்ய வேண்டும். அந்த வகையில், காவல் துறையை எடுத்துக் கொண்டால் அந்தப் பிரிவுகள் என்று கவனிக்கும் பொழுது எந்தெந்தப் பிரிவனருக்கு எவ்வளவு இடம் என்று ஒதுக்கி வைத்திருக்கிறோமோ அந்த வகையில் இடம் தந்தாக வேண்டுமென்ற நியதியை இந்த அரசு கடைபிடிக்கிறது, தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதையும், தகுதியும் உரிமையும் உள்ள வகையில் அது காப்பாற்றப்பட ஆவன செய்வோம் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் வேடிக்கையாகச் சொல்கிறேன். விபரீதமாக எடுத்துக்கொள்ள வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு.சுந்தரராஜன் அவர்கள் அதிக அதிகாரிகளையெல்லாம் எதற்காகப் போடுகிறீர்கள் தேவையில்லாமல் என்று சொன்னார்கள். முதல்நாள் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் காவல்துறையை விரிவுபடுத்த வேண்டும், அதிக ஆட்கள் வேண்டும், நியமிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். அதை நான் கருத்து வேறுபாடு என்று சொல்லவில்லை. ஒவ்வொரு சூழ்நிலையில் அவரவர்களுக்குத் தோன்றிய எண்ணம்.

காவல் துறையிலே இன்னும் அதிகமான காவலர்கள், மற்றும் அதை ஒட்டி இருக்கின்ற அதிகாரிகளுடைய பதவிகள் விரிவாக்கப்பட வேண்டும், எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட வேண்டும் என்றால், அவர்களை ஒழுங்குபடுத்துகிறவர்கள் மேலேயும் தேவைப்படும். பட்டாளம் என்று சொல்லி இத்தனை ரெஜிமென்ட் என்று சொல்லி அதற்கு ஒரு தளபதி என்று சொல்லும்போது, அதற்கு அடிஷனல் தளபதி, துணைத் தளபதி, உதவித்தளபதி, இப்படியெல்லாம் வரிசையாகப் போடுவார்களே, துணை இன்ஸ்பெக்டர், உதவி இன்ஸ்பென்டர் என்றெல்லாம் போட்டார்களே, அதுபோல், இங்கும் தேவைப்படுகிறது என்று இங்கே நான் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும், எவ்வளவுக்கெவ்வளவு நிருவாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு, அந்தப் பகுதியை, பிரிவை, சிறிது, சிறிதாக்கி, அதிலே அதிகாரிகளைப் போட்டு கண்காணிக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அந்தப் பதில் சொல்ல வேண்டியவர்களாக, பொறுப்பாளியாகத் தனிப்பட்டவர்கள் ஆக்கப்படுகிறார்கள். அவர்களைக் கேட்டால் இவர்களைக் கேட்க வேண்டும், இவர்களைக் கேட்டால் அவர்களைக் கேட்க வேண்டும் என்று இல்லாமல் நாம் பதில் சொல்லியாக வேண்டுமென்றால், பிரித்தால் அது சரியாக இருக்கும் என்ற வகையில்தான் அந்த ஐ.ஜி.க்களைப் பிரித்தோமே தவிர, ஏதோ எனக்குச் சொந்தக்காரர் யாரும் இல்லையென்ற நம்பிக்கை எதிர்கட்சியிலே இருக்கிற அத்தனை பேருக்கும்

இருக்குமென்ற காரணத்தால் அதுவரை மகிழ்ச்சி அடைகிறேன். அல்லது வேண்டியவர்கள் என்பதற்காக, யாருக்கோ பதவி கொடுப்பதற்காகவும் அல்ல என்பதையும் நம்புவீர்கள். சந்தேகம் எனக்கு இல்லாததால், அந்த நம்பிக்கையிலே நான் இங்கே என் கருத்தை வெளியிட விரும்புகிறேன்.

அதேபோல், இன்னொன்றைச் சொன்னீர்கள். ஒருவேளை இத்தனை ஐ.ஜிக்கள் என்று போடுவது, உங்கள் 18 மந்திரிகளுக்கு ஏற்ப அந்த எண்ணிக்கை அளவிற்குக் கூட நீங்கள் போடுவீர்களோ என்ற சந்தேகத்தைக் கிளப்பினார்கள். தயவு செய்து அஞ்சவேண்டாம், மைய அரசு மாதிரி குறைத்துக் கொள்ளவும் மாட்டோம். ஆந்திராவைப்போல் அந்த அளவுக்குப் போகவும் மாட்டோம். அந்த எண்ணிக்கை இங்கே வருமோ என்ற அச்சம் உங்களுக்கு. ஆக, இந்த எண்ணிக்கைளை வைத்துக் கொண்டு, அந்த எண்ணிக்கைக்கு நாங்கள் போகமாட்டோம் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போல், பல பிரச்சினைகள் உள்ளன. இங்கே மாண்புமிகு நெடுமாறன் அவர்கள், மாண்புமிகு ஆண்டித் தேவர் அவர்கள் எல்லாம் பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். நெடுமாறன் அவர்களும் மாண்புமிகு உமாநாத் அவர்களும்தான் இந்த அரசுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்தார்கள். இநத் அரசு அவசரகாலச் சட்டம் போலிருக்கிற என். எஸ்.ஐ—யைப் பயன்படுத்தக்கூடாது என்று சொன்னார்கள். பயன்படுத்த வேண்டுமென்ற அவசியத்தை நானா உருவாக்கினேன், ஏன் உருவாக்கி இருக்கிறார்கள், இரண்டு ஆண்டுக்காலம் செய்யவில்லை. மொரார்ஜி தேசாய் பிரதம அமைச்சராக இருக்கும் போது எழுதினார்கள், நான் செய்யவில்லை. தேவை ஏற்பட்டாலொழிய, நெருக்கடி ஏற்பட்டாலன்றி, நாங்கள் செய்யத் தயாராக இல்லை. ஆனால், நிலைமை என்ன ? கண்ணுக்குத் தெரிகிறது, ஆதாரம் இருக்கிறது. மிகப் பெரிய தவறு செய்கிறார்கள். மக்களைக் கெடுக்கின்றார்கள். அவர்களைக் கைது செய்துக் கொண்டு போனால் ஜாமீனிலே வெளியே வந்து விடுகிறார்கள். எந்தப் பாதுகாப்பும் இல்லை, அவர்கள் மறுபடியும் அதே தவறைச் செய்து, அதிலேயிருந்து வருகிற பணத்தை வைத்துக்கொண்டு மீண்டும் பெரிய தவறுகள், அதாவது சாராயம் என்று வைத்துக் கொள்ளுங்கள், அதைப் போன்ற தவறுகள் செய்கிறார்கள். அப்படிப்பட்ட சமூக விரோதிகளைத் தடை செய்ய முடியவில்லை, கைது செய்து உள்ளே வைக்க முடியவில்லை. மக்களிடமிருந்து தொடர்பு அறுக்கச் செய்ய முடியவில்லை. மக்களிடமிருந்து தொடர்பு அறுக்கச் செய்ய முடியவில்லை என்றால் என்ன செய்வது, அதற்காக நாம் சட்டப்படி செய்திருக்கிறோம். நீதிபதிகொண்ட குழு, தலைமைச் செயலாளர் கொண்ட குழு, இப்படியெல்லாம் அமைத்து அவர்கள் ஏற்றுக்கொண்டப் பிறகு, அவர்களை இந்தச் சட்டத்தின்கீழ் கைது செய்வது நியாயம்தான், தகுந்த காரணம் இருக்கிறது என்று அவர்கள் ஒத்துக்கொண்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சில, இடங்களில் இருந்து, சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அவர்களை இப்படிக் கைது செய்ய வேண்டும் என்று உத்தரவு இடுகிறேன், அனுமதி வேண்டும் என்று கோரிக்கை கொண்டுவந்த போது, அவர்கள் பயந்து

கொண்டு அப்படிச்செய்யவில்லை, நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, எங்களுடைய விருப்பு, வெறுப்பை வைத்துக் கொண்டு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தவில்லை. அந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்குத் தனி அதிகாரிகள் அதைப் பயன்படுத்தவேண்டிய அளவிற்குத் தகுந்த ஆதாரங்களைத் தருவிறவர்கள், அவர்களுடைய எண்ணத்தைத் தெரிந்து, ஒப்புக்கொண்டு, பிறகு தான் நாங்கள் பயன்படுத்துகிறோம். அரசியல்வாதிகளுக்கும், இதற்கும் தொடர்பு இல்லை. நான் தெளிவாகச் சொல்கிறேன், நாராயணசாமி நாயுடு அவர்களை அரசியல்வாதி என்று அந்தப் பட்டியலில் சேர்த்துவிடாதீர்கள். அவர் ‘அவசரவாதியே’ தவிர ‘அரசியல்வாதி’ அல்ல. எந்த நேரத்தில் அவசரம் அவசியமாக அவரைத் தூண்டிவிடுகிறதோ அவர் அந்த இடத்திற்குப் பக்கத்தில் இருப்பார்.

அவர் நேற்றைய தினம் பேசியிருக்கிறார். நீங்கள் சொன்னீர்களே விவசாயப் போராட்டம். அதையும் நிறுத்துவதற்குக் காவல்துறை வரவேண்டியிருக்கிறது. ஆகவே, சொல்கிறேன். வேறு ஏதோ சப்ஜெக்ட்டுக்குப் போய்விட்டதாகக் கருதவேண்டாம். அந்த விவசாயப் போராட்டத்தை தடைசெய்ய வேண்டும் என்று வந்தால் இந்த முறை போராட்டம் எப்படி நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும், நான் என்ன நடந்தது என்பதைப் புதிதாகச் சொல்லவேண்டாம். இப்போது என்ன சொல்கிறார் என்றால் இந்த அரசைக் கவிழ்த்துவிட்டு, இந்த அரசை நீக்குகிற வரையில் நான் உறங்கப் போவது இல்லை என்று சொல்லியிருக்கிறார். மகிழ்ச்சி. எங்களைவிட ஒரு நல்லாட்சியைக் கொண்டுவர முடியும் என்றால், மக்கள் கொண்டுவரவேண்டும் என்று விரும்பினால், நாங்கள் எப்படிக் குறுக்கே நிற்க முடியும். இன்னொன்றையும் சொல்கிறார்கள். இன்னும் ஒரு வாரம், இன்னும் 2 வாரம், இன்னும் 3 வாரம் இல்லை என்றால் அடுத்த வாரம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஒரு நாளும் இந்த ஆட்சியைக் கவிழ்க்க மாட்டோம். அந்த முயற்சிக்குப் போகமாட்டோம், என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம்.பி. சுப்பிரமணியம் சொல்கிறார். நாங்கள் கவிழ்க்கமாட்டோம், அவர்களே கவிழ்ந்து போவார்கள் என்று சிலர் சொல்கிறார்கள். அப்படியானால், தகுதி இல்லை என்றால் நாங்கள் கவிழ்ந்து போகிறோம். அதற்காக நாங்கள் வருத்தப்பட முடியாது. மக்கள் விருப்பத்திற்கு குறுக்கே நாங்கள் இருக்கமுடியாது. ஆகவே, இப்போது பிரச்சினை அது அல்ல. ஏதோ நாங்கள் இந்தப் பதவி போய்விடுமோ, இந்த ஆட்சி போய்விடுமோ என்பதற்காக நாங்கள் எதையாவது விட்டுக்கொடுத்து காரியம் செய்கிறோம் என்ற தவறான கருத்து யாருக்காவது இருந்தால், அதைத் தயவு செய்து மாற்றிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில், இங்கே எவ்வளவு மகிழ்ச்சியாக உட்கார்ந்து இருக்கிறோமோ அதேபோன்று தான் எதிர்க்கட்சி வரிசையில் கூட அல்ல, வெளியே நாங்கள் இருந்து மகிழ்ச்சியயோடு இங்கே நடக்கின்ற செய்திகளைக் கேட்டு பெருமையோடு உட்கார்ந்து இருப்போம். இங்கே இருந்தால்தான் மகிழ்ச்சி என்கிற நிலைமை கடந்த காலத்தில் இருந்து இருக்கலாம்.இப்போது இல்லை. நான் கற்பனை கூடச் செய்யவில்லை. நான் முதலமைச்சராக ஆவேன் என்று. யாரோ

புண்ணியவான் நல்லது செய்து என்னை இங்கே உட்காரவைத்து இருக்கிறார். ஆகவே, எனக்கு இதிலே ஆசை இருந்தது இல்லை. திடீரென்று எங்களை வெளியே போ என்று சொன்னபோது நாங்கள் அதிர்ச்சி அடையவில்லை. ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 'சிவகவி' படத்தை நான் ஒளிப்பெட்டியில் பார்த்துக்கொண்டு இருந்தேன். 17ஆம் தேதி பிப்ரவரி மாதம் இந்த ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னபோது, என்னிடத்தில் ஒரு காரியத்திற்காக தேதி குறிக்க வந்த நண்பர் மணியன் போன்றவர்களிடத்தில் ஒரு சீட்டு எழுதிக் கொடுத்து விட்டு, படத்தை வழக்கம்போல் பார்த்துக்கொண்டு இருந்தேன். படத்தைப் பார்த்துவிட்டு வழக்கம்போல் நான் போனேன். காலையில் எந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்களும் இருக்கக்கூடாது, எனக்குக் காவல் இருந்தவர்கள் எல்லாம் வெளியே போகவேண்டும் என்று சொன்னேன். அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவில்லை. இல்லை, பாதுகாப்புத் தரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னார்கள், பரவாயில்லை என்று சொல்லி அவர்களை போகச் சொன்னேன். அது தான் எம்.ஜி.இராமச்சந்திரன், உங்கள் நண்பன். இங்கேயுள்ளவர்களுக்கும், மற்றவர்களுக்கும் தெரிவித்துக்கொள்வேன். அண்ணா அவர்கள் இருந்து இருந்தால் நாங்கள் எல்லாம் எப்படி எப்படியோ இருந்து இருப்போம். இப்போது பதில் சொல்லவேண்டிய நெருக்கடி எனக்கு ஏற்பட்டு இருக்காது. அண்ணா இருந்து இருந்தால் நாங்கள் எல்லாம் தனிக்காட்டு ராஜாவாக எங்கேயோ சுற்றிக்கொண்டு இருப்போம். நிலைமை எப்படி இருந்தாலும் இந்தப் பதவிக்காக நாங்கள் எதையும் விட்டுக்கொடுக்க தயாராக இல்லை என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன். அந்தச் சந்தேகம் யாருக்காவது இருந்து இருந்தால், அதைத் தயவு செய்து விட்டுவிடலாம். எதை எதிர்க்க வேண்டும் என்று எங்கள் மனச்சாட்சி சொல்கிறதோ அதை நாங்கள் அனைவரும் செய்வோம். அதைப்போலவே எதை ஆதரிக்க வேண்டும் என்று எங்கள் மனசாட்சி சொல்கிறதோ, எங்களுடைய கொள்கை வற்புறுத்துகிறதோ அதைச் செய்வோம். அந்த வகையில் தான் நாங்கள் காரியங்களை ஆற்றி வருகிறோம். தயவு செய்து மாண்புமிகு நெடுமாறன் அவர்களுக்கும், மாண்புமிகு உமாநாத் அவர்களுக்கும், அவர்கள் கட்சிக்கே சொல்வதுபோல், மற்ற அனைவருக்கும் சேர்த்துச் சொல்லிக்கொள்கிறேன், அந்தச் சந்தேகம் வேண்டாம் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

பணம் நிறைய வைத்திருப்பவர்கள் ஏழை, ஏழை என்று சொல்வார்கள் அதைபோல மக்கள் நம்பிக்கை எங்களுக்கு அதிகமாக இருப்பதால்தான் இப்படித் துணிந்து சொல்கிறேன். நாங்கள் கவலைப்படவில்லை. அவையடக்கம் என்று சொல்வார்களே, அந்த முறையில் அடக்கத்தோடு சொல்லியிருக்கிறேனே தவிர மற்றவகையில் அல்ல என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் தோழர் நெடுமாறன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, ஒருவர் சொன்னார். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் அதை "நீங்களே சொல்லியிருக்கலாமே" என்று அவர் சொன்னாலும், நான் சொன்னாலும் மற்றவர்கள் சொன்னாலும் எல்லாம் ஒன்றுதான். அதில் வேறுபாடு இல்லை.

இன்னொன்றையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். காவலர்களுக்கும் சமூக விரோதிகளுக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இது சாதாரணமான குற்றச்சாட்டும் அல்ல, விளக்கமும் அல்ல, அலட்சியப்படுத்தக்கூடிய செய்தியும் அல்ல, ஆனால், ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் காவலர்களில் யார், யார் அப்படி இருக்கிறார்கள் என்று தெளிவாகத் தெரிந்தால், அந்த விவரத்தை தனியாக எனக்கு கொடுப்பார்களானால், சில விசாரணைகள் நடப்பதைப்போல அந்தத் தவறை யார் செய்தார் என்று குற்றச்சாட்டு இருக்கிறதோ அவருக்கே இந்தப் பிரச்சினையை அனுப்பி, நீங்கள் விசாரணை செய்யுங்கள் என்று சொல்லாமல் வேறு வகையில் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனாலும், ஒன்றை எண்ணிப்பார்க்கிறேன். 3 ஆண்டுக்கு மேல் ஒரு அதிகாரி ஒரு அலுவலகத்தில், ஒரே இடத்தில் இருக்கக்கூடாது என்பது ஒரு விதி. அந்தந்த ஜில்லாவுக்குள் மாற்றப்பட வேண்டும், இன்னும் சில அதிகாரிகள் வேறு ஜில்லாக்களுக்கு மாற்றப்படலாம், இன்னும் சிலர் வேறு மாநிலங்களுக்கே கூட மாற்றப்படுகிறார்கள். இதை முறையாக வைத்திருக்கிறோம். இதிலே காவல் துறையைச் சேர்ந்தவர்களையும் சிந்தித்துப் பார்க்கிறேன். அவர்கள் எங்கே தங்கியிருக்கிறார்கள் பல நேரங்களில்? அவர்களுக்கு என்று வீடுகள் இல்லை. கட்டிக் கொடுக்க வேண்டுமென்று முயற்சி செய்கிறோம், இன்னும் கட்டிக்கொடுக்க முடியவில்லை. பல இடங்களில் வீடு இல்லை. சென்னை போன்ற இடங்களில் இருந்தாலும் எல்லோரும் ‘போலீஸ் குவாட்டர்ஸ்’’ என்ற இடத்தில் இல்லை. மக்களோடு சேர்ந்து இருக்கிறார்கள். மக்களுக்கிடையிலே வாழ்கின்ற ஒரு காவலர் என்றால், அவருக்கும் குழந்தைகள், மனைவி, தந்தை, தாய், வயதுவந்த தமக்கை, தங்கைகள், மற்ற உறவினர்கள் எல்லாம் தன்னுடன் இருப்பார்கள். இவர்களை எல்லாம் வீட்டில் வைத்துவிட்டு, வெளியே போய், பக்கத்து வீட்டில் ஒருவர் தவறு செய்கிறார், அவர் குடிகாரர், சாராயம் காய்ச்சுபவர் என்று தெரிந்ததாலும் அவர் எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? அவர் அப்படி நடவடிக்கை எடுத்தால் அந்தக் குடும்பத்திற்கு என்ன பாதுகாப்பு? குடும்பத்திற்குப் பாதுகாப்பு கொடுத்துவிடுகிறோம், எத்தனை நாளைக்கு? பக்கத்தில் இருப்பவர்களை விரோதித்து, எவ்வளவு நாளைக்கு வாழ முடியும்? ஆகவே, இந்த வசதிகளைச் செய்து கொடுக்கின்ற வரையில் நாம் அவர்களைக் கொஞ்சம் விட்டுவைக்க வேண்டுமென்று சொல்லும்போது அதை ஒரு கொள்கையாக வைக்கவில்லை. அந்தப் பாதுகாப்பைத் தந்த பிறகு அவர்களைக் கவனிக்க வேண்டும், அடக்க வேண்டும்.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். சென்னையில் ஒரு போலீஸ் அதிகாரி பதவி உயர்வு பெற்று, 37 ஆண்டுகளாக சென்னையிலே இருக்கிறார். அண்மையில் இங்கே அப்படி எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்ற ஒரு கணக்கை எடுத்துப் பார்த்தேன், சென்னையில் குறைந்தது 4 ஆண்டு, 7 ஆண்டு, 9 ஆண்டு, 12 ஆண்டு, 18 ஆண்டு, 20 ஆண்டு, 35 ஆண்டு, 37 ஆண்டு என்று

இப்படி இங்கே இருக்கிறார்கள். மயிலாப்பூரிலிருந்து இராயபுரத்திற்கு மாற்றம். இராயபுரத்திலிருந்து மயிலாப்பூருக்கு அல்லது எக்மோருக்கு மாற்றம், இப்படியே சுற்றிக்கொண்டு வந்திருக்கிறார்களே தவிர சென்னையை விட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்படவில்லை. அதற்கு தொடர்புடையவர் யாராக இருக்க முடியும் ? யாரை எதிர்த்து அவர் வாழ முடியும் ? அவருடைய குடும்பத்தில் இருக்கிறவர்கள் கூட வியாபாரிகளாக இருக்கலாம், அல்லது வேறு தொழிலில் ஈடுபட்டிருக்கலாம்.

நிலைமை என்ன ? இவைகளை எல்லாம் ஒழுங்கு படுத்துகின்ற வகையிலே விரைவிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர அவர்களை மட்டும் குறை சொல்ல முடியாது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மேலும் இதைப்போன்ற குற்றச்சாட்டுகளை ஒட்டுமொத்தமாகச் சொல்லாமல் குறிப்பிட்டு மாண்புமிகு உமாநாத் போன்றவர்கள் அந்த விவரத்தைத் தரவேண்டும். அதன் பிறகும் நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் எங்கள் மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்துவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிளேன். இன்னொரு உதாரணத்தை நான் சொல்லி ஆகவேண்டும். இராமநாதபுரத்திற்கு நான் போய் பிறகு அங்கிருந்து திரும்பி மதுரைக்கு வந்து அதிகாரிகளை எல்லாம் கூட்டி வைத்து, கூட வந்தவர்களையும் கூட்டி வைத்து, சில பிரமுகர்களையும் அழைத்துப் பேசியதில் அவர்கள் சில விவரங்களைத் தந்தார்கள். ஏதோ தகவல் வந்தும், நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். உங்களுக்கு எப்படித்தான் தெரியும் என்று நான் கேட்டேன். போலீஸ்காரர் சொன்னார் என்று அவர் சொன்னார். போலீஸ்காரர் யார் என்று கேட்டேன். நான் சொல்லாமாட்டேன் என்று சொன்னார். எந்தக் கட்சி என்று கேட்டபோது, ஒரு கட்சியின் பெயரைச் சொன்னார். இங்கே அதை நான் சொல்ல விரும்பவில்லை. அங்கே வந்தவர்களுக்கு தெரியும். நிலைமை என்ன ? இப்படித் தொடர்பு வைத்துக்கொண்டவர்கள் சமூக விரோதிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டார்கள் என்று சொன்னால் ஒத்துக்கொள்ள முடியுமா ? ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டவர்களாகத் தெரிந்துவிட்டார்கள் என்பதற்காக அத்தனைபேரும் அதற்குப் பொறுப்பு என்று சொல்ல முடியுமா ? அவர்கள் எதிராக இருக்கிறார்கள், ஆட்சியினுடைய கொள்கைக்கு விரோதமாகச் செயல்படுகிறார்கள், அல்லது செயல்பட முனைந்தார்கள் என்பதற்காக அவர்கள் எல்லோருமே சமூக விரோதிகள் என்றோ அல்லது அவர்கள் அனைவருமே தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே, இலாக்காவிலே உள்ள அத்தனை பேரும் அதற்கு பொறுப்பு என்று நாம் சொல்ல முடியுமா ?

அடுத்து, இளையபெருமாள் அவர்கள் கேட்டார்கள். அங்கே, போகின்றபோது ஒரு குறிப்பிட்ட ஜாதியை மட்டும் அழைத்துக்கொண்டு போனீர்களே, வேறு பிரிவினரை அழைத்துப் போகவில்லையே என்றார்கள். இந்த இலாக்காவை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று என்மீது நம்பிக்கையோடு இருக்கின்றபோது நான் அங்கே இருந்தால் நான் யாருடைய பிரதிநிதி ? உங்களுடைய பிரதிநிதிதான். உங்கள்

கட்சியிலே இருந்து ஒருவர் வந்தால் அவரை எப்படி நீங்கள் கட்சியின் பிரதிநிதியாக அல்லாமல் அந்த ஜாதியினுடைய பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள முடியும்? ஒரு கட்சியினுடைய பிரதிநிதி வருகின்றபோது என் கணக்கிலே அவர் அனைத்து ஜாதிகளுக்கும் சொந்தம். அந்தக் கட்சியிலே இருக்கின்ற அனைத்து மதத்தினருக்கும் அவர் சொந்தம் என்றுதான் நான் ஏற்றுக்கொள்ள முடியும். இதுதான் நியதியும் கூட. அங்கே வருகிறவர்களை எல்லாம் எந்த ஜாதி, எந்த ஜாதி என்று அழைத்து இருந்தேனேயானால் ஒவ்வொரு கட்சியிலேயும் 5 பேர், 10 பேர் வரவேண்டி இருக்கும். அதை நாம் மறந்துவிட முடியாது. ஜாதி, மத நம்பிக்கை கொண்டவர்களை உடையது தான் ஒவ்வொரு அரசியல் கட்சியும். எல்லா அரசியல் கட்சிகளும் கம்யூனிஸ்ட் கட்சியைப் போல ஜாதி, மத பேதத்தை முழுமையாகத் தூக்கி எறிந்து விட்டவை என்று சொல்ல எனக்குத் துணிச்சல் இல்லை. அதை நான் ஒத்துக்கொள்ளவேண்டும். ஆனால், ஒருவகையிலே கொஞ்சம் முன்னுக்கு வந்து இருக்கிறோம். முன்னேறி இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்ளலாம். உங்களையும் நாங்கள் அந்தக் கணக்கிலே சேர்க்கிறோம். அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பார்கள். அது போல கழுத்திலே கொஞ்சம் கலக்கம் – அது கலகம். அதன் விளைவாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் இளைய பெருமாள் அவர்களும் கருத்து பரிமாறிக் கொண்டதில் சில உண்மைகள் வெளிப்பட்டன. அதற்கு மகிழ்ச்சி. இதிலிருந்து ஒன்றை தெரிந்து கொள்கிறோம். எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் ஜாதியின் கண்ணோட்டத்தோடு அது செயல்படக் கூடாது என்ற உண்மையை நாம் எல்லோரும் ஒத்துக் கொண்டோம் என்பதை எண்ணும் போது நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதேபோல எதுவுமே நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியதற்காக சொல்கிறேன். ஒரு குறிப்பு மாத்திரம் நான் இங்கே படிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980ஆம் ஆண்டில் காவல் துறையில் பணிபுரியும் ஆய்வாளர்கள் தன்னிச்சையாகவும், பாதிக்கப்பட்ட ஆதிதிராவிட மக்கள் மற்றும் தீண்டாமை குற்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளும், தண்டனை பெற்ற விவரங்களும், பதிவு செய்யப்பெற்ற வழக்குகள் 759, தண்டிக்கப்பட்டவர்கள் 55; விடுதலை பெற்றவர்கள் 528 மீதி நிலுவையில் இருக்கும் வழக்குகள் 176. ஆகவே, இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றஞ்சொன்னதோடு மட்டுமல்லாமல் 5 ஐ.ஜிக்கள் இருக்கிறார்களே அவர்கள் எல்லாம் ஏன் நியமனம் செய்யப்படவேண்டும் என்ற கேள்விக்கு ஒன்றை நான் பதிலாகச் சொல்ல விரும்புகிறேன்.

முன்பு இருந்ததை விட வழக்குகளின், குற்றங்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்றால், நடவடிக்கை அதிகமாயிருக்கிறது என்று பொருளே தவிர,

முன்னாடி இருந்ததைப் போல வழக்குகளை மறைத்து, எண்ணிக்கைகளை குறைத்து அறிக்கைகளை வெளியிட இந்த அரசு தயாராக இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தோடு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் பற்றி ஒரு குற்றச்சாட்டை சொன்னார்கள். அவர்களுக்குத் தெரிந்த தகவலைத் தந்தார்கள். போலீஸ் கமிஷனர் ஸ்ரீ பால் அவர்களுக்கு, டி.கே .கோஷி ஜெனரல் மேனேஜர் அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள்.

Dear Thiru Sri Pal.

I am pleased to inform you that thanks to the vigil and co-operation of your officers in the northen region of the city during the month of March 1981, there was no one incident of Polfrage Products by drilling holes. I trust the office will continue to help us and maintain this excellent achievement. Please do convey our appreciation to the concerned.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், அந்த அதிகாரி எழுதுகிறார் இப்படிப் பாராட்டி, இங்கே பேசப்படுகிறது நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று. ஆகவே, நான் அதற்குத்தான் சொன்னேன். எங்கிருந்து தகவல் வந்தது என்பது பற்றி குறிப்பிடவில்லை. எனக்கு யாரும் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். எங்கிருந்து கிடைத்தாலும், பத்திரிக்கைகள் கொடுத்தாலும் அல்லது நண்பர்கள் தந்தாலும் இதுபோன்ற தொலைபேசியைப் பயன்படுத்தி ஒரு எட்டணா, ஒரு ரூபாய் செலவு செய்து என்னிடம் கேட்டால் உடனடியாக தகவல்கள் கிடைத்திருக்கும். கொடுக்கச் செய்திருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இன்னொன்று 1969–1979இல் கடன் மற்றும் மானியமாக மத்திய அரசு அனுமதித்த தொகை ரூ.425.47 இலட்சம். இந்தத் தொகையில் எட்டு இலட்சம் ரூபாய் தவிர மற்றப் பணம் பூராவும் மாநில அரசால் செலவழிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள அந்த எட்டு இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவழிக்கப்பட்டு விடும். 1980–1981இல் 56,35 இலட்சம் ரூபாய் கடன் மற்றும் மானியமாக மத்திய அரசு வழங்கியது. இந்தத் தொகை பூராவும் செலவழிக்கப்பட்டு விட்டது. ஒரு ஆண்டு நவீனமாக்கும் திட்டத்திற்குச் செலவழிக்கப்படாத பணம் வாபஸ் ஆவதில்லை. அந்தப் பணம் அடுத்த ஆண்டுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. பட்டியல் வந்த பிறகு தான் செலவுத் தொகையின் முழு விவரமும் தெரிய வரும். மத்திய அரசு அளித்த உதவித் தொகை இதுவரையில் காலாவதியானதில்லை. காலாவதியாக அனுமதிப்பதும் இல்லை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் நகரத்தில் இருக்கிற காவல்துறை கமிஷனர் பற்றி ஒரு குற்றச் சாட்டு சொல்லி அவர்கள் எந்த அரசியல்வாதி எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றெல்லாம் கேள்விகள் கேட்டார்கள். அவர்கள்

பேசியது அரசியல் கட்சிக்கு வாக்கு போடுங்கள். கொடுங்கள் என்று கேட்பதுபோல் இருந்தது என்று சொன்னார்கள்.

நான் பணிவோடு ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆட்சியில் இருக்கிறவர்கள் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அதிகாரிகள் வெவ்வேறு கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பது தவிர்க்க முடியாதது. அதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஆனால் பேசும்போது எப்படிப் பேச வேண்டும், யார் யார் எந்த வகையில் எந்த இடத்தில் எப்படி பேச வேண்டும் என்று நிர்ணயித்துக் கொள்ள வேண்டியதில் கொள்கை வேறுபாடு இல்லை.

ஆனால், கல்கி பத்திரிக்கையில் வந்திருக்கிற செய்தியை நான் சொல்லும்போது அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதை முழுமையாக படிப்பது என் கடிமை என்று கருதுகிறேன்.

“நீங்கள் ஆளுக்கு ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக் கொள்ளுங்கள்.உங்கள் பகுதியில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள், கதவடைப்புகள், ஸ்ட்ரைக்குகள், ஊர்வலங்கள், கண்டனங்கள் இவற்றையெல்லாம் தேதிவாரியாக குறிப்பு எடுத்துக் கொள்ளுங்கள் தேர்தல் சமயத்தில் எந்தக் கட்சியினர் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் அதிகமாக பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கணக்கிடுங்கள்.பிறகு அந்தக் கட்சிக்கு ஓட்டு போடாதீர்கள். இதில் கலந்து கொண்டவர்கள் யார் யார் என்று பாருங்கள். அவர்களுக்கு ஓட்டு போடாதீர்கள் என்றால் ஆட்சிக்கு ஓட்டு போடுங்கள் என்று பொருள், அதிகமாக கலந்து கொண்டவர்கள் யார் என்று பார்த்து அவர்களுக்கு ஓட்டு போடாதீர்கள் என்றால் இதில் என்ன தவறு? அவர் அதிகாரி. அவர்கள் நாட்டில் குற்றங்கள் நடைபெறாவண்ணம் குழப்பங்கள் நடைபெறாவண்ணம் கவனிக்க வேண்டிய ஒரு அதிகாரி; சென்னை நகருக்கு பொறுப்போடு இருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்வார்கள்?

இதனால் ஏற்படுகிற விளைவுகளை மனதில் எண்ணி, அதையெல்லாம் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள், குறிப்பு வைத்துக் கொள்ளுங்கள், எந்தக் கட்சியினர் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் அதிகப் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதைக்குறித்து வைத்துக்கொண்டு, அதிக பங்கு பெற்றவர்களுக்கு ஆதரவு கொடுக்காதீர்கள்— அதுதான் அவருடைய வேண்டுகோள், என்ன காரணம்? நான் முன்னாலே படித்தேனே பட்டியல், இதைப் போன்று பட்டியல் இருக்குமானால், எந்த நேரத்திலும், எந்த ஆட்சியும், எந்த அதிகாரியும் ஒழுங்காகச் சட்டத்தைக் காப்பாற்ற முடியாது; நிறைவேற்ற முடியாது, ஆனால் அவர் என்ன சொன்னார்?

அதைத் தான் நான் சொல்கிறேன். அவர் கலந்துகொண்ட இடம் அரிமா சங்கம். அரிமா சங்கத்தில் படித்தவர்கள், குறிப்பிட்ட நபர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களிடத்திலே பேசும்போது இதைச் சொல்லியிருக்கிறார். பொது மக்களை வைத்துக் கொண்டு அல்லது வகுப்புவாதிகளை வைத்துக்கொண்டு, அல்லது பொதுக்கூட்டத்திலோ, மேடையிலே பேசி இருந்தால் நிலைமை வேறு. அரிமா

சங்கத்தைச் சார்ந்தவர்கள் பொதுநலத்தோடு ரோட்டரி கிளப் போல் காரியங்களைச் செய்கின்ற அமைப்பு அது. அவர்களிடம் சொல்லும்போது, யார் என்று பார்த்துப் போடுங்கள் என்று சொன்னாரே தவிர, அவர்களுக்கு எதிராக வாக்கு அளியுங்கள், இப்படிச் செய்கிறவர்களுக்கு வாக்கு அளிக்காதீர்கள் என்று சொல்லியிருந்தால் நிச்சயமாக சந்தேகப்படலாம். ஆட்சிக்காக, ஆட்சிக் கட்சிக்காக அவர் கருத்தை வெளியிட்டார் என்று சொல்லலாம். உண்மையிலேயே நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகூட கேட்கலாம். ஏன் எங்களுக்கு அப்படித் தோன்றவில்லை? எங்கள் கட்சி போராடவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். ஆட்சிக் கட்சிக்கு எதிராக, ஆட்சிக் கட்சி போராட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கம் இருக்காது. இந்த நிலைமையை எண்ணிப் பார்த்தால், சந்தேகத்திற்கு இடம் உண்டாகும். ஆகவே, தயவுசெய்து நான் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். எதிலும் சந்தேகப்படாமல், செம்மையாக காரியம் ஆற்றுவதைக் கவனித்து, அதைப் போன்று விஷயங்களில் அவர்கள் நடந்து கொள்வதையும் கவனித்து, எது அதிகம்? எகு குறைவு? என்பதைக் கவனித்து நீதி வழங்க வேண்டுமே தவிர எல்லாம் சரியாக இருக்கும், எல்லாமே சரிவர இருக்கும் என்ற வகையில் யாரிடமும், எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சங்கரய்யா அவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் அரசியலிலே அனுபவம் பெற்றவர்கள். அவர்கள் கூற்றுப்படி, அவர் சொல்லியதைச் சொல்லியிருந்தால், எதிர்க் கட்சியாக நாம் ஆக்கப்பட்டு, இந்தப் போராட்டங்கள் நடத்தியது எல்லாம் அந்த நோக்கத்தின் அடிப்படையிலே என்று நோக்கம் கற்பித்து, அதையும் அவர்கள் உன்னிப்பாக கவனித்து நல்லதா, கெட்டதா. இந்தப் போராட்டம் நடத்த வேண்டுமா, வேண்டாமா என்று ஒரு அதிகாரி தீர்மானிக்க ஆரம்பித்தால், அவர் அரசியல்வாதியாக ஆகிவிடுவார். ஆகவே, ஒரு அதிகாரி யார் போராட்டம் நடத்தினாலும், எந்தப் போராட்டம் நடத்தினாலும், அமைதிதான் தேவை என்று நினைக்கிற ஒரு அதிகாரியாகத் தான் செயல்பட வேண்டும். அந்த வகையில்தான் தன் கருத்தைச் சொல்ல வேண்டுமே தவிர, ஆட்சியை, ஆட்சிக் கட்சியை கலைத்து விட்டார்கள், அதற்கு மக்கள் போராடுவது நியாயம் என்ற நோக்கத்திற்கு அவர் வந்தால், அவர் அதிகாரியாக இருக்க முடியாது. நடுநிலைமையோடு அவர் தன் கடமையை எப்படிச் செய்ய முடியும்? மேலதிகாரி உத்தரவிடுவார், அந்தப் போராட்டத்தைக் தடை செய்யுங்கள் என்று. இல்லை, இல்லை, அவர்கள் நோக்கம் நல்லது என்று அவர் அடிக்க மாட்டேன் என்று சொன்னால் என்னவாகும்? அந்த வேலை அதிகாரிகளுக்கு இருக்கக் கூடாது. அது நியாயமா, அநியாயமா என்பதையும், நோக்கம் சிறந்ததா, இல்லையா என்பதையும் மக்கள் கவனிக்க வேண்டும்; அதற்கு மக்கள் தீர்ப்பளிக்க வேண்டும். அதே நேரத்தில், ஆட்சியில் இருப்பவர்கள் சொல்வதை, சட்டத்தின்படி நடத்தி முடிக்க வேண்டியது ஒவ்வொரு அதிகாரியினுடைய கடமை என்பதை பல முறை நான் சொல்லியிருக்கிறேன். எந்த ஆட்சி மாறினாலும், அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள், நடுநிலைமையோடு தங்கள் கடமையைச் செய்யவேண்டும். என்று

நாம் பேசியிருக்கிறோம். அந்த வகையிலே தான் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு மீண்டும் நேரம் அதிகமாகிறது என்ற காரணத்தால் இந்த அரசு ஒன்றை எப்படி செய்யவேண்டுமென்று கருதுகிறது என்பதைச் சொல்ல விழைகிறேன்.

அரசிதழ் பதிவு பெறாதவர்களைப் பற்றி நான் சிலவற்றைச் சொல்லியாக வேண்டும். அழைத்துப் பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். அழைத்து பேசுவதிலே எனக்கு ஒன்றும் நஷ்டமில்லை; யாரை அழைத்து பேசுவது? ஒரு முடிவை எடுத்து சந்தித்த பிறகு, பரிசீலிப்பற்கும் பேசுவதற்கும் வாய்ப்பைத் தந்து அமைச்சர் அவர்களை பார்க்க செய்து அதற்கு பிறகு அவர்கள் தீர்மானத்தைப் போட்டு, இது தான் இறுதியான முடிவு; இதைச் செய்வோம், அரசை நடத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்று சொல்கிற வகையிலே பல்வேறு பணிகள் நிச்சயமாக பாதிக்கப்படும்; மக்கள் தொல்லைப்படுவார்கள்; இந்த அரசின் மீது அவர்கள் ஆத்திரப்படுவார்கள் என்கிற நிலையிலே ஒரு நடவடிக்கை எடுக்கும்பொழுது, அரசைப் பொறுத்தவரையில் என்னவாயினும் மக்களுக்கு கொடுத்த உறுதி மொழியை காப்பாற்ற அரசின் நிதிநிலைக்கு எற்ப காரியங்களை ஆற்றும் பொழுது அவைகளைச் செய்ய இந்த அரசுபின் வாங்காது என்ற அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர அதற்காக எதைச் சொன்னாலும், அச்சுறுத்தினாலும், கேவலப்படுத்தினாலும், சட்டத்தை மீறினாலும், நியதியை கேட்க மாட்டோம், அதைப்பற்றி நினைக்கவே மாட்டோம் என்று சொன்னாலும் எந்த அரசும் எதுவும் செய்ய முடியாது.

ஆகவே , எங்களால் முடிந்த வரையில் நாங்கள் சொல்லியாகி விட்டது. முடிந்ததை எல்லாம் நாங்கள் செய்து விட்டோம். அங்கே கொடுத்தார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். மத்திய அரசோடு போராட வேண்டும் ; அதற்கு பிறகு மத்திய அரசு தருகிறது என்பதை நாம் சொல்கிறோம், சுட்டிக் காட்டியிருக்கிறோம். உங்களுக்கு வசதி இருக்கிறது. கொடுக்கிறீர்கள், அதை எங்களிடம் கலந்து கொள்ளுங்கள், கொடுக்கிறோம் என்றால் அதற்க்கு பதில் இல்லை, இன்னொன்றைச் சொல்ல வேண்டும். பேசியதாக நினைவு வந்திருக்கிறது. ஏதோ சிலர் பணம் அங்கே அனுப்பினாலும் செலவு செய்வதில்லை என்று சொல்கிறார்கள். நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன் ஒரு காவல் நிலையத்தில் ஐந்து கைத்துப்பாக்கிகள் தற்காப்பிற்காக இருக்க வேண்டுமென்று சொல்லி அவைகளை வெளிநாட்டிலே இருந்து வரவழைக்க வேண்டுமென்று இந்திய பேரரசிடம் அனுப்பினால் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். அங்கே என்ன நிலை? ஊர் எப்படி, மக்கள் எப்படி, இதை அவர்கள் புரிந்துகொண்டிருக்க முடியுமா? அங்கே போய் புள்ளி விவரத்தை கணக்குப் பார்க்கிறார்கள். அதை வைத்து அவர்கள் தீர்மானிக்கிறார்கள், ஆகவே தான் சில சமயம் இவைகளை வெளியே சொல்லாமல் பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்ப்பதற்கு நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம். இதற்கும் அப்படித்தான்.

விவசாயிகளுடைய கடனை ரத்து செய்ய வேண்டும்; விவசாயிகளுடைய மின் கட்டணத்தை வசூலிக்க கூடாது; ஜப்தி செய்யாதீர்கள்; நாராயணசாமி நாயுடு என்ன சொல்கிறார்? நேற்றுக்கூட பேசியிருக்கிறார். திருச்செங்கோட்டிலே என்று நினைக்கிறேன். அங்கே பேசியதாக செய்தி வந்திருக்கிறது. நிலத்தைத் தரிசாகப் போடுங்கள், அரசாங்கம் உங்களிடத்திலே வரும் என்கிறார், இந்த நாட்டுக்கு நல்லது செய்கிறாரா? இதை எவ்வளவு நாட்களுக்கு அனுமதிக்க முடியும், கூப்பிட்டு பேசுங்கள் என்றால் கூப்பிட்டோம், வரமாட்டேன் என்கிறார். நிபந்தனைகளை விதித்து இதையெல்லாம் ஒத்துக்கொண்டு இருக்கிறது. பணம் வசூலிக்காமல், பணத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று, அதை செய்ய வேண்டும் நாங்கள். பணத்தை வசூலிக்கக் கூடாது. மின்சார வாரியத்திற்கு எவ்வளவு கோடி நஷ்டம் என்று பார்த்தீர்கள். அந்த பணத்தை நாங்கள் சரி செய்ய வேண்டும். அதுமட்டுமல்ல, வரியை வசூலிக்காதீர்கள். கடனை வசூலிக்காதீர்கள், நாங்கள் வட்டியையும் ஜூன் மாதம் 30ஆம் தேதிவரை விட்டு கொடுத்து இருக்கிறோம். இவ்வளவு செய்த பிறகும் எதற்கெடுத்தாலும், இதைச் செய்ய மாட்டோம்; வந்துபார், நீ ஒத்துக் கொள்கிறாயா ? வருகிறேன்; அதிலும் என்னை மட்டும் அழைத்தால் வருவேன்; மற்ற கட்சிகள் எல்லாம் என்ன ? இந்த நாட்டு மக்களுடைய பிரதிநிதிகள் இல்லையா ? அவர்கள் சொல்கிறார், நான் ஒத்துழைத்தேன்; இருக்கட்டும்; ஒத்துழைத்ததற்கு நாங்கள் என்ன செய்யவில்லை நாங்கள் கமிட்டி அமைப்போம்; குழு அமைப்போம்; அமைச்சர் அந்தஸ்த்தில் ஒருவர் தலைவராக நியமிப்பது; வந்தார்களா ? நீங்களே வந்திருந்தால் அந்த இடத்தைப் பெற்றிருக்கலாம். முடியாது என்று சென்னீர்கள்; பிறகு வேறு ஒருவரை போட்டோம். அழைத்தோம், முடியாது என்கிறீர்கள். இதை அழித்து விட்டு மறுவேலை என்கிறீர்கள். ஒரு கொள்கை வைத்துக் கொண்டு. ஒரு முடிவை வைத்துக் கொண்டு கேள்வி கேட்பது நியாயம் அல்ல. விவாதிக்க பிறகு ஒரு முடிவிற்கு வரவேண்டுமே தவிர, இதுதான் என் முடிவு, இதற்கேற்ப விவாதிப்போம் என்றால் விவாதிப்பதில் அர்த்தமே இல்லை. இத்தகைய நிலைமைகளை எல்லாம் மற்ற கட்சிகளை விட்டுவிடுங்கள்; எங்களை மட்டும் விவசாயிகளுடைய பிரதிநிதிகளாக நினைத்துக் கொள்ளுங்கள் என்று ஒருவர் சொல்வாரானால் இங்கே இருக்கிற பிரதிநிதிகளை எல்லாம் நாம் எப்படி அலட்சியப்படுத்த முடியும். அத்தனை பேரும் மக்களுடைய வாக்குகளைப் பெற்று வந்திருக்கிறீர்கள். உங்களுடைய பிரதிநிதிகள் தானே இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் அந்தத் துணிச்சலோடு இருக்கிறார் என்றால் அதற்கு யார் பக்கபலம் என்பது நமக்கு தெரிகிறது. உண்மை மக்களுக்கு தெரியும் போது அவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்ற பதிலைத் தவிர நான் எதையும் சொல்வதற்கில்லை.

இந்த காவல் துறையைப் பொறுத்தமட்டில் இந்த அரசு சில முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தில் உள்ள 1,033 காவல் நிலையங்களில் 450 காவல் நிலையங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அனைத்து காவல் நிலையங்களும் அரசு கட்டடங்களில் இயங்க

வேண்டுமென்ற நோக்கத்தின் முதற்கட்டமாக புதிதாக 150 காவல் நிலையங்கள் கட்டப்படும். இதற்கென ரூ.4 கோடி ஒதுக்க அரசு முடிவு செய்துள்ளது.

அடுத்து, போக்குவரத்து காவல் துறைக்கு புதிய வாகனங்கள் வாங்குதல். சென்னை நகரின் போக்குவரத்துக் காவல் துறையை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு (தொலை தூர தொடர்புக் கருவி) வி.எச்.எப். பொருத்தப்பட்ட 3 வேன்கள் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

காவல் துறையில் தற்போதுள்ள 1,873 பழைய மோட்டார் வாகனங்களில் ஆண்டுதோறும் 10 சதவிகிதம் புதுப்பிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதன் முதற்கட்டமாக 187 புதிய வாகனங்கள் வாங்க ரூ.1.57 கோடி ஒதுக்க முடிவு செய்துள்ளது.

காவல் துறை வாகனங்களை பழுதுபார்த்து சிறந்த முறையில் பராமரிக்க வசதி செய்யும் நோக்கோடு, ஆவடியில் உள்ள மோட்டார் வாகன பழுதுபார்க்கும் பணிமனையை ரூ.10 இலட்சம் செலவில் மேம்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மேலும், கோயம்புத்தூர் மதுரை போன்ற இடங்களில் இதைப்போல் தொடங்கவும் திட்டமிட உத்திரவிடப்பட்டுள்ளது.

கோவையிலும் வேலூரிலும் உள்ள காவலர் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறும் காவலர்களுக்கு தேவையான கூடுதல் வசதிகள் செய்து தரவேண்டும் என்ற எண்ணத்தில், அப்பள்ளிகளுக்குத் தேவையான மேஜை, நாற்காலி, கட்டில் போன்ற சாதனங்களை வாங்க அரசு ரூ.20 இலட்சம் ஒதுக்க முடிவு செய்துள்ளது.

காவல் துறையைச் சேர்ந்த குதிரைப் படைப்பிரிவை மேலும் விரிவுபடுத்தும் வகையில், கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகரங்களிலும் குதிரைப் படைப் பிரிவை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

சென்னையிலுள்ள காவல் துறை பயிற்சிக் கல்லூரிக்குப் புதிதாக ஓர் பேருந்து, ஒரு ஜீப், ஒரு கார் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள்கள் ரூ.4.15 இலட்சம் செலவில் வாங்க அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் பணிபுரியும் காவலர்கள் வேறு பிரிவுகளுக்கு மாற்றப்படாமல் நீண்டகாலமாக இப்பிரிவிலேயே இருப்பதை இந்த அரசு பரிவோடு பரிசீலனைச் செய்து தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் 10 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த காவலர்கள் சிறப்புக் காவல் படையிலிருந்து சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு மாற்ற முடிவு செய்துள்ளது. இவ்வாறு சட்டம் ஒழுங்கு பிரிவிற்கு மாற்றப்படுமுன் இந்திய தண்டனைச் சட்டம் (ஐ.பி.சி.), மற்றும் குற்ற நடைமுறைச் சட்டம் (சி.ஆர்.பி.சி.) ஆகியவற்றில் போதிய பயிற்சி அளிக்கப்படும்.

15.08.1980 முதல் காவல் துறையில் 'ஏவலர் முறை' இருக்கக்கூடாது என்று அரசு முடிவு செய்து ஆணைகள் பிறப்பித்தது. அதற்கேற்ப காவல் துறை அதிகாரிகளுக்கு ஏவலர்களுக்குப் பதிலாக அடிப்படை ஊழியரோ அல்லது அதற்கென ஒரு குறிப்பிட்ட

ஈட்டுத் தொகையோ (லம்ப் சம்) கொடுக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. எக்காரணத்தைக் கொண்டும் காவலர்களை மீண்டும் ஏவற் பணிக்கு பயன்படுத்த இந்த அரசு அனுமதிக்காது.

இன்னொன்று, வெளியூரிலிருந்து வருகின்ற பெண்கள் எங்கேயோ வழிமாற்றி அழைத்துச் செல்லப்படுவதாகவும் வேறு பல குற்றங்கள் நிகழ்வதாகவும் எல்லாம் சொல்லப்படுகிறது.

வெளியூர்களிலிருந்து வேலை தேடியோ அல்லது வேறு காரணங்களுக்காவோ சென்னை மற்றும் முக்கிய நகரங்களுக்கு வந்து வழி தவறி அல்லற்படும் பெண்களுக்கு அவர்கள் சொந்த ஊருக்குத் திரும்பிச் செல்லவும் அல்லது அவர்கள் செல்ல வேண்டிய வேறு இடத்திற்கு சரியான முறையில் சென்றடையவும் ஒரு வழி காட்டும் நிலையம் இரயில் நிலையங்களிலேயே அமைத்துத் தர இந்த அரசு முடிவு செய்துள்ளது. இவ் வழிகாட்டும் நிலையம் முழுவதும் பெண் காவல் அதிகாரிகளும் பெண் காவலர்களும் கொண்டதாக இருக்கும். வெளியூரிலிருந்து வரும் பெண்கள் நேரடியாக இந்த நிலையத்திற்குச் சென்று தாங்கள் எங்கிருந்து வந்திருக்கிறோம் என்றும், எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதையும் தெரிவித்தால், அங்குள்ள அதிகாரிகள் அவர்களுக்கு வாகன வசதி செய்து போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்து தருவார்கள். இதன் முதற்கட்டமாக சென்னையில் சென்ட்ரல், எழும்பூர் நிலையங்களில் இந்த ஏற்பாடு செய்யப்படும். பின்னர் மதுரை, கோவை, திருச்சி, தஞ்சை போன்ற ரயில் நிலையங்களிலும் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் தற்காலிக அடிப்படையில் தற்போது பணிபுரியும் சமையற்காரர், சலவைத் தொழிலாளர், நாவிதர் ஆகியோரது பணியை நிரந்தரம் செய்து முறைப்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் அவர்களுக்கு விடுப்பு மற்றும் ஒய்வூதியச் சலுகைகள் கிடைக்கும்.

அரசால் தனி வீடு கொடுக்கப்படாத தமிழ்நாடு சிறப்புக் காவல்படை வீரர்களுக்கு அவர்களது குடும்பங்கள் வேறு இடத்தில் வாடகை வீட்டிலிருந்தால் வீட்டு வாடகைப்படி அளிக்கப்படும்.

காவல் துறையினரின் சேவை கிராமப்புற மக்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் இவ்வாண்டு புதிதாக 30 காவல் நிலையங்கள் துவக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

தீயணைப்பு நிலையங்களைப் பற்றிப் பேச வேண்டும். தீயணைப்பு நிலையங்கள் போதாது என்பதும் இங்கே சுட்டிக் காட்டப்பட்டது.

நாங்கள் வந்த பிறகு 31 இடங்களில் அதைப் புதிதாக அமைக்க திட்டமிட்டு 12 இடங்களில் அது நிறைவேற்றப் பெற்று விட்டது. பாக்கி 19 இடங்களில் அதற்கு வேண்டிய சாதனங்கள் கிடைக்காத காரணத்தால் தாமதம் ஆகிறது. விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சம்மந்தப்பட்டவர்களுக்கு நாங்கள்

வேண்டுகோள் விடுத்திருக்கின்றோம். அதற்கு அவர்கள் உரித்தான பதிலைத் தருவார்கள்; விரைவில் அது நிறைவேற்றப்படும்.

மாவட்டங்களிலுள்ள ஆயுதப்படை பிரிவை மேலும் நல்ல முறையில் மேற்பார்வையிட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்களை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. பத்துக்கும் மேற்பட்ட பிளட்டூன்கள் உள்ள தென் ஆற்காடு, திருச்சி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு கூடுதல் கண்காணிப்பாளரும், மூன்றுக்கும் மேற்பட்ட பிளட்டூன்கள் செங்கல்பட்டு (மேற்கு), தஞ்சை (கிழக்கு), தருமபுரி, நீலகிரி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிக்கும் ஒரு துணை கண்காணிப்பாளர் நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது.

காவல் பயிற்சிக் கல்லூரி மற்றும் காவலர் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி அளிக்கும் அதிகாரிகள் திறமை, தகுதி, ஆர்வம் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அத்தகைய அதிகாரிகளுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அவர்களுக்கு ‘‘அறிவுரைப் படி’’ வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இச்சலுகை இப்பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் காவலர் முதல் காவல் துறை துணைத் தலைவர் (டி.ஐ.ஜி.) வரையுள்ள அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்படும்.

மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கு நிலையைக் கவனிப்பதிலேயே மாவட்டக் கண்காணிப்பாளரின் பெரும்பகுதி நேரம் செலவானதால், குற்றங்களைப் புலனாய்வு செய்து குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும், தண்டனை அடையச் செய்வதிலும் போதிய கவனம் செலுத்தப்படமுடியவில்லை, என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. எனவே, குற்றங்கள் அதிகமாக நிகழும் மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குற்றங்களைக் கண்டுபிடிக்க ஒரு கூடுதல் எஸ்.பி. பதவி ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னை நகரப் போக்குவரத்துப் பிரிவில் பணியாற்றும் முதல் நிலை, இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு இப்போது வழங்கப்படும் சிறப்பூதியம் ரூபாய் பத்திலிருந்து ரூபாய் இருபதாக உயர்த்திக் கொடுக்கவும், தலைமைக் காவலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பூதியத்தை ரூபாய் 14லிருந்து ரூபாய் 25ஆக உயர்த்திக் கொடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியக் காவல் பணியில் உள்ள அதிகாரிகளுக்கும் காவலர்கள், தலைமைக் காவலர்கள், இளம் உதவி ஆய்வாளர்களுக்குத்தான் தற்போது கிட் அலவன்ஸ் அளிக்கப்படுகிறது. இனி, நடுத்தரப் பிரிவைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகளுக்கும் அதாவது உதவி ஆய்வாளர்கள் முதல் மாவட்டக் கண்காணிப்பாளர் வரை உள்ள அதிகாரிகளுக்கும் ‘கிட் அலவன்ஸ்’ வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

மாவட்டக் கண்காணிப்பாளர்கள், கூடுதல் கண்காணிப்பாளர்கள், துணைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு மாதம் ரூபாய் முப்பது வீதமும், ஆய்வாளர்கள்,

துணை ஆய்வாளர்கள் ஆகியோருக்கு மாதம் ரூபாய் இருபது வீதமும் அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இளம் உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வரும் 'கிட் அலவன்சை' ரூபாய் பத்திலிருந்து ரூபாய் பதினைந்தாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

காவல் துறையில் இரகசியப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் காவலர்களுக்கும் அகாரிகளுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வரும் சிறப்பூதியத்தை உயர்த்தித் தர அரசு முடிவு செய்துள்ளது. சென்னை நகரப் பகுதிகளில் பணியாற்றும், துணைக் கண்காணிப்பாளர்கள் ஆய்வாளர்கள் துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள், முதல் நிலைக் காவலர்கள், இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த சிறப்பூதியம் ரூபாய் 75, ரூபாய் 50, ரூபாய் 25, ரூபாய் 25, ரூபாய் 10, ரூபாய் 10, ரூபாய் 10 என்பதை முறையே ரூபாய் 100, ரூபாய் 75, ரூபாய் 50, ரூபாய் 35, ரூபாய் 25, ரூபாய் 25, ரூபாய் 25 என உயர்த்தவும் சென்னை நகரம் தவிர மற்றப் பகுதிகளில் பணிபுரியும் துணைக் கண்காணிப்பாளர்கள் ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள், முதல்நிலைக் காவலர்கள், இரண்டாம்நிலைக் காவலர்கள் ஆகியோர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த சிறப்பு ஊதியம் ரூபாய் 75, ரூபாய் 35, ரூபாய் 15, ரூபாய் 15, ரூபாய் 7, ரூபாய் 5, ரூபாய் 5, என்பதை முறையே ரூபாய் 90, ரூபாய் 35, ரூபாய் 25, ரூபாய் 15, ரூபாய் 15, ரூபாய் 15 என உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது.

தீயணைப்புப் படையினருக்கும் அந்த வசதி செய்து கொடுத்தோமே அது போல் செய்யப்படும் என்பதையும் அதுபோல் அலுவலர்கள் என்ற வகையிலே பணியாற்றுகிறவர்கள் வேலைப்பளு அதிகமாக இருக்கிறது என்றும் காவல் நிலையத்தில் பணியாற்றுகிறவர்கள் அவர்களுடைய எண்ணிக்கை அதிகம் ஆக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதற்காக ஊர்வலமும் வந்தார்கள். அதையும் இந்த அரசு தேவையான அளவு உயர்த்த இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சொல்லி, அந்தப் பளுவும் குறையும் என்று கூறி, ஆகவே, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

07.05.1981 அன்று காவல்துறை மீதான
மானியக்கோரிக்கை விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றி உரை.

இலங்கைத் தமிழர் நலங்காக்க ஒன்றுகூடி முடிவெடுப்போம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிக முக்கியமான, அவசரமாக நாம் கருத்தினைச் சொல்லியாக வேண்டிய பிரச்சினையை உணர்ந்து இங்கே அரசும், பங்கு கொள்கிற அனைத்துக கட்சிகளைச் சேர்ந்தவர்களும் ஒருமித்த மனதோடு இதிலே கவனம் செலுத்தவும், தீர்மானம் கொண்டு வந்ததை ஏகமனதாக ஏற்றுக் கொள்வதும், எதிர்காலத்தில் தமிழக மக்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்குத் தமிழர்கள் எங்கு இருந்தாலும் அவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்கு ஒரு உத்திரவாதம் தருவது போன்ற ஒரு எச்சரிக்கை நடவடிக்கைளாக இருக்கிறது என்ற மகிழ்ச்சியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதிலும், எதிர்கட்சித் தலைவர் இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசும்பொழுது உள்ளத்தைத் திறந்து ஒருமனதோடு இதை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதை, பிரச்சினைகளைப் பற்றி எங்கோ யாரும் இழுத்துச் சென்றுவிடக்கூடாது என்ற எண்ணத்தோடு மிக, மிக, சொல்லப்போனால், எச்சரிக்கையாக என்று கூடச் சொல்லலாம், வார்த்தைகளை அளந்து அவர்கள் கருத்துக்களை எந்த அளவிக்கு வெளியிடவேண்டுமோ அதை வெளியிட்டதற்காக அரசின் சார்பில் நான் நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுபோன்ற, ஏனைய கட்சித் தலைவர்களும் தங்களுடைய உணர்ச்சிகளையெல்லாம் இங்கே வெளியிட்டாலும்கூட, பல்வேறு கருத்துக்களைக் கொண்டவர்களாக பல்வேறு எண்ணங்களைச் சொல்பவர்களாக இருந்தாலும்கூட, ஈழத்துத் தமிழர்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் தொல்லைகள் தருவதை அவர்களுக்கு அநியாயம், ஆபத்து விளைவிப்பதை, இந்த மன்றமும் தமிழகமும் ஏற்றுக் கொள்ளாது என்பதை எடுத்துக் காட்டுகின்றவகையில் கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்நிய நாட்டின் ஆட்சிக்குட்பட்ட இடங்களில் அவர்களுடைய அதிகாரத்தில் தலையிடுகிற இடங்களில் அவர்களுடைய அதிகாரத்தில் தலையிடுகிற வகையில் இன்னொரு நாடு கருத்தை வெளியிடக்கூடாது என்பதோ, குறுக்கிடக்கூடாது என்று சொல்வதோ ஒரு நாட்டினுடைய நாகரிகமாக இருக்கும் என்பதை நாம் உணர்கிறோம். தமிழக அரசும், இந்த அரசின் சார்பாக நானும், அத்தகைய கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்தியப்பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும் இதைச்

சொல்லி இருக்கிறார்கள், ஏனையோரும் சொல்கிறோம். ஆனாலும் நாம் நம்முடைய நாகரிகத்தை வெளிப்படுத்தும்பொழுது அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டிய, எங்கே அநியாயங்கள் நடக்கின்றனவோ அங்கே ஆட்சி செய்கிறவர்கள், அதற்குப் பொறுப்பாக இருக்கின்றவர்கள் நம்முடைய நாகரிகத்தை மதிக்கின்ற வகையிலேயும், நம்முடைய நாகரிகத்திற்கு உயர்வு தருகின்ற வகையிலேயும், அதை எல்லோரும் ஏற்றுக் கொள்கின்ற வகையிலேயும் செயல்படுத்துவார்களேயானால் நாம் சொல்லும் கருத்துக்கள் நிரந்தரமாகத் தொடரக்கூடியதாக அமைய இடம் உண்டு.

ஆனால், இன்றைய தினம் ஒருசில மாதங்களுக்குப் பிறகு நாம் மீண்டும் கேள்விப்படுகின்ற, தெரிந்துகொள்கின்ற செய்திகள் அன்னியநாடா, வேறுநாடா என்பதைவிட, நமது மக்கள், நமது தமிழக மக்கள், தமிழர்கள் என்னும் வகையில் நாம் நிச்சயமாக அதில் தலையிட, அதைப்பற்றிக் கேட்க நமக்கு உரிமை உண்டு என்று சொல்லுமளவிற்கு நம்மை ஆக்கிவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே வேதனையோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையில், இந்தத் தீர்மானம் இந்தியப் பேரரசுக்கு வேண்டுகோளாக, உலக மக்களுக்கு நம் எண்ணத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தாலும்கூட, இதோடு இதை நாம் நிறுத்திவிடக்கூடாது என்ற வகையில், இங்கே அனைத்து எதிர்க் கட்சி தலைவர்களும் கருத்து வெளியிட்டு இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையிலும் அதை ஏற்றுக் கொள்கிறோம் என்பது மட்டுமல்ல, அதற்கு நாம் ஒன்று கூடி என்னென்ன வகைகளில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக, ஒருமனதாக முடிவு செய்கிறோமோ அதைச் செயல்படுத்துவதற்கு இந்தத் தமிழக அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்துடன், விரைவில் நாம் அனைவரும் ஒன்றுகூடி நம்முடைய எண்ணங்களை வெளிப்படுத்துவதற்காக, உலக மக்களுக்கும் தெரிவதற்காக, குறிப்பாக இலங்கை அரசுக்குத் தெரிவதற்காக நாம் ஒருநாள் ‘ஹர்த்தால்’ நடத்துவது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அரசும், எதிர்க்கட்சிகளும் சேர்ந்து ‘ஹர்த்தால்’ நடத்துவது என்பது இதுவரை நடந்திருக்கிறதா இல்லையா என்பது அல்ல, இது நடந்தாகவேண்டிய நேரம், நடத்திக் காட்டவேண்டிய நேரம் என்ற வகையில், இதை நான் இங்கே வெளியிட விரும்புகிறேன்.

மத்திய அரசுக்கு நாம் சொல்லுகின்ற கருத்துக்கள், இதைப் பற்றி எடுத்துச் சொல்லும் நியாயங்கள் புதிதானவை அல்ல என்பதும், பிரதம அமைச்சரவர்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பதும் அதற்காக எந்தெந்த வழிமுறைகளை உலக நியதிப்படி செய்ய முடியுமோ அப்படி அவர்கள் செய்ய

விரும்புகிறார்கள் என்பதும், அதைச் செய்ய அவர்கள் துணிகிறார்கள் என்பதும் உண்மையாக இருக்கும், இருக்கிறது. என்றாலும், அவர்களுக்கும் ஒரு பக்கபலத்தை உண்டாக்கும் வகையில் இது ஏதோ காழ்ப்புணர்ச்சியின் விளைவாக இலங்கை மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்க முற்படுகிறது என்ற அவப்பெயர் அதற்கு வராமல் தமிழ் மக்களுடைய, தமிழர்களுடைய உணர்வை, இந்த உணர்ச்சியை உலக மக்கள் புரிந்துகொண்டு எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிந்து, அதன் விளைவு மத்திய அரசின் நடவடிக்கை என்கிற அளவிற்கு நாம் காரணமாக இருந்து நடத்திக் காட்ட வேண்டுமென்று விரும்புகின்ற காரணத்தால் தமிழக அரசின் சார்பாக உங்களை வேண்டிக் கொள்வது, தொடர்ச்சியான உங்களுடைய இந்தப் பேச்சுகளிலே வந்த கருத்துக்கள் அத்தனையும் நீங்கள் எவ்வளவு நல்ல உணர்வோடு இருக்கிறீர்களோ அதைத் தொடர்ந்து இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும் உங்களோடு இணைந்து எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கும் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைத்து இந்த தீர்மானத்தை முன்னவரவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கேள்விக்கே இடமில்லாமல், உங்கள் கருத்துக்களை வெளியிட்டதற்காக நன்றி கூறி, இதை ஒருமித்து நிறைவேற்றித் தரும்படி ஏதோ மரபின்படி என்று வைத்துக் கொள்வோம். நான், பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நான் வேண்டுகோள்விட்டவாறு நாம் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க, முதல் கட்டமாக நாம் அனைத்துக் கட்சிகளும் ஒன்று கூடி ஒரு ஹர்த்தாலை நடத்தி, கூட்டங்கள் நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைப்போம் என்பதையும் இங்கே எடுத்துச் சொல்லி, அதற்கு ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கைவாழ் தமிழர்களுடைய கண்ணீருக்கு நம்முடைய கண்ணீரையும் காணிக்கையாக்கி, அந்தத் தமிழர்களுடைய வாழ்க்கை வளம் பெறுவதற்கு நாம் ஒன்றுகூடி என்ன செய்யவேண்டும் என்று முடிவெடுக்கிறோமோ அதை இந்த அரசு செய்யும் என்பதை மீண்டும் உறுதி கூறி அமைகிறேன்.

வணக்கம்!

21.08.1981 அன்று இலங்கைத் தமிழர் நலனுக்கான அரசினர் தனித்தீர்மானத்தின்மீது ஆற்றிய உரை.

ஒன்றுபடுவோம், நாட்டுக்கு நலம் புரிவோம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆளுநர் உரையின்மீது இங்கே இதுவரையில் ஏறத்தாழ 49 பேர்கள் அவரவர்களுடைய கட்சியின் கொள்கையைத் தெளிவுபடுத்தி, ஆளுநர் உரையிலே எதை அவர்கள் எதிர்பார்த்தார்கள் என்று குறிப்பிடுகிறார்களோ, அதைப்பற்றி திருப்திகரமாக எந்தக் கருத்தும் இல்லையென்று அவர்கள் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

அதைப்போலவே, வரவேற்று, அது நல்ல அறிக்கைதான், சொல்லவேண்டிய முறையில் சுருக்கமாக எடுத்துக் கூறி, நிதி நிலை அறிக்கையின்போது தெளிவுபடுத்த வேண்டியவைகளைத் தெளிவுபடுத்த அப்போது வாய்ப்பு கிடைக்கிறது என்ற கருத்தையும் அடிப்படையாகக் கொண்டு, மேலெழுந்தவாரியாக கோடிட்டு காட்டப்பட்டிருக்கிறது என்பதை வைத்து அவரவர்களுடைய கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

இத்தகைய கருத்துக்களை வெளியிடுகின்ற நேரத்தில் யார், யார் எந்தக் கோணத்தில் இருந்து கருத்துக்களை வெளியிட்டிருப்பார்கள் அல்லது வெளியிட முயன்று இருக்கிறார்கள் என்பதை நான் அறிந்த வகையில் நான் தரம் பிரித்து, அவர்களுடைய உயர்வு, தாழ்வு என்று அர்த்தமல்ல அவர்களுடைய நிலைமைகளைப்பற்றி நான் பிரித்துப்பார்த்து, அவர்களுக்குப் பதில் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஆளுநர் உரையில் இந்தத் தமிழ் மாநிலத்தில் சென்ற ஆண்டு நிகழ்ந்தவை பற்றிய விவரங்கள் அனைத்தும் வெளியிடப்படவோ அல்லது என்ன என்ன செய்யப்போகிறோம் என்பதைத் தெளிவாக புள்ளி விவரங்களோடு சேர்த்து வெளியிடவோ இயலாது என்பதை இங்கு உள்ளவர்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். ஆனால், பொதுவாக ஓர் ஆளுநர் அறிக்கையைப் பெற்று, படித்த பிறகு எதிர் பார்க்கின்றவர்கள் எந்த எந்த கோணத்திலிருந்து பார்க்கிறார்கள் என்று நான் பிரித்துப் பார்க்கும்போது இங்கே ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற கட்சியைச் சேர்ந்தவர்களிடமிருந்து அறிக்கைக்கு பாராட்டும் நன்றியும் வருவதோடு, தங்களது தொகுதிக்கு மேலும், என்னென்ன தேவை என்று விரும்புகிறார்களோ, அவற்றைச் சுட்டிக்காட்டுவதும் அவர்களுடைய நோக்கமாக அமைந்துவிடுகிறது என்பதை நாம் அறிவோம்.

அதுபோலவே, இங்கே இந்த ஆளுநர் அறிக்கையிலே பேசியவர்களில் ஒரு தரப்பினர் ஒரு கருத்தை ஒட்டுமொத்தமாக பல்வேறு வகையில் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்ற வாய்ப்பில் அந்தக் கொள்கையை வெளியிட்டு

இருக்கிறார்கள். தமிழக மக்களுக்கு எப்படியாவது நன்மைகள் கிடைக்கவேண்டும், நல்லது நடக்கவேண்டும், இந்த நாட்டில் அமைதி வேண்டும், எல்லோரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும், எந்தெந்த தொகுதியிலிருந்து அவர்கள் வந்திருந்தாலும் ஒட்டு மொத்தமாகத் தமிழ்நாடு முழுவதற்கும் தேவையான நல்ல காரியங்களைச் சிக்கலின்றி, குறையின்றி நடத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு கருத்துக்களை எதிர்கட்சியின் வரிசையிலே இருந்தாலும் அவர்கள் கூட எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அதுபோலவே இன்னொரு தரப்பினர் கொள்கைகளை நிறைவேற்றுகின்ற வகையிலே அரசு சரிவர காரியங்களைச் செய்துவிட்டிருந்தாலும்கூட அதிலே தங்களுடைய கொள்கைகளையும் இணைத்துச் செயல்படவில்லையே என்கிற குறையின் காரணமாக தங்களுடைய கொள்கைகளையும் அதிலே இணைக்கின்ற சூழ்நிலையை உருவாக்க முடியுமா என்ற நோக்கத்தோடு நல்லதை வரவேற்றும், அவர்களுக்கு வேண்டியவற்றை வற்புறுத்தியும், கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

இன்னொரு தரப்பினரை எடுத்துக்கொண்டால் அவர்களிலே ஒரு சிலர் ஏனோ குற்றத்தை மட்டுமே காணவேண்டும் என்று கருதி குறை இல்லாத இடத்திலேகூட குறையைக் காண முனைந்து குற்றச்சாட்டுக்களை அள்ளி வீசியிருப்பதை நாம் கேட்டுக்கொண்டுதான் இருந்தோம். அதிலே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறையிலே பணியாற்றுகின்ற பேராசிரியருக்கு ஒரு வகையிலே நன்றி கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். எந்தக் குற்றச்சாட்டை அவர்கள் சொன்னாலும், எங்களைப் பற்றி குறை கூறுகின்ற அந்த நேரத்திலேகூட சிரித்துக்கொண்டே அவற்றை எடுத்துச் சொல்லும் அந்தப் பாங்கினை நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், இங்கே இருக்கின்ற மாமன்றத்தினர் அத்தனை பேரும் இந்த அரசைப் பாராட்டத்தான் வேண்டும் என்று நான் எண்ணுவேனேயானால், அது எங்களையே நாங்கள் புரிந்து கொள்ளாதவர்களாகத்தான் அமையும் என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால், அவர்களுடைய எண்ணங்களை வெளியிடுவதற்கும் தங்களது தொகுதிகளிலே மக்களுக்கு வாக்குறுதிகள் அளித்ததை நிறைவேற்றுவதற்காகவும் பொதுவாகத் தங்கள் கட்சியின் கொள்கைகளை வெளியிடுவதற்கும் இதைவிட வேறு வாய்ப்பு இல்லை என்கின்ற காரணத்தாலும் இங்கே குறிப்பேட்டில் பதிவு செய்வதற்காகவும் கூட சிலவற்றைச் சொல்கிறார்கள் என்பதிலே நாங்கள் அக்கறை காட்டுகிறோமே தவிர அலட்சியப்படுத்தவில்லை. அதிலேகூட தாங்கள் புரிந்து கொள்வதற்கு ஏதாவது கிடைக்குமா என்று தான் பார்க்கிறோமே தவிர அவற்றை அலட்சியப்படுத்தவோ, அக்கறை காட்டாமல் ஒதுக்கித் தள்ளிவிடுவதற்கோ நாங்கள் தயாராக இல்லை என்பதை இங்கே சொல்வது என்னுடைய கடமை.

பொதுவாக இங்கே பேசியவர்கள் நாங்கள் ஆட்சிக்கு வரும்போது தேர்தல் நேரத்திலே நாங்கள் வெளியிட்ட அறிக்கையிலே என்னென்ன குறிப்பிட்டோமோ

அவற்றை நாங்கள் செய்யாமல் மக்களை ஏமாற்றுகிறோம் என்கிற எண்ணத்தை வெளியிலே சொல்வதோடு மட்டுமல்லாமல், இங்கே வேறு வகையான வார்த்தைகளில் வெளியிட்டிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டி இருக்கின்றது. அந்தவகையில் இங்கே தேர்தல் நேரத்திலே, தேர்தல் அறிக்கையிலே என்ன சொன்னோம் என்பதையும் அந்த தேர்தல் அறிக்கையிலே நாங்கள் சொன்னதை நாங்கள் எப்படி ஏறத்தாழ இந்த இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்ற முயன்று வருகிறோம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

1980ஆம் ஆண்டு நாங்கள் அளித்த தேர்தல் அறிக்கையில் நாங்கள் என்ன சொன்னோமோ, அதை நாங்கள் எப்படி பயன்படுத்துகின்றோம். எப்படி நிறைவேற்ற முயற்சிக்கின்றோம் என்பதை ஒரு வகையில் நான் வெளியிட முயன்று, அது இங்கே இருக்கக்கூடிய மாமன்ற உறுப்பினர்களுக்கு நியாயம்தான் என்று படுமேயானால், அதுவே எங்களுக்கு முழு மன நிறைவைத்தரக்கூடிய ஒன்றாகும் என்று நாங்கள் கருதுவோம். தேர்தல் நேரத்திலே என்னென்ன வாக்குகளை கொடுத்தோம் என்ற வகையில், சிலவற்றை நான் குறிப்பிட்டாக வேண்டும். விவசாயிகளை நாங்கள் கொடுமைப்படுத்துகிறோம் என்றும், விவசாயிகளை நாங்கள் வீணாக கைது செய்கிறோம் என்றும் பல்வேறாக குற்றம் சாட்டுவதோடு மட்டுமல்லாமல், குறைகூறும் அன்பர்களுக்கு, விவசாயிகளுக்கு என்ன செய்தோம், விவசாயத்திற்காக என்னென்ன திட்டங்களை தீட்டினோம் என்று சொல்வதன் மூலமாகத்தான், வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றவில்லை என்று கூறுகிற அன்பர்களுடைய கருத்தை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அந்தக் கருத்திற்கு பதில் தருவதற்காக விவாதத்திற்கு அதை எடுத்துக் கொள்ளவிரும்புகிறேன்.

நாங்கள் குறிப்பிட்டிருந்தது, விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், இடு பொருள்கள் குறைந்த விலையில் கிடைத்து, விவசாயிகளுக்கு ஆதார விலையை முன்கூட்டியே அறியவும், விவசாய சங்கப் பிரநிதிகளின் துணைக் கொண்டு, நடுவர் குழு மேற்காள்ளப்படும் என்று குறிப்பிட்டிருந்தோம். இன்னொரு இடத்தில், விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு குழு அமைத்து. அதன் தலைவருக்கு ஏறக்குறைய அமைச்சருக்கு உரிய உரிமையோடு பதவி அளித்து, அனைத்துக் கட்சி விவசாய பிரதிநிதிகளையும். அந்தக் குழுவிலே அங்கம் வகிக்கச் செய்து அந்தப் பரிந்துரைகளை ஏற்று செயலாற்ற நாங்கள் முனைவோம் என்று கூறியிருந்தோம். அதையும் இத்துடன் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

வேளாண்மை உற்பத்திப் பொருள்களுக்கு நியாயவிலை கொடுப்பது என்பதிலே, நாங்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது போல இந்தியப் பேரரசு நிர்ணயித்த விலையைவிட, அதிகமான விலையை நாங்கள் கொடுத்துக் கொண்டு வந்தோம் என்பதை இந்த மன்றம் அறியும். இந்த ஆண்டு ஏனோ அதை

உயர்த்தவில்லை என்ற பிரச்சினை எழுந்தபோது, மாண்புமிகு உமாநாத் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். மத்திய அரசு சொன்னாலும், நீங்கள் ஏன் அதை உயர்த்திக் கொடுக்கக் கூடாது? ஏன் அதை உயர்த்திக் கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். அதற்கு மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை கூறினார்கள். அதாவது, நாங்கள் அதை மீறி செயல்படவில்லை என்று சுருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். உடனே அவர்களுக்கே உரித்தான வகையில் மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சிரித்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். அவருக்குத் தேவை, இந்தியப் பேரரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மீறி செயல்பட அஞ்சுகிறது என்ற அப்படிப்பட்ட விளக்கம் கிடைக்குமா என்பது. அப்படி அவர் காத்திருந்த நிலையில் உணவு அமைச்சரின் ஒரு சுருக்கமான பதிலை வைத்துக் கொண்டு, அதன் முழு விளக்கத்தையும் எண்ணி பார்க்காமல், ஏதோ இந்த அரசு அச்சப்பட்டு, அவர்களுடைய கட்டளைக்கு அடங்கி நடப்பது போல, அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்பது போலச் சிரித்தார்கள். இன்னும் சிலரும் சிரித்தார்கள். எப்படியாவது சிரிப்பு ஏற்பட்டால் எனக்கு மகிழ்ச்சிதான்.

ஆனால், அதற்கு முன்னால் ஒன்றைச் சிந்திக்கவேண்டும். இதை ‘பிளாக் லிஸ்ட்டி’ல் சேர்த்து விடுவோம் என்ற அந்தப் பின்னணியை தயவுசெய்து கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ரிசர்வ் வங்கி எப்படிப்பட்ட கட்டளையிடுகிறது, மறுக்கிறது என்பதோடு அப்படிப்பட்ட கருப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டால் வெவ்வேறு காரியங்கள், மற்ற உதவிகள் இவைகளுக்கெல்லாம் தரக்கூடிய பணம் அதோடு நிறுத்தப்பட்டுவிடும் என்பதையும், இங்கே என்னென்ன திட்டங்களை அதிகப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறீர்களோ, நாங்களும் செய்யவேண்டுமென்று விரும்புகிறமோ அவைகள் எதையுமே செய்ய முடியாமல்கூட ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுவிடும் என்ற நிலைமையில் கூடுமானவரையில் இந்தியப்பேரரசோடு சுமுகமான வகையில் மீண்டும், மீண்டும் கேட்டு எழுதி பதில் பெற்று, அவர்களுக்கு விளக்கம் தந்து அவர்கள் கருத்துக்களை மாற்றிக்கொள்ளச் செய்ய நாங்கள் விரும்புகிறோமே தவிர, வேண்டும் என்றே ஒரு சிக்கலான நிலைமையை ஏற்படுத்தி அதனால் நான் போடுகின்ற திட்டங்கள் அனைத்தையும் தடைபடுத்திவிட கூடாதே என்ற எண்ணம் தானே தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதை மாண்புமிகு திரு. உமாநாத் அவர்களுக்கும் அவர்களைப் போன்ற கருத்துக்களைக் கொண்டவர்களுக்கும் பணிவான என்னுடைய விளக்கத்தைத் தர விரும்புகிறேன். இங்கே விலையை உயர்த்தியதோடு மட்டுமல்ல, நாங்கள் அதிகமாகக் கொடுக்கவேண்டுமென்று மைய அரசுக்கு சிபாரிசு செய்தோம். வற்புறுத்தினோம். இயலாது என்று கூறியது மட்டுமல்ல, உயர்த்தக்கூடாது என்றும் இறுதியாக பதில் வந்தது. இங்கே அமைக்கப்பட்டிருக்கிற உச்சகட்ட விவசாயப் பிரதிநிதிகளைக் கொண்ட குழுவினர் எங்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தும்கூட அவர்கள் சொல்லியும் நீங்கள் செய்யவில்லையே என்று கேட்டார்கள். அந்தக் கட்சி எங்கள் கட்சிதான் என்றாலும் இந்தக் கட்சி மாத்திரம் ஏன் அவர்கள் சொல்லித்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. நாங்களும் அதைப்பற்றிச் சிந்தித்து,

147 என்று நிர்ணயிக்க வேண்டும் என்று நாம் மத்திய அரசுக்கு எழுதினோம். ஆகவே, அதிகமாகக் கோடுக்க வேண்டும், போதுமான அளவில் உற்பத்தியாளர்களுக்குப் பணம் சேரவேண்டும், கிடைக்க வேண்டும் என்பதில் இந்த அரசுக்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. ஆனால், தன்னிச்சைப்படி செய்யமுடியாத சூழ்நிலை. நாம் திட்டங்கள் தீட்டுவது என்றாலும் மத்திய அரசினுடைய ஒப்புதல் பெற வேண்டியிருக்கிறது. ஒட்டுமொத்தமாக ஒரு ஆண்டுக்கு எவ்வளவு செலவு செய்யலாம் என்றாலும் கூட மத்திய அரசினுடைய திட்டக் குழுவிடம் நாம் அனுமதி கேட்கவேண்டியிருக்கிறது. இவைகளையெல்லாம் சிந்திந்துப் பார்த்தால் இந்த அரசு என்னென்ன செய்யமுடியமோ அந்த வகையில் அந்தளவிற்கு இந்த அரசு தன் கடமையைச் செய்திருக்கிறது என்பதையும் தேர்தல் நேரத்தில் என்ன சொன்னோமோ அதைச் செய்ய நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம், செய்து காட்டினோம் என்பதை, தயவுசெய்து மாமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொண்டிருந்தாலும் மறந்துவிடமாட்டீர்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்னொன்று இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது, இது சம்மந்தப்பட்ட வரையில் மிகவும் அவசியம் என்று நான் கருதுகிறேன். குழுக்கள் ஆங்காங்கே அமைக்கப்படவேண்டும். விலை நிர்ணயிக்க வேண்டிய உரிமை அந்த விவசாயிகள் உற்பத்தி செய்பவர்களுக்கு இருக்கவேண்டும் என்ற கருத்து நம் யாருக்கும் வேறுபட்ட கருத்தல்லயென்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கு முன் நமக்கிருக்கிற வசதி வாய்ப்புக்களை பயன்படுத்த வேண்டியிருப்பினும், மக்களுடைய ஒத்துழைப்போடு, விவசாயிகள் துணையோடு, ஆதரவோடு அந்தந்தச் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குழுக்களை ஆங்காங்கே நாம் நியமித்து ஆவன செய்ய முற்பட்டோம் என்பதை இந்த மாமன்றம் மறந்துவிடாது. அந்த முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். அதில் பங்குகொண்டிருக்கிறார்கள். அதேபோல், தன்னிறைவுத் திட்டத்திலும் அதைச் சொல்லியிருக்கிறோம். கிராமப்புற மேம்பாட்டுத் திட்டம் என்று சொல்லி தேர்தல் அறிக்கையில் நாங்கள் குறிப்பிட்டதற்காகத்தான் அதைத் தன்னிறைவுத் திட்டம் என்று கொண்டுவந்து குடிநீர் அவசியம் என்கிற வகையில், பாதை வசதி வேண்டுமென்கிற வகையில், இவற்றையெல்லாம் நாம் நிறைவேற்றுவதற்கு முன்வந்து திட்டம் தீட்டி அதை நிறைவேற்றுகிறோமே தவிர அந்தத் திட்டத்தில் எங்கேயாவது தவறுகள் நடந்திருக்குமானால் பேராசிரியர் அவர்களும் மற்றும் உங்களைப் போன்ற கட்சித் தலைவர்களும் குறிப்பிட்டது போல் அதை நாங்கள் அலட்சியப்படுத்தவில்லை.

தவறுகளைத் திருத்த வேண்டுமென்பதிலே எங்களுக்கு ஏராளமான ஆர்வம், அக்கறை இருக்கிறது. எங்கே தவறுகள் நடக்கிறது என்று தெரிவித்தால், அங்கே அதற்கான நடவடிக்கையை எடுக்கிறோம். முன்பே இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டதுபோல், இன்னொன்றுக்கும் நாங்கள் உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். படித்து, வேலையில்லாது இருப்பவர்கள் யாராவது ஒரு கூட்டுறவு சொசைட்டி அமைப்பைப்போல் ஏற்படுத்திக்கொண்டு, அவர்கள் இந்த வேலைகளை

நடைமுறைப்படுத்துவதற்கு முன்வந்து, அரசுக்கு விண்ணப்பம் செய்தால், அதிகாரிகளிடத்தில் கேட்டால், அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்றுகூட நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். அவர்களுக்குப் பணம் இல்லை என்றால், அரசு கடன் கொடுத்தாவது அவர்களுக்கு அந்தப் பணிகளைக் கொடுக்க வேண்டும் என்றும் நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். இது யாருக்கோ நியமனம் அளிக்கவேண்டும். அப்படி நியமனத்தின் மூலம் இந்தப் பணிகளுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்கிற நோக்கத்தின் அடிப்படையாக இல்லை என்பதையும் தெளிவாக அந்த எண்ணத்திலே செயல்படுகிறோம் என்பதை நான் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு விளக்குவதற்காக அல்ல, உங்களுக்குத் தெரிந்ததுதான், முன்பே சொன்னதுதான் என்றாலும், மீண்டும் அதை நீங்கள் தயவுசெய்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்ன தவறுகள் நடந்து விட்டன என்பதை எடுத்துச் சொல்லுங்கள். நாங்கள் அதற்கும் மாற்றுவழி கண்டுபிடிக்க முற்படுகிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

இன்னொன்றையும் கூறுகிறேன். யாராவது அப்படிப்பட்டவர்கள் இருந்தால், இவ்வளவு ரூபாய்க்குச் சொந்தக்காரர்கள், இவ்வளவு சொத்து இருக்கிறது, 10,000 ரூபாய் இருக்கிறது. அதை முன்பணமாகக் கட்டுவார் அல்லது அதற்குத் தகுந்தவர் என்று மற்றவர் சிபாரிசு செய்ய வேண்டுமென்று இருந்ததைக் கூட நாங்கள் மாற்றி, அதுகூட தேவையில்லை என்று சொல்லியிருக்கிறோம். படித்த இளைஞர்கள், பட்டம் பெற்றவர்கள் அவர்களுக்குத் தெளிவாக இந்தக் காரியத்தில் ஆக்கமும், ஊக்கமும் இருந்தால், அந்த உறுதி அவர்களுக்கு இருக்குமானால், அப்படிப்பட்டவர்களை இன்னார் என்று சொன்னால், அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுத்து உதவ வேண்டுமென்று நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம். ஆகவே, இதிலே எங்களுக்கு வேறு வகையான எண்ணமோ, நோக்கமோ. எதுவுமே இல்லை.

இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஏதோ, யாருக்கோ நலனைச் செய்ய வேண்டுமென்பதற்காக, தன்னிறைவுத் திட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினருக்கு அதிகமான அந்த வாய்ப்பை, அந்தப் பணிகளை செய்யக்கூடிய உரிமையை கொடுத்துவிட்டோம் என்று இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தவறான தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்பதோடு, அதற்காக என்னிடத்திலே இருக்கின்ற புள்ளி விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், பட்ஜெட் கூட்டத் தொடரிலே இதற்கு அதிகமான புள்ளிவிவரங்களை, அந்தந்தப் பிரச்சினைகளின் மீது நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இருப்பினும், இங்கே ஒன்றிரண்டைப் படித்துக்காட்ட விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணிகளை முதலில் எடுத்துக்கொள்வோம். வடஆற்காடு மாவட்டத்தில் ஒப்பந்தக்காரர்களுக்கு அளிக்கப்பட்ட பணிகளைப் பற்றிய புள்ளி விவரங்களை முழுவதும் படிக்க விரும்பவில்லை என்றாலும், ஒன்று இரண்டைப் பற்றி மட்டும்

நான் குறிப்பிட விரும்புகிறேன். வேண்டுமானால், என்னிடத்தில் உள்ள குறிப்புகள் அனைத்தையும் அச்சிட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் அனுப்புவதற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஒப்பந்தக்காரர்கள் எண்ணிக்கை 1,771. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் 695. பணிகளின் எண்ணிக்கை 185. இதை நான் இங்கே சொல்வதற்குக் காரணம், நாங்கள் ஆளைப் பார்த்துக் கொடுக்கவில்லை.

தகுதியைப் பார்த்து அங்கிருக்கும் அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இதை நான் இங்கே குறிப்பிடும்போது ஏதோ, யாரையோ குறை சொல்வதற்காக இந்தப் புள்ளி விவரத்தைத் தருகிறேன் என்று கருதக்கூடாது. சில அதிகாரிகள் தவறுகள் செய்கிறார்கள் என்பதற்காக எல்லா அதிகாரிகளும் தவறு செய்கிறார்கள் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காவும், உண்மைகளைச் சொல்லுவதற்காகவும் கூறுகிறேன்.

விளக்கத்தை வேண்டுமென்று கேட்பார்களானால், இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள் விளக்கம் முழுவதையும் தரத் தயாராக இருக்கிறேன். ஒன்றை நான் குறிப்பிடவேண்டும். இதற்கு முன்னால் அவர்கள் என்னென்ன பணிகளில் ஈடுபட்டார்கள், எந்தெந்தப் பணிகளை எடுத்து அவர்கள் பணியாற்றியிருக்கிறார்கள் என்ற குறிப்புகள் இருக்கின்றன. ஒரு வட்டத்தில் நான் சென்று பார்த்தேன். அந்தப் பாதையைப் பார்த்துவிட்டு என்னென்ன சொன்னேன் என்பது தெரியுமென்று மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுகூட ஒருவருடைய ஏற்பாட்டில்தான் நடந்திருக்கிறது.

இப்படி ஒவ்வொன்றுக்கும் நான் விளக்கம் சொல்ல ஆரம்பித்தால் எப்போது பேச்சை முடிப்பது என்று தெரியவில்லை. கேட்பதற்குப் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு இருக்கிறது. விவரங்களைத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். தரத் தயாராக இருக்கிறேன்.

இதை அவர் தாங்கிக் கொள்ளமாட்டார் என்பது எனக்குத் தெரியும். நான் இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பொதுப்பணித்துறையில் அந்த மாவட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளின் எண்ணிக்கை 371, அதிலே தி.மு.க ஒப்பந்தக்காரர்கள்களின் எண்ணிக்கை 145. இவர்கள் யார் யார் என்பதை படித்துச் சொல்ல விரும்புகிறேன்.

தன்னிறைவுத் திட்டப் பணிகளில் ஒப்பந்தக்காரர்கள் எண்ணிக்கை கோவை மாவட்டத்தில் தி.மு.க. 37, அண்ணா தி.மு.க. 93, இந்திரா காங்கிரஸ் 67, இந்திய கம்யூனிஸ்ட் 6, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 2, ஜனதா 10, மற்றவர்கள் 154.

நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் எத்தனை பேர்கள் என்பதைப் பார்க்கவேண்டும். இது எங்களுடைய கட்சி என்பதற்காக நான் மறைக்கவில்லை. எங்களுக்குக் கிடைத்திருக்கிற அந்தந்தத் தகவல்களை இங்கே நான் வெளியிடுகிறேன். நீங்கள் கேட்ட கேள்விக்கு விவரமான பதில் உங்களுக்கு தரப்படும்.

நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். முன்னால் அவர்கள் அந்தத் தகுதியிலே வந்து அந்த இடத்தைப் பெறுகிறார்கள் என்பது அந்த உண்மையான விளக்கம் ஆகும். தரத்தை மாத்திரம் வைத்துப் பார்க்கிறபோது எத்தனை கான்ட்ராக்டர்கள் அவர்கள் செய்திருக்கிறார்கள், தகுதியுள்ளவர்களா என்று பார்க்கிறார்கள்.

கேட்டதற்காக 4, 5 பேர்களை அனுப்பி இருக்கிறார்கள். திரு. முத்தியாலு, தண்டராம்பட்டு, திரு. முத்துகிருஷ்ணன், தண்டராம்பட்டு, திரு.சி. கிருஷ்ணன், கீழ்பெண்ணாத்தூர், திரு.மணி, தென்காமியனூர், திரு. கனகநாதன், தண்டராம்பட்டு. அதுபோல் தருகிறார்கள். இதுபோல் உள்ளவற்றை நான் பெற்று, இந்த மாமன்றத்திலே வைக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுக்காக, நீங்கள் கேட்டதற்காக நான் படிக்காமல் இருந்தாலும், இந்த அரசு உண்மையிலேயே அதிகாரிகளிடம் ஒப்படைத்து, அதிகாரிகள் எது சரி என்று கருதுகிறார்களோ, அந்த அளவுக்கு இந்தப் பணியை ஒப்படைக்கிறார்களே தவிர இதிலே யாருடைய வற்புறுத்தலும், இவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டுமென்ற பரிந்துரை செய்வதும் இல்லையென்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், இந்தப் பணிகளுக்காக, அவைகளை ஏற்றுக்கொண்டவர்கள், யார், யார் அந்தப் பணிகளைச் செய்வதாகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார்களோ அவர்கள் எப்படிப்பட்ட தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேராசியர் அவர்கள் இங்கே தெளிவாகக் கூறினார்கள், மற்றவர்களும் இங்கே கூறியிருக்கிறார்கள். பணம் செலவழிக்கப்படுகிறது, அது பொது மக்களுக்குப் போய் சேரவில்லை என்று பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த இடங்களில் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்பதற்கு, உதாரணமாக, தென்ஆற்காடு மாவட்டத்திலே மேல் நிலை நீர்த்தொட்டி கட்டப்பட்டு திறப்பு விழாவும் நடத்தப்பட்டது. அது நடந்து ஒன்றிரண்டு வாரத்திற்குள் அது இடிந்து விழுந்தது. உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து, அதைக் கட்டியவர்மீது வழக்குப் போடப்பட்டு இருக்கிறது. அவர் அதை மீண்டும் கட்டிக் கொடுக்க முன்வந்து இந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, தெரிந்த இடங்களில் அதை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதில் இந்த அரசு எவ்வளவு கவனம் செலுத்துகிறது என்பதை இங்கே எடுத்துக்காட்டுவதற்குத் தான் ஒரே ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிட்டேன். இதுபோல், பல நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிட்டுள்ளேன். பல்வேறு தரப்பட்டவர்கள் ஆங்காங்கே தவறு செய்கிறார்கள் செய்துவிட்டு அரசின் மீது பழி சுமத்தப்படுகிறது என்பதையும் நான் குறிப்பிடத்தான் வேண்டியிருக்கிறது.

ஆகவே, இவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது அதிகாரிகள் இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முன்வர வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும் ஆகும், என்னுடைய அமைச்சரவையும் அதைத்தான் விரும்புகிறது என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். அதுதான் எங்களுடைய

பொறுப்பு என்பதை உணர்ந்து, அதைத் தட்டிக் கழிக்காமல் நிறைவேற்றித் தருகிறோம் என்ற உறுதியையும்கூட சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த ஆண்டு அறிக்கையில், முதல் ஆண்டு நடந்த நிகழ்ச்சிகளை வைத்துத்தான் இதை நாம் மதிப்பிட வேண்டியிருக்கிறது என்று பேராசிரியர் அவர்களும் குறிப்பிட்டார்கள், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் ஒன்றைக் கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். எங்கள் தேர்தல் அறிக்கை என்னென்ன சொல்லிற்று என்பதையும், என்ன உறுதி கொடுத்தோம் என்பதையும் என்னோடு சேர்ந்து தேர்தலிலே ஒத்துழைத்தவர்களுக்கு, அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். அதைவிட, எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் நாங்கள் செய்யும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதற்காகவாவது இதைக் கண்டிப்பாக அவர்கள் படித்துத் தெரிந்து வைத்திருப்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அந்த வகையில், ஒவ்வொன்றையும் நான் குறிப்பிட்டுச் சொன்னால், அந்த அளவிற்குத் தன்னிறைவுத் திட்டம் என்பது நாங்கள் கொடுத்த வாக்குறுதியினுடைய அந்த ஒன்பது அம்சத் திட்டம் என்று கேட்டார்களே நாராயணசாமி நாயுடு விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள். நாங்கள் அதிலே 10 என்ற எண்ணிக்கையிலே சேர்த்து நாங்கள் என்னென்ன சொல்லியிருக்கிறோமோ அவைகள் அத்தனையையும் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறோம் என்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதிலே நீர்ப்பாசன வசதியைப்பற்றி நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம். அதற்காகப் பல்வேறு மாவட்டங்களில் நிலவிவரும் பாசனக் கட்டண விகிதங்களைச் சீரமைக்கும் வகையில் 1977ஆம் ஆண்டு அரசால் ஒரு குழு அமைக்கப்பட்டது, மாற்றுப் பயிர் மீது விதிக்கப்படும் தண்டத் தீர்வையை ரத்து செய்வது பற்றியும் தனது ஆலோசனையைக் கூறுமாறு இக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. இக்குழு சமீபத்தில் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கையை அமைச்சரவை விவாதித்து முடிவு செய்வதற்காக வைக்கப்பட்டுள்ளது. அதை வரும் ஆண்டில் எப்படி நடைமுறைப் படுத்தலாம் என்பதை நிர்ணயித்து அதை அமலுக்குக் கொண்டு வருவோம் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இடையிலே ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். எந்தவொரு அரசியல் கட்சியுமே தேர்தல் முடிந்து ஆட்சிக்கு வந்த அந்த வருஷமே தான் வாக்குறுதி கொடுத்த அத்தனையையும் நிறைவேற்றிவிடமுடியும் என்று இங்கே யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். எதிர்பார்க்க மாட்டீர்கள். அப்படி குறை சொல்லவும் நீங்கள் முன் வரமாட்டீர்கள் என்பதிலே, உங்கள் அனுபவத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது! அந்த நான்கைந்து ஆண்டுகளில் எந்த நடவடிக்கையுமே எடுக்காமல் இருந்தால் அந்தப் பிரச்சினை வரும். "நீங்கள் சொன்னீர்கள், எதையாவது தொடங்கினீர்களா?" என்றால் அது நியாயம்.

சென்ற ஆண்டு நாங்கள் ஆரம்பிப்போம் என்று சொன்ன பல்கலைக் கழகத்தை நாங்கள் ஆரம்பித்தோம். திருச்சியிலேயும், கோவையிலேயும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால், ஆரம்பித்தோம். உலகத் தமிழ்ச் சங்கம் எங்கே என்று பேராசிரியர்கள் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் தமிழ்ப் பற்று கொண்டவர்கள் அதை அவர்களால் கேட்காமல் இருக்க முடியாது. நான் அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், மதுரையில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டது என்பதையும், விரைவில் தொடக்க விழா நடைபெறும் என்பதையும், இங்கே நான் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இடம் தேடுவதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டது. ஊருக்கு உள்ளேயோ அதாவது நகரத்துக்கு உள்ளே அமைப்பதா என்பதைச் சிந்தித்து, அதற்காக அமைச்சர்களையும் அணுகி அவர்களைப் பார்க்கும்படி செய்து, மாவட்ட ஆட்சித்தலைவரையும் அங்கே போய்ப் பார்க்கச்செய்து அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கச் செய்திருக்கிறோம். ஆகவே, அது நிச்சயமாக நடைபெறும். அப்படிச் சொன்னதை நாங்கள் நிறைவேற்றியே தீருவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதைத் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருந்தோமா என்றால் இல்லை தன்னிறைவுத் திட்டம் என்று சொன்னோமா என்றால் இல்லை. ஆனால் கிராம மேம்பாடு என்று சொன்னோம். அந்த மேம்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரில் நாங்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். இது போன்றவற்றை இங்கே நான் குறிப்பிடும்பொழுது விவசாயிகளுக்காக என்னென்ன செய்தோம் என்பதைச் சொல்லும் பொழுது, படி அரிசி எங்கே என்று கேட்கிறார்கள்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு என்னென்ன செய்துள்ளோம் என்பதை ஆளுநர் உரையிலே விரிவாக எடுத்துக் கூற முடியாவிட்டாலும், இங்கே கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு பதில் சொல்லுகின்ற முறையில் அதற்கு விளக்கம் தருவதற்கு எனக்கு வாய்ப்பிருக்கின்ற காரணத்தால், அதை நான் பயன்படுத்திக்கொள்வதில் தவறில்லை, என்று கருதுகிறேன். நாங்கள் தேர்தலில் மக்களைச் சந்தித்தபோது சில கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து, எதை எதை நாங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னோமோ, அவற்றை எப்படி நடைமுறைப்படுத்துகிறோம் என்பதை எடுத்துக் கூற வேண்டிய மிகப் பெரிய கடமை எனக்கிருக்கிறது. என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இங்கே நான் தொடர்ந்து பேசத் தொடங்குகிற போது, சில மாமன்ற உறுப்பினர்களுடைய சந்தேகங்களுக்கு பதில் சொல்லுகின்ற வாய்ப்பில் மேலும், சில தகவல்களை தருகின்ற நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நன்றி கூறிய அந்த உணர்வோடு, இன்று நான் ஒன்றைத் தொடரலாம் என்று கருதுகிறேன்.

தன்னிறைவுத் திட்டம் என்பதைப் பற்றி நாங்கள் அதிகமாக விளம்பரம் செய்கிறோம் என்றோ அல்லது அதைச் சொல்லி மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறோம்

என்றோ யாருக்காவது தவறான செய்தி வந்திருக்குமேயானால் அது உண்மைக்கு மாறானது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் கிராமப்புற பொருளாதாரம், கிராம மேம்பாடு, கிராமத்திற்கென புதிய அவசர நிலைமைகளில் செய்ய வேண்டிய காரியம் என்ற வகையில் மூன்றாகப் பிரித்து, நாங்கள் தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டு, அதை நடைமுறைப் படுத்த முயற்சிக்கிறோம். நிதி நிலை எந்த அளவிற்கு அனுமதித்ததோ, அந்த அளவிற்கு அவைகளை, செயலாக்க நாங்கள் முனைகிறோம். அந்த வகையில் நாங்கள் 1980–1981ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் முதற் கட்டமாக 69 ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க்கண்ட பணிகள் எடுக்கப்பட்டு, முடிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் தன்னிறைவுத் திட்டத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்கின்ற மாமன்ற உறுப்பினர்களாலும் சரி, வெளியே உள்ள மக்களானாலும் சரி, அவர்களுக்கெல்லாம் நான் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசின் சார்பாக இந்தப் புள்ளி விவரங்களைப் படிக்கும்போது, மாமன்ற உறுப்பினர்கள் கொஞ்சம் பொறுமையைக் கடைபிடிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

குடிநீர் வசதித் திட்டங்கள் 2,609, அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 18.03 இலட்சம், இணைப்புச் சாலைகள் 6587.6 கிலோ மீட்டர் அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 1236.32 இலட்சம், சிறு பாலங்கள் எண்ணிக்கை 3043, அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 350.80 இலட்சம். ஆதிதிராவிடர்களுக்கான இடுகாட்டுக்குச் செல்லும் சாலை வசதி ஏற்படுத்தித் தர அமைக்கப்பட்ட சாலைகள் 927.21 கிலோ மீட்டர் அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 79.87 இலட்சம், சிறு பாலங்கள் என்ற வகையில் மேலும் பல இடங்களில் கட்டவேண்டுமென்று கணக்கிட்டு 1023 நிறைவேற்றப்பட்டன. அதற்கு 68.20 இலட்சம் மேற்கொண்டு செலவழிக்கப்பட்டது. ஊரக மருந்தகங்கள் 82, அதற்கு செலவு தொகை 47.42, இலட்சம் தாய் சேய் நல நிலையங்கள் 237 அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 118.87 இலட்சம், பள்ளிக் கட்டடங்கள் 947 அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 486.48 இலட்சம்.

அதேபோன்று, இரண்டாவது கட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்ட 150 வட்டாரங்களில் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் விவரம் பின்வருமாறு:–

குடிநீர் வசதிக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடு 5.922, முடிக்கப்பட்ட எண்ணிக்கை 2,891. 31.12.1981வரை செலவழிக்கப்பட்ட தொகைக்கு 1,342.96 இலட்சம் இணைப்புச் சாலைகள் 11,534.95 கிலோ மீட்டர் குறியீடு, முடிக்கப்பட்டவை 4,994.99 அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 1,672.41 இலட்சம். சிறு பாலங்கள் குறியீடு 11,256, முடிக்கப்பட்டவை 5,916, செலவழிக்கப்பட்ட தொகை 1,053.98 இலட்சம், ஆதிதிராவிடர் மயானத்திற்குச் செல்லும் சாலை 742.60 கிலோ மீட்டர் குறியீடு, முடிக்கப்பட்டவை 505.10 கிலோ மீட்டர், அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 31.05 இலட்சம். சிறு பாசன வசதி மேம்பாட்டுத் திட்டங்கள் 933, முடிக்கப்பட்டவை 386, அதற்கு செலவழிக்கப்பட்ட

தொகை 32.68 இலட்சம். ஊரக மருந்தகங்கள் எண்ணிக்கை 170, முடிக்கப்பட்டவை 6, அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 113.48 இலட்சம், தாய் சேய் நல விடுதிகள் எண்ணிக்கை 492; முடிக்கப்பட்டவை 33, அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 75.94 இலட்சம். பள்ளிக் கட்டடங்கள் எண்ணிக்கை 1,774, முடிக்கப்பட்டவை 355, அதற்கு செலவழிக்கப்பட்ட தொகை 677.32 இலட்சம்.

இதையெல்லாம் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் காரணம் இந்த அரசு எந்தெந்த வசதி வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறதோ, அதைப் பயன்படுத்தி நாங்கள் தேர்தல் காலத்தில் சொன்னவற்றை நடத்தி முடிப்பதற்கு எப்படியும் எங்கள் கடமைகளைச் செய்கிறோம் என்பது மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும் என்றாலும் இங்கே அவற்றை வெளியிடுவதன் மூலம் மாமன்றத்தின் வெளியிலே உள்ளவர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் குறிப்பிடுகிறேன்.

நாங்கள் தேர்தல் அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தோம். கிராமப் புறங்களில் பெண்களுக்குத் தனிக் கழிப்பிடங்கள் இல்லை, அதை ஏற்படுத்தித்தரவேண்டுமென்ற எண்ணத்தில் அது பற்றி நாங்கள் குறிப்பிட்டிருந்தோம்.

1980–1981ஆம் ஆண்டு தொடக்கப்பட்டு 69 முதல் கட்ட தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களிலே ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 2 வீதம் 138 கழிப்பிடங்கள், ஒவ்வொன்றிற்கும் 6,330 ரூபாய் வீதம் 8.74 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பதையும் இரண்டாவது கட்ட தன்னிறைவுத் திட்ட ஒன்றியங்களில் நிறைவேற்றுவது குறித்து ஆராய்கையில் தமிழகத்திலே உள்ள 16 ஆயிரம் கிராமங்களில் ஆண்கள், பெண்கள் இரு பாலர்க்கும் ஒவ்வொரு கழிப்பிடத்திற்கும் 14,100 ரூபாய் வீதம் கழிப்பிடம் அமைக்கும் திட்டத்தை 22.56 கோடி ரூபாய் செலவில் 3.4 ஆண்டுகளிலே நிறைவேற்றத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இவற்றை நான் குறிப்பிடும்பொழுது இன்னொன்றையும் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. சிவராமன், சின்ன சேலம், காங்கிரஸ்–யும் கட்சியைச் சேர்ந்த நண்பர் அவர்கள் அந்தப் பகுதியில் இந்தத் திட்டத்தை எப்படி நடைமுறைப் படுத்துகிறார்கள் என்பதைப் பற்றி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு (தென்ஆற்காடு மாவட்டம்) நன்றியறிதலைத் தெரிவிக்கும் வகையில் எழுதிய ஒரு கடிதத்தைப் படித்துக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

“அன்புடையீர், வணக்கம், கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியில் மாநில அரசு மூலமாக வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொண்டு எனது தொகுதியில் பெரும்பான்மையான பகுதிகளில் ஏரி மராமத்துப் பணிகள் பொதுப்பணித் துறையினால் செய்யப்பட்டன. அவ்வாறு செய்யப்பட்டதால், கடந்த பருவ மழையின்போது செய்யப்பட்ட பணிகளால் ஏரியில் பின்னால் தண்ணீர் தேங்க சௌகரியமாக இருந்தது. அந்த அளவிற்குத் தங்கள் பெருமுயற்சியாலும் பொதுப்பணித்துறையின் செயற்பொறியாளர், நிருவாகப் பொறியாளர்களால் பணிகள் உடனுக்குடன் பார்வையிடப்பட்டு எந்த

ஊழல் புகார்களுமின்றி நடைபெற்றமைக்குத் தொகுதி மக்களின் சார்பாகவும் எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்”.

இதை நான் சொல்வதற்குக் காரணம் தன்னிறைவுத் திட்டத்தில் நாங்கள் அக்கறைக் கொண்டு ஆங்காங்கே சில தவறுகள் நடந்திருந்தாலும்கூட கட்சிப்பேதம் பாராமல் எந்தப் பகுதிக்கு முன்னுரிமை கொடுப்பது என்பதில் தேவையின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் அக்கறை காட்டி, அதிகாரிகள் அந்தப் பணிகளைச் செய்தார்கள் என்பதற்கு நான் இதை எடுத்தக்காட்டாகப் பயன்படுத்திக் கொண்டேன்.

வறட்சி நிவாரணம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.ஜே.எஸ்.இராசு, எம்.எல்.ஏ. அவர்களும், திரு.நெடுமாறன் அவர்களும் சில கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு உறுப்பினர் திரு.நெடுமாறன் அவர்கள் பேசும்பொழுது வறட்சி நிவாரணப் பணிகளுக்கு நாம் ரூ.137 கோடி கேட்டும், மத்திய அரசு மூன்றில் ஒரு பங்கு குறைவாகக் கொடுத்திருக்கிறார்கள். அது ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். 13 மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சி நிலைமையை சமாளிக்க பல்வேறு நிவாரணப் பணிகளை எடுத்துக்கொள்ள 137 கோடி ரூபாய் அளவுக்கு விரிவான குறிப்புகள் தயாரித்து அதை மத்திய அரசுக்கு அனுப்பி மத்திய அரசிடம் நிதி உதவி கோரப்பட்டது உண்மை. மத்திய அரசு ஒரு ஆய்வு குழுவை 1981 ஏப்ரல் 1,2,3,4 தேதிகளில் தமிழகத்திற்கு அனுப்பி வைத்தது. அந்தக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் 48 கோடியே 90 இலட்சம் ரூபாய் என்று மத்திய அரசு நிர்ணயித்தது.

ஜூலை மாதத்திலே கீழ்க்கண்ட இனங்கள் மீது மத்திய அரசாங்கத்திற்கு நிர்ணயித்த உச்சவரம்பை உயர்த்தும்படி கேட்டுக்கொண்டோம். அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பு குழாய்க் கிணறு அமைப்பதற்கு ரூ.8 கோடி கூடுதலாகக் கோரப்பட்ட தொகை ரூ.3.62 கோடி. நகராட்சி, பேரூராட்சி குடிநீர்த்திட்டங்களுக்கு ரூ.2 கோடி கூடுதலாகக் கோரப்பட்டது. ரூ.40 இலட்சம், சென்னை மாநகராட்சிக் குடிநீர்த் திட்டங்கள், அதற்காகக் கொடுக்கப்பட்ட தொகை ரூ.87 இலட்சம்.

நீர்ப்பாசன வேலைக்கு கொடுக்கப்பட்ட அளவு ரூ.15 கோடி. கூடுதலாகக் கோரப்பட்ட தொகை ரூ.1.50 கோடி. இதுபோன்று சாலைப்பணிகள், ஊருணிகள், குட்டைகள் மேம்பாடு இவைகளுக்கெல்லாம் அவ்வப்போது அவர்கள் குறிப்பாக கொடுத்த ஏறத்தாழ ரூ.8.92 இலட்சம் கூடுதல் கோரப்பட்டது. அவர்கள் ஓரளவுக்குக் கொடுக்க முன்வந்தார்கள். அவர்கள் கொடுத்தது போக தமிழக அரசு அதிகமாக செலவழித்து இருக்கிறது என்றாலும் நான் ஒன்றை குறிப்பிட விரும்புகின்றேன். சில ஆண்டுகளுக்கு முன்னால் வறட்சி பணிகள் நடைபெற செய்யவேண்டிய அவசியத்தில் இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் முதலமைச்சராக இருந்தபோது, மைய அரசிடமிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும் இப்பொழுது எவ்வளவு ஒதுக்கித் தரப்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்ப்போமானால் அவர்கள் அப்பொழுது

உண்மை நிலையை நன்கு உணர்ந்து, மேலும், அதிக அளவிற்கு உதவித்தொகையைக் கொடுக்க முன்வந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

அவர்கள் திரும்பப்பெறுகின்ற பணமாக இருந்தால்கூட அவர்கள் அதை கொடுக்க முன்வந்தார்கள் என்பது செலவழிக்க அனுமதிக்கப்பட்டோம் என்ற வகையில் உதவியாக இருந்தது என்பதை நாம் ஏற்றுக்கொண்டு பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரக் குடிநீர்ப் பணிகளைப் பொறுத்த மட்டும் புதிதாக ரூபாய் 87 இலட்சத்தைக் குடிநீர்ப் பணிகள் என்ற தலைப்பில் அதிகமாகச் சேர்த்துக் கொடுக்க ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்த நேரத்தில் வேறு ஒரு பிரச்சினையும் இணைத்து நான் பேசலாம் என்று கருதுகிறேன்.

சென்னைக் குடிநீரைப் பற்றி இங்கே பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. வீராணம் திட்டத்தைத் திரும்ப எடுத்துக்கொள்வது, தொடர்ந்து நடத்துவது என்பதைப் பற்றியும், அதை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கலாம் என்பதை இங்கே பேராசிரியர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மற்ற மாமன்ற உறுப்பினர்களும் இங்கே வெவ்வேறு முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இருந்தாலும் இராமசாமி என்பவரைக் கொண்டு அதைப்பற்றி விசாரித்தபொழுது அது இலாபம் தரத்தக்கதாக இல்லை என்பதை அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்பதையும், அப்படி அதை ஏற்றுக்கொண்டால்கூட நம்முடைய தேவை பூர்த்தி அடையுமா என்றால் அது அடையாது என்ற வகையில் அவை இருக்கின்றன என்பதையும் இங்கே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசுப் பதவிக்கு வருவதற்கு முன், 1980 தேர்தலின்பொழுது கிருஷ்ணா நதி நீரைக் கொண்டு வருவதைப்பற்றி நாங்கள் அதிலே குறிப்பிட்டிருக்கிறோம்.கிருஷ்ணா நதிநீரைக் கொண்டு வரலாம் என்று நாங்கள் விரும்புவதை அதிலே குறிப்பிட்டபொழுது, அதற்கு அடிப்படைக் காரணம் நாங்கள் ஆட்சிக்கு வந்த நேரத்தில் ஆந்திராவின் முதலமைச்சராக இருந்த சென்னா ரெட்டி அவர்கள் மிக அக்கறை காட்டியது மட்டுமல்ல அதை எந்த அளவிற்கு விரைவாகச் செயல்படுத்த முடியுமோ அதைச் செயலாக்கலாம் என்ற எண்ணத்தையும் அவர்கள் சொல்லி, மற்ற மாநிலங்கள் தர வேண்டிய 10 டி.எம்.சி. தண்ணீரை அவர்கள் தரத் தயங்கினாலும்கூட, எங்களைப் பொறுத்த வரையில் தர வேண்டிய 5 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். அதையொட்டி அதிகாரிகள் மட்டத்தில் பேச்சு நடந்து கொண்டிருந்தது. ஆனால், தாமதம் ஆவதைப் பார்த்து இனி இது பயன்படாமல் போய்விடுமோ என்ற அச்சம் வேறு. மற்றவர்கள் குழாயில்தான் கொண்டு போக வேண்டும் என்றும் வேறு சிலர் 'ஓப்பன் சேனல்' மூலம் கொண்டு போகலாம் என்றும் இப்படி அவர்களுக்குள்ளேயே கருத்து வேறுபாடு கொண்டு, அதன் விளைவாகக் கிருஷ்ணா நதித் தண்ணீர் வருவது என்பது இயலாத காரியமாகிவிடுமோ என்று இருந்த நேரத்தில், சில ஆண்டுகளுக்கு முன்னால்

இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் என்ன கருத்தைச் சொன்னார்களோ, அதே கருத்தை மீண்டும் இப்பொழுது சொல்லி அதை நடத்துவது உதவியாக இருக்கும் என்று குறிப்பிட்டதோடு அண்மையில் சில சாதகமான எண்ணங்களையும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தவொரு குறிப்பை நான் இங்கே எடுத்துக்காட்டுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

வீராணம் திட்டத்தில் 2.5 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கும். கால்வாயின் நீளம் 192 கிலோ மீட்டர். ஆகக்கூடிய செலவு ரூ.150 கோடி. கட்டளைக் கால்வாய்த் திட்டம் 15 டி.எம்.சி. 451 கிலோ மீட்டர் நீளம். ஆகக்கூடிய செலவு ரூ.203 கோடி. கிருஷ்ணா நதி திட்டம் 15 டி.எம்.சி. 260 கிலோ மீட்டர் நீளம், ஆகக்கூடிய செலவு ரூ.188 கோடி. இந்த ரூ.188 கோடி. 260 கிலோ மீட்டருக்கு எப்படி வருகிறது என்ற கேள்வி இருக்கும். அதற்கான ஒன்றைத்தான் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் ஒரு யோசனையைச் சொல்லி இருக்கின்றார்கள். அவர்களுக்கும் பாசன வசதிக்காகத் தண்ணீர் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதிலே நாங்கள் ஸ்ரீசைலம் வரை கொண்டு வருகிறோம். அதாவது, ஆந்திரப் பிரதேசத்திலேயே இருக்கிறது. அதை குந்தேறு என்கிற நதியின் வழியாகக் கொண்டு வந்து, அதை சோமசீலம் அணைக்கட்டிலே சேர்த்து, அதுவரையிலே நாங்கள் கொண்டு வந்து விடுகிறோம், அவர்களுக்குத் தேவை ஆகவே, அதை விடுத்து, மேற்கொண்டு அங்கேயிருந்து நீங்கள் செம்பரம்பாக்கம் ஏரிக்குக் கொண்டு வருவதற்கு, நீங்கள் பாதித்தொகையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது. அதிலே, குறிப்பிட்ட இடத்திலிருந்து 163.9 கிலோ மீட்டர் தான் போட வேண்டியிருக்கிறது. ஆகவே, மீதிப் பகுதிக்கு, அந்த இடங்களுக்குப் பாதிப் பாதி, அல்லது இன்னும் கொஞ்சம் அதிகம் அல்லது குறைவு என்ற விதத்திலே பேசி முடித்தோமானால், நாங்களும் செலவு செய்கிறோம். நீங்களும் செலவு செய்யுங்கள் என்கிற வகையில் தான் அந்த ரூ.188 கோடி என்ற நிலை வந்திருக்கிறது. இதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசும் உதவியாக இருக்கிறது. ஆகவே, அதை மீண்டும் எடுத்து பரிசீலிப்பது மட்டுமல்லாமல், அதை ஏற்றுக்கொண்டு, உடனடியாக அந்தப் பணியைத் தொடங்குவதற்கு என்ன, என்ன செய்ய வேண்டுமோ அதை மைய அரசோடு தொடர்புகொண்டு, ஆந்திர அரசோடு பேசி ஒரு முடிவுக்கு வரலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

இங்கே இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த 5 டி.எம்.சி. தண்ணீர் கொண்டு வந்தால் மட்டும் போதாது. சென்னையிலே இதற்காகக் குழாய் அமைப்பது என்பது மிகப் பெரிய செலவு ஆகக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதை நாம் நினைவிலே கொள்ள வேண்டும். ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு முன்னால், போட்ட குழாய்களை எல்லாம் இப்பொழுது திரும்பவும் மாற்ற வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கின்றோம். அதற்குத் தனியாகப் பணம் தேவைப்படும். அந்தப் பணியை எடுத்துச் செலவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, அந்த வகையில் கட்டளைக்

கால்வாயா, கிருஷ்ணா நதியா, எதை நாங்கள் எடுத்துக் கொள்ளப்போகிறோம் என்ற சந்தேகம் யாருக்காவது இருக்குமானால் கிருஷ்ணா நதி நீரை விரைவில் கொண்டு வருவோம். அதில் அதிகமாகப் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதால், முதலில், 5 டி.எம்.சி. கிடைக்கிறது. அதற்குப் பிறகு, மகாராஷ்டிரா மாநிலம் 5 டி.எம்.சி, கருநாடகா மாநிலம், 5 டி.எம்.சி. என்று 10 டி.எம்.சி. தர இருக்கிறது அது முன்னால் ஏற்றுக்கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில், நம்பிக்கையின் அடிப்படையில் அது தொடர்கிறது என்ற காரணத்தால், உடனடியாக சென்னை மாநகராட்சிக்கு, மாநகரத்தினுடைய மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் அந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகின்றோம்.

மாண்புமிகு நெடுமாறன் அவர்களுடைய நல்ல எண்ணத்திற்கு நன்றி. ஆனால் “ஆசைக்கோர் அளவில்லை. அகிலம் எல்லாம் கட்டி ஆளினும்” என்பது போல, ஒரு 5 டி.எம்.சி. கிடைக்குமா உடனே என்று காத்திருக்கும்போது 70 டி.எம்.சி. வேண்டும் என்று கேட்கும்போது அது நம்மை எங்கோ கொண்டு போய் உட்கார வைத்து, இந்தப் பலனையும் தாமதமாக்கி, திட்டமே இல்லாமல் போய்விடும் நிலை இருக்கக்கூடாது. முன்னே அவர்களிடம் தகராறு. நீங்கள் திறந்த கால்வாயில் கொண்டு போகிறீர்கள். நீங்கள் பயன்படுத்திக்கொள்வீர்கள், தமிழகத்திற்கு அனுப்புவதாக சொல்லி ஆகவே, நாங்கள் அனுமதிக்க மாட்டோம். குழாயில்தான் கொண்டுபோக வேண்டுமென்று வற்புறுத்தியதால்தான் இவ்வளவு நாட்கள் தாமதமாகிவிட்டது. அவர்கள் பாசனத்திற்கு எடுத்துக்கொள்கிறார்கள். அதுவும் நல்லெண்ணத்தில். அவர்கள் சேமித்துவைக்கின்ற சோமசீலா என்னுமிடத்தில் இருந்து திருப்பி நமக்கு தருகிறார்கள் என்றால் அது நல்லெண்ணத்தின் அடிப்படை என்பதை நாம் தயவுசெய்து மறந்துவிடக்கூடாது. அதைவிட வேறுவகையில் ஏதாவது முறை கையாளப்பட வேண்டுமானால் அதைப்பற்றி நாம் அனைத்துக்கட்சியினரும் உட்கார்ந்து பேசி முடிவெடுத்துக் கொள்ளலாம் என்பதில் இதில் அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டளைக் கால்வாய் என்று சொல்லும்போது காவிரி நீர்ப் பிரச்சினை என்பது பற்றியும் இதோடு, இணைத்துப் பேசுவது, பிரச்சினையோடு பிரச்சினையாக முடியும் என்று நான் கருதுகிறேன். காவிரி நதிநீர் பிரச்சினையைப் பற்றி அண்மைக் காலத்தில் கருநாடக அரசுடைய முதலமைச்சர், என்னுடைய நெருங்கிய நண்பராக நானும் அவரும் கூறிக்கொள்ளக் கூடியவர்கள். இரண்டுபேரும் முதலமைச்சராக இருந்தாலும், அவருடைய பசியை பற்றி அவர்கள் தான் பேசவேண்டும். தங்களைப் பற்றித்தான் பேசிக்கொள்வார்கள் என்று சொல்வதுபோல, அவர்கள் அவர்களைப் பற்றி பேசிக்கொள்கிறார்கள். நாம் நம்மைபற்றி பேசிக்கொள்கிறோம் என்பதைப் போல ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. அதுவும் இப்போதிருக்கிற தண்ணீர் எல்லாம் தங்களுக்குக்கூட போதவில்லை என்று கூட சொல்லியிருக்கிறார்கள் என்ற நிலையில்தான் பேசுவோம் என்ற நிலை தொடர்ந்து இருந்தது. நாங்கள் கருநாடகத்தில் சென்று பேசியபோது அந்த கூட்டத்தை முடித்துவிட்டதாகச் சொல்லாமல் அது

தொடர்கிறது என்கின்ற நிலையே இருக்கட்டும் என்ற எண்ணத்தோடு நாம் விரும்பினோம்.

ஆனால் அதற்கு பிறகு அவருடைய பேச்சுக்கள் அவர்கள் மேகதாது திட்டத்திலேயே அக்கறை காட்டுவதை எண்ணுகின்ற போது அது நிச்சயமாக தமிழகத்திற்கு மாபெரும் ஆபத்து மட்டுமல்ல, அநியாயத்தைச் செய்வதற்காக இருக்கிறது என்பதை உணர்கின்ற காரணத்தால் இனி மைய அரசுடன்தான் நான் தொடர்பு கொண்டு இதற்கு ஒரு வழி காணவேண்டும் என்ற நிலையிலேயே இருக்கின்றோமே தவிர எவ்வளவுதான் அண்டை மாநிலங்களோடு நல்ல உறவு வேண்டும் என்று எண்ணினாலும் இந்தப் பிரச்சனையில் கர்நாடகத்தோடு தனியாகப் பேசி எந்தப் பயனும் பெற முடியாது என்கின்ற அந்த அளவுக்கு எங்களுடைய உள்ளம் ஏமாற்றத்தை அடைந்துவிட்டது என்று சொல்லுகிற அளவிற்கு அந்த கர்நாடக முதலமைச்சர் மற்றும் அவருடைய அமைச்சர்களின் பேச்சுக்களும் செயலும் ஆளாக்கிவிட்டது என்று இந்த மன்றத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, இனி மைய அரசுதான் ஒரு முடிவைச் சொல்வது என்ற நிலைமையில் நாம் இருக்கிறோம். ஆகவே, நாம் பேச வேண்டியது மைய அரசோடு தான் தவிர, கர்நாடக அரசுடன் பேசுவது பயனில்லை என்ற முடிவுக்கு இந்த அரசு வந்திருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நமக்கு தேவையெல்லாம் நாம் விரும்புவதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். இப்போது நாம் பயன்படுத்துகின்ற அளவு, எந்த அளவுக்கு உற்பத்தி செய்கின்றோமோ அந்த நிலங்களுக்கு உற்பத்திக்கு பாதகம் இல்லாத நிலையில், நமக்குத் தண்ணீர் கிடைக்க உத்தரவாதம் வேண்டும். அதுதான் நாங்கள் பேசிய கொள்கை. அந்த கொள்கையில் இருந்து தமிழக அரசு பின்வாங்கவில்லை. அதைத்தான் இதுவரையில் வற்புறுத்தி வந்திருக்கிறது என்பதைத் திட்டவட்டமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட நிலையில் நாம் கவனித்துப் பார்க்கும்போது கட்டளைக் கால்வாயிலிருந்து வருகின்ற தண்ணீரை அந்தப்பகுதியில் மழை பெய்து, அந்த நதியிலே கலந்து கடலிலே போய் கலந்து வீணாகிப்போகும். அந்தத் தண்ணீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கும், இராமநாதபுர மாவட்டத்திற்கும் திருப்பி, அந்தப் பகுதிகளில் பயன்படுத்தலாம் என்கிற திட்டம் ஆய்வில் இருக்கிறது. அதை ஆய்வு செய்யச் சொல்லி இருக்கிறோம். இதில் யாரும் தவறு சொல்ல முடியாது. குற்றம் காண முடியாது. நாம் வேறு விதமாக காவிரி ஆற்று நீரை மேட்டூரில் இருந்தோ அல்லது வேறு வகையிலோ எடுத்தால் தவறாக எடுத்துக்கொண்டோம் என்றும் நம் மீது பழி சுமத்த முடியாது. ஆகவே, இயற்கை தமிழகத்திற்கு தருகின்ற மழை தண்ணீரை நாம் அந்தப் பகுதிகளுக்குத் திருப்பி, பகுதிவாழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் அங்குள்ள ஏரி, குளம் ஆகியவை நிரம்பக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி, இப்போது நாம் நிறைவேற்றுகின்ற தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஆங்காங்கே ஏரி, குளம் ஆழமாக்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளதால் அவற்றில் அதனைத் தேக்கி

வைத்துப் பயன்படுத்தலாம் என்பது எங்களுடைய எண்ணமாகும். இந்தத் திட்டமும் அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இந்தநேரத்தில் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். அதிகாரிகள் சொல்வதை நீங்கள் கேட்கமாட்டீர்கள் அல்லது அதிகாரிகள் சொல்வதைக் கேளுங்கள் என்று இரண்டு விதத்திலும் வெவ்வேறு பிரச்சினைகள் பற்றி பேசுகின்றபோது சொல்லப்பட்டது. சில சமயங்களில் அதிகாரிகள் சொன்னார்கள், கட்டளைக் கால்வாய் திட்டம் நிறைவேற்றப்படக்கூடிய திட்டமென்று சொல்லி அதற்காக வரைபடம் எல்லாம் போட்டு, ஒழுங்காக அதற்காக கணக்கெல்லாம் போட்டு எல்லாவற்றையும் செய்தபிறகு நான் எப்படி இந்த திட்டத்திற்கு உத்தரவாதம் தர முடியும் என்று இவைகளையெல்லாம் பரிசீலித்து பார்த்த அதிகாரிகள் சொன்னால் என்ன செய்வது ? எங்கே எவ்வளவு ஆழம் இருக்கிறது ? எவ்வளவு நீளம் இருக்கிறது ? எங்கே சரிசமமாக செய்யவேண்டும் என்ற லட்சக்கணக்காக ரூபாய் செலவு செய்து ஆய்வு பணிகள் நடத்தியவர்கள் இதற்கு எப்படி நான் உத்தரவாதம் தர முடியும் என்று கேட்டு இந்த திட்டத்தை செயல்படுத்தியே ஆகவேண்டும் என்று நீங்கள் சொன்னால் நான் உழைக்கிறேன் என்று இப்படிப்பட்ட நிலைமையில் பேசினால் நான் என்ன செய்வது ? இப்படிப்பட்ட முறையில் எல்லாம்அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன். ஒரு சில அதிகாரிகள் உண்மையாக இருக்கிற காரணத்தால்தான் சில திட்டங்களையாவது நிறைவேற்ற முடிகிறது. அதற்கு எதிர்க்கட்சியினரின் பாராட்டுகளையும் பெறமுடிகிறது. அந்த வகையில் அவை அமைகின்றன என்றும் நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இங்கே ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் அவர்கள் காவிரி நீரைப்பற்றி கருத்துச் சொன்னார்கள் என்று கருதுகின்றேன். அவருக்கு இப்போது நான் அளித்த பதில் திருப்திகரமாக இருக்கும் என்று நம்புகின்றேன். அதைப்போலவே, மற்ற நண்பர்களும் பேசினார்கள். சிலர் பேசும்போது குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி என்று கருதுகின்றேன். அவர்கள் பேசும்போது இராமநாதபுர மாவட்டத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று சொல்லி, அப்படி பிரிக்கப்படுகின்றபோது அந்த மாவட்டத்தின் தலைநகரம் அந்த மாவட்டத்திலேயே இருக்க வேண்டும் என்கின்ற கருத்தையும் சொன்னார்கள். மதுரை இரண்டு மாவட்டத்திற்கு தலைநகராக இருப்பதால்தான் இதைச் சொன்னார்கள் என்று கருதுகின்றேன். அதனால் அந்த அச்சம் எழுந்தது என்று கருதுகின்றேன். நான் ஒன்றை தெரிவிக்க விரும்புகின்றேன். அப்படி அந்த மாவட்டங்களைப் பிரிக்கும்போது, அனைத்துக்கட்சித்தலைவர்கள் கொண்ட குழு அமைத்து, அவர்கள் ஆங்காங்கு மக்களை சந்தித்து, மக்கள் கருத்தை அறிந்து, அவர்கள் தரும் நல்ல யோசனையை ஏற்று, அந்த அடிப்படையில் அவை பிரிக்கப்படும் என்பதையும், அப்படி பிரிக்கப்பட்டபோது, அந்த மாவட்டங்களுக்குப் பேர் வைக்கின்றபோது, நாங்கள் முன்பு என்ன சொன்னோமோ அந்த

உறுதிமொழியை நாங்கள் நிறைவேற்றுவோம் என்பதையும் இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துகொள்ளும் பலபேருக்குத் திருப்தியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித்தேவர் போன்றவர்களுக்கும் அவர்களுக்கு, சிரிப்பும் மகிழ்ச்சியும் ஏற்படும். அதைப்போல இன்னொரு பெரிய தலைவரின் பெயரை பெயர் வைக்கலாம் என்கிறபோது மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் ஏற்படும். இராமநாதபுர மாவட்டம் என்று அதையும் வைத்தால் அதுவும் சிலருக்கு மகிழ்ச்சியைத் தரலாம். இதையெல்லாம் நாம் உணர்ந்து, அந்தப் பொறுப்புக்களை எல்லோரும் பகிர்ந்து கொண்டு நிறைவேற்றுவோம் என்ற எண்ணத்தில் இவற்றை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். அந்தப் பொறுப்பை நிறைவேற்ற, இங்கே தலைவர்களாக இருக்கும் அந்தந்த கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைப்பு தரவேண்டும் என்றுதான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

நாட்டில் அமைதி இல்லை என்றும் நாட்டிலே அவ்வப்போது அவசரச் சட்டங்கள் போடப்படுகின்றன என்றும் அவசரச் சட்டத்தை நம்பியே ஒரு ஆட்சி இருந்துவிடக்கூடாது என்றும் இங்கே மாமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டு சொன்னார்கள். நான் அவர்கள் சொன்னதை மதிக்கிறேன், மறந்துவிடவில்லை, அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்ற அக்கறை இருக்கிறது. அலட்சியப்படுத்தவில்லை. ஆனால், அந்தத் தேவை அவ்வப்போது ஏன் ஏற்படுகிறது என்பதை தயவுசெய்து சிந்திக்கவும், அப்படிப்பட்ட அவசரச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டால்கூட, அவை அமல்படுத்தப்படுகினறவா என்பதையும் கொஞ்சம் நாம் சிந்தித்து பார்க்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு அவசரச் சட்டம் இப்போது கையில் இருக்கிறது அல்லது நிறைவேற்றப்பட்ட சட்டம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதைப் பயன்படுத்துகின்றோமா எப்படி பயன்படுத்துகின்றோம் என்று எண்ணிப்பார்க்கும் போதுதான், ஒரு அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது எந்த நோக்கத்தில்? யாருக்காகக் கொண்டு வரப்பட்டது? எப்படிப்பட்டவர்களுக்காகக் கொண்டு வரப்பட்டது? எத்தகைய செயல்களைத் தடை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டன? எத்தகைய வன்முறை எண்ணங்கள் தோன்றக்கூடாது? அதற்கு இடம் தரக்கூடாது என்பதற்காக கொண்டு வரப்பட்டது என்பதை எல்லாம் நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள். சிந்தித்துப்பார்க்காமல் நீங்கள் கருத்துச் சொல்லியிருக்க மாட்டீர்கள். ஆனால் சிந்தித்துப் பார்க்கும்போது பொது தன்மையில் இருந்து சிந்தித்தோமேயானால் சிலவற்றை நியாயம் என்று சொல்வதற்கு நமது உள்ளம் இடம் கொடுக்கும்.

இந்த பந்த் 19ஆம் தேதி நடைபெற்றது. அதைப்பற்றி எல்லோருக்கும் கோபம் இருக்கும். சில சமயங்களில் ஆத்திரம்கூட வரும். துப்பாக்கி சூடு, துப்பாக்கி தானா இது துப்பாக்கி துரைத்தனம் தானா என்று கேட்பது போலப் பல கேள்விகள் கேட்கக்கூடும். ஆனால் துப்பாக்கியை வைத்துக்கொண்டு சுடுவதற்காகத்தான் இருக்கிறோம் என்ற நிலைமை இருக்குமானால், அப்படி காவல்துறையினர் செயல்பட்டால், காவல்துறையினருக்கு ஆபத்து வரவேண்டிய அவசியம் இருக்காது.

இம்மாமன்றத்திலே ஒரு உறுப்பினர் குறிப்பிடும்போது சொன்னதாக எனக்கு நினைவு இருக்கிறது. எதற்கெடுத்தாலும் சுட்டுத்தள்ளுகிறார்கள். கேட்டால் நக்சலைட் என்று சொல்கிறார்கள் என்றார். அதிலும், அடிக்கடி இந்த மாமன்றத்திலே பேசியவர்களில் பலர் தருமபுரி பற்றி அதிகமாக பேசினார்கள். அதற்குப் பெயர் தருமபுரிதான். ஆனால், எதிர்பாராவிதமாக அங்கே அதர்மம் அதிகம் நடைபெறுகிற நிலைமை ஏற்பட்டதால்தான், அதைத் தடுப்பதற்கு என்ன செய்வது என்கின்ற நிலைமை அரசுக்குக் கேள்விக்குறியாக வந்து, இதைத்தவிர வேறு வழியில்லையோ என்ற நிலைமை உருவாக்கப்படுகிறது என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். இதை நான் விவாதத்திற்காக அல்ல அனுபவப்பூர்வமாகச் சொல்கிறேன்.

இப்போது சில இடங்களில் சில காரியங்கள் நடைபெறுகின்றன. எங்கே துன்பப்படுகின்றவர்கள், வேலையில்லாமல் கஷ்டப்படுகின்றவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ் மக்கள் இப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்களோ, அங்கே சென்று தங்களுடைய கட்சியின் கொள்கையைப் புகுத்தி, அவர்களை ஊக்குவித்து, சில வன்முறைகளில் சென்றும் கூட முயற்சி செய்தால் தான், உரிமைக் கிடைக்கும் என்ற வகையில் சில எண்ணங்களை வைத்து அவர்களை ஊக்குவிக்கின்றவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்ற செய்தியை நான் சொன்னால், அத்தனை கட்சிகளும் அதைத்தான் செய்கிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன். ஒரு வேளை அந்தக் கட்சிக்கு அந்த கொள்கை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அந்தக் கட்சியில் இருக்கிற யாராவது ஒருவர் அந்தப் பணியை செய்வதாக இருந்தால் அந்தக் கட்சிக்கும் கெட்ட பெயர். நாட்டுக்கும் தொல்லை. உயிருக்கும் ஆபத்து வருகிறது.

நான் எதிர்பாராத முறையில் ஒரு பொது நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வேலூருக்குச் சென்று விட்டு, திரும்பி வண்டியிலே வந்தபோது அங்கே இருந்த மக்கள் சொன்ன சொற்கள், அவர்கள் உரத்த குரலில் கூறிய வார்த்தைகள் வாழ்த்துவதாக இல்லை. வெளியே திருண்ணாமலையிலும் மற்ற பகுதிகளிலும் எங்கெங்கே நக்சலைட்டுகள் இருந்தார்கள் என்று நாம் படித்திருக்கிறோமோ, நமக்கு செய்தி கிடைத்ததோ, அந்த இடங்களிளெல்லாம் பொதுமக்கள் நடமாட முடியவில்லை! அந்த மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள் என்று கூறியதை நான் இங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை.

நக்சலைட்டுகள் என்றால் அவர்கள் சுடப்படத்தான் வேண்டும் என்பது இந்த அரசுடைய கொள்கையல்ல. பல நக்சலைட்டுகள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். பலர் விடுதலைகூட செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் நக்சலைட்டுகளாக இருந்தாலும் இப்போது எங்கள் கட்சிக்கு வந்துவிட்டார்கள். இப்போது அவர்கள் இந்த நிலைமையிலே இல்லை என்று சொன்னதற்குப் பிறகு அதைப்பற்றி விசாரித்து அறிந்து அவர்களை விடுதலை செய்யவும் நாங்கள் முன்வந்து இருக்கிறோம் என்பதை நான்

இங்கே எடுத்து சொல்கின்றபோது நக்சலைட்டுகள் என்றால் சுடப்படத்தான் வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்று கண்டிப்பாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இதான் உண்மை.

நக்சலைட்டுகள் என்று சொல்லப்படுகின்ற அவர்களுடைய பேச்சுக்களெல்லாம் தவறானவை என்று நான் சொல்லவில்லை. நான் குறிப்பிடாததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். வன்முறையைத் தூண்டுகின்ற பேச்சுக்களை யார் பேசினாலும், அது தவறுதான் என்பது இந்த அரசுடைய கொள்கை. ஆனால் ஒருசில பத்திரிக்கைகளில் வருகின்ற செய்திகள் உண்மையாகிவிடும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நம்பிவிடுவார்களா என்பது எனக்கு தெரியாது. அப்படியானால் எத்தனையோ பத்திரிக்கைகளில் வருகின்றவையெல்லாம் உண்மை என்று நாம் நம்பிவிட்டோமானால், அறிஞர் அண்ணா அவர்கள்சொன்னதைப்போன்று ஒவ்வொருவரும் கண்ணாடியைப் பார்த்துவிட்டு எங்கோயோ போகவேண்டியதுதான். அரசியலை விட்டு என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இப்படி பல செய்திகள் வருகின்றன. இந்தியன் எக்ஸ்பிரஸ் என்று சொல்கிறார்கள், சில சமயங்களில் இந்த நிருபர்கள், எழுத்தாளர்களுக்கெல்லாம் சில நல்ல கல்யாண குணங்கள் இருக்கின்றன. பெருந்தன்மையான குணங்கள் இருக்கின்றன. பாராட்டுவதற்குரிய குணங்கள் இருக்கின்றன. கல்யாண குணங்கள் என்பது திருமணத்தை மட்டும் கூறுகின்ற வார்த்தைகள் அல்ல, அப்படிப்பட்டவர்கள் எழுதவேண்டும் என்று விரும்பினால், யாரைப் பற்றியும், எதையும் எழுதமுடியும். அதற்கு அளவே இருக்காது. ஆனால் நக்சலைட்டுகள் பற்றி மீண்டும் சொல்கிறேன். படித்தவர்கள், இளைஞர்கள் திரும்பத் திரும்ப நியாயங்களை எடுத்துச் சொல்லி நியாயம் கிடைக்காத நேரத்தில் விரக்தி மனப்பான்மை என்ற சொல்லப்படுகின்றதே அதுபோல் அவர்கள் மனதிலே ஒரு துறவு என்ற நிலைமை ஏற்பட்டு, என்ன உலகம் ? இது நியாயமே இல்லையே என்று சொல்வதுபோல் அந்த உணர்வுக்கு ஆளாகின்ற இப்படிப்பட்டவர்களெல்லாம், எந்த ஒரு வழியிலாவது தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று “இருப்பதும் ஓர் உயிர் தான், போவதும் ஒரு முறை போனால் போகட்டுமே!” என்று அண்ணா சொன்னதை, நல்லவற்றிற்கு வைத்துக்கொள்ளாமல், “போனால் போகட்டுமே, பத்து பேர் சாகட்டுமே!” என்று எண்ணி அந்த நிலையில் காரியம் செய்கின்றவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். ஆங்காங்கே தோன்றுவார்கள் அல்லது தோற்றிவிக்கப்படுவார்கள். இந்த நிலையில் ஆங்காங்கே உருவாகின்ற நிலையில் தடுக்கவேண்டியது பொறுப்புள்ள மாண்புமிகு உமாநாத் போன்றவர்கள் மற்றும் அரசினுடைய கடமையாகும் என்பதை நான் நிச்சயமாக எண்ணுகின்றேன். வன்முறையில் எந்த நாடும் ஓர் ஒழுங்கான அரசியல் அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாது என்பதை உள்நாட்டில் மட்டுமல்ல, வெளிநாட்டில் கூட அதைப்பற்றி புரிந்துகொள்ளக்கூடிய நிகழ்ச்சிகளை அண்மைக்காலங்களில் நடப்பதை நாம், காண்கிறோம். ஆகவே, நமது நாட்டிற்கு, நமது மாநிலத்திற்கு எது சரியென்று தோன்றுகின்றதோ அவற்றை செய்யவேண்டும் என்பதுதான் எங்களது கருத்தாகும். அந்த வகையில் எந்தவிதமான பொது

தன்மைக்கும் தேவையானது என்று கருதப்பட்டாலும்கூட அனுபவப்பட்டவர்களால், தியாகம் செய்தவர்களால், கொள்கைக்காக வாழ்பவர்கள்கூட நியாயமாக உள்ளது தானே என்று எண்ணினால்கூட அதில் ஈடுபடுகின்ற வழி இருக்கிறதே, அந்த வழிமுறைகளைத்தான் நான் சொன்னது. ஒழுங்குபடுத்தவேண்டிய நிலைமையாலே இருக்கிறது என்று. ஆகவேதான், கூடுமான வரையில் கைது செய்யதான் நாம் விரும்புகின்றோமோ தவிர, கைது செய்து அதன்மேல் நடவடிக்கை எடுக்கத்தான் விரும்புகிறோமோ தவிர வேறல்ல.

ஆனால், அதுமுடியாமல் போய் காவலர்களுக்கு ஆபத்து வருகிறது அல்லது ஒன்றிரண்டு உயிர்கள் அங்கே இதனால் போய்விட்டது என்ற நிலை வரும்போது இனி இப்படிப்பட்டவர்களை விடக்கூடாது என்ற வகையில் சொன்னாலும், சரி தற்காப்பு என்று சொன்னாலும் சரி, தப்பித்துப் போய்விடக்கூடாது என்ற நிலைமையிலே அப்படி நடந்தது என்று சொன்னாலும் சரி, காவலர்கள் அந்த நடவடிக்கையில் இறங்கி, யாருடைய உயிராவது இழக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்குமானால் நமக்கு நிச்சயமாக அதில் மகிழ்ச்சியில்லை! எனக்கு அந்த அனுபவம் உண்டு. நான் இறந்திருந்தால் என் குடும்பம் என்ன ஆகியிருக்கும் என்று எண்ணிப்பார்த்தவன் நான். படுக்கையில் இருந்தபோது! ஆகவே, இளைய வயதில் உள்ளவர்கள், குடும்பத்தினரைப் பின்னால் வாழவைக்கக்கூடிய தகுதியுள்ளவர்கள் இறந்துவிட்டால்,, அந்த குடும்பம் என்ன ஆகும் என்பதையும் நாம் சிந்திக்காமல் இல்லை. மாண்புமிகு நீதி விசாரணை படுகிற பாடு நமக்கு நன்றாக தெரிகிறது! நீதி விசாரணைக்கே நீதி விசாரணை வேண்டுமோ என்பதைப் போன்ற ஒரு நிலைமை நாட்டிலே உருவாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் துரைமுருகன் அவர்களும், கிருஷ்ணமூர்த்தி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்களுக்கு நன்றி கூறுவதிலிருந்தே அவர்களுடைய மகிழ்ச்சி எனக்குத் தெரிகிறது. ஆனால், ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்ல வேண்டும். நீதி விசாரணைக்கே நீதி விசாரணை வேண்டுமோ என்ற நிலை நாட்டிலே இருக்கிறது என்று நான் சொன்னதை வைத்துக்கொண்டு, அரசுக்கு எதிராக ஏதோ தீர்ப்பு வந்துவிட்டது போலவும், அதற்காக நான் கவலைப்படுவதாகவும் யாரும் கற்பனைப் பண்ண வேண்டாம்.

எந்த ஆபத்தும் வரக்கூடிய அளவிற்கோ, எங்கள் மீது பழி சுமத்தக் கூடிய அளவிற்கோ எந்தத் தீர்ப்பும் வரவில்லை என்பது மட்டுமல்ல எங்களைப் பொறுத்தவரையில், நாங்கள் எந்தக் கமிஷனாக இருந்தாலும் அதை வரவேற்போம் என்பதையும்; இந்தக் கமிஷனை போட்டவனே நான்தான் என்பதையும் மாண்புமிகு உமாநாத் அவர்கள் அறிவார்கள். அது அவர்கள் அறியாத விஷயம் அல்ல. அதுவும், இந்தக் கமிஷன் நடந்து முடிகிற வரையில் யார் யார் என்ன சாட்சி சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பற்றிக்கூட நான் கவலைப்பட்டவன் அல்ல. அதுவும் உண்மை தெரிந்தவர்களின் உள்ளம் சொல்லும்.

ஆகவே, கமிஷன் என்பது பற்றி நான் சொல்கிறபோது, ரே கமிஷனையும், சதாசிவம் கமிஷனையும் சேர்த்து எடுத்துக்கொண்டு பாருங்கள் என்று தான் சொல்கிறேன். எங்கெங்கேயெல்லாம் அவைகளை அலைகழிக்கப் படுகின்றன, எங்கெங்கேயெல்லாம் 'ஸ்டே' வாங்குகிறார்கள், எங்கெங்கெல்லாம் அவை நின்றுகொண்டிருக்கின்றன என்பதை கவனித்தேயாக வேண்டும். ஆகவே, நீதி விசாரணைகள் வேண்டும் என்பதிலே நமக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால், எத்தகைய காரியங்களுக்கு, அந்தச் செயல்முறைகள் நடந்த பிறகு அவைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்காக நீதி விசாரணை முறையை வைக்க வேண்டும் என்பதைப் பற்றி நாம் சிந்திப்பது அவசியம். அது தவறாகாது. ஆனால், எதற்கெடுத்தாலும் நீதி விசாரணை தான் என்றால் அதற்கு முடிவே இருக்காது. இதை மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் ஒத்துக்கொள்வதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீதி விசாரணையில் உண்மை வெளிவரும் என்றிருக்குமானால் அது நமக்கு மகிழ்ச்சிதான். இதே போல், கமிஷன் முன்பு ஒரு முறை விசாரணை நடந்து தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறையைச் சேர்ந்த ஒருவருக்கும் ஒரு வழக்கறிஞருக்கும் ஏற்பட்ட தகராறில், நாம் தான் நியமித்தோம். இந்த அரசு நியமித்தது. மன்றமும் ஏற்றுக்கொண்டது. தீர்ப்பும் வந்தது. அதற்குப் பிறகு வழக்கு, மன்றத்தில் என்ன பாடுபட்டது என்பதை நாம் பார்த்தோம். இவற்றை வைத்துக்கொண்டு பார்த்தால் நீதி விசாரணைக் கமிஷன் ஒரு தீர்ப்பைச் சொல்லிவிட்டால் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிற நிலைமை நாட்டிலே இல்லை. அப்படி நீதி விசாரணைக்குப் பிறகு ஒரு வழக்குமன்றத்திற்குப் போக வேண்டிய கட்டாயமும் நமக்கு இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். யார் விசாரிப்பது, நியாயமான முறையில் அதைச் செய்ய வேண்டுமென்று வரும்போது அந்தக் காரியங்களை நன்றாகப் புரிந்து அந்த அடிப்படையிலே நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம். இப்போது, திருமெய்ஞானபுரத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது என்பதைப்பற்றியெல்லாம் இங்கே கூறி இருக்கிறார்கள். அங்கேதான் நான் ஒரு பிரச்சனையை அவை முன்னால் வைக்க விரும்புகிறேன்.

குற்றம் செய்கிறார்கள், குற்றம் செய்துவிட்டு அவர்கள் தப்பிவிடுகிறார்கள். அப்படியானால் தப்பிவிடுகிறவர்களைத் தேட வேண்டிய பொறுப்பில் அவர்கள் அங்கே இருக்கிறார்கள், கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்யவேண்டிய பொறுப்பு போலீஸுக்கு இருக்கிறது என்பதில் நம்மில் யாருக்கும் ஆட்சேபணையில்லை. அதற்காக அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகள் அராஜகமான நடவடிக்கைகளாக இருக்குமானால், அதை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். ஆனால், அப்படிப் போகிறவர்களுக்கு ஏற்படும் ஆபத்து, அவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கி அவர்கள் உயிரையே பலி வாங்குகிற அளவிற்குச் செயலாக, நடவடிக்கையாக மாறுகிறது என்றால் அதிலிருந்து தன்னைத் தற்காத்துக்கொள்ள வேண்டாமா? காவல் துறையினரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்கள் மருத்துவமனையில் இருக்கிறார்கள். அதேபோல் சிலர் இறந்து போயிருக்கிறார்கள். அப்படி இறந்தவர்களுக்காக நாம் வருத்தப்படுகிறோம். ஒரு நியாயமான காரணத்திற்காக இறந்தார் என்றால் இயற்கையாக இறந்தார் என்றால் கவலையில்லையென்றாலும் அப்படியும் கூட சில சமயங்களில் இறந்தவர்களுக்காக அவர்கள் தகுதி, நாட்டிற்கு அவர்கள் தேவை என்று வரும்போது நாம் கண்ணீர் விடுகிறோம் கட்சி சார்பற்ற முறையில்.

இது அப்படியல்ல, வாழ வேண்டியவர்கள் இடைக்காலத்தில் சுடப்பட்டு இறக்கிறார்கள் என்றால், எவ்வளவு அநீதி ஏற்படுகிறது! ஆனால், ஒரு பணியை ஒருவரிடம் ஒப்படைத்துவிட்டு அந்தப் பணியைச் செய்கின்ற நேரத்தில் அதை நிறைவேற்றுகிற முறை தவறு என்று சொல்லி அவர்களை சமாதானப்படுத்தி அனுப்ப வேண்டுமென்று சொன்னால் உயிர் போகிற நேரத்தில், இனி உயிர் தப்பாது என்ற நிலை ஏற்படும்போது என்ன செய்ய முடியும்? அமரர் அண்ணா அவர்கள் ஒரு இடத்தில் பேசியதாக எனக்கு நினைவு. “புழுவால் எதையும் செய்ய முடியாது. ஆனால் திரும்பத் திரும்ப அதை சித்திரவதை செய்து கொண்டிருந்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றாலும் அது நெளிந்தாவது தன் எதிப்பை தன் வேதனையை உடலால் வெளிப்படுத்த முனையும் என்று சொல்லி இருக்கிறார்கள்”. அப்படியிருக்கும்போது, எவ்வளவுதான் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் அமைதியாக இருக்க வேண்டும், துப்பாக்கியை எடுத்துச் சுடக்கூடாது என்றாலும் அவர்கள் சாகடிக்கப்படக்கூடிய நிலைமைக்கு வந்த பிறகு அவர்கள் எப்படி தங்களை காத்துக்கொள்ளாமல் இருக்க முடியும்?

மாண்புமிகு உமாநாத் அவர்கள் எனக்காக பேசியதற்காக நான் முதலில் நன்றி கூறுகிறேன். அவர் பேசியது எனக்கு உதவி செய்வதாக அமைந்திருக்கிறது. எம்.ஜி.ஆர் படம் அங்கே இருந்தது. அதை உடைத்திருக்கிறார்கள் என்றார்கள். இதிலிருந்து என்ன வெளிப்படுகிறது. எங்களுக்கு ஆதரவானவர்கள் தான் அப்படி வைத்துக்கொள்ள முடியும். அவர்கள் நடவடிக்கை எடுக்க, தங்கள் கடமையைச் செய்யப் போகின்றபோது, யார் எதிர்த்தாலும் அவர்கள் தங்கள் கடமையைச் செய்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து வெளிப்படுகிறதே தவிர, எம்.ஜி.ஆர். படம் உள்ளே மாட்டியிருந்ததற்காக அவர்கள் கடமையிலே இருந்து தவறு செய்தார்கள் என்று யாரும் கூற மாட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட இது உதவியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிலரை வீட்டினுள்ளே சென்று தேட வேண்டிய அத்யாவசியம் வரலாம். இப்போதுகூட அண்மையில், வழக்கு மன்றத்தில் இப்படிப்பட்ட பிரச்சினை வந்த நேரத்தில், எப்படிப் போய்க் கண்டுபிடிப்பது என்பதைப் பற்றியெல்லாம் தீர்ப்பு வரப்போகிறது. அப்படி வந்தபிறகு, அதைப் பற்றி பேசலாம் என்றாலும், நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தவறு நடந்திருக்குமானால், நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் நான் உறுதியாகக் கூறுகிறேன். அதை நம்ப வேண்டும்.

நேற்றைக்கு முன்தினம் என்று நான் கருதுகிறேன். சிலர் பேசும்போது சொன்னார்கள். நமது திரு. அம்பிகாபதி என்றுதான் நான் கருதுகிறேன். காவல் துறையிலே இருப்பவர்கள் வன்முறையில் ஈடுபடுகிறார்கள் என்று கூறினார்கள். அவர் வரலாற்று அம்பிகாபதியாக இல்லாமல், வன்முறைக் கவிபாடுபவராக இருக்கிறார். அவர் இப்போது அவையிலே இல்லை. அப்பேர்ப்பட்ட எண்ணத்தை அவர் வெளியிட்டார்கள். ஏதோ பந்த் நடக்கிறது. வேலை நிறுத்தம் நடக்கிறது அப்போது ஒரு பஸ் போகிறது, கற்களை வீசும்போது இரண்டு கண்ணாடிகள் உடைந்தால் என்ன நஷ்டம். அதற்குச் சுட வேண்டுமா என்று சொன்னார்கள். அந்த வண்டியிலே போகின்ற பொதுமக்களுக்கும் அதனால் துன்பம் ஏற்படுகிறது. அது தொல்லை இல்லையா? ஆபத்து இல்லையா?

சிலர் சொல்வார்கள், பெரிய யானையை புளியங்கொட்டையால் அடித்துக் கொன்றுவிட முடியுமா என்று. படாத இடத்தில் பட்டால், உயிர் போகும். தவறி கீழே விழுந்தால், பிறகு எழுந்து 5, 10 அடி நடக்கின்றபோது சிலர் செத்து விடுகிறார்கள். காரணம், மண்டையில் படாத இடத்தில் அடிபடுகிறது. அதைப்போல், அந்தப் பேருந்தில் செல்கின்ற மக்களுக்கு பாதுகாப்பு இல்லாத வகையில், அந்தப் பேருந்தைத் தாக்குவது, அந்த ஓட்டுநரைத் தாக்குவது, நடத்துனரைத் தாக்குவது, அதிலிருக்கும் குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிப்பது என்பது எப்படி நியாயமாகும் என்று கருதுகிறீர்கள் என்பதை நான் திரு. உமாநாத் அவர்களை மட்டும் கேட்கவில்லை, அந்த கொள்கைக்குச் சொந்தக்காரர்கள் யாராக இருந்தாலும், அவர்களையும் கேட்க விரும்புகிறேன். இதை நியாயம் என்று சொல்ல முடியுமா?

வேலை நிறுத்தம் செய்கிறவர்களை நாங்கள் வேலை செய்துதான் தீர வேண்டுமென்று சொன்னால், அது வேறு. நாங்கள் வேலை செய்ய மாட்டோம், அது எங்கள் விருப்பம். எண்ணம் என்று சொல்லுகிறார்கள். ஆனால், நாங்கள் வேலை நிறுத்தம் செய்கிறோம் என்று சொல்லிவிட்டு, வேலைக்குச் செல்லுகின்றவர்களைத் தாக்குவது, தடுப்பது அல்லது பொதுமக்கள் பயணிக்கும் வண்டிகள் போகும்போது, அந்த பேருந்துகளைத் தாக்குவது எப்படி நியாயம் என்று சொல்ல முடியும்? இது வேலை நிறுத்தமா? அல்லது வேலைக்குச் செல்லுகிறவர்களை நிறுத்துவதா? எனவே, இது வேலை நிறுத்தமல்ல. வேலை நிறுத்தம் என்றால், வேலைக்குச் செல்ல மாட்டோம் என்று தங்களை கட்டுபடுத்திக் கொண்டு, சட்டப்படி எது வந்தாலும் அதைத் தாங்கிக்கொள்வோம் என்று சொன்னால், அது ஒரு கட்சியின் முடிவு. அதை ஒத்துக்கொள்கிறேன். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், பேருந்துகளிலே போகின்றவர்கள் என்ன தவறு செய்தார்கள்? அவர்கள் தாங்கள் போகவேண்டிய இடங்களுக்குப் போக வேண்டாமா? அவர்கள் தங்கள் பணிகளைச் செய்ய வேண்டாமா? அப்படி பேருந்துகள் போவதைத் தடுப்பதனால், அழிப்பதனால், அதுவும் அவைகள் நாட்டுடமையாக வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், அவை யாருடைய உடைமையாக இருந்தாலும், திரும்ப வாங்கி, மக்களுக்கு அவற்றைப் பயன்படுத்துவது என்றால் எப்படி முடியும்?

தீப்பந்தம் எறிகிறார்கள். தீ பரவுகிறது. கீழே இறங்க முடியாமல் உள்ளே சிக்கிக்கொண்டு அவதிக்குள்ளாகி விடுகிறார்கள். ஆபத்தில் சிக்கிவிடுகிறார்கள். அந்த மக்களின் நிலைமை என்னாவது? அதைத் தடுக்க வேண்டாமா? அதைத் தடுக்க காவல் துறையினர் சென்றால் அவர்களுக்கும் ஆபத்து என்றால் என்ன ஆகும்? இங்கே சிலர் சொன்னார்கள், இத்தனை கொலைகள், இத்தனை கொள்ளைகள், இத்தனை திருட்டுக்கள் நடந்துகொண்டிருக்கின்றன. அதிகமாக நடக்கின்றன என்று சொன்னார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் யாரும் தவறாக எண்ணக்கூடாது. எந்தப் போராட்டம் நடந்தாலும் அந்தப் போராட்டத்திற்கு முன்னால் காவல் துறையினர் சிலரைக் கைது செய்கிறார்கள் அவ்வாறு காவல் துறையினர் அவர்களைக் கைது செய்து வெளியே விடுகிறவரையில் குற்றங்கள் குறைகின்றன என்ற புள்ளி விவரத்தை வைத்திருக்கிறேன். அதை நான் சொல்லும்போது தவறாக எண்ணக்கூடாது. அனைத்திந்திய அண்ணா தி.மு.க. எதிர்கட்சியாக இருந்து போராட்டம் நடத்தும்போதும் குற்றங்கள் குறைந்தன. அதற்குப் பிறகு அவர்கள் விடுதலை செய்யப்படும்போது குற்றங்கள் அதிகமானால் நாட்டின் நிலைமை என்னாவது? முப்பத்தைந்து இலட்சம் மக்களைக் கொண்ட மாநகராட்சியில் 500 பேர்களைக் கைது செய்து உள்ளே வைத்தவுடன் நாட்டில் குற்றங்கள் குறைகின்றன என்றால் என்ன அர்த்தம்? இது ஒரு அரசியல் கட்சிக்கு எப்படிச் சொந்தமாகும். அரசியல் கட்சிகள் நடத்தும் போராட்டத்தைப் பயன்படுத்திக்கொள்கிறவர்கள் தனியாக இருக்கிறார்கள். எந்தக் கட்சி போராட்டத்தில் இறங்கினாலும் அதைப் பயன்படுத்திக்கொள்கிறவர்கள் அவர்கள். அவர்கள் எல்லாம் கட்சிக்காரர்களா? அதே போல் பேருந்தை தீயிட்டுக் கொளுத்துகிறவர்கள், கல் எறிபவர்கள் ஆகியவர்களை எல்லாம் கட்சிக்காரர்களாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்போது, "இவர்கள் மேல் ஏன் நடவடிக்கை எடுக்கிறீர்கள்" என்று கேட்பது எப்படி நியாயமாக இருக்க முடியும்?

அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். அவசரச் சட்டத்தை நம்பியே இந்தக் கட்சி இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அவசரச் சட்டத்தைப் போடுகிறவர்கள் வேண்டுமென்றே போடவேண்டிய அவசியம் கிடையாது. முன்பு ஒரு அவசரச் சட்டத்தை கொண்டு வந்தோம். போக்குவரத்துத் தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்வார்கள் என்ற நிலைமை ஏற்பட்டபோது கொண்டுவந்தோம் ஆனால் நாங்கள் அதைப் பயன்படுத்தவே இல்லை! அதற்கு ஜனாதிபதியின் அங்கீகாரம் வந்த பிறகும், போக்குவரத்துப் பணியாளர்களிடத்தில் பேச்சுவார்த்தை நடத்தி அதிக ஊதியம் கொடுத்து பிரச்சினையைத் தீர்த்தோமே தவிர, அந்தச் சட்டத்தை பயன்படுத்தவே இல்லை! சட்டமன்றத்தில் அதைக் கொண்டுவரக்கூடாது என்று சொன்னதை ஏற்றுக்கொண்டு அறிமுகப்படுத்த இருந்ததை வேண்டாமென்று தடுத்து நிறுத்தினோம். இந்த அரசின் எண்ணம், எங்கள் எண்ணம் உண்மையில் புதிய புதிய அவசரச் சட்டங்களை

கொண்டுவந்து போட்டு எல்லோரையும் பயமுறுத்துவதற்கு அல்ல. நீங்கள் எல்லாம் பயப்படுகிறவர்கள் என்று நான் நம்பவேண்டுமா ? அவசரச் சட்டம் கொண்டுவந்தால் பயந்து விடுவீர்களா ? "நான் மறைந்திருக்கத் தீர்மானித்தால் யாரும் என்னைக் கண்டுபிடிக்க முடியாது" என்று இதே மன்றத்தில் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். அவசரச் சட்டத்தை வைத்து உங்களை மிரட்டி விடலாம். நிறுத்திவிடலாம் என்று எண்ணியது கிடையாது !

அன்று என்ன நடந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் முழுமையாகத் தெரிந்து வைத்திருப்பாரேயானால் என் பக்கமே அவர்கள் வாதாடியிருப்பார்கள். அங்கே பேசிய தமிழ்ப் பேரறிஞர்கள் ஒரு கருத்தை வெளியிட்டார்கள். திருக்குறளுக்கு விளக்கம் தருகிறவர்கள் அதற்கு விவரமான கருத்துக்களை வெளியிடுகிறவர்கள், வெவ்வேறு விதமாக எழுதிவிடுகிறார்கள். ஆகவே, ஒவ்வொருவருடைய, அவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்ப, அவரவர்கள் கொள்கைக்கு ஏற்ப அல்லது நம்பிக்கைக்கு ஏற்ப, அனுபவத்திற்கு ஏற்ப அவர்கள் ஆய்ந்தியிருக்கிற முறைக்கேற்ப அவர்கள் வெளியிடுகிறார்கள். ஆகவே, படிக்கிறவர்கள் எந்தப் புத்தகத்தை வாங்கிப் படிக்கிறார்களோ அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் அந்தக் குறளுக்கு. ஆகவே, அது பொருத்தமாக இல்லை. ஆகவே, பேரறிஞர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து அவர்கள் இந்தக் குறளுக்கு இதுதான் பொருள் என்று எழுதி வைப்பார்களானால் மாணவ, மாணவியருக்கு அது பயன்படும். அதிலே சர்ச்சைகள் வராது என்றார்கள். அதற்கு நான் உதாரணத்தையும் சொன்னேன். ஒருவருக்கு, அரசியல் கட்சியைச் சேர்ந்த ஓர் அம்மையாருக்கு நான் தொலைபேசியில் பேசும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னேன். இந்தப் போராட்டங்கள் இவைகளைப்பற்றி பேசும்பொழுது நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதைப் பற்றி ஒரு குறளை நான் படித்து நீங்கள் தயவுசெய்து படித்துப் பாருங்கள் என்றேன். எந்த எண் என்று கேட்டார்கள், நான் சொன்னேன். அவர் படித்துவிட்டு என்னை நீங்கள் விபச்சாரி என்று நேராகச் சொல்லியிருக்கலாமே– இந்த அவையிலே நான் வார்த்தைக்காகச் சொல்லுகிறேன். மன்னிக்கவேண்டும் ஏன் இப்படி மறைமுகமாக நீங்கள் சுட்டிக்காட்டுகிறீர்கள் என்று சொன்னார்கள். உடனே என்னிடமிருந்த அந்த குறளுக்கு என்ன விளக்கம் தரப்பட்டிருக்கிறதோ அதைப் படித்துக்காட்டி இதுதான் அம்மா அதற்குப் பொருள், நான் அப்படிச் சொல்லவில்லை என்றேன். உடனே அவர்கள் படித்துக் காண்பித்து அதுதான் என்றார்கள். அவர்கள் சொன்னது, வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதிய குறள் புத்தகம் தமிழ்ப் பேரறிஞர் கன்னியப்ப நாயக்கர் எழுதியது நான் சொன்ன புத்தகம் என்று கூறினேன். அங்கே நிலைமையைச் சுட்டிக் காட்டினேன். இப்படி இருக்கிறது. ஆகவே, இதுபோன்றவற்றைப் பற்றி மாணவர்களுக்கு மற்றவர்களுக்கு அவர்கள் படிக்கிறபோது ஒரு குறளுக்கு இன்னதுதான் பொருள் என்ற வகையில் ஏன் இருக்கக்கூடாது என்று சொன்னேனே தவிர, குறளுக்குக்கூட தடை விதிக்க வேண்டுமென்று அவ்வளவு கீழ்த்தரமான புத்தியுடைய ராமச்சந்திரன் இங்கே இல்லை. அவன் இருக்க மாட்டான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேராசிரியர் விளக்கத்தை நான் புரிந்துகொண்டேன். ஏற்றுக்கொண்டேன் என்பதல்ல.புரிந்துகொண்டேன்.ஒன்றைநான்குறிப்பிடவேண்டும்.குறள்எல்லோராலும் வரவேற்கப்படவேண்டிய ஒன்று என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. வேறு பலர் கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றன. மற்ற நூல்களை விட குறள் மிக மிக உயர்ந்தது என்பதிலே நமக்குக் கருத்து வேறுபாடு இல்லை. அதே நேரத்திலே பள்ளி மாணவ, மாணவியர்கள் படிக்கும்பொழுது வெவ்வேறு விதமான கருத்துக்களைத் தெரிந்துகொண்டு அவர்கள் படிக்கின்ற நேரத்திலே தெரிந்துகொள்கிற நேரத்திலே அவர்கள் உச்சரிக்கின்ற நேரத்திலே வேறுபாடான கருத்துக்கள் வருமானால் அது அந்தக் குறளுக்கு இருக்கிற மரியாதையை குறைத்துவிடக் கூடாது என்ற அச்சமே தவிர அதற்கு இருக்கின்ற அந்தத் தகுதியினால் தான் எத்தனை வேண்டுமானாலும் பொருள் கொள்ளலாம் என்ற அதற்குரிய சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஒருவர் பேச்சுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கருத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமானால் பேச்சு வன்மையுடையவர்கள், திறமையை எடுத்துக்காட்டுகிறது என்று நாம் பெருமைப்பட முடியும்.

ஆனால், நாட்டிலே சர்ச்சைகள் வளர்வதற்கு இடம் கொடுக்கக்கூடாது. எதைப் பொதுநூலாக ஆக்க வேண்டும், தேசீய நூலாக ஆக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோமோ, எதைச் செய்ய வேண்டுமென்று கேட்கின்றோமோ அதற்கு உரித்தான நிலையில் ஒரு குறிப்பிட்ட கருத்து அதற்கு உண்டு என்று வரையறுத்து அதிலும் இராமச்சந்திரன் அல்ல, குறள் தெரியாத, தமிழ் தெரியாத என்னை வைத்துச் சொல்லவில்லை, அங்கேயிருந்த பெரியவர்கள், பேரறிஞர்கள் சொன்னதைத்தான், பெயரைக் குறிப்பிடக் கூடாது என்று விட்டுவைத்திருக்கிறேன், அவர்கள் சொல்லியதைத்தான் பெயரைச் சொன்னாலும் பரவாயில்லை என்று நினைக்கிறேன். சொல்லிவிடுகிறேன், முத்தமிழ் காவலர் போன்றவர்களெல்லாம் சொன்னதற்குப் பிறகுதான் நான் அதைத் சொன்னேனே தவிர என்னுடைய சொந்தக் கருத்து அல்ல. அவர் சொன்ன பிறகு, அதைப் பின்பற்றி இன்னும் பலபேர் சொன்னபிறகு, நான் எனது கருத்தை இதற்குத் துணையாக வைத்தேனே தவிர வேறல்ல.

இதை வைத்துக்கொண்டு, குறளுக்குக்கூட ஒரு சட்டம் கொண்டுவர விரும்புகிறேன் என்று நான் சொன்னேன் என்று எடுத்துக்கொண்டால், நான் வெளியிலே எதையுமே பேசக்கூடாது என்பதுபோல எனக்கு ஒரு தடைச் சட்டம் அவசரச் சட்டம் போடுவதைப்போல ஆகிவிடுமே தவிர இது வேறாக இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன்.

அதிலும் இந்த அவசரச் சட்டம் என்பது அவசரத்தால் செய்யப்படுகிற சட்டமே தவிர, அவசியத்தால் செய்யப்படுகிற சட்டமே தவிர, நிதானித்துப் பேசி, விவாதித்து, அதற்குப்பிறகு கொண்டு வருவதற்கான இடைவெளி தராத காரணத்தால் இதைக் கொண்டுவந்ததாக வேண்டுமென்ற நிலை வருகிறதே தவிர வேறல்ல என்பதை இங்கே நான் திரும்ப திரும்பச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அந்த அவசரச் சட்டத்திலே சொல்லப்படுகின்றவை எவை என்பதில்தான் மாறுபாடு. இங்கேகூட எதிர்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் நேற்றையதினம் சொன்னார்கள் என்று கருதுகிறேன். நமது சட்ட அமைச்சரவர்கள் சொன்னதற்குச் சொன்னார்கள். ஒரு விளக்கத்திற்குச் சொல்லும் பொழுது பொதுமக்கள் என்று சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதைப்பற்றிப் பேச்சு நடந்தது; அது வேறு விஷயம்!

இதுபோல, பொதுக் கருத்துக்களைச் சொல்லும்பொழுது யாரிடமிருந்து, எங்கேயிருந்து அந்தக் கருத்துக்கள் வருகின்றன என்று கருதாமல், எத்தகைய கருத்துக்கள் வருகின்றன என்பதை எண்ணிப்பார்ப்பதுதான் இந்த மாமன்றத்திலே இருப்பவர்களின் தகுதி என்பதை நாம் நிர்ணயித்திருக்கிறோம். மற்றவர்கள் புரிந்துகொள்ள நாம் நடத்திக் காட்டி இருக்கிறோம்.

அந்த வகையிலே, இந்த அவசரச் சட்டம் வருவது, அதை மறுபடியும் அவையிலே கொண்டு வருவதெல்லாம் அவசரச் சட்டத்தை வைத்தே நடத்துவது என்பது அல்ல. அப்படிச் சொன்னால் இதற்கு முன்னால் இருந்த அரசுகளும்கூட அவசரச் சட்டங்களைக்கொண்டு வந்திருக்கின்றன. அதை நான் சொல்வது குறை சொல்வதற்காக அல்ல. அந்தச் சூழ்நிலைகளை மற்றவர்கள் உருவாக்கினால், ஒரு அரசுக்கு அதை செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது, என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றை மட்டும் நான் படித்துச் சொல்ல விரும்புகிறேன்.

1975ஆம் ஆண்டு 20 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன, 1980ஆம் ஆண்டு 15 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன, 1981ஆம் ஆண்டு 19 அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன. இதைச் சொல்வதிலிருந்து நீங்கள் தவறு செய்யவில்லையா. ஆகவே, நான் செய்யக்கூடாதா என்கிற கேள்விக்கு நான் வரவில்லை. அப்படி அவசரச் சட்டத்தை உண்டாக்குகின்ற நிலையை ஏற்படுத்துகின்றவர்கள் தவறு செய்கிறார்கள்; அப்படிப்பட்ட அவசரத்தை ஆளுகின்றவர்களுக்கு உண்டாக்குகிறார்கள். ஆகவேதான், அவர்கள் கொண்டுவரவேண்டி இருக்கிறதே தவிர இதில் வேறு நோக்கம் இல்லை என்பதை இங்கே நான் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன்.

அவசரச் சட்டத்தை நம்பியே வாழக்கூடாது என்று சொன்னதற்குத்தான் இந்த விளக்கங்கள். அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொண்டிருப்பீர்கள். ஆனால், இதிலே போடப்பட்டிருக்கிற அவசரச் சட்டங்கள் பற்றி விரிவாக நான் படிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. ஆனால், ஒன்றைச் சொல்கிறேன். அவசரச் சட்டங்களை வெளியிட்ட பிறகு, அவற்றைப் பயன்படுத்துகின்ற முறை எப்படி என்பதையும் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு அவசரச் சட்டத்தை கொண்டுவருகிறோம் என்றால் இன்றைய தினம் அதைக் கொண்டு வந்தாலொழிய நாளைய தினம் நாட்டிலே அமைதி இருக்க முடியாது என்று இருக்குமானால் கொண்டு வருவார்கள். இன்றைய தினம் யாருக்காவது ஏழைகளுக்குத் தொல்லைகள்

ஏற்படுகின்றன என்றால் அதைத் தவிர்க்க வேண்டும். இங்கே எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கூட குறிப்பிட்டுச் சொன்னார்கள், கடன் நிவாரணச் சட்டம் பற்றி அதுவும் ஒரு பாதுகாப்புச் சட்டம்தான்.

அதுபோல், கல்லூரி முதலியவற்றிலே ஒழுங்கு, ஒழுக்கம் ஏற்படுத்துவதற்காக அவசரச் சட்டம் என்றால் அதுவும் தேவையான சட்டம்தான். இங்கே நான் சொல்லவேண்டியவைகளைச் சொல்வதால் நான் சொல்கின்ற உதாரணங்கள் எல்லாம் அந்தப் பணியிலே இருக்கின்றவர்கள் அத்தனை பேருக்கும் பொருந்தும் என்று யாரும் எண்ணிவிடக் கூடாது. ஆகவேதான், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எனக்கு ஒரு செய்தி வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு ஆசிரியர் அங்கே உள்ள ஒரு மாணவியை தவறாகப் பயன்படுத்த முனைந்தார் என்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதற்காக ஒரு போராட்டம் ஏற்பட்டு பஸ்மீது கல்லை விட்டெரிந்தார்கள் என்றால் பஸ் என்ன செய்தது, அந்த ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லலாம். நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோல், ஒரு மாணவர் தவறு செய்துவிட்டார், ஆசிரியர் தண்டித்துவிட்டாரா, உடனே மாணவர்கள் அது உயர்நிலைப்பள்ளியானாலும் சரி கல்லூரியானாலும் சரி, ஆசிரியருக்கு எதிராகப் போராட்டம் அல்லது மாணவர்களுக்கெதிராக ஆசிரியர் போராட்டம் என்றால் இந்தப் போராட்டங்களின் விளைவு எங்கே போய் சேருகின்றது என்பதுதான் நாம் நினைத்துப்பார்க்க வேண்டிய முக்கியமான ஒரு அவசரமான நிலையாகும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அவசரச் சட்டம் என்பதில் இங்கே கொண்டுவந்திருக்கிற அவசரச் சட்டம் தடுப்புக் காவல் சட்டம். அதைப் பற்றி கொஞ்சம் காரசாரமாகப் பேசினார்கள், கொஞ்சம் வேகமாகப் பேசினார்கள். நான் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். யாராக இருந்தாலும், யார் ஆட்சியிலே இருந்தாலும், அதிகாரிகள் கடுமையான சட்டத்தைக் கையிலே வைத்துக்கொண்டிருந்தாலும் சரி, அல்லது சாதாரணமான சட்டத்தை நடைமுறைப்படுத்துகிற சட்டத்தைக் கையிலே வைத்துக்கொண்டிருந்தாலும் சரி, அவர்களுடைய செயல்முறை கடுமையாகவும் ஆகும். இல்லை அது மிகச் சாதாரணமான முறையிலே பயன்படுகின்ற நிலைமையும் ஆகும். ஒரு ஆய்வாளர் சொல்லியிருக்கிறார். நானே என்னுடைய காவல் நிலையத்தில் 20 திருமணங்களை நடத்தி வைத்தேன் என்று, பத்திரிக்கைகளுக்குச் செய்தி கொடுத்தார். சட்டம் இல்லையா ? நலம் செய்து குடும்பங்களை ஒற்றுமைப்படுத்தியிருக்கிறார். ஆகவே, சட்டங்களைக் கையாளுகின்றவர்களுடைய எண்ணத்தைப் பொறுத்து சட்டங்கள் பயன்படும் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

அதேபோல், அரசு இப்படி உத்தரவிடுகிறதே, அதைச் செய்தே தீரவேண்டுமென்று விரும்புவதற்குப் பதிலாக இன்னமும் அதிகமாகச் செய்து நல்ல பெயர் எடுக்கவேண்டுமென்று விரும்புபவர்கள் இருப்பார்கள். அல்லது, இந்த அரசுக்குக் கெட்டபெயர் வந்துவிட்டுப் போகவேண்டும் என்பதற்காகச் செயல்படக்

கூடியவர்களும் எங்கேயாவது ஒருவர், இருவர் இருந்தாலும் இருக்கலாம். ஆனால், இந்த அரசைப் பொறுத்தவரையில், சட்டம் கொண்டுவரப்படுகிறதே தவிர அந்தச் சட்டத்தை எதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அதற்குப் பயன்படுத்துவோம் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். நேற்றைய தினமும் அதற்கு முந்தைய தினமும் இங்கே பேசியவர்கள் சாராயக் கடைகளை பற்றிச் சொன்னார்கள். உண்மையிலே, பேராசிரியர் அவர்கள் மிக மனவேதனையோடு சொன்னார்கள். தவறுகள் நடந்துகொண்டே இருக்கின்றன என்றார்கள். அது எப்படித் துணிவோடு நடக்கிறது என்றால் கைது செய்து உள்ளே சென்றவுடன் ஜாமீனில் வெளியே வருகிறார்கள். மறுபடியும் அந்த வேலைகளை அவர்கள் தொடர்கிறார்கள். அதற்கிடையில் யார் யாருக்கு என்ன என்ன கொடுக்க வேண்டுமோ அது கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அதுபோல், கொடுக்கப்பட வேண்டியிருந்தால் கொடுக்கப்படலாம். அதனால், அவர்கள் தப்பித்துக்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இவையெல்லாம் இருக்கும்போது அத்தகையவர்களைக் கைது செய்து வெளியே வர முடியாமல் செய்கின்ற நிலைமை ஏற்படுமானால் அதனால் இந்த நாட்டிற்கு நல்லது விளையுமானால் அதற்காக ஒரு சட்டம் கொண்டுவருவதில் தவறில்லை என்பதுதான் இந்த அரசின் நோக்கம். கடுமையாக இந்தச் சட்டம் கொண்டு வந்தோம், நல்ல எண்ணத்தோடு என்றால் அந்த நல்ல எண்ணத்தோடுதான் இது வருகிறதே தவிர எந்தக் கட்சியையும் பழிவாங்குவதற்காக அல்ல என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்வேன். அந்த எண்ணம் இல்லை.

முதலில் யாராவது கைது செய்யப்படுவார்கள் என்று தோன்றி இருந்தால், எங்களுக்கு வேண்டியவர்கள் யாராவது தவறு செய்தால் அவர்கள்தான் முதலிலே கை வைக்கப்படுவார்களே தவிர, அதற்குப் பிறகுதான் மற்றவர்கள் என்பதை இங்கே நான் அறுதியிட்டுக் கூறுகிறேன். அப்படி பலர் மேல் இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சட்டத்தின் அடிப்படையிலே கூட, அதைத் தொடர்ந்து செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் யாராவது அதிகாரிகளே எங்காவது தவறு செய்தால், அவர்களையும் கைது செய்வதற்குக் கூட இந்த சட்டம் பயன்பட வேண்டி வரலாம் என்று நான் சொல்வதை நீங்கள் நம்பவேண்டும் என்பது என் வேண்டுகோளாகும். ஆகவே, அவசரச் சட்டம் கொண்டு வருவது என்பது பழிவாங்குவதற்காக அல்ல!

ஆனால், அதோடு இன்னும் சொல்கிறார்கள். பத்திரிக்கைகளையே தடை செய்ய வேண்டும், எதிர் கருத்து எழுதினால் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஒரு பத்திரிக்கையிலே ஒரு செய்தி வந்தது. 'எம்.ஜி.இராமச்சந்திரன் வீட்டில் சி.பி.ஐ. சோதனை. எம்.ஜி.இராமச்சந்திரன் வீட்டில், ராமாவரம் தோட்டத்தில் சி.பி.ஐ. சோதனையிட்டார்களாம்' இந்த 'ளாம்' இல்லை, அது கூட இல்லை. 'சோதனை

இட்டார்கள்’. ‘பல மணி நேரம் சோதனையிட்டார்கள்’, அப்புறம் மாம்பலத்தில் உள்ள அவருடைய அலுவலகத்தில் சோதனையிட்டார்கள். இப்படி ஒரு செய்தி பத்திரிக்கையிலே வருகிறது என்றால், அதற்கு என்ன ஆதாரம். இன்கம்டாக்ஸ் ஆபீசர் வந்தால் அது உடனே வெளியே தெரியும், ஒத்துக்கொள்வதிலே நமக்கு ஒன்றும் நட்டம் இல்லை., அது எங்கும் நடக்கிற காரியம் சி.பி.ஐ. வந்து தேடுகிறார்கள் என்றால், தேவை இருந்தால் தேடுவார்கள், எங்கே போக வேண்டுமோ போவார்கள், கண்டுபிடிப்பார்கள், தண்டனை கொடுக்கப்பட வேண்டி இருந்தால் சட்டப்படி கிடைக்கும். ஆனால், இல்லாத ஒன்றை, நடக்காத ஒன்றை, இப்படிப் பத்திரிக்கையிலே நடந்ததாகப் போடுகிறார்களே, இதுபோல செய்திகளைத் தவறாக, வேண்டுமென்றே வெளியிடுகிறவர்களை என்ன செய்வது, எத்தனையோ முறை சொல்லிப் பார்த்தாகிவிட்டது. எனக்காக இதைக் கொண்டு வரவில்லை, இன்னும் பல இருக்கின்றன. அவைகளுக்காகத்தான் ஆகவே, எதிராளி மேல், அந்த நிர்வாகி மேல், ஆசிரியர் மேல் எல்லாம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். கைது செய்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் வெளியே வந்திருக்கிறார்கள் என்பதையும் மறந்து விடக் கூடாது, நானும் கூட மான நஷ்ட வழக்கு போட்டு இருக்கிறேன். ஆட்சிக்கு வந்த **2, 3** மாதங்களில் நான் ஏதோ லஞ்சம் வாங்கினேன் என்று போட்டிருக்கிறார்கள். அது வழக்கு மன்றத்திலே இருக்கிறது. நான் சாட்சிச் சொல்ல இருக்கிறேன். அப்போது உண்மை என்னவென்று வெளியே தெரியும். இதை எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், வேண்டுமென்றே, யாரையும், எதையும், அது நீதிபதியாக இருந்தாலும் சரி, வழக்குறைஞராக இருந்தாலும் சரி, போலீஸ் அதிகாரியாக இருந்தாலும் சரி, எந்த அரசியல் கட்சித்தலைவரானாலும் சரி, எழுதுகிறார்கள். நான் இந்தப் பத்திரிக்கையானாலும் இப்படிப்பட்ட செய்திகள் வெளியிடுவதைத் தடுப்பதற்கு எந்த வழியும் காணப்படவில்லை. பத்திரிக்கைகளுக்கு என்று ஒரு குழு இருக்கிறது. அந்தக் கவுன்சிலுக்கு அனுப்பினால், அவர்கள் இவர்களுக்கு அனுப்பிக் கேட்பார்கள். அதோடு சரி, அதற்குப் பிறகு என்ன நிலைமை ? மீண்டும் அதேபோலத்தான் வெளிவருகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையில்தான், டாக்டர் ஹண்டே அவர்கள் ஒரு வழக்கு போட்டிருக்கிறார்கள். அவர் கார் வாங்கி விட்டார் என்றோ, ஏதோ ஒரு வழக்கு, அவர்மேல் போட்டிருக்கிறார்கள். வேளியே வந்து விட்டார்கள். வழக்கு நடக்க இருக்கிறது உண்மையா, பொய்யா என்பது அங்கே தெரியும். தெரிந்தபிறகு என்ன நடவடிக்கை என்பதை இந்த மன்றமே உணரும் குற்றம் செய்ததாக நிரூபிக்கப்பட்டால், ஹண்டே அவர்களுக்கு என்ன தண்டனை என்பது இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்கப்படும். அதில் இல்லையானால், வழக்கு மன்றத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப்படுகிறதோ அதற்குரிய தண்டனை என்பது அங்கே அவர்கள் தீர்மானிப்பார்கள். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இந்த நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு என்ன வழி ஏதாவது ஒரு வழி சொல்லுங்கள். நாங்கள் அதைப் பற்றிப் பரிசீலினை செய்யத் தயாராக இருக்கிறோம் ! ஏதோ ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து பத்திரிக்கைகளையே நடத்த முடியாமல் செய்து விட வேண்டும் என்ற ஆசை இந்த அரசுக்கு நிச்சயமாகக் கிடையாது.

எனக்குத் தெரிந்த வரையில் இந்த சட்டத்தை யார் மீதாவது பயன்படுத்த வேண்டுமானால், அது பற்றி ஆய்வு செய்ய ஒரு குழுவுக்கு அனுப்பப்பட வேண்டும். அந்தச் சட்டம் தெரிந்த குழு அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி நடவடிக்கை எடுப்பது பொருத்தம்தானா என்றும் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு தான் நடவடிக்கை தொடர வேண்டிவரும் என்று நான் சொல்ல விரும்புகிறேன். சட்டம் இருக்கிறது என்பதால் உண்மைகளை மட்டுமே எழுதட்டுமே,அல்லது இப்படி நடக்கிறது என்று சந்தேகிக்கும் முறையில் எழுதட்டுமே, அதற்கு மறுப்புக் கொடுத்து விட்டுப் போகலாம். ஆனால் இப்படி நடைபெறுகிறது என்றும், நடந்து விட்டது என்றும் பத்திரிக்கைகளில் போடுகிறார்களே, அதை எப்படித் தடுப்பது. இப்படித் தவறான செய்தி போட்டுள்ளீர்களே, மறுப்புப் போட வேண்டும் என்று சொன்னால், 7 காலம் தலைப்பில், 8 காலம் தலைப்பில் போடப்பட்ட அந்த செய்திக்கு எங்கோ ஒரு மூலையில் திருத்தம் என்று சொல்லிப் போட்டு விட்டு, இருந்தாலும், நமக்கு வந்த தகவல்படி அது சரியானதுதான் என்றும் போடுகிறார்கள். இப்படிப்பட்டவற்றிற்குத்தான் என்னுடைய வருத்தத்தை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்தக் காரணத்திற்காகவும் எந்தப் பத்திரிக்கை மீதும் வீணான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. அப்படி எங்காவது செய்யயப்பட்டுவிட்டால், அதற்காக இந்த மன்றத்தில் பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். பொறுப்போடு செயல்படுகின்ற எந்த அரசியல் கட்சி மீதும், எந்தப் பத்திரிக்கைகள் மீதும் வேண்டும் என்றோ நடவடிக்கை எடுப்பதை இந்த அரசாங்கம் செய்யாது. எங்காவது தவறு நடந்து இருக்கிறது என்று சுட்டிக் காட்டினால், நாங்கள் நிச்சயமாக அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுப்போம் என்கிற உறுதியை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

நான் சொல்வதை முழுமையாகக் கேட்டுக்கொண்டால் நல்லது. இப்போது என்ன நடைபெறுகிறது என்றால் கைது செய்த பிறகு அந்தக் குழுவிற்கு அந்த வழக்கை அனுப்பி வைக்கிறோம். அவர்கள் பரிசீலித்து, அவரை வைத்துக் கொள்வது என்றால் தான் வைத்துக் கொள்கிறோம் அதன்பிறகுதான், வழக்கு மன்றத்தில் அது செல்கிறது. ஆகவே, வேறு பாதுகாப்புகள் இல்லாமல் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

தவறு செய்கின்றவர்கள் மீண்டும் அதே தவற்றைச் செய்யக்கூடாது என்பது தான் இந்த அரசாங்கத்தின் நோக்கம். அதைத் தவிர வேறு எண்ணம் இல்லை. வேறு பழி உணர்வும் இல்லை. யார் மீதும் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். இது எல்லோருக்கும் பொருத்தம் உடையது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். அப்படி இல்லாவிட்டால், திருத்தம் தேவையானால் நாங்களே திருத்தம் கொண்டுவர விரும்புவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எப்படியும் இது

பொதுவாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, அரசுக்காக மட்டும் இது பயன்படும் சட்டமாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு என்ன வழி செய்ய வேண்டுமோ அதைச் செய்ய, திருத்தம் தேவையானால் அரசே திருத்தம் கொண்டுவர தயாராக இருக்கிறது.

நியாய விலையில் மக்களுக்கு உணவு கிடைக்க வேண்டும் என்பதிலே இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஏறத்தாழ 16,000 கடைகளை இன்றைய தினம் உருவாக்கியிருக்கிறோம் என்றாலும், முழுமையாக உணவுப் பொருள் கிடைக்கிறதா,என்பதிலே பலருக்குச் சந்தேகம் இருக்கிறது. சில இடங்களில் இப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நன்கு தெரியும்.

இங்கே, ஒன்றை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 500 குடும்பங்கள் உள்ள இடத்தில் ஒரு நியாயவிலைக்கடை இருக்க வேண்டுமென்ற கோரிக்கை, அந்த எண்ணம், விருப்பம் அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும், அந்தக் கட்சியினுடைய இந்த கொள்கைக்கு யார், யார் சொந்தக்காரராக இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் இருக்கிறது என்பதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன், இந்த அரசும் ஏற்றுக்கொள்கிறது. அந்த 500 குடும்பங்களுக்கு ஒரு கடை என்று சொல்லும்போது பணியாளர்கள், எத்தனை பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்று கணக்கிட்டுப் பார்த்தோம். அதைப் போலவே கணக்கிட்டுப் பார்க்கும்போது, எத்தனை பேர்கள் பணியிலே ஈடுபட்டால் எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் கணக்கிட்டுப் பார்த்தோம். ஆனால், அந்த வகையில் அதை எப்படி அமல்படுத்துவது என்பதைப்பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்று இங்கே சொல்லும் போது அந்தக் கடைகளுக்குத் தேவையான உணவுப் பொருட்களை நாம் தந்தாக வேண்டும்.

ஆளுநர் உரையிலே, ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். உற்பத்தி செய்பவர்கள், நுகர்வோர்கள், இவர்களே ஒருங்கிணைந்து அமைப்புகளை உருவாக்கி, இவர்களே அதில் பங்குதாரர்களாக இடம்பெற்று ஒரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தினால், இப்படிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தி, அது பயன்படுமானால் அதை செய்ய அரசு சிந்திக்கிறது என்ற வகையில் அந்தக் கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கே எப்போதும்போல், வழக்கம்போல் இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அல்லது ஒரு நண்பர் அவர்கள் சொல்லும்போது சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி சரியாக இருக்கும் என்று அவர் சொல்லியிருக்கிறார். வாங்குவோர், உற்பத்தி செய்வோர், அவர்கள் இருவரும் இணைந்து ஒரு குழு அமைத்து, அதாவது கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தி அவர்கள் இந்த விநியோகத்தை ஏற்று நடத்த முடியுமா, நடக்கக்கூடியதா என்று கேட்டார்கள். நான் ஒரு சந்தேக விளக்கத்தைப் பெற விரும்பவில்லை, இருக்கிற சந்தேகத்தை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

விலைவாசி குறையவேண்டும், உயர்ந்துகொண்டே போகிறது, ஆனால், விலைவாசி உயந்துகொண்டே போகிறதே தவிர, உற்பத்தி செய்கின்றவர்களுக்குத் தேவையான அளவுக்கு, அவர்கள் செலவு செய்கிற அளவுக்கு, வருமானம் கிட்டவில்லை, இலாபம் இல்லை என்பது குறை. இதையும் கூறுகிறோம். ஒரு பக்கம் விலைவாசி உயருகிறது. இன்னொரு புறம் பொருட்களை எந்த அளவுக்குச் செலவு செய்து உற்பத்தி செய்கிறார்களோ, அவர்களுக்குத் தேவையான அளவுக்குக் கிடைக்கவில்லை. அப்படியானால், இடையிலே யார் நஷ்டப்படுவது என்பதுதான் கேள்வி.

பொதுமக்களுக்கு, அதிலும் உத்தரவாதமுள்ள சம்பளத்தைப் பெறமுடியாத நிலைமையில் இருக்கின்ற அந்த உழைக்கும் வர்க்கத்திற்காகக் கேட்கக்கூட நாதியற்ற நிலையில் அவர்கள் இருக்கிறார்கள் அந்த கோடிக்கணக்கான உழைக்கும் வர்க்கத்தினர் இன்றைய தினம் அத்தியாவசியமான பொருட்களை வாங்குவதற்காகக் கடைக்குச் சென்றால் அங்கே விலை உயர்ந்திருக்கின்றது என்ற நிலைமை ஏற்படுமானால் அவர்களுக்குத் தேவையான அளவுக்கு வருமானம் உயர்த்தப்படுகிறதா உயர்த்தப்பட முடிகின்றதா ? உயர்த்தும்படி செய்ய யாராவது முன்வந்து கேட்க முடிகிறதா என்றால் முடிவதில்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி கொடுக்க வேண்டும் என்று சொன்னோம். எவ்வளவு போராட்டத்திற்குப் பிறகு சில இடங்களிலே மட்டுந்தான் அது கொடுக்கப்படுகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது ! அதிலே எத்தனை நடவடிக்கைகள் ? எத்தனை தகராறுகள் ? வெளியே இருந்து ஆட்களை கொண்டுவர சுடாது என்று தடை. அவைகளை எல்லாம் செய்த பிறகும் சட்டத்தை விதித்து உத்தரவிட்டதற்குப் பிறகும் இதுதான் நிலைமை என்றால் சாதாரண மக்கள் என்ன செய்வார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ? இன்றைய தினம் என்.ஜி.ஓ.க்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்காகக் கேட்பதற்குச் சங்கங்கள் இருக்கின்றன. பல சங்கங்களோ, சங்கமோ எப்படி இருந்தாலும் அவர்களுக்குக் கேட்பதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். தொழிற்சாலையிலே வேலை செய்பவர்களுக்காகக் கேட்க ஆட்கள் இருக்கிறார்கள். அப்படிப் பலர் மாதச் சம்பளம் பெறுகின்றவர்கள் என்ற நிலைமையிலே அரசினிடத்திலே சம்பளம் பெறுகின்றவர்களாக இருந்தாலும், தனியார்களிடத்திலே சம்பளம் பெறுகின்றவர்களாக இருந்தாலும், அப்படிப்பட்ட பணியிலே இருப்பவர்களுக்கெல்லாம் கேட்க ஓர் அமைப்பு இருக்கிறது. ஆனால், அப்படி இல்லாத கோடிக்கணக்கான ஏழை மக்களுக்கு, அன்றாடம் வேலை செய்து சம்பாதிக்கிற மக்களுக்கு, இந்த விலைவாசி உயரும்போது அதற்கேற்றவாறு அவர்களுக்கும் போதிய வருமானம் வேண்டும் என்று கேட்க யார் இருக்கிறார்கள். நம்முடைய கருத்துக்களைச் சொல்கிறோம், விலைவாசி உயரக்கூடாது, ஏழைகள் கஷ்டப்படுவார்கள் என்று சொல்கிறோமே தவிர அதற்காக என்ன வழி செய்வது என்பது பற்றி யாரும் தனியாக சிந்தித்தோ அல்லது கூட்டாக சிந்தித்தோ எந்த முடிவும் எடுக்கவில்லை, அப்படி எடுப்பதும் அவ்வளவு எளிதான காரியம் அல்ல. ஆகவே, நியாய விலைக் கடைகளின் மூலம், நியாயமான விலையில்

பொருட்கள் கிடைக்கும் என்றால் அதாவது அவர்களுக்கு கிடைக்கின்றதே என்ற மகிழ்ச்சியாவது அவர்களுக்கு இருக்கும். ஆனால், அதை நிறைவேற்றுவதும் எளிதல்ல.

பொருட்களை உற்பத்தி செய்கின்றவர்களுக்கு விலை குறைந்துவிடக்கூடாது. வாங்குபவர்களுக்கு விலை உயர்ந்துவிடக்கூடாது. ஆகவே, இவர்கள் இருவரும் சேர்ந்து விலையினை நிர்ணயிக்கின்ற முறையை ஏற்படுத்தி அந்த கடைக்கு அவர்கள் சொந்தக்காரர்களாக இருப்பார்களேயானால் வருகின்ற லாபமும் அவர்களுக்கே பங்காகக் கிடைக்கின்ற உரிமை இருக்கும். அப்படிப்பட்ட நிலைமையில் சாதாரண மக்களைப்பற்றி அவர்களால் சிந்திக்காமல் இருக்க முடியாது. ஆகவே, வெறும் உத்தரவுகளை மட்டும் வைத்துக்கொண்டு நடவடிக்கையில் இறங்க முடியாது. அங்கே இருக்கின்ற மக்களின் வாழ்க்கை நிலைமையைப் பற்றியும் பரிசீலித்து, வாரத்துக்கு ஒருமுறை அல்லது மாதத்திற்கு இருமுறை அவர்கள் கூடி பேசி இதுதான் விலை, இதைத்தான் வைத்துக்கொள்ள வேண்டும் என்று நிர்ணயிக்கின்ற அந்த உரிமை அவர்களுக்கு இருக்குமானால் நிச்சயமாக அதைப்பற்றி சிந்திக்க முடியும். சிந்தித்து பணியாற்றமுடியும். ஆகவே, அந்த எண்ணத்தைத்தான் நாங்கள் வெளியிட்டிருக்கிறோம் ஆளுநர் அறிக்கையின் மூலமாக என்பதை நான் இங்கே சொல்கிறபோது அப்படிச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுவீர்களேயானால் தயவுசெய்து யோசனை சொல்லுங்கள். அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் கொண்ட குழுவை அமைப்போம். அதைப்பற்றி சிந்தித்து உற்பத்தி செய்கின்றவர்களுக்கும் வாங்குகின்றவர்களும் ஒன்றாக இணைந்து அந்தக் கருத்தை செயலாற்ற முன்வரட்டும். பிரச்சினை அதிகமாக இருக்க முடியாது. வாங்குபவர்களும் உற்பத்தி செய்வர்களும் தான் விலையை நிர்ணயிக்கப்போகிறார்கள். இருவருக்கும் கட்டுப்படியாகின்ற விலையைத்தான் அவர்கள் நிர்ணயிப்பார்கள். அப்படி நிர்ணயிக்கப்படுகின்றபோது இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களுக்குத் தொடராமல் விரைவிலே அதைத் தடுத்து நிறுத்தப்பட முடியும் என்று நாம் நினைக்கிறோம். இந்த எண்ணம் சரியில்லை என்றால் மாற்றுக் கருத்து சொல்லுங்கள்.

மாற்று கருத்தைச் சொல்லி நாம் உட்கார்ந்து பேசுவதற்கு வாய்ப்புத் தாருங்கள். நாங்கள் அழைத்தால், தயவுசெய்து வந்து உட்கார்ந்து பேசுங்கள், நாங்கள் சொல்கின்ற கருத்துகளை ஏற்கவில்லை என்றால் மறுத்துக்கூறலாம். ஏற்கவில்லை என்றால் ஏற்கவில்லை என்று சொல்லுங்கள், தவறில்லை! ஆனால், கலந்துகொள்ள வேண்டும் என்று அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஒரு பக்கம் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. அதைக் குறைக்க வேண்டும், இன்னொரு பக்கம் விலையினை உயர்த்திக் கொடுக்க வேண்டும், அவர்களுக்குத் தேவையான பணம் கிடைக்கவில்லை. இது எவ்வளவு பெரிய பிரச்சினை ?

நான் வேடிக்கையாக ஒன்றைச் சொல்வேன். இறைச்சி வேண்டும், ஆனால் ஆட்டைக் கொன்றுவிடக்கூடாது என்று சொல்வார்கள். எப்படிக் கிடைக்கும்?

உயர்த்தினால்தான் கட்டுப்படியாகும் என்கிறார்கள். கரும்பு விலையை உயர்த்தவேண்டும், அதை 300 ரூபாயாக ஆக்கிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக 175 ரூபாய் என்று கொடுத்திருக்கிறோம். கரும்பு விவசாயிகளுக்கு கொடுங்கள் என்று சொன்னோம். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிலர், 300 ரூாய் வேண்டும், போராட்டம் நடத்துவோம் என்று சொல்கிறார்கள். எனவே, எங்கே போய் நிற்கும் இது ? இதைப்போன்ற பிரச்சினைகளையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கரும்பு விவசாயிகளுடைய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் எங்களை வந்து சந்தித்துப் பேசினார்கள். நாங்கள் ஒன்றைச் சொல்லி முதலிலே ஒத்துக்கொண்டார்கள். பிறகு மீண்டும் எங்களைச் சந்தித்து, விவாதித்து அதிகமாக பணம் தருகிற யோசனையைச் சொல்லி, அவர்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம் என்று சொல்லிச்சென்றார்கள் என்பதை இங்கே கூற விரும்புகிறேன். அதுவரையிலும் மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அதில் கலந்துகொள்ள வரவில்லை.

குழுவை நாங்கள் தான் அமைத்தோம் ஆனால் அந்தக் குழு சொல்வது அனைத்தையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால் இன்னும் ஒரு ஆயிரம் கோடி ரூபாய் கிடைத்தால் பரவாயில்லை என்று சொல்லவேண்டி வரும். ஆனால், விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களை நாங்கள் அழைக்கவில்லை. அவர்களே சந்திக்க வேண்டும் என்று கேட்டு எங்களை வந்து சந்தித்தார்கள். அதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆந்திரா, கருநாடகாவில் என்ன நிலைமை என்பது மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தெரியும். அங்கே சர்க்கரையினுடைய இனிப்புச் சத்து எவ்வளவு என்றும், இங்கே எவ்வளவு என்றும் அவர்களுக்குத் தெரியும். அதையும் கொஞ்சம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்தோடு ஒரு பிரச்சினையைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். உணவுப் பொருள்கள், அத்தியாவசியப் பொருள்கள் என்பதிலே நான் மீண்டும் அதைப்பற்றி விளக்கம் தரவேண்டும் என்று கருதுகிறேன். விளக்கம் என்று சொல்வதைக் காட்டிலும், எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கும், அவரவர்கள் யோசனையை தெரிவிப்பதன் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்கு அந்தப் பிரச்சினை குறைய வேண்டும் என்பதற்காகவும் சொல்கிறேன். தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். இடைத்தரகர்களை நீக்கியாக வேண்டும். இடைத்தரகர்களை நீக்கியாக வேண்டும் என்றால், அரசு அவற்றை நேரடியாக வாங்கி விநியோகிக்க வேண்டும்.

அரசு அவற்றை வாங்கி விநியோகிப்பதற்கு முன், யார் அந்தப் பொருள்களை வாங்குகின்றார்களோ, வாங்கிப் பயன்படுத்துகின்றார்களோ அவர்களே விற்பனை

செய்கின்றவர்களோடு இணைந்து இதில் செயல்படுபவர்களாக இருந்தால் மிகப் பெரிய பிரச்சினைகள் குறைக்கப்படும். ஆங்காங்கு விளைகின்ற பொருள்களின் தரத்திற்கேற்ப, தேவைக்கேற்ப உற்பத்தி செய்யப்படுகின்றதோ, அதற்கேற்ப அந்தந்த ஊர்களுக்கு எவ்வளவு அனுப்பவேண்டும் என்பதற்காகவும் நல்ல முறையில் செயல்பட முடியும் என்று நான் கருதுகிறேன். அவற்றைச் செய்தாக வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், அரசியலுக்குப் போக வேண்டியிருக்கிறது, அரசியல் கட்சிகளைப்பற்றி அல்ல, மருதுபாண்டியர்களைப்பற்றி இங்கே கருத்து சொல்லப்பட்டது. மருதுபாண்டியர்களுக்கு நினைவுச்சின்னம் வேண்டும் என்று கேட்டுள்ளார்கள். அதற்காக, ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த மூவர் குழு பரிசீலனை செய்துகொண்டு இருக்கிறார்கள். யார் உண்மையான வாரிசுகள், அவர்களுக்கு எப்படிப்பட்ட உதவி செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும், அந்த சின்னத்தை எப்படி நிறுவுவது என்பதைப் பற்றியும் அதற்கு ஏற்பாடு செய்துகொண்டு இருக்கிறார்கள். அறிக்கை வந்தவுடன் அரசு அதை நிறைவேற்றும் என்பதை சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

இன்னும் பலர் பல்வேறு கேள்விகளைக் கேட்கிறார்கள். கருத்துக்களை வெளியிடுகிறார்கள். மாண்புமிகு திரு. முகமது இஸ்மாயில் அவர்கள் எல்லை பாதுகாப்பு என்ற பெயரில் கன்னியாகுமரியை சேர்ப்பதற்காகப் போராடியவர்களுக்கு உதவித்தொகை கொடுப்பதில் தாமதம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு 1982ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 3ஆம் தேதியிலேயே உத்தரவு போடப்பட்டுவிட்டது. அவர்களுக்கு அது கிடைக்கும் என்பதையும் மேலும் அப்படிப்பட்டவர்கள் யாராவது இருப்பார்களேயானால் அதற்கு இந்த அரசு உதவி செய்யத் தயாராக இருக்கிறது என்பதையும், அதேபோல, தமிழ்மொழி காப்பதற்காகத் தங்களை தியாகம் செய்துகொண்டவர்களுக்கும் இந்த அரசு தக்க நிவாரண உதவி செய்ய முன்வந்திருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது பெயர் மாற்றம்தான் என்பதை எல்லோரும் தெரிந்துகொண்டிருப்பார்கள். அந்த பெயர் மாற்றத்தைக் கொண்டுத்தான் நாங்கள் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாரஸ்ட் ரேஞ்சர்ஸ் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தேர்வு செய்யப்பட்வர்களை ஏன் வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. ஏன் பதவி உயர்வு தரப்படவில்லை என்று கேட்டிருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்கிறேன். இதற்காக 32 பேர்களை அவர்கள் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பதவி உயர்வும் தரப்பட்டிருக்கிறது.

கிராம அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கியதைப் பற்றி பேசி இருக்கிறார்கள். அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி நான் விரிவாகப் பேச முடியவில்லை. அவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துவிட்டது. அளித்து விட்டார்கள்

என்று பேசியிருக்கிறார்கள். ஆனால், உச்சநீதிமன்றம் இடைக்காலத்தடையை நீக்கியது ரிட் மனுக்கள் மீது தீர்ப்பு வழங்கும் வரையில் முழுநேர கிராம அதிகாரிகளை நிரந்தர அடிப்படையில் நியமிக்க வேண்டாம் என்றும் இந்த அவசரச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட கிராம அதிகாரிகளுக்கு ரிட் மனுக்கள் மீது அவர்களுக்கு செலுத்தப்பட்டு வந்த தொகையை அவசரச் சட்டத் தேதியிலிருந்து நீதிப்பேராணை மனுக்கள் தீர்மானிக்கப்படும் வரை பிரதிவாதிகள் செலுத்திக்கொண்டே வர வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது தீர்ப்பு. தீர்ப்பில் இப்படி குறிப்பிட்டதை, வீணடிக்கிறீர்களே என்று ஒரு சிலர் பேசுகிறார்கள், கருத்துக்கள் வெளியிடுகிறார்கள். அதே நண்பர்கள் இந்த மன்றத்தில் பேசியிருந்தார்களானால் அந்த மன்ற உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்வேன். அவர்களே சொன்னார்கள் அவர்களுக்கு ஓய்வூதியம் தந்தாக வேண்டும், நஷ்டஈடு தரவேண்டும் என்றெல்லாம்சொன்னார்கள். இப்போது வழக்கு மன்றத்தின் தீர்ப்புப்படி நடந்துகொண்டால் இவ்வளவு நஷ்டத்திற்கும் நீங்கள்தானே காரணம் என்கிறார்கள்! இதைக் கொடுக்க வேண்டுமென்று விரும்பியவர்களில் அவர்களும் உண்டு என்பதில் உங்கள் கவனத்தைத் திருப்புவதோடு, அதை நீங்கள் விரும்புகிறீர்கள், அது வேறு வழியில் நடந்தால் கூட நீங்கள் சந்தோஷப்பட வேண்டும். மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அவியனூர் என்ற இடத்தில் ஆதிதிராவிடர்களே இல்லை நாமிநேஷன் தாக்கல் செய்வதற்குக்கூட அங்கே ஆள் இல்லை. அதை எப்படிச் சேர்த்திருக்கிறீர்கள் என்ற குறைபாடு சொல்லப்பபட்டது. எனக்கு வந்த தகவல்படி, அவியனூர் ஊராட்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எத்தகைய சூழ்நிலையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற குறிப்பு இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய பிரிவு 30(ஏ) இன் கீழ், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கடைசியாக வெளியிட்டுள்ளதை எடுத்துக் கொள்ள வேண்டும். 1981ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரம் இன்னும் வெளியிடப்படவில்லை. இது பற்றி 1982ஆம் ஆண்டு, மே திங்கள் தான் கிடைக்கும். எனவே, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையிலே செய்யப்பட வேண்டியிருந்தது. ஆவியனூரைப் பொறுத்தவரையில் 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 48.18 விழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே இருக்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை 1,035. அதிலே 523 ஆண்கள், 512 பெண்கள் இருக்கிறார்கள். அவியனூர் ஊராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லை என்று எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சொல்லியது. 1982ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8ஆம் நாள் 'தினத்தந்தி'யில் வெளியானது. இதுகுறித்து, தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டது. அவியனூர் ஊராட்சியில், 1961ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி விவரம் பின்வருமாறு:– தாழ்த்தப்பட்ட மக்கள் ஜனத்தொகை 1,388. இதர வகுப்பினர் 1,412. 1964ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், 2ஆம் நாளைய ஊரக வளர்ச்சி இணை

ஆணையாளர் ஆணைப்படி, அவியனூர் ஊராட்சி, அவியனூர் என்றும், அழகிய பெருமாள் குப்பம் என்றும் இரு ஊராட்சிகளாகப் பிரிக்கப்பட்டது. அதன் காரணமாக, முன்பு இருந்த ஆதிதிராவிடர் குடியிருப்பு தவிர, எஞ்சிய வருவாய் கிராமம் அவியனூர் ஊராட்சியாகும். அழகிய பெருமாள் குப்பம் என்பது ஆதிதிராவிடர் குடியிருப்பு. இதர மக்கள் குடியிருப்பு ரெட்டிக்குப்பம் மற்றும் அவியனூரிலிருந்து பிரிக்கப்பட்ட குடியிருப்பு ஆகியவைகளைச் சேர்த்து உருவாக்கப்பட்டதாகும். 1971ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கீழ்க்கண்ட விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஊராட்சியின் பெயர் அவியனூர்.மொத்த ஜனத்தொகை 2,148 அதில் தாழ்த்தப்பட்டோர் 1,035.அழகிய பெருமாள் குப்பத்தில் மொத்த ஜனத்தொகை 924 அதில் தாழ்த்தப்பட்டோர் ஜனத்தொகை 430. இப்போது நேரடியாகப் பார்வையிட்ட போது, முன்னால், அவியனூர் ஊராட்சியிலிருந்து அழகிய பெருமாள் குப்பம் ஊராட்சிக்கு மாற்றப்பட்ட அவியனூர் ஆதித்திராவிட மக்கள் தொகை, தவறுதலாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்போது அவியனூர் ஊராட்சியில் சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது, என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். தவிர, முன்னால், அவியனூர் ஊராட்சியிலிருந்து ஆதிதிராவிட குடியிருப்பு முழுவதும், அழகிய பெருமாள் குப்பத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால், இப்போது அவியனூர் ஊராட்சியில் ஆதிதிராவிடர்கள் இல்லை என்பது உண்மைதான் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அண்ணா கிராம ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஊராட்சிகளில் அவியனூர் ஊராட்சிக்கு அடுத்தபடியாகத், தாழ்த்தப்பட்ட மக்கள்தொகை அதிக விழுக்காடுள்ள ஊராட்சி, அழகிய பெருமாள் குப்பம் ஊராட்சிதான் என்றும், இந்த ஊராட்சிகளில் உயர்நீதி மன்ற தடை நீக்கப்பட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கலாம் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்துள்ளார். ஏந்தெந்த காலத்தில், எப்படி எப்படி மாற்றம் கொண்டு வந்தார்கள், 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையிலே எப்படிப் பிரித்தார்கள் என்பதையும் நான் படித்துச் சொல்லி அதற்குப் பிறகு விவாதித்து, இன்றைக்கு அரசிடமுள்ள புள்ளி விவரங்களைச்சொல்லி அதிகாரிகள் கொடுத்துள்ளதைத் தெளிவாக்கி அது உண்மைதான் என்று சொன்னால், இதை எப்படிச் சேர்த்தீர்கள் என்ற கேள்விக்கே இடம் இருக்கிறதா என்பது சந்தேகம்.

அதிகாரிகள்கொடுத்த தகவலில் இருந்து அது எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கொடுத்த புள்ளி விவரத்தை வைத்து தீர்மானிக்கப்பட்டது என்பதை எடுத்துச் சொல்லுகிறேன் என்பதைக் கூற விரும்புகிறேன். தவறாக இருப்பின், எடுத்துச் சொல்வார்களானால் அதுதான் நாட்டுக்கு மிகவும் தேவையான ஒன்று. அளிக்கக்கூடிய நிலைமையையும் ஏற்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மீண்டும் சொல்கிறேன். இந்த தகவலைத் தருவதற்குத் காரணம் எதிர்க்கட்சி தலைவர் அறிக்கை தினத்தந்தி பத்திரிக்கையில் வந்ததே ! அதைப் பார்த்தவுடன் இப்படி வந்திருக்கிறது இதற்குப் பதில் என்ன என்று கேட்கப்பட்டதால் பதில் தந்திருக்கிறேன்.

குறுக்கீட்டை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நிலைமைகளைத் தெளிவாக என்று வெளியிட்ட பிறகுங்கூட, மாவட்ட ஆட்சித்தலைவர் தவறு செய்து விட்டால் என்று சொல்லுவது போல் அது எப்படி என்று கேட்டார்கள். அதை விதாண்டாவாதம் என்று சொல்லுவதா அல்லது வேண்டுமென்றே ஏதோ விவாதம் புரிய வேண்டுமென்ற ஆசையில் சொல்லுவதா என்றே புரியவில்லை!

மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் சொல்லியதைப் பற்றி நான் விசாரித்து எந்த ஆட்சிக்காலத்தில் எப்போது அப்படிச் செய்யப்பட்டது என்பதை இந்த அவையில் தெரிவிக்க முனைகிறேன்.

ஒட்டையா உடைசலா எனபது எல்லாம் நதியிலே போகும்போதுதான் தெரிகிறது. நாம் நல்ல மாலுமி என்றுதான் கருதுகிறோம் நல்ல நிபுணர்கள் என்று நம்புகிறோம். ஆனால், அவர்கள் கேள்விகள் கேட்ட பிறகுதான் பதில் சொல்ல வேண்டிய பழக்கத்திலே வளர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கிறபோது, வழக்கத்தை மாற்றுவதற்கு தீவிர நடவடிக்கை எடுப்பதைத்தவிர வேறு வழியில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு, இந்த அரசு வந்த பிறகு இதுவரையில் 11,355 வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. மேலும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 60,399 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 27,774 வீடுகள் நடப்பு ஆண்டில் கட்டப்பட்டு வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் ஆண்டு ஒன்றுக்கு 40ஆயிரம் வீடுகள் வீதம் 2 இலட்சம் வீடுகள் கட்ட அரசு முடிவு எடுத்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 67,334 வீட்டு மனைப்பட்டாக்கள் ஆதி திராவிடர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் நான் இங்கே குறிப்பிடுவதற்கு காரணம் தேர்தல் நேரத்திலே நாங்கள் என்ன என்ன சொன்னோமோ அவற்றை எந்த வகையில் செயலாற்றுகிறோம் என்ற புள்ளி விவரத்தைத் தெரிவிப்பதற்காகத்தான் என்பதை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக 4ஆவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே ஆதிதிராவிடர் மலைவாழ் மக்கள் நலனுக்காக, மத்திய அரசு ஆதரவுத் திட்டத்தின் கீழ் மைய அரசு ரூ.206.80 இலட்சம் ஒதுக்கியது. மாநில அரசு அத்திட்டத்தின் கீழ் செலவிட்டது ரூ.244.99 இலட்சமாகும். இதிலிருந்து, மாநில அரசு மத்திய அரசு ஒதுக்கிய தொகையை விட அதிகமாகவே ஒதுக்கியிருப்பது நன்கு விளங்கும். எனவே, உறுப்பினர் குறிப்பிட்டுள்ளதைப் போன்று, வேறு எந்தப் பணிக்கும் நிதி மாற்றமோ நிதிப்பயன்படுத்தியமையோ நடைபெறவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். 1980–1981ஆம் ஆண்டில் மைய அரசுத் திட்டங்களுக்கு ரூ.244.02 இலட்சம் மட்டுமே இந்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. ஆனால், இத்திட்டங்களுக்கு ரூ.469.26 இலட்சம் (ஆதிதிராவிட நலத் திட்டங்களுக்காக)

மாநில அரசு செலவு செய்து வருகிறது ஆகவே, நிதிமாற்றமோ அல்லது நிதி பயன்படுத்தாமையோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1974ஐப் பற்றிப் பேசவில்லை. 1982இல் என்ன செய்யப்போகிறோம், 1981 இல் என்ன செய்தோம் என்பதைப் பற்றி நாம் சொல்ல வேண்டும் இப்போது. அந்த விசாரணையில் இறங்காமல் நாங்கள் செய்தது சரியாகச் செய்திருக்கிறோம் என்பதிலே, உங்கள் மகிழ்ச்சியிலே நாங்கள் பங்கு கொண்டு 1981–1982இல் ஒழுங்காக நடந்திருக்கிறது என்று உளநிறைவு எய்துகிறோம்!

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள், இந்த அரசு, மத்திய அரசு கொடுத்ததைவிட அதிகமாக ஒன்றும் கொடுக்க வில்லை என்று சொல்கிறார்கள். ஒரு கருத்தை நான் இங்கு சொன்னால் யாரும் தவறாகக் கருதக் கூடாது.

ஒரு பொறியியல் நிபுணர் மக்களுடைய வரிப்பணத்தில் படித்துப் பட்டம் பெற்று பதவிக்கு வந்து சம்பாதிக்கிறார். அதேபோல், மருத்துவத் துறையிலேயும் பட்டம் பெறுகிறார்கள்! இதுபோன்று, பல துறைகளில் அவர்கள் மக்களுடைய வரிப்பணத்திலிருந்து படித்துப் பட்டம் பெற்று வருகிறார்கள். அது மைய அரசானாலும், மாநில அரசானாலும் பதவிக்கு வந்த பிறகு, தங்களைப் போன்று படிக்கின்றவர்களுக்கு அவர்கள் என்ன உதவிகளைச் செய்கிறார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதை படித்துப்பட்டம் பெற்ற நிலையிலுள்ளவர் சிந்திப்பார்களேயானால் அது கொஞ்சம் உதவியாக இருக்கும். இதைப்போன்ற சந்தேகங்ளெல்லாம் ஏற்படாமல் இருக்கும் என்று நான் கருதுகிறேன். பல வேளைகளில் நாம் என்ன செய்ய முடியும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கருதுகிறார்கள், நாம் எல்லாம் ஒன்று சேர்ந்தால் எதையாவது நல்லது செய்ய முடியும். ஆகவே, ஒன்றுசேர்ந்தது ‘நாட்டுக்காக எதையாவது செய்வோம்!’ என்று முடிவெடுத்துக்கொண்டோமானால், அது நிச்சயமாக நல்ல முடிவாக இருக்கும் என்று சொல்லி, நிறையக் குறிப்புகள் இருந்தாலும் மேலவையில் பாக்கியை வைத்துக் கொள்கிறேன் என்று சொல்லி, இரண்டு மணிநேரம் கேட்டேன், இரண்டு மணி நேரத்திற்கு மேலேயும் ஆகி விட்டது. ஆகவே, என்னுடைய பேச்சை முடித்துக் கொண்டு, இந்த ஆளுநர் உரையை ஏற்றுக் கொள்ளச் செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

10.02.1982 அன்று மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை.

அச்சமின்றி வாழ்வோம், அமைதியுடன் வாழ்வோம்!

வணக்கத்திற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, காவல்துறை மானியக் கோரிக்கையின் மீது இங்கே பேசிய அத்துணை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் எத்தனையோ முறை, நான் சாதரண எம்.எல்.ஏவாக இருந்தபோதும், பின்னர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோதும் என்னளவிலான கடமைகளைத் தொடர்ந்து செய்துவருகிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் காய்ச்சலால் அவதிப்பட்டு மன்றத்திற்கு வர இயலாத சூழ்நிலையிலும், தொலைபேசி வாயிலாக மாமன்ற உறுப்பினர்களிடமிருந்து மன்றத்தில் அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டுவரும் விவாதங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளத் தவறியதில்லை! அந்த வகையில், நாங்கள் எங்கள் கடமையைச் சுத்தமாக, துரிதமாக, பொறுப்புணர்வோடு செய்கிறோம் என்ற அளவிலே, பாராட்டியதற்கு நான் உண்மையிலே நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இதைப்போல பல்வேறு வகைகளிலே இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் இந்த காவல்துறை மானியத்தைப் பற்றி பேசுகிறபோது, சில செயல்களைப் பற்றி பாராட்டியிருக்கிறார்கள். ஆட்சிக் கட்சியிலே பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டுவதும், தேவையை வெளிப்படுத்துவதும் அவர்களுடைய உரிமை என்றாலும் கூட, சில பொறுப்புகளை அவர்கள் ஏற்றிருக்கிற காரணத்தாலே, ஒருவேளை எதிர்கட்சியிலே இருப்பவர்களைப் போல வேகமாக, காரசாரமாகப் பேசும் என்கிற அளவிற்கு கூட கருத்துக்களை எடுத்துச்சொன்னாலும், அந்த கருத்துக்களை நான் வரவேற்கத் தயாராக உள்ளேன்! அந்த வகையிலே, நல்ல விவாதங்களை முன்வைக்கும் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் முதலிலே அரசினுடைய சார்பிலே, நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

காவல் துறையைப் பொறுத்தவரையில், தொடக்கத்திலே ஆட்சிக் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடும்போது, அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது என்னென்ன செய்தார்கள் என்பதையும், காவல்துறையைக் கண்டிக்க வேண்டும், காவல் துறை மீது குற்றம் சுமத்த வேண்டுமென்ற நோக்கம் இல்லை என்றாலும் கூட, தவறுகள் நேர்கின்றன; குற்றங்கள் நடைபெறுகின்றன, அவைகள் களையப்படவேண்டும் என்று சொல்லி, அவர்கள் சில பல கருத்துக்களை, நிதானத்தோடும், வார்த்தைளை அளந்தும், யார் மனதையும் புண்படுத்தக்கூடாது என்ற அடிப்படை நோக்கத்தோடும், ஆனால் தனக்கு தெரிந்த உண்மைகளை வெளியிட வேண்டும் என்ற பொறுப்புணர்வோடு, எங்களுக்குத் தங்கள் அனுபவத்திலேயிருந்து கிடைத்த கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு என்னிடத்திலே இருக்கிற குறிப்புகளை, பதிலாகத்

தருவது என்னுடைய கடமை என்று நிச்சயமாகக் கருதுகிறேன். இதை ஒரு நீதிமன்றமாக ஆக்கவேண்டுமென்று விரும்பாவிட்டாலும், நீதிபதிகளும் மனிதர்கள் தான், குற்றம் செய்பவர்களும் மனிதர்கள்தான், அழைத்துச் செல்கிற காவலர்களும் மனிதர்கள்தான் என்கிறபோது, சிலசமயம் நீதிபதிகளுடைய தீர்ப்பைப் போல, நாம் சில உண்மைகளை உணர்ந்து இச்சமூகத்தை அணுக வேண்டியிருக்கிறது!

காவல்துறையில் பணியாற்றுகின்றவர்கள் எங்கிருந்து அந்தப் பணிக்கு வருகின்றார்கள் என்பதை நாம் முதலில் கவனித்தாக வேண்டும். இதே சமுதாயத்தில், நம்மைப் போன்ற சமுதாய மக்களிலிருந்து, அவர்கள் அந்தப் பணிக்கு வருகின்றார்கள். அமரர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்தச் சமுதாயத்திலிருந்துதான், காவலர்கள் என்ற அந்தப் பணிக்கு வருகின்றவர்கள், தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதையும் அதே நேரத்தில், கடமையாற்றுவதில், யார், யாருக்கு, எந்த, எந்தப்பொறுப்பு இருக்கிறதோ, அதை வகிக்கின்ற பல்வேறு குடும்பங்களிலிருந்துதான், அந்தக் காவல்துறையைச் சேர்ந்தவர்களும் இன்று பணியாற்றி வருகின்றார்கள், என்று பணியாற்றுகின்றார்கள் என்பதையும், அமரர் அண்ணா அவர்கள் ஒரு தடவை இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டதை நான் நினைவுபடுத்திக்கொண்டு, காவலர்களுக்கும், மற்றவர்களுக்கும் உள்ள வேறுபாட்டினை, செயல்முறையில், அல்லது தொழில் முறையில், முதலில் எடுத்துக் கூறவேண்டியது எனது தவிர்க்க முடியாத கடமை என்று நான் கருதுகிறேன்.

காவல்துறை பல்வேறு பணிகளைச் செய்ய வேண்டிய பொறுப்பிலே இருக்கிற துறை. அதை நிறைவேற்றுகின்றவர்கள் காவல்துறையைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு எத்தகைய பணிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், எப்படிச் செய்ய வேண்டியவர்களாக, செயல்படுத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் என்பதையும் நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோளாகும். சிலவற்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் நான் குறிப்பிடுவதில் விடுபட்ட, ஏதாவது, வேறு பல குறிப்புகள் இருக்குமானால், அவை குறித்து மாண்புமிகு உறுப்பினர்களே நினைவுபடுத்திக்கொள்ளலாம்; நினைவுபடுத்தவும் செய்யலாம்.

அவர்களுடைய முதல் உரிமையும், பொறுப்புமாக விளங்குவது, இந்த நாட்டில் மனிதன், மனிதனாக வாழ்வதற்கு ஒரு தொழிலுக்குச் சொந்தக்காரனாக இருக்க வேண்டுமென்ற கொள்கையை வைத்துப்பார்த்தால், அந்தத் தொழில் செய்யும் உரிமையை, யாரும் தடை செய்யாமல், அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டிய பொறுப்பே ஆகும். காவலர்கள் அந்தப் பணியோடு நின்றுவிட்டால், அந்தப் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. அந்தத் தொழிலாளர்கள் எங்கேபோய் வேலை செய்கின்றார்களோ, அந்தத் தொழிற்கூடத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் அவர்களிடம் இருக்கிறது. மக்கள் இந்த நாட்டில் நிம்மதியாக வாழ வேண்டுமென்று நாம் சொல்கின்றோமே, அது எப்போது சாத்தியமாகுமெனில், அமைதியான

சூழ்நிலை, அச்சமற்ற சூழ்நிலை, விபத்துக்களும், குற்றங்களும் நிகழா நிலை இவை உருவாகும்போதுதான்! அந்தப் பொதுமக்களுடைய வாழ்க்கையில், அவர்கள் வீட்டிலிருந்தாலும் சரி, வெளியே போனாலும் சரி, வெளியே போய்த் திரும்ப வரும் போதும் சரி, போகும்போதும் சரி, அவர்களுடைய உயிரை, அவர்களுடைய வாழ்க்கையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு காவலர்களுக்கு இருக்கிறது. வீட்டிலே அவர்கள் இல்லாத நேரத்தில், ஏதாவது களவு நடக்குமானால், அதையும் கண்டுபிடித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்தர வேண்டியவர்கள், அப்படிப்பட்ட குற்றங்களே நிகழாமல் தடுக்க வேண்டிய நிலையில் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும்.

அதேபோல மக்கள் பயணம் செய்கின்ற வண்டிகளுக்கு வன்முறையாளர்களால் ஆபத்துக்கள் ஏற்படாதவாறு அவர்கள் பாதுகாப்புத் தந்தாக வேண்டும். அதேபோல பயணம் செய்கின்ற அந்த வண்டிகளுக்கு, அது போன்ற வாகனங்களுக்கு எந்த விபத்தும் ஏற்படாமல், காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அந்தக் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இங்கே குறிப்பிட்டார்களே, மதச் சண்டைகள், கோயில்களை எரித்தல், சிலைகள் களவு போதல், இப்படிப் பல நிகழ்வுகளை! கோயில்களைப் பாதுகாத்தாக வேண்டும்; கோயில் சிலைகளையும் காப்பாற்றியாக வேண்டும்; வழிபாடு ,நடத்துகின்றவர்களுக்கும்; அவர்களுடைய கடமையைச் செய்யப் பாதுகாப்புத் தந்தாக வேண்டும், 'கடவுளே இல்லை' என்று சொல்லி, அவர்கள் தங்கள் பிரச்சாரத்தைத் தொடங்கினார்கள் என்றால், அவர்களுக்கும் பாதுகாப்புத் தர வேண்டும். ஆக, ஒட்டுமொத்த பாதுகாப்பைக் காவலர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இப்படி அனைத்து மத சம்பந்தமான எல்லாப் பிரச்சினைகளிலும், அவர்கள் பாதுகாப்பு தந்தாக வேண்டியிருக்கிறது. அத்தகைய பொறுப்புக்கள் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இதிலே ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள், அதாவது மதத்தைச் சேர்ந்தவர்களிலே ஒரே ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னாலும்கூட, அவர்களிலே பல பிரிவுகள், கடவுளுடைய பல்லக்கை யார் தூக்கிச் செல்வது என்பதிலே கூட போட்டி; யார் முதலில் வடத்தைப் பிடிப்பது என்பதிலே போட்டி; யார் முதலிலே போய் வழிபாடு நடத்துவது என்பதிலே போட்டி. இந்தப் போராட்டங்களைக் கூட தடுக்கவும், தவிர்க்கவும் வேண்டிய பொறுப்பைக் காவலர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

கன்னியாகுமரியைப் பற்றிச் சொன்னார்கள்! வேறு பல இடங்களைப் பற்றியும் சொன்னார்கள். பின்னால் அவைகளுக்கு விரிவாக, விளக்கமாகப் பதில் சொல்ல இருக்கிறேன். அப்படிப்பட்ட முறையில், அந்தப் போராட்டங்கள் நிகழாமல், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் கூறியதைப் போல, ஏன் முன்பே அவர்கள் எச்சரிக்கையாக இருந்திருக்கக்கூடாது, இன்னும் இங்கே வேறு பல உறுப்பினர்கள்

சொல்லியிருக்கிறார்கள். தகுந்த நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இது தவிர்க்கப்பட்டிருக்கும், நடவடிக்கை எடுக்காததுதான் காரணம் என்றார்களே, அதுபோன்ற நிலைமைகள் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்புகள்.

இதற்கப்பால், சவத்தைத் தூக்கிக்கொண்டு போனால்கூட "ஏன் இந்தப் பக்கம் கொண்டுவந்தாய்? ஏன் அப்படிக்கொண்டு போகவில்லை?" என்றெல்லாம் கூறி போராட்டம். கொலை வரையில் போய்ச் சேர்கின்றதே, அப்படிப்பட்டவைகளையும் கூட, இந்தக் காவலர்கள்தான் பொறுப்பேற்றுத் தடுக்க வேண்டியிருக்கிறது; நிறுத்த வேண்டியிருக்கிறது அல்லது வழக்குத் தொடர்ந்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக்கொடுக்க வேண்டியிருக்கிறது.

இங்கே பலர் குறிப்பிட்டார்கள். திருட்டு, கொலை கொள்ளை, வழிப்பறி இவைகளையெல்லாம் எவ்வளவு அதிகமாகி வருகின்றன என்பது பற்றியும் கூறினார்கள். அதற்கு நான் பின்னால் வருகிறேன். ஆனால், இந்தப் பொறுப்பை அதே காவலர்கள்தான் செய்தாக வேண்டும்.

திருட்டு நடக்காமல், திருட்டு நடந்தால் கண்டுபிடித்து, அதிலே பாதி நகைகள் கிடைத்து, பாதி கிடைக்காமல் இருந்தால், அதையும் வாங்கிக் கொடுக்க, இப்படி முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் இந்தக் காவலர்களாக இருக்கிறார்கள்.

இதுமட்டுமல்ல, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும்பொழுது, இந்தக் கட்சிக்கு ஆதரவாக இருந்துவிட்டார் அல்லது இந்தக் கட்சியின்மீது பழி சுமத்திவிட்டார் என்று இரண்டு குற்றச்சாட்டுகளும் வந்தால், அதையும் தாங்கிக்கொண்டு, அவருக்கு எப்படி சாட்சிகள் கிடைக்கின்றனவோ அதற்கேற்றவாறு, இந்தக் குற்றச்சாட்டுக்களையெல்லாம் தாங்கிக்கொண்டு, அந்தப் பணிகளையும் செய்ய வேண்டிய பொறுப்பிலே காவலர்கள் இருக்கின்றார்கள் என்பதையும், நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வழக்கு மன்றத்தின் தீர்ப்பு எப்படி வழங்கப்படுகிறது என்பது, அந்தந்த நீதிபதிகளுடைய மனத்திற்கு எது நியாயம் என்று தெரிகிறதோ, ஆதாரத்தின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படுகிறதோ அதைக் கொண்டு, அவர்கள் வழங்கும் தீர்ப்பைப் பொறுத்தது.

அந்த நீதிபதிகள் ஒருவேளை காவல்துறைக்கு எதிராகத் தீர்ப்புச் சொல்லி விட்டாலும் கூட, அல்லது குற்றவாளி என்று தீர்மானிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்பட்டால், அந்தக் குற்றவாளியினுடைய உறவினர்களோ அல்லது அந்தக் குற்றவாளிகளாலேயேகூட, அந்த நீதிபதிகளுக்கு எந்த ஆபத்தும், தொல்லையும் ஏற்படாமல் காப்பாற்றுகின்ற பொறுப்பையும், இந்தக் காவலர்கள் தான் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதையும், நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, வங்கியிலே இப்போது விதவிதமாகக் களவுகள், நடைபெறுகின்றன. டெல்லியிலே ஒரு வங்கியிலே நடந்ததாகக் கேள்விப்பட்டோம். 10 நிமிடங்கள்கூட இல்லை! அதற்குள் 10 இலட்சம் ரூபாய் கொள்ளை அடித்துச் சென்றுவிட்டார்கள் என்றெல்லாம் செய்திகளைப் படிக்கின்றோம். இங்கே கூட, சில வங்கியிலே, அப்படிப்பட்ட கொள்ளை நிகழ்ந்தது என்பதை நான் குறிப்பிடும்போது, அதையும் இவர்கள் கண்டுபிடித்து கொள்ளை போன பணத்தை மீட்டாக வேண்டும். வங்கிகளுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஆனால், பாதுகாப்புக் கொடுக்க முடியாத நிலைமையில், அவ்வளவு எண்ணிக்கையில் காவல்துறையினர் இல்லையென்று முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சொல்கிறபோது, அதற்காகத்தான் நான் விளக்கம் சொல்ல வருகிறேன். இப்படியிருந்தாலும்கூட, களவும் நடந்த பிறகு, கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டிய சூழ்நிலையை அவர்கள் உருவாக்கித்தர வேண்டிய பொறுப்பும் காவல் துறைக்கு இருக்கிறது.

அதைப்போலவே, பெரிய பெரிய 3, 5 நட்சத்திர விடுதிகளில் என்னென்ன தவறுகள் நடைபெறுகின்றன என்றோ, யாரெல்லாம் தவறு செய்கிறார்கள் என்றோ, நமக்குப் புரியாது, ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். அங்கே நமது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோல், யாரோ ஒருவரைப் பார்க்கச் சென்றபோது, அங்கே இருந்தவர்கள் பார்க்க அனுமதிக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட குறைகள், தவறுகள் நடக்குமானால், அதைத் தடுத்தாக வேண்டும். அப்படி நடைபெறாமல் அவர்களை எச்சரித்து, அத்தகைய தவறுகளை அவர்கள் திருத்திக்கொள்ளச் செய்ய வேண்டும் இல்லை, அது நடந்துவிட்டால், அதைக்கண்டுபிடித்து ஆகவேண்டும். கண்டுபிடிப்பதிலோ முன்பு சொன்னதுபோல், மக்களுடைய எண்ணத்திற்கு மாறாகத் தீர்ப்பு இருந்துவிட்டால், அந்தக் காவலர்கள், அந்த தவறைச் செய்து யாருக்காக இந்தத் தீர்ப்பு வழங்கப்படும்படியான சூழ்நிலையை உருவாக்கினார்களோ? அந்தச் சந்தேகத்திற்கும், அந்தக் குற்றச்சாட்டிற்கும்கூட ஆளாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இதுபோக, மாணவர்கள், ஆசிரியர்கள், அரசு அலுவலர்கள், வியாபாரிகள், பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் அவர்களுக்கெல்லாம் பாதுகாப்புத் தர வேண்டியிருக்கின்றது. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் எது என்று அரசு நினைத்து இருக்கிறதோ, அது கிடைக்காதபோது, அதைக் கிடைக்கும்படிச் செய்ய வேண்டிய பொறுப்பு இந்தக் காவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வழக்கு நடைபெற வேண்டும்.

குற்றம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்தாக வேண்டும், அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்திலே அவர்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைப்பதற்கு வழிசெய்தாக வேண்டும். அதுமட்டுமல்ல, ஜாதி மத நம்பிக்கை உள்ளவர்களிடையே பாதுகாப்பு கொடுத்தாக வேண்டும். இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கிருஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒருவர் காவல்துறையிலே இருக்கிறார். கன்னியாகுமரியில் நடந்த

போராட்டத்தின்போது ஒன்று நிகழ்ந்தது. அவர் அங்கேயிருந்து பணியாற்றும்போது எது நியாயம் என்று அவர் நம்பி, நடவடிக்கை எடுத்தாரோ, அது கிருஸ்துவ மதத்திற்குச் சாதகமாக அமைந்தவுடன், சிலர் அவரை மதச் சார்புள்ளவராகப் பார்க்கின்றனர். இல்லையெனில், அம்மதத்திற்கு விரோதமானவர் என்கின்றனர். இதையெல்லாம் பொருட்படுத்தாது நடுநிலையோடு, அவர் கடமையாற்ற வேண்டிய பொறுப்பில் உள்ளார்.

அதுபோக, இன்றைய தினம் இங்கே நாமெல்லாம் அமர்ந்து மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று, மக்களுக்காகப் பேசிக்கொண்டு இருக்கிறோமே அந்தப் பொறுப்பிற்கு ஆளாகியிருக்கிற நாம் எந்தெந்த அரசியல் கட்சிகளில் இருக்கின்றோமோ அந்தந்த அரசியல் கட்சிகளுக்கும் பாதுகாப்பு தரவேண்டிய பொறுப்பும் அவர்கள் கையிலே இருக்கிறது. அரசியல்வாதிகளுக்கும், பாதுகாப்புத் தரவேண்டும். கட்சிகளுக்கும் பாதுகாப்பு என்றால், அதிலே சேர்ந்திருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு இல்லையா என்று கேட்கலாம். அரசியல் கட்சிகள் ஒட்டுமொத்தமாக செயல்படுவதற்கும், தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் அல்லது அதிலே பணியாற்றுகின்ற அடுத்த தலைவர்கள் அல்லது தொண்டர்கள் இவர்களுக்கெல்லாம் தனிப்பட்ட முறையிலான பாதுகாப்பையும் இந்தக் காவலர்கள் தான் தரவேண்டி இருக்கின்றது.

ஒரு கட்சி இன்னொரு கட்சியைத் தாக்குகிறது என்றால், அதை அவர்கள் குறுக்கே இருந்து, இரண்டு பக்கத்திலே இருந்து வருகிற சோடாபாட்டில் ஆனாலும் சரி; கற்களானாலும் சரி; அல்லது வேறு எந்த ஆயுதம் பரிமாறிக்கொள்ளப்பட்டாலும் சரி; இடையிலே இருந்து, அவர்கள் அதைத் தடுத்து, வன்முறையை வளரவிடாமல், அமைதியை நிலைநிறுத்தும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது!.

அது மட்டுமல்ல, அதற்குப் பிறகும், யார் சார்பில் இந்தக் காவலர்கள் அங்கே செயல்பட்டார்கள் என்பதைப்பற்றிக்கூட சந்தேகம் ஏற்பட்டுவிடுமானால், அதற்கும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் இந்த காவலர்கள் தான்.

இன்னொன்றையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஒரு அரசியல் கட்சியிலிருந்து இன்னொரு அரசியல் கட்சிக்கு யாராவது மாறிவிட்டார் என்றால், அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டியிருக்கின்றது. அதையும் இவர்கள்தான் செய்தாக வேண்டும். இந்தக் காவலர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். இல்லையென்றால், ஆபத்து ஏற்படுகிறது, தாக்குதல் நடக்கிறது என்றால் அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நீதிமன்றத்திற்குக்கொண்டு போய் நிறுத்த வேண்டிய பொறுப்பும் இவர்களுக்கு இருக்கிறது.

இப்படியெல்லாம் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்கின்றார்களே, அவர்களுக்குப் பாதுகாப்பு யார் என்றால், அவர்களேதாம்!. அவர்கள், தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டியிருக்கிறதே தவிர, உடனடியாக வேறு

பாதுகாப்பு அவர்களுக்குக் கிட்டுவதில்லை, வேறு ஏதாவது ஒரு வகையில், மத்திய அரசிடம் கோரி, இராணுவத்தை அழைத்து வந்து, பாதுகாப்புத் தந்தால்தான் அவர்களுக்கு பாதுகாப்பே தவிர அதுவரையில், இங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளுக்கிடையில், அந்தத் தாக்குதலை எல்லாம் அவர்கள் தாங்கிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்ற அவல நிலையில்தான் விடப்படுகின்றனர்!.

தாய்குலத்திற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியிருக்கிறது. அதுவும், இப்போதெல்லாம் குழந்தைகள் காணாமல்போவது, பெண்கள் காணாமல்போவது, இளைஞர்கள் காணாமல்போவது, முதியோர்கள் காணாமல் போவது இப்படியெல்லாம் "காணோம், காணோம்!" என்று பட்டியலை நாம் படித்துப் படித்து, கடைசியில் கேட்கும்பொழுது, சொந்தக்காரர்கள் வீட்டுக்கு கோபித்துக்கொண்டு போனார்கள், அல்லது, காதல் கல்யாணம் செய்து கொண்டு போனார்கள், அல்லது, பள்ளிக்கூடத்தில் தேர்விலே வெற்றிபெறவில்லை; ஆகவே கோபித்துக்கொண்டு போனார்கள், திரும்ப அழைக்கிறோம் என்றெல்லாம் பின்னர் தகவல் வரும்போது, எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அல்லது பயங்கரமாகச் சொல்லப்படுகிறதோ, அதற்கு நேர் மாறாக நிலைமை மாறும்போது, முதலில், அந்தச் செய்தி வந்தவுடனேயே காவல் துறையினர் காட்டும் சுறுசுறுப்பும், மேற்கொள்ளும் நடவடிக்கைகளும் கேலிக்குரியனவாக அல்லவா போய்விடுகின்றன! பலர் இதை உணர்வதில்லை!

இளைஞர்களிடையே, தற்கொலை நிகழும்போது, தற்கொலை செய்து கொண்டவர்களைப் பற்றியும் விசாரித்து, ஏன் தற்கொலை செய்து கொண்டார்கள் என்பதற்கான காரணத்தையும் கண்டுபிடிக்க வேண்டிய ஒரு பெரிய வேலை அவர்களுக்கு இருக்கிறது!. காதலித்தார்கள்; திருமணத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை என்கிற செய்திகள் வெளியே வருகின்றன. "எங்கள் தாய், தந்தையர் ஒத்துக்கொள்ளவில்லை, ஆகவே நாங்களே திருமணம் செய்துகொண்டுவிட்டோம்!" என்கிற செய்திகளும் வருகின்றன. அண்மையில், பத்திரிக்கையில் ஒரு செய்தி வந்தது. வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண், இந்த மாநிலத்தைச் சேர்ந்த ஒரு இளைஞர் ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் விரும்பியதாகவும், பெற்றோர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்பதால், இருவரும் ஊட்டிக்குச் சென்று, அங்கேயுள்ள ஏரியில் விழுந்து தற்கொலை செய்து கொண்டார்கள் என்றும் கேள்விப்பட்டோம். அதற்குப் பின்னாலே விசாரணை வருகிறது. அப்படி விசாரணை செய்கிற நேரத்தில், அவர்கள் உண்மையிலேயே தற்கொலை தான் செய்துகொண்டார்களா அல்லது யாராவது விஷம் கொடுத்து அவர்களைக் கொலை செய்துவிட்டார்களா அல்லது உண்மையிலேயே இது வேறு வகையிலே கொலை செய்யப்பட்டதா, அல்லது அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்பதையும், அவர்கள் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பொறுப்புக்கள் எல்லாம் காவல் துறையை சேர்ந்ததாகிவிடுகின்றன.

ஆகவே, நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்வேன். நான் அந்த இலாகாவை கையிலே வைத்து இருக்கிறேன் என்பதால் அப்படிச் சொல்லவில்லை.

எப்போதும் பேசுகிற செய்திதான். இப்போதும் சொல்கிறேன். அவர்களுக்காக வாதாடுகின்றவர்கள் என்பவர்கள், எப்போதும் பேசுகிறார்கள்; இப்போதும் இங்கே பேசி இருக்கிறார்கள்!. இப்போது கூட, எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் சொன்னார்கள், திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்கள். மற்றவர்களும் சொன்னார்கள். அவர்களுக்கு எல்லாம் சில ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், ஊதியத்தை உயர்த்திக்கொடுக்க வேண்டும், என்றெல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், இந்தக் காவல் துறையைத் தாக்குவதற்கு ஏதாவது தகுதியுள்ள தலைவர், அல்லது அரசியல் கட்சியின் பிரதிநிதி, அல்லது, வேறு ஒரு பொறுப்பிலே இருக்கின்றவர் என்ற தராதரமே கிடையாதா? யார் வேண்டுமானாலும் எதைவேண்டுமானாலும் பேசலாம்; எப்போது வேண்டுமானாலும் பேசலாம்; அவர்களை குறை கூறித் தாக்குதல் தொடுக்கலாம் என்கிற பரிதாபகரமான சூழ்நிலை இன்றைக்கு இருக்கின்றது என்பதை இங்கே எடுத்துச்சொல்ல வேண்டிய கட்டாயக் கடமை எனக்கு இருக்கிறது என்பதை நான் உணர்கிறேன்.

அப்படிப்பட்ட நிலையில், ஏதாவது செய்திகள் வருகிறபோது, விவாதங்கள் வருகிறபோது, காவல்துறையில் இருப்பவர்களைப் பற்றிக் கடுமையான முறையில் விமர்சிக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்து விட்டார்கள். காவல்துறையினர் என்றால் உடனே காவல்துறையில் அராஜகம் என்று சொல்கிறார்கள். போலீஸ் ராஜ்ஜியம், போலீஸ் சர்வாதிகாரம் என்று அந்தப் பட்டங்களையெல்லாம் சூட்டி, அவர்களை அதற்குச் சொந்தக்காரர்களாக்குகிறார்கள். இவ்வளவையும் நாம் புரிந்து கொள்வோம். இத்தனைப் பொறுப்புக்களையும் அவர்கள் செய்கிறார்கள். செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள். வீணாக அவர்களின் மனங்களை நோகச் செய்யலாமா?

ஆனாலும், இந்த நாட்டில் அமைதியை காப்பாற்றித் தரவேண்டிய மிகப்பெரிய பொறுப்பும், அவர்கள் கையில்தான் இருக்கிறது. இங்கேயுள்ள அரசியல் கட்சிகள் உண்மையிலேயே, இந்த நாட்டிலே அமைதி வேண்டும் என்று விரும்பினாலும் கூட, அதைச் செயல் திறங்கொண்டு சாதிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு காவல்துறையிடம் தான் இருக்கிறது என்பதை, நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்களை நான் ஒன்று கேட்க வேண்டும். சில கொள்கையைப் பற்றி பேசினார்கள். வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தயியலாத விவசாயிகளின் மீது, காவல் துறையின் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, அவர்கள் வீடுகளில் ஜப்தி செய்கிறார்கள்; வீட்டின் கதவுகளைச் சேதப்படுத்துகிறார்கள், என்றெல்லாம் விவசாயிகளைப் பற்றி என்னென்ன அக்கிரமங்களையெல்லாம் நடத்துகிறார்கள், எப்படியெல்லாம் போய் ஜப்தி செய்கிறார்கள், ஏழைகள் வீட்டு கதவுகளையெல்லாம் பெயர்த்து வந்து விடுகிறார்கள். என்றெல்லாம் சொன்னார்களே! ஒட்டுமொத்தமாக அவைகளுக்கும்,

விளக்கமாக அந்தந்த நிகழ்ச்சிகளைப் பற்றி குறிப்பிட்டுச் சொன்னார்களே! அவைகளுக்கும், எல்லாவற்றிற்கும் பதில் சொல்லியிருக்கிறேன் என்றாலும், ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதை நான் கேட்கக்கூடிய நேரத்தில், அந்தக் கேள்வியின் தெளிவு என் உள்ளத்திலேயிருந்து வெளிப்படுகிற விதம் இதுதான்.

அவர்களுடைய தலைமை இந்திரா காங்கிரசினுடைய தலைமை மத்திய ஆட்சியிலே இருப்பவர்கள் கேட்பது, எப்படியாவது, ஜப்தி செய்தாவது, அவைகளை நீங்கள் வசூலித்தாக வேண்டும். இல்லையென்றால், கறுப்புப் பட்டியலில் தமிழ்நாடு சேர்க்கப்படும். அப்படி சேர்க்கப்பட்டுவிட்டால், எந்த ஒரு பலனையும் மத்திய அரசிடமிருந்து உதவியாக பெறவே முடியாமல் போய்விடும். திட்டங்கள் எல்லாம் அப்படியே நின்றுவிடும் என்று எச்சரிக்கை செய்து எழுதியிருக்கிறார்கள். இது அவருடைய கட்சித்தலைமையின் நிலைமை. அவர்களுக்கும் இது தெரிந்துதான் இருக்க முடியும். அந்தக் கட்சியின் பிரதிநிதிகள் தான் இங்கே இருக்கிறார்கள். ஆகவே, இவர்களுடைய கட்சித்தலைமைக்கும் ஆட்சி செய்கிறவர்களுக்கும் நிச்சயமாக வேறுபட்ட கருத்து இருக்க முடியாது என்றுதான், நாங்கள் நம்புகிறோம். நீங்களும் நம்புவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

ஆனால், செய்திகள் தருகிறார்கள். தீர்மானங்கள் போடுகிறார்கள். தமிழகத்தில் ஜப்தி செய்தால், நாங்கள் மறியல் செய்வோம். தர்ணா செய்வோம். எங்களைக் கைது செய்தால் சிறைச்சாலை போகத்தயார் என்கிறார்கள். இது என்ன கொள்கை என்று எனக்குப் புரியவில்லை! மத்திய அரசிலேயிருந்து நீங்கள் அந்தக் கடனை எப்படியாவது வசூலித்தேயாக வேண்டும் என்று, தமிழக அரசுக்கு எழுதுகிறார்கள், அச்சுறுத்துகிறார்கள், எச்சரிக்கை செய்கிறார்கள். உதவிகள் எல்லாம் நிறுத்தப்படும், அந்தக் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிட்டால் என்று சொல்கிறார்கள். அப்படித் திரும்பத் திரும்பக் கடிதங்கள் வருகின்றன. நாடாளுமன்றத்தில் கூட சொல்கிறார்கள். ஆனால், இங்கே இருக்கின்ற காங்கிரஸ் நண்பர்கள், இந்திரா, காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் போடுகிறார்கள். நீங்கள் அப்படி ஜப்தி செய்ய வந்தால், மறியல் செய்வோம், தடைசெய்வோம் என்று சொல்கிறார்கள். இது கட்சியின் கொள்கையா? அல்லது தமிழகத்திற்கென்று இருக்கிற தனிக்கொள்கையா? அல்லது இந்தியா முழுவதற்கும் இருக்கிற கொள்கையா? அல்லது ஆட்சியாளர்களுக்கு எதிராக, அதாவது தமிழகத்தில் இருக்கிற காங்கிரஸ் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற கொள்கையா? அல்லது அங்கேயிருந்து தலைமையிடத்திலிருந்து, நீங்கள் அப்படிச் செய்து கொள்ளுங்கள் தமிழகத்தில், நாங்கள் இப்படி உத்தரவு போடுகிறோம் என்று ஏதாவது சொல்லியிருக்கிறார்களா?

என்னால் அதிகமான உரத்த குரலில் பேச முடியவில்லை என்றாலும், ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள் என்றும், இதற்கான விளக்கத்தை தந்திருக்கிறார்கள் என்றும், கடிதத்தையே இங்கு படித்துக் காண்பித்திருக்கிறார்கள் என்றும், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜன் அவர்களுக்குத் தெரியும்!

நான் எதற்காக இந்தப் பிரச்சினையைத் தொடங்கினேன் என்றால், இந்தப் பிரச்சினையைப் பற்றி தயவுசெய்து, நீங்கள் எல்லாம், அங்கே சொல்லி, கொஞ்ச காலம் இந்த ஜப்தி செய்யக்கூடாது என்பதற்கும், இந்த வசூலை எப்படியாவது நிறுத்துவதற்கும் ஒத்துழைக்கவேண்டும், அவர்களை வற்புறுத்தவேண்டும் என்பதற்காகத்தான்! ஓராண்டு, இரண்டாண்டுக் காலத்திற்கு அதனை வசூலிக்காவிட்டால், இப்படிப்பட்ட கறுப்புப் பட்டியல்களில் சேர்ப்போம் என்ற நிலைமை இல்லாமல், அவர்கள் என்னென்ன உதவிகளைச் செய்து வருகிறார்களோ அதைச் செய்யவேண்டும் என்று நீங்கள் கேட்டு, அதற்கு அவர்கள் ஒத்துக்கொண்டார்கள் என்றால், நாங்கள் வற்புறுத்தி ஜப்தி செய்து வாங்கவேண்டும் என்ற அவசியம் எங்களுக்கு இல்லை என்பதை, நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, ஒன்றை நான் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அழுத்தம் திருத்தமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மைய அரசு பணத்தைக் கொடுக்காவிட்டாலும், கொடுத்திருக்கின்ற கடனை ஜப்தி செய்து வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவர்கள் கொடுத்தால் நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள் என்றும், ஒரு வார்த்தை சொன்னால்போதும். மேலும், பெரிய விவசாயிகளிடம் தான் வசூலிக்கவேண்டும் என்பதை நாங்கள் திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறோம். நீங்கள் காவல்துறையைப் பற்றிச் சொல்கிறீர்கள். ஆனால், இங்கே காவல்துறை தேவைப்படுகின்றது. வசூல் செய்வதற்காக அதிகாரிகள் போகின்ற நேரத்திலே, அவர்கள் அடிக்கப்படாமல் இருப்பதற்கும், மண்டை பிளக்கப்படாமல் இருப்பதற்கும், மரங்களிலே கட்டி வைத்து அடிக்கப்படாமல் இருப்பதற்கும், அவமானப்படுத்தப்படாமல் இருப்பதற்கும்தான் காவல்துறையினர் உடன் செல்ல வேண்டி இருக்கின்றது. ஆனால், காவல்துறையினரே உள்ளே சென்று மாடுகளையோ மற்றவைகளையோ இழுத்துக்கொண்டு போவது கிடையாது. அப்படி இழுத்துக்கொண்டு போவதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதும் இல்லை. அதை அனுமதிக்கவும் செய்யாது என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இதுதான் எங்கள் கொள்கை.

ஆனால், இவ்வளவு பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காவல் துறையினருக்கு இருக்கின்ற சங்கடங்களைப் பற்றி, நான் சொல்லியாக வேண்டும். அரசியல் போராட்டங்கள் என்றால், அதை அவர்கள் தடுத்தாக வேண்டியிருக்கிறது. அதற்கு குறுக்கே நிற்கவேண்டி இருக்கின்றது. தொழிலாளர்கள் போராட்டம் என்றாலும், அதற்கும் அவர்கள் இடையிலே வந்தாக வேண்டும். அவர்களுடைய அண்ணன் தம்பி ஏதாவது ஒரு 'யூனியனி'லோ, சங்கங்களிலோ இருந்தாலும் கூட, அதைப்பற்றியும் கூட கவலைப்படாமல், அவர்கள் கடமையைச் செய்ய வேண்டிய பொறுப்பிலே இருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும். அதோடு மதப்போராட்டங்கள் நான் முன்பே சொன்னேன். ஒரு மதத்திலே இருந்தாலும் கூட, அல்லது அங்கே இருந்தாலும்; இல்லாவிட்டாலும்; மதப்போராட்டங்கள் நடைபெறுவதை,

அவர்கள் தடுத்தாக வேண்டும்!. அதைப்போலவே, போக்குவரத்து வேலை நிறுத்தம் என்றாலும், அவர்கள் வந்தாக வேண்டும். மக்கள் தங்கள் கடமைகளைச் செய்ய அலுவலகம் முதலியவற்றிற்குப் போகிறார்கள். அவர்கள், அப்படி அலுவலகம் போன்றவைகளுக்குச் சென்று பிறகு, வீட்டுக்குத் திரும்புகின்ற வரையிலே போக்குவரத்து வசதிகளிலே எந்தவிதமான தொல்லையும் இல்லாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு வருகின்றது. இப்படி தொழிலாளர்களாக இருந்தால், போராட்டம் வருகின்றது. மாணவர்களாக இருந்தால், போராட்டம் வருகின்றது. ஆசிரியர்களாக இருந்தால், போராட்டம் வருகின்றது. அங்கே எல்லாம் காவலர்கள் முன் நின்று விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

இங்கே ஒரு படத்தைக் காண்பித்தார்கள் கல்லை எடுத்து எறிகிறார் என்று. இது கல்தான் என்று இந்தப் படத்திலே இருந்து அவர் எப்படி தெரிந்துகொண்டார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு பக்கத்தில் கண்ணீர் புகை வீசி, புகை வந்து கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கத்தில், அவர் அந்தப் பணியைச் செய்யக் கூடாதா ? கையில் இருப்பது கல் என்று தான் நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமா ? கையிலே அந்தக் கண்ணீர் புகை குண்டை வைத்திருக்கக் கூடாதா ? இருக்காது என்று நாம் சொல்ல முடியாது. கையிலே இருந்து எறிவது கண்ணீர்புகை குண்டாகவும் இருக்கலாம்.

தயவு செய்து, இந்தவிவாதத்திற்கு நான் ஆதாரத்தோடு பதில் சொல்ல வேண்டும். அதைப் பிறகு சொல்லுகிறேன். நாளை மறுநாள் மானியக் கோரிக்கை இருக்கிறது. ஆகவே தயவுசெய்து, இதிலே கற்பனையில் இறங்காமல், பின்னால் நான் சொல்லவிருக்கும், தெளிவான விளக்கங்களைத் தெரிந்துகொண்டு, அதற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இதற்குமேல் குடிநீர் வசதி, பாதை வசதி, மருத்துவ வசதி, பள்ளிக்கூடம், இவை எல்லாம் கிராமங்களிலே அல்லது ஊர்களிலே ஏற்படுத்த வேண்டும் அதைச் செய்யாவிட்டால், இந்தப் பக்கத்திலே பேருந்துகளை விட மாட்டோம் என்று தடுத்து நிறுத்துகிறார்கள் என்றால், அதற்கும் இவர்கள்தான் பாதுகாப்புக் கொடுத்தாக வேண்டும். இப்படி காவல்துறைக்கு இருக்கின்ற மாபெரும் பொறுப்பினையும், இன்னும் பலவற்றையும் பற்றிச் சொல்ல வேண்டுமென்றாலும், இவ்வளவு பொறுப்புகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற காவல் துறைக்கு, நாம் எந்த வகையிலே அனுதாபம் காட்டுகிறோம், அக்கறை காட்டுகிறோம் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

புள்ளி விவரங்களை இங்கே சொல்லுகிறார்கள். அதற்குப் பதில் தெளிவாகத் தர வேண்டும். உடனே சொல்ல முடியாது. பதில்களைச் சேகரித்து, அதோடு இணைத்துச் சேர்த்து சொல்ல வேண்டும். ஆகவே, இதையெல்லாம் சொன்னால்கூட, நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் காவலர்களை முதலிலே

அண்ணா அவர்கள் சொன்னதுபோல, அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? இப்போது 4,000 பேர்களை நியமித்திருக்கிறோம் என்றார்கள். மீதியுள்ளவர்கள் அப்படியே, முன்பே இருந்தவர்கள் என்று ஒத்துக்கொள்கிறார்கள். இப்போதும் இருக்கிறார்கள். கொஞ்சம் பேர்களை காவலர்களாகச் சேர்த்திருக்கிறோம். ஏன் அதிகமாகச் சேர்க்கக்கூடாது? என்பது குற்றச்சாட்டு. அந்தக் குற்றச்சாட்டை ஒத்துக்கொண்டு, வாதத்திற்கு பதில் சொல்வது என்று வைத்துக்கொண்டாலும் ஒன்றைப் பணிவோடு இந்த மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். இந்தக் காவலர்கள், இந்த நாடு முழுமையும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது மதத்தைச் சார்ந்த அமைப்புகளிலே உள்ளவர்கள். சாதி உணர்வைச் சிந்திப்பவர்களாக இருப்பவர்கள், சாதி உணர்வு இல்லை என்றிருப்பவர்கள், இவர்களுடைய ஒத்துழைப்போடு, இன்று எவ்வளவு காரியங்களை இவர்களால் செய்துவிட முடியும்? என்பதைக் கணக்குப்போட்டுப் பார்த்து, அதே நேரத்தில், செய்திருப்பவர்களையும் நாம் கருத்தில் கொண்டு, அதை இந்தப் புள்ளி விவரத்தோடு பார்த்தால் தான், அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும் என்று நான் கருதுகிறேன்.

சில நாட்களுக்கு முன்பு ‘இந்து’வில் ஒரு கட்டுரை வெளிவந்து இருந்தது. அதை இங்கே நான் சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அந்தக் குறைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குற்றங்கள் அதிகரித்திருப்பதற்கு மக்கள் தொகைப் பெருக்கம் மட்டுமல்ல. வேலை இல்லாத் திண்டாட்டம் என்று சொல்லியதோடு, வேறு பல காரணங்களை எல்லாம் இங்கே சொன்னார்கள். அவற்றை நான் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. கடந்த 07.12.1981ஆம் தேதியிட்ட ‘இந்து’ நாளிதழில், பேராசிரியர் ‘டேவில் பெயிலி’ என்ற அமெரிக்க காவல்துறை நிபுணர், ஜப்பான் மற்றும் அமெரிக்க காவல்துறைகளைப் பற்றி இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்கள். இந்தக் கட்டுரையைப் படிக்கிறபோது விஞ்ஞானத்திலே, பொருளாதாரத்திலே மிக முன்னேற்றமடைந்த ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் அதிக அளவிலான குற்றங்கள் எவ்வளவு நிகழ்கின்றன என்று தெரிகிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

டோக்கியோவில் தினந்தோறும் சராசரி 2 வழிப்பறி கொள்ளைகள் இது அதிலே தரப்பட்டிருக்கிறது. இலண்டனிலே 6 கொள்ளைகள், நியூயார்க்கிலே 200 கொள்ளைகள் நடக்கின்றன. ஆனால், சென்னை நகரத்திலே சென்ற ஆண்டு முழுவதற்குமாக கணக்கிட்டுப் பார்த்தால் 85 கொள்ளைகள்தான் நடந்திருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நாகரிகம், விஞ்ஞானத் துறையில் வளர்ச்சி, கண்டுபிடிப்புகளுக்குப் பிறகு என்ன என்ன வசதிகள் வேண்டுமோ அவையனைத்தும் இருக்கின்றன. இருந்தும், அங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளினுடைய புள்ளி விவரத்தை யெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்தால், எந்த அளவுக்கு இங்கே இருக்கின்றவர்கள் கடமைகளை

ஆற்றுகிறார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். டோக்கியோவிலே மாதத்திற்கு 60 கொலைகள். ஒட்டுமொத்தமாக நான் சொல்கிறேன், இலண்டனிலே மாதத்திற்கு 150! நியூயார்க்கிலே மாதத்திற்கு 6,000 கொலைகள்! சென்னையிலே மாதத்திற்கு 7 கொலைகள் புள்ளி விவரம் இல்லை.

தலைவர் அவர்களே! நல்லவற்றை மட்டும் ஒப்பிடவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். சில நேரங்களில், நம்மைவிட அறிவில் ஆற்றல் மிகுந்தவர்கள், நவீன வசதிகளை எல்லாம் பெற்றிருக்கிறவர்கள் அவர்களாலேயே தடுக்கமுடியாத அளவுக்கு உலகம் முழுமையும் அப்படிப்பட்டவற்றை அதிகமாகக் கொண்டிருக்கின்றன என்ற கணக்கை எண்ணிப்பார்க்கும்போதுதான் இங்கே நிலைமை எவ்வாறு உள்ளது என்பதை எடுத்துக்கூறுதல் ஏற்புடையதாக இருக்கும் என்ற கருத்தில் மட்டுமே நான் அவற்றை எடுத்து வைக்கிறேனேயொழிய, ஆகவே நாமும் 70 செய்தால் என்ன என்ற எண்ணம், ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2.20 கோடி ஜனத்தொகை கொண்ட நியூயார்க் நகரத்தில், 07 வருடத்திலே 1,739 கொலைகள் நடந்துள்ளன. 10.07 கோடி ஜனத்தொகை கொண்ட ஜப்பான் நாட்டில், 994 கொலைகள் நடந்துள்ளன. அதேபோல் 1.20 கோடி ஜனத்தொகை கொண்ட டோக்கியோவில், வருடத்தில் சராசரி 176 கொலைகள் நடந்துள்ளன. சுமார் 33 இலட்சம் ஜனத்தொகை கொண்டுள்ள சென்னை நகரத்தில், 1980இல் 52 கொலைகள் 1981 இல் 41 கொலைகள்தாம் நடந்துள்ளன. சூழ்நிலைகளால் அவர்கள் தவறு செய்யும் அவசியத்திற்கு ஆத்திரத்தில் தூண்டப்பெற்றுப் பல தவறுகளைச் செய்தாலும் அது மக்களுடைய பாதுகாப்பை உறுதி செய்யும், காவல் துறையினுடைய கண்காணிப்பை அதிகமாகவே பெற்று, அவை கட்டுப்படுத்தப்பட்டுத்தான் வருகின்றன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஜப்பானை விட, அமெரிக்காவில் கற்பழிப்புச் சம்பவங்கள் ஐந்துமடங்கு அதிகம். டோக்கியோவை விட, நியூயார்க் நகரிலே 10 மடங்கு அதிகம். சுமார் 5 கோடி ஜனத்தொகையுள்ள தமிழ்நாட்டில் 1980இல், 151 கற்பழிப்புச் சம்பவங்கள் மட்டும் நடந்துள்ளன. இது ஏற்றுக்கொள்ளக்கூடியது என்பதற்காக நான் சொல்லவில்லை. இளைஞர்கள் தகாத முறைக்கு ஆளாக்கப்படுகின்ற அளவிற்குத் தள்ளப்படுகிறார்கள்.

பல்வேறு சூழ்நிலைகள், சுற்றுச் சார்புகள், பேச்சுக்கள், எழுத்துக்கள், கதைகள், படங்கள், திரைப்படங்களையும் சேர்த்துத் தான் சொல்கிறேன். இப்படிப்பட்ட புத்தகங்களை பார்த்தால், ஏதோ ஒரு சில புத்தகங்களை எல்லாம் தடைசெய்கிறோமே தவிர, 'குடும்பப்பத்திரிக்கை' என்று வெளியிடுகிறார்களே அந்த ஏடுகளில் கூட வருகிற படங்களைப் பார்ப்போமானால், நிச்சயமாக நம்மால் அதை தாங்கிக் கொள்ள முடியாது என்பதை வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். ஆக, இந்த கட்டுப்பாட்டிற்குள் இந்தச் சட்டத்தை பயன்படுத்திக்கொண்டு, அதிலே படத்தை வரைகிறார்கள். அது அவரவர்கள், அவற்றை நடத்துகிறவர்கள் உணர்ந்து செய்ய வேண்டும், ஒத்துழைப்புத்

தர வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளைக் வைப்பதற்கு இந்த நேரத்தை பயன்படுத்திக்கொள்கிறேன். ஆனால், நியூயார்க் நகரிலே மட்டும், இந்த வகைக் குற்றத்திற்காக ஒரு ஆண்டில் 2.3 இலட்சம் பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டிலே, 1980 ஆண்டிலே 2,019 பேர்கள் மீதும், சென்னையிலே மட்டும் 135 பேர்கள் மீதும் இம்மாதிரியான வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

ஜப்பானில் தற்போது குற்றங்கள் குறைந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. ஜப்பான் மக்கள் காவல் துறையினர் உதவியை எந்தவிதத் தயக்கமும் இல்லாமல் நாடுகிறார்கள். பொது மக்களின் இத்தகைய ஒத்துழைப்பால் காவல் துறையினர் குற்றங்களை வெகுவாகக் குறைக்க முடிகிறது.

தலைவர் அவர்களே, நான் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். இன்னும் அந்த முடிவிற்கு நாம் யாரும் வந்துவிடவில்லை என்பதுதான் என்னுடைய நம்பிக்கை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே! இன்னும் என்று ஏன் சொல்கிறேன் என்றால் அப்படிப்பட்ட எண்ணங்கள் ஏற்படுவதற்கு யாரும் முன் வரக்கூடாது. தூண்டி விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

ஜப்பானிலே நகரப் பகுதியில் சராசரி 10 ஆயிரம் பேர்களுக்கு, ஒரு காவல் நிலையம் இருக்கிறது. கிராமப் பகுதிகளில் 5ஆயிரம் பேர்களுக்கு, ஒரு காவல் நிலையம் இருக்கிறது. டோக்கியோவில் சராசரி 9,500 பேர்களுக்கு, ஒரு காவல் நிலையம் இருக்கிறது. தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் 40 ஆயிரம் பேர்களுக்கு ஒரே ஒரு காவல் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1.20 கோடி மக்கள் ஜனத்தொகையுள்ள டோக்கியோ பெருநகரில் 40 ஆயிரம் காவல் அதிகாரிகள் உள்ளனர். சுமார் 45 இலட்சம் மக்கள் இருக்கும் சென்னை நகரில் 7,537 காவல் துறையினர் தான் பணியாற்றுகிறார்கள். சுமார் ஐந்து கோடி மக்கள் வாழும் தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக, இங்கே எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஏறத்தாழ 50,000 பேர்கள் தான் இருக்கிறார்கள்! கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். ஆகவே, அந்த அளவிற்கு எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற எண்ணத்தோடு நான் தொடக்கத்திலே ஆட்சிக்கு வந்தவுடன் 10 ஆயிரம் பேர்களை சேர்க்க வேண்டுமென்ற எண்ணத்தை வெளியிட்டேன். ஆனால், இடையில் அது பல்வேறு காரணங்களால் தடைப்பட்டது. நாட்டின் நன்மையை உத்தேசித்து இப்போது அதை வெளியிட விரும்பவில்லை. அடுத்த ஆண்டு, ஒரு வேளை, பட்ஜெட்டிலே சொல்வதற்கு கூட நல்ல வாய்ப்பு கிடைக்கலாம் என்று குறிப்பிட்டாலும், ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1971க்கும் 1981க்கும் ஒப்பிட்டுப் பார்த்து சில எண்ணங்களை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். வழக்குகள் குறைந்திருந்தன.

இப்போது அதிகமாகியிருக்கின்றன. கண்டுபிடிக்கப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அவருக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். அப்பொழுது நம்பிக்கையுள்ள சில வழக்குகளைத்தான் அவர்கள் எஃப்.ஐ.ஆரில் பதிவு செய்தார்களே தவிர, அனைத்து வழக்குகளையும் பதிவு செய்ததாக அங்கே இல்லை. அதை எப்படி நான் சொல்ல முடிகிறது என்றால், 1976ஆம் ஆண்டு ஐ.ஜி. அவர்கள் ஓர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். 17.07.1976 நாளிட்ட அவரது சுற்றறிக்கையில், அவர் சொல்லியிருக்கிறார். காவல் நிலையங்களில் புகார் செய்யப்படும் எல்லா குற்றங்களையும் பதிவு செய்யும் வழக்கம் நடைமுறையில் இல்லை. கண்டுபிடிக்கக்கூடிய குற்றங்களை மட்டுமே பதிவு செய்யும்போக்கு காவல் நிலையங்களில் இருந்து வந்துள்ளது. புகார் செய்யப்படும் எல்லா குற்றங்களையும் பதிவு செய்யாததால், குற்றங்களின் தன்மைகளைப் பற்றி அறிவதற்கு வாய்ப்பில்லை, குற்றங்கள் பதிவு செய்யப்படாததால், அவை கண்டுபிடிக்கப்படவும் இல்லை. அவற்றின் எண்ணிக்கையும் தெரியவில்லை. மக்கள் பெருக்கம், வளர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம் இவற்றைப் பார்க்கும்போது, குற்றங்கள் பெருகுவது தவிர்க்க இயலாதது. எனவே, சிறிய குற்றங்களானாலும், பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு எல்லாக் குற்றங்களையும் பதிவு செய்யும்போது, காவல் நிலையங்களில், பதிவேடுகளில் குற்றங்களின் எண்ணிக்கை உயர்ந்தும், கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை குறைந்தும், காணப்படும். ஆனால், தவிர்க்கமுடியாத நிலைமை, ஆனால் செய்தாக வேண்டும். என்று 1976லேயே அவர்கள் அந்தச் சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு தீர்வு காணும் வகையிலும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சுற்றறிக்கைக்குப் பின், காவல் நிலையங்களில், எல்லா வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றன என்பதைச் சொல்லி, அதனால்தான் 1976க்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதையும், நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். வேறு ஆதாரங்களை, 1976க்கு முன்பு அவை எப்படி இருந்தன, அது எந்த அளவுக்கு இருந்தது, இப்பொழுது எப்படி இருக்கின்றன என்பதை எல்லாம் சொல்லி, நல்ல சூழ்நிலைகளை நான் கெடுக்க வேண்டாம் என்ற காரணத்தால், அந்தப் புள்ளி விவரங்களை நான் கொடுக்க விரும்பவில்லையென்றாலும், நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்வேன், காவல்துறையைச் சேர்ந்தவர்கள், முன்னே இருந்தவர்கள் எல்லாம், முன்னே கொஞ்சம் சாதாரணமான பொறுப்பிலே இருந்திருப்பார்கள். இப்பொழுது கொஞ்சம் உயர்ந்த பதவிக்கு வந்திருப்பார்கள். அவ்வளவுதானே தவிர, புதிதாக ஒன்றும் அதிகமாக இல்லை. அவர்கள் எல்லாம் தங்கள் பணிகளைச் சரிவர செய்கிறார்கள் என்பதற்கு இது உதாரணம் என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்கிற வகையில், 1973இல் இருந்த நிலைமையை விட 49.7 சதவீதம் அதிகமானதாகும். அவற்றை எல்லாம் பார்க்கும்போது டோக்கியோ, இலண்டன், நியூயார்க் போன்ற நகரங்களில் பணிபுரியும் காவலர்களின் எண்ணிக்கை, அவர்கள் பெற்றிருக்கும் நவீன

நுட்பச் சாதனங்கள் என்று சொன்னேனே, அவை இருந்தும் அவர்கள் செய்வதைவிட, வாய்ப்பில்லாத, பாதுகாப்பில்லாத நிலையில் இவ்வாறு நம்மவர்கள் பணி செய்கிறார்கள்.

இங்கே எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு. சுந்தரராஜ் இருந்தால் உதவியாக இருந்திருக்கும். அவர் கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள், சொல்கின்றேன். ஒவ்வொரு காவல் நிலையத்திலும் 4 கைத் துப்பாக்கிகள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாங்கள் எழுதினோம், "முடியாது!" என்று சொல்லிவிட்டார்கள்! பத்திரிக்கை மூலமாகக் கேள்விப்படுகிறோம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எல்லாம் துப்பாக்கிகள் கொடுத்தால் என்ன? என்று யோசிக்கிறோம் என்று அவர்கள் சொன்னதாக. இதிலேயிருந்து, எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்களாக இருந்தாலும், இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில குற்றங்கள் விசாரிக்கப்படவில்லை, கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும், குறை சொல்லப்படுகிறது. அது போல் இப்பொழுது இல்லை, பல ஆண்டுகளாகவே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; அது சில சமயம் கைவிடப்படுகிறது, கண்டுபிடிக்க முடியாமல் போகிறது; தடயம் இல்லையென்று விடப்படுகிறது. 05.08.1974இல் சிந்தாதிரிப்பேட்டை சாமி நாய்க்கன் தெருவில், சங்கர் என்பவர் குத்துக் காயங்களுடன் அவர் வீட்டில் பிணமாகக் கிடந்தார். அவர் சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அதிகாரி ஆவார். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க ஆதாரம் ஏதும் கிடைக்காததால், 15.02.1975இல் கைவிடப்பட்டது என்ற குறிப்பு இருக்கிறது. சென்னை மாம்பலம் தணிகாசலம் செட்டி 51 எண்ணுள்ள வீட்டில் இருந்தவரை 21.09.1974 இரவில் கொலை செய்துவிட்டு, 'ஸ்டீல்' அலமாரியை உடைத்து ரூ.2,795 ரொக்கம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. எவ்விதத் துப்பும் கிடைக்காததால் குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை. 16.03.1974இல் சுப்பையன் என்பவர் கொலை செய்யப்பட்டுவிட்டு அவரிடமிருந்து 6 பவுன் தங்கச் சங்கிலி களவாடப்பட்டுவிட்டது. இன்னும் குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை.

18.01.1974 அன்று தருமபுரி மாவட்டம் தொண்டராப்பட்டி என்னும் இடத்தில் நான்கு பேர் காவல் துறையினர் போல் நடித்து, ரூ.10,766 மதிப்புள்ள நகைகள், பாத்திரங்கள் ஆகியவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

மதுராந்தகத்திற்கு அருகில் 07.05.1975 அன்று ஒரு வீட்டிற்குள் நுழைந்து மின்சாரத்தைத் துண்டித்து வீட்டிலிருந்த பெண்ணை அடித்துப்போட்டு 11,000 மதிப்புள்ள தங்க நகைகளை ஒருவர் எடுத்துச் சென்றுவிட்டார். குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாமல் வழக்கு முடிக்கப்பட்டது.

வடார்க்காடு மாவட்டம், சேவூருக்கும் திருத்துள்ளாய்க்கும் இடையே புகை வண்டிக்குள் 07.10.1974 அன்று 5 பவுன் தங்கச் சங்கிலி ஒரு பெண்ணிடமிருந்து கொள்ளையடித்துச் செல்லப்பட்டது. குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை.

இதைப்போல, வீட்டை உடைத்துத் திருடுதல், வழிப்பறி போன்ற பல வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் அவை கைவிடப்பட்டுள்ளன. அதற்கான பட்டியலே இன்னும் இருக்கிறது. அவற்றில் சிலவற்றைத்தான நான் குறிப்பிட்டுக் கூறுகிறேன்.

அதோடு, 17.07.1972 அன்று சென்னை நகரில் மயிலாப்பூர் தேசிகாச்சாரி தெருவில் உள்ள 7 ஆம் எண் உள்ள வீட்டை உடைத்து ரூ.8,000 மதிப்புள்ள தங்க, வைர நகைகள் களவாடப்பட்டன. அவைகள் பதிவு செய்யப்பட்டனவே ஒழிய, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அதே தெருவில், அதே வீட்டில் 23.12.1973 அன்று அதாவது ஒரு வருஷம் கழித்து அதே முறையில் கதவை உடைத்து ரூபாய் 29,000/– மதிப்புள்ள தங்கம், வெள்ளி ஆபரணங்கள் களவாடப்பட்டன. இந்த வழக்கும் பதிவு செய்யப்பட்டதே ஒழிய, குற்றவாளி கண்டுபிடிக்கப்படவில்லை.

இதை வைத்து யார் என்ன செய்தார்கள் என்று, விவாதிக்கத் தயாராய் இல்லை. அந்த வழக்குகளில் குற்றவாளிகள் மிகச் சாமர்த்தியமாக இருந்திருக்கிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது! காவல்துறைக்கு இன்னும் வசதிகள் வேண்டுமென்று தான் சொல்கிறேனே ஒழிய, நான் குறைகூறத் தயாராக இல்லை. அந்த முறையில், அதிகமான வசதிகளைக் காவல்துறைக்கு இந்த அரசு அளித்து, கண்டுபிடிக்க முடியாது என்று முந்தைய ஆட்சிக்காலங்களில் கைவிடப்பட்ட பல வழக்குகளில், இப்பொழுது குற்றவாளிகள் சிக்கி வருகின்றனர் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வடார்க்காடு மாவட்டம் காட்பாடி காவல்நிலைய எல்லைக்குள், ஒரு வீட்டில் 05.07.1970 அன்று இரவில் ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் கோல் கொண்டு களவு செய்யப்பட்டன.

திருச்சி டவுன் ஸ்டேட் பேங்க் காலனியில் 24.08.1971 அன்று இரவு ரூபாய் 925 மதிப்புள்ள தங்க நகைகள், கைக்கடிகாரம் களவாடப்பட்டன.

திருச்சி டவுனில் உள்ள ஒரு காலனியில் 29.08.1971 அன்று இரவு 825 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் களவு செய்யப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் டவுன், கோவப்பரேட்டிவ் காலனியில் 16.09.1971 அன்று இரவு 4,825 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் கோல் கொண்டு களவாடப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி காவல் நிலைய குடியிருப்புக்குள்ளேயே ரூபாய் 300 மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் கோல் கொண்டு களவாடப்பட்டன.

தஞ்சாவூர் டவுன் எல்.ஐ.சி. காலனியில் 20.09.1974 அன்று 350 ரூபாய் மதிப்புள்ள கைக்கடிகாரம் கன்னக் கோல் கொண்டு களவு செய்யப்பட்டது.

இந்தக் கன்னக் கோல் களவுகள் அனைத்திலும் குற்றவாளிகள் யார் என்பது கண்டுபிடிக்கப்படாமலேயே கைவிடப்பட்டிருந்தன.

அதேபோல் தஞ்சாவூர் டவுனில் 12.08.1975 அன்று இரவு ரூபாய் 5,000 மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் கோல் கொண்டு களவு செய்யப்பட்டன.

கும்பகோணம் நகரில் 12.12.1975 அன்று 20,750 ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகள் கன்னக் கோல் கொண்டு களவு செய்யப்பட்டன. அந்த வழக்கும் கண்டுபிடிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

ஆனால் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கைகளின் விளைவாக, குற்றவாளிகளைத் தேடிச் சென்று, குற்றவாளிகள் கைவிட்டுச் சென்ற கை ரேகைகளின் அடையாளங்களை வைத்து, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளிகளான விஷ்ணுபாய் தேசாய், கிர்தார் ராய், மித்ரா என்பவர்கள், மேலே கூறப்பட்ட இந்தக் குற்றங்களையும் செய்தார்கள் என்பது 1980இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, காவல்துறையினருக்கு வேண்டிய வாய்ப்பும் வசதிகளும் இருப்பின், அவர்கள் திறமையாகவே செயல்படுவார்கள் என்பதை இது உணர்த்துகிறது என்று சொல்வதன் மூலம், காவல் துறையினர் யாரும் அலட்சியமாக இருக்கின்றார்கள். கடமையைச் செய்யவில்லை என்ற எண்ணத்தைத் தயவு செய்து யாராவது கொண்டிருப்பார்களேயானால், அதனை இப்பொழுதே மாற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு சில பரபரப்பூட்டும், கொள்ளை, கொலை வழக்குகளில் எப்படிக் காவல்துறையினர் கண்டுபிடித்தனர் என்பது இந்த ஆய்வுரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அதை மீண்டும் சொல்ல விரும்பவில்லை.

ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். விருதுநகர் காவல்நிலைய குற்ற எண். 100/80இல் மற்றும் இராஜபாளையம் திருச்சி, உறையூர் முதலிய புறக்காவல் நிலைய எல்லைக்குள் 1980இல் நடந்த பல கன்னக் கோல் களவுகளில் வங்காளத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளி விஷ்ணுபாய் தேசாய் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

சென்னையில் சுமார் 45 கன்னக் கோல் களவுகளுக்குக் காரணமான மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பழைய குற்றவாளி ஸ்டீபன் என்பவரும் சென்போஸ் என்பவரும், அவர் கூட்டாளிகளும், 30.03.1980 அன்று கைது செய்யப்பட்டார்கள். ரூபாய் 5 இலட்சம் பெறுமான திருட்டுச் சொத்துக்கள் மீட்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டம், குமரக் கோட்டத்தில் உள்ள முருகன் கோவிலில் 11.05.1981 அன்று சிலைகள் திருட முயற்சித்து கேரளாவைச் சேர்ந்த ஸ்டீபன், சுரேஷ்குமார் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டார்கள். கோவிலின் காவலாளி சாஸ்தா பிள்ளை என்பவரையும் கொலை செய்துவிட்டார்கள். இதை எதற்காக சொல்கிறேன் என்றால், திருடுகிறவர்கள், திருடப்பட்டவர்கள் இவர்களை நாம் கொஞ்சம் நன்றாக அனுதாபத்தோடும், அக்கறையோடும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். திருட்டு கொடுத்தவர்கள்

800 ரூபாய் அல்லது 150 ரூபாய் பறி கொடுத்தவர்கள் அதை திரும்ப வாங்கிக் கொள்ள முடியாதவர்கள். 5 இலட்சம் ரூபாய் கொள்ளைக் கொடுப்பவர்கள் அவ்வளவு எழை என்று சொல்ல முடியாது. ஆனால், திருட்டுக்கள், கொலைகள், கொள்ளைகள் என்று வரும்போது, எல்லாருக்கும் ஒரே நீதி தானே தவிர, வேறு நீதியை நாம் பார்க்க முடியாது என்பதைக் கணக்கில் கொண்டுதான் இவற்றை நான் படித்து சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

எதிர்கட்சித் தலைவர் அவர்களும், ரகுமான்கான் அவர்களும் மாண்புமிகு துரைமுருகன் அவர்களும், இப்படி எல்லாம் சில புள்ளி விவரங்களைச் சொல்லாமல் இருந்திருந்தால், இதை நான் படித்திருக்க மாட்டேன். உங்களுக்கு நேரமும் மிச்சமாகி இருக்கும். வேறு பிரச்சினைகளுக்கும் நான் பதில் சொல்லியாக வேண்டுமே, 'நக்சலைட்' பிரச்சினை இருக்கிறது. காவலர் உணவுப் பிரச்சினை இருக்கிறது. இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் நான் பதில் சொல்லியாக வேண்டும். பலபேர், பல குற்றச்சாட்டுக்களைப் பல நாட்களாகச் சொல்லி, இங்கே படித்தும் இருக்கிறார்கள். மக்கள் மத்தியிலேயும் பரப்பி விட்டிருக்கிறார்கள். ஆகவே, அவற்றின் உண்மைகள் என்னவென்பதும், நாட்டிலே என்ன நடக்கின்றன என்பதையும் சொல்வது, என்னுடைய கடமை என்பதற்காகப் படிக்கிறேன். விவரமும் சொல்ல முன்வந்தேன். 1979–1980, 1980–1981ஆம் ஆண்டுகளில் செய்யப்பட்ட சுமார் 10 கன்னக் கோல் களவு காரணமாக தாதாசங்கர், என்பவர் ஆந்திர மாநிலத்தில் 21.02.1981இல் கைது செய்யப்பட்டார். சேத்துப்பட்டு, வேளச்சேரி, காட்பாடி, கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களில், 1981ஆம் அண்டு நடந்த 4 கன்னக் கோல் களவு காரணமானவராகக் கிரிதாரிலால் என்பவர், மேற்கு வங்காளத்தை அடுத்த சித்னாபூரைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்துள்ளது.

15.11.1981 இரவு, வேலூர்–சித்தூர் நெடுஞ்சாலையில் பேருந்தை வழிமறித்து நடந்த வழிப்பறி உங்களுக்குத் தெரியும். ஆகவே நான் திரும்பவும் இதைப் பற்றிச் சொல்லவில்லை. இவ்வளவு குறுகிய நாட்களில் இவற்றை எல்லாம் கண்டுபிடித்தார்கள். வேற்று மாநிலத்திலே இருப்பவர்களைக் கண்டுபிடித்துக் குற்றவாளிகள் யார் என்பதை நிரூபித்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, நமது காவல் துறையைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் எவ்வளவு தகுதிமிக்க நல்லவர்களாக, நாட்டின்மீது பற்று உள்ளவர்களாக, அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

யாருக்காகவும், யார் சார்பாகவும் அவர்கள் இல்லை என்பதையும், குற்றம் நடக்கிறது என்பது தவிர்க்க முடியாமல் நடந்துவிடுகிறது என்பதையும், சொல்லிக்கொள்கிறேன். வேண்டுகிற அளவுக்கு எண்ணிக்கை இல்லை என்ற காரணத்தினால், ஒரு அளவோடுதான் காவல்துறையால் இயங்க முடிகிறது என்கிற நிலைமையையும் எண்ணிப்பார்க்க வேண்டும். தாக்குதல், குறை கூறுதல் இல்லாவிட்டால்

நிச்சயமாக உண்மைகள் வெளிவராது. நாட்டுக்கு நன்மை பயக்கும் காரியங்களை செய்ய முடியாது என்றாலும் நாம் எந்த அளவுக்குச் சொல்ல வேண்டுமோ, அந்த அளவுக்குச் சொல்ல வேண்டுமே தவிர, எதிரிலுள்ளவரை ஏதோ எதிரிகளாகவே கருதிக்கொண்டு, தொட்டதற்கெல்லாம் குறைகண்டு, இந்த ஆட்சியின்மீது, எந்நேரமும் பழிபோடுவதிலேயே முனைப்பாயிருக்கக் கூடாது. அத்துடன் காவல் துறையை மேம்படுத்துவதற்கு, ஆக்கப்பூர்வமான யோசனைகளை வழங்கி, எங்களுக்கு உதவிட வேண்டுகிறேன்.

காவல்துறையிலே மகளிரைச் சேர்த்தது பற்றி, அவர்கள் உடையைப் பற்றி, மிகவும் அக்கறையோடு எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனது அன்புக்குரிய துரைமுருகன் அவர்கள் தெளிவாகச் சில விளக்கங்களைச் சொன்னார்கள். அவை அப்படியே குறிப்பேட்டிலே இடம்பெற்றுள்ளன.

நான் ஒன்றைச் சொல்லுகிறேன். ஒரு பக்தன் கோவிலுக்குப்போனால், அங்கே உள்ள சிலைகளைப் பார்க்கும்போது, பக்தி உள்ளவன் கும்பிடுவான். அல்லது சிற்ப ஆராய்ச்சி தெரிந்தவர்கள் அல்லது சிற்ப நுணுக்கம் தெரிந்தவர்கள் போனால், இதை எப்படி செதுக்கினார்கள் என்று அவர்கள் ஒருவேளை ஆராய்ச்சி செய்யலாம். அல்லது இவ்வளவு அழகாக செதுக்கி இருக்கிறார்களே என்று அதைப் பாராட்டிவிட்டு, நாமும் இதைப்போன்ற இன்னொரு சிலை செதுக்குவதற்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி யோசிப்பார்கள். ஆனால் அதை விமர்சனம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு யாராவது போனால், அதைப் பார்க்கிற நோக்கம், வேறு விதமாக இருந்துவிட்டால், அவர்கள் பார்வைக்கு சிற்பமும் தெரியாது, அந்தஅழகும் தெரியாது. அங்கே பக்தியினுடைய எதிரொலியும் இருக்காது. அதைப்போல, அவர்கள் எவ்வளவோ தகவல்களைச் சொல்லி இருக்க முடியும். ஆனால் இறுக்கமான உடை அணிந்து இருக்கிறார்கள் என்று திரும்பத் திரும்ப, 3,4 முறைகள் சொல்லியிருக்கிறார்கள். நானே, இங்கே உட்கார்ந்துகொண்டு கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். திரும்பத் திரும்பச் சொல்லி, அதை நான் இந்த பதக்கங்கள் பரிசீலிக்கும் நிகழ்ச்சியில் அப்படி உடைகள் இருக்கக்கூடாது, மற்றவர்கள் அணிவதுபோல், முழங்காலுக்கு மேலே போடப்பட்டிருக்கவேண்டும் என்று நான் இங்கே வெளியிட்டேனோ, அந்தக் கருத்தை இங்கே, இவ்வளவு அழகான ஒரு விமர்சனம் செய்ததற்கு, நான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அதற்கு உத்தரவுபோட்டு, அனுமதி கொடுத்தாகிவிட்டது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, சில குற்றங்களைச் சொல்லும்போது, இங்கே நாம் சிரிப்பதற்கோ, மற்றவர்களை கேலி செய்துவிட்டோம், அவமானப்படுத்திவிட்டோம் என்று மகிழ்ச்சி பெறுவதற்காகவோ சொல்லாமல், எங்களைப் போன்றவர்கள், ஏதாவது தவறு செய்திருந்தால், திருத்திக்கொள்ள அல்லது இது சரியான பாதை அல்ல என்று எடுத்துக்காட்ட, அந்தப் பேச்சு பயன்படவேண்டுமென்றுதான், அதிலும் இளைஞர்கள், சட்டம் படித்த எனது அருமை நண்பர் துரைமுருகன் போன்றவர்களுக்கு இதைச்

சொல்ல வேண்டியவன் ஆகின்றேன்! இதை நான் சொல்வதற்குக் காரணம் ஒன்று உண்டு. எதிர்க்கட்சித்தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, ஒரு இடத்தில் பேசியிருக்கிறார்கள். பத்திரிக்கையிலே அந்த குறிப்பு வந்திருக்கிறது. காவல் துறைப் பணிக்கு மகளிர் அதிகமாக வந்து சேரமாட்டேன் என்கிறார்கள். நாங்கள் உருவாக்க இருக்கின்றோம். அதில் அதிகமாக வந்து சேரமாட்டேன் என்று சொல்கிறார்கள் என்கிறார்கள், வந்து சேரவேண்டும், பரிசுகள் பெறவேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இப்போது அதிகமாக, 800 பேருக்கு மேல் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் நிறையப்பேர் சேர இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் மேலும் மேலும், அதிகமான எண்ணிக்கையில், அவர்கள் வேலையிலே வந்து சேருவதற்கு ஊக்கம் அளிப்பதாக, உற்சாகம் அளிக்கும் விதத்தில் நம் பேச்சு இருக்கவேண்டுமே அல்லாது, வீணான ஐயங்களையும், தேவையற்ற தயக்கத்தையும், அச்சத்தையும் அவர்கள் மனத்தில் விதைத்துவிடுவதாக அது ஒருபோதும் அமைந்துவிடக்கூடாது. அதைப்போலவே, இன்னொரு கதையையும் நான் சொல்லவேண்டுமென்று கருதுகிறேன்.

மணிக்கூண்டு பத்திரிக்கையிலே நான் படித்தது. சில இளைஞர்கள், வசதியான குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் இதில் அடக்கம். அவர்கள் மாடியில் நின்றுகொண்டு, பள்ளிக்குச் சென்றுவரும் பெண்கள் மற்றும் இவர்களைப் போன்றவர்களையெல்லாம், கேலி செய்வது அந்த இளைஞர்களுக்கு வழக்கமாக இருந்ததாம். அதேபோல் ஒருநாள் மாணவிகள் எல்லோரும் போய்க்கொண்டிருக்கும் வழியில் நின்றுகொண்டு, இந்த 4, இளைஞர்களும் ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு, அவர்களுடைய உடைகளைப் பற்றியெல்லாம் விமர்சனம் செய்து, கேலி பேசியிருக்கிறார்கள். ஆனால், அதிலே போன அந்தப் பெண்ணைக் குறிப்பிட்டு சில நண்பர்கள் பேசினார்களே, அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை, தன்னோடு இருப்பவனுடைய தங்கைதான் அந்தப் பெண் என்று அந்தக் கதையில் சொல்லுகிறார்கள். எப்படியிருக்கிறது பாருங்கள்!

ஆகவே, ஒரு சமூக சேவைக்காக பெண்கள் சேவைசெய்ய வருகிறார்கள் என்றாலும், ஒரு ஆட்சியிலே, பல பெண்கள் வருகிறார்கள் என்றாலும் அல்லது ஊனமுற்றவர்களுக்காக சேவை செய்வதற்கு சில அமைப்புக்களின் மூலமாக அதுவும் இலவசமாகவே, ஊதியமின்றி, கௌரவப் பணியாளர்களாக வந்திருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் அனைவரையும் மிகவும் கண்ணியத்துடனும், பண்பாடு சிதையாது நடத்தவேண்டுமென்பது எனது கருத்தாகும்!

தலைவர் அவர்களே, அவர்களுக்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும், அவர்களுக்குத் தனியாக அமைப்புகள் இருக்க வேண்டும் அவர்களுக்கு தனியாக கழிப்பிடங்கள் இருக்க வேண்டும் என்பதற்காக உத்தரவுகளைப் போட்டிருக்கிறோம் என்பதையும், பின்னாலே தெரிவிக்க இருக்கிறேன். முன்பும் இதுபற்றி சொல்லியிருக்கிறோம். செய்யப்படாத ஒன்றை இப்போது நாம் செய்து வருகிறோம் என்பதை உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறேன்!

இங்கே, விவசாயத் தொழிலாளர்களுக்கு சட்டப்படியான கூலி தர மறுப்பது, அவர்களுக்குத் துணை செய்வது, காவலர்களுடைய கெடுபிடி என்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் அவருக்கே உரிய நகைச்சுவையோடு தெரிவித்தார்கள். சிரிப்பின் ஊடே கொஞ்சம் காரசாரமாகவும் பேசினார்கள். காரசாரமாகப் பேசுவார், பேசிவிட்டுச் சிரிப்பார். அவர் இப்போது இல்லை, இருந்தால் இப்போதும் சிரித்திருப்பார். சட்டக்கூலி பற்றி சில குறைகளைக் கூறியிருக்கிறார்கள். அதற்குச் சில உண்மைகளை நான் இங்கே வெளியிட்டாக வேண்டியிருக்கிறது. என்னென்ன தவறுகள் நடைபெறுகின்றன என்பதை நான் இங்கே எனக்குக் கிடைத்திருக்கிற ஆதாரங்களை வைத்துச் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

விவசாயத் தொழிலாளர்கள் அவர்களுடைய பணிகளைச் செய்துவிட்டு, அவர்களுக்கு எந்த அளவுக்குக் கூலி கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறதோ அதைக் கொடுக்காவிட்டால், அதற்காகப் போராடலாம், அதற்காகப் போலீசாரிடம், கலெக்டரிடம் நடவடிக்கை எடுக்கச் சொல்லலாம். பாதுகாப்பு கேட்கலாம். அரசு நிர்ணயித்த கூலிக்கு மேல், அதிகக் கூலி கேட்டு வலியுறுத்துவது என்பது நியாயமாக இருக்க முடியாது. எந்த அளவுக்கு நெல் கொடுக்க வேண்டும்; கூலி கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

அதற்குமேல் கேட்டு, அவர்களுக்கு அந்தக்கூலியை கொடுக்க முடியாது என்று உரியவர்கள் சொன்னால், வேலையைப் பாதியிலே நிறுத்திவிட்டு சென்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை. இங்கே மின்சாரத்தை நிறுத்திவிட்டால் என்ன ஆகும்? பயிர் எல்லாம் காய்ந்துவிடும். தீய்ந்துவிடும். ஆகவே அப்படிச் செய்யக்கூடாது என்று சொல்கிறார்களே, அதைப்போல வேலையைப் பாதியிலே நிறுத்திவிட்டால், அவர்களுடைய விவசாயம் என்னவாகும்? விவசாயம் அவர்களுக்கு இலாபத்தை தருகிறதோ இல்லையோ, நாட்டில் உணவு நிலைமை என்னவாகும் என்பதை சிந்திக்க வேண்டும்! அந்த உரிமையைப் பெறுவதற்காக நாம் போராடலாம்; எடுத்துச் சொல்லலாம் தவறேயில்லை!

ஆனால், அதே நேரத்தில் சட்டத்திற்கு உட்பட்டு, நமது பணிகளைச் செய்ய வேண்டியது முக்கியக் கடமை, தேவை என்பதை சொல்லித் தீரவேண்டும். அந்த வகையில் திரு. இராமச்சந்திரன் தலைமையில், நியாயமான கூலி கொடுப்பதற்காக அரசு நிர்ணயித்த குழுவின் பரிந்துரையின்படி, குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 14/79 என்பது 01.09.1979 முதல் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, பெரியவர்களுக்கு ஒரு நாளைக்கு 7 லிட்டர் நெல்லும் 2 ரூபாய் 20 காசும் அல்லது 9 ரூபாய். நடவு நடுதல், களை எடுத்தல் ஆகியவற்றிற்கு ஒரு நாளைக்கு 6 லிட்டர் நெல்லும் 1 ரூபாய் 80 காசும் அல்லது 7 ரூபாயும் பெரியவர் அல்லாதவர்களுக்கு ஒரு நாளைக்கு 4 லிட்டர் நெல்லும் ஒரு ரூபாய் 80 காசும் அல்லது 5 ரூபாயும், ஊதிய வரையறைகளாகும்.

நன்னிலம் தாலுகா, காத்தாடி கிராமத்தில் 26.02.1982 அன்று நடைபெற்ற நிகழ்ச்சி, கம்யூனிஸ்ட் கேட்ட கூலிதான் பிரதான தகராறுக்குக் காரணம் என்பதை நான்

இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னொன்று, நத்தனம் கிராமத்தில், 30.08.1981 அன்று, இடது கம்யூனிஸ்ட் சுந்தரம், இராஜபாண்டியன் ஆகியோரைத் தாக்கியது. ராஜபாண்டியன் மூக்கை அறுத்துவிட்டார்கள் என்ற வழக்கைப் பற்றி நான் இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். கட்சி மாறியதன் காரணமாக, இதைத்தான் நான் முதலிலே குறிப்பிடும்போது சொன்னேன். எதையெல்லாம் காவலர்கள் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது, அங்கேபோய் பொறுப்பு ஏற்க வேண்டியிருக்கிறது என்று சொன்னேன். இருவரும் தூண்டிவிட்டுக் கலகம், கொடுமை செய்தார்கள் என்று இம்மாதிரியான நிகழ்ச்சிகள் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிலச்சுவான்தார்களுக்கும் இடையே, அரிசனங்களுக்கும் இடையே நடப்பதற்கு வர்க்கப் போராட்டம் என்று ஒரு சாயம் பூசுவது, சட்டம் ஒழுங்கு கெடுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறது என்பதைப் பற்றி, நான் குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் நன்னிலம் தாலுக்கா, காளாம்பட்டி, என்ற இடத்தில் 26.02.1982 அன்று ஒரு நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. புருஷோத்தம நாயுடு என்பவர் நிலத்தில், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அரிசன விவசாயத் தொழிலாளர்கள், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்கள், ஜாதி இந்து தொழிலாளர்கள், நெல் அறுவடை செய்துள்ளார்கள். அரசு நிர்ணயித்த கூலியான 6 லிட்டர் நெல்லைப் பெற்றுக்கொண்டு ஜாதி இந்துக்கள் சென்றுவிட்டனர். ஆனால் ஹரிஜன விவசாயத் தொழிலாளர்கள், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டும் 7 லிட்டர் நெல் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அரசு நிர்ணயித்த கூலியைப் பெற்றுக்கொள்ளாமல், அதிகமாகக் கூலி வேண்டுமென்று கேட்டதால், தொழிலாளர்களுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும் இடையே தகராறு ஏற்படுகின்ற நிலையில், யாருக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உமாநாத் அவர்கள் கேட்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தை வளர்ப்பதற்காக ஏழைகளின் பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக, வர்க்க ரீதியான போராட்டம் தேவைதான். சூழ்நிலைக்கேற்ப, நான் கொடுக்க முடியாவிட்டாலும், அனைவரும் ஒன்று சேர்ந்து, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அடிப்படையில் கூலி கொடுக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டு, அது கொடுக்கப்படும்படி செய்கின்றபோது, அதற்கான ஒத்துழைப்புக் கொடுப்பது வரவேற்கக் கூடியதாக இருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அரசு நிர்ணயித்த நெல்லைக் கொடுக்கின்ற போது அதை வாங்கிக் கொள்ளாமல் தகராறு செய்கின்ற நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. இங்கே கூர்ந்து ஆராய்ந்தால் நமக்குச் சில உண்மைகள் புலனாகும்.

சின்னசாமி நாயுடு என்பவர் நீண்ட நாட்களாக கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தவர். பஞ்சாயத்து ஒன்றியத் தேர்தலில் தனக்குத் தேர்தலில் போட்டியிட 'டிக்கெட்' கொடுக்காத காரணத்தால், வேறு கட்சிக்கு மாறிவிட்டதாகத் தெரிகிறது.

அந்தக் கட்சி எது என்பதைப் பற்றிச் சொன்னால் ஏதாவது பிரச்சினை வந்துவிடப் போகிறதோ என்பதற்காகக் குறிப்பிட விரும்பவில்லை! வேறு எந்தப் பிரச்சினையும் வராது என்றால், அதையும் சொல்கிறேன்! விஜயராகவன் என்பவர் இந்திரா காங்கிரசைச் சேர்ந்தவர். அவர் நிலத்தில் நெல் அறுவடை செய்ய வேண்டி வந்தது. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள் அவர் நிலத்தில் நெல் அறுவடை செய்ய மறுத்தனர். அவர்களும் முன்வராமல், அறுவடை செய்ய வந்தவர்களையும் அறுவடை செய்யவிடாமல் தடுத்தனர். இந்தச் சூழ்நிலையில், வேறு கிராமத்தில் இருந்து விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டு நெல் அறுவடை செய்து கொண்டிருந்தபோது, கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள், சுமார் 500 பேர், பக்கத்திலுள்ள கிராமத்தில் இருந்து அரிவாள், ஈட்டி போன்ற ஆயுதங்களுடன் வந்து கிளர்ச்சி செய்து 16 ஜாதி ஹிந்துக்கள் காயமுற்றனர். ஜாதி சொந்தமான வீடுகளிலும், அவர்கள் கொள்ளை அடித்து உள்ளனர். ரூ.5,000/– அளவிற்கு சேதம் விளைவித்துள்ளனர்.

மேலும் 45 மூட்டை நெல்லையும் எடுத்துச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாக வழக்கு ஒன்றும் அங்கே காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியை நான் ஏன் உதாரணமாகச் சொல்கிறேன் என்றால், ஒரு அரசியல்.... தொடர்பான நிகழ்வாகக் கூட இது இருக்கலாமோ என்று தெரியவில்லை!

மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய எண்ணத்தை வெளியிட்டிருக்கிறார்கள். எனக்கு கொடுத்திருக்கிற தகவல்களின்படி, நான் இங்கே விவரங்களை எடுத்து வைத்துக்கொண்டு வருகிறேன். இந்தக் கிளர்ச்சிகள் எந்த அளவுக்கு போயிருக்கிறது என்றால், நிறைய பேர்கள் பெரிய தாக்குதல்களுக்கு உள்ளாகிற நிலைமை உருவாகி, ஒருவருடைய மூக்கை அறுத்திருக்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு இங்கே சொல்ல விரும்புகிறேன். இதற்குப் பின்னணி என்ன என்பதையும் நாம் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். கூலியைப் பெறுவதற்கு எந்த அளவுக்கு உரிமை இருக்கிறதோ, அதே போல இந்த உரிமையை பெறக்கூடிய அளவுக்கும் முறையிருக்கிறது. அவர்கள் நியாயமான கூலியைப் பெறமுடியவில்லை என்றால், அரசும், காவல்துறையினரும் அவர்களுக்கு உதவி செய்தாக வேண்டும்.

அந்த வகையில், அவர்கள் முயற்சி செய்யாமல் வேறு வகைகளில் தீர்த்துக் கொள்வது சரிதானா என்பதை தயவு செய்து நாம் ஒவ்வொருவரும் சிந்தித்தாக வேண்டும். கட்சியைவிட்டு மாறிவிட்டார் என்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு, இதிலே கூலி விஷயத்திலே ஏற்படுகிற கிளர்ச்சியை இப்படி மற்றவர்கள் பயன்படுத்திக் கொண்டு, இதுபோன்ற வன்முறை செயல்களைச் செய்ய அனுமதிப்பது எந்தக் கட்சிக்கும் நல்லது அல்ல என்பதைத் தான், திரும்பவும் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். பெரியவர்களாக இருப்பவர்கள், தலைவர்களாக இருப்பவர்கள் தலையிட்டு இப்படிப்பட்ட தவறுகள் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும், கோரிக்கையுமாகும்....



சிலை திறப்பு விழா
UNVEILING THE STATUE OF
MAHAKAVI SUBRAMANIA BHARATHI
NEW DELHI
4.2.1987

இங்கே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் பேசினார்கள். ‘‘தேர்தலிலே ஒரு வாக்குறுதியை மக்களுக்குத் தந்தீர்கள்! இப்போது மைய அரசு முடியாது என்கிறது. நீங்களும் அதைச் செய்யமாட்டேன் என்கிறீர்கள். ஆகவே, உங்களுக்கு உள்ள கொள்கை என்ன ஆயிற்று, மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்’’ என்று அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்குப் பதில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தேர்தலிலே நாங்கள் கொடுத்த வாக்குறுதியை இரண்டாண்டுக்காலம் தொடர்ந்து நிறைவேற்ற முனைந்தோம் என்பதும், அதிலே 200 கோடி ரூபாய் வரையிலே, அரசுக்கு இழப்பு இருந்தது என்பதும், இந்த நாடு அறியும். மன்ற உறுப்பினர்களும் அறிவார்கள். நான் முதலிலே சொன்னதைப் போல, இத்தகைய சூழ்நிலையில் மீண்டும் மீண்டும் நீங்கள் விவசாயிகளுக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்பதும், மூன்று மாதங்கள் கழித்து, மீண்டும் வசூல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்வதும், 6 மாதங்கள் கழித்து, மீண்டும் வசூல் செய்து கொள்ளுங்கள் என்று சொல்வதும் அதற்காகப் போராட்டம் என்று சொல்வதும், எப்படி நியாயமாகும்? என்பது எங்களுக்கும் புரியவில்லை!. ஆகவே, ஒன்றை மைய அரசு சொல்வது சரியல்ல என்று சொன்னால், எப்படி ஒத்துழைப்போம் என்று முதலிலே முடிவு செய்தோமோ, அதே போல் அனைவரும் சேர்ந்து முடிவு செய்வோம். அவர்களைக் கேட்போம். அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து கேட்போம். வேறுபாடின்றிக் கேட்போம். விருப்பு, வெறுப்பற்ற நிலைமையில் கேட்போம். உரிமையோடு கேட்போம். உறவோடும் கேட்போம். ஆகவே, அந்த நிலைமைக்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமே தவிர, வேறு வகையிலே இந்த அரசு அதிகாரத்தை மீறுகிறது, மறந்துவிட்டது என்று மட்டும் தயவுசெய்து குற்றம் சுமத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளிடம் இருந்து இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை வந்தால் அதற்குப் பதில் சொல்வதற்கும், அதை எடுத்துச் சொல்வதற்கும் எங்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது; ஆதாரம் இருக்கின்றது; விவரம் தெரிந்தவர்கள் அங்கே ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிந்த பிறகே, இங்கே கொள்கையை விட்டுவிட்டீர்களே, என்று கேட்பது எப்படி நியாயம் என்பதற்காகத்தான் நான் சொன்னேன்!.

அடுத்து, திருமெஞ்ஞானபுரம் துப்பாக்கிச் சூடு நடந்தது பற்றி எல்லாம் இங்கே கூறி இருக்கிறார்கள் என்று சொல்லி, நான் சொன்ன வார்த்தைகளை ஒட்டுமொத்தமாக சொன்ன கருத்தை, அந்த ஒரு நிகழ்ச்சியை ஒட்டிய கருத்தாக இங்கே பேசினார்கள். நான் என்ன பேசினேன் என்பதை, இங்கே மீண்டும் நினைவுபடுத்த வேண்டிய அவசியத்துக்கு ஆளாகி இருப்பதற்காக நான் மிகவும் வருத்தப்படுகிறேன். இதை சொல்லித்தான் ஆக வேண்டி இருக்கின்றது. நான் சொன்னது இதுதான். திருமெஞ்ஞானபுரத்திலே துப்பாக்கிச்சூடு நடந்தது என்பதைப் பற்றி எல்லாம், இங்கே கூறியிருக்கிறார்கள். அங்கேதான் பிரச்சினையை முன்னால்

வைக்க விரும்புகிறேன். என்று கூறி இருக்கிறேன். குற்றம் செய்கிறவர்கள் குற்றம் செய்துவிட்டுத் தப்பிவிடுகிறார்கள். அப்படித் தப்பி விடுகிறவர்களைத் தேட வேண்டிய பொறுப்பிலே, அங்கே காவல் துறையினர் இருக்கிறார்கள். கண்டுபிடித்து அவர்களைக் கைது செய்ய வேண்டிய பொறுப்பு போலீசுக்கு இருக்கின்றது என்பதிலே நம்மில் யாருக்கும் ஆட்சேபணை இல்லை. அதற்கு அவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள், அனாவசியமாக எடுக்கின்ற நடவடிக்கைகளாக இருக்குமேயானால், அவற்றை நிச்சயமாக இந்த அரசு ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லிக் கொள்கிறேன். ஆனால், அப்படிப் போகிறவர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கி, அவர்களுடைய உயிரையே பலி வாங்குகின்ற அளவுக்குரிய நடவடிக்கையாக இருந்தால் அதிலே இருந்து தற்காத்துக்கொள்ள வேண்டாமா? காவல் துறையினர் தாக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்கள் மருத்துவமனையில் இருக்கிறார்கள்! அதுபோல் சிலர் இறந்துபோய் இருக்கிறார்கள்!

அப்படி இறந்து போகிறவர்களுக்காக வருத்தப்படுகிறோம். நியாயமான காரணங்களுக்காக இறந்தார்கள் என்றாலும், எதிர்க்கக்கூடிய நேரத்தில் இறந்தார்கள் என்றாலும், அப்படி சில சமயங்களில் இறந்தவர்களைக் குறித்து, அவர்கள் இந்த நாட்டுக்குத் தேவை என்று, அவர்களுக்காக கண்ணீர் விடுகிறோம், கட்சி சார்பற்ற மனிதர்கள். அதுமட்டுமல்ல. வாழ வேண்டியவர்கள், இடைக்காலத்தில் சுடப்பட்டிருக்கிறார்கள்!. இவ்வளவு அநீதி ஏற்படுகிறது. இதற்காக, போலீசாரிடம் பணியை ஒப்படைத்துவிட்டு, அந்தப் பணியைச் செய்கிற நேரத்தில், அதை நிறைவேற்ற முடியாத அளவுக்கு, அவர்கள் நிலைமையை சமாளிப்பதற்கு அனுப்பப்படுகிறார்கள் என்று சொன்னாலும் கூட, தங்கள் உயிரைப் பாதுகாக்கின்ற நேரத்தில், இனி உயிரைப் பாதுகாக்க, தப்பிக்கவைக்க என்ன செய்ய முடியும் என்கிற நிலையில், எனக்கு அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது நினைவுக்கு வருகிறது. “புழுவினால் ஒன்றும் செய்ய முடியாது என்றாலும், திரும்பத் திரும்ப அதைச் சித்தரவதை செய்து கொண்டிருந்தால், அது நெளிந்து தன் எதிர்ப்பை வெளிப்படுத்தும், ஒன்றும் செய்ய முடியவில்லை என்றாலும், நெளிந்து தன் உடலின் வருத்தத்தை வெளிப்படுத்த முயலும்!” என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது, எவ்வளவுதான் காவல்துறையிடம் அமைதியைக் காக்கவேண்டும் என்பதற்காக, துப்பாக்கிச்சூடு கூடாது என்று சொன்னாலும்கூட, அவர்கள் சித்தரவதைக்கு உள்ளாகின்ற நிலைமைக்கு வந்த பிறகு, அவர்கள் தங்களை எப்படி காத்துக்கொள்ளாமல் இருக்க முடியும் என்றுதான் பேசியிருக்கிறேன். ஆகவே, அங்கு நடந்த நிகழ்ச்சியை ஒப்பிட்டு, நடுநிலையோடு பார்க்க வேண்டும்!. ஒட்டுமொத்தமாக, காவல் துறைக்கு உள்ள பொறுப்பு, அதற்கு ஏற்படுகின்ற விபத்து, ஆபத்து இவைகளுக்கிடையே காவலர்கள் ஆற்ற வேண்டிய காரியம், தங்களைக் காப்பாற்றிக்கொள்ள சில நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். என்று நான் கூறியதை, மாற்றிச் சொல்லிவிட்டேன். அதற்கு விளக்கம் தேவை என்று கேட்டார்கள். அதற்காகவே, இதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நடந்துவிட்ட நிகழ்ச்சியைப் பற்றி விளக்கமாக இங்கே விவாதம் செய்யப்பட்டிருக்கிறது. மதச் சார்பற்ற பிரச்சினை அல்ல அது. ஒரு பொது வேலைநிறுத்தம் என்ற பெயரால், அங்கே நடந்த நிகழ்ச்சி என்பதை நாம் தயவு செய்து மறந்துவிடக்கூடாது. அரசு உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் ஒருமித்து, அந்த பொது வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பு தரக்கூடாது என்ற முடிவிற்கு வந்த பிறகு, ஒரு சிலர், அந்த நிபந்தனைகளை மீறி, இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு, அந்த அளவுக்கு சூழ்நிலையை உருவாக்கினார்கள் என்றால், இதற்கும் ஒரு நீதி விசாரணை இப்போது வேண்டுமென்றால், அது எப்படி நியாயம்? என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை!. நீதி விசாரணை வைக்கக்கூடாது என்பது என்னுடைய எண்ணமல்ல; ஒன்றுக்கு, பத்து நீதி விசாரணை வைக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்!. ஆனால், எந்த அடிப்படையில் இந்த நிகழ்ச்சி நடந்தது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா ? பொது வேலை நிறுத்தம் கூடாது, வேண்டாம் என்று இந்தியா முழுவதும் ஒட்டுமொத்தமாக, அனைத்து அரசுகளும் ஒரு முடிவை எடுத்திருக்கிறது. இந்த அரசும் முடிவெடுத்திருக்கிறது. அதற்கு ஒத்துழைத்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், இதர கட்சித்தலைவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் பல கட்சிகளும் ஒத்துழைப்புத் தந்தன. ஆனால், வன்முறையில் இறங்கி, பேருந்துகளை எரித்து அந்தப் பேருந்துகளில் பயணம் செய்கின்ற மக்களுக்கு அபாயம், ஆபத்து விளைவிக்கின்ற நிலைமை அல்லது அங்கே போகின்றவர்களைத் தாக்குவது, அவர்களுக்கு உயிர் சேதத்தை விளைவிப்பது, அவர்கள் மருத்துவமனையிலே சேர்க்கப்படுகின்ற நிலைமை போன்றவைகள் எல்லாம் ஏற்பட்டதற்குப் பிறகு, இதை யார் செய்தார்கள்? எந்த ஊரில் செய்தார்கள்? என்று அவர்கள் தேடிச்செல்லும்போது, தாக்கப்படுவது, சுடப்படுவது என்கிற நிலைமை ஏற்படுமானால், அதற்கு நீதி விசாரணை என்று வந்தால், ஒரு முடிவே இருக்காது!. இப்போது விசாரணை நடத்தப்படுகிறது. அதற்குப் பிறகு, அந்த விசாரணை பயன் அற்றது என்று இந்த மாமன்றம் முடிவு செய்யுமென்றால், அதற்கு பிறகும் பரிசீலிப்பதற்கு இந்த அரசு நிச்சயம் பின்வாங்காது.

தலைவர் அவர்களே, எந்த ஒரு காரியமும், காரணம் இல்லாமல் இருக்க முடியாது. ஒரு நோக்கம் இன்றி, ஒரு காரியம் செயல்பட முடியாது. ஆகவே, வேறு நோக்கம் இல்லை என்று சொன்னால், அந்தப் பேருந்துகளை நிறுத்தவேண்டிய அவசியமில்லை!. வேலை செய்ய விரும்புகிறவர்கள் வேலைசெய்கிறார்கள். வேலை செய்ய விரும்பாதவர்கள் வேலை செய்யாமல் இருந்து விடுகிறார்கள். ஆனால், வேலை செய்கிறவர்களைத் தடுக்க போகும்பொழுதுதான் நிலைமைகள் விபரீதங்கள் விளைகின்றன.

தலைவர் அவர்களே, நான் மெஞ்ஞானத்திற்கும், அஞ்ஞானத்திற்கும் போவதிலிருந்து கொஞ்சம் தப்பித்துக்கொண்டு, வேறு பிரச்சினைக்கு போகலாம் என்று நினைத்தால், இடையில் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் ஒரு புதிய கரடியைக் கொண்டு வந்து விட்டு விட்டார். அவர்கள் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். ஏதோ,

யாருக்கோ நாங்கள் சலுகை காண்பிக்கிறோம் என்றும், மற்றவர்களுக்கு எதிராக துப்பாக்கியைப் பயன்படுத்துகிறோம் என்றும், ஒரு சந்தேகத்தைத் தேவையில்லாமல், அவருக்கே நம்பிக்கையில்லாமல் இந்த சம்பவத்தைப் பயன்படுத்திக்கொண்டுள்ளார். இதைச் சொல்லி யாரைத் தாக்கினால், அவர்கள் மனதிற்கு திருப்திகரமாக இருக்குமோ அதை சொல்லிக் கொள்வதற்கு, இதைப் பயன்படுத்திக்கொண்டதை எண்ணி, நான் வியப்படைகிறேன். திரு.சிவாஜி கணேசன் அவர்கள் வந்தபோது, என்ன நடந்தது என்பதைப் புள்ளி விவரத்தோடு சொல்வதற்கு வைத்துக் கொண்டிருக்கிறேன். இதுபற்றி, அந்த நேரம் வருகிறபோது சொல்கிறேன்.

துப்பாக்கிச் சூடு நடக்கிறபோது, அந்த அதிகாரிகள், யார் காங்கிரஸ்காரர்கள் ? யார் கம்யூனிஸ்ட்கள் ? என்று பார்த்து கற்களும், சோடா பாட்டில்களும் அவர்கள் மீது சரமாரியாக வீசப்படும்போது சுடமுடியுமா ? எப்படிப்பட்ட குறிபார்த்து சுடக்கூடியவனாக இருந்தாலும், நிமிடத்திற்கு ஒருமுறை சுட பழகிக்கொள்ளக்கூடிய அளவில், தொடர்ந்து 24 மணிநேரமும் சுட்டுக்கொண்டே இருந்தாலும் கூட, கூட்டத்திற்கு மத்தியிலே, அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் அலைக்கழிக்கிற கூட்டத்தைப் பிரித்து பார்த்து சுட முடியுமா என்பதை தயவு செய்து நெடுமாறன் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். கட்டிவைத்து சுட்டால் தான், ஒருவேளை அப்படி சுடலாம் என்கிறார். உண்மையிலேயே இந்த சம்பவங்கள் வேதனையைத் தருகின்றன. மூன்று பேர்கள் இறப்பது என்று சொல்வது சாதாரணமானது அல்ல.

மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்கிறபோது, அந்த இடத்தில் என்னுடைய படம் உடைக்கப்பட்டிருந்தது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே இருந்தவர்களில் என்னிடம் அன்பு உள்ளம் கொண்டவரும் அங்கே இருந்திருக்கிறார் என்பது பொருள். அப்படி நடந்திருக்கிறது என்றால், எப்படி கம்யூனிஸ்ட் கட்சியை ஒழிக்க வேண்டும் அல்லது அந்த தொழிலாளர்களை ஒழிக்க வேண்டும், அல்லது விவசாயிகளை தாக்கவேண்டுமென்று, யாரோ பணக்காரர்கள் செய்த சூழ்ச்சியில் இவர்கள் சிக்கிக் கொண்டு, அப்படிப்பட்ட காரியத்தை செய்தார்கள் என்று நாம் கணக்குப் பார்க்க முடியும். அதே போல்தான் இப்பொழுது சொல்கிறேன். உண்மையோ, பொய்யோ விசாரணையில் தான் தெரியும்!. கன்னியாகுமரியில், சுடப்பட்டு செத்த 4 பேர்களில், 3 பேர் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் என்று கூடச் சொன்னார்கள். அவர்களைப் பார்த்தா சுட்டிருக்க முடியும் ? அப்படியானால், அந்தப் போலீஸ்காரர்கள், அதிகாரிகள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மீனவர்கள், அதாவது கிறிஸ்தவர்களைச் சுட வேண்டுமென்றா தேடிக் கொண்டிருந்தார்கள். நாம் நடப்பது அது அல்ல. நாம் விரும்பியதும் அல்ல; நடப்பதும் விரும்பாததே நடைபெறுகின்றது. அது நடைபெறக்கூடாது என்பதற்காகத்தான் நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். தூண்டிவிடுவது எளிது. ஆனால், விளைவுகள் ஏற்பட்ட பிறகு, நாம் வேதனை படத்தான் முடிகிறதே ஒழிய, திரும்ப அந்த உயிர்களைப்

பெற முடியவில்லை. ஆகவேதான் நான் இன்னொன்றையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அனைத்துக் கட்சிகளையும் சேர்த்து நான் சொல்கிறேன். எங்கள் கட்சியையும் இணைத்துச் சொல்கிறேன்.

நாட்டிலே கொத்தடிமை முறைகூடாது என்று சொல்கிறோம். ஆனால், கொத்தடிமை முறை கூடாது என்று சொல்லும்போது, பணக்காரர்கள் ஆதிக்கத்தில் தாழ்த்தப்பட்டவர்களோ, மலைவாசி மக்களோ, அதுபோன்ற ஏழை மக்களோ இருக்கக்கூடாது என்பது ஒரு கொள்கையாகச் சொல்லப்படுகிறது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதிதிராவிடர்கள், மலைவாழ் மக்கள் இவர்களை எல்லாம் கொத்தடிமைகள் போல அரசியல் கட்சிகள் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டால், இந்த நாட்டில் அமைதியே இருக்க முடியாது என்பதை நான் வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, அந்த நிலைமைகள் எங்கும் ஏற்படாமல் நாம் பார்த்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். அது எந்தக் கட்சியானாலும் சரி, ஆட்சியிலே இருக்கிற எங்கள் கட்சியானாலும் சரி, மற்ற கட்சிகளானாலும் சரி, யாராக இருந்தாலும், எங்கும் அதுதான் நடைபெறுகிறது. அச்சுறுத்தப்படுகிறார்கள். நீ வேலைக்குப்போனால், இந்தக் கூலியை விடக் குறைவாக நீ வாங்கிக்கொண்டு போனால், ஊருக்குத் திரும்ப முடியாது என்று எச்சரிக்கப்பட்டால், அவர் என்ன செய்வான்? அவன் குடும்பத்தைக் காப்பது எப்படி? ஊருக்குள்ளேயே அந்தக் குடும்பத்தை ஒதுக்கி வைப்பது என்று தீர்மானித்துவிட்டு, மற்றவர்களைக் கொண்டு அதைச் செய்யும்போது, செய்யாவிட்டால், அந்தக் குடும்பம் என்ன கதியாகும்? அப்படிப்பட்ட நிலைமைகள் தமிழ்நாட்டில் கொஞ்சம் கொஞ்சமாக அங்கெங்கே வளர்ந்து வருகின்றன.

ஆகவே, அதை நாம் தடை செய்தாக வேண்டும். தடுப்பதற்குச் சட்டம் அல்ல, மனம் வேண்டும், ஒத்துழைப்பு வேண்டும், எல்லோரும் ஒருமித்த கருத்துக்கு இணங்கி, ஒன்றுபட்டு செயல்பட முன் வரவேண்டுமென்பதுதான், என்னுடைய வேண்டுகோள். ஆகவே, இதைப் போல நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டாம். கூடாது என்று நாம் அனைவரும் சொல்வோமானால், சொல்வதற்கு இணக்கமாகச் செயல்பட வேண்டுமென்று நம்பிக்கையில், நாம் செய்லபட முன்வருவது நிச்சயமானால், எல்லோருக்கும் வேண்டுகோள் விடுகின்றேன். அனைத்துக் கட்சியினரும் உட்கார்ந்து பேசுவோம்! அங்கங்கே கிராமப்புறங்களில் இருக்கிற ஆதிதிராவிட மக்கள் எந்த அரசியல் கட்சியிலே அவர்கள் சிக்கியிருந்தாலும், அவர்களுக்கு விடுதலை கிடைக்குமாறு செய்வோம்! மலை வாழ்ப் பகுதி மக்களானாலும். சரி, வேறு பிற்படுத்தப்பட்ட மக்களானாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு எல்லாம் விடுதலை வேண்டும், அவர்கள் சுயமாகச் சிந்திக்க, சுயமாக முடிவெடுக்கத் தயாராக இருக்க வேண்டும். அந்த நிலைமைகளை உருவாக்குவதற்கு அனைத்துக் கட்சி தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே, நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பி நான் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் பலருக்கு இன்னும் சரியாக பதில் சொல்லவில்லை. புள்ளி விவரங்களை எல்லாம் சொல்லியாக வேண்டும். அதிலே ரகுமான்கான் மாத்திரம் 10,15 கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதேபோல திரு. துரைமுருகன். அதேபோல திரு. குமரி அனந்தன், திரு. நெடுமாறன் இவர்கள் போன்ற பல பேர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே கொள்கை பற்றிக் கேட்டிருந்தால், பொதுவாகச் சொல்லிவிடலாம். ஆனால், குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டு, அதற்கு என்னுடைய பதிலில், இப்படி நடந்திருக்கிறதா, அது உண்மையா ? பொய்யா ? என்று சொல்லுங்கள். அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ? என்று கேட்கும்போது நான் பதில் சொல்லாமல் இருந்துவிடுவது சரியாக ஆகாது.

இன்று, கொத்தடிமையைப் பற்றிச் சொல்லும்போது, கொள்கையாக நான் சொல்லியாக வேண்டிய கடமையிலே இருக்கிறேன். எனக்கு அதிகமாக ஐயா அவர்களுடைய கொள்கையைப் பற்றி, மிகப்பெரிய அளவிலே விளக்கம் சொல்ல முடியாது என்றாலும், அவர்களுடைய கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக ஆதிதிராவிடர்கள் ஆக்கப்பட்டால்தான், அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தால்தான், அவர்களுடைய உரிமைகள் காப்பாற்றப்பட முடியும் என்பது என்னுடைய கருத்து, என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எந்த மதத்திற்குள்ளும், எந்த ஜாதிக்குள்ளும் அவர்கள் சிக்காமல், எந்தக் கொள்கைக்கும் எடுபிடி ஏவலர்களாக இல்லாமல், சுயமாகச் சிந்தித்து அவர்களே முடிவெடுத்து அவர்களே ஒரு காரியத்தில் இறங்கவேண்டும் என்று விரும்புவார்களேயானால், அதற்கு அரசை அணுகுவது அல்லது மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி முடிவு செய்து, என்பது போன்ற ஒரு முயற்சிக்கு அவர்களை நாம் வளர்ப்பது, வளர்த்துவிடுவது நம் ஒவ்வொருவருடைய கடமை என்று கருதுகிறேன். கொத்தடிமை முறை என்று மீண்டும் சொல்வதற்குக் காரணம், அச்சுறுத்தப்பட்ட நிலையில் வாழ்கின்ற மக்கள் இந்த நாட்டிலே யாரும் இருக்கக் கூடாது, எந்த ஜாதியிலும், எந்த மதத்திலும் இருக்கக் கூடாது என்பது என்னுடைய கொள்கை. ஆனால், சில கிராமங்களில், இப்போது ஆதிதிராவிட மக்கள் அச்சுறுத்தப்படுகின்ற நிலைமையிலே வாழ்க்கையை நடத்துகிறார்கள்!. அவர்கள் ஏதாவது சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்றால், அவர்களை இயக்குகின்றவர்கள் யாரோ, அவர்கள் சொல்லுகிறபடி செய்து ஆக வேண்டும். இல்லை என்றால், அவர்கள் அங்கே வாழ முடியாது என்கிற நிலைமை, அந்தச் சூழ்நிலை மாறியாகவேண்டும். இதற்கு அரசு தக்க வழி கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கின்றது. அதற்கு அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அதோடு இன்னொன்று, ஆதிதிராவிட மக்களுக்கு என்னென்ன நல்ல வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என்று யார் விரும்பினாலும், அதை மனம் விட்டுப்

பேசலாம். அதைப் பற்றித் திட்டங்கள் தரலாம். நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற முடிவுகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம், அதை மாற்றியாக வேண்டும் என்றாலும் கூட, அதை பேசித் தீர்மானிப்பதிலே, எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. இதை, நான் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கூறுவதற்கு, சில அனுபவங்கள் எனக்கு இதற்கு முன்னாலே ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் தான் கூறுகிறேன். தருமபுரியானாலும் சரி, வட ஆற்க்காடு ஆனாலும் சரி, மலைவாழ் மக்கள் வசிக்கின்ற இடமானாலும் சரி அல்லது வேறு எங்குமாக இருந்தாலும், ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் தந்தை பெரியார் இயக்கத்திலே சேருவதற்கு நான் சொல்லவில்லை! அந்தப் பிரச்சாரத்தை நான் இங்கே பயன்படுத்த விரும்பவில்லை. ஆனால், இந்தக் கொள்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டு ஆகவேண்டும். எந்த அரசியல் கட்சியானாலும், எந்த ஜாதியின் பெயரைச் சொல்லி அங்கே வருபவர்களாக இருந்தாலும், அரசு உதவி செய்கிறது. அதற்கு நீங்கள் ஆதரவு தரவேண்டுமென்றும், அந்த நிலைமை இல்லாத ஒரு சூழ்நிலையிலே, ஆதிதிராவிட மக்கள் வாழ்ந்தாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!. எங்கள் பக்கத்திலேதான் தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட மக்கள் அதிகம் இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நான் இதைச் சொல்லுகிறேன் என்றால், என்ன காரணம்? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். எங்களுக்கு ஆதிதிராவிட மக்களிடம் அதிக ஆதரவு இருக்கிறது. அதிக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள் என்கிற நிலையினை, இங்கே வெளியிடுகிறேன் என்றால், அதற்குள்ள ஒரே ஒரு காரணம், இப்போது, நாட்டிலே, ஆங்காங்கே ஆதிதிராவிட மக்களுக்கும் மற்ற ஜாதியினருக்கும் ஏற்படுகின்ற மோதல்கள் எல்லாம், சில கட்சிகள் தங்களை வளர்த்துக் கொள்வதற்காக இவைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதால்தான்!

அதேபோல மற்ற கட்சியைச் சேர்ந்த மக்கள், மற்றவர்களை ஜாதி இந்துகள் என்ற பேரால் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்பதை, நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். ஆகவேதான் இந்த நிலையில், இந்தக் கொத்தடிமை நிலையை வேறு வழியில் ஒழிப்பதோடு, இதையும் ஒழித்து ஆகவேண்டும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத்தலைவர் அவர்களுடைய கோரிக்கை, விளக்கம், நியாயமானது என்பதிலே மாற்றுக்கருத்து இல்லை. ஆனால், ஆதிதிராவிடர்களுக்கு என்று தனிப்பட்ட பாதுகாப்பு வசதிகள் சலுகைகள் தரவேண்டிய நிலையிலே, நாம் இருக்கும்போது, சில ஜாதி இந்துக்களுக்கும் ஆத்திரம் ஏற்பட்டுவிடும் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அவர்களை வேறுவேறு இனத்தை, ஜாதியைச் சேர்ந்தவர்கள் தூண்டுகிறவர்கள்! 1978ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். நான் அமெரிக்கா போய்விட்டு வந்த பிறகு, திண்டுக்கல் பகுதிக்குச் சென்று, அங்கே உள்ள கொடகனாறு அணைக்கட்டு உடைந்த பின்னாலே, அங்கு ஏற்பட்ட விபத்துக்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் சொல்வதற்குச் சென்றபோது, ஒரு குடும்பத்திலே கேட்டார்கள்.

அந்த மக்கள் ஆதிதிராவிட மக்கள் அல்ல. ஆனால் கேட்டார்கள். எங்களுடைய வீட்டைப் பாருங்கள், ஓட்டுவீடுதான். அதன் சுவரும் இடிந்துவிட்டது. மேல் கூரையும் கீழே விழுந்துவிட்டது. இங்கே நாங்கள் வசிக்க முடியாது. இதற்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? அவர்களுக்கு இல்லை என்றால் கொடுக்கிறீர்கள், பணம் கொடுக்கிறீர்கள், துணி வாங்கிக் கொடுக்கிறீர்கள், அரிசி கொடுக்கிறீர்கள், ஆனால், எங்களுக்கு என்ன நிலைமை? என்று அவர்கள் கேட்டார்கள்! இதை வைத்துத்தான், சட்டசபையிலே, அப்படிக் கேட்டவர்களுக்கு முன்னால், இந்தக் கருத்தை வலியுறுத்தி, அப்படி கேட்டவர்களுக்கு, இங்கே என்ன சொல்லப்போகிறோம் என்பதை நான் வெளியிட்டேன். ஆகவே, ஒட்டுமொத்தமாக ஒரு கருத்தை வெளியிடும்போது, அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா, என்பதைவிட, யார் அடித்தளத்திலே அந்தக் கருத்திற்கு சிக்கக்கூடாதோ, அதில் சிக்கிக்கொண்டு இருக்கின்றார்களோ, அவர்களுக்கு நன்மைகள் செய்யப்பட அண்ணாவின் வழியிலே இதைத் தொடர்ந்து செய்வோம்! அது முறையாக அமையும் என்று கருதுகிறேன்.

ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில், அந்த வகையில் சென்று, தன் கடமையை செய்யும் என்பதை, எங்கள் கட்சியின் சார்பாக இந்த ஆட்சியின் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, நம்முடைய உறுப்பினர், என்.எஸ்.வி சித்தன் அவர்கள் லாக்கப்பிலே மரணம், அதாவது கொலைக் குற்றத்தைப் பற்றி பல்வேறு எண்ணங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். பதிலை எதிர்பார்த்து இருக்கிறார்கள். காவல் நிலையத்தில் மரணம் அல்லது துன்பம் ஏற்பட்டாலும், இதுபற்றி 145 பிரிவின் கீழ், விசாரணைக்கு வகை செய்யப்பட்டுள்ளது. அந்த விசாரணையின்கீழ், அரசு பரிசீலனை செய்து ஒரு வழக்கிலே முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. 'லாக்கப்பிலே' ஒருவர் மரணம் அடைவதால், அதைக் கொலைக் குற்றமாக கருதவேண்டுமென்று என். எஸ்.வி.சித்தன் அவர்கள் கருத்தை, அந்த உணர்வை நான் மதிக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமைதான் ஒவ்வொருவருக்கும் இருக்கும் என்பதை, நான் எதிர்க்கட்சியிலே இருந்தபோதும் உணர்ந்திருக்கிறேன்! எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்ட ஆபத்துக்கள் ஏற்பட்ட நேரத்திலே நாங்கள் என்னவெல்லாம் சொன்னோம் என்பதையும் இந்த நேரத்திலே நினைவூட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

'லாக்கப்பில்' ஒருவர் மரணம் அடைந்தால், அது கொலைக்குற்றமாக கருதப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். உண்மைதான். எங்கு ஒரு உயிரை யார் போக்கினாலும், அது கொலைக்குற்றமே என்பதில் எங்களுக்கும் சந்தேகமில்லை. ஆனால், அது சாத்தியமா என்பதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன என்பதையும் அவர்கள் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். விசாரணைக்கு உத்தரவிடப்பட்ட எல்லா இனங்களிலும் நூற்றுக்கு 90 இயற்கை மரணம் என்றுதான் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், பல வழக்குகளுக்கான விசாரணையில், காவல் துறையினரால் துன்புறுத்தப்பட்டவர் என்றோ அல்லது அந்த மரணத்தில்

சந்தேகத்திற்கு இடமிருக்கிறது என்றோ அறிக்கை அரசாங்கத்திற்கு வந்தால், அதில் அரசு சம்பந்தப்பட்ட காவல் துறையினர்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதற்கு உதாரணத்திற்காக சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் காவல் நிலையத்தில், 29.06.1980 இல் சிவராஜ் என்பவரை சிறைக் காவலர் துன்புறுத்தினார், மரணம் அடைந்தார் என்ற குற்றச்சாட்டுக் குறித்து கும்பகோணம் சப் கலெக்டர் பி.எஸ்.ஓ. 145 இன் படி விசாரணை செய்து அனுப்பி வைத்த அறிக்கையை ஆராய்ந்து, மருதமுத்து என்ற காவலர் மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட மாவட்ட ஆட்சித்தலைவர் ஆணையிடப்பட்டார். மேலும், இரு உதவி ஆய்வாளர்கள், ஒரு உதவி கண்காணிப்பாளர், ஒரு காவலர் ஆகியோர் மீது துறை நடவடிக்கை எடுக்கக் காவல்துறைத் தலைவர், காவல்துறை அதிகாரியைப் பணித்துள்ளார்.

மதுரை மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, கன்னிவாடி காவல் நிலையத்தில் திருமதி பாப்பா என்கிற அமிர்தம் துன்புறுத்தப்பட்டு, மானபங்கம் செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட புகார்மீது விசாரணை செய்து, திண்டுக்கல் சப்கலெக்டர் அனுப்பி வைத்த பி.எஸ்.ஓ. 145இன் படியான அறிக்கையை அரசு ஆராய்ந்து சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் மீது, இந்தியத் தண்டனைச் சட்டம் 348ஆவது பிரிவில் குறிப்பிட்ட குற்றத்திற்கு கிரிமினல் வழக்குத் தொடரும்படி மாவட்ட ஆட்சித்தலைவர் பணிக்கப்பட்டார்.

வட ஆற்காடு மாவட்டம், வாலாஜா காவல் நிலையத்தில் 08.03.1980 முகமது என்பவர் மரணம் அடைந்தது குறித்து பி.எஸ்.ஓ 145 இன் படி விசாரணை செய்யப்பட்டது. அந்த அறிக்கையை அரசு ஆராய்ந்து, இச்சம்பவம் குறித்து மேலும் முழுமையாக விசாரணை செய்ய வேண்டுமென்று சி.ஐ.டி. குற்றப்பிரிவு பணிக்கப்பட்டது. மேலும், சம்பந்தப்பட்ட காவல் துறையினர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு, இலாகா பூர்வமான நடவடிக்கையும் எடுக்க ஆணையிடப்பட்டது.

வட ஆற்காடு மாவட்டத்தில் சிமக்காவல் நிலையத்தில் ஆறுமுக கவுண்டர் என்பவர் 16.05.1979 அன்று இறந்துவிட்டார். இதில் பி.எஸ்.ஓ 145 இன்படி விசாரணை செய்யப்பட்டது. அந்த விசாரணை அறிக்கையை அரசு ஆராய்ந்து, மேலும் சி.ஐடி. குற்றப்பிரிவு விசாரணை செய்து அறிக்கை அனுப்புவதற்கு காவல்துறைத் தலைவர் பணிக்கப்பட்டார். அவரது அறிக்கையை அரசு ஆராய்ந்து, அதில் சம்பந்தப்பட்ட காவல்துறை அலுவலர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடரும்படி வட ஆற்காடு மாவட்ட ஆட்சித்தலைவர் பணிக்கப்பட்டார். மேலும், அவரைத் தற்காலிக பணி நீக்கம் செய்துவிட்டு, இலாகா பூர்வமான நடவடிக்கை எடுக்கும்படி, வட ஆற்காடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரை, காவல்துறை தலைவர் பணித்துள்ளார். செய்யாறு எஸ்.டி.எம். கோர்டில் 24.02.1980 வழக்குத் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி தாலுகா, கயத்தாறு காவல் நிலையத்தில் சண்முகம் மற்றும் ராமசாமி ஆகியோர் சட்டத்திற்கு விரோதமாக அடைத்து வைக்கப்பட்டது பற்றி கூறப்பட்ட குற்றச்சாட்டு பி.எஸ்.ஓ 145 இன்படி விசாரணை செய்யப்பட்டு, கோவில்பட்டி சப் கலெக்டர் அனுப்பி வைத்த அறிக்கையை அரசு ஆராய்ந்து சம்பந்தப்பட்ட தலைமைக் காவலர் மற்றும் 3 காவலர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக்கப்பட்டார்.

மதுரை மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, திவான் மூதுரைச் சேர்ந்த ஒச்சாத்தேவர் என்பவர் காவல்நிலையத்தில் துன்புறுத்தப்பட்டு 28.07.1979 அன்று இறந்தார் என்ற குற்றச்சாட்டு குறித்து விசாரணை நடத்தப்பட்டு, அரசுக்குக் கிடைத்த அறிக்கையை ஆராய்ந்து, ஒச்சாத்தேவரை சின்னமனூர் காவல் நிலையத்தில் வைத்து அடித்துத் துன்புறுத்தியதற்குப் பொறுப்பானவர்கள் மீது, கிரிமினல் வழக்குத் தொடர வேண்டுமென்றும், அவர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டது. உதவி ஆய்வாளர் திரவியம், காவலர் கருப்பையா ஆகியோர் 11.02.1980 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, புத்தூர் கிராமம் சண்முகம் என்பவர் காவல் நிலையத்தில் துன்புறுத்தப்பட்டார் என்ற குற்றச்சாட்டு குறித்து அரசுக்கு கிடைத்த விசாரணை அறிக்கையை ஆராய்ந்து தலைமைக் காவலர் வேணுகோபால் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் 323, 330 மற்றும் 348ஆவது பிரிவுகளின்படி, கிரிமினல் வழக்குத் தொடர அரசு ஆணையிட்டது. அவர்மீது வழக்குத் தொடரப்பட்டு, 24.06.1981 அன்று நீதிமன்றத்தின் முன்பு ஆஜர் செய்யப்பட்டார்.

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் காவல் நிலையத்தில் திருட்டு வழக்கு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செவிட்டய்யா என்பவர் காவல் நிலையத்தில் இறந்துவிட்டார். இது குறித்து விசாரணை செய்த அதிகாரி அளித்த அறிக்கையின்பேரில், சம்பந்தப்பட்ட காவலர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் மீது குற்றம் சாட்ட நேரடி சாட்சியங்கள் இல்லை. எனவே, இரகசிய குற்றப் புலனாய்வுப் பிரிவு, தீவிரமாக விசாரணை செய்யப் பணிக்கப்பட்டுள்ளது. ஆகவே, இது அனைத்துக் காவல் நிலையத்தில் நடைபெறும் மரணங்கள் எல்லாம் இயற்கை மரணம் என்றோ தற்கொலை என்றோ அவசரப்பட்டு முடிவுசெய்து அறிவிப்பது முறையற்ற குற்றச்சாட்டாகும்!

அதுபோன்று பலவற்றின் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதையும் தெரிவித்து, காவல் நிலையத்தில் இறந்துவிட்டவர்கள் எல்லாம் இயற்கையாக இறந்து விட்டார்கள் என்று சொல்வதை இந்த அரசு அப்படியே ஏற்கத் தயாராக இல்லை என்பதையும், ஆங்காங்குள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்ப, வழக்கின் தன்மைக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து, இன்றும், எனக்குப் பேச வாய்ப்புத் தந்தமைக்காக, மற்ற உறுப்பினர்களும் அதை ஏற்றுக்கொண்டதற்காக உங்களுக்கும், உங்கள் சார்பாக மன்றத்திற்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொள்ளாச்சியில் தேவனாம்பாளையம் கிராமத்தில், அங்குள்ள மக்கள், கள்ளுக்கடைக்குச் சொந்தக்காரர் குடிக்கச் சென்றதாகவும், 02.02.1982 அன்று கிராமத்தை இருட்டடிப்புச் செய்ததாகவும், 8 குடிசைகள் அழிக்கப்பட்டதாகவும், காவல் துறை அத்துமீறி நடந்து கொண்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். எனக்குத் தந்திருக்கிற, கிடைத்திருக்கிற குறிப்புப்படி, கோயம்புத்தூர், பொள்ளாச்சி வட்டம், தேவனாம்பாளையம் கிராமத்தில் 10 வெள்ளாள கவுண்டர் குடும்பங்களும், 10 தேவர் குடும்பங்களும், வழக்குப் பதிவு செய்துள்ளதன் மூலமாக, 80 ஆதிதிராவிடக் குடும்பங்கள் வரை இருப்பதாகவும், அவர்கள் முக்கியத் தொழில் விவசாயம் செய்வதாகவும், ஆதிதிராவிடக் குடும்பங்களில் பெரும்பாலோர், கவுண்டர் குடும்பங்களில் விவசாயத் தொழிலாளர்களாக, கூலிக்கு வேலை செய்பவர்களாகவும், அந்த கவுண்டர் குடும்பத்தைச் சார்ந்த செல்வராசுக்குச் சொந்தமான சாராயக் கடை ஒன்று ஆதிதிராவிடர் காலனிக்கு அருகில் உள்ளதாகவும், அந்த செல்வராசுக்கு அந்தச் சாராயக் கடை சொந்தமாக இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் கே.வி.கந்தசாமியின் மகன் கே.வி.கே. சுப்பிரமணியம் என்பவரால் நடத்தப்பட்டு வருகிறது என்றும், புகார்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், இங்கே இந்தக் கடையில் கள் விற்கப்படுவதாகவும், சாராயக்கடைக்கு இன்னும் அனுமதி அளிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. இங்கே சாராயம், கள் முதலியவற்றைக் குடித்துவிட்டு, சில ஆதிதிராவிடர்கள், கவுண்டர்களைக் கேவலமாகவும், அசிங்கமாகவும் பேசியதாகத் தெரிகிறது. இந்த கள், சாராய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சில ஆதிதிராவிடர்களுக்கும், கவுண்டர்களுக்கும் மனக்கசப்பு இருந்ததாகத் தெரிகிறது. 27.01.1982 அன்று மாரியப்ப கவுண்டர் மற்றும் சிலர் சட்டவிரோதமாகக் கூடி, பயங்கரமான ஆயுதங்களுடன் நாச்சி என்பவர் வீட்டுக்கும் மற்றும் மோகன் வீட்டுக்கும் சேதம் விளைவித்ததாகவும், காயமுற்ற நாச்சி கூலி பாக்கிக்காக ரூ.90 மாரியப்ப கவுண்டரிடம் கேட்டதாகவும், அதைத் தர மறுத்ததாகவும், இத்தகவலில் கூறப்படுகிறது. இது குறித்தும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அச்சம்பவத்தின் விளைவாக திரு. அம்மணிகுட்டி மற்றும் எட்டுப் பேர்கள் சேர்ந்து மேற்கண்ட சாராயக் கடைக்குத்தீவைத்துள்ளனர். தீயை அணைக்க வந்த ஆதிதிராவிட காலனியைச் சேர்ந்தவர்களை மாரியப்ப கவுண்டர் தடுத்து, அவர் மேலும் 4 பேர்களோடு சாராயக் கடைக்குத் தீவைத்து, ஆதிதிராவிடர் வீடுகளுக்கும் தீ வைப்போம் என்று கோஷமிட்டு, ஆதிதிராவிடர் வீடுகளுக்குத் தீவைத்தார்கள். இது குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல்துறையினர் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, ஆதிதிராவிடர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளனர். இதற்கு இடையில் 75 பேர்கள் 2 வண்டிகளிலும் ஒரு ஜீப்பிலும் வந்து அதிதிராவிடர் வீடுகளுக்குச் சேதம்

விளைவித்தார்கள் என்று கூறப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட, தலைமறைவாகிவிட்ட குற்றவாளிகளைப் பிடிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இது குறித்துப் புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. மேற்கொண்டு அசம்பாவிதங்கள் நடக்காமல் தடுத்திட காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தற்போது நிலைமை அமைதியாக உள்ளது. தேவனாம்பாளையத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதமருக்கு மனு அனுப்பிய விவரம் அரசுக்கு இதுவரையில் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, குற்றவாளியைக் கண்டுபிடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று நடிகை ஷோபா கொலை பற்றி இங்கே கூறியிருக்கிறார்கள். நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். எங்களுடைய அரசு டிஸ்மிஸ் செய்யப்பட்ட பிறகு, அந்த இடைக்காலத்திலே நடந்த கொலையாகும் அது. அப்போது குறிப்பில் எழுதப்பட்ட விஷயங்கள், விசாரணை நடந்த முறை இவை சரியாக இல்லை என்கின்ற சந்தேகம் ஏற்படுகின்ற அளவுக்கு, நாங்கள் பொறுப்புக்கு மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகு, ஒரு எண்ணம் எங்களுக்குத் தோன்றியதன் விளைவாக, மீண்டும் அதை விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறோம். அது விசாரணையில் இருக்கிறது என்பதையும், வழக்கு மன்றத்திற்கு கிடைத்த சாட்சியங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன என்பதையும், அது வழக்கு மன்றத்திலே விவாதிக்கப்பட்டு தீர்ப்பு எப்படி இருக்கிறதோ அது வெளியிடப்படும் என்பதையும், அது மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், அதே நேரத்தில், ஒரு செய்தியை நான் சொல்லியாக வேண்டும். அந்தக் கொலைக் குற்றத்தைச் செய்தாரா இல்லையா, அவர் அதற்குப் பொறுப்பானவரா இல்லையா என்ற யாரோ ஒருவரைச் சுட்டிக்காட்டுவதற்கு முன் அந்த மகேந்திரன் இலங்கையிலிருந்து வந்த முறை, பூனாவிலே சென்று அந்தத்தொழில் நுணுக்கத்தைத் தெரிந்துகொள்வதற்குப் பயன்படுத்திக்கொண்டது. அவையாவும் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கின்றன என்ற ஆதாரத்தின் அடிப்படையில், அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிடும்போது, நாங்கள் இப்படிப்பட்டவற்றில் எவ்வளவு அக்கறை செலுத்துகிறோம் என்பதை, இந்த மாமன்றம் அறிவதற்கு இது ஒரு சான்றாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திரு. சுந்தரராஜ் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை இங்கே சொல்லியிருக்கிறார்கள். மதுரை சின்னாளப்பட்டியில் நெசவாளர்களுக்கு என 3 1/2 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. நீதிமன்றமும் அவர்களுக்கு சார்பாகத் தீர்ப்பு அளித்தது. அதில் நடராசன் என்பவர் கட்டடம் கட்டவிடாமல் தடுக்கிறார். காவல்துறை சாதமாக உள்ளது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சின்னாளப்பட்டியில் பழனி மடாதிபதிக்குச் சொந்தமான நிலம், மடாதிபதி மைனராக இருப்பதால், டிரஸ்டிகளின் மேற்பார்வைக்கு விடப்பட்டிருந்தது. சின்னாளப்பட்டி நெசவாளர்கள் சங்கம் தங்களுக்கு என்று ஒரு கட்டடம் கட்டுவதற்கு என, மேற்படி நிலத்தை டிரஸ்டிகளிடமிருந்து கிரையத்திற்கு வாங்கியது. நிலத்தை அனுபவித்து வந்த திரு. தனசேகரன் பிள்ளை

என்பவர், மடாதிபதி மேஜராகிவிட்டதால் டிரஸ்டி செய்த கிரையம் செல்லாது என்று வழக்குத் தொடர்ந்தார். காவல் துறைக்கு இந்திய தண்டனைச் சட்டம் 409ஆம் பிரிவு, நம்பிக்கை மோசடி 420 ஆவது பிரிவு ஏமாற்றுதல் ஆகியவற்றின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அறிக்கை கொடுத்தார். காவல்துறையினர், அதை சிவில் வழக்கு என முடிவு செய்தனர். எனினும் மேற்படி கட்டடம் கட்டுவதற்கு நெசவாளர்கள் அடிக்கல் நாட்டு விழாவை வேறு ஒரு இடத்தில் நடத்தினார்கள். தற்போது தனசேகரன் பிள்ளை என்பவர், நீதிமன்றத்தில் 'ஸ்டே ஆர்டர்' வாங்கியிருக்கிறார். இதில் காவல்துறையினர் கட்டடம் கட்டவிடாமல் தடுக்க, சாதகமாக இருக்கிறார்கள் என்று சொல்வது உண்மைக்குப் புறம்பானது. இது சொத்து சம்பந்தமாக சிவில் வழக்கு என்பதால், இதில் காவல்துறையினர் தலையிடுவதற்கு எந்தவிதமான முகாந்திரமும் இல்லை. இதற்குத் தீர்வு காணவேண்டிய இடம், நீதிமன்றம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நண்பர் ரகுமான்கான் அவர்கள் நமது மரியாதைக்குரிய மணியம்மையார் அவர்களைப்பற்றி அவதூறாகப் பேசிய காவல் துறையினர் மீது சோமசுந்தரம் கமிஷன் சொல்லியும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். காலஞ்சென்ற மணியம்மையார் மீது, கேவலமாகப் பேசிய காவலர்கள் மீது, அரசு விவரமான விசாரணை நடத்தலாம் என்று ஆணைக்குழு பரிந்துரை செய்தது. இந்தப் பரிந்துரை அரசின் பரிசீலனையில் உள்ளபோது, திருமதி மணியம்மையார் அவர்கள் மறைந்துவிட்டார்கள். சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரி மணியம்மையார் அவர்களை நோக்கி, வசைமொழிகள் எதுவும் கூறவில்லை என்று கூறியிருந்தார்கள். இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு, இந்த சம்பவத்தில், மேல் நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று காவல் துறைத் தலைவரின் கருத்தை அரசு ஏற்றது என்பதைத் தெரிவித்து, அரசுக்கு வேறு எந்த நோக்கமும் இல்லை என்பதைத் தெளிவுப்படுத்துகிறேன்.

திரு. சுந்தரராஜன் அவர்கள் 1980ஆம் ஆண்டு சிங்கம்புணரி காவல் நிலையத்தைச் சேர்ந்த கட்டுக்குடிப்பட்டி என்ற கிராமத்தில் ஒரு கொலை நடைபெற்றிருக்கிறது என்றும், ஒரு பெண்மணி பட்டப்பகலில் கண்மாய்க் கரையில் நடந்து சென்ற நேரத்தில், கொலை செய்யப்பட்டு, அவரிடமிருந்து 10 பவுன் தங்கச் சங்கிலியை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள் என்று கூறினார். அங்கேயிருக்கிற காவல் துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள். 06.11.1980ஆம் ஆண்டு அந்த வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கிலே மணி, சடையன், சின்னையா நாச்சன் ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லிய பிறகும், அதை மாற்றுகிறார்கள், இதை மாற்றுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அதற்கு பதில் சொல்ல விரும்கிறேன்.

1980ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் தேதி அன்று உலகம்பட்டி காவல் சரகம் கட்டுக்குடிப்பட்டியைச் சேர்ந்த ராமச்சந்திரன் பிள்ளை மனைவி திருமதி வீராயி அம்மாள் கொலை செய்யப்பட்டு, அவர் அணிந்திருந்த 18 பவுன் நகைகள் கொலைகாரர்களால்

அகற்றப்பட்டிருந்தன. திரு. சீனிவாசன் என்ற காவல்துறை ஆய்வாளர் இந்த வழக்கை விசாரணை செய்தார். பிரேதப் பரிசோதனையில், திருமதி வீராயி அம்மாள் கழுத்து நெறிக்கப்பட்டு மரணம் ஏற்பட்டிருப்பதாக அறியப்பட்டது. மேற்கூறிய வழக்கிலே சடையன் என்பவர் இழைத்த தவற்றின் பேரில், மணி, சின்னையா, மணியாச்சி என்னும் நாச்சன் ஆகியோர் 11.12.1980 அன்று கைது செய்யப்பட்டு 22.04.1981 அன்று அவர்கள் மீது இந்திய தண்டனை சட்டப் பிரிவுகள் 342, 302, 379, 180, 202 ஆகியவற்றின் கீழ் குற்றப்பத்திரிகை, நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், மலேசியாவிலே மு.வா. எண். 18 காடர்ன் மகாராணி என்னும் இடத்தில் வசிக்கும் திரு. க. ராமச்சந்திரன் என்பவர் 5.03.1981 அன்று எழுதிய மனுவில், அவர்தம் மனைவி வீராயி அம்மாள் கட்டுக்குடிப்பட்டியில் கொலை செய்யப்பட்டு, அவர் அணிந்திருந்த நகைகள் காணாமல் போயிருக்கின்றன என்றும், இதுவரையில் அங்கேயுள்ள போலீசார் சரியான நடவடிக்கை எடுத்து நகைகளைக் மீட்கவில்லை என்றும், சி.ஐ.டி. போலீஸ் போட்டு நன்றாக விசாரணை செய்து, உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, நகைகளைக் மீட்டுத் தரும்படி கேட்டுக் கொண்டுள்ளார். இதன் நகல் ஐ.ஜி. அவர்களுக்கும் அனுப்பப்பெற்று இருந்தது.

அந்த மனுவை ஆராய்ந்து கொலை பற்றிய உண்மையான நிலவரத்தை அறிவிக்குமாறு, சென்னை குற்றப் புலனாய்வுத் துறைத் துணைத் தலைவர் கோரப்பட்டார். 09.04.1981 அன்று, மதுரை காவல்துறைத் துணைத் தலைவர், இராமநாதபுரம் கிழக்கு காவல்துறை கண்காணிப்பாளரிடமிருந்து, அறிக்கை ஒன்றைப் பெற்று, எனது அலுவலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தார். அந்த அறிக்கையில் மேற்கூறிய கொலை பற்றிய விவரமும், மணி முதலானோர் கைது செய்யப்பட்ட விவரமும், அத்துடன் நகைகள் கைப்பற்றப்படவில்லை என்ற விவரமும் தெரிந்தது. அறிக்கையை ஆராய்ந்த போது, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுப் பல நாட்களாகியும், நகைகள் எதையும் கைப்பற்றவில்லை என்பது சந்தேகத்திற்கு இடமளிப்பதாக இருந்தது. எனவே, கொலை குறித்து மறு ஆய்வு செய்யும்படி காவல் துறைத் தலைவரைக் கேட்டுக்கொண்டேன். குற்றப்பிரிவு இரகசியப் புலனாய்வுத்துறை இந்தக் கொலை பற்றி புலனாய்வு மேற்கொண்டு, திருப்பத்தூர் இரண்டாம் வகுப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த முதல் குற்றப் பத்திரிக்கையை நிலுவையில் வைக்கும்படி கேட்டுக்கொண்டது.

மறு புலனாய்வில், முதலில் விசாரணை மேற்கொண்ட இன்ஸ்பெக்டர் திரு.சீனிவாசனுடைய ஆய்வு சரியாக இல்லையென்று கண்டறியப்பட்டது. புலன் ஆய்வு அடிப்படையில் திரு.சடையனை, குற்றப்பிரிவு புலனாய்வுத் துறைத் துணைக் கண்காணிப்பாளர் கைது செய்து அவரிடமிருந்த அரிவாளையும், கைது செய்யப்பட்டவரிடமிருந்து, களவாடப்பட்ட அந்த நகைகள் எங்கெங்கு விற்கப்பட்டன என்ற பட்டியலையும் கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து, நகைகளுக்குப் பணம் கொடுத்த திரு. சின்னக் கருப்பையன் என்பவரும் கைது செய்யப்பட்டு, அவர் தந்த

தகவலின் பேரில், தாலி செயின் உட்பட 95 கிராம் நகைகளை மீட்டனர். திரு. சடையன் மற்றும் சின்னக் கருப்பையன் ஆகியோரிடமிருந்து, காரைக்குடி இரண்டாவது மாஜிஸ்டிரேட் முன் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. இரண்டு எதிரிகளும் திருடியதை நீதிமன்றத்தில் முழுமையாக ஒத்துக்கொண்டு, வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். சின்னக் கருப்பையன், வழக்கில் அப்ரூவராக எடுத்துக்கொள்ளப்பட்டார்.

இந்தச் சூழ்நிலையில், முதலில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிக்கை மீண்டும் பெறப்பட்டு, தற்போது உண்மைக் குற்றவாளி சடையன் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு, நீதிமன்ற விசாரணையில் உள்ளது. சீரான நடவடிக்கை எடுக்காததால், துணைக் கண்காணிப்பாளர் திரு. விஸ்வநாதன், சப் இன்ஸ்பெக்டர் நடராஜ் ஆகியோர் மீது விசாரணைக்காகத் துறை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்ஸ்பெக்டர் சீனிவாசனும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த வழக்கில், யாருக்காகவும் சாதகமாகவோ அல்லது வேண்டுமென்றே யார் மீதாவது குற்றம் சுமத்த வேண்டுமென்று, இன்னொருவரை அப்ரூவராக மாற்ற வேண்டுமென்ற நிலையிலோ அரசு இல்லை என்பதையும், வெளிநாட்டில் இருந்து வந்த கடிதத்தின் விளைவு இந்த உண்மையைக் கொண்டுவரச் செய்தது என்பதையும், நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதையும், அன்றைய தினமே அவர் சொல்லியிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அன்றைய தினம் சொல்லாமல், இன்று இதைச் சொல்வதைப் பார்த்தால், நேற்று முன்தினம் அவர் ஒரு படத்தைக் காண்பித்து, கையிலே குண்டு வைத்திருப்பது அல்ல; அதுபோன்ற குண்டே அல்ல என்று சொன்னார்களே, அதுபோலத்தான் இதுவும் என்று நான் கருதுகிறேன். நான் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குற்றச்சாட்டு வருகிறது. அந்தக் குற்றச்சாட்டின் மேல் விசாரணை செய்யப்படுகிறது. அது சரியாக இல்லை. தவறு இருக்கிறது என்று அவர் சந்தேகிக்கிறார். வெளிநாட்டிலிருந்து கடிதம் எழுதுகிறார். மீண்டும் புலனாய்வு செய்யப்படுகிறது. அந்த ஆய்வு செய்யப்பட்ட பிறகு, அப்படிப்பட்ட நகைகளையும் மற்றவைகளையும் கொண்டுவந்து நிறுத்தி கண்டுபிடிக்க முடிகிறது என்றால், இந்த நகைகளை யார் செய்து கொடுத்தார்கள் அவர்களுக்கு என்ன இலாபம் என்பதோடு அல்லாமல், அதுவும் பொய்யான நகை செய்து கொடுத்திருக்கிறார்கள். 95 கிராம் நகைகள் என்று சொன்னால், இதில் வேறு ஏதோ கேஸ் போட இருப்பது போல், மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் கற்பனை செய்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆகவே, ஒரு பணக்காரர் நகைகளைச் செய்து கொடுத்து வேறு யாரையோ அப்ரூவராக மாற்றிவிட்டார்கள் என்று சந்தேகப்படுகிறாரோ என்று எனக்குத் தெரியவில்லை. இப்படிச் சந்தேகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருந்தால், அதற்கு முடிவே இருக்காது! இந்தத் தீர்ப்பு முழுவதும் வரட்டும். அதற்குப் பிறகு அதிலே ஏதாவது கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்று கருதினால், இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சுந்தரராஜ் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் வற்புறுத்துகிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகிறேன்.

நேற்றைய தினம் ஒரு படத்தை இங்கே காண்பித்து, கையால் எறிவது அப்படிப்பட்ட கண்ணீர்ப் புகைக் குண்டு அல்ல என்று அவருக்கே உரித்தான ஆங்கிலப் படங்களையெல்லாம் பயன்படுத்தி, அவர் இராணுவத்திலேயிருந்து திரும்பி வந்ததைப் போன்ற நிலையில் சொல்லி, உண்மைகளையெல்லாம் சொல்ல முனைந்ததுபோல இங்கே அந்தப் படத்தைக் காண்பித்து ஐயம் எழுப்பினார்கள்.

யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. கலைஞர் அவர்கள்தான் இவர்களையெல்லாம் கெடுத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட புள்ளி விவரங்களை அவைக்குக் கொடுத்து கொடுத்துப் பழகி, அதைப்பேசிப் பேசி, எல்லோருக்கும் அந்த ஆசை வந்துவிட்டது. புகைப்படங்களை எடுத்துக் காட்டுவது, ஏதாவது குறிப்புகளைக் காட்டுவது என்பது போன்ற நிலையில், ஒவ்வொருவருக்கும் 'இப்படிச் செய்து காண்பிப்போம்!' என்று தோன்றுகிறதோ என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

அந்த வகையில், இந்தப் படத்தை அவர்கள் பார்க்கட்டும்! எப்படி இது துப்பாக்கியால் சுடப்படுகிறது என்பதைப் பார்க்கட்டும். எப்படிச் சுடுகிறார்கள் என்பதையும் பாருங்கள். இப்படியும், அதைப் பயன்படுத்த முடிகிறது என்பதையும் பாருங்கள். இதையும் பாருங்கள். இந்தத் தோட்டா படத்தையும் பாருங்கள், இந்தக் குண்டு படத்தையும் பாருங்கள். எப்படிச் சுடப்படுகிறது என்று இந்தப் படத்தையும் பாருங்கள். எல்லோரும் பாருங்கள். அந்தத் துப்பாக்கி இருப்பதையும் பாருங்கள்; எப்படிக் கையால் எறிய முடிகிறது என்பதையும் பாருங்கள்!. இதை எல்லோரும் பார்க்கலாம். பகிரங்கமாகக் காண்பிக்கிறேன். இந்த மன்றம் முழுவதற்கும் இது சொந்தம். எறியும்பொழுது எப்படிப் போகிறது என்பதையும் பாருங்கள்.

இவற்றையெல்லாம் எதற்காக காண்பிக்கிறேன் என்றால், ஏதோ அந்த நிற்கிற நிலை, கையிலே எதையோ துக்கி வைத்துக்கொண்டிருப்பதைப் போல இருக்கிறது என்று எண்ணி, அதையே உறுதியாக்க முயற்சிப்பது நியாயம் அல்ல என்பதையும் நாமெல்லாம் இங்கே சாதாரண மக்களாக இல்லை; சாதாரண மக்களுடைய, படித்தவர்களுடைய, விவரம் தெரிந்தவர்களுடைய பிரதிநிதிகளாக இருப்பதால், அரசுக்கு அறிவுறுத்தும் படியாக, அரசுக்குத் தெளிவுபடுத்தும்படியாக; சில ஆதாரங்களைத் தர வேண்டுமென்பதுதான், என்னுடைய வேண்டுகோளும், விருப்பமும் ஆகும் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் படங்களை இங்கே காண்பிக்காவிட்டால் நிச்சயமாக நண்பர் திரு. சுந்தர்ராஜ் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். நாங்கள் சினிமாவில் சொல்வதைப்போல இது எக்ஸ்ட்ரீம் 'லாங் ஷாட்', இது 'குளோசப்', இது கலவரம் நடைபெற்றுக்கொண்டு இருந்தபோது எடுத்த படம். அதேபோல எறியும்போது எப்படி இருக்க வேண்டும் என்ற முறைப்படி, அது அந்த மூவ்மென்ட்டிலே பாதிவரை

செல்லுகிறபோது எப்படி இருக்கும் அவருடைய கை, அங்க சேட்டைகள் என்று சொல்லுவார்களே அவை போன்ற நிலை. இதை நான் இங்கே கொடுத்துவிடுகிறேன். இதை எதற்காக நான் சொல்லுகிறேன் என்றால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நகைச்சுவையோடு எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்தான் எதற்கெடுத்தாலும் இதுபோன்ற படங்களைக் காட்டுவார்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே நிற்கின்ற போஸ் நன்றாக இருக்கின்றது என்று சொல்லுகிறார்கள். எப்போதுமே இயற்கையாக நடைமுறையிலே நடைபெறும்போது எடுக்கப்படுவது என்பது ஒன்று, எப்படிப் பயன்படுத்துகிறார்கள் என்ற தெளிவைச் சொல்லும்போது அந்தப் பொறுப்பிலே இருக்கின்ற அதிகாரிகள் அதைச் செய்து காண்பிக்கின்ற நிலையில் எடுக்கின்ற நிலை வேறு. ஆகவேதான் அவ்வளவு தெளிவாக இருக்கின்றது. இல்லாவிட்டால் கொஞ்சமாவது அசைவு இருக்கும். கொஞ்சம் 'அவுட் ஆப் போக்கஸ்' இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரியாமல் கேட்கவில்லை. துணைத்தலைவர் கேட்டிருக்கிறார்களே, அதற்கு கொஞ்சம் உறுதியாக இருக்கட்டும், அதை ஏதாவது ஒரு திருப்பத்தில் கொண்டுவந்து வேறு நிலைகளை உண்டாக்கி விடலாமா என்று எண்ணுகிறார்கள் என்பது தான் இந்த சாமார்த்தியமே தவிர வேறு அல்ல. ஒன்றை நான் தெளிவாகச் சொல்கிறேன் அவர் கிளப்பிவிட்ட சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காகக் காவல் துறை செய்ய வேண்டிய முறை என்ன, அந்த குண்டுகள் கையிலே இருக்குமா, இருக்காதா, அப்படிப்பட்டவை இருக்கின்றனவா இல்லையா என்பதை மன்றத்திற்குத் தெளிவுபடுத்துவதற்காக எடுக்கப்பட்ட படங்களே தவிர, இவைகளை அங்கே எடுத்து இருப்போமேயானால், பின்னால் புகை மண்டலங்கள் இருந்திருக்கும். புகை மண்டலங்கள் இருந்திருக்குமானால் அதற்கிடையே எடுத்திருப்பதாக இது வரும்.

ஆகவே தான் கலைஞர் அவர்களும் என்னோடு சினிமாத்துறையிலே சேர்ந்திருந்தவர்,இப்போதும்இருக்கின்றவர்என்றமுறையில்நான்ஏதாவதுசொன்னால், அதிலே இருந்து ஏதாவது கிடைக்காதா என்பதற்காகத்தான் அவர் சொல்லுகிறார், என்பது எனக்குத் தெரிகிறது. ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இப்படித் தெரிந்தோ, தெரியாமலோ யாராலோ கொடுக்கப்படுகின்ற படத்தைக் காட்டி– அந்தச் செய்திகளைச் சொல்வது கூட, ஒரு வகையில் இந்த நாட்டிற்கும் இந்த மன்றத்திற்கும் எங்களுக்கும் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கின்றது என்பதை, நான் மன மகிழ்சியோடு, நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன். உண்மை சில சமயம் யாராலோ சொல்வதைப்போல, திறமையோடு சொல்லிவிட்டார் என்றால், அது பொய்யாக ஆகிவிடும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதே போல சிலரிடம் சிலர் வந்து அழுது, துன்பப்பட்டு வேதனைப்பட்டு இவ்வளவு அவல நிலையிலே இருக்கிறோம் என்பதை அழுதோ, வெதும்பியோ அல்லது வேதனை கக்குகின்ற வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தும்போது, கேட்கின்றவர்களுக்கு இவ்வளவு கொடுமைகளா

என்று தோன்றவது இயற்கை. அதை நம்பி, நமது நாட்டிலே இப்படி நடக்கலாமா என்ற கருத்துக்களை வெளியிடுவதும், ஒரு வேளை சரியாக இருக்கலாம். ஆனால், அதே நேரத்தில், இவை எல்லாம் உண்மையின் வடிவங்கள்தானா என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இப்படிப் பேசுகின்றபோதுதான், பிரச்சினை நமக்குப் பயன்படுகிறது என்பதை இங்கே மனநிறைவோடு சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு செய்தியை நான் இங்கே சொல்லியாக வேண்டும், திரு.சிவாஜி கணேசன் அவர்கள் சென்னையிலே வந்து இறங்கியபோது, அவருக்கு எவ்வளவு எச்சரிக்கையோடு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று இந்த அரசு கருதியது என்பதை, நாங்கள் இதுவரையில் அரசினுடைய பிரதிநிதிகள் செல்லும்போது கொடுப்பதைவிட, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் செல்லும்போது அதிகமாகப் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்பதை இங்கே நான் குறிப்பிட்டாக வேண்டும். அதை, யாரையும் அவமானப்படுத்த வேண்டுமென்றோ அல்லது தகுதியைக் குறைத்துச்சொல்ல வேண்டுமென்றோ சொல்லவில்லை! அக்கறை அதிகமாக இருக்கிறது என்பதும், பொறுப்பு அதிகம் என்பதையும் உணர்ந்து, நாங்கள் அதைச் செய்வதுண்டு, அந்த வகையிலே செய்தோம். எங்கே மேடை அமைக்க வேண்டுமென்று சொன்னோமோ, அதிகாரிகள் சொன்னார்களோ, அதை அவர்கள் கேட்கவில்லை! பாதைக்குக் குறுக்கே அமைத்தார்கள். அதை மாற்றி இன்னொரு இடத்தில் மேடையைப் போடுங்கள் என்று சொன்னதை அவர்கள் கேட்கவில்லை. அதையும் மறுத்தார்கள். அதற்குப் பிறகு ஆயிரக்கணக்கான பேர்கள் விமானக் கூடத்தில் புகுந்து செல்ல முயலும்போது, தடுக்க வேண்டிய கட்டாயம் மற்றவர்களுக்கு, அதிகாரிகளுக்கு ஏற்படுகிறது. ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகாய விமானம் வந்து இறங்கும்போதோ அல்லது புறப்படும்போதோ, ரோஜா மாலைகளிலிருந்து உதிருகின்ற பூக்கள் அந்த இன்ஜின்களுக்குள்ளே சிக்குமானால், எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்படும் என்பதை விவரம் அறிந்தவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நமது மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய இந்தியப் பிரதமர் அவர்கள் சென்னைக்குச் சென்ற முறை வந்தபோது, ஒரு திட்டம்போட்டு, இன்னார்தான் இங்கெல்லாம் நிற்பது என்று கூட இருந்தது. அப்படித்தான் நிறுத்தி வைத்தார்கள். ஆனால் எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், இன்னும், கொஞ்சம் குறிப்பிடத்தக்கவர்கள் அங்கே போகலாம் என்ற அளவிற்கு அழைத்துக்கொண்டு சென்றபோது, சிவாஜி கணேசன் அவர்களை அழைத்துச்சென்றபோது, அவர்கள் மாலை போடுவதற்குக் கூட முடியாமல், மக்கள் அவரை முந்திக்கொண்டு தள்ளியபோது, அம்மையார் அவர்கள் கூடக் கோபித்துக் கொள்ள வேண்டிய அளவிற்கு வந்தது என்பதையும், அந்த ஜீப்பிலே ஏறி, அங்கே இருப்பவர்களுக்கு எச்சரிக்கை செய்யவேண்டி வந்தது என்பதையும், நினைவிலே கொண்டால், கட்டுப்படுத்துகின்ற அளவில் சில நேரங்களிலே, அந்தக் கட்டுக்கோப்புக்குள் தன்னை அடக்கிக் கொள்ளமாட்டேன் என்கிறார்கள் என்பதை, நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆர்வம்,

அன்பு, வேகம் இவைகளைச் சில சமயத்தில் கட்டுப்படுத்த முடியாது என்றாலும், நிலைமைக்கேற்ப, வருகின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், மக்கள் அவரைக் காண வேண்டுமென்று எண்ணுகின்றபோது, போகின்ற மக்கள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்து ஒத்துழைத்தால்தான், யாரையும் ஒழுங்காக சீராக மக்கள் சந்திக்க ஏற்பாடு செய்ய முடியுமே தவிர, இதே சிவாஜி கணேசன் அவர்களுக்கும் அப்படிப்பட்ட ஒரு நிலைமையில், பாதுகாக்கக்கூடிய செயலுக்குத் தன்னை ஆட்படுத்திக்கொள்ளாமல், நமக்கு எதற்காகக் கெட்ட பெயர் என்று ஒதுங்கி இருந்தார் என்று வைத்துக் கொள்ளுங்கள், ஜீப் என்னாயிற்று ?, திரு.சிவாஜி கணேசன் அவர்கள் அந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு.எம்.பி. சுப்பிரமணியம் மற்றும் குறிப்பிடத்தக்கவர்கள் ஏறிய உடனேயே, அளவில்லாமல் தொண்டர்கள் ஏறிய காரணத்தால், ஜீப்பே கவிழ்ந்தது !

அதை யாரும் மறந்து இருக்க மாட்டார்கள். ஆகவே, இந்த அளவிற்குக் கட்டுப்பாடு இல்லாத அந்த நிலைமையைக் கட்டுப்படுத்திட, நாம்தான் ஒத்துழைக்க வேண்டுமென்பதை, நான் பணிவோடு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, எந்த ஒரே அருவருப்பான நிகழ்ச்சியையும் உண்டாக்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லுகிறேன். அதிலும் திரு.சிவாஜிகணேசன் அவர்கள் டெல்லியிலே போய் தங்குவதற்கு எந்த அளவிற்கு இந்த அரசு அக்கறை எடுத்துக்கொண்டது, என்னென்ன மரியாதை அங்கே அவர்களுக்குத் தரப்பட்டது என்பதை சிவாஜி கணேசன் அவர்களிடமே கேட்டிருந்தால், தெரிந்து கொண்டிருக்க முடியும் என்று நான் கருதுகிறேன். அவர்கள் பேசிய பொதுக்கூட்டத்தில்கூட, அரசைக் குறை கூறவில்லை. அங்கே இருப்பவர்கள் இன்னும் கொஞ்சம் கட்டுப்பாடோடு அதிகாரிகள் கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்திருந்தால், இன்னும் இது நடந்திருக்காது என்று சொல்லமுடியுமே தவிர, அரசு வேறு, காவல்துறை வேறு என்று நாங்கள் சொல்ல முடியாது என்ற காரணத்தால், அந்தப் பொறுப்பை நீங்களே ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் என்ற வகையில், நான் ஒன்றைத் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகிறேன். சிவாஜி கணேசனுடைய உயிரும், அவர் உடல் நலமும் எங்களுக்குப் பெரிதே தவிர, அவர்கள் மேல் அன்பு செலுத்துகின்றவர்கள் தடையை மீறி, கட்டுப்பாட்டை மீறி செல்வார்களானால், அவர்களையும் பார்க்கும்போது, இவர்தான் எங்களுக்கு முக்கியமானவராகத் தோன்றுவார் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள் என்றே கருதுகிறேன். அந்த அளவிற்குத்தான் காரியம் நடந்து கொண்டிருக்கின்றது.

அது மட்டுமன்று இங்கே கூட்டம் முடிந்து, நான் திரும்ப என்னுடைய மாம்பலம் அலுவலகத்திற்குச் செல்லும்போது, சிவாஜி கணேசன் அவர்கள் வீட்டுக்குச் சென்றுவிட்டு, திரும்பிய போது மக்கள் என்னைப்பார்த்து கையை உயர்த்தி வாழ்த்திவிட்டுப்போனார்கள் என்பதை, இங்கே நான் பெருமைக்காகச் சொல்லவில்லை.

தகவலுக்காகச் சொல்லுகிறேன். அந்த மக்கள் எனக்கு விரோதிகளாக இல்லை, நானும் அவர்களுக்கு எதிரியாக இல்லை. ஆகவே, தயவு செய்துதெரிந்துகொள்ள வேண்டும். இன்னும் 10 இலட்சம் பேர்களுக்கு மேல் கூடிப்பாராட்டினாலும், அது எங்களுக்குப் பெருமைதானே அன்றி வேறென்ன ? நான் வேறு எல்லாவற்றையும் மறந்துவிட்டுப் பேசுகிறேன். நடிகன் என்ற முறையில் எனக்கு மிகப்பெரிய பெருமையாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கூட்டத்தைக் குறைத்துக் காண்பிப்பதனாலே மட்டும் ஒருவருடைய புகழ் குறைந்துவிட்டது என்று நம்பக்கூடிய ஏமாளி நான் அல்ல. அதற்கு முயற்சி செய்யலாம். ஏதோ அரசியல் இலாபம் பெற்று விடலாம் என்று கருதுபவனும் நான் அல்ல; நாங்களும் அல்ல; என்பதை, இங்கே தெளிவுபடத் தெரிவித்துக்கொள்கிறேன் !

இங்கே நண்பர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் மல்லிகா என்ற பெண் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருக்கும்போது, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, கற்பழிக்கப்பட்டார் என்று சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையன்று; அப்படிப்பட்ட தவறு நடந்ததாகச் சொல்லப்படுவது காவல் நிலையத்தில் அல்ல; அவருடைய வீட்டில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் ! அதை விசாரித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும், தக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதையும், தெரிவித்துக்கொள்கிறேன். ஆய்வாளரின் குடியிருப்பில்தான் நடந்தது என்று சொல்லும்போது, அதுபற்றி இங்கே இருக்கிற குறிப்புகள் அனைத்தையும் நான் படிக்க வேண்டுமென்றால், நேரம் போதாது. ஏற்கெனவே 90 நிமிடங்கள் எடுத்துக் கொண்டேன். இதற்காக 10 நிமிடம் 20 நிமிடம் வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம். அதற்குமேல் போனால், தலைவரவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று தெரியாது. இன்னும் ஒரு மணிநேரம், இரண்டு மணிநேரம் என்றால் நீங்கள் எல்லாம் ஒப்புக்கொள்ள மாட்டீர்கள். இப்போதே நெற்றியைச் சுழிக்கிறார்கள். ஆகவே, எவ்வளவு சீக்கிரம் முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்துவிட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இன்னொரு கருத்தையும் சொன்னார்கள். காவல் துறையினர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று சொல்லி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஏன் இன்னும் பதவியில் அமர்த்தப்படவில்லை ? அது என்னவாயிற்று, தேர்ந்தெடுத்ததிலே ஊழல் இருக்கிறது என்று இதே முதலமைச்சர் சொல்கிறார். அவருடைய இலாகாவில் ஆகவே, தன்னுடைய இலாகாவில் ஊழல் இருக்கிறது என்று எப்போது ஒப்புக்கொள்கிறாரோ, அப்போதே இராஜினாமா செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவருடைய ஆசையை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். அவர் எந்த நேரத்தில் இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்று நான் நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கே எவ்வளவு அன்போடு பேசுவார்.

சில நேரங்களிலே சற்று ஆத்திரத்தோடு பேசியிருந்தாலும், வெளியிலே மேடைகளிலே என்னென்ன பேசினார் என்ற விவரம் என்னிடம் இருக்கிறது. அதை

எல்லாம் நான் குறிப்பிட விரும்பவில்லை, அது தேவையும் இல்லை, விவாதம் அந்த வகையில் போகக்கூடாது என்பதற்காக, நமது மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைத் தெரிவித்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட முறை சரியில்லை, தகுதிபெற்றவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள்; ஏறத்தாழ 120 பேர்களுக்கு மேல் அங்கே தகுதி பெற்றவர்களை ஒதுக்கிவிட்டார்கள் என்பது போன்ற குறைகளைச் சொன்னார்கள். என்னுடைய கடமை யார் குற்றச்சாட்டு தந்தாலும், தெரிவித்தாலும் அதை விசாரிக்க வேண்டியது என்பதும், தவறு என்றால், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும்தான். அது பற்றி விசாரித்தேன்.

அப்படி நடந்திருப்பது உண்மை என்றும், தகுதி உடையவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் என்றும் கண்டறிந்த பிறகுதான், அதைப்பற்றி நான் பகிரங்கமாகச் சொன்னேன். நான் மறைக்கத் தயாராக இல்லை. இனி எச்சரிக்கையாகத் தகுந்த வகையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இராணுவத்தினரிடம் ஒப்படைப்பதில்லை; இராணுவத்திலுள்ள யாராவது ஒருவரைக்கூட நடுநிலையாளராக அங்கே இருக்குமாறு செய்து, அப்படிக்கூட தேர்ந்தெடுக்கலாமா, இந்தக் குறை கூட வராமல் இருப்பதற்காக ஏன் இதைச் செய்யக்கூடாது என்ற முறையிலே இந்தக் கருத்தை வெளியிட்டேனே தவிர, காவல் துறையினர் மீது நம்பிக்கை இல்லாமல் அல்ல. தவறுகள் எங்கும் நடக்கின்றன. நான் முதன் முதலாக இந்தப் பேச்சை ஆரம்பிக்கும் முன்னால் குறிப்பிட்டதைப் போல, எந்தச் சமுதாயத்திலிருந்து காவலர் பணிக்கு வருகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தால், பல மதத்தவர்கள், பல தரப்பினர்கள், இப்படிப்பட்ட குடும்பச் சூழ்நிலையிலிருந்த அங்கே வருகிறார்கள். எல்லோரும் சரியாக இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. எல்லோரும் வழி தவறி நடப்பார்கள் என்று முடிவுக்கும் வந்து விடக்கூடாது. அந்த நிலையில்தான் எச்சரிக்கையாகச் சொன்னனே தவிர, வேறு அல்ல. நாங்கள் ராஜினாமா செய்ய வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். நான் இன்னும் இரண்டு ஆண்டுகள்தான் இந்தப் பதவியில் இருக்க முடியும். அதற்குப் பிறகு மக்கள் அதைப் பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மக்கள் எந்த வகையில் முடிவிற்கு வருகிறார்களோ அதுதான் முடிவாக இருக்கப்போகிறது . நானே விரும்பினாலும் கூட, மக்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் நான் இந்தப் பதவியில் நீடித்து இருக்க முடியாது. ஆகவே, ஆக்கப்பொறுத்தவர்கள் ஆறப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்வதைப் போல, இவ்வளவு நாள் பொறுத்து இருந்துவிட்டீர்கள். 4 ஆண்டுகள், 4½ ஆண்டுகள் பொறுத்துக்கொண்டு இருந்துவிட்டீர்கள் இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முரண்பாடு எதுவும் இல்லை. நாங்கள் எல்லோரையும் மதிக்கிறோம். அதுதான் காரணம் என்ற சொல்லிக்கொள்கிறேன். 10,000 பேர்கள் போலீஸ் இலாகாவில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அறிவித்தவுடனேயே, அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களை, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களைப் போலீஸ் இலாகாவில் நுழைப்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கொண்டுவந்து இருக்கிறோம் என்று

வெளியே பேசப்பட்டது. வெளியில் எழுதப்பட்டது. அதன் விளைவுதான், அந்தக் குழுவை அமைத்து, நாம் செய்தாலும், அந்தக் குழுவில் எங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தினோம் என்று கெட்ட பெயர் வரக்கூடாது என்று தேர்வு ஆணை குழுவிடம் அது ஒப்படைக்கப்பட்டது. அதிலே குற்றச்சாட்டு வந்தபிறகுதான், அந்தத் தேர்வாணைக் குழுவிலிருந்து மறுபடியும் குழுவிற்குக் கொடுக்கப்பட்டது.

அதிலே தவறு வந்து இருக்கிறது என்று சொன்னதால், இராணுவத்தினரை வைத்துக்கொண்டு செய்யலாமா என்று சொன்னேன். தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் இப்படி செய்கிறோம். இன்னொரு பிரச்சினையும் சொல்லப்பட்டது. தாழ்த்தப்பட்டவர்கள், பின் தங்கியவர்கள் மலைவாழ் மக்கள் பெரும்பகுதி பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆகவேதான் இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க, அந்த முறையைப் பின்பற்றலாம் என்ற முறையில், அந்தக் கருத்தைச் சொன்னேனே தவிர, வேறு எதுவும் இல்லை. இதிலே முரண்பாடு இல்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஆனாலும் சிறிதளவு இன்னும் நான் தெளிவாகச் சொல்லியிருக்கலாம் என்று நினைக்கிறேன். தேர்வாணைக் குழுவிற்கு அனுப்பினோம். தேர்வாணைக் குழுவில் அந்தக் காரியங்கள் செய்யப்பட்டு வந்தன. இதற்கிடையில், குற்றச்சாட்டுகள் வந்தன. மீண்டும் நாங்கள் அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கலாம் என்று ஒப்படைத்த நேரத்தில், அதற்குப் பிறகும் பேசப்பட்ட செய்திகள், சொல்லப்பட்ட விஷயங்கள் எங்கள் பெயருக்குக் களங்கம் உண்டாக்கும் சூழ்நிலையை உருவாக்குவதாக இருந்ததால், அதற்கு ஒருபோதும், இடம் கொடுக்கக்கூடாது என்று, இராணுவத்தில் இருந்து ஒருவரை வைத்துக்கொண்டு அதை நடத்தலாமா என்ற முடிவிற்கு வந்தோமே தவிர இதிலே முரண்பாடு இல்லை என்பதை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையிலேயே தவறு என்று வந்தபோது, அதிலே 4,000 பேர்களாக இருந்தாலும், 3,000 பேர்களாக இருந்தாலும், 10 பேருக்கு அநியாயம் அங்கே வழங்கப்பட்டிருந்தாலும், நிச்சயமாக எல்லோரையும் பொதுவாகப் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் கூடக் கேட்டார்கள். அவர்களுடைய 'சர்டிபிகேட்' எல்லாம் என்ன ஆயிற்று ? என்று, அதைத் திருப்பித் தரவேண்டும் என்று பலபேர் கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறோம் என்பதையும், நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சொல்லப்படுகிறது! என்ற செய்தியைச் சொல்கிறார்கள். ஆனால், எனக்குச் சொல்லப்படவில்லை என்ற செய்தியை நான் இப்பொழுது சொல்லி, விசாரிக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இந்தியா டுடே' பத்திரிக்கையில் வைத்தியநாதர் என்பவருடைய வீட்டிலே புகுந்து தொல்லை விளைவித்ததாகக் கூறப்படும் சம்பவம் பற்றி, மாண்புமிகு

உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே எடுத்துச்சொல்லி குற்றம் சாட்டி இருக்கிறார்கள் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதில் சம்பந்தப்பட்டவர்கள், யாரோ என்று விசாரித்து பழனி என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர் தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் கமிஷன் சம்பந்தமாக சதாசிவம் என்ற அதிகாரியும், எதிர்க்கட்சித் தலைவரின் உதவியாளர் ஷண்முகநாதன் என்பவரும் கொடுமை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் இங்கே பேசினார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நீதிபதியின் முன் கொண்டு செல்லப்பட்டபோது, ஏதாவது உங்களுக்குச் சொல்ல இருக்கிறதா என்று கேட்ட நேரத்தில், யாரைத் துன்புறுத்தியதாகச் சொல்கிறார்களோ, அவர்கள் இருவரும் எந்தக் குறையும் சொல்வதற்கு என்னிடம் இல்லை என்ற வகையில், பதில் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்குத் தரப்பட்ட செய்தியிலிருந்து, தகவல்களிலிருந்து மீண்டும் படித்துக் காண்பிக்கிறேன். ஆஜர் செய்யப்பட்டபோது தங்களுக்குக் காவல் துறையினரால் ஏதும் கொடுமை செய்யப்பட்டதாக அவர்கள் புகார்கள் சொல்லவில்லை என்பதுதான் இங்கே என்னிடத்திலே இருக்கிற குறிப்பு. இது தவறாக இருந்தால், குறிப்பேட்டிலே இங்கே இருக்குமேயானால், இந்தத் தகவல்களைச் சொன்னவர்கள் மீது நான் நடவடிக்கை எடுக்கிறேன். இல்லையானால் எனது மதிப்பிற்குரிய என்.வி. நடராசன் அவர்களுடைய செல்வக்குமாரன் அவர்கள், தயவு செய்து அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்வார் என்று நம்புகிறேன். ஏனெனில், அவர் ஒரு நல்ல வழக்குரைஞர். அவர்களே இருந்ததாகச் சொல்லும்போது அதைப் பொறுப்பேற்றுக் கொள்வது அவருக்கு எளிதாகவே இருக்கும். கஷ்டமாக இருக்காது என்று நம்புகிறேன்.

இங்கு நான் பேசிய சில விஷயங்களில் சிறு மாற்றம் இருக்கிறது. பெயர்மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவிரும்புகிறேன். செல்வம் கைது செய்யப்பட்டது விமான நிலையத்தில் என்பதும், மற்ற இரண்டு பேரையும் கேட்டபோது, இந்தப் பதில் வந்திருக்கிறது என்றும், இந்தக் குறிப்பிலே இருக்கிறது. ஆகவே, அதைப்பற்றித்தான் நான் பதில் சொன்னேன். செல்வத்தைப் பற்றி என்றால் அது பற்றி விசாரணையில் வெளிவரும். அப்போது அதற்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நான் கருதுகிறேன்.

அப்சல்கான் என்ற மருத்துவ அதிகாரியைப் பற்றி அங்கே குற்றம்சொல்லி, அவர் ஏன் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார் ? அநியாயம் நடந்தது. அந்த விசாரணையில், ஒருவரைக் கொண்டு விசாரணை நடத்தப்பட்டது என்றெல்லாம் சொல்லி, அதையும் இந்த அவையில் வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். வருவாய்த் துறையின் சார்பாக ஒரு நபர் குழு நடத்துகிற அந்த விசாரணையின் முடிவுகள் அனேகமாக மன்றத்தில் வைக்கப்படுவதில்லை. வைக்க வேண்டும் என்று வற்புறுத்தினாலும்,

வைக்க வேண்டிய கட்டாயம் இந்த அரசுக்கு இல்லை, என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன் உதாரணம் என்று ஆரம்பித்தால் உங்களுக்குத்தான் தொல்லை.

மீண்டும் சொல்கிறேன். வருவாய் வாரியத்தின் சார்பாக இந்த விசாரணைக்குழு அமைக்கப்பட்டது என்பதையும், அவற்றின் முடிவுகள் இங்கே வைக்கப்படுகின்ற நிலைமை இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க, இந்த அரசு ஆவன செய்து கொண்டிருக்கின்றது என்பதை மட்டும் தெளிவுபடுத்துகிறேன். ஆகவே, அது, வெளிவரும்போது, நாங்கள் அந்தப் பணியைச் செய்தோமா, இல்லையா என்பதை இந்த நாடும், மன்றமும் அறியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

11.12.1981 அன்று இரவு 10 மணிக்கு சிதம்பரம் நடராஜா திரையரங்கில் இரவுக் காட்சி பார்ப்பதற்காகச் சென்ற கலைமதி, குமாரி, கோமதி என்ற மூன்று பெண்களை, சிதம்பரம் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் கேம்ப் அலுவலகம் வழியாகச் சென்று கொண்டிருக்கையில், அவர்களை ஜீப்பில் ஏற்றி காவல் நிலையத்திற்கு அனுப்பினார்கள், மூன்று பெண்களும் காவல்நிலையத்திலே வைக்கப்பட்டனர். கலைமதியைக் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் மறுநாள் காலை அடித்திருக்கிறார். கலைமதியின் தந்தையையும் அடித்திருக்கிறார். பின்னர் விடுவிக்கப்பட்டு, அவமானம் தாங்காமல் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக்கொண்டு தற்கொலை செய்ய முயன்றார் என்று தெரிய வருகிறது. துணைக்கண்காணிப்பாளர் விரும்பத்தகாத முறையில் நடந்து கொண்டதால், அவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டு, துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் அவர் மீது விசாரணை நடத்தி வருகிறார். அவர் இடமாறுதல் மட்டும் செய்யப்பட்டிருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியல்ல. நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதிலே இருந்த சாட்சிகளுக்கு அங்கே அவர்கள் சொல்வதற்குரிய வாய்ப்பைத் தரும்போது, அவர்களை அதைப் பயன்படுத்திக்கொள்ளச் செய்தால், குற்றவாளிகள் கடுமையான தண்டனைக்கு உள்ளாவார்கள் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உமாநாத் அவர்கள், மானாமதுரையில் தேவி, விஜயா, என்ற இரண்டு இளம் பெண்கள் அவர்கள் பணியாற்றும் கம்பெனியின் முதலாளியின் மகன் மற்றும் பலரால் பலவந்தப்படுத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டு பின்னர் குரல்வளை நெறிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுவிட்டார்கள் என்றும், சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் இன்னும் கைது செய்யப்படவில்லை என்றும், இது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையுமே எடுக்கப்படவில்லை என்றும், குற்றவாளிகளுக்குத் துணை போவதற்காகவே காவல்துறை செயல்படுகின்றதா என்றும், மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குற்றம் சாட்டும் தொனியில் பேசியுள்ளார்கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குற்றவாளிகளுக்குத் துணை போவதற்காக ஒரு காவல்துறை உள்ளது என்ற நியதி தமிழகத்தைப் பொறுத்தவரையில் இல்லை என்பதையும், அப்படி

இருந்து இருக்குமேயானால், இந்தக் குற்றங்கள் எல்லாம் வெளியே வராமலே கூட முன்பெல்லாம் மறைத்திருப்பதைப் போல, மறைந்திருக்க முடிந்திருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அப்படி இல்லாமல் இந்த இரண்டு இளம் பெண்கள் இறப்பைப் பற்றி, முறையாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இதிலே உள்ளூர் காவல்துறை விசாரித்து பலன் இல்லாததால், குற்றப் புலனாய்வுத் துறை விசாரித்தால்தான் உண்மை தெரியவரும் என்று, இந்த வழக்கு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டிருக்கின்றது.

எனவே, நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், காவல்துறை ஒன்றுமே செய்யவில்லை என்றும் மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்வது சரியன்று என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். கடலூர் டெப்டி தாசில்தார் 12.11.1981 அன்று நீரில் மூழ்கி இறந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இதற்கு முன்பு தான் 2,400 நெல் மூட்டைகள் பிடிக்கப்பட்டன என்றும், வழக்கு வாபஸ் பெறப்பட்டது. என்றும் சொல்லியிருக்கிறார்கள். கடலூர் வட்ட வழக்குரைஞர் திரு. சண்முகசுந்தரம் 13.10.1981 அன்று இரவு அவர்கள் வீட்டின் அருகில் இருந்த கிணற்றில் பிணமாகக் கிடந்தார். அவர்கள் வீட்டு வேலைக்காரி கொடுத்த தகவலின்படி, அந்தப் பிரேதம் எடுக்கப்பட்டு பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. உடலில் வெளிக்காயம் எதுவும் இல்லை. புலன் விசாரணையின்போது இந்த அதிகாரி நெல் கொள்முதல் செய்பவர்களுக்கு உரிமம் வழங்குதில் முறைகேடுகள் செய்யப்பட்டதாகவும், அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்ததாகவும் அதற்கு அஞ்சி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்றும் தெரியவந்தது. இதற்கு வேறு எந்தக் காரணமும் இருந்ததாகப் புலன் விசாரணையில் தெரியவில்லை.

அடுத்து திருத்தணி சுப்பிரமணியசுவாமி தேவஸ்தான பயணிகள் விடுதியில் ஒரு பெண் கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இதற்குக் காரணம் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான் என்று சொன்ன பிறகும், நடவடிக்கை எடுக்கவில்லை என்று திரு. ரகுமான்கான் அவர்கள் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். 21.03.1981 அன்று ராஜசேகரன் என்பவரும் அவரோடு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் திருத்தணி கோவில் விருந்தினர் இல்லத்தில் 157 (பி) இல் இரவு 7.30 மணிக்கு வந்து தங்கியிருந்தனர். அறையை வாடகைக்கு எடுத்த இராஜசேகரன் அறையைக் காலி செய்யவோ அல்லது சாவியை கோவில் நிருவாகத்தினரிடமோ திருப்பித் தரவே இல்லை. சந்தேகம் கொண்ட கோவில் நிருவாகத்தினர் பூட்டப்பட்ட அந்த அறையைத் திறந்து பார்த்தபோது ஒரு பெண்ணின் பிரேதம் அழுகிய நிலையில் காணப்பட்டது. பிரேத பரிசோதனை செய்யப்பட்டு திருத்தணி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, அது விசாரணையில் உள்ளது.

இந்தச் சம்பவம் நடந்த அறையின் பக்கத்து அறையில் 157 (ஏ) யில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. அர்ஜுனரெட்டி அவர்கள் தங்கியிருந்ததால் அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பார் என்று திராவிடர் முன்னேற்றக் கழகச் சார்பில் கூறப்பட்டது. ஆனால், இந்தப் புகாரில் எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று தெரியவந்துள்ளது. வாடகைக்கு எடுத்த ராஜசேகரன் என்பவர் சிதம்பரம் விலாசத்தைக் கொடுத்திருந்தார். ஆனால், விசாரணையில் இந்த விலாசம் தவறானது என்று தெரியவந்தது. கோவில் நிருவாக அலுவலகம் மூன்று சிற்றெழுத்தர்கள் போதிய கவனம் செலுத்தாததால், தற்காலிக் பணிநீக்கம் செய்யப்பட்டனர். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே இன்னொரு பெரிய முக்கியமான சமுதாயப் பிரச்சினை என்ன என்பதையும் கொஞ்சம் விளக்கமாக சிலவற்றைச் சொல்லி என் கருத்தை, அரசாங்கக் கருத்தை, இங்கே வெளியிடவேண்டியது அவசியம் என்ற வகையில் 'நக்சலைட்ஸ்' என்று கருதப்படுபவர்கள் பற்றி சில சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'நக்சலைட்ஸ்' என்று அழைக்கப்படுகிறவர்கள் பெரும்பாலும் இளைஞர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அந்த இளைஞர்கள் தங்களுடைய உள்ளத்திலே ஏற்படுகிற வேதனை, ஏமாற்றம், எரிச்சல், அவர்கள் மனசிலே ஆழப்பதிந்துவிட்ட சில நிகழ்ச்சிகளால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்று கூடச் சொல்லலாம், அவை அத்தனையும் சேர்ந்துதான் ஒரு சில இளைஞர்களைத் தவறான வழிகளிற்சென்று வன்முறை நிகழ்வுகளில் அவர்களை ஈடுபடவைத்துவிடுகின்றன என்பதை நான் முதலில் தெரிவித்தாக வேண்டும்!

சமுதாயத்தில் ஏழ்மையான நிலையில் இருப்பவர்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள், வேலை இல்லாமல் திண்டாடுகிறவர்கள் போன்றோரும், படித்துவிட்டு சென்னை நகரம் போன்ற இடங்களில் அனைத்து மக்களோடு சமத்துவமாக பழகிவிட்டுப் பின் அங்கிருந்து திரும்பி, கிராமங்களுக்குச் சென்றவுடன் மீண்டும் அவர்கள் மிகவும் தாழ்வாக இருந்தாக வேண்டும், தகுந்த தகுதி அவர்களுக்குத் தரப்படமாட்டாது என்ற சூழ்நிலையைக் காணும்போது, அதை அனுபவிக்க நேரும்போது, அவர்கள் ஆத்திரத்தின் மொத்த உருவமாக மாறுகிறார்கள் என்பதை, நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இது உங்களுக்குத் தெரியாததல்ல. ஆனால், அவர்களை எப்படிப் பயன்படுத்திக்கொள்கிறோமோ, அதைப் பொறுத்துத்தான் அவர்களுடைய செயல்முறை சரியான வகையிலேயோ, தவறான வகையிலேயோ வடிவம் எடுக்கிறது.

இங்கே 'நக்சலைட்டுகள்' பற்றிச் சொல்லும்போது, வேண்டுமென்றே கொலை செய்து அவர்களை அழித்துவிடுவதுதான் இந்த அரசின் கொள்கை என்பதுபோல சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, குறிப்பிட்டது கண்டு உண்மையிலேயே நான் வேதனை அடைகிறேன். அப்படியானால், இப்படிப்பட்ட மிகவும் பின்

தங்கிய மாவட்டத்திலே இருக்கின்ற மக்கள், அதிலும் பிற்பட்ட சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ்ப்பகுதி மக்கள் போன்றவர்களுக்காக விசேஷ திட்டங்களைத் தீட்டுவதும், அதற்காகக் கோடிக்கணக்கான பணத்தை ஒதுக்கி வைத்து, அக்கறைகாட்டி, தொழில் துறையில் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கச் செய்து அதன்மூலம் மற்றவர்களைப் போல வாழக்கூடிய வசதியையும் அவர்கள் பெறச்செய்து, இன்னொருவரிடம் கைகட்டிக் காத்திருக்கின்ற நிலையில்லாமல் செய்ய, இந்த அரசு ஏன் முனைகிறது என்பதை, தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தக் காரியங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதற்கு சர்வோதயத் தலைவர்களை அணுகினால், அவர்கள் அதற்கு விளக்கம் தருவார்கள் என்று, நான் நிச்சயமாக நம்புகிறேன். அவர்கள் மிகப்பெரிய நல்ல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு அவர்கள் நேரடியாகச் உதவுவதும், மக்களை சந்திப்பதும், அவர்களோடு உறவாடுவதும், விவாதிப்பதும் நல்ல வழிகளிலே நாங்கள் உங்களுக்குக் கடமையாற்ற வந்திருக்கிறோம் என்று சொல்லுவதும், அவர்களுடைய பெரும்பணியாக எடுத்துக்கொண்டு, அவர்களுக்குக் கிடைக்கின்ற பணத்தையும் வைத்து, அங்கே திட்டங்களை உருவாக்கி அவர்கள் சேவை செய்கிறார்கள் என்பதை வைத்து, நான் இங்கே சுட்டிக்காட்டுவதில் பெருமையடைகிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் இந்த அரசின் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால், ‘நக்சலைட்டுகள்’ என்று சொல்லுகிறோமே, அவர்கள் அத்தனை பேர்களும், ‘நக்சலைட்’ என்ற கொள்கைக்கு, ‘நக்சல் பாரி’ என்ற பெயருக்குச் சொந்தக்காரர்களா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். வாழ்க்கையிலே குறுக்கு வழியில் வாழ்வுபெற முடியாதவர்கள் சிலர் கூட, அவர்களுக்குத் துணைபோகிறார்கள் என்பதையும், வன்முறையைத் தூண்டுவதால் இந்த நாட்டில் குழப்பம் ஏற்பட்டு, சட்டம் ஒழுங்கு சீர்குலைவதால், இந்த நாட்டில் அமைதி கெட்டு, இந்த நாட்டினுடைய மக்கள் வாழ முடியாத, தொழில் செய்ய முடியாத, ஒரு நிலையை உருவாக்க வேண்டுமென்று எண்ணுகின்றவர்கள், அங்கே தலையிட்டு சில காரியங்களுக்குக் காரணமாக இருக்கிறார்கள் என்பதைக் கூட, நான் இங்கே சொன்னால், தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருப்பதற்கு என்ன காரணமோ, அதை வைத்துக்கொண்டு அந்தப் பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காகச் சொல்லுகிறேன் என்று கூட எண்ணலாம்.

மத்திய அரசில் உள்ளவர்கள் ஆந்திராவுக்குத் திரும்பும் போது அதைச் சொல்லுகிறார்கள். வேறு பகுதிக்குச் சென்று இப்படிப்பட்ட செய்திகளை நேரிலே அறிந்து, அனுபவங்களை, நிகழ்ச்சிகளைக் கண்ட பிறகு அவர்கள் வெளியிடுகின்ற கருத்துக்கள், சமூக விரோதிகள் இதிலே ஈடுபடுகிறார்கள் என்பவையே! அவர்கள் அவற்றைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை என்பதை நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில், ‘நக்சலைட்டுகள்’ என்று

அழைக்கப்படுகின்றவர்கள், தீவிரவாதிகள் என்று சிலரால் அழைக்கப்படுகிறார்கள். தீவிரவாதிகள் என்று எல்லாக் கட்சிகளிலும் இருக்கிறார்கள்! எந்தக் கட்சியில் தீவிரவாதிகள், மிதவாதிகள் என்று பிரித்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஒன்றுபட்டுப் போயிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது! போராட்டத்தைத் தொடங்கலாம் என்று கட்சியிலே சொன்னால், உடனே சொல்லுகிறார்கள், போராட்டத்தை எந்த முறையில் தொடங்கலாம் என்று தீவிரவாதிகள் சொல்வதற்கும் ஒரு கட்சியிலும் இருப்பார்கள், பல கட்சிகளிலும் இருப்பார்கள்!

அதுபோல் இந்த வகையில் போகக்கூடாது, அமைதியாக ஒருவழியைக் கடைப்பிடித்துப் போராட்டத்தை நடத்த வேண்டும். மக்கள் எண்ணங்களை வெளியிடவேண்டும் என்று சொல்வதற்கும்கூட, பல கட்சிகளில் ஆட்கள் இருப்பார்கள். ஆனால், நக்சலைட்டுகளைத் தயாரிக்கிறவர்கள் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது எல்லாம், குறிப்பிட்ட சில அதிகாரிகளை ஒழித்துவிட்டால், குறிப்பிட்ட சில பணக்காரர்களை ஒழித்துவிட்டால், இந்த நாட்டில் அபேதவாதம், சமதர்மம் வந்துவிடும் என்ற எண்ணத்தை விதைத்துவிடுகிறார்கள் என்பதை நாம் அறியும்போது வேதனைப்படுகிறோம்.

உண்மையிலேயே தமிழகத்தினுடைய நிலைமை இப்படிப் போய்க் கொண்டிருக்கிறதே என்று எண்ணித் தலை குனியத் தயாராக இருக்கிறோம். ஏனெனில், இந்த மாமன்றத்திலே இருக்கின்றவர்கள் எத்தனையோ வெவ்வேறு விதமான கட்சிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும், பொது நோக்கத்திலே இந்த நாட்டு மக்கள் அமைதியாக வாழவேண்டுமென்ற கொள்கையிலே, சொந்தமாக அதை எடுத்துக்கொண்டவர்கள் என்பதிலே எனக்குச் சிறிதளவும் ஐயம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆனால், 'நக்சலைட்டுகள்' என்று சொல்லும்போது தாழ்த்தப்பட்ட மக்களிலே யாராவது நக்சலைட்டுகள் என்று அழைக்கப்படுகிறவர்களாக இருந்து ஏதாவது விபத்துக்குள்ளாவார்களானால் அல்லது தாக்குதலுக்கு ஆளானார்கள் என்றால், அதைத் திருப்பி வேறு பெயரைச் சூட்டுவதன் மூலம் இந்த நாட்டில் வேறு வகையில் அரசியலுக்குப் பயன்படுத்த முடியுமா என்று எண்ணுவார்களானால், ஒரு சிலர் உடனே அதை தாழ்த்தப்பட்ட மக்களைத் தாக்குகிற கடுமையான முறை என்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்றும் சொல்கிறார்கள். இல்லை, ஒருவேளை 'நக்சலைட்டுகள்' என்று அழைக்கப்படுகிறவர்கள் வசதிமிக்க குடும்பத்திலிருந்து வந்தவர்கள் என்று வைத்துக்கொள்வோம் அல்லது சிறுபான்மையினர் என்று அழைக்கப்படுகின்ற ஒரு இனத்திலிருந்து வந்தவர் என்று வைத்துக் கொள்வோம் அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று அழைக்கப்படுகிற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று வைத்துக்கொள்வோம். உடனே என்ன சொல்கிறார்கள், 'மைனாரிட்டிகள்' 'மெஜாரிட்டியை' வாழவிடாமல் குறுக்கிட்டு அழிக்கப்பார்க்கிறார்கள் என்ற எண்ணத்தை உடனே அரசியல் ரூபமாக வெளியிட அவர்கள் தயங்குவதேயில்லை!

நான் இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்து பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். இந்த காவல் துறையைப் பொறுத்தமட்டில், வட ஆற்காட்டிலே சுட்டார்கள், தருமபுரியிலே அராஜகம் என்று இரண்டு மாவட்டங்களிலே நக்சலைட்டுகள் பற்றித் திரும்பத் திரும்பப் பேசுகிறார்களே, அவர்களுக்கு எனது பணிவான வேண்டுகோள் ஒன்றை விடுக்கிறேன். எதிரிகள், ஆட்சிக்கு எதிரிகள் என்று வைத்துக்கொள்ளுங்கள், இந்த ஆட்சி இருக்கக் கூடாது என்று எண்ணுகிற கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் அல்லது இந்த ஆட்சியை ஏதோ ஒரு இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ, எதிர்க்கட்சித் தலைவர் நேற்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள், அதற்கு நான் பின்னாலே பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அந்த எண்ணம் ஆளும் கட்சிக்கு இருந்து அவர்களுக்குச் சாதகமாக இந்த காரியத்தைச் செய்கிறார்கள் என்று எண்ணி, அதற்காகத் தூண்டிவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் நான் முதன்மையாக இருக்கின்ற எதிர்க்கட்சியைச் சொல்லவில்லை. எந்தக் கட்சியையும் குறிப்பிட்டு நான் சொல்லவில்லை, பொதுப்படையாகச் சொல்கிறேன்.

இந்த மாமன்றத்தில் இல்லாத ஏதாவது ஒரு கட்சி அல்லது கொள்கை உடையவர்கள், அவர்கள்கூட, இப்படிப்பட்ட காரியத்தை செய்யலாம், அவர்களை அழிப்பதற்கு இந்த அரசுக்கு எதிராகக் கருத்துச் சொல்வதால் அவர்களை ஒழித்துக் கட்டுவதற்குக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றால், நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்டவர்கள் வட ஆற்காட்டிலேயும் தருமபுரியிலேயும் மட்டும்தான் இருக்கிறார்களா ? தமிழகத்திலே வேறு இடத்திலே இல்லையா ? வேறு எங்குமே இல்லையா ? அங்கு மட்டுமே ஏதோ எதிராக இருக்கிறார்கள் அல்லது மாற்றுக் கருத்து உடையவர்களாக இருக்கிறார்கள் அப்படிப்பட்டவர்களை அழித்தாகவேண்டுமென்ற நோக்கம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே, நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்கிறேன். மற்ற மாவட்டங்களிலே மற்ற தாலுக்காக்களிலே ஏன் மற்ற கிராமங்களிலே யாருமே இல்லையா ? கட்சி இல்லையா ? அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லையா ? இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. என்று சொல்லிக் கொள்கிறோமே ! இந்தியா முழுவதற்கும் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக் கொள்கிற கட்சிகளிலே எந்தக் கட்சியும் இல்லையா ? ‘நக்சலைட்டு’ என்ற அழைக்கப்படுகிறவர்கள், வட ஆற்காடு அல்லது தர்மபுரியிலே மட்டும்தானா இருக்கிறார்கள் என்பதை நான் கேள்வியாக அன்று. உள்ளத்திற்கு வேண்டுகோளாக வைக்கிறேன். சிந்தித்துப் பாருங்கள், வட ஆற்காடு மாவட்டத்திலே பணியாற்றுகின்ற காவல் துறையினர் ஒவ்வொரு நிமிடமும், தங்கள் உயிருக்கு எப்போது ஆபத்து வரும். எந்த நேரத்திலே எந்த வெடிகுண்டு வரும், எந்த துப்பாக்கிக் குண்டு வரும். எந்த இடத்திலே தீ வைப்பார்கள். எந்த இடத்திலே கார்களை அழித்து, நம்மை நாசமாக்குவார்கள் என்ற அச்சத்தோடு சேவை செய்கிறார்களே, அவர்களுக்குக் கொடுக்கிற பரிசு இதுதானா என்ற கேள்வியை, நான் கேட்க விரும்புகிறேன்.

அந்தக் காவலர்கள், அந்த அதிகாரிகள் மற்ற இடங்களில் வேலை செய்திருக்கிறார்கள். இன்னும் பலபேர் இடமாறுதல் பெற்று அங்கே போய் வேலை செய்திருக்கிறார்கள், அங்கே இருந்த இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி போன்றவர்கள் பல இடங்களில் மாற்றப்பட்டிருக்கிறார்கள். வேறு இடங்களுக்குச் சென்று வேலை செய்யவிருக்கிறார்கள். காவலர்கள் கூட அங்கே இருந்திருக்கிறார்கள், அப்படியானால், அவர்களுக்கு எல்லாம் என்ன நோக்கம்? எந்த கட்சியிலே யார் இருக்கிறார்கள்? ஒரு 10,20,30 பேரை சுட்டுக்கொன்றுவிட்டால் மட்டும், இந்த நாட்டிலே இருக்கிற, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், அந்தக் கட்சியை ஒழித்து விட முடியும் என்று நாங்கள் கற்பனை செய்தால், அகில இந்தியஅண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்குவதற்கு முன், திராவிட முன்னேற்றக் கழகத்திலேயிருந்து பல சவங்களைச் சிறைசாலைகளிலிருந்து வெளியே கொண்டு வந்தபோது, அந்தச் சவங்களோடு நடந்து சென்ற இராமச்சந்திரன்; இன்று முதலமைச்சராக இருந்தால்கூட, அதற்குப் பிறகு சிறையிலேயிருந்து, ‘லாக்கப்பில்’ இருந்து வெளியே கொண்டுவரப்பட்ட சவத்தோடு நடந்து சென்ற இராமச்சந்திரன், இன்று முதலமைச்சராக இருக்கிற ஒரு காரணத்தால், அழித்துவிட முடியும் என்று கற்பனை காணலாம் என்று யாராவது என்னுகிறீர்களா? எண்ணுவதற்கு நியாயம் இருக்கிறது என்று நம்புகிறீர்களா? அந்த எண்ணம் இந்த அரசைப் பொறுத்தவரையில் சிறிதும் கிடையாது.

ஒரு கொள்கையைப் பற்றி நாம் ஒட்டுமொத்தமாக நினைத்துப் பார்ப்போமானால், பெரும்பான்மை, சிறுபான்மை என்று பார்க்கிறோம், பெரும்பான்மை என்று ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறோமே தவிர, சில நேரங்களில், சில இடங்களில் பெரும்பான்மையினருக்குப் பாதுகாப்பு இல்லாமல், சிறுபான்மையினருக்கு மட்டும் பாதுகாப்பு போகிறது என்று “இது நியாயமா” என்று அந்த ஊர்க்காரர்கள் கேட்டால், பதில் சொல்லமுடியாமல் இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் கூறிக்கொள்கிறேன். அதிகமாக, ஆழமாக, இதிலே உள்ளே செல்ல விரும்பவில்லை. ஆனால், ஒன்றை நான் நிச்சயமாகச் சொல்லிக்கொள்கிறேன். பெரும்பான்மை என்ற காரணத்தாலே சிறுபான்மையை அழிப்பது ஜனநாயகத்திலே அதன் வேலையல்ல. முறையுமல்ல! ஜனநாயகம் என்பது இன்றைய தினம், ஒரு கொள்கையை ஏற்று மக்களே மாற்றி அமைத்து அவர்களை அனுப்பி ஆட்சியிலே உட்கார வைத்தார்கள். நாளையதினம் வேறு சிலரை மாற்றி அனுப்புகிற ஜனநாயக உரிமை இந்த நாட்டிலே இருக்கிறது.

இதற்காகத்தான் முதலிலே உங்களுக்கெல்லாம் தெரிந்ததை, நானும் ஓரளவு புரிந்துகொள்ள முயன்றிருக்கிறேன் என்ற வகையிலே சில கருத்துக்களை எடுத்துச் சொன்னேன். ‘நக்சலைட்டுகள்’ எப்படி உருவாக்கப்படுகிறார்கள்? இந்தச் சமுதாயத்திலே தங்களுக்குக் கிடைக்க வேண்டியதைப் பெறமுடியாமல் போய்விடுகிறபோது, தகுதியினைப் பெற்ற சில இளைஞர்கள் அதை பெறுவதற்குப் போராடுகிறார்கள்! அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிற முறை, இந்த நாட்டிற்கு ஒவ்வாத முறை! ஜனநாயகத்திற்கு ஒத்து வராத முறை என்பதை நான் முதலிலேயே

சொன்னேன். அங்கேதான் நான் எனது கருத்தைச் சொல்கிறேன். எந்த ஒரு தனிப்பட்ட கட்சியும் வன்முறையை ஆதரிக்க முடியாது என்பதில் சந்தேகம் இல்லை; ஜனநாயக நாட்டிலே, இந்தியாவிலே, அதிலும் தமிழகத்திலே மக்கள் அதற்கு ஒருபோதும் இடம் தரமாட்டார்கள்;அவர்களுக்குச் சாதகமாக மக்கள் இருக்கமாட்டார்கள். அத்தனைபேரும், உள்ளே இருப்பவர்களும், வெளியே இருப்பவர்களும் நிச்சயமாக இதிலே இறங்கக்கூடாது; இறங்கமாட்டார்கள் என்பது தான் என்னுடைய எதிர்ப்பார்ப்பும், வேண்டுகோளும் ஆகும்.

ஆனால், அதோடு நான் நின்றுவிடவில்லை. இங்கே எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் சொன்னதுபோல ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். யாரையாவது கண்டுபிடித்து, அவரை ‘நக்சலைட்’ என்று சொல்லி, அவருக்குத் தண்டனை விதித்து, தீர்ப்பளிக்கின்ற உரிமையையும் காவலர்களே எடுத்துக் கொள்கின்றார்கள் என்று சொல்லும்போதுதான், அதற்குத் தனியாக வழக்கு நடைபெறுகிறது; நடத்தப்படும் என்பதையும் நான் பலமுறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். இப்பொழுதும் அதைத்தான் சொல்கிறேன். பல வழக்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆனால், நடைபெற்ற வழக்குகள், ராஜன் போன்ற வழக்குகள் எல்லாம் என்னவாயின என்பதை நாம் பார்க்கின்றோம், சீராளம் வழக்கு என்ன ஆகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, வழக்கு விளைவுகளிலே மட்டும் நாம் நம்பிக்கை வைத்தால் போதாது. வாழ்க்கையிலும் நாம் நம்பிக்கை வைக்க வேண்டியிருக்கிறது!.

அந்த வகையில், நக்சலைட்டை எடுத்துக்கொள்வோம். ஒரு காவல்துறை அதிகாரி இறந்தார். நான் சென்றேன் வேலூருக்கு. இரண்டு குழந்தைகள், அந்த அம்மையார், அவர்களைப் பார்க்கும்போது எவ்வளவு வேதனை இருந்தது என்பதையும், அதுபோல மறைந்துவிட்ட, காவல்துறையைச் சேர்ந்தவர்கள் இன்னும் எத்தனைபேர் என்பதையும் எண்ணிப்பார்த்தால், அவர்களுக்கும் பரிவு காட்ட, ஆதரவு தர, உரிமை பெற்றுத்தர ஓர் அமைப்பு வேண்டாமா? சங்கம் கேட்கின்றார்களே, சங்கத்தைக் கேட்ட பிறகு, அந்தச் சங்கத்திற்கு முழு உருவம் கொடுக்க முடியவில்லை, தாமதம் ஆகிறது என்ற வருத்தம் ஏற்படுகிறதே, இவற்றையெல்லாம் எண்ணிப் பார்ப்பீர்களானால், அவர்களுடைய எண்ணம் தியாகமாக நமக்குத் தோன்றாதா? அவர்களுக்கு அந்த உரிமை இல்லையா? தொழிலாளர்கள் கேட்கின்ற அந்த உரிமை காவலர்களுக்கு கிடைக்கக் கூடாதா? நக்சலைட்டுகளுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சி, ஏமாற்றத்தாலே இருக்கிற சாதாரணமாக காவல்காரர், போலீஸ்காரர் என்கிறோமே, அவர்களுக்கு வராதா?அவர்களது பிள்ளைகளுக்கு வரக்கூடாதா? மருமகனுக்கு வரக்கூடாதா? மருமகளுக்கு வரக்கூடாதா? பேரனுக்கு வரக்கூடாதா? ஏன், பெண் சமஉரிமைப் பற்றி பேசுகிறோமே, பெண்ணுக்கு வரக்கூடாதா? இப்படி உரிமைப் பிரச்சினைகள் வரும்போது, இதற்கெல்லாம் ஒரே பதில், வன்முறையில் இறங்குவதுதான் என்ற நிலைமை நாட்டிலே இருக்குமேயானால், அதை நாம் கண்டிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோமே தவிர, பாராட்ட வேண்டியவர்களாக இல்லை.

அந்த வகையில், மாண்புமிகு நெடுமாறன் அவர்களுக்கும், என்னிடம் அறிக்கை தந்திருக்கிற குமரி அனந்தன் அவர்களையும், என்னோடு விவாதித்திருக்கின்ற ஆண்டித்தேவர் அவர்களையும், மற்றவர்களையும் நான் நன்றியோடு பாராட்டி, அவர்கள் இவைகளுக்கெல்லாம் ஒத்துழைக்க தயாராக இல்லை என்பதையும், இப்படிப்பட்ட ஒரு கொள்கை என்ற நிலைமையில் இருப்பவர்கள், இந்த எண்ணத்திற்கு ஆளாக்கப்படாத வகையில், அவர்களுக்கு வாழ்க்கையில் என்ன உத்தரவாதம் தரப்போகிறோம்? என்ன முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்? என்றால், இங்கே ஒவ்வொருவரும் சொல்கிறார்களே, அவர்களுக்கெல்லாம் நான் சொல்கின்ற பதில், நாம் திட்டம்போட்டு என்ன, என்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ, அவைகளை நிறைவேற்றுவதற்கு நமக்கு வாய்ப்பிருந்தாக வேண்டும்.

365 நாளும் தடை உத்தரவா என்று இங்கே கேட்டார்கள். பெயரைச் சொல்ல வேண்டுமென்று நான் விரும்பவில்லை. 365 நாள் போதாது போராட்டத்திற்கு என்று வந்துவிட்டால், தடை உத்தரவு இல்லாமல் என்ன ஆகும்?. நான் நிலைமையைச் சொல்கிறேன். 'நக்சலைட்' என்ற பிரச்சினையை விட்டுப் போய்விடுகிறேன் என்று நினைத்துவிட வேண்டாம். அந்தப் பிரச்சினையை முழுமையாக நான் முடிக்க வேண்டுமென்று கருதுகிறேன். மற்றவைகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லாவிட்டாலுங்கூட, பிறகு கேட்பார்கள், வாய்ப்பிருந்தால், அவற்றிற்கு நான் பதில் சொல்கிறேன். ஆனால், ஒன்றை நான் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு மடாதிபதி பேசுகிறார். 'கிறிஸ்தவர்கள் தந்த பணத்தை வைத்துக்கொண்டு இந்துக்கள் கோயில் கட்டி விடக் கூடாது. அதைப்பழுது பார்த்து விடக்கூடாது'', என்று. இது தேவையா? இது ஒற்றுமையை உருவாக்குகின்ற நிலைமைதானா? ஒரு மடாதிபதிதான். அவர் மடாதிபதி என்ற காரணத்தால் அவர் அதைச் சொன்னால் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நியதி இருக்கிறதா? அதற்கு துணை போகின்றவர்களை நாம் எப்படி வாழ்த்த முடியும்? இதற்குத் துணை நிற்கின்றவர்களை எப்படி நாம் ஏற்றுக் கொள்ள முடியும்? அந்தப் பணத்தைப் பெற்று அவர்கள் உதவிசெய்துவிடக்கூடாது. அதை இந்த அரசு அனுமதிக்காது. அது எந்த மதத்தை தடை விதிக்கின்ற முழு உரிமை எங்கே இருக்கிறது என்பது சட்டம் படித்தவர்களுக்குத் தெரியும். எவ்வளவு பிரச்சினைகள் உருவாகும் என்பது தெரியும். ஆனால், எந்தெந்த வகைகளில் தடைகளை உருவாக்க முடியுமோ, அவர்களுடைய செயல் முறைகள் வளர்வதற்கு இடம் கொடுக்காமல் தடுக்க முடியுமோ, அதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்துணை கட்சித் தலைவர்கள், கட்சிகளைச் சேர்ந்தவர்களுடைய ஒத்துழைப்போடு நிறைவேற்ற முடியும் என்ற நம்பிக்கை, இந்த தமிழக அரசுக்கு இருக்கிறது என்பதை, நான் மனப்பூர்வமாக சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்!.

அத்தகைய நிலைமைகளை நாம் உருவாக்கும் பொழுது அவர்கள் என்ன செய்கிறார்கள்? வெடிகுண்டு தயாரிக்கும் நிலைக்குப் போகிறார்கள், கோயில்கள்

மீது வெடி குண்டைப் போட்டால் கோயிலை இடித்து விடலாம். ஆனால் கோயிலை நம்புகின்ற மக்களுடைய மனத்திலேயிருக்கின்ற நம்பிக்கையை எப்படிப் போக்க முடியும்? புதிய கோயிலைக் கட்டுவதற்கு அவர்களால் முடியாதா? வீட்டிலே கூடத்திலோ, அறையிலே ஒரு படத்தைமாட்டி அவர்கள் கும்பிட முடியாதா? ஆகவே அதிலே வெற்றி பெறுவது முடியாது. அது போலத்தான் 'நக்சலைட்டுகளும்'. எப்படி பலாத்காரத்தைக் கொண்டோ, மற்றவர்களைப் பயமுறுத்தியோ தங்கள் மதத்தை வளர்க்க அனுமதிக்கக் கூடாது என்ற கொள்கையை, நாம் வைத்துக் கொண்டிருப்பதைப் போல, அதைச் செய்யமுடியாதோ, அனுமதிக்க முடியாதோ, அதுபோல பலாத்காரத்தைக் கொண்டு, வன்முறையைக் கொண்டு யாராக இருந்தாலும், தங்கள் கொள்கையைத் தமிழகத்தில் நிலை நிறுத்துவதற்கு, வளர்ப்பதற்கு, அதையே உரிமையாக ஆக்கி இந்த நாட்டு மக்களை அச்சுறுத்தி, ஒரு சில பலர் ஆட்சியிலே உட்கார்ந்து கொண்டு, அந்த நிலையை அடையலாம் என்ற ஆசைக்குத் தள்ளப்படுவதற்கு இந்தச் சமுதாயம் ஒத்துக்கொள்ளாது என்ற நம்பிக்கையில் நான் பேசுகிறேன். அதை இந்த அரசும் அனுமதிக்காது. அது எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அது ஹிந்து முன்னணியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி—ஒரு போஸ்டரை வைத்துதிருக்கிறேன்—ஹிந்து நாடு என்கிறார்கள், அதை நாம் எப்படி அனுமதிக்கப் போகிறோம்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்து மதத்திலே இருக்கின்றவர்கள், அவர்கள் விருப்பப்படி எங்கும் செல்ல முடியாது என்ற நிலைமை ஏற்படுத்தப்படுமானால், அதை கவனித்து ஆவனசெய்ய வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. அந்த இந்துமத நம்பிக்கை உள்ளவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டியது, ஒரு ஆட்சியிலே இருக்கின்றவர்களுக்கு அந்த நம்பிக்கை இருக்கிறதோ, இல்லையோ அதைச் செய்து தர வேண்டிய கடமையிருக்கிறது என்பதை நாங்கள் உணர்கின்றோம்.

மாண்புமிகு அறநிலையைத் துறை அமைச்சரைப் பற்றி இங்கே சில குறைபாடுகளை வெளியிட்டிருக்கின்றார்கள். அதை எடுத்துக் காட்டியதற்காக மகிழ்ச்சியடைகிறேன். பேசப்பட்டவைகள் என்னென்ன என்பதைப் பற்றி இன்னும் நான் அவரோடு பேசவில்லை. சில சமயம் பேசப்படுவது வெளியிடப்படும் பொழுது இருபொருள்கள் பொதிகின்ற விதத்தில் எழுத ஆரம்பித்தால், கடைசியில் ஒரு தலைபட்சமாகச் செய்தி வெளிவருகிறது என்பதை, நாம் உணர்ந்திருக்கின்றோம். நானும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். ஆகவே, சொல்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்தத் தமிழக அரசைப் பொறுத்தவரையில், எந்த ஜாதிக்காகவும், எந்த மதத்திற்காகவும் எங்களுடைய கொள்கையை நாங்கள் விட்டுக் கொடுக்கத்தயாராக இல்லை என்பதையும், அது அறிஞர் அண்ணாவின் கொள்கை என்பதையும், நான் இங்கே தெளிவுபட சொல்ல விரும்புகிறேன். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற நம்பிக்கையை இந்தக் கட்சி தன்னுடைய செயல் முறைகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் என்பதை, நான் இங்கே வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தகராறுகள் எங்கே முளைக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும் 'நக்சலைட்டுகளைப்' பற்றிச் சொல்வதை, நான் இன்னும் விட்டுவிடவில்லை! பின்னாலே வருகிறேன். இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள், நீங்கள் இலைகளையும், கொம்பையும் தான் வெட்டியிருக்கிறீர்கள், ஆணிவேரை உங்களால் அகற்ற முடியாது; அடிமரத்தை வெட்ட முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவரைப் பொறுத்தவரையில் நகச்லைட்டுகள் வேறு வகையிலே இருப்பார்கள் இருக்கிறார்கள், மீண்டும் துளிர் விடுவார்கள், அதற்குத் தண்ணீர் ஊற்றுவோம் என்று அவர்கள் சொல்லவில்லை என்றாலும், அம்மரத்திற்குத் தண்ணீர் ஊற்றக்கூடிய வகையில்தான் அவருடைய பேச்சு இங்கே இருந்திருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லியாக வேண்டிய நிலைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு நண்பர் ரமணி அவர்கள், இந்த அளவுக்கு விளக்கம் தந்ததற்கு நன்றி. ஆனால், ஒன்றை நான் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். வெட்டப்படவில்லை, அழிக்கப்படவில்லை! அந்த விஷ விருட்சம் அப்படியே இருக்கின்றது என்பதை அவர்களே ஒப்புக்கொள்கிறார்கள். அந்த விஷ விருட்சத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய அடுத்த தாக்குதல் என்ன? நீங்கள் கொள்கை என்று சொல்லுங்கள். நாங்கள் இந்த நாட்டின் சமுதாய அமைப்பு என்று சொல்லுகிறோம். இந்த நாட்டினுடைய சமுதாய அமைப்பை மாற்றுவதற்கு நாம் என்ன செய்யப்போகிறோம்?, அதற்கு அனைத்துக்கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ன முடிவெடுக்கப்போகின்றோம்?, எந்த விளைவுகளை உருவாக்கப்போகின்றோம்? என்பவைதாம், தற்போது நம் முன்னாலே உள்ள கேள்வி. கிளையை வெட்டிவிட்டீர்கள்; இலையை உதிர்த்துவிட்டீர்கள்; ஆனால், மரம் இருக்கின்றது, வேர் இருக்கிறது! என்று சொன்னால், அப்படிப்பட்டவர்கள் இன்னமும் தோன்றுவார்கள் என்பதுதான் அதன் பொருள். அல்லது தோற்றுவிப்பவர்கள் இருக்கிறார்கள் என்று பொருள். ஆணிவேர் அடிப்பகுதி என்றால், கிளையை வெட்டிவிட்டால், மீண்டும் மலரும் என்பதற்கு ஆணிவேர் இருக்கிறது என்று பொருள். ஆகவே, தூண்டி விடுபவர்கள், அதை உருவாக்கிவிடுபவர்கள் இன்னும் இருக்கிறார்கள். அது ஆந்திராவிலும் இருக்கலாம். அசாமிலும் இருக்கலாம், திரிபுராவிலே இருக்கலாம், அல்லது கேரளாவிலும் இருக்கலாம் அல்லது கர்நாடகத்திலே இருக்கலாம். தமிழகத்திற்கும் வந்திருக்கலாம்.

ஆனால், உண்மையிலேயே இது இருக்கிறது என்றால், அதைக் களைய, நாம் என்ன செய்யப்போகிறோம்? எத்தனை நாட்களுக்கு இதையே, பணியாக நாம் வைத்துக்கொண்டிருப்பது? காவல்துறையினரை வைத்து அவர்களுடைய நடமாட்டங்களைத் தடுப்பதுதான் வேலையாக இருக்குமானால், அந்தக் காவல்துறையை வேறு பணிகளைச் செய்வதற்கு நாம் பயன்படுத்த வேண்டாமா? வன்முறையாளர்களை தேடிக் கண்டுபிடிப்பதும், அவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தருவதுமே, அவர்களது முழுநேரப் பணியாகி விட்டால், அவர்களுக்குரிய பிற

பணிகளை யார் மேற்கொள்வது ? இந்த அரசு என்னதான் செய்ய இயலும் ? எண்ணிப் பார்க்க வேண்டாமா ?

ஒரு வேளை நான் நினைவு சரியாக பேசுகிறேன் என்று இருக்குமானால், அதாவது மறதி இல்லை என்று இருக்குமானால், சிறையிலே இருந்த ஒருவரைப் பற்றி நமது மாண்புமிகு உமாநாத் அவர்கள் என்னிடம் பேசியபோது அவர் அப்போது 'நக்சலைட்டாக' இல்லை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்துவிட்டார்கள், ஜனநாயக முறையிலே அவர்களுக்கு நம்பிக்கை வந்திருக்கிறது, ஆகவே, அவர்களை அப்படி நீங்கள் சிறையிலே வைத்து, அந்த வகையிலே கவனிக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டது எனக்கு நினைவு இருக்கிறது. அதிலே மாற்றம் செய்ய முயன்றோம் என்பதும், சிலரை வெளியே செல்ல அனுமதி கொடுத்தோம் என்பதையும் கூட, இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சமுதாயத்திலே இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை அகற்றியாக வேண்டும். அதற்குத் திட்டங்கள் தீட்டியாக வேண்டும். வங்கத்திலே நடக்கிறது. திரிபுராவிலே நடக்கிறது. வங்கத்தில் சுடப்படவில்லையா ? துப்பாக்கிச்சூடு நடைபெற்றதேயில்லையா ? டெல்லியிலே நடைபெற்றதேயில்லையா ? உத்திரபிரதேசத்திலே நடைபெற்றதேயில்லையா ? கொள்ளையர்கள் என்று சொல்லலாம்; திருடர்கள் என்று சொல்லலாம்; கயவர்கள் என்று சொல்லலாம், கயவாளிகள் என்று சொல்லலாம்; அல்லது தீ வெட்டி கொள்ளையடிப்பவர்கள் என்று சொல்லலாம்; எந்தப் பேரை எதற்குச் சொன்னாலும், அவர் செய்கின்ற முறைகள் என்ன, ஒரு பெண் போகும்போது, அவரது மூக்கை அறுத்து, அந்த மூக்குத்தியை எடுத்துக்கொண்டுபோவது என்பது ஏழ்மையை நீக்குவதற்கு ஒரு வழி என்று யாராவது சொன்னால் ஒத்துக்கொள்ள முடியுமா ? ஒரு பெண்ணைக் கொன்றாவது, அந்தப் பெண்ணினுடைய கழுத்திலே இருக்கின்ற சங்கிலியை எடுத்துக்கொண்டு போக வேண்டுமென்று கருதினால், அது சமூகத்தின்மீது கோளாறு என்பதற்காக, அந்தக் குற்றத்தைச் செய்தவர்களை விட்டு வைக்க முடியுமா ? குழந்தைகளை போகக் கூடாத இடத்திற்குப் போகாதே என்று சொல்லுகிறோம். மீறிப் போகும்போது இழுத்துக்கொண்டு வந்து உட்கார வைக்கிறோம். அதற்கு நடக்கத் தெரிந்தபோது, நெருப்பிற்குப் பக்கத்திலே போனால் சுடும் என்று சொல்லி வைக்கிறோம். சுட்டாலும் பரவாயில்லை என்று போகுமானால், கொஞ்சம் அதட்டுகிறோம்! பிறகு அடிக்கிறோம். அங்கு அதுகூட தேவைப்படுமானால், அதுபோலத்தானே போலீஸ் நடவடிக்கையும். தான் செய்கின்ற குற்றத்தை உணர்ந்து ஒரு குற்றவாளி திருந்துவதற்குத்தானே தவிர, இப்படி நீங்கள் சொல்வது போல், சமுதாயத்திலே இருக்கின்ற சூழ்நிலையால் உருவாக்கப்பட்ட ஒரு கொள்கையின் சொந்தக்காரர்களை அழித்துவிடுவோம் என்பதற்காக அல்லவே!. கொள்கையைப் பார்த்தால், அமரர் அண்ணா அவர்கள் திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்வார்கள். நானும் சொல்கிறேன். அதை எனதுள்ளத்தில் பதித்து வைத்துள்ளேன். "ஒரு கத்தியைக் கொண்டு ஆயிரம்

பேர்களைக் கொல்ல முடியும்;. ஆனால், ஆயிரம் கத்திகளை வைத்துக்கொண்டுகூட ஒரு மனிதனுடைய உள்ளத்திலே இருக்கின்ற நம்பிக்கையைப் போக்கிவிட முடியாது''! என்று அமரர் அண்ணா அவர்கள் ஒரு நாடகத்திலே இதைச் சொல்லுவார்கள். ''அதைப் பிரசாரம் செய்''! என்றார்கள். ''நாட்டிலே இந்தக் கொள்கையைப் பரப்பு!'' என்று சொன்னார்கள். அதைத்தான் நாம் செய்ய வேண்டுமே தவிர, வெறும் கத்தியால் எதையும் செய்ய முடியாது என்று நான் சொல்கிறேன். 'கத்தியைத் தீட்டாதே, புத்தியைத் தீட்டு!' என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் இதைச் சொன்னார்கள்? நாம் இன்று கேட்பது அதுதான். நாம் எல்லோரும் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ளதாகச் சொல்லுகிறோம். ஒரு நாள், இங்கே நண்பர் உமாநாத் அவர்கள் வேடிக்கையாகச் சொன்னார்கள். நான் அண்டர் கிரவுண்டுக்குப் போனால், என்னைக் கண்டுபிடிக்க முடியாது என்று, அது உலகத்திற்கே தெரிந்த விஷயம் . ஆகவே, இங்கே இருக்கின்ற பிரச்சினை, நாம் ஜனநாயகத்தை நம்புகிறோமா? அல்லது பழி வாங்குவது, ஆளை ஒழிப்பது என்ற கொள்கையைத்தான் பற்றி நிற்கப்போகிறோமா? இந்தக் கேள்வியை மக்கள் முன் வைக்க வேண்டும்.

ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஒதுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், திறமை இருந்தும் வாய்ப்புக் கிடைக்காமல் இருப்பவர்கள், உழைத்தும் தேவையான ஊதியம் பெறமுடியாமல் அவதிப்படுகிறவர்கள், இவர்களைப் பற்றி நாம் என்ன நினைத்தாலும், அவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி இதுதான். நீங்கள் வேட்டையை நம்புகிறீர்களா, அல்லது வோட்டை நம்புகிறீர்களா, என்று அமரர் அண்ணா அவர்கள் கேட்டதுபோல, எதன்மேல் நம்பிக்கை வைக்கின்றீர்கள்? இதைத்தான் நான் இந்த மாமன்றத்தில் கேட்க விரும்புகின்றேன்.

'நக்சலைட்டு'க்களைப் பொறுத்தவரையில், அவர்கள் கொள்கையைப் பிரச்சாரம் செய்யட்டும், அவர்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்லட்டும், மக்கள் முன் வரட்டும், மக்களுக்குத் தங்களுடைய நிலைமைகளைப் படம் பிடித்துக் காட்டட்டும், அதன்மூலம் மக்கள் மனதை மாற்றட்டும். ஆனால், மடாதிபதிகளைப் போல அவர் சொன்னார், அந்தப் பணத்தை வாங்கி இந்த ஜாதிக்கு, மதத்துக்கு செய்யக்கூடாது, இந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள் தருகின்ற பணத்தைக் கொண்டு அந்த ஜாதிக்கு உதவி செய்யக்கூடாது என்று சொல்வதையெல்லாம் நிச்சயமாக நாம் அனுமதிக்க முடியாது என்பதை திட்டவட்டமாகச் சொல்கிறேன்! அந்த வகையில், இந்த அரசு வேட்டையை நம்பவில்லை. வோட்டைத்தான் நம்புகிறது. அந்த வழியிலேதான் இது செயல்படுகிறது என்று சொல்லும்போது, ''நக்சலைட்டுகளைத்'' திருத்த வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கம், அதற்குப் பல திட்டங்கள் தீட்டிக்கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். போலீசாருக்கு இவ்வளவு பெரிய வக்காலத்து வாங்குகிறாரே என்றால், எனது இலாகா என்பதற்காக அல்ல. அவர்களும் மனிதர்கள்தான் என்பதை தயவு செய்து நாமனைவரும் உணர வேண்டும்.

துப்பாக்கியை எடுத்து சுட்டுவிட்டு வீட்டுக்குப் போகும்போது ஒரு வேளை தன்னுடைய மகன் அந்தக் கூட்டத்திலே இருந்து இறந்துவிட்டான் என்றால், அந்தத் தந்தையினுடைய எண்ணம் அவருடைய உள்ளம் எப்படி இருக்கும்? என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சுடுவதால், அடிப்பதால், அவர்களுக்கு எந்த மகிழ்ச்சியும் இல்லை. ஆனால், அவர்களுக்குக் கிடைக்கின்ற நன்மை என்ன ?இங்கே சொன்னார்கள் கலைஞர் அவர்கள் எங்களுடைய காலத்தில் நாங்கள் எவ்வளவு சம்பளத்தை உயர்த்தினோம் என்றெல்லாம் சொன்னார்கள். நாங்கள் எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறோம் என்பதையும், இந்த நாடு, நன்கு அறியும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

இப்போதுதான் நினைவுக்கு வருகிறது – நேற்றைய தினம் பேசும்போது கலைஞர் அவர்கள் கேட்டார்கள். சோவியத் எப்படி இருக்கிறது என்று. தகவல் வரவில்லை என்று சொன்னேன். ஆனால், பத்திரிக்கையைப்படித்தேன். அதில் வேறு ஒரு தகவல் வந்திருக்கிறது. சமுதாயத்திலே பெண்கள் இந்தத் திருமணத்திற்காக விற்கப்படுகின்றார்கள். பணத்தையும் கொடுத்து, அந்தக் கொடுமைகள் இங்கே இருக்கின்றன என்று பேசுகிறோமே, இதேபோன்று ஒரு கொடுமை அங்கேயும் நடந்திருக்கிறது என்று இங்கே சொன்னால், யாரும் திகைப்படைய மாட்டீர்கள் என்று நம்புகிறேன்.

'தினமலர்' பத்திரிக்கை சென்னை 27.03.1982 இல் வந்திருக்கிறது. ரூ.25,000 பணத்திற்கு பெண் விற்பனை என்று வந்திருக்கிறது. ரஷ்யாவில், மத்திய ஆசிய பகுதியில் ஒரு இளம் பெண்ணை 2000 ரூபிள் (ஏறத்தாழ 25,000 ரூபாய்) பரிசுப் பணத்திற்கும் 40 ஜோடி கை உறைகள், ஒரு பசு, இரண்டு ஆடுகள், 12 கைக்குட்டைகள், 60 மீட்டர் துணி மற்றும் இரண்டு மூட்டை அரிசி ஆகிய பொருள்களுக்கு விற்றுவிட்டார்கள். அதற்காகப் பெண்ணின் பெற்றோர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. என்ன நடந்திருக்கிறது என்றால், இதையெல்லாம் கொடுத்துவிட்டார்கள். ஆனால் அந்தப் பெண் அங்கே வாழ விரும்பவில்லை. திரும்பிச் சென்றால், பெற்றோர்கள் சொல்கிறார்களாம், "உன்னை நாங்கள் ஏற்றுக்கொண்டோம் என்றால், இந்தப் பணத்தை எல்லாம் திருப்பிக் கொடுக்க வேண்டும். இந்தப் பொருள்கள் எல்லாம் எங்களிடம் இல்லை. ஆகையால் நீ அங்கே போய் இரு" என்று. சிக்கல்கள் பெரிதாக வெளியே வந்த பிறகு, அந்தத் தாய் தந்தையருக்கு தண்டனை தரப்பட்டிருக்கிறது என்று இந்தப் பத்திரிக்கையில் போட்டிருக்கிறார்கள். இங்கேயும் சில பிரச்சினைகள் உண்டு!

காவல் துறையினருக்கு இந்த அரசு வந்த பிறகு என்னென்ன செய்தோம் என்பதை கொஞ்சமாவது சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய கடமையாகும். ஏவல்முறை ஒழிக்கப்படவில்லை என்று மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இங்கே சொன்னார்கள் என்று கருதுகிறேன். அது ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதும், அதற்காக இவ்வளவு ரூபாய்க்குள், இவ்வளவு சம்பளம் கொடுத்தோ அல்லது சொந்தத்திலோ

கொடுத்து வேறு நபரை வைத்துக்கொள்ளவேண்டும். காவல்துறையிலே இருந்து எடுத்துக்கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டு இருக்கிறோம்.

மாவட்ட தலைநகரங்களிலே பணியாற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கும், சிறப்புப் பணியாளர்களுக்கும் வீட்டு வாடகைப்படி 50 ரூபாய் வீதமும், மற்ற இடங்களில் பணியாற்றுகின்றவர்களுக்கு ரூ.30 என்ற அளவிலும் 1.08.1980 முதல் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமணமான தமிழ்நாடு சிறப்புக்காவல் பணியாளர்கள் வேறு குடியிருப்பில் வசித்து வந்தாலும், அவர்களுக்கும் உரிய வீட்டு வாடகைப்படி பெறும் சலுகையை அளித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதைப்போலவே, பல்வேறு நன்மைகளை நாங்கள் செய்து இருக்கிறோம். இன்ஸ்பெக்டரானால் மாதத்திற்கு ரூ.20 என்றும், இந்திய காவல்பணி கண்காணிப்பாளர்கள், கூடுதல் கண்காணிப்பாளர்கள், உதவி கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு ரூ.30 என்றும் உயர்த்திக்கொடுத்து இருக்கிறோம்.

இங்கே காவலர்களுக்கு சம்பள உயர்வுபற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்தபோது ரூ.150–225 என்று ஆக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் 1978 இல் அவர்களுக்கு ரூ.150–225 என்பதை மாற்றி ரூ.250–450 என்று உயர்த்தப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவலர் நிலை – ரூ.200–300 என்று இருந்ததை ரூ.325–550 என்று உயர்த்தி இந்த ஆட்சி கூடுதலாக்கியது. தலைமைக்காவலருக்கு ரூ.210–325 என்று இருந்ததை, ரூ.350–600 என்று ஆக்கியது. உதவி ஆய்வாளர்கள் ரூ.300–500 என்று இருந்ததை ரூ.450–800 என்று உயர்த்தியது. ஆய்வாளர்களுக்கு ரூ.425–700 என்று இருந்ததை ரூ.600–1,050 என்று ஆக்கியது.

என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சில அறிவிப்புகளை சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

காவல்துறையைப் பொறுத்தவரையில், அவர்களுடைய ஊதியம் எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, அவர்களுக்குத் தேவையான ஊதியத்தை உயர்த்தி, அவர்கள் யாருடைய குற்றச்சாட்டுக்கும் ஆளாகாமல் வாழவேண்டிய நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது, அரசின் கொள்கையாகும். அதைப்போலவே சில பதவிகளை நீக்கி, அதிலே உள்ள தடைக்கற்களை அகற்றி, அதோடு 10 ஆண்டுகாலம் 12 ஆண்டுகாலம் ஆனால் தான் பதவி உயர்வு என்ற நிலைமையை மாற்றி அமைக்க, இந்த அரசு விரும்புகிறது. அத்தகைய ஒரு கொள்கையை இந்த அரசு கடைப்பிடிக்க விரும்புகிறது. அந்த வகையில், கொள்கையை நான் கோடிட்டுக் காட்டி, மக்கள் விரும்புகிற வகையில், அவர்கள் மகிழ்ச்சி அடைகிற வகையில், அவர்கள் இந்த அளவிற்கு எங்களுக்குப்

போதும் என்ற அளவில் ஒரு சம்பள விகிதத்தைக்கொண்டு வர நாங்கள் நினைத்து சிலபல திட்டங்களைத் தீட்டிக்கொண்டு இருக்கின்றோம். அந்த முறையில், இப்போது நான் சில திட்டங்களை வெளியிட விரும்புகிறேன்.

காவல் துறையின் துணை ஆய்வாளர் பதவிகளைத் தரம் உயர்த்த வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. காவல் துறையில் துணை ஆய்வாளர் பதவிகள் 1971ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டன. உதவி ஆய்வாளர்கள் துணை ஆய்வாளர்களானவுடன் ஆய்வாளர் பதவி உயர்வு கிடைக்கிறது. எனவே, அவர்கள் பணியாற்றும் பகுதிகளின் நிலைமைகளை முழுவதுமாகக் கண்டறியுமுன்னர் பதவி உயர்வு பெற்றுச் சென்றுவிடுகின்றனர். ஆதலால், இவர்கள் தங்கள் பதவிகளில் முழுக் கவனத்தைச் செலுத்த இயலவில்லை.

அத்தோடு காவல்துறை வட்டங்களுக்கெனப் பிரத்தியேகமாகக் குற்றங்களை தடுக்கவும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கவும், நீதிமன்றங்களில் வழக்குகளைத் தீவிரமாகத் தொடர்ந்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கவும் ஓர் அமைப்பு தேவைப்படுகிறது. ஆகவே, இப்போதுள்ள 245 துணை ஆய்வாளர் பதவிகளை, ஆய்வாளர் பதவிகளாக உயர்த்த அரசு முடிவு எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனி தனியாகத் துணை ஆய்வாளர் பதவி இராது. புதியதாகப் பதவி உயர்வுபெறும் ஆய்வாளர்கள் இனி வட்ட ஆய்வாளர்கள் என அழைக்கப்படுவார்கள். குற்றங்கள் பற்றிய எல்லா பொறுப்புகளும் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் இளம் உதவி ஆய்வாளர் பதவிகளை, உதவி ஆய்வாளர் பதவிகளாக உயர்த்த வேண்டும் என்றும் அரசு முடிவெடுத்திருக்கிறது. இப்போது 825 இளம் உதவி ஆய்வாளர் பதவிகள் உள்ளன. காவல் நிலையங்களிலும், வட்டங்களிலும் பணியாற்றும் காவல்துறையினர் தங்களின் பெரும்பாலான நேரத்தை சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதில் செலவிட நேரிடுகிறது. ஆகவே, குற்றங்களுக்கெனத் தனிவட்டங்கள் அமைப்பதெனவும், அவ்வாறு அமைக்கப்படும் வட்டங்களில் உள்ள ஆய்வாளரின் கீழ், உதவி ஆய்வாளர் பதவி தேவையெனவும் அரசு கருதுகிறது. எனவே, அதற்காக இந்த இளம் உதவி ஆய்வாளர் பதவியை, உதவி ஆய்வாளர் பதவியாக உயர்த்துவது என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. அந்த வகையில், இந்த இடைநிலைப்பட்ட இளம் உதவி ஆய்வாளர் பதவிகளை நீக்கிவிட்டு, தற்பொழுது பணியாற்றும் 825 இளம் உதவி ஆய்வாளர் பதவிகளையும், உதவி ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தி, அவர்களைப் பெரிய மற்றும் முக்கிய காவல் நிலையங்களில், இரண்டாவது உதவி ஆய்வாளர்களாகவும், புதிதாக தோற்றுவிக்கப்பட இருக்கும் காவல் குற்ற வட்டங்களில் பணியாற்றவும் பயன்படுத்தவேண்டும் என்றும், அரசு முடிவு எடுத்துள்ளது.

அடுத்ததாக, பொதுமக்களுக்கும் ஒரு எண்ணத்தை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் குற்றங்களைக் கண்டுபிடிக்கிறபோது, பொதுமக்களுக்கும் நன்மை பயக்கும்படியாக செய்யவேண்டும் என்ற ஒரு எண்ணம் அரசுக்கு இருப்பதாக நான் முன்பே கோடிட்டுக் காட்டியிருக்கிறேன். இதுகுறித்து, இங்கே கூட சொன்னார்கள். அதிகாரிகள் இங்கே சொல்வதற்கு முன்பே, ஏதோ விஷயத்தை வெளியே சொல்லிவிட்டதாக! நாங்கள் வெளியிலே சொல்வதைத்தான் அந்த அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்களே தவிர, முழுமையாக எதையும் சொல்லவில்லை என்று குறிப்பிட்டுக் காட்டுவது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.

குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியில் காவல் துறையினருக்கு உதவுகின்ற பொதுமக்களுக்கு உதவியின் அளவிற்கு ஏற்ப ரூபாய் 1000 லிருந்து 5000 வரை பரிசுகள் வழங்கப்படும். அப்படி உதவி செய்கின்றபோது, காவல்துறையினருக்கு உதவி செய்கின்றவர்கள் உயிரிழக்க நேரிட்டால், அவரது குடும்பத்திற்கு ரூ.10,000/– வழங்கப்படும்.

இந்தத் தொகைகள் காவல்துறையினரின் சிறந்த பணிக்கான பதக்கம் அளிப்பு அணிவகுப்பின்போது வழங்கப்படும். இங்கே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நேற்றையதினம் மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இந்த முதலமைச்சர் பதக்கம் பற்றி ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். அதிலே 'சீப் மினிஸ்டர்ஸ்' என்று போட்டிருந்தார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பதக்கத்தைக் குறிப்பிட்டு 'போலீஸ் பதக்கம்' என்றுதான் அதற்குப் பெயர் இருந்தது. அதை 'போலீஸ் கான்ஸ்டபிள் பதக்கம்' என்று மீண்டும் சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதையும் தமிழில் மொழி பெயர்ப்பவர்கள் அதை விட்டுவிட்டார்கள் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒருவேளை முதலமைச்சர் பதக்கம் என்று சொல்வதால் முதலமைச்சர் நிதியிலிருந்து கொடுப்பதாக அவர்களுக்கு சந்தேகம் வந்ததோ என்னவோ, இந்த அரசைப் பொறுத்த வரையில், எந்த சந்தேகமும் கிடையாது. யார் அந்த பதவிக்கு வந்தாலும், தமிழ்நாடு முதலமைச்சராகத்தான் கருதப்படுகிறது. அந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, பொதுமக்களுக்கு கொடுக்கப்படும் இந்த உதவித்தொகை, அவர்களுடைய குடும்ப நிலைக்கு ஏற்ப, ஒரு மாதத்திற்குள்ளாகவே அது வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதாவது காவல் துறையினருக்கு பதக்கமளிக்கும் விழாவின் போது, இத்தகைய பரிசுகளை அளிப்பது வழக்கம். ஆனால் குடும்பங்களின் நிலையைப் பார்த்து, அவர்களுக்கு உதவி செய்யும் வகையில், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், அந்த குடும்பத்திலே வேறு யாரும் வருமானத்தை பெறக்கூடியவர்களாகவோ அல்லது தொழில்

செய்பவர்களாகவோ இல்லாத சூழ்நிலை இருந்தால், அப்படி காவலர்களுக்கு உதவி செய்யும்போது, இறந்துவிட்டவர்களின் குடும்பங்களின் நிலை கருதி, அவர்களுடைய குழந்தைகள் யாருக்காவது, தகுதியின் அடிப்படையில், வேலை கொடுக்கப்படும் .

அடுத்ததாக பொதுமக்கள் அருகில் உள்ள காவல் நிலையங்களுக்குச் சென்று தங்கள் குறைகளையும், சமூக விரோதிகள் செய்ய இருக்கும் குற்றங்களையும் நேரில் சென்று முறையிடுவதில் ஏற்படும் சிரமங்களைப் போக்கும் நோக்கத்துடன் சென்னை மாநகரில் 5 நடமாடும் காவல் பிரிவுகளை, மோட்டார் வாகன வசதிகளோடு, 'வாக்கிடாக்கி' போன்ற வசதிகளோடு அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

இப்பிரிவுகளுக்குத் துணையாக ஆங்காங்கே நடமாடும் நீதிமன்றங்களை அமைக்கும் திட்டமும் நிறைவேற்றப்படும்.

சில முக்கிய நெடுஞ்சாலைகளில் ரோந்துக் காவல் படைகளை அமைக்க இருக்கிறோம். சென்னை– விழுப்புரம், சென்னை– நெல்லூர், சென்னை –வேலூர் ஆகிய மூன்று நெடுஞ்சாலைகளில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தவும், குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கவும், மூன்று ரோந்து காவற்படைகள் ஹைவே ரோந்து ஒவ்வொன்றிலும் கீழ்க்கண்ட கூடுதல் பணியாளர்களைக் கொண்டு அமைக்கப்படும். ஆய்வாளர் –1, உதவி ஆய்வாளர்–1 தலைமைக் காவலர் – 2, காவலர்கள் (நிலை – 2) 3, காவலர் ஓட்டுநர் – 1 ஜீப்–1 இதனை இந்த ஆண்டு நாங்கள் அமல்படுத்த இருக்கிறோம்.

மதுவிலக்கை அமுல்படுத்த தற்போது மாவட்டங்களில் 21 காவல்துறை மதுவிலக்குப் பிரிவுப் படைகள் பணியாற்றுகின்றன. கள்ளச்சாரயம் காய்ச்சுதல் தீவிரமாக நடைபெறும் மாவட்டங்களில் கூடுதலாக 21 மாவட்டப் படைகள் ஏற்படுத்த அரசு தீர்மானித்துள்ளது. இந்த இடத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏதோ மகாதேவன் என்பவரைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். அவரை யாரோ எரி சாராய தொடர்பான விரோதத்தில் கொன்றுவிட்டார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டினார்கள். ஆனால், அவர்கள் வெளிநாடுகளிலே வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி பணம் வாங்கிக்கொண்டு பிறகு வேலை வாங்கிக் கொடுக்காத காரணத்தால், ஆத்திரப்பட்டு ஒருவர் அவரைக் கொலை செய்துவிட்டார். அவர் மீது வழக்கு தொடரப்பட்டு, தண்டனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி எல்லோருக்கும் தெரியும். எனவே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பத்திரிக்கைகளை நன்றாகப் படித்தால் அவர்களுக்கு உண்மை விளங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

42 ஆய்வாளர்கள், 21 துணை ஆய்வாளர்கள், 84 சார்பு ஆய்வாளர்கள், 84 உதவி சார்பு ஆய்வாளர்கள், 84 தலைமைக் காவலர்கள், 42 முதல் நிலைக் காவலர்கள், 504 இரண்டாம் நிலைக் காவலர்கள், 84 காவலர் வாகன ஓட்டிகள் பதவிகள் ஏற்படுத்தப்படும். இது தவிர 21 ஜீப்புகளும், 21 வாகனங்களும் 'பிக் அப் வேன்' வாங்கப்படும்.

தபால் தந்தி இலாக்கா, மின்வாரியம், இரயில்வே ஆகியவற்றிற்குச் சொந்தமான செப்புக் கம்பிகள் திருட்டுப்போவதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க ஒரு மாவட்ட காவல்துறை துணை அதிகாரி, ஒரு ஆய்வாளர், இரண்டு துணை ஆய்வாளர், இரண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள், ஒருகாவலர், ஓட்டுநர் ஆகியோரைக் கொண்ட சிறப்புக்குழு ஒன்றை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

சென்னை நகர போக்குவரத்து மேம்பாட்டுப் பணிகளுக்காக காவல்துறையின் மானியக்கோரிக்கையின்கீழ், இந்த ஆண்டு ரூ.25 இலட்சம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

காவல்துறையில் உள்ள 10 சதவீதம், பழைய மோட்டார் வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் 1982–1983ஆம் ஆண்டு 205 புதிய வாகனங்களை வாங்க 1,92,90,000 ரூபாய் நிதியொதுக்கம் செய்ய அரசு முடிவு செய்துள்ளது.

1982–1983இல் காவல் நிலையங்களுக்காக 200 மோட்டார் சைக்கிள்களும், காவல்நிலையத்தில் பணிபுரியும் பெண் சப்–இன்ஸ்பெக்டர்களுக்காக 50 மொபெட்டுகளும் ரூ.32.50 இலட்சம் செலவில் வாங்க, அரசு முடிவு செய்துள்ளது. காவல்துறை வானொலிப் பிரிவில் சென்னை மற்றும் மதுரை ஆகிய நகரங்களில் இயங்கி வரும் நுண் அலை நிலையங்களில் ஏற்படும் குறைகளை உடனுக்குடன் அறிந்து நிவர்த்தி செய்யவும், தகவல் தொடர்பினை மேம்பட செய்யவும், மிகவும் விலையுயர்ந்த நுண் அலைக் கருவிகளை உயர்நிலையில் பராமரிக்கவும், 'செலக்டிவ் லெவல் மீட்டர்' என்ற ஒரு சோதனைக் கருவியை சென்னை நுண் அலை நிலையத்திற்கும், 'பிரிகவுன்சி கவுண்டர் – கம் – டைமர்' என்ற இரண்டு சோதனை கருவிகளை சென்னை மற்றும் மதுரை நிலையங்களுக்கு வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இங்கே ஒன்றை நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மோட்டார் சைக்கிள் வைத்துக்கொண்டிருப்பவர்கள் பல்வேறு நல்ல காரியங்களுக்காகவும் பிறவகைத் தேவைகளுக்காகவும் அவற்றைப் பயன்படுத்தி வருகிறார்கள். ஆனால் சிலர் தவறான காரியங்களுக்காக, அதாவது கொள்ளையடிப்பதற்கும் வழிமறித்து திருடுவதற்கும், இப்படிப்பட்ட சமூகவிரோதச் செயல்களுக்கும் பயன்படுத்திக்கொண்டு வருவதையும் நாம் பார்க்கிறோம். சிலருடைய மோட்டார் சைக்கிளை திருடிக்கொண்டுபோய் அதை வைத்து திருடுவதையும் பார்க்கிறோம். போர்டு நம்பர்களை மாற்றிவைத்துக்கொண்டு இந்தக் காரியங்களை செய்வதையும் பார்க்கிறோம். அடுத்து கார்கள் காணாமல் போகின்றன. முக்கியமான கருவிகளை எடுத்துக்கொண்டு கார்களை சில இடங்களில் விட்டுவிட்டுச் சென்றுவிடுகிறார்கள் என்பதையும் பார்க்கிறோம்.

ஆகவே, இதில் அரசு ஒரு சிந்தனையில் இருக்கிறது. சீக்கிரமாக முடிவெடுத்து விடும். அது சரியான முடிவாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்போது குறிப்பிடவில்லை. காயலாங்கடை என்று அழைக்கப்படுகிறதே, அவர்கள் பெரிய

பொறுப்புகளுக்கு உள்ளாக வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு இந்த பொருள்கள், கருவிகள், இந்த இயந்திர பாகங்கள் எங்கிருந்து வருகின்றன, அதற்கு புள்ளிவிவரங்கள் இல்லை. யாரிடமிருந்து வாங்கினார்கள் ? யாரிடம் கொடுத்தார்கள் ? எவ்வளவு விலைக்கு வாங்கினார்கள் ? எப்போது வாங்கினார்கள் ? தெரியவில்லை.

அதேபோல் 'மெக்கானிக்ஸ்' என்று சொல்கிறவர்கள் இந்த நாட்டிற்கு எவ்வளவு தேவையோ, அப்படிப்பட்டவர்கள் ஒரு சிலர் சமூக விரோதிகளாக கூடச் செயல்படுகிறார்கள் என்று குற்றம் சாட்டுகின்ற அளவிற்கு, ஒரு சிலர் ஆங்காங்கே கார்களின் எண்களை மாற்றுவது, போர்ட்டை மாற்றிக்கொடுப்பது, வண்ணத்தைக் கொடுப்பது, வண்ணங்களை மாற்றிப்பூசுவது போன்ற காரியங்களைச் செய்து வருகிறார்கள். அவர்களையெல்லாம், கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர, சட்டத்தின் பிடிக்குள் நிறுத்த, இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

காவல்துறையினருக்கு குடியிருப்பு வசதி, மைய அரசு வழங்கும் மானியத்தின் உதவியுடன் 120 படை வீடுகள், 1230 குடியிருப்புகளும், சுமார் ரூ.439.3 இலட்சம் செலவில் இந்த அரசே கட்டும். தமிழக அரசின் செயல் திட்டத்தின்படி, சென்னையில் 604 குடியிருப்புகளும், புதுக்கோட்டை மாவட்டம் கே.புதுப்பட்டியில் ஒரு குடியிருப்புமாக மொத்தம் 605 குடியிருப்புகள் மைய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி இந்த நிதியாண்டிலே கட்டுவதற்கு இந்த அரசு உத்தரவிட்டுள்ளது. மீதமுள்ள 625 குடியிருப்புகளும், 120 படை வீடுகளும் மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் கட்டுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும்.

காவல்நிலையங்களில், பார்வையாளர்களுக்கும், அங்கே போகின்றவர்களுக்கும் உட்கார பெஞ்சுகூட கிடையாது. நாற்காலிகள் கிடையாது. அவற்றை வாங்கிக் கொடுப்பதற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

மதுரையில் காவலர்களுக்கென மருத்துவமனை கட்டப்படும். அதேபோன்று பல ஊர்களில் தொடங்கவேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை என்பதை சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

காவல்துறை வானொலித் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு, ஊதிய உயர்வு வழங்குவதில், 1929ஆம் ஆண்டு நடந்த காவலர்களின் கிளர்ச்சியின்போது, கிளர்ச்சியில் ஈடுபடாமல் இருந்து பணியாற்றிய காவலர்களுக்கு அளித்தது போல், கிளர்ச்சியில் பங்குகொள்ளாமல் பணியாற்றிய காவல் வானொலி நுட்பப் பணியாளர்களுக்கு, ஒரு முன் ஊதிய உயர்வினை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

காவலர்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வாங்கும் திட்டத்தின்கீழ், குறைந்த அளவு சர்க்கரை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. தற்போது நடைமுறைக்கு வந்துள்ள சர்க்கரை விநியோகத்தில், சர்க்கரையின் அளவு, தனி நபரின் அடிப்படையில்

அமைந்துள்ளதால், காவல்துறையினருக்கு உச்சவரம்பு இல்லாமல், தற்போது வந்துள்ள நடைமுறையின்படி, ஒவ்வொருவருக்கும் 450 கிராம் என்ற அடிப்படையில், சர்க்கரை வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தினார்கள். பாதி விலையில் கொடுப்போம் என்றீர்கள். இப்போது கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். நியாயவிலைக் கடைகளில் பொதுமக்களுக்கு எந்த அளவுக்கு கொடுக்கிறோமோ, அதற்குப் பாதி என்று நாம் எப்போது சொன்னோமோ, அந்த அளவுக்கு பின்பற்றுகிறோம் என்பதையும், யாரையும் இந்த அரசு ஏமாற்றவில்லை. ஏமாந்து புகழ்வதற்கு அவர்கள் ஏமாளிகள் அல்ல, என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சேமகளப் படைப்பிரிவு மற்றும் சிறப்புக் காவல் படைப்பிரிவினருக்கு முழங்கால் சட்டை, சேமகளப் படைப்பிரிவிலும், தமிழ்நாடு சிறப்பு காவல் பிரிவிலும் பணிபுரியும் காவலர்களுக்கு அரைகால் சட்டைக்குப் பதிலாக முழுகால் சட்டை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவு 01.01.1983இல் இருந்து அமல்படுத்தப்படும்.

சிப்பாய் வாசஸ்தலங்களில் வசிக்கும் காவலர்களுக்கு, இரும்பு மடிப்பு கட்டில்கள். சிப்பாய் வாசஸ்தலங்களில் வசிக்கும் காவலர்கள், கட்டில்கள் இல்லாத காரணத்தினால், இரவு நேரங்களில் மழைக் காலங்களில், ஈரக் கசிவினால் அவதியுறுவதால், அவர்களின் வசதிகளுக்காக இரும்பு மடிப்பு கட்டில்கள் வாங்கி சிப்பாய் வாசஸ்தலப் பொறுப்பில் வைக்க அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு காவல்துறை அமைச்சுப் பணியாளர்கள் தங்களுக்கென ஒரு சங்கம் அமைத்துக்கொள்ளவும், அச்சங்கத்திற்கு ஒரு மாதப் பத்திரிக்கை நடத்துவதற்கும் அனுமதி கோரியுள்ளனர். இக்கோரிக்கைகளை ஏற்று, தமிழ்நாடு காவல் துறை அமைச்சுப் பணியாளர் சங்கத்திற்கு, அங்கீகாரமும் மாத பத்திரிக்கை நடத்த அனுமதியும் வழங்க முடிவு செய்துள்ளது.

காவல்துறையில் பணிபுரியும் அமைச்சுப்பணியாளர்களின் வேலை பளுவைச் சமாளிக்க 200 கூடுதல் பதவிகள் ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

திருச்சிராப்பள்ளி ஊர்க்காவல் மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்பு மாநில பயிற்சிப் பள்ளி அமைத்தல் :

பாதுகாப்பு பேருந்துகள் வாங்குதல் :

ஊர்க்காவல் படையினருக்கு பயிற்சிக் கருவிகள் வழங்குதல் : இக்கருவிகளை 21 மாவட்டங்களுக்கு வழங்குதல் : ஊர்க்காவல் படையினருக்கு ஒவ்வொரு ஆண்டும் தமிழக முதல்வர், “ஊர்க்காவல் படை பதக்கம்” வழங்கும் திட்டம், செயலில் இருந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பதக்கம் பெறுவோருக்கு அவரவர் பதவித் தரத்திற்கு ஏற்றவாறு ரூ.1,000 முதல் ரூ.3,000 வரை வழங்கப்படும். ஊர்க்காவல் படையின் தரத்தை உயர்த்துவதற்காக 150 ஊர்க்காவல் படை அதிகாரிகளைப் பெங்களூரிலுள்ள மத்திய பயிற்சி நிலையத்திற்கு அனுப்புவதற்காக ரூ.1.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தீயணைப்புத்துறைக்கு வானொலித் தொடர்பு வசதி செய்து கொடுத்தல் :

தீயணைப்புத் துறை திறம்படப் பணியாற்ற வசதி செய்யும் பொருட்டு, மாநிலம் முழுவதிலும் தலைமையிடத்துத் தீயணைப்பு கண்ட்ரோல் ரூமுக்கும், தீ விபத்து நடந்த பகுதியுடனும் தொடர்பு கொள்ள வானொலி வசதி அளிப்பதற்கும், அதற்காக வயர்லெஸ் செட்டுகள் 24 வாங்குவதற்கும் இந்த அரசு முடிவு செய்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தடய அறிவியல் ஆய்வகத்திற்குக் கூடுதல் பணியாளர்கள் ஏற்படுத்துதல்:

தடய அறிவியல் ஆய்வகத்தில் தேங்கி நிற்கும் மற்றும் தினசரி பெறப்படுகின்ற மதுவிலக்குத் தடய மாதிரிகளை ஆய்வு செய்து முடிக்கும் பணிக்காக கீழ்க்கண்ட கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. தொழில்நுட்பப் பணியாளர்–1, அறிவியல் உதவியாளர்கள் (நிலை–1)–16, அறிவியல் உதவியாளர்கள் (நிலை–2)–22, இளநிலை ஆய்வக உதவியாளர்–10, அமைச்சுப் பணியாளர்கள், தட்டச்சர்கள்–5, இளநிலை உதவியாளர்கள்–5.

இரயில் நிலையங்களில் பெண் காவலர்களின் பணி குறித்த திரைப்படம் எடுத்தல்:

பெரிய புகைவண்டி நிலையங்களில் உள்ள வழிகாட்டும் நிலையங்கள் மூலமாக, பெண் காவலர்கள் வெளியூர்களிலிருந்து தனியாக வரும் பெண்களுக்கு பாதுகாவல் அளித்து, எவ்வாறெல்லாம் உதவுகிறார்கள் என்பதை விளக்கும் திரைப்படங்களை எடுத்து, எல்லாத் திரையரங்குகள் மூலம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் விளம்பரம் செய்ய வேண்டும் என்று அரசு முடிவு செய்திருக்கிறது.

நீங்கள் அனுமதித்தாலும், நேரம் எனக்கு ஒத்துழைக்கவில்லை என்பது மட்டுமன்று; மணித்துளிகள் வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. 10.30 மணிக்குள் முடிக்கலாம் என்றால், இப்போது 11.10 ஆகிறது. ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், வாய்ப்பு கிடைக்கும்போது அத்தனையையும் வெளியிட விரும்புகிறேன். மீண்டும் இறுதியாக ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதவாதிகள் தயவு செய்து தங்களுடைய கொள்கை, ஏதுவாக இருப்பினும், மக்களை ஒற்றுமைப்படுவதற்காகப் பயன்படுத்த வேண்டுமே தவிர, மக்களைப் பிரிக்கப் பயன்படுத்துவதற்கு இந்த அரசு நிச்சயமாக அனுமதிக்காது என்பதையும், அதற்கு அனைவருடைய ஒத்துழைப்பும் தேவை என்பதையும் நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றைய முன்தினம்கூட, பேராயர்கள் என்னைச் சந்தித்து, தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டு, ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள் அங்கேயும் கொடுத்தார்கள். நான் வேதனையோடு சொல்கிறேன். அந்தப்பிரேரணை தேவையில்லை. நாட்டுக்குப் பயன்படக்கூடியதன்று! நாட்டுக்கு நன்மை பயக்கக்கூடியதன்று என்று இந்த அரசு நம்புகிறது. அதோடு, அவர்களுக்கு யோசனை சொல்வதற்கு ஒரு மடாதிபதி! அவர்கள், உண்மையிலேயே தவறு செய்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு சொல்கிறேன். குன்றக்குடி அடிகளாரும் அதிலே பணிகளைச் செய்கிறார்கள். ஆனால் அவர்களைப் பின்பற்றி,

மற்ற மடாதிபதிகளும் கடமையைச் செய்வார்களானால், நன்மையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அமரர் அண்ணா அவர்களோடு பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் என்னிடம் சொன்னார்கள் கண்ணன் கதைக்கு நான் உரைநடை எழுதுகிறேன். நான் எழுதும் உரைநடைக்குப் படம் எடுத்தால், அது சமூகக் கதையாக இருக்கும் என்று எனக்கு விளக்கம் தந்தார்கள். அப்போது சொன்னார்கள். எந்த தனிப்பட்ட நபரும், திரைப்படத்தையோ அல்லது கதையையோ அல்லது பிரசங்கத்தையோ கேட்டுவிட்டு உடனே ஜாதி மாறுவது கிடையாது. மதம் மாறுவது கிடையாது. அதை சொல்லும்போது சொன்னார்கள். 'டென் கமாண்ட்மெண்ட்ஸ்' திரைப்படத்தைப் பார்த்துவந்த அத்தனை பேரும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவது இல்லை.

அவர்கள் அச்சுறுவதற்கு ஏதோ பயிற்சி கொடுக்கிறார்களே அதையெல்லாம் அனுமதிப்பதற்கு நாங்கள் இசைவோம் என்று யாரும் எண்ணிவிடக்கூடாது. கண்டிப்பாக அந்த பயிற்சிகளையெல்லாம் எந்த மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், குறிப்பாக அதை செய்வதாக சொல்லப்படுகின்ற ஆர்.எஸ்.எஸ். அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நிறுத்தியாக வேண்டும்! அரசு என்.சி.சி. போன்ற இயக்கங்கள் மாணவர்கள், மாணவிகளுக்கு பயிற்சி அளிக்கின்றன. இன்னும் பல்வகைகளில் தேகப்பயிற்சி தரப்படுகிறது.

ஆகவே, அதை அப்படி விட்டுவிடவேண்டுமே தவிர, ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது மதமும் மதத்தைச் சேர்ந்தவர்களும் இந்தக் காரியத்தை செய்ய முனைந்தால், அது பெருமைப்படுத்திக்கொள்வதாக அமையாது. இங்கே பல அரசியல் கட்சிகள், மிக நல்ல காரியத்தைச் செம்மையாக செய்யக்கூடிய திறமைவாய்ந்த கட்சிகள், தகுதியுள்ள கட்சிகள் எதிர்வரிசையில் பல இருக்கின்றன. குறிப்பாக, முதலிலிருந்து இறுதிவரை அதைப்போல அரசு கட்சியிலே இருக்கிறார்கள். மற்றவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்த இந்த அரசு தயாராக இல்லை என்று சொல்லி, அவற்றையெல்லாம் நிறுத்தியாக வேண்டும். 144 தடை உத்தரவை மீறினால், இந்த அரசு எந்தவிளைவையும் சந்திப்பதற்கு, எந்த மதவாதியையும் எதிர்ப்பதற்கு, எந்த நிலைமையையும் சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் சார்பாக வெளியிட்டு, இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் முழுமையாக பதில் சொல்லாவிட்டாலும், வெட்டுப் பிரேரணைகளை திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று தலைவர் அவர்கள் மூலமாக கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

27.03.1982 அன்று, காவல்துறை மீதான மானியக்கோரிக்கை
விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.

எங்களைப் பொறுத்தவரை,
புகழைப் பற்றிய கவலையில்லை!

மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு மரியாதைக்குரிய நண்பர் திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் ஒரு நல்ல பிரச்சினையை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அவர்கள் பேசியதன் விளைவுதான், கொறடா அவர்கள் குறுக்கிட வேண்டிய அவசியம் வந்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டத்தைக் கொண்டு வந்தது சரியா இல்லையா என்பது வேறு; திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற முறை சரியா இல்லையா என்பது வேறு! நடைமுறைப்படுத்துவதில், பாரபட்சம் காண்பிக்கப்பட்டது என்பது குற்றச்சாட்டு. ஒரு திட்டத்தில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கு, அந்தத் திட்டத்தில் ஈடுபாடு இல்லாதவர்களுக்கு, அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இருக்கின்ற ஒரு குழுவிலே இடமளிக்க நியாயம் இல்லை என்பது கொறடாவின் பதில்.

இதைப்பற்றி மதிப்புக்குரிய திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் குறிப்பிடும் பொழுது காமராஜ் கொண்டுவந்த திட்டத்தை தொடர்ந்து செய்கிறார்கள், அவர்களுடைய பெயரைச் சொல்லக்கூடாது என்பதற்காக, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத்திட்டம் என்று சொல்லி, அந்தப் புகழை நாங்கள் பெற விரும்புவதாகக் கூறினார்கள். எங்களைப் பொறுத்த வரையில், புகழைப்பற்றிக் கவலையில்லை; தேவையைப் பூர்த்தி செய்ய முயல்கிறோம் என்பதை நாடு புரிந்துகொள்ள வேண்டுமென்பது தான்!

இங்கே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பவர்களைப் பற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு எடுத்துக் கொள்வது நியாயம்; ஆனால், இல்லாதவர்களைப் பற்றி விவாதம் எழுப்புவது முறை அன்று, அது நாகரீகமாகவும் இருக்காது என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில், அதைப்பற்றி, பதில் சொல்ல முடியாத அளவில், அவர்கள் மறைந்து விட்டார்கள். அந்தப் பெரியவர்களை விவாதத்திற்கு இழுத்தால், அது ஒரு வகையில் நியாயமாகப்பட்டாலும் கூட, சில உண்மைகள் வெளிவரும் பொழுது, புகழத்தக்க தலைவர்களுக்கு, நம்மால் இழுக்கு ஏற்படும் அளவிற்குச் சென்றுவிடும்! அதற்கு நாம் இடமளிக்கக்கூடாது. எனவேதான், யார் மறைந்தாலும், அவர்கள் தவறுகள் செய்திருந்தாலும், அவர்கள் செய்த நல்லதை மட்டும் பாராட்டுகின்ற அந்தப் பண்பாட்டைப் போற்றி வருகின்ற முறை, தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் இருக்கிறது!

அதையொட்டி நான் இங்கே ஒன்றச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாபெரும் தலைவர் என்று அழைக்கப்படும், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்ற (இதில் வித்தியாசம் இல்லை) காமராஜ் அவர்கள் கொண்டு வந்த திட்டத்திற்கும், இதற்கும், மிகப்பெரிய வேறுபாடு உள்ளது என்பதை திரு. என்.எஸ்.வி. சித்தன் அவர்கள் அறிவார்கள். அது தெரிந்தும், அவரை இழுத்து வைத்துப்பேசி, இது அவர் கொண்டு வந்தது அன்று என்று நாங்கள் சொல்லும் நிலைமையை நாட்டிலே ஏற்படுத்துவது நல்லதல்ல; நன்றன்று; பணிவன்போடும், உரிமையோடும், நல்ல உணர்வோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள் அது புத்திசாலித்தனமான, சாமார்த்தியமான ஒரு கேள்வி. சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து, அதை, 'முதலமைச்சர் எம்.ஜி.ஆர் திட்டம்' என்று சொல்கிறார்களே, அதைப் போல மதுவிலக்கைத் தளர்த்தி, சாராயக் கடையை மீண்டும் திறந்ததற்காக அதையும், அவர்களுடைய திட்டமாகக்கொண்டுவர ஒத்துக் கொள்வார்களா என்று கேட்டார்கள். நான் பணிவோடு சொல்லிக் கொள்கிறேன். சொல்லக்கூடாதுதான்! ஆனாலும், சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தியா முழுமையும் ஆண்டு கொண்டிருக்கின்ற பிரதம அமைச்சரவர்கள், மாநிலங்களில் அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப சாராயக் கடைகளைத் திறக்க அனுமதி தருகிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களுக்கும் அனுமதி தருகிறார்கள். அதை பிரதம அமைச்சர் திட்டம் என்று சொல்ல முன்வருவார்களேயானால், இங்கேயும் அதை முதலமைச்சர் திட்டம் என்று சொன்னால், நான் ஆச்சரியப்பட மாட்டேன்; ஆத்திரப்பட மாட்டேன்; எனவே, தயவுசெய்து, இந்த நிலைமைகளை எங்களுக்கு உருவாக்காதீர்கள் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே, நிதியமைச்சர் பதில் சொல்வதற்கு முன்பாக நான் குறுக்கிடுவதை யாரும் தவறாகக் கருத மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இங்கே மதிப்பிற்குரிய சௌரிராஜன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். சத்துணவிற்கு என்னென்ன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். உணவு அல்லது அதில் ஊட்டச்சத்து இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மட்டும், நான் குறிப்பிட விரும்புகிறேன். உணவே இல்லாமல் இருக்கிறார்கள். அந்த உணவையும் கொடுத்தாக வேண்டும்.; அதிலே சத்தும் சேர்க்கப்பட வேண்டும். அதுதான் இந்தத் திட்டத்தினுடைய 'ஆப்ஜெக்ட்' என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அவர் பாராட்டினார் என்பதற்காக நன்றியையும், எச்சரிக்கை செய்தார் என்பதற்காக அதற்கு மரியாதையையும் தெரிவித்து, இந்தக் கருத்தை அவருக்கு நான் சொல்வதிலே மன நிம்மதியையும் பெறுகிறேன்.

இங்கே வருவதற்கு முன்பாக, மதிப்பிற்குரிய ஹாஜா செரீப் அவர்கள் நேற்றைய தினம் இங்கே பேசியதைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லி, நான் அதற்கு பதில் சொன்னது துரதிருஷ்டமானது என்று வருத்தப்பட்டிருக்கிறார்கள். துரதிருஷ்டமான கேள்விகள் கேட்கும் போது மட்டுந்தான் பதில்களும் வேறுவிதமாக வந்து விடுகின்றன.

ஆனால், துரதிருஷ்டவசமாக என்னைத் தாக்காமல், நான் சாராயக் கடைக்கு நம்பர் எழுதிக் கொடுத்தேன், என் பெயரைக் குறிப்பிட வேண்டும் என்ற அந்தக் கேள்வியை என்னைக் கேட்காமலிருந்திருந்தால், நான் பிரதம அமைச்சர் பெயரைச் சொல்ல நிச்சயமாக முன் வந்திருக்க மாட்டேன். பிரதம அமைச்சர் எப்படி பொறுப்பேற்க வேண்டுமென்று கேட்கிறார்கள். 20 அம்சத் திட்டம் பிரதம அமைச்சர் பெயரிலே தான் இருக்கிறது. தமிழக அரசாங்கத் திட்டம் என்று சொல்வதற்குப் பதில் முதலமைச்சர் திட்டம் என்று சொன்னால் குறை, ஆனால், அதே சமயத்தில் இந்திய அரசின் 20 அம்சத்திட்டம் என்று சொல்லாமல், பிரதம அமைச்சரின், இந்திரா காந்தி அம்மையாரின் 20அம்சத்திட்டம் என்று சொல்வது நியாயம் என்பது எப்படி பொருத்தம் என்று எனக்குத் தெரியவில்லை! ஆகவே, அவர்கள் தயவுசெய்து இப்படிப் பிரித்துப் பார்க்காமல், முதலிலே குறைசொல்பவர்கள், தாக்கும்போது, நியாயத்தின் அடிப்படையில் தாக்குமாறும், அதிலே கொஞ்சம் மரியாதையும், நியாயமும் பணிவும் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். தாக்க வேண்டுமென்ற நிலைமை வந்தால், இங்கே டாக்டர் சௌரிராஜன் அவர்கள் சொன்னதைப் போல எடுத்துக் காட்டி எச்சரிக்கை செய்வதாக அமைந்து, யோசனை செய்யக் கூடியதாகவும், வலியுறுத்துவதாகவும் அமைந்தால், அதற்கு நன்றி தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

06.09.1982 அன்று, சத்துணவுத் திட்டம் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து ஆற்றிய உரை.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தைப் பற்றி, இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும், இந்த மன்றத்தில், தமிழகத்தின் ஒட்டுமொத்தமான மக்கள் கருத்தினை எடுத்து வைத்து, தமிழகத்திலே குறிப்பாக, தலைநகரில் இருக்கின்ற குடிநீர் நெருக்கடியைப்பற்றி, எவ்வளவு தூரம் அக்கறை காட்டுகிறார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டும் வகையில், தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தினால், நான் முதலிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஒரு வரலாறு அடங்கியிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்கின்ற வகையில், மாண்புமிகு காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த தலைவர் நெடுமாறன் அவர்கள் இங்கே ஒரு கடிதத்தைப் படித்துக் காண்பித்தார்கள். அதேபோல எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இங்கே சில எண்ணங்களை, அவர்களுக்குத் தெரிந்தவைகளைக் கருத்தாக உருவாக்கி, இங்கே கொண்டுவந்து, இந்த மாமன்றத்திலே இருப்பவர்களுக்கும், மக்களுக்கும் உண்மை நிலைமை என்ன என்பது தெரிய வேண்டும் என்ற நோக்கில், வெளியிட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், எதையெல்லாம் நாம் வெளியே சொன்னால், சரியாக இருக்குமோ, அதை எடுத்துச் சொல்வதற்கு முன் வந்திருக்கிறார்கள்!

பேரவைத் தலைவர் மூலமாக, இந்த அவைக்குச் சொல்லக் கூடிய கருத்துக்கள், குறிப்பாக, அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, முதலில் இதைப்பற்றியது அன்று. ஆந்திராவினுடைய முதல்வராக இருந்த, டாக்டர் சென்னா ரெட்டியோடு தொடர்புகொண்டோம். அவர்கள் தங்களுக்கு இருந்த ஆர்வத்தை வெளிக்காட்டுகின்ற வகையில், இங்கே மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் எந்தக் கருத்தைக் கடிதத்தின் வாயிலாக எடுத்துக்காட்டினார்களோ, அதே நிலைமையை நாங்கள் விவாதிப்பதற்கு வாய்ப்பு தந்து, ஆந்திராவின் நிலப்பரப்பின் ஊடே, தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டு சேர்க்கின்ற பொறுப்பை யார் யார் மேற்கொள்வது, அந்தத் தண்ணீரைக் குழாய் வழியாகக் கொண்டு வருவதா, வாய்க்கால்கள் வழியாகக் கொண்டுவருவதா என்பதையெல்லாம் பரிசீலித்து, பிரச்சினைகளை அவர்களுக்குள் விவாதித்து, கருநாடகமும், மராட்டியமும், குழாய்கள் வழியாகத்தான் கொண்டு செல்லவேண்டும் என்று வற்புறுத்துகிற சூழ்நிலை ஏற்பட்டதன் விளைவாகச் சிறிது காலம் தாமதப்பட்டது என்ற உண்மை அன்றையதினம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது என்றாலும், அன்றையதினம் ஓரளவு சரியான சூழ்நிலையில், எல்லோரையும் கவனிக்கக்கூடிய நிலைமையில் அது இல்லை என்பதையும், நான் இங்கே சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் டாக்டர் சென்னா ரெட்டி அவர்கள் மிகுந்த அக்கறையோடு ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.

அந்த 10 டி.எம்.சி. கர்நாடக மாநிலமும், மராட்டிய மாநிலமும் ஒத்துக்கொண்டு தந்தாலும், தருவதற்குக் கொஞ்சம் தாமதமானாலும், நான், அதாவது ஆந்திராவின் முதல்வர் என்கிற முறையிலும், ஆந்திராவின் மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலும், அவர் குறிப்பிட்ட வாக்கிலேதான், நான் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். நாங்கள் தருகிறோம். 5 டி.எம்.சி. நாங்கள் கொடுக்க வேண்டியதை, சிக்கல் இல்லாமல் விரைவில் தீர்ப்பதற்கு அங்கே ஏற்பாடு செய்வோம். அதற்கான குழுக்களை அமைப்போம்; விசாரணை செய்து எந்த அளவிற்குப் பொறுப்பை ஆந்திர மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது, எந்த அளவிற்குத் தமிழக அரசு ஏற்றுக் கொள்வது, இருவருமாகச் சேர்ந்து எந்த அளவிற்குச் செலவினைப் பங்கிட்டுக் கொள்வது என்பதை எல்லாம் சொல்கின்றவகையில், சோமசீலா என்கிற அணைக்கட்டு, அந்த நீர்த்தேக்கம் இருக்கின்ற வழியில் இருக்கின்ற தண்ணீரை கண்டலேறு வரைக்கும் அவர்கள் கொண்டுவருவதற்கும், சம்மதம் தந்து, “அதிலிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டு போங்கள்!” என்றால், வெகு தொலைவில் இல்லை. அதிகமான செலவு செய்ய வேண்டிய அவசியம் இராது அவர்கள் ஒத்துக்கொண்டு, பிறகு அதற்கு வேண்டிய திட்டங்கள் தீட்டி, அதையும் தாங்கள் ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள்.

அந்த வகையில், சென்னைக்கும் குடிநீர் வசதியைப் பெருக்க வேண்டிய நிலை வெகுகாலமாக இருந்து வருகிறது. இந்தக் குறிப்பை நான் இங்கே படிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதற்காகச் சில திட்டங்கள் அவ்வப்போது ஆராயப்பட்டு வந்துள்ளன. சென்னை பெருநகர்ப் பகுதிக்கு குடிநீர்த் தேவையை ஆய்வு செய்ய வந்திருந்த ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின். யு. என். டி. பி. நிபுணர்கள் ஒரு விரிவான அறிக்கையைத் தயாரித்து அளித்துள்ளார்கள். அந்த அறிக்கையில், சென்னை பெருநகர்ப் பகுதியில் 2002ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகைக்கும், தொழில் வளர்ச்சிக்கும், நாள் ஒன்றுக்கு 1.294 மில்லியன் லிட்டர்கள் நீர் தேவைப்படும் என்றும், அதில் தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்களின் மூலமும், நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதன் மூலமும், நாள் ஒன்றுக்கு 299 மில்லியன் லிட்டர் நீரைத்தான் உறுதியாக்கப்பட முடியும் என்றும், துண்டு விழும் 995 மில்லியன் லிட்டர் நீரை வெளியேயிருந்துதான் கொண்டு வர வேண்டும் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அந்த அளவு தண்ணீர் கிருஷ்ணா நதியிலிருந்து பெற முடியும். கிருஷ்ணா நதியிலிருந்து, சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரலாம் என்ற எண்ணம் பல ஆண்டு காலமாகவே இருந்து வருகிறது. அதற்கான முயற்சிகளும் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1976ஆம் ஆண்டு பிப்ரவரியில் பாரதப் பிரதமர் சென்னையிலே பேசும்போது ஆந்திரா, மகாராஷ்டிரா, கருநாடகா ஆகிய 3 மாநிலங்களும், கிருஷ்ணா நதியிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு, ஒவ்வொரு மாநிலமும் 5 டி.எம்.சி.யிலிருந்து 15 டி.எம்.சி. நீர் வரையில் சென்னை நகருக்குக் குடிநீர் உபயோகத்திற்காகத் தர இணங்கியுள்ளது என்று அறிவித்தார்கள், இதனையொட்டி,

1976ஆம் ஆண்டு, ஏப்ரலில் இம் மாநிலங்களும் தமிழகமும் சேர்ந்து ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன. ஒப்பந்தத்தின்படி, ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து, ஆண்டுதோறும், ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதத்திற்குள் 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னை குடிநீருக்காகத் தமிழ்நாடு ஏற்றுக்கொள்ள அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

இதன் பின்னர் இம் மாநிலங்களுக்கு இடையே 1977இல் இத்திட்டத்தை நிறைவேற்ற ஆய்வு மற்றும் செயல்முறைகள் பற்றியும், ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அதைத்தான் நான் குறிப்பிட்டேன். 1978ஆம் ஆண்டில் தமிழக ஆந்திர முதல் அமைச்சர்கள் இடையில் நடந்த பேச்சு வார்த்தைகளுக்குப் பின்பு, இந்தத் திட்டத்திற்கான இறுதி வேலைகள் தொடங்கப்பட்டன. தமிழக எல்லைக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய ஆய்வுகள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன.

ஆந்திரா எல்லையிலேயும், ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. 1982 நவம்பர் மாதம், ஆந்திர அரசிடமிருந்து இத்திட்டத்தைப்பற்றி, இறுதியாக அறிக்கை 'பைனல் புராஜெக்ட்' ரிப்போர்ட் கொடுக்கப்பட்டது. தமிழகம் மற்றும் ஆந்திர அதிகாரிகள் இத்திட்டத்திற்காக ஆகும் செலவை இரு மாநிலங்களும் கீழ்க்கண்ட அடிப்படையிலே பகிர்ந்து கொள்ளலாம் என்பது, ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டது. அதைப் பற்றி விரிவாகப் படிக்க வேண்டியது இல்லை என்று நான் கருதுகிறேன். முடிவாக இதிலே கையொப்பம் இட்டவர்கள், (1) எம். கோபால கிருஷ்ணன், பாசனம் மற்றும் மின்சாரத் துறைச் செயலாளர், ஆந்திர அரசு. (2) ஆர். அனந்த கிருஷ்ணன், ஆணையர்–செயலர், பொதுப் பணித்துறை மற்றும் மின்சாரத்துறை, கருநாடக அரசு, (3) கே. ஏ. சங்கர் ராவ், பாசனத்துறை, துணைச் செயலாளர், மகாராஷ்டிரா அரசு, (4) ப. விஜயராகவன், ஆணையர்–செயலர், பொதுப் பணித்துறை, தமிழ்நாடு அரசு, மத்திய அரசின் சார்பிலே அவர்களுடைய சார்பாக சி.பி.படேல் மத்திய அரசின் செயலாளர், விசாயம் மற்றும் பாசனத்துறை, புதுதில்லி, நாள் 28.10.1977.

இப்போது 18ஆம் தேதி நான் போக வேண்டும் என்று முடிவு எடுத்து நான் ஆந்திர முதலமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதிய நேரத்தில் ஆந்திர முதலமைச்சர், என்.டி.ஆர். அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். நான் கடிதம் எழுதிய பிறகு.

Dear Sri Ramachandran,

Sub: KRISHNA WATER SUPPLY SCHEME-Drinking water supply to Madras City.

Ref; Your D.O. letter 56347/Special/79-1, dated 05-04-1983.

I am in receipt of your D.O. Letter regarding finalization of the project of supply of Krishna water for Madras City. I welcome you to visit Hyderabad on 18.04.1983 to finalize the agreement. On hearing from you, I shall make necessary arrangements for our meeting here.

இதுதான் அவர் எழுதிய கடிதம். ஆகவே, நான் ஒன்றை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் என்ன சொன்னார், எந்த வகையில் இப்போது செய்தி வந்து இருக்கிறது என்பதை, நானும் உங்களைப் போல், கொஞ்சம் கலக்கம் அடைந்த வகையில் தான் சொல்வேன் குழப்பம் என்று இல்லை. அதைப்படித்தேன். ஆனால் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். நாம் ஏமாற வேண்டிய நிலைமை வராது என்பது தான் என்னுடைய எதிர்பார்ப்பு.

இங்கே, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்திந்திய கட்சிகள் இதுபோன்ற மாநில கட்சிகள், இவைகள் எல்லாம் சேர்ந்துதான் ஆந்திராவிலும் இருக்கின்றன, இதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இங்கே மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்கிறபோது, அவர்களுக்கே உள்ள இயற்கையான குணத்தின் அடிப்படையின் வாயிலாக, அரசு கொஞ்சம் முயற்சி எடுத்து இருந்தால், விரைவாக முடிந்து இருக்கும் என்று சொன்னார்கள். நான் சொன்ன விளக்கத்தை கேட்ட பிறகாவது, இந்த அரசு ஒழுங்காகத்தான் முயன்று வந்தது. ஆனால் ஆந்திரத்தில் முதல் அமைச்சர்கள் மாறிக்கொண்டே இருந்ததால்தான், இந்த நிலைமையேற்பட்டது என்பதை ஒப்புக்கொள்வாரென நான் நினைக்கிறேன்.

ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பேசப்பட்ட கால அளவு 3–4 வருஷங்கள். சென்னா ரெட்டி, அஞ்சய்யா, வெங்கட்ராம், விஜபாஸ்கர், இப்போது என்.டி.ஆர். நாளைக்கு அவர் இருப்பார். சந்தேகம் வேண்டாம். அவர் இருப்பார். இதற்கு ஒரு காரணத்தை மட்டும் நான் சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட நிலையிலே குறும்புத்தனம் என்னைப் போன்றவர்களுக்கு இருக்கக்கூடாது. என்னைத்தான் சொல்லிக் கொள்கிறேன். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், வெங்கட்ராம் அவர்கள் இங்கே வந்து பேசி, அதிகாரிகளோடு பேசி, 7 வருஷம், 5 வருஷம் அல்லது 3 வருஷத்திற்குள் இதை முடித்துவிட வேண்டும் என்று பேச்சு வந்தது. அவர் சொன்னார், 7 ஆண்டுகள் வேண்டும் என்று நான் சொன்னேன், குறுகிய காலத்தில் 3 ஆண்டுகளுக்குள் முடித்துத்தர வேண்டும். எங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை பிரச்சினை பெரிதாக வருகிறது. இதிலே, அது பற்றி ஒரு குறிப்பு கூட இருக்கிறது. இப்போதுள்ள கடுமையான வறட்சி காலத்தில் கூட இந்த 15 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு வந்து சேர வேண்டும் என்ற குறிப்பும் இதிலே இருக்கிறது. ஆகவே தான் சொன்னோம். அவசரமாகச் செய்ய வேண்டும், செலவைப்பற்றிக் கவலை இல்லை. ஆட்களை நிறைய வைத்து வேலைகளைச் செய்து முடிக்க வேண்டும். வெளி நாடுகளில் இருந்து, கருவிகள் அல்லது இயந்திரங்கள் கொண்டு வர வேண்டுமென்றாலும், கொண்டு வரலாம் என்று தான் சொன்னேன். அவர் போனார். ஒருவர் மற்றொருவர் மீது கொண்டிருந்த நம்பிக்கையில் இப்படி நாட்கள் நகர்ந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை வேடிக்கையாக எடுத்துக் கொண்டாலும், கொஞ்சம் வினயமாக நான் பதில் சொல்லிவிடுகிறேன். முன்பு இருந்தவர்கள் சொன்னார்கள், ஆனால் அவர்கள் எல்லாம் யாரோ சொல்லி கேட்க வேண்டிய நிலையில் இருந்தார்கள். இன்று சொல்கிறார்கள். அவரே

செய்ய முடியும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, நாம் சந்தேகப்படாமல் எதிர்பார்க்கலாம். இன்னொன்று, அவருடைய கடிதமும் சொல்கிறது. நானும் அவரோடு பழகியிருக்கிறேன். சில முடிவுகளை எடுத்துவிட்டால் கொஞ்சம் துணிச்சலோடு அதை நிறைவேற்றக் கூடியவர். இதிலே அங்கேயிருக்கிற காங்கிரஸ்காரர்கள், அகில இந்திய காங்கிரஸ்காரர்கள்தான், ஒரு வேளை எதிர்க் கட்சியில் இருப்பார்கள். அந்தக் காங்கிரஸ்காரர்கள் நிச்சயமாக எதிர்க்கமாட்டார்கள். அதற்கு சித்தன் அவர்கள் முன் உதாரணமாக இருக்கிறார்கள்.

ஆகவே, அந்தக் கவலை நமக்கு இல்லை. ஆகவே, மத்திய அரசு ஒத்துழைக்கும். பிரதம அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே நம்பிக்கையோடு இருப்போம். விரிவாகப் பேசி, வெளியே இருக்கின்றவர்களின் சந்தேகத்தை அதிகமாக்காமல், நம்பிக்கையோடு இருப்போம்! என்.டி.ஆர். அவர்களும் அந்த அரசும் முன்னால் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மதிப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். 1976ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நான் மதிப்பேன் என்று நேற்றையதினம் பேசிய பேச்சில் கருத்து வெளியிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதை நம்பி நான் ஆசையோடு புறப்படுவேன். உங்களுடைய ஒத்துழைப்பு இருக்கும் வரையில், இதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதை எடுத்துச்சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

16.04.1983 அன்று, கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் பற்றி ஆற்றிய உரை.

தமிழ்நாடு அரசு
தலைமைச் செயலகம்

இராமச்சந்திரன் சொன்னது உண்மைதான்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களாக இலங்கை அரசைக் கண்டிக்கின்ற தீர்மானத்தின் மீது இங்கே அனைத்துக் கட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் வெளியே பேச முடியாத கருத்துக்களை, இங்கே நான் பேச வாய்ப்பு தந்ததற்காகத்தான். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வாய்ப்பினை அவர்கள் தருவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எனவே நான் மிக மிகத் தாழ்மையோடு கை கூப்பி, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தில் யாரைக் கண்டிக்க வேண்டுமோ அவர்களைக் கண்டிப்பதை விட்டுவிட்டு, இந்தியாவில் உள்ள நேர்மையாக நடந்துகொண்ட, எச்சரிக்கையாக நடந்து கொண்ட, பொறுப்போடு நடந்து கொண்ட, பதட்டமின்றி நடந்து கொண்ட, அடக்கத்தோடு நடந்து கொண்ட, சிந்தனை செய்து நடந்து கொண்ட இந்தியப் பேரரசையும், மாநில அரசையும், கண்டனக் கணைகளால் தொடுத்து மிக அழகாக, திறமையாக கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில், அப்படிப் பேசியிருகிறார்கள். இது இலங்கையில் வாழ்கின்ற தமிழக மக்களுக்கு செய்கின்ற நன்மையா, தீமையா என்பது எனக்குத் தெரியவில்லை. ஒருமித்த கருத்து வேண்டும், ஒருமித்த கருத்தை வைத்து நாம் முன்பே பேசி இங்கே வந்து அதற்கு தீர்மானமாக நிறைவேற்றி இருந்தால், பயன் உள்ளதாக இருக்கும் என்று மாண்மிகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கருத்து வெளியிட்டார்கள். இங்கே உள்ளவர்களும், இங்கே வரமுடியாமல் வெளியே இருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பேசி, ஏற்றுக்கொண்ட ஒரு கொள்கையின் அடிப்படையில்தான், இந்தத் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்பதையும், இங்கே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கைப் பிரச்சினையை நாம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையா அல்லது புரிந்து கொள்ள மறுக்கிறோமா என்ற சந்தேகம் சிலருடைய பேச்சுக்களை கவனித்ததிலிருந்து எனக்குத் தெரிய வந்தது. ஏனெனில், துருப்புகளை, படைகளை அனுப்புங்கள் என்று சொல்வது யாருக்காக? ஈழ விடுதலைப்போரை நடத்துபவர்களுக்காகவா? அல்லது சிங்களவர்கள் அதிகமாக வாழ்கிற பகுதிகளில் வாழ்ந்து கொண்டு இருக்கிற இந்தியப் பரம்பரையினர், அங்கே குடியேறி வியாபாரம் செய்து பிழைக்கப் போனவர்களுக்காவா? என்பதைக்கூட, நாம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதை முதலிலே நாம் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். படையை அனுப்புங்கள் என்று சொல்வது தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டு இருக்கிறார்களே, அந்த இடத்திற்கா, தமிழ்மக்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் கோடிக்கணக்கான மக்களின் சொத்துக்களைச் சூறையாடி, அவற்றை அவர்கள் இழக்கச்செய்து, பஞ்சை பராரிகளாக ஆக்கப்பட்டு இருக்கிறார்களே! அந்தப் பகுதிக்கா என்பதை, நாம் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும் பிரச்சினை எங்கே ? எப்போது வந்தது என்பதை நாம் அவசரப்படாமல் ஆராய்ந்து அறிய வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

போராட்டத்திற்கு காரணம், இலங்கைவாழ் தமிழ்மக்களுக்கு துன்பம் உண்டாக்கிய இராணுவமா, சிங்கள வெறியர்களா அல்லது அந்த அரசா என்பதை பார்க்க வேண்டும். ஈழ விடுதலைப் போரிலே ஈடுபட்டு இருக்கின்ற இளைஞர்களை, இராணுவத்தினர் சுட்டுவிட்டார்கள் என்ற காரணத்தைச் சொல்லலாமே தவிர, ஈழ விடுதலைப் போரிலே ஈடுபட்டுள்ள ஈழத் தமிழர்கள் வாழும் பகுதியில் படையெடுப்பு நடந்ததா என்றால் இல்லை.

அங்கே, சில இடங்களில், இராணுவம் கலகம் செய்தது. சுட்டுக் கொன்றது. மக்கள் அடிக்கப்பட்டார்கள். துன்பப்படுத்தப்பட்டார்கள். வீடு வீடாக விரட்டியடிக்கப்பட்டார்கள். வீடுகள் எரிக்கப்பட்டு, சொத்துக்கள் சூரையாடப்பட்டன! ஆனால், அதிகமான நஷ்டம் எந்தப் பகுதியில், எந்த மக்களுக்கு என்று எண்ணிப்பார்த்தால், இன்றைக்கு அங்கேயிருந்து அகதிகளாக வருபவர்கள் யார் ? என்று பார்த்தால், ஈழத்து விடுதலைப் போரில் கலந்து கொண்ட நண்பர்கள் சிலர் வருகிறார்களே தவிர, அந்த இளைஞர்கள் வந்து இருக்கிறார்களே தவிர, அங்கேயிருக்கும் பிற மக்கள் யாரும் அகதிகளாக வரவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அங்கேயிருந்து அகதிகளாக, திருகோணமலையில் இருந்தும், மற்ற இடங்களில் இருந்தும் வருபவர்கள் தரும் செய்திகள் நமக்கு மகிழ்ச்சி அளிப்பனவாக இல்லை. இதை நாம் முதலில் வரையறுத்துக் கொள்ளவேண்டும். நாம் பேசுவது, கண்டிப்பது எந்தச் செய்கையை, யாருக்கு பாதகமாக அமைந்து இருக்கிறது என்று பார்த்துச் சொல்கிறோமா ? ஒட்டுமொத்தமாக இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் பேசுகிறோமா என்று பார்த்து, ஈழ விடுதலை முக்கியம் என்ற நோக்கில், படையை இங்கே இருந்து அனுப்ப முடியும் என்று சொல்வதாக இருந்தால், ஈழத் தமிழகத்தை பாதுகாக்க வேண்டும் அல்லது பாதிக்கப்பட்டவர்களை பாதுகாக்க வேண்டும், துன்பப்பட்டவர்களை, மானம் இழந்த தாய்மார்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை, கணவனை இழந்து நிராதரவாக விடப்பட்டவர்களைப், பாதுகாக்க வேண்டும். அதற்கு சிங்களவர்கள் அதிகமாக இருக்கும் அந்தப் பகுதிக்குப் படையை அனுப்ப வேண்டும் என்றுரைக்கலாம். படையை அனுப்ப வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி நான் பின்னால் பேசுகிறேன். அப்படி அனுப்புவதாக இருந்தால், எந்த வகையில் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அப்படியானால், சிங்களவர்கள் அதிகமாக இருக்கும் பகுதிக்கு நாம் இங்கே இருந்து இராணுவத்தை அனுப்புவதன் விளைவாக, ஈழ விடுதலைக்கு என்ன பயன் கிடைக்கும்? அது எப்படி அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும்?. எனக்குத் தெரிந்தவரையில், ஈழத் தமிழர்களைக் காக்க படையை அனுப்புங்கள் என்று கேட்கவே இல்லை என்று தான் சொல்லவேண்டும், தவறு இருந்தால். திருத்துங்கள்; நான் ஏற்றுக்கொள்கிறேன்! இந்த நிலைமையை, நாம் இன்னும் மக்களிடம் உண்மைக்குப் புறம்பான வகையில் திருத்திக் கூறி, பல விஷயங்களை அவர்கள் மனதில் பதிய வைத்து, சிக்கல் உண்டாக்கிக் கொண்டு இருக்கிறோம். தமிழ் ஈழம் விடுதலை பெறவேண்டும் என்று விரும்புகிற இளைஞர்கள், உபகரணங்கள் போன்றவற்றை வேண்டுமென்றுதான் கேட்கிறார்களே தவிர, படையை அனுப்புங்கள் என்று அவர்கள் கேட்கத் தயாராக இல்லை. இதை இந்த அவையிலே நான் எடுத்துச் சொல்வதற்காக, தயவுசெய்து யாரும் மனவருத்தப்படக் கூடாது. அந்த இளைஞர்கள் அப்படி இல்லை. இதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். இந்த அரசு, இந்த விவகாரத்தில் மிக மிகத் தெளிவாக இருக்கிறது. கொஞ்சம் கூட கலக்கமோ, அச்சமோ இல்லாமல், துணிவோடு, முறையோடு, திண்மையோடு, திட்பத்தோடு, நாவலர் அவர்கள் சொல்வதைப்போல, இன்னும் என்னென்ன வார்த்தைகள் உண்டோ அவை எல்லாம் பொருள்பெற்று விளங்கும் விதத்தில், இந்த அரசு நடவடிக்கை எடுக்கிறது என்பதை, எங்களைக் குறை கூறவேண்டுமென்று பிரச்சினையைத் தேடித் திரிகின்றவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது பிரச்சினை இல்லை; தேடியாக வேண்டும்.

அண்ணாவை இழுக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம். இங்கே தி.மு.க. துணைத் தலைவராக இருக்கிற கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு என் மீது கோபமா, அவர் தலைவர்மீது கோபமா? என்று எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், அவர் பேசிய குற்றச்சாட்டுகள், சொல்லிய வார்த்தைகள் எல்லாம் என்னைச் சேராது, அவை, அவரைத்தான் சாரும். என்னென்ன வெல்லாம் சொல்கிறார்? என்ன நடவடிக்கை எடுத்தாய்? அவ்வளவு பெரிய சங்கடங்கள், ஆபத்துகள் வந்தனவே. ஏன் பேசாமல் இருந்தாய்? என்று கேட்கிறார். நான்தான் முதலிலே தொலைக்காட்சியின் மூலம் சொல்லிவிட்டு, வானொலியில் பேசினேனே. முன்பு இருந்தவர்கள் எங்கே பேசினார்கள்? அப்போது டி.வி. இல்லாமல் இருந்திருக்கலாம். வானொலியில் பேசியிருக்கலாமே! அறிக்கை விட்டிருக்கலாமே! இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால் என்ன செய்வது? உங்களுக்கு கோபம் இருந்தால், அங்கே கேளுங்கள்; பதில் பெறுங்கள். என்னை ஏன் கேட்கிறீர்கள்? குற்றமற்றவனை கேட்டால், என்ன பதில் கிடைக்கும்? இதற்கு நான் பதில் சொல்வதாக இருந்தால், எல்லோருக்கும் மன வருத்தம் உண்டாகும். சிலருக்கு பகையையும் ஏற்படுத்தும். அதை ஏற்படுத்த வேண்டுமா? சொல்லுங்கள்!

இங்கே மாண்புமிகு ஹாஜாசெரீப் அவர்கள் கேட்டார்கள், அப்போது என்ன செய்தார்கள் என்று. அப்போது என்ன செய்தார்கள்? என்பதை நான் சொல்லி ஆகவேண்டும் அல்லவா? 1973இல் இதைப்போன்ற பிரச்சினை எழுந்தபோது இங்கே முதலமைச்சராக இந்த இடத்தில் வீற்றிருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில், இலங்கைத் தமிழர்களுடைய அவதிகளைப் போக்க, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க, நாங்கள் இங்குள்ள மத்திய அரசை வற்புறுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்க செய்வோமே ஒழிய, தமிழக அரசோ அல்லது தி.மு.கழகமோ இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடாது. ஆதாரம் 30.04.1973ஆம் நாள் “தினமணி”.

இப்போது ஏன் என்னைப் பேச வைக்கிறீர்கள்? இந்த பதில் அவரைத்தான் போய்ச் சேருகிறது. இடையில் பேச நான் யாரையும் அனுமதிக்க முடியாது. என்னுடைய பேச்சு முடிந்த பிறகு பேசட்டும். நான் பதில் சொல்லக் காத்திருக்கிறேன்.

இலங்கைத் தமிழர்கள் போராட்டத்திற்கு உங்களுடைய தார்மீக ஆதரவு உண்டா என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பதில் அளிக்கையில் போராட்டத்திற்கு ஆதரவு இல்லை என்று திட்டவட்டமாக கூறினார்! ஆதாரம் 30.04.1973ஆம் தேதி “தினமணி”. நான் எங்கே சொன்னேன்? ஆதரவு இல்லை என்று? நான் ஒருவன் மட்டுமா? உங்களை எல்லாம் சேர்த்துக்கொள்ளவில்லையா? உங்களோடெல்லாம் சேர்த்து நான் நடவடிக்கை எடுக்கவில்லையா? எந்தத் தமிழக அரசு வெளிநாட்டுப் பிரச்சினையில் கண்டனம் தெரிவித்தது? பொது வேலை நிறுத்தம் நடத்த முன்வந்தது? என்பதை, தயவுசெய்து நீங்கள் சொல்லுங்கள்! எனக்கு நினைவு இல்லை. சொன்னால் நான் ஏற்றுக்கொண்டு வருத்தம் தெரிவித்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

இப்படிச் சொன்னவருடைய தலைமையில் இருக்கின்ற நீங்கள், இங்கே இருந்து என்னைக் கேள்வி கேட்கிறீர்களே. இதை அவரிடம் கேட்கக் கூடாதா? உங்கள் பேச்சில் நான் குறுக்கிடவில்லை. ‘ஐஆம் நாட் ஈல்டிங்’.

‘ஐ ஆம் நாட் ஈல்டிங்’ என்றால் என்ன அர்த்தம்? இந்த ஒரு விஷயத்தையே தாங்க முடியவில்லையே.... .

அவர்கள் என்னை எவ்வளவு குற்றம் சாட்டினார்கள்? புரட்சித் தலைவர் என்ற அடைமொழியைப் போட்டு, இங்கே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் கவனித்து இருக்கிறார்கள். நாங்கள் எப்படி குறுக்கு விசாரணை செய்யத் தயாராக இல்லையோ, கடைசியிலே நாங்கள் பதில் சொல்லுகிறோமோ, அதுவரையில் அவர்களிடம் தகவல் இருந்தால், எடுத்து பதில் சொல்லட்டும், பேரவைத் தலைவர் அனுமதித்தால் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்கு கட்டளை இட முடியாது. எல்லோரையும் பேசவிடுங்கள் அல்லது விடாதீர்கள் என்று உங்களிடம் சொல்ல முடியாது. 'நீங்கள் அனுமதித்தால், என்றுதான் நான் வார்த்தையைப் பயன்படுத்தினேன். அதுதான். நாகரிகமான வார்த்தை. அதைத்தான் நான் சொல்கிறேன். இதற்கே இவ்வளவு கோபப்பட்டால், இன்னும் நான் நிறைய சொல்லவேண்டி இருக்கிறதே, அதற்கெல்லாம் அவர்கள் எப்படி ?

நான் பேசும்போது இடை மறித்தவைகள் குறிப்பேட்டில் இருக்காது என்று நான் கருதுகிறேன். இருக்கக்கூடாது என்று கருதுகிறேன்.

அதோடு யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரியில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது, இலங்கை போலீஸ் தலையிட்டதில் பலர் மாண்டதைப் பற்றி முன்னாள் முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுக்குள் நுழைந்து விமர்சிக்க நான் விரும்பவில்லை, சட்டம், ஒழுங்கு பிரச்சினையில் ஒரு மாநில அரசு தலையிடுவதாகிவிடும் என்றார். ஆதாரம் 19.01.1974 "முரசொலி". 22.01.1974 அன்று தமிழகம் வந்த இலங்கைப் பிரதமர் பண்டார நாயகாவிற்கு கறுப்புக்கொடி காட்டிய ஜனார்த்தனம் கைது செய்யப்பட்டார். இலங்கைப் பிரதமருக்கு கறுப்புக் கொடி காட்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தவர்களாக இருக்கமாட்டார்கள் என்று கருணாநிதி கூறினார். ஆதாரம் 22.01.1974 "மக்கள் குரல்".

இது ஒரு சிறிய விளக்கம்தான். இதை எதற்காகக் கூறுகிறேன் என்றால், 2,3 முறை இதுபோல அவ்வப்போது தமிழக மக்களை வெளியேற்றவேண்டும் என்று விரும்பிய நேரத்திலே அல்லது வேறு பிரச்சினைகளில் அவர்களை உள்ளாக்கிக் கொண்டு, தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளின்போது, எந்தெந்த அரசு, எப்படி நடந்தது என்பதையும், ஏதோ தமிழர்கள் மீது பற்று இல்லாத, கொஞ்சம்கூட இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை இல்லாத, இந்த அரசு, இவர்கள் எல்லாம் எனக்கு பயந்து, என்னைவிட சீனியராக இருப்பவர்கள் எல்லாம் வாய்கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்ற வகையில், மனம்திறந்து பேசவேண்டும்; நாவலர் அவர்கள் அன்று குறிப்பிட்டார்களே அதையும் இணைத்துச் சொல்கிறேன். நாங்கள் எல்லோரும் கொஞ்சம் கூட இதிலே அனுதாப உணர்வோ, அக்கறையோ மனிதாபிமானமோ இல்லாமல் இருக்கிறோம் என்று, தங்களுடைய மனதைக் கல்லாக்கிக் கொண்டு குற்றச் சாட்டை எப்படியாவது சொல்லித் தீரவேண்டும், உண்டாக்கித் தீரவேண்டும் என்ற வகையில், முயல்கின்றவர்களுக்குச் சொல்கிறேன். எந்த தமிழக அரசும் இப்படிப்பட்ட வேகமான, முறையான, அதே நேரம் தமிழகத்திலே எந்த விபரீதமும் விளையாத வகையில், மக்களுக்கு நஷ்டம் ஏற்படாத வகையில், எல்லோருடைய கருத்தையும் ஒருமித்து, இலங்கை அரசுக்கு மட்டுமல்ல, பேரவையும் இணைத்துக்கொண்டு, உலக அரசுக்கு, உலக மக்களுக்குத் தருகின்ற அளவில் நாம் நடத்தினோம் என்பதைச் சொல்லும்போது இந்த அரசு பெருமைப்படுகிறது, மனநிறைவு கொள்கிறது என்பதை நான் தெளிவாகச் சொல்கிறேன்.

குற்றம் சொல்கிறவர்கள்கூட, அவர்கள் தனியாக உட்கார்ந்திருக்கும்போது, அவர்களுடைய மன சாட்சியே சொல்லும். இராமச்சந்திரன் சொன்னது உண்மைதான், நாம் என்ன செய்வது? வேறு வழி இல்லை என்றுதான் அவர்களுடைய உள்ளம் சொல்லும். நான் அதை நிச்சயமாக நம்புகிறேன். காரணம் படையெடுப்பு என்பது வேறு; படை அனுப்புதல் என்பது வேறு; படை அனுப்புங்கள் என்பது வேறு. படை அனுப்புங்கள் என்று இலங்கையிலிருந்து யாரும் நம்மைக் கேட்கவில்லை என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். அமிர்தலிங்கம் அவர்கள் காலம் தாழ்த்திச் சொன்னார்கள். இப்போது படை அனுப்பத் தேவையில்லை என்று சொல்வதை வைத்துக்கொண்டு, இப்போது என்கிற வார்த்தையை, அப்போது வந்தால், பயன் இருந்து இருக்கும் இப்போது வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்ற ஒரு கற்பனையை அழகாக ஏற்படுத்திக்கொண்டு விரிவாக்கம் செய்ய, விளக்கம் தர விரும்புகிறார்கள். அவர்களுக்கு நான் சொல்கிறேன்.

முன்பு எப்படியோ. அண்மைக்காலத்தில் நான் அமிர்தலிங்கம் அவர்களிடமும், மற்றவர்கள், இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்களா, என்று தெரியாது, அங்கே பொறுப்புள்ள தமிழ்த் தலைவர்களிடமும், புலிப்படையினர் என்று சொல்லுகிறார்களே அவர்களில் ஒருசில இளைஞர்களிடமும் நான் சந்தித்துப் பேச, எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நான் பேசியிருக்கிறேன். அதில் ஒரு வினாடியில் கூட, அவர்களுடைய பேச்சில் ஒரு எழுத்தில் கூட இலங்கைக்கு இந்தியா இராணுவத்தை அனுப்பவேண்டும் என்று கோரவில்லை என்பதை நான் இந்த மாமன்றத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்தோடு இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டும். தொண்டமான் வந்தார். அவரோடும் பேசினேன். அவருடைய கோரிக்கைகள் என்ன என்பதை, நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட நினைக்கும் போது, எனக்கே கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது. அதை எல்லாம், ஏட்டிலேயும், பத்திரிகைகளிலேயும் வெளியிடுவார்களேயானால், அவர்களை யாரும் தடை செய்ய முடியாது. இந்தப் பேச்சுக்கள் சட்டத்திற்குப் புறம்பான பேச்சுக்களும் அல்ல. ஆனால், அவை எல்லாம் வெளியே வந்தால், அங்கே இலங்கையிலே, இருக்கிற தமிழர்களுக்கு எந்த வகையில் அவை உதவும், ஆபத்தை உண்டாக்குவதைத் தவிர, என்று நான் உணர்ந்து கொண்டிருக்கிறேன்.

குற்றச்சாட்டுக்களைச் சொல்பவர்கள் புரட்சித்தலைவர், புரட்சித்தலைவர் என்று அழைத்தாலும், அவர்கள் பின்னால் சுமத்துகிற குற்றச்சாட்டுகள் உயர்ந்தவையாக ஆகிவிடாது. குற்றச் சாட்டுக்களை கூறுவதற்காக மட்டும் அல்ல, என்னைக் குறைத்துப் பேசவேண்டும் என்பதற்காவே, புரட்சித்தலைவர் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார்கள். நன்றி, இருக்கட்டும். மரியாதையோடு திட்டுகிறார்கள். கவலை இல்லை. அது பண்பு. அரசியலா, சரி அரசியல். அண்ணாவிடம் பண்புள்ள அரசியல் இருந்தது. நம்மில் சிலரிடம் அரசியல் இருக்கிறது; பண்பு இல்லை போலும் என்று அதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

ஆனால், ஒன்றை நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். சட்டசபையை ஏன் கூட்டவில்லை என்று கேட்கிறார்கள். சட்டசபை கூட்டியிருந்தால், தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கலாம். இதே தீர்மானத்தை அப்போதும் நிறைவேற்றியிருக்கலாம். ஆனால், சட்டசபைக்குள் வர முடியாமல், வெளியே இருக்கிறார்களே, பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள்; நமக்கு ஜாதி இல்லை; என்றாலும், பல்வேறு மதங்களின் தலைவர்கள்; மடங்களின் தலைவர்கள்; மதவாதிகள் இப்படி இவர்கள் எல்லோரையும் ஒன்றாக இணைத்து, நாம் அனைவரும் அந்தப் பொது வேலை நிறுத்தத்தை நடத்தினோமே, அதை நீங்கள் பெருமையாகக் கருத வேண்டாமா ? நாம் கட்டளையிட்டு அவர்கள் செய்ய வேண்டாம், சற்று சிந்தித்துப் பாருங்கள்.

இந்தச் சட்டசபையில் 5 நாட்கள் 10 நாட்கள் பேசியிருந்தால், என்ன பலன் கிடைக்குமோ, அது ஒரு வினாடியில் கிடைத்து விட்டது, அந்தப் பொது வேலை நிறுத்தத்தால் என்பதை, தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

அங்கே ஒரு கலகம் முதலிலே நடைபெற்று முடிந்ததற்குப் பிறகு, தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்ட பின்பு நான் இலங்கைச் செல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நான் அண்ணாவிடம் கேட்டேன். என்னை அழைத்தவர்கள் யார் என்றால் அங்கு இருக்கக்கூடிய பத்திரிக்கையாளர்களின் குரூப்பைச் சேர்ந்தவர்கள், 5, 6 பத்திரிகைகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள் அவர்கள். அழைத்து, எனக்குப் பட்டம் கொடுத்து, பாராட்டு விழா நடத்த இருந்தார்கள், இதற்காக நான் அண்ணாவிடம் கேட்டேன். இப்படிப்பட்டவர்கள் என்னை அழைக்கிறார்களே. நான் போகலாமா ? என்று, அண்ணா அவர்கள் சொன்னார்கள் "இப்போதுதான் போக வேண்டும். நீ போய் நமது கொள்கையைச் சொல்: தமிழர்கள் யார் என்பதைச் சொல்" என்றெல்லாம் சொல்லிவிட்டு, கடைசியாக நான் கேட்டதற்குப் பதிலாக ஒன்றைச் சொன்னார்கள்.

இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் என்ன தொடர்பு ? என்று நான் கேட்டேன். "எந்தத் தொடர்பும் இல்லை, கலாச்சார தொடர்பு தவிர !" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். இன்று நான் அதை நினைத்துப் பார்க்கிறேன். ஏதோ அண்ணாவின் கொள்கைகளை நாங்கள் கைவிட்டு விட்டது போலவும், ஏதோ அநியாயம் செய்து விட்டது போலவும், தமிழர்களின் மீது பற்றே இல்லாமல் ஒரு ஆட்சி இங்கே இருப்பது போலவும், சொன்னதை எல்லாம் செய்யாமல், ஏதேதோ செய்து கொண்டிருப்பது போலவும், குறைவு படப்பேசுவதை கேட்கும்போது, நான் திகைப்பு அடைந்தேன். எனக்கு வெறுப்பும் வரவில்லை; வேதனையும் வரவில்லை; அல்லது கோபமும் வரவில்லை, வராது ! நான் சிரித்துக் கொண்டுதான் இருந்தேன். என்ன நடக்கும் என்று எனக்கு முதலிலேயே தெரியும் ! ஆகவே சிரித்துக்கொண்டு இருந்தேன் தொடர்ந்து சிரித்துக்கொண்டுதான் இருப்பேன்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். டாக்டர் கலைஞர் கருணாநிதி இப்போது இந்த அவையில் இல்லை என்பது எனக்கு வருத்தமாகத்தான் இருக்கிறது. முதலில் அனுப்பிய ராஜிநாமாக் கடிதம் சட்டப்படி தவறு என்றபோது, மற்றவர்கள் எல்லாம் கேட்டுக்கொண்டபோது அதை வாபஸ் பெற்றுக்கொண்டால், திரும்ப அனுப்பாமல் இருந்திருந்தால் இங்கே நீங்கள் சொன்னபடி நல்ல கருத்துக்களைக் கேட்டு இருக்கலாம், பதில்களைச் சொல்லியிருக்கலாம். நீங்கள் அவர் இல்லையே என்பதற்காக, நாங்கள் பதில் சொல்லவேண்டிய அவசியத்தை நீங்கள் ஏற்படுத்தியதைப்போல அவர் ஏற்படுத்தியிருக்கமாட்டார்! எங்களுக்கும் அப்படிப்பட்ட நிலைமையை உண்டாக்கியிருக்க மாட்டார். எங்களுக்கும் அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டு இருக்காது. ஆனால், என்ன காரணமோ அது அவருக்குத்தான் தெரியும், உங்களுக்குத் தெரியும், இங்கே அவர் வரமுடியவில்லை. வருத்தமாக இருக்கிறது. ஆனால், இலங்கைப் பிரச்சினையில், கொள்கையில் ஒன்றுபட்டு ஏற்பட்டு இருக்க முடியும் என்பதில், யாருக்கும் சந்தேகமே இல்லை.

இங்கே சொல்கிறார்கள் பண்ருட்டி இராமச்சந்திரனை நீங்கள் அனுப்பி இப்படிச் சிக்கலாமா என்று, எங்களைச் சிக்கவைக்கப் பார்க்கிறார்கள், ஆனால், உங்களுடைய திறமையால் அந்த அரசியலில் சிக்கமாட்டோம், எங்களை சிக்கவைக்க முடியாது. அவர்கள் பூரண சுதந்திரத்தோடு போய், இங்கே இருந்து 'டெக்ஸ்ட்' அனுப்பினாலும், 'எக்ஸ்டெம்பராகப்' பேசுவதற்கு உரிமை பெற்று, அங்கே இருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்கிறேன். நேரம் இருக்கும் என்று கருதுகிறேன். நேரம் இருந்தால் அவற்றைப் படித்துக்காட்டத் தயாராக இருக்கிறேன். 2 மணி நேரம் வேண்டும். கண்டிப்பாக. நான் இரண்டு மணி நேரம் எடுத்துக் கொள்வேன். ஏனென்றால் இத்தனை நாட்களாக என்னைப் பற்றித் திட்டியதற்கும், இப்போது திட்டியதற்கும் நான் பதில் சொல்லியேயாக வேண்டும். அது என்னுடைய கடமை. நான் ஏன் இந்தப் பிரச்சினையை எடுத்துச் சொல்கிறேன் என்றால், ஏன் பண்ருட்டி இராமச்சந்திரனை அனுப்பினேன் என்றால், இப்போது அவருக்கு இங்கே வேலையில்லை, பிரச்சினை இல்லை, அதுபோல எல்லோரையுமே இங்கிருந்து அனுப்பலாம். எங்கள் அமைச்சரவையிலே இன்னார் தான் உயர்ந்தவர்கள், இன்னார் திறமை அற்றவர்கள் என்ற வேறுபாடு இல்லையென்பதை நான் துணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் பார்க்கிறீர்கள். காளிமுத்து, எஸ்.டி. சோமசுந்தரம், இருவரைத்தான் நீங்கள் கண்டுபிடித்திருக்கிறீர்கள். என்னை ஏன் கண்டுபிடிக்கவில்லை? என்று தெரியவில்லை. என்னை மீறி, எம்.ஜி.ஆர் என்ற முதலமைச்சரை மீறி, எந்தக் கொள்கையையும் வெளியிடுகிறவர்கள் எங்கள் அமைச்சரவையிலே இல்லை! ஆகவே, தயவு செய்து ஒன்றைக் தெரிந்து கொள்ளுங்கள். நாங்கள் அப்படியொரு அமைச்சரவையை வைத்துக்கொண்டு இயங்கமாட்டோம்! எங்களை மீறி, எங்களுக்குள் கருத்து வேற்றுமை வந்துவிட்டால் நாங்கள் இந்த அமைச்சரவையைக் கலைத்துவிட்டு வெளியே போய்விடுவோம் அல்லது வேறு ஒரு அமைச்சரவையை அமைத்துக் கொள்வோம். நீங்கள்

தெரிந்துகொள்ளுங்கள். இந்தப் பிரச்சினையில், நீங்கள் எங்களுக்குள் முடிச்சுப் போட முனைந்தால், முடிச்சு விழாது, அந்த முடிச்சு நிற்காது, அப்படி முயன்றாலும் முடிச்சு நிற்காமல் தானாகவே அவிழ்ந்துவிடும்.

காளிமுத்து என்ன பேசுகின்றார் என்பதைப் பற்றி நீங்கள் இப்போது சொன்னது போல், இனி, எப்படிப் பேசினார் என்று வார்த்தையை எடுத்துக்கொள்ளக்கூடாதா? 'இனி' என்ற வார்த்தையை ஏன் விட்டுவிட்டீர்கள்? அது திரு. வெங்கட்டராமன், பாதுகாப்பு அமைச்சர் மட்டும் என்று ஏன் குறிப்பிடுகிறார்கள்? இனி பேசினால் இது நடக்கும் என்று அவர் சொல்கிறார். பேசியதற்கு பதில் அல்ல. இனி இப்படி யாராவது பேசினால், புரிந்து கொள்ளாமல் பேசினால், என்று எடுத்துக் கொள்ளக்கூடாதா? இங்கே நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், ஒவ்வொன்றையும் நான் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறேன். அவர் என்ன பேசப்போகிறார் என்பதைச் சொல்கிறார். வார்த்தைகளிலே கொஞ்சம் கோபமாக வருமே தவிர, கருத்துக்களிலே மாறுபாடு இல்லை. எங்களிடத்தே எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை என்பதை இந்த அவைக்குச் சொல்வதிலே நான் மகிழ்ச்சியுறுவேன். அவை, இதைத் தெரிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், அவையில் உள்ள அனைவருடைய நம்பிக்கையிலே தான் அரசு நடக்கிறது. குற்றம் சொல்லலாம், கண்டிக்கலாம், எதிர்ப்புத் தீர்மானங்கள் கொண்டுவரலாம், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதுகூட எங்களைத் திருத்துவதற்கு அல்லது நாட்டிலே உள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்வதற்குத்தானே தவிர, வேறொன்றுமில்லை! நாவலரை மறந்து விட்டாலும் நாவலர் பேசிய பேச்சை அவர்கள் நினைவு வைத்திருக்கிறார்கள் என்பதால், எனக்கு மெத்த மகிழ்ச்சி! என்ன சொல்கிறார்கள் என்றும், அவர்கள் எப்படி விமர்சனம் செய்கிறார்கள் வெளியே என்பதையும் நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். பத்திரிகையிலும் படிக்கிறேன்; அந்த நாவலரை மறந்துவிட்டு, இந்தளவாவது மரியாதையை கொடுக்கிறார்களே! அதுவரையில், நான் நன்றியை சொல்லிக் கொள்கிறேன்.

ஒரு கேள்வி என்னுடைய உள்ளத்தில் இருக்கிறது. இந்தத் தீர்மனம் யாரைக் கண்டிப்பதற்கு? யாருக்கு உதவி செய்வதற்கு? யாருக்கு வலிவு ஊட்டுவதற்கு? எந்தக் கொள்கையை உலகுக்கு எடுத்துச் சொல்வதற்கு? இதை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால், நாம் இங்கே பேசுகின்ற கருத்துக்களின் மூலமாக ஒருவரைப் பிரித்துவிட்டு, இன்னொருவரை ஒதுக்கி வைத்துவிட்டு, இளைஞர்களைக் காட்டிக்கொடுத்துவிட்டு நாம் ஏதாவது இங்கே தீர்மானம்போட்டு புகழைப் பெற நினைத்தால், அது தமிழர்களுக்கு நல்லது அன்று, தமிழ் இனத்திற்கு நல்லது அன்று! கஷ்டப்படுகிற இலங்கை தமிழ் மக்களுக்கு நன்மை இல்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நஷ்டப்பட்ட அத் தமிழின மக்களுக்கு, நாம் என்ன வழி செய்யப்போகின்றோம், அதற்காக, யார் யோசனை சொல்வார்கள்? என்று கருதினேன். திரு. சங்கரய்யா

அவர்கள், அவர்களுடைய தனித் தன்மையோடு சில விளக்கங்களை தெரிவித்தார்கள். கருத்துக்களை தெரிவித்தார்கள். அதுபோல திரு. அழகர்சாமி அவர்களும் மற்றும் சில நண்பர்களும் தெரிவித்தார்கள். அவர்களுக்கு எல்லாம் நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன். யோசனை சொல்வதை நாங்கள் எற்றுக் கொள்ள தயாராக இருக்கிறோம். ஏற்றுக் கொள்ளக்கூடிய சில திருத்தங்களைக் கூட, நாங்கள் சேர்த்துக்கொள்ளப் போகின்றோம். இதுதான் முடிவு, இதையே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லப்போவது இல்லை. ஆனால் திரு. அமிர்தலிங்கத்தின் இன்றைய நிலைமை என்ன? அவருக்கு அவர்கள் பாஸ்போர்ட்டு கொடுக்கவில்லை என்றால் அவர் நிலைமை என்ன? அவர் நாடு அற்றவர். ஒன்று, அங்கு சென்றுவிட வேண்டும். சென்றால் என்ன ஆகும் என்பதற்கு உத்திரவாதம் இல்லை. அந்த உத்திரவாதத்தை நாம் பெறுவதற்கு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றும்போது இவ்வளவு வேறுபாட்டைக் காட்டினால், அந்த அரசாங்கம் மதிக்குமா? அச்சத்திற்கு உள்ளாகுமா? என்ன நிலைமையை அவர்களுக்கு அது ஏற்படுத்தும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

ஒரு வேடிக்கையான செய்தியை இரண்டு நாட்களாகப் படித்தேன். என்னுடைய படத்தை, 20 தியேட்டர்களில் இருந்ததை, அதை காண்பிக்கக் கூடாது என்று சொல்லிவிட்டார்கள் அந்த அரசாங்கத்தார் என்ற ஒரு செய்தி. இன்றைய தினம் ஜனாதிபதி சொல்கிறார், எனக்குத் தெரியாது அவர்கள் போட்டுவிட்டார்கள் அது ஓடும். இலங்கையின் நிலைமை இது. இது யாருடைய பாதுகாப்பில்; யாருடைய கட்டுப்பாட்டிலே; யாரால், இயங்குகிறார்கள்? எப்படித் தொடர்பு இருக்கிறது என்றே நமக்குப் புரியவில்லை.

குற்றம் சொல்லும்போது எப்படி நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேனோ அதேபோல் ஜெயவர்த்தனே பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் ஜெயவர்த்தனேவைத் தான் குற்றம் சொல்லமுடியும். அங்கே சிரில்மாத்யு என்பவர் ஒருவர் இருக்கிறார். அவரைப் பற்றி சொல்லலாம் என்றால், அது செகண்டரி. அதைப்பற்றி நாம் கவலைப்படவில்லை. அவர் கண்ட்ரோல் பண்ண வேண்டியவர். ஆனால் நிலைமை அப்படி இருக்கும்போது இன்னும் நமக்கு வருகிற செய்திகளை எல்லாம் நாம் எண்ணிப் பார்த்தால், ரௌடிகள் அல்ல, வேறு சிலர் இந்த வன்முறை செயலில் கொடுமைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று செய்தியும் வந்திருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லமுடியுயாத, அளவுக்கு இருப்பதால் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. செய்தியை நான் சொல்கிறேன். அது உண்மையா? பொய்யா? என்பது சில நாட்கள் கழித்து தெரியும்.

இங்கே, கிட்டுமணியின் கண்ணை கீழே வைத்து மிதித்தார்கள் என்று சொன்னார்கள். அது எவ்வளவு துயரமானது வேதனை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது! இன்னொரு சமயம் பத்திரிகையில் வந்தது அந்த கிட்டுமணியின்

கண்ணைப் பிடுங்கி எறிந்து விட்டார்கள் என்று! எது உண்மை என்பதை அங்கே கூட இருந்தார்களே அவர்கள்தாம் சொல்லவேண்டும்! நமக்குத் தெரியாது! ஆனாலும், எந்த நாட்டிலும் நடைபெறாத, நிகழ்வு ஒன்று நிகழ்துள்ளது. ஒரு கைதிக்கு, ஒரு குற்றவாளிக்குப் பாதுகாப்பான இடம் எது என்றால் சிறைச்சாலைதான்! அந்தச் சிறையிலே கூட பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை ஏற்படுமானால் அந்த அரசைத் துணிந்து வசைபாடித் தீர்க்கலாம். தீர்மானம் இயற்றலாம். அதில் ஆட்சேபணை 'இல்லை' ஆனால், தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு, நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதும், நமது பேச்சுக்களிலே வெளிவந்திருக்குமானால், எனக்கு அது மிக நன்மையாக இருந்திருக்கும்; அது இல்லை! 'நீ சட்ட சபையைக் கூட்டவில்லை, படையெடுப்புக்கு நீ ஆதரவு தரவில்லை, தமிழ் விடுதலைக்கு நீ ஆதரவு வார்த்தை சொல்லவில்லை, எப்பொழுதும் போல தாமதமாக' என்று சொல்கிறார்கள். நான் தாமதப்படுத்துவது தவறுதான் என்றாலும், சில விஷயங்களைத் தாமதமாகச் செய்வதால் ஆபத்துதான். ஆனாலும், அதைவிட, அவசரப்பட்டு செய்தால், மிகமிக ஆபத்து. அண்ணா அவர்கள் கூடச் சொன்னார்கள், நான் மெல்லத்தான் காலடி எடுத்து வைக்கிறேன். அந்தக்காலடி அழுத்தமாக இருக்கும், மெல்லத்தான் போவேன் என்று. அவ்வளவு சக்தி எனக்கு இல்லை ஆனால், அதைத்தொடர முடியும், தொடருகிறேன். அதிலே தாமதம் ஏற்பட்டால், என்னுடைய மனசாட்சிப்படி, நாங்கள் எடுத்துக் கொண்ட முடிவுப்படி, அமைச்சரவை தீர்மனம் நிறைவேற்றினோம்.

கண்டனக் கூட்டம் என்பதற்குப் பதிலாக பொது வேலை நிறுத்தம் என்று முடிவு எடுத்தோம், அனைவரையும் கூப்பிட்டோம்: வந்தார்கள்; ஆதரித்தார்கள்; நடவடிக்கை எடுத்தார்கள். அந்தக் கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றிய பிறகு, எல்லோரும் கலந்து கொண்ட பிறகு, யார் யாருக்கு வாய்ப்பு இருந்ததோ, அவர்களை எல்லாம் பிரதம அமைச்சரைக் காணுவதற்கு அழைத்து சென்றேன் என்பதையும், மறந்துவிட்டீர்கள்! திராவிட முன்னேற்றக் கழக கட்சி எம்.பி. டாக்டர் கலாநிதி அவர்கள் அங்கே இருந்தார்கள். அந்த மனுவில் அவர்கள் கையெழுத்திட்டார்கள். மார்க்சிஸ்ட் கட்சி ஒன்றுதான் கையெழுத்திட்டது என்று இருந்ததே தவிர, பாக்கி அங்கே வந்த அனைத்துக் கட்சியினரும் கையெழுத்திட்டார்கள். இங்கே உள்ளவர்களும் கையெழுத்திட்டார்கள். அப்படியிருக்க ஏன் இப்படிச் சொல்கிறார்கள்? இதை எங்கே போய்ச் சொல்வது? அந்த மனுவை பிரதமரிடம் கொடுத்து, அவர்கள் சொன்ன வார்த்தையை இன்றையதினம் சொல்வது தவறு என்று கருதுகிறேன்.

எதற்குச் சொல்கிறேன் என்றால், கையெழுத்திடாதவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள், கையெழுத்திட்டவர்களே குறை கூறுகிறார்கள் என்பதுதான் என்னுடைய வேதனை. அதைத்தான் நான் சொல்கிறேன். அந்த மனுவில் பிரதம அமைச்சரிடம் என்ன சொன்னோம்? ஐக்கிய நாட்டு அமைதிப் படையை, பாதுகாப்புப் படையை அங்கே நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அது அவர்களுக்கு பிடிக்காத காரியம், அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆனால், மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். வேலை நிறுத்தம் என்றால், நாங்கள் குறை சொல்வதாக நினைக்க வேண்டாம். கம்யூனிஸ்ட் கட்சிகளைவிட முன்னால் நிற்கின்றவர்கள் யாருமே கிடையாது. அதற்குப் பின்னால்தான், எவரும் ஏதாவது பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால், வேலை நிறுத்த போராட்டம் என்று முன்வந்து முடிவெடுத்து எந்தத் தண்டனையையும் தாங்கிக் கொள்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள்! அவர்கள்தான் முன்னே நிற்கிறார்கள். இன்னும் யாராவது இருந்தால் அவர்கள் பெயரையும் சேர்த்துக்கொள்கிறேன். கோபித்துக்கொள்ள வேண்டாம். ஆனால், அப்படிப்பட்டவர்கள் எந்த அளவுக்கு ஒத்துக்கொள்வார்கள் என்பதைத் தயவுசெய்து நினைத்துப் பார்க்கவேண்டும். அந்த மெமாரண்டத்தில் கையெழுத்துப் போட்டவர் இவர்களுடைய தலைவர் சொல்லியிருக்கிறார் படை அனுப்ப வேண்டும், என்று. என்னைக் கேட்டார்களே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? என்று எனக்கு தெரியாது. என்னை கேள்வி கேட்டார்கள். திரு. காளிமுத்து ஒன்று பேசுகிறார். திரு. எஸ்.டி.எஸ். ஒன்று பேசுகிறார். உங்களுடைய கொள்கை என்ன? எம்.ஜி.ஆர். சொல்லட்டும் என்று சொன்னார்கள். நான் சொல்லிவிட்டேன், என்னுடைய நிலைமையை. நான் இப்பொழுது கேட்கிறேன். பிரதம அமைச்சரிடம் கொடுத்த மனுவில் என்ன இருந்தது? இப்பொழுது என்ன நிலைமை இருக்கிறது? திரு. இராமச்சிந்திரன் பேசியதில் என்ன தவறு இருக்கிறது? மனித உரிமைகளைப் பற்றி பேசும்போழுதோ, அதிகாரிகளைப் பற்றி பேசும்போதோ, இந்தப் பிரச்சினைகனைப் பேசவேண்டியிருக்கிறது. ஒரு படையெடுப்பைப்பற்றி பேசுவதற்காக அங்கே வாய்ப்பில்லை; அங்கே அதற்கு இடமும் இல்லை. அகதிகள் பிரச்சினை வந்தபொழுது அந்தத் தலைப்பில் என்ன பேச முடியுமோ, எதையெல்லாம் சொல்ல முடியுமோ, அவற்றையெல்லாம் அவர்கள் கொஞ்சங்கூட விட்டுக் கொடுக்காமல், பேசி இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதை முழுவதும் படிக்கவேண்டும், அப்பொழுதுதான் எல்லோருக்கும் தெரியும்.

நான் மனம் விட்டுச் சொல்கிறேன். அவருக்கு ஒரு பாராட்டா? என்கிறார்கள். அவரைவிட, யாருக்கு பாராட்டு கொடுப்பது? என்று எனக்குத் தெரியவில்லை. நேற்று ஒன்று, இன்று ஒன்று, என்று பேசிவிட்ட பின்னாலே போய் பேசுகிறபோது, வேறு ஒன்றை பேசிவிட்டு பின்னாலே பேசச் சொல்கிறவர்களுக்கு வேறு ஒன்றை சொல்லிக் கொடுத்துவிட்டு, எங்கோ இருப்பவர்களுக்குப் பாராட்டு என்று சொல்கிறவர்கள் இதுவரையில், ஐ.நா. சபையில் தமிழன் ஒருவன் போய் பேசிய வரலாறு கிடையாது. தமிழ்நாடு அரசின் சார்பாக, தமிழன் அங்கே போய் பேசி, இலங்கைப் பிரதிநிதிக்கு மறுப்புச் சொல்லி, அதைத் தோற்கடித்து, அங்கே சென்றிருந்த இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் மாண்புமிகு மின்துறை அமைச்சர் இராமச்சந்திரனைக் கட்டித் தழுவி, கைலாகு கொடுத்து, அவர்களை பாராட்டியதை கேட்ட பிறகும், அவருக்கு ஒரு பாராட்டா என்றால், இலங்கையைப் பற்றி பேசுகிற நம்மை, இலங்கைக்காரர்கள் பாராட்டுகிறார்கள். நாம் பாராட்டகூடாதாம்! அவருக்கு என்ன பாராட்டு? என்று

இங்கேயிருந்து பேசுகிறோம். ஈழத்திற்குச் சுதந்திரம் ஈழத் தமிழர்களால்தான் பெறப்பட வேண்டுமேயொழிய இங்கிருக்கும் நம்மால் அன்று, என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்! இதை ஒரு விவாதப் பொருளாக ஆக்க விரும்புகிறேன். அதை நான் சொல்ல வேண்டுமென்றே என்னுடைய கருத்தை ஆரம்பிக்கிறேன். எங்களுக்கு சுதந்திரம் வேண்டுமென்று யார் கேட்பது? இன்னொரு நாட்டினுடைய சிபாரிசு தேவையில்லை. அவர்கள் போராட்டம் தொடங்கி, கணக்கற்ற நெருக்கடிகளுக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டு, வேறு வழியேயில்லை என்ற நிலை ஏற்படுகிறபோது உலகம் தானாக ஆதரிக்கும். அந்த ஆதரவு ஏற்படுகிறபோது அதற்கு ஒரு முடிவு ஏற்படும். அதுவரையில், அவர்கள்தான் அதுபற்றி முடிவு செய்யவேண்டும். அவர்களுக்குப் பதிலாக நாம் முடிவு செய்வது சரியன்று! தொண்டமான் சொல்கிறார்; ஈழத் தமிழர் பிரிந்துவிட்டால், எங்களுக்கு பாதுகாப்பு இருக்காதே என்று; அமிர்தலிங்கம் சொல்கிறார், பேசித் தீர்க்க வேண்டுமென்று, என்ன பேச்சு? 'வட்ட மேசை' என்கிறார்கள். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு எத்தனை முறை பேசியிருக்கிறார்கள்? இலண்டன் வட்ட மேசையிலே மகாத்மா காந்தி பேசிவிட்டு வந்தவுடன் கைது செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகும் பேச்சு வார்த்தைகள் நடக்கவில்லையா? இங்கே ஜின்னாவிற்கும், காந்திக்கும் பேச்சு வார்த்தை நடக்கவில்லையா? இராஜாஜி, குறுக்கிட்டு மத்தியஸ்தம் செய்ய முற்படவில்லையா? சுதந்திரம் கேட்ட உடனேயே கிடைத்துவிட்டதா? பிரிவினையிலே நம்பிக்கையில்லை என்று கையெழுத்து போட்டு நாம்தான் இங்கே அசெம்பிளியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். நாடாளுமன்றத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் கையெழுத்துப் போடமாட்டேன் என்கிறார்கள், அவர்களைப் பாராட்டுவதா? தூண்டிவிட நமக்கு என்ன உரிமை இருக்கிறது? நமக்கு துணிச்சல் இல்லாத வேளையில், அவர்களுக்கு துணிச்சல் இருக்கிறதே! என்று பாராட்ட வேண்டுமே தவிர, அவர்களை தனி நாடு கேளுங்கள்; இங்கேயிருந்து படையெடுக்கச் சொல்லுங்கள். என்று சொல்வது என்ன அரசியல் வியாபாரம்? நாம் செய்ய முடியாததை இன்னொருவர் செய்தார்கள், என்று பராட்டுவதைவிட, புகழ்வதை விட, நாம் வேறு ஏதோதோ பேசிக் கொண்டிருந்தால் எப்படி அது நியாயமாக இருக்கும்? பிரிவினை கேட்டவர்கள் நாம். இலங்கையிலே உள்ளவர்கள் எப்போது பிரிவினை கேட்டார்கள்? உங்களுக்கே தெரியும். நீங்களே சொன்னீர்களே முதலிலே, அவர்கள் பிரிவினை கேட்கவில்லை, சம உரிமைதான் கேட்டார்கள் என்று. அண்ணாவின் வழி வந்த அவர்களுக்கு வாக்குரிமை வேண்டும்; தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நான் படிக்காமல் இல்லை. எனக்கு ஒருவேளை முன்னால் புரியாமல் இருந்திருக்கலாம். இப்போது படித்துக்கொண்டுதான் இருக்கிறேன், படிக்கவும் செய்கிறேன்.

நாங்களெல்லாம் இளைஞர்கள் என்று சொல்கிறீர்கள், அதை நான் வரவேற்கிறேன். இளைஞர்களாக இருக்க வேண்டியதுதான், வயதானதாக எண்ணமே வரக்கூடாது! அந்த எண்ணம் வந்துவிட்டால், அவர்களால் வேலை செய்ய முடியாது! தீடீரென்று

சந்தேகம் வந்து விடும்; நெஞ்சுவலிப்பது போல் இருக்கும்; படியில்கூட ஏற வேண்டாமே என்ற எண்ணம் வந்துவிட்டால், பிறகு வேலையே ஓடாது!

எதற்காக நான் இதைச் சொல்கிறேன் என்றால், குற்றம் சொல்கிறீர்களே, நாங்களும் அந்தக் கட்சியிலே இருந்தவர்கள்தாம் என்பதையும் எண்ணிப்பார்த்துவிட்டுக் குற்றம் சொல்லுங்கள். அந்த கொள்கைவழிதான் நடக்க விரும்புகிறோம் என்பதை நம்பிச் சொல்லுங்கள்; நாங்கள் செய்வதில் குற்றம் இருக்கலாம். அதைக் களைவதற்கான வழிகள் என்ன என்பதைச் சொல்லுங்கள், ஆனால், குற்றவாளியாகப் பார்க்காதீர்கள்! குற்றவாளியென்று கூறாதீர்கள்.

அண்ணா அவர்கள் திராவிட நாடு வேண்டுமென்று கேட்ட நேரத்தில், அதைச் சொன்னார்கள். ஆனால், அதற்குப் பிறகு அந்தப் பிரச்சினையில்லை. என்னை இலங்கைக்கு அனுப்பிய நேரத்தில். இது, வெறும் கலாசாரத் தொடர்புதான், இலங்கைக்கும் இந்தியாவில் உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னார்கள்!

அரசியல் தொடர்பு சம்பந்தமாக அந்த நாட்டைப் பொறுத்தவரையில், அந்த நாட்டில் உள்ள அவர்கள்தான் முடிவெடுத்துக் கொள்ள வேண்டும். நமது நாட்டில் தேவைகளைப் பற்றி நாம் முடிவெடுக்க வேண்டும். இதுதான் இங்கே இருக்க வேண்டிய நிலைமை.

அந்த நிலையில் பார்த்தால், இந்த அரசாங்கம் கொஞ்சம் அத்துமீறிப் போய் இருக்கிறது என்பதை தயவு செய்து ஒத்துக்கொண்டு பாராட்ட வேண்டும். எங்களுக்கென்று, சில பொறுப்புகள் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறீர்கள். உங்கள் தலைவர், பொறுப்போடு இருந்து நிறைவேற்றியிருக்கிறார். நாங்கள் பொறுப்பை மீறி கடமையைச் செய்கிறோம். அதற்கு எங்களுக்கு கிடைக்கின்ற பரிசு, திட்டு, குற்றம், குற்றச்சாட்டு, தமிழர் மீது எங்களுக்குப் பாசம் இல்லை. அக்கறை இல்லை என்பவைதாம். இப்படியெல்லாம் சொல்ல, உங்களுடைய மனசாட்சி உங்களை உறுத்தவில்லையா? பழகியவர்கள் அல்லவா? ஒரே இலையில் உண்டவர்கள் அல்லவா? அதையெல்லாம் நினைத்துப்பாருங்கள். எங்களை விட்டு, அந்த உணர்வு எப்படிப்போகும்? துணிச்சல் அதிகமாகத்தான் ஆகும். மக்கள் சக்தி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு துணிச்சல் அதிகமாகுமே தவிர, குறையாது! குறை சொல்பவர்கள், அதைத் தயவு செய்து உணர்ந்து பார்க்கவேண்டுமென்று வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

இன்னும் ஒன்றரை மணி நேரம் வேண்டும். இத்துடன் முடித்துவிட்டு நாளைக்கு வேண்டுமானால் தொடரலாம்.

பேசுவதற்கு வாய்ப்பு அளித்த அவைக்கு உங்கள் மூலமாக, என்னை ஆதரித்தவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனாலும் எங்களைப் பற்றி, இந்த அரசைப் பற்றிக் குறை கூறுகிறவர்களுக்கு அந்த குறைக்கு, எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டியது இந்த அரசை நடத்துகின்ற பொறுப்பில், முதன்மையாக நான் எனது கட்டாயக் கடமையாகக் கருதுகிறேன் அதை இந்த அவையும் ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறேன்.

நான் முதன் முதலிலே எம்.எல்.சி.யாக அறிஞர் அண்ணா அவர்களின் கட்டளையை ஏற்று பதவிக்குச் சென்றபோது, தேனி தியாகராஜன் அவர்கள் அங்கே சில கருத்துக்களை வெளியிட்டார்கள். அதை எதிர்த்து இப்போது அமரராகிவிட்ட நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.இராமசாமி அவர்கள், அப்போது கடுமையாக பதில் சொன்னார்கள். நான் கற்பனை செய்துகொண்டு போன மேலவை ஒன்று, நான் கண்ட காட்சி, அனுபவித்த காட்சிகள் வேறு. இதைப் பற்றி நான் என்னுடைய கன்னிப்பேச்சில் ஒன்றைச் சொன்னேன், எறிகிற பந்தை நாம் எவ்வளவு வேகமாக எறிகிறோமோ அவ்வளவு வேகமாக அது திரும்பி நம்மிடமே வரும் என்று நான் சொன்னேன். இந்த நேரத்தில், அந்தச் சொற்களை நான் நினைவுபடுத்திக்கொள்கிறேன். எங்கள் மீது எவ்வளவு வேகமாக பந்தை வீசுகிறீர்களோ அதே போன்றே பந்து உங்களிடமும் அதே வேகத்தில் வந்து சேருமென்பதை மறந்து விடாதீர்கள்! நேற்றையதினம் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நீண்ட பேச்சைப் பேசி இருக்கின்றார்கள். அதில் சிலவற்றுக்குத்தான் இன்று பதில் சொல்ல இருக்கிறேன். மற்றவை, மற்றவர்களுக்கு அதில் அவர் சொல்லியிருக்கிறார்.

ஒரு தேரை இழுத்துச் செல்ல வேண்டுமென்றால், இரு வடங்களையும் ஒரே மாதிரியான உள்ளத்தோடு, ஒரே மாதிரியான எண்ணத்தோடு எந்த இடத்தில் தேர் நிலைக்குச் செல்ல வேண்டுமோ, அந்த இடத்தை நோக்கி, இழுத்துச் செல்ல வேண்டுமென்ற கருத்தில் அவர் இங்கே பேசினார்கள். நல்ல உதாரணம். எத்தனை ஆயிரம் மக்கள், அந்த வடத்தை அக்கறையோடு சேர்த்து இழுக்க வேண்டுமென்ற அவர் கருத்தை நான் மதிக்கிறேன், போற்றுகின்றேன், பாராட்டுகின்றேன், வரவேற்கிறேன். அதற்காக இப்படிப்பட்ட நண்பர், இங்கே சட்டமன்றத்திற்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறார் என்பதற்காக நான் பெருமைப்படுகிறேன். ஆனால், அவருடைய சொல்லுக்கும், அந்தக் கழகத்தின் செயலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா என்பதை நான் திரும்பத் திரும்ப, அந்தப் பேச்சைப் படித்து நேற்று இரவு—பல மணி நேரம் என்றுகூடச் சொல்லலாம்— சிந்தித்துப் பார்த்தேன். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் ஈழத் தமிழர்களுக்கு, நன்மை செய்ய வேண்டுமென்ற நினைவு வந்து, பல வழிமுறைகளில் நாம் ஒன்று சேர்ந்து பணியாற்ற வேண்டிய நேரத்தில், நாங்கள் தனியாகப் பணியாற்றுவோம்—

செயல்படுவோம் என்ற சிந்தனையில், மத்திய அரசும் மாநில அரசும் ஒத்துழைத்துங்கூட இங்கே கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தில், அத்தனை கட்சிகள், வெளியே இருப்பவர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கிக்கொண்டு வந்துங்கூட, அத்தனை பகுதிகளையும் கண்டிக்கின்ற ஒரு தீர்மானத்தை இங்கே பரிந்துரை செய்திருக்கிறீர்களே, என்று எண்ணிப் பார்க்கும்போது, யார் வடத்தை எந்தப் பக்கம் இழுத்துச் செல்ல விரும்புகிறார்கள் என்பதிலே எனக்கு ஐயம் ஏற்படுகிறது. இழுத்துச் செல்ல வேண்டிய இடம் இலங்கைக்கு. இலங்கையிலே இருக்கிற தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய, ஆனால் இங்கே என்ன நடக்கிறது என்றால், நன்மை செய்ய விரும்புகின்ற அத்தனைபேர் சொன்னதற்கும் எதிராக, ஒரு தனிக் கட்சி, நான் சொல்வதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்; நாங்கள் சொல்வதுதான் சரி என்ற ஒரு முடிவுக்கு வந்து இதை ஆதரியுங்கள் என்று சொன்னால், ஒருவர் சொன்னாலும் அல்லது ஒரு சிறு குழந்தை சொன்னாலும்கூட, எல்லோரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்—அதுதான் தமிழகத்தினுடைய வழக்கம். ஆனால், நேர் முரணாகச் சொல்லும் போது, இதை எப்படிச் சொல்கிறார்கள்? வேண்டுமென்றே சொல்கிறார்களா? திசை திருப்ப வேண்டுமென்பதற்காகச் சொல்கிறார்களா? என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

நேற்றைக்கு நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசிய பேச்சை, பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறார்கள். அதையும் படித்தேன். அதற்கு என்ன, என்ன தலைப்புகள் கொடுக்கிறார்கள், எப்படி எழுதியிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது. அது இலங்கைத் தமிழர்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு காரியமாக அமைகிறதா என்பதை தயவுசெய்து அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்ற என்னுடைய பணிவான வேண்டுகோள் என்றே வைத்துக் கொள்ளுங்கள், கவலை இல்லை; நான் அதிலே கௌரவத்தைப் பார்க்கவில்லை, வேண்டுகோளாக வைக்கிறேன்!

இங்கே பேசுகிறவர்களிலே, எத்தனை பேர் என்ன பேசினார்கள் என்று பார்த்தால், எனக்குத் தெரிந்தவரையில் தி.மு. கழகத்தைத் தவிர, பாக்கி எல்லோரும் மைய அரசும் மாநில அரசும் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் சரியானவை, நியாயமானவை, ஆனால் இந்தத் தீர்மானத்திலே சில திருத்தங்கள் தேவை என்று அவர்கள் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். நடைமுறைக்கு ஏற்றதாக, இலங்கைவாழ்த் தமிழர்களுக்குப் பயன்படும்படியாக அவை சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, இங்கு இருக்கிற ஒட்டுமொத்தமான ஜனநாயக சக்திகள் எல்லோரையும் ஒன்றாக்கி, அவர்களுடைய ஆதரவையும் பெற்று, பெறச்செய்து, ஆதரவை ஏற்கச் செய்து, ஒரு காரியதைச் செய்ய வேண்டும். அதைப் பயன்படுத்த வேண்டுமென்று மைய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது. இதிலே ஜாதி இல்லை, மதம் இல்லை, கட்சி இல்லை, வேறு முதலாளி, தொழிலாளி வர்க்கம் என்று எந்தப் பிரச்சினையும் இல்லாத ஒரு கருத்தைச் சொல்கிறார்கள் என்றால் அதை வரவேற்காமல் இருக்க முடியாது.

ஆனால், அதேசமயத்தில் இந்திரா காந்தி என்ன செய்தார்கள் என்று கேட்டு, எப்படியும், கடைசியில் அந்த நான்கைந்து வார்த்தைகளைச் சொல்லியே தீரவேண்டும் என்பதற்காக, கடைசியிலே உங்களுக்கு நிறைய 'டைம்' இருக்கிறது. உங்களுடைய பேச்சின் போது நான் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன். இப்போது, நீங்கள் சிரித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள். இதில் கேள்வி பதில்களுக்கு இடமில்லை. எண்ணங்கள், விமர்சனம் செய்வதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம். இதற்கு கேள்வி இல்லை. எனக்குத் தெரிந்தால் விளக்கத்தைச் சொல்லப் போகிறேன். இல்லையென்றால், ஒன்றும் சொல்லாமல் இருக்கப்போகிறேன். எல்லாம் தெரிந்தவன் நான் என்று என்னை சொல்லிக்கொள்ளத் தயாராக இல்லை! ஆகவே, ஒரு விஷயத்திலே நான் ஒரு விளக்கத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறேன். யாருக்காகவும் நான் சிபாரிசு செய்யவரவில்லை. திருமதி இந்திரா காந்தி செய்தார்கள் என்று கேட்கிறீர்கள். முதலிலே அவர்கள் செய்த காரியம், அவர்களுடைய சிக்கிம் சுற்றுப் பயணத்தை இடையிலே நிறுத்திவிட்டு, டெல்லிக்கு வந்து, அதிகாரிகளை அழைத்து, தனக்கு யார் யோசனைச் சொல்லக் கூடியவர்களோ அவர்களை அழைத்துப் பேசி, நாம் இங்கேயிருந்து சந்திக்க வேண்டுமென்று சொன்ன உடனே தேதி கொடுத்து, நம்மையெல்லாம் சந்தித்து, நாம் சொன்னதையெல்லாம் கேட்டு, அவர் சொன்ன பதம் ஒன்றை இங்கே நான் தெளிவுபட, விளக்கமாக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். 'ஏதாவது செய்ய வேண்டும். எப்போது, எப்படி என்பதைத் தான் நான்யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொன்ன அந்த வார்த்தையை நாம் மறந்து விடுகிறோமே, அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. வட நாட்டிற்கு ஒன்றா ? தமிழ்நாட்டிற்கு என்றால் ஒன்றா ? அவர்கள் செத்தால்தான் கவலையா ? பங்களாதேஷில் செத்தால்தான் வருவார்களா என்றெல்லாம் பேசுவது சரியா ?

நான் ஒரு குறிப்பைச் சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். கிழக்குப் பாகிஸ்தானை, பங்களாதேஷ் என்னும் சுதந்திர குடியரசாக முஜிபுர் ரகிமான் அவர்கள் அறிவித்த தேதி 26.03.1971. இதை நாம் மறந்து விடுகிறோம். பங்களா தேஷில் ஏதோ நடந்தது; ஆகவே நாம் அங்கே பாதுகாப்பிற்குப் போனோம் என்பதை மறந்துவிடுங்கள். அது உண்மையில்லை. அது நான் அல்ல, உலகம் எப்படித் தீர்மானிக்கிறதோ அப்படி ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு, சொல்வதற்கு எனக்குத் தகுதியிருந்தால் உங்களை நான் அழைத்துக்கொண்டு போயிருப்பேன்! நீங்கள் மாத்திரம் எங்களோடு சேர்ந்தவர்கள் இல்லையா ? முதலில் உங்களைத்தான் தளபதியாக அனுப்பிவைப்பேன்.

அந்த சக்தி இல்லை, அந்த நிலைமை இந்தியாவில் இல்லை. இந்தியா ஒரு உரிமை பெற்ற நாடு! பிரிவினை அடைந்த நாடு அல்ல, நாம் சுதந்திரம் பெற்ற தமிழ்நாடு தன்னை எப்படி என்று அறிமுகப்படுத்திய பிறகு, வெளியிட்ட பிறகு ஐக்கிய நாடுகள் ஏற்றுக்கொள்கிறது. அதன் ஜனத்தொகை ஐந்தாயிரமாக இருந்தாலும் சரி, ஐம்பதாயிரமாக இருந்தாலும் சரி, ஐம்பது இலட்சமாக

இருந்தாலும் சரி, அல்லது ஐம்பது கோடியாக இருந்தாலும் சரி. அதேபோல் பங்களாதேஷ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சுதந்திர குடியரசாக முஜிபுர் ரகிமான் அவர்கள் அறிவித்தார்கள். அப்படியானால், அது ஒரு தனிநாடு என்று 26.03.1971இல் பிரிந்துவிட்டது. பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. எப்போது என்றால், சில மாதங்களுக்குப் பிறகு 03.12.1971இல் பிரகடனம் செய்யப்பட்டது. இதைக் குற்றம் சொல்பவர்கள், நண்பர்கள் தயவு செய்து கொஞ்சம் இதை மனத்தில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் இதை மறந்திருக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள் இங்கே இருக்கிறார்கள். இங்கே இருப்பவர்களில் பி.ஏ. படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள், என்னைவிட அதிகமாகப் புத்தகங்களைப் படிக்கின்ற வாய்ப்பு உள்ளவர்கள் இருக்கிறார்கள். இன்னும் உருது, இந்தி போன்ற வேறு மொழிகளில் சிறந்தவர்களும் இருக்கிறார்கள். சமஸ்கிருதத்திலே ஸ்காலராகக்கூட இருக்கலாம்.

பாகிஸ்தான் இந்தியாவிற்கு எதிராகப் போர் அறிவிப்பு செய்தது 04.12.1971. அதாவது 03.12.1971ஆம் தேதி அவசரநிலைப் பிரகடனம்; இடையில் ஒரே நாள்தான் பாராளுமன்றத்தில் இரு அவைகளிலும் பிரதமர் அறிவிப்பு செய்தது 06.12.1971.

இவற்றையெல்லாம் மறந்துவிட்டு பங்களாதேஷுக்கு உதவி செய்தார்கள் என்று இந்திராகாந்தி அம்மையார் அவர்களைப் பற்றிச் சொல்கிறார்கள். அதைச் சொல்லவே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது. இலங்கைக்கும் அதற்கும் இது எப்படிப் பொருந்தும் என்று, எனக்குத் தெரியவில்லை; பாகிஸ்தான் படை எடுக்கிறது. பாகிஸ்தானிலிருந்து ஒரு பகுதி அவர்கள் குடியரசாக அறிவித்துவிட்டார்கள். அதை ஏற்றுக்கொண்டுவிட்டோம். நம் மீது படையெடுத்த பிறகு நாம் படையெடுத்தோம். பங்களாதேஷுக்கு உதவி செய்தோம் இதுதானே தவிர, வேண்டுமென்றே இந்தியா படையெடுக்கவும் இல்லை.

உருது பேசாத மக்களுக்கு எதிராக வங்கதேச மக்கள். ஏதோ செய்துவிட்டார்கள் என்று அந்த மொழி உணர்வில் இன உணர்வில், அவர்கள் போனார்கள் என்று சொல்லி பெரிய குற்றச்சாட்டை, இல்லாத ஒன்றை இந்தச் சட்டமன்றத்திலே சொல்லி, ஒருவரை குறை சொல்வது அவ்வளவு பொருத்தமன்று.

உடனே கேட்பார்கள், “நீ ஏன் பயப்படுகிறாய், இந்திரா காந்திக்கு” என்று திரு.நெடுமாறன் அவர்கள், இங்கே பேசியிருக்கின்றார்கள். அதற்கு நான் பின்னால் பதில் சொல்கிறேன்.

சுதந்திரம் கிடைத்த சிலகாலத்தில், இங்கே மகாத்மா காந்தியைக் கொன்று விட்டார்கள். அங்கேயும் அவரைக் கொன்று விட்டார்கள். 7 மாதங்களிலே அதற்குள் நான் போகவில்லை.

ஆகவே, திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் நடவடிக்கை எடுத்ததில், அந்த நடவடிக்கைக்கு என்ன அடிப்படைக் காரணம்? இப்பொழுது இந்த முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு என்ன அடிப்படைக் காரணம் என்பதைப் பார்க்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்களுக்குச் சாதகமாக, இந்தியாவிலுள்ள, தமிழ்நாட்டிலுள்ள அத்தனைபேரும் ஆதரவாக இருக்கின்றனரா என்று கணக்கிட்டுப் பார்த்தால், முழுக்க முழுக்கத் தமிழகத்தில் யாரும் அதற்கு எதிராக இல்லை; ஒருவர் கூட இல்லை. இலங்கைத் தமிழர்களில், அது ஈழத் தமிழர்களாக இருந்தாலும் சரி, இலங்கையில் தமிழர்கள் பரம்பரைத் தமிழர்களாக இருந்தாலும் சரி, அல்லது பிழைக்கப்போனவர்கள் தமிழர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் 3 ஆயிரம் பேர்கள் அல்ல, 3 பேர்கள் இருந்தாலும் அல்லது ஒருவர் இருந்தாலும் நம் கஷ்டம் கஷ்டம்தான். ஆகவே, எண்ணிக்கையை வைத்து மரணத்தைப்பற்றி நாம் சிந்திக்கக்கூடாது. அவர்களுடைய மரணத்திற்கு காரணம் என்ன? என்பதைப் பற்றி பார்த்து அந்தக் காரணத்தை விளக்குவதற்கு நாம் என்ன செய்யமுடியும்? என்ன செய்ய வேண்டும்? என்பதைப்பற்றி தீர்மானிப்பதற்கு நமக்குள்ள வாய்ப்புகளையெல்லாம் நாம் பயன்படுத்தியிருக்கிறோம்.

இதைத்தான் நேற்று நான் சொன்னேன். இன்றைய தினம் நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய தேவை இல்லை என்றாலும் கூட ஒன்றைச் சொல்கிறேன். இரண்டாம் தேதி நடந்தபொழுது, அதில் அனைத்துக் கட்சியினரும் பங்கு கொண்டார்கள். டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனால், மறுபடியும் ஐந்தாம் தேதி வேண்டுமா என்று கேட்டதற்கு, நாங்கள் நடத்தியே தருகிறோம் என்று சொல்லாமல், அன்றையதினம் அவர்கள் பேசிய பேச்சில், இந்தப் போராட்டம், வேலை நிறுத்தம் நடத்திப் பிரயோசனம் இல்லை என்று, அந்தக் கூட்டத்தில் பேசினார்கள். அவர்கள் மாநாட்டுக்குச் சென்று தீர்மானித்தது, ஐந்தாம் தேதி இரயில் நிறுத்தப் போராட்டம். 2ஆம் தேதி இரயில் நிறுத்தப் போராட்டம் என்று நாங்கள் சொல்லவில்லை. இந்த அரசு பொது வேலை நிறுத்தம் செய்தது. திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். விமானம் கூடப் பறக்காது என்று அறிவித்தார்கள். இப்படிப்பட்ட நிலைமை எங்குமே இல்லை. அதையும் நடத்திக்காட்டி ஒத்துழைத்த பிறகு, 5ஆம் தேதி ஒரே ஒரு கட்சி மட்டும் அத்தனை கட்சிகளையும் உதறித்தள்ளிவிட்டு, நாங்கள் தனியாக நடத்துவோம் என்றார்கள்! அதிலே சிலர் கேட்கிறார்கள், நீங்களே கேட்டீர்கள்! திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை எல்லாம் கைது செய்து விட்டார்கள் என்று. மன்னிக்கவும், கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் என்றால், நான் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன். வன்முறையாளர்களை ‘ரௌடி லிஸ்டிலே’ இருப்பவர்களைத்தான் கைது

செய்திருக்கிறார்களே தவிர, அவர்களால் வன்முறை வெடிக்கக் கூடும் என்று சந்தேகப்பட்ட சிலரை, பொதுபாதுகாப்பு என்ற வகையில், முன் எச்சரிக்கையாகக் கைது செய்திருக்கிறார்களே தவிர முன்னால் இருந்த ஆட்சியினர் எம்.பி.க்களை எல்லாம் 'ரௌடி லிஸ்டிலே' போட்டார்களே, அதுபோல் நாங்கள் செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். எப்போதுமே, எந்த அரசாங்கமும், இதுபோல் ஒரு போராட்டம் நடக்கப்போகிறது என்றால், முன்னெச்சரிக்கையாகக் கைது செய்வது வழக்கமே! அது இயல்பானதுங்கூட! அது அரசுக்கு நெருக்கடி தரவல்லது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், எங்காவது அநியாயமாக ஒரு விஷயத்திற்கும் சம்பந்தம் இல்லாதவர்களைக் கைது செய்தால்தான் குறை கூறவேண்டும். நான் வருத்தத்தோடு கேட்கிறேன். நான் அவர்களிடம் கேட்டேன், எந்த இரயிலை நிறுத்தப் போகிறீர்கள்? என்று. எந்தெந்தப் பகுதியிலே போகின்ற இரயிலை நிறுத்தப் போகிறீர்கள்? என்று கேட்டதற்கு, முன்பே நாங்கள் கைது செய்யப்பட்டு விட்டோம். அதாவது ஒரு அரசு முன்னெச்சரிக்கையாக, மூன்றாம் தேதி நான்காம் தேதியில் கைது செய்துவிட்டது என்று கூறிக்கொள்வதற்காக நீங்கள் எங்கள் ஆட்களைக் கைது செய்துவிட்டீர்கள். எனவே, உங்களுக்கு நாங்கள் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை! என்று ஒரு தலைவர் சொன்னார். இது நியாயம்தானா என்பதை, அவரைப் பின்பற்றுகின்றவர்கள் அவர்கள் வழித்தோன்றல்கள் என்பவர்கள் தீர்மானிக்க வேண்டும். தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சு முடிந்ததற்குப் பிறகு அவர்கள் பேசலாம், என்னுடைய பேச்சுத்தான் அவைக் குறிப்பிலே இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

என்னுடைய பேச்சை நான் தொடருகிறேன். தலைமைச் செயலாளர் அவர்கள் கடிதம் மூலம் கேட்டார்கள், கடிதம் மூலம் கேட்டதற்கு வந்த பதில் இது. நான்காம் தேதி அந்தக் கடிதத்திற்குப் பதில் வந்தது இப்படித்தான். அதற்குப் பிறகு நாங்கள் வேறு வழியின்றி மத்திய அரசோடு தொடர்பு கொண்டோம். மத்திய அரசு எந்த வகையில் ஒத்துழைக்க வேண்டுமோ அந்த வகையில் ஒத்துழைத்து, அந்த இரயில் நிறுத்தப் போராட்டத்தை வெற்றியுடன் நடத்துவதற்கு உதவி புரிந்தது. அதற்காக நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கண்டனக் குரல் எழுப்புகிறோம். தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 5 கோடி மக்களும் சேர்ந்து எழுச்சி பெற்று, இரயிலை நிறுத்தினோம். மத்திய அரசும் நம்முடைய கோரிக்கையைப் புறக்கணிக்காமல் இரயிலை நிறுத்தியது. இப்படி நாம் எல்லாம் சேர்ந்து, உணர்ச்சிபூர்வமாக 2ஆம் தேதி காரியங்களைச் செய்தபிறகு, நாங்கள் ஏற்கெனவே முடிவு எடுத்துவிட்டோம், 5ஆம் தேதி நாங்கள் முடிவு எடுத்தபடி இரயிலை நிறுத்துவோம் என்றால், அந்த முடிவு ஒரு தனிப்பட்ட கட்சியின் முடிவாகப் போய்விடுகிறது. அதற்கும் மைய அரசு ஒத்துழைத்தது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

நாங்கள் என்ன கடமையைச் செய்யவில்லை? ஈழத்திலே உள்ள தமிழர்கள் உயிர்களையும், தம் உடமைகளையும் இழந்து தவிக்கிறார்கள் என்பதற்காக ஆத்திரப்படுகிற நாம், இங்கே நாம் செய்கின்ற செயல்கள் தமிழகத்திலே இருக்கிற இலட்சக்கணக்கான மக்களின் உயிரையும், உடமையையும் பாதிக்கக்கூடும் என்று எண்ணிப்பார்க்க வேண்டாமா? அப்படி எண்ணியிருந்தால் இந்த நினைப்புவருமா, நினைக்கத்தான் முடியுமா? அவர்கள் எடுத்த முடிவை நாம் பொருட்படுத்தாது இரயில் ஓடும் என்று ஓட விட்டு இருந்தால், என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும்? தொடர்புகள் துண்டிக்கப்பட்டன; தண்டவாளம் பெயர்க்கப்பட்டது. அவற்றின் மீது கருங்கற்கள் வைக்கப்பட்டன, எல்லாம் 4ஆம் தேதியே ஆரம்பித்துவிட்டது! ஆனால், அப்பாவி மக்களுக்கு என்ன தெரியும்? எல்லோரும் படித்தவர்கள் அல்ல, எல்லோரும் அரசியல் தெரிந்தவர்கள் அல்ல. நாட்டில் எப்படி அரசியல் நடத்த வேண்டும்? எப்படி நடத்தினால் பொருத்தமாக இருக்கும்? என்று எல்லோரும் தெரிந்து இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. மக்கள் அத்தனை பேரும், விவரம் தெரிந்தவர்கள் என்று சொல்ல முடியாது, ஆனால், அந்த மக்களையும் சேர்த்துத்தான் நாம் யோசித்துப் போராட்டம் நடத்த திட்டமிட வேண்டும்.

இதைப் பற்றிக் கேட்டால், அண்ணா அவர்கள் செய்யவில்லையா என்று சொல்கிறார்கள். எத்தனை நாளைக்கு அது சொல்லப்பட்டது. எத்தனை நாட்கள் அதைப் பற்றி பேசப்பட்டது? என்பதையெல்லாம் நாம் மறந்துவிடகூடாது.

பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கிவிடக்கூடாது என்று கருதி, அந்தந்த இடங்களுக்குப் பேருந்துகளை அனுப்பி, எங்கெங்கே அவர்கள் போகவேண்டுமோ, அந்தந்த இடங்களுக்கு அவர்களை இலவசமாகவே, இன்னும் சொல்லப்போனால், சில இடங்களில் காலை உணவு கொடுத்து, அவர்களை கொண்டுபோய் சேர்க்க ஏற்பாடுகளைச் செய்தோம்! இவற்றை நாங்கள் செய்யத் தவறியிருந்தால் கெட்ட பெயர் யாருக்கு வந்து இருக்கும்? தி.மு.கழகத்திற்குத்தானே வந்து இருக்கும்!

மைய அரசு சொல்வதற்கெல்லாம் தலையாட்டும் பொம்மையாகவே இருந்து வருகிறோம் என்று, எங்களைப் பார்த்துச் சொல்கிறீர்கள்! எமர்ஜன்சியை வைத்து எங்களை பழிவாங்கினீர்களே. அதைக் குறிப்பிட வேண்டாம், நினைவுபடுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். எத்தனை பேர்களை, நீங்கள் 'எமர்ஜன்சியை' வைத்துக் கொண்டு பயமுறுத்தினீர்கள்? சிறையில் தள்ளவில்லையா? தண்டனை வழங்கவில்லையா? கைது செய்யவில்லையா? வழக்குப் போடவில்லையா? கண்டனம் நீங்கள் செய்தீர்கள். நான் மறுக்கவில்லை. உங்களுடைய செயல் எப்படி இருந்தது? உங்கள் கட்சிக்காக, உங்கள் நலத்திற்காக, மற்றவர்களின் மீது, அதைப் பாய்ச்சினீர்கள். அதைப் பயன்படுத்திக்கொண்டவர்கள் பேசினால் மட்டும் போதுமா? பேச்சுக்கும், செயலுக்கும் ஒரு தொடர்பு இருக்க வேண்டாமா? அதற்காகச் சொல்கிறேன். நாங்கள்

தலையாட்டுவது என்பது, 1977இல் தலையாட்டினோம். 1980இல் நாங்கள் எதிர்த்தோம். அதை தலையாட்டிப் பொம்மைக்கு உவமையாகச் சொல்லக்கூடாது? பொருத்தம் ஆகாது. நீங்களும் அப்படி இருக்கிறீர்கள்.

ஆனால், நேற்றையதினம் பேசும்போது ஒன்றைச் சொன்னீர்கள். நாங்கள் இந்திரா காந்திக்குத் துணை இருந்தோம், அவர்கள் பாராட்டினார்கள் என்று சொன்னீர்கள். இந்தப் பாராட்டை நீங்களும் செய்ய வேண்டாமா? 2லிருந்து 15இடமாக மாற்றும் போது, அதற்கு நீங்கள் நன்றி சொல்ல வேண்டாமா? அவர்கள் பாராட்டினார்கள்; இவர்களால் எனக்குப் பதவி கிடைத்தது என்று சொன்னார்கள் என்றே வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், அவர்களால் எனக்குப் பதவி கிடைத்தது என்று சொல்ல வேண்டாமா? யார், யார் விட்டதையும் தொடரவேண்டியது தான், என்னுடைய வேலை. என்னைப்பற்றி குறை இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். அதைக் கேட்டுக்கொள்ளத்தான் வேண்டும். அதை மறுக்க முடியாது. இங்கே அதை மறைத்து சாமார்த்தியமாகப் பேசி, வெற்றிபெற்றுவிட முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை நிச்சயமாக உண்டு. "அந்தத் திறமைக்கு இன்னொருவர் மதிப்பளித்தே தீரவேண்டும். பாராட்டித்தான் தீரவேண்டும். அந்தத் திறமை முழுவதும் எனக்கு இல்லையே" என்பதுதான் எனக்கு சற்று வருத்தம். என்னைவிடத் திறமைவாய்ந்தவர்கள் இருப்பதால்தான், இப்படிப்பட்ட நிலைமை வருகிறது.

இங்கே மதிப்பிற்குரிய மாண்புமிகு வழக்குரைஞர் ரகுமான்கான் அவர்கள் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி எல்லாம் பின்னால் சொல்வதாக இருந்தாலும், எதை எதைச் சேர்த்திருக்கிறோம், எந்த எந்த கட்சிக்காரர்கள் கொடுத்த எந்த எந்த திருத்தங்கள் எல்லாம் சேர்த்திருக்கிறோம் என்று சொல்லி, அவர்கள் முடித்து வைப்பார்கள். இருந்தாலும், என்னையும் உட்படுத்தித்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

அவர் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார். "ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் இந்தப் பிரச்சினையை எழுப்பவேண்டும் என்று மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், பிரதமர் இந்திராகாந்தி இதுபற்றி எழுப்பவில்லையே, பாலஸ்தீனத்தைப் பற்றிப் பேசினார். தென்னாப்பிரிக்கா நிறவெறியைக் கண்டித்து பிரதமர் இந்திராகாந்தி ஐ.நா. சபையிலே பேசினார்" என்று கேட்கிறார். 'காமன் வெல்த்தில்' உள்ள ஒரு நாடு நான் யாருக்கோ பரிந்து பேசுவதாக நினைக்க வேண்டாம், நடுநிலை நாடுகளிலே ஒன்றான இலங்கையும் சேர்த்து ஒரு அமைப்பின் தலைவர், அவர் எங்கே பேச வேண்டுமோ, அங்கே பேசவேண்டுமே தவிர, அங்கே அதைப் புகாராகச் சொல்வது, அவரது தலைமைக்கு ஏற்றதாக இல்லை!

'ரே கமிஷன்' வந்தபோது அது வழக்கு மன்றத்திற்குப் போனது, வழக்காடினார்கள். அது உச்ச நீதிமன்றத்திற்கு போயிருக்கிறது. அதுதான் நிலைமை. நான் 1977லும்

சரி, வெற்றி பெற்று ஜனதா ஆட்சிக்கு வந்த பின்னாலும் சரி, பிறகு இந்திரா காந்தி அம்மையார் இப்போது பிரதமாக இருக்கிறாரே, அவர் பதவிக்கு வந்த பிறகும் சரி, எங்களை டிஸ்மிஸ் செய்த பிறகும் சரி, நாங்கள் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு, வந்த பிறகு நாங்கள் பேசி கொண்டிருக்கிறோமே, தமிழ்நாட்டுக்கு இன்னின்ன வேண்டுமென்று கேட்கிறோமே, இதையெல்லாம் பேசிக்கொண்டு வரும் நேரத்திலேயும் கூட, இதுவரையில், இந்தியாவிலே ஆட்சி செய்த எந்த அமைச்சரவையிலும், எந்த அமைச்சரிடமும், எந்தப் பிரதமரிடமும், என்னுடைய 'இன்காம்டாக்ஸ்' கணக்குக்கு தயவு கூர்ந்து விதிவிலக்குத் தாருங்கள் என்று கேட்காத இராமச்சந்திரனாகிய, நான் இப்போது பேசுகிறேன். நீதிமன்றத்திற்குப் போய்தான், நான் என்னுடைய வழக்கைத் தீர்த்துக் கொள்கிறேனே தவிர, பிரதம அமைச்சரிடமோ, வேறு நிதியமைச்சரிடமோ அல்லது சட்ட அமைச்சரிடமே சென்று, எனக்குக் கொஞ்சம் ஆதரவு காட்டுங்கள் என்று கேட்கவே மாட்டேன்.

பிரதம அமைச்சரிடத்திலோ, மத்திய அமைச்சரிடமோ, சட்ட அமைச்சரிடமோ, எந்த நபரிடமோ அல்லது செல்வாக்கு உள்ளவர்கள் என்று அப்படி நீங்கள் யாரையாவது கருதினால், அவர்களிடமோ இந்த 'ரே கமிஷன்' பற்றி, நீங்கள் விட்டுவைக்க வேண்டும் என்று நான் கேட்டிருக்கிறேன். கேட்டேன் என்று நிரூபிப்பீர்களேயானால், நான் நிச்சயமமாக, கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன். நாங்கள் வழக்கு மன்றத்திற்குத்தான் போகிறோமே தவிர, வழக்கை 'வாபஸ்' வாங்குங்கள் என்று கேட்கின்ற பழக்கம் எங்களுக்கு இல்லை. சர்க்காரியா கமிஷன் என்னவாயிற்று? பழைய முதலமைச்சர் மீது போடப்பட்ட சர்க்காரியா கமிஷன் விசாரணையை பிரதமர் மொரார்ஜியிடம் கேட்டார்கள். டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள், வழக்கை வாபஸ் வாங்கவேண்டும் என்று பிரதமர் மொரார்ஜிதேசாய் அவர்களே சொல்லி இருக்கிறார்கள் பத்திரிகையிலே வந்திருக்கிறது. வேண்டுமானால், கொண்டுவந்து காண்பிக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். ஜெயப்பிரகாஷ் நாராயணனிடமிருந்து கடிதம் பெற்று, மொரார்ஜி தேசாயிடம் சென்று கேட்டு, அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்பது இங்கே மக்களின் முன் வைக்கப்பட்ட செய்தி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதை மாண்புமிகு பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது எல்லோராலும் பேசப்பட்டது. பத்திரிகையிலும் வெளிவந்திருக்கிறது 'ரே கமிஷனுக்கும் இதற்கும் சம்பந்தம் உண்டா? 'ரே கமிஷன்' எப்படி வந்தது?

ஓர் உண்மையை நான் மீண்டும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், சட்டசபையில் இருக்கின்ற அதன் தலைவர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள், இந்த இலங்கைத் தீர்மானத்திற்கும், இந்த சர்க்காரியா

கமிஷனுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டார்கள். அவர்களுடைய உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள், 'ரே கமிஷனைப்' பற்றிப் பேசும்போது, அவர் ஏன் அதைப்பற்றி குறுக்கிட்டு, ஏன் பேசவில்லை ? என்பதை என்னால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. 'ரே கமிஷனைப்'பற்றி பேசலாம். சர்காரியா கமிஷனைப்பற்றி பேசக்கூடாது என்றால், இது ஒருதலைபட்சமான நிலைமை என்பதை நான் இங்கே குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். ஆட்கள் இங்கே இருந்தாலும் அவர்கள் பேசவேண்டியதை, அவர்கள் இருக்கும்போது பேசவேண்டியதை, பத்திரிகையின் மூலமாகத்தான் அவர்கள் படிக்க வேண்டி வருகிறது என்று கருதுகிறேன். ஆனாலும், அங்கே இருந்து கேட்டாலும் சரி, இங்கேயிருந்து கேட்டாலும் சரி, உண்மையை நான் சொல்லியாக வேண்டும். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் உண்மையிலே மைய அரசுக்கு ஒத்துழைத்த மாநில அரசையும், கண்டிக்கிற தீர்மானமாக இருக்கிறது. இந்தியப் பேரரசு இந்த அளவிற்கு முன்வந்து அமைதிப் பேச்சு நடத்தி, மத்தியஸ்தரை முன் அனுப்பி, தங்களுடைய அதிகாரத்தை எந்த அளவிற்கு எங்கே காட்ட முடியுமோ, அந்த அளவிற்கு, ஜெயவர்த்தனேயுடன் பேசி, நிலைமையை கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றமடையச் செய்துகொண்டு வருகிற நேரத்திலே அதைக் குலைக்கப்பார்க்கும் நிலைமை, ஈழத் தமிழர்களுக்கோ, இலங்கை வாழ் தமிழர்களுக்கோ, இலங்கையிலே பிழைக்கச் சென்றவர்களுக்கோ, உதவி செய்வதாக ஆகாது என்பதை நான் இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொகிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டியது என்னுடைய மாபெரும் கடமையாகும். ஒன்றை மட்டும் இப்போது பேசவேண்டிய அவசியம் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டதால், இறுதியாகச் சொல்கிறேன். இந்தத் தமிழக அரசு இதுவரையில், யாருக்கும் பாதுகாப்பு கொடுக்கவும் இல்லை. படைப்பயிற்சி தரவும் இல்லை. இனியும், அதிலே அக்கறை இல்லை. எங்களுக்கு, அதிலே நம்பிக்கையும் இல்லை! ஆனால் ஈழத் தமிழ் மக்கள் அடைக்கலம் என்று வந்தார்களானால், இந்த தமிழக அரசு முழுமுயற்சியோடு அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் என்பதையும், நான் இங்கே அறுதியிட்டுச் சொல்கிறேன். இங்கிருக்கும் மக்களுக்கு எவ்வித பாதிப்புமின்றி, நாங்கள் அவர்களைத் தன்மானத்துடன் வாழவைப்போம்!.

எந்தெந்த அதிகாரம் எங்களுக்கு உண்டோ அதற்கு உட்பட்டு தேவையான உதவிகளை அவர்களுக்கு நாங்கள் செய்வோம். அதற்கு இந்தச் சட்டமன்றத்தில் இருக்கிற அத்தனை பேர்களும் ஒத்துழைப்பார்கள் என்பதிலே எனக்கு சந்தேகம் இல்லை. அந்த உறுதிமொழியை இங்கே தர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஈழத் தமிழர்கள் என்று சொல்லி, சில வன்முறையாளர்கள் ஏதோ ஒரு அரசியல் கட்சியினுடைய துணை கொண்டு, இங்கே பல தவறான காரியங்களில் ஈடுபட முனைகிறார்கள் என்ற செய்தி, இந்த அரசுக்கு வருவது உண்டு. ஆகவேதான், ஈழத் தமிழர்கள் யார் ? அவர்கள் அல்லாத அந்தக் கயவர்கள் யார் ? என்பதைக் கண்டு

பிடிக்கத்தான், அதை எடுக்கிறோமே தவிர, ஈழத் தமிழர்களுக்கு எந்த ஆபத்தையும் விளைவிக்க அன்று.

பம்பாய், டெல்லி, கல்கத்தா, சென்னை ஆகிய 4 நகரங்களிலும், சமூகத்தின் பல பகுதி மக்களோடும் நடத்திய கருத்து கணிப்பின் விவரம், இலங்கையில் இந்தியா இராணுவ தலையீட்டை செய்திருக்க வேண்டுமா என்ற கேள்விக்கு சென்னை நகர மக்கள் தெரிவித்தக் கருத்து, இராணுவ தலையீட்டை ஆதரித்தவர்கள் 32 சதவீதம். இராணுவ தலையீடு கூடாது என்று கூறியவர்கள் 62 சதவீதம். எந்தக் கருத்தும் தெரிவிக்காதவர்கள் 6 சதவீதம். இதை எதற்காக கூறுகிறேன் என்றால், சென்னை நகரத்திலே படித்த மக்கள், நடுத்தர மக்கள், உழைக்கும் மக்கள் என்று அத்தனை பேர்களும் இருக்கிறார்கள். இவ்வளவு நாம் செய்தும் கூட, சொல்லியும் கூட, அவர்கள் எல்லோரும் போராட்டம் நடத்தியும் கூட, இந்த முடிவைத்தான் அவர்கள் எடுக்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன்பே, ஊரடங்குச் சட்டங்கள், அடக்குமுறைச் சட்டங்கள் அனைத்தையும் நீக்கிவிடுங்கள் இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஐயத்தைப் போக்க, ஒரு வட்டமேஜை மாநாடு நடத்தி அமைதியையும் ஒற்றுமையையும் மீண்டும் நிலைநிறுத்தி இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று சொன்னார்கள். அதைத்தான் இந்தியப் பேரரசு செய்கிறது. இங்கிருந்து திரு.ஜி.பார்த்தசாரதி அவர்களை அனுப்புகிறார்கள். அவர்கள் எங்களையும் சந்தித்தார்கள். அங்கே போன பொழுது கலைஞர் கருணாநிதி அவர்களையும் சந்தித்தார்கள். எதிர்க்கட்சித் தலைவர் ஆயிற்றே அவர்கள் எதிர்க்கிறார்களே என்று அவர்களை விட்டுவைக்கவில்லை. கலைஞருடைய எண்ணத்தையும் அவர்கள் தெரிந்துகொண்டு அங்கே சென்றார்கள்.

அப்போது முடியாது என்று சொல்கிற ஜெயவர்த்தனே இப்போது மீண்டும் அழைத்திருக்கிறார்கள் என்றால் நாம் பிரச்சினையை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒரு சமாதானம் பேச்சு நடந்து கொண்டிருக்கும்போது இராணுவத்தை ஒரு நாடு எப்படி அனுப்ப முடியும்? உலகப் பிரச்சினையாகிவிடக்கூடிய ஒரு பயங்கர நிலைமையை உருவாக்கக் கூடாது என்ற ஒரே எண்ணத்தோடு இன்னும் பல உயிர்கள் அழியக்கூடாது என்பதற்காகவும், அண்டையிலே இருக்கக்கூடிய ஒரு நாடு நம்மோடு விசுவத்தோடு மட்டுமல்லாமல், அன்புடனும், பக்தியுடனும், பாசத்துடனும் பொறுமையுடனும் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எடுக்கிறபோது அதை நாம் எவ்வளவு தூரம் பாராட்டவேண்டும்? என்ற எண்ணம் இல்லாமல், இப்படிச் செய்கிறார்கள் அவர்களுக்கு ஏன் பாராட்டு என்கிறார்கள்.

இந்த முறை திரு.ஜி.பார்த்தசாரதி ஜெயவர்த்தனேயுடன் பேசுகின்ற பேச்சு மற்ற அமிர்தலிங்கம் போன்றவர்களையும் உள்ளடக்கி பேசவேண்டிய ஒரு வட்டமேஜை மாநாட்டுக்கு அடித்தளமாக அமைத்து, ஈழத்தமிழர்களையும் அழைத்துப் பேசி தீர்க்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை, இதிலே வைக்கலாம் என்று கருதுகிறேன்.

அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டால், அதையும் இணைக்கலாம் என்று நான் கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படும் என்றால், ஈழத் தமிழர்களை அவர்கள் மதித்தாக வேண்டும். அது ஈழத் தமிழர்களின் விடுதலைப் புலிகள் இருக்கிறார்களே, அவர்களின் பிரதிநிதிகளிலே யாராவது ஒருவரை, அவர்கள் அழைத்து பேசவேண்டும். போராடினார்கள் என்றால், அவர்களை எதிர்த்து அழிப்பதற்கு யாராவது எண்ணமிடுவார்களேயானால், அவர்கள் தோற்றுப்போவார்கள். ஜனநாயகத்தில் உலகத்தில் எதிர்ப்பவர்களையெல்லாம் அழிப்பது என்ற கொள்கை, வெற்றிபெற்றது கிடையாது.

இன்னொன்று, இந்த முறை ஜெயவர்த்தனே மீண்டும் நீண்டு நிற்க, அவருக்கு அதிகார நீட்டிப்புக் கொடுப்பதற்கு, இலங்கையிலே உள்ள இந்தியப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள், இலங்கையிலே உள்ள தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் அளித்த வாக்குகள் அவர்களுக்கு உதவி செய்தது என்பதை, அவர்கள் மறந்துவிடக் கூடாது. அன்னமிட்டகையை கடித்துக் குதறி, அதை வெட்டி விடக்கூடிய, காரியத்தை ஜனாதிபதி ஜெயவர்த்தனே செய்யக் கூடாது. அது ஆபத்தாக முடியும் என்பதை நான் இங்கே எடுத்துச்சொல்லி, ஆபத்து என்றால் அவர் உயிருக்கு அல்ல. அவருடைய பதவிக்கு என்பதையும் நான் கூறவேண்டும்! இம்முறை திரு. ஜி.பார்த்தசாரதி அவர்கள் வெற்றி பெற்று வர வேண்டும் என்றும், அவர்போய் வந்த பிறகுதான் நாங்கள் கருப்புச் சட்டையை கழற்றுவதாக இருக்கிறோம் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொண்டு, அதுவரை, இந்த கருப்புச் சின்னம் இருக்கட்டும், அவர் வந்த பிறகு நாங்கள் கழற்றி விடுகிறோம். வேறு என்ன வேலை இருக்கிறதோ பார்ப்போம் என்று நான் இங்கே எடுத்துச் சொல்லி, இந்தத் தீர்மானத்தில் பல கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் திருத்தங்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நான், நன்றியைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் பெயரளவுக்கு ஆதரவு தந்து இருக்கிறார்கள், அவர்களுக்கும் நான் நன்றி கூறுகின்றேன். இங்கே இருக்கின்ற ஒவ்வொரு கட்சியினருக்கும், இந்த அரசின் சார்பாக நன்றியை கூறுகின்றேன்.

இந்தியப் பேரரசை நாம் பாராட்டித்தான் தீரவேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி ஒத்துழைத்த அத்தனைப் பேருக்கும் நன்றி சொல்லிக் கொள்கிறேன். நேற்று பதில் சொல்ல வேண்டும் என்று கருதினேன். அவர்கள் கையெழுத்துப் போடும்போது சொன்னார்கள், நாங்கள் வந்துவிட்டோம்; கையெழுத்துப் போடுகிறோம் என்று, ஆனால், முழுமையாக எங்களுக்கு அதில் உடன்பாடு இல்லை என்று சி.பி.ஐ. அவர்கள் கருத்துகளை நானே இங்கே சொல்லி, அந்த வகையில், மாறுபட்டவர்கள் ஒத்துழைக்கிறவர்கள்; யோசனைக் கூறுகிறவர்கள், அவர்களுக்கு எல்லாம் நன்றி கூறி, என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

27.10.1983 அன்று, இலங்கை அரசை கண்டிக்கின்ற தீர்மானத்தின் மீது நன்றி தெரிவித்து ஆற்றிய உரை.



சமதர்ம சமுதாயமே எங்கள் இலட்சியம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராமச்சந்திரன் தலைமையில் இயங்கும் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லை என்று பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தீர்மானம் கொண்டுவர முயன்று இருக்கிறார்கள் என்றாலும், அந்த வாய்ப்பை முதலிலே பெற்றுக்கொண்டவர் என் அன்பு நண்பர் மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பேசியபோது அதை மிக மிக உன்னிப்பாக நான் கவனித்தேன். அவர்களுடைய பேச்சிலிருந்து எனக்கு ஒரு மன மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது.

அவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்ற பெயரில் ஒரு நம்பிக்கை பெறும் தீர்மானத்தை இங்கே கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று தான் நான் கருதுகிறேன். ஏனெனில், அவர்கள் சொல்லிய, எடுத்து வைத்த கருத்துக்கள். குற்றச்சாட்டுகள் எல்லாம் 3 ஆண்டுகளுக்கு முன்னால் பதில் சொல்லி தீர்ந்துவிட்டவை என்பதையும், அதிலே ஒருசில மட்டுமே அன்றாட நிகழ்ச்சிகளில் வருவதைத்தான் புதிதுபோலக் கொண்டு வந்திருக்கின்றாரே தவிர, மற்ற அனைத்தும் மூன்றாண்டு காலத்திற்கு முன்பு பேசியதன் தொடர்ச்சியாகத் தான் கருதவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்த வகையில், இந்த மன்றத்தின் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது நான் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அது நியாயமானதாகவும், உண்மையானதாகவும், இருக்கும் என்ற நம்பிக்கையோடு, சில செய்திகளை மக்களுக்குச் சொல்வதற்கு இந்த வாய்ப்பை தந்து இருக்கிறார்கள் என்றே நான் கருதுகின்றேன். ஒருவேளை அண்மையில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற கருத்துக்கள் விளம்பரமாக அமையட்டும் அல்லது அதற்கு பயன்படுத்தலாம் என்ற நினைப்பில், இதைக் கொண்டு வந்தார்களோ என்று கூட, நான் ஐயப்படுகிறேன்.

ஏன் அப்படி சொல்கிறேன் என்றால், ஒவ்வொருவர் பேசிய போதும் அவருடைய பேச்சில் என்ன வந்தது என்றால், “எந்தக் கட்சி, எந்த கட்சியோடு சேரப்போகிறது. எந்தெந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுக்கலாம், நியாயம் எது? பொருத்தம் எது? சரிதானா?” என்பன பற்றிதான் அதிகமாக இங்கே விவாதம் நடந்தது. இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது தொடர்புடைய கருத்துக்களைச் சொல்வதில், மிகக் குறைந்த அளவு தான் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே உங்கள் மூலமாக அவையினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தல் அறிவிக்கப்படாத இந்த நேரத்தில், யாரோடு கூட்டு என்று பேசும்போது, பல பத்திரிக்கைகள் தேர்தல் வரப்போகிறது, தேர்தல் வரப்போகிறது, மார்ச்சிலே வரலாம், மே மாதம் வரலாம். இல்லை பிப்ரவரியிலே கூட வந்து விடலாம் என்று எழுதப்பட்டு,

பேசப்பட்ட விஷயங்களின் விளைவாக, இந்த நிலைமை ஏற்பட்டதோ என்று நான் கருதுகின்றேன். ஆகவேதான், 3 ஆண்டுகளாக இல்லை, நாங்கள் இந்த அவையிலே வந்த பிறகு இப்போதுதான், நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வருகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறினார்கள். எங்களைப் பொறுத்தவரையில், எங்கள் நிலைமையை விளக்குவதற்காகவும், எங்களுடைய செயல்முறைகளில் மக்களுக்கு நன்மை விளைந்ததா என்பதை எடுத்துக்காட்டவும் இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் முக்கியமாக உதவுகிறது என்று நான் எண்ணுவதால், சட்டம் அனுமதிக்கின்ற வரையில், எத்தனை ஆண்டுகள் நாங்கள் இங்கே இருப்பதற்கு மக்கள் வாக்களித்து இருக்கிறார்களோ, இந்த நாட்டில் அடுத்த தேர்தல் வருகிற வரையில், அவர்கள் அடிக்கடி இதைக்கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அப்படி இருந்தால், எங்களுடைய சூழ்நிலைகளையும் உண்மை நிலைமைகளையும், நாங்கள் எங்கள் கடைமையை எப்படிச் செய்கிறோம் என்பதையும், எங்கள் தேர்தல் அறிக்கைக்கும், நாங்கள் செயல்படுகின்ற முறைக்கும், கடமைக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா, இல்லையா, சொன்னதைச் செய்கிறோமா இல்லை, சொன்னதைச் செய்ய முடிந்ததா, சொன்னதைச் செய்ய முடியவில்லையா என்பதை இங்கே எடுத்து வைத்து, அதை உண்மையாக, அப்படியே எந்தெந்தப் பத்திரிக்கைகளில் வெளியிடுகின்றார்களோ, அவற்றின் விளைவாக, தமிழக மக்களுக்கு உண்மையைத் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டும் என்று கருதி, இந்தத் தீர்மானத்தை முன் மொழிந்த மாண்புமிகு என்னுடைய நண்பர், அன்பர் உமாநாத் அவர்களுக்கு நான் நன்றிக் கூறிக்கொள்கிறேன். ஏனெனில், முதலில் எவ்வளவோ பிரச்சினைகளைச் சொல்லியிருந்தாலும், தொழிலாளர்களுக்கு எதிராக நாங்கள் நடக்கிறோம் என்ற அவரது குற்றச்சாட்டு, முக்கியமான குற்றச்சாட்டாகும். எனவே, அதைப் பொறுத்தவரையில், நான் முதலிலே அவருக்குப் பதில் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அவர்கள் சொன்ன பல குற்றச்சாட்டுக்களை, நான் திரும்பச் சொல்ல வேண்டாமென்று கருதுகிறேன்; குறிப்பில் இருக்கின்றன. அவற்றிற்கு பதிலை மாத்திரம் நான் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்த கூலி கொடுக்கப்படவில்லை என்ற புகார், அரசுக்கோ அல்லது சம்பந்தப்பட்ட துறைக்கோ, இதுவரை வரவில்லை! அப்படி இருந்தாலும், இந்த அரசு அவ்வப்போது, பொதுவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்தில், நாங்கள் எச்சரிக்கையாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு, முன்னமே சொல்லியிருப்பதால் இந்தப் பிரச்சினை வரவில்லை என்று நான் கருதுகிறேன்.

போக்குவரத்துத் தொழிலாளர்கள் ‘போனஸ்’ சம்பந்தமான ஒப்பந்தம், போக்குவரத்துத் துறை அமைச்சர் முன்னிலையில், மத்தியத் தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் நிருவாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஏற்பட்ட உடன்பாட்டை,

தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர் நலத்துறை ஆணையர் முன் ஏற்றுக் கொண்டு கையெழுத்திட்டுள்ளனர். இதில் ஏதும் தவறு நடக்கவில்லை. ஏதாவது தவறு இருக்கிறது, இந்தப் பதில் சரியில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் என்னுடைய பேச்சுக்குப் பிறகு, ஏதாவது குறிப்பிட்டால், அதற்கும் நான் பதில் வைத்திருக்கிறேன். அதற்கு பிறகு என்னுடைய பதிலைச் சொல்கிறேன்.

'டாட்டா' கம்பெனித் தொழிற்சங்கத் தொழிலாளர்களில் ஒரு பிரிவுக்கு திரு. குசேலர் தலைவராகவும் மற்றொரு பிரிவுக்கு திரு. சிந்தன் தலைவராகவும் இருக்கிறார்கள். திரு. சிந்தன் தலைமையில் உள்ள தொழிற்சங்கம் எழுப்பிய தொழில் தகராறில், தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் விளைவாக, நிருவாகத்திற்கும் திரு. சிந்தன் தலைமையிலான தொழிற்சங்கத்திற்கும் இடையே ஒரு புதிய ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தந்தால், ஏற்கெனவே திரு. குசேலர் தலைமையில் உள்ள தொழிற்சங்கம் நிருவாகத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, அகவிலைப்படியை, படிப்படியாகக் குறைக்க வகை செய்தது. இதை திரு. குசேலர் தலைமையிலுள்ள தொழிற்சங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால், தொழிலாளர் நலத்துறை துணை ஆணையர் தொழிலாளர்களின் ஒரு பகுதியினருக்கு பாதகம் விளைவிக்கும் என்று எண்ணுவதால், தொழிலாளர்கள் சட்டம் பிரிவு 18 (1) இன் படி, தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கத்துடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளும்படி அறிவித்துள்ளார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, ஒரு தொழிற் தகராறு நியாயமானதாகவும், விவேகமானதாகவும் இருந்தால், அப்போது மட்டுமே, தொழில் தகராறு சட்டம் 12 (3) இன் கீழ், ஒப்பந்தம் ஏற்படுத்தலாம் என்று கூறியுள்ளார். இந்நிலையில், சமரச அதிகாரி தீர்ப்பில், அரசு தலையிடுவது சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானது. எனவே அதில் அமைச்சர் தலையீடு எதுவும் இல்லை என்று நான் சொல்லியிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் நன்மைக்காக கொண்டுவந்த சட்டத்தை தனிப்பட்ட முதலாளிகள் (மாஸ்டர் வீவர்ஸ்) எதிர்த்து உயர்நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை பெற்றனர். இவ்வழக்கில் தடையை நீக்கி, வழக்கை விரைவில் முடிக்கும்படி நீதிமன்றம் அரசு வழக்கறிஞரிடம் வலியுறுத்தியிருக்கிறது. இது சில உண்மைகளை விளக்குகின்ற செய்தியாகும். அதே சமயத்தில், இந்த அரசு தொழிலாளர்களுக்கு என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை, நான் இந்தக் குறிப்பின்படி விளக்கவும், தெளிவாக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில், ஒரு பெரிய தொழிற்சங்கத்தை குறிப்பிடாமல், தொழிலாளர் வர்க்கத்திற்கே நாங்கள் எதிரிகள் என்பதுபோல, இங்கே வார்த்தைகள் பரிமாறப்பட்ட காரணத்தால், அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய நியாயமான கடமை. அதிலும், ஏதோ நினைவில் வைத்துக்கொண்டு சில விஷயங்களைச் சொல்லாமல், புள்ளி விவரங்களோடு சொல்வது அவசியம் என்று நான் கருதுவதால், அதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

1981ஆம் ஆண்டு 'தமிழ்நாடு வாழ்க்கைப்படித் திட்டம்' மூலம், தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டு, விசாரணையில் உள்ள பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி 01.01.1982 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இது அதுவரையில் யாரும் செய்யாத சட்டம். இது வேலையிலிருந்து நீக்கவும், அதுவும், தற்காலிகமாக பணி நீக்கம் என்று சொல்லி, அவர்கள் துன்பப்படுவதைத் தடுக்கும் சட்டம் என்பதை, இங்குள்ள நியாய உணர்வு உள்ள எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை, எனக்கு இருக்கிறது.

தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரம் ஆக்குதல்) சட்டம். 1982 முதல், 24 மாதங்களில் 480 நாட்கள் தொடர்ச்சியாக வேலை செய்தவர்களைப் பணி நீக்கம் செய்ய முடியாது. பணி நிரந்தரம் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், 01.01.1983 முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளது என்பதை, நான் இங்கே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்டமும் முக்கியமான சட்டம். தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கும் சட்டம். அனைத்துத் தொழிலாளர்களுக்கும் நன்மை உண்டாக்கும் சட்டம் என்பதை இந்த மாமன்றம் ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

'தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் வேலை முறை மற்றும் இதர வகைகள் சட்டம்', 1981இன் மூலம், தொழிலாளர்கள் தொழில் அதிபர்கள் உறவு, ஊதியம் குறித்த விதிமுறைகள், பணியில் தொடர்ச்சி, சுகாதாரம் ஆகியவை போன்ற நலன்களை கைத்தறி நெசவாளர்கள் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, நெசவாளர்கள் நலன் கருதி, ஏற்படுத்தப்பட்ட முதல் சட்டம் இதுதான். 12.03.1982 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. ஆனால், சென்னை உயர்நீதிமன்றத்தில் நமது அனுதாபம் தான் தற்போது தடை செய்யப்பட்டுள்ளது! இதற்கு மேல் இதைப்பற்றி நான் கூற விரும்பவில்லை. நாங்கள் சில சமயம் கருத்துக்களைச் சொல்லும்போது, சில தடைகள் விதிக்கப்படும்போது. எவ்வளவு நஷ்டத்தை அது மக்களுக்கு அளிக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்ற கருத்தினை இங்கே சொன்னால், நீதிபதிகளுக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டை, நீதிமன்றத்தை அவமதிக்கும் எண்ணத்தோடு சொல்லுகிறார்கள் என்றெல்லாம், வெளியே பேச ஆரம்பித்து விடுகிறார்கள்! ஆகவேதான், மிக எச்சரிக்கையோடு உங்களுக்குச் சொல்லிக்கொள்வேன். அந்தக் குற்றச்சாட்டை என்மீது சுமத்துகிறீர்களே, அதற்குப் பரிகாரம் காண, நாங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி, நீதியின் பெயரால் தடைச்செய்யப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள நான் பெரிதும் விரும்புகிறேன்.

1982ஆம் ஆண்டு 'தமிழ்நாடு உடல் உழைப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்', சட்டத்தின் மூலம், அமைப்பு ரீதியில் இணைக்கப்படாத உடல் உழைப்பு தொழிலாளர்களின் பணி நிலைமைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. இதுவரையிலும், அது இல்லை. அவர்களை இங்கே கவனிப்பாரோ, அவர்கள் குறை கேட்பாரோ, யாருமில்லை! ஆனால், அவர்கள் அநாதைகளைப் போல, அந்தப்

பணிகளைச் செய்து கொண்டிருக்கவேண்டுமென்ற நிலையை மாற்றி அமைத்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க, இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்தும் என்பதை மாற்றி 10 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு 1965ஆம் ஆண்டு 'ஊதியக் கொடைச் சட்டம்' திருத்தப்பட்டது. 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்ற நிலைமையை மாற்றி 50 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு 1956ஆம் ஆண்டு 'தொழில், பணி நிலை ஆணைகள் சட்டம்' திருத்தப்பட்டது. எல்லாத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழும், தொழில் வழக்கு மன்றங்கள், தொழில் தீர்ப்பு மன்றங்கள் மற்றும் அரசு முன்பாக தொழிலாளர் சார்பில் தரப்படும் மனுக்களுக்கு முத்திரைக் கட்டணத்திலிருந்து விதி விலக்கு அளித்திருக்கின்றோம். இது தொழிலாளர்களுக்கு ஏற்படுத்துகின்ற சட்டம் இல்லை என்று யாரும் சொல்லமாட்டார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

உணவகங்களில் உள்ள தொழிலாளர்கள் மேல் முறையீட்டைச் செய்யும்போது, வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்கு சம்மன் அனுப்பும் அதிகாரத்தை அலுவலர்களுக்கு வழங்கும் வகையில், 1958ஆம் ஆண்டு 'உணவகங்கள் சட்டம்' திருத்தப்பட்டது. இதுவும் நல்ல சட்டமன்று என்று சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். அநியாயமான சட்டம் என்று சொல்கிறீர்களா ? தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள் மற்றவற்றில் பணியாற்றும் தொழிலாளர்கள் பணிக்காலம், பெறுகின்ற ஊதியம் ஆகியவை குறித்து பணிச் சீட்டு அல்லது நேர அட்டை கட்டாயமாக வழங்கும் வகையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. கொத்தடிமை முறை போல, எத்தனை மணி நேரமானாலும் வேலை செய்ய வேண்டுமென்ற நிலையை மாற்றி, அவர்களுக்கு அதிகார வரம்புக்கு உட்பட்ட வகையில் பாதுகாப்பு, அச்சட்டத்தின் மூலம், அளிக்கப்பட்டுள்ளது என்பதை, தொழிலாளர் விரோத சர்க்கார் என்று இங்கே என்மீது பழி சுமத்தவில்லை, ஒரு குற்றத்தைச் சாட்டி இந்த உண்மை மக்களுக்குத் தெரியட்டும் என்ற ஒரு வாய்ப்பு தந்தீர்களே, அதற்கு நன்றி கூறி, இந்த விளக்கத்தை நான் வெளியிட விரும்புகிறேன்.

குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ், வரும் நிறுவனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் தேசியப் பண்டிகை விடுமுறை நாட்கள் பெற, உரிமை அளிக்கும் 1958ஆம் ஆண்டு 'தமிழ்நாடு தொழிலாளர்கள் நிறுவனங்கள் தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள் சட்டம்' நீட்டிக்கப்பட்டுள்ளது. 5 நபர்கள், நிறுவனங்கள் அதற்குமேல் பணியாற்றும் உணவு விடுதிகள் மற்றும் கடைகள் ஆகியவற்றில் தொழிலாளர் நல நிதிச் சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. அதை இங்கே சொல்லும்போது, தொழிலாளர்களுக்காக என்ன, என்ன செய்திருக்கிறோம் என்பதை இந்த அளவில் இப்போது குறிப்பிட்டு, பின்னால் விளக்கமாகத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இதில் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற திரு. ஹாஜா செரீப் அவர்கள், தமிழ்நாட்டில் மத்திய அரசு விதித்து வசூலிக்கும் வரித் துறையைப் பற்றி சொல்லி, அதிகமாக நிதி கொடுக்கிறார்கள் அவர்கள். அதை பயன்படுத்தப்பட வேண்டிய நல்ல திட்டங்களுக்கு அப்பணத்தைக் கூட ஒழுங்காக பயன்படுத்தவில்லை என்றும் இங்கே சொல்லி, சில குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள்.

1977 முதல் 1982 வரை தமிழ்நாட்டில் கூட்டு நிறுவனங்கள் வரி, ஆயத்தீர்வை, வருமான வரி ஆகியவற்றில் மொத்தம் ரூ.3,702 கோடி தமிழகத்திலிருந்து மத்திய அரசால் வசூலிக்கப்பட்டது. இவ்வகையில், மத்திய அரசு ரூ.1,165 கோடி மட்டுமே தமிழ்நாட்டுக்குப் பங்குத் தொகையாகக் கொடுத்துள்ளது. மத்திய அரசுக்குத் தமிழ்நாட்டின் வழியாகக் கிடைக்கும் தொகை அதிகமாக இருந்தும், கடந்த 5 ஆண்டுகளில், மத்திய அரசிடமிருந்து நமக்கு 30 சதவீதத்திற்கும் குறைவாகவே வந்துள்ளது. இதைத் தவிர, வருமான வரி மீதுள்ள மேல் வரி – சர்சார்ஜ் – கூட்டு நிறுவனங்கள் வரி – கார்ப்பரேஷன் டாக்ஸ் – போன்றவற்றை மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்வதில்லை.

மேலும், தமிழ்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பண்டங்களின் மீது வசூல் செய்யப்படும் சுங்க வரி, மிகப் பெரியதாக இருந்தாலும், மாநிலத்திற்கு இத்தொகையிலிருந்து எதுவும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

வருமான வரியும், மேல்வரியும் ரூ.529 கோடி; மத்திய ஆயத்தீர்வையும், கூடுதல் ஆயத்தீர்வையும் ரூ.2,697 கோடி; கூட்டு நிறுவன வரி ரூ.426 கோடி; மொத்தம் ரூ.3,702 கோடி; தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்டது ரூ.1,165 கோடி; அதைக் கொஞ்சம் நாம் மனதில் நினைவுபடுத்திக்கொண்டு, இந்தப் புள்ளி விவரத்தையும் நீங்கள் மனதில் பதித்துக் கொண்டால், மத்திய அரசு தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய அளவிற்கு நிதி ஒதுக்கித் தரவில்லை என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளலாம். இது கடன், மானியம், இரண்டும் சேர்ந்தது. மத்திய அரசிடமிருந்து நாம் கடன் உதவி, மானிய உதவி என்று இரு வகைகளில் உதவிகளைப் பெறுகிறோம். கடன் என்ற முறையில் நாம் மத்திய அரசிடமிருந்து பெற்ற தொகையும் திருப்பிச் செலுத்திய தொகையும் வருமாறு:

1980–1981ஆம் ஆண்டுக் கடன் ரூ.154.57 கோடி; திருப்பிச் செலுத்தியது ரூ.40.16 கோடி. 1981–1982ஆம் ஆண்டு ரூ.154.61 கோடி; ரூ.47.57 கோடி திருப்பிக் கொடுத்துள்ளது. 1982–1983ஆம் ஆண்டு ரூ. 175.89 கோடி – ரூ.89.15 கோடி. 1983–1984ஆம் ஆண்டு ரூ.158.26 கோடி – ரூ.61.19 கோடி. இதன்படி பார்த்தால், திருப்பிச் செலுத்தும் தொகை போக, மைய அரசிடமிருந்து ஆண்டொன்றிற்குச் சுமார் ரூ.100 கோடிதான் கிடைத்தது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள் என்று நான் கருதுகின்றேன்.

மானிய உதவி 1980–1981ஆம் ஆண்டில் 116.52; 1981–1982ஆம் ஆண்டில் 125.65; 1982–1983ஆம் ஆண்டில் 133.25; 1983–1984இல் 132.95 மொத்தமாக மைய அரசிடமிருந்து ஆறாவது ஐந்தாண்டுக் காலக்கட்டத்தில், 5 ஆண்டுகளுக்கும் சேர்த்து கிடைக்கும் தொகை 732 கோடி ரூபாயாகும் என்பதை, நான் இங்கே மன்றத்தில் வைக்க விரும்புகிறேன். ஆனால், மைய அரசு ஒதுக்கியதை விட, நாம் அதிகமாகச் செலவு செய்து வருகிறோம், என்ற உறுப்பினர் குற்றச்சாட்டு, எந்த அடிப்படையில் எழுந்தது என்று தெரியவில்லை. எதிர்கட்சித் தலைவர் பேச்சை தொடர்ந்ததால், அவர் சம்பந்தப்பட்ட இன்னொரு கேள்விக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். சென்னை சிட்டி நகரமாக இல்லை, நரகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்றுக்கொள்வோம். யாராவது ஒருவர், நாங்கள் வரி செலுத்துகிறோம். ஆனால், வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று கோர்ட்டுக்குப் போனால்; உங்களுடைய பாடு மிகவும் கஷ்டமாகப் போய்விடும்.

அவர்களுடைய நல்ல எண்ணத்திற்கு என்னுடைய அனுதாபம், ஏனெனில் ஏதோ நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்கள் மாநகராட்சியிலே வருவாயாக வருவது போலவும், அவ்வளவு வருமானம் இருக்கும்போது அதை வைத்துக் கொண்டு, மக்களுக்கு நன்மை செய்யவில்லையே என்று சொல்வது போலவும், அவர் அந்தக் கருத்தை வெளியிட்டார். உண்மையிலேயே அனுதாபத்தோடு சொல்லிக் கொள்கிறேன். சென்னை மாநகராட்சியின் வருமானம் மற்ற மாநிலங்களில் உள்ள மாநகராட்சிகளின் வருமானத்தை விட மிகக் குறைவு.

உதாரணமாக, நுழைவு வரி போடுவதால், பம்பாய் மாநகராட்சிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.300 கோடி கிடைக்கிறது. சென்னையை விடச் சிறிதான அகமதாபாத் மாநகராட்சிக்கு 100 கோடி ரூபாய்க்கு மேல் கிடைக்கிறது. ஆனால், சென்னை மாநகராட்சியின் வருமானம் ரூபாய் 20 கோடியைக் கூட, எட்டுவதே கஷ்டமாக இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படி 300, 400 கோடி ரூபாய் வருமானம் உள்ள மாநகராட்சிகளும் இருக்கின்றன. சில இடங்களில் 1,000 கோடி ரூபாய் வருமானம் கூட கிடைக்கிறது. ஆனால், தமிழ்நாடு மாநகராட்சி மன்றம் என்னென்ன பொறுப்பை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது என்பதையும் நீங்கள் மறந்துவிடக்கூடாது.

வடிகால் வாரியம் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தாலும், இங்கே போடப்பட்டிருக்கிற குழாய்கள் எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டவை என்பதை நாம் எல்லோரும், கொஞ்சம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்தக் குழாய்களில், கழிவு நீரும், நன்னீரும் போகின்ற குழாய்கள் இருக்கின்றன. கேள்வி நேரத்திலே கூட, அது கேட்கப்பட்டு பதில் வந்திருக்கிறது. “கழிவுநீர் கலக்காமல் இருக்க, குடிதண்ணீர் குழாய்கள் பக்கத்திலேயே இருப்பதை மாற்றுவதற்கு ஏதாவது வகை செய்ய முடியாதா ?” என்று கேட்டார்கள். நகரங்களிலே மட்டுமல்ல; வெளியிலேயும் அந்த நிலைமை இருக்கிறது.

ஆனால், நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குழாய்களை மாற்றி அமைக்க உலக வங்கியிடம் நாம் 3 ஆண்டுகளுக்கு முன்பு கேட்டபோது, 50 கோடி ரூபாய் இதற்கென்று செலவிட்டால்தான், அதை சீர்படுத்த முடியும் என்று சொன்னார்கள். காரணம், சென்னை நகரம் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட நகரமே அன்று. இதை நாம் எல்லோரும், தயவுசெய்து, மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வப்போது, வீடுகள் தோன்றித் தோன்றி, வீதிகள் வீடுகளாக மாறி, அது சிறு சிறுபகுதிகளாக ஆகி, பெரிய பெரிய நகரங்களை எல்லாம் தோற்றுவிக்கக்கூடிய அளவுக்கு மக்களுடைய வளர்ச்சியும், மக்களுடைய வருவாயும் இருந்து வருகிறது என்பதை நாம் நினைவில் வைத்துக் கொண்டால், ஒரு மாநகராட்சி, 20 கோடி ரூபாய் வருமானம் உள்ள மாநகராட்சி, 10 கோடி ரூபாய் செலவிட்டால் தான், இந்தக் குழாய்களை சீர்படுத்த முடியும் என்று சொல்கிற ஒரு திட்டத்தில், அது எத்தனை காலம் கழித்து நிறைவேற்ற முடியும்? என்று நினைத்துப்பார்க்க வேண்டும், இதில் கூட என்ன சொல்கிறார்கள் என்றால், குடிதண்ணீர் கொண்டு வருகிற குழாய்களை ஒழுங்குபடுத்துவதற்காக, 50 கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டால், அவர்களுடைய பதில் என்னவென்றால், குடிதண்ணீர் எங்கேயிருந்து வரும் என்பதைப் பற்றி சொல்லுங்கள், அந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளைச் சொல்லுங்கள், அதற்குப் பிறகு குழாய்களை புதுப்பிப்பது பற்றி யோசிப்போம் என்று பதில் வருகிறது. 3 ஆண்டுகளுக்கு முன்பு, நாங்கள் வீராணம் திட்டத்தைப் பரிசீலித்துக் கொண்டிருந்தபோது, இந்த நிலைமையை நான் உங்களுக்கு எடுத்துச்சொல்வதற்கு காரணம்,நகரை சுத்தம் செய்யும் வேலைக்கு 4 கோடி ரூபாய்தான் செலவிட முடியும். குப்பைகளை விஞ்ஞான முறைப்படி, எரு தயாரிக்கும் இயந்திரங்கள் நிறுவவும், குப்பைகளை வெளியில் அகற்றும் திட்டங்களை அமல்படுத்தும் நிலையில் உள்ளன என்றாலும், அதற்கு அரசு கடன் கேட்ட வேண்டியிருக்கிறது.

இதை இங்கே நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த நகரத்திலே இருந்து இந்த நகரத்திலே வாழ்ந்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை இவ்வளவு எளிதாக அல்ல, மிகச் சாதாரணமாக, நரகமாக இருக்கிறது என்று சொன்னால் – உண்மையாக நரகமாகத்தான் இருந்திருக்க வேண்டியது – ஆனால், அதிகாரிகள், மக்கள் ஒத்துழைப்பு இவை மூலமாக இந்த அளவுக்கு சுகாதார கேட்டிற்கு ஆளாகாமல் இருக்கிறோமே என்பதை நினைத்து மகிழ வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே எங்களுடைய 1980ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையை வைத்துக் கொண்டு, "என்ன என்ன சொன்னீர்கள்?, என்ன என்ன செய்தீர்கள்?" என்றெல்லாம் தன்னுடைய பேச்சிலே ஒவ்வொருவரும் மிகத் தெளிவாக விளக்கம் கூறி, எங்களை விட அதிகமாக அந்த தேர்தல் அறிக்கையைப் படித்துச் சில விவரங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்!

நலிவுற்ற விவசாயப் பொருளாதாரத்தைச் சீரடையச் செய்ய அதற்கு முன்னேற்றத்தைக் கொண்டுவரக்கூடிய வழியில், ஓர் அமைப்பு வேண்டும் என்று நாம் சொன்னோம். அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது திரு.முனு ஆதி அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. அவர்கள் அரசால் என்ன என்ன செய்ய முடியுமோ அதுபோல் அவர்கள் கொஞ்சமாகச் சொன்னாலும், அதிகமாகச் சொன்னாலும் முழுமையாக செய்ய முடியாவிட்டாலும், ஓரளவுக்கு அந்தப் பணியை இந்த அரசு நிறைவேற்றி வந்திருக்கிறது என்பதை, எங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னதை ஒவ்வொன்றாக நாங்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை, எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆங்காங்கே மாவட்டங்களிலே திரு.முனு ஆதி அவர்களும் அவர்களுடைய தலைமையிலே இருக்கிற நண்பர்களும் சென்று, ஆங்காங்கு குழுக்களை அமைத்துத் தேவையான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

விளைபொருட்களுக்கு நியாய விலை கிடைக்கவும், இடுபொருள்கள் எளிதில் கிடைக்கவும் நடவடிக்கை. இது குறிப்பு. அதிலே விவரமாக இருக்கும். அந்த தேர்தல் அறிக்கையிலே அது இருக்கிறது. நெல்லுக்கு, குவிண்டால் ஒன்றுக்கு 132 ரூபாய் என மைய அரசு விலை நிர்ணயித்த போதும், இந்த அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட தஞ்சை மாவட்டத்திற்கு, வறட்சிக்காக ரூ.20–உம் மின் கட்டணத்திற்காக ரூபாய் 15–உம் தனிச் சலுகையாக வழங்கி வருகிறது. கரும்பு கொள்முதல் விலை, டன்னுக்கு ரூபாய் 130 என மைய அரசு நிர்ணயித்தது. இந்த அரசு ரூ.175 கொடுக்க உத்தரவிட்டுள்ளது.

உரம், பூச்சி மருந்து போன்றவை எளிதில் கிடைக்க சிறப்பான நடவடிக்கையை இவ்வரசு எடுத்துவருகிறது. சென்ற ஆண்டு கூட 12 ஆயிரம் டன் யூரியா மத்திய அரசிடம் வலியுறுத்திக் கோரி பெற்றுத்தந்தது. ரூபாய் 181.22 கோடி விவசாயக் கடனைத் தள்ளுபடி செய்தது. ரூபாய் 24.44, கோடி வட்டி, அபராத வட்டியை தள்ளுபடி செய்தது. விவசாயப் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயத் தொழிலாளர்கள் பணி செய்து கொண்டு இருக்கும் போது மரணம் அடைந்தால், 5 ஆயிரம் ரூபாய் நிதி அளிக்கப்படுகிறது. மின் கட்டணம் பெரிய விவசாயிகளுக்கு 16 காசிலிருந்து 15 காசாகவும், சிறிய விவசாயிகளுக்கு 14 காசிலிருந்து 12 காசாகக் குறைக்கப்பட்டுள்ளது. மீட்டர் வாடகை முறை அறவே நீக்கப்பட்டுவிட்டது. 20 ஏக்கர் வரை விவசாய வருமான வரி ரத்து. பணப்பயிருக்கு விதிக்கப்பட்ட வரி தள்ளுபடி. குத்தகைத் தொகையைக் குறைக்கும் வகையில், 75–25 என்ற விகிதத்தில் புதியச் சட்டம். இங்கே பாராட்டினார்கள். 'பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம்' எல்லா மாவட்டங்களிலும் பரவலாகச் செயல்படுத்தப்படுகின்றன. வேளாண்மைப் பொறியியல் துறை, எண்ணெய் வித்துத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனைத் துறை, விதைச் சான்றிதழ் துறை ஆகிய புதிய துறைகள் தொடங்கப்பட்டுள்ளன. 60 வயதைக் கடந்த ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு, மாத ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் முதல் கட்டமாக, மூவாயிரம் ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 35 ரூபாய் வீதம்

உதவித் தொகையும், 90 பைசா மதிப்புள்ள ஒரு வேளை மதிய உணவும், வாரம் ½ கிலோ அரிசியும், ஆண்டு ஒன்றுக்கு 2 வேஷ்டிகளும், 2 சேலைகளும் வழங்கப்படுகின்றன. இங்கே நான் ஒன்றை கூற விரும்புகிறேன். விவசாயிகளுக்காக நாங்கள் எதையுமே செய்யவில்லை, தேர்தல் அறிக்கையில் சொன்னதில் எதையுமே செய்ய முற்படவில்லை என்று சொல்வது எவ்வளவு தவறான செய்தி! அந்தத் தவறானச் செய்தியை நம்பிச் சொல்கின்ற கருத்துக்கள் இவை என்பதை நான் இங்கே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

கிராம வளர்ச்சிக்காக சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்படும். அதுதான் ‘தன்னிறைவுத் திட்டம்’ என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இங்கே சிலர் பேசினார்கள். தன்னிறைவுத் திட்டம் என்று எல்லாம் கேலி பேசினார்கள். அவர் அவர்களுக்குத் தனியாக என்று சொன்னார்கள். நான் இறுதியில் புள்ளி விவரங்கள் படித்துக் காண்பிக்க இருக்கிறேன். எந்த எந்த கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த ஒப்பந்தப்புள்ளியில் கலந்துக்கொண்டு இருக்கிறார்கள், எத்தனை பேர்களுக்கு அதில் இடம் கிடைத்து இருக்கிறது என்ற புள்ளி விவரத்தை பின்னால் எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகவே, இப்போது அந்த இடத்திற்குப் போகாமல், கேள்விக்கு மட்டும் பதிலை, நான் குறித்து வைத்துள்ளதை படித்துவிட்டு நானாகக் கருத்துக்களை விளக்கிப் பேசும்போது, அவைகளைப் பயன்படுத்திக் கொள்கிறேன் என்ற வகையில் மேலும், சில உண்மைகளை வெளியிட விரும்புகிறேன்.

பதினாறாயிரம் கிராமங்களில் உள்ள ஆடவர் பெண்டிர் இரு பாலருக்கும் தனித்தனியாகக் கழிப்பிடங்கள் கட்ட வேண்டும் என்று நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொல்லியிருக்கிறோம். அதற்காக, ஒரு கழிப்பிடத்திற்கு ரூபாய் 14,100 வீதம் 22 கோடியே 56 இலட்சம் செலவில், கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை நிறைவேற்றத் திட்டமிட்டு, முதலில் 8 ஆயிரம் கிராமங்களில் கட்ட ரூபாய் 11 கோடி ஒதுக்கியுள்ளோம். இது தேர்தல் வாக்குறுதியை நாங்கள் செய்ய முற்படவில்லையா? நிறைவேற்ற முன்வரவில்லையா? சொல்லுங்கள்!

தாழ்த்தப்பட்டோருக்கு மனைப்பட்டா, வீடு கட்டிக் கொடுத்தல், குடிநீர் வசதி, சாலை வசதி, பள்ளிக்கூடங்கள், அடிப்படை மருத்துவ வசதி, கழிவறை வசதியுடன் கூடிய புதிய குடியிருப்புக்கள் கிடைக்க பாடுபடுவோம்! இது நாங்கள் தேர்தல் அறிக்கையில் சொன்னது. 1976ஆம் ஆண்டுக்கு முன் ஒரு வீடு கட்ட, தொகை 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் வரை மட்டுமே வேண்டும். ஆனால், தற்போது ஒரு வீடு கட்டி முடிக்க ரூபாய் 14 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் வரை உயர்ந்துள்ளது. அதாவது 3 மடங்கு உயர்ந்துள்ளது. முன்னால் ஆயிரம் வீடுகள் கட்டிக்கொடுத்தார்கள் என்றால் இப்போது 300 வீடுகள் கட்டிக்கொடுத்தாலே, அந்தத் தொகை வந்துவிடுகிறது என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். அப்படி இருந்தும், இதுவரை 11,385 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன, தாட்கோ மூலம்.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், 94 ஆயிரத்து 256 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இன்னும் 2 இலட்சம் வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன. 1977ஆம் ஆண்டு மார்ச் வரை ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள் 42,548. 1977ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டு முடிய வழங்கப்பட்ட மனைப்பட்டாக்கள் ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 203. ஆதிதிராவிடர்கள் பள்ளிக்கூடம் கட்ட 1980–1981, 1981–198–இல் ஒரு கோடியும் 1982–1983, 1983–1984இல் ஒரு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. 11 இலட்சத்து 72 ஆயிரத்து 636 ஆதிதிராவிட மாணவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ஆதிதிராவிடர்கள் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ரூ.4,300 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. 18.09.1978 முதல் இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், இந்தக் கணக்கு விவரங்களை எல்லாம் முன்பே நான் படித்து விட்டேன். ஆனால், 3 ஆண்டுகளுக்கும் சேர்த்து இப்பொழுது நான் படிக்கிறேன். இதற்கு முன்னால் படித்தது. அப்பொழுது குறைந்திருக்கிறது. இப்பொழுது அதிகமாகச் சேர்த்துப் படித்திருக்கிறேன்.

இதைத்தவிர, தொழிற்கருவிகள் இலவசமாக வழங்குதல், சிறு தொழில் கடன்வசதி, ஆடு வளர்ப்பு, குடிசைத்தொழில் பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான பல்வேறு பணிகளை நாங்கள் செய்து வருகிறோம். மயான இணைப்புச் சாலைகள், உழவு மாடுகள் வாங்கக் கடன் உதவி, பாசனக் கிணறு தோண்ட மூன்றில் ஒரு பங்கு மானியத்துடன் கடன் உதவி, ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையில், மின் வசதி, சமுதாயக் கிணறுகள் போன்ற திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

ஆதிதிராவிடர் இறுதிச் சடங்குச் செலவிற்கு ரூ.50 நிதி உதவி அளிக்கப்படுகிறது. இதை நான் இங்கே சொல்லும் போது இன்னொரு விவரத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இருக்கிற ஒரு உறுப்பினர் பேசினார், யார் என்று எனக்கு நினைவில்லை. 3 இலட்சம் பேர்களுக்கு மேல் சிறையிலிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உமாநாத் சொல்லியிருக்கிறார், அப்படி இருப்பதாக ஒரு நீதிபதி சொல்லியிருக்கிறார் என்று.

தமிழில் குறிப்பெடுத்திருக்கிறார்கள் அது தப்பாக இருந்தால் இப்பொழுது திருத்திக் கொள்வார்கள். உங்களுக்கு நன்மை அது.

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், வழக்கு மன்றங்களிலே, வழக்குகள் இருக்கின்றன, சில வழக்குகள் இருக்கின்றன. அதிலே அதிகமான வழக்குகள் சாராய வழக்குகள். அதை தயவு செய்து தெரிந்துக் கொள்ள வேண்டும் அதை விசாரிப்பதற்கு குடித்தவர்களாக இருந்தாலும், விற்றவர்களாக இருந்தாலும், நாட்களாகின்றன. நமக்கு ‘பெசிலிட்டீஸ்’ இல்லை. லாப் இல்லை. ஆகவே, தாமதமாகிறது என்பதால், எப்படி விடுவிப்பது என்று நாங்கள் யோசனை செய்து கொண்டிருக்கிறோம்.

ஒட்டுமொத்தமாக பழைய வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்கிக் கொள்ளலாம் என்று கூட, எங்கள் யோசனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலிவு விலையில் உணவுப் பொருட்கள், நியாய விலையில் உணவுப் பொருட்கள் கிடைக்க புதிதாக 17,915 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மாதம் ஒன்றுக்கு 85,000 டன் அரிசி பொது விநியோகத்திற்கும் சத்துணவுத் திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது. தமிழகம் முழுவதும், 118 இலட்சம் குடும்ப அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன், எல்லா மக்களுக்கும், போதுமான அளவிற்கு அவர்கள் கடைகளிலே போய் வாங்க அரிசி இருந்தால், அப்படி இருந்திருக்குமேயானால், 20 கிலோ அரிசி எங்கே என்று கேட்கிறார்களே ? அவர்களுக்கு இந்த உண்மை தெரியாமல் இல்லை. அரிசி இல்லை. பற்றாக்குறைதான். வெளியே வாங்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசிலேயிருந்து கொஞ்சம்தான் வருகிறது. அப்படியிருந்தும், கூடுமானவரையில் நியாய விலைக் கடைகளிலே அந்த விலையை அதிகமாக்காமல் விற்றும், தவறு செய்பவர்களைத் தண்டித்தும், அந்த நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு, இந்த 1½ ஆண்டுகாலம் வறட்சி நிலையை நாங்கள் எப்படிச் சமாளித்து வந்திருக்கிறோம் என்று, எல்லா உறுப்பினர்களும் தயவு செய்து நினைத்துப் பார்க்க வேண்டும்.

அதிகாரிகள் எவ்வளவு பொறுப்புணர்வோடு தங்கள் பணியை செய்திருக்கிறார்கள், நாங்கள் எவ்வளவு கவனத்தோடு இருந்திருக்கிறோம் என்பதை நீங்கள் உணர்ந்திருக்க முடியுமென்றாலும், இந்த நன்மையை வெளியே சொல்வதற்காக நீங்கள் கொண்டு வந்தீர்கள் என்று, நான் முன்பே சொன்னேனே, அதற்கு இது பயன்படுகிறது என்பதை நான் வெளியிட விரும்புகிறேன். காரணம் மக்களுக்கு அரிசி இல்லை. வெளியிலே இருந்து கொண்டு வர வேண்டும். 180 ரூபாய், 175 ரூபாய் வாங்கக்கூடியதை 375,370 ரூபாயில் வாங்க வேண்டியிருக்கிறது என்ற நிலைமையில், அவைகளை வாங்கி ரூ.1.75, ரூ.1.85–க்கு கொடுப்பதென்றால், எத்தனை கோடி ரூபாய்கள் தமிழக அரசிற்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்பதையும், எத்தனைக் குழுக்களை வைத்து நாங்கள் அந்தப் பணியை செய்திருப்போம் என்பதையும் மன்றத்து உறுப்பினர்கள் சிந்துத்துப் பார்க்க வேண்டும்! அந்த வகையிலே, மத்திய அரசு இப்போது கூடுதலாக 10 ஆயிரம் டன் கொடுத்தாலும் கூட, மேலும் கூடுதலாக பாமோலின் போன்று கொடுத்தாலும் கூட, ஒவ்வொரு லிட்டராகக் கூடினாலும் அது இந்த தமிழகத்திற்கு செய்கிற நன்மை என்று நான் எடுத்துக் கொள்வேனே தவிர, போட்டி போட்டுக் கொண்டு, இன்னமும் கொடுத்தால்தான் வாங்க வேண்டும்; இல்லாவிட்டால் வாங்கமாட்டேன் எனச் சொல்லமாட்டேன்! இங்கே விலை அதிகமானாலும், சரி, என்று சொல்லமாட்டேன். எவ்வளவு கொடுத்தாலும் அவை மக்களுக்குப் போய் கிடைக்க வேண்டும். இதற்காக நாங்கள் ஒரு காரியம் செய்தோம். அரிசி வெளியிலேயிருந்து கொண்டு வருபவர்களைத் தடுக்க வேண்டாம் என்று ஒரு உத்தரவு போட்டோம். அது கூடாதுதான்; ஆனால், அதைப் போடுவதைத் தவிர, எங்களுக்கு வேறு வழியில்லை.

நாங்கள் போய் வாங்கவே முடியவில்லை. 'சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனி'டமிருந்து தான் வாங்க வேண்டும் என்று நாம் உத்தரவு போட்டது தான் மிச்சமே தவிர, எங்கேயும் கிடைக்கவில்லை. அதற்கு பிறகு தலைமைச் செயலாளர் திரவியம் இருந்த போதும், இப்போது இருக்கிற தலைமைச் செயலாளர் தலைமையிலும், குழுவை அமைத்து அவர்கள் பேசி முடிவெடுத்து, அதை வாங்க வேண்டுமென்று தீர்மானம் செய்து, இதற்கு எத்தனை கோடி ரூபாய் தமிழக அரசிற்கு நஷ்டம் ஏற்பட்டது என்பதை நீங்கள் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். உங்களுக்குத் தெரியாததல்ல; ஆனாலும் அவ்வளவு பெரிய வறட்சியில், தண்ணீர் கிடையாது; குடிதண்ணீர் பம்புகள் வைக்க வேண்டும்; கிணறுகள் வெட்ட வேண்டும்; வெளியேயிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்றால் அதைச் செய்ய வேண்டும்; லாரிகளில் கொடுக்க வேண்டுமென்றால் கொடுக்க வேண்டும்; தமிழகத்தில் முதல் பணி தண்ணீர் கொடுக்கிற பணி என்று திட்டம் போட்டு மற்ற வேலைகளை நிறுத்தாமல், இதை நடத்தியிருக்கிறோம்.

இயற்கை ஒத்துழைத்ததன் விளைவாக மக்களுக்கு நிம்மதி கிடைத்திருக்கிறது என்றால், அந்த இடைக்காலத்தில் மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்களோ, அதைவிட நாங்கள் பொறுப்பிலே இருப்பவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க முடியும் என்பதை கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். எங்கே 20 கிலோ என்று கேட்டு விடலாம், வீட்டிலே 60 கிலோ இருந்தால் 20 கிலோ கொடுக்கலாம். பொதுமக்களுக்கு சாப்பாட்டிற்கு வழியில்லை என்கிற நிலைமையில், நாங்கள் 1 கிலோ கொடுத்தாலும், 85 ஆயிரம் பேருக்கு சத்துணவுப் போட்டாலும், அதை நிறுத்தாமல் நாங்கள் தொடர்கிறோம் என்பதை நீங்கள் எண்ணிப்பார்த்தால், இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் நீங்கள் சுமத்தமாட்டீர்கள். இது பெரிய குற்றச்சாட்டு அன்று. துணிந்து நமது அதிகாரிகள் செய்த நல்ல காரியம்; அவர்களது திறமை அதிலே மிளிர்கிறது என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

"இந்த அரசு வந்த பிறகு எத்தனை பேர்களுக்கு வேலை கொடுத்துள்ளது" என்று, கேட்கிறார்கள். நான் முன்பு ஒரு கணக்கைச் சொன்னேன். உணவிற்கு வேலைத் திட்டம், வேலைக்கு உணவு என்று இரண்டு பெயர்களை வைத்து நடத்தப்பட்டதே. அந்த சமயத்தில் எத்தனை இலட்சம் பேர்கள் வேலைபெற்று தங்கள் குடும்பத்தைக் காப்பாற்றினார்கள் என்பதையெல்லாம், புள்ளி விவரங்களோடு சொல்லியிருக்கிறேன். இங்கே குறிப்புப் புத்தகத்தில் இருக்கிறது. அதற்குப் பிறகும் நாங்கள் என்னென்ன செய்திருக்கிறோம் என்பதை, ஒட்டுமொத்தமாகக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு, வேலைவாய்ப்பு கொடுத்ததைப் பற்றி, எந்தெந்த வகைகளில், எத்தனை பேர்களுக்கு என்பதை, இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தயவு செய்து, அதை மாமன்ற உறுப்பினர்கள் குறித்துக் கொள்வது நல்லது. இந்தப் புள்ளி விவரம் தவறு என்று யாராவது சொன்னால், நிரூபித்தால் இதைக் கொடுத்த

அதிகாரியை உடனடியாக 'டிஸ்மிஸ்' செய்வேன் என்று சொல்லிக் கொண்டு இந்தக் குறிப்பை நான் வாசிக்கிறேன்.

1977 முதல் 1983 வரை தொடங்கப்பட்ட நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 3,95,802 பேர்கள்.

இப்படி நாங்கள் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவில்லையா? நெசவாளர்களுக்கு உதவவில்லையா? நாங்கள் என்ன சொன்னோம்? வேலைவாய்ப்புகளை அதிகரிப்போம். வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று. 1977 முதல் இந்த நிலைமையிருக்கிறது என்பதை நான் சொல்கிறேன்.

பாரதி கூட்டுறவு நூற்பாலை மூலம் 400 பேர்; விசைத்தறி மூலம் 400 பேர். கூடுதல் வேலைவாய்ப்பு 800. கூட்டுறவு நூற்பாலைகளின் மூலம் 10,128. கோ–ஆப்டெக்ஸ் மூலம் 3,200.

கிராமத் தொழில் வாரியம் மூலம் 1981–1982இல் உருவான கூடுதல் வேலைவாய்ப்பு 33,417.

நீலகிரி தேயிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 39,000.

தீக்குச்சித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 47,900 பேர்.

ஜவ்வரிசித் தொழில் மூலம் கிராம மக்கள் பயன் அடைந்தது 25,000 பேர்.

சேலம், தருமபுரி, தென்னார்க்காடு, குமரி மாவட்ட மக்கள் அதில் பயன் பெற்றிருக்கிறார்கள்.

மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் 3,05,666 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

பட்டுத் தொழில் மூலம் 1977ஆம் ஆண்டிலிருந்து, 1983ஆம் ஆண்டு வரை அதாவது 01.04.1983 வரை 2,75,710 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருக்கிறது.

1977ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டு வரை தொடங்கப்பெற்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 636. அதன் மூலம் வேலைவாய்ப்பு பெற்ற மக்கள் 1,68,000 பேர்கள்.

1977ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு வரை சான்றிதழ் வழங்கப்பட்ட சிறுதொழில்கள் 30,815. அதன் மூலம் வேலைவாய்ப்பு பெற்ற மக்கள் 3,61,000 பேர்கள்.

போக்குவரத்துக் கழகங்களில் 1978ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டு வரை வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 21,424 பேர்கள்.

கடந்த மூன்றாண்டுகளில், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களின் கீழ், சுய வேலைவாய்ப்புப் பயிற்சி பெற்றவர்கள் 80,81,82 வரை 1,29,578 பேர்கள். தற்போது பயிற்சியில் இருப்பவர்கள் 16,703.

கடந்த ஆறாண்டுகளில், வேலைவாய்ப்பு நிறுவனங்களின் மூலம், வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 2,92,794 பேர்கள்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் 1,77,379 பேர்கள்.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வேலைவாய்ப்பு தவணை முறை கொள்முதல் திட்டம் மூலம் 22,500 பேர்கள்.

மனை வழங்கும் திட்டத்தின் மூலம் 19,670 பேர்கள்.

சிறு தொழில் நிலையங்களில் 19,640.

வேலைவாய்ப்பற்ற படித்தவர்களுக்கு பத்து சதவிகித நிதி உதவி மூலம் 11,680 பேர்களுக்கு.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் மூலம் 63,298 பேர்கள்.

இதற்கிடையே நாங்கள் துவக்கிய தொழில்கள் 843. கிடைத்த வேலைவாய்ப்பு 31,645 பேர்கள்.

1977–1983 வரையில், நிரந்தர சான்றிதழ்கள் வழங்கப்பட்ட சிறு தொழில்களின் எண்ணிக்கை 36,645. இதன் மூலம் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் 4,40,000 பேர்கள்.

1977–1983 வரையில், பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 702.

இதன் மூலம் வேலைவாய்ப்பு 2,05,00 பேர்களுக்கு என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தோராயமாகக் கணக்கிட்டால், ஏறத்தாழ 31,32,925 பேர்கள் இந்த ஆட்சி வந்த பிறகு வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்தக் கணக்கிலே, தன்னிறைவுத் திட்டத்திலே, ஆங்காங்கே காண்ட்ராக்டர்கள் மூலம் வேலை செய்திருப்பார்களே, அவர்களுடைய கணக்கு சேர்க்கப்படவில்லை. இந்த நாட்டு மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று ஜனதா ஆட்சி இருந்தபோது, ‘உணவுக்கு வேலைத்திட்டம்’ கொண்டு வந்தார்களே, அப்போது ஏறத்தாழ 20 இலட்சம், 21 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது என்பதைத் தயவுசெய்து, மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்போது, அது வேறு பெயரில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும், நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வறட்சி நிவாரணப் பணியில் எத்தனை பேர்களுக்கு புதிய வேலை கிடைத்தது என்பது தெரியும். இல்லையானால், அவர்கள் அந்தப் பணமும் பெறாமல் இருந்திருந்தால் அவர்கள் நிச்சயமாக எப்போதோ இந்த நாட்டில் கருவமே இல்லை என்ற நிலைமைக்கு ஆளாகி இருப்பார்கள்! எனவே, வறட்சி நிவாரணப் பணியில் அவர்களுக்குக் கிடைத்த வேலைவாய்ப்பால், அவர்களுக்கு வாழ்வு அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த 31 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு என்றால்,

31 இலட்சம் குடும்பங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் சொல்கிறீர்கள் ‘எல்லா தரப்பினரும் உங்கள் மீது நம்பிக்கை இழந்துவிட்டார்கள், ஆகவே, தான் நாங்களும் நம்பிக்கையை இழந்து இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறோம்’ என்று. குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்தத் திட்டத்தை இப்போதுதான் அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஒரு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்றால், 31 இலட்சம் குடும்பத்தினரும் ஒருவேளை உணவையாவது சாப்பிடுவதற்கு அந்தப் பணம் உதவி இருக்கிறது என்பதைத் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இதை நான் குறிப்பிடுவதோடு, 31.12.1982 நிலவரப்படி, மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள் பற்றியும் சொல்லியாக வேண்டும். எத்தனை கிராமங்கள் என்றால் 15,627. சிற்றூர்கள் 17,485. கிராமங்களில் நாங்கள் யாருக்கும் உதவி செய்யவில்லை. எதையுமே செய்யவில்லை என்றெல்லாம் சொல்கிறார்களே, ஆனால் கிராம மக்கள் அப்படி சொல்லமாட்டார்கள். கண்ணால் பார்த்தவர்கள் எப்படி இல்லை என்பார்கள்? ஆனால் ஒன்று சொல்கிறேன். இன்னும் 108 கிராமங்களுக்கும் 353 சிற்றூர்களுக்கும் தான் மின்வசதி செய்து தரவேண்டி இருக்கிறது. மலைப்பகுதியில் அவை அமைந்து உள்ளதால் காலதாமதம் ஏற்படுகின்றது. ஏனெனில், அந்தத் தொடர்பைக் கொண்டு செல்வதற்குரிய வசதிகள் குறைவு.

இங்கே மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் அவருக்கே உரிய பாணியில் ஆடுகள் செத்துப்போய்விட்டன; ஆடுகள் கொடுத்தார்கள், இப்போது ஆடுகளே, இல்லை; இப்போது கழுதைகளைக் கொடுக்கிறார்கள், அதுவும் பாதி மானியத்தில் என்கிறார்கள். ஆனால், மனிதனால் நடக்க முடியாத இடத்தில் மேடு பள்ளம் உள்ள இடத்தில் சுமையைத் தூக்கிக் கொண்டு செல்வதற்குக் கழுதைகள் தான் பயன்படுத்தப்படுகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எத்தனை ஆடுகள் உயிரோடு இருக்கின்றன; எத்தனை மறைந்து போய்விட்டன என்ற கணக்கை பின்னால் நான் சொல்கிறேன்.

31.12.82 முடிய 51,481 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மின்வசதி செய்து தரப்பட்டுள்ளது.

31.12.82 முடிய 5,03,000 குடிசைகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டுள்ளது. இங்கே மின் திட்டங்கள் பற்றிய கேள்விகளுக்கு பதில் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே நான் அதைப் பற்றி குறிப்பிடவில்லை.

மாண்புமிகு திரு. உமாநாத் அவர்கள் பேசியதற்காக நான் அதை குறிப்பிட்டுதான் ஆக வேண்டும் என்றால், அந்த குறிப்புகளை எடுத்து வைக்க நான் தயாராக இருக்கிறேன்.

இன்னும் புள்ளிவிவரங்களைப் படிப்பதற்கு முன் கொஞ்சம் அரசியல் பேசலாம் என்று நான் கருதுகிறேன். அரசியல் என்பதை அரசு, இயல் என்று நாம் பிரித்துப்

பார்க்க வேண்டும். அது ஒரு கலை. இயற்கலை, இசைக்கலை, நாடகக்கலை, என்றெல்லாம் சொல்கிறார்களே! அதுபோல, இந்த அரசு இயல் என்பதும் ஒரு கலை. அந்தக் கலையை மிகவும் எச்சரிக்கையாக நாம் கையாளவேண்டி இருக்கின்றது. சிலர் ஏனோ அவசரப்பட்டு சில உவமைகளை எல்லாம் கூறுகிறார்கள். இன்னும் எனது நண்பராக இருக்கும் திரு. நெடுமாறன் அவர்கள் 'இரட்டைக் குதிரை'யில் சவாரி செய்யாதீர்கள், அது ஆபத்தானது' என்றார்கள். என்வரையில் நான் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரியங்களைத்தான் செய்து கொண்டிருக்கிறேன் – இதை எல்லாம் அவர் கேட்டுக் கொண்டிருப்பார் என்று நான் நினைக்கிறேன் அவர் இல்லையா? – மனதைக் குதிரை என்று சொல்லலாம், குரங்கு என்று சொல்வதுபோல! நான் அண்ணாவின் கொள்கையான பகுத்தறிவை ஒரு குதிரையாகவும், என் மனசாட்சியை ஒரு குதிரையாகவும் வைத்து கொண்டு தான், என்னுடைய கடமைகளைச் செய்கிறேன் என்பதைத் தயவுசெய்து அவர் நம்ப வேண்டும். அவர் பகுத்தறிவுவாதி என்று எனக்குத் தெரியும் ஒரு வகையிலே என்னைப்போல. ஆகவே, அதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். இரண்டு படகிலே போகக்கூடாது என்று சொன்னார்கள். அவர் ஒரு படகிலே போவதுதான் தவறு இரண்டு படகில் போவதைப் பற்றி அனுபவம் இல்லை, சொல்லியிருக்க மாட்டார்கள். இரண்டு படகுகளையும் ஒன்றாக இணைத்து, அதைச் செய்து விடுவார்களானால், அதுவும் சீக்கிரம் சாயாமல் பாதுகாப்பாக இருக்கும். அதை நான் சொல்லும்போது, அவர்களுக்குக் கொஞ்சம் கோபம் வந்து இருக்கிறது. அதனால்தான், எதையெல்லாம் சொல்ல வேண்டாமோ, அவர் வாயிலிருந்து வரக்கூடாத வார்த்தைகளை எல்லாம் நான் கேட்டேன். அதனால் தான் சிரித்துக்கொண்டே இருந்தேன். திரு. நெடுமாறன் அவர்கள்தான் பேசுகிறார்களா? அல்லது வேறு யாராவது அவர் உருவில் வந்து பேசுகிறார்களா என்று நான் ஐயுற்றேன். ஏன் இப்படி சொல்கிறேன் என்றால், அவர் பல பிரச்சினைகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார். அந்தப் பிரச்சினைகளுக்கு எல்லாம் நாம் புள்ளி விவரம் கொடுக்க வேண்டும். அதே சமயத்தில் நான் என்னுடைய கடமையை எடுத்துச் சொல்ல வேண்டும்.

இலங்கைப் பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினை. ஒரு பிரச்சினை வரும் போதுதான் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 'நிதானமாக இப்போது நாம் செய்கிற காரியங்களின் விளைவாக என்ன நேரும், ஏற்படும் என்பதை துணிந்து எண்ணிப்பார்த்த பிறகு, வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்து, அந்தப் பாதையில் நீ செல்' என்று அவருடைய தமிழ் பாணியில் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு அவ்வளவுதான் தமிழ் தெரியும். கலைஞரைப்போல், இலக்கியத்தோடு நான் எல்லாவற்றையும் பாராட்டக்கூடிய அளவிற்கு எனக்குத் தமிழ் தெரியாது. ஆகையால், நான் இப்படித்தான் பேச முடியும். ஆகவே, ஒன்றை நான் சொல்ல வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் யார் தீர்ப்பு சொல்வது என்பது பெரிய கஷ்டம். யார் ஒரு முடிவெடுப்பது என்பதும் சாதாரண விஷயம் அல்ல. தமிழ்நாடு பிரச்சினை பற்றி

தமிழ்நாட்டு மக்கள்தான் முடிவு எடுக்க வேண்டுமே தவிர, அங்கே இருக்கின்ற, வங்காளத்திலே இருக்கின்ற, ஆந்திராவிலே இருக்கின்ற, அல்லது கருநாடகத்திலே இருக்கின்ற தமிழர்கள் முடிவு எடுக்க முடியாது. அது சரியாக வராது. தமிழ்நாட்டிலே இருக்கின்ற தமிழர்கள் ஒன்று கூடி, எங்களுக்கு இது தான் சரி, இப்படித்தான் எங்களுடைய ஆட்சி அல்லது எங்களுடைய வாய்ப்பு அல்லது தொழில் எதுவாக இருந்தாலும், அவர்கள் முடிவு எடுத்தால்தான் அது சரியான முடிவாக இருக்குமே தவிர, அவர்களில் யார் பிரிந்து இருக்கிறார்களோ அவர்களை வைத்துக்கொண்டு, அவர்களைப் பயன்படுத்தி, கருநாடகத்திலே இருந்து வந்த தமிழர்கள் ஆந்திராவில் இருக்கும் தமிழர்கள் சொன்னால் அது நியாயமானதாக இருக்கும் என்று நாம் கருதவில்லை. அதேபோல ஆந்திராவிலே இருக்கின்ற தமிழர்கள் எப்படி இருக்க வேண்டும், அதேபோல கோலாரில் இருக்கும் தமிழர்களுக்கு எப்படி பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று சொல்லலாமே தவிர, இப்படித்தான் நீங்கள் அமைப்பு முறை வைத்து இருக்க வேண்டும் என்று நாம் அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அப்படி அதையெல்லாம் தேவையின்றி வலியுறுத்துபவன் தமிழனாக இருக்க முடியுமா ?

நான் ஒன்றே ஒன்று கேட்க விரும்புகிறேன். விடுதலைப் புலிகள் அனைவரும் ஒன்றாக ஒரு கருத்தைச் சொல்ல முடிகிறதா ? இது என்னுடைய தாழ்மையான கேள்வி. தெரிந்து கொள்ள வேண்டிய உண்மை, அறிந்து கொள்ள முயற்சிக்கின்றவனுடைய கேள்வி. நான் இன்னமும் சொல்கிறேன். அதில் பல பிரிவினர் இருக்கிறார்கள். விடுதலை வேண்டுமென்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். ‘பெடரல் சிஸ்டம்’ வேண்டுமென்று சொல்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால், எப்படியும் இலங்கை அரசின் கீழ் அடிமையாக இருக்க அவர்கள் விரும்பவில்லை என்ற அடிப்படைக் கொள்கையில் இந்தக் கருத்துக்கள் எல்லாம் வெளியே வருகின்றன.

அப்போது நாம் என்ன செய்யவேண்டும் ? அவர்களுக்கு இருக்கிற ஒரே ஒரு புகலிடம் தமிழ்நாடு தான். அங்கே உயிரோடு இருக்க முடியாது. அங்கே அவர்களுக்கு பாதுகாப்பு இல்லை. இங்கே தான் அவர்களுக்கு பாதுகாப்பு என்றால், அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய நாம் அவர்களுக்கு என்ன வழி சொல்ல வேண்டும் ? “நீங்கள் ஒற்றுமையாக இருங்கள் என்று சொல்ல வேண்டும், நீங்கள் ஒன்று சேர்ந்து பாடுபடுங்கள் என்று சொல்லவேண்டும். முடிவு செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும்”. இல்லாவிட்டால், தங்களுக்கு சாதகமாக ஒரு கட்சியோ, நண்பர்களோ, தனி மனிதரோ, இருந்தால் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பினால், அது இந்த நாட்டுக்கும் நல்லதல்ல; தமிழர்களுக்கும் நல்லதல்ல.

நான் இன்னும் துணிந்து கேட்கிறேன். திரு. அமிர்தலிங்கம் அவர்களை என்னைவிட அதிகமாகப் போற்றினார்கள்; என்னை விட அதிகமாக நெருக்கம் வைத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் எல்லாம் அவர் மீது குற்றம் சொல்கிறார்கள். காரணம், இவர்கள் கருத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லையோ

என்ற சந்தேகம். இப்போது அந்தக் குற்றத்தை அவர்மீதே சுமத்துகிறார்கள். இன்னும் கூடிய விரைவில் என்னவெல்லாம் அவரைப் பற்றிச் சொல்வார்களோ எனக்குத் தெரியாது. இந்தப் பிரிவை நாம் செய்தால் அவர்கள் எங்கே போவார்கள்?

இரண்டு தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொண்டார்கள். நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. ஏதோ சொல்கிறார்களே தமிழன், தமிழன், தமிழன் என்று? அங்கிருந்து பாதுகாப்புக்காக வந்த இடத்தில் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொள்ளுகின்ற நிலைமையை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அவர்கள் ஒற்றுமையாக இருந்து, நாம் பாதுகாக்கின்ற முறையில் அவர்கள் செயல்களைச் செயலாக்கி, செயல்படுத்திக் கொண்டு, செயலாக்கத்தை உருவாக்கிக் கொண்டு, அவற்றைத் தேடும் வகையில் இப்படியெல்லாம் வாழ வேண்டும், வளரவேண்டும், என்ற நிலைமைக்கு அவர்களை கொண்டு வருவதை விட்டுவிட்டு, அவர்களிடையே இருக்கின்ற பிரிவை பயன்படுத்திக் கொண்டு, ஒரு பிரிவினரை தன் கையில் வைத்துக்கொண்டு, இதைச் சொல்லுங்கள் இப்படிச் செய்யுங்கள், என்று சொல்கிறார்கள். இன்னொரு பிரிவினர் எங்கே போவது?, எப்படி போவது என்று தெரியாமல் தவிப்பதை நான், இங்கே சொல்லும்போது வெளியே இருப்பவர்களும் இந்தப் பிரச்சினையில் அக்கறைக் கொண்டவர்களும் “உனக்கு தமிழ் உணர்வே இல்லை!” என்று சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

ஒருவரைக் கைது செய்து, அவர் மீது வழக்கு தொடர்ந்து வெளியே வர வேண்டியிருந்தது. என்ன அவசியம்? இங்கே நடு வீதியிலே துப்பாக்கியால் சுட்டுக் கொண்டால் அவரை நாம் விட்டு விட முடியுமா? அவர்மீது நாம் நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியுமா?

இன்னொன்றை கேட்கிறேன். ஒரு மடாதிபதி மதுரையில் இருக்கிற மடத்தின் அதிபதி. அந்த மடாபதி சொல்கிறார், அங்கே பௌத்த மதத்தைச் சேர்ந்தவன் கத்தி வைத்துக் கொண்டிருந்தால், நான் துப்பாக்கி ஏன் வைத்துக் கொள்ளக்கூடாது என்று! அனுமதி வாங்கி வைத்துக் கொள்ளட்டும். யார் வேண்டாம் என்று சொன்னது? அதிலே ஒரு சட்டம், விதி இருக்கிறது. பொது கூட்டங்களுக்குப் போகிற போது கையில் துப்பாக்கி வைத்துக் கொள்ளக் கூடாது என்று இருப்பதாக எனக்கு ஞாபகம். பொதுமக்களிடம் துப்பாக்கியைக் காட்டி, ‘சுட்டுவிடுவேன்’ ஏன் சுடக்கூடாது ‘என்றால் என்ன அர்த்தம்—எந்த தமிழனை எந்தத் தமிழன் சுடுவது? இலங்கையிலே தமிழன் துன்பப்படுகிறான். அவர்களுக்கு இடையே இருக்கின்ற எதிர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, இங்கே தமிழன் சண்டை போடுவதா?

திரு. நெடுமாறன் அவர்களுக்குப் பெரிய கோபம் என்மேல். அவர் படகிலே இலங்கைத்தீவுக்குப் படை எடுத்துச்செல்ல முயன்றாரே, அப்போது நான் கைது செய்யவில்லை என்ற கோபம் அவருக்கு நிறைய இருக்கிறது. இப்போதே சொல்கிறார்கள். எனக்குத் தமிழ் உணர்வு இல்லை என்று. என்னைத் தமிழனே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். சொந்தமாக இருந்தபோது தமிழனாக இருந்தேன். வெளியே அனுப்பிய பிறகு நான் தமிழன் இல்லை என்று ஆகிவிட்டேன்.

அது பற்றிக் கவலை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது சொன்னார்கள். பிரிந்து போய்விட்டார்கள் என்று. பிரிந்து போகவில்லை, எம்.ஜி. ராமச்சந்திரனை வெளியே அனுப்பினீர்கள். நீங்களும் வந்து விட வேண்டியதுதானே ?

இதை எதற்காக சொல்கிறேன் என்றால், இது அரசியல்தான்! மன்னிக்கவும், திராவிட முன்னேற்றக்கழக பொதுக் குழுவில் ஒரு குழு அமைத்து, அவர்களை விசாரிக்க வேண்டும் என்பது. அவர்கள் யார் யார் தவறு செய்தார்கள் என்று சொன்னால், அவர்களைக் கட்சியில் இருந்து நீக்க வேண்டும். வெளியே இருக்கிறவர்கள் எல்லாம் பழி சுமத்துகிறார்கள். அது இல்லை என்று நிரூபிப்பதற்கு யார் மீது குற்றம் இல்லையோ, அவர்களை மேடையில் நிறுத்தி, மாலை போட்டு பாராட்ட வேண்டும். என்னுடைய பேச்சின் முழு வாசகத்தின் குறிப்பு. அதற்காக கட்சிக் கட்டுப்பாட்டை மீறினேன் என்று வெளியே சொல்லும் அளவிற்கு –அதுவும் எப்படி 15 நாட்களுக்குள் என்னுடைய பதில் வேண்டும் என்பது கடிதம். 4–5 நாட்களுக்குள்ளேயே வெளியே தள்ளிவிட்டார்கள். மூன்று நான்கு நாட்கள் பொதுக்குழு நடந்தது.

உடனே பொதுக் கூட்டம். வண்டு துளைத்துவிட்டது. அந்த மாங்கனியைத் தூக்கி எறிந்துவிட்டேன். எவ்வளவு சாதாரணமாக தூக்கி எறிந்து விட்டார்கள்! பரவாயில்லை. ஆனால், வண்டு துளைத்த மாங்கனி என்றைக்கும் நன்றாக இருக்கும். அது மக்களுக்கு நன்றாகத் தெரிந்தது. அண்ணாவின் இதயத்திலே இருந்த கனியல்லவா ? ஏற்றுக் கொண்டவர்கள். அதுதான் நியாயம். நான் சொல்வது நீங்கள் எல்லாம் இங்கே வந்துவிடுங்கள் என்று கோரிக்கை விடுவதற்காக என்ற தோரணையிலே நான் கேட்டுக் கொள்ளவில்லை. குற்றம் சொன்னவர்கள், வெளியே அனுப்பியவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்றால், அப்படி அவர்களே அதை உணர்ந்துவிட்டார்கள் என்றால் நீங்களும் உணரவேண்டியது தானே என்று நான் சொல்கிறேனே தவிர அதில் குற்றம் ஒன்றும் இல்லை. நான் அழைப்பதாக அர்த்தம் ஆகாது. அதை நீங்களும் ஏற்றுக்கொண்டதாக அர்த்தம் ஆகாது. அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்.

இதைச் சொல்லும்போது, நெடுமாறன் அவர்கள் கைது செய்யட்டும், என்னை வேண்டுமானால் கைது செய்யட்டும் என்று சொல்லிப்பார்த்தார்கள். இப்போதே என்ன சொல்கிறார்கள். படகுகளையெல்லாம் இல்லாமல் செய்துவிட்டார் இராமச்சந்திரன் முதலமைச்சராக இருந்து. ஆகவே என்னால் போக முடியவில்லை. எவ்வளவு பெரிய துரோகம் என்கிறார்கள். ஒரு நெடுமாறனை நாம் உற்பத்தி செய்ய முடியுமா ? இதை சிந்தித்துப் பார்க்க வேண்டாமா ? எத்தனையோ காலம் தியாகம் செய்த பிறகு இந்திரா காந்தி அம்மையாருக்கு வந்த ஆபத்தை தான் தாங்கிக் கொள்கிற ஆற்றல் பெற்றிருந்த, பெற்றிருக்கிற அந்த நெடுமாறன் அவர்கள் அங்கே போய், இடையிலே யாராவது துப்பாக்கியால் சுட்டு – அவரிடம் துப்பாக்கி இருக்கிறதா அல்லது தடுப்புக் கருவி இருக்கிறதா ஒன்றும் இல்லை, மனம் தான் துணிவோடு இருக்கிறது. அவர் அங்கே போய் ஆபத்து ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது ஆகவே படகுகள் இல்லாமல் செய்தோம். படகுகள் இருந்தால்தான் போக முடியும். அதிலும் நீந்தத் தெரியாது அவருக்கு.

ஆகவே, படகில்தான் போக வேண்டும். அங்கே இருக்கக்கூடாது என்று செய்தோம். யாரோ ஒருவர் ஏமாந்து வைத்து விட்டார். அதிலே போய் ஏறிவிட்டார்கள். சிரிப்போடு சொன்னாலும், வேதனையோடு சொல்கிறேன். எனக்குத் தகவல் வரும். இந்த இடத்தில் பேசப் போகிறாராம், இலங்கை பற்றி. அங்கே கூட்டம் சேரும். அங்கே இன்னும் கொஞ்சம் கூட்டம் வரலாம். ஆட்கள் அதிகமாகலாம் போவதற்கு. பரவாயில்லை. அந்த உணர்வை மக்கள் பெறட்டும். அவர் பேசுவதைத் தடை செய்யாதீர்கள். அந்த மடாதிபதி ருத்திராட்ச மாலையைத் தூக்கி எறிந்து விட்டாராம். உடனே அங்கே போய் சண்டை போடுவதற்கா? அந்த உணர்ச்சியை கட்டுப்படுத்துவதுதான் உணர்வு. நான் அதற்குத்தான் வருகிறேன். அந்த உணர்ச்சி அவ்வப்போது வந்து போய்விடும். உணர்வு தன் நினைவு இருக்கும் வரை இருக்கும். அந்த உணர்வு இருக்க வேண்டும். நாம் செய்வது என்ன காரியம்? அது சரியா தவறா? என்ன விளைவு? நான் எண்ணினேன். நான் போய் பிரச்சாரம் செய்ய முடியாது. நெடுமாறன் செய்கிறார். ஆட்கள் வருகிறார்கள்.

தினமும் பத்திரிக்கையில் வருகிறது. அது வெளிவரட்டும். அது அந்த நாட்டுக்கு நல்லதாக அமையட்டும். அந்த உணர்வுகள் பெருகுமானால் பெருகட்டும் என்பதற்காக அவரைக் கைது செய்யாமல் விட்டுவிட்டேன். அதற்கு என்மீது கோபம். ஏதோதோ சொல்கிறார்கள். பல ஹீரோக்களிலே அவர் ஒருத்தர். ஒவ்வொரு வகையிலே ஒவ்வொரு ஹீரோ இருக்கிறார். அது மாதிரி அவரும் ஒரு ஹீரோ. அதை நான் மறுக்கவில்லை. எல்லா படத்திலும், ஒரே ஹீரோவா வருகிறார்கள்? மாறி மாறித் தான் ஆட்கள் வருகின்றார்கள். அதேமாதிரி ஒவ்வொரு போராட்டம், பிரச்சினையிலே ஒவ்வொரு ஹீரோ வரலாம். இதுலே குமரி அனந்தன் போய்ச் சேர்ந்துக் கொண்டார். நெடுமாறன் கேட்டார், போலீஸ் அதிகாரிகளிடம். அவரைக் கைது செய்தீர்களே? என்னை, ஏன் கைது செய்யக்கூடாது? உத்தரவில்லை! உங்கள் முயற்சி நல்ல முயற்சி என்கிறீர்கள்! என்றாலும் நீங்கள் போக வேண்டாம்; முடியாது என்றால் நீங்கள் போங்கள். இதுதான் சொல்ல முடியும். அவர்கள், படகுகளிலே கவிழ்ந்து விடக்கூடாது என்பதற்காகத்தான், பாதுகாப்பு அளித்தார்கள். இதற்காக என்மீது ஒரு குற்றச்சாட்டா?

தமிழ் உணர்ச்சியே இல்லை; தமிழ் உணர்வே இல்லை, தமிழனே இல்லை என்றால் எவ்வளவு பெரிய நியாயம் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். இந்த அரசியல் எங்கிருந்து வருகிறது? சில நண்பர்களை நாம் பெறுகிறோம் அல்லது நம்மை நம்பி வந்தவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறோம். அவர்கள் வசதியோடும் வருகிறார்கள். ஆயுதத்தோடும் வருகிறார்கள். அல்லது அன்போடும் வருகிறார்கள். கொஞ்சம் வசதியோடு வந்தவர்கள் அல்லது ஆயுதத்தோடு வந்தவர்கள் உண்மையிலேயே தொண்டாற்ற விரும்பி வந்தவர்கள், நமக்குச் சொந்தமாக்கிவிட்டால், நம்மால் அவர்களை விட்டுக் கொடுக்க முடியாது. அந்த வகையில், நெடுமாறன் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு நெருங்கிய ஈழத்தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்களாக அந்தச் சொல்லைப் பயன்படுத்தினாரானால் நான் பாராட்டுவேன்.

ஆனால், அதேநேரத்தில் அவர்களை ஒன்றுபடுத்த முடியவில்லையே, அந்த ஈழத்தில் இருந்து வந்திருக்கிற தமிழக மக்களை விடுதலை வேண்டும் என்ற வேட்கையிலே இருப்பவர்களை ஒன்றுபடுத்த முடிந்திருந்தால், நான் அவர்கள் தான் ஹீரோ என்று கூறியிருப்பேன்!.

இப்போது 'ஒன் ஆப் தி ஹீரோஸ்' என்று சொல்வதற்குக் காரணம் இதுதான்! சாதாரண 'ஹீரோக்கள்' எத்தனையோ 'ஹீரோக்கள்' இருக்கலாம். சாதாரண 'ஹீரோக்களில்' இவர் ஒரு 'ஹீரோ'. முதலிலே எவ்வளவு வசதியாக இருந்தார். இவருக்கு என்று கூட்டம். இவருக்கு என்று ஒரு தலைமை இருந்தது. இவர் தலைமையிலே இருந்த கட்சிக்கூட்டம் போய், இவர் இன்னொரு கட்சித் தலைமையிலே போயிருக்கிறார். இது உயர்வா? தாழ்வா? வளர்ச்சியா? அல்லது குறைவா? அந்த எண்ணத்தை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், என்னை அவ்வளவு இழிவாகப் பேசி இருக்கிறார்கள். வெண்சாமரம் வீசுகிறோம். நாடகத்திலே படத்திலே நான் விசிறியிருப்பேன். ஆனால் வெண்சாமரம் வீசுவது என்பதற்கு பல கோணத்திலே பார்க்க வேண்டும். யாருக்கு வெண்சாமரம் வீசலாம்? ராஜாவுக்கு மந்திரி வீச முடியாது. அதற்காக இருக்கும் சேவகன் வீசலாம். நான் எந்த ராஜாவுக்கும் சேவகனாக இல்லை. நான் எந்தப் புலவனோடும் தொடர்பு இல்லாமல் இருக்கிறேன். ஏன் என்றால் இப்போது இருக்கிற சந்தர்ப்பத்திலே நிறைய பேசுகிற புலவர்கள் இருக்கிறார்கள்.

அந்த புலவர்களோடு நானும் பேசினால் விடுதலைப் புலியாகிவிடுவேன். புலவர்கள் புரவலர்களாக இருக்க வேண்டும். இலக்கியத்திலே; தமிழில், ஆராய்ச்சியில் இதிலே இல்லை. அவர்கள் புரட்சியில் இருக்கிறார்கள். எனக்கு யாரோ புரட்சித்தலைவர் என்று பட்டம் தந்துவிட்டார்கள். உண்மையில், திரு.நெடுமாறன் அவர்கள் முன்பு இருந்ததைப் போல இருந்து, அவர் தன்னைத்தானே இயக்குகின்ற அந்தச் சக்தியை இழக்காமல் இருந்திருந்தால், நிச்சயமாக அவருக்கு வெண்சாமரம் வீசுவேன்! எந்த மந்திரிக்கும் அல்ல. அல்லது எந்த பெரிய அதிகாரிக்கும் அல்ல. எனக்கு மேலே இருக்கின்ற எந்தப் பதவியிலே இருந்தாலும், அவர்களுக்கு நான் வெண்சாமரம் வீசமுடியாது. அதை அண்ணா அவர்கள் கற்றுத் தரவில்லை. அதனால்தான் வேதனையோடு சொல்கிறேன். 1972லே நான் வெளியே வந்தபோது எவ்வளவு வேதனைப்பட்டு இருப்பேன் என்பது எனக்குத் தெரியும். அப்படி அனுப்பப்பட்டேனே என்பதால், ஏன் என்றால்? எத்தனை தேர்தல்களில், எத்தனை அவசரமானத் தேவைகளில் நான் என்னை ஈடுபடுத்திக் கொண்டு இருப்பேன். அவர்களோடு இணைந்து ஒரு இலையில் சாப்பிட்டு இருப்பேன் என்பதை எண்ணும்போது அங்கேயிருந்து விரட்டப்பட்டேனே! என்கிற வேதனை இன்னும் இருக்கிறது. ஆனால், சிலர் நினைக்கிறார்கள். திராவிட இயக்கத்தில் இருக்கின்ற நம்மை அரசியல் பலிகடாக்களாக ஆக்க முடியும் என்று! யாராவது அப்படிக் கருதினால், தயவுசெய்து சொல்கிறேன், தமிழகத்தில் மீண்டும் திராவிட ஆட்சிதான் வரும் என்பதை!

மேசையைத் தட்டாதீர்கள் அவர்களுக்கு கோபம் வரும். அந்த உணர்ச்சி அல்ல. இது உணர்வு. நல்லதைச் சொன்னாலும் அதையும், நான் எற்றுக்கொள்ளமாட்டேன் என்று எண்ணுகிறார்கள். அல்லது என்னை எதிரியாக்கிவிட்டால், உண்மையாகவே நான் நல்லதை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்பதைப் போலத்தான், இப்போது உணர்வு இருக்கிறது. அதை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். அவைக்குத்தான், தமிழக மக்களுக்குத்தான் சொல்கிறேன், என்னைத் தமிழன் இல்லை என்கிறார்களே, தமிழ் உணர்வு இல்லை என்று சொல்கிறார்களே, தமிழ் உணர்ச்சி இல்லை என்று சொல்கிறார்களே, அவர்களுக்கு சொல்கிறேன். நாங்கள் தான் திரும்பவும் ஆட்சிக்கு வருவோம் என்று. இதை நான் சொல்கிற நேரத்தில் அகந்தையில் சொல்லவில்லை. மக்களை சந்திக்கின்ற முறையில் சொல்கின்றேன். மக்களைத் தெரிந்தவன் என்ற முறையில் சொல்கின்றேன். ஆகையினால், எங்கள் மீது நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டு வருவது நல்லதுதான் என்றாலும், இதற்காவது உதவும். இந்தப் பிரச்சினை எல்லாம் நெடுமாறன் பேசினார்கள். அதற்குப் பிறகுதான் உங்களுடையது வரும்.

உலகத் தமிழ்ச் சங்கம் என்ன ஆயிற்று ? அங்கேயிருந்த நூற்றுக்கணக்கான குடிசைகளை அழித்துவிட்டீர்களே, அவர்களையெல்லாம் ஒரே நாளில் வெளியேற்றி விட்டீர்களே, இது அநியாயம் இல்லையா என்று கேட்டார்கள். மாண்புமிகு காளிமுத்து அவர்களும், பட்டுராஜன் அவர்களும் மதுரை மேயர் மற்றும் அதிகாரிகளும் போய் பார்த்து, இந்த இடம் தான் பொருத்தம், மதுரை நகரத்திற்குள் இருக்கிறது, அதில் அமைத்துவிட வேண்டும் என்றும், அதற்கு திட்டமிட வேண்டும் என்று நேரில் பார்த்து, அவர்கள் சொன்ன இடத்திலேதான் அதை நாங்கள் நிறுவ இருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வறட்சி நிவாரண வேலைகள் நடக்கிற நேரத்தில் இத்தகைய விழாக்கள் அங்கே கூடாது என்ற காரணத்தால்தான் தள்ளி வைத்தோமே தவிர, இந்த உலகத் தமிழ் சங்கம் எங்களுடைய ஆட்சியில் எப்படியும் வந்துதான் தீர வேண்டும், அது எத்தனை ஆண்டுகள் ஆனாலும் சரி என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

‘தமிழ் ஆசிரியர்களை அனுப்புகிறேன் என்று சொன்னீர்களே, அனுப்பினீர்களா ? என்று கேட்டார்கள். கேள்வியை, நேரிடையாகக் கேட்டிருந்தால் இதே பதிலையே அப்போதும் சொல்லியிருப்பேன். மொரீஷியஸ் தீவுக்கு, தமிழ் ஆசிரியர்களை அனுப்புகிறேன் என்று மொரீஷியஸ் பிரதமரிடம் நேரிலேயே சொன்னேன். ஆளுநரை வைத்துக் கொண்டு சொன்னேன். மைய அரசுக்கு எழுதிப் பெறலாம் என்று அவர்களும் சொன்னார்கள். ஆனால், பிறகு அங்கே தேர்தல் வந்து பிரச்சினை வேறாக முடிந்தது. அதற்குப் பிறகு, இன்னும் நாங்கள் முயற்சி செய்து கொண்டுதான் இருக்கிறோம். அமெரிக்காவுக்குக் கூட நாங்கள் அனுப்பப்போவதாகச் சொல்லியிருக்கிறோம் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஊட்டியிலே வண்ணப்பட தயாரிப்பிற்கான தொழிற்சாலை ஒன்றை கொண்டு வருவதற்கு உங்களால் முடியவில்லையே என்றார்கள். நான் பணிவோடு கூறுகிறேன்.

அந்த வண்ணப் படப்பிடிப்புக்குக் கருவியாக இருக்கிற 'பிலிம்' இருக்கிறதே, அந்த படச்சுருள், அதை, அங்கே உற்பத்தி செய்ய வேண்டும் என்பது குறித்து எப்பொழுது சொன்னேன் என்றால் ஊட்டியிலே இந்த பிலிம் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைக்கான திட்டத்தை இங்கே கொண்டு வந்து, இந்த அசெம்பிளியிலே நிறைவேற்றி மேலவைக்குகொண்டு வந்தபோது பெரியவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் இருந்தார்கள். நான் எம்.எல்.சி.–யாக இருந்த நேரம். என்னுடைய பேச்சில் அதைச் சொன்னேன். கூட்டுறவு முறையில் இணைப்புத் திட்டம் ஒன்றை இங்கே நீங்கள் ஆரம்பித்திருக்கிறீர்கள். வெளிநாடுகளில் வண்ணப்படங்கள் வர ஆரம்பித்துவிட்டன. இதை நீங்கள் உற்பத்தி செய்து 10, 15 ஆண்டுகள் கழித்து வளருவதற்குள், அங்கே வண்ணப்படங்களின் சக்திதான் உயர்ந்திருக்கும், மிகுதியாக இருக்கும்.

ஆகவே, இது அந்த தொழிற்சாலைக்கும் பயன்படாது. நீங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியாது என்று நான் சொன்னேன். எனக்கு கிடைத்த தகவலின் படி. அதற்கு பதில் இல்லை. இப்பொழுது கிடைக்கவில்லை என்றால், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ளவர்கள். தங்களுடைய மாநிலத்திற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி, திட்டமிட்டிருக்கிறார்கள். அதைச் செய்கிறார்கள். ஆனால், தமிழகத்திற்கு அப்படிச் செய்வதற்குரிய பிரதிநிதித்துவம் இல்லை. ஆனால், இருக்கிற பிரதிநிதியும் வேறு ஒரு இலாகாவில் இருப்பதன் மூலம் அவர்களை இதில் ஈடுபடச் செய்ய முடியவில்லை என்பதை நான் அறிந்த பின்பு சொல்கிறேன். ஆனாலும், வேறு வகையில், பல தொழிற்சாலைகள் ஊட்டியில் வர இருக்கின்றன என்ற செய்தி வந்துள்ளது என்பதை, நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. காவிரிப் பிரச்சினையை நான்காண்டுகளாக முடிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறார். இதே நெடுமாறன் அவர்கள் இதே மன்றத்தில் என்ன என்னவோ பேசினார். காவிரி ஏன் வரவில்லை? அதை விட்டுவிட்டார்கள். 1974ஆம் ஆண்டிலேயே தொடங்கியிருக்க வேண்டும். அதற்கு முன்னாலேயே பேசியிருக்க வேண்டுமென்று சொன்னவர் திரு. நெடுமாறன். நாங்கள் வந்த பிறகு பேசவில்லை என்பது மட்டுமல்ல அவர் சொன்ன குற்றச்சாட்டு, முயற்சி எடுக்கவும் இல்லை என்பது. அதுமட்டுமல்ல திரு. குண்டுராவினுடைய தேர்தலுக்குப் போய் இதை சொல்லிவிட்டீர்களே, அவர்கள் சொல்லாமல், அங்கே போய் இந்திரா காங்கிரசுக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கேட்கிறீர்களே, அது எந்த மனிதத் தன்மையை என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தவில்லை எப்படி ஏற்றுக்கொள்வது, எப்படி நாங்கள் கோபப்படாமல் இருக்க முடியும்? குறைபடாமல் இருக்க முடியும் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். நாங்கள் பேசாமல் இல்லை. முதலில் தேவராஜ் அர்ஸ் இருக்கும் பொழுது அவர்களும் ஏற்றுக் கொண்டார்கள். ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றுவதை இருவரும் சேர்ந்து சென்று பார்க்கலாம் என்று சொன்னார்கள். அது நடைபெற முடியாமல் போயிற்று. காலங்கள் கடந்தன; நிலைமைகள் மாறின; அவர் மறைந்துவிட்டார். திரு. குண்டுராவ் ஆட்சியில் இருந்தார்.

அவரும் ஆங்காங்கு விவாதிக்கும்பொழுது எல்லாம், அதைப்பற்றி சொல்லிக் கொண்டே இருந்தார். சீக்கிரம் கையெழுத்து போடலாம், பேசுவோம் அங்கே 1976இல் பேசி முடித்தபடி அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடலாம், என்றார்கள். அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருக்கிற பாசனத்திற்குப் பாதுகாப்பு வேண்டும். அந்த பாதுகாப்பைத் தருவதற்கு அவர்கள் ஒத்துக் கொண்டால், கையெழுத்துப் போடலாம் என்பதுதான் பிரச்சினை. நாம் திரு. ஹெக்டே அவர்களுடனும் பேசாமல் இல்லை. அந்தத் தேர்தலிலே நான் பேசிய பேச்சு தமிழர்களுடைய வாக்குகள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றுதான். அங்கே நான் பேசிய பேச்சு இதுதான். நீங்கள் குண்டுராவ் அவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்கள் முதல்வராக வந்தால், காவிரிப் பிரச்சினை தீரும். தமிழக மக்களுக்கு அது ஒரு காமதேனுவாக அமையும் என்று நான் பேசிய பேச்சை வேண்டுமானால் யாராவது கேட்டுக் கொள்ளுங்கள் நான் என்ன சொன்னேன் என்பதை. அதை நான் சொல்லக் கூடாது.

நாங்கள் மீண்டும் பேச இருக்கிறோம். பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்திலே, இந்த அவையிலே சொல்கிறேன். அதைப் பெரிதாக்கி நடைபெற இருக்கிற ஒப்பந்தம் எதுவாக இருந்தாலும், தமிழகத்திற்கு நன்மை பயக்கிற ஒப்பந்தமாக இருந்தாலும், அதற்குக் கேடு பயக்கும்படி வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டாமென்று நான் எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு பெரிய குற்றச்சாட்டு. மத்தியில் எந்த ஆட்சிக்கும் ஆதரவு தருகிறீர்கள் என்று சொல்கிறார்கள். நான் அவர்களை ஒன்றுதான் கேட்க விரும்புகிறேன். மத்தியில் ஓர் ஆட்சி இருக்கிறது, மாநிலங்களின் ஆட்சிகள் இருக்கின்றன. அப்படியானால், மத்திய ஆட்சியை ஆதரிக்க வேண்டிய காலத்திலே ஆதரிக்காமல் எப்போதும் சண்டையிட்டுக் கொண்டே இருக்க வேண்டுமென்று சொல்வது நியாயமாகாது, முறையாகாது. அதைப்பற்றி நான் மிகவும் ஆழமான கருத்தை வைத்துக் கொண்டிருக்கின்றேன் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நான் எந்த நிபந்தனையும் இல்லாமல் ஜனதா ஆட்சியை ஆதரித்தேன் என்கிறார்கள். ஏன் ஆதரிக்கக் கூடாது ? தமிழகத்திற்கு அவர்கள் காவிரி நீர் வாங்கித் தந்தார்களா ? என்று கேட்டார்கள், மாண்புமிகு திரு. நெடுமாறன். அங்கே ஜனதா ஆட்சி வந்த 2 மாதத்திற்குள் என்று கருதுகிறேன், எங்களை அழைத்துக் கொண்டு திருவனந்தபுரம் சென்று – அங்கே திரு. அந்தோணி, அப்போது அவர்கள் தான் முதலமைச்சராக இருந்தார்கள், அவர்களிடம் பேசி, உடனே ஒப்பந்தம் செய்ய வேண்டும், நீங்கள் செய்யவில்லையென்றால் நாங்கள் தலையிட்டு அதை முடிவு செய்ய வேண்டி இருக்கும் என்று சொன்னார்கள். அதன்பிறகு, திரும்பி வந்தோம். அதன் பிறகு, எங்களை அவர்கள் அழைத்துப் பேசினார்கள். முடிவு வரவில்லை. இந்த நிலைமையை நான் ஏன் மறைக்க வேண்டும் ? நான் ஏன் கேட்கிறேன் என்றால், அவர் கேட்கிறார், ஜனதாவை ஏன் ஆதரிக்கிறீர்கள் என்று ? ஆதரிக்கக் கூடாதா ? ‘உணவுக்கு வேலைத் திட்டம்’ கொண்டு வந்தார்களே, ஆதரிக்கக் கூடாதா ?

கன்னியாகுமரியிலே, இரயில்பாதை அமைத்துத் தந்தார்களே, ஆதரிக்கக் கூடாதா? இப்படி எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம். நல்லது செய்கிறார்கள்; ஆதரிக்கிறோம். இந்தி மொழிப் பிரச்சினை வந்தபோது, நாங்கள் எதிர்த்தோம், தமிழ் தான் வேண்டும், ஆட்சி மொழியாக, தொடர்பு மொழியாக, ஆங்கிலம் இருக்கலாம் அல்லது 14 மொழிகள், இப்போது சேர்ந்து இருக்கிற அனைத்து மொழிகளும் சேர்த்து தேசிய மொழிகளாக ஆக்கப்பட வேண்டுமென்று சொல்லாமல் இல்லையே!

நாங்கள் ஆதரிக்க வேண்டியவற்றை ஆதரித்தும், எதிர்க்க வேண்டியவற்றை எதிர்த்தும் வந்திருக்கிறோம்! அதன் பிறகு திரு.சரண் சிங் அமைச்சரவை வந்தது. அதில் நாங்கள் ஏன் அமைச்சராகக் கூடாது? ஒரு கட்சி இங்கே ஆட்சியில் இருக்கும் போது அந்த கட்சியில் உள்ள பிரதிநிதிகள் மத்தியில் ஆட்சியில் இருக்கக்கூடாதா? 'பெடரல் சிஸ்டம்' என்று சொல்கிறார்களே, என்ன அர்த்தம்? பல கட்சிகள் சேர்ந்து, அங்கே கூட்டணி அமைக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் இங்குள்ளவர்களுக்கு அழைப்பு வந்தால் போக மாட்டீர்களா? உங்கள் கட்சியின் பிரதிநிதிகள் வேண்டும் என்றால் ஏற்க மாட்டீர்களா? அதைப்போல நாங்கள் என்ன நிபந்தனையின் மீது ஏற்றோம்? அதை ஏன் மாண்புமிகு நெடுமாறன் அவர்கள் மறைத்து விட்டார்கள்? நாங்கள் அங்கே பதவிக்காக வரவேண்டும் என்றால், ஒரு உத்தரவாதத்தை தர வேண்டும் என்றோம்.

'பார்லிமெண்டு' கூட்டும் போது, பிற்பட்டவர்களுக்கு இத்தனை சதவீதம் என்ற திட்டத்தை, நீங்கள் எற்றுக் கொண்டு வர வேண்டும் என்று கடிதம் எழுதிக் கொடுத்து, அதற்கு ஒப்புதல் கிடைத்த பிறகுதான், நாங்கள் அங்கே இணைந்தோம். என்ன தப்பு? இங்கே இருக்கின்ற தமிழர்கள் 2 பேர், அங்கே அந்த ஆட்சியில் இருக்கக் கூடாதா? ஒருவர் கிறிஸ்துவர். ஒருவர் ஆதிதிராவிடர். ஏன் வேறு யாரையாவது பிடித்து அனுப்பினோமா? இதில் என்ன அவமானப்பட வேண்டியிருக்கிறது? இந்திரா காந்தி வந்தார்கள், அவரையும் ஆதரிக்கிறீர்கள் என்றால், என்ன செய்யச் சொல்கிறீர்கள். அவர்கள் வந்து ஆட்சியில் அமர்ந்தவுடன், 'ஒழிக' என்று கோஷம் போட வேண்டுமா? இங்கு இருந்து கொண்டே, வருகின்ற அமைச்சர்களுக்கு கறுப்புக்கொடி காட்ட வேண்டுமா?

பேரறிஞர் அமரர் அண்ணா அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் முதலமைச்சர் பொறுப்பில் இருந்த போது, அவர்கள் மறைவதற்கு முன்பாக எழுதிய கடைசி கட்டுரையில், மத்திய அரசோடு எத்தகைய உறவு கொள்ள வேண்டும் என்பது பற்றித் தெளிவாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். மத்திய அரசுக்கு எரிச்சல் ஊட்டுவதோ, டெல்லியுடன் சச்சரவில் ஈடுபடுவதோ, நமது நோக்கம் அல்ல; அத்தகைய போக்கு எவருக்கும் நன்மை தராது என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். 'ஹோம் ரூல்' என்ற ஆங்கில வார ஏட்டில், 1969ஆம் ஆண்டு ஜனவரி பொங்கல் சிறப்பிதழில், 'தம்பிக்கு' என்ற கட்டுரையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள். ஏட்டு அளவில் கூட்டாட்சித் தன்மையும்,

நடைமுறையில் மேன்மேலும் மத்திய அரசை நோக்குவதாகவும் அமைந்துள்ள ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ், நமது மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பதில் நான் என்றும் மகிழ்ச்சியோடு இல்லை. ஆனால், அதற்காக எனது இனிய நண்பர் திரு. இ.எம்.எஸ் நம்பூதிரிபாடு அவர்களைப் போல் மத்திய அரசுக்கு எரிச்சல் ஊட்டுவதும், டெல்லியோடு சண்டையிட்டுக் கொண்டு இருப்பதும்தான் என்னுடைய நோக்கம் என்று அறிவிக்கவும் நான் விரும்பவில்லை. அது, யாருக்கும் உதவி செய்யாது. நெருக்கடியான நேரத்தில், மனஉறுதியோடு விளங்கிட வேண்டும் என்பது தான் முக்கியம். இது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய கட்டுரை.

நான் கேட்கிறேன் நமக்கு உதவி செய்ய முன் வந்தால், தமிழகத்திற்கு நன்மை செய்ய முன் வந்தால் அந்த ஆட்சியை என் ஆதரிக்கக்கூடாது ? ஆதரிக்காமல் இருப்பதன் மூலம் நாம் என்ன நன்மையைப் பெற்றுவிடப் போகிறோம் ? அந்த நன்மைகளைப் பெற முடிந்ததா ? இன்னும் சொல்கிறேன், பகிரங்கமாக இங்கே நான் சொல்கிறேன் ! கலைஞர் கருணாநிதி அவர்கள் அன்றைய தினம் குட்டிமணியைப் பிடித்துக் கொடுத்திருப்பாரானால், இந்தியப் பேரரசோடு மோதல் வர வேண்டாம் என்ற காரணமும் அடிப்படையாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுபோல, இந்திரா காந்தி அம்மையாரைச் சந்தித்த போதெல்லாம், அதிலும் இந்திரா காந்தி அம்மையார் இலங்கைக்குப் போகும்போது, அண்ணாவைச் சந்தித்த நேரத்தில், அண்ணா சொல்லி இருக்கிறார்கள், நீங்கள் என்ன முடிவெடுத்திருக்கிறீர்களோ, அதை நான் எற்றுக் கொள்வேன் என்பதை அவர்களும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலைமையில், இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மத்திய அரசில் யார் வந்தாலும், அங்கே தொடர்பு வைத்துக் கொள்கிறது என்றால், நம்முடைய அரசியல் சாசனம் என்ன சொல்கிறது ? சட்டம் என்ன சொல்கிறது ? தேவைக்காகப் போராடுவோம். அதை எடுத்துக் கொள்ளுங்கள். சொல்கிறார்கள், வெண்சாமரம் வீசினீர்கள், நன்மைக்காக வீசுவதனால் நாங்களும் அதிலே சேருகிறோம், என்கிறார்கள்.

தயவு செய்து கடைசியிலே பேசலாம். இன்றைக்கு ஒரு நாளைக்கு எனக்குச் சான்ஸ் கொடுங்கள். தீர்மானத்தைக் கொண்டு வந்த என்னுடைய அருமை நண்பர் திரு. உமாநாத் பேச வேண்டும், திரு. துரைமுருகன் பேசத் தயாராக இருக்கிறார்; அது சபாநாயகர் கையிலே இருக்கிறது. ஆனால், அப்படி ஒரு எண்ணம் அவருக்கு இருக்கிறது. முகத்தைப் பார்த்தாலே தோன்றுகிறது. அவ்வளவு அவசரமாகக் குறித்துக் கொண்டிருப்பதால் சொல்கிறேன்.

இந்த நிலையில் நாங்கள் எதிர்க்க வேண்டிய நேரத்தில் எதிர்க்கின்றோம் ! நாடாளுமன்றத்தில், மாநிலங்கள் பட்டியலிலிருந்து விற்பனை வரி நீக்கம் பற்றிய விவாதம் வந்தபொழுது, விற்பனை வரியை மாநிலப் பட்டியலிலிருந்து நீக்கக்கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து பேசப்பட்டது என்பதையும், இந்தக் கூட்டத்திலேயும் நாங்கள்

எதிர்த்துப் பேசினோம் என்பதையும் நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன் ஆனால், அதிலே தீர்மானம் வெளி வந்தவுடனே, அந்தத் தீர்மானத்தை எழுதி வங்காளத்தின் நிதியமைச்சரிடம் கொடுத்து, நிதி அமைச்சர் என்னிடத்தில் காட்டி, அதற்குப் பிறகு திரு. ஹெக்டே அவர்களிடம் காட்டி, அதற்குப் பிறகு நிறைவேற்றப்பட்ட தீர்மானமாக அது இருந்தது. அதனால்தான், விற்பனை வரியைப் பற்றிய பிரச்சினையே இல்லாமல் இருக்கிறது என்பதை, எல்லோரும் புரிந்துக்கொள்ள வேண்டும். நாங்கள் எதிர்க்கின்ற நேரத்தில் எதிர்க்கின்றோம்.

அது மட்டுமல்ல, மாநிலங்களில் எந்தப் பகுதியிலாவது கலவரம் என்றால், அந்தக் கலவரத்தை அடக்க மத்திய போலீசை அனுப்புவது என்றும், அப்படி அனுப்பும்போது கலவரம் அடங்கும் வரை, அந்த கலவரப்பகுதியை மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு கொண்டு வருவது பற்றியும் விவாதித்தபொழுது, கடுமையாக எங்கள் கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது என்பதை, நீங்கள் எல்லோரும் நினைவில் வைத்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

கோதுமைக்கு மட்டும் கொள்முதல் விலையை உயர்த்திக் கொண்டே போவது பற்றியும், நெல்லுக்குக் கொள்முதல் விலையை உயர்த்தித் தராதது பற்றியும், தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுவதாக எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இந்தியா முழுவதும் சுமார் 80–க்கு மேற்பட்ட மாவட்டங்கள் தொழிலில் பின் தங்கிய மாவட்டங்களாக அறிவிக்கப்பட்ட பொழுது, தமிழகத்தைச் சேர்ந்த ஒரு மாவட்டங்கூட, தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கப்படாததற்கும் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் பிரச்சினை, தமிழகத்திற்கு மட்டுமான பிரச்சினை அல்ல, இந்தியாவினுடைய பிரச்சினை என்பதை எடுத்துக் கூறி, இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தினோம். மொழிப் பிரச்சினையில் எப்போதுமே நாம் விட்டுக் கொடுப்பதில்லை. இந்தித் திணிப்பைத் தீவிரமாக எதிர்த்து வருகிறோம், இன்னும் எதிர்ப்போம் என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன் எங்கே வெண்சாமரம் வீசுகின்றோம் என்று, எனக்குப் புரியவில்லை! அவர்கள், ஏதாவது சினிமா படத்தைப் பார்த்துவிட்டுத் தூங்கும்போது கனவு கண்டிருப்பாரோ என்று எனக்குச் சந்தேகம். நான் நடித்த படம் இருக்கிறது, எனக்கு யாராவது போட்டிருப்பார்கள். அதைக்கொண்டு எம்.ஜி.ஆர்–ஐ மனசிலே நினைத்திருப்பார். இதுவரையில் யாருக்கும் வெண்சாமரம் வீசியதில்லை! வீச விரும்பியிருந்தால், அண்ணா ஒருவருக்குத்தான் வீசி இருப்பேன். ஆனால், அண்ணா அதை எதிர்பார்த்தவர் அல்ல. யாரும் தனக்கு வெண்சாமரம் வீச வேண்டுமென்று எண்ணியவர் அல்ல; ஏற்றுக் கொண்டவரும் அல்ல! என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னைப் பற்றி, தயவு செய்து, தப்புக் கணக்கு போடாதீர்கள்.

எனக்குச் சட்டம் தெரியாமல் இருக்கலாம். ஓரளவு படித்திருக்கலாம். சட்ட நுணுக்கங்கள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் மனதின் நுணுக்கங்கள்,

அவர்களின் உணர்வுகள் எனக்குத் தெரியும். அவர்கள் எதை வேண்டுகிறார்கள், எதைத் தேடுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். வெளியே பேசியிருக்கிறார்கள், ரூ.250 கோடி தமிழக அரசு அர்த்தமில்லாமல் செலவு செய்திருக்கிறது என்று ஒருவர் பேசி இருக்கிறார். நான் சொல்கிறேன், தமிழக மக்களுக்கு அதைக் கேட்டவுடனே புரிந்திருக்காதா ? அவர்கள் எல்லாம் ஆட்சிக்கு வந்தால், நமது குழந்தைகள் மீண்டும் பட்டினி கிடக்க வேண்டும் என்பது தெரியாமலா போய்விடும் ? அதை எப்படி ஏற்றுக் கொள்வார்கள் ? எங்கும் போய் பாருங்கள். வறுமைக் கோட்டுக்கு கீழே, அதற்கு என்ன அளவு வைத்திருக்கிறார்கள் ? ஒரு குழந்தைக்கோ, ஆணிற்கோ, பெண்ணிற்கோ வயதிற்கு தகுந்தபடி ஊட்டச்சத்துள்ள உணவு உண்ண முடியாமல் இருந்தால், அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்கள் என்று ஒரு கணக்கை எடுக்கிறார்கள். அந்தக் கணக்கு உண்மையானால், தமிழ்நாட்டினுடைய நிலைமை என்ன ? நான் ஒரு மருத்துவமனையை ஆரம்பித்தேன்; இலவச மருத்துவமனை; சத்யா கார்டனில், கோடம்பாக்கத்தில் ஆரம்பித்தேன்.

என்னுடைய குடும்ப டாக்டர் இலவசமாக வைத்தியம் பார்க்கிறேன் என்று சொன்னார். அதேபோல ஐந்தாறு டாக்டர்கள், 'ஸ்டான்லி ஆஸ்பிட்டலில்' அவரோடு வேலை செய்கிறவர்கள், நாங்களும் இலவசமாக பணி செய்கிறோம்; கார் வசதி மட்டும் செய்து கொடுத்து விடுங்கள் என்று சொல்லி வந்தார்கள். ஏறத்தாழ ஒரு ஆண்டிற்குள் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் காலி, எப்படி போயிற்று ? வந்தவர்களுக்கெல்லாம் அனிமியா; உடம்பில் ரத்தம் இல்லை; சத்து இல்லை; அதற்காக இன்ஜெக்ஷன் போட்டே அந்தப் பணம் காலி. பிறகுதான் ஒரு சிறிய கட்டடத்தைக் கட்டி அதை பஞ்சாயத்து போர்டிடம் ஒப்படைத்துவிட்டேன். இதை ஏன் சொல்கிறேன் ? இது எத்தனையோ வருஷமாக இருக்கிறது. நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்த போது, மதுரை வீரன் படத்தில் என்று நினைக்கிறேன், அந்தப் படத்தில் நான் நடித்த போது அந்த நிகழ்ச்சி நடந்திருக்கும்.

அந்தக் காலத்திலிருந்து மக்களுக்கு இன்னுமா அந்த நிலை இருக்கிறது என்றால், எதாவது செய்ய வேண்டாமா ? எங்கோ பல்லி விழுந்தது என்று சொல்லி பல்லி விழுந்த சாப்பாடு போட இருநூறு கோடி ரூபாய் செலவு என்று சொல்வது, மரத்துப் போன உணர்வு என்று தான் நான் சொல்வேன். உணர்வு நன்றாக இருந்திருக்கும். எப்படியோ எல்லோரும் சேர்ந்து பேசிப் பேசி, அவரை மரத்துப் போகச் செய்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை மக்கள் ஏற்க மாட்டார்கடள். அந்தத் துணிவோடு நான் சொல்கிறேன்.

'தன்னிறைவுத் திட்டம்', 'சத்துணவுத் திட்டம்', 'வீட்டிற்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் திட்டம்' என்றெல்லாம் கொண்டு வந்து, அதை நிறைவேற்றுகிற வகையிலே நிறைவேற்றத்தான் போகிறோம் – நாங்கள் அதை செய்கிறபோது அதை அனுபவக்கிற மக்கள் எங்களை வெறுக்கவே மாட்டார்கள் என்பது, எனக்கு நிச்சயமாகத் தெரியும். எங்கே இராமச்சந்திரன் ? என்று கேட்கிறவர்கள் இருக்கிறார்கள். நான் எங்கே

இருக்கிறேன் ? என்றால், நான் பெருமைக்காகச் சொல்லவில்லை; குடிசைவாழ் மக்கள், உழைக்கின்ற மக்கள் ஆகியவர்களோடு நான் வாழ்கிறேன் என்பதை, தயவு செய்து தெரிந்துகொள்ளுங்கள்.

நான் சினிமாவில் இருந்தபோது இருந்த செல்வாக்கு மக்களிடம் சென்றபோது இல்லை என்னுடைய வீட்டிலே வசதியோடு இருந்தது, இப்போது இல்லை. அதற்கு என்ன காரணமென்று நான் சொல்ல விரும்பவில்லை. அப்படி வைத்துக் கொள்ளவில்லை; மற்றவர்களுக்கு அந்த ஆசை வந்துவிடக்கூடாது என்பதற்காக; இதுவரை நான் பேசிய போது சொன்ன கருத்துக்களோடு, இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஏதோ, தி.மு. கழகத்திலிருந்து என்னை வெளியேற்றியதற்கு காரணம், யாரிடமோ நான் பேசி, ஏதோ நன்மையை எதிர்பார்த்து, அங்கேயிருந்து வந்துவிட்டதாக ஒரு பொய்ச் செய்தியை – பொய்ச் செய்தி என்று சொல்லக்கூடாது – உண்மைக்கு மாறான செய்தியை மக்களிடம் திரும்பத் திரும்பச் சொன்னால், நம்பிவிடுவார்கள் என்று கருதிப் பேசி வருகிறார்கள்.

நான் திரும்பவும் சொல்கிறேன். நான் கட்சியை விட்டு விலக்கப்பட்ட பிறகு, தனி ஒருவனாக கட்சியை ஆரம்பித்து, என்னைப் பின்பற்றியவர்களை, என்னை நம்பியவர்களை, அவர்களுக்கு வேறு வீட்டிற்கு போக இடமில்லை; இந்த இயக்கம் எங்கே இருக்கிறதோ, அந்த இடத்திற்கு வருவதற்கு ஆசை; அங்கே வந்தார்கள். அவர்களோடு நான் வளர்ந்தேன். அவர்களும் வளர்ந்திருக்கிறார்கள். நான் இன்னும் சொல்கிறேன். இந்த இளைஞர்களையோ, சகோதரிகளையோ, மற்றவர்களையோ இன்னொரு ஆட்சி இருந்திருந்தால் இவர்களை மந்திரிகளாகப் பார்த்திருக்க முடியுமா ? இத்தனை மந்திரிகள் எதற்கு ? ஜாதி இல்லையென்று சொல்லுகிறீர்கள்; பகுத்தறிவுவாதிகள் என்று சொல்கிறீர்கள்; ஜாதிக்கு ஒருவராக இடம் கொடுத்திருக்கிறீர்களே என்றெல்லாம் கேட்கிறார்கள். நான் கேட்கிறேன்.

நான் முன்பே சொல்லிய உங்கள் பகுத்தறிவு மனசாட்சியை தொட்டுப்பார்த்து பேசுங்கள். எந்தத் தேர்தலை நடத்தினாலும், அதில் ஜாதியை முன் வைத்து, பணத்தை பின்வைத்து நடத்துகிறார்களா, இல்லையா ? என்னையும், மற்றவர்களையும் சேர்த்து கேட்டுக் கொள்கிறேன். மக்கள் எவ்வழி, மன்னன் அவ்வழி. அப்போது சாதாரண தொண்டன் எந்த வழிப் போக முடியும் ? தலைவன் வழிதான் போக முடியும். தலைவன் என்ன செய்வான் ? மக்களுடைய பிரதிநிதியும் வேண்டும். என்னிடமே கேட்கிறார்கள். என் பெயரை வைத்துக் கொண்டிருக்கின்ற எம்.ஜி.ஆர் மன்றத்தினருக்குப் பதவி கிடையாதா ? என்று; அப்புறம் நான் யார் என்று கேட்டேன். இப்படி ஒவ்வொரு மனதிலும் ஜாதி உணர்வுகள் பெரிதும் அதிகப்பட்டுவிட்டன. அதை யாரும் மறக்காதீர்கள், மறைக்காதீர்கள், இல்லையென்றும் சொல்லாதீர்கள் !

எத்தனை முறை, வன்னியர் ஒருவருக்கு நீதிபதி கிடைக்கவில்லை என்று, இங்கே பேசியிருப்பார்கள் ? அந்த வன்னிய குலத்தவருக்கு எவ்வளவு வெட்கமாகவும், வேதனையாகவும் இருந்திருக்கும் ? எங்களிலே படித்தவர்கள் நீதிபதியாக வர

முடியாதா, வரக்கூடாதா என்று எவ்வளவு நாள் கஷ்டப்பட்டிருப்பார்கள்? ஒருவர் வந்துவிட்டால், எவ்வளவு பேர் திருப்தி அடைகிறார்கள்?

இது இராமச்சந்திரனுடைய ஒத்துழைப்பினால் அந்தப் பணியைச் செய்ய முடிந்தது. அந்த ஒத்துழைப்பைத்தான், நான் எதிர்பார்த்து, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறேன்.

ஜாதியை, நான் உண்மையிலேயே வெறுக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் என்னுடனேயே இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்களைக் கூட, என்ன ஜாதி என்று நான் கேட்டிருக்க மாட்டேன். தவறிக் கேட்டிருந்தால் அல்லது சொல்லியிருந்தால், சந்தர்ப்பங்கள் வரும்பொழுது இவர் இன்னார், இவர் இன்னார் என்று ஒருவர் சொல்வார். அப்படித்தான் எனக்குத் தெரியும், அப்படித்தான் நான் அறிந்து கொண்டிருக்கிறேன்.

ஜாதியைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூடிய நிலையில், எனக்கு அறிவு வந்த பருவம்முதல், அந்த வாய்ப்பு இல்லை. ஏழாவது வயதில் நாடகக் கம்பெனிக்கு வந்தவன் நான்! அங்கே இன்னின்ன ஜாதியர்கள் இருக்கிறார்கள் என்று இல்லாமல் பல ஜாதிகளைச் சேர்ந்த குழந்தைகள் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுப் பழகக்கூடிய முறையில் வளர்ந்தவன் நான். எனவே, பிறகுதான் பகுத்தறிவு வந்தது என்பது அல்ல, பிறகுதான் அந்த எண்ணம் வந்தது என்பதும் அல்ல. அப்பொழுதே, என் உள்ளத்திலே அந்த எண்ணம் ஊறியிருக்கிறது, உணர்விலே அது இணைந்துவிட்டது. அதே உணர்வுதான் இன்றைக்கும் என்னிடத்திலே இருக்கிறது.

அமைச்சர்களை நியமிக்கிறேன் என்றால், வருங்காலத் தலைமுறைகளை நான் வளர்க்க விரும்புகிறேன். அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க நான் விரும்புகிறேன். தேர்தலில் நாங்கள் வெற்றி பெற்றாலும், இன்னும் பதினைந்து ஆண்டுகள் இருந்தாலும், என்றாவது ஒருநாள் இளைஞர்கள் இந்தப் பொறுப்புகளையெல்லாம் ஏற்றுத்தீர வேண்டும். ஒருவருக்கே பதவி சொந்தமாக இருக்கக்கூடாது. ஆகவேதான் நாங்கள் இளைஞர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறோம்.

சகோதரிகள் எந்த அளவிற்கு இங்கே இருக்கிறார்களோ, தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு அந்த தகுதிக்குரிய மதிப்பை நாங்கள் கொடுத்திருக்கிறோம். இதைத்தான் எல்லோரும் தெரிந்துக்கொள்ள வேண்டும்.

என்னைப் பார்த்து, "ஜாதி உண்டா?" என்று கேட்டால், என்னுடன் சாப்பிட்டவர்கள்தான், என்முன் உட்கார்ந்து சாப்பிட்டு, என்னோடு பழகியவர்கள்தான், இந்தக் கேள்வியைக் கேட்பார்கள் என்று, என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

"ஆதிதிராவிடர்களுக்கு என்ன செய்தீர்கள்?" என்று கேட்கிறார்கள்! நாங்கள் இவற்றையெல்லாம் ஆதிதிராவிடர்களுக்குச் செய்கிறோம் என்று சொல்லி விட்டுச் செய்தால்தானா. அவர்களுக்குச் செய்கிறோம் என்று பொருள்? எல்லோரும் சொல்கிறார்கள்; சட்டமும் சொல்கிறது; அதனால்தான், ஆதிதிராவிடர்கள் என்று நாங்களும் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

இங்கே தேர்தலைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள். “எங்கே, பஞ்சாயத்துத் தேர்தல் ?” என்று கேட்கிறார்கள். குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறீர்கள் என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்கள்தான் இதைச் செய்கிறார்கள். எப்பொழுது தேர்தல் என்று எங்களிடம் கேட்பது. ஆனால் வெளியே போய்ச் சொல்வதோ இவர்கள் தேர்தலையே கொண்டுவரமாட்டார்கள், ஏனென்றால் தோற்றுவிடுவார்கள் என்று!

நாங்கள் தோற்றதே இல்லையா ? அண்ணாவே தோற்றார், காமராஜரே தோற்றார், நான் தோற்றால் என்ன ? என்ன குடிமுழுகிப் போய்விடப் போகிறது ? திரும்பவும் அண்ணா வரவில்லையா ? அதுபோல் நாங்களும் வந்துவிட்டு போகிறோம்.

இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஏதோ ஜாதி உணர்விலே சிலரைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டு, தேர்தலுக்காக ஜாதி உணர்வுடன் போடுகிறோம் என்றால் அதை நான் அடியோடு மறுக்கிறேன் என்பதை உணர்த்துவதற்காகத் தான்.

மீனவர் ஒருவரை அமைச்சராகப் போட்டோம் என்றால், அவர் ஒரு பி.ஈ., அவர் எனக்கு படகு கொடுத்தார் என்பதற்காக, அவருக்கு ஒரு பதவி கொடுக்க வேண்டுமென்றால், 1977ஆம் ஆண்டிலேயே கொடுத்திருக்கலாமே, ஏன் இத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் ? திரு. எட்மண்ட் இருந்தார், மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர்களுக்கு திருப்தியாக இருந்தது.

எத்தனை தந்திகள் எனக்கு வந்தன, “மீனவர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுங்கள்; மீனவர்களுக்கு கொடுங்கள்” என்று. சரி, முன்பு கிறித்தவராக இருந்தார், இப்பொழுது இந்து என்று அழைக்கப்படுகின்ற நம்மவர் இருக்கட்டும் என்று நான் எண்ணினேன். இதிலே ஜாதி எங்கே வந்தது ?

கிறித்தவர்களுக்கு ஏதாவது உதவி செய்தால், உடனே கிறித்தவர்களின் ஓட்டை வாங்கப் போகிறேன் என்றும், நாடார்களுக்கு ஏதாவது உதவி செய்தால், உடனே அந்த நாடார்களின் ஓட்டை வாங்கப் போகிறேன் என்றும் எண்ணினால், இந்த ஆட்சியைப் பற்றி அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது; மக்களைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியாது. எனவே நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதில் பயனில்லை.

அந்த அளவிற்கு, இந்த ஆட்சி, ஜாதிக்கு அப்பாற்பட்டு, திறமை, வேகம், இளமை, நாட்டுக்குத் தொண்டு செய்து பழகியவர்கள், நாட்டுக்குத் தொண்டு செய்ய வேண்டியவர்கள் என்பதையெல்லாம் கருதிப் பார்த்து, அத்தகையவர்களுக்குத்தான் வாய்ப்பை அளிக்கிறது என்பதை, நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து, அந்த ஜாதி, மதக் குட்டைகளில் போய் நாம் விழுந்து விட வேண்டாம்.

இங்கே, திரு. நெடுமாறன் அவர்கள் கேட்டார்கள், கண்ணகி கோயிலை விட்டுவிட்டீர்களே என்று. ஏன், அதற்குள் இந்த அவசரம் ? ‘விட்டுவிட்டோம்’! என்று எப்படிச் சொல்ல முடியும் ? நமக்கு உரிமை இருக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் இருக்கும்பொழுது, கடைசிவரையில் நாம் போராடித் தீர வேண்டுமே தவிர, விட்டு

விட்டீர்களே என்று சொல்வது, நமக்கே அவமானம். அது விட முடியாத காரியம். அது விடப்படக்கூடாது; அது கண்டிப்பாக, தமிழகத்துக்குச் சொந்தமாக வந்து சேரவேண்டும் என்பதை, இந்த மாமன்றத்தில் இருக்கின்ற அத்தனை பேர்களின் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்! இந்தக் கருத்தினை இங்கே சொல்ல வாய்ப்பளித்ததற்காக நான் நன்றி கூறுகிறேன்.

மரியாதைக்குரிய திரு. நாயனார் அவர்கள், அங்கே முதலமைச்சராக இருந்தபோது அவரிடம் இந்தக் கருத்தை நான் சொன்னேன். இது எங்கள் பகுதிக்குச் சேரவேண்டியது, 10, 15 அடி அல்லது 20 அடிக்கு உள்ளே தான் இருக்கும்; எல்லை வகுக்கப்படவில்லை; ஆகவே எல்லை வகுக்கப்பட வேண்டும்; இன்றைக்குக் கோவில் கிடைத்தால் போதும், எடுத்துக் கொள்கிறோம் என்று சொன்னேன். கூடாது என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லி என்ன காரணத்தைச் சொன்னார்கள் தெரியுமா? மிருகங்கள் எல்லாம் மேளவாத்திய சத்தம் கேட்டு ஓடிப் போகின்றன என்று சொன்னார்கள். "அப்படி போகிற மிருகம் நமக்கு எதற்கு, பார்ப்போம்!" என்று சொன்னபோது திரு. நாயனார் அவர்களுக்கு ஏகப்பட்ட தொல்லைகள் இருந்த அந்த நேரத்தில், அவரால் அதை நிறைவேற்ற முடியவில்லை. பிறகு திரு. கருணாகரன் அவர்களை முதலமைச்சராகக் கொண்டிருக்கின்ற, அந்த அரசு, அதை நிச்சயமாக ஏற்று, பரிசீலனை செய்து நல்ல முடிவைத் தரும் என்று எதிர்பார்க்கிறேன். எதிர்பார்ப்பு தான், நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமையில் நாம் இல்லை. இது அப்படிப்பட்ட நாடும் அல்ல. எல்லோரும் சேர்ந்து நன்மை பயக்கக்கூடிய காரியங்களை, விட்டுக் கொடுத்து செய்ய வேண்டி இருக்கின்றது.

இங்கே கேட்டார்கள் நண்பர் திரு. நெடுமாறன் அவர்கள். "கூடலூரிலே வந்து குடியேறினார்கள்; நீங்கள் அனுமதித்து விட்டீர்களே! யாரோ அமைச்சர் வந்து பேசினார், உடனே நீங்கள் அனுமதித்து விட்டீர்களே!" என்று கேட்டார்கள். அவர்களுடைய தவறான கருத்துக்காக உண்மையிலேயே நான் அனுதாபம் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது 12.06.1971 அன்று கேரள முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார்கள், அதில் குறிப்பிட்டிருந்தார்கள் 'எந்தவொரு வகையில் தமிழகத்திற்கு இது சேர வேண்டும், எப்படி இருந்தாலும், நீங்கள் தமிழகத்திற்குத் தரவேண்டும்; நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். இவர் கண்ணியமாகக் கேட்டதை அவர்கள் பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள். "ஓகோ, நமக்குத்தான் இது சொந்தம் போலும் என்று! பீர்மேடு பகுதிக்குப் பக்கத்திலே இருக்கின்ற காரணத்தால், அது எங்களுக்குத்தான் சொந்தம் என்று சொன்னார்கள்!". கேரள அமைச்சருக்கு, கல்வி அமைச்சரின் கடிதம் 16.06.1971; 25.07.1971 கேரள முதல்வர் அவர்களின் கடிதம் ; கேரள முதல்வரின் கடிதம் 03.08.1971; 23.10.1971 கேரள முதல்வர் எழுதிய கடிதம்; கேரள முதல்வருக்கு எழுதிய கடிதம் 26.01.1973; இவ்வளவு முயற்சிகளையும் அவர்கள் செய்தார்கள்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, 07.08.1975, 14.09.1976 மன்னிக்கவும், மத்திய உள்துறை அமைச்சரின் கடிதம், வருவாய்த்துறை அமைச்சரின் கடிதம் 1976ஆம் ஆண்டில் அவர்கள் அரசு இருக்கும்போது அனுப்பப்பட்டது. நாங்கள் 1980ஆம் ஆண்டில் பிரதம அமைச்சருக்கு எழுதிய கடிதம் 27.12.1980; மத்திய உள்துறை அமைச்சரின் கடிதம் 14.05.1981; மத்திய உள்துறை அமைச்சரின் கடிதம் 28.07.1981; மத்திய அமைச்சர், உள்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதம்; இதில் என்ன வேடிக்கை என்றால் முன்பு திரு. ஜெயில்சிங் அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தார். நாங்கள் பதவிக்கு வந்த பிறகு, அவரிடம் சென்று பேசி, அவர் கடிதம் எழுதியபோது, "நான் இதை கேரள முதல்வருக்கு அனுப்புவேன், அவர் வேண்டியதைச் செய்வார் என்று சொன்னார்கள்!" அவரும் அனுப்பினார். அதற்கு அவர்கள் கடிதம் எழுதினார்கள், பரிசீலிக்கிறோம் என்று! எங்களுக்கும் எழுதினார்கள், முன்பு சொன்னது போல. அதன் பிறகு திரு. சேத்தி அவர்கள் வந்தார்கள். அவருக்கும் கடிதம் எழுதினோம். அவர்களும் கேரள முதலமைச்சருக்குக் கடிதம் எழுதினார்கள். இப்படி இந்தக் கோப்பிலே பல கடிதங்கள் இருக்கின்றன. இவ்வளவு கடிதப் போக்குவரத்து இதைப்பற்றி நாங்கள் நடத்தியுள்ளோம். கடைசியாக, உலகத்தமிழ் மாநாடு சமயத்திலும், அதற்கு முன்பும் எழுதினோம். அந்த நேரத்திலும் எழுதினோம். உலகத்தமிழ் மாநாட்டிற்கு வருகின்ற பேரறிஞர்கள் அங்கே சென்று அதைப்பார்க்க வேண்டும்; அது வரலாற்றுச் சிறப்புமிக்க இடம்; அதைப்பார்ப்பதில் பெருமையும் உண்டு, இலாபமும் உண்டு, இந்த நாட்டைப் பற்றிய நல்லெண்ணமும் மதிப்பும் உயரும் என்றெல்லாம் சொன்னோம். கேட்கவில்லை, கிடைக்கவில்லை. அதே நிலைதான் இன்றும் தொடர்கிறது. அதை நாங்கள் நிச்சயமாக உங்களுடைய உதவி இருந்தால், மைய அரசின் முயற்சியால், நிச்சயம் பெற முடியம் என்று நான் நம்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட வேண்டும். அதற்குத்தான் முதலில் நான் இலங்கைப் பிரச்சினையைத் தொடங்கினேன். கூடலூரில் வந்து குடியேறினவர்களை விட்டு விட்டீர்களே! என்று சொன்னார்கள். ஆமாம், விட்டுவிட்டோம். முன்பு எடுத்ததை விட நடவடிக்கை அதிகமாக, கணிசமாக, கடுமையாக எடுத்தது இந்த அரசாங்கம் தான் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏறத்தாழ 1,000 போலீசுக்கும் மேல் அனுப்பி வைக்கப்பட்டு, அங்கேயிருந்து வெளியேற்றப்பட்டார்கள். வெளியேற்றப்பட்ட பிறகு. திரும்பவும் ஒரு வாரத்திற்குள் மீண்டும் குடியேறினார்கள். அப்போது அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஆனால் என்ன நடந்தது? இன்று என்னைக் கேட்கின்றார்களே தமிழ் உணர்ச்சி எங்கே? தமிழ் உணர்வு எங்கே? என்று, பக்கத்து மாநிலத்தில் இருந்து வந்து குடியேறிவிட்டார்களே, ஏன் தடுக்கவில்லை என்று கேட்கிறார்களே, அன்றைக்கு தர்ணா, உண்ணா நோன்பு, போராட்டம் இதையெல்லாம் நடைபெறவில்லையா? நாயுடு தலைமையில் போராட்டம் நடத்த வில்லையா? தி.மு.க. போராட்டம் நடத்தவில்லையா? மற்றக் கட்சிக்காரர்கள் எல்லாம் போராட்டம் நடத்த வில்லையா? அப்போது இருந்த தமிழ் உணர்வு எனக்கு அதிகம் அவர்களுக்குக் குறைவா? அது அல்ல. என்மீது இருக்கும் தனிப்பட்ட ஆத்திரத்தினால், இந்த அமைச்சரவை இருக்கிறதே, இதைப்

பற்றி தமிழ் மக்களுக்கு ஒரு தவறான கருத்து தெரிவிக்க அவர்கள் முயற்சி எடுத்து, விவசாயிகளை வெளியேற்றுகிறோம் என்று சொன்னார்களே தவிர கேரளத்தவர்களை நாங்கள் வெளியேற்றுகிறோம் என்று அவர்கள் பேசவில்லை.

இன்னும் சொல்கிறேன். எங்கள் முயற்சி நிற்காது. இதைத்தான் பிரதம அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லிவிட்டேன். எங்களுடைய இடத்தில், அங்கேயிருந்து யாராவது வருவார்களானால், வெளிநாட்டில் இருந்து தமிழர்கள் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்பவர்கள், அவர்களுக்கு அந்த இடம் ஒதுக்கிவைக்கப்பட்டு இருக்கிறது, நாங்கள் அவர்களுக்கு அந்த இடத்தைக் கொடுக்க விரும்புகிறோம். அவர்கள் அங்கே பணி செய்ய வேண்டும். அவர்களுக்கு அந்தத் தொழில் தான் தெரியும். அதனால் விடமாட்டோம் என்று சொன்னதற்கு, அது உங்கள் உரிமை, செய்யலாம், தவறில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே அவர் சொன்ன பிறகு தான், மறுபடியும் அந்த பிரச்சினை உண்ணா நோன்பு, கருப்புக்கொடி போராட்டம். அந்த தமிழ் உணர்வு இல்லை என்று இங்கே குற்றம் சொல்கிறார்களே. அப்போது அங்கே வெளியேற்றியபோது திரு.நெடுமாறன் அவர்கள் தமிழகத்தில் இருக்கவில்லையா? திரு.நெடுமாறன் அவர்கள் என் மீது இவ்வளவு குற்றம் சுமத்துகிறார்களே அவர்கள் இங்கே இருக்கவில்லையா? அதைப்பற்றி என்ன செய்தார்கள்? இந்த அரசுக்கு ஆதரவாக ஒரு வார்த்தை சொல்லி இருக்க வேண்டாமா? அவர்கள் செய்தது நியாயம் தான், கேரளத்தில் இருந்து குடியேறியவர்கள் தான் என்று சொல்லியிருக்க வேண்டாமா? அப்போது பேசாமல் இருந்து விட்டு, இப்போது வந்து உங்ளுக்கு தமிழ் உணர்வு இல்லை, இத்தனை பேரை வெளியேற்றிவிட்டீர்களே!" என்று சொல்கிறார்கள்.

இன்னும் சொல்கிறேன், வெளியேற்றப்படவேண்டியவர்கள், வெளியேற்றப்பட வேண்டும். இந்த அரசு நிச்சயமாக விட்டுக்கொடுக்காது. இன்னொன்றையும் கூடச் செய்தார்கள். பட்டா கேட்டார்கள். கொடுக்க மாட்டோம் என்று சொன்னோம். ஜென்ம நிலங்கள் அதிகம் அங்கே. அரசு நிலங்கள் குறைவு. அந்த ஜென்ம நிலங்களை அவர்களாகவே விட்டுவிட்டுச் சென்றார்கள். அதில் ஊட்டியில் இருந்து கூட பலர் அங்கே சென்று பிடித்துக் கொண்டார்கள். அவர்கள்தான் சொன்னார்களே தவிர, தமிழர்கள் மண், நிலம், நீர் எதுவாக இருந்தாலும் அதிலே ஆக்கிரமிப்பு எங்கே இருந்தாலும் அது அகற்றப்படவேண்டும் என்று அவர்கள் ஏன் சொல்லவில்லை? ஏன் அவர்கள் எங்களுக்கு உதவி செய்து இருக்கக்கூடாது? அரசு செய்தது சரி என்று சொல்லிருக்க வேண்டாமா? அப்போது உணர்வு இல்லாமல் பேசாமல் இருந்தவர்கள்,இப்போது உணர்வு பொங்கப் பேசியதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்!

அவர்களுக்கு, இப்போது நடப்பது என்ன என்று தெரியும். முன்பு நடந்தது என்ன என்றும் தெரியும். நாங்கள் இதுவரையில் செய்து வந்த கடமைகள் எல்லாம் தெரியும், நடக்கப்போவது என்ன என்று தெரியும். அதை வைத்துச் சொல்கிறேன்.

இந்த நேரத்தில் நான் குறிப்பிட்ட சில விஷயங்களை, பல உணர்வுகளை வெளியிட்டாக வேண்டும் ஏன் காஷ்மீருக்குப் போகவில்லை என்று கேட்டார்கள். எப்படி காஷ்மீருக்குப் போவது ? பெங்களூரில் கூடிய முதலமைச்சர்கள் மாநாட்டில் என்ன தீர்மானம் நிறைவேறியது ? மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலுள்ள பிரச்சினையை நமக்குள்ளே பேசிக்கொண்டு ஒருமுகமாக, மத்திய அரசுக்கு எடுத்துக் கூறி, நல்ல சுமூகமான உறவுகளை ஏற்படுத்தி, நமக்குள்ள உரிமைகளை அதிகம் பெறுவதற்கு நாம் ஒத்துழைக்க வேண்டும்! மாண்புமிகு கேரள முதலமைச்சர் கருணாகரன் அவர்கள் வருவதாக ஒப்புக் கொண்டார்கள். பிறகு அவர் வரவில்லை. அப்போது அவர் அழைக்கப்படவில்லையா ? அதைத்தான் காஷ்மீர் முதலமைச்சருக்கு நான் சொன்னேன். விஜயவாடாவுக்கு நாங்கள் மூன்றுபேர் முதலமைச்சர்கள் போனோம். அங்கே, வேறு யார் யார் கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். எதிர்க்கட்சிகளை சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள். நான் கேட்டேன், அப்படி என்றால், தமிழ்நாட்டில் இருக்கின்ற எதிர்க்கட்சிகளையும் நீங்கள் அழைத்திருக்க வேண்டாமா ? ஒவ்வொரு மாநிலத்தில் இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகளையும் அழைத்திருக்க வேண்டாமா ? நீங்களாக இப்படி எதிர்கட்சிகளை அழைத்து வைத்துக்கொண்டும் அவர்கள் எதிர்கட்சிகள் என்றால், அது எப்படி இருக்கும் ? அவர்கள் எல்லாம் நிச்சயமாக வரவேண்டுமென்று இல்லை, அதைத்தான் முதலமைச்சர் பருக் அப்துல்லா அவர்களுக்கு நான் எழுதினேன்

ஏதோ, யார் யாருக்கோ பயந்துகொண்டு நான் ஸ்ரீநகர் மாநாட்டுக்குப் போகவில்லை என்று, ஒரு கற்பனைக் கதையை மனதிலே உலவ விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஸ்ரீநகரிலிருந்து எனக்கு வந்த கடிதங்கள், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அந்தக் கடிதங்களை எல்லாம் – அதைக் கேட்டதும் நீங்கள் தானா! அந்தக் கடிதம் அதுதான். அன்புள்ள திரு. ஆ. ராமச்சந்திரன் அவர்களுக்கு,

மைய மாநில உறவு குறித்து, இந்திரா காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சிகளைக் கொண்டு மாநாடு ஒன்றைக் கூட்ட ஏற்கனவே முடிவு செய்து, அதனை ஸ்ரீநகரில் நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம். இந்த மாநாட்டிற்கு தங்களை அன்புடன் வரவேற்கிறேன். இந்த மாநாடு செப்டம்பர் 16ஆம் தேதி அன்று பிற்பகலிலும், செப்டம்பர் 17ஆம் தேதியன்றும் நடைபெறவிருக்கிறது.

தாங்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்வீர்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தாங்கள் தெரிவிக்கும் நல்ல பல கருத்துக்களைக் கேட்க விழைகிறோம்.

தாங்கள் இங்கு எவ்வாறு வருகிறீர்கள் ? எந்த நேரத்திற்கு ஸ்ரீநகருக்கு வந்து சேருகிறீர்கள் ? என்பதை தயவு செய்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன். டெல்லியிலிருந்து, ஸ்ரீநகருக்கு வருவதற்கு தேவைப்படக்கூடிய தகவலை அல்லது உதவியினைத் தங்களுக்கு அளிக்குமாறு புதுடில்லி–5, பிருதிவிராஜ் சாலையில் உள்ள எங்கள் தொடர்பு ஆணையாளர் அலுவலகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தங்கள் வசதிக்காக எங்களுடைய தொடர்பு ஆணையாளர் திரு. எம்.ஏ.பட் அவர்களை 611108, 611506, 611210 மற்றும் 611556 ஆகிய தொலைபேசி எண்களில் டில்லியில் தொடர்பு கொள்ளலாம். ஸ்ரீ நகரில் என்னுடைய முதன்மைச் செயலாளர் திரு.எம். ரகுமான் அவர்களை 71093, 73102 ஆகிய அலுவலகத் தொலைபேசி எண்களிலும், 73134, 74651 ஆகிய வீட்டுத் தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம்.

அன்பு கனிந்த வாழ்த்துக்கள்!

அங்கிருந்து வந்த வேறு ஒரு கடிதம்!

அன்புமிக்க திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு, 01–09–1983 அன்று, நான் தங்களுக்கு எழுதிய கி.எம்.எஸ். (சி.எஸ்ஆர்) 83ஆம் எண் நேர்முகக் கடிதத்தினைத் தொடர்ந்து இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன். இந்த மாநாட்டை ஒத்திப்போட வேண்டுமென்று பலரிடமிருந்து வேண்டுகோள்கள் வந்ததால் அம்மாநாடு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

சில நண்பர்கள் கருத்துத் தெரிவித்ததை அடுத்து இந்த மாநாட்டை இப்போது 1983ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5, 6, 7ஆம் தேதியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தாங்கள் தயவுகூர்ந்து இம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டுமென்றும், தாங்கள் இங்கு வருவது பற்றியும் வந்து சேருகின்ற நேரத்தையும் புதுதில்லியிலுள்ள எங்களுடைய தொடர்பு ஆணையாளருக்கோ அல்லது என்னுடைய முதன்மைச் செயலாளருக்கோ தெரிவிக்கும்படியும் வேண்டுகிறேன்.

அன்பு வாழ்த்துக்கள்!

அவர்களுக்கு நான் எழுதிய கடிதம்.

அன்புமிக்க திரு. பரூக் அப்துல்லா அவர்களுக்கு,

மைய – மாநில உறவு குறித்து இந்திரா காங்கிரஸ் அல்லாத மற்ற கட்சிகளைக் கொண்டு நடத்தவிருக்கும் மாநாட்டிற்கு, எனக்கு அழைப்பு விடுத்துத் தாங்கள் எழுதியிருந்த கடிதம் கிடைக்கப்பெற்றேன். ஆனால், அந்த மாநாட்டிற்கான விவாதக் குறிப்பு விளக்கம் (Agenda) வந்து சேரவில்லை. மைய, மாநில உறவு தொடர்பான, திட்டவட்டமான பிரச்சினைகள் எவையும் அங்கு விவாதிக்கப்படவிருக்கிறதா அல்லது இந்திரா காங்கிரஸ் அல்லாத மற்ற எதிர்க்கட்சிகளைக் கொண்ட இம்மாநாட்டில், அரசியல் பிரச்சினைகளை மட்டுமே விவாதிக்கப் போகிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆயினும், விவாதிக்க இருக்கின்ற பொருள்பற்றி முன்னதாகவே முடிவு செய்யாவிட்டால், அங்கு வந்து உரை நிகழ்த்துவதால் விரும்பிய பலன் கிட்டாது.

பெங்களூர் மாநாடு, தென் மாநில முதலமைச்சர்களை மட்டும் கொண்ட கூட்டமாக இருந்தாலும், அங்கு நடந்த விவாதங்கள் பயனுள்ளவையாக இருந்ததோடு, அதன்

முடிவும், ஊக்கமளிப்பதாய் இருந்தது! எல்லா மாநிலங்களுக்கும் இதுபோன்ற வாய்ப்பு இருக்க வேண்டும் என்றும், எல்லா மாநில முதலமைச்சர்களையும் இக்கூட்டத்திற்கு அழைக்க வேண்டுமென்றும், அப்போது தான் பொதுவான பரஸ்பர ஈடுபாடுடைய பிரச்சினைகள் குறித்து பயனுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தி, கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள இயலும் என்று அந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. பன்மாநிலப் பிரச்சினைகளை அந்தந்த மாநிலங்களுக்கிடையே விவாதித்து, அதற்கு நல்லதொரு தீர்வு காணலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆயினும், விஜயவாடாவில் நடந்த கூட்டம் பெங்களூர் மாநாட்டு முடிவுகளிலிருந்து பெரிதும் மாறுபட்டிருந்தது. முதலமைச்சர்கள் மாநாடாக மாறியது. முதலமைச்சர்கள் இதில் பெரும்பங்கு வகிக்கவில்லை. இந்த மாநாட்டில் அவர்கள் தீர்மானம் எதுவும் நிறைவேற்றவுமில்லை. இம்மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்களும் பயனுள்ளவையாக இல்லை.

மாநில அரசுகளின் தலைவர்களைக் கொண்ட கூட்டமாக இராமல், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கொண்ட கூட்டமாக இதனை நடத்துவது நோக்கமாக இருப்பின், அப்போதும் கூட மாநிலங்களிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் இம்மாநாட்டிற்கு அழைக்கப்படாததால், இது முழுமை பெறவில்லை என்பதைத்தான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். டில்லியில் நடந்த கூட்டத்திற்கும், எங்கள் மாநிலத்துள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் திரு.மு.கருணாநிதி அவர்களும் (தி.மு.க.) திரு.நெடுமாறன் அவர்களும் (தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ்) மற்றவர்களும் அழைக்கப்படவில்லை. இந்த மாநாட்டிற்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் என்ற முறையில் மதிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, பங்கு கொள்வதற்கு தகுதிபெற என்ன அடிப்படைகள் பின்பற்றப்படுகின்றன என்பதும் எனக்குத் தெரியவில்லை.

டில்லி மாநாட்டிற்கு முன்பு, அனைத்திந்திய பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றி நான் என்னுடைய ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததோடு அவற்றை விவாதிப்பது உடனடி அவசியம் என்பதை வலியுறுத்தி திரு. ராமகிருஷ்ண ஹெக்டே அவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தேன். விஜயவாடா மாநாட்டில் பங்கு கொண்ட மற்ற தலைவர்களுக்கும் அக்கடிதத்தின் நகலை நான் அனுப்பியிருந்தேன். டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் என்னுடைய கடிதம் பற்றி விவாதிக்கப்பட்டதா? அம்மாநாட்டில் கலந்துகொண்டவர்களின் பரிசீலனைக்கு அக்கடிதம் வைக்கப்பட்டதா என்பதும் எனக்கு இதுவரையில் தெரியவில்லை.

தவிர, இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையிலும், குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, பாரதீய ஜனதா கட்சியும், லோக்தள் கட்சியும் கூட்டுச் சேர்ந்துள்ளன. ஜனதா கட்சியும், ராஷ்டிரிய காங்கிரஸ் கட்சியும், ஜனநாயக சோசலிஸ்ட் கட்சியும், காங்கிரஸ் (எஸ்.) கட்சியும் ஒன்று சேர்ந்து கூட்டணியை அமைத்துள்ளன. தென் மாநிலத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்துடன் தன்னுடைய கட்சி, தேர்தல் உடன்பாடு வைத்துக் கொள்வதற்கு வாய்ப்பிருப்பதாக

திரு. அத்வானி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு.கருணாநிதி அவர்களும் இதனை மறுக்கவில்லை. மாறியுள்ள இந்த அரசியல் சூழ்நிலையில், ஸ்ரீ நகரில் நடத்தத் திட்டமிட்டுள்ள இந்த மாநாட்டின் திட்டவட்டமான நிலை என்ன என்பது பற்றி நான் தெரிந்துகொள்ள விழைகிறேன். ஏனெனில், பெங்களூர் மாநாட்டிற்குப் பின்னர், இந்தக் கூட்டத்தின் தன்மையில், நோக்கத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதாக நான் அறிகிறேன். பெங்களூர் மாநாட்டின்போது மைய – மாநில உறவு பற்றியும், மாநிலங்களின் வளர்ச்சி பற்றியும், மாநிலங்களும் மத்திய அரசும் வருவாயைப் பகிர்ந்து கொள்வது பற்றியும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

ஆனால் இந்த நோக்கங்களுக்கு முரணான விசயங்கள் பற்றி, அதாவது அரசியல் உடன்பாடு, தேர்தல் உடன்பாடு பற்றி இப்போது கவனம் செலுத்தப்படுவதாக நான் எண்ணுகிறேன். நோக்கத்திலும், அணுகுமுறையிலும் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில், வரையறுக்கப்பட்ட கடமைகளும், பொறுப்புகளும் உள்ள மாநில முதலமைச்சர்கள், இந்த மாநாட்டில், தங்கள் அரசின் சார்பாகவும், தங்களுடைய கட்சியின் சார்பாகவும், இதில் பங்கேற்க இருப்பதால், இந்த மாநாட்டில், அவர்களுக்குரிய சிக்கலான (Delicate) நிலைமை பற்றி அவர்கள் முடிவு செய்ய வேண்டும். எனவே மாநாட்டில் விவாதிக்க இருக்கிற பொருள் என்னென்ன? என்பது பற்றி முன்னதாக அறிந்துகொள்வது அவசியம் என நான் கருதுகிறேன். அரசியல் உடன்பாடு பற்றியும், தேர்தல் உடன்பாடு பற்றியும் இந்த மாநாட்டில் கவனம் செலுத்தப்படுமாயின், என்னுடைய சக அமைச்சர்களுடனும் என்னுடைய கட்சியுடனும் கலந்து ஆலோசித்த பின்னர் அதுபற்றி நான் முடிவு செய்ய இயலும், ஆகவே, இக்கருத்துக்கள் பற்றி, எனக்குத் தெரிவித்து நிலைமையை தெளிவுபடுத்தும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். தங்களிடமிருந்து பதில் வந்தவுடன் எங்களுடைய கட்சி நடவடிக்கை எடுக்கும்.

காஷ்மீர் முதலமைச்சர் எனக்கு எழுதிய கடிதம்.

அன்புமிக்க திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு,

25.09.1983ஆம் நாளிட்ட உங்களுடைய கடிதம் கிடைக்கப்பெற்றேன். தங்களை இந்த மாநாட்டிற்கு அழைத்து, நான் எழுதியிருந்த கடிதத்தில், ஸ்ரீநகரில் 1983ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 5, 6, 7ஆம் தேதிகளில் நடைபெற இருக்கும் மாநாட்டின் முக்கிய நோக்கம், மைய மாநில உறவு பற்றி விவாதிப்பதுதான் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளேன். இந்த நிகழ்ச்சி நிரலில் எந்தவித மாற்றமும் இல்லை. தாங்கள் எழுதியிருந்த கடிதத்தில், முக்கியமான சில பிரச்சினைகள் பற்றி குறிப்பிட்டு இருந்தீர்கள். அதுபற்றி நான் சில கருத்துக்களை தெரிவிக்க விழைகிறேன். ஆனாலும், இந்த நேரத்தில், அதனால் எந்தப் பலனும் ஏற்படாது என நான் எண்ணுகிறேன்.

இதுதான் முக்கியமானது.

நம்முடைய அரசியலமைப்பு உருவாக்கம் பெற்று 30 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டபடியால் மைய – மாநில உறவு குறித்து மீண்டும் ஆராய வேண்டிய அவசியம் பற்றி, நாடு முழுவதும் கடந்த சில காலமாக விவாதிக்கப்பட்டு வந்திருப்பதை தாங்கள் அறிவீர்கள். மைய–மாநில உறவினை வலுப்படுத்தி, அதன் மூலம் பொருளாதாரத்தினை மேம்படுத்தவும், நாட்டின் ஒருமைப்பாட்டினைக் கட்டிக்காக்கவும் வேண்டிய இப்போது மாறியுள்ள சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, மைய மாநில அரசுகள், விவாதிக்க வேண்டுமென்று கூறப்படுகிறது. எனவே, தாங்கள் இந்த மாநாட்டிற்கு அன்பு கூர்ந்து வந்து கலந்துக்கொள்ள வேண்டுகிறேன். மைய மாநிலங்களின் வருங்கால நிருவாகத்திற்கு வழிவகுக்கும் மைய மாநில உறவு பற்றி, ஒருமித்த கருத்தினை இந்த மாநாட்டில் மேற்கொள்ள முயன்று வருவதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ள அனைவரும் ஒப்புக் கொள்வதற்குட்பட்டு, இப்பிரச்சினை தொடர்பான மற்ற எல்லா விஷயங்களையும் இம்மாநாட்டில் தெரிவிக்கலாம். மைய–மாநில உறவு இனிமேல் புது வடிவங்கொண்டு மிளிர, தங்கள் உதவியும் அன்பான கருத்தும் இம்மாநாட்டிற்குப் பெரிதும் உதவுமென நான் நம்புகிறேன்.

காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்களுக்கு நான் எழுதிய கடிதம்.

27.09.1983 நாளிட்ட தங்களது கடிதத்தைக் காண்க. இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும் திட்டவட்டமான பிரச்சினைகள் பற்றிய விரிவான குறிப்புக்களை நான் அறிந்துகொள்ள விரும்பினேன். ஆனால், தாங்கள் அனுப்பியிருந்த பதிலில், மைய–மாநில உறவு பற்றிய மாநாடே இது என்று, மீண்டும் கூறியதைத் தவிர, வேறு எதைப்பற்றியும் குறிப்பிடவில்லை!

மைய–மாநில உறவு போன்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் தொடர்பாக பயனுள்ள விதத்தில் விவாதிக்க, எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த மாநிலங்களில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், வாய்ப்பளிக்க வேண்டியது அவசியம் என என்னுடைய கடிதத்தில் தெரிவித்திருந்தேன். அதனைத் தாங்கள் ஏற்றுக்கொண்டீர்களா இல்லையா என்பதைத் தாங்கள் குறிப்பிடவில்லை. இந்த மாநாட்டிற்கு யார் யார் அழைக்கப்படுகின்றனர் என்பதும் எனக்கு இதுவரை தெரியாது. எல்லா மாநிலங்களும் இம்மாநாட்டில் பங்குகொண்டு விவாதிக்காவிட்டால், மைய–மாநில உறவு பற்றிய இந்த விவாதம் முழுமைபெறாது. மேலும், பலதரப்பட்ட கட்சித் தலைவர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வது நோக்கமாயிருந்தால், ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களையும் இம்மாநாட்டிற்கு அழைப்பது மிகவும் அவசியம். ஒரு சில முதலமைச்சர்களை மட்டும் இம்மாநாட்டிற்கு அழைத்திருப்பதோடு, தென் மாநிலங்களில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களை அழைக்காதது ஏன்? என்பது எனக்குத் தெரியவில்லை. நான் தெரிவித்துள்ள இப்பிரச்சினைகள் பற்றி, உங்களுடைய தெளிவான கருத்தினை நான் பெற விழைகிறேன். உங்களுடைய கருத்து எனக்குத் தெரியாத வரையில் இந்த மாநாட்டில் என்னால் கலந்து கொள்ள இயலாது!

நான் சம்பந்தப்பட்ட மற்ற முதல்வர்களிடம் விவாதித்த போது, இந்தக் கடிதத்தைக் காண்பித்து நான் சொன்னேன். அனைத்து இந்திய மாநிலங்களிலே உள்ள முதல்வர்களைக் கூட்ட வேண்டுமென்று அவர்களுடைய முடிவுகளைப் பெறவேண்டும். வேண்டுமானால், அதற்குப்பிறகு அரசியல் தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரையும் கூட்டி ஒரு முடிவு எடுக்க வேண்டும். இந்த இரண்டு முடிவுகளையும் வைத்து, மறுபடியும் முதலமைச்சர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி உட்கார்ந்து ஒரு தீர்மானத்தை வடிவாக்கி, அதை மத்திய அரசுக்கு அனுப்பி, அவர்களுக்கு சொல்லி, நாம் அந்த உரிமைகளைக் கேட்க வேண்டுமே தவிர, எதிர்க்கட்சியிலே சிலரை விட்டு விடுவது, முதல் அமைச்சர்களிலே சிலரை விட்டுவிடுவது, ஒரு கட்சியையே மதிக்காமல் விட்டுவிட்டு, வேறு மாநில முதலமைச்சர்கள் என்றால், நம் கொள்கையை ஏற்கிறார்களா ? இல்லையா ? என்பதை இங்கு வந்து சொல்லிவிட்டுப் போகட்டும். இதற்குப் பிறகு நாம் ஒரு முடிவு எடுப்போம் என்ற போக்கு சரியன்று. முதல் கூட்டம் நியாயமான கூட்டம்: நியாயமான முடிவு. அதேபோல டெல்லியிலே நடைபெறவில்லை. விஜயவாடாவிலே நடைபெறவில்லை. ஆகவே, காஷ்மீரில் நடக்கின்ற இந்த மாநாடாவது அனைத்து இந்திய முதலமைச்சர்கள் மாநாடு, அல்லது அனைத்து இந்திய அரசியல் கட்சித் தலைவர்கள் மாநாடு என்று அப்படிக் கூட்டுங்கள், பிரித்துக் கூட்டுங்கள் !

அமைச்சர்களாக இருந்தால், பெரிய பொறுப்பு உண்டு. கட்சித் தலைவர்களாக இருந்தால், வேறு விதத்தில் மிகப் பெரிய பொறுப்பு உண்டு. இரண்டையும் பிரித்து வைக்காமல் அனைவரையும் அழைக்க வேண்டும். எதிர்த்துக் கூறக்கூடியவர்கள் இருப்பார்கள். ஆதரித்துக் கூறக்கூடியவர்களும் இருப்பார்கள். அவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து, அவர்களுடைய எண்ணத்தை வெளியிட்டு, அந்தக் கருத்துக்கள் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டால்தான், இந்த நாட்டுக்கு நல்லது என்று சொன்னேன். சொல்ல வேண்டிய அவசியம் என்ன ?

இதை விளம்பரப்படுத்த எண்ணியிருந்தால், மற்றவர்களிடம் நல்லபேர் எடுக்க வேண்டும் என்று விரும்பியிருந்தால், அப்போதே இதை வெளியிட்டிருக்கலாம். காஷ்மீர் அரசாங்கம் அனுமதிக்கிறவரையில், வெளியிட மாட்டோம் என்று சொல்லியிருந்தேன். இப்போது சட்டசபையில் சொன்ன பிறகு, வெளியிலேயும் கூட்டத்திலே வெளியிடலாம். ஆனால், கருணாநிதியைச் சொல்வேன் என்று யாராவது எதிர்பார்த்திருப்பார்களா ? நெடுமாறன் அவர்களைச் சொல்வேன் என்று யாராவது எதிர்பார்த்திருப்பார்களா ? கம்யூனிஸ்ட் கட்சியினரை அவர்களே அழைத்துவிட்டதால், அவர்களைக் கூறவில்லை; மற்றக்கட்சித் தலைவர்களை அழையுங்கள் என்று சொன்னேன். இவ்வளவு நேர்மையாக நான் நடந்துக் கொள்ளும்போது என்மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றால் என்னதான் செய்ய ?

எதையும் நான் மறைக்க விரும்பவில்லை. யாருக்கும் பயந்து இந்தக் கடிதத்தை எழுதவில்லை. அனைவரும் எனக்கு நண்பர்கள்தாம். ஆந்திர முதல்வர் அவர்கள்,

கர்நாடக முதல்வர் அவர்கள் அனைவருமே எனக்கு நண்பர்களே, அரசியல் வாழ்வில் அன்புச் சகோதரர்கள். ஆனால் பிரச்சினை என்று வந்தால், கண்ணகி கோயில் எங்களுக்குத்தான் என்று சொல்வதற்கு நான் பின்வாங்கமாட்டேன். இந்தி மொழி வந்தால், தமிழ் தான் வேண்டும் என்று சொல்ல நான் பின்வாங்கமாட்டேன். அது, போன்ற கருத்துக்களில் அண்ணாவின் கொள்கைகளிலிருந்து நான் பின் வாங்க மாட்டேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்று முடிக்கப்பட வேண்டிய என் பேச்சையும், இது சம்பந்தப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த திரு. உமாநாத் அவர்கள் கூற வேண்டிய கருத்துக்களையும், அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியதையும் முடிக்க முடியாமல் இன்றும் தொடர்வதற்கு அனுமதித்ததற்காகப் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் அவையிலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

முதலில் சில தனிப்பட்ட குற்றச் சாட்டுகள் போல, தங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை, விவரங்களை, செய்திகளை, உண்மை என நம்பி எடுத்துக் கூறிய பலவற்றிற்கு, அவற்றைப் படித்துப் பின், எழுத்து மூலமாகவே பதிலளிப்பது ஏற்புடையதாகவிருக்குமென நான் கருதுகிறேன்.

மாவட்டத் தொழில் மையங்கள் சரியாக வேலை செய்யவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு ஹாஜா செரீப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாவட்டத் தொழில் மையங்கள் 1978–1979இல் செயல்படத் தொடங்கின. கடந்த மூன்று ஆண்டுகளாகக் கருத்தரங்குகள் தொழில் முனைவர்களுக்கு நடத்தப்பட்டன. கடந்த 4 ஆண்டுகளில், சுமார் 15,000 சிறு தொழில்களுக்கு மட்டும் ரூ.30 கோடி அளவுக்கு கடன் உதவி தரப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 18,000 ஆக இருந்த சிறு தொழில் பிரிவுகள் 46,000 ஆக உயர்ந்துள்ளன.

மாவட்டத் தொழில் மைய அமைப்புகளை ஆய்வு செய்ய, உயர்மட்ட அளவில் முதலமைச்சர் அவர்கள் தலைமையில், மாநில அளவிலும், தலைமைச் செயலக அளவில், தலைமைச் செயலரின் தலைமையிலும், மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலும் குழுக்கள் உள்ளன. தலைமைச் செயலாளர் தலைமையில் உள்ள குழு, 8 முறை கூடி மாவட்டத் தொழில் மையப் பணிகளை ஆய்வு செய்துள்ளது. எனவே, அது கூடவில்லையென்று சொல்வது சரியான தகவல் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாயவிலைக் கடைகளைப் பற்றி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொது விநியோகத்தில் சரியாக உணவுப் பொருள்கள் கிடைப்பதற்கு ஏதுவாக, உணவுத் துறையின்கீழ், 14.08.1983 அன்று விழிப்புப் பணிக்குக் குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ், தமிழகத்திலே உள்ள 17,844 நியாய விலைக் கடைகளுக்கு குழுக்கள் அமைக்கப்பட்டன. தமிழகத்திலே உள்ள நியாய விலைக்

கடைகள் எப்படி சரியாக வேலை செய்கின்றன என்பதைப் பற்றி, டெல்லியில் 08.11.1983 அன்று நடந்த மத்திய பொது விநியோக ஆலோசனைக் குழுக் கூட்டம் தமிழகப் பொது விநியோக முறையைப் பாராட்டியுள்ளது. (இந்து நாள் இதழ் 09.11.1983) எல்லாப் பொருள்களும் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில் நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்படும் பொருள்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்காள அரசுகள் எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டப்படுவதோடு, மற்ற மாநிலங்களும் இதை செயல்படுத்த வேண்டுமென்று அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். 'தினமலர் வார இதழில்' வங்காளத்தில் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் விற்கப்படுவதாக செய்தி வந்துள்ளது. அது சரியில்லை என்று தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. உணவுப்பொருள் இணை ஆணையாளர் அவர்கள் மார்க்கெட் நிலவரப்படி, கொடுத்த தகவல்கள் நிறைய இருக்கின்றன. இருந்தாலும்; குறிப்பாக இந்தப் பொருள்களின் விலையின் விளைவாக பம்பாயில் 567: டெல்லியில் 483; கல்கத்தாவில் 465; தமிழ்நாட்டில் 424 என்ற புள்ளி விவரம் தரப்பட்டிருக்கிறது. ஆகவே சென்னையில் விலை குறைவு என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. சாகுல் ஹமீது அவர்கள் 'வக்ஃப் வாரியம்' செயலற்று கிடக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். 19.10.1981 அன்று திரு.எஸ்.எஸ்.சையது யூசுப் அவர்களுடன் பதினொன்று உறுப்பினர்கள் கொண்ட ஒரு புதிய 'வக்ப் வாரியம்' ஐந்து ஆண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளது. திரு.சையது யூசுப் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 17.02.1983இல் இவர் தன்னுடைய பதவியை இராஜினாமா செய்தார் 02.07.1983 அன்று அவருடைய இராஜினாமாவை அரசு ஏற்றுக் கொண்டது. அவருக்குப் பதிலாக உறுப்பினர் நியமனம் செய்யப்படாததால் 'வக்ப்' சட்டத்தின்படி அவரே தலைவர் பொறுப்பிலே இருந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார். வக்ஃப் வாரியத்தின் பணிகளில் எந்தவிதமான தேக்கமும் இல்லை. சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை ஆகிய இடங்களில் வக்ஃப் வாரியம் உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, விசாரணைக்காக வாரியத்திற்கு வரும் மனுக்கள் மீதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1981–1982இல் விசாரணைக்கு வந்த வழக்குகளின் எண்ணிக்கை 61; தீர்க்கப்பட்டவை 38; 1982–1983இல் விசாரணைக்கு வந்த வழக்குகள் 54; தீர்க்கப்பட்டவை 25; 1983–1984இல் விசாரணைக்கு வந்த வழக்குகள் 12; தீர்க்கப்பட்டவை 10.

இதுமாதிரியான முறை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெறவில்லை. வக்ஃப் வாரியம் ஆரம்பிக்கப்பட்டு 24, 25 ஆண்டுகள் ஆகியும், சொந்த கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ரூ.3.07 இலட்சம் செலவில் வக்ஃப் வாரியத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு ஜார்ஜ் டவுன்

பகுதியில் 5½ கிரவுண்ட், மத்திய பாதுகாப்புத் துறையிடமிருந்து வாங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை அரசு, வாரியத்திற்கு கடனாக வழங்கியிருக்கிறது. வக்ஃப்பிற்கு சொந்தமான இடங்களில் கட்டடங்கள் கட்டி, வருமானத்தைப் பெருக்குகிற திட்டத்திற்காக 1980–1981 முதல் 1983–1984 வரையில் நான்கு ஆண்டுகளில் 28 வக்ஃபுகளுக்கு ரூ.17.95 இலட்சம் அரசு கடனாக வழங்கியுள்ளது. முந்தைய ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற கடன்கள் வழங்கப்படவில்லை. மேற்படித் திட்டத்திற்காக, மத்திய வக்ஃப் வாரியத்திலிருந்து நான்கு ஆண்டுகளில் கடனாகப் பெற்று, தமிழ்நாடு வாரியத்திற்கு வழங்கியுள்ள தொகை ரூ.29.75 இலட்சம். முந்தைய ஆட்சிக் காலத்தில் இவ்வாறு கடனாகப் பெறப்பட்டு வழங்கப்பட்ட தொகை ரூபாய் ஒரு இலட்சம், பழுதடைந்த வக்ஃப்களின் பள்ளிவாசல், மசூதி போன்றவைகள் புதுப்பிக்கும் நிர்மாணப் பணிகளுக்கு 1980 முதல் 1983 வரையில், அரசு வழங்கியுள்ள மானியம் ரூ.16.30 இலட்சம். முந்தைய அரசு இதுபோன்ற மூன்று ஆண்டுகளிலே வழங்கிய தொகை ரூ.7 இலட்சம். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 1982இல் உலமாக்கள் என்ற பல மார்க்க அறிஞர்களுக்கு, மாத ஒய்வூதியமாக ரூபாய் 250 வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரையில் 500 வீதம் மாத ஓய்வூதியமாக 12 இலட்சம் ரூபாய் ஓய்வூதியமாகப் பெற்று வருகிறார்கள். இதற்கு முன்னாள் இதுபோன்ற திட்டம் இல்லை.

மாணவ–மாணவியரின் கல்வி மேம்பாட்டுக்காக நிதியுதவி செய்யும் திட்டமும், முஸ்லீம் ஏழை விதவைகளுக்குத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டமும், ஏழைச் சிறார்களுக்குச் ‘சுன்னத்’ என்னும் மார்க்க ‘கல்யாணம்’ செய்து வைக்கும் திட்டமும், தொழுநோயால் பீடிக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு ரம்ஜான் பண்டிகையையொட்டித் துணிகள் வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சென்னை முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கத்தின் மூலம் 300 முஸ்லீம் விதவைப் பெண்களுக்கு தலா மாதம் ரூ.15 வீதம், வழங்கி வருகிறது. அத்துடன் அவர்களுக்கு, நடைமுறையிலுள்ள விதிகளைத் தளர்த்தி, மாதம் ஒன்றுக்கு ரூ.35 உதவித் தொகையும், இலவச அரிசி மற்றும் சேலையும் 31.05.1983 முதல் அரசு வழங்கி வருகிறது. இதனால், அரசுக்கு ஆகும் செலவு ரூ.1.79 இலட்சம்.

தாம்பரத்திற்கு அருகிலுள்ள ராஜகீழ்ப்பாக்கம் கிராமத்தில் 12.85 ஏக்கர் நிலத்தை, வாரிய ஊழியர்களுக்கு, ஒரு கிரவுண்ட் நிலம் வீதம் 99 வருட குத்தகைக்குக் குறைந்த தொகைக்கு விடபட்டுள்ளது. மாதக் குத்தகை ரூபாய் ஐந்தே ஐந்துதான்!

வக்ஃப் வாரியத்தின்கீழ், மதுரையிலும், உத்தமபாளையத்திலும் இரண்டு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. எனவே, ‘வக்ஃப்’ வாரியம் நல்ல முறையில் செயல்பட்டு கொண்டுதான் வருகிறது! ஐயமில்லை; உறுப்பினரின் புகாருக்கு ஆதாரமும் இல்லை!

எதிர்க்கட்சித் தலைவர் திரு.ஹாஜா செரீப் அவர்கள் ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள். இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின்

முதலீடு மிகவும் அவசியம். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் முதலீடு ஆண்டுக்காண்டு குறைந்து வந்திருக்கிறது. 69இல் 8 சதவீதம், 1979இல் 4 சதவீதம், 1982இல் 4 சதவீதம். தமிழகத்தின் மக்கள் தொகை, இந்தியாவின் மக்கள் தொகையில் 7.07 சதவீதம் ஆகும். ஆகவே, மத்திய அரசின் முதலீடு தமிழகத்தில் குறைந்தபட்சம் 7.07 சதவீதம் இருக்க வேண்டும். அது இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக்கின்றேன்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நண்பர், மாண்புமிகு திரு.உமாநாத் அவர்கள் ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்ட இரண்டு கோடி ரூபாயினை மைய அரசு ஒதுக்கியது; அதில் செலவு செய்தது மூன்று சதவீதம்தான். பொதுவாகவே, ஆதிதிராவிடர்களின் நன்மைக்காக ஒதுக்கப்படும் தொகையில் 35 சதவீதம் செலவிடப்படாமல் திருப்பித் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது என்று சொன்னார்கள்.

நான் நன்றி கூறுகிறேன். நல்ல வேளையாக, சொல்லப்படுகிறது என்றுதான் சொன்னார்கள், அவர்கள் தந்தத் தகவலின் அடிப்படையில், அப்படி இருக்கிறது என்று அவர்கள் சொல்லவில்லை என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைவதோடு அதுபற்றி, விளக்கம் கொடுக்க விரும்புகிறேன்.

இதுபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், 1980ஆம் ஆண்டுக்குப் பின், ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக வீடு கட்டும் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். இருவருக்குமாக இந்த பதிலைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

ஆதிதிராவிடர்கள் வீட்டு வசதித் திட்டத்திற்கென, மைய அரசு நிதி ஒதுக்குவது இல்லை. இன்னொரு முறை படிக்கிறேன். ஆதிதிராவிடர்களின் வீட்டு வசதித் திட்டத்திற்கென மைய அரசு நிதி ஒதுக்குவதில்லை! இத்திட்டம் மாநில அரசின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து மட்டுமே செயல்படுத்தப்படுவதாகும்!

அகில இந்திய அண்ணா தி.மு.க. அரசு 1977 இல் பொறுப்பேற்றுக் கொண்டபின், 11,385 வீடுகளை ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுத்துள்ளது. கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வினால், மதிப்பீட்டுத் தொகை அதிகரித்தது. எனவே, கட்டப்படும் வீடுகளின் வடிவமைப்பைக் கிராமப்புறக் கூட்டுறவு வீட்டு வசதித் திட்டத்தைப் பின்பற்றி ரூ.4,000 மதிப்பீட்டுச் செலவில், 210 சதுர அடி பரப்பளவில் கட்ட, அரசு முடிவு செய்தது, இதில் மானியம் ரூ.3,250 பயன்பெறுவோர் உழைப்பின் பங்கு ரூ.750 ஆகும். அவர்களே வீடு கட்டிக் கொள்வார்களேயானால், பணத்தைக் கொடுத்து அதற்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொடுத்துவிட்டோமானால் அல்லது வாங்கினார்களானால், உறுதியாக, தங்களுக்குத் தேவையான வகையில் பல ஆண்டுக்காலம் நீண்டு, நிலைத்து இருக்கும் வகையில், வீட்டைக் கட்டிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில், அதை அவர்கள் உழைப்பிலே எடுத்துக் கொள்ளட்டும் என்று ரூ.750 கையிலே கொடுத்தோம்!

வீடுகளின் மதிப்பீட்டுத் தொகை அதிகரித்தாலும், கிராமப்புற வீட்டு வசதித் திட்டமாக, அதைப் பின்பற்ற ஆராய்ந்தாலும். 1979–1980 மற்றும் 1980–1981இல் விடுபட்ட திட்டங்களையும் உள்ளடக்கி, பத்தாயிரம் வீடுகள் கட்ட வழிவகை செய்யப்பட்டது. 1983 செப்டம்பர் திங்கள் முடிய 5,125 வீடுகள் கட்டுமானப் பணியிலும் 463 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கூட்டுக் கிராமங்கள் திட்டத்தின்கீழ், 1,430 வீடுகள் கட்டுமானப் பணியில் உள்ளன; 55 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் 1978–1979ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், இதுவரை 94,526 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டித் தரப்பட்டுள்ளன.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரண்டு இலட்சம் வீடுகளை இம்மாதிரி கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர்கள் வீடு கட்டிக்கொள்ள ‘ஹட்கோ’ மூலம் ரூ.3,000 கடன் உதவியும், மானியமாக ரூபாய் ஆயிரமும், அரசுக் கடன் உதவியாக ரூபாய் ஐநூறும் பெறுகின்றனர். பயன் பெறுவோர் உழைப்புக்காக ரூ.1,500/–ஐ ஈடு செய்ய வேண்டும்.

இந்தத் திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர்களுக்கு 1978–1979இல் 9,488 வீடுகளும், 1980–1981ஆம் ஆண்டில் 34,238 வீடுகளும், 1981–1982ஆம் ஆண்டில் 31,835 வீடுகளும், 1982–1983ஆம் ஆண்டில் 32,745 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது 31.08.1983 வரை அதாவது ஜுன், ஜுலை, ஆகஸ்ட் வரை 21,080 வீடுகள் கட்டுமானப் பணியில் உள்ளன. ஆதிதிராவிடர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகைக்கும் கூடுதலாகத்தான், ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கப்பட்டு வருகின்றது. 1980–1981ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை இலட்சத்தில் சொல்கிறேன். ரூ.1,199.84 இலட்சம். செலவு செய்யப்பட்டது. ரூ.1,356.10 இலட்சம். 1981–1982ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.1,617.48 இலட்சம். செலவு செய்யப்பட்டது ரூ.1,686.31 இலட்சம். 1982–1983ஆம் ஆண்டில் இன்னும் இந்த ஆண்டு முடியவில்லை – ரூ.1910.37 இலட்சம் என்று திட்டமிடப்பட்டது. ஆனால் செலவு செய்யப்பட்டது. ரூ.1967.17 இலட்சம்.

எனவே உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல, ஆதிதிராவிடர் நலனுக்காக ஒதுக்கப்படும் தொகையில், 35 விழுக்காடு திருப்பித் தரப்படுவதாகச் சொல்லப்படுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வேறு சலுகைகளில் ஒன்று, வீட்டுமனைப்பட்டா வழங்கல். 1977 மார்ச் திங்கள் வரை, ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்ட மனைப்பட்டாக்களின் எண்ணிக்கை 42,548. ஆனால், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றுக்கொண்ட பின் 1977ஆம் ஆண்டு முதல் 1982ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட மனைப்பட்டாக்களின் எண்ணிக்கை 1,28,203.

அடுத்து, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டுதல். மாண்புமிகு உறுப்பினர் திரு.இளையபெருமாள் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். 1980–1981, 1981–1982 ஆகிய ஆண்டுகளில், இதற்காக ஒரு கோடி ரூபாய் செலவிடப்பட்டது. 1982–1983, 1983–1984 ஆகிய ஆண்டுகளுக்காக, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறை நடத்தும் பள்ளிகளில் – சத்துணவுத் திட்டம் கொடுத்தோமே அதுவன்று. ஆதிதிராவிட நலத்துறை நடத்துக்கின்ற பள்ளிகளில் 1,72,636 மாணவர்களுக்கு, 'முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின் கீழ்', சத்துணவு வழங்கப்படுகின்றது.

கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டம் 18.09.1978 முதல் செயல்படுத்தப்படுகின்றது. இச் சலுகையைப் பெற, விண்ணப்பிப்பதற்கான கால அளவு, திருமணம் நடந்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் என நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, ஆதிதிராவிடர்களுக்கு சிறு தொழில் கடன் வசதி அளித்தல்; ஆடு வளர்ப்பு, குடிசைத் தொழில், பால் உற்பத்திச் சங்கங்கள் அமைத்துத் தருதல்; உழவு மாடுகள் வாங்க கடன் வசதி; மூன்றில்ஒரு பங்கு மானிய வசதியில் பாசனக் குழாய்க் கிணறுகள் அமைத்தல்; ஆதிதிராவிடர் மயானத்திற்கு இணைப்புச் சாலை வசதி; ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு தருதல்; பல்வேறு சமுதாயக் கூடங்கள் கட்டித் தருதல் போன்ற பல்வேறு திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால், இறுதிச் சடங்குக்கு ரூ.50 அளிக்கும் திட்டம் 1979இல் தொடங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ரூ.5 இலட்சம் இதற்காக ஒதுக்கப்படுகின்றது.

நண்பர் திரு. உமாநாத் அவர்கள் ஆதிதிராவிட மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுவதில், கடந்த ஆண்டுகளில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்களுக்குத் தரப்படவில்லை என்ற தகவலை இந்த அவையிலே வைத்தார்கள். 1977–1978ஆம் ஆண்டிலே இருந்து பொதுப் பள்ளிகளில் 4ஆவது வகுப்பு முதல் 10ஆவது வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பிள்ளைகளுக்கு அவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் மூலமாகப் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. 1977–1978ஆம் ஆண்டு முதல், இந்தத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள மாணவர்களுக்குப் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுபோன்றே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினமக்கள் நலத்துறையால் நடத்தப்படும் பள்ளிகளில், 1ஆவது முதல் 10ஆவது வகுப்புவரை பயிலும் அனைத்து

மாணவ, மாணவிகளுக்கும் பாடப்புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 1977–1978ஆம் ஆண்டு முதல் பாடப் புத்தகங்கள் பெறத் தகுதியுடையவர்கள் அனைவரும், பாடப்புத்தகங்கள் பெற்று பயன் அடைந்துள்ளனர். 1977–1978இல் பாடப்புத்தகம் பெறத் தகுதி பெற்றவர்கள் 7.50 இலட்சம் பேர். 1978–1979இல் 8.40 இலட்சம் பேர். 1979–1980இல் 9.11 இலட்சம் பேர். 1980–1981இல் 9.42 இலட்சம் பேர். 1981–1982இல் 9.55 இலட்சம் பேர். 1982–1983இல் 9.89 இலட்சம் பேர். இவர்கள் அனைவருக்கும் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு விட்டன. எனவே, 30,000 ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படவில்லை என்ற திரு.உமாநாத் அவர்களின் குற்றச்சாட்டுக்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்று என்னுடைய குறிப்புகள் கூறுகின்றன. இதிலே ஏதாவது அவர் குறிப்பிட்டு எடுத்து வைப்பார்களானால், அவருடைய பதிலில், நிச்சயமாக அதற்குக் காரணமானவர்கள் மீது தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு.ப.நெடுமாறன் அவர்கள், ஆதிதிராவிடர்களுக்குச் சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் வகுத்து, ஐந்தாண்டு காலத்தில் செயல்படுத்தப்படும் என்று 1980ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் குறிப்பிட்டது என்ன ஆயிற்று ? என்று கேட்டு இருக்கிறார்கள். எங்களுடைய தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடியும், ஆளுநர் உரையில் குறிப்பிட்டபடியும், இந்த அரசு ஆதிதிராவிடர்களுக்குத் தேவையான ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை, வேறொரு பெயரில், சிறப்பு உதவி அளிக்கும் திட்டம் என்ற ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு 1980–1981ஆம் ஆண்டு முதல், செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் மூலம், ஆறாவது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் சுமார் 9 இலட்சம் ஆதிதிராவிடர் குடும்பங்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்தவும், ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு குடிநீர், சாலை வசதி, மின் வசதி, மருத்துவம், கல்வி போன்ற வசதிகள் செய்து தர வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள்; விதைகள், உரம், பூச்சி மருந்து போன்றவை வழங்கும் திட்டம், மண்வளத் திட்டம். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத் தொகையில், 33 சதவீதம் ஆதிதிராவிடர்களுக்குக் கிடைக்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் ஆதிதிராவிடர்கள் அதிகம் பங்குகொள்ள அவர்கள் எண்ணிக்கை உயர்த்தப்படும். பட்டுப்பூச்சி வளர்ப்பில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவர். சிறு தொழில் கடன் வழங்கல், கிணறு வெட்ட மானியமளித்தல். கிராமத் தொழில்களுக்குக் கருவிகள் வழங்குதல், எல்லா குடியிருப்புகளுக்கும் குடிநீர் வசதி, மின்சார வசதி அளித்தல், இலவச புத்தகம் வழங்குதல், கல்வி உதவித் தொகை மற்றும் வீட்டு வசதி தருதல், மைய அரசின் சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் பெறப்படும் நிதியை ஆதிதிராவிடர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காகச் செலவிடப்படுதல், இவை போன்ற பணிகளும் தொய்வின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர்களுக்கு நூற்பாலைகளில் வேலை வாய்ப்பு அளிக்க கூட்டுறவு நூற்பாலைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. 7 இடங்களில் விசைத் தறிகள் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. காலணித் தொழிலாளர்களுக்கு பெட்டிக்கடைகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன. மோட்டார் சைக்கிள் ரிக்ஷா வாங்க, ஆதிதிராவிடர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. பாசனத்திற்கு குழாய்க் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. 15 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கேயெல்லாம் பல்வேறு சிறுதொழில்கள் தொடங்கப்படும். இச்சிறப்பு ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலமாக, ஆதிதிராவிடர்கள் நிரந்தரமான வருமானம் பெற்றுப் பொருளாதார சமூக மேம்பாடு அடைந்து வருகின்றனர்.

இது எங்கே என்று கேட்டார்கள் ? எதற்காக என்று கேட்டார்கள் ? இன்னொரு பெயரில் இதே திட்டத்தை, சிறப்புத் திட்டமாக நிறைவேற்றி வருகிறோம் என்பதை எடுத்துக்காட்டத்தான், தேர்தல் அறிக்கையில் சொன்னதை நாங்கள் விட்டுவிடவில்லை என்பதை எடுத்துக்காட்டத்தான், இவற்றையெல்லாம் இங்கே குறிப்பிட்டுக் காட்டினேன் !

மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், சமுதாயக் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், செங்கல்பட்டு மாவட்டத்தில் ‘ஹைபிரீட் யூகலிப்டஸ்’ மரங்களை உற்பத்தி செய்ய ஒரு டன்னுக்கு உற்பத்தி செலவு ரூ.640 ஆகும். ஆனால் திரு. விஸ்வநாதன் என்ற முதலாளிக்கு ஒரு டன் 80 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அவர் முதல்வர் இதயத்தில் இடம் பெற்றவர் என்ற நற்சாட்சிப் பத்திரத்தையும் கொடுத்து இருக்கிறார்கள். நான் அந்த மேடையில் அப்படி சொன்னதற்குக் காரணம், தமிழ் நாட்டிற்கு ஏறத்தாழ 200 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக காகித ஆலை கொண்டு வருவதற்கு முயற்சித்து, நடத்திக்கொண்டு இருக்கிற அந்த மனிதர். ஆகவே, அதைப்பற்றி பேசும்போது, இத்தகைய பெரும் திட்டத்தை நடத்திக் கொண்டு இருக்கின்றவர்கள் என் இதயத்தில் இடம் பெறுகிறார்கள் என்று சொன்னேன். ஆகவே, இதையும் சொல்லி, அதையும் சொல்லி இருந்தால், பொருத்தமாக இருந்து இருக்கும். நான் பதில் சொல்லி இருக்கமாட்டேன்.

திருவாளர் சேஷசாயி காகித ஆலை நிறுவனத்திற்கு இதுவரை அரசுக்குச் சொந்தமான காடுகளிலிருந்து ‘யூக்கலிப்டஸ்’ மரங்கள் வழங்கப்படுவது என்பது அரசு கொள்கையளவில் எடுத்த முடிவின்படிதான், என்பதைத் தெரிவிக்கிறேன். இம்முடிவினை அரசு எடுத்ததற்கான காரணங்கள் பின்வருமாறு:–

இக்காகித ஆலை நிறுவனத்தில், தமிழக அரசுக்கு 28 சதவீதம் பங்கு உண்டு. இன்னும் ஒரு கால் பங்குக்கு மேல் மைய அரசின் சார்பு கொண்ட நிதி அமைப்புகளுக்கும், வங்கிகளுக்கும், (எல்.ஐ.சி., ஐ.டி.பி.ஐ., இன்டஸ்டிரியல் கிரடிட் அன்ட் இன்வெஸ்ட்மென்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, ஹவுசிங் டெவலப்மென்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்) பங்கு உண்டு. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட

தனிப்பட்ட பங்குதாரர்களுக்கு மொத்தமாக இந்த நிறுவனத்திலுள்ள பங்கு 50 சதவீதத்திற்கும் குறைவான தொகையாகவே இருக்கிறது! ஆகவே இதை ஒரு தனியார் நிறுவனமாகக் கருதமுடியாது, அதனால், தனிப்பட்ட விஸ்வநாதனுக்கு மரங்களை விற்பதாக எவ்வாறு உறுப்பினர்கள் கூறுகிறார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை! ஒருவேளை இதையெல்லாம் பார்த்தால், இது ஒரு கூட்டுறவு அமைப்பு என்கின்ற வகையில், நாம் அவர்களுக்குக் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், அந்த இலாபம் அரசுக்கும் அந்த பங்குதாரர்களுக்கும் இருக்கிறது என்பதை கவனத்தில் வைத்து, செய்யப்படுகிறதே தவிர இதில் எந்த சுயநல நோக்கமோ அல்லது நண்பர்களுக்கு சில சலுகைகள் காண்பிக்க வேண்டும் என்ற நோக்கமோ இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

காகித நெருக்கடி கடுமையாக இருந்த நேரத்தில், இந்நிறுவனம் மிகுந்த பொறுப்போடு இருந்து நடந்து, மத்திய மாநில அரசுகளுக்கு தாள் தருவதாக வாக்களித்து, வாக்களித்த அளவு காகிதத்தை குறிப்பிட்ட விலையில் கொடுத்தார்கள்! நாம் என்ன விலை குறிப்பிட்டோமோ அந்த விலைக்குக் கொடுத்தார்கள். மேலும், ஒவ்வொரு ஆண்டும் எழுதுபொருள் அச்சுத் துறை, தமிழகத் துறைக்கு குறிப்பிட்ட சலுகை விலையில் கேட்கும்போது, அச்சுத்தாள் வழங்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

இந்நிறுவனம் 1980–1981ஆம் ஆண்டில் 1,73,00,000 ரூபாய் நேரடியாக மாநிலத்திற்கு விற்பனை வரியாகவும், 1982–1983ஆம் ஆண்டில் 7,90,44,556 ரூபாய் ‘எக்சைஸ்’ கட்டணமாகவும் செலுத்தியுள்ளது. மேலும், இந்நிறுவனத்திற்கு யூக்கலிப்டஸ், ‘ஹைபிரீட்’ டன் ஒன்றுக்கு 100 ரூபாய் என்ற விலையில், வழங்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, இந்நிறுவனம் அரசுக்குக் கட்டிய வருவாய் ரூ.28 இலட்சம் ஆகும்.

மேலும், தென் மாநிலங்களின் காகித உற்பத்தி செய்யும் பல ஆலைகளுடன் இந்நிறுவனம் போட்டியிட வேண்டியிருப்பதால், இதன் மீது அதிக சுமையை விதித்து செயல்திறனை முடக்கிவிடுவது இந்த மாநிலத்தின் தொழிலாளர் நலனுக்கும் தொழில்துறை பொருளாதார நலனுக்கும் உற்பத்திக்கும் உகந்ததல்ல, என்பதைக் கவனத்தில் கொண்டே இந்நிறுவனத்திற்கு, அரசு காடுகளிலிருந்து யூகலிப்டஸ், ஹைபிரிட்டை, சலுகை விலையில் வழங்குவது பற்றிய கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.

மேலும் இந்நிறுவனத்தால், அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறவும், பல தொழில்களை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளும் இருப்பதால், இந்நிறுவனத்தை ஊக்குவிப்பது அரசின் கடமையாகும். இவ்வாறு வழங்கப்படும் மரங்களும் ‘ஒர்க்கிங் பிளான்ட் பிரஸ்கிரிப்ஷன்’ படியான, வெட்டும், விதிகளின்படியும், பழைய முறைகளின்படியும் வேருடன் அகற்றாமல் மற்றும் சுழற்சி முறைப்படியும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றனவே அன்றி, காடுகளை அழிக்கும் எண்ணத்துடன் அரசு செயல்படவில்லை. அதை அனுமதிக்கவும் அனுமதிக்காது.

‘சமூகக் காடு வளர்ப்புத் திட்டம்’ ஒரு மக்கள் திட்டமாகும். இத்திட்டம் மரங்களை மக்கள் வளர்த்து பயனடையும் திட்டமாகும். இது தொழிற்சாலைகளுக்கு மரங்களை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம் அன்று! இத்திட்டம் 1981–1982லிருந்து சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் கிராமப்புறங்களை வளமாக்கும் திட்டம். இதுவரை சமூகக் காடு வளர்ப்புத் திட்டம், கிராமப் புறங்களில் அமுல்படுத்தப்பட்டு வந்திருப்பினும், பஞ்சாயத்துக்கள் அல்லது கிராம மக்களின் ஈடுபாடு அதிகமாக இல்லை. இதுவரை ஏறத்தாழ ஒரு தொழிலைச் சார்ந்த திட்டமாகவே இருந்தது. தற்போது அமுலாக்கப்படும் திட்டம் கிராமப்புற மக்களையும் பஞ்சாயத்துக்களையும் முழு அளவில் பங்கேற்க வகை செய்கிறது.

இத்திட்டம் அமுலாக்கப்படும் கிராமங்களில் பஞ்சாயத்து உறுப்பினர்களையும் மற்ற கிராமச் சமுதாய உறுப்பினர்களையும், கொண்ட ‘கிராமச் சமூகக் காட்டியியல் குழு’ ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பதிவு செய்யப்பட்ட மரங்களாக கருவேலம், வாகை, வேம்பு, செவ்வேலம், புங்கன், கடம்பை முதலிய மரங்கள் நடப்படுகின்றன. நீலகிரித் தைல மரங்களும் நடப்படுகின்றன. ஆனால், நீலகிரித் தைல மரங்கள் நடப்படுவது, திட்ட இலக்கில் ஒரு சிறிய பகுதியேயாகும். இம்மரங்கள் திட்ட இலக்கில் 6 சதவீதம் மட்டுமே! இத்திட்டத்தின்கீழ் நடப்படும் நீலகிரித் தைல மரங்களிலிருந்து, சேஷசாயி காகித ஆலைக்கு வழங்கப்படும் மரங்களில் பெரும் பகுதி வனப்பகுதிகளிலிருந்து திட்டமிட்டு வளர்க்கப்பட்டதாகும். சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளே மக்கள் தங்களுக்குத் தேவைப்படும் மரம், விறகு போன்றவைப்பெற தகுதியுடையோராய் தம்மை ஆக்கிக்கொள்ள, வருவாயைத் தேடித்தரும் அளவுக்கு மரங்களை வளர்க்க, அவர்களை இத்திட்டத்தில் ஈடுபடச் செய்து கொள்வதற்காக, இந்த மரங்களை வளர்த்து வருகிறார்களே தவிர, அவைகளைப் பெரிய ஆலைகளுக்குக் கொடுப்பதற்காக அல்ல. இதை நான் இந்த அளவிற்குக் குறிப்பிட்டால் போதும் என்று நினைக்கிறேன்.

திரு.உமாநாத் அவர்கள் இன்னொரு குற்றச்சாட்டை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒப்பந்த வேலை முடிவு பெறாமலேயே ஒப்பந்தக்காரர் ரூ.3.5 இலட்சம் பெற்றுச் சென்றுவிட்டார் என்பது அவரது குற்றச்சாட்டு. வேலை எதுவும் முடிவுபெறாமல், பணம் ஒப்பந்தக்காரர்களுக்கு தரப்பட்டதாக கூறுவது சரியன்று. திரு. பேச்சிமுத்து, திரு. தமிழ்ச்செல்வன், திரு. மசான்ராஜ் ஆகிய மூன்று ஒப்பந்தக்காரர்களும் 1981ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துள்ளார்கள். இவர்களுக்கு அந்தப் பணிகள், ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, விதிகளின்படி குறைந்த ஒப்பந்தப் புள்ளி அளித்தவருக்கே பணி கொடுக்கப்பட்டுள்ளது. பணிகள் செய்து முடிக்கப்பட்ட பிறகுதான் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. 13.09.1983 அன்று பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் நடக்கும் பராமரிப்பு வேலையைப் பார்வையிட்டு ஆய்வு செய்த போது, காணப்பட்ட குறைகளுக்கு ஆர். சிதம்பரம் உதவி செயற்

பொறியாளர், திரு. ஏ.சங்கரன், இளநிலை பொறியாளர் ஆகியோர்கள் தற்காலிக பணி நீக்கத்தில் வைக்கப்பட்டனர். தலைமைப் பொறியாளர் (கட்டடம்) இதுவரையில் நடந்து முடிந்த பாராமரிப்புப் பணிகளை ஆய்வு செய்து அறிக்கை கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளார். அறிக்கை இன்னும் அரசிற்கு வரவில்லை. தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு பொறியாளர்களும் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு தொலைதூர இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தஞ்சை மாவட்டத்தில், வறட்சி நிவாரணப் பணியில், சில வேலைகள் செய்யப்படாமலேயே பணம் பெறப்பட்டன. செயற் பொறியாளர்கள், ஆதரவாக ஆளும் கட்சிக்காரர்களுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்று சொன்னார்கள். எனக்கு நேரடியாக அதில் பங்குபெற வாய்ப்பில்லை என்றாலும், என்னுடைய நெருங்கிய நண்பர் மாண்புமிகு உமாநாத் அவர்கள் சொல்வதில் ஓரளவாவது உண்மை இருக்கும் என்று எண்ணி, நான் விசாரித்த போது எனக்குத் தந்த பதிலை இங்கே தெரிவிக்க இருக்கிறேன்.

27.07.1983 அன்று மாவட்ட அளவில் நடந்த வறட்சி நிவாரணக் கூட்டத்தில் ஏலனப்ப ஏரிக் கால்வாய்ப் பணி செய்யாமலேயே பணம் பெறப்பட்டுவிட்டது என்று குற்றம் சாட்டினார். கூட்டத்தில் விளக்கம் கோரப்பட்டது. இரண்டு பகுதிப் பணிகள் நடந்துள்ளன. ஒரு பகுதி தொடர்ந்து நடந்து வருகிறது. இத்தகவல் மாவட்ட ஆட்சித் தலைவரால் உமாநாத் அவர்களுக்குக் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தகவல் வந்து இருக்கிறது. கடிதத்தின் நகலை இங்கே வைத்திருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருக்கிறார். உமாநாத் அவர்களுக்கு எழுதியதாக குறிப்பிடுகின்ற அந்த சிறு கடிதத்தை மட்டும் படிக்கிறேன்.

27.07.1983ஆம் தேதி அன்று நடைபெற்ற வறட்சி நிவாரண கமிட்டி கூட்டத்தில் நாகப்பட்டினம் பகுதியில், ஏலனப்ப ஏரியில் மண் தூர் எடுக்கும் பணி செய்து முடிவடையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது வேலை முடிந்துவிட்டது என்று தஞ்சாவூர் பொதுப்பணித் துறை செயற் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

எனக்கு ஒரு மகிழ்ச்சி. திரு. உமாநாத் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டை சொல்லி, உண்மையான தகவல் அளித்தால், அதை ஏற்றுக்கொள்ள அவர் தயங்குவதே இல்லை. அந்த வகையில், அவரை நான் பாராட்டுகிறேன். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று சொல்லாமல், நியாயத்தை நியாயம் என்று சொல்லி, கடிதம் வந்திருக்கிறது என்று சொன்னவுடன் அது பொய்க் கடிதம் இல்லை என்பதை அவர் ஏற்றுக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு நெடுமாறன் அவர்கள், பெரியார் அணையின் நீர் அளவை **136** அடியாகக் குறைத்ததன் காரணமாக, **80** ஆயிரம் ஏக்கர் சாகுபடியை இழந்தது என்று சொன்னார்கள். **152** அடி உயரம் அளவுக்கு இருக்கும் பெரியார் அணை **1885** முதல் **1895** வரையில் உள்ள காலத்தில் அன்றைய தொழில்நுட்ப முறைக்கு ஏற்ப

கட்டப்பட்டது. அன்றைய தொழில்நுட்ப முறைக்கு ஏற்ப அதைக் கவனிக்க வேண்டும். 1976ஆம் ஆண்டில் அணையின் வடிவமைப்பு குறித்து மறு பரிசீலனை செய்யப்பட்டது. அப்போது தமிழகத்தில் எந்த தேர்ந்தெடுக்கப்பட்ட அரசும் இல்லை என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்போது நீர்மட்டம் 145 அடிக்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. எனினும், மத்திய நீர் வழங்கு குழுத் துறைத் தலைவர் டாக்டர் கே.சி. தாமஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், நீர் மட்டத்தை 136 அடியாகக் குறைக்கவும் அந்த அணையைப் பலப்படுத்த நடவடிக்கையை மேற்கொள்ளவும் முடிவு எடுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. அணையின் நீர் மட்டத்தை தற்காலிக நடவடிக்கையாக மட்டுமே 136 அடிக்கு குறைப்பதற்கு தமிழகம் ஒப்புக் கொண்டிருக்கிறதே தவிர, வேறு வகையில் விட்டுக் கொடுப்பதற்கு அல்ல. பலப்படுத்தும் பணிகள் முடிவுற்றதும், 152 அடிக்கு நீர் மட்டம் உயர்த்தப்படும். பலப்படுத்தும் பணி முடிவுற்ற பின்னரும், அந்த நீர் மட்டத்தை 136 அடிக்கு மேல் உயர்த்தக் கூடாது என்ற கேரள அரசின் ஆலோசனையை இந்த அரசு ஒப்புக்கொள்ள இயலாது என்று தெரிவிக்கப்பட்டது. பெரியார் அணையின் நீர் மட்டமானது 152 அடியிலிருந்து 136 அடிக்குக் குறைக்கப்பட்டிருந்தாலும், பெரியார் நீர்த் தேக்கத்தில் இருந்து 136 அடிக்கு மேல் இருக்கிற நீர் முழுவதும் வீணாகச் செல்லாமல் வைகை நீர்த் தேக்கத்தில் தேக்கி வைக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இந்தியா சிமெண்ட்ஸ்' விவகாரத்தைப் பற்றி நெடுமாறன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதை அவர்கள் கொஞ்சம் வேகமாகவே சொன்னார்கள். அந்த உணர்வு எல்லோருக்கும் தேவை தான். எங்களுக்குக் கடிதம் எழுதியதற்கு நாங்கள் பதில் கூட எழுதவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். இங்கேதான் அவர்களுக்குத் தவறான தகவல் கிடைத்திருக்கிறது. 1981ஆம் ஆண்டில் 'இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்' மற்றும் 'யூனிட் டிரஸ்ட் நிறுவனம்' ஆகியவை 'இந்தியா சிமெண்ட்ஸ் நிறுவனம்' வைத்துள்ள பங்குகளை வாங்க ஆராய்ந்தன. 17.02.1981இல் மத்திய நிதி அமைச்சருக்கு இது சம்பந்தமாக கடிதம் எழுதி, பங்குகளை அரசுக்கு அளிக்குமாறு கோரப்பட்டது. ஒரு பங்கின் விலை 15.40 ரூபாய் என்று கூறப்பட்டது. வெளிச்சந்தை விலையைவிட, 3.90 ரூபாய் அதிகமாக இருந்ததால் பங்குகளை வாங்க மேல் நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இதற்கிடையில் 'ஐ.டி.பி.ஐ.யின்' பங்குகளை வாங்க அரசு முயற்சித்து, மத்திய நிதி அமைச்சரிடம் இது சம்பந்தமாக 01.09.1983இல் தொடர்பு கொண்டது. 13.10.1983இல் ஐ.டி.பி.ஐ.யின் தலைவர் திரு. பூஞ்சா, 'இந்தியா சிமெண்ட்ஸ்' பங்குகளை விற்பதான யோசனை இல்லை என்று தெரிவித்துள்ளார். பங்குகளை விற்பதாக இருந்தால், தமிழக அரசுக்குத் தெரிவிக்குமாறு 'ஐ.டி.பி.ஐ.த்' தலைவருக்குக் கடிதம் எழுதப்பட்டது. ஆகவே, நாங்கள் எதையும் விட்டுக் கொடுக்கவில்லை என்றும், அதை தமிழக அரசே வாங்க வேண்டும், எங்களுக்குக் கொடுங்கள் என்று 'டெலக்ஸ்' மூலம் தகவல் கொடுத்தோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருநாடகத்தில் வாழ்கின்ற தமிழக மக்கள் இரண்டாவது மொழியாக தமிழை வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். இதன் காரணமாக, கோலார் பகுதியிலே தமிழ் மக்கள் 10 பேர்களுக்கு மேலே சுட்டுக் கொல்லப்பட்டார்கள். எண்ணிக்கையை எல்லாம் அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த உணர்வு வேண்டியது தான். ஆனால் நான் கொஞ்சம் பணிவோடு தெரிவித்துக் கொள்ளவிழைகிறேன். அங்கே அந்த மாநிலத்தில் உள்ள மக்களில், எத்தனை சதவீதம் தமிழக மக்கள் இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை. அவர்களிடம் இருந்தால் கொடுத்து உதவலாம். எனவே எந்தப் பிரச்சினை மீது இரண்டாவது மொழியாக தமிழைக் கேட்கிறார்கள் என்பதற்கு நமக்கு விளக்கம் இல்லை. நான் நேற்றே இந்தக் கருத்தைச் சொல்லி இருக்கிறேன். அங்கே உள்ளவர்கள் போராட்டம் நடத்தும்போது இந்த அரசு எச்சரிக்கையோடு, அந்த உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று, அவர்களுடைய போராட்டங்களைத் தடுக்க வேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்வோமே தவிர, இங்கேயிருந்து நாம் உத்தரவிட்டு, அதைச் செய்யுங்கள், அவர்களது எண்ணத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறும்படியான நிலைமையை நாம் உருவாக்கினால், மற்ற மாநிலங்கள் இதே பிரச்சினையை நம் மீது சுமத்துவதற்கு முன் வருவார்கள் என்ற அச்சத்தை நான் கொண்டிருக்கிறேன்! எந்தக் காரணத்தை முன்னிட்டும் வேறு மாநிலங்கள் எங்கள் மொழியை இரண்டாவது மொழியாக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று, நமக்குக் கட்டளையிடவோ சொல்லவோ, எதற்கும் இடம் கொடுக்கக் கூடாது என்று நான் கருதுகிறேன். ஆகவே நாங்கள் தலையிடவில்லை, அதற்காக, எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லக் கூடாது. குண்டுராவுக்கு நாங்கள் தந்தி அடித்தோம். கடிதம் அனுப்பினோம். ஆட்களை இங்கேயிருந்து அனுப்பினோம். அங்கேயிருந்து எங்கள் கட்சிக்காரர்கள் நேராகப் போய், நடையாக நடந்து, கால்நடையாகச் சென்று பார்த்தார்கள். அவர் அங்கே சம்பவம் நடந்த இடத்திற்குப் போனார். அவர்களுக்கு ஆறுதல் கூறினார். நடவடிக்கை எடுக்கிறேன் என்றார். எங்களுடைய கட்சி அந்தத் துப்பாக்கிச் சூட்டிலே இறந்தவர்களுக்கு நிதியும் அளித்தது என்பதை, இங்கே நான் சொல்கிற வகையில், நீங்கள் புரிந்துக் கொள்ளலாம். வேறு யாரும் அந்தப் பிணத்தைக் கூடப் போய் பார்க்கவில்லை. அங்கே இருக்கிற எந்தக் கட்சியும் போனதாக எந்தப் பத்திரிகையிலும் தகவல் வரவில்லை. அங்கே இருப்பவர்களும் சொல்லவில்லை. அங்கே போய் அதிலே பங்கு எடுத்துக் கொண்டு உழைத்தவர்கள், கேள்வி கேட்டவர்கள் எல்லாம், பெரும்பாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்தாம் என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்களுக்குச் சொல்லி கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, எந்த வகையிலும் நாம், எங்கே தமிழர்கள் இருந்தாலும், நம்மால் சட்டப்படி, நமக்கிருக்கிற உரிமைப்படி எப்படி தலையிடுவோமோ அந்த வகையில் தலையிடுவோம் என்பதையும், அதற்காக, முயற்சிப்போம் என்பதையும், நான் இங்கே தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். யாரும் அந்த நிலைமையை, எங்களுடைய எண்ணத்தைத் தவறாகக் கருதிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் அணுமின் நிலையம் நிறுவப்படும் என்று 1983ஆம் ஆண்டு, முதல் முதலில் கூறப்பட்டது, அது என்னவாயிற்று ? என்று கேட்டிருந்தார்கள் மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள், மத்திய அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, இரண்டாவது அணுமின் நிலையத்தை, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளத்தில் நிறுவ இடம் தேர்வு செய்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களை மறு பரிசீலனை செய்ய, ஏற்படுத்தப்பட்ட வல்லுநர் குழுவின் பரிந்துரையைப் பெற்று, பரிசீலனைக்குப் பின் முடிவு செய்யப்படும் என்று பிரதமர் அவர்கள் கடிதம் எழுதினார்கள். வல்லுநர்களின் குழுவோடு தமிழக மின் வாரியம் இணைந்து செயல்பட்டு வருகிறது. இறுதியான அறிக்கை தயாரிக்கப்படவில்லை. கூடங்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்க குழுவிற்கு ஒதுக்கீடு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. அணுமின் நிலையத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெருஞ்சாணி அணைக்கட்டிலிருந்து குழாய் மூலம் பம்ப் செய்து வழங்க, பாசனத் தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனை முடிந்தபின், பிரதமருக்கு கடிதம் எழுத முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, நாங்கள் அதில் அக்கறை காட்டவில்லை, பிரதம அமைச்சருக்கு எந்தக் கடிதமும் எழுதவில்லை, நாங்கள் அலட்சியமாக இருக்கிறோம் என்ற எண்ணத்தை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் மாற்றிக் கொள்ளவேண்டும். இலங்கை அகதிகளுக்காக மத்திய அரசின் ரூபாய் 26 கோடியைத் தமிழக அரசுக்குக் கொடுத்தும், அதில் ரூபாய் 25 இலட்சம் கூடச் செலவழிக்கவில்லை என்று திரு.எம்.பி.சுப்பிரமணியம் கூறியுள்ளார். அதுபோல், அகதிகள் முகாமில் அங்கே படாத பாடுபடுகிறார்கள் என்று அவர் சொல்லியிருக்கிறார் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அதற்கு நான் விளக்கம் கூற வேண்டியவனாக இருக்கிறேன். மேலவை இருந்திருந்தால், அந்த நேரத்தில் அப்பொழுதே பதில் சொல்லியிருப்பேன். ஆனால், அவர் பேசுவார் என்று தெரியாது.

கடந்த 3 ஆண்டுகளில் ஒவ்வோராண்டும் ஆண்டும் மத்திய அரசு ஒதுக்கீடு செய்த தொகையைவிட, மாநில அரசு அதிகமாகவே, தாயகம் திரும்புவோருக்கு மறுவாழ்வுக்காக செலவழித்திருக்கிறது. எந்த ஆண்டிலும் ஒதுக்கீடு தொகையை முழுமையாக செலவு செய்யாத நிலைமை இல்லை. மாண்புமிகு திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நம்முடைய ஒதுக்கீடு ரூ.25 கோடி அன்று. 1980–1981இல் ஒதுக்கீடு ரூ.3.95 கோடிதான். இன்னொன்று, அதில் இந்த அரசு செலவழித்தது ரூ.4.62 கோடி, 1982இல் ஒதுக்கீடு ரூ.4.91 கோடி, செலவழித்தது ரூ.5.15 கோடி, 1982–1983இல் ஒதுக்கீடு ரூ.5.51 கோடி, செலவழித்தது ரூ.5.63 கோடி,1983–1984இல் ஒதுக்கீடு ரூ.7.19 கோடி, இதுவரையில் செலவழித்தது இந்த ஆண்டில் குறைவாக இருப்பதற்குக் காரணம், கடந்த 2 மாதங்களாக, தாயகம் திரும்பும் தமிழர்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் எதுவும் வராததால், வரும்,

டிசம்பர் திங்களிலிருந்து மீண்டும் கப்பல் போக்குவரத்து தொடங்கியதும், தாயகம் திரும்புவோர் எண்ணிக்கை அதிகரிக்கும். இதற்கிடையில், தாயகம் திரும்புவோர் மறுவாழ்விற்காக ரூ.5.72 கோடியில் முழுமையாக திட்டம் தயாரிக்கப்பெற்று, மைய அரசின் அனுமதியும் பெறப்படும்.

இதிலே நமக்கெல்லாம்—அரசுக்குக் கூட சில சமயத்தில் தவறான புள்ளி விவரம் வந்து விடக்கூடும். நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், எனது மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு தரப்படுகிற தகவல்கள் அவ்வளவு சரியான தகவல்கள் என்று நினைத்துவிடக் கூடாது. நாங்களும் அதேபோல தவறான தகவல்களைத்தான் கொடுக்கிறீர்கள் என்றும் அலட்சியப்படுத்திவிடக் கூடாது என்ற நினைப்பில் நாம் பணியாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்கள். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கே.எம். நடராஜன் அவர்களுக்கு வாடகைக்கு வீடு ஏற்பாடு செய்வதில் நிருவாகம் சரியாக நடைபெறவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். திரு.கே.எம். நடராஜன் அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாக 24.07.1983இல் பதவியேற்றார்கள். அவர்கள் வசிப்பதற்கென்று தகுந்த வீடு ஒன்றை ஏற்பாடு செய்து தருமாறு உயர்நீதிமன்றப் பதிவாளர் அரசைக் கேட்டுக்கொண்டார். உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு ரூபாய் 2,000/—க்கு மிகாமல் உள்ள வீடுகளை மாத வாடகைக்கு எடுத்துக் கொடுக்க வேண்டும் என்பதை அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. இருப்பினும், தனிச் சலுகையாக அவர்களுக்கு சேத்துப்பட்டு நவ்ரோஜி சாலையிலுள்ள வீட்டு எண் ஐந்தின் கீழ், ஒன்றை 4 ஆயிரம் ரூபாய்க்கு வாடகைக்கு எடுத்தது. இத்தொகையில் ரூபாய் 2,500 மாத வாடகையாகவும் 1,500 வீட்டு வசதிக்காகவும் பிரித்துத் தர வேண்டுமென்று வீட்டுச் சொந்தக்காரர் கேட்டிருக்கிறார், கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, இதையும் தனிச் சலுகையாக அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் வீட்டுச் சொந்தக்காரரின் எல்லா நிபந்தனைகளையும் ஏற்று அரசு ஆணை பிறப்பிப்பதற்கு முன்பே, வீட்டை அதன் சொந்தக்காரர் வேறு ஒருவருக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டார். அரசுக்குக் கொடுத்தால் திரும்ப வருமோ ? வராதோ ? தருவார்களோ ? என்னவோ ? என்ற அச்சம் இருக்குமோ ? என்று தெரியாது. அந்தநிலை இந்த அரசுக்கு இல்லையென்றாலும், அதைக் கொடுக்கவில்லை. அரசின் நோக்கம் நீதிபதி திரு. கே.எம். நடராஜன் அவர்களுக்கு விரைவாக வீடு வழங்க வேண்டும் என்பதுதான். தனிப்பட்டவரை நிர்பந்தித்து அவர் வீட்டைப் பெற அரசுக்கு அதிகாரம் இல்லை. உறுப்பினர் குற்றச்சாட்டுக் கூறியிருப்பது சரியான தகவல் இல்லை என்பதை நான் விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் இன்னொரு கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள். குற்றச்சாட்டுத்தான். சென்னைத் துறைமுகம் கட்டப்பட்டதிலிருந்து, வடக்கில் நில அரிப்பும் துறைமுகத்திற்குத் தெற்கில் மணல்

சேருவதும் நிகழ்ந்து வந்தன. 1982ஆம் ஆண்டு, கிலோமீட்டர் 450 முதல் கிலோமீட்டர் 520 வரை கடற்கரை பாதுகாப்பு வேலைகளுக்காக 17.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. அந்த எல்லைக்கு அப்பாலும் கடல் அரிப்பு ஏற்படுவதால், மேலும் 600 மீட்டர் நீளத்திற்கு பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள அரசு பரிசீலித்து வருகிறது. இந்நிலையில் 08.11.1983, 09.11.1983 ஆகிய தேதிகளில் 100 மீட்டர் நீளத்திற்கு கடல் அரிப்பு ஏற்பட்டதால் உடனடியாகப் பாதுகாப்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் கடல் அரிப்பைத் தடுக்க முறையாகத் திட்டம் தீட்டி, செயல்பட்டு வருகிறது என்பதைச் சொல்வதோடு அரசிடம் உள்ள திட்டத்தையும் எண்ணத்தையும் இங்கே நான் வெளியிட விரும்புகிறேன்.

ஹாங்காங்கிலே அவர்கள் கடல்நீரைப் பின்னுக்குத் தள்ளி நிலமாக்கி அங்கே வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள். அதைப் போலவே சிங்கப்பூரிலும் செய்திருக்கிறார்கள். நான் சென்றபோது, பார்த்த முறையை திரைப்படத்தின் மூலமாக, எப்படி அந்தப் பணியைச் செய்தார்கள் என்பதை அவர்கள் காண்பித்தார்கள். அந்த முறையைப் பின்பற்றி, நாமும் இங்கே செய்ய வேண்டுமென்ற அவாவில் திட்டங்கள் போடப்படும். மிக விரைவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களும் பொறியியல் நிபுணர்களும் அங்கே சென்று எந்த முறையில், அவற்றை நிறைவேற்றுகிறார்கள். என்ன செலவாகிறது ? என்பதையும், இன்னும் நூதன முறைகள் வந்திருக்கின்றனவா ? என்பதையும் அறிந்து வருவார்கள், வரவேண்டும் என்பது என்னுடைய ஆசை. இதை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று கருதுகிறேன். அந்த நிலைமை வந்தாக வேண்டும்!

நான் 'படகோட்டி' படத்தில் நடிப்பதற்காக கேரளக் கடற்கரைக்குச் சென்றபோது அங்கேயும் இப்படிப்பட்ட குறைபாடு இருந்தது. கடல் கொண்டது, கடல் நீல் அரிப்பு இருக்கிறது என்றெல்லாம் இருந்தது. அப்போது அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் சென்னைக்கு வந்தபிறகு, எனக்கு வாய்ப்புக் கிடைத்தபோது 1974 என்று நான் கருதுகிறேன். 1973 ஆகவும் இருக்கலாம், நான் அமெரிக்காவுக்கு சென்றபோது அவற்றைப் பார்த்தேன். அன்று முதல் இந்த ஆர்வம் என்னிடம் மேலிட்டிருக்கிறது. அதைச் செய்து, நம்முடைய இடத்தை இன்னும் நீண்ட பகுதியாக ஆக்க வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. இப்போது கோவளம் அருகில் சென்று பார்த்தால் எவ்வளவு நிலப்பரப்பு தண்ணீரில் சென்று இருக்கிறது என்பதை அதிலும் 10 வருடங்களுக்கு முன்னால் சென்றிருந்தவர்கள் தெரிந்து கொள்வார்கள்.

அதுபோலவே, மாமல்லபுர பயணிகள் தங்கும் விடுதி இருக்கிறதே அதற்கு அருகில் தான் என்னுடைய நாடோடிமன்னன் படத்தினுடைய இடத்திலிருந்து, நீர் உள்ள இடத்திற்கு நடந்து போகவேண்டும் என்றால் ஏறத்தாழ 1 பர்லாங்கு 2 பர்லாங்குக்கு மேல் நடந்து போகவேண்டும். இப்போது அருகில் தண்ணீர் வந்து இருக்கிறது. அந்த அளவுக்கு கடல் நீர் அந்த இடத்தில் புகுந்துள்ளது. நம்முடைய

நிலப் பகுதியை அதிகமாக்க வேண்டும் என்பது என்னுடைய இந்த அரசினுடைய ஆசை என்று சொல்வதோடு, இங்கே திரு. குமரி அனந்தன் அவர்கள் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார்கள். அதை நானும் அவரும் சென்று அங்கே 2 ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தபோது நடந்த நிகழ்ச்சியை சொல்கின்றேன். அங்குள்ளவர்கள் சொன்னார்கள், சங்கு துறைமுகம் கட்டிய பிறகுதான் இந்த ஆபத்துகள் எல்லாம் வந்திருக்கின்றன என்று! அலை அடிக்கும்போது அந்தக் காற்று எப்படி போகின்றதோ அந்த அளவுக்கு கடல் அலைகள் உள்ளே வருகின்றன! எங்கேயாவது தடுத்துவிட்டால், அந்தப் பக்கத்திலோ, எதிர்புறத்திலோ போய்விடுகிறது. அப்படியே அடிக்க ஆரம்பித்து விடுகிறது. இதுபோல், கன்னியாகுமரியிலும் சில நிகழ்வுகள் இருக்கின்றன. ஆகவே, இந்த பகுதிகளை எல்லாம் ஒழுங்குப்படுத்தத் திட்டங்கள் வகுக்க வேண்டும் என்பதையும் அதை ஒழுங்காக, சீராகச் செய்ய வேண்டும் என்ற அந்த ஆசை இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் இந்த ஒர் ஒலிபெருக்கித்தான் ‘ஆன்’ ஆகியிருக்கிறது. அந்த ஒலிபெருக்கி ‘ஆன்’ ஆகவில்லை அதனால் கேட்கவில்லை. ஒன்றை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டு என் நன்றியை தெரிவித்துக் கொள்ள வேண்டும். ஏதோ நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவு தருகின்றவர்கள், அதை விட்டுவிட்டு எங்களோடு, எங்களுக்குச் சாதகமாக; அவர்களுடைய வாக்குகளை அளிக்கவேண்டும் என்ற எண்ணத்திற்காக அல்ல என்பதை, முதலில் தெரிவித்துக் கொண்டு, இந்த ஆட்சியின் மேல் நம்பிக்கை இல்லை என்று சொல்கின்ற தீர்மானத்தின் மீது மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் நன்றி சொல்ல வேண்டும்? என்று கூறுகிறேன் என்றால், இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய போது, முதலில் ஒரே ஒரு கட்சி தான் எங்களை ஆதரித்தது. அது சி.பி.ஐ. அதன் தலைவரும், கே.டி.ராஜீ போன்றவர்களும்தான் எங்களை ஆதரித்தார்கள். ஆகவே, அவர்கள் எங்களுக்கு இன்று எதிராக இருந்தாலும், நன்றியோடுதான் நாங்கள் இருப்போம் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் பகுதியில் கருப்பண்ண கவுண்டர், காளிமுத்து கவுண்டர் போன்ற சிறு விவசாயிகள் அதிக மின் கட்டண பாக்கி என திடீர் என்று நோட்டீஸ் கொடுத்து இணைப்பைத் துண்டித்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். எனக்கு வந்து இருக்கிற குறிப்பு, விவசாயிகள் தங்களுடைய மின் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகளுக்கு மின் வாரியத்தில் செலுத்தியிருந்த பிணை வைப்புத் தொகை ‘டெபாசிட் தொகை’ அவர்கள் உபயோகிக்கும் மின்சார அளவை ஒட்டி அவ்வப்போது மாறுதல் செய்யப்படுகின்றது. அவ்வாறு செய்யப்படும்போது உயர்மின் அழுத்தத்தின்கீழ் மின் இணைப்புப் பெறும் பம்பு செட்டுகளுக்கு அவர்கள் 1½ மாதங்கள் பயன்படுத்திய மின்சார அலகைக் கணக்கில் கொண்டும், குறைந்த மின் அழுத்தத்தின்கீழ், மின் இணைப்பு பெறும் பம்பு செட்டுகளுக்கு அவர்கள் 3 மாதங்கள் பயன்படுத்திய மின்சார அலகைக் கணக்கில் கொண்டும், கூடுதல் பிணை வைப்புத்

தொகை 'டெபாசிட்' தொகை வசூலிக்கப்படுகிறது. இக்கூடுதல் பிணை வைப்புத் தொகை, விவசாயிகளிடமிருந்து 3 தவணைகளில் வசூலிக்கப்படுகிறது. பெரியார் மாவட்டத்தில் இதுபோன்று விதிக்கப்பட்ட கூடுதல் பிணை வைப்புத் தொகையை செலுத்தாத விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு உரிய முறையில் முன் அறிவிப்பு செய்து, பின்னர்தான் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய தகவல் எந்த அடிப்படையில் என்பது எனக்குத் தெரியாது. அதை அவர்கள் தெளிவாக கூறினால் மன்னிக்கவும், இப்படி குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால், இன்று அவை அதிக நேரம் நீடித்துக் கொண்டே போகும்.

சாதாரணமாக, இதற்கு முன்பு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வந்திருக்கிறது. எதிர்கட்சித் தலைவராக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி, தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் பேசுவார்கள். முதலமைச்சராக இருக்கின்றவர்கள் பதில் சொல்வார்கள். அதற்குப் பிறகு தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், சொன்னால், அதற்குப் பிறகு, முதலமைச்சர் பதில் சொல்வார். இதுதான் நடைமுறை, இதுவரை நடந்திருக்கிறது. நானும் பேசியிருக்கிறேன், மற்றவர்கள் பேசுவதில்லை. அப்படி ஒரு மரபு இருக்கிறது. சந்தேகம் கேட்பதற்கு அல்ல, நம்பிக்கையோடு கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அப்படி அல்ல. மாண்புமிகு திரு.அழகர்சாமி அவர்கள் 03.10.1983இல் பார்வையற்றோர் உண்ணாவிரதம் இருந்தனர். 05.10.1983 அன்று அவர்களை இராயப்பேட்டைமருத்துவமனையில்சேர்த்தனர்.அதைக்கண்டித்துமருத்துவமனையில் ஆர்பாட்டம் செய்த பார்வையற்றவர்களைக் காவலர்கள் அடித்து, கைது செய்து பின்னர், மாலையில் விட்டு விட்டார்கள் என்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நானே சாட்சியாக இருக்கின்ற காரணத்தால், நடந்ததைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு அந்தத் தகவல் வந்தது. நாடாளுமன்ற துணைத் தலைவர் மாண்புமிகு இலட்சுமணன் அவர்கள் எனக்குத் தகவல் தந்து இப்படி இருக்கின்றார்கள். நீங்கள் வந்து உத்தரவாதம் கொடுத்தால் அவர்கள் உண்ணாநோன்பைக் கைவிடுவார்கள் என்று சொன்னார்கள். நான் உடனே, இங்கிருந்து சென்றேன். அவர்களைப் பார்த்து, அவர்கள் கோரிக்கையை எந்த அளவு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவு நிறைவேற்றுவேன் என்று உறுதி கொடுத்தேன். அதை நடைமுறைப்படுத்தவும் முயல்கிறேன். நடைமுறைப்படுத்துகிறேன். அவர்கள் அன்று பழரசம் குடித்து, குருடர்களாக இருந்தாலும் கண்திறந்த உள்ளத்தோடு மனமாரப் பாராட்டி இந்த நடவடிக்கைக்கு ஆதரவு தந்தார்கள், நான் குறிப்பிட்டதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு, அங்கே உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை அடித்தார்கள் என்று சொல்வது நியாயம் அன்று. அவர்களைக் கைது செய்வது என்கிற நடைமுறையில் செய்து, பிடித்து மாலையில் விட்டுவிட்டார்களே தவிர, அவர்கள் யார் மீதும் எந்த அடியும் விழவில்லை. கையால் கூட, அவர்களைப் பிடித்துத் தள்ளி இழுத்துக் கொண்டு போகவில்லையென்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பெரியவர் சங்கரய்யா அவர்கள், உடுமலைப்பேட்டையில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டுவதற்காகக் கொண்டுவந்த சிமெண்டை, சில பொறியாளர்கள் அப்படியே வெளியே விற்றுவிட்டனர் என்று சொல்லி இருக்கிறார். அதற்குத் தகுந்த ஆதாரம் இருந்தால், அவர்கள் அதை என்னிடம் கொடுக்க வேண்டும், என்னை நேரிலே கண்டு கொடுக்கலாம். நான் அது குறித்து நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்லி எனக்குக் கிடைத்த பதிலை சொல்ல விரும்புகிறேன்.

13.10.1982இல் தமிழக அரசு மைய அரசின் உதவியுடன் உடுமலைப்பேட்டை நகராட்சியில், நகரசுத்தி தொழிலாளர்கள் இன்றி, பராமரிக்கப்படும் திட்டத்தினை ரூ.54,74,070/– மதிப்பீட்டில் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கி, முதல் கட்டமாக ரூ.10,88,436/– அளிக்கப்பட்டது. கழிப்பிடங்களை மாற்றச் செலவாகும் தொகையில் 50 சதவீதம் மத்திய அரசு மானியமாகவும் 50 சதவீதம் மத்திய அரசு கடனாகவும் வழங்கப்படும். 50 ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களை நகராட்சி நிதியிலிருந்து கட்ட உடுமலைப்பேட்டை நகராட்சி ஆணையாளர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. அதற்கிணங்க, 41 ஆயிரத்து 300 செலவில், 50 கழிப்பிடங்கள் நகராட்சிக்குக் கட்டப்பட்டன. ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்கள் ஆக மாற்றப்பட எடுத்துக்கொண்ட முதல் கழிப்பிடங்களின் எண்ணிக்கை 2,403. நகராட்சியில் ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களாக மாற்றப்பட்ட எண்ணிக்கை 50. 31.10.1983 வரையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களாக மாற்றப்பட்ட எண்ணிக்கை 2,203. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆர்.சி.ஏ.பி. கழிப்பிடங்களாக மாற்றப்பட வேண்டிய கழிப்பிடங்களின் எண்ணிக்கை 150.50 கழிப்பிடங்களை நகராட்சி கட்டிமுடிக்க செலவான தொகை ரூபாய் 41 ஆயிரத்து 300. 2,203 கழிப்பிடங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கட்டி முடிக்கச் செலவான தொகை ரூபாய் 18 இலட்சத்து 21 ஆயிரத்து 600 மொத்தம் 18 இலட்சத்து 62 ஆயிரத்து 900. நகராட்சியில் கட்டப்பட்ட 50 கழிப்பிடங்களுக்கு மொத்தம் 150 மூட்டை சிமெண்ட் செலவழிக்கப்பட்டது. மேற்கண்ட மூட்டைகள் நகராட்சி அலுவலகத்தின் கையிருப்பிலிருந்து வழங்கப்பட்டன. தமிழ்நாடு வடிகால் வாரியத்தால் கட்ட வேண்டிய 2,353 கழிப்பிடங்களுக்கு 7,794 சிமெண்ட் மூட்டைகள் அரசு நிர்ணயித்த விலையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் வாங்கப்பட்டு, அதிலே 6,794 சிமெண்ட் மூட்டைகள் இதுவரையில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. நகராட்சியில் விநியோகிக்கப்பட்ட சிமெண்ட் மூட்டைகளிலோ, குடிநீர் வடிகால் வாரியத்தால் வாங்கி உபயோகப்படுத்தப்பட்ட சிமெண்ட் மூட்டைகளிலோ எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்று எனக்கு செய்தி வந்திருக்கிறது. அதற்கு மேலாக அவர்களிடம் ஆதாரம் இருக்குமானால், என்னைநேரில் சந்தித்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மன்றத்தில் கொடுக்கப்பட வாக்குறுதிகள் காப்பாற்றப்படவில்லை.

ஆறு மாதங்களில் ஊராட்சித் தேர்தல்கள் வருமென்றும், ஜுலையில் நகராட்சித் தேர்தல்கள் தடை வந்தாலும் கூட பழைய முறைப்படியே நடத்துவோம் என்றும் சொல்லப்பட்டன. அவை காப்பாற்றப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்

துரைமுருகன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களுக்கு கடைசியாக தேர்தல் 1970ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. அவற்றின் பதவிக்காலம் 01.08.1975இல் முடிவடைந்தது. ஊராட்சி ஒன்றியங்கள் 1976ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டன. ஊராட்சி மன்றங்கள் சரிவர இயங்காததாலும், பலமுறைகேடுகள் நடந்தமையாலும், ஊராட்சி மன்றங்கள் 1979இல் கலைக்கப்பட்டன. அவை யாவும் தனி அதிகாரிகளின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. அதற்கு பிறகு ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முறையில் சில மாற்றங்களைச் செய்ய இந்த அரசு முடிவெடுத்து கீழ்க்கண்ட ஆணையை பிறப்பித்தது.

ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் தலைவர் பதவிக்கு நேரடித் தேர்தல் வைத்தல், உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வாக்காளர்களின் குறைந்தபட்ச வயது வரம்பை 21லிருந்து 18 ஆகக் குறைத்தல் ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் 18 சதவீத இடத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்கும், 15 சதவீத இடத்தை பெண்களுக்கும் ஒதுக்குதல் என்ற அடிப்படைகளில், இந்த நடைமுறையை மேற்கொண்டதால், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த இடமில்லாமல் நீதிமன்றத்திற்கு வழக்கு போயிற்று. மேற்கண்ட ஆணையை வழங்க வாக்காளர் பட்டியலை இறுதி செய்த பின் 1982ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடத்த அரசு வழி செய்தது. அதைத்தான் முதலில் சொல்லிவிட்டேன். பெண்களுக்கும் ஆண்களுக்கும் என்று ஒதுக்குவதை பற்றி தடை. எனவே, திட்டமிட்டபடி தேர்தலை நடத்த இயலவில்லை.

14.04.1982 நாளிட்ட உயர்நீதிமன்ற தீர்ப்பிலே இந்த இடஒதுக்கீடு செய்த முறை நியாயமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. அது எப்போது முடியும் என்று தெரியவில்லை. இதற்கு பின்னாலே தான் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் வைப்போம் என்று நாங்கள் முடிவெடுத்தோம். பேசினோம். தேதியை குறிப்பிடலாம் என்று எண்ணினோம். ஆனால் வறட்சி, தமிழர்கள் இலங்கையில் அவதிப்பட்டதன் விளைவாக, நடைபெற்ற நிகழ்ச்சிகள், நாமும், அரசும் சேர்ந்து எடுத்துக் கொண்ட முயற்சிகள், இதன் விளைவாக, நாங்கள் இதைப்பற்றி தெரிவிக்க முடியவில்லை என்றாலும், ஒரு முடிவை நான் சொல்லியிருந்தேன். எடுத்திருந்தேன். அதை வெளியிட்டிருந்தேன். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். வழக்கு மன்றத்திலே தீர்ப்பு அளிக்கப்படாவிட்டாலும், விரைவில் பழைய முறையிலே, அதாவது பெண்களுக்கு 15 சதவீதம் இல்லையென்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் இல்லையென்றும், அந்த முறையில் எல்லோரும் எங்கே வேண்டுமானாலும் நின்று தேர்தல் நடக்கட்டும் என்ற வகையில், கொண்டுவருவோம் என்று இந்த அவையில் சொன்னேன். உண்மை. இப்பொழுதும் சொல்கிறேன். பிப்ரவரி மாதக் கடைசிக்குள், உங்கள் அனுமதியோடு தேதி குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கும், நகராட்சிகளுக்கும் தேர்தல் நடக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். மாமன்ற உறுப்பினர்கள்

உள்ளாட்சித் துறை அமைச்சரோடு பேசி, பிப்ரவரி மாதத்தில் எந்தத் தேதியில் வைத்துக் கொள்ளலாம் என்பதை நீங்கள் சொன்னால், நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம். நான் சொன்னவற்றுள் எவையெல்லாம் நின்று போயிற்றோ, அவை முதலில் செயல்படுத்தப்படும் என்பதற்காக நான் சொல்கிறேன்.

இதற்கிடையிலே சுப்ரீம் கோர்ட் நம்முடைய எண்ணத்தை நியாயம் என்று ஏற்றுக் கொண்டால் – நம்முடைய எண்ணம் நியாயம் என்று நினைக்கிறேன். இங்கே நீதிபதி சொல்லியிருக்கின்றார் – சுப்ரீம் கோர்ட் அதை நியாயம் என்று ஏற்றுக் கொண்டால், அந்த அடிப்படையிலே இவற்றை நடத்தலாம் என்பது என்னுடைய எண்ணம்.

ஆகவே, நாங்கள் நீட்டிக்கொண்டு போய், யாரையும் ஏமாற்ற வேண்டுமென்ற ஆசை இல்லை. நாங்கள் எங்கெங்கோ பார்க்கிறோம். ஆட்சியிலே இருக்கும்பொழுது பலபேர் தோற்றுவிடுகிறார்கள். ஆட்சியில் இல்லாதவர்கள் பெரும்பாலோர் ஊராட்சி மன்றங்களிலே வருகிறார்கள். நகராட்சிகளிலே வருகிறார்கள். ஆட்சியிலே இருக்கின்றவர்கள் திரும்பவும் வருகிறார்கள். இதைப்பற்றி நாமொன்றும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. எல்லாம் மக்கள் கையில்தான் இருக்கிறது. ஆகையால் பயமோ, நாங்கள் எதையோ எதிர்பார்க்கிறோம் என்றோ சொல்லிவிடக்கூடாது.

இங்கே, தன்னிறைவுத் திட்டத்தில் நாங்கள், எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்று சொன்னார்கள். இந்தப் பிரச்சினை மிகப் பெரிய முக்கியமான பிரச்சினை என்பதால் தன்னிறைவு யார் யாருக்கு? என்று இப்பொழுது நான் குறிப்பிடவில்லை. எந்தெந்தக் கட்சிகளுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை 673, செங்கல்பட்டு மாவட்டத்திலே, வேலைகளின் எண்ணிக்கை 1,526. இதில் அகில இந்திய அண்ணா தி.மு.க.விற்கு 300.10 இலட்சத்தில், தி.மு.க 351. வேலைவாய்ப்புகள் 921, 202.18 இலட்சம், இந்திரா காங்கிரஸ் 291. வேலைகளின் எண்ணிக்கை 678, 146.33 இலட்சம். ஜனதா 63,72 பணிகள், 22.13 இலட்சம். கம்யூனிஸ்ட் 2,12 எண்ணிக்கைகள், 2.56 இலட்சம், மற்றவர்கள் 785. மொத்தம் வேலைகளின் எண்ணிக்கை 1,611. மதிப்பு 346.32 இலட்சம். இதில் ஒப்பந்தக்காரர்களின் எண்ணிக்கை 2,535. வேலைகளின் எண்ணிக்கை 4,20. செலவு செய்தது ரூ.1,019.62 இலட்சம்.

தன்னிறைவுத் திட்டம் என்பது உங்கள் தன்னிறைவுத் திட்டம் என்று சொன்னதால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது. இந்த விளக்கம் தரும் நிலைமை ஏற்பட்டது. இல்லாவிட்டால் ஏற்படாது.

இந்தத் தன்னிறைவுத் திட்டம் என்பது மக்கள் திட்டம் அல்ல. தங்களுக்காக தன்னிறைவுத் திட்டம் செய்து கொண்டார்கள் என்று சொல்வது, ஆட்சியிலே இருக்கிறவர்களைச் சொல்வதாகத் தான் பொருள். அப்படியானால், சில சமயங்களில் சில புள்ளி விவரங்களைத் தரவேண்டி இருக்கிறது. ஆதாரங்கள் எப்படிக் கிடைத்தது என்று முழுமையாகச் சொல்ல நான் இந்த நேரத்தைப் பயன்படுத்தப்போவது இல்லை.

கை தட்டுவதும், மேசையிலே தட்டுவதும் மட்டும் ஏற்கனவே உணர்ச்சி என்று சொன்னேனே, அதற்கு தான் அடையாளம், உணர்வுகளுக்கு அடையாளம் அல்ல.

தன்னிறைவுத் திட்டம் என்பது எங்களுடைய தன்னிறைவு திட்டம் அல்ல. இதை எடுத்துக் கொண்டவர்கள் யார், யாராவது பயன்படுத்திக் கொண்டிருந்தால், அதிலே இருக்கின்ற அதிகாரிகளே முன் அனுபவத்தில் இருப்பவர்களை பயன்படுத்திக் கொண்டிருந்தால், பழைய தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அவர்களிடமிருந்து சலுகை பெற்றிருந்தால், அவர்கள் தான் தங்களுக்கு தன்னிறைவு ஏற்படுத்திக் கொண்டவர்களாக இருப்பார்களே தவிர, நாங்கள் யாரும் இதிலே தன்னிறைவு பெறவில்லை என்பதை, நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட்டு அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன்.

காவல்துறையைப் பொறுத்தவரையில், தமிழகக் காவல்துறை சரியாகயில்லை. ஆங்காங்கே கொள்ளைகள் எல்லாம் நடைபெறுகின்றன. அவர்களுக்குத் திறமையில்லை, கவனிப்பில்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. அண்மையில் ஒரு 3, 4 தினங்கள் அல்லது ஒரு வாரத்திற்குள் காவல்துறையினர் எப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதும், பாகிஸ்தானிலிருந்து வந்த அதிபர், தமிழ் அதிகாரிகளை, தமிழ் காவலர்களை எப்படி பாராட்டி எழுதி இருக்கிறார்கள் என்பதையும் முன்பே நான் கூறியிருக்கிறேன்.

பெங்களூரில் களவுபோன ஒரு திருட்டை, அவர்கள் கொடுத்த சில நாட்களிலேயே வேலூரில் அந்த குற்றவாளிகள் இருப்பதைக் கண்டுபிடித்து கொடுத்தவர்கள் தமிழ்நாட்டிலுள்ள காவலர்கள். அதுமட்டுமல்ல, கூடுமான வரையில் சிறையில் அதிக ஆட்களை உள்ளே தள்ளி, பொய் வழக்குப்போடாத நிலையில், இன்றைய காவல்துறை இருக்கிறது என்பதை துணிவோடு சொல்ல விரும்புகிறேன்.

இங்கே நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவந்த மாண்புமிகு திரு.உமாநாத் அவர்கள், என்னுடைய பேச்சைக் கேட்டபோதும், தன்னுடைய கருத்தை கட்சியின் சார்பாகவும், தன்னுடைய அனுபவத்தை மையமாகக் கொண்டும், ஆதாரமாகக் கொண்டும், இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சொன்ன கருத்துகளில் பலவற்றை நான் திரும்பச் சொல்லி நேரத்தை வீணடிக்காமல் அதிலே முக்கியமானவைகளை நான் அவரோடு இணைந்துகொண்டு சில பதில்களை சொல்ல விரும்புகிறேன்.

முதலில் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள், இந்த வளர்ச்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசினுடைய பணம், அவர்கள் தருகின்ற பணம் எப்படி செலவு செய்யப்படுகிறது என்று கவனிக்க வேண்டுமென்று சொன்ன வார்த்தையை எப்படி நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள் என்று நான் இப்பொழுது விமர்சனம் செய்யத் தயாராக இல்லை. ஆனால், அவர்களே வேறு ஒரு நிகழ்ச்சிக்கு வந்தபொழுது இங்கு பல இலட்சம் மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் என்ன சொன்னார்கள் என்பதை

நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ‘‘இந்த அரசு சரியான காரியத்தை சரியான நேரத்தில் செய்கிறது; மக்களுக்குத் தேவையான அவசியமானவற்றை அவர்கள் திட்டம் போட்டு செய்ய முனைகிறார்கள்’’ என்று சொன்னதை, இங்கு இந்த மன்றத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதோடு நாங்கள் வறட்சிப் பணிக்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் எல்லாம் சரியாக இருக்கின்றனவா, மேற்கொண்டு உதவி செய்ய வேண்டுமா ? வேண்டாமா ? என்று தெரிந்துகொள்ள வந்த குழு பரிசீலனை செய்துவிட்டு, இந்த அரசையும், அதிகாரிகளையும் பாராட்டி, தேவையான அளவிற்கு பணத்தை நியாயமாக செலவழித்திருக்கிறார்கள் என்று கூறிச் சென்றுள்ளது !

எங்கள் கட்சி புதிய கட்சி. ஒரு பழி சுமத்தாமல், கட்சி கட்டுப்பாட்டிற்கு உட்படாத ஒருவன் என்ற நிலையில் வெளியேற்றப்பட்டபோது, உண்மையிலேயே சொல்லப்போனால் எனக்காக ஒரு பிரிவை, கூட்டத்தை அங்கே உருவாக்கிக் கொள்ளாத நான், நான் மட்டும் வெளியே அனுப்பப்பட்ட அந்த நேரத்திலே ஒரு பெரிய கட்சி அகில இந்திய கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, எங்களை ஆதரித்தது என்பதைச் சொல்கிறபோது, நாங்கள் பெரியவர்கள் அல்ல, எங்களைவிட பெரியவர்கள் எங்களை ஆதரித்தார்கள் என்று கருதினேனே தவிர, நாங்கள் தான் பெரியவர்கள் என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தில் இல்லை என்பதை இந்த மன்றத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

அரசியல் கட்சிகளுக்கு இவையெல்லாம் புதியவையல்ல. தோல்வியும், வெற்றியும் எந்தப் போராட்டத்திலே இறங்கினாலும் அது ஒருவர் பங்கு அல்ல என்பது வாக்கு. அந்த நிலையில் நாங்கள் எங்களை தயார்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் பிப்ரவரி மாதம் தேர்தல் என்றால் உடனே சொல்வீர்கள். மத்திய அரசு பார்லிமெண்ட்டை கலைத்துவிட்டால் என்ன செய்வது என்று கேட்கிறீர்கள். வேண்டாம், ஜனவரியிலே வைத்துக் கொள்வோம். நாங்கள் தயாராக இருக்கிறோம். நீங்கள் தேதியைக் குறிப்பிடுங்கள். நாங்கள் சொன்னால் பிப்ரவரி மாதம் கடைசியில் வைத்துக் கொள்வோம் என்றால், உடனே சொல்வீர்கள் அவர்கள் கலைத்துவிட்டால் என்ன செய்வது ? என்று; வேண்டாம், எல்லா தலைவர்களும் முடிவெடுத்துச் சொல்லுங்கள். நாங்கள் நடைமுறைப்படுத்துகிறோம். ஏன் சந்தேகப்பட வேண்டும் இப்படி சொல்வது முறையாகாது ? நீங்கள் வெளியே சென்று, நாங்கள் சொன்னோம், அவர்கள் கேட்கவில்லை; அவர்களாக வசதி பார்த்து வைத்துக் கொண்டார்கள் என்ற நிலை வந்து விடக்கூடாது. ஆகவே எப்படி வேண்டுமானாலும் அதை சந்திக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லும்போது, வங்காளத்தில் மக்கள் தீர்ப்பு அளித்தார்கள் என்று சொன்னீர்கள். அந்தத் தீர்ப்பு எங்களுக்கு பாதகமாக இருந்தால், ஏற்றுக்கொள்கிறோம். ஆதரவாக இருந்தால், நாங்கள் மகிழ்ச்சி கொள்ளமாட்டோம்; பெருமைப்படமாட்டோம்; எங்கள் கடமை சரியாக இருக்கிறது என்று அதை மேலும் சரியாகச் செய்ய, அதிகப்படுத்த; விரைவுப்படுத்த, அதை நாங்கள் தொடர்ந்து செய்வோம் என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட எங்கள் அரசு ஒன்றும் செய்யவில்லை மக்களுக்கு என்பதைத் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்கள்! பதவி உயர்வு, பதவி ஒழிவிடம் நிறைவு செய்தல் போன்றது தொடர்பாக, முன்னாலிருந்த ஒரு வழக்கத்தில் அரிசனங்கள் அவ்வளவு தூரம் எண்ணிக்கையில் பரவியில்லை. அரிசன மக்கள் அந்த இடத்திற்கு வருவதற்கில்லை என்று சொல்லும்பொழுது இன்னொன்றையும் சொல்கிறேன்.

அப்துல்லா என்பவர் இங்கே டி.ஜி.பியாக இருந்தார். இன்னொரு முஸ்லீம் டி.ஜி.பியாக வரவேண்டுமென்று எத்தனை ஆண்டுகள் வரவேண்டும் என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளவேண்டும்.

அப்படி இருந்த நிலையை நான் சிலசமயம் தவிர்க்க முடியாத நிலையில் அல்ல, இப்படி செய்துதீரவேண்டும் என்று ஒரு டி.ஜி.பி.க்கு ஐந்தாக்கி அதனை நான்காக்கி சிறுபான்மையினர் ஒருவரை கொண்டு வரவேண்டும், இன்னொருவரைக் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் முயற்சிக்கிறோமே, இதுதான் எங்கள் நேர்மையின் நிலைமை. உண்மையில் தகுதியிலிருந்து அரிசன மக்களை ஒதுக்கிவைக்கப்படவில்லை.

வெளிநாடுகளுக்கு பயிற்சிக்கு போகவேண்டுமென்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் முதலில் கவனிக்கப்படவேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. அதைப்போல பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்குக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. அவர்களுக்குத்தான் முதலில் வாய்ப்பு கொடுக்கிறோம். ஆகவே, இளைஞர்களுக்குக் கொடுக்கிறோம். அவர்கள் போய்வந்தால் தமிழ்நாட்டிற்கு பல ஆண்டுகளுக்குப் பயன்படுவார்கள் என்ற காரணத்தால், இந்த கொள்கையைத்தான் நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

ஆகவே, எந்த பிரிவினருக்காக நாங்கள் விரும்பியபடி எங்களுக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று பார்த்து சாதகபாதகமாக நடத்துகிறோம் என்பதை இந்த மன்றம் இனிமேல் நம்பாமல் இருக்க வேண்டும் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல குற்றச்சாட்டுகளை சொன்னார்கள்.

அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது. அதனால் நான் பதில் சொல்லமுடியவில்லை. வழக்கு மன்றத்தில் எத்தனை வழக்குகள் போயிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, அந்த நீதிமன்றம் என்ன தீர்ப்பு வழங்குகின்றதோ அதற்கேற்றபடி, நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை நமக்கு இருப்பதால், முன்னதாகவே நான் ஒரு கருத்தை சொல்லி, அது வேறு ஒரு நிலையை கெடுத்துவிடக் காரணமாகிவிடக் கூடாது என்பதால் நான் அதற்கு பதில் சொல்லாமல் இருக்கிறேன்.

ஒப்பந்தப்புள்ளி பற்றி பேசினார்கள். ஒப்பந்தப்புள்ளிக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் இரண்டு திட்டங்களை வைத்துகொண்டிருக்கிறோம். ஒரு விஷயத்தை திரு.உமாநாத் அவர்கள் மறந்துவிடுகிறார். நண்பர் திரு.உமாநாத் அவர்கள் தெரிந்துகொள்ளவேண்டும். நான் அவர்களின் நினைவுக்கு சொல்கிறேன். டெண்டர்

‘கால்பார்’ பண்ணி, ஒப்பந்தப்புள்ளி என்கின்ற முறையில் எடுக்கப்பட்டிருந்தது. அது ஒரு சிலருக்குத் திரும்பதிரும்ப போகிறது என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. எல்லோரும் தமிழ்நாட்டிலே நான் எங்கு சென்றாலும், அதிகாரிகளும் சரி, கட்சித் தோழர்களும் சரி, பொதுவானவர்களும் சரி, இப்படி ஏகாதிபத்தியம் போல இருக்கிறது என்கின்ற குற்றச்சாட்டை என்னிடத்திலே சொல்கின்றபோது நான் சொன்னேன், “எஞ்சினியர் ஆவதற்கு படித்து, பட்டம் பெற்று; பணம் இல்லாமல் அவர்கள் இருந்தார்களானால், அரசு பணம் கொடுத்து அவர்களை கூட்டுறவு கம்பெனியாக வைத்து அவர்கள் இந்த ‘டெண்டர்களை’ எடுத்துக்கொள்ளட்டும். முதல் சலுகை முன்னுரிமை அந்தக் கம்பெனிகளுக்கு இருக்க வேண்டும் என்று நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

இதை செய்தபோது இளைஞர்கள் படித்து வெளியே வந்ததும் அந்த பொறியாளர்கள் வேலை இல்லாமல் இருக்கக்கூடாது என்கின்ற வகையில், அவர்களுக்கு வேலையும் கிடைக்கிறது. இன்னொருவருக்கு அடிமையாகாமல், ஏகபோக முதலாளித்துவம் போல, ஒருவரே வளர்ந்து கொண்டு போகாமல், அதை தடுப்பதற்கும் பயனாகிறது. நாட்டிலேயே ஒவ்வொருவரும் தொழிற்பயிற்சி செய்வது எவ்வளவு முக்கியமானதோ, அதுபோல், தொழில் கற்றுக்கொள்வதற்கு அதை சொல்லிக் கொடுப்பதற்கு அமைப்புகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டன.

ஒரு சிற்றூர் என்று வைத்துக் கொள்ளுங்கள், அந்த ஊரிலே இருப்பவர்கள் அந்த ஒப்பந்தப்புள்ளி என்ற பெயரில் இல்லாமல், அந்த பணியை எடுத்துக்கொண்டு வேலை செய்ய முன்வந்தால், அவர்களுக்கு அந்த பணத்தை கொடுங்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன்.

எந்த கிராமத்தவர்களாவது இந்தப் பணியை நாங்கள் செய்கிறோம் என்று முன்வந்தால், அவர்களுக்கு உரிய வசதியை செய்துகொடுத்து, அதைச் செய்யுங்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். இவற்றையெல்லாம் நான் ஏன் சொல்கிறேன் ? அந்தளவிற்கு இந்த பிரச்சினைகளையெல்லாம் நாங்கள் ஈடுபாடு காட்டவில்லையா ?

1977ஆம் ஆண்டு என்ன சொன்னோமோ, அதைத்தான் இப்பொழுதும் சொல்கிறோம்.

முன்னால் திண்டுக்கல் தேர்தலின்போது வலதும் இடதும் சேர்ந்திருக்கின்ற நேரத்தில், இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளின் இரண்டு பெரிய தலைவர்கள் என்னுடைய இரண்டு பக்கத்தில் இருந்த நேரத்தில், நான் என்ன பேசினேன் என்பதை, இந்த நேரத்தில் நினைத்துக்கொள்ளுங்கள். ஒரு கை மாத்திரம் அல்ல, வலது கை இடது கை இரண்டும் எனக்கு கிடைத்திருக்கின்றன என்று சொன்னவர் தான் இந்த இராமச்சந்திரன். ஆகவே, இதை எல்லாம் அலட்சியப்படுத்தவில்லை.

இங்கே குறிப்பிட்டார்கள். விலைவாசி உயர்வதற்கு மத்திய அரசு தான் காரணம் என்று, மாநில அரசும் சில பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று

சொன்னார்கள். அந்த வகையில்தான் ஆளுநர் உரையில் கூறி இருக்கிறோம் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். விலைவாசி குறைந்தது என்றால், இங்கே அரிசி விலை குறைக்கப்பட்டது. அரிசி விலை குறைந்தது என்றால், விளைச்சல் அதிகமாக இருந்தது. இங்கே தேவையில்லை என்றால் வெளிநாடுகளுக்கு அனுப்புங்கள் என்று ஜனதா அரசு மத்தியிலிருந்து சொல்லும்போது 2 இலட்சம் டன்னுக்கு மேலே திரு.கார்த்திகேயன் அவர்கள் சீஃப் செக்கரட்டரியாக இருந்தபோது ஏற்பாடு செய்து அனுப்பினார்கள். அந்த நிலை வந்தபோது நான் சொன்னேன். இதைத்தான் அண்ணா அவர்கள் விரும்பினார்கள். நாம் வெளிநாடுகளுக்கு உணவுப் பொருளை அனுப்புகின்ற அளவுக்கு வளரவேண்டும் என்று விரும்பினார்கள் என்று. அன்று இயற்கை உதவி செய்தது. நாங்கள் அதைச் சொன்னோம். பிறகு இயற்கை உதவி செய்யவில்லை; விலைவாசி உயர்கிற நிலைமை இருந்தது. தயவுசெய்து 7, 8 வருஷங்களுக்கு முன்னால் உள்ள நிலைமையை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அந்த நிலையில் எப்படி இருந்தது என்பதையும் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், நாங்கள் எவ்வளவு அக்கறையோடு செயல்படுகிறோம் என்பதை நீங்கள் எல்லோரும் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்னொருவரைக் காட்டி, குற்றவாளி, கொலை செய்தார்கள், தவறு செய்தார்கள் என்று சொல்லி பெருமை தேடிக்கொள்ள நான் விரும்பவில்லை. அனுபவம் இல்லாத இராமச்சந்திரன் ஆட்சிக்கு வந்து, உங்களால் அனுபவப்பட்டு, சிபாரிசு செய்யப்பட்டு, அறிவுரை கூறப்பட்டு, எப்படி எல்லாம் உத்தரவு போட்டிருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்த்தால், கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே சொன்னேனே, அந்த உத்தரவுகளை நான் இட்டிருப்பேன் என்று, நீங்கள் எதிர்பார்த்திருக்கமாட்டீர்கள். இதற்காகத்தான் சொன்னேன். நான் எந்த மக்களோடு பழகுகிறேன், யாரைப்பற்றி எல்லாம் நினைக்கிறேன் என்பதைப் பற்றி சொல்வதற்காகத்தான், இந்த நிலைப்பாடுகளை நாங்கள் எடுக்கிறோம், எங்கள் உத்தரவுகள் இவ்வாறு உருவாக்கப்படுகின்றன என்பதற்காகத்தான் இந்த உதாரணங்களை நான் சொன்னேன்.

எனக்குக் குடிசையில் இருப்பவர்களோடு மட்டுமல்ல, மரத்தடியில் நிற்கிறவர்களோடு நான் பழகியிருக்கிறேன். நடுத்தெருவில் நிற்கிறவர்களோடு நான் பழகியிருக்கிறேன். எங்களை யாராவது வாழ்த்துவார்கள் என்று சொல்வீர்களானால், அவர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். பணக்காரர்கள் இல்லை.

அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்ட, சமதர்மம், சமதர்ம வாதம், சமசந்தர்ப்பம், இன்னும் சொல்லப்போனால், ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயம் இவற்றைத்தான் நான் விரும்புகிறேன். பேருந்துகளை தேசிய உடமையாக்கும் கொள்கை ஏற்கெனவே வந்துவிட்டதே, சுப்ரீம் கோர்ட் தடை விதித்து விட்டார்கள் என்று சொன்னீர்கள். இப்போது என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டார்கள். இன்னொன்றையும் சொன்னார்கள். நாங்கள் வங்காளத்தில் ஆட்சிக்கு வந்தவுடன் ஏழைகளுக்கு

அதாவது விவசாயிகளுக்கு, உழைக்கும் மக்களுக்கு, கிராமப்புற மக்களுக்கு பல நன்மைகளைச் செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினோம் என்று! எங்களைப் பொறுத்த வரையில், தன்னிறைவு திட்டம் போட்டோமே தவிர, இன்னும் எனக்கு முழுமையான திருப்தி அதிலே இல்லை. அது முழுமை அடையும் வரையில், இந்த தேசிய உடைமையாக்கும் முயற்சியை எல்லாவற்றிலும் எப்போதும் முழுமையாகச் செய்ய இந்த அரசு தயாராக இல்லை.

எங்களுக்குத் தேவையெல்லாம் கிராமப்புற மக்கள் அவர்களுக்குத் தேவையான வாழ்க்கை முழுமையையும் பெற்றாக வேண்டும். அவர்கள் பெற்ற பிறகு, அவர்களுக்கு தேவையானவை பேருந்துகள் என்றால், அதுவும் அவர்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும்.

நீங்கள் பண்ணைகளை மூடிவிட்டீர்கள் என்று சொல்லும்போது அது 1979ஆம் ஆண்டு அது அப்போதே மூடியாகிவிட்டது. 1979ஆம் ஆண்டுகளுக்கு பிறகுதான் நாம் எல்லாம் ஒன்றாக சேர்ந்து 1980லே போட்டியிட்டு இங்கே வந்திருக்கிறோம். ஆக, அது புது பிரச்சினை அல்ல. பழைய பிரச்சினை.

இன்னொன்றையும் சொல்கிறேன். அதிகமாக நான் பேசத்தயாராக இல்லை. இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், மக்கள் ஆதரிக்கின்ற வகையில் நாங்கள் இருப்போம். அதுவரையில், நாங்கள் ஏகபோக முதலாளித்துவத்தை எதிர்ப்போம். சமதர்ம உரிமை எல்லோருக்கும் வேண்டும். சமத்துவம் வேண்டும். அதற்காக உழைப்போம். இதுதான் எங்களுடைய இலட்சியம் என்று கூறி என்னுடைய உரையை இத்துடன் முடிக்கிறேன்.

15.11.1983 அன்று, தமிழக அமைச்சரவை மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஆற்றிய உரை.



நாடும் மொழியும் காத்த தியாகச் செம்மல்களின் பெயர்களில் மாவட்டங்கள்!

ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் பேரில், இந்த மாமன்றத்திலே உள்ள பொறுப்புமிக்க உறுப்பினர்கள் தங்கள் நாட்டுக் கடமையை நிறைவேற்றும் வகையில், பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது மாற்றுக் கருத்தானாலும் சரி, எதிர் கருத்தானாலும் சரி, பாராட்டுக் கருத்தானாலும் சரி, கருத்துக்களைத் தெரிவித்த அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரையில், ஆளுநர் உரையைப் பற்றியப் பேசுகின்றவர்கள் “ஏதோ உப்பும் இல்லை, சப்பும் இல்லை” என்பார்கள். கொடுத்ததை படித்துவிட்டுப் போகிறார் என்பார்கள். எதற்காக இந்த அறிக்கை என்பார்கள். ஏதோ அரசு எழுதிக்கொடுத்ததை படித்துவிட்டுப் போகிறார் என்பார்கள். அது எல்லாம் இல்லாமல், சிலர் வேறு மாதிரியான கருத்துக்களை முதலிலே வைத்து, மிகவும் ஒரு முக்கியமான இடத்தைக் குறிப்பிட்டு, அந்த இடத்தை திரும்பத் திரும்பப் பேசவேண்டிய வகையிலே, எடுத்து வைத்திருக்கிற அந்த இடத்தை நான் நினைத்துப் பார்க்கிறேன். அப்படி தகுதியான ஒரு இடத்தை இந்த ஆளுநர் உரையில் அளித்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லும்போது, எனக்கு மன நிறைவு ஏற்படுகிறது என்பதை, முதலிலே தெரிவித்துக் கொள்வது என் கடமை என்று கருதுகிறேன்.

ஒருவர் சொல்லியிருக்கிறார். ‘ஒப்பாரி வைத்திருக்கிறது’ என்று, ஒருவர் சொல்லியிருக்கிறார். ‘இது தேர்தல் அறிக்கையாக இருக்கிறது’ என்று, இந்த இரண்டும் போதும் அங்கும் இங்கும் என்ற முறையில், ஒரு அரசினுடைய பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்கு, தேர்தல் அறிக்கை போல ஒரு ஆளுநர் உரையை அளித்திருக்கிறார்கள் என்றால், அது உச்சக்கட்டம்! ஒப்பாரி மாதிரி இருக்கிறது என்று சொன்னால், ரொம்ப துக்ககரமான கட்டம்! அந்த இரண்டு கட்டத்திற்கும் இடையே, எத்தனையோ கருத்துக்கள் இருக்கின்றன. குறைகளைச் சொல்வதற்கு ஒரு காரணத்தை சிருஷ்டித்துக் கொண்டு, அதற்கு விளக்கத்தையும்; ஆதாரத்தையும், தேடியிருக்கிறார்கள் சிலர். இந்த அரசைப் பொறுத்தவரையில், தேர்தலிலே என்னென்ன சொன்னோமோ அதை நிறைவேற்றுவதற்கு என்னென்ன வழி என்பதை வைத்துக்கொண்டுதான் திட்டத்தைத் தீட்டி, அதை நிறைவேற்றுவதற்கு ஆளுநர் மூலமாக கொள்கையைச் சொல்லி, அதை நிதிநிலை அறிக்கை மூலம் நடைமுறைப் படுத்துவதற்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். எல்லோரும் அப்படித்தான் செய்வார்கள். இது இயற்கை.

நாங்கள் புதுமையாகச் செய்வதில்லை. இதை நான் சொல்வது என்ன காரணத்தாலோ எல்லோருக்கும் இருக்கிறது என்று சொல்லவில்லை சில

உறுப்பினர்களுக்கு, மாண்புமிகு அறிவார்ந்த உறுப்பினர்களுக்கு, ஒப்பாரியாகவும் இருந்திருக்கிறது. தேர்தல் அறிக்கையாகவும் இருந்திருக்கிறது. ஒப்பாரி வைப்பவர்கள், எங்கே போனாலும் ஒப்பாரி வைப்பார்கள். சாவு வீட்டிற்குப் போனாலும் ஒப்பாரி வைப்பார்கள், கல்யாண வீட்டிற்குப் போனாலும் ஒப்பாரி வைப்பார்கள். சாவு வீட்டிற்குப் போகும்போது அவர்களுடைய கஷ்டத்தையெல்லாம் நினைத்துக்கொண்டு, மார்தட்டி, ஒப்பாரி வைப்பார்கள் – அவர்களுடைய வீட்டில் அப்படி இருந்தது, இப்படி இருந்தது என்று – கல்யாண வீட்டிற்குப் போனால், உங்க அப்பா இல்லையே, உங்க தாத்தா இல்லையே என்று ஒப்பாரி வைப்பார்கள். இப்படி சில குணங்கள் – அதைத் தவிர்க்க முடியாது. இந்த ஒப்பாரி வைப்பவர்கள் பற்றி நான் உங்களுக்கு சொல்கிறேன் – பெத்தடின் போட்டவர்கள் எப்படியோ இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் இந்த ஒப்பாரி ஞாபகம் வரும். அப்படிப்பட்டவர்கள் என்று நான் சொல்லவில்லை. அதுமாதிரி ஒரு எண்ணம் வருகிறது. அதற்கு அனுதாபப்படுகிறேன். தொடர்ந்து பத்திரிகையிலே போட்டால், பிறகு அதை வாசித்தால் நன்றாக இருக்காது. தொடர்ந்து நண்பர்கள் ஒப்பாரி வைக்கக் கூடாது. இங்கே எடுத்துச்சொன்னதைப்போல, குற்றங்களை தாட்சண்யம் இன்றி, எந்தக் கவலையும் இன்றி, வேண்டுமென்றே ஒரு உணர்ச்சி கொண்டு, குற்றங்குறைகளைச் சொன்னார்களே, அப்படிப்பட்ட நிலையிலே, அனைவரும் இருக்க வேண்டுமென்பது தான் என்னுடைய விருப்பமும், வேண்டுகோளும் ஆகும்.

இப்போது தேர்தல் அறிக்கையை போன்று இருக்கிறது என்று கூறும்போது, தேர்தல் அறிக்கையில் சொன்ன விஷயங்கள் இல்லாமல் சொல்லப்பட்டவைகள் புதியதாக இதில் சொல்லப்பட்டிருக்கிறது என்று தான் நாங்கள் இதை எடுத்துக் கொள்கிறோம். தேர்தல் அறிக்கையிலே சொன்னவைகளை நிறைவேற்றவில்லை என்று சொன்னவர்கள், தேர்தல் அறிக்கையிலே சொல்லாததை செய்யப்போகிறோம் என்று சொன்னதனால், இதுவும் ஒரு தேர்தல் அறிக்கையாக வந்திருக்கிறது என்றார்கள் இதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இதைத் தேர்தல் அறிக்கையாக எடுத்துக்கொண்டாலும், இது மக்களுக்காகப் பயன்படுமானால், இது மக்களுக்குத் தேவையான ஒன்று என்று கருதினால், நான் மிக மகிழ்ச்சி அடைந்து, இந்தத் திறனாய்வுக் குறிப்பை ஏற்றுக்கொள்கிறேன்.

முதலில் மாவட்டப் பிரிவினைகளைப் பற்றி நான் சொல்ல வேண்டும். மாவட்டங்களைப் பிரிப்பதற்குக் காரணம் – ஒன்று நாம் மதிக்கிற தலைவர்களை எப்போதும் மக்கள் நினைவிலே வைப்பதற்காக – இதைப் பிரிக்க, காரணத்தை சிருஷ்டிக்கவில்லை பிரிக்கின்ற காரணத்தை உண்டாக்கவும் இல்லை – காரணங்கள் இருப்பதால், அந்தக் காரணங்களைப் பயன்படுத்தி, அவற்றை நினைவுபடுத்துவதற்காக, அவர்களின் பெயரை வைப்பது, இரண்டு மிகப்பெரிய மாவட்டங்களாக இருப்பதால், பஞ்சாப் போல, ஹரியானா போல, வடக்கே இருக்கின்ற மாநிலங்களைப் போல, நம்முடைய மாவட்டங்களுக்குத் தேவையான உதவியை மத்திய அரசிடமிருந்து பெறமுடியவில்லை. இங்கே ஒரு தொழில் இருக்கிறது என்றால், அந்த

மாவட்டத்தைப் பிற்பட்ட மாவட்டமாகக் கருதி உதவி செய்யுங்கள் என்று கேட்கிறபோது, அங்கே தொழில் இருக்கிறது. ஆகவே, அதைப்பட்டியலில் சேர்க்க முடியாது என்று சொல்கிறார்கள். அதையும் மீறி நியாயமான எண்ணம் அவர்களுடைய உள்ளத்திலே ஏற்கப்படுவதற்கு வசதியாக இருப்பதற்காகத்தான் இந்த மாவட்டங்களின் பிரிவினை. அதுவும் நிருவாகம் இன்னும் கூடுதலாக ஆகும்பொழுது, அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படுகின்றபோது, எவ்வளவு சீக்கிரமாக மக்கள் அதிகாரிகளோடு நெருங்கிய உறவு கொண்டு, சந்தித்து காரியங்களை நிறைவேற்ற முடியுமோ, அவற்றை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக, இந்த மாவட்டங்களைப் பிரித்தோமே தவிர, ஏதோ எங்கள் ஆசைகளுக்காக, எந்தெந்த மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்றோ, எதை எதை யார் தலையிலே சுமத்த வேண்டுமென்ற எண்ணத்திலோ நாங்கள் இந்த மாவட்டங்களைப் பிரிக்கவில்லை என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய பொறுப்பு என்று நான் கருதுகின்றேன். பெயர்களை நாங்கள் தேர்ந்தெடுத்து சூட்டியபோது, கட்சி அரசியல், ஜாதி அரசியல், மத அரசியலுக்குள் நாங்கள் போகவில்லை.

நமது தாயகத்திற்கு விடுதலை வாங்கித் தந்தவர்கள், விடுதலைக்காக, உழைத்தவர்கள், விடுதலைக்குப் பிறகு இந்த நாட்டைக் கட்டிக் காக்கத் தகுந்தவர்களாக இருந்தவர்கள், இந்த நாட்டிற்காக தியாகம் செய்தவர்கள், மொழிக்காக, இனத்திற்காக நான் முதலிலே சொல்லிவிட்டேன். மதத்திற்காக அல்ல— எப்படியும் மக்கள் வாழ வேண்டும் என்பதற்காக, எதையும் தாங்கிக் கொண்டு இந்த நாட்டு மக்களுக்கு நன்மைகள் செய்ய வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு இருந்து பல துன்பங்களை ஏற்ற பெரியவர்களுக்கு நினைவு இருக்கக் கூடிய நிலைமையில் அவர்களைப் பற்றி மக்களுக்குத் தெரிவிக்கக்கூடிய நிலைமையில், அந்தப் பெரியவர்களுடைய பெயர்களை, தியாகிகளுடைய பெயர்களை நாம் சூட்டினோம். இருக்கின்ற மாவட்டங்களின் பெயர்களை நாங்கள் மாற்றவில்லை. நெல்லை மாவட்டம் என்றால் நெல்லை மாவட்டம் இருக்கிறது. திருச்சி மாவட்டம் என்றால், திருச்சி மாவட்டம் அதுபோல எந்தெந்த மாவட்டங்களை நாங்கள் பிரித்தாலும், முன்னால் சொல்லப்பட்ட அந்த மாவட்டங்களின் பெயர்கள் அப்படியே இருக்கும்படியாக நாங்கள் மிக எச்சரிக்கையாக விட்டு வைத்தோம் என்பதை, இந்த நேரத்திலே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெல்லையை எடுத்துக் கொண்டபோது, வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் நினைவு நமக்கு வருகிறது. சிதம்பரம் பிள்ளை என்று சொல்வதா? பிள்ளை வகுப்பாருடைய ஞாபகத்திற்காகச் சொல்கிறேன் என்று யாரும் கற்பனை செய்வார்களேயானால், அவர்களுடைய தியாக உணர்வு ஏதோ கிணற்றில் இட்ட தீபம் போல இருந்து விடும், குடத்தில் இட்டது போல் அல்ல, கிணற்றிலிட்ட தீபம் போல்தான் இருக்கிறது என்று நான் சொல்வேன். அவர்கள் பிறந்தது அந்த ஜாதியில் என்று அந்தக் காரணம் சொல்லிவிட்டதே தவிர, அவர் பிறந்தது இந்த இந்திய துணைக் கண்டத்தின் விடுதலைக்காக, வாழ்வுக்காக, என்பதை நாம் எண்ணும்போது, வ.உ.சிதம்பரம்

என்று பெயர் வைக்கிறோம் என்றால், எங்களில் யாருக்கும் இதிலே பங்கு இல்லை என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பங்குபெறவும் நாங்கள் ஆசைப்படவில்லை. அவர் நாட்டுக்குத் தொண்டு செய்தார். கப்பலோட்டிய தமிழன் என்று பெயரை அவர் பெற்றார். மக்கள் அப்படிச் சொல்வதிலே பெருமை பெற்றார்கள். அவர், ஒருவரும் வேலைக்குப் போகக் கூடாது என்று சொன்ன வார்த்தையையேற்று முடிதிருத்துபவர்கள் கூட போகாமல், அந்த ஆங்கில அரசுக்காக அங்கே வேலை செய்து கொண்டு இருந்த அதிகாரிகள் இதைப் புரிந்து கொள்ளும்படியான நிலைமையை ஏற்படுத்தச் செய்தார்கள் இதை எண்ணிப் பார்க்கும்போது, அப்படிப்பட்ட தலைவர் பெயரிலே ஒரு துறைமுகம் இருக்க வேண்டும் என்று நாம் கேட்டபோது, நம்மால் அதைச் செய்து முடித்துக்கொள்ள முடியவில்லை. ஆகவே அந்த மாவட்டத்திற்கு சிதம்பரம் என்ற அவர் பெயரை வைக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். எந்தத் தூத்துக்குடி துறைமுகத்திலே, எந்த தூத்துக்குடியிலே அவர் கப்பல் ஓட்டிய தமிழன் என்ற பெயருக்கு சொந்தக்காரன் ஆனாரோ, அந்தப் பெயரை வைக்கச் சொல்லும்போது, முடியவில்லை. அவர் காங்கிரஸ்காரர் என்பது மட்டுமல்ல, இந்த நாட்டுக்காக எவ்வளவு உழைத்து, வசதியிருந்தும் அவர் ஆங்கிலேயருக்கு அடிமையாகாமல், அவர் தன்னுடைய தியாகத்தின் மூலமாக உழைத்து, சிறை சென்று, செக்கிழுத்து இவ்வளவு கஷ்டப்பட்டார் என்றால், அவருடைய பெயரில் அதை வைத்து இருக்கின்றோமே தவிர, இது எந்த ஊருக்குச் சொந்தம், எங்கே வைக்க வேண்டும் என்ற நேரம் காலம் இவைகளைப் பார்த்து அல்ல.

அதுபோலவே இராமநாதபுரம் மாவட்டம், சிலர் சொல்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் சேதுபதி மாவட்டம் என்று வைக்கக்கூடாதா? என்று விவரம் தெரியாதவர்கள் சொல்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தை பிரித்து – பிரிக்க வேண்டும், இரண்டாக என்று முதலில் சொன்னபோது, இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து முஸ்லீம்களும், ஆதிதிராவிடர்களும், மற்றவர்களும் வந்து இது வரலாற்று சிறப்பு மிக்க பெயர். நீங்கள் எந்தப் பெயரை எங்கே வைத்தாலும் சரி, இராமநாதபுரம் மாவட்டம் என்ற பெயர் மாற்றப்படக்கூடாது என்று 2,3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே நாங்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டோமே, அதற்கு முன்னாலேயே ஆட்சி இருந்தபோது வந்து சொல்லி வற்புறுத்தியிருக்கிறார்கள் இதை இந்த மாமன்றத்திற்கு சொல்ல வேண்டியது என்னுடைய கடமை, ஆகவே, இராமநாதபுரம் மாவட்டம் என்று பெயரை நம்மால் மாற்ற இயலவில்லை, மக்களுடைய தீர்ப்புக்காக ஆகவே, மற்ற இரு தியாகிகளுடைய பெயர்களை, தலைவர்களுடைய பெயர்களைச் சேர்த்து 3 மாவட்டங்களாகப் பிரித்து இருக்கிறோம்.

திண்டுக்கல்லுக்கு அண்ணா பெயரை வைக்கலாமா? என்ற பிரச்சினை இருக்கிறது. அதைப் பிரச்சினையாகச் சொல்கிறார்கள் வெளியில், இங்கே அந்த மாமன்றத்திலே யாரும் சொல்லவில்லை. நன்றி, ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். எப்படி மகாத்மா காந்தி இந்தியாவிற்குச் சொந்தமோ அது போல, அண்ணாவும் இந்தியாவிற்குச் சொந்தம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

அண்ணா அமெரிக்காவுக்குப் போனபோது, அங்கே அவர்கள் இந்தியாவைப் பற்றி ஒரு கேள்வி கேட்டார்கள். “இந்தியாவிலே உங்களிடையே போராட்டம் இருக்கின்றதாமே!” என்று கேட்டபோது, அது எங்கள் சொந்த விஷயம், அதில் உங்களுக்கு அக்கறை இருக்கத் தேவையில்லை, நாங்கள் தீர்மானித்துக் கொள்வோம் என்று பதில் சொன்னார்கள் அறிஞர் அண்ணா அவர்கள் இதை இங்கே நான் தெளிவாகச் சொல்லவிரும்புகிறேன்! அப்படிப்பட்டவருடைய பெயரைத்தான், இங்கே வைத்திருக்கிறோம். அதை மாற்றவேண்டும் என்று சொன்னால், அதற்குரிய காரணம் என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

காஞ்சிபுரத்திலே அந்தப் பெயரை வைக்கலாம். வைத்தால் நீங்கள் எல்லோரும் ஒத்துக் கொள்வீர்கள்; வெளியிலேயும் ஒத்துக் கொள்வார்கள். அதை மறுக்கப் போவதில்லை. எப்படி காமராசர் பெயரை வைத்தால் ஒத்துக் கொண்டோமோ, எப்படி பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரை வைத்தால் ஒத்துக் கொண்டோமோ அது போல, ஒத்துக் கொள்வார்கள். ஆனாலும், திண்டுக்கல்லிலே வைத்தோம் என்றால், தலைவர்களின் பெயர்களில் வரிசையாக வந்திருப்பதால், அதுவும் இருக்கட்டும் என்ற எண்ணம் தானே தவிர, வேண்டும் என்றே இங்கே வைக்கக்கூடாது என்ற எண்ணம் இல்லை.

சிலர் கற்பனை செய்கிறார்கள், நேற்றுக்கூட கேள்விப்பட்டேன். எங்கேயோ ஒருவர் பேசினாராம் சங்கராச்சாரியார் சொல்லி – பெரியவர் – நான் அந்தப் பெயரை, அண்ணாவின் பெயரை காஞ்சிபுரத்திற்கு வைக்கவில்லையாம். கற்பனைக்கும் ஒரு எல்லை உண்டு. இப்படி கற்பனை செய்து கொண்டு போனால், நான் வருத்தப்படுகிறேன். ‘பெத்தடினைப்’ பற்றி சொன்னேனே அந்தக் கதிதான் வந்துவிடும். அப்படி இருக்கக் கூடாது கற்பனையை ஓரளவிற்கு ஒழுங்காக வைத்துக் கொள்ளுங்கள். என்மேல் குறை சொல்பவர்களுக்கு வேறு காரணம் இருக்குமானால், சொல்லுங்கள், சங்கராச்சாரியார் அவர்களைக் கேட்டு, நான் ஏதாவது செய்தேன் என்பதற்கு ஏதாவது ஆதாரம் இருக்குமானால் சொல்லுங்கள், நான் செய்திருந்தால். செய்தேன் என்று ஒத்துக் கொள்கின்றேன்; இல்லை என்றால், இல்லை என்று ஒத்துக் கொள்கின்றேன். இதற்கெல்லாம் போய், அந்தப் பெயரை எல்லாம் இழுத்து இங்கே கொண்டு வருவது அவ்வளவு நியாயம் அன்று!

“ஏன் காயிதே மில்லத் பெயரை வைக்கவில்லை?” என்று எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் கேட்டார்கள். “ராஜாஜி பெயரை ஏன் வைக்கவில்லை?” என்று கேட்டார்கள். அதுவே, நாங்கள்தான் வைத்தோம். இதற்கு முன்னாடி இருந்தவர்கள் வைக்கவில்லை. அதற்கும் முன்னாடி இருந்தவர்களும் வைக்கவில்லை. ஆகவே, அந்த உரிமை எங்களுக்கு இருக்கிறது. நீங்கள் ஆரம்பிக்கவே இல்லை; அதுதான் கதை.

இதுவே ஒரு விளம்பரம்தான். பத்திரிகையிலே என் பெயரைச் சேர்த்துப் போடுங்கள் என்று பேசினாலும், அதுவும் விளம்பரம்தான்.

கண்டிப்பாக உங்களைப் போடுவார்கள். ஏன் என்றால், அவர்களோடு நீங்கள் தொடர்பு வைத்திருக்கிறீர்கள். சட்ட சபையில் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். போடுங்கள் என்று சொல்லிவிட்டு வந்தால் போடுவார்கள். அப்படி எத்தனையோ பேர் இருக்கிறார்கள். நான் கூட இருக்கிறேன் என்னைப் போல நீங்களும் ஒருவர், அதைப்பற்றி பிரச்சினை இல்லை.

பிரச்சினை எங்கே இருக்கிறது என்றால், தமிழ்நாட்டிலே 'அரிஜன்' என்று அழைக்கப்படுகிற ஆதிதிராவிடர்களில் ஒருவர் பெயரை, ஒரு மாவட்டத்திற்குக் கொடுக்கலாம் என்றால், என் உள்ளத்திலே நான் இன்னமும் தெளிவாகப் பேசுகிறேன். மகாத்மா காந்தி தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது, சிறு பிள்ளையாக இருந்த அந்தப் பெண்ணினுடைய பெயரை மாவட்டத்திற்குச் சிறப்பாக வைப்பதும், அதிலும் ஆதிதிராவிடப் பெண்ணாக இருப்பதும், அதிலும், சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவராக இருப்பதும், அதுவும் இந்தியாவில் சுதந்திரம் கேட்பதற்கு முன்பு தென் ஆப்பிரிக்காவில் இருக்கிற கறுப்பர்களுக்காக, அதே சமயத்தில் இந்தியர்களுக்காகவும் போராடிய இறந்த அந்தப் பெண்ணைப் பார்த்து, மகாத்மா காந்தி என்ன சொன்னார் என்பதை நினைவில் வைத்துக் கொண்டால், அந்த 'தில்லையாடி வள்ளியம்மை' பெயர் ஒரு மாவட்டத்திற்கு மட்டும் அன்று, இந்தியாவிற்கே கூட வைத்தால், அது தவறு அன்று!

அப்படிப்பட்ட, ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த ஒரு சகோதரி அவர்களுக்கு நாம் வணங்கக் கூடிய அளவுக்கு, வயது இருக்குமானால், அப்படிப்பட்டவர்களுடைய பெயரையே மாவட்டத்திற்குச் சூட்டினால், அதைத் தலைவர்களாக இருப்பவர்கள், வெளியிலே அரசியலாக்கி, அம்பேத்கர் பெயரை வைக்கவில்லையே, ஏன் என்று கேட்டால், நான் வருத்தத்தோடு சொல்கிறேன் ஒரு பெண்ணினுடைய பெயர் ஒரு மாவட்டத்திற்கே வைத்திருக்கிறது. அந்தப் பெண். மகாத்மாகாந்தி கூட சுதந்திர உணர்ச்சியை, தியாகத்தை அதிகப்படுத்திய பெண், அதுவும் அவர்கள் சிறுமியாக இருந்தபோது என்பதை எண்ணிப்பார்க்கும்போது, எவ்வளவு மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதை நினைவிலே வைத்துக் கொண்டால், அது நியாயமே என்று அனைவரும் ஏற்றுக் கொள்வர்!

எங்களுக்கு அம்பேத்கர் பெயரை வைத்தாலும் ஒன்றுதான், கக்கனார் பெயரை வைத்தாலும் ஒன்றுதான்! அல்லது வள்ளியம்மை என்று பெயர் வைத்தாலும் ஒன்றுதான் என்று சொல்லமாட்டேன். அவர்களையெல்லாம்விட, வள்ளியம்மை எங்கள் மதிப்பிற்குரியவர், மரியாதைக்குரியவர், ஆகவே வைக்க விரும்புகிறோம். நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவன். இறந்த அந்த வள்ளியம்மை அப்போது காங்கிரஸ் என்று சொல்ல முடியாது. ஒரு தமிழச்சி ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த, தென் ஆப்பிரிக்காவிலே அடிமைப்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண், அதை நினைத்துக் கொண்டு பார்த்தால், ஓர் இனத்திற்கு அல்ல, மனித உரிமைக்கே சொந்தக்காரியான அப்படிப்பட்ட தாய்மை கனிந்த உணர்வுக்குச் சொந்தமானவருடைய பெயர் மிகப் பொருத்தமாக இருக்கும் என்பதை மறுக்க முடியாது, மறுக்க மாட்டார்கள்! சிலர் அதை மறைக்கிறார்கள்.

அம்பேத்கர் ஒருவர் தான் திராவிடர் என்று சொன்னால், நாம் ஒத்துக்கொள்ள முடியாது. இங்கே ஆதிதிராவிட உறுப்பினர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இல்லையா ? கக்கனார் பெயரை வைக்க வேண்டாமா ? வரலாற்றின், தமிழகத்திலே எனக்குத் தெரிந்த வரையில், கை கறை படியாதவர்; கடைசி வரையில் எதிர்க் கட்சியாலும் சொல்லமுடியாது அளவுக்கு, ஏழ்மையிலேயே கழித்து மறைந்தவர், கக்கனார். இந்த உலகத்திலே வரலாறு இருக்கிற வரையில், யாரும், சொல்லாமல் இருக்க முடியாது. எத்தனையோ பேர் மீது குறை குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் கக்கனார் பற்றி சொல்ல முடியவில்லை, அவர் 'ஹோம் மினிஸ்டராக' இருந்தார். அவர் பதவியை இழந்ததும், கயிற்றுக் கட்டிலிலே, ஒரு சிறிய 'ரூமிலே' படுத்துக்கொண்டு, அங்கேயே சமைத்து சாப்பிட வேண்டிய நிலைமையிலே அவருடைய வாழ்க்கை இருந்தது என்பதை நன்றாகத் தெரிந்து, நான் இதை இங்கே சொல்கிறேன். அப்படி ஏதாவது பெயர் வைக்க வேண்டுமென்று வந்தால், கக்கனார் பெயரை முதலிலேயே வைப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விளம்பரத்திற்காக, தயவு செய்து, டாக்டர் அம்பேத்கர் பெயரை இங்கே இழுத்து, அதைப்பற்றி விமர்சனம் செய்ய வேண்டிய அளவுக்கு இங்கே உள்ளாக்காதீர்கள் என்பதைப் பணிவன்போடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பெரியார் பெயரை ஒரு மாவட்டத்திற்கு வைத்தபோது கோவை இருந்தது. பெரியார் மாவட்டமாக்கி ஈரோட்டை அதற்குத் தலைநகர் ஆக்கினோம். ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு இருக்கிறோம். எந்த மாவட்டத்தைப் பிரிக்கிறோமோ, அந்த மாவட்டத்தின் பெயரை மாற்றக் கூடாது. அந்த மாவட்டத்தைப் பிரிக்கிறபோது பிரிக்கப்படுகிற மாவட்டத்திற்கு புதிய பெயரை வைக்கலாம் என்று எண்ணியிருக்கிறோம். அதே சமயத்திலே சொல்கிறேன். சென்னையைப் பற்றி ஒருவர் சொன்னார். நான் பத்திரிகையிலே படித்தேன். இரண்டு மாவட்டங்களாகப் பிரித்து இரண்டு பெயர்கள் வைத்துவிடலாம் என்று சொன்னார்கள். சென்னையே இருக்காது, தமிழகத்திற்கு தலைநகர் இல்லை. தலைநகர் எது ? சென்னை இன்று இருக்கிறது. எந்தப் பெயரை வைத்து தலைநகரை அழைக்கப் போகிறோம் ? ஆகவே, இதுபோன்ற யோசனை சொன்னவர்கள் விவரம் தெரியாதவர்கள் அல்ல, சிக்கலை உண்டாக்க வேண்டுமென்ற அதிதீவிர எண்ணம் கொண்டவர்களே தவிர, வேறொன்றும் இல்லை! அனைத்திந்திய அண்ணா தி.மு.க, சொன்னது, அதுவும் எம்.ஜி.ஆர். சொன்னது என்பதாலே கண்டிப்பாக ஏதாவது ஒரு குற்றம் சொல்லி மக்களைப் பேச வைக்க வேண்டும். திசை திருப்புவதற்காக நாங்கள் இந்த மாவட்டங்களைப் பிரிக்கிற திட்டத்தை, ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கிறோம் என்று சொன்னால், அதைவிட கேலிக்கூத்தானது ஒன்றுமே இருக்காது. இப்போது மாவட்டங்களைப் பிரிக்கிற வகையில் எந்தப் பிரச்சினையை உண்டாக்குகிறோம்.

ஜீவா பெயரை வைக்க வேண்டும் ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு என்ற போது ஒரு பிரச்சினை வந்தது. நாங்கள் விட்டுக் கொடுத்தோம், ஜீவாவின் பெயரை வைத்தோம், எங்கள் கட்சிக்காரர் என்பதற்காகவா ? இப்போது இருக்கிறார்

என்பதற்காகவா? நிச்சயமாக எங்களுக்கு ஆதரவு காண்பிப்பார் என்பதற்காகவா, அல்ல 1934 ஆம் ஆண்டின் இறுதி, அல்லது 1935 ஆம் ஆண்டு ஆரம்பம், அவர்களை நான் சந்தித்தது. அப்போது சந்தித்தது இன்னும் எனக்கு நினைவில் இருக்கிறது. அவர் அப்போது அண்டர்கிரவுண்டிலே ஒடிக்கொண்டிருந்த நேரம். கலைவாணர் என்.எஸ்.கே. என்னை அரசியலில் புகுத்தி இதை அதிகமாகத் தெரிந்து கொள்ளச் செய்த நேரத்திலே முதலில் அறிமுகப்படுத்திய அரசியல் வாதி ஜீவா அவர்கள்தான் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அந்த வகையிலே நான் வளர்ந்தேன் அப்போது, அதை நினைத்துப் பார்க்கிறபோது தமிழிலே அக்கறை, தமிழுக்காக தியாகம் செய்வது, தமிழுக்காகப் போராடுவது தமிழன் என்ற உணர்வை எந்தவிதத்திலும் விட்டுக்கொடுக்காமல், தன் பொதுவுடைமைக் கொள்கையை நிலை நிறுத்திக்கொண்டு, அதற்காகப் போராடி; சிறைசென்று; தொல்லைக்கு; துன்பத்திற்கு; ஆளாகிய. அந்த ஜீவா அவர்களை நான், எந்த நேரத்திலும், நிலையிலும், மறக்க மாட்டேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நான் சொல்லவில்லை. எனக்கு நண்பராக அல்லது எனக்கு அண்ணனாக, ஆசானாகக்கூட இருந்தார் என்று சொன்னால், அதற்காக நான் சொல்லவில்லை. அதிலேகூட, ஜாதியைக் கொண்டு வந்தார்கள். நேசமணியை கொண்டுவந்து இடையிலே சொருகினார்கள். நாங்கள் விட்டுக் கொடுத்தோம் எங்களுக்கு என்ன கஷ்டம்? எப்படியோ ஜீவா பெயர் வேண்டும், நேசமணி பெயர் வேண்டும். இருக்கட்டும், இந்த கட்சியைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சி இருக்கிற வரையில், யாருக்கு பெயர் வைக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ, அவருடைய பெயர் இருக்க வேண்டுமே தவிர எங்கு வைத்தாலும் ஒன்றுதான். அது இல்லாமல் போய்விடக்கூடாது என்பது எங்களுடைய ஆசை. அதைப்போல் ராஜாஜி பெயர் இல்லையே என்கிறார்கள். விரைவில் ராஜாஜி பெயர் ஒரு மாவட்டத்தை பிரித்து அதற்கு வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையை மூன்றாகப் பிரிக்கும்படியான நிலைமை ஏற்பட்டால் அதைப்பற்றி யோசிக்கலாம், சென்னை இருக்க வேண்டும், இங்கே நமக்கு அதையும் பார்த்துக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் தலைநகர் இருக்காது.

அதேபோல, இன்னமும் கட்டபொம்மனைத் தெரியும், வெள்ளைத்துரையைத் தெரியும் ஆனால் சுந்தரலிங்கம் என்ற ஒரு வீரர் உலகத்தில் இருந்து எவ்வளவு சாகசம் செய்தார் என்பது வரலாற்றில் இடம் பெறவில்லை. ஆனால்! இருக்கிறான், அவர் செய்த சாகசம் மிகப் பெரியது. வீரம் மிகப் பெரியது. அவரைப் பற்றிய வரலாறு இருக்கிறது. சொல்வதற்கு முகவரி இல்லை.

நேரு அவர்கள் சொன்னார்கள் என்று, நான் முன்பு – ஒரு கூட்டத்தில் பேசும்போது – நேரு அவர்களைப் பற்றி 'கொட்டேஷன்' கொடுத்து, நேரு அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டேன். ஒரு கூட்டத்தில்! இப்போது அதைச் சொல்ல விரும்புகிறேன். எல்லோரும் கைது செய்யப்பட்டு, காங்கிரஸ்காரர்கள் உள்ளே இருக்கும்போது எல்லா வன்முறைகளும் நடந்த பிறகு, மகாத்மா காந்தி வெளியே வந்த பிறகு, இந்த வன்முறைக்கும் காங்கிரசுக்கும்

எனக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னபோது, நேரு அவர்கள் பம்பாயில் விளக்கு அடியில் நின்று கொண்டு பேசிய பொதுக்கூட்டத்தில் சொன்னது எனக்கு நினைவுக்கு வருகிறது. “இந்த வன்முறைச் செயல்களுக்கு எல்லாம் நான் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறேன்” என்று சொன்னால் அந்த கட்சியில் முதல் மனிதராக இருந்தவர்கள் நேரு அவர்கள். அதைப்போல நான் இப்போது ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தவறுகள் எங்கு இருந்தாலும் சரி, அது வேறு நல்ல உணர்வின் மீது தவறு நடந்தால் அந்த உணர்வுக்கு மதிப்புஅளித்து, அதைப்பற்றி சிந்திக்க வேண்டும். ஆகவே, அப்போது நேரு அவர்கள் சொன்னார்கள். விலாசம் தெரியாத எத்தனை பேர்களுடைய துயரங்கள் மூலம் இன்று இந்த நிலை வந்து இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் நான் மரியாதையைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுக்கு எல்லாம் மாலை விழுகிறது. அவர்களுடைய அடையாளம் தெரியாத குடும்பங்கள் எப்படி இருக்கின்றன என்பது யாருக்குத் தெரியும் ? என்று கேட்டார்கள்.

அதேபோல சுந்தரலிங்கம் என்ற வீரரை உலகமே மறந்து இருக்கிறது. அவர் மிகப்பெரிய வீரர். நாட்டு விடுதலைக்கு எவ்வளவு துணையாக இருந்தார் என்பது வரலாற்றைப் படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும். ஆகவே, அந்த மாதிரி பெயர்களை வைக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அது விரைவில் நிறைவேறும் என்று நம்புகிறேன்.

கரூரில், ஏன் அந்தத் தலைமை இடத்தை வைக்கக் கூடாது ? என்று கேட்கிறார்கள். கரூருக்குப் பக்கத்தில், எவ்வளவு தொழிற்சாலைகள் இருக்கின்றன ? அது எவ்வளவு வளர்ந்து இருக்கிறது ? என்பதைப் பார்க்க வேண்டும். நாம் இப்போது தேர்ந்தெடுத்து இருக்கிற பெரம்பலூர் எவ்வளவு பின்தங்கியிருக்கிறது என்று பாருங்கள். சரியான வீடுகள் கூட அங்கே கிடையாது, அங்கே போய் பார்த்தால்தான் தெரியும். தேர்தல் காலத்தில் போகிறவர்களுக்காவது தெரியும். அப்படிப்பட்ட இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த மாவட்டத்தின் மத்திய பகுதி ஓரளவுக்கு 20, 30, 40 மைல் என்கிற அளவுக்கு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே இருக்கிற எம்.எல்.ஏ. எங்கள் கட்சி எம்.எல்.ஏ. அல்ல திராவிட முன்னேற்றக் கழக எம்.எல்.ஏ. அங்கே இருக்கிறார். நாங்கள் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து இருக்கிறோம் என்றால், அவர் சொல்லி சிபாரிசு செய்து வந்தது என்று அவர் அங்கே சொல்லி பெயர் எடுத்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால், உண்மையிலேயே இப்படிப்பட்ட இடங்கள் வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் இப்படிப்பட்ட நிலைகளை உருவாக்க வேண்டும்.

அதேபோல தஞ்சாவூர், மேல் தஞ்சை, கீழ் தஞ்சை சொல்லிவிட்டேன் இருந்தாலும் கீழ் தஞ்சை வேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குக் கரிகாலனை கொண்டு வா என்று சொல்கிறார்கள். கரிகாலன் வேஷத்தை நானே போட்டு நடித்து இருக்கிறேன். சினிமாவில் அல்ல: நாடகத்தில்! அப்போது நான் இருந்த கட்சிக்கு வேலை செய்தேன். பணம் சம்பாதிப்பதற்காகச் செய்தேன். இதை எல்லாம் மறந்துவிட்டு, எங்களுக்கு நினைவுபடுத்தும்போது கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது; மறந்து போகிறவர்கள் எங்களுக்கு நினைவுபடுத்தினால் கொஞ்சம் சங்கடமான விஷயம்! மக்களுக்கு

நினைவுபடுத்த வேண்டும் என்று விரும்பினால் நியாயமான முறையில் சொல்ல வேண்டும். நாகப்பட்டினத்தைச் சேர்ந்தவர் பேசாமல் இருக்கிறார்.

தயவு செய்து அவர்கள் பயப்பட வேண்டாமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக அப்படிச் சொல்லிப் பயத்தைப் போக்கிக் கொள்ள வேண்டாம். எங்களுக்குப் பயமில்லை.

நாகப்பட்டினத்தில் துறைமுகம் இருக்கிறது; ஓரளவிற்கு அது வளர்ந்த நகரம். ஆனால் அந்தக் கடலையும், அதையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது திருவாரூர் அதைவிட நாற்பது அடி உயரத்தில் இருக்கிறது என்பதை நான் மறந்துவிடக் கூடாது. இந்த மாதிரி நிலைமைகளில், பல்வேறு பிரச்சினைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து நாங்கள் முடிவெடுக்க வேண்டியுள்ளது. இவைகளையெல்லாம் வைத்துத்தான் கணக்கிட்டு செய்ய வேண்டியுள்ளது. திருவாரூரில் மக்கள் அதிகம் இருக்கின்றார்கள். ஆனால் வசதி இல்லை. அங்கே வளர்ச்சியை இன்னும் அதிகப்படுத்தினால், அது மத்தியப் பகுதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் நாங்கள் செய்கிறோமே தவிர, வேறு யாருக்காகவும் நாங்கள் செய்யவில்லை.

வேண்டுமென்றால், கருணாநிதி பிறந்த ஊரா, அங்கே வேண்டாம்; நாகப்பட்டினத்திற்குக் கொடுக்கலாம் என்றால், எங்களுக்கு மிக எளிது, உடனே செய்துவிடலாம். இந்த எண்ணத்தைச் சொல்லுகின்ற நண்பர்கள் என்னைச் சந்திக்க இருக்கின்றார்கள். அந்த நண்பர்களுக்கெல்லாம் இப்பொழுது கூறிக் கொள்கிறேன். நேரிலும் சொல்லியிருக்கிறேன். திருவாரூரைத் தேர்ந்தெடுத்தது வேறு எந்தக் காரணத்திற்காகவும் இல்லை; வரலாறு இருக்கின்றது. அது வேறு; ஆனால் நாகப்பட்டினத்திற்கு வரலாறு இல்லையா என்று கேட்டால், நிச்சயமாக இருக்கிறது. அதைத் தொட்டு அப்படியே போனோமானால், அது மிகப்பெரிய லெமூரியா கண்டத்திற்குச் செல்லும் அளவிற்கு இருக்கும். அதையெல்லாம் நாம் மறந்துவிடவில்லை. மாவட்டத்தைப் பிரித்தது தமிழ்நாட்டின் நன்மைகளை முன்னிட்டு. தமிழ்நாட்டிற்கு மிகப்பெரிய வசதிகளைப் பெறுவதற்காக! உரிமைகளைப் பெறுவதற்காக, எந்தக் காரணங்களைச் சொல்கிறார்களோ, அந்தக் காரணங்கள் நியாயமானவை என்பதை நிரூபித்துக் காட்டுகின்ற வகையில், பிரித்திருக்கிறோம். தலைவர்களின் பெயர்களை வைத்திருக்கிறோம்.

காமராஜரை எதிர்த்துப் பேசியவன் நான் அவரைப் பெருந்தலைவர் காமராஜர் என்று பாராட்டுகின்றவனும் நான்தான்.

முத்துராமலிங்கத் தேவர் இருக்கும்பொழுது, அண்ணாவை எதிர்த்தவர் அவர். ஆனால் முத்துராமலிங்கத் தேவர் என்பதை எண்ணிப்பார்க்கும் பொழுது, அவரும் சாதனைகளைச் செய்தவர் என்று எண்ணினால் அதற்குரிய தகுதியும், மதிப்பும், வரலாறும் இருக்கிறது. ஆகவே, அதையும் நாம் போற்றியாக வேண்டும். அண்ணா அவர்கள் இருக்கும்பொழுது, ஒரு காலத்தில் அவர்களுக்கு வழக்கை நடத்த வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டபொழுது ஒரு சிறிய தொகையைக் கொடுத்தவன் இந்த எம்.ஜி.இராமச்சந்திரன்; அதுவும் அண்ணாவின் அனுமதியோடுதான்.

அண்ணா அவர்களின் கொள்கை, கருத்து வேறுபாடு என்பதற்காக மனித எண்ணத்தில், மனித அன்பில் வேறுபாடு வரக்கூடாது என்பது! ஆதலால் நான் எப்பொழுதும் ஒன்றைப் பற்றி நிச்சயம் செய்யும்பொழுது, முடிவு செய்யும்பொழுது அந்த நடுநிலையோடு பார்க்கிறேனே தவிர, எனக்கு எது இலாபம், எதைச் சொன்னால் மக்கள் அதிகமாக எனக்கு ஆதரவு தருவார்கள் என்ற எண்ணத்தோடு, நான் எதையும் செய்வதில்லை என்பதை மாமன்ற உறுப்பினர்கள் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

இங்கே எதிர்கட்சித் தலைவரவர்கள் பேசும்பொழுது தொழிலே இல்லை என்று சொன்னார்கள். 31 இலட்சம் பேர்களுக்கு தொழில் இல்லாமலா வேலை கிடைத்தது?

உண்மையை நான் எப்பொழுதும் மறைக்கமாட்டேன். உண்மையிலேயே நான் எத்தனை முறை சில விஷயங்களுக்காகக் கடிதம் எழுதி இருக்கிறேன் என்பதைப் பார்த்தால் தெரியும். 1981, 1982, 1983 ஆகிய ஆண்டுகளில் கடிதங்கள் பல எழுதி இருக்கிறோம். 1984இல் ஒன்றாவது மாதத்திலே கூட சில விஷயங்களைப் பற்றி கடிதம் எழுதி இருக்கிறோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது 18 ஆயிரம் சிறுதொழில்கள் என்று இருந்தன. இப்போது 40 ஆயிரம் ஆக மாறி இருக்கிறது. எனவே 22 ஆயிரம் சிறு தொழில்களை அதிகப்படியாக ஏற்படுத்தி இருக்கிறோம். பெரிய தொழில்கள் எத்தனை என்றால் 27–க்கு மேல் வளர்ந்திருக்கின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புள்ளி விவரம் இதிலே இல்லை என்று சொன்னார்கள். இப்போதே சொல்கிறார்கள். இவ்வளவு விளக்கம் எதற்கு என்று, அதாவது, இதுவே தேர்தல் அறிக்கைபோல இருக்கின்றது என்று சொல்கிறார்கள். ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எத்தனை ரூபாய் வரவு வந்திருக்கின்றது என்ற விவரங்களைக் கேட்டார்கள். அதற்குத்தான் பட்ஜெட் வரப்போகின்றதே, பட்ஜெட்டிலே அந்த விளக்கங்கள் எல்லாம் வரும். அப்போது கேளுங்கள், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். வேண்டும் என்றால் நானும் பதில் சொல்கிறேன். அப்படிப்பட்ட தேவை வராது என்று கருதுகிறேன். வந்தால் சொல்கிறேன். ஆகவே அந்த விவரங்களையெல்லாம் சொல்வதற்காகத்தான் பட்ஜெட் இருக்கின்றது. அதிலே எவ்வளவு பணம் வருகின்றது, எவ்வளவு செலவு என்பதைப் பற்றி எல்லாம் தெரிந்துகொள்ள முடியும்!

அடுத்து, ஒவர் 'ட்ராஃப்ட்' பற்றிச் சொன்னார்கள். அதாவது அதிகப் பற்று பற்றிச் சொன்னார்கள். அதிகப்பற்றினை இந்த அரசு ஏற்படுத்தி வருகிறது என்று சொல்லும்போது நல்லவேளையாக அதற்கு விளக்கமும் சொன்னார்கள். அவர்களுடைய நண்பர்களுக்கு அவ்வாறு விளக்கம் சொன்னதற்காக நன்றி! வறுமை வந்தது என்று சொல்லி, இப்படி வாங்கக் கூடிய நிலைமை வந்திருக்கக் கூடாது என்று சொல்லி இப்படி கேட்டார்கள் என்று சொல்லி, பின்னர் விளக்கமும் சொன்னார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வறுமை வந்தால் நாங்கள் யாரிடம் போய் கேட்பது? இங்கே இருந்து

வசூல் செய்து கொண்டுபோய் வைத்திருப்பவர்களிடத்தில் தானே கேட்கவேண்டும்; வேறு யாரிடம் போய் கேட்பது ?

இங்கே பேசுகின்றபோது கேட்டார்கள், "ஏன் கெஞ்சுகிறீர்கள் ?" என்று எப்படிக் கேட்க வேண்டுமோ அப்படித்தான் கேட்க வேண்டும். "ஆடிக் கறக்க வேண்டியதை ஆடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்க வேண்டியதை பாடிக் கறக்க வேண்டும்" ஆடிக் கறக்க வேண்டியதை ஆடிக் கறக்க வேண்டும்; அனுபவம் பேசுகின்றது. எங்களைப் பொறுத்தவரையில், அதாவது, அண்ணாவின் வழியினைப் பொறுத்தவரையில், எல்லாவற்றையுமே போராடித்தான் பெறவேண்டும் என்பதல்ல. நியாயமான உரிமைகளை எடுத்துச்சொல்லி, நிலைமைகளை எடுத்துச்சொல்லி, விவாதங்கள், அதற்குரிய விளக்கங்கள் ஆகியவற்றை எடுத்து வைக்க வேண்டும். இவ்வளவு முயற்சித்ததற்குப் பிறகும் வேறு வழியே இல்லை என்றால் அதற்காகப் போராட வேண்டும்! அப்படிப் போராட முனைந்துவிட்டால், அது இறுதிப் போராக இருக்க வேண்டும் என்பதும் தான் எங்களுடைய கொள்கை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

இதேநேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்கிறேன். பஞ்சாபிலே எப்படி இருக்கின்றது; ஹரியானாவிலே நிலைமை எந்த அளவுக்குப் போய் இருக்கின்றது என்றெல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அந்த மாதிரி நிலைமை தமிழகத்தில் வராமல் இருக்க வேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம். இத்தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் அப்படித்தான் விரும்புகின்றது என்பதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்கிறேன். அதனால்தான், எவ்வளவு துன்பங்கள் ஏற்பட்டாலும் கூட, அதற்குரிய நியாயமான காரணத்தைச் கண்டுபிடித்துக் கொண்டு அடக்கமாக இருக்கிறார்களே தவிர, விவரம் தெரியாதவர்கள் அல்ல தமிழர்கள். அவர்கள் பொறுத்து இருக்கிறார்கள். இருக்கின்ற நிலைமைகளை உணர்ந்து அதைப்பற்றி உள்ளத்திலேயே விவாதித்து, வேறு என்ன செய்வது என்று எண்ணிப் பொறுத்துக்கொள்கிறார்கள்.

அடுத்து இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். யார் திட்டம் போடுகிறார்களோ, யார் யோசனை சொல்கிறார்களோ அவர்களுடைய பெயர் வெளியே தெரிவதில்லை. திரு. திவான் முகமது அவர்கள் முஸ்லிம் என்பதற்காக அவர்களை இன்னொரு முஸ்லீம் பாராட்டினார் என்று நான் சொல்லமாட்டேன். அந்த அதிகாரி நல்லவர்தான். ஆனால் இந்த கடலோரப் பகுதியிலே எல்லாம் கிணறு வெட்டச் சொன்னவன் இந்த எம்.ஜி.இராமச்சந்திரன் தான். நான்தான் அந்தத் திட்டத்தைக் கொடுத்தேன். ஏரிகள் எல்லாம் காய்கின்றன என்று தெரிந்தவுடன், பெரிய அளவிலே அதாவது இராட்சஸக் கிணறு என்று சொல்வார்களே ! அவற்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்றும், அந்த வேலைகளைப் பொறுத்தவரையில், வெள்ளம் வருகின்றதா, மழை பெய்கின்றதா என்றெல்லாம் கவலைப்படாமல், உடனடியாக அவற்றை ஆரம்பிக்க வேண்டும் என்றும் அதற்கான திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்றும் சொல்லி உத்தரவு போடச்சொன்னவன் இந்த எம்.ஜி.இராமச்சந்திரன் தான் என்பதைத்

தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அக்கறை இல்லாமல் இல்லை. மாநகராட்சியைப் பற்றி அக்கறை இல்லாமல் இல்லை, அலட்சியமும் இல்லை, நாங்கள் அக்கறை கொண்டுள்ளதால் அதை, எப்படிச் செயல்படுத்துவது, ஏன் செயல்படுத்தவில்லை என்பது தான் குறை என்று சொல்லி வருகிறார்கள். செயல்படுத்துவதற்கு அவர்கள் ஒரு வழி சொன்னார்கள். துப்பரவுத் தொழிலாளர்களை அதிகமாகச் சேர்த்து வைத்துச் செய்தால் எவ்வளவோ நல்லது செய்யலாம் என்றார். ஏன் செய்யலாமே ? அவர்களுக்கு வேலையும் கிடைக்கும். கொடுத்தால் என்ன ? ஏறத்தாழ 32 கோடி ரூபாய் வருமானம் மாநகராட்சிக்கு ரூ.19 கோடி சம்பளம் மிச்சமிருக்கிற 3 கோடியை வைத்துதான், இவ்வளவு பெரிய – மாநிலம் என்று அழைக்கும் அளவிற்கு உள்ளன.

மாநகராட்சியை இவ்வளவு மாபெரும் பணிகளைச் செய்ய வைக்க முயன்று கொண்டிருக்கிறது ஒரு அரசு. அந்த மாநகராட்சியை நடத்துகின்ற அதிகாரிகள் இந்த 3 கோடியில் எவ்வளவு வசதிகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு அரசு கடன் கொடுக்கிறது. அரசு கடன் கொடுத்து, அதை எங்கே இருந்து திரும்பி வாங்குவது என்பது வேறு கேள்வி. இதைச் செய்து கொடுக்கின்றோம். வரியை அதிகப்படுத்தினால் – வீட்டு வரியை அதிகப்படுத்தி விட்டார்கள் என்ற பிரச்சினையை முதலிலே வைக்கின்றவர்கள் இதுபோன்ற யோசனையைச் சொல்கின்றவர்கள்தான் ! வரியை உயர்த்தாதே, ஆனால் வசதியை மட்டும் செய்துக் கொடு என்கிறார்கள்.

கொள்கையைச் சொல்கிறேன். சில விஷயங்களில் கண்ணால் பார்ப்பதை விட, கருத்தால் அதை அளந்து பார்ப்பது நல்லது என்று வேண்டி கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநகராட்சியில் இப்பொழுது சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி, விளக்குகள் இல்லாத இடங்களுக்கு விளக்குகள் பொருத்திடும் பணி, வேறு மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள், இவற்றையெல்லாம் சரிவர நிறைவேற்ற வேண்டுமானால், சுமார் ரூ.1,000 கோடிக்கு மேல் தேவைப்படும் என்பதை இங்கே நான் சொல்கிறேன், அதிர்ச்சி அடையாதீர்கள் ! முன்னால் ரூ.500 கோடியிலிருந்து, ரூ.250 கோடியாக ஆகி, இப்பொழுது பெரு நகரமாக இருக்கிற காரணத்தால், அதைச் சீர்படுத்த வேண்டுமென்றால், பல கட்டடங்களை இடித்து, அவர்களுக்கு வேறு கட்டடங்கள், வசதியாக நாம் கட்டிக் கொடுக்க வேண்டும். பாதையை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அண்ணாசாலையை ஒரு வழிப்பாதையாக ஆக்க வேண்டுமென்றால், இன்னொரு இடத்தை மறுவழிப் பாதையாக ஆக்க வேண்டும். அதற்கு இடம் இல்லை. அது சுற்றி வர வேண்டும். அதற்கு எவ்வளவு செலவு ஆகும் ? என்பதை எல்லாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் திட்டம் போட்டு, சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நான் உத்தரவு போட்டிருக்கிறேன், இங்கே எதிர்க் கட்சித் தலைவர் ஹாஜா செரீப் அவர்கள் சொன்னார்களே, அதற்குக் கொஞ்சம் முன்னால் போகிறேன், பகலிலே துப்புரவு செய்வதை, இரவிலே துப்புரவு செய்ய வேண்டுமென்று உத்தரவை நான் சொல்லி, அவர்கள் அதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும். தமிழ்நாடு முழுவதுமுள்ள மாநகராட்சி இருக்கிற – மாநகராட்சி ஆக்கப்படுகின்ற, நகராட்சிகள் – முனிசிபாலிட்டிகள் என்று அழைக்கப்படுகின்ற அந்த இடங்களிலே எல்லாம் அதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றோம். வெளிநாடுகளிலே பாலித்தீன் பைகளிலே கொண்டு போய் குறிப்பிட்ட இடத்தில் வெளியே போடுகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். அங்கே காகிதம் கிழித்துப் போட்டால், எச்சில் துப்பினால் 500 டாலர் அபராதம். இங்கே 5 பைசா கூடக் கேட்கக் கூடாது. உடனே மறியல், உடனே போராட்டம், உடனே பஸ்ஸோ, லாரியோ, ஆட்டோ ரிக்ஷாவோ எதுவாக இருந்தாலும் வண்டியை நிறுத்தி விடுகிறார்கள், அதை அதிகாரிகள், போலீஸ்காரர்கள் போய் பார்க்க வேண்டும், எடுக்க வேண்டும். எடுக்கும்போது தகராறு வந்தால் போலீஸ்காரர்கள் அடி வாங்க வேண்டும், திருப்பி அடிக்கக் கூடாது. இதற்கு இயந்திரத்தினால் ஆன காவலர்களை வைத்தால்தான் சௌகரியமாக இருக்குமே தவிர, மனிதனைக் காவலர்களாக்கி, நீ அடி வாங்கிக் கொள், ஆனால், அடிக்காதே என்று தத்துவம் எங்கும் நிறைவேறாது. சரிப்படாது என்பதை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். காவலர்களுக்காகப் பரிந்து பேசுகிறேன் என்பது அல்ல.

அண்மையிலே ஒரு தகராறு மதுரையிலே நடந்தது – கேட்கின்றார்கள். அதிலே அடிபட்ட மாணவர்கள் எத்தனை பேர்கள் ? அடிபட்ட காவலர்கள் எத்தனை பேர்கள் என்றால், காவலர்களுடைய எண்ணிக்கை அதிகம். ஆனால், அடிப்பட்டவர்கள் நிலைமை என்னவென்றால் இவர்களுக்கு அதிகமான அடி இருக்கிறது என்று அங்கே சொல்கிறார்கள். நான் இன்னும் அங்கே போகவில்லை. நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்காக நீதிவிசாரணை தேவை. நீதி விசாரணைக்கு மாவட்ட நீதிபதியை நியமிக்கலாம் என்று சொன்னால் உயர்நீதிமன்ற நீதிபதி வேண்டுமென்று சொல்கிறார்கள். சரி அப்படி வைத்துக் கொள்வோம் என்று நான் தலைமை நீதிபதி அவர்களைக் கேட்டேன். 19 நீதிபதிகள் சிட்டிங் ஜட்ஜ்கள் இருக்கிறார்கள்; அவர்களில் யாரையும் இப்போது கொடுக்க முடியாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு என்ன செய்யலாம் என்று நான் கேட்டேன். ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிக்கலாம் என்று சொன்னார்கள். ஓய்வு பெற்ற நீதிபதியை நான் நியமித்தால், உடனே சொல்வார்கள் நான் நியமித்த நீதிபதி எம்.ஜி.ஆர். பையிலே இருக்கிற நீதிபதி, எம்.ஜி.ஆர். பாக்கெட்டுக்குள்ளே இருக்கிற நீதிபதி, எம்.ஜி.ஆர். கைக்குள்ளே இருக்கிற நீதிபதி என்று ! உங்களிடமே கேட்கலாமா என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் ஒரு பத்து பேர், 20 பேரைச் சொன்னால் தான் ஆபத்திலே மாட்டிக்கொள்வேன். அது வரக்கூடாது.

ஓய்வு பெற்ற நீதிபதியை நியமிப்பதா, இல்லை மாவட்ட நீதிபதியை நியமிப்பதா என்ற நிலையில்தான் இப்போது இருக்கிறோம். அதற்கு எங்களைப் பொறுத்தவரையில் மாவட்ட நீதிபதியை, அவர் அங்கே வழக்கு நடத்துபவர் – நியமிக்கலாம்; இல்லை, வேண்டாம் என்றால் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி யாராவது இருந்தால் அவர்களை நியமிக்கலாம். யாரையாவது சொல்லப் போகிறீர்களா ? இல்லை நாங்களே

நியமிக்கலாமா ? நானே சொல்லி விடட்டுமா ? சொல்வதை யோசனைசெய்து சொல்ல வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை செய்கிறோம் என்று சொன்னார்கள். சரி மாவட்ட நீதிபதி விசாரணை செய்யலாம். பிரச்சினை தீர்ந்துவிட்டது. நேற்று சிம்சன் பிரச்சினை தீர்ந்தது போல இந்தப் பிரச்சினை இன்றைக்குத் தீர்ந்தது.

எங்கே தேர்தல் என்று கேட்டார்கள்; முதலில் படிப்பதற்கு முன்னால் நீங்கள் படித்திருந்தால் வெளியே போயிருக்க மாட்டீர்கள்.

தேர்தலைப் பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியும்; இந்திரா காந்தி தோற்க முடியுமானால், அண்ணா தோற்க முடியுமானால், காமராஜர் தோற்க முடியுமானால், ஏன் இராமச்சந்திரன் தோற்க முடியாது ? என்னுடைய எண்ணத்தைச் சொல்கிறேன். ஆகவே வெற்றி, தோல்வி என்பது நமது கையில் இல்லை. தன்னை நம்பிக்கொண்டு ஒரு குஸ்திக்கோ, ஒரு குத்துச் சண்டைக்கோ போகிறவன் கூட, முடிவிலே யாருக்கு வெற்றி என்பதை அவனால் நிர்ணயிக்க முடியவில்லை. சந்தர்ப்பம் சூழ்நிலை அதை நிர்ணயிக்கிறது. அதேபோல மக்கள் தீர்ப்பு இங்கே யாருக்கு என்பதை நாமே பேசிக்கொண்டு, நாங்கள்தான் வெல்வோம், நாங்கள்தான் வெல்வோம் என்று சொன்னால் அதை நான் எப்போதும் சொல்லத் தயாராகவில்லை.

சென்னை மாநகராட்சியில் உள்ள மொத்த துப்புரவுப் பணியாளர்கள் 6,500 அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ.250–300. ஒருவருக்குச் சராசரி சம்பளம் ரூ.554 நீங்களே செல்லுங்கள், தண்ணீரில் இறங்குகிறவன், சராசரி அளவை பார்த்துக் கொண்டு இறங்கினால் என்ன முடிவு ஏற்படும் அப்படிப்பட்ட சராசரிதான் இதுவும். மொத்த செலவு 4 கோடி ரூபாய் என்றால், இன்னும் ஒரு கோடிதானே செலவாகும் என்கிறார்கள். நான் இன்னொன்றைச் சொல்கிறேன். இங்கே இருப்பவர்கள் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். இந்த 6,500 நபர்களும் எல்லா நாட்களிலும் வேலை செய்வது இல்லை. ஏறக்குறைய 150 பேர்கள் விடுமுறையில் இருக்கிறார்கள். 3,000–4,000 பேர்கள் தான் வேலை செய்கிறார்கள். இது உண்மை. ஒருவர் லீவில் போய் திரும்பி வந்தால், மற்றொருவர் லீவில் சென்று விடுகிறார். ஆகவே அப்படி சராசரி வேலைக்கு வருபவர்களை பார்த்தால் 5,000 அல்லது 4,500 பேர்கள்தான் இருக்கும். அவர்களை நான் குறை சொல்லவில்லை. அவர்களுக்கு எவ்வளவோ சங்கடங்கள்; துன்பங்கள் இருக்கின்றன. அவர்கள் செய்கின்ற வேலைக்கு உரிய கைஉறைகள் கூட இல்லை. நாங்கள் எழுதியிருக்கிறோம். திட்டம் தீட்டி இருக்கிறோம். பணத்திற்காகக் காத்து இருக்கிறோம். நான் ரஷ்யாவில் எதைப் பார்த்தேனோ, அந்தத் துப்புரவுப் பணியாளர்கள் எப்படி காலுறைகளை, கையுறைகளை போட்டுக் கொண்டு, நல்ல வெள்ளை ஆடைகளை அணிந்து கொண்டு, அழுக்காகாமல் அவர்களுடைய கையிலும் அழுக்குப்படாமல் அந்தப் பணியை இயந்திரக் கருவிகளைக் கொண்டு செய்கிறார்களோ, அது போன்று செய்ய வேண்டும் என்று எனக்குப் பேராசை இருக்கிறது.

மருத்துவத்தைப் பற்றிச் சொன்னார்கள். நான் சமீபத்தில் கேள்விப்பட்டேன். ஒரு குழந்தை ஒரு இயந்திரத்தை வேடிக்கைப் பார்க்கச் சென்ற போது இரண்டு கால்களும் வெட்டப்பட்டுவிட்டது. பக்கத்தில் இருந்த மருத்துவ மனைக்குக் கொண்டு போனார்கள். அங்கே வசதி இல்லை என்று சொல்லப்பட்டது. பின்னர் அதிக வசதியுள்ள மருத்துவமனைக்குப் போனார்கள். அங்கேயும் முடியாது என்று சொன்னார்கள். அது உடனே பேரரசுக்குத் தெரிந்து, மேலிடத்திற்குச் சென்று அதற்காக ஆகாய விமானம் அனுப்பி, அந்தக் குழந்தையின் கால்களைத் தேடி எடுத்து, அதற்காக மருத்துவ சிகிச்சை செய்து, அந்தக் குழந்தை இன்றைக்கு நன்றாக இருக்கிறது என்று கேள்விப்படுகிற போது, அந்த நிலை இந்தியாவுக்கு வரவேண்டும். தமிழ்நாட்டிற்கு வர வேண்டும் என்று விரும்புகிறேன். அதைச் செய்வதற்கு ஆசை இருக்கிறது!

இதைப் போன்று சில காரியங்களைப் பற்றி நான் சொல்கிற போது இரட்டை ஆட்சி என்று சொல்கிறார்கள். அதற்காக வெளியே பேசுகிறார்கள். இங்கே பேசினார்களா இல்லையா தெரியாது. நான் வேறு வேலையில் இருந்ததால் கவனிக்க முடியவில்லை. என்னுடைய நண்பர் அல்லவா அவர் என்னைப் பற்றி பேசியதில் எனக்கு மகிழ்ச்சி. அதற்கு பதில் சொல்வதில் எனக்கும் மகிழ்ச்சி. இரட்டை ஆட்சி எப்படி ஏற்படுகிறது? நாம் இங்கேயும் மருத்துவத்துறை வைத்து இருக்கிறோம். மத்தியிலும் மருத்துவத்துறை வைத்து இருக்கிறார்கள். நாம் இங்கே திட்டத்தைத் தீட்டி நடத்திக்கொண்டு வருகிறோம். அவர்கள் இன்னொரு திட்டத்தை அங்கேயிருந்து சொல்கிறார்கள். ஆகவே, திட்டம் தீட்டி அனுப்புவது எப்படி இருக்கிறது என்றால், நான் முன்னாலே சொன்னேனே, வாய்க்கால் வழியே போன ஒருவன் இந்த வாய்க்காலில் சராசரி ஆழம் எத்தனை அடி என்று கேட்டானாம். 3 அடி என்றார்கள். அவன் உடனே இறங்கிப்போனால், நடுவில் போகிறபோது 13 அடி இருந்ததாம். என்ன இப்படி இருக்கிறதே என்று கேட்டபோது, ஒரு இடத்தில் விரல் நனையும், ஒரு இடத்தில் கணுக்கால் நனையும், இதையெல்லாம் கணக்குப்போட்டு சராசரி பார்த்தால் 3 அடி வரும் என்று சொன்னார்களாம். நாம் எவ்வளவு ஆழம் எங்கே இருக்கிறது. எந்த இடத்தில் பாதுகாப்புத் தேவை என்று பார்த்துச் சொல்லுகிறோம். அவர்கள் சராசரி கணக்குப் போட்டுச் சொல்கிறார்கள். இதைத்தான் நான் இரட்டை ஆட்சி என்று சொன்னேன். இதுபோன்று வரும்போது தேவையில்லாமல் நாட்கள் வீணாகிவிடுகின்றன. இவைகள் எல்லாம் நீக்கப்பட வேண்டும். இதற்கு ஒரு முடிவான கருத்து வரவேண்டும் என்பதை நாம் யோசிக்க வேண்டும் என்று சொல்கிறேன்.

மாநில சுயாட்சி பற்றி இந்த அறிக்கையில் ஒன்றுமே சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். மாநில சுயாட்சி என்பதற்கு மாநிலத்திற்கு அதிக அதிகாரம் என்ற வார்த்தையை நாம் பயன்படுத்துகிறோம். மாநிலத்திற்கு முக்கியமான தேவை என்ன, என்பதை யோசித்துப் பார்த்து, நியாயமான அதிகாரங்கள் எவ்வளவு தேவையோ, அவ்வளவையும் பெறவேண்டும் என்பது தான், இந்த அரசின், எங்கள் ஆட்சியின் உயிர்மூச்சுக் கொள்கை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும். மாகாண சுயாட்சித் திட்டம் 1935இல் அறிமுகப்படுத்தப்பட்ட போது 93ஆவது சரத்தில், கவர்னருக்கு விசேஷ அதிகாரம் இருந்தது. எந்த நேரத்திலும் அமைச்சரவையை 'டிஸ்மிஸ்' செய்யலாம் என்று இருந்தது. அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி இரண்டு வருஷத்திற்கு மேல் பதவி ஏற்றுக்கொள்ளாமல் இருந்தார். பிறகு இராஜாஜி அவர்களுடைய யோசனைப்படி அன்றாடப் பணிகளில், அன்றாட உரிமைகளில் கவர்னர் தலையிடவில்லை என்று உத்தரவாதம் கொடுத்தப்பிறகுதான், 1937இல் அவர் பதவிக்கு வந்தார். இதை நினைத்துப் பார்த்தால் இதைப் போன்ற நிலைமை இருக்கக் கூடாது என்பதை நான் வெளியே இருந்தோ, உள்ளே இருந்தோ, கவனித்துப் பார்த்து அனுபவித்தவன் என்ற நிலையில் சொல்கிறேன்.

எந்தக் காரியத்தை முன்னிட்டும் மாநிலத்திற்கு அதிக உரிமை வேண்டும். பொருளாதாரம் அதாவது எக்னாமிக்ஸ் என்கிறார்களே, அந்த வகையில், அதிக உரிமை வேண்டும். எதற்கெடுத்தாலும், அங்கே போய் கேட்க வேண்டுமென்றால் போய் கேட்கத்தான் வேண்டுமென்று சொன்னார்கள், இங்கே இருந்து கடிதம் எழுதினால் போதாது, அங்கே போய் இருந்து, பேசி வரவேண்டும் என்று சொன்னார்கள். கடிதத்திற்கு இல்லாத மதிப்பு நேரில் போய் பார்த்து காக்காய் பிடித்தால் கிடைக்கும் என்கிறார்களா? நேரில் போய் பேச வேண்டுமா? கடிதம் எழுதினால் போதாதா? எங்கள் தேவை என்ன? என்று கடிதம் எழுதுகிறோம். ஒன்றல்ல; இரண்டல்ல; 18 முறை எழுதுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்! அதன் பிறகு, இங்கே இருந்து ஒரு அமைச்சர் போய், அங்கே சொல்லி, அது வரவேண்டுமா? அவர்களே கொடுக்க வேண்டாமா? அல்லது, உங்கள் அமைச்சர்களிலே ஒருவரை அனுப்பி வையுங்கள்; இது சம்பந்தமாகப் பேசுகிறோம் என்று கேட்டால், அனுப்பி வைக்கிறோம், முடிந்துவிடுகிறது.

இந்த அதிகப்பற்றைப் பற்றிப் பேசும்போது அதுதான் நிலைமை, நிதியமைச்சரை அனுப்பி, அவர் போய் பேசிய பின்னால் முடிந்துவிட்டது. எந்த நேரத்திலும் மத்திய அரசோடு முரண்பாடாக இருக்க வேண்டுமென்ற கொள்கை இல்லை. ஆனால், அடிமையாக இருக்க வேண்டுமென்ற நிலை இருந்தால் ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை. தமிழ் நாட்டுக்காக சுமூகமான முறையில், எவ்வளவு தூரம் விட்டுக் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு விட்டுக்கொடுத்து நல்லதைச் செய்ய வேண்டுமென்று நினைக்கிறோம்; அதைச் செய்கிறோம்!

இப்போது சில திட்டங்களை மத்திய அரசிலிருந்து அனுப்புகிறார்கள். அவை உண்மையிலேயே நாம் எடுக்கிற நடவடிக்கைகளுக்கு மிகப்பெரும் உதவியாக அமைகின்றன. அண்மையில் ஒரு திட்டம் வந்திருக்கிறது. படித்து வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கு கொடுக்கின்ற உதவித் தொகை, இந்தியாவிலேயே அதிகமாக குறுகிய காலத்தில் கொடுக்கப்பட்ட இடம் தமிழ்நாடு தான் என்பதை, நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்!

இது எப்படி முடிந்தது என்பதைப் பார்ப்பதற்காக ஒரு அமைச்சர் டெல்லியில் இருந்து வந்து, இங்கே குழுவைக் கூட்டி, அதிகாரிகளோடு பேசித் தெரிந்து கொண்டு போயிருக்கிறார் என்றால் நாம் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்து சரிவர அதிகாரிகளைப் பயன்படுத்துகிறோம். அதிகாரிகள் எப்படி பயன்படுகிறார்கள். எப்படி திறமையாகச் செயல்படுகிறார்கள் என்பதை எல்லோரும் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தியாவிலேயே தலைசிறந்த நிர்வாகிகள் நம்முடைய அதிகாரிகள் என்பதை இங்கே சொல்வதில் நான் பெருமைப்படுகிறேன்.

போலீஸ் இலாகாவைப் பொறுத்தமட்டில் எல்லோருக்கும், கருத்து வேறுபாடு இருக்கும். நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கும்போதும் சொன்னார்கள். நான் வந்தவுடனே ஒரு வாய்பாடான அறிக்கை வாசித்தேன். அது எல்லோருக்கும் நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். எங்களை ஆட்சியைவிட்டு விலக்கிய பிறகு, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து, –14, 15 கட்சிகள் கூட்டணி என்று சொல்கிறார்களே, அந்தமாதிரி அப்போது நாங்கள்–ஊர்வலம் நடத்தினோம். தலையிலே அடி, அடியென்றால் அடி! சொல்ல முடியாத அடி, மாவீரன் முத்து ஓடினார். விஸ்வநாதன் நம் தம்பி ஓடினார். மாவீரன் ஒருவரைக் கூட காணோம்! முதுகிலே எல்லாம் அடித்தார்கள். நாங்கள் போய்க் கொண்டிருந்தோம். இதோ பாருங்கள், மண்டையை உடைத்துவிட்டார்கள் என்று ஒருவர் வந்தார். போய் கேட்போம் என்றேன். அண்ணன் கல்யாணசுந்தரம் சொன்னார். இப்போது போனால் விபரீதம், நம் காவல் துறைக்குச் சொல்லிவிட்டுப் போவோம் என்று சொன்னார். சரி என்றேன் அங்கே, நாங்கள் குற்றச்சாட்டைச் சொன்னோம். எனக்கு எழுதிக் கொடுத்தார்கள் அதற்கு நேர் மாறாக நான் அதை இங்கே வாசித்தேன் வாசித்த பிறகு இது அதிகாரிகள் கொடுத்த அறிக்கை என்னுடைய அறிக்கை வேறு என்னுடைய எண்ணம் வேறு, முதலமைச்சராக இருக்கிற காரணத்தால் அதை இங்கே படிக்கிறேன் என்று சொன்னேன் நான் மறுக்கவில்லை.

அதைத்தான் சொன்னேன். என்னுடைய கருத்து வேறு என்று. நான் ஆட்சியிலே இல்லாதபோது தயாரிக்கப்பட்ட அறிக்கை இங்கே ரெக்கார்டு ஆகிவிட்டது. அதை நான் வந்தவுடன் மறைக்க வேண்டுமென்றால், அதை இராமச்சந்திரன் செய்ய முடியாது. அனுபவம் இருந்தாலும், அது ரெக்கார்டு ஆகி, அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்போது, அதைப் படித்தாக வேண்டும். ஆனால் என்னுடைய அனுபவம், எண்ணம் வேறு அதைச் சொல்லிவிட்டேன். அதையும் மறைக்கத் தயாராக இல்லை. காவலர்கள் செய்தாலும் மற்றவர்கள் செய்தாலும் எனக்கு நேரடியாக கருத்துக்கள் சொல்லப்பட்டிருந்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அதை நான் ஆதரித்துச் சொன்னாலும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். ஓட்டு போடுவதற்காகச் சொல்லவில்லை. மக்கள் எல்லோரும் என்னை நம்பவேண்டும். நீங்கள் எனக்கு ஓட்டுப் போடமாட்டீர்கள். எதிர்த்துத் தான் ஓட்டுப் போடுவீர்கள். ஆனால் இன்னும் கொஞ்ச நாள் போனால் நாம் ஒன்றாக இருப்போம். அது என்னுடைய நம்பிக்கை. நியாயம் எந்தப் பக்கம் இருக்கிறதோ அந்தப் பக்கம் நீங்கள் வந்து பேசுவீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

அதுமட்டுமல்ல இப்போது தவறு எது. நியாயம் எது என்று எல்லோருக்கும் தெரியும். நியாயம் தெரிந்தால், நியாயத்திற்கு வந்துவிடுவார்கள். நாங்கள் எப்படி நியாயத்தைத் தெரிந்து ஒன்றாக இருக்கிறோமோ அப்படி இருப்பார்கள் நாட்டின் நலன்தான் முக்கியம். நாட்டின் நலனை எண்ணி, உண்மையிலேயே சொல்கிறேன். இப்போதுதான் என்னுடைய உண்மையான நண்பர் மதிப்பிற்குரிய மாண்புமிகு நெடுமாறன் கொஞ்சம் கொஞ்சமாகப் புரிந்துகொண்டு வருகிறார் என்று நினைக்கிறேன். என்னைப் பற்றி புரிந்து கொள்வது எல்லோருக்கும் தாமதம் ஆகும். புரிந்தவர்கள் என்னை விட்டுப் போக மாட்டார்கள். அது மாதிரிதான் இருந்தோம். இனிமேலும் அப்படித்தான் இருப்போம். இனி எங்கும் போக முடியாது. உங்களுடைய வாதம் எல்லாம் என்னுடைய கொள்கையிலே நியாயம் இருக்கிறதா என்று சிந்தியுங்கள், நடைமுறையிலே குறை இருந்தால், கண்டியுங்கள் திருத்திக்கொள்வதில் தப்பு இல்லை. ஆகவே, சொல்கிறார்கள் என்பதற்காக, எதிரி என்று அர்த்தம் அல்ல. வேறு வகையிலே கற்பனை செய்கிறவர்கள் தான் எதிரிகளே தவிர, நீங்கள் எதிர்க்கட்சி, நாங்கள் ஆளும் கட்சி, நாங்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், ஆளுங்கட்சி, எனவே இதில் கருத்து வேறுபாடு இல்லை. அந்த வகையில், இந்த அறிக்கையை சமர்ப்பித்து இருக்கிறோம். இதிலே ஒவ்வொருவருக்கும் விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், மறுபடியும் சொல்கிறேன். மிகவும் காலதாமதம் ஆகும். கொள்கை அளவிலே தேர்தல் இல்லாமல் இருக்கக் கூடாது. 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் வந்தே தீரவேண்டும்.

அதிகாரிகள் தங்கள் சொந்த ஊர்களிலே இருக்கக் கூடிய நிலைமைகள் இருக்கக் கூடாது என்பது, இந்த அரசின் கொள்கை. காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகளாக இருந்தாலும் சரி, வேறு அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அவர்கள் தங்கள் சொந்த ஊர்களிலே இருக்கும் நிலைமை இருந்தால், அவர்களுக்கு சில கஷ்ட, நஷ்டங்கள் வரும். அவர்கள் வேண்டாத குற்றச்சாட்டுகளுக்கு ஆளாவார்கள். எனவே, அவர்கள் வேறு இடங்களில் இருந்தால் சரியாக இருக்கும். ஆனால் கணவன் ஒரு இடம், மனைவி ஒரு இடம் என்று பிரித்து துன்புறுத்துவது இந்த ஆட்சியின் கொள்கையன்று! எங்கு இருந்தாலும் மாற்றி, ஒருமித்த இடத்தில் இருப்பதற்கான வசதி செய்து கொடுக்கப்படும்.

அதிகாரிகளிடம் நான் கலந்துபேசி கணவன், மனைவி பணி நிமித்தம் வெவ்வேறு இடங்களில் பணிபுரிந்து பிரிந்து, கடமையாற்ற வேண்டிய சிரமத்தைக் குறைக்கும் விதத்தில், பெண்களை அந்த இடத்திற்கு மாற்றவோ அல்லது ஆண்களை இங்கே மாற்றவோ ஆவன செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். ஆகவே, இந்த ஆளுநர் உரையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், திருத்தங்களை எல்லாம் வாபஸ் பெற்றுக்கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

21.02.1984 அன்று, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து ஆற்றிய உரை.

காவலர்களின் பாதுகாப்பு சமூகத்தின் பாதுகாப்பு!

காவல்துறை தீயணைப்பு பணிகள், மதுவிலக்கு ஆயத் தீர்வைத்துறை ஆகியவை சம்பந்தமான மானியக் கோரிக்கைகள் மீது சில நாட்கள், இடைவெளிக்கு முன்பும், இடைவெளிக்கு பின்பும் – 22 பேர்கள் என்று கருதுகிறேன் – பேசியிருக்கிறார்கள். இந்த 22 மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கட்சியினுடைய கொள்கையையும், நாட்டு மக்களுடைய நன்மையையும், அவர்களுடைய கோணத்திலேயிருந்து பார்த்து, அவரவர்கள் எந்தெந்த நன்மைகளை மக்களுக்குத் தரவேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்த வகையில், கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

ஒவ்வொருவர் உள்ளத்திலும், சில சமயம் ஒரே கட்சியில் இருப்பவர்களானாலும் கூட, ஒரே கொள்கைக்குச் சொந்தக்காரர்களாக இருந்தாலும்கூட, ஒரு பிரச்சினையை அணுகும் முறையில், ஒரு கோணத்திலேயிருந்து பார்ப்பார்களேயானால், மற்றவர்களுடைய வழிமுறைகள் சரியல்ல என்றோ, குறைபாடுகள் உள்ளதாகவோ தோன்றுவதற்கு இடம் உண்டு.ஏனெனில், ஒவ்வொரு மனிதனும்தான் சிந்திக்கும்போது தன்னுடைய அறிவு, ஆற்றல், திறமை அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, தனக்கென்றே உள்ள விசாலமான அந்த நோக்கத்தோடு, அந்தப் பிரச்சினையைப் பற்றி சிந்தித்து ஒரு முடிவு எடுக்கிறான். அந்த முடிவு அவனுடைய உள்ளத்தில், தனி உணர்வோடும் அல்லது தன் உணர்வோடும் நுழைந்து வெளிப்படுகையில் ஒருமுகப்படுத்தப்படுமாயின், அது அவனுடைய நம்பிக்கையின் எழுச்சியாக அமைந்து விடுகிறது.

அப்போதுதான் அங்கே மாறுபட்ட கருத்துகளை ஒன்றுக்கொன்று மோதவிடுகின்ற நிலைமையில் சந்தர்ப்பங்கள் உருவாகின்றன. இது பொதுக்கருத்து.

அதுபோலவே இந்த மன்றத்திலே – நாம் எல்லோரும் ஒன்று கூடி விருப்பு வெறுப்பு இல்லாமல், கொள்கையின் அடிப்படையில் கருத்து மாறுபாடுபட்டாலும், குற்றங்களைச் சுட்டிக்காட்டினாலும், இந்த நேரத்தில் நாம், நமது உள்ளம், நமது மரபு, நமது சுற்றுப்புறச் சூழ்நிலை, நாம் எடுத்துக் கொண்ட கொள்கையின் அந்த விரிவான நோக்கம், இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டுதான் இங்கே வழக்கமாக நாம் கருத்துகளை வைக்கிறோம். அப்படி இருந்தும், இங்கே எடுக்கின்ற முடிவுகள் ஒரு மனதாக, ஒருமுனைப்பட்ட நிலைமையிலே, ஒருமை உள்ளதாக இல்லாவிட்டாலும், ஆனால் பெரும்பான்மை என்ற ஜனநாயக மரபின்படி, அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, அது மன்றத்தின் முடிவாகக் கருதப்படுகிறது. இதுபோன்று நான் கொண்டுவந்திருக்கின்ற மானியக் கோரிக்கைகள் மீது விளக்கம் தந்தவர்கள், விரிவுரை என்று கூடச் சொல்லலாம். இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பொழிப்புரை என்று எல்லாம் சொன்னார்களே – அதுபோலவும் இருக்கலாம். ஆனால், அடிப்படையில் அவர்களுடைய உள்ளத்திலே என்ன நோக்கங்கள் இருக்கின்றன என்பதைச் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

22 உறுப்பினர்கள் இவ்வளவு நாட்கள் பேசிய பல விவரங்களை நான் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்தக் குற்றங்களுக்கு எல்லாம் காரணம், ஆங்காங்கு நடைபெறுகிற சில நிகழ்ச்சிகள் தான்; அவை பெரிதாக்கப்பட்டிருக்கலாம்; அல்லது பெரியதாகவே இருக்கலாம். அதற்கெல்லாம் பதில் சொல்வது என்றால், பல நாட்கள் ஆகும் என்பதால் சிலவற்றை மட்டும் கோடிட்டு காண்பிக்க விரும்புகிறேன். இப்படி இங்கே தங்களுக்கு தெரிந்ததை எல்லாம் வைத்துக் கொண்டு, ஏதோ ஒன்றிரண்டை சொல்வதற்காவது நேரம் கிடைத்தது என்று, மாண்புமிகு உறுப்பினர்கள் திருப்திபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அதைப்போல நானும் என்னை திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கே 33 தலைப்புகளில் குறைகளை கூறி இருக்கிறார்கள்—இன்றைக்குப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்களைத் தவிர, இளையபெருமாள் அவர்கள் ஒரு குற்றச்சாட்டை சொல்லி இருக்கிறார்கள். வரதட்சணை கொடுமையால் ஜமீதா பீபி என்பவர் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்; தற்கொலை செய்து கொண்டதாக வற்புறுத்திக் கடிதம் வாங்கப்பட்டுள்ளது; வாங்காமல் இருந்தால் வாக்கு மூலம் வாங்கவில்லை என்ற அளவில், இப்படிப்பட்ட விவாதத்தை வைத்துக் கொள்வோமானால் எதற்கும் நான் பதில் தர முடியாது. வாங்கிய வாக்குமூலத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை கவனிக்க வேண்டும். அது சரியா, இல்லையா என்பதில் பிறகு விவாதம். துவக்கத்திலேயே வற்புறுத்தி வாங்கப்பட்டது என்பதை முடிவு செய்துவிட்டால் அங்கே விசாரணைக்கு இடமில்லாமல் போய்விடும். நீதிபதி கடமையை செய்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் எடுத்துக் கூற வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

ஜமீதா பீபிக்கு திருமணம் ஆகி மூன்று வருடங்கள் ஆகியும் குழந்தை பிறக்கவில்லை. இதனால் அவருடைய கணவர் ஆமீர் தான் இரண்டாவது திருமணம் செய்து கொள்வதாகக் கூறியதால், மனம் உடைந்த ஜமீதா பீபி 27.12.83 அன்று இரவு 8.30 மணிக்கு தன்மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக் கொண்டு தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தார். பலத்த தீக்காயங்களுடன் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்க அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்து தியாகதுர்க்கம் காவல் நிலையம் குற்ற எண்.240/83, இந்திய காவல் சட்டப்பிரிவு 350இல் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார்கள். இதற்கிடையில் ஜமீதா பீபி 30.12.83 அன்று பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். அங்கே 02.01.1984 அன்று மரணம் அடைந்தார். ஜமீதா பீபியிடமிருந்து கள்ளக்குறிச்சி நீதிபதி மரண வாக்கு மூலம் பெற்றுள்ளார். ஜமீதா பீபி வரதட்சணைக் கொடுமையால் துன்புறுத்தப்பட்டதாகக் கூறுவது உண்மையல்ல என்றும் மேலும் வழக்கில் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து விசாரிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்; நீதிபதியிடம் அவர் அளித்த வாக்குமூலம்.

ஜமீதா பீபி : நான் கள்ளக்குறிச்சி 2ஆம் வகுப்பு. நீதிபதி என்பது தெரிந்து கொண்டேன்.

நீதிபதி : உனக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி என்ன சொல்கிறாய் ?

ஜமீதா பீபி : ''என் வீட்டுக்காரர் குடித்துவிட்டு வந்து ஆபாசமாகத் திட்டுவார். நேற்று இரவு 9.00 மணிக்கு குடித்துவிட்டு வந்து வீட்டில் வந்து திட்டினார். தினமும் இந்த மாதிரியாக கெட்ட வார்த்தைகளால் திட்டுவார். நான் எதுவும் பேசமாட்டேன். என்னை ஒட்டிவிட்டு, இரண்டாம் கல்யாணம் பண்ணப் போகிறேன் என்றும் கொலை செய்து விட்டு வேறு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வேன் என்றும் அவர் மிரட்டினார். நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டு நேற்று தாங்க முடியாமல் வீட்டில் இருந்த மண்ணெண்ணையை எடுத்து நானே ஊற்றிக் கொண்டு நெருப்பு வைத்துக் கொண்டேன். அதில் தாடையின்கீழ் இருந்து உடம்பு முழுவதும் எரிந்து புண் ஏற்பட்டது. அப்புறம் நானே ஆஸ்பத்திரிக்கு வந்தேன். இதுவரைக்கும் என் வீட்டுக்காரர் பார்க்க வரவில்லை. இந்த உறுதிமொழி சொல்லச்சொல்ல என்னால் எழுதப்பட்டு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது. அதன் பிறகு ரேகை தரப்பட்டது''.

இந்த உறுதிமொழி கொடுக்கும்போது நோயாளி நல்ல மனநிலையிலும் பேசும் தருவாயிலும் உள்ளார். நோயாளி பெண்கள் வார்டில் வைக்கப்பட்டுள்ளார். டாக்டர் திரு.ரங்கராஜன் அவர்களும் நர்ஸ் திருமதி ஆறுமுகம் அவர்களும் கவனித்து வருகிறார்கள். இந்த உறுதிமொழி 30.12.1983 அன்று இரவு 6.45 முதல் 7.05 மணிக்குத் தரப்பட்டது. ஒப்பம் : டாக்டர் ரங்கராஜன்.

விசித்திரமான விநோதமான வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு.இளையபெருமாள் அவர்கள் இங்கே உருவாக்கியிருக்கிறார்கள். நாம் யாரையாவது சில நேரங்களில் நம்ப வேண்டும். ஒன்று அதிகாரிகளை நம்ப வேண்டும் அல்லது செய்தி தருபவர்களை நம்ப வேண்டும். செய்தி தருபவர்கள் சொல்வதையெல்லாம் வைத்து, அரசு நடவடிக்கை எடுக்க முடியாது. ஆகவேதான், அதிகாரிகள் சொல்வதை நான் நம்புகிறேன். சில சமயங்களில் அதிகாரிகள் சொல்வது சரியா என்று பரிசீலித்துப் பார்க்க முயற்சிக்கிறோம். தேவையானால், ஒன்றை அழுத்தமாகச் சொல்வேன், இது விசாரித்து வாங்கப்பட்ட அறிக்கை அல்ல. தாமாகவே கொடுக்கப்பட்ட அறிக்கை. 30.12.1983இல் கொடுக்கப்பட்டது. இங்கே பிரச்சினை எழுப்பப்பட்ட பிறகு கொடுக்கப்பட்ட பதில் அல்ல. அவர்களாகவே எழுதிய அறிக்கையை இங்கே தந்து இருக்கிறார்கள்.

தயவு செய்து திரு. இளையபெருமாள் அவர்கள் ஒன்றைத் தெரிந்து கொள்ளவேண்டும். கணவன் வந்து கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்று சொன்னதால் ஏற்றுக்கொண்டார்கள் என்று சொன்னால், அப்படிச் சொல்லியிருக்கலாம். ஆனால், கணவன் வரவில்லை என்று அறிக்கையில்

சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர் எங்கே வந்து சொல்லியிருக்க முடியும். தகப்பனாரைப் பொறுத்தவரையில், தன் மகள் இப்படி இறந்து விட்டாளே என்ற வருத்தத்தில் இப்படி சந்தேகம் கொள்ளலாம். ஆனால், நாம் இந்த அறிக்கையின் அடிப்படையில் பார்க்கிறபோது இந்த அறிக்கையை வைத்து பேசாமல் இறந்துவிட்ட ஒருவருக்குப் பதிலாக தகப்பனார் சொல்கிறார் என்பதை வைத்துக்கொண்டு, எப்படி வழக்கை நடத்த முடியும் என்பது புரியவில்லை. செய்திகளைப் பற்றி விசாரிக்க வேண்டியது கடமை என்பதை நான் ஒப்புக்கொகிறேன். ஏதாவது ஒரு பிரச்சினையில் மாறுபட்ட பிரச்சினை வந்தால் கவனிக்க வேண்டும். இது மரண வாக்குமூலம் அல்ல, இறப்பதற்கு முன்பு இறுதியாகக் கொடுக்கப்பட்டது. அவர் கொடுத்தது 30ஆம் தேதி. ஆனால் இறந்தது 2ஆம் தேதி. இந்த நிலையில் நாம் எதை மதிக்கவேண்டுமோ அதை மதிப்பது தான் சட்டப்படி ஒழுங்குமுறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் இவ்வளவு நிச்சயமாகச் சொல்வதால் அதைப் பயன்படுத்திக் கொண்டு, இதை மேலும் விசாரிக்கலாம் என்று விரும்புகிறேன். ஏனென்றால் இளையபெருமாள் அவர்கள் மற்றவர்களைப்போல தப்பி ஓடமாட்டார்கள்; நான் சாட்சி சொல்லமாட்டேன் என்று சொல்லமாட்டார்கள். அந்த நம்பிக்கை அந்தத் துணிச்சல் இருக்கிறது. அவர்கள் சொன்னதை நிரூபிப்பதற்கு சாட்சி சொல்ல வருவார்கள், சாட்சிகளைக் கூட்டிக்கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். அந்த அளவுக்கு அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

காரைக்குடியில் பாலாம்பாள் என்ற பெண்ணைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது சுகமாகக் காணப்பட்டார். கற்பழிக்கப்பட்டார் என்பதற்கு சாட்சியம் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னமும் அந்தக் காவலர் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று சொல்கிறார்கள். 12.02.1978 அன்று முகவை கிழக்கு மாவட்டம், காரைக்குடி தெற்குக் காவல் நிலைய காவலர் ஏ. சங்கரன் என்பவர் பகல் 11.55க்கு காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்த செல்வி பாலாம்பாளை மானபங்கம் செய்ததற்காக அல்லது தகாத முறையில் நடந்து கொண்டதற்காக ஊதியத்தில் இரண்டு படிகள் குறைக்கப்பட்டன. பின் நான் பார்த்தேன், அது வந்தபோது நான் ஏற்றுக்கொள்ளவில்லை. காவலருக்கு அளிக்கப்பட்ட தண்டனை போதுமானதல்ல என்று அரசு உத்தரவிட்டது. நான்தான் எழுதினேன். இது போதுமானதல்ல, அவருக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று எழுதிய பின்னால் 08.04.1983இல் அவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டார். இது மிகவும் திருப்திகரமான செய்தியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

செல்வி பாலாம்பாள் 04.04.1978 அன்று காலையில் சாக்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கோவில் குளத்தில் நீராட சென்றபோது தற்செயலாக நீரில் மூழ்கி உயிரிழந்தார் ? பிரேத பரிசோதனை செய்த மருத்துவ அதிகாரி பாலாம்பாள் நீரில் மூழ்கி மரணம் அடைந்துள்ளார் என்று அறிக்கை அளித்துள்ளார். அறிக்கை இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் பொறுமையாகக் கேட்பார்கள் என்று நான் கருதுகிறேன். எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும்; வேறு வழியில்லை. விளக்கம் தரவேண்டுமென்று கேட்டுவிட்டதால் இது அத்தனையும் நான் படித்தாக வேண்டும்.

பாலாம்பாள் என்னும் பெயருடைய ஒரு பெண், காவல் புரிந்து வந்த காவல்காரரான பி.சி.1155 சங்கரன் என்பவர், கருவூல வளாகத்திற்கு உள்ளே 12.02.1978ஆம் நாள் இரவு தன்னை தொந்தரவு செய்து, தன்னை மானபங்கப்படுத்தியதாக குற்றஞ்சாட்டி, காரைக்குடி தெற்கு காவல் துணை ஆய்வாளரிடம் 13.02.1978ஆம் நாள் புகார் ஒன்றைக் கொடுத்தார். எதிரியான காவலர் (1155) சங்கரனுக்கு எதிராக வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு, அவர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டார். பண்பற்ற முறையில் தாக்கப்பட்ட பெண் பாலாம்பாள், காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு மருத்துவரின் கருத்தை அறிவதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். மருத்துவ அலுவலர் அவளைப் பரிசோதித்ததாகச் சொல்லப்படுகிறது. இந்த வழக்கு, காவல் நிலையாணையின் (பி.எஸ்.ஓ.145)கீழ் விசாரணையை நடத்துவதற்காக தேவகோட்டை சார்நிலை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டது. தேவகோட்டை சார்நிலை மாவட்ட ஆட்சியர் விசாரணையை நடத்தினார். அவர் 15 சாட்சிகளை விசாரணை செய்தார். சூழ்நிலைச் சாட்சியங்களைத்தான், தாம் நம்ப வேண்டியதாகயிருந்தது என்று தம் அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காரணம், நேரில் பார்த்த சாட்சிகளாகக் கிடைக்கக்கூடியவர்கள் எல்லோருமே அதில் அக்கறை கொண்டுள்ளவர்களாக இருப்பதோடு, அவர்கள் எதிரியைக் காட்டிக் கொடுக்கவும் விரும்பவில்லை. ஆயினும், வண்புணர்ச்சியில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுவதை நிரூபிக்கப் போதுமான சான்று இல்லை என்றாலும், காவலர் திரு.சங்கரன் செல்வி பாலாம்மாவை மானபங்கம் படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு உண்மையானது என்னும் முடிவினை அவர் அளித்திருக்கிறார். செல்வி பாலாம்மாளை மானபங்கம்படுத்தியதன் மூலம், திரு.சங்கரன் தான் பதவியில் இருக்கும்போதே இழைத்துள்ள குற்றத்திற்காக, அவருக்கு எதிராக துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று அவர் பரிந்துரை செய்துள்ளார்.

காரைக்குடி அரசினர் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அலுவலரான திரு.மல்லிகார்ஜுனன் என்பவர் அரசு தரப்பு 10ஆவது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அந்தப் பெண்ணைத் தாம் பரிசோதனை செய்ததாகவும், அவளது உடலில் பார்வைக்கு புலப்படுகிற காயத்தையோ அல்லது புற அதிர்ச்சி புண்ணையோ தாம் காணவில்லை என்றும் அவர் கூறியதோடு, அவள் இசிப்பு நோய்க் கோளாறு உடையவள் என்று தாம் கருதுவதாகவும் கூறியுள்ளார்.

விசாரணை செய்த அலுவலர் தன் அறிக்கையின் 53ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளார் :

“பாலம்மாளுக்கும் எதிரியான காவலருக்கும் இடையே உடலுறவு தொடர்பு இருந்ததைப் பற்றி சூசகமாகக்கூட தனக்கு ஐயப்பாடு தோன்றவில்லை என்பதாக, காரைக்குடி அரசினர் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அலுவலர் டாக்டர் மல்லிகார்ஜுனன் கூறுவது வியப்பைத் தருகிறது. முழுமையான உடல் பரிசோதனைக்காக மகளிர் மருத்துவ பிரிவில் இருக்கும் ஒரு பெண் மருத்துவரிடம் பாலாம்மாளை அவர் அனுப்பியிருக்கலாம். அவ்வாறு செய்ய அவர் முடிவெடுத்திருந்தால், அது விசாரணைக்கு பெருமளவுக்கு உதவியாக இருந்திருக்கும். அதற்குப் பதிலாக அப்பெண் இசிப்பு நோய் கோளாறு உடையவள், அது அவளை அடிக்கடி ஆட்டிப்படைக்கிறது என்னும் அளவுக்கு சான்றிதழ் ஒன்றை மட்டுமே அவர் தந்துள்ளார். இந்த வழக்கில் 10ஆவது சாட்சியாக உள்ள மருத்துவர் தன் சிந்தையைச் செலுத்தத் தவறியுள்ளார்.

பின்னர் இந்தச் சம்பவத்தைக் கண்டித்து கிழக்கு இராமநாதபுர ஜனதா தலைவரால் ஆர்ப்பாட்டங்கள் செய்யப்பட்டன. 19.02.1978ஆம் நாள் அவர் துண்டுச் சீட்டுகளை அச்சடித்து மக்களிடையே பரப்பினார். 25.02.1978ஆம் நாள் இரவு ஜனதா கட்சியால் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது. எதிரி (1) திரு.கருப்பையாவும், எதிரி (2) திரு.வலம்புரிஜானும் தங்கள் பேச்சுக்களில் அச்சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டனர். அவர்கள் பொதுவாக, காரைக்குடி காவல்துறையினருக்கு எதிராகவும், குறிப்பாக ஆய்வாளர் திரு.பால்ராஜ் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராகவும், மிகவும் மதிப்பைக் குறைத்துப் பேசுவதில் ஈடுபட்டனர். இது கூடியிருந்தவர்களிடையே ஒரு பதட்ட சூழ்நிலையை உருவாக்கிற்று. நான் முழுவதையும் படிக்கவில்லையே. மேற்சொன்ன பேச்சாளர்கள் அரசாங்கம் நீதி வழங்க வேண்டுமென்று கோரினர். இப்பேச்சு பொதுமக்களுக்கு ஆத்திரத்தைக் கிளறியது. இதன் விளைவாக, உள்ளூர் மக்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது. வாய் சண்டையின் விளைவாக காவல் துறையினருக்கும் எதிரிக்கும் காயங்கள் ஏற்பட்டன. காவலர் 1,238 கொடுத்த அறிக்கையின் பேரில் இந்திய தண்டனைச் சட்டத்தின் 147,148,149,294,332 போன்ற பல பிரிவுகளின் கீழ் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அய்யாவு என்பவர் கொடுத்த புகாரின் பேரில் இந்திய தண்டனை சட்டத்தின் 114ஆம் பிரிவுடன் சேர்த்து 147 ஆகிய பிரிவுகளின் கீழ், குற்ற எண்.44/78 என்னும் வழக்கு ஒன்று திரு.பி.எல்.கருப்பையாவுக்கும், மற்ற எதிரிகளுக்கும் எதிராக பதிவு செய்யப்பட்டது. புலனாய்வுக்குப் பிறகு, 44/78 என்று எண்ணிட்ட குற்றமானது 4378 என்ற எண்ணிட்ட குற்றத்துடன் சேர்க்கப்பட்டு, எதிரிகளான திரு.பி.எல். கருப்பையா மற்றும் 9 பேர்களின் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் 147 மற்றும் பல பிரிவுகளின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டது.

இவ்வழக்கு தேவகோட்டை முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. குற்ற எண்.192/78. காரைக்குடி முதல் வகுப்பு நடுவர், இந்திய தண்டனைச் சட்டத்தின் 307ஆவது பிரிவின்கீழ் வரும் குற்றச்சாட்டில் வழக்கை

எடுத்துக் கொண்டு, திரு.பி.எல். கருப்பையாவிற்கும் மற்றவர்களுக்கும் எதிரான வழக்கை மேல் விசாரணைக்காக செசன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்.

எதிரிகளான பி.எல். கருப்பையாவையும், விஜயராகவனையும் செசன்ஸ் நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பியதற்குப் பிறகு 03.11.1979ஆம் நாள், நடந்த மற்றொரு சம்பவம் பரிசீலனைக்குரியதாகும். 08.10.1979ஆம் நாள் மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்டதற்குப் பிறகு 09.10.1979ஆம் நாளிலிருந்து எதிரிகள் இருவரும் மதுரை மத்திய சிறைச் சாலையில் வைக்கப்பட்டனர். 03.11.1979ஆம் நாள் அவர்கள் இருவரும் தங்களுக்கு எதிராக நடப்பில் இருக்கும் வழக்கை திரும்பப் பெறவும், காரைக்குடி தெற்குக் காவல் நிலையத்தில், காவலர் திரு.சங்கரனால் பாலம்மாவிடம் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் வன்புணர்ச்சியைப் பற்றியும் அவளது மரணத்தைப் பற்றியும் நீதி விசாரணை நடத்தவும் கோரி மதுரை மத்திய சிறைச் சாலையில் உண்ணாவிரதப் போராட்டதைத் தொடங்கினர். இது அரசியல் ரீதியாக ஏற்பட்ட திரு.இரா.செழியன் அவர்கள் தலையீட்டின் பேரில், அவர்கள் 10.11.1979ஆம் நாள் தங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

வன்புணர்ச்சிக் குற்றத்திற்காக அல்லது மானபங்கப்படுத்த வேண்டும் என்ற உட்கருத்துடன் தாக்கப்பட்ட பெண் பாலாம்மாளை பண்பற்ற முறையில் தாக்கிய குற்றத்திற்காக எதிரான காவலர் சங்கரன் மீது குற்ற வழக்கு தொடரமுடியுமா? அல்லது முடியாதா? என்று கேள்வி எழுகிறது. இந்த வழக்கில் குற்றவாளிக்கு எதிராக, குற்ற வழக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடருவது முடியாததாக இருக்கிறது. காரணம் தாக்கப்பட்ட பெண் பாலம்மாள் இறந்துவிட்டாள். மேலும், விசாரணை அலுவலர் எதிரிக்கு எதிராக, துறை ரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக பரிந்துரைத்து அனுப்பி உள்ளார். வழக்கில் இந்தச் சூழ்நிலைகளில், குற்ற வழக்கு நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக குற்ற வழக்கு தொடருவது முடியாத காரியமாக இருக்கிறது. இது சட்டப் பிரச்சினை ஆனால், மனிதாபிமானப் பிரச்சினை என்று என்னிடம் வந்தபோது, இந்தத் தண்டனை போதாது, இது சரியல்ல. அவர்கள் மீது கடுமையான தண்டனை எடுக்க வேண்டும் என்று எழுதினேன். இது விசாரணையில் உள்ளது, எந்தக் காரணத்தாலும் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டாலும், குற்றவாளிகள் தப்பித்துக் கொள்ள முடியாது என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். படிப்பதாக இருந்தால் படிக்கிறேன்.

இந்தப் பிரச்சினை வந்தபோது நான் எவ்வளவு கடுமையாக என்னுடைய எண்ணத்தை வெளியிட்டு இருக்கிறேன் என்பதற்காக அந்தக் கோப்பிலே நான் எழுதியதை இங்கே படிக்க விரும்புகிறேன். “இத்தகைய முக்கியமான ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் அரசுப் பணியில் உள்ளனரா, இல்லையா என்பதைக்கூட அமைச்சருக்கு அறிவிக்காதது பொறுப்புள்ள செயலாகாது. எனவே அதற்குக் காரணமாக உள்ளவர்கள் மீது தலைமைச் செயலாளர் நடவடிக்கை எடுக்கலாம். ஒய்வு ஊதியத்தை ரத்து செய்யும் நடவடிக்கையை இந்த மாதிரி பொறுப்பற்ற

செயலைச் செய்ததற்கு விதிக்கலாம்'' என்று நான் எழுதியிருக்கிறேன். ஒரு சட்டம் என்று வருகிறபோது, பதவியிலே இருப்பவர்கள் வேறு வழியில்லாமல், அதன் விளைவாக காரியத்தை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆனால், உங்களைப் போன்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மாதிரியான பிரச்சினைகளில் தலையிட்டு உண்மைகளை விளக்கிக் கூறி, வெட்ட வெளிச்சமாக்குவதற்கு வேண்டிய முயற்சி செய்வது பாராட்டுக்குரியது. அதை அரசு வரவேற்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இது இப்படியே நடைபெற வேண்டும் என்ற அந்த உணர்வு அரசுக்கு இல்லை என்பதை எடுத்துக்காட்ட பல சம்பவங்களை என்னால் சொல்ல முடியும். காவல்துறையினர் பெண்களை கதிரவன் உதயத்திற்கு முன், கதிரவன் மறைவுக்குப் பின், வெளியே அழைத்துச் சென்று விசாரணை செய்யக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறேன். உத்தரவு இட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல இன்னொன்று, உறவினர்கள் அவர்களோடு வரவேண்டும். அப்படி லாக்கப்பிற்கு அழைத்துப் போகிற அவசியம் ஏற்பட்டுவிட்டால், அவர்களுடைய உறவினர்கள், ஆணோ, பெண்ணோ கூட வருவதற்கு அந்தக் காவல் நிலையத்தினர் அனுமதித்தாக வேண்டும். கைது செய்தால் காவல் நிலையத்தில் இரவில் பெண்களைத் தங்க வைக்கக்கூடாது. அருகில் இருக்கிற பெண்கள் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுப்பிவிடவேண்டும். இவ்வாறெல்லாம் நான் கட்டளைகளை இட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் மன நிறைவு கொள்கிறேன். அதையும் மீறிச் செய்பவர்கள், அவர்கள் மனிதர்களாக இருக்க முடியாது. மிருகங்களாகத்தான் இருக்க முடியும்!

நம் நாட்டிலே கற்பழிப்பே இல்லை என்று சொல்லவில்லை. கற்பழிப்பதை நியாயம் என்றும் சொல்ல முடியாது. நான் மன்னன் அல்ல, அமைச்சர், அதுவும் தமிழ்நாடு தனி நாடு அல்ல, இந்தியாவிலே இருக்கிற ஒரு மாநிலம். ஆகவே, இங்கு நான் என்ன விரும்பினாலும், அதை நிறைவேற்றுவதற்கு ஒரு அளவு இருக்கிறது. ஒரு வரையறை இருக்கிறது. பலவற்றை நான் சொன்னேன். கற்பழித்தால் தூக்குத் தண்டனை. அதற்கு மன்னிப்பே கிடையாது என்று சொல்லியிருக்கிறேன். ஆனால், அதை நிறைவேற்றுவதற்கு நம்மிடம் சக்தியில்லை. அதிகாரமில்லை! அதைக் கொண்டு வர முடியுமா என்று கேட்டு மொரார்ஜி தேசாய் அவர்கள் பிரதமராக இருந்தபோது, அவரிடம் அதை அனுப்பினேன். அவர் அதைப் பாராட்டினார்கள். ஆனால் அப்போது இருந்த சட்ட அமைச்சர் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இதுபோன்ற முயற்சிகளை இந்த அரசு எடுக்காமல் இல்லை!

பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான், பெண் காவலர்களை நாம் அதிகமாக நியமித்திருக்கிறோம். ஏறத்தாழ 600க்கும் மேற்பட்டவர்கள் இப்போது பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏஷியாட்டில் அவர்கள் செய்த பணிக்காக, பலரும் பாராட்டினார்கள். அவர்களுக்கு நாமும் பாராட்டு தெரிவிக்க விரும்பினோம். அதற்குள் இடைக்காலத்தில் பல சம்பவங்கள் ஏற்பட்டு,

அதற்கு அனுமதிக்கப்படவில்லை. என்றாலும் அந்தக் கடமையை நிச்சயமாக இந்த அரசு செய்யும்; அவர்களைப் பாராட்டும் என்று உங்கள் முன்னாலே அவர்களைப் பாராட்டக் கடமைபட்டிருக்கிறேன்.

அவ்வளவு தெளிவாக அந்தப் பணிகளைச் செய்து, எந்தக் குற்றச்சாட்டும் வருவதற்கு இடம் இல்லாமல் செய்துவிட்டார்கள் என்பதை பல பெரியவர்கள், அங்கே குறிப்பு எழுதி வைத்திருப்பதிலிருந்தும், எனக்கு அனுப்பியிருக்கிற கடிதங்களிலிருந்தும் சொல்ல முடியும். பாராட்டியவர்கள் அத்தனைபேரும், காவல் துறையை ஒட்டு மொத்தமாகவும், சில இடங்களைக் குறிப்பிட்டும், அவர்களுடைய பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இங்கே நான் இப்படி குறிப்பிடுவதினால், காவல் துறையை மட்டுமே பாதுகாக்க வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குப் பரிந்து பேசுகிறேன் என்று யாரும் நினைக்கக்கூடாது. காவலர்கள் பாதுகாக்கப்பட்டால் தான் சமுதாயம் பாதுகாக்கப்படும். காவலர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்ற உத்திரவாதம் இருந்தால் தான், அவர்கள் மக்களுக்கு பாதுகாப்பு தர முடியும். அந்த வகையில் தான் சொன்னேன். குற்றம் சாட்டுகின்றவர்கள் மக்களின் பிரதிநிதிகள், உரிமை உள்ளவர்கள். அவர்கள் மக்களின் எண்ணத்தை பிரதிபலித்தேயாக வேண்டும். அதே சமயத்தில், அனைவரையும் குற்றவாளிகள் என்று சொல்வதற்கு நாம் தயாராக இருக்க முடியாது. அப்படி யாரும் சொல்லவில்லை என்பதற்காக நன்றி கூறிக் கொள்கிறேன். தவறுகள் இருக்கின்றன. முன்னமேயே சொல்லியிருக்கிறேன்.

அவர்கள் தவறு செய்யாமல் இருக்க வேண்டுமென்றால் அவர்களுடைய சூழ்நிலை மாற்றப்பட்டாக வேண்டும். கற்பழிக்கின்றவர்கள், ஒரு ஆர்வத்தின் மீது அல்ல. வெறியின் காரணமாக, சூழ்நிலையால் கெடுக்கப்பட்டதன் காரணமாக, தங்களுக்கு உரிய வாய்ப்பை இழந்து விட்டதன் காரணமாக, இருப்பவர்கள்தான் இந்த விவாதத்தில் வருகிறார்கள். மனைவி இருப்பாள். ஆனால் தனக்குப் பயன்பட முடியாமல், வேறு ஒருவருக்குப் பயன்பட்டு விட்டாள் என்ற ஆத்திரத்தில் பழி வாங்கிவிட்டு அல்லது அவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விட்டுவிட்டு, பிறகு இங்கே வந்து, தன்னுடைய ஏமாற்றத்தை வெளியே காட்ட முடியாமல், வேறு எங்காவது கிடைக்குமா என்று சுற்றித் திரிகிற அப்படிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். ஆனால் எல்லா ஆண்களும் அப்படி அல்ல. ஒரு சிலர் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அப்படிப்பட்ட 10,20 காரியங்களைப் பற்றி நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு கிடைத்த நேரத்தில் அவ்வளவு தான் சொல்ல முடிந்தது என்றால் 100 ஆக அதைப் பெருக்கிக் கொள்வோம்.

ஆனால் இவ்வளவு பெரிய தமிழகத்தில் இத்தனைகோடி மக்கள் வாழ்கிற இடத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடப்பது தவிர்க்க முடியாதது, என்றாலும் அதைத் தவிர்த்தே ஆக வேண்டும். அதற்குரிய வழியைக் கண்டுபிடிக்க செய்ய பல திட்டங்களை வைத்திருக்கிறோம். இறுதியில் நான் ஓரளவுக்கு, அது எல்லோருக்கும் திருப்திதரத்தக்கதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இன்னும் சொல்கிறார்கள். திருமதி யசோதா ஒன்றைச் சொன்னார்கள். கையை காட்டி கை நீட்டினார்கள் என்று. கையை நீட்டினால்தான் கையைக் காட்ட முடியும். அப்போது தான் பணம் வரும். ஆகவே கையை நீட்டுவதற்கு முன்பு நீட்டியவருக்கும் வந்தாக வேண்டும். அது காவலர்களுக்கு நிச்சயமாக இருந்தாக வேண்டும்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், காவலர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற ஊதியம் அவர்கள் தேவைக்கு முழுமையாக திருப்தி அளிப்பதாக இருக்கிறது என்று நாங்கள் எண்ணவில்லை. வேறு வழியில்லை. ஆகவே அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவ்வப்போது அதிகமாக முயற்சிக்கிறோம். அவர்களுக்கு என்று தனியாகச் செய்ய முடியாது என்றாலும், இப்போது கமிஷனை அமைத்திருக்கிறோம். அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரியாது. இருந்தாலும் இதையெல்லாம் எண்ணிப்பார்க்கிறபோது அவர்கள் சுத்த சுயம்புவாக இருக்க வேண்டுமென்றால் அவர்களுடைய சூழ்நிலை நிச்சயமாக உதவிகரமாக அமைந்தாக வேண்டும்.

வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அவைகள் எல்லாம் எங்கே இருக்கின்றன ? எப்படி இருக்க முடியும் ? என்று சொன்னார்கள். நானே ஆட்சிக்கு வந்தவுடனே சொன்னேன். குற்றம் செய்தவர்களுக்கு நடுவிலே குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிற காவல் துறையைச் சேர்ந்த ஒருவர், தன் குடும்பத்தை அவர்கள் மத்தியில் விட்டு விட்டு தன் பணிக்குச் செல்வாரானால், அந்தப் பகுதியிலே இருக்கிற குற்றவாளியை எப்படிக் கண்டுபிடிக்க முடியும் ? தெரிந்தாலும் எப்படி அவர்களை கைது செய்ய முடியும் ? தனது மகளுக்கோ மனைவிக்கோ பெற்றோர்களுக்கோ பாதுகாப்பு என்ன ? ஒரு தனி வீடு, மற்றவர்களோடு இப்படித் தவறு செய்கிறவர்களோடு அந்தக் குடும்பம் வாழ வேண்டியிருக்கிறது என்பதை நாம் கற்பனை செய்து பார்க்க வேண்டும், அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை, அதற்காக அவர்களுக்குத் தனியாக வீடு கட்டிக் கொடுத்து முழுப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. நிதிப்பற்றாக்குறையால் அதிகமான வீடுகளைக் கட்ட முடியவில்லையே தவிர, அவர்களுக்கு ஆயிரக்கணக்கான வீடுகளை கட்டுவதற்கு பல கோடி ரூபாய்களை ஒதுக்கி வைத்திருக்கிறோம். ஒரு குழுவை அமைத்திருக்கிறோம் என்பது இந்த மாமன்றம் அறிந்த உண்மையாகும். அதிலே பிரச்சினையில்லை.

காவல்துறையைச் சேர்ந்தவர்கள் வேண்டுமென்றே தவறு செய்கிறார்கள். திரும்பத் திரும்பத் தவறு செய்கிறார்கள் என்றால், அவர்களை கண்டிப்பாக நடவடிக்கைக்குட்படுத்த வேண்டும். என்ன தண்டனை வேண்டுமானாலும் அவர்களுக்குக் கொடுக்கலாம். ஒரு நண்பர், மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். பெண் கற்பழிக்கப்பட்டதற்கு இது தானா தண்டனை ? அவரை சஸ்பெண்ட் செய்வதோ, சம்பளம் பிடிப்பதோ, இதுதானா என்றார்கள். யாரோ சொன்னார்கள் சட்டம் ஒரு மாதிரி என்று. முன்னாலே கடிக்கும், பின்னாலே போனால் உதைக்கும் என்று. இந்த இரண்டும் செய்ய முடியாமல் சில சமயங்களில் ஒரு மண்பொம்மையாக இருந்து விடுகிறது. அப்படிப்பட்ட சட்டத்தை வைத்துக் கொண்டு, சாவி கொடுத்தாவது ஓட்ட முடியுமா

என்று சொல்லக்கூடிய முறையிலே சில சட்டங்கள் இருக்கின்றன, அவைகளை மாற்றித்தான் தீரவேண்டும்.

தாய்மார்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் தருவதற்கு தமிழகத்திலே வகை இருக்கிறது. வழிமுறைகள் இருக்கின்றன என்ற உத்திரவாதத்தை உண்டாக்குவதற்கு சட்டங்கள் கொண்டு வர வேண்டும். அது விரைவில் கொண்டுவரப்படும். அது டெல்லியினால் அனுமதிக்கப்படுமா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், முயற்சித்துப் பார்ப்போம். முயற்சியும் மெய் வருத்தக்கூலி தரும். மெய் வருந்தாவிட்டாலும் நம் மனம் மகிழத்தக்க வகையில் கூலி கிடைக்குமா என்று நினைக்கிறேன். மன மகிழ்ச்சியோடு தான் அதைச் செய்ய வேண்டும். ஏமாற்றத்தோடு அல்ல. துணிச்சலிலே தான்; தேவை என்பதனால் தான்! தேவை மனிதனுக்கு எப்போது ஏற்படுகிறது? தனக்குத் தேவையான வாழ்க்கையை நடத்துவதற்கு உரிய பணம் இல்லாமை. தான் எந்தக் காரியத்தை செய்ய முனைகிறானோ, அந்தக் காரியத்திற்கு தன்னை உட்படுத்திக் கொள்ளும்போது, தன் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமை, இவைகளை எல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். திருடுகிறவர்களைப் பிடிப்பதற்கு காவல் துறை செல்கிறது என்றால், அவரிடம் உள்ள ஒரே ஆயுதம் கைத்தடி, லத்தி தான். அதை வைத்துக்கொண்டு அரிவாள், கத்தி சில சமயம் குண்டு இவைகளை எல்லாம் வைத்து இருப்பவர்களை பிடிக்கப்போவது என்றால் எந்த மனிதனால் முடியும்? எவ்வளவு சக்திப் படைத்த பயில்வானாக இருந்தாலும் ஒருவரை சமாளிக்கலாம். ஆனால் 4,5 பேரை கையிலே ஆயுதங்களோடு திட்டம் போட்டு அவர்கள் செய்வார்களானால், உயிரை விடுவதைத் தவிர, வேறு வழி இல்லை. இந்த நிலையில், அவர்களுக்கு சில தேவைகள் ஏற்படுகின்றன.

“என்னமோ எத்தனை நாளைக்கு நாம் இருக்கப் போகிறோம்? எப்போதும் ஆபத்து தான். சரி, இருக்கிற வரைக்கும் சுகமாக இருக்கலாம்!” என்று நினைக்கும்போது அங்கே சில தவறுகள் உருவாகின்றன. அந்த ‘இருந்து விட்டு போகலாமே!’ என்ற நிலைமை இல்லாமல், எந்த நேரத்திலும் தன் குடும்பமும், தன் சந்ததிகளும் காப்பாற்றப்படுவார்கள் இந்த அரசால், தமிழக மக்களால், என்ற உத்திரவாதம் இந்த நாட்டில் ஏற்படுத்தப்படுமானால், அவர்கள் குற்றம் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. ஆகவேதான் 10 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரமாக உயர்த்தினோம். பணி செய்யும்போது ஆபத்து ஏற்பட்டால், மேலும் 10 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற திருத்தத்தை கொண்டு வந்ததற்கு காரணம், நிறைவேற்றுவதற்கு காரணம் அதுதான்.

இங்கே இன்னும் ஒன்றை நான் சொல்வேன். இந்த அரசு அப்படிப்பட்ட காவலர்களுக்கு துப்பாக்கி கொடுக்க வேண்டும் என்று விரும்பி அதை ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. ஒரு காவல் நிலையத்தில் இத்தனை துப்பாக்கிகள், பயிற்சிப் பெற்ற காவலர்களுக்கு பயன்பட அவர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள அந்தத் துப்பாக்கிகள் பயன் பெற வேண்டும் என்பதற்காக, அதை நான்

இங்கே சொல்லி வைத்து இருக்கிறேன். மத்திய அரசிலிருந்து ஓரளவுக்கு அனுமதி வந்து ஆகிவிட்டது; இதுவரை இல்லாமல் இருந்தது! ஆகவே, அதை செய்து ஆக வேண்டும். அப்படி செய்தோமானால் திருட்டு, இது போன்ற கொலைகள், வழக்குகள் இவற்றை எதிர்கொள்ளமுடியும். இதேபோன்ற கொடுமைகளைப் பார்க்கும்போது காவல் துறையினர் அச்சப்பட வேண்டியிருக்கிறது. அவர்களுக்குப் புரியும் நிலையில் சொன்னால், தப்பி ஓடும்போது அவர்களுக்கு வேண்டியது பாதுகாப்பு.

அதேபோல் ‘வாக்கி டாக்கி’ இரவில் ரோந்து போகிறவர்களுக்கு வாக்கி டாக்கி கொடுக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இங்கே கேட்டார்கள், நவீனமாக அறிவியல் துறையில் எவ்வளவோ புதுமைகள் எல்லாம் வந்துவிட்டன. மாண்புமிகு திருமதி யாசோதா அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இப்படி இருந்துமா இது என்றார்கள். நான் அமெரிக்கா போனபோது இதைப் பற்றி விசாரித்து தெரிந்து கொள்ள வேண்டும் என்று அங்கே உள்ள சி.ஐ.டி. மேல் அதிகாரிகளைச் சந்தித்தேன். அவர்களிடம் கேட்டேன், நீங்கள் எப்படி இதைப் பாதுகாக்கிறீர்கள்? எப்படி கண்டுபிடிக்கிறீர்கள்? என்று அவர்கள் எல்லாவற்றையும் கொண்டுபோய் என்ன நிலைமை என்று காட்டினார்கள். அதை 2 வரிகளில் சொல்லி விடலாம். ஆனால் அவற்றை எந்த அளவுக்குக் கண்டுபிடிக்க முயலுகிறோமோ, அதைவிடத் தீவிரமாக விஞ்ஞான முறையில் திருடுவதற்கும், கொள்ளை அடிப்பதற்கும் தூக்கிக் கொண்டு போவதற்கும், கொலை செய்வதற்கும் அங்கே மிகப் பெரிய திறமையானவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று அவர்களே சொன்னார்கள்!

விஞ்ஞானம், கல்வி என்பவை எல்லாம் அதிகாரிகளாக வருவதற்குத் தகுதி உடையவர்களுக்கு மட்டும் தரப்படுவது அல்ல. எல்லோருக்கும் அது கிடைக்கிறது. அதில் புத்திசாலிகளாக, கொஞ்சம் கூடுதலான அறிவாளிகளாக இருந்துவிட்டால் அரசில் பணியாற்றுகிறவர்களைவிட, அவர்கள் பல காரியங்களைச் செய்து விடுகிறார்கள். முன்பு எல்லாம் விரல் ரேகையிலே கண்டு பிடிப்போம். இப்போது கையுறை போட்டுக் கொண்டு விடுகிறார்கள். இவை எல்லாம் நாகரிக முதிர்ச்சி, அறிவு வளர்ச்சி, விஞ்ஞான அறிவியல் துறையிலே கிடைக்கின்ற பயிற்சி. இவைகள் எல்லாம் அவர்களை பாதுகாப்பதற்கு அழைத்துச் சென்று விடுகிறது. அப்படி இருந்தும் இங்கே உங்களுக்கு தெரியும். அண்மையில் எத்தனை குற்றங்கள் 2 நாட்கள், 3 நாட்கள் ஒரு வாரத்திற்குள்ளாக கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். அதை நான் நீடித்துக் கொண்டு போக விரும்பவில்லை. 9 கொலைகள் பற்றி தெரியும்.

அதைப் போலவே, இன்னும் சிலர் இறந்தது பற்றி தெரியும். பெண் காணாமல் போய் விட்டார் என்றால் ஏறக்குறைய 3 நாளில் அந்தப் பெண் கண்டுபிடிக்கப்பட்டு விடுவாள். கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இங்கிருந்து கொள்ளை அடித்துப் போனவர்களை ஆந்திராவில் போய் கொண்டு வந்தார்கள். இதை எல்லாம் செய்தது அவர்கள் திறமை அற்றவர்கள் என்பதாலோ அல்லது அக்கறை இல்லாதவர்கள்

என்பதாலோ அல்ல. திறமை என்பது சமய சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. இருவர் போட்டியிடுகின்ற போது ஒருவர் கொஞ்சம் திறமையை, சந்தர்ப்பத்தை நோக்கி பயன்படுத்திவிட்டால், தோல்வி அடைவார் என்பவர் கூட, வெற்றியை அடைந்து விடுவார். சில பந்தயங்களில் பார்க்கிறோம். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். காவலர்கள் எந்த அளவுக்கு தியாகம் செய்கிறார்களோ, அந்த அளவுக்கு மக்களிடமிருந்து அவர்களுக்கு வரவேற்பு இல்லை. இப்போது பத்திரிகைகளில் சில பாராட்டுக் கடிதங்கள் ஆங்காங்கே எழுதுகிறார்கள். தலைவர்கள் எல்லாம் பேசுகிறார்களே தவிர, அவர்கள் குற்றங்களை மிகைப்படுத்துகிறோம், அவர்கள் திறமைகளை நாம் குறைத்து விடுகிறோம்! ஆகவே, குற்றத்தை எப்படி மிகைப்படுத்துகிறோமோ அதைப்போல அவர்களுடைய திறமையையும் நாம் பாராட்டினால்தான் மேற்கொண்டும் அவர்களுக்குப் பணி செய்யும்போது நமக்கு நிச்சயமாக தம்முடைய நல்ல காரியங்களுக்கு எல்லாம் மக்கள் ஆதரவு தரும் போது ஏன் நமது கடமையை துணிந்து செய்யக்கூடாது என்கிற அந்த மனோபாவம் உள்ள மனிதத் தன்மை ஒன்றினால்தான் அது உண்டாகும்!

இங்கே சொன்னார்கள். ஏதோ போராட்டம் என்று அறிவித்தவுடனே எல்லோரையும் முன்னாலே கைது செய்கிறார்கள் என்று. ஏதோ இந்த இராமச்சந்திரன் முதலமைச்சராகி இந்த உள்துறைக்கான பொறுப்பை ஏற்ற பிறகு தான், இந்த நிலைமைகள் என்பதைப் போலப் பேசினார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கெல்லாம் பல விஷயங்கள் மறந்துபோய் விடுகின்றன.

நேரு அவர்கள் இங்கே வந்தபொழுது, பெரியார் அவர்கள், நேரு பேசியதை, 'பேச்சு நான்சென்ஸ்' என்று சொல்லிவிட்டார் என்பதற்காகக் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. கறுப்புக் கொடி காட்டப்போகிறோம் என்று பகிரங்கமாகவே சொல்லி, அதனால் பல பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அண்ணா அவர்கள் சொன்னார்கள். மருத்துவர்கள், மாணவர்கள், கலைஞர்கள், வழக்குரைஞர்கள் ஆகிய இவர்கள் இந்தக் கறுப்புக் கொடி காட்டுவதில் கலந்துகொள்ளக்கூடாது என்று சொன்னார்கள்!

நான் வீட்டிலே இருந்தேன். காலையிலே ஷூட்டிங்கிற்குப் போகலாம் என்று இருந்தேன். ஒரு லாரி வந்தது. என்கூட வருகிறீர்களா என்று கேட்டார்கள். வேறொன்றுமில்லை, எங்கே என்று கேட்டேன். அதைச் சொல்ல மாட்டேன். என்கூட வந்து விடுங்கள் என்றார்கள். காப்பி சாப்பிட்டு விட்டுப் போங்கள் என்று சொல்லிவிட்டு, நானும் சாப்பிட்டு விட்டுப்போனேன். என்னை அழைத்துக் கொண்டு போனார்கள். காவல் நிலையத்தில் வைக்கப்பட்டேன். போகும்பொழுதே கேட்டேன். "எஸ்.எஸ்.ஆர்.ஐ. எங்கே வைத்திருக்கிறீர்கள்?" என்று. நான் போன பத்து நிமிடங்களுக்குள் எஸ்.எஸ். ஆர்—ஐக் கொண்டு வந்தார்கள். கே.ஆர். இராமசாமி, அதற்கு முன் கைது செய்யப்பட்டு விட்டார். இதுபோன்று டி.வி.நாராயணாசாமி. இப்படிக் கலைஞர்களைக் கைது செய்து கொண்டு வந்து வைத்துவிட்டார்கள்.

நாங்கள் வெளியே போனால் கவர்ன்மெண்டுக்குத் தெரியாதா என்ன? நான் கறுப்புக்கொடியை எடுத்துக்கொண்டு போனால் தெரியாமலா இருக்கும்? ஆனால் ஏன் செய்தார்கள்? என்பது சில நாட்களுக்குப் பிறகு தான் தெரிய வந்தது. “ஏன் அண்ணா, நீங்கள்தான் அறிக்கை விட்டீர்களே எங்களை ஏன் பிடித்தார்கள்” என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார்கள், “நீங்கள் கலந்து கொள்ளக் கூடாது என்று சொல்லிவிட்டோம். ஆனால், நீங்கள் உணர்ச்சிவயப்பட்டு அங்கே போனால் கூட்டம் சேரும். கூட்டம் சேரும்பொழுது கைது செய்தால் அந்த இடத்தில் கல்லெறிவதோ அல்லது வேறு ஏதாவது நாம் விரும்பாத நிகழ்ச்சிகள் நடைபெறும். அதனால் பல உயிர்கள் சேதமடையும் நிலை ஏற்படும். ஆகவே, பாதுகாப்பாக உங்களை முன்னாலே வைத்தார்கள்” என்று மறுநாள் மத்தியானம் எங்களை வெளியே விட்டுவிட்டார்கள்.

எதற்காகச் சொல்கிறேன் என்றால், சில நேரங்களில் யாருடைய சக்தி எதற்குப் பயன்படும் என்று தெரியாமல் இருக்கும்பொழுது, அப்படிப்பட்டவர்களை என்னைப் போன்ற குண்டர்கள் என்று வைத்துக் கொள்ளுங்களேன். என்னை அப்பொழுது அப்படிக் குண்டர் என்று வைத்துத்தானே இப்படிப் போட்டார்கள். அப்படி கைது செய்து விட்டால், அவர்களெல்லாம் குண்டர்கள் என்று அர்த்தம் அல்ல. ஏதோ பெரிய பிரச்சினைகள், விளைவுகள் வரக்கூடாது என்பதற்காகக் கைதே தவிர, வேறொன்றுமில்லை. இரண்டொரு நாட்கள் வைத்திருந்துவிட்டு பிறகு விட்டுவிடுகிறார்கள். ஒரு பிரச்சினை முடிந்தது என்றால் விட்டு விடுகிறார்கள். இதனை இங்கே குறிப்பிடுவதற்கு நான் மகிழ்ச்சியோடு இல்லை என்றாலும், அப்படிப்பட்ட நிலைமைகள் நேராமல் இருக்க வேண்டுமென்பது என்னுடைய ஆசை.

ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்றவைகளைச் சொல்வதற்கு முன் ஸ்ரீலங்காவைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும்; நான் கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்திற்கான விவாதத்திலே பதில் சொல்லும்பொழுது என்னுடைய பதிலிலேயே எதிர்பார்த்த நிலையும் உண்டு, பின்னாலே சொல்ல வேண்டாம் என்பதற்காக இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்.

இப்பொழுது நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற முறை நமக்கு அச்சத்தைக் கொடுக்கிறது. ஒவ்வொரு தலைவரும் உறுப்பினரும் இதை நன்றாக மனதில் பதிய வைத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

அங்கே பிரிவினை கேட்க வேண்டுமென்பது நமது நோக்கம் அல்ல. இங்கே பிரிவினை வேண்டுமென்பது நமது அடிப்படையான நோக்கம் அல்லவே அல்ல. ஆனால், அங்கே தமிழ் மக்கள் ஈழத் தமிழர்கள் என்ன முடிவு செய்கிறார்கள் என்பது அவர்களுடைய முடிவே தவிர, இந்த ஆட்சியைப் பொறுத்த வரையில் அவர்களுடைய முடிவில் குறுக்கிட இந்த ஆட்சி தயாராக இல்லை என்பதை நான் இங்கே திட்டவட்டமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இவர்கள் விடுதலை கேட்டால் அதுபற்றி என்ன செய்ய வேண்டாம் என்பதை நாம் எல்லோரும் கூடி முடிவு செய்தாக வேண்டும்.

மதுரையிலே நான் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு ஒன்றிலே பேசும்பொழுது ஒரு எண்ணத்தை வெளியிட்டேன். இந்திராகாந்தி அம்மையாரைப் பற்றிச் சொல்லும்பொழுது, அவர்களும் பெண்குலத்தைச் சேர்ந்தவர்கள், தாய்; இங்கே இத்தனை ஆயிரக்கணக்கான தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இந்தி பிரச்சினைக்காக இந்தி மொழியைத் திணித்தால், அதை எதிர்ப்பதற்காக இந்தத் தாய்மார்கள் அந்தத் தாயினுடைய இராணுவத்தைச் சந்திக்கும்படியான மனநிலைமை ஏற்படுத்தக்கூடாது என்று நான் பேசினேன்.

இன்றைய தினம் நான் சொல்கிறேன். இலங்கை அரசு இனியும் அதே வன்முறையில் ஈடுபடுமானால், இந்தத் தமிழக அரசு தன் சக்திக்குட்பட்ட அனைத்தையும் நிச்சயமாகச் செலவிட்டு, எப்படி முறியடிக்க முடியுமோ, அப்படி முறியடிப்பதற்கு ஆவன செய்யக் களத்தில் இறங்கும். எந்தக் களம் என்று இப்பொழுது குறிப்பிடப்போவதில்லை. நிலைமைகள் வருவதைப் பொறுத்துச் சொல்கிறேன். இதைப்பற்றி முடிவெடுப்பதற்கு முன், இருக்கின்ற நிலைமைகளைப் பற்றிப் பேச, அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட, நான் தலைவர்களையெல்லாம் சந்திப்பதற்கு, புதன்கிழமை அவர்களால் வர இயலுமா என்று கேட்டுக்கடிதம் அனுப்பியிருக்கிறேன்.

இன்றைய நாளில்தான் நான் கையெழுத்திட்டு அனுப்பியிருக்கிறேன். அது உங்களுக்கு வரும். நீங்கள் அதை ஏற்றுக்கொண்டால், புதன்கிழமை சந்திப்போம். இப்போது உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் முடிவெடுப்போம். ஆனால் எதிர்காலத்தில் மீண்டும் பழைய சம்பவமே நடக்கும் என்றால், இந்தத் தமிழகம் தனித்து நின்று ஏதாவது செய்ய வேண்டும் என்றால், அதைச் செய்ய நான் முன்வருவேன் என்பதை ஒரு நல்ல முடிவாக அதை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னைப்பற்றி நான் சொல்லும்போது ஒவ்வொருவருக்கும் நான் சொல்கிறேன். இப்போதுதான் நான் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன். ஸ்ரீலங்கா சமாச்சாரம் வரும்போதுதான் நான் உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன். ஏதோ படை தயாரிக்கிறார்கள், இராணுவப் பயிற்சி கற்றுக்கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. திரு.ஜெயவர்த்தனே அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். நாங்கள் ஒரு மாநிலம்தான், இந்தியப் பேரரசுதான் இதைப் போன்றவைகளில் எங்களுக்கு கட்டளையிட முடியும்.

ஆனால், இப்படிச் சொல்லிக்கொண்டு அங்கே தமிழர்களுக்கு ஏதாவது இன்னல்கள் மேலும் விளைவிப்பார்களேயானால் சட்டமோ ஒழுங்கோ, வரைமுறையோ, நிச்சயமாக தமிழகத்தில் இருக்காது என்பதை மட்டும், அந்த ஸ்ரீலங்கா அதிபருக்குச் சொல்லிக்கொள்வது என்னுடைய மாபெரும் கடமை என்று நான் கருதுகிறேன். எப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், எப்படிப்பட்ட தேர்தல் கூட்டோ அல்லது தேர்தல் நேரங்களிலே எதிர்த்துப் பேசுவது என்றோ இருந்தாலும், அவற்றிலே வெற்றி, தோல்வி என்றிருந்தாலும், இந்த விஷயத்தில் நான் முதலமைச்சர் என்பதோடு, எங்கள் கட்சியின் சார்பாகவும் சொல்கிறேன். நிச்சயமாக, தமிழக மக்களுக்கு இடையூறு என்ற செய்தி வரும்போது இனியும் அதற்கு பொறுமை இருக்க முடியாது என்பதை திரு.ஜெயவர்த்தனே அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

இங்கிலாந்து எங்களுக்கு உதவ வரும் என்கிறார் திரு. ஜெயவர்த்தனே. அவருக்கு இந்த மாமன்றத்தின் சார்பாக ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். அந்த ஸ்ரீலங்காவிற்கு சுதந்திரம் கிடைத்ததே, பெரும்பாலும் தமிழக மக்களும், இதர மக்களும் போராடியதால்தான் என்பதை திரு. ஜெயவர்த்தனே அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அப்போது போராடியது ஆங்கிலேய நாட்டை எதிர்த்து; கையில் ஆயுதம் இல்லாமல். ஆனால், இப்போது இந்தியா அப்படிப்பட்ட நிலைமையில் இல்லை. ஆகவே, இதைத் தமிழக மக்களின் உணர்வாகத் தமிழ் மக்களின் உரிமையாக நான் எடுத்துக் காட்டுவது விளைவுகள் மோசமாகப் போகாமல் தடுக்க உதவுமானால் நான் மகிழ்ச்சி அடைவேன். இல்லை என்றால் – மீண்டும் அதே முருங்கைமரம் என்றால், மீண்டும் வேதாளம் தான் என்றால், அதை எப்படி கீழே கொண்டு வருவது என்பதற்கு, தமிழக மக்களுக்கும், இந்தியாவிற்கும் வழி தெரியும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்வதில் பெருமை அடைகிறேன். அடுத்து தீயணைப்பு பற்றி சொல்ல வேண்டும்.

ஒரு பிரச்சினை எழுந்தபோது மாண்புமிகு உறுப்பினர் திரு.உமாநாத் அவர்கள் தன்னுடைய பொறுப்புமிக்க கடமை உணர்வால், அது எழாமல் தடுத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களையும் இங்கே வரவழைத்து, என்னைச் சந்திக்கச் செய்தார்கள். அதற்கு நான் அரசின் சார்பாக, நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களும் தன்னுடைய உள்ளத்தைத் திறந்து நிலைமைகளை விளக்கினார்கள். அதற்குப் பிறகு, நான் உட்கார்ந்து பேசியதற்குப் பிறகு, ஒரு முடிவுக்கு வந்தேன். தஞ்சை மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றது. ஒன்றுக்கு நாகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட, ‘காயிதேமில்லத்’ மாவட்டம் என்று பெயர் வைக்கப்படும். மற்றொன்று தஞ்சை மாவட்டம், இன்னொன்று ‘வள்ளியம்மை’ மாவட்டம் இப்படி 3 மாவட்டங்களாகப் பிரிப்பதற்காக இருக்கிறோம். அதற்கு இங்கே இருக்கின்ற அத்தனைக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, வீரமாமுனிவர் மாவட்டம் அமைக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அதையும் விரைவிலே தெரிவிப்போம். யாருடைய பெயரையும் வைப்பதில் எங்களுக்குக் கொஞ்சமும் நஷ்டம் இல்லை. எங்கள் பெயரை வைக்கக்கூடாது, அதுதான் எங்களுக்குத் தேவை. பெரியவர்கள், மறைந்தவர்கள் – யாருடைய பெயரை வைக்கின்றோமோ, அவர்கள் பெயரை வைக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய உண்மையான விருப்பம் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஆகவே, அந்த வகையிலேதான் மறைந்தவர்களுடைய பெயரை வைக்கின்றோம்.

அடுத்து தீயணைப்பு, நல்லவேளை, தீயை வைப்பார் என்று நினைத்தேன். அவர் தண்ணீரைத்தான் கொண்டு வந்து கொடுத்தார். அப்படி உதவியதற்காக திரு.உமாநாத்

அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். தீயணைப்புத் துறையைப் பொறுத்த வரையில்...

நான் சொல்ல வேண்டியதை அவைத் தலைவராகிய நீங்கள் கூறியதற்காக நான் நன்றி கூறுகின்றேன். மாமன்ற உறுப்பினர்களிலே நானும் ஒருவன், என்னையும் அதோடு சேர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கடிதம் மட்டும் வந்திருக்கிறது. எனக்கு வேறு தகவலும் வந்திருக்கிறது. இதற்குப் பயந்தால் நாம் அரசியலிலே இருக்க முடியாது. ஆனால், அதற்காகப் பாதுகாப்பு என்பதை நாம் வைத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது. அதற்கு ஆவன செய்வோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எல்லோருக்கும் அச்சுறுத்தல் வருகிறது. என்னுடைய அனுபவத்தில், சொல்கிறவன் செய்யமாட்டான், செய்கிறவன் சொல்ல மாட்டான். பயமுறுத்தல் வேறு, சொல்லாமல் செய்வர் பெரியோர்! சொல்லாமல் செய்பவர்கள் அவர்கள் பின்னால் இருப்பவர்கள்; அவர்கள் செய்கிற செயலுக்கு யாரோ கெட்ட பெயர் வாங்கிக்கொண்டு போவார்கள்.

எதற்கெடுத்தாலும் மாணவர்கள் பெயரை பயன்படுத்துவது அரசியலில் ஒரு நல்ல இலாபகரமான வேலையாகிவிட்டது. ஆகவே மாணவர்கள் என்று குறிப்பிடத் தேவையில்லை. வீரர் என்று சொல்லலாம். தாய் நாட்டின் விடுதலை விரும்பி என்று சொல்லலாம். தியாகிகள் என்று சொல்லலாம் எப்படி வேண்டுமானாலும் நல்ல பெயராகச் சொல்லலாம். ஆனால் மாணவர்களைக் குறிப்பிடுவது, மாணவர்களைப் பற்றி நாம் தவறாக நினைக்க வேண்டும் என்பதற்காக செய்யப்படுகிற சூழ்ச்சியாகும். நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது என்பதற்காக எச்சரிக்கை தந்து இருக்கிறார்களே அதுவரையில் நாம் மகிழ்ச்சி கொள்வோம். அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், வெளியில் இருக்கிற மக்களுக்கு எந்த அளவிற்குப் பாதுகாப்பு கொடுக்கிறோமோ, கொடுக்க முடிகிறதோ அதைவிட அதிகமாகக் கொடுக்க, குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருப்பதால், அவர்களுக்கு நாம் வழிவகை செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சி.ஐ.டி. போட்டு அனுப்பினால், எனக்கு வேண்டாம் என்று சொல்லாதீர்கள். சில பேர் சொல்லி விடுகிறார்கள். செக்யூரிட்டி அனுப்பினால் வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஆனால் பின்னால் செக்யூரிட்டி இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாது இன்னொன்றையும் சொல்கிறேன்.

சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும். நீதிக்கு தலை வணங்க வேண்டும். திருடுகிற கூட்டம் திருடிக்கொண்டே இருப்பார்கள். சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்கும் என்று நான் பாடிய பாட்டையே யசோதா அவர்கள் சொல்லிக் காட்டினார்கள். ரொம்பவும் மகிழ்ச்சி. இதெல்லாம் அவர்களுக்கு ஞாபகம் இருப்பதால் தான் சில சமயம் எங்களையும் பாராட்டினார்கள் என்று நான் நம்புகிறேன். சமுதாயத்தில் இருக்கிற மனப்பாங்கு திடீரென்று ஒரு நாளில் தோன்றுவதில்லை. சூழ்நிலை, வளர்க்கின்றமுறை, அவர்களுடைய தேவை, இதையெல்லாம் ஒட்டித்தான்

சில எண்ணங்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உதயமாகின்றன. அந்த வகையில் திருட வேண்டுமென்று நினைக்கிறவர்கள் எப்போது நினைக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. வேலை செய்து கொண்டிருந்த அக்காள், தங்கை இரண்டு பேரும் வெவ்வேறு இடத்தில் வேலை செய்து, வேலை செய்த இடங்களிலிருந்து திருடிக்கொண்டு போய் விட்டார்கள். பல பகுதிகளில் இப்படிச் செய்திருக்கிறார்கள். எங்களிடம் சொல்லிவிட்டுத்தான் நீங்கள் வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டுமென்று ஒவ்வொரு வீட்டிற்கும் தாக்கீது அனுப்ப முடியாது. அவர்கள் தாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். திருட்டு நடந்த உடனே சொல்லும்போது உண்மையைச் சொல்ல வேண்டும்.

முன்பு நடந்த ஒன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். வெளிநாட்டிலிருந்து கிரிக்கெட் கோஷ்டி இங்கே வந்து 2,3 ஆண்டுகளுக்கு முன்னால் விளையாட்டு நடந்து கொண்டிருந்தது. நான் கிரவுண்டில் இருந்து விளையாட்டைப் பார்த்துக்கொண்டு இருந்தேன். அப்போது ஒருவர் பெயரைச் சொல்லி உடனே வரவும் என்று 'அனவுன்ஸ்' பண்ணினார்கள். பிறகு ஒரு மணி நேரத்திலே எனக்கு தகவல் வந்தது. ஒருவர் வீட்டிலே ஒரு பெண்ணின் கைகளை கட்டிப்போட்டு, பயமுறுத்தி நகைகளை திருடிக்கொண்டு போய்விட்டார்கள் என்று. பின்னால் விசாரித்துப் பார்த்தால், அந்த அம்மையாரே அவற்றைக் கிணற்றிலே தூக்கிப் போட்டு இருந்திருக்கிறார்கள். இதை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? அவர்கள் வீட்டில், எதற்காக, இந்த காரியத்தைச் செய்வதற்கு தூண்டிவிடப்பட்டது? அந்த சூழ்நிலை என்ன என்பதை நாம் எப்படிச் சொல்ல முடியும்? அவர்களுக்கு எப்போது அந்த எண்ணம் வந்தது என்பதை நாம் எப்படி கண்டுபிடிப்பது? சொன்ன குற்றச்சாட்டு வேறு, அங்கே நடந்து இருந்தது வேறு. ஆகவே, குற்றச்சாட்டுகளுக்கு முன்னால் என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிப்பது மிகமிக கஷ்டம். அதற்கு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், மதத்தலைவர்களும், சமூகத் தொண்டர்களும் எல்லோரும் ஒத்துழைத்தாலன்றி, மக்கள் மனோபாவத்தை மாற்ற முடியாது. அது குழந்தையிலிருந்தே வளர்க்கப்பட வேண்டிய நல்லெண்ணம் ஆகும். அதை எல்லோரும் சேர்ந்து செய்யவேண்டும் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

18 சதவீதம் ஆதிதிராவிட மக்களுக்குக் கொடுக்கப்படுகிறதா, இல்லையா? என்று கேள்வி. ஒரு வழக்கு கோர்ட்டிற்கு வந்திருக்கிறது; உங்களுக்கும் தெரியும். தங்களுக்கு உரிய அந்த எண்ணிக்கையில் இடம் கிடைக்கவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதிகமாகக் கொடுத்துவிட்டார்கள். அதை மாற்ற வேண்டுமென்று வழக்கு வந்திருக்கிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அப்படிபட்டவர்களுக்கு கிடைத்தால், "இதுவரையில் துன்பப்பட்டவர்களாயிற்றே, பெற்றுக்கொள்ளப்பட்டுமே!" என்ற மனோபாவம் அவர்களுக்கு வரவில்லை. அம்பேத்கர் அவர்களைப் பற்றி சொல்கிறபோது திரு.இளையபெருமாள் அவர்கள் ஒரு பிரச்சினையை உருவாக்கி விட்டார்கள். அம்பேத்கர் அவர்களின் கொள்கையை அவர் முழுமையாக ஏற்றுக்கொள்கிறார் என்று நான் நம்பலாமா? சரி நம்பலாம். அம்பேத்கர்

சொல்கிறார் என்று அதை ஒப்புக் கொள்கிறாரா ? டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார் என்று புத்தகம் வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் இவ்வளவு எளிதாகச் சிக்கிக்கொள்வார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், என்று சொன்னதைத்தான் நான் சொன்னேன். ஆனால், அவர் மதத்தைப் பற்றி பேசியிருக்கிறார்கள். இந்து மதம் எனக்குச் சரியான, சம உணர்வு, சம தகுதி, சம வாழ்வு தரவில்லையென்றால் எங்களுக்கு அந்த மதம் இல்லை. ஒத்துக்கொள்கிறேன். இந்தியாவிலே நாங்கள் வேறு மதத்தலைவர்கள் என்று சொன்னால் சரி. இதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், வாதத்திற்கு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரச்சினையை நான் எடுத்துகொண்டதற்குக் காரணமே, ஆதித்திராவிட மக்களிடம் நாம் இன்னும் பல உண்மைகளைச் சொல்லவில்லை. அதனால்தான் அவர்களுக்கு மதமாற்றம் என்கிற எண்ணம் வருகிறது. அவர்களுக்கு தேவையானது கிடைக்காவிட்டால்,தேவையானது பெற முடியாது போய்விட்டால்; நாம் மதம் மாறுவோம் ! என்று அவர்கள் சொல்வது எல்லாம் இந்தச் சூழ்நிலையை வைத்துத்தான் என்பதற்காக நான் சொல்கிறேன். அங்கே போய்ச் சொல்லும்போது, அம்பேத்கரைப் பற்றிச் சொல்லும்போது புகழ்ந்து பேசுகிறார்கள். நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அவர் தியாகிதான். சந்தேகம் இல்லை. அந்த இனத்திற்காக அவர் மிகச் துணிச்சலோடு கருத்துக்களை எடுத்து வைத்தார். போராடினார் என்பதையும் நான் வரவேற்கிறேன்.

ஆனால், இந்தியா தாயகம் அல்ல என்று சொன்ன பிரச்சினையை எல்லாம் இப்போது தள்ளி வைத்துவிட வேண்டும். இந்து மதம் எங்களுக்குச் சொந்தம் இல்லை; ஏனென்றால், எங்களுக்கு அங்கே இடமில்லை என்று சொல்வதை எல்லாம், மாண்புமிகு உறுப்பினர் திரு.இளையபெருமாள் அவர்கள் சொன்னதைப் போல, கோவிலுக்கு உள்ளே போகக்கூடாது. பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது. பொது இடங்களில் தங்கக்கூடாது. பொதுமக்கள் சாப்பிடுகின்ற உணவு விடுதிகளின் உள்ளே போகக்கூடாது. சாப்பிடக்கூடாது. எல்லோருக்கும் கொடுக்கின்ற மரியாதை அவர்களுக்கு இருக்கக்கூடாது என்று எல்லாம் இருந்த நேரத்தில் அது சரி. இப்போது சட்டபூர்வமாக உரிமை தரப்பட்டிருக்கிறது. அப்படிச் சொல்பவர்கள் மீது வழக்குத் தொடரலாம்; வழக்குப் போடுகிறோம்.

இப்போது 18 சதவீதம் என்ற பிரச்சினை இங்கே நிறைவேற்ற முயற்சிக்கிறோம். ஒன்றை நான் வேகமாகச் சொல்கிறேன். தீ அணைப்புப் படையானாலும் சரி. காவல், துறை என்றாலும் சரி. வேறு எந்தத் துறையானாலும் சரி, 18 சதவீதம் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக, அந்த இடம் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால், தகுதி படைத்தவர் அந்த இனத்தில் கிடைக்கவில்லை என்றால், அதை நிறுத்தி வைப்போம்; பிறகு கிடைக்கும்போது பூர்த்தி செய்வோம் என்றால், அதற்காக வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். வாதாடுகிறார்கள். அதைத் தட்டிக் கேட்பதற்கு அனைத்துக் கட்சிகளும், அனைத்து மதத்தலைவர்களும் – எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும்

– அந்த ஜாதித் தலைவர்களும் எல்லோரும் கலந்துகொண்டு இந்த எண்ணத்தை நாம் தெரிவித்தாக வேண்டும்.

தீண்டாமையை ஒழிப்போம் என்று வாயளவில் சொல்லிவிட்டு நமது வீட்டிலேயே தீண்டாமையை வைத்துக்கொண்டிருக்கிற நிலைமையை நாம் அனுமதித்துக் கொண்டிருக்கக்கூடாது என்ற உணர்வோடு நாம் எல்லோரும் போவதற்கு உத்தரவாதம் தரவேண்டும். நமது செயல்முறைகளால், அதற்காகத்தான் அம்பேத்கார் வரலாற்றை எடுத்துக்கொண்டேனே தவிர, அவரை சிக்கவைக்கவேண்டும் என்பதற்காக அல்ல. அவராக மாட்டிக்கொண்டார். ஆகவே, பேரவைத் தலைவரவர்களே, இந்த பிரச்சினையை நான் இதோடு விட்டுவிட்டு அடுத்தப் பிரச்சினைக்கு வருகிறேன்.

தீ அணைக்கும் படையில் இதுவரை வேலை செய்கின்றவர்களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தாலும், அவர்களுக்குப் பாதுகாப்பு என்பது நிச்சயமாக இல்லை. வருமானம் போதாது. இதை எல்லாம் ஆராய்ந்து, இதை மாற்றலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். அதுபற்றி என்னுடைய அறிக்கையிலே விளக்கிச் சொல்வேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

தீ அணைக்கும் படைக்குக் கருவிகள் பழுதுபார்க்கப்படாமல் இருக்கின்றன; செயர்ஸ் எல்லாம் எங்கெல்லாமோ கிடைக்கின்றன என்கிறார்கள். முதலிலே நமக்கு என்ன தேவையோ, எத்தனை கேலன் தண்ணீர் வைக்க வேண்டுமோ, அது தேவை என்று கேட்டு வாங்கினோம். பிறகு முடியாமல் போய்விட்டது. ஆகவே அந்த 500 கேலன் தண்ணீர் ‘டாங்க்’ எங்கெல்லாம் பயன்படுத்தப்பட முடியுமோ அங்கெல்லாம் பயன்படுத்திவிட்டு முடியாத நிலையில், வேறு காரியங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு, புதிதாக வாங்க வேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்தபோதுதான் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் குவிக்க இடம் இல்லாத காரணத்தால், ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, வாங்கிப் போட்டுவிட்டு, அதைப் பயனற்றதாக ஆக்க வேண்டுமென்று அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.கருப்பையா அவர்கள் மதுரை மருத்துவக்கல்லூரி மாணவர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. அதுபற்றி விசாரித்து அரசுக்கு அறிக்கை அனுப்புவதற்காக மதுரை மாவட்ட செஷன்ஸ் நீதிபதி அவர்கள் ஒரு நபர் குழுவாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி வேண்டுமா, அல்லது பணியாற்றும் மாவட்ட நீதிபதியை அமைக்க வேண்டுமா என்று அவையில் கேட்டபோது மாண்புமிகு திரு. சங்கரய்யா அவர்கள் ‘நீங்களே முடிவு செய்யுங்கள்’ என்று சொன்னார்கள். அதன் பிறகு, உயர் நீதிமன்றத்தில் இந்த விசாரணைக்கு நீதிபதி ஒருவரை கொடுக்க இயலுமா என்று கேட்டபோது, வழக்குகள் நிறைய இருக்கின்றன. இயலாது என்று கூறிவிட்டார்கள். அதன்பிறகு, மாவட்ட செஷன்ஸ் நீதிபதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆகவே, இதில் பிரச்சினை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு.கருப்பையா அவர்கள் தெரிந்துகொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

சிதம்பரம் முன்னாள் டி.எஸ்.பி.யாக இருந்த திரு.டி.ஜோசப் என்பவர் கிரிமினல் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாக அறிக்கை வந்திருக்கிறது. பின்னால் அவர் மீது டி.வி.எஸ்.லி வழக்கு ஒன்று விசாரணையில் இருந்தது. இந்த அடிப்படையில் அவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே, நாங்கள் நடவடிக்கை எடுக்காமல் இல்லை.

விளாத்திகுளம் காவல் நிலைய எல்லைக்குள் இருதரப்பினர் மோதிக் கொண்டார்கள். கிராமப்பொதுநல நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென்பதில் இந்தத் தகராறு ஏற்பட்டது. அதை யார் பொறுப்பில் வைத்துக் கொள்வது என்ற சர்ச்சை நேர்ந்தது. மோதிக்கொண்டதன் விளைவாக, இருவர் இறந்தனர். திரு.ரகுமான்கான் அவர்கள் கூறியதுபோல, எட்டையபுரம் பகுதியில் அல்ல – 4 பேர் கொலை அல்ல. நிகழ்ச்சி நடந்த இடத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், காவல்துறை கண்காணிப்பாளரும் விரைந்து சென்று அமைதி காத்து நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோல் இன்னும் பல விவரங்கள் இருக்கின்றன.

மதுவிலக்கு ஆயத்தீர்வைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். அண்மையில்தான் அதை நான் எடுத்துக்கொண்டேன். வருவாய்த்துறையில் அவர் அதிகமான அக்கறை காட்டவேண்டுமென்பதற்காக – சென்ற ஆண்டு கொஞ்சம் விற்பனை வரி குறைந்துவிட்டது. அதை ஈடுசெய்யவேண்டும் என்பதற்காக அவர் தமிழ்நாடு முழுவதும் சென்று பல வேலைகளை நேரடியாகக் கவனிக்கவேண்டும் என்பதற்காக இந்தத் துறையை நான் எடுத்துக்கொண்டேன். இதைத்தவிர, பல துறைகள் அவரிடம் இருக்கின்றன. இதை எடுத்துக்கொண்ட பிறகு நான் கமிஷனரை நியமித்தேன். இப்பொழுது நடக்கின்ற முறை, வரையறை எப்படி, நியதி எப்படி என்றால், அவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். அதிகாரிகள் பரிந்துரை செய்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், எனக்கு பொறுப்பு இல்லை என்பது அல்ல. தவறுகள் நேர்ந்தால், அதற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். பொறுப்பு எனக்கு இருக்கிறது.

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த அரசு இந்த மதுவிலக்கை தளர்த்துவதற்கு முன்னாலே, இங்கே பேசியதைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். ரோடிலே எல்லாம் தண்ணீராக ஓடுகிறது சாராயம், மது என்றெல்லாம் சொன்னார்கள். “இத்தனை பேரைக் கைது செய்து ஜெயிலில் வைத்திருக்கிறீர்களே! நியாயமா? என்றெல்லாம் கேட்டார்கள்”. அதற்கெல்லாம் விளக்கம் சொல்லிவிட்டேன். இப்போது நான் சொல்ல விரும்புவது, இந்த அரசு வந்தபிறகு எவ்வளவு அக்கறையோடு அந்த டி.ஐ.ஜி. பொறுப்பேற்றிருக்கிற திரு. சர்மா அவர்கள் அந்தப் பணியை செய்கிறார்கள். அவர்களுக்கு சி.ஐ.டி.டிபார்ட்மென்ட், டி.ஐ.ஜி (லா அண்ட் ஆர்டர்) இவர்களெல்லாம் சேர்ந்து உதவி செய்ததன் விளைவாக, எந்த அளவுக்கு அவர் கடமையைச்

செய்திருக்கிறார், அதிகாரிகள் கடமையைச் செய்கிறார்கள் என்பதை உணர்ந்த ஒரே ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. ஏறத்தாழ 35 இலட்சம், 40 இலட்சம் லிட்டர்கள் இந்த அரசு எடுத்துக்கொள்ளும்போது விற்பனை செய்ய முடிந்தது. பாக்கி எல்லாம் கள்ளச் சாராயம்தான். கள்ள மதுதான். இப்போது 1,22,00,000 லிட்டர் விற்பனை செய்யப்படுகிறது. அந்தப் பணம் முழுவதும் அரசுக்கு வருகிறது. அப்படியானால், ஏறத்தாழ 80,00,000 லிட்டர் கள்ளச் சாராயம் இருந்து அது மக்கள் மத்தியில் பதுங்கிக் கொண்டு இருந்தது. இப்போது இது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். குடிப்பவர்கள் அதிகமாகி விட்டார்கள் என்பதல்ல. குடிப்பவர்கள் நல்ல சாராயத்தைக் குடித்துவிட்டுத்தான் இருக்கிறார்கள். அது தனியாருக்குச் சேராமல் அது அரசுக்கு சேருகிறது. நமக்குப் பயன்படுகிறது என்பதை இப்போது சொல்கிறேன்.

அதேநேரத்தில் ஒன்றை நான் சொல்லவேண்டும். ஏமாற்றுகிறேன் என்று சிலர் சொல்லலாம். அரசியலுக்காக அல்ல, ஆனால் உண்மையிலேயே சொல்கின்றேன். எவ்வளவு விரைவில் கள்ளச் சாராயம் தமிழகத்திற்குள் வரமுடியாமல் தடுக்க முடியுமோ, அந்த அளவிற்கு அரசு அதிகாரிகளுடைய அனைத்துக் கட்சித்தலைவர்களுடைய, தோழர்களுடைய ஒத்துழைப்பின் அடிப்படையில் விரைவிலே எந்த மதுவைத் தளர்த்தினேனோ, அதை மீண்டும் இல்லாத விதத்திலே கொண்டுவர நான் நிச்சயமாக முயன்று கொண்டிருக்கிறேன் என்பதை இங்கே சொல்லிக் கொள்கிறேன்.

தேர்தலைப்பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்பே, அப்போதே சொன்னேன். இங்கே சொல்லும்போது யாரோ சொன்னார்கள். ஏதோ பஞ்சாயத்துத் தேர்தல் உடன்பாடு மாதிரி இருக்கக்கூடாது என்று. பஞ்சாயத்துத் தேர்தலுக்கு இன்னும் உடன்பாடு வரவில்லை. எந்தக் கட்சியும் உடன்பாடு பற்றிப் பேசவேயில்லை. சிலருக்கு நாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தமோ, அல்லது பேசிக் கொண்டதோ, உடன்பாடு என்றே ஞாபகமாக இருக்கிறது. எங்களுக்கு அது நோக்கம் அல்ல. நாங்கள் ஏதாவது செய்வது என்றால் சொல்லிவிட்டு வந்தோமே, அதை எந்த அளவுக்கு முடிப்பது, செயலாக்குவது என்கிற நோக்கத்தில் செய்கிறோமே தவிர, ஓட்டு வாங்கவேண்டும் என்பதற்காக அல்ல என்பதை தயவு செய்து திரு.இளையபெருமாள் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

நான் சொல்ல வருவது, தேர்தலை எண்ணி நீங்கள் காரியத்தைச் செய்ய முனைந்தால் மக்களுக்கு நல்லது செய்ய முடியாது என்று சொன்னார்கள் அந்த எண்ணம் எங்களுக்கு இல்லை. இருந்திருந்தால், உண்மையிலே சொல்கிறேன். பெரும்பான்மையாக இருக்கின்ற ஆதிதிராவிடர் அல்லாத மக்களுடைய நம்பிக்கை வேறு இருக்குமானால், அந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, இந்தச் சலுகையை நாம் கொடுக்க வேண்டும். பதவியில் அவர்களுக்கும் இடம் தரவேண்டும் என்று நாங்கள் கொண்டு வந்திருக்கவே முடியாது. கொண்டு வந்திருக்கமாட்டோம்.

இன்னும் சொல்வேன். இன்னும் விரைவில், இந்த அசெம்பளி செசன் முடிவதற்குள் வேண்டுமானால், 18 சதவீதம் என்ற முறைப்படி பஞ்சாயத்துத் தேர்தல் உள்ளடக்கிய யூனியன் தேர்தல்களை எல்லாம் நடத்துவதற்கு நாங்கள் முயற்சிப்போம். அப்படி முடியாமல் போகுமானால் பழைய முறையிலாவது, வெகுவிரைவில் – வெகுவிரைவில் என்றால் 2 மாதங்கள், 10 மாதங்கள் அல்ல – அண்மையில், தேர்தல் நடத்துவதற்கு இந்த அரசு, இங்கே நிறைவேற்றுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டாலும், கவர்னரின் ஆணையாக, சட்டமாகக்கூட, அதைக்கொண்டு வந்து நிறைவேற்ற முடியுமா என்பதை நாங்கள் முயற்சிப்போம். அதைச் செய்வோம் என்பதை இந்த அவையில் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே அந்தப் பிரச்சினை இனிமேல் இருக்காது.

நாங்கள் தேர்தலைச் சந்திக்க பயந்து ஏதோ, நிபந்தனைகளை எல்லாம் போட்டோம், அந்த விதிகளை எல்லாம் கொண்டு வந்தோம். விழுக்காடுகள் கொண்டு வந்தோம், அதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே போகவேண்டும் என்ற எண்ணம் இனிமேல் யாருக்கும் வரக்கூடாது என்பதற்காக, அந்த நல்ல ஆசையை, நம்பிக்கையை நாம் இங்கே வைத்து, அவர்கள் மேலும் அரசியலைப்பற்றி நாம் நம்பிக்கை வைத்து, இந்த உண்மையைச் சொல்வேன். அவர்கள் இனியாவது அப்படி உள்ளேயோ, வெளியேயோ, பேசமாட்டார்கள். இந்தத் தேர்தலுக்குத் தங்களைத் தயாராக்கிக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்த எண்ணத்தை நாம் நிறைவேற்றும்போது, திரு.இளையபெருமாள் போன்றவர்களும், மற்றவர்களும் ஜனநாயகத்தில் வாக்களித்து வரவேண்டியவர்கள் எங்கெங்கே வரவேண்டுமோ, அந்தப் பதவிகளுக்கு எல்லாம் மக்கள் வர வேண்டும் என்ற நோக்கத்தில், வேறு வழியின்றி இந்த 18 விழுக்காடு என்றெல்லாம் மாற்றுகின்றோமே தவிர, நீட்டிக் கொண்டே போக தேர்தலை நாங்கள் விரும்பவில்லை என்ற காரணத்தால், அதைச் செய்ய முனைகிறோம்.

ஆகவே இவற்றிற்கு நீங்கள் ஆதரவு தரவேண்டும். நமக்கு கொள்கை என்று இருக்கிறது. அதைவிட்டுவிடவில்லை. ஆனால் பஞ்சாயத்து தேர்தல், யூனியன் தேர்தல், நகரசபைத் தேர்தல், மாநகராட்சித் தேர்தல்கள் என்ற காரணத்தாலே, தள்ளிக்கொண்டே போகக் கூடாது என்பதால் நான் சொல்கிறேன். யாரை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்களோ, அதை முடிவு செய்யவேண்டியது மக்கள் தான். ஆகவே, மக்கள் முடிவு செய்வதுபற்றி, நாங்களே எண்ணிக்கொண்டு, எங்களுக்கு இலாபம் வரும், நாங்கள் எங்கே என்று பார்த்தால், அது சரியாக வராது. ஒத்துவராது. அது ஜனநாயகம் அல்ல. அது வழியும் அல்ல. அதற்கு நாங்கள் தயாராக இல்லை, வெற்றி என்றாலும், தோல்வி என்றாலும், மக்களைச் சந்திக்க நாங்கள் விரும்புகிறோம். உங்களைப்போல ஆகவே அந்த முறையை நாங்கள் கடைபிடிப்போம் என்பதை நான் உத்தரவாதமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மூன்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தரவேண்டும் என்று சொல்வதற்குமுன், காவல்துறைக்காக நாங்கள் என்னென்ன புதிய புதிய திட்டங்களைச் செய்கிறோம் என்பதை நான் சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

காவல்துறையில் பணியாற்றும் காவலர்களிலிருந்து ஆய்வாளர்கள் வரையுள்ள பணியாளர்களுக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், அப்போதிருந்த விலையில் 50 சதவீதம் அரசு மானியம் வழங்கியது. விலைவாசியின் ஏற்றத்தைக் கருத்திற்கொண்டு தற்போதுள்ள விலைவாசியில் 50 சதவீதம் ஆக அரசு மானியம் உயர்த்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.1 கோடி செலவாகும்.

காவல்துறையில் அமைச்சுப் பணியாளர்களின் வேலைப் பளுவை ஆராய்வதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு வழங்கிய பரிந்துரைகளின் மீது இறுதியான முடிவு எடுப்பதற்கு முன் உடனடித் தேவைகளை உணர்ந்து 1984–1985ஆம் ஆண்டுக்கு 200 கூடுதல் அமைச்சுப் பணியாளர் பதவிகளை அனுமதிப்பது என்று அரசு முடிவு எடுத்துள்ளது.

சென்னை மத்திய சிறைச்சாலையிலிருந்து, விசாரணை மற்றும் காவற் கைதிகளை நீதிமன்றங்களுக்குப் பாதுகாப்புடன் கொண்டு செல்வதற்காக ஆண்டுக்கு ரூ.17 இலட்சம் செலவில், காவலர் நிலை 2 முதல், ஆயுதப்படை உதவியாளர்கள் வரை ஓட்டுநர்கள் உட்பட 138 கூடுதல் பணியாளர்களைக் கொண்டு ஒரு விசேஷப்படையை அரசு ஏற்படுத்தும்.

செங்கற்பட்டு மாவட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டை பகுதியில் சட்டம் ஒழுங்கு பாதுகாப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தும் பொருட்டு, ரூபாய் 6 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் ஒரு சேம காவல்படைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் பகுதியில் சட்டம் ஒழுங்கைப் பராமரிக்க ரூ.6 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் ஒரு சேம காவல்படைப்பிரிவு ஏற்படுத்தப்படும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கினை பராமரிப்பதற்கு செலவு ரூ.6 இலட்சத்து 94 ஆயிரம் செலவில் ஒரு சேம காவல்படைப் பிரிவு ஏற்படுத்தப்படும்.

மாநிலத்தில் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு பருத்திச் சீருடைகளுக்குப் பதிலாக டெரிகாட்டன் சீருடைகள் 1984–1985ஆம் ஆண்டில், செப்டம்பர் 15ஆம் தேதி வாக்கில் வழங்கப்படும். முதல் ஆண்டில் தலா 2 செட் உடைகளும், பின்னர், ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு செட் என்ற வீதத்தில் வழங்கப்படலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். பின்னால் அது நிச்சயம் தேவை என்றால், இந்த அரசு சிந்திக்கும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படைப்பிரிவில் பணிபுரிபவர்களுக்கு மட்டும் ஆண்டுக்கு 2 செட் உடைகள் வழங்கப்படும். இயற்கைச் சீற்றங்களைப் பொருட்படுத்தாது பணிபுரியும் காவலர்களுக்கும், சார்நிலை அதிகாரிகளுக்கும், அந்தந்தப் பணியில் ஈடுபடும்போது, மழைக்கோட்டுகளும், கம்–பூட்சுகளும் குறிப்பிட்டவர்களுக்கு முதல் கட்டமாக ரூ.7.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

காவல்துறையில் உள்ள உதவி ஆய்வாளர்களுக்கு, ஆய்வாளராகப் பதவி உயர்வு அளிப்பதற்கான உச்ச வரம்பு வயது 52லிருந்து 55ஆக உயர்த்தப்படும்.

சென்னை மாநகரில் இரவு ரோந்துப் பணிக்காக தற்போது பணிபுரியும் 350 முன்னாள் இராணுவத்தினர் தவிர, கூடுதலாக, 250 முன்னாள் இராணுவத்தினர் பகலில் நடக்கும் குற்றங்களைத் தடுப்பதற்கென நியமிக்கப்படுவார்கள். இதற்காக ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு ரூ.9 இலட்சம்.

சேமப்படையில் இருக்கும் காவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் திறன்படி 1944ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. இந்தப்படி மிகவும் குறைவாக உள்ளது என்று சொல்லப்படுகிறது. சொல்லப்படுவது மாத்திரம் அல்ல, நாமும் அவ்விதம் உணர்கிறோம். எல்லோருக்கும் சம்பளப்படி உயர்கிறது. அவர்களுக்கு மட்டும் இல்லை. ஆகவே, தலைமைக் காவலர்களுக்கு, மாதம் ரூ.2லிருந்து 10 ஆகவும், காவலர்களுக்கு ரூ.1லிருந்து ரூ.7½ யாகவும் உடனடியாக உயர்த்தப்படும்.

காவலர் சேம நல நிதிக்கு அரசு ஆண்டுதோறும் வழங்கி வரும் தொகையான ரூ.2.50 இலட்சம் இவ்வாண்டிலிருந்து ரூ.3.50 இலட்சமாக உயர்த்தப்படும்.

ரூ.64.30 இலட்சம் செலவில் காவல் வானொலித் தொடர்புகளை மேம்படுத்தும் பொருட்டு, சில முக்கிய நகரங்களில், ‘வி.எச்.எப்.’ தொடர்புகளை அமைக்கவும், கூடுதலாக தேவைப்படுகின்ற ‘வி.எச்.எப்.’ செட்டுகளைப் புதிதாக வாங்கவும் சில பழுதடைந்த வி.எச்.எப் கருவிகளைக் கழித்துவிட்டு புதிய ‘வி.எச்.எப்.’ செட்டுக்கள், வாங்கவும், வானொலிப் பிரிவிலுள்ள கருவிகளைச் சரி பார்க்கவும், ‘செலக்டிவ் லெவல்’ மீட்டர்கள், மின் அழுத்தத்தைச் சீராக்கும் கருவிகள் (மின் ஸ்டெபிலைசர்ஸ்) வாங்கவும் வானொலிப் பிரிவிலுள்ள கட்டுப்பாடு அறையைக் குளிர் பதனப்படுத்தவும் அனுமதி வழங்கப்படும்.

மறைமலை நகர், பழனி மலைஅடிவாரம், சோமங்கலம், சேலம் நகரத்தில் பேர்லேண்ட், கன்னியாகுமரி மாவட்டத்தில் தாமரைக் குளம் ஆகிய இடங்களில் புதிதாகக் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

செங்கல்பட்டு மாவட்டம், மேல் மருத்துவத்தூரில் இயங்கிவரும் புறக் காவல் நிலையம், காவல் நிலையமாகத் தரம் உயர்த்தப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மிலட்டூரில் இயங்கி வரும் புறக்காவல் நிலையம், கன்னியாகுமரி மாவட்டத்தில் அஞ்சு கிராமத்தில் இயங்கிவரும் புறக்காவல் நிலையம் ஆகியவை காவல் நிலையங்களாக தரம் உயர்த்தப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர், காவல் படையைப் பிரித்து முதுகுளத்தூர், கடலாடி ஆகிய இரண்டு இடங்களிலும், காவல் வட்டங்கள் அமைக்கப்படும்.

சேலம் மாவட்டம், திருச்செங்கோடு, காவல் நிலையத்தைப் பிரித்து, திருச்செங்கோடு காவல் நிலையம் (நகரம்) மற்றொரு காவல் நிலையம் (புறநகர்) என இரண்டு காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.

தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப் படி மற்றும் சிற்றுண்டிப் படிகளின் அளவு நாளொன்றுக்கு ரூ.4.50ஆக உயர்த்தப்படும்.

தீயணைப்புத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்தால் குடும்ப நலத் நிதித்திட்டத்தின் கீழ் கிடைக்கும் ரூ.10,000த்துடன் மேலும் ரூ.10,000 கருணை அடிப்படையில் வழங்கப்படும்.

சென்னையிலுள்ள மாநில தீயணைப்புத்துறை பயிற்சிப் பள்ளியில் பணியாற்றும் கோட்ட தீயணைப்பு அலுவலர்களுக்கு ரூ.50/—ம், முன்னணி தீயணைப்போருக்கு ரூ.40/—ம் போதனைப் படியாக வழங்கப்படும்.

குற்றவாளிகளைச் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிவிடாமல் பார்த்துக் கொள்ளும் கடமை உணர்வுடன் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது பணியாற்றுகையில், வீர மரணம் அடையும் காவலர் துறைப் பணியாளர்களின், குழந்தைகளுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை அளிப்பதற்கும் அவர்களது குழந்தைகள் பள்ளியிலும், கல்லூரிகளிலும் கல்வி பயிலுவதற்கும், தேவைப்படும்போது மருத்துவ சிகிச்சைப் பெறுவதற்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

விவாதம் முடிந்துவிட்டது. என்னைப் பொறுத்தவரையில், ஏ.எஸ்.கே. அவர்கள் இந்து மகாசபையைச் சார்ந்தவர்கள் அல்ல. அவர் அய்யங்கார் அல்ல. மற்றவர்கள் அழைத்தால் அவர் என்ன செய்வார், ஜாதி மதம் எல்லாம் அவருக்குக் கிடையாது. நீங்கள் சொல்ல விரும்பவில்லை என்பதால் அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கலாம்.

என்னால் எவ்வளவு தூரம் சொல்ல முடியுமோ சொல்லியிருக்கிறேன். முழுக் குறிப்பும் என்னால் படிக்க முடியவில்லை. அதற்கும் வெளியே சொல்வார்கள். 3 நாட்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று சொல்வார்கள். ஆகவே, இன்னும் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் சொல்லலாம். ஆகவே, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

09.04.1984 அன்று, காவல்துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதிலளித்து ஆற்றிய உரை.

"ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் நல்லவர்கள் பலர் சேர்ந்து, நல்ல தியாக உணர்வோடு, நல்ல முறையில் மேற்கொள்கின்ற எந்த ஒரு உழைப்பும், முயற்சியும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன், ஆதரவுடன் வெற்றி அடையும் என்பது நிச்சயம்."

பாரத ரத்னா புரட்சித் தலைவர்

டாக்டர் எம்.ஜி.ஆர்.

வெளியீடு :
இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத்துறை